சித்தவைத்திய

பதார்த்த குண விளக்கம்

மூலவர்க்கம்

PRESENTED BY:
V. PR. PL. M.
[illegible] CHETTIAR
PAGANERI

MATERIA MEDICA

(Vegetable Kingdom)

இஃது
சிகிச்சாரத்நதீபம், கண்ணுசாமியம், வைத்திய சிந்தாமணி
முதலிய நூல்களுக்கு ஆசிரியராகிய
வைத்திய வித்வன்மணி
சி. கண்ணுசாமி பிள்ளை அவர்களால்
இயற்றப்பட்டது.

PRINTED AT THE B. N. PRESS,
MOUNT ROAD, MADRAS.

Copy Right] 1939 [விலை ரூ. 15

(Photo by P S. S. Raj)

வைத்திய வித்வன்மணி,

சி. கண்ணுசாமிப் பிள்ளை,

சிகிச்சாரத்நதீபம், கண்ணுசாமியம், வைத்திய சிந்தாமணி

சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கம் முதலிய நூல்களின் ஆசிரியர்.

Siddha Vaidya

Pathartha Guna Vilakkam

Introduction.

I am thankful to the author Sree Kannusamy Pillay, for giving me an opportunity in studying his valuable book of "Pathartha Guna Vilakkam." My ignorance of Tamil language is well known; but as president of the Third Vaidya Mandali, I felt I should not excuse myself on that ground. I therefore had portions of the book read to me, and from the description of the selected drugs, I find that the author has incorporated in this voluminous book, not only valuable knowledge collected from the famous ancient authors of the system but also the result of the practical experience of the author of over forty years' standing in the practice of Indian Medicine.

He has classified the information in a modern form; but he has carefully preserved the Sampradaya of Ayurveda. The Tridosha Theory explaining the properties of the drugs according to Vatha, Pitha and Kapha has been preserved throughout. Even in drugs which he borrowed from other pharmacopaea, he has taken care to trace out their properties according to the fundamental principles of Indian Medicine.

The language is very simple; the descriptions are concise and the most common plants, available in the village parts, have been carefully surveyed and included. There are certain drugs which are used only in Southern India and which therefore were not described by the Sanskrit authors such as "Kuppai-Meni; Adu-Thinnappalai; Amman Pacharisi," that have found place in this book. This book is therefore of All-India importance.

I felt that an introduction to a book of this sort, a clear and concise idea of the theories that underlie the foundation of the science of Indian Medicine would be of great value to the reader. The theory of the Tridoshas—Vatha, Pitha and Kapha—the theory of Rasa, Veerya Vipaka Prabhava of drugs and the general principles of treatment followed by Indian Physicians, will therefore be dealt with in a concise manner. Corresponding to the five senses that are bestowed to man, the Indian Scientists have conceived that the whole world consists of Pancha Bhoothas, Pridhivi, App, Tejas, Vayu and Akasa. (i) Pridhivi is predominantly solid and does not usually spread in any direction. (ii) App is predominantly liquid which spreads so as to take up the shape of the container. According to this theory, electricity which spreads only in a different directions, *i.e.* along the surface of the wire is more diffusable than water but not so diffusable as light and heat which are placed in the third class, namely Tejas. (iii) Tejas is considered to be diffusable in three directions but not so diffusable as "Vayu". (iv) Vayu is more diffusable than the other three, but not so diffusable as Akasa. (v) Akasa is the most diffusable of all. It may be identical with ether.

Though theoretically the five states of matter have been defined in the above manner all the five Bhoothas or elements are composed of an admixture of all the five Bhoothas in various proportions. The preponderance of one or the other elements gives it the solidarity or otherwise to the substances that we see around us.

These five Bhoothas are grouped into three for medical purposes in Indian Medicine. Vatha is composed of Vayu and Akasa and a very small proportion of other elements. Pitha is composed of a predominance of Tejas less of App and very much less of other elements; and Kapha is composed predominantly of Bhoo-thiravya (solid) and a certain amount of liquid and very small quantities of other Bhoothas.

The properties of all substances are classified mainly as smell relating to Bhoo-thiravya, taste relating to App-thiravya, colour relating to Tejas, touch relating to Vayu, and sound relating to Akasa. Other properties of substances classified according to Ayurveda are twenty in number, the following ten and their opposites.

(1) Guru-(heavy)	opposite	Laghu	(Light)
(2) Manda-(slow)	,,	Tikshna.	(Active)
(3) Hima-(cold)	,,	Ushna.	(Hot)
(4) Snigdha-(Viscous)	,,	Ruksha.	(Dry)
(5) Sleshma-(smooth)	,,	Khara.	(Rough)
(6) Sandra-(dense)	,,	Drava.	(Liquid)
(7) Mrudhu-(soft)	,,	Katina.	(Hard)
(8) Sthira-(stable)	,,	Sara	(Diffusable)
(9) Sukshma-(subtle)	,,	Sthoola.	(Gross)
(10) Visada-(transparent)	,,	Picchala.	(Slimy)

The properties of all substances in the world are derived from the general properties of matter mentioned above and these are again classified as Rasa-taste, Veerya-Potency, Vipaka-action on the human body after assimilation and Prabhava-the specific property of each substance including drugs.

The Rasas are six—sweet, sour, salt, bitter, astringent and pungent. According to Ayurvedha substances containing sweet taste give more strength to the body than the others having tastes successively in the order mentioned in the above list. Thus sour substances give less strength than sweet, the salty less strength than the acids, and the pungent substances give the least strength of all. Again sweet, sour and salty substances check aggravated Vayu; and the other three increase it. Substances having sweet, bitter and astringent tastes decrease Pitha; pungent, bitter and astringent substances decrease Kapha whereas the others namely sweet, sour and saltish substances increase Kapha.

These substances are again classified as having heating and cooling properties. Generally speaking sweet substances like sugar are more cooling than pungent substances like chilly.

When food containing the six rasas is taken by us it is digested in the mouth, stomach and intestines and assimilated and burnt away in the tissues. From the mouth, onwards the Vatha, Pitha, Kapha in the food interact with the same in the body and the biochemical processes that take place in the human body convert the food into nutrients, tissues and debris. The biochemical processes are called agnees; and they are thirteen in number.

As the result of these changes we get Madhura Vipaka (sweet combination) primarily in the mouth and the stomach; Amla-Vipaka (acid combination) in the stomach and the upper part of the small intestines and Katu-Vipaka (pungent combination) in the lower parts of the intestines. The resultant essences of food are thus mainly classified into three transformations, namely Madhura, Amla and Katu Vipakas. The first having a cooling effect and the others having more or less heating effect.

The properties of substances which cannot be explained by their Guna, Rasa, Veerya and Vipaka are attributed to the direct action of the substances. Thus if food or a drug may have a direct action of its own which is not explained by the above theory. For instance Arithagik-Kadukkai has five tastes all excepting the saltish taste in different proportions. The other Amalaki (Nellikkoy) has different tastes of its own very similar to Arithagi. Kadukkoy is more astringent and Nellikkoy is more acidic. Kadukkai is slightly heating and Nellikkai is cooling. Kadukkai by virtue of its Prabhava, causes purging where as Nellikkai increases urine and does not purge. Both are Thridosha-hara, *i.e.* they bring the deranged Thadhus to normal condition. In this manner the properties of food materials and drugs have been studied and classified for the use of man in health and in disease.

Tridosha Theory Explained

The Properties of Vatha, Pitha, Kapha.

1. VATHA is the same as Vayu. Vayu is the same word as *Bios*. Bios means life. Compare Biology—science of life, Vayu similarly denotes life.

Take for instance, the working of an automobile engine, in which, these are essentially 3 systems. The sparking system is comparable to the nervous system in the human body. The power which gives the spark is comparable to Vatha. It is not the battery, it is not the wires it is not the plugs, it is not the spark but it is the power, it is the unseen agent, which is comparable to electricity but it is not electricity. It is the power of life—Praana—that is what is understood by Vayu or Vatha. In the unicellular organism, it is the cellforce. It is chaitanyan—or Kriya Sakti. It is a power similar to the one, that is contained in a bit of magnetized iron and that is lost when the same bit is heated and demagnetized.

In the complicated human body, it represents the power behind both the central and the sympathetic nervous systems. Vayu is the

leader of Pitha and Kapha, the bestower of power to them. Vayu has five divisions having different functions corresponding roughly to different nerve centres or plexuses in the body. 1. Praana in the chest. 2. Apaana in the Pelvis. 3. Samaana in the abdomen. 4. Udaana in the throat. 5. Vyaana throughout the body. They are like different sub-stations in an electrical system receiving their supply from a common source.

The normal functions of Vayu are to cause Enthusiasm, to regulate Inhalation and Exhalation, the proper actions of speech, mind and body, the promotion of cellular activity, formation and protection of different tissues and the proper evacuation of excretary matter. In fact, it is Vatha that is responsible for the birth of the child and for the maintenance of the human machinery, "Thantra Yantra Dharah."

Outside the human body, it is the universal force that regulates the movements of the Sun, the Earth and the Stars in their orbits. Vayu, the atmospheric air, is symbolical of Vatha but not synonimous.

2. PITHA —represents the combustion process in the automobile. In the human being, it represents the heat derived by the various biochemical processes that take place in the body. It is described as having five seats. 1. In the stomach, supplying the digestive fire. 2. In the liver and spleen, supplying colour to the blood. 3. In the heart, supplying intellect and memory. ("Hridayam Chethanaa Staanam." Heart is the seat of all activities including those of the mind.) 4. In the pupil of the eye supplying a power of vision. 5. In the skin, supplying glow or luster of the complexion. Pitha is comparable to heat, to fire, and to the Sun. If Pitha is less the digestion will be impaired. The colour of blood will be altered. The mental faculties become affected. The sight becomes dim or perverse. The complexion becomes affected, pale if it is decreased, and green or yellow if it is increased.

3. KAPHA—represents the cooling system in the automobile, the water jacket and the lubrication. But for this system of lubrication, the engine will be overheated and will be burnt out. In the human body, the joints get dry, creaking, stiff and so on. There are five seats for Kapha also.

1. In the stomach, supplying the lubricant to moisten the food and to break it up. 2. In the Thoracic cavity, to prevent the heart from excessive friction or heat. 3. In the tongue, for the perception of taste and for maintaining the moisture in the tongue. 4. In the head, to lubricate the different sense organs connected with the brain. 5. In the joints to keep them firm and to lubricate and protect different articulations. Kapha is comparable to the mobility and the coolness in water. The Moon is symbolical of Kapha.

Vatha, Pitha and Kapha Temperaments.

The temperaments of individuals are according to Ayurveda, attributed to heridity and environment of the embryo. The child is

influenced by evolutionary changes due to time (Kala), the nature of fertilization and growth in the uterus, the food and habits of the mother and also by the constituent elements that make up the embryo, namely the Pancha Bhutas and the relative preponderance of Vata, Pitha and Kapha temperament in the parents. These congenital tendencies are also classified into Vatha, Pitha and Kapha and combinations of these three temperaments. They are called the three Prakrithis of man.

Kapha Temperament.

People with kapha temperament have a full and well nourished, oily, smooth, delicate and beautiful body with strong, compact and steady limbs. They have profuse, black hair. They are rather slow in taking food and in their habits and actions. They are steady in the gait and are less effected by hunger, thurst, heat and sweat. They have a clear voice and complexion. They are generally well educated, comparatively rich, strong and vigorous in sex life. They are generally calm and live a long life. Susruta considers that their temperament resembles that of a lion, horse, elephant, cow, bull, eagle or swan.

Pitha Temperament.

Those with Pitha temperament cannot generally endure heat. They are easily susceptible to hunger and thirst, have a tendency to the hair getting prematurely grey, to wrinkled skin or bald head. They may have also soft, delicate hair of a dull yellowish colour (Kapila) and moustache. They have keen appetite, and eat well. They are generally very courageous and irresistible in battle, but they cannot endure much hardship. The muscles and joints are rather unsteady and loose. There may be a disagreeable smell in the armpits, mouth, head and skin. They are less virile. They are moderate in strength, general or scientific knowledge and also in their means of livelihood. Susruta says that their nature seems to resemble that of a serpent, owl, cat, monkey, tiger, bear or mongoose.

Vatha Temperament.

People with Vatha temperament generally have their skin rough and dry and their bodies slender, have their voice rather low and indistinct. They do not have good sleep. They are predominantly raajasika in nature. They are talkative. They are quick to start any venture and suffer from a lot of worries. They are prone to fear, and quick in love or hatred. They are quick in grasping things, but are also quick in forgetting. They cannot withstand cold, shivering or fits. The hair, moustache, nails, teeth, face, hands, feet and limbs are rough, brittle and easily cracking. The joints are creaky. Morally, they tend to be dishonest, jealous and thievish. They are generally weak, have less children, and they are not flourishing either in health or wealth, because they are incapable of accumulating money.

According to Susruta, their nature seems to resemble that of a goat, jackal, hare, rat, camel, dog, vulture, crow or ass. Susruta Sareera, Chap. 4.

If these qualities are overlapping and mixed up, they are called mixed Prakritis. Samaprakriti is a harmonious combination of Vatha, Pitha and Kapha temperaments. Those who have a particular Prakriti are easily susceptible to diseases having similar symptoms. The prakriti or temperament also of each individual is therefore to be studied before any diagnosis or treatment is effected.

The Western authors including the Greeks misunderstood the application of the three fundamental principles called Thridoshas and translated Vayu as wind—flatus. Pitha as bile and Kapha as expectorated phlegm. It is wrong. These wrong translations have given rise to much misunderstanding of this science. These three-wind, bile and phlegm—are respectively the excretary products or debris (Malas) due to the action of Vatha, Pitha and Kapha on the tissues.

Material States of Vatha, Pitha and Kapha.

In addition to subtle states described above and recognisable only by their physical, physiological and psychological propertiea, Vatha, Pitha and Kapha have their material and concrete states as well. In the material states, they supply the nutrient material required for the maintenance and growth of all the cells. According to Ayurveda, the human body consists of Nutrients, Cells and Debris.

Dosha Dhaatu Malaa Mulamhi Sariram.

The Doshas are nutrients, which surround each cell, penetrate into it and supply it with all the food material including oxygen.

The Dhatus are the cells and the federations of cells which we call tissues.

Malas are the Debris. The excreta (*i.e.*) the metabolic wastes that the body has to get rid of.

The nutrients are classified into three (*i.e.*) Vatha, Pitha and Kapha. The tissues are essentially seven—Lymph, Blood, Muscle, Fat, Bone, Bone-Marrow and Sperm (Germ cells); and the Debris are essentially three, namely, Urine, Sweat and Stools.

The normal condition of all of these is required for the maintenance of health. When the equilibrium is disturbed, it is called disease.

WHAT THE AVERAGE MAN UNDERSTANDS BY VATHA, PITHA, AND KAPHA, IS THE ABNORMAL CONDITION, WHICH IS PREDOMINANT IN DISEASE.

The purpose of the treatment, is first to remove the cause and secondly to purify the faults and to restore the equilibrium or the normal condition of the tissues. Charaka. Bk. 3—7—34. If any one of the principles is in excess, it should be reduced and if in defect, it should be increased by supplying the necessary treatment by way of medicine, food or mode of living, suitable for the purpose.

How to recognize these three principles?

In Ayurveda, they have three sets of gunas or groups of properties of matter, by which Vatha, Pitha and Kapha are easily recognized even by the layman. These are like sign posts or mile stones on a road. The Congress flag indicates encouragement of Khadder, removal of the evils of Drink and Untouchability and Hindu-Muslim unity. Similarly, the yellow of Pitta means burning sensation, heat, wastage of tissues, perverseness of appetite and so on. Just as the Congress flag is not the congress itself, these symptoms are not pitha in themselves but they are due to Pitha.

The Clinical symptoms of Vatha, Pitha and Kapha.

1. Vayu is dry, expanding in all directions like a gas, non-sticky, light, cold in action, penetrating, rough, active, exhibits astringent taste and light red or Aruna colour.

2. Pitha is slightly viscid, mobile (like liquid), non-sticky, hot in action, active, bitter, has smell of raw meat, and green or yellow in colour.

3. Kapha is recognized by being viscid, motionless (as in solid) slimy, heavy, cold to touch and in action, inactive, soft, sweet and white in colour.

Sometimes one, two or the three principles may be deranged and overlap at the same time and then you get overlapping of the symptoms. Then, we say, Vatha-Pitha is affected, Vatha-Kapha is affected, Pitha-Kapha is affected or all the three doshas are affected at the same time. It is the duty of the physician to recognize the various shades and combinations of the derangement and to offer the treatment accordingly.

The chief clinical symptoms by which deranged Vatha may be identified are cracking of the nails and soles of feet, dryness of skin, fissures and cracks at the hair roots, numbness or loss of sensation, pain, loss of function as in paralysis or excess of function as in a catch, spasm, stiffness, or twisting of muscles and distention of abdomen, drying up of secretions as in constipation, Aneura and furred tongue, tissue wastage, perverseness of functions of sense organs as in hearing, exaggerated sounds or deafness, unconsiousness, loss of sleep (insomnia), fickleness of mind, shivering, yawning, prattling and all functional disorders attributed to derangement of the nervous system etc. There may be an astringent taste in the mouth and light red colour, the colour of dawn. They are enumerated as 80 in number but may be many more.

The chief symptoms by which deranged Pitha is recognized are, a feeling of heat as if sitting near fire, as if burnt slightly or largely, a feeling as if smoke is coming out of the body, acid. taste, thirst, internal burning of the body, excessive sweating, bad smell, thinning of blood or muscle, red patches, blisters or haemorrhage, yellow colour,

jaundice, bitter taste in the mouth, smell of blood in the mouth, bad odour of breath burning sensation in mouth, throat, eyes, and anus, giddiness, sight suddenly getting dim and yellowness of urine, eyes, stools and nails etc. They are enumerated as 40 or more.

The chief clinical symptoms by which deranged Kapha is recognized are a constant feeling of satisfaction as regards appetite, lassitude, excessive sleep, numbness, heaviness of body, laziness, excess of saliva, expectoration of mucus, increase in faecal matter, hoarseness of throat, loss of strength, a feeling of coating over chest, fulness in blood vessels, glands in the neck, stoutness of the body, loss of appetite, urticaria (itchy rash), white colour of skin, whiteness in urine, eyes, nails and stools etc. These are enumerated as 20 or more.

Summary

The human body is supported by the three Doshas, seven Dhatus and three Malas. The three doshas are Vatha, Pitha and Kapha. The seven Dhatus are—(1) Lymph (2) Blood (3) Muscle (4) Fat (5) Bone (6) Bone marrow (7) Germ-cells. Three Malas are—(1) Faeces (2) Urine and (3) Sweat. Materially the Doshas are neutrients, the Dhatus are cells and federations of cells and the Malas are the debris.

Disease is due to any disturbance in the normal condition of the body by the increase, decrease or perverse condition of any of the above. The purpose of treatment is to restore the normal equilibrium. This is done by removing the cause and by the regulation of habits such as work, recreation and sleep or by the application of any method of treatment either by medicine, or food.

Enemas, Purgatives and Emetics are the main agents for purifying the body. Of the three, enemas are the best for mitigating Vayu, purgatives are the best for checking increased Pitha and Emitics are the best for checking increased Kapha.

Of the substances used in treatment, oil, particularly Castor Oil, is the best for checking Vayu. Ghee and Sugar for checking Pitha and honey for checking Kapha.

The abnormality of Vayu is known by pain, dryness, and roughness of skin, Constipation, or Diarrhoea, Distention of abdomen, acute nervous symptoms, or loss of function. For instance, Hysterical fits are due to excited Vayu and Neurasthenia is due to decreased Vayu. Pitha is known by burning sensation, bitter taste, giddiness, acute nature of the disease, yellow colour of eyes, skin and stools. Kapha is known by itchiness, excessive watering in the mouth, mucus discharges, white colour of skin and stools, sweet taste and chronic nature of the disease.

Heating treatment is recommended in Kapha diseases. Cooling treatment in Pitha diseases and Soothing treatment in Vatha diseases.

Sweet, slightly acid and saltish substances check Vayu. Bitter, astringent, and pungent substances check Kapha. Astringent, bitter and sweet substances check Pitha.

The temperaments of individuals, the abnormalities in disease, the properties of drugs, of food materials and of habits are studied in this manner, so as to facilitate the treatment of diseases.

The Physician should therefore first examine the patient carefully which of the three doshas or their combinations is at fault. The system of examination is by some others classified as of six kinds, namely five by our five senses, the eye, the ear, the nose, the feeling of touch and the taste and the sixth method is by questioning the patient regarding his suffering and the previous and present history of the case. "Panchabir, Indriah Prasnaih". The other system of examination is by what is called "Asthastana Pariksha". In this system the Nadi or pulse occupies the most important place. The testing of the disease by the pulse is an art similar to the playing on the Veena. It is not all people that can learn easily. It requires careful study under an expert teacher and requires great practical study and intention.

Yatha Veenaa Gathaan Thanthree
Sarvaan Raagaan Prabha Shate
Tatha Hastha Gathaa Naadi
Sarvaan Rogaan Prabha Shate.

The movements of the pulse have been described in a great detail but they may be summed up as follows: Vatha pulse is like the quick crawling of a serpent, Pitha pulse is like the jumping of a frog and Kapha pulse is like the steady walk of an elephant or swan. The Vatha pulse is felt by the index finger, Pitta by the middle and the Kapha by the ring finger of the Physician placed upon the artery which is prominent on the wrist at the base of the thumb.

The combinations of Vatha, Pitha and Kapha are judged by the intermixture of these movements of pulse.

The other seven things to examine the patients according to this method are (1) Urine (2)Faeces (3) Tongue (4) Sound (5) Skin (6)Eyes (7) General appearances. These include all those that are done by the first method and in fact all other examinations conducted by modern instruments.

General Principles of Treatment.

Broadly speaking all treatment, Medical and Surgical, is divided into three classes.

(1) Internal purification—Anthab parimaarjanam.

(2) External purification—Bahih parimaarjanam.

(3) Surgical operations—Sastra pranidhaanam.

Medical treatment is again divided into six Operations.

(i) Bhrimhanam.—Building,—Increasing—Also called Santarpana. For example, light massage with Utsadanam, baths, sleep, nutrient enemas with ghee and milk, easily digestible meat juices, sugar, milk and ghee improve the strength and weight of the patient.

(ii) Lankhanam.—Reducing.—Lankhana treatment includes not only the cleaning processes intended to purge out the faults but also soothing processes whose object is to destroy the faults in their own place. The soothing processes (Samana Karmas) are classified as follows:—

1. Restraining thirst (Tristna Nigraha)
2. Exposure to air (Maruta)
3. Exposure to sun (Aatapa)
4. Administering carminatives (Deepana)
5. Administering Digestives (Paachana)
6. Starvation—(Upavaasa)
7. Physical Exertion (Vyaayaama)

(iii) Snehanam—Lubrication—Internal and external application of ghee, oil, fat or bone marrow, plain or medicated. The object is to soften the tissues and for rejuvenation.

(iv) Rukshanam—Drying. This is the opposite of lubrication. This is intended to remove the excess of fat and other unnecessary or foreign materials from the body.

(v) Swedanam—Sweating. The object of sweda karma is not only to open out the pores in the skin but also to dilate the vessels and to release obstructions in all passages in the body. These include the tiny arterioles and also big channels like the intestinal, the urinary and other passages. Sroto vikaasam—opening out of channels—is the purpose of Sweda karma. 10 kinds of sweating without the aid of fire and 13 kinds with aid of fire are described.

(vi) Sthambhanam—As opposed to Sweda-karma, we have Sthambhanam, *i.e.* contraction of all the pores or passages. This is done by the application of cold and astringents etc.—Streto-nirodham.

The usual order is first lubrication, next sweating and then the cleaning processes called PANCHA KARMAS.
These are:—

1. VOMITTING,
2. PURGING,
3. ENEMA,
4. NASAL DOUCHE and
5. BLOOD LETTING.

DUE PERFORMANCE OF PANCHA KARMAS IS CONSIDERED QUITE ESSENTIAL IN THE TREATMENT OF CHRONIC AILMENTS SUCH AS LEPROSY AND FOR REJUVENATION TREATMENT CALLED RASAAYANA AND VAJEEKARNA IN PRACTICE. THE PANCHA KARMA TREATMENT IS VERY MUCH NEGLECTED AND IT IS BELIEVED THAT ON THAT ACCOUNT, THE AYURVEDIC TREATMENT IS NOT SO SUCCESSFUL AS IT SHOULD HAVE BEEN.

Rasayana Treatment is essentially of two kinds.

(1) KUTI—PRAAVESIKAM Treatment:—Institutional treatment, where a patient is confined to an isolated cottage specially con-

structed in a place of selubrious climate as in a sanatorium and where he is to live under certain restrictions placed by the medical experts.

(2) VAATAATAPIKA Treatment:—That is, Out-patient treatment in which the patient is allowed to expose himself freely to the sun and air and in which no severe restrictions are placed on his mode of living.

The former is naturally more effective and being more costly, it has gone out of ordinary practice for want of State patronage.

All the medical methods of treatment may result in either heating or cooling. Heating treatment is generally useful as against Kapha and Vatha types and cooling treatment as against Pitha types.

The symptoms of all diseases and the properties of all substances are to be studied in this manner and wherever there is defect or excess, it is remedied either by supplying or removing respectively the substances or causes corresponding to the abnormalities.

Vrudhih samaanaih sarveshaam
Vipareethaih vipariyah.

Equals when added increase and unequals when added decrease the original. This is the general rule of treatment in Ayurveda.

THE SUCCESS IN TREATMENT IS JUDGED BY :—

(1) Relief of pain, (2) Restoration of normal voice, (3) Restoration of normal colour of skin, (4) Normal growth or plumpiness of tissues, (5) Increase in strength, (6) Desire for food, (7) Good taste, (8) Complete digestion of food in proper time, (9) Sleep or normal duration, (10) Absence of disturbing dreams, (11) Waking up happily, (12) Proper discharge of flatus, urine, faecal matter and sperm, (13) Proper functioning of the Mind, Intellect and the five senses and (14) In short, the patient should feel happy and contented.

Happiness is an emotion and contentment is control of emotions. Contentment is more important than happiness because one cannot feel really happy unless he has contentment.

Charaka-Vimana—Chap. VIII, v. 91-92.

The aim of Ayurveda is to secure a long happy and contented life.

All the drugs in Pharmacopaea are studied in order to suit the treatment as stated above and they are grouped differently by different authors. Charaka has grouped them into 50 groups of ten each, Susruta into 37 groups with indefinite numbers and the latter authors have during their own periods added more drugs into the different groups. It will be noticed that they had no hesitation in incorporating new drugs like opium, chop Chini (Madusnihi) from foreign countries like some from China and some from Arabia and the author has similarly enriched the Indian Pharmacopaea by incorporating into his book all known drugs whatever be their source of origin. There is no end to knowledge. Let others who are more capable continue the useful work that the author has undertaken. I wish his efforts are a success.

Dr. A. Lakshmi Pathi, B.A., M.B. & C.M.,
Bhishagratna, Madras.

டாக்டர் A. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி., சி. எம்., பிஷக்ரத்ன அவர்கள் சித்த வைத்திய பதார்த்தகுண விளக்கத்திற்கு எழுதிய

பாயிரம்

ஆசிரியர் திரு. கண்ணுசாமி பிள்ளையவர்கள், 'பதார்த்தகுண விளக்கம்' என்னும் தமது அரியநூலைப் படிப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக யான் நன்றி செலுத்துகின்றேன். எனக்குத் தமிழ் மொழிப் பயிற்சி யில்லையென்பது வெளிப்படையே; ஆயினும் 'மூன்றாவது வைத்திய மண்டலி'யின் தலைவன் என்ற முறையில், அவ்வொரு காரணத்தைக்கொண்டு நான் என் கடமையிலிருந்து நீங்க விரும்பவில்லை. ஆகையால், இந்நூலின் சில பகுதிகளைப் பிறரைக்கொண்டு படிக்கச் செய்து கேட்டேன். அதில் பொறுக்கான சில மூலிகைகளை இவர் விளக்கி இருக்கும் முறையிலிருந்து ஆசிரியர் அவர்கள் இம்மாபெரும் நூலில், இம்முறையைப் போற்றிய பண்டைக்காலத்துப் பேராசிரியர்களின் நூற்களிலிருந்து திரட்டிய அரிய முறைகளேயன்றி இம்மருத்துவ முறையில் தமக்கிருக்கும் 40 ஆண்டுகட்கு மேற்பட்ட அநுபவ அறிவையும் சேர்த்துள்ளார் என்று அறிகின்றேன்.

இவர் நவீன முறைப்படி விஷயங்களைப் பாகுபடுத்தி விளக்கியிருப்பினும் இந்து சாம்பிரதாயத்தைச் சிறிதும் கைவிடாது காத்துள்ளார். வாதபித்த கப முறைப்படி மூலிகைகளின் குணத்தை விளக்கும் திரிதோஷ முறையை நூல் முற்றிலும் சற்றும் வழுவாது நன்கு அமைத்துள்ளார். பிற மருத்துவ முறைகளினின்று கையாண்டுள்ள மூலிகைகளை விளக்குமிடத்தும் இந்திய மருத்துவ விதிகளையொட்டி அவற்றின் குணங்களைப் பகுத்தறிவதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளார்.

இந்நூலில் மொழிநடை மிக எளிதாகவும் விஷயங்கள் சுருக்கமாகவும் எழுதப்பட்டிருப்பதோடு, கிராமங்களில் கிடைக்கக்கூடிய மிகச் சாதாரண மூலிகைகளும் நன்கு ஆராயப்பட்டுச் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆயுர்வேத ஆசிரியர்களால் கூறப்படாத தென்னிந்தியாவில் மட்டுமே கையாளப்பட்டுவரும் 'குப்பைமேனி, ஆடு தீண்டாப்பாளை, அம்மான் பச்சரிசி' போன்ற சில மூலிகைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஆகையால், இந்நூல் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய ஒரு நூலுக்குப் பாயிரம் எழுதுமுகத்தான் இந்திய மருத்துவத்தின் அடிப்படையாக இருக்கும் கொள்கைகளைச் சுருக்கமாக விளக்குவது வாசகர்களுக்கு மிக்கப் பயன்படுமென எண்ணுகின்றேன். ஆகையால் வாத பித்த கபமாகிய முத்தோஷவிளக்கமும் மூலிகைகளின் குணத்தை விளக்கும் இரஸ, குண, வீரிய, விபாக, பிரபாவ, விளக்கமும், இந்திய மருத்துவர்கள் சாதாரணமாகக் கையாளும் பொதுவான சில சிகிச்சை முறைகளும் சுருக்கமாக விளக்கப்படும்.

இந்திய விஞ்ஞானிகள், மனிதனுக்கு ஏற்பட்டுள்ள ஐந்து அறிவுகளுக்கொப்ப இவ்வுலகமும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்சபூதங்களால் ஆயதெனக்கண்டனர்: (1) பிருதிவி பெரும்பாலும் திடபதார்த்தமாய் உளது. சாதாரணமாக இது எத்திக்கிலும் பரவுவதில்லை.

(2) அப்பு பெரும்பாலும் திரவ பதார்த்தமாகும். இது தன்னை உட்கொண்டுள்ளவற்றின் வடிவை ஏற்கும் தன்மையுடையது. இக்கொள்கைப்படி கம்பியின் மூலம் பரவும் மின்சாரம் நீரைவிட மிகுதியாக வியாபிக்கும் தன்மையுடையது. ஆனால், மூன்றாவதாகக் கூறப்பட்ட தேயுவின் அடக்கமாகிய வெளிச்சம், உஷ்ணம் போன்று அவ்வளவு வியாபிக்கும் தன்மையுடையதன்று. (3) தேயு மூன்று திக்குகளிலும் வியாபிக்கும் தன்மையுடையதாயினும் வாயுவிற்குப் பின்னடைவதேயாகும். (4) வாயு மேற்கூறிய மூன்று பூதங்களைக் காட்டிலும் அதிக வியாபிக்கும் தன்மையுடையது. ஆனால், ஆகாயத்தைப்போல அவ்வளவு வியாபிக்கும் தன்மையுடையதல்ல. (5) ஆகாயம் எல்லாவற்றையும்விட அதிகமாக வியாபிக்கும் தன்மையுடையது. இது ஈதர் (ஆகாச நுண்ணணு) வைப் போன்றது.

பஞ்சபூத நிலைகளை மேற்கண்டபடிக் கூறியிருப்பினும் இப்பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும், பஞ்சபூதங்கள் பல்வேறு அளவுகளில் அமைந்துள்ளன. மேற்படிக் கூட்டுறவில் ஒன்று அல்லது மற்றொன்றின் மிகுதியால், நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளன. மருத்துவ உபயோகத்துக்காக இவ்வைம் பூதங்களும் மூன்றாக இணைக்கப்பட்டுள்ளன. 'வாதம்' வாயுவோடு ஆகாசத்தையும் மற்றைய பூதங்களைச் சிறு அளவிலும் பெற்றுளது. 'பித்தம்' அதிக தேயுவுடன் குறைந்த அப்புவையும் மற்றைய பூதங்களின் சிறு அளவையும் பெற்றுளது. 'கபம்' அதிகப் பிருதிவியுடன் குறைந்த அப்புவையும் மற்றையப் பூதங்களின் சிறு அளவையும் பெற்றுளது.

எல்லா வஸ்துக்களின் குணங்களும் முக்கியமாக அடியிற்கண்டபடி பிரிக்கப்பட்டிருக்கின்றன. பிருதிவியினால் வாசனையும், அப்புவினால் ருசியும், தேயுவினால் நிறமும், வாயுவினால் ஸ்பரிசமும், ஆகாசத்தினால் சப்தமுமுண்டாம். ஆயுர்வேதத்தின்படிப் பொருள்களின் மற்றையக் குணங்கள் இருபதுவகைப்படும்; அவைகள் கீழ்வரும் பத்து குணங்களும் அவைகளின் எதிரிடைக் குணங்களுமாகும்:—

(1) குரு (பாரம்) × லகு (இலேசு); (2) மந்தம் (தாமதம்) × தீட்சண்யம் (சுறுசுறுப்பு); (3) இமம் (குளிர்ச்சி) × உஷ்ணம் (சூடு); (4) சினிக்தம் (நெய்ப்பு) × ரூக்ஷம் (வறட்சி); (5) சிலேஷ்மம் (வழவழப்பு) × கரா (கரகரப்பு); (6) சந்த்ரா (தடிப்பு) × திரவம் (நீர்த்தல்); (7) மிருது (மென்மை) × கடினம் (வன்மை); (8) ஸ்திரம் (அசைவற்றது) × சரா (அசைவுள்ளது); (9) சூட்சுமம் (நுண்மை) × ஸ்தூலம் (பருமை); (10) விசதா (தெளிவு) × பிச்சலா (மங்கல்).

இவ்வுலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களின் குணங்களும் மேற்கூறப்பட்டப் பொருள்களின் பொதுக் குணங்களிலிருந்தே உண்டாகின்றன. இவைகள் மறுபடியும் ரசம் - சுவை, வீரியம் - சக்தி, விபாகம் - உண்ட பின்பு உடலில் ஏற்படும் செய்கை, பிரபாவம் - மருந்துகள் உட்பட ஒவ்வொரு வஸ்துவின் விசேஷ குணம் எனப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

சுவை (ரசம்) அறுவகைப்படும்: இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. ஆயுர்வேதத்தின்படி இனிப்புச் சுவையுள்ள பதார்த்

தங்கள் மேலே குறிப்பிட்டபடி, வரிசைக் கிரமமாகப் பலத்தைக்கொடுக்கக் கூடிய இதர சுவைகளையுடைய பதார்த்தங்களைவிட உடம்பிற்கு அதிக பலத்தைக் கொடுக்கும். அதாவது, புளிப்புச்சுவையானது இனிப்பை விடச் சிறிது குறைந்த பலத்தைக் கொடுக்கும். உவர்ப்பு, புளிப்பைவிடக் குறைந்தபலத்தைக் கொடுக்கும். இப்படி முறையே ஒன்றுக்கொன்று பலம் குறைவுபட்டு முடிவில் கார்ப்புச்சுவையானது மிகக்குறைந்த பலத்தைக் கொடுக்கும். மற்றும் இனிப்பு, புளிப்பு, கரிப்பு பதார்த்தங்கள் அதிகரித்த வாயுவை அடக்கும். மற்ற மூன்றுசுவையுள்ள பதார்த்தங்கள் வாயுவை அதிகரிக்கச்செய்யும். இனிப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள் பித்தத்தையடக்கும். காரம், கைப்பு, துவர்ப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள் கபத்தையடக்கும். ஆனல் மற்ற இனிப்பு, புளிப்பு, கரிப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள் கபத்தை விருத்திசெய்யும்.

இப் பதார்த்தங்கள் மீண்டும் உஷ்ணகுணங்களையுடையன, குளிர்ச்சி குணங்களையுடையனவென்று இரண்டுவகையாகப் பிரிக்கப்படும்(இதுவே வீரியம் எனப்படும்). பொதுவாகக் கூறுமிடத்து சர்க்கரையைப்போன்ற இனிப்புப் பதார்த்தங்கள், மிளகாயைப்போன்ற கார்ப்புப் பதார்த்தங்களை விட அதிகக் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இவ்வறு சுவைகளுமடங்கிய உணவை நாம் சாப்பிட்டால் அது வாய், இரைப்பை, குடல்களில் ஜீரணமாகித் தசையணுக்களில் கலந்து எரிபடுகின்றன. வாய் முதற்கொண்டு, உணவிலுள்ள வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் சரீரத்திலுள்ள வாதம், பித்தம், கபம் இவைகளோடு சேர்ந்து சரீரத்தில் Bio-chemical என்னும் ஒருவித இரசாயன மாறுதலடைந்து அதன்மூலமாக உண்ட உணவானது சத்து, தசை, அசத்தாக மாறுதலடைகின்றது. இந்த முறையே அக்கினி எனப்படும். அவை பதின்மூன்ருகும்.

இந்த மாறுதல்களின் பயனுக மதுரவிபாகம்-இனிப்பு (முக்கியமாக வாயிலும் இரைப்பையிலும்) ஆம்லவிபாகம்-புளிப்பு (இரைப் பையிலும் சிறு குடலின் மேற்பாகத்திலும்) கடுவிபாகம்-கார்ப்பு (குடலின் கீழ்பாகங்களில்) ஆகியவைகள் ஏற்படுகின்றன. உணவினுல் ஏற்படும் சத்தானது இவ்வாறு மதுர ஆம்ல கடு விபாகங்கள் என முக்கியமாக மூன்று மாறுதல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் முதலாவது குளிர்ச்சியான செய்கையை உடையது. மற்றவைகள் சற்றேறக்குறைய சிறிது உஷ்ணச்செய்கைகளையே உடையன.

குண, ரச, வீரிய, விபாகங்களால் விவரிக்கமுடியாத பதார்த்தங்களின் குணங்களை அப் பதார்த்தங்களின் பிரதக்ஷணமான செய்கையினுல் அறியலாம். இவ்வாறு உணவு அல்லது ஒரு மருந்துசரக்கு மேற்கூறப்பட்ட விதிக்குப் புறம்பாக, அவைகளுக்கு உரித்தான வேறு நேராய குணத்தையும் பெற்றிருக்கலாம். உதாரணமாக அரிதகிக்கடுக்காய் கரிப்பு நீங்கலாக மற்ற 5 சுவைகளை ஏற்றக் குறைச்சலான அளவில் கொண்டுளது. நெல்லிக்காயும் ஏறத்தாழ அரிதகியைப்போல் எல்லாச் சுவைகளையும் பெற்றுளது. கடுக்காய் அதிக துவர்ப்புடையது. நெல்லிக்காயோ அதிகப் புளிப்புச் சுவையுடையது. கடுக்காய் சிறிது சூடுசெய்யும். நெல்லிக்காய் குளிர்ச்சி செய்யும். கடுக்காய் தனது பிரபாவத்தின்படி பேதியை

உண்டாக்கும். நெல்லிக்காய் சிறு நீரைப் பெருக்கிப் பேதியைக் கட்டும். இவைகள் இரண்டும் திரிதோஷங்களைக் கண்டிக்கக் கூடியன. அதாவது முறைதவறிய தாதுக்களைத் தத்தம் நிலையில் கொண்டுவரும். இவ்வாறு உணவுப் பொருள்கள், மருந்து சரக்குகள் ஆயவற்றின் குணங்களை, நோயுள்ள நோயில்லாத காலங்களிலும் மனிதர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாகும்படி நன்கு ஆராய்ந்து வகுத்துள்ளனர்.

திரிதோஷ விளக்கம்.

வாதம் என்பதே வாயு; வாயு என்பது உயிரைக் குறிப்பதாகும். இது 'Bios-ஜீவன்' என்ற 'லத்தீன்' மொழிக்கு ஒப்பாகும். 'Biology-உயிர்நூல்' என்பதால் இஃது நன்கு விளங்கும். உதாரணமாக ஒரு மோட்டார் வண்டியின் யந்திரத்தை எடுத்துக்கொண்டால் அதில் மூன்று முக்கிய அமைப்புகள் இருப்பதைக் காணலாம்.

பொறி (Spark) ஏற்படும் அமைப்பு மனித உடலின் நரம்பு அமைப்பை யொத்ததாகும். அப்பொறியை உண்டாக்கும் சக்தி வாதத்துக் கொப்பாகும். அச்சக்தி 'பேட்டரியுமல்ல, கம்பிகளுமல்ல, விசைக் கருவியுமல்ல, பொறியுமல்ல; ஆனால், அது மின்சாரத்தைப்போன்ற ஒரு விதக் காணமுடியாத சக்தியாம்; ஆயினும் மின்சாரமுமல்ல. அதுதான் உயிர்-பிராணன். இதுவே வாதம் அல்லது வாயுவெனப்படுவது. ஓர ணுப் பொருளில் அது அணுச்சக்தியாக விளங்குகின்றது. இதுவே உயிர்ச்சக்தி; அதாவது சைதன்யன் அல்லது கிரியாசக்தியாகும். ஒரு இரும்புத்துண்டுக்குக் காந்த மூட்டினால் அதில் ஒரு சக்தி உண்டாகிறது; அதே துண்டைக் காய்ச்சினால் அச்சக்தி ஒழிந்துவிடுகிறது. அச்சக்தி யைப் போன்றதே இஃதும்.

சிக்கலான உடற்கூற்றில் இது நரம்புக் கூட்டத்தை இயக்கும் சக்தியாகவுளது. பித்த கபங்களுக்குச் சக்தியைக் கொடுப்பதும் வாயுவே; இதுவே அவற்றிற்குத் தலைமையாயது. உடலிலுள்ள நரம்புகளுக்கு ஐந்து நடுநிலைகள் இருப்பதுபோன்று, வாயுவும் ஐந்து வகையாகும்; ஒவ்வொன்றும் தனித்தனி வேலையைச் செய்கின்றன: (1) மார்பில் பிராணவாயுவாகவும், (2) இடையில் அபானவாயுவாகவும், (3) வயிற்றில் சமானவாயுவாகவும், (4) தொண்டையில் யுதானவாயுவாகவும், (5) உடல் முழுதும் வியானவாயுவாகவும் இயங்குகின்றது. மின்சார இயக்கத்தில் தலைமைச் சாலையிலிருந்து வேண்டிய மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளு கின்ற பல கிளைச்சாலைகளைப் போன்றவையே இவையும்.

உற்சாக மூட்டுதல்,மூச்சு இழுத்தல் விடுத்தலை ஒழுங்கு படுத்துதல், மனோவாக்குக் காயங்களைச் சரிவர நடத்துவது, அணுக்களின் வேலையை விருத்தி செய்வது, பலவித தாதுக்களை உண்டாக்குவது, காப்பாற்றுவது, கழிபொருள்களை உடலினின்று சரிவர வெளியாக்குதல் முதலிய வாயு வின் இயற்கையான வேலைகளாகும். உண்மையாக நோக்குமிடத்து, குழந்தை பிறப்பதற்குக் காரணமாக இருப்பதும் வாதமேயாகும். 'தந்த்ரா-யந்த்ரா-தரஹா.'

உடலுக்குப் புறம்பே, சூரியன், பூமி, நக்ஷத்திரங்கள் முதலிய தம் பாதையில் சரிவரச் செல்லும்படி ஒழுங்கு படுத்தும் ஒரு லோக சக்தியா

யிருப்பதும் இவ்வாதமே. பூமியினுள்ளும் புறம்பும் உண்டாகும் எல்லா மாறுதல்களுக்கும் காரணமாக விருக்கும் பெருஞ்சக்தியும் இதுவேயாகும். காற்றுங்கூட வாயுவென வழங்கப்படுகிறது. ஆனால், இந்த மூலாதாரம் காற்று மட்டுமல்ல; அதிலுள்ள சக்தியாகும்.

பித்தம்:—இது அம் மோட்டார் இயந்திரத்தில் எரிக்கும் சக்திக்கு ஒப்பாகும். மனிதர்களின் உடலில் பல்வேறு பொருள்கள் இரசாயன மாறுதல்களை யடைவதால் உண்டாகின்ற உடற்றீயாக விருப்பது இஃதே. இது உடலில் ஐந்து இடங்களில் ஐந்து தொழில்களை நடத்து கின்றது: 1. வயிற்றில் ஜீரணசக்தியையும், 2. கல்லீரல் மண்ணீரல்களில் நின்று இரத்தத்திற்கு நிறத்தையும், 3. இருதயத்தில் தங்கி அறிவையும் ஞாபகசக்தியையும் (இந்திய மருத்துவத்தில் இருதயமே மூளைமுதல் மற்றெல்லாத் தொழில்களையும் நடத்துகிறதென்பது முடிபு), 4. கண்ணின் கருவிழிமூலம் பார்வைத்திறத்தையும், 5. தோலிற்கு ஒளியையும் தருகின்றது. இப் பித்தம் உஷ்ணம், தீ, சூரியன் முதலியவற்றுக் கொப்பாகும். உடலில் பித்தம் இயற்கையான அளவிற்குக் குறையுமானால் ஜீரணசக்தி கெடும்; இரத்தத்தின் நிறம் மாறுதலடையும்; மனோசக்திகள் சீர்கெடும்; பார்வை மந்தப்படும்; தேஜசும் கெடும். பித்தம் அதிகமானால் உடல் நிறம் வெளுக்கும், குறைந்தால் பசுமை, மஞ்சள் நிறமாக மாறும்.

கபம்:—இது மோட்டாரிலுள்ள இயந்திரத்தைக் குளிரச் செய்யும் நீர்த்தொட்டிக்கும், வழுவழுப்பை யுண்டாக்கும் முறைக்கும் ஒப்பாகும். இவ்வழுக்குத் தன்மையுடைய எண்ணெய் யில்லாவிடில் இயந்திரம் மிகுந்த சூடேறி எரிந்துவிடும். இதுபோன்றே உடலில் எலும்புப் பூட்டுகள் வறட்சியும், விரைப்பும், சிக்கலுமடைவதுண்டு. இவற்றை நீக்குவது கபமே. இதற்கும் ஐவிதத்தொழில்கள் உண்டு.

1. வயிற்றில் உணவை ஈரமாக்கி நசுக்கவும், 2. மார்பில் இருதயம் அதிகச் சூடேறாமலும் தேய்வடையாமலும் தடுப்பதற்கும், 3. நாவில் உருசியையும் ஈரத்தையும் கொடுத்துக் காக்கவும், 4. தலையில் மூளையோடு சம்பந்தப்பட்ட உணர்வுப் பொறிகளை உராய்தலினின்று வழுவழுப்பாய் வைத்திருக்கவும், 5. பூட்டுக்களைக் கெட்டியாக வைத்திருப்பதற்கும், பல அசைவுகளையும் உழற்றவும், காப்பாற்றவும் கபம் வேலை செய்கிறது. கபமானது அசைவுக்கும், நீரிலுள்ள குளிர்ச்சிக்கும் ஒப்பாகும். சந்திரன் கபத்துக்கு உவமையாக இருக்கிறது.

வாதபித்த கபகுணங்கள்.

ஆயுர்வேதத்தின்படி, மனிதனின் குணங்கள் பிண்டத்தின் பெற்றோர் குணத்தையும் சுற்றியுள்ள தன்மைகளையும் பொருத்துள்ளது. காலத்தினாலுண்டாகும் மாறுதல்கள், கருத்தரிக்கும் விதம், கருப்பையில் ஏற்படும் வளர்ச்சி, தாயின் உணவு, பழக்க வழக்கங்கள், பிண்டத்தை உற்பத்தி செய்கின்ற பஞ்ச பூதங்களின் சேர்க்கைத் தன்மை, தாய் தந்தையரின் வாதபித்த கபதன்மைகளின் சம்பந்த மிகுதி முதலியவைகளைப் பொருத்தே, குழந்தையின் உற்பத்தியும் பிறவிக் குணங்களும், வாதபித்த கபமாகவும், இவற்றின்தொந்தங்கள் மூவிதத் தன்மைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. அவை மனிதனின் மூன்று பிரகிருதிகள் எனப்படும்.

கபத்தின் தன்மைகள்.

கப தன்மை மிகுந்துள்ளவர்கள் நல்ல செழுமையான ஊட்டம் பெற்ற, பசையுள்ள, மிருதுவான, அழகிய உடலும்; வலிமையும், நிதானமு மமைந்த கைகால்களும் பெற்றவராயிருப்பர். அவர்கள் உணவை அருந்துவதிலும், தம் பழக்க வழக்கங்களிலும், செய்கைகளிலும் சிறிது நிதானமுடையவராக இருப்பார்கள். அவர்கள் களியாட்டத்தில் நிதானமாக இருப்பதோடு, பசி, தாகம், உஷ்ணம், வியர்வை முதலியவற்றால் பிறரைவிடச் சிறிது குறைவாகவே துன்புறுவர். அவர்கள் சுத்தமான தொனியையும் பளிங்குபோன்ற நிறத்தையும் பெற்றிருப்பர். அவர்கள் பொதுவாக நன்கு படித்தவராயும் ஓரளவு செல்வந்தராகவும், பலமும், சிற்றின்பத்தில் மிக்க இச்சையு முடையவராயு மிருப்பர். பொதுவாக அவர்கள் சாதுவாகவும் நீண்ட ஆயுளைப்பெற்று மிருப்பர். சுஸ்ருதத்தில் அவர்களது குணத்தைச் சிங்கம், குதிரை, யானை, பசு, எருது, கழுகு, அன்னம் முதலியவற்றுக் கொப்பிட்டுளர். (இதற்கு உத்தமப் பிரகிருதி என்பது பெயர்.)

பித்தத்தின் தன்மைகள்.

பித்தத்தன்மை மிக்கவர் பொதுவாக உஷ்ணத்தைத்தாங்கமாட்டார்கள். அவர் பசி தாகத்திற்குச் சுலபத்தில் அடிமைப்படுவதன்றி, அகாலவயதிலேயே நரை, சுருக்கம், வழுக்கைத்தலை முதலியவற்றிற்கு இலக்காகின்றனர். அவர்கள் மிருதுவும், மென்மையுமான செம்பட்டை மயிரையும், மீசையையும் உடையவராயு மிருப்பர்; அதிகப்பசியுள்ளவராயும் மிகுதியாக உணவுண்பவராகவு மிருப்பர்; பொதுவாக மிக்கத் தீரமும் சண்டையில் பின்னடையாத்தன்மையு முடையவராயிருப்பர்; ஆனால், அதிகக் கஷ்டத்தைத் தாங்கமாட்டார்கள். அவர்களது தசைநார்களும் பூட்டுக்களும் சோர்வும் விலவிலப்பு முடையனவாயிருக்கும். அக்குள், வாய், தலை, தோல் முதலிய விடங்களில் ஒரு விதத் துர்நாற்றம் ஒருக்கால் இருக்கலாம். அவர்கள் சிறிது வீரியம் குறைந்தவரா யிருப்பர்; பலம், உலக அறிவு, சாத்திர அறிவு, வாழ்க்கைச் சாதனங்கள் முதலியவற்றில் நடுத்தரமானவர்களாயிருப்பர். சுஸ்ருதத்தில் அவர்களின் குணம் பாம்பு, ஆந்தை, பூனை, குரங்கு, புலி, கரடி முதலியவற்றிற்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. (இதற்கு மத்திமப் பிரகிருதி என்பது பெயர்.)

வாதத்தின் தன்மைகள்.

வாததன்மையுள்ளவர் முறப்பான வறண்ட தோலையும், மெல்லிய உடலையும், ஈனத்தொனியையும்உடையவராயிருப்பர். நன்றாகத்தூங்கமாட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் 'ராஜஸீக' தன்மை வாய்ந்தவர்கள். நல்ல பேசுந்திறம் வாய்ந்தவர்; எக்காரியத்தையும் அவசரமாகத்துவக்கி அதனால் பல துன்பங்களையுமடைவர்; மிக்க அச்சமுடையவரும் விருப்பு வெறுப்புக்களுக்குக் கடிதில் இரையாகக் கூடியவருமாவர். எதையும் சீக்கிரத்தில் அறிந்துக்கொள்ளும் சக்தியுடையவர்; ஆனால், சீக்கிரத்தில் மறந்துவிடும் குணமுமுடையவர். குளிர், நடுக்கம், வலிகளைத்தாங்கமாட்டார்கள். அவர்களது கூந்தல், மீசை, நகம், பல், முகம், கைகால்கள் முதலியன முறப்பாகவும் சுலபத்தில் நொறுங்கக் கூடியதாயுமிருக்கும்; பூட்டுக்கள் சிக்க

லடையும்; அவர்கள் அயோக்கியத்தனம், பொருமை, திருட்டு முதலிய தீயொழுக்கங்களுக்கு இலக்கானவர்களாயிருப்பர். பொதுவாக அவர்கள் பலவீனர்களாயும், குழந்தைகள் அதிகமில்லாதவராயும் இருப்பதோடு, நல்ல உடல் நலமற்றவராயும் பொருள்திரட்டும் வகையற்றவராயுமிருப்பர். சுஸ்ருதத்தின்படி அவர்களது தன்மை வெள்ளாடு, நரி, முயல், எலி, ஒட்டகம், நாய், பருந்து, காக்கை, கழுதை முதலியவற்றிற்கு ஒப்பாகும். (அதமப்பிரகிருதி) சுஸ்ருதாசரீரா 4.-ம். அத்தியாயம்.

இக் குணங்கள் திரும்பத் திரும்பக் கலந்து வந்திருப்பின் அவை 'பிரகிருதி' தொந்தங்களெனப்படும். 'சமப் பிரகிருதி' என்பது வாத கப பித்தத் தன்மைகளின் கிரமமான சேர்க்கையாகும். தனிப்பட்ட பிரகிருதிக்குள்ளானோர், அதற்குரிய நோய்களுக்குள்ளாவர். ஆகையால், எந்த நோயின் விபரத்தை யறிவதற்கும், சிகிச்சை செய்வதற்கும் முன்னதாகப் 'பிரகிருதி' அல்லது தன்மையை யறியவேண்டும்.

கிரேக்கர்கள் உள்பட மேனாட்டு அறிஞர்கள் பலரும் திரிதோஷங்களின் தன்மையை நன்குணராமல் தவருக எழுதினார்கள். வாயு என்பதை—காற்று என்று மொழி பெயர்த்தார்கள். பித்தத்தைப் பித்த நீர் என்றும், கபத்தை ஈளை யென்றும் எழுதினர். அது முற்றிலும் தவறு. இக்குற்றமான மொழி பெயர்ப்புக்கள் இக் கலையின் பெருமைக்கே தடையாக ஆயிற்று. காற்று, பித்தநீர், சளி என்ற இம் மூன்றும் முறையே வாத பித்த கபங்களின் செய்கையால் தாதுக்களில் ஏற்படுகின்ற கழிபடு பொருளாய மலங்களாகும்.

வாத பித்த கபங்களின் உருவான நிலைமைகள்.

மேலே கூறப்பட்டவை வாத பித்த கபங்களின் நுண்மை விளக்கமேயாகும்; இவையன்றி வெளித்தோற்றமான சில நிலைகளும் இவற்றிற்குண்டு. இந் நிலையின்படி அவைகள், தசையணுக்களின் வளர்ச்சிக்கேதுவாய ஊட்டந்தரும் பொருள்களை அளிக்கின்றன. ஆயுர் வேதத்தின்படி மனித உடல் ஊட்டப் பொருள்கள், அணுக்கள், மலங்கள் ஆகிய வற்றால் ஆகியது. 'தோஷதாது மலா மூலாமிசரீரம்.'

தோஷ மென்பவை அணுக்களைச் சுற்றியுள்ள ஊட்டப் பொருள்கள். இவை அவ்வணுக்களின் உள் நுழைந்து பிராணவாயு உட்பட எல்லா உணவுப் பொருள்களையும் ஈந்து அவற்றைப் போஷிக்கின்றன.

தாதுக்களென்பவை அணுக்களும் அணுக்களின் கூட்டால் உண்டாகும் சப்த தாதுக்களுமாகும்.

மலமென்பவை அழிபொருள்களாகும். அதாவது, உடலினின்று வெளித் தள்ளப்படவேண்டிய கழிபடு பொருள்களாய அழிந்துபட்ட அணுக்களாகும்.

ஊட்டப் பொருள்கள் வாத பித்த கபமென மூன்று வகையாகும்.

தாதுக்கள்:—இரஸா (வெண்குருதி) இரக்தா (ரத்தம்) மாமிசா (சதை) மேதஸ் (கொழுப்பு) அஸ்தி (எலும்பு) மஜ்ஜா (எலும்புட்கரு) சுக்கிலம் (உயிரணு) என முக்கியமாக எழுவகையாகும். கழிபடு பொருள் சிறுநீர், வியர்வை, மலம் என மூன்று முக்கியப் பிரிவுகளாம்.

உடல் நலத்தின் பாதுகாப்புக்கு இவைகளனைத்தினுடைய இயற்கையான நிலைகள் காப்பாற்றப்படல் அவசியம். எப்பொழுது இவற்றின் ஒழுங்கு நிலைகுலைகிறதோ அப்பொழுதுதான் நோய் உண்டாகும்.

நோயில் அளவுக்கு மீறப்பட்டுள்ள நிலைகளையே சாதாரண மக்கள் வாத பித்த கபமென எண்ணுகின்றனர். முதலில் நோயின் காரணங்களை நீக்கிக் குற்றங்களைந்து, தாதுக்களை அவ்வவற்றின் சரியான நிலைக்குக் கொண்டுவருவதுதான் சிகிச்சையின் முக்கிய தத்துவமாகும். இவற்றில் ஏதாவதொன்று அளவுக்கு மீறினால் அதைக் குறைக்கவும் குறைந்தால் உயர்த்தவும் வேண்டியதே சிகிச்சைக்கடன்; இவற்றைச் சமயத்திற்கேற்ற வாறு மருந்து, உணவு, வாழ்க்கையில் பழக்க வழக்கங்களை ஒழுங்கு படுத்தல் முதலியவற்றால் செய்யலாம்.

இம்மூன்று தத்துவங்களையும் எப்படியுணர்வது ?

ஆயுர் வேதத்தில் இவற்றிற்கு மூன்றுவிதக் குணத்தொகுதிகள் உண்டு. இவற்றால் வாதபித்த கபங்களைப் பாமரமக்களும் சுலபமாகத் தெரிந்துக்கொள்ளலாம். இவை சாலையோரத்திலுள்ள வழிகாட்டிக் கம்பங்களையும் தூரங் காட்டுங்கற்களையும் போன்றவை. கதர்க்கொடியானது கதர் அபிவிருத்தியையும், குடியின் தீமை விலக்கையும், தீண்டாமையொழிப்பையும், இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் குறிக்கின்றது. அதுபோலவே பித்தத்தால் ஏற்படும் மஞ்சள் நிறமானது எரிச்சல், உஷ்ணம், தாது அழிவு, பசிநிலை சீர்குலைதல் முதலியவற்றைக் குறிக்கிறது. எப்படி காங்கிரஸ் கொடியே காங்கிரஸ் ஆகாதோ அதே போன்று இவ்வறிகுறிகளே பித்தமல்ல. ஆனால் இவை பித்தத்தால் விளைபவை.

வாத பித்த கபங்களின் மருத்துவக்குறிகள்.

(1) வாயு வறட்சியாயும் புகைபோன்று எல்லாத் திசைகளிலும் பரவக் கூடியதும், பசையற்றும், இலேசாயும், சீதளத்தன்மையுடையதாயும், ஊடுருவிச் செல்லுவதாயும், முறப்பாயும், சுறுசுறுப்பாயும் இருப்பதோடு துவர்ப்பையும், சிறிது சிவந்த செவ்வான நிறத்தையுமுடையது.

(2) பித்தம் சிறிது பிசுபிசுப்பாயும், திரவத்தைப்போன்று இயங்குவதாயும், சிறிது எண்ணெய்ப் பசையுடன் உஷ்ணம் செய்வதாயும், ஒட்டாமலும், சுறுசுறுப்பாயும், கசப்பாயும், பச்சை இறைச்சிபோன்ற நாற்றமுடையதாயும், பசுமை அல்லது மஞ்சள் நிறமாகவு மிருக்கும்.

(3) கபம் குழகுழப்பாயும், கடினப் பொருள்போன்று அசைவற்றதாயும், வழுவழுப்பாயும், பாரமாயும், சீதளம் செய்வதாயும், தொடுவதற்குக் குளிர்ச்சியாயும், மந்தமாயும், மிருதுவாயும், இனிப்பாயும், வெண்மையாயுமிருக்கும்.

சில சமயங்களில் இத்தோஷங்கள் அளவு குலைந்து தொந்தப்பட்டால் அப்பொழுது தொந்தப்பட்டக் குறிகள் தோன்றும். அப்பொழுது வாதபித்தம், வாதகபம், பித்தகபம் ஏற்பட்டிருக்கிறதென்றோ அல்லது ஒரே சமயத்தில் மூன்று தோஷங்களும் பாதித்திருக்கிற தென்றோ கூறலாம். சந்தர்ப்பத்துக்கேற்றவாறுஅவ்வவற்றின் நிலைகுலைவையறிந்து, ஏற்ற சிகிச்சை செய்ய வேண்டியது மருத்துவரின் கடமையாகும்.

நகச்சிதைவு, குதிக்கால் வெடிப்பு, தோல் வறட்சி, மயிர்க் கால்களில் குழிவிழுதல், சிதைவு, அங்கம் மறத்துப்போதல், வலி, பாரிசவாயுவில் ஏற்படுவது போன்று உடலின் தொழில் மந்தம், அல்லது திமிர்பிடித்தலி லேற்படுவது போன்று அங்கங்களின் அளவுக்கு மீறிய வேலையாலுண்டா கிற விரைப்பு, தசைப் பிடிப்பு, தசை இறுகல், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கலிலிருப்பதுபோன்று எச்சங்கள் வறட்சியடைதல், நாச்சொறி, தாது அழிவு, செவிடு, காதிரைச்சல்போன்று அறிவுப் பொறிகளின் தொழில்கள் சீர்குலைதல், மூர்ச்சை, நித்திரையின்மை, சபல சித்தம், நடுக்கம், கொட்டாவி, பிதற்றல், மூளை நரம்புகளின் நிலை குலைவால் எற் படும் கோளாறுகள் முதலியன நிலைகுலைந்த வாதத்தின் முக்கிய அறிகுறிக ளாவன. வாயில் ஒருவிதத் துவர்ப்புச் சுவையும், அங்கத்தில் செவ்வானம் போன்ற தாம்பர நிறமும் இருக்கக்கூடும். இவ்வாத நோய்கள் 80 என்று கூறப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு மேலும் இருக்கலாம்.

தணல் வீசுவதுபோன்ற வெப்பம், தோல் எரிச்சல், உடல் புகைச் சல், புளிப்புச்சுவை, தாகம், உடலுள் எரிச்சல், அமிதமான வியர்வை, துர்நாற்றம், இரத்தம் நீர்த்தல் அல்லது தசை மெலிதல், செந்தழும்புகள், கொப்புளங்கள், மஞ்சள் நிறம், காமாலை, வாய்க் கசப்பு, வாயில் குருதி நாற்றம், சுவாச நாற்றம்; வாய், நெஞ்சு, கண், ஆசன எரிவு; மயக்கம், திடீரெனப் பார்வை மந்தப்படல்; சிறுநீர், கண்கள், மலம், நகம் யாவும் மஞ்சள் நிறமாதல் முதலியன பித்தத்தின் முக்கியக் குறிகளாகும். அவை நாற்பதுக்குமேல் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

பசிமந்தம், அயர்வு, அளவுகடந்த தூக்கம், சருமம் மறத்துப்போதல், உடல் பளுவாதல், சோம்பல், வாய்நீர்ச் சுரப்புமிகுதி, ஈளைதள்ளு தல், மலப்பொருள்கள் அதிகரித்தல், குரல் விகாரம், பலவீனம், மார் பில் பற்று போட்டாற்போன்ற உணர்ச்சி, இரத்தக் குழல்கள் நிரம்பியது போலிருத்தல், கழுத்தில் நெரிகட்டுதல், உடல் பாரிப்பு, பசிக்குறைவு, நமைச்சல், தோல் வெளுப்பு, சிறுநீர், மலம், கண், நகம் வெளுத்தல், முதலியன கபத்தின் அறிகுறிகளாகும். இவை 20 அல்லது 20-க்கு மேல் கணக்கிடப்பட்டுள்ளன.

சுருக்கவுரை.

மனித உடலானது திரிதோஷங்கள், சப்த தாதுக்கள், மும்மலங் களால் நிலைத்துள்ளது. திரிதோஷங்கள், வாத பித்த கபமாகும். சப்த தாதுக்களென்பவை வெண்குருதி, இரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, எலும்புட்கரு, உயிரணுக்கள் ஆகும். மும்மலங்களாவன: மலம், சிறுநீர், வியர்வை. பருப்பொருளாக நோக்குமிடத்து தோஷங்கள் ஊட்டப் பொருள்களாகவும், தாதுக்கள் அணு அல்லது அணுக்கூட்டங்களாகவும், மலங்கள் கழிபொருள்களாகவும் விளங்குகின்றன. இம்மூன்றின் மிகுதி, குறைவால் ஏற்படுவதே நோய் எனப்படும். சிகிச்சையின் நோக்கம் அவற் றின் நிலையைச் சரிப்படுத்துவதேயாகும். இவ் வேலையானது, நோய்க் காரணங்களை யொழிப்பதாலும், வேலை, இளைப்பாறுதல், தூக்கம் முதலிய பழக்க வழக்கங்களை ஒழுங்கு படுத்துவதாலும், உணவு அல்லது மருந் தின் சிகிச்சையாலும் செய்யப்படுகிறது.

ஆசன மூலம் குடல் சுத்தி, பேதி கொடுத்தல், வாந்தியாக்கல் முதலியவை உடலைத் தூய்மைப் படுத்தும் முக்கியச் சாதனங்களாகும். இம்மூன்றனுள் ஆசன மூலம் குடல் சுத்தி செய்தல் வாயுவைக் கண்டிப்பதற்கும், பேதி கொடுத்தல் பித்த சாந்திக்கும், வாந்தியுண்டுபண்ணல் கபத்தைக் கரைக்கவும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

வாயுவைக் கண்டிக்க உபயோகிக்கும் சிகிச்சைப் பொருள்களில் எண்ணெயே, அதிலும் முக்கியமாக சிற்றாமணக்கு நெய்யே மிகச் சிறந்தது. நெய்யுஞ் சர்க்கரையும் பித்தத்தைத் தணிக்கவும், தேன் கபத்தைக் கரைக்கவும் சிறந்தவையாகும்.

வாதத்தின் நிலைகுலைவானது குடைச்சல், வறட்சி, தோல் முறப்பு, மலச் சிக்கல் அல்லது கழிச்சல், வயிற்றுப் பொருமல், நரம்புகளின் இசிவு, அல்லது தொழில் மந்தத்தால் நன்கு விளங்கும். உதாரணமாக மூர்ச்சா ரோகம் (Hysteria) வாத மிகுதியாலும், சூதக சன்னி (Neurasthenia) வாதக் குறைவாலும் உண்டாகின்றன. பித்தமானது எரிச்சலாலும், கசப்பாலும், மயக்கத்தாலும், வியாதியின் வேகத்தாலும், கண், தோல், மலங்கள் மஞ்சளடைதலாலும் உணரப்படுகின்றது. கபமானது சிரங்காலும் வாய்நீர்ச் சுறப்பு மிகுதியாலும், சளியாலும், உடல், மலங்களின் வெளுப்பாலும், இனிய சுவையாலும், வியாதியின் மந்த வேகத்தாலும், நன்கு அறியப்படும். கபநோய்களுக்கு உஷ்ண வீரிய சிகிச்சைகளும், பித்த நோய்களுக்குச் சீதள சிகிச்சைகளும், வாத ரோகங்களுக்குச் சமன சிகிச்சைகளும் சிறந்தவையாகும். இனிப்பு, சிறிதளவு புளிப்பு, கொஞ்சம் உவர்ப்புச் சுவையுள்ள பொருள்களால் வாதமும்; துவர்ப்பு, கார்ப்புச் சுவையுள்ள பொருள்களால் கபமும்; துவர்ப்பு, கைப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருள்களால் பித்தமும் தணிக்கைபெறும். நோயாளியின் தோஷதன்மைகள், நோயின் தோஷ நிலைகளின் குலைவு, மருந்துகளின் குணங்கள், உணவுப்பொருள்களின் தன்மைகள் முதலியவற்றை மேற்கூறிய முறையில் நன்கு உணர்ந்து, நோய்களுக்குத் தக்கவாறு சிகிச்சை செய்ய வேண்டும்.

ஆகையால் மருத்துவர் முதலாவதாக நோயாளியை ஜாக்கிரதையுடன் பரிசோதித்து, முத்தோஷங்களில் தனித்தாவது அல்லது தொந்தத்துடனாவது ஏற்பட்டக் குற்றத்தை அறிதல் வேண்டும். இந்தப் பரிசோதனை முறையைச் சிலர் 6 வகைகளாகப் பிரித்திருக்கின்றனர். இவற்றில் ஐந்து: கண், காது, மூக்கு, ஸ்பரிசம், சுவை ஆகிய ஐம்பொறிகளால் பரிசோதிப்பதாம். ஆறாவதாக ரோகியின் வாய்மொழியால், முன்பின் உள்ள தேக நிலைமையைக் கேட்டுத் தெரிந்துகொள்வதாம். "பஞ்சபிர் இந்திரிய பிரஸ்னே."

மற்றொரு பரிசோதனை முறையாவது "அஸ்தஸ்தான பரிட்சை" என்பதாம். இம்முறையில் நாடி நடை மிகவும் முக்கியமானது. நோயை நாடியினால் பரிசோதிப்பது வீணையில் வாசிப்பதைப்போன்ற வித்தைக்கு ஒப்பாகும். இது எல்லோரும் சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஒரு திறமை வாய்ந்த ஆசிரியரின் கீழ் மிகவும் கவனமாகக் கற்றுணர்தல் வேண்டும். அதற்கு மனத்திடமும், பெரிய சாதன முறையும் வேண்டும்.

யதா வீணு கதான் தன்த்ரீ
சர்வான் ராகான் பிரபா ஷதே
ததா அஸ்த கதா நாடி
சர்வான் ரோகான் பிரபா ஷதே.

நாடியின் நடைகள் அதிகவிஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் அவைகளைக் கீழ்வருமாறு சுருக்கிக் கூறலாம். வாத நாடியானது ஒரு சர்ப்பம் விரைந்து ஊர்ந்து போவதையொத்தது. பித்த நாடியானது தவளைக் குதிப்பதைப் போன்றது. கபநாடியானது ஒரு யானை அல்லது அன்னத்தின் நிதானமான நடையைப்போன்றது. மருத்துவர்கள் நாடி பரிசோதிக்கும் முக்கிய இடமாகிய, கையின் பெரு விரலுக்கு அடியில் மணிக்கட்டண்டையுள்ள இரத்த நாளத்தின்மேல் மூன்று விரல்களை வைத்து வாத நாடியை ஆள் காட்டி விரலாலும், பித்த நாடியை நடு விரலாலும், கப நாடியை மோதிர விரலாலும் அறிவார்கள். வாதம் பித்தம் கபம் இவைகளின் தொந்தங்களை மேற்சொன்ன நாடிகளின் நடை முறைகளின் கலப்பினல் அறிந்துகொள்ளலாம்.

இம்முறைப்படி வியாதியஸ்தர்களைப் பரிசோதிக்கும் மற்ற ஏழு விதங்களாவன:—1. சிறுநீர், 2. மலம், 3. நாக்கு, 4. சப்தம், 5. சர்மம், 6. கண்கள், 7. பொதுவான தோற்றங்கள். முதல் முறையில் கூறப்பட்ட பரிட்சைகள், தற்கால நவீன கருவிகளைக்கொண்டு செய்யும் பரிட்சைகள் எல்லாம் இவற்றுள் அடங்கும்.

சிகிச்சை முறைகள்.

விரிவாகக் கூறுமிடத்து மருந்து சிகிச்சை, இரண சிகிச்சை ஆகிய அனைத்தும் மூன்று வகைப்படும்:—(1) உள் சுத்தி—(ஆந்தப் பரிமார்ஜனம்) (2) புறச்சுத்தி—(பாஹ்பரிமார்ஜனம்) (3) இரண சிகிச்சைகள்—(சாஸ்திர பிரணிதானம்). மருந்து சிகிச்சைகள் மேலும் அறு வகையாகும்.

(i) பிரிம்மாஹ்ணம்—வளர்த்தல், பெருக்குதல்—இது சந்தர்ப்பணு என்றும் கூறப்படும். உதாரணமாக உத்ஸதானம் செய்து மெதுவாக உடல் பிடித்தல், குளித்தல், தூக்கம், நெய் பால் சேர்ந்த (எனிமா) போஷணைப் பொருள்களால் ஆசன மூலம் குடல் சுத்தி செய்தல், எளிதில் ஜீரணிக்கக்கூடிய மாமிசங்கள், சர்க்கரை, பால், நெய் முதலியன நோயாளியின் பலத்தையும், எடையையும் அதிகரிக்கின்றன.

(ii) இலங்கணம்—குறைத்தல்-இலங்கண சிகிச்சையில் மாசுக்களை வெளிக்கழித்துத் தள்ளும் தூய்மை செய்யும் முறைகளேயன்றி, குற்றங்களை அவை தோன்றுமிடத்திலேயே கண்டிக்கத்தக்க சமன முறைகளும் சேர்ந்தவையே. சமன முறைகள்: (1) தாக மடக்குதல், (2) காற்று வாங்குதல், (3) வெய்யிலிலிருத்தல், (4) தீபனமூட்டல், (5) ஜீரண சக்தியை அதிகரித்தல், (6) பட்டினி கிடத்தல், (7) உடற் பயிற்சி என வகுக்கப்பட்டுள்ளன.

(iii) ஸ்னேஹனம்—வழுவழுப்பாக்கல் - உள்ளும் புறமும் நெய், எண்ணெய், கொழுப்பு, எலும்புட்கரு முதலியவற்றைத் தனித்தேனும் மருந்து கூட்டியேனும் படியச் செய்தல். இதன் கருத்து தசையணுக்களை மிருதுவாக்கவும், புத்துணர்ச்சி அளிக்கவுமாகும்.

(iv) உருக்ஷணம்—வறட்சித்தல். இது வழுவழுப்பாக்கலுக்கு நேர் மாறானது. இது மிகுதியான கொழுப்பையும் மற்றும் பயனற்ற அல்லது புறம்பான பொருட்களையும் உடலிலிருந்து நீக்குவதற்காகும்.

(v) சுவேதனம்—வியர்வை யுண்டாக்கல்-வியர்வை யுண்டாக்கலின் உட்கருத்தானது தோலிலுள்ள துவாரங்களைத் திறக்கச் செய்வதற்கு மட்டுமல்ல; ஆனால் (உடலிலுள்ள) நாளங்களைப் பருக்கச் செய்து எல்லா வழிகளிலுமுள்ளத் தடைகளையும் ஒழிப்பதற்குமாம். இவற்றில் மிக மெல்லிய இரத்தக் குழைகள் முதல், குடல்கள், மூத்திரக் குழாய்கள் போன்ற எல்லாப் பெரு கால்களும் சேர்ந்தவையே. 'சுரோடோவிகாஸம்—உடலிலுள்ள இரக்த நாளங்கள் முதல் எல்லாக் கால்களையுந் திறந்துவிடுவதாகும்; இதுவே சுவேதகர்மாவின் வேலையாகும். தீயின் உதவியின்றிப் 10 விதமும் தீயினுதவியால் 13 விதமும் ஆக, வியர்வை யுண்டாக்கல் 23 விதமாகக் கூறப்பட்டுள்ளது.

(vi) ஸ்தம்பனம்—இஃது வியர்வை பிடித்தலுக்கு நேர்மாறானது; அதாவது உடலிலுள்ள எல்லாத் துவாரங்களையும் கால்களையும் சுருக்குதலாகும். இது சீதளம், துவர்ப்பு முதலிய குணமுடையப் பொருள்களால் நடைபெறுகின்றது. வழக்கமான வரிசைக் கிரமமாவது முதலில் வழுவழுப்பாக்கல், அடுத்தது வியர்வை யுண்டுசெய்தல், பிறகு சுத்தி செய்முறைகளாகிய பஞ்ச கர்மங்கள் ; அவையாவன : (1) வாந்தி யுண்டுசெய்தல், (2) பேதி யுண்டாக்கல், (3) ஆசனமூலம் குடல் சுத்தி செய்தல், (4) நாசியில் நசிய மிடுதல், (5) இரத்தத்தை வெளியாக்குதல். குட்டநோய் போன்ற கொடு நோய்களுக்குச் சிகிச்சை செய்தலிலும், ரசாயன, வஜீகரண என்னும் மீண்டும் வாலிப மளிக்கச்செய்யும் சிகிச்சைகளிலும் இப் பஞ்ச கர்மங்களைச் சரியான முறையில் அனுஷ்டித்தல் மிக முக்கியமென வழக்கத்தில் அறிந்ததாகும். பஞ்சகர்ம சிகிச்சைகள் பெரிதும் புறக்கணிக்கப் பட்டிருத்தலால்தான் ஆயுர்வேத சிகிச்சை அஃது இருக்கவேண்டிய அளவுக்கு வெற்றி யளிப்பதாயில்லையென நம்பப்படுகிறது.

இரசாயன சிகிச்சை முக்கியமாக இருவகைப்படும்:—(1) குடி—பிரவேசிகச் சிகிச்சை. இதன்படி ஒரு நோயாளியானவன் சுகாதார சீதோஷ்ணம் பொருந்திய ஒரு இடத்தில் நல்ல சுகாதார நிலைமையில் அமைக்கப் பட்ட ஒரு குடிசையில் தனித்திருந்து, மருத்துவ நிபுணர்களால் விதிக்கப்பட்டச் சில கட்டுத் திட்டங்களுக்கு அடங்கி வாழ்தலாகும்.

(2) வாதாதபிகா சிகிச்சை:—அதாவது நோயாளிகளை ஒரு குறித்த மருத்துவச் சாலையில் வைக்காது, வெய்யிலிலும் காற்றிலும் நன்கு உலாவ விடுதலோடு அவர்களது தினசரி வாழ்க்கையில் மிகுந்த கட்டு திட்டங்களை ஏற்படுத்தாது விடுதல். முதலாவதாகக் கூறப்பட்டது மிக்கப் பயன்தரத் தக்கது; இதற்குச் செலவு அதிகமாதலாலும், அரசாங்க உதவியின்மையாலும் வழக்கில் பெரிதும் கைவிடப்பட்டது. எல்லா மருந்து சிகிச்சைகளும் சூடு செய்வித்தல், குளிர்வித்தல் ஆகிய இரண்டு முறைகளில் அடங்கும். உஷ்ண சிகிச்சை கபவாத நோய்களிலும், சீதள சிகிச்சை பித்த நோய்களிலும் பொதுவாகப் பயன்படுகின்றன. எல்லா நோய்களின் குறிகளையும் எல்லாப் பொருள்களின் குணங்களையும்

இம்முறையாக நன்கு ஆராய்ந்து, எவ்வெவ்விடத்தில் குற்றமோ அல்லது திரிதோஷங்களின் அளவு மிகுதியோ ஏற்படுகின்றதோ அவ்வவற்றுக் கேற்றவாறு அவ்வப் பொருள்களேயோ அன்றி நோய்க் காரணங்களேயோ முறையே அதிகப்படிச் சேர்ப்பதாலும் குறைப்பதாலும் குணப்படுத்த வேண்டும். மூல தன்மைகளானவை தமக்கு ஒத்த தன்மை சேர்ந்தால் மிகுதியாகும், வேருய தன்மைகள் சேர்ந்தால் குறையும். இதுவே ஆயுர் வேதத்தின் பொதுவான சிகிச்சை விதியாகும்.

மேற்கூறியவாறு சிகிச்சை செய்து நோயாளி குணமடைந்தானெனக் கண்டுபிடிக்கச் சில குறிகளாவன:—(1) வலி நீங்குதல், (2) இயற்கை யான குரலொலி திரும்புதல், (3) தோலின் பழைய நிறத்தைத் திரும்ப அடைதல், (4) தசையணுக்களின் இயற்கையான வளர்ச்சி அல்லது பெருக்கம் ஏற்படல், (5) வலிவு மிகுதி, (6) உணவில் விருப்பம், (7) நல்ல சுவை, (8) தக்க நேரத்தில் உணவு நன்கு ஜீரணமாதல், (9) வழக்கமான கால அளவிற்குத் தூங்குதல், (10) துயில் குலேக்கும் கனவுகளின்மை, (11) குதூகலமாகத் துயில் நீத்தெழுதல், (12) சிறுநீர், மலம், விந்து முத லியன உற்ற அளவில் முறைப்படிக் கழிபடல், (13) மூளே, அறிவு, ஐம்பொறிகளும் தக்கமுறையில் சரிவர வேலேசெய்தல் முதலியவாம். (14) சுருக்கமாகக் கூறுமிடத்து நோயாளி மகிழ்ச்சியாகவும், திருப்தியாக வும் இருத்தல் வேண்டும்.

மகிழ்ச்சி என்பது உணர்ச்சியின் மிகுதி; திருப்தி என்பது உணர்ச்சி களேக் கட்டுப்படுத்துவது. திருப்தியடைதல் மகிழ்ச்சியைவிட மிக முக்கிய மானது. ஏனெனில், எவரும் திருப்தியடையாமல் உண்மையில் மகிழ்ச்சி யடைய வியலாது. (சாரகா.)

திருப்தியும், மகிழ்ச்சியும், நீண்ட ஆயுளும் பெற்றவாழ்க்கையே ஆயுர்வேதத்தின் நோக்கமாகும்.

முடிவுரை.

பதார்த்த குணங்களேக் குறிப்பிடும் குண பாடத்திலுள்ள எல்லா மருந்து சரக்குக ளனேத்தும் சிகிச்சை முறைக்கு ஏற்றவாறு பரிசோதனே செய்யப்பட்டுப் பலஆசிரியர்களால் பலவிதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கின் றன. 'சாரகா' என்பவர் அவைகளேத் தனித்தனிப் பத்துப் பிரிவுகொண்ட 50 தொகுதிகளாக வகுத்திருக்கின்ருர். 'சுஸ்ருதா' என்பவர் ஒவ்வொன் றிலும் எண்ணிறந்த உட்பிரிவுகள் அடங்கிய 37 தொகுதிகளாக வகுத் துள்ளார். பிற்கால ஆசிரியர்கள் இப் பல் வேறு தொகுதிகளில் தம் தம் காலத்தில்மேலும் பல சரக்குகளேச் சேர்த்திருக்கின்ருர்கள். சைனு, அரே பியா போன்ற வெளிநாடுகளிலிருந்து அபினி, பரங்கிச்சக்கை போன்ற சரக்குகளேயும் சில புதிய மருந்து சரக்குகளேயும் சேர்ப்பதில் அவர்கள் சற்றும் தயங்கியதில்லே என்பது நன்கு தெரிகின்றது. அதுபோலவே இந் நூலாசிரியரும் தற்போது வழக்கிலுள்ள எல்லா மூலிகைகளேயும், அவை கள் எந்நாட்டினதா யிருப்பினும் பொருட்படுத்தாது, தமது நூலில் புகுத் தியதன் மூலம் இந்திய மருத்துவப் பொருள்களேப் பெருக்கியுள்ளார். அறிவுக்கு எல்லே இல்லே. ஆதலின் ஆசிரியர் கைக்கொண்ட இவ்வரிய வேலேயைமேலும் ஆற்றலுள்ளோர் தொடர்ந்து செய்வார்களாக. ஆசிரிய ரின் முயற்சிகளனேத்தும் வெற்றியுறுவதாக.

Préface.

Tous les savants qui se sont intéressés de près ou de loin aux arts et sciences de tout genre ont toujours convenu que l'Inde en était le berceau. La frustration d'un si beau titre ne fut pas seulement due à l'invasion étrangère qui, peu à peu, modifia jusqu'à la nationalité du pays, mais plus encore à la mystification de ceux, rares, il est vrai, qui, possédant les plus vastes connaissances de tous arts et sciences, n'osèrent pourtant pas les répandre dans leur milieu plus par crainte de se tromper que par égoïsme.

Toutes les recettes médicales dont ils gardaient ainsi jalousement les secrets furent néanmoins transportées, très discrètement, il est vrai, à l'étranger où elles fleurirent et même s'embellirent des parures locales. Il n'y a pas si longtemps, des chercheurs patients et désireux d'être utiles à leurs frères entreprirent de reconstituer le trésor intellectuel dilapidé et d'en faire prospérer leur pays d'origine, notre chère MOTHER INDIA. Du nombre de ces héros obscurs peut-être, mais non moins vaillants que les combattants des champs de bataille prêts à verser leur sang pour la Patrie, est le VAIDIAVIDVANMONI C. KANNUSWAMI PILLAY, qui nous appelle aujourd'hui à l'honneur de préfacer son plus récent travail sur la MATIERE MEDICALE DE L'INDE.

Ayant eu les mêmes aspirations que lui et ayant, d'autre part, glané dans les nombreux ouvrages médicaux tamouls qu'il a publiés, pour l'édification des nôtres propres qui ont paru en français sous la rubrique de MEDECINE TRADITIONNELLE DE L'INDE, nous ne pouvons dérober aux obligations quasi filiales que nous lui devons.

C'est donc avec plaisir que nous profitons de cette occasion pour rendre un public hommage à l'érudition, au patriotisme de ce *Pandit* qui se fit un devoir de lever le voile dont le SITTAVAIDIAM était recouvert jusqu'à nos jours et qui lui donnait un air de parent pauvre à côté de l'*Ayulvédic*.

En effet, le *Pandit* C. KANNUSWAMI PILLAY ne se contenta pas de répandre sur la science médicale hindoue une lumière qui en révèle toute la beauté ; il y amoncela les rayons de toutes les découvertes modernes et en fit un faisceau digne de retenir l'attention de tous les chercheurs contemporains. Ces derniers n'auront plus qu'à suivre les sentiers tracés par sa plume pour découvrir des moyens nouveaux pour soulager les misères de l'humanité.

Le nouvel ouvrage intitulé SITTAVAYDIA PADARTTAKUNHA VILHAKAM est, en effet, un ouvrage populaire, si l'on peut employer ce terme en parlant d'un ouvrage si hautement scientifique : mais il est si facile à consulter ! Classés par ordre alphabétique, il n'y a pas, dans cet ouvrage, que les simples du pays, mais encore tous produits étrangers journellement employés dans les familles, avec leurs propriétés thérapeutiques et leur mode d'emploi. Ecrit dans un langage clair et précis, il est destiné à servir de guide aux hommes d'art, et de livre de chevet aux profanes qui y trouveront tous renseignements utiles sur les prescriptions du médecin.

Dr. PARAMANANDA MARIADASSOU
Médecin Colonial,
Médecin-Lieutenant Honoraire des Troupes Coloniales,
Officier d'Académie,
Chevalier de la Légion d'Honneur

Clinique Sainte Anne
Pondichéry,
le 1er Août 1939.

பிரான்சு தேசத்தில் டாக்டரேட் என்னும் உயர்தரமான கல்விப் பட்டத்தைப் பெற்றவரும், பிரான்சிலும், அதன் அரசாட்சிக்குட்பட்ட இந்தோ-சைனு, சையாம், பிரெஞ்சு-இந்தியா முதலிய தேசங்களிலுமுள்ள வைத்திய இலாக்காக்களில் பல்வேறு கௌரவப்பட்டங்களைப் பெற்றவரும், (பிரெஞ்சு பாஷையில்) 'இந்தியாவின் பரம்பரை மருத்துவம்' என்னும் அரும் பெரும் நூலை இயற்றிய ஆசிரியருமாகிய

டாக்டர். பரமானந்த மரியதாஸ் அவர்கள்

சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கத்திற்கு எழுதிய

சிறப்புப் பாயிரம்

எல்லா வித்தைகளையும் சாஸ்திரங்களையும் பொதுவாகவும் சிறப்பாகவும் ஆராய்ந்த அறிஞர் அனைவரும், இந்தியாவே அவை வளர்ந்து தவழ்ந்த தொட்டில் என ஒப்புக்கொண்டுள்ளனர். அத்தகைய சிறந்த பெயர், தேசீய நிலையீருக அனைத்தையும் சிறிது சிறிதாக மாற்றிவிட்ட அயலாரின் படையெடுப்பால் மட்டுமன்றி எல்லா வித்தைகளிலும் சாஸ்திரங்களிலும் மிகப் பரந்த அறிவு பெற்று ஒரு சிலராயிருப்போர் சுயநலத்தைக் கருதியோ அல்லது அன்னியரால் ஏமாற்றப்படுவோமென்ற பயத்தினலோ அவற்றைப் பிறரிடைப் பரப்பாது நின்ற நிலைப்பாலும் சிதைந்து குலைந்தது.

இவ்வாறு இவர்கள் இவ்வளவு பயபக்தியோடு காத்துவந்த மருத்துவ முறைகளின் இரகசியங்கள் அனைத்தும் மிகவும் தந்திரமாக அயல் நாடுகளுக்குக் கொண்டுபோகப் பெற்று, அங்கு வளர்ந்து மலர்ந்து அவ்வந்நாட்டு ஆடையாபரணங்கள் பூண்டு விளங்குகின்றன. சகோதரர்களுக்குப் பயன்படவேண்டும் என்ற ஆர்வமும் பொறுமையும் நிறைந்த ஆராய்ச்சியாளர், நிலைகுலைந்த அறிவின் புதையலைப் புதுக்கியமைத்து, அதன் பிறப்பிடமான நம் செல்வத்தாயாகிய இந்தியாவிலேயே அது சீரும் சிறப்புமாக ஓங்கி வளரவேண்டி முயற்சி செய்யத்தொடங்கி நீண்டகாலமாகிவிடவில்லை. இவ்வீரர்கள் ஆரவாரமின்றி மறைந்துகிடந்தாலும், தம் தாய் நாட்டிற்காகப் போர்க்களத்தில் பகைவரொடு போராடி இரத்தத்தைச் சிந்தும் படையாளர்க்குச் சிறிதும் வீரத்தில் குறைந்தவரல்லர். இந்திய மருத்துவ முறையைப்பற்றித் தாம் மிக அண்மையில் எழுதியுள்ள நூலுக்கு முகவுரை எழுதும் பெருமையை

எமக்கு இன்று கொடுத்துள்ள வைத்திய வித்வன்மணி சி. கண்ணு சாமிப் பிள்ளையும் இத்தகைய வித்யா வீரர்களில் ஒருவர்.

நாமும் இவரைப்போலவே இத்தகைய பேரவாக்கொண் டிருப்பது மட்டுமன்றி, "இந்தியாவின் பரம்பரை மருத்துவம்" என்ற பெயரோடு பிரெஞ்சுமொழியில்வெளியிட்ட எமது சொந்த நூலைப் பெருமைப் படுத்திக்கொள்ளவேண்டி, அவர் தமிழில் வெளியிட்ட பல மருத்துவ நூல்களிலிருந்தும் பொருள்களைத் திரட்டிக்கொண்டிருப்பதாலும் அவருக்கு நாம் செய்யவேண்டிய ஞான புத்ரன் கடமையைச் செய்யாது விட்டுவிட முடியாது.

ஆகையால் ஆயுர்வேதத்தின் பக்கத்தில் சித்த வைத்தியம் நிற்கவேண்டி அதனை நமது காலம்வரை மூடிக்கிடந்த திரையை ஓதிக்கித் திறப்பதையே தமது கடமையாகக்கொண்ட, எளிய தந்தையாகிய இப் பண்டிதரின் தேச பக்திக்கும், கல்வித்திறத்திற்கும், பண்பட்ட அறிவு நிலைக்கும் உரிய வணக்கத்தை எல்லோரும் அறியச் செலுத்திக்கொள்ள நேர்ந்த இவ்வாய்ப்பினை மிக மகிழ்ச்சியோடும் பயன்படுத்திக் கொள்கிறோம்.

வித்வான். சி. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் இந்திய மருத்துவ சாஸ்திரத்தின் அழகனைத்தையும் வெளியாக்கும் ஒளியைப் பரப்பி நிற்பதோடு அமைந்துவிடவில்லை. தற்காலத்தார் கண்டு பிடித்த உண்மைகளாகிய ஒளிக்கதிர்களைத் திரட்டித் தற்கால ஆராய்ச்சியாளர் அனைவரது கருத்தையும் தேங்க வைத்துக்கொள்ளும் அணையாக அமைத்துள்ளார். மக்களின் துயரங்களை நீக்கும் புதுவழிகளைக் கண்டுபிடிக்க விரும்பின் பிற்காலத்தார் அவர் எழுதுகோலின் சுவட்டைப் பின்பற்ற வேண்டுவதுதான்.

மிகவும் உயர்ந்த சாஸ்திர முறையில் எழுதப்பெற்ற ஒரு நூலைப் பொது மக்களுக்கென எழுந்த எளிய நூல் எனக் கூறுவது இயையுமானால், **சித்த வைத்திய பதார்த்தகுண விளக்கம்** என்ற பெயரோடு வரும் இப்புதிய நூல் உண்மையில் அத்தகைய பொதுமக்கள் நூலாகும். இந்நூலில் அவ்வச்சரக்குகளின் மருத்துவ குணத்தோடும், உபயோகிக்கும் விதத்தோடும், சாதாரண நாட்டுச் சரக்குகள்மட்டும் அல்லாமல், அன்றாடம் குடும்பங்களில் உபயோகித்துவரும் அயல் நாட்டுச் சரக்குகளும், எளிதில் எடுத்துப் பார்க்கும் பொருட்டு அகராதி வரிசையாக உள்ளன. தெளிவும் திட்டமும் அமைந்த நடையில் எழுதப்பெற்றிருப்பதால், கலைவாணர்க்கு வழிகாட்டியாகியும், பொதுமக்கட்கு மருத்துவ முறைகளைப் பற்றிய பயன்தரும் விபரங்களனைத்தையும் காணுதற்கமைந்த தலைசிறந்த கருவியாகவும் விளங்கும் பான்மையது இந்நூல்.

புதுச்சேரி,
10 ஆகஸ்டு, 1939.

முருகன் துணை.

தற்சிறப்புப் பாயிரம்.

மன்னு சித்த வைத்திய நூலினில்
துன்னு பதார்த்த குணவிளக் கத்தினைப்
பொன்னிற் றிகழ்வுறப் பொதிகைக் கோனடி
முன்னிச் சொற்றுவன் முன்னவ ரேற்கவே.

அன்பும் அறிவும் ஆக்கமாம் பெரியீர் !

பாவலர் நிரம்பிய நாவலந் தீவிற் பன்னல வளப்பமுந் தன்னகங் கொண்டு விளங்கும், செந்தமிழ் விளங்குமிடமாகிய இச்சீரிய தென்னாட்டில் வசிக்கும் நம் சகோதர சகோதரிகள் உடல்நலம்பெற்று உயர்நலமாகிய உறுதிப்பொருளை எய்துதற்குச் சாதனமாக, இறைவனருள் வழிபட்ட அகஸ்தியர் முதலிய இருடிகளும், சித்தர்களும் இயற்றியருளிய பல வைத்திய நூல்களின் சாரமும், பல பெரியார்களின் அனுபவமுமாகிய முறைகளுட் சிலவற்றைத் திரட்டி "சிகிச்சாரத்நதீபம், கண்ணுசாமியம், வைத்ய சிந்தாமணி" முதலிய நூல்களை முன்னர் வெளியிட்டுள்ளேன். அந்நூல்கள் சித்த வைத்திய உலகில் சிறந்த ஆதரவு பெறுவதை நோக்கியும், அம்முறையை ஆதரித்துப் பயின்று பலனெய்திய பல அன்பர்க ளனுப்பிய நிருபங்களைக்கியும், மேன்மேற் பயின்ற பல நூல்களின் விஷயங்களையும் உணர்த்தவேண்டிய ஆவல் மிகுதியானும் இப்போது 'சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம்' என்னும் மற்றுமோர் நூலை வெளியிடப் புகுந்தேன்.

இந்நூலில் தென்னாட்டு வைத்தியர்கள் விசேஷமாக அவிழ்த பாகங்களில் சேர்த்து வருகின்ற மூல, தாது, ஜீவவர்க்கங்களின் உபயோகங்களை அகராதி முறையாகத் தற்கால உலகிற் கேற்றவாறு வைத்தியர்க்குமட்டு மன்றிப் பிறர்க்கும் எளிதில் விளங்குமாறு

எழுதியுள்ளேன். இந்நூல் பெரும் நூலாதலால் ஏழைகளான சகோதரர்கள் ஒரேகாலத்தில் அதிக விலை கொடுத்து வாங்க வியலாதென்றுன்னி, மூலிகையடங்கிய மூலவர்க்கத்தை மாத்திரம் முதலில் அச்சிடத் துணிந்தேன்.

இந்நூலை, எல்லோருக்கும் இனிது விளங்கும்பொருட்டு, இலக்கண நடையாகிய செந்தமிழ் நடையில் எழுதாது சாதாரண எளிய நடையில் எழுதியிருப்பினும், தமிழறிஞர்கள் மொழி நடை கருதாது பொருட்குணை நோக்கி ஆதரவளிக்குமாறு வேண்டுகின்றேன்.

எனக்கு இப்போதுள்ள வயோதிகத்திலும் என் குருநாதன் எனக்கருளிய உற்சாகத்தால் இந்நூல் வெளியான சின்னாளிலேயே 'தாது ஜீவவர்க்க' மென்னும் இரண்டாம் நூலையும் வெளியிட நினைந்துள்ளேன். ஆதலின், அன்பர்கள் இந்நூலை ஆதரிக்கு முகத்தான் அஃதும் விரைவில் முடிவுற்று வெளிவர ஊக்கமளிப்பரென எதிர் நோக்குகின்றேன்.

இந்நூல், இடையூறின்றி இனிது முடிந்தமைபற்றி எல்லாம் வல்ல இறைவனை மனமார வழுத்துகின்றேன்.

இங்ஙனம்:

சி. கண்ணுசாமிப் பிள்ளை,

32, அருணாஜல நாயக்கன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பொதுப்பாயிரம்

ஆங்கில வைத்திய முறைப்படி பதார்த்தங்களின் செய்கைகளைக் குறிப்பிடும் பெயர்களும், அவற்றின் விபரமும்.

THERAPEUTIC ACTIONS WITH THEIR DEFINITIONS.

வியதாபேதகாரி—Alterative.

வியாதியை நாளுக்கு நாள் குணமாக்கிச் சரீரத்தை ஆரோக்கிய நிலையில் கொண்டுவரும் மருந்து.

வேதனை சாந்தினி—Anodyne.

நோயைத் தணிக்கும் மருந்து.

ஆம்லநாசினி—Antacid.

வயிற்றிலுள்ள புளிப்பைக் கண்டிக்கும் மருந்து.

கிருமிநாசினி—Anthelmintic.

வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சிகளை வெளியாக்கும் மருந்து.

விஷநாசகாரி—Antidote.

விஷத்தை முறிக்கும் மருந்து.

முறைவியாதிரோதி—Antiperiodic.

முறைக் காய்ச்சல், முறையாய் வருகிற ரோகங்கள் இவற்றைத் தடுக்கிற மருந்து.

உக்கிரரோக சமனகாரி—Antiphlogistic.

தாபனம் முதலிய தீக்ஷண வியாதிகளைச் சமனப்படுத்துகிற மருந்து.

தாதுக்ஷீணரோதி—Antiseptic.

சரீர தாதுக்களை அழுகிப்போகவொட்டாமல் தடுக்கிறமருந்து.

அங்காகர்ஷணநாசினி—Antispasmodic.

இசிவுரோகங்களைத் தடுக்கும் மருந்து.

இலகுமலகாரி—Aperient.

உபத்திரவமில்லாமல் மலத்தை இளகலாக ஒரு முறை வெளியாக்கும் மருந்து.

காமவிர்த்தினி—Aphrodisiac.

காமத்தை அதிகப்படுத்துகிற மருந்து.

A

சங்கோசனகாரி—Astringent.

சதை, நரம்பு முதலியவைகளைச் சுருங்கச் செய்யும் மருந்து.

உதரவாதஹரகாரி—Carminative.

வயிற்றில் உஷ்ணத்தை உண்டாக்கி வாயுவைக் கண்டிக்கும் மருந்து.

விரணகாரி—Caustic.

புண்ணுக்கும் கார மருந்து.

பித்தகாரி—Cholagogue.

பித்தநீரை விருத்திசெய்யும் மருந்து.

அந்தர்ஸ்நிக்தகாரி—Demulcent.

தாதுக்களின் எரிச்சலைத் தணித்து அவைகளைத் துவளச் செய்யும் மருந்து.

சோபாநாசினி—Deobstruent.

வீக்கம், கட்டி இவைகளைக் கரைக்கும் மருந்து.

சுவேதகாரி—Diaphoretic.

வியர்வையை உண்டாக்கும் மருந்து.

பூதிகந்தநாசினி—Disinfectant.

கெட்ட நாற்றங்களையும் அவற்றிலுள்ள விஷக்கிருமிகளையும் போக்கும் மருந்து.

மூத்திர வர்த்தனகாரி—Diuretic.

மூத்திரத்தை அதிகமாக்கும் மருந்து.

வமனகாரி—Emetic.

வாந்தியை யுண்டாக்கும் மருந்து.

ருதுவர்த்தனகாரி—Emmenagogue.

சுரோணிதத்தை வெளியாக்கிச் சுபாவதன்மைக்குக் கொண்டு வரும் மருந்து.

நாசிநீர்வர்த்தினி—Errhine.

நாசிநீரை விருத்திசெய்து தும்மலை யுண்டாக்கும் மருந்து.

கபஹரகாரி—Expectorant.

கபத்தை வெளியாக்கி இருமலைத் தணிக்கும் மருந்து.

சுரஹரகாரி—Febrifuge.

சுரத்தை நீக்கும் மருந்து.

நித்திராகாரி—Hypnotic.

நித்திரையை யுண்டாக்கும் மருந்து.

க்ஷீரவர்த்தினி—Lactagogue.

முலைப்பாலை விருத்திசெய்யும் மருந்து.

க்ஷீரநாசினி—Lactifuge.

முலைப்பாலை வறட்டும் மருந்து.

மலகாரி—Laxative.

பேதியை யுண்டாக்கும் மருந்து.

பிரசவகாரி—Parturifacient.

பிரசோதவாயுவை யதிகரித்துக் கருப்பையைச் சுருங்கச் செய்யும் மருந்து.

ஷோணகாரி—Rubefacient.

மருந்து உபயோகித்த இடத்தைச் சிவப்பாக்கி, எரிச்சல், உஷ்ணம் இவைகளை உண்டாக்கும் மருந்து.

சீதளகாரி—Refrigerant.

உஷ்ணத்தைத் தணித்துத் தாகத்தை யுண்டாக்காமல் செய்கிற மருந்து.

சமனகாரி—Sedative.

தாதுக்களின் கொதிப்பைத் தணிக்கும் மருந்து.

திரவகாரி—Sialogogue.

உமிழ்நீரைச் சுரப்பிக்கும் மருந்து.

உற்சாககாரி—Stimulant.

நாடி நடையையும், சரீரத்தில் உஷ்ணத்தையும் அதிகரிக்கும் மருந்து.

ஜடராக்கினிவர்த்தினி—Stomachic.

தீபனத்தை யுண்டாக்கும் மருந்து.

ரக்தஸ்தம்பனகாரி—Styptic.

ரத்தநாளத்தைச் சுருங்கச்செய்து இரத்தத்தை வெளியாக்காமல் தடுக்கும் மருந்து.

பலகாரி—Tonic.

தாதுக்களுக்குப் பலங்கொடுக்கும் மருந்து.

துவக்ஸ்போடகாரி—Vesicant.

மருந்து போட்டவிடத்தைக் கொப்புளிக்கச் செய்யும் மருந்து.

தேகசுகத்திற்கு மீரப்பட்டுணர்த்தும் வியாதிகளை நிவர்த்திக்கக் கூடிய பதார்த்தங்கள்.

DRUGS ACCORDING TO THERAPEUTIC AND PHYSIOLOGICAL ACTIONS.

வியதாபேதகாரி.

அசுவகந்தி, அவுரியிலை, அழிஞ்சில்மரம், அருகங்கட்டை, ஆதொண்டை, ஆளிவிதை, இராகாசிமடல், இலுப்பைவேர், உகாமரம், கடலழிஞ்சில், கடற்பாலைவேர், கருடன்கிழங்கு, கறுப்பு அழிஞ்சில்மரம், கார்போகஅரிசி, குக்கில், சங்கங்குப்பி, சணப்பச் செடி, சதுரக்கள்ளி, சரக்கொன்றை மரம், சவுரிப்பழம், சிறுகாஞ்சொறி வேர், சீந்திற் கிழங்கு, செங்கத்தாரி வேர்ப்பட்டை, செவ்வல்லிப்பூ, சேங்கொட்டை, சேங்கொட்டை நெய், தழுதாழையிலை, திக்காமல்லி, தில்லம்வித்து, தில்லம் பால், நத்தைச்சூரி வேர், நறுமுன்னை, நறுமுன்னைவேர், நன்னாரிவேர், நாகமல்லிவேர், நிர்விஷம், நீரடிமுத்து, நீரடிமுத்து நெய், நீர்ப்பூலாப் பட்டை, நொச்சியிலை, பற்பாடகம், பாதிரிவேர், பாலைமரவேர், பிரமதண்டு, பீதரோகணி, புங்கம்பால், பூவரசுசமூலம், மணக்கத்தையரிசி, மயிர்மாணிக்கம், மரமஞ்சள், மருதோன்றி வேர், மாதுளம்பழ ஓடு, மாதுளம்பிஞ்சு, மாதுளம்பூ, மாவிலிங்கப்பட்டை, முத்தக்காசு, வல்லாரை, வாய்விளங்கம், வில்வப்பழம், வில்வவேர், விஷ்ணுகிராந்தி, வெண்காலிமர வேர், வெள்ளறுகு, வெள்ளைநாவி, வேப்பம் வித்து, வெட்சிச் செடி.

வேதனசாந்தினி.

அபினி, ஊமத்தங்காய், ஊமத்தைவித்து, ஊமத்தை, கசகசாத்தோல், கஞ்சா, கருநொச்சியிலை, கருஊமத்தையிலை, கருஊமத்தை வித்து, குரோசாணி ஓமம், குன்றிமணி யிலை, சூத்திர நாவி, செவ்வாமணக்கிலை, நாவி, நிர்விஷம், நொச்சி யிலை, பிரமதண்டு, பெருந் தேட்கொடுக்கு, பொன் ஊமத்தை, வெண்குன்றி இலை, வெள்ளாமணக்கிலை (மே), அகரு, பெரு ஏலக்காய், கஸ்தூரி மஞ்சள், புங்கம் நெய், மஞ்சள், மருதம்பட்டை, முசற்காதிலை, எருக்கிலை.

ஆம்லநாசினி.

உப்பிலாங்கொடியையப்போன்ற லவணசாரங்களைப் பெற்றுள்ள மூலிகைகள்.

கிருமிநாசினி.

ஆடுக்கிளநீர், அம்மான் பச்சரிசி, அழிஞ்சில் மரம், அன்னுசியிலை, ஆடாதோடை இலை, ஆடுதீண்டாப்பாளை, ஆற்றுத்தும்மட்டியிலை, இளங்கொட்டைப்பாக்கு, ஊசித்தகரை, ஏழிலைப்பாலை, கருங்காலி வேர், கருஞ்சீரகம், கருஞ்செம்பை யிலை, கறுப்பழிஞ்சில் மரம், கலியாண முருக்கம்பட்டை, காக்கட்டான், காட்டாத்தி மரம், காட்டுச் சீரகம், காய்ச்சுக்கட்டி, கத்தக்காம்பு, கார்போக அரிசி, கிச்சிலிக்காய், கொட்டைப்பாக்கு, சதாப்பு இலை, சரக்கொன்றைப் பூ, சீமைச் செவ்வந்திப்பூ, சீமையகத்தி, சுண்டைக்காய், சுண்டைக்காய்வற்றல், சோரியிளநீர், திக்காமல்லி, நல்வேளை வித்து, நாய்க்கடுகு, நாரத்தங்கச்சல், நொச்சியிலை, பச்சிளநீர், பப்பாய்க்காய், பலாசுக்கொட்டை, பாகற்பழம், பாகல்இலை, பிரண்டை, பெருங்காயம், மக்கிப்பால், மணலிக்கீரை, மலைவேப்பிலை, மலைவேப்பம்பட்டை, மாங்கொட்டை, மாசிப்பத்திரி, மாதுளைமரப்பட்டை, மிதிபாகற்காய், மூங்கிலிலை, மூங்கில்வேர், யானைத்திப்பிலி, வசம்பு, வாய்விளங்கம், விஷ்ணுகிராந்தி, வெண்சிவதைவேர், வேப்பம் நெய், வேப்பம்பூ, வேப்பம் வித்து, வேப்பிலை, குடசப்பாலை, அக்ரோட் மரத்தின் பட்டை.

விஷநாசகாரி.

அவுரியிலை, அவுரிவேர், ஆற்றுத் தும்மட்டியிலை, எட்டிவேர், எருக்கிலை, கடப்பம் வித்து, சதுரக்கள்ளிப் பால், சிவனார் வேம்பு, சிறியாநங்கை, சிறுகுறிஞ்சா யிலை, சிறுகுறிஞ்சாக் கொடி, சிறுகுறிஞ்சாவேர், சிறுசின்னி, சிறுதுத்தி, நாகதாளிக்கள்ளி, நிர்விஷம், நின்றுற்சுருங்கி, பெருஞ்சின்னி, பேய்ச்சுரை யிலை, பேய்ச்சுரை வேர், பேய்ப்பீர்க்கு, பொற்சீந்திற் கிழங்கு, மகிழம்வித்து, மணிப்புங்கு மரம், முசுமுசுக்கை வேர், முருங்கைமரப் பட்டை, முள் துளசி, வாகைப்பூ, வெள்ளெருக்கம் பால், வேப்பம் வித்து.

முறைவியாதிரோதி.

அதிவிடயம், அத்திக்கள், ஈச்சுரமூலி, எருக்கம்பூ, ஏழிலைப்பாலை, கடுகுரோகணி, கருஞ்சித்திர மூலம், கழற்காய், கொடிவேலி வேர், சண்பகமரத்தின் வேர், சீந்திற்கிழங்கு, சீமைச் செவ்வந்திப்பூ,

சூத்திரநாவி, செந்தொட்டி வேர், செம்பருத்திப்பூ, செம்பை, திக்காமல்லி, தும்பைப்பூ, மரமஞ்சள், மாசிக்காய், மிளகு, வேப்ப மரப்பட்டை, நிலவேம்பு, கஸ்தூரி மஞ்சள், சங்கங்குப்பி, உத்தா மணி, வெட்பாலை, மலைவேம்பு, துளசி, பற்பாடகம், பீதரோகணி, ஆடுதீண்டாப் பாளை, குடசப்பாலைப் பட்டை, மிளகரணை, எட்டிக் கொட்டை, வசம்பு, கருநொச்சி, பேய்ப்புடல், நெய்ச்சட்டிக் கீரை.

உக்கிரரோக சமனகாரி.

சூத்திரநாவி, நாவி, அலரி, நந்தியாவட்டை, பூவரசன்.

தாது க்ஷீணரோதி.

அபயன் கடுக்காய், அரோகிணிக்கடுக்காய், உதிரமரத்தின் வேர், கள்ளிமரப் பட்டை, கோடகசாலை, சிறுதுத்தி, சிறுதேட் கொடுக்கு, சீமைத் தக்காளிப்பழம், நாய்க்கடுகு, பூலேம், நெய்ச்சட் டிக்கீரை, பிசின்பட்டை, புங்கின்நெய், புங்கின் விதை, வட்டக் கிலு கிலுப்பை, வாழைப்பிஞ்சு, கருங்காலி, ஏழிலைப்பாலை, தண்ணீர் விட்டான் கிழங்கு, செம்முள்ளி, இலவமரப் பட்டை, புன்னை விதை, சரக்கொன்றைப் பட்டை, சீந்திற்கொடி, மஞ்சள், நெல்லி வற்றல், அதிமதுரம், நீர்முள்ளி, சிறு குறிஞ்சான், கடுகுரோகணி, மலைவேம்பு, தொட்டாற்சுருங்கி, கொம்புப்பாகல், வெள்ளல்லி, சித்திரமூலம், மஞ்சிஷ்டி, மதனகாமப்பூ, கடுக்காய், சிறுநெருஞ்சில், பேய்ப்புடல், காட்டாத்திப்பூ, சர்க்கரை, கருவாகைப் பட்டை, வெட்சிச்செடி.

அங்காகர்ஷணநாசினி.

அபினி, ஆடாதோடையிலை, இருவி, ஊமத்தங்காய், ஊமத்தை, ஊமத்தை வித்து, எட்டிப்பழம், கஞ்சா, கற்பூரப்புல், கற்பூரப்புல் எண்ணெய், கருஊமத்தையிலை, கருஊமத்தைவித்து, காவட்டம்புல், காவட்டம்புல் எண்ணெய், குக்கில், குங்குமப்பூ, குரோசாணி ஓமம், சடாமாஞ்சில், சண்பகப்பூ, சதாப்பு இலை, சுவற்றுமுள்ளங்கியிலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, தாழைமரம், திக்காமல்லி, நல்வேளை வித்து, பச்சைவிலாமிச்சு வேர், புகையிலை, பெருங்காயம், பொன் ஊமத்தை, வசம்பு, வெள்ளெருக்கம்பால், வேப்பன்நெய், வெள் ளைப்பூண்டு, சாம்பிராணி, வாசனைப்புல்தைலம், ஓமம், மருக் கொழுந்து, நாய்க்கடுகு, புன்னைக்காய் எண்ணெய், பேய்த்தும்பை, வேலிப்பருத்தி.

இலகுமலகாரி.

அகத்திக்கீரை, அடுக்குவாழை, அத்திக்காய், அத்திப்பழம், அம்மான்பச்சரிசி, அவரைப்பிஞ்சு, அறுகீரை, அன்னாசியிலை, ஆல்பகோருப்பழம், ஆளிவிதை, இத்திக்காய்ப்பிஞ்சு, இரஸத்தாளி வாழைப்பழம், இலந்தைப்பழம், இஸ்போகல்வித்து, உரோஜாப்பூ, உலர்ந்த திராக்ஷைப்பழம், உலர்ந்த தேன் அத்திப்பழம், கடலழிஞ்சில், கருந்துத்தி, கறப்பழிஞ்சில், கலியாண முருக்கன் இலை, கார் போக அரிசி, கூந்தற்பனைக் கள்ளு, கொட்டைக்கரந்தை, சரக் கொன்றைப்பூ, சாறடைக்கிழங்கு, சிறுகொடிமுந்திரிப்பழம், பெருங்கொடிமுந்திரிப்பழம், சிறுதுத்தி, சிறு பசலைக்கீரை, தூதுளங்காய், நிலாவாரை, நுரைப்பீர்க்கன்காய், நெல்லிக்காய், நெற்பொரி, பச்சை வாழைப்பழம், பண்ணைக்கீரை, பத்திராக்ஷைக் கிழங்கு, பழம்புளி, பாவட்டங்காய், பிண்ணாக்குக் கீரை, பிரம தண்டுப் பால், பிரமிய வழுக்கை, பீதரோகணி, பீநாறிமரம், புளி யம்பழம், பேயன்வாழைப்பழம், மணத்தக்காளி, மணத்தக்காளிக் காய், மணத்தக்காளிவற்றல், மலைவாழைப்பழம், பெரியாநங்கை யிலை, முசுட்டை, மேனை, வங்கார வள்ளைக்கீரை, வள்ளைக்கீரை, விதையத்திப்பழம், கசப்பு வாதுமைக் கொட்டை நெய், அதிமது ரம், பூனைக்கண் குங்கிலியம், காசினிக்கீரை, காசினிவிதை, கோழிக் கீரை, சோம்பு, குல்கந்து, கொட்டைத் திராக்ஷைப்பழம், கனிந்த வாழைப்பழம், கனிந்த மாம்பழம், கனிந்து உலர்ந்த இலந்தைப் பழம், சாறு வேளைக்கீரை, கொய்யாப்பழம்.

காமவிர்த்தினி

அரசம்வித்து, அழுகண்ணி, அறுகீரை, ஆலம்வித்து, ஆளி விதை, இத்திவித்து, இலவமரம், இலவம் பிசின், உழுந்து, எட் டிக்கொட்டை, ஓரிலைத்தாமரை, கசகசா, கஞ்சா, கடலை, கம்பு அரிசி, கருங்காலிப் பிசின், கருங்குருவையரிசி, கருவேலம் பிசின், கர்ச்சூர்க்காய், கல்தாமரை, காடைச்சம்பா அரிசி, காட்டாத்திமரம், கார்போக அரிசி, குருஞ்சம்பா அரிசி, குன்றிமணி, குன்றிமணிச் சம்பா, கொடிக்காசரைக்கீரை, கோதுமையரிசி, சாதிக்காய், சாதிபத் திரி, சாரைப்பருப்பு, சாலாமிசிரி, சிறுபசலைக் கீரை, சீந்திற்கிழங்கு, சீமைக்காசரைக் கீரை, செடிக் காசரைக்கீரை, செம்பரத்தம் பூ, செம்பருத்திப் பூ, செவ்வல்லிவிதை, செவ்வாழைப்பழம், தண்ணீர் விட்டான் கிழங்கு, தத்திப்பூ, தூதளம்பூ, தூதுளையிலை, தெங்

கின்மது, நல்லநெருஞ்சில், நல்லநெருஞ்சில் வித்து, நாரத்தங்கச்சல், நிர்விஷம், நிலப்பனங்கிழங்கு, நிலப்பூசனிக்கிழங்கு, நீர்முள்ளி வித்து, நெய்ச்சட்டிக்கீரை, பச்சைத்திப்பிலிவேர், பரங்கிக்காய் வித்து, பலாக்காய், பலாசு மரப்பிசின், பலாசுமரம், பால்கஞ்சி, பாலன்னம், பூனைக்காலிவித்து, மகிழம்பூ, மக்காச்சோளம், மதன காமப்பூ, மலைவேப்பம்பிசின், முந்திரிப்பருப்பு, முந்திரிகையின்மது, முருங்கைக்காய், முருங்கைப்பிசின், முருங்கைப் பிஞ்சு, முருங்கைப் பூ, முருங்கை வித்து, முள்ளங்கி வித்து, வாழைப்பூ, வெண்குன்றி விதை, வெந்தயக்கீரை, வேர்க்கடலை, காராக்கருணை, இலுப்பைப்பூ, குங்குமப்பூ, அறுகம்புல், பிரமதண்டின் விதை, பெருங்காயம், நீர்ப் பிரமி, நிலக்குமிழ், பருத்திப் பருப்பு, அக்ரோட் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, வாதுமைப் பருப்பு, சடாமாஞ்சில், அபினி, ஆனைநெருஞ்சி முள், வெற்றிலை, கோஷ்டம், வெண்டைக்காய், சிறு நெருஞ்சில், உலர்ந்த திராக்ஷைப் பழம், அசுவகந்தி, ஊமத்தம் வித்து, ஆலம் பால், அத்திப்பால், ஆவாரை வித்து, சீமை மாதுளம்பழ வித்து, குரோசாணி ஓமம், அக்ரோட் மரத்தின் பட்டை.

சங்கோசனகாரி.

அகத்திப்பூ, அகத்திவேர், அசோகப்பட்டை, அத்திப்பால், அத்திப் பிஞ்சு, அபமார்க்கி, அம்மான்பச்சரிசி, அரசம் வேர், அருநெல்லிக்காய், அவரையிலை, ஆலம் விழுது, ஆலம்பட்டை, ஆலிலை, ஆலம்பால், ஆவாரம்பூ, ஆவாரம்பிசின், ஆவாரை, இடிக்கொள்ளு, இத்திப்பிஞ்சு, இரேவல்சின்னி, இலந்தையிலை, இலந்தைப்பழம், இலவமரம், இலவம்பிசின், இலுப்பைப்பூ, இளங் கொட்டைப்பாக்கு, உதிரமரத்தின் வேர், ஏழிலைப் பாலை, கசகசா, கசகசாத் தோல், கடலழிஞ்சில், கடற்பாலை வேர், கடுக் காய், கடுக்காய்ப் பிஞ்சு, கடுக்காய்ப் பூ, கத்தக்காம்பு, கருங்காலிப் பிசின், கருங்காலி வேர், கருங்காலிப் பட்டை, கருங்கசகசா, கரும் பூலா, கருவேலன்வேர், கருவேலம்பட்டை, கருவேலங் கொழுந்து, காட்டாத்திப் பூ, காட்டாத்தி மரம், காட்டாமணக்கின் பால், காட்டிலந்தை, காட்டுப்பிராயன்பால், காட்டு மல்லிகை வேர், காய்ச்சுக்கட்டி, காரைப்பழம், கீழ்க்காய் நெல்லி, குசதர்ப்பை, கூந் தற்பனைச் சோறு, கோடகசாலை, கோரைக் கிழங்கு, சிறுகுறிஞ்சாக் கொடி, சிறுகுறிஞ்சா வேர், சிறுநாகப் பூ, சிறுபுள்ளடி, சிற்றுழா இலை, சுக்காங்கீரை விதை, சுவற்றுமுள்ளங்கி யிலை, செங்கத்தாரி

வேர்ப்பட்டை, செங்கழுநீர்க் கிழங்கு, செஞ்சந்தனம், செந்நாயுருவி சமூலம், செம்பை, தர்ப்பைப்புல், தாமரைக்கிழங்கு, தாமரைப்பூ, தாளிசப்பத்திரி, தான்றிக்காய், தும்பிலிப் பழம், தென்னம்பூ, தெங்கின் குருத்து, நருவிலிமரப்பட்டை, நாவற்பழம், நாவற்பட்டை, நாவல்மரத்தின்வேர், நீலம், நெல்லிமரத்தின்வேர், நெல்லிமுள்ளி, பலாசுமரம், பழம்பாசி, பார்லி அரிசி, பாற்சொரிக்கீரை, பிசின் பட்டை, புங்கம்பால், புங்கன்வேர், புளிமாங்கொழுந்து, புளியங் கொட்டை, புளியம்பட்டை, புளியாரைக்கீரை, பெருமரப்பட்டை, பேய்மிரட்டி, பேய்மிரட்டியிலை, பொடுதலை, மக்காச்சோளம், மங்குஸ்தான், மதனகாமப்பூ, மரக்காரைவேர், மரமஞ்சள், மருதம் பட்டை, மருதம்இலை, மருதோன்றியிலை, மருதோன்றிவித்து, மலைவேப்பம்பிசின், மாங்கொட்டை, மாசிக்காய், மாதுளம்பழஓடு, மாதுளம்பிஞ்சு, மாதுளம்பூ, மாதுளைவித்து, மாமரவேர், மாம் பிஞ்சு, முருங்கைப்பிசின், முள்ளிலவம்பிசின், வறட்பூலாஇலை, வாகைப்பிசின், வாகைப்பட்டை, வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, விடத் தேரி, விராலியிலை, வில்வவேர், விளாமரம், வெட்பாலையரிசி, வெள்வேலமரம், வெள்ளிலோத்திரம், வேங்கைமரப்பிசின், வேப் பம்பட்டை, வெட்பாலைப்பட்டை, வெட்சிச்செடி, காட்டுமா மரத்தின் பட்டையும் இலையும், அக்ரோட்மரத்தின் பட்டை.

உதரவாதஹரகாரி.

இஞ்சி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பூ, உகாமரம், எலுமிச்சங்காய், எலுமிச்சம்பழம், ஏலக்காய், கடப் பம்வித்து, கம்மாறுவெற்றிலை, கருஞ்சீரகம், கருந்துத்தி, கற்பூரப்புல், கற்பூரப்புல் எண்ணெய், கஸ்தூரிமஞ்சள், காவட்டம்புல், காவட் டம்புல் எண்ணெய், கிச்சிலிக்கிழங்கு, குக்கில், கொத்துமல்லி விதை, சண்பகப்பூ, சதகுப்பை, சரக்கொன்றைப்பூ, சன்னலவங்கப்பட் டை, சாதிக்காய், சாதிபத்திரி, சிறுஏலம், சீமைச் செவ்வந்திப்பூ, சீமைச்சோம்பு, சீரகம், சுக்கு, செவ்வந்திப்பூ, சோகிக்கீரை, சோம்பு, திப்பிலி, திப்பிலியரிசி, நல்வேளைவித்து, நறுமுன்னை, நறுமுன்னைவேர், நாய்க்கடுகு, பழம்புளி, பிரண்டை, பிளப்புச்சீரகம், புதியனு, புளியம்பழம், பெரிய ஏலம், பேய்மிரட்டி, பேய்மிரட்டி யிலை, பேரீச்சங்குருத்து, மஞ்சள், மிளகு, வாய்விளங்கம், வெங் காயப்பூ, வெங்காயவிதை, வெந்தயக்கீரை, வெள்ளைமிளகு, வேப்பிலை, வசம்பு, வெட்டிவேர், கறுப்பு அகர், குந்திரிக்கம்,

மிளகாய், காட்டுக்கருவாப்பட்டை, குங்குமப்பூ, நெல்லிக்காய், பெருங்காயம், அன்னாசிப்பூ, சிறுநாவற்பூ, முருங்கை, சடாமாஞ்சில், ஓமம், கோஷ்டம், கடுக்காய், தான்றிக்காய், வெந்தயம், சிற்றரத்தை, பேராத்தை, கறிவேப்பிலை, கண்டங்கத்திரி, காட்டுச்சீரகம், அமுக்கரா க்கிழங்கு.

விரணகாரி.

சேங்கொட்டை, சேங்கொட்டை நெய், பலாசுக்கொட்டை.

இவைகளுமல்லாமல் அடியில் கூறப்பட்ட மூலிகைகளின் சாம்பல்களை ஜலத்தில் கரைத்துக் கட்டிகளுக்கு மேற்பூச விரணமாகி உடைத்துக்கொள்ளும்.

குன்றிமணிச்செடி, நாயுருவி, ஏழிலைப்பாலை,முருக்கம்பட்டை, எருக்கு, கொன்றை, கலியாணமுருக்கன், இலைக்கள்ளி, வெட்பாலை, குளப்பாலை, வாழைச்சருகு, புங்கு, பாதிரி, வெள்ளிலோத்திரம்.

பித்தகாரி.

அகருமரம், அழிஞ்சில் மரம், கரிசலாங்கண்ணி, காட்டுமிளகு, காப்பிக்கொட்டை, குருஞ்சம்பா அரிசி, கூத்தங்குதம்பை, கொத்தவரைக்காய், சங்கங்குப்பி, சிறுகுறிஞ்சா இலை, சீத்தாப்பழம், தினையரிசி, தேயிலை, பரட்டைக்கீரை, பீர்க்கங்காய், புடலங்காய், மதனகாமப்பூ, வாதநாராயணமரம், வேப்பன் நெய், வேப்பம்பூ, எருக்கு, குசும்பாவிதை, நிலாவாரை, காசினிவிதை, சீந்திற்கொடி, அதிமதுரம், நிலக்குமிழ், மருதோன்றி, வெட்சிச் செடி.

அந்தர்ஸ்நிக்தகாரி.

அதிமதுரம், அந்தரத்தாமரை, அம்மான்பச்சரிசி, அலிசிவிதை, அவரை இலை, அருகங்கட்டை, ஆளிவிதை, இரஸத்தாளிவாழைப்பழம், இஸ்போகல்வித்து, உருத்திரச்சடைவித்து, உழுந்து, கசகசா, கடற்பாசி, கடற்பாலையிலையின் மேற்பாகம், கருந்துத்தி, கருஞ்சசகசா, கருவேலம்பிசின், கருவேலங் கொழுந்து, கற்கண்டு, காக்கட்டான், கிச்சிலிக்கிழங்கு, கிரந்தி தகரம், குக்கில், கூகைநீறு, கோரைக் கிழங்கு, சர்க்கரை, சிவனார்வேம்பு, சிறு கொடிமுந்திரிப்பழம்,சிறு துத்தி, சிற்றாமுட்டிவேர், சீமைக்காசரைக் கீரை, சீனிச்சர்க்கரை, செங்கழுநீர்க்கிழங்கு, செம்பரத்தம்பூ, செம்பருத்திப்பூ, செவ்வல்லிக்கொடி, தண்ணீர்விட்டான்கிழங்கு, தாமரைக்கிழங்கு, தாமரையிலை, தாமரைவித்து, துத்தியிலை, துளசிவித்து,

தேங்காய்ப்பால், தேட்கொடுக்குச் செடி, தேற்றுங்கொட்டை, தொட்டாற்சுருங்கி, நத்தைச்சூரிவித்து, நறுந்தாளி, நன்னாரிவேர், நிலத்துத்தி, நிலப்பனங்கிழங்கு, நீர்முள்ளிவித்து, பசலைக்கீரை, பன்னீர், பாதிரிவேர், புத்திரசீவி விதை, பூவரசு சமூலம், பெருங் கட்டுக்கொடி, பெருங்கொடி முந்திரிப்பழம், பேராமுட்டி வேர், மந்தாரப்பூ, மலைதாங்கிப்பூண்டு, மாகாளிக்கிழங்கு, முருங்கைப் பிஞ்சு, முள்ளிக்கீரை, யானை நெருஞ்சில், வாதுமை நெய், வாது மைப் பருப்பு, வாதுமைப் பிசின், வாழைப்பூ, வில்வப்பழவோடு, விளாம்பிசின், வெங்காய விதை, வெண்டிக்காய், வெந்தயக்கீரை, வெந்தயம், வெள்ளிலோத்திரம், வெள்ளைக்குங்கிலியம், வெள்ளைத் தாமரைப்பூ.

சோபாநாசினி.

அகருமரம், அகில்கட்டை, அவுரியிலை, ஆல்பகோருப்பழம், உகாமரம், எருக்கிலை, கருஞ்செம்பைப்பூ, கருஞ்செம்பையிலை, கழற்காய், கழற்சியிலை, கீழ்க்காய்நெல்லி, கொள்ளுக்காய்வேளை, சமுத்திர சோஷிவிதை, சாமையரிசி, சாறடைக்கிழங்கு, சிவனார் வேம்பு, தினையரிசி, புளியிலை, மஞ்சள், மிளகு தக்காளி, முசற் காதிலை, வட்டக்கிலுகிலுப்பை, விராலியிலை, வெள்ளைச்சாறடை, வேப்பிலை, அமுக்கரக் கிழங்கு, வாகைப்பூ, கருவாகைப்பூ.

சுவேதகாரி.

அபினி, அன்னாசிப்பழம், உருத்திரச்சடை, எட்டிக்கொட்டை, கஞ்சாங்கோரை, கருநொச்சியிலை, கருந்துளசி, கருஞ்சித்திர மூலம், கற்பூரப்புல், கற்பூரப்புல் எண்ணெய், காப்பிக்கொட்டை, காவட்டம்புல், காவட்டம்புல் எண்ணெய், குசும்பாவிதை, கொடி வேலி வேர், கோரைக்கிழங்கு, கோவையிலை, கோஷ்டம், சிறுகாஞ் சொறிவேர், சூத்திரநாவி, செந்துளசி, செந்தொட்டிவேர், தாழை மரம், வெண்துளசி, நஞ்சறுப்பான்பூண்டு, நன்னாரிவேர், நெய்ச் சட்டிக்கீரை, பச்சைநாவி, பச்சை விலாமிச்சுவேர், பற்பாடகம், பிநாறிமரம், பேய்மிரட்டி, பேய்மிரட்டியிலை, மரமஞ்சள், மலைதாங் கிப்பூண்டு, யானைத்திப்பிலி, வாலுழுவையரிசி, விலாமிச்சுவேர், விஷமூங்கிலிலை, விஷ்ணுகிராந்தி, வெட்டிவேர், மாசிப்பத்திரி, கொடி வேலிவேர், மூக்குரட்டை, எருக்கன் வேர்ப்பட்டை, இஞ்சி, சண் பகப்பூ, நிலாவாரை, முருங்கை வேர்ப்பட்டை, வல்லாரை, பேய்ப் புடல், முட்காவேளை, வசம்பு, கற்பூரவள்ளி, ஓமவள்ளி.

பூதிகந்தநாசினி.

சந்தனமரம், செஞ்சந்தனம், பரங்கிச்சாம்பிராணி, அகரு கட்டை, மட்டிப்பால், குங்கிலியம் இவைகளின் தூபங்கள்.

அடுப்புக்கரியை உள்ளுக்குக் கொடுக்க வயிற்றிலுள்ள துர் நாற்றத்தையும், கிருமிகளையும் விலக்கும்.

மூத்திரவர்த்தனகாரி.

அடுக்கிளநீர், அபமார்க்கி, அலிசி விதை, அறுகங்கட்டை, அன்னுசிப்பழம், ஆளி விதை, ஆற்றுத் தும்மட்டிக்காய், இளநீர், இராக்காசிமடல், இஸ்போகல்வித்து, எலிக்காதிலை, ஓரிலைத்தாமரை, கக்கரிக்காய், கஞ்சா, கண்டங்கத்தரி, கருநொச்சியிலை, கலியாண முருக்கன் இலை, கற்பாசி, காக்கட்டான், காசினிக்கீரை, காசினி விதை, காட்டீருள்ளி, காட்டுச் சீரகம், கிச்சிலிக் கிழங்கு, கீரைத் தண்டு, கீழ்க்காய்நெல்லி, குசதர்ப்பை, குசும்பாச் செடி, குசும்பா விதை, கூகைநீறு, கொத்தான், கொள்ளு, கொள்ளுக்காய் வேளை, கோரைக் கிழங்கு, கோழிக்கீரை, சங்கஞ்செடி, சங்கஞ்செடிப்பால், சங்கஞ்செடிவேர், சந்தனமரம், சாரைப் பருப்பு, சாறடைக்கிழங்கு, சிகப்பு மணத்தக்காளி, சிறுகீரை, சிறு கொடிமுந்திரிப்பழம், சிறு பீளை, சீந்திற் கிழங்கு, சீந்திற் சர்க்கரை, சுரைக்காய், சுரையிலை, சுவற்றுமுள்ளங்கியிலை, சூத்திரநாவி, செங்கீரைத்தண்டு, செந்நா யுருவி சமூலம், செப்புநெருஞ்சில், செம் ருத்திப்பூ, செம்முள்ளி, செவ்வல்லிக்கொடி, செவ்விளநீர், சோரியிளநீர், தண்ணீர்விட்டான் கிழங்கு, தராயிலை, தர்ப்பைப்புல், துடைப்பம், தேட்கொடுக்குச் செடி, நல்ல நெருஞ்சில் வித்து, நன்னுரிவேர், நாணற்கரும்பு, நாவற்பழம், நிலப்பனங்கிழங்கு, நீர்ப்பூலா இலை, நீர்முள்ளி, நீர்முள்ளி விதை, நெல்லிக்காய், நொச்சியிலை, நொச்சிற்பட்டை, பச்சை விலாமிச்சுவேர், பனங்கற்கண்டு, பனம்பூ, பனையின் மது, பார்லியரிசி, பாவட்டையிலை, பிச்சப்பழம், பிண்ணுக்குக் கீரை, பிரமிய வழுக்கை, பீநாறிமரம், புளியம்பட்டை, பூனைக்கண் குங்கி லியம், பெரும்பீளைச்செடி, பொன்முசுட்டை, மஞ்சள் முள்ளங்கி, மஞ்சள் முள்ளங்கி விதை, மணத்தக்காளி, மயிர் மாணிக்கம், மலை யேலம், மிளகுத்தக்காளி, முருங்கையீர்க்கு, முலாம்பழம், முள் ளங்கிக் கிழங்கு, முள்ளங்கி விதை, முள்ளங்கியிலை, முள்ளிலவம் பட்டை, மூக்குரட்டை. வேர், மெருகன் கிழங்கு, யானைநெருஞ்சில், வங்கார வள்ளைக்கீரை, வாழைநீர், வெங்காயம், வெண்கீரைத் தண்டு, வெண்டைக்காய், வெந்தயக்கீரை, வெள்ளரிக்காய், வெள்ளரி வித்து, வெள்ளைப்பூண்டு.

வமனகாரி.

இலுப்பைப்பிண்ணாக்கு, உத்தாமணி, எட்டிக்கொட்டை, எருக்கம்பட்டை, எருக்கிலை, கடப்பம் வித்து, கடுகுநெய், கறுப்பு அழிஞ்சில், கள்ளிப்பால், குப்பைமேனியிலை, குன்றிமணி, சிகைக்காய், சிறுகடுகு, தும்பையிலை, தேற்றாங்கொட்டை, தேற்றாம்பழம், நஞ்சறுப்பான்பூண்டு, நீரடி முத்துநெய், பிரமதண்டின் வித்து, புகையிலை, பெருங்கடுகு, பேய்ச்சுரைவேர், பேய்ப்புடல், பொற்றலைக் கையாந்தகரை, பொன்னாங்காணீ, மரக்காரைப்பழம், மரக்காரைவேர், முருங்கையிலை, விஷமூங்கிலிலை, வெண்கடுகு, வசம்பு, அங்கோலம், இலவங்கம், சீமைச் செவ்வந்திப்பூ, ஊசித்தகரையிலை, கோவை, ஊசித்தகரைவித்து, கொடிக்காக்கணம்வேர், சணப்பஇலை, வெட்பாலை, குளப்பாலைவிதை, சுரைக்காய், பீர்க்கன்காய், மலை வேம்பு, சிறுநரிவெங்காயம், கொடிக்குறிஞ்சான், அமுக்கராக்கிழங்கு.

ருதுவர்த்தனகாரி.

இரத்தபோளம், இராக்காசிமடல், ஈச்சுரமூலி, எள்ளு, கடுகுரோகணி, கரியபோளம், கருநொச்சியிலை, கருஞ்சித்திரமூலம், கலியாணமுருக்கிலை, கலியாணமுருக்கம்பூ, களாவேர், குக்கில், குங்குமப்பூ, கொடிக்காசரை வித்து, கொடிவேலிவேர், சணப்பச்செடி., சதகுப்பை, சதாப்பு இலை, சமுத்திர சோஷிவிதை, சிற்றீச்சங்குருத்து, சீமைச்செவ்வந்திப்பூ, சுவற்றுமுள்ளங்கி யிலை, செடிக்காசரைவித்து, செந்தொட்டி வேர், நொச்சியிலை, பச்சைவிலாமிச்சுவேர், பப்பாய்க்காய், பப்பாய்ப்பழம், மலைவேப்பிலை, மூங்கிலிலை, மூங்கில்வேர், வாலேந்திரபோளம், வெண்கழற்சியிலை, இலவங்கப்பட்டை, வால்மிளகு, பெருங்காயம், பருத்திவேர்ப்பட்டை, சடாமாஞ்சில், எட்டிக்கொட்டை, வெந்தயம், வெட்டிவேர், ஆடுதீண்டாப்பாளை, சிகப்புச் சித்திரமூலவேர்.

நாசிநீர்வர்த்தினி

அதிவிடயம், வசம்பு, வெள்ளைப்பூண்டு, இலுப்பைப்பூ, எருக்கம்பால் + நல்லெண்ணெய், முடக்கற்றான், குமட்டி மாதுளம்பழம், கொடிக்காக்கணம் வேர், வாய்விளங்கம், பெருங்காயம், சிறுகுறிஞ்சா, சாதிமல்லி, முருங்கைப்பிசின், புகையிலை, துளசி, திப்பிலி, மிளகு, புங்கமரம், உகாமரம், கடுகு, கொடிப்பாலைப்பால், சுண்டைவேர்; இவற்றை நசியமிடுவதினாலும், திரவங்களை மூக்கில் தடவுவதினாலும், நாசிநீர் விருத்தியாகித் தும்மல் உண்டாகும்.

கபஹரகாரி.

அதிமதுரம், அதிமதுரப்பால், அமிர்தக்கடுக்காய், அரத்தை, அலிசிவிதை, அறுகீரை, ஆடாதோடைவேர், ஆடாதோடையிலை, ஆயிரங்கச்சி யிளநீர், இண்டு, இலந்தைப்பழம், இலைக்கள்ளி, இளங்கொட்டைப்பாக்கு, இளநீர், இம்புறுவேர், உத்தாமணி, உருத்திராக்ஷம், எருக்கம்பட்டை, எருக்கம்பூ, ஓமவள்ளி, கஞ்சாங்கோரை, கஞ்சாப்பால், கண்டங்கத்திரிப்பழம், கண்டத்திப்பிலி, கண்டுபாரங்கி, கத்திரிப்பழம், கருங்காஞ்சொறிவேர், கருந்துளசி, கற்பூரவள்ளி, கருவேலம்பிசின், கருவேலங்கொழுந்து, கர்ச்சூர்க்காய், கலியாணமுருக்கம்பட்டை, கல்துளசி, களாவேர், கள்ளிமரம், காட்டெருள்ளி, காட்டுமிளகு, காட்டுமுருங்கை, காராக்கருணைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, கிரந்தி தகரம், குங்கிலியம், குந்திரிக்கம், குப்பைமேனி யிலை, குன்றிமணி வேர், கொடிவழுதுணைக்காய், கொட்டைப்பாக்கு, கொள்ளுக்காய் வேளை, சங்கம் வேர், சதாப்பு இலை, சமுத்திரசோஷி விதை, சரள தேவதாரு, சர்க்கரை வேப்பமரம், சவ்வியம், சாம்பிராணி, சிங்கடாப்பருப்பு, சிலாரசம், சிவகரந்தை, சிறுகாஞ்சொறி வேர், சிற்றரத்தை, சுண்டைக்காய், சுண்டைக்காய் வற்றல், செந்தாழம்பூ, செந்துளசி, செந்தொட்டி வேர், செம்பருத்திப்பூ, செம்முள்ளி, செவ்விளநீர், சோரியிளநீர், தவசுமுருங்கை யிலை, திப்பிலி, திப்பிலியரிசி, தும்பை யிலை, துளசி, தூதுளங்காய், தூதுளம்பழம், தூதுளை யிலை, நஞ்சறுப்பான் பூண்டு, நல்வேளைப்பூ, நிலத்துளசி, நொச்சிற்பட்டை, பச்சிலை, பாகற்பழம், பெருங்காஞ்சொறிவேர், பெருங்காயம், பேரரத்தை, பொடுதலை, மஞ்சள்கச்சியிளநீர், மணலிக்கீரை, மணிப்புங்குமரம், மிளகரணை, முசுட்டை, முசுமுசுக்கையிலை, முசுமுசுக்கைவேர், முருங்கைக்காய், முருங்கைமரப் பட்டை, மேனு, வசம்பு, வன்னிமரம், வாலேந்திரபோளம், விளாம்பழம், விஷ்ணுகிராந்தி.

சுரஹரகாரி

அருநெல்லிமரத்தின்வேர், அழிஞ்சில் மரம், அறுகீரை, உப்பிலாங்கொடி, எட்டிக்கொட்டை, ஓமவள்ளி, கஞ்சாப்பால், கண்டத்திப்பிலி, கண்டுபாரங்கி, கருங்காஞ்சொறிவேர், கருஞ்சீரகம், கருநெல்லிமரம், கறுப்பு அழிஞ்சில்மரம், கர்ச்சூரம், கலியாணமுருக்கம் பட்டை, கல்துளசி, காட்டுமல்லிகைவேர், குடசப்பாலை, சரக்கொன்றைமரம், சரளதேவதாரு, சவ்வியம், சிறு ஏலம், சிறு

குறிஞ்சாக் கொடி, சிறுகுறிஞ்சா வேர், சிற்றரத்தை, சீந்திற் சர்க்கரை, சூரியகாந்தி, செப்புநெருஞ்சில், தான்றிக்காய், நிலத்துளசி, நிலவிளா, நிலவேம்பு, நொச்சிற்பட்டை, பச்சைநாவி, பனம்பூ, பற்பாடகம், பெருங்காஞ்சொறி வேர், பெருங்குமிழமரம், பேய்ப்புடல், பேய்மிரட்டி, பேய்மிரட்டியிலை, பேரரத்தை, மட்டிப்பால், மருள்ஊமத்தை, மலையேலம், முருங்கைமரப் பட்டை, வன்னிமரம், விராலியிலை, வில்வப்பழத்தோடு, விஷ்ணுகிராந்தி, வெள்ளெருக்கம்பால், வெள்ளைநாவி, வேப்பநெய், வேப்பம் பட்டை.

நித்திராகாரி.

அபினி, பிரமதண்டு, கஞ்சா, சாதிக்காய், சாதிபத்திரி, கசகசா, எட்டிக்கொட்டை.

க்ஷீரவர்த்தினி.

ஆமணக்கிலை, இடிக்கொள்ளு, ஓரிலைத்தாமரை, கலியாணமுருக்கிலை, காட்டாமணக்கிலை, சிறுபுள்ளடி, செவ்வாமணக்கிலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, நாணற்கரும்பு, பப்பாய்க்காய், முலாம்பழம், வள்ளைக்கீரை, வெள்ளாமணக்கிலை, வெண்டிக்காய், வெட்டிவேர், சீந்திற்கொடி, தர்ப்பை, கரும்பு.

க்ஷீரநாசினி.

மல்லிகைப்பூ, பச்சைப்பயறு, வெற்றிலை, முல்லை, சணப்பநார், கருஞ்செம்பையிலை, வேப்பிலை, அக்ரோட் மரத்தின்பட்டை.

மலகாரி.

அப்பயன்கடுக்காய், அமிர்தக்கடுக்காய், அரிதகிக்காய், அரோகிணிக்கடுக்காய், அவுரியிலை, அழிஞ்சில்மரம், ஆமணக்கு நெய், ஆற்றுத்தும்மட்டிக்காய், இரத்தபோளம், இராகாசிமடல், இரேவல்சின்னி, இலைக்கள்ளி, இலைக்கள்ளிப்பால், ஈச்சுரமூலி, உகாமரம், எட்டிக்கொட்டை, எருக்கம்பட்டை, கடுகுரோகணி, கடுக்காய், கடுக்காய்ப்பிஞ்சு, கரிசலாங்கண்ணி, கரியபோளம், கருங்கடுக்காய், கருங்காக்கட்டான் வேர், கருஞ்சிவதை வேர், கள்ளிமரம், கள்ளிப்பால், கள்ளிமரப்பட்டை, காக்கட்டான், குசும்பாச்செடி, குசும்பாவிதை, குப்பைமேனி வேர், குன்றிமணி, கொடிக்கள்ளி, கொடிக்கள்ளிப்பால், சதுரக்கள்ளிப்பால், சரக்கொன்றைப்புளி, சரக்கொன்றைமரம், சிகைக்காய், சிவதை வேர், சிற்றாமணக்கு நெய், சீமை அகத்தி, சூரத்து நிலாவாரை, செங்கடுக்காய், சேம்பிலை, சேம்புக்கிழங்கு, தாரயிலை, தில்லம்வித்து, திருவிருத்திக் கடுக்காய்,

தில்லம்பால், திருகுகள்ளிப்பால், துடைப்பம், தேங்காய்ப்பால், நிலாவாரை, நிலப்பனங்கிழங்கு, நேர்வாளக்கொட்டை, பலாசுக் கொட்டை, பாகலிலை, பாற்கடுக்காய், பாவட்டையிலை, பிருமதண் டின்வித்து, பிருதிவிக்கடுக்காய், புகையிலை, பெருங்காயம், பேய்ப் புடல், பொன்னுங்காணீ, மக்கிப்பால், மரக்காரைப்பழம், மலைவேப் பம்பட்டை, மாவிலிங்கப்பட்டை, முடக்கற்றான், முருங்கையிலை, மூக்குரட்டைவேர், மைக்கொன்றையிலை, வரிக்கடுக்காய், வாதுமை நெய், வாய்விளங்கம், வில்வப்பழம், விழுதியிலை, வெண்காக்கட் டான் வேர், வெண்சிவதை வேர், வெள்ளாமணக்கிலை.

பிரசவகாரி.

ஆடுதீண்டாப்பாளை, கஞ்சா, திப்பிலி, பார்லி.

ஷோணகாரி.

அக்கிரகாரம், இலைக்கள்ளி, எருக்கம்பட்டை, எருக்கம்பால், கருநாவி, காட்டுக்கருணைக் கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, குங்கிலியம், கொடிக்கள்ளி, கொடிக்கள்ளிப்பால், சதுரக் கள்ளிப்பால், சிறுகடுகு, சேம்பிலை, திருகுகள்ளிப்பால், நல்வேளை, நாய்வேளை, புன்னைவித்து, பெருங்கடுகு, மிளகு, வெங்காயம், வெண்கடுகு, வெள்ளெருக்கம் பால், வெள்ளைப்பூண்டு, வெற்றிலை, வெட்டிவேர், குடியோட்டிப் பூண்டு, பெருங்காயம், அதிமதுரம், முருங்கைவேர், சோம்பு, திப்பிலி, சித்திரமூலம், பெரும்பூனைக்காலி, நேர்வாளம், கார்போக அரிசி, செஞ்சந்தனம், மஞ்சிஷ்டி, சேங்கொட்டை, கருங்கடுகு, சுக்கு, நாய்க்கடுகு, மிளகாய், சாதிக்காய், முந்திரிக்கொட்டை, வாசனைப்புல்நெய், காட்டாமணக்கு, சிவப்புச் சித்திரமூலம்.

சீதளகாரி.

அடுக்கிளநீர், அத்திக்கள், அந்தரத்தாமரை, அரசங் கொழுந்து, அருநெல்லிக்காய், அல்லிப்பூ, அறுகங்கட்டை, அன்று சிப்பழம், ஆரைக்கீரை, ஆலம்பால், இராமசீதாப்பழம், இளநீர், எலுமிச்சங்காய், எலுமிச்சம்பழம், கக்கரிக்காய், கடலைக்காடி, கடாரநாரத்தங்காய், கம்பு அரிசி, கலியாணபூசனி, களாக்காய், காடிநீர், கீரைத்தண்டு, கீழ்க்காய்நெல்லி, குமரி, குழிப்பரங்கிக்காய், கூகைக்கிழங்கு, கூகைநீறு, கொட்டை முந்திரிப்பழம், கொத்தான், கொத்துமல்லிக் கீரை, கொத்துமல்லி விதை, கொம்மட்டி மாதுளம் பழம், கோரைச்சம்பா அரிசி, கோழிக்கீரை, சிறு கட்டுக்கொடி, சிறு கொடிமுந்திரிப்பழம், சீத்தாப்பழம், சீமைக் காசரைக்கீரை, சுக்காங்

கீரை, சுரைக்காய், சூரைப்பழம், செங்கற்றாழை, செம்பரத்தம்பூ, செம்பருத்திப்பூ, செவ்வல்லிப்பூ, செவ்விளநீர், சோரியிளநீர், தக்கோலம், தமர்த்தம்பழம், தாமரைப்பூ, நத்தைச்சூரிவித்து, நாகதாளிப்பழம், நாரத்தங்காய், நிலவிளா, நீராகாரம், நீர்ப்பூலா, நுரைப்பீர்க்கன்காய், நெய்தற்கிழங்கு, நெல்லிக்காய், நெல்லிமுள்ளி, நெற்பொரி, பச்சிளநீர், பச்சைப்பயறு, பழம்புளி, பரங்கிக்காய் வித்து, பனங்கற்கண்டு, பனையின்மது, புன்றிப்புடலங்காய், பாலை மரவேர், பிச்சப் பழம், பிஞ்சு வெள்ளரிக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், புத்திர சீவிவிதை, புளிச்சக்காய், புளியம்பழம், புளியம்பூ, புளியாரைக்கீரை, பெருங்கட்டுக்கொடி, பேயன்வாழைப்பழம், மகிழம் வித்து, மஞ்சள்கச்சியிளநீர், மந்தாரப்பூ, மாதுளம்பழம், முத்தக்காசு, முள்ளங்கிக்கிழங்கு, முள்ளுத் திராக்ஷைப்பழம், மெருகன் கிழங்கு, விலாமிச்சுவேர், வெங்காயம், வெள்ளரிவித்து, வாகைப் பட்டை.

சமனகாரி.

அகத்திக்கீரை, அகத்திப்பூ, அசோகப்பட்டை, அடுக்கு வாழை, அத்திக்காய், அத்திப்பழம், அருநெல்லிமரத்தின் வேர், அவரைப்பிஞ்சு, ஆமணக்குநெய், ஆவாரம்பூ, உருத்திராக்ஷம் உலர்ந்ததிராக்ஷைப் பழம், ஊசிப்பாலை, எலிக்காதிலை, ஓரிலைத் தாமரை, கசகசாத்தோல், கடலைக்காடி, கடார நாரத்தங்காய், கரு நெய்தற்பூ, கறுப்புமணத்தக்காளி, கரு மருதமரம், களாவேர், காசனிக்கீரை, காசனி விதை, காடி நீர், குரோசானி ஓமம், கொட்டிக்கிழங்கு, கொட்டைக்கரந்தை, கோரைச்சம்பா அரிசி, சம்புநாவற் பழம், சவ்வரிசி, சாரைப்பருப்பு, சிகப்பு அம்மான் பச்சரிசி, சிறு பசலைக்கீரை, சீந்திற் சர்க்கரை, செஞ்சந்தனம், செடிக்காசுரைக் கீரை, செப்பு நெருஞ்சில், செவ்வகத்திப்பூ, தாமரைப்பூ, நறுந் தாளி, நாவி, பச்சரிசிக்கஞ்சி, பச்சைப்பயறு, பழம் பாசி, புகையிலை, பெருங்குமிழமரம், பொன்னூமத்தை, மணத்தக்காளிக்காய், மணத் தக்காளி வற்றல், மருதோன்றி வேர், மாம்பிசின், விடத்தேரிப் பிசின், விளாம்பழ ஓடு, வெள்ளை நாவற்பழம், வெட்சிச் செடி.

திரவகாரி.

அக்கிரகாரம், மராட்டிப்பூ, மலை ஏலம், வெண்குன்றிவேர், வெற்றிலை, முருங்கை, சித்திர மூலம், கண்டங்கத்தரி விதை, காட்டாமணக்கிலை, மரமஞ்சள், மிளகு, கட்டுக் கொடி, புகையிலை, கருங்கடுகு, சுக்கு, இலவங்கம், மிளகாய்.

உற்சாககாரி.

அகருமரம், அகில் கட்டை, அக்கிரகாரம், அவுரியிலை, அன்னாசிப்பூ, ஆதொண்டை, இஞ்சி, இண்டு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பூ, இலுப்பைப்பூ, இலுப்பைவேர், ஈச்சுரமூலி, உகாமரம், உருத்திரச்சடை, எட்டிக்கொட்டை, ஏலக்காய், கஞ்சாங்கோரை, கஞ்சா, கடப்பம்வித்து, கடலை, கடுகு நெய், கண்டங்கத்தரிக்காய், கண்டத்திப்பிலி, கத்தரிக்காய், கத்தரிப் பிஞ்சு, கத்தரிப்பழம், கருங்காஞ்சொறிவேர், கருங்குண்டு மிள காய், கருஞ் செம்பைப்பூ, கருநாவி, கருந்துளசி, கருஞ்சித்திரமூலம், கற்பூரப்புல், கற்பூரப்புல் எண்ணெய், கற்பூரவள்ளி, கர்ச்சூர்க் காய், களாப்பழம், காட்டு ஏலம், காட்டுக்கருணைக் கிழங்கு, காப் பிக்கொட்டை, கார்போகஅரிசி, காவட்டம்புல்எண்ணெய், கிச்சிலிக் கிழங்கு, குக்கில், குங்கிலியம், குங்குமப்பூ, குந்திரிக்கம், கூத்தங்கு தம்பை, கேழ்வரகு, கொடிக்காசரைவித்து, கொடிவேலிவேர், கொள் ளு, கோதுமையரிசி, கோரைக் கிழங்கு, கோவையிலை, கோஷ்டம், சங் கஞ் செடி, சடாமாஞ்சில், சண்பகப்பூ, சதகுப்பை, சதாப்புயிலை, சந்தன மரம், சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, சாத்துக்கொடிப் பழம், சாம்பிராணி, சிலாரசம், சிறுகடுகு, சீமைச் சோம்பு, சீரகம், சுக்கு, சூரியகாந்தி, செங்கொடிவேலி, செந் துளசி, செந்தொட்டிவேர், செருப்படை, செவ்வந்திப்பூ, சேம் பிலை, சேம்புக்கிழங்கு, தாழைமரம், தாளிசபத்திரி, திப்பிலி, திப்பிலியரிசி, துத்திவித்து, தும்பையிலை, துளசி, துயிலிக்கீரை, தூதுளை இலை, தேள்கொடுக்குச் செடி, தேயிலை, தேவதாரு, நல்வேளைப்பூ, நாகப்பூ, நாகமல்லிகைவேர், நாய்வேளை, நீரடி முத்து, நீரடிமுத்து நெய், நுணாமரம், நேர்வாளக் கொட்டை, நொச் சிற்பட்டை, பச்சரிசியன்னம், பச்சிலை, பச்சைக் குங்குமப்பூ, பச்சை விலாமிச்சுவேர், பப்பாய்க்காய், பப்பாய்ப்பழம், பரட்டைக்கீரை, பரங் கிக்காய், பிரமதண்டுப் பால், புங்கின் நெய், புளியிலை, புன்னை நெய், பூனைக்கண் குங்கிலியம், பூவரசு சமூலம், பெரிய ஏலம், பெருங் கடுகு, பெருங்காயம், மஞ்சள், மட்டிப்பால், மராட்டிப்பூ, மிளகு, முசுட்டை, முள்ளங்கியிலை, யானைத்திப்பிலி, வலம்புரிக்காய், வல் லாரை, வன்னிமரம், வாதநாராயணமரம், வாலுழுவையரிசி, வாலேந் திரபோளம், வால்மிளகு, வாய்விளங்கம், வெங்காயம், வெட்டி வேர், வெள்ளைக்குங்லியம், வெள்ளைப்பூண்டு, வெள்ளைமிளகு.

ஜடராக்கினிவர்த்தினி.

அசுவகந்தி, அரத்தை, அரிதகிக்காய், அழுகண்ணி, அன்னு சிப்பூ, ஆதொண்டை, ஆயிரங்கச்சியிளநீர், இஞ்சி, இரத்தபோளம், இருவி, இரேவல் சின்னி, இலந்தைவேர், இலுப்பைப்பூ, உலர்ந்த மிளகாய், ஊசிமிளகாய், எருக்கம்பட்டை, எருக்கம்பூ, எலுமிச்சம் பழம், ஏலக்காய், கடுகுநெய், கண்டங்கத்தரிப் பழம், கண்டத்திப்பிலி, கரியபோளம், கருஞ்சீரகம், கறிவேப்பிலை, களாக்காய், களாப்பழம், காட்டு ஏலம், காட்டுச்சீரகம், காட்டுமிளகு, காராக்கருணைக் கிழங்கு, கிச்சிலிக்காய், கொத்துமல்லிவிதை, சதகுப்பை, சவ்வியம், சாத்துக்கொடிப்பழம், சிவகரந்தை, சிறுகடுகு, சிறுசின்னி, சிற்றரத்தை, சிற்றீச்சங்குருத்து,சீமைச் செவ்வந்திப்பூ, சீமைச்சோம்பு, சீரகச்சம்பா, சீரகம், சுக்கங்காய், சுக்கு, சுவற்று முள்ளங்கியிலை, சூரணத்தண்டு, செந்தராயிலை, செஞ்சம்பா அரிசி, சுத்தி செய்த சொற்றைப் பாக்கு, சோகிக்கீரை, தாளிசபத்திரி, தினையரிசி, தூதுளங்காய், நல்வேளைப்பூ, நறுமுன்னை, நறுமுன்னை வேர், நாவற்பூ, நாரத்தங்கச்சல், நாரத்தம்பழம், நாவற்பழம், நிர் விஷம், நிலத்துளசி, நிலவேம்பு, பயற்றங்காய், பாலைப்பழம், பிரண்டை, பிளப்புச்சீரகம், சம்பாவரிசி, புதியனு, பெருஏலம், பெருங்கடுகு, பேய்மிரட்டி, பேய்மிரட்டியிலை, பேரீச்சங்குருத்து, பேரரத்தை, பொன்முசுட்டை, பொன்னுங்காணி, மஞ்சள், மஞ் சள்முள்ளங்கி, மரமஞ்சள், மருக்கொழுந்து, மருட்கிழங்கு, மருளுமத்தை, மலைதாங்கிப்பூண்டு, மாகாளிக்கிழங்கு, மாவிலிங்கஇலை, மிளகரணை, மிளகுசம்பாவரிசி, முக்காவேளைவேர், முசுமுசுக்கை வேர், முத்தக்காசு, முள்ளிக்கீரை, முள்ளங்கியிலை, யானைத்திப்பிலி, வசம்பு, வரிக்கடுக்காய், வாலான் அரிசி, விளாம்பழம், வெண்டு மிளகாய், வெள்ளரிக்காய், வெள்ளறுகு, வெள்ளைச்சாறடை, வெற்றிலை, வெட்சிச் செடி.

ரக்தஸ்தம்பனகாரி.

உதிரமரத்தின்வேர்,காட்டாமணக்கின்பால், செவ்வகத்திப்பூ, சேம்பிலை, சேம்புக்கிழங்கு, துத்திப்பூ, பருத்தியிலை, மூங்கிலரிசி, அதிவிடயம், வசம்பு, வில்வம், வெட்டிவேர், கஸ்தூரிமஞ்சள், இலவம்பட்டை, சிறுபுள்ளடி, அதிமதுரம், குளப்பாலை விதை, மாம் பட்டை, சிறுநாகப்பூ, சிவப்புத்தாமரை, வெள்ளை ஆம்பல், இஸ் போகல்விதை, முன்னை, மாதுளை இலைச்சாறு, மதனகாமப்பூ, வெள்ளிலோத்திரம், கடுக்காய், சிறு நெருஞ்சிமுள், காட்டாத்திப் பூ, பூமாதுளம்பூ.

பலகாரி.

அகத்திவேர், அதிவிடயம், அத்திக்கள், அத்திப் பழம், அழுகண்ணி, ஆலம்விழுது, ஆலம்பட்டை, ஆலிலை, ஆலம்பால், ஆல்பகோருப்பழம், ஆளிவிதை, ஆள்வள்ளிக் கிழங்கு, இரத்த போளம், உதிரமரத்தின்வேர், உருத்திராக்ஷம், உலர்ந்த தேனத்திப் பழம், உழுந்து, ஊசிப்பாலை, எட்டிக் கொட்டை, எள்நெய், ஏழிலைப்பாலை, கசகசா, கடல் பாசி, கடல் பாலைவேர், கடுகுரோகணி, கருங்காலி மரப்பட்டை, கருடன் கிழங்கு, கருநெல்லிமரம், கருங் கசகசா, கருமருதமரம், கறிவேப்பிலை, கல்தாமரை, கழற்காய், கற்கண்டு, கஸ்தூரி மஞ்சள், காடைச்சம்பா அரிசி, காட்டுச் சீரகம், காட்டு முருங்கை, காப்பிக்கொட்டை, கார்அரிசி, குடசப் பாலை, குன்றிமணிச் சம்பா, கூகைக் கிழங்கு, கூகைநீறு, கூந்தற் பனைக்கள்ளு, கேழ்வரகு, கொள்ளு, கோதுமையரிசி, கோரைக் கிழங்கு, சர்க்கரை, சர்க்கரை வேப்பமரம், சவ்வரிசி, சாத்துக்கொடிப் பழம், சாமையரிசி, சாலாமிசிரி, சிங்கடாப்பருப்பு, சீந்திற் கிழங்கு, சீந்திற் சர்க்கரை, சீமைச் செவ்வந்திப்பூ, சீமை மாதுளைவிதை, சீமைத் தக்காளிப்பழம், சீனிச் சர்க்கரை, செம்பை, செவ் வல்லிப்பூ, செவ்வல்லிக்கொடி, தண்ணீர் விட்டான் கிழங்கு, தபாக்கரிசி, தராயிலை, தாமரைவித்து, தாளிசபத்திரி, துவரம் பருப்பு, துவரை, தூதுளம்பூ, தேங்காய்ப்பால், நத்தைச்சூரி வேர், நல்ல நெருஞ்சில், நல்ல நெருஞ்சில் வித்து, நறுமுன்னை, நறுமுன்னைவேர், நன்னாரிவேர், நிர்விஷம், நிலப் பூசனிக் கிழங்கு, நிலவேம்பு, நொச்சிற்பட்டை, பச்சரிசியன்னம், பச்சையரிசி, பச்சைவிலாமிச்சுவேர், பலாசுமரப் பிசின், பலாசுமரம், பாகலிலை, பாவட்டங்காய், பீதரோகணி, புடலங்காய், புழுகுசம்பா அரிசி, புளியம்பட்டை, பூமி சர்க்கரைக்கிழங்கு, பூனைக்காலிவித்து, பெருமரப்பட்டை, பொற்சீந்திற் கிழங்கு, பொன்முசுட்டை, பொன்னாங்காணீ, மகிழம் வித்து, மக்காச் சோளம், மஞ்சள், மட்டிப்பால், மணிச்சம்பாஅரிசி, மரமஞ்சள், மருக்கொழுந்து,மருதம்பட்டை, மல்லிகைச்சம்பா அரிசி, மாசிக்காய், மாசிப்பத்திரி, மாவிலிங்க இலை, வசம்பு, வல்லாரை, வாலான் அரிசி, விராலியிலை, விஷ்ணுகிராந்தி, வெந்தயம், வெள்ளறுகு, வேப்பம்பட்டை, வெட்பாலைப்பட்டை, பிஸ்தாப் பருப்பு.

துவக்ஸ்போடகாரி.

கடற்பாலையிலையின் அடிப்பாகம், கருஞ்சித்திர மூலம், கல்லுருவிப்பூண்டு, கொடிவேலி வேர், சிறுகடுகு, செங்கொடி வேலி, செந்தொட்டிவேர், நல்வேளை, நாய்வேளை, பெருங்கடுகு, முருங்கைவேர்.

தேகத்தின் உள்ளுருப்புக்களுக்குப் பலங்கொடுக்கும் பதார்த்தங்கள்.

தலைமூளைக்கு.

நெல்லிக்காய், தான்றிக்காய், ரோஜாப்பூ, பன்னீர், நாரத்தம் பழம், கோரைக் கிழங்கு, இஞ்சி, சடாமாஞ்சில், அகிற்கட்டை, இலவங்கம், வாய்விளங்கம், குந்திருக்கம், சுரைவிதை, சந்தனம், வாதுமைப் பருப்பு.

இருதயத்திற்கு.

மாதுளம்பழம், நெல்லிக்காய், கொடிமாதுளம்பழத்தின் மேற்றோல், சந்தனம், தனியா, ரோஜாப்பூ, நாரத்தம்பழம், செந்தாமரைப்பூ, கடுக்காய், கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, பெருலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், அகில்கட்டை, ஏலக்காய், சிறுலவங்கப்பட்டை, குங்குமப்பூ, தாம்பூலம், கற்பூரமணி, சீமை அத்திப் பழம், ஏலம், தாளிசபத்திரி, இலவங்கம், தாழம்பூத்திராவகம்.

ஈரலுக்கு.

ஜாதிக்காய், கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, இலவங்கப் பட்டை, பூனைக்கண் குங்கிலியம், ஏலக்காய், அகிற்கட்டை, திராட்சைப்பழம், காசனி, ரோஜாப்பூ, மாதுளம்பழம்.

மண்ணீரலுக்கு.

நெல்லிக்காய், மாதுளம் விதை, தான்றிக்காயின் மேற்றோல், ரோஜாப்பூ, கடுக்காய்முறபா, மிளகு, நாவற்பழம், கொடிமாதுளம் பழத்தின் மேற்றோல், ஜாதிக்காய், சிறுலவங்கப்பட்டை, கிச்சிலிக் கிழங்கு, கோரைக்கிழங்கு, பெருலவங்கப்பட்டை, இலவங்கம், ஏலக்காய், குந்திரிக்கம், பூனைக்கண் குங்கிலியம், புதினா, அகிற் கட்டை.

குடலுக்கு.

நாட்டுக் கோதுமை, மிதிபாகற்காய், தூதுளங்காய், புதினா, துவரை, சுக்காங்கீரை, அகிற்கட்டை, அரத்தை, இஞ்சி, குங்குமப்பூ, வால் மிளகு, வில்வப்பழம்.

குண்டிக்காய்க்கு.

உளுந்துமாவின் ரொட்டி, சோளமாவின் ரொட்டி, பச்சைப் பயறு, சீமை அத்திப்பழபானம், வெள்ளைச்சர்க்கரை, கொடிமுந்திரிப்பழச் சாராயம், கருப்பஞ்சாற்றில் இறக்கிய சாராயம், கடுகுரோகணி, கரியபோளம், சிலாரசம், சோம்பு, இரேவல் சின்னி, ரோஜாப்பூ, வால்மிளகு,

நறையீரலுக்கு.

சர்க்கரை, குமட்டிப்பழம், கடலை, பட்டாணி, இஞ்சி, கொடிமுந்திரிப்பழச் சாராயம், பிஞ்சுகடுக்காய், கரியபோளம், சிலாரசம், குங்குமப்பூ, சதகுப்பை, திராட்சைப்பழம், சோம்பு, பிசின்வகைகள், பெருங்காஞ்சொறிவேர், ரோஜாப்பூ, வால்மிளகு, வெந்தயம்.

விஷமித்தப் பதார்த்தங்களுக்கு முறிவு.

"அளவுக்கு மிஞ்சினல் அமிர்மும் விஷமாகும்" என்பது ஒவ்வொருவரும் ஒப்பத்தகுந்த உண்மை. வைத்திய முறையிலாவது, வேண்டுமென்று தற்கொலைக்காக உண்டதிலாவது, அறியாமையால் அளவுமீறி உண்டதிலாவது உண்டான கெடுதல்களைக் கவனித்து, அவையவைகட்கு உரிய முறிப்புகளைக் கொடுத்துக் குணப்படுத்தவேண்டியது பண்டிதர்கள் கடமையாகும். அவற்றுள் சிலவற்றை அடியிற்காண்க.

கள்ளி:—இதற்கு முறிவு வாழைப்பட்டைச்சாறு, ஆவாரைச் சாறு.

கஞ்சா:—இதற்கு முறிவு சுக்குக் கியாழம், பழரசம், வாழைப் பட்டைச்சாறு, வெங்காயச்சாறு.

ஊமத்தை:—இதற்கு முறிவு மாசிக்காய், மிளகு, சீரகம், தனியா, சோம்பு இவைகளின் கியாழங்கள், தாமரைக் கிழங்கைக் காடியிலரைத்துக் கொடுத்தல், கத்திரிக்காயை நீரிலரைத்துக் கொடுத்தல், பருத்திப்பாலில் உப்பு கூட்டிக் கொடுத்தல்.

சாராயம்:—இதற்கு முறிவு முள்ளங்கிரசத்தில் படிகாரமிட்டுக் கொடுத்தல், வாழைப்பட்டைச்சாறு, சீரகம், தனியா, கொய்யா யிலை இவற்றின் கியாழம்.

கள்ளு:—இதற்கு முறிவு கடுக்காய்க் கியாழம்.

நேர்வாளம்:—இதற்கு முறிவு வசம்பைச்சுட்ட கரி, சாணிப் பால், மோர் சாதம், வெந்நீர் சாதம், நீரில் எலுமிச்சம் பழமும் சர்க்கரையும் கூட்டிக் கொடுத்தல்.

அலரி:—இதற்கு முறிவு கடுக்காய்க் கியாழம்.

குன்றி:—இதற்குமுறிவு வெங்காரம், விடத்தேரிவேர் இவற்றை வெந்நீரிற் கொடுத்தல்.

நெல்வேர் + சர்க்கரை:—இதற்கு முறிவு விலாமிச்சு வேர்க் கியாழம்.

நெல்வேர் + நல்லெண்ணெய்:—இதற்கு முறிவு சுரையிலை, எலுமிச்சம்வேர், பேய்ப்பீர்க்கு, விலாமிச்சுவேர் இவைகளின் கியாழங்கள்.

நல்லெண்ணெய் + சாதம்:—இதற்கு முறிவு காடி.

அவுரி + நல்லெண்ணெய்:—இதற்கு முறிவு கடுக்காய்க் கியாழம், கோழிமுட்டையின் வெண்கரு, துளசி, இலுப்பைப் பிண்ணாக்கு வமனம்.

அபின்:—இதற்கு முறிவு நெய், வெங்காயச்சாறு, பழரசம், வாழைக்கட்டை அல்லது வாழைப்பட்டைச்சாறு, சுக்கு, மாசிக் காய், உப்பு.

வெற்றிலை + நல்லெண்ணெய்:—இதற்கு முறிவு தேங்காய்ப் பால்.

எருக்கம்பால்:—இதற்கு முறிவு ஆவின்மோர், நெய், கருவேலம்பட்டைக் கியாழம், அவுரி, காடி, எள்ளு, சர்க்கரை, முத்து எண்ணெய், மஞ்சள்.

எருக்கிலை:—இதற்கு முறிவு நற்சங்கம்பழம், எள்ளு, சர்க்கரை.

சதுரக்கள்ளி:—இதற்கு முறிவு கடுக்காய், ஆவாரைக் கியாழங்கள்.

கோடிக்கள்ளிப்பால்:—இதற்கு முறிவு கோவைச்சாறு, ஆவாரைக் கியாழம்.

எட்டி:—இதற்கு முறிவு தாழைமுளை ரசம், நாவற்கொழுந்து, நாவற்பட்டைக் கியாழம்.

சிவதை:—இதற்கு முறிவு வெள்வேலம்பட்டைக் கியாழம்.

அழிஞ்சில்:—இதற்கு முறிவு கடுக்காய்க் கியாழம்.

தில்லைப்பால்:—இதற்கு முறிவு கோவைச்சாறு, சிற்றாமணக் கெண்ணெய், எருமை நீர், எருமை மோர்.

புகையிலை:—இதற்கு முறிவு அகத்திக்கீரை, சிறுகுறிஞ்சாணிலை, சீரகக்கியாழம்.

நாவற்பட்டை:—இதற்கு முறிவு கொள்ளுக்கியாழம்.

மகிழம்பிஞ்சு:—இதற்கு முறிவு தாமரை வேர்.

நாபி:—இதற்கு முறிவு சிறுகீரை, பசுநெய், வெள்ளாட்டு நீர், பழைய அன்னக்காடி.

சேங்கோட்டை:—இதற்கு முறிவு அக்ரோட்பருப்பு, வெடியுப்புத் திராவகம் நீரில் விளாவியது, பூவரசம்பட்டைக்கியாழம் அல்லது பழம் புளியை நீரிற்கரைத்துக் கோதுகொட்டை நீக்கிக் கொடுத்தல், தான்றிக்காயையும் புளியம் இலையையும் அரைத்து மேற்பூசுதல், சாரைப்பருப்பையும் எள்ளையும் அரைத்துப் பாலில் கலந்து உட்கொள்ளல், தேங்காய்ப்பால் சாப்பிடுதல்.

தேங்காய்:—இதற்கு முறிவு பச்சரிசி, சர்க்கரை.

சாதம்:—இதற்கு முறிவு காந்தலடி.

புளி:—இதற்கு முறிவு உப்பு.

மிளகாய்:—இதற்கு முறிவு தனியா.

மிளகு:—இதற்கு முறிவு பசுவின்பால், தேங்காய்.

எள்ளெண்ணெய்:—இதற்கு முறிவு தேங்காய், தான்றிக்காய்க் கியாழம்.

எள்ளு:—இதற்கு முறிவு சர்க்கரை.

கருணை:—இதற்கு முறிவு வெற்றிலை, புளி.

பேய்ப்பீர்க்கு:—இதற்கு முறிவு கோரைக்கிழங்கு.

பனைநுங்கு:—இதற்கு முறிவு பொரித்த பெருங்காயம்.

வேர்க்கடலை:—இதற்கு முறிவு வெல்லம்.

பலாப்பழம்:—இதற்கு முறிவு தேன், பசு நெய்.

வாழைப்பழம்:—இதற்கு முறிவு மிளகு, கற்பூரம்.

பழவகை:—இதற்கு முறிவு மிளகு, சுக்குக் கியாழம்.

மாங்காய்:—இதற்கு முறிவு புழுங்கலரிசி, தேங்காய்.

வெல்லம்:—இதற்கு முறிவு எருமை மோர்.

காட்டு முருங்கை:—இதற்கு முறிவு எள்ளெண்ணெய்.

மருதோன்றி:—இதற்கு முறிவு தான்றிக்காய்க் கியாழம்.

இரத்தபோளம்:—இதற்கு முறிவு பேராத்தைக் கியாழம்.

இடுமருந்து:—இதற்கு முறிவு கருஞ்செம்பையிலை, கல்யாண பூசனி, நீலிவேர், சிகப்பு மணத்தக்காளி, விளாம்பழ ஓடு.

இவைகளுமல்லாமல் மருந்தின் நஞ்சை முறிக்கச் சில அநுபவக் கியாழங்களாவன:

ஊமத்தையிலே, காய் இவற்ருல் உண்டான வெறிக்குக் கியாழம்.

தான்றிக்காய் பலம் 1, தாமரைக்கொட்டை பலம் 1, மிளகு பலம் 1, இவைகளை இடித்து ஒரு பழகிய மட்கலத்திலிட்டு 2 படி நீர் விட்டு ½படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் 1–1½ மணி நேரத்திற்கொருமுறை வெறியடங்கிச் சுபாவத்திற்கு வருகிறவரையில் கொடுத்து வருக.

சேங்கோட்டைப் புகையினுலுண்டான வீக்கத்திற்கு.

புழுங்கலரிசியுடன் கஸ்தூரி மஞ்சள்கூட்டி நீர்விட்டரைத்துத் தேகம் முழுவதும் பூசுவதினுலும், எள்ளுடன் வெண்ணெய் கூட்டிக் காடி விட்டரைத்துத் தேக முழுவதும் பூசுவதினுலும் வீக்கம் வாங்கும்.

மருந்துகளின் வேகத்தால் உதிரக்கழிச்சல், சீதபேதி, உஷ்ணபேதி, தேகக் காங்கை கண்டவர்க்குக் கியாழம்.

முருங்கை ஈர்க்கு பலம் 2, ஆவாரம் வேர்ப்பட்டை பலம் 1, வெங்காயம் பலம் 10, இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து ஒரு பழகிய மட்பாண்டத்தில் போட்டு, 2 படி சலம் விட்டு ½ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளையாக 3 அல்லது 5நாள் கொடுக்க மருந்தின் வேகம் தணியும்.

வேறுமுறை.

அறுகன் வேர் பலம் 1, கெட்டி மிளகு 50, பச்சை மாதுளம்பூ, அதிமதுரம், கூகைநீறு வகைக்குப் பலம் ¼; இவைகளை இடித்து ஒரு பழகிய மட்பாண்டத்தில் போட்டு ½ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து, வேளைக்கு ½ வீசம் படியாகத் தினம் 2 வேளை சிறிது பனங்கற்கண்டும், நெய்யுங் கூட்டிக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்க மருந்தின்வேகம் தணியும்.

சகல நஞ்சு பதார்த்தங்களையும் வமனம் செய்விக்க.

பசும்பாலும் நெய்யும் கலந்து 4 முறை வயிறு நிறையக் கொடுத்துக் கைவிரலை வாயிலிட்டு வமனம் செய்விக்கவும். வெந்தயம், மிளகு இவை இரண்டையும் அரைத்து, வெண்ணெயுடன் மத்தித்துத் தாளக்கூடிய சூடுள்ள சலத்தில் கலக்கி வயிறு நிறையும்

படியாகக் கொடுத்து முன்போல் வமனம் செய்விக்கவும். இவை நஞ்சு பதார்த்தங்களை வெளியாக்கும். உள்ளுருப்பில் தங்கிக் கெடுதலை யுண்டாக்கா.

சகல நஞ்சு பதார்த்தங்களையும் முறிக்க.

வெந்தயம், அடுப்புக்கரி, படிகாரம், அவுரிவேர் இவைகளை இடித்துச் சூரணம்செய்து வெண்ணெயுடன்கூட்டி மத்தித்து வெந்நீரில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள அவிழ்தங்களை அனுபவத்தில் கொண்டுவருகின்றவர்கள் அடியில் கூறப்பட்டுள்ள நிறையளவு பாகங்களைக் கவனித்தல் வேண்டும்:—

அளத்தல்

60 துளி	=	1 தேக்கரண்டி.
8 தேக்கரண்டி	=	1 அவுன்ஸ்.
6 அவுன்ஸ்	=	1 ஆழாக்கு.
4 ஆழாக்கு	=	1 குப்பி (புட்டி).
8 ஆழாக்கு	=	1 படி.
சங்கு (பாலடை)	=	$\frac{3}{4}$—1 அவுன்ஸ்.

நிறுத்தல்.

4 நெல் எடை	=	1 குன்றிமணி.
3 குன்றிமணி	=	1 பண எடை.
32 குன்றிமணி	=	1 விராகனெடை.
40 குன்றிமணி	=	1 கழஞ்சு.
10 விராகனெடை	=	1 பலம்.

வேறு.

1 ரூபாய் எடை	=	1 தோலா.
3 தோலா	=	1 பலம்.
8 பலம்	=	1 சேர்.
5 சேர்	=	1 வீசை.

அரும்பெயர்ப் பொருள் அகராதி

அடங்கலாகிய

அட்டவணை

[= இக்குறி 'இதுவே' என்பதைக் குறிக்கும்]

சரக்குகள்	பக்கம்
அ	
அகத்திக்கீரை ...	1
அகத்திப்பூ ...	2
அகத்திவேர் ...	3
அகருமரம் ...	3
அகில்மரம் இதுவே அகருமரம்.	
அக்ரகாரம் ...	6
அக்ரோட்டு ...	8
அங்கோலம் இதுவே அழிஞ்சில்.	
அசம்தா ஓமம் இதுவே ஓமம்.	
அசுவகந்தி ...	9
அசோகப்பட்டை ...	11
அஞ்சுபார் ...	12
அடப்பமரப் பிசின் இதுவே வாதுமைப்பிசின்.	
அடப்பம் நெய் இதுவே வாதுமைநெய்.	
அடப்பம் விதை இதுவே வாதுமைப் பருப்பு.	
அடுக்கிளநீர் ...	92
அடுக்குவாழை ...	647
அதிபரிட்சம் இதுவே வாலுமுவை அரிசி.	
அதிமதுரம் ...	13
அதிமதுரப்பால் ...	14
அதிவிடயம் ...	16
அத்திக்கள்ளு ...	17
அத்திக்காய் ...	17
அத்திப்பட்டை ...	18
அத்திப்பழம் ...	19
அத்திப்பால் ...	20
அத்திப்பிஞ்சு ...	20
அந்தரத்தாமரை ...	21
அபமார்க்கி ...	22
அபயன் கடுக்காய் ...	162

சரக்குகள்	பக்கம்
அபினி ...	23
அப்பைக்கோவை ...	296
அமிர்தக் கடுக்காய் ...	161
அமிர்தக்கொடி இதுவே சீந்தில்.	
அமுக்கிராக்கிழங்கு இதுவே அசுவகந்தி.	
அம்மான்பச்சரிசி ...	26
அம்மையார்கூந்தல் இதுவே குதிரைவாலி.	
அரசமரம் ...	26
அரத்தை ...	27
அரிதகிக்காய் ...	28
அரிசி ...	28
அரிசிதிப்பிலி இதுவே திப்பிலி.	
அரிமஞ்சரி = குப்பைமேனி.	
அரிவாள்மூக்குப் பச்சிலை ...	37
அருங்கோவை ...	296
அருநெல்லிக்காய் ...	37
அருநெல்லிமரத்தின் வேர் ...	38
அருவதாணிலை இதுவே சதாப்பு இலை.	
அருதா இதுவே சதாப்பு இலை.	
அரோகிணிக் கடுக்காய் ...	161
அலரிப்பூ ...	38
அலிசி விதை ...	39
அல்லிப்பூ ...	40
அவரைப்பிஞ்சு ...	41
அவரை இலை ...	42
அவுரி இலை ...	42
அவுரி வேர் ...	43
அழவணம் இதுவே மருதோன்றி இலை.	
அழிஞ்சில் மரம் ...	45
அழிஞ்சில் வித்து ...	47
அழுகண்ணி ...	47

சரக்குகள் பக்கம்

அறுகங்கட்டை ... 48
அறுகம்புல் ... 49
அறுகீரை ... 50
அறைக்கீரை = அறுகீரை.
அன்னக்காடி = காடிநீர்.
அன்னமழகி அரிசி ... 29
அன்னாசிப்பழம் ... 51
அன்னாசிப்பூ ... 52

ஆ

ஆகாயக்கக்கரிக்காய் இதுவே கக்கரிக்காய்.
ஆகாயகருடன்கிழங்கு இதுவே கருடன்கிழங்கு.
ஆகாயத்தாமரை இதுவே அந்தரத் தாமரை.
ஆடாதோடை இலை ... 53
ஆடாதோடை வேர் ... 54
ஆடுதின்னாப்பாளை இதுவே ஆடுதீண்டாப்பாளை.
ஆடுதீண்டாப்பாளை ... 55
ஆதண்டம் = ஆதொண்டை.
ஆதளை இதுவே காட்டாமணக்கு.
ஆதிநாராயணமரம் இதுவே வாதநாராயணமரம்.
ஆதொண்டை ... 56
ஆமணக்கு இலை ... 57
ஆமணக்கு நெய் ... 58
ஆம்பல் இதுவே அல்லிப்பூ.
ஆயாமரம் ... 59
ஆயிரங்கச்சியிளநீர் ... 93
ஆயில்மரம் இதுவே ஆயாமரம்.
ஆரஞ்சிப்பழம் இதுவே கமலாப் பழம்.
ஆரைக்கீரை ... 59
ஆலமரம் ... 60
ஆலம்பால் ... 61
ஆல்பகோடாப்பழம் ... 62
ஆவாரம்பூ ... 63
ஆவாரை ... 64
ஆவாரைப் பிசின் ... 65
ஆளிவிதை ... 65
ஆள்வள்ளிக்கிழங்கு .. 66

சரக்குகள் பக்கம்

ஆற்றலரி ... 67
ஆற்றுத்தும்மட்டி இலை ... 68
ஆற்றுத்தும்மட்டிக்காய் ... 68
ஆற்றுப்பாலை இதுவே கடற்பாலை.
ஆனைக்கற்றாழை இதுவே இராக்காசிமடல்
ஆனைத்திப்பிலி இதுவே யானைத் திப்பிலி.
ஆனைநெருஞ்சில் இதுவே யானை நெருஞ்சில்.

இ

இஞ்சி ... 70
இடிக்கொள்ளு ... 71
இண்டந்தண்டு இதுவே இண்டு.
இண்டு ... 72
இத்திக்காய்ப் பிஞ்சு ... 73
இம்புறாவேர் = இன்புறாவேர்.
இரசத்தாளிக்கரும்பு ... 191
இரசத்தாளி வாழைப்பழம் ... 646
இரட்டைப்பேய்மிரட்டி இதுவே பேய்மிரட்டி.
இரத்த சந்தனம் இதுவே செஞ் சந்தனம்.
இரத்தபோளம் ... 74
இராக்காசிமடல் ... 75
இராம சீத்தாப்பழம் ... 75
இருகுரங்கு இதுவே முசுமுசுக்கை.
இருமி மலைத்தகி இதுவே பூனைக்கண் குங்கிலியம்.
இரும்புறுக்கிஇலை இதுவே குத்துக்கால் சம்மட்டி.
இருவாட்சி ... 76
இருவி ... 76
இரேணுகம் இதுவே காட்டுமிளகு.
இரேவல்சின்னி ... 78
இலந்தைப்பழம் ... 78
இலந்தை மரம் ... 79
இலவங்கப்பட்டை ... 80
இலவங்கப்பத்திரி ... 81
இலவங்கப்பூ ... 82
இலவமரம் ... 83
இலவம் பிசின் ... 84

சரக்குகள்	பக்கம்
இலாமிச்சுவேர் இதுவே விலாமிச்சுவேர்.	
இலுப்பைநெய் ...	84
இலுப்பைப் பிண்ணாக்கு ...	85
இலுப்பைப்பூ ...	86
இலுப்பைப்பூச்சம்பா அரிசி ...	29
இலுப்பைவித்து ...	87
இலுப்பைவேர் ...	88
இலைக்கள்ளி ...	89
இலைக்கள்ளிப்பால் ...	90
இளங் கொட்டைப்பாக்கு ...	90
இளநீர் ...	91
இன்புருவேர் ...	95
இஸ்கோல் விதை இதுவே இஸ்போகல்வித்து.	
இஸ்போகல்வித்து ...	96
ஈ	
ஈச்சங்கள்ளு ...	97
ஈச்சங்கற்கண்டு ...	98
ஈச்சம் வெல்லம் ...	98
ஈச்சுரமூலி ...	99
ஈயக்கொழுந்து இதுவே இண்டு.	
ஈருள்ளி இதுவே வெங்காயம்.	
ஈர்க்குச்சம்பா அரிசி ...	30
உ	
உகாமரம் ...	100
உசிலமரம் ...	101
உதியமரத்தின்வேர் இதுவே உதிரமரத்தின்வேர்.	
உதிரமரத்தின்வேர் ...	102
உத்தாமணி ...	103
உப்பிலாங்கொடி ...	104
உரிக்கொடி இதுவே ஈச்சுரமூலி.	
உருதந்தி இதுவே அழுகண்ணி.	
உருதிமரத்தின்வேர் இதுவே உதிரமரத்தின்வேர்.	
உருத்திரச்சடை ...	105
உருத்திரச்சடைவித்து ...	105
உருத்திராக்ஷம் ...	106
உருளரிசி இதுவே கொத்துமல்லி வித்து.	
உருளைக்கிழங்கு ...	107
உரோஜாப்பூ ...	108

சரக்குகள்	பக்கம்
உலர்ந்த சீமை அத்திப்பழம்= உலர்ந்த தேன் அத்திப்பழம்.	
உலர்ந்த திராட்சைப்பழம் ...	109
உலர்ந்த தேன் அத்திப்பழம்.	110
உலர்ந்த மிளகாய் ...	601
உழுந்து ...	111
ஊ	
ஊசித்தகரை ...	112
ஊசித்தகரைவித்து ...	113
ஊசிப்பாலை ...	113
ஊசிமல்லிகை ...	114
ஊசிமிளகாய் ...	603
ஊமத்தங்காய் ...	114
ஊமத்தம் வித்து ...	115
ஊமத்தை ...	116
ஊழலாற்றிமரம் ...	117
எ	
எட்டிக்கொட்டை ...	118
எட்டிப்பழம் ...	119
எட்டிமரத்தின் வேர் ...	120
எருக்கம்பட்டை ...	120
எருக்கம்பால் ...	121
எருக்கம்பூ ...	123
எருக்கிலை ...	123
எருமுட்டைப் பீநாறி இதுவே பேய்மிரட்டி.	
எலிக்காதிலை ...	124
எலிப்பயறு இதுவே பணிப் பயறு.	
எலுமிச்சங்காய் ...	125
எலுமிச்சம்பழம் ...	125
எலுமிச்சம்புல் இதுவே கருப் பூரப்புல்.	
எழுத்தாணிப்பூண்டு ...	126
எள்ளின்நெய் ...	127
எள்ளு ...	128
எள்ளுப் பிண்ணாக்கு ...	128
ஏ	
ஏலக்காய் ...	129
ஏழிலைப்பாலை ...	132
ஐ	
ஐவேலி ...	134

சரக்குகள்	பக்கம்
ஒ	
ஒதியமரத்தின்வேர் இதுவே உதிரமரத்தின்வேர்.	
ஓ	
ஓமம்	... 134
ஓமவள்ளி	... 136
ஓரிதழ்த்தாமரை	... 137
ஓரிலைத்தாமரை	... 138
க	
கக்கரிக்காய்	... 138
கசகசா	... 139
கசகசாத்தோல்	... 140
கசப்புவாதுமை	... 141
கசப்புவெட்பாலை இதுவே குளப்பாலை.	
கஞ்சா	... 142
கஞ்சாங்கோரை	... 427
கஞ்சாப்பால்	... 144
கடப்பம்வித்து	... 145
கடம்புவித்து இதுவே கடப்பம் வித்து.	
கடலழிஞ்சில்	... 145
கடலை	... 147
கடலைக்காடி	... 227
கடலைப்புளிப்பு இதுவே கடலைக்காடி.	
கடல்பாசி	.. 148
கடற்பாலை இலை	... 149
கடற்பாலைவேர்	... 149
கடற்றேங்காய்	... 150
கடாரநாரத்தங்காய்	... 151
கடுகு	... 152
கடுகுநெய்	... 155
கடுகுரோகணி	... 155
கடுக்காய்	... 157
கடுக்காய்ப்பிஞ்சு	... 163
கடுக்காய்ப்பூ	... 164
கட்டுக்கொடி	... 165
கண்டங்கத்திரி	... 165
கண்டங்கத்திரிக்காய்	... 168
கண்டங்கத்திரிப்பழம்	... 168
கண்டத்திப்பிலி	... 169
கண்டுபாரங்கி	... 169
கதலி இதுவே வாழை.	
கத்தக்காம்பு	... 171
கத்திரிக்காய்	... 172
கத்திரிப்பழம்	... 172
கத்திரிப்பிஞ்சு	... 173
கமலம் இதுவே தாமரை.	
கமலாப்பழம்	... 173
கமுகு இதுவே பாக்குமரம்.	
கம்புஅரிசி	... 174
கம்மாறுவெற்றிலை	... 174
கரசணாங்கண்ணி	... 176
கரிப்பான் இதுவே கரசலாங் கண்ணி.	
கரியசாலை இதுவே கரசலாங் கண்ணி.	
கரியபோளம்	... 177
கருங்கடுக்காய்	... 162
கருங்காக்கட்டான்வேர்	... 178
கருங்காஞ்சொறிவேர்	... 224
கருங்காணம் இதுவே இடிக் கொள்ளு.	
கருங்காலிப் பிசின்	... 179
கருங்காலிமரத்தின்வேர்	... 180
கருங்காலிமரப்பட்டை	... 180
கருங் குண்டுமிளகாய்	... 602
கருங்குறவை அரிசி	... 30
கருங்கொடிவேலி	... 280
கருங்கோவை	... 296
கருஞ் சிவதைவேர்	... 340
கருஞ் சிற்றகத்தி இதுவே கருஞ்செம்பை.	
கருஞ் சீரகம்	... 181
கருஞ் செம்பைப்பூ	... 183
கருஞ் செம்பையிலை	... 183
கருஞ் சோளம்	... 397
கருடன்கிழங்கு	... 185
கருணைக்கிழங்கு	... 186
கருநாவி	... 458
கருநெய்தற்பூ	... 186
கருநெல்லிமரம்	... 187
கருநொச்சில் இலை	... 188
கருந்துத்தி	... 419

சரக்குகள்	பக்கம்
கருந்துளசி	... 425
கருப்புச் சித்திரமூலம் இதுவே கருங்கொடிவேலி.	
கருப்பூரப்புல்	... 188
கருப்பூரப்புல்லெண்ணெய்	... 189
கருப்பூரவள்ளி	... 190
கரும்பயறு	... 190
கரும்பு	... 191
கருவாகை	... 192
கருவாப்பட்டை இதுவே இலவங்கப்பட்டை.	
கருவாழைப்பழம்	... 646
கருவிளநீர்	... 93
கருவூமத்தை	... 192
கருவேப்பிலை	... 193
கருவேம்பு இதுவே கருவேப்பிலை.	
கருவேலங்கொழுந்து	... 194
கருவேலமரம்	... 195
கருவேலம்பட்டை	... 195
கருவேலம்பிசின்	... 196
கர்க்கடகசிங்கி இதுவே கடுக்காய்ப்பூ.	
கர்ச்சூர்க்காய்	... 197
கர்ச்சூர்ப்பழம்	... 197
கலப்பைக்கிழங்கு	... 198
கலிங்கம் இதுவே ஆற்றுத் தும்மட்டிக்காய்.	
கலியாணப் பூசினிக்காய்	... 199
கலியாண முருக்கமரம்	... 200
கலியாண முருக்கம்பூ	... 201
கல்தாமரை	... 202
கல்துளசி	... 426
கல்பாசி இதுவே கற்பாசி.	
கல்லுண்டைச் சம்பா அரிசி	... 30
கல்லுருவிப்பூண்டு	... 202
கழற்காய்	... 203
கழற்சியிலை	... 205
கழுநீர்ப்பூ இதுவே செங்கழுநீர்.	
களாக்காய்	... 206
களாப்பழம்	... 206
களாப்பூ	... 207
களாவேர்	... 207
களிப்பாக்கு	... 208
கள்ளிமரப்பட்டை	... 208
கள்ளிமரம்	... 209
கள்ளிமுளையான்	... 211
கறிமுள்ளி	... 211
கறிவேப்பிலை இதுவே கருவேப்பிலை.	
கறுப்புப் பில்லாஞ்சி இதுவே கறுப்புப்பூலா.	
கறுப்புப்பூலா	... 213
கறுப்பு மணத்தக்காளி	... 572
கற்கண்டு	... 214
கற்கோவை	... 296
கற்பாசி	... 214
கற்பூரப்புல் இதுவே கருப்பூரப்புல்.	
கற்பூரமணி	... 215
கற்பூரவள்ளி இதுவே கருப்பூரவள்ளி.	
கற்பேதி இதுவே சிறுபீளை.	
கற்றாழை இதுவே குமரி.	
கஸ்தூரிப்பட்டை இதுவே அலரிப்பூ.	
கஸ்தூரிமஞ்சள்	... 217
கா	
காக்கட்டான்	... 218
காக்கணத்தி இதுவே காக்கட்டான்.	
காக்கரட்டான் இதுவே காக்கட்டான்.	
காக்கைக் கொல்லிவிதை	... 220
காசரைக்கீரை	... 378
காசாமரப்பட்டை	... 220
காசினிக்கீரை	... 221
காசினிவிதை	... 222
காஞ்சீரம் இதுவே எட்டி மரம்.	
காஞ்சொறி	... 223
காடிநீர்	... 225
காடைச்சம்பா அரிசி	... 30
காட்டாத்திப்பூ	... 227
காட்டாத்தி மரம்	... 228
காட்டாமணக்கிலை	... 229
காட்டாமணக்கின்பால்	... 230

சரக்குகள்	பக்கம்
காட்டிலந்தை	... 231
காட்டிருள்ளி	... 231
காட்டுஏலம்	... 132
காட்டுக்கடலை இதுவே அழுகண்ணி.	
காட்டுக்கருணைக்கிழங்கு	... 232
காட்டுக்கொள்ளு இதுவே இடிக்கொள்ளு.	
காட்டுச் சீரகம்	... 233
காட்டுப்பழுபாகல்	... 234
காட்டுப்புளிச்சக்கீரை = கொடிக்காசரைக் கீரை.	
காட்டுமல்லிகைவேர்	... 235
காட்டுமாமரம்	... 235
காட்டுமிளகு	... 236
காட்டுமுருங்கை	... 236
காட்டுவாகை இதுவே வாகை மரம்.	
காட்டுவிராலி இலை இதுவே விராலி இலை.	
காத்தொட்டி இதுவே ஆதொண்டை.	
காப்பிக்கொட்டை	... 237
காமாக்ஷம்புல் இதுவே காவட்டம்புல்.	
காயம் இதுவே பெருங்காயம்.	
காய்ச்சிறங்கு இதுவே செடிக் காசரைக்கீரை.	
காய்ச்சுக்கட்டி	... 238
காய்ச்சரைக்கீரை இதுவே செடிக்காசுரைக்கீரை.	
காய்வள்ளிக்கிழங்கு	... 239
காராமணிப்பயறு இதுவே தட்டைப்பயறு.	
காரைப்பழம்	... 240
காரையிலை	... 240
கார் அரிசி	... 31
கார்த்திகைக் கிழங்கு இதுவே கலப்பைக்கிழங்கு.	
கார்போக அரிசி	... 241
காவட்டம்புல்	... 241
காவட்டம் புல் எண்ணெய்	... 242
காளான் இதுவே பருங்காளான்.	
காளான் சம்பா அரிசி	... 31
காருக்கருணைக்கிழங்கு	... 243
காறுங்கருணைக்கிழங்கு	... 243
காணும்வாழை.	... 244
கி	
கிச்சிலிக்காய்	... 244
கிச்சிலிக்கிழங்கு	... 245
கிச்சிலிச்சம்பா அரிசி	... 31
கிட்டிக்கிழங்கு	... 246
கிரந்திதகரம்	... 246
கிரந்திநாயகம்	... 247
கிராம்பு இதுவே இலவங்கப்பூ.	
கிலுகிலுப்பை இதுவே வட்டக் கிலுகிலுப்பை.	
கிளாக்காய் இதுவே களாக்காய்.	
கிளாப்பழம் இதுவே களாப்பழம்.	
கிளாப்பூ இதுவே களாப்பூ.	
கிளியூரம்பட்டை	... 247
கீ	
கீரிப்பூண்டு	... 248
கீரைத்தண்டு	... 249
கீழாநெல்லி இதுவே கீழ்வாய் நெல்லி.	
கீழ்க்காய்நெல்லி இதுவே கீழ்வாய் நெல்லி.	
கீழ்வாய்நெல்லி	... 250
கு	
குக்கில்	... 252
குங்கிலியம்	... 253
குங்குமப்பூ	... 256
குசதர்ப்பை இதுவே தருப்பைப்புல்.	
குசும்பாச் செடி	... 258
குடசப்பாலை இதுவே குளப்பாலை.	
குடியோட்டிப்பூண்டு இதுவே பிரம்மதண்டு.	
குட்டிவிளா இதுவே நிலவிளா.	
குண்டற்கச்சி இளநீர்	... 92
குண்டுசம்பா அரிசி	... 33
குண்டுமணி இதுவே குன்றிமணி.	
குண்டுமணிக்கொடி இதுவே குன்றிமணிக்கொடி.	
குதிரைச்குளம்படி இலை	... 258

சரக்குகள் பக்கம்

குதிரைவாலி ... 259
குத்துக்காற் சும்மட்டிவேர் ... 260
குந்திரிக்கம் ... 262
குப்பைக்கீரை இதுவே முள்ளிக் கீரை.
குப்பைமேனி ... 263
குமட்டிக்காய் = ஆற்றுத்தும் மட்டிக்காய்.
குமரி ... 264
குமைஞ்சான் இதுவே குந்தரிக்கம்.
கும்பை இதுவே திக்காமல்லி.
குருவிச்சிப்பூண்டு ... 265
குருவிஞ்சிப்பூண்டு இதுவே குருவிச்சிப்பூண்டு.
குருவேர் இதுவே விலாமிச்சம்வேர்.
குரோசாணிஓமம் ... 266
குலாப்பூ இதுவே உரோஜாப்பூ.
குழிப்பறங்கிக்காய் ... 267
குழிமீட்டான் = நத்தைச்சூரி.
குளப்பாலை மரம் ... 267
குறுக்கஞ்செடி இதுவே பிரமதண்டு.
குறுஞ்சம்பா அரிசி ... 32
குறுந்தொட்டி இதுவே சிற்றாமுட்டி.
குன்மகுடோரி இதுவே ஆற்றலரி.
குன்றிமணி ... 269
குன்றிமணிக்கொடி ... 269
குன்றிமணிச்சம்பா அரிசி ... 32

கூ

கூகைக்கிழங்கு ... 270
கூகைநீறு ... 271
கூகைமாவு இதுவே கூகைநீறு.
கூத்தங்குதம்பை ... 272
கூந்தற்பனை ... 272
கூவாமாவு இதுவே கூகைநீறு.
கூழ்ப்பாண்டம் இதுவே கலியாணப் பூசினிக்காய்.

கெ

கெச்சக்காய் இதுவே கழற்காய்.
கெவுளிபாத்திர இளநீர் ... 94

சரக்குகள் பக்கம்

கே

கேழ்வரகு ... 273
கேளி இளநீர் ... 94

கை

கையாந்தகரை இதுவே கரசனாங் கண்ணி.
கைவரைச்சம்பா அரிசி ... 33

கொ

கொடி எலுமிச்சங்காய் ... 274
கொடிக்கள்ளி ... 274
கொடிக்கள்ளிப்பால் ... 276
கொடிக்காசரைக்கீரை ... 379
கொடிக்காசரை வித்து ... 380
கொடிக்குறிஞ்சானிலை இதுவே சிறு குறிஞ்சானிலை.
கொடிமுந்திரிப்பழம் ... 276
கொடிவயலைக்கீரை இதுவே பசலைக்கீரை.
கொடிவழுதுணைக்காய் ... 278
கொடிவேலி வேர் ... 279
கொடுப்பை இதுவே பொன் னாங்கண்ணி.
கொட்டிக்கிழங்கு ... 281
கொட்டைக்கரந்தை ... 281
கொட்டைப்பாக்கு ... 282
கொட்டை முந்திரிப்பழம் ... 283
கொண்டைப்பனை இதுவே கூந் தற்பனை.
கொத்தான் ... 283
கொத்துக்காய்முட்டி இதுவே குத்துக்கால்சும்மட்டி.
கொத்துமல்லிக்கீரை ... 284
கொத்துமல்லிவிதை ... 285
கொத்தவரைக்காய் ... 286
கொமட்டிமாதுளம்பழம் ... 287
கொம்புக்கள்ளி இதுவே கள்ளி மரம்.
கொம்புப்பாகல் ... 287
கொம்புப்புடல் இதுவே புடலங்காய்.
கொய்யாப்பழம் ... 288

சரக்குகள்	பக்கம்
கொல்லங்கோவை இதுவே கருடன் கிழங்கு.	
கொல்லைப்பல்லி இதுவே பல்லிப்பூண்டு.	
கொழுக்கட்டைமரம்	... 288
கொளுஞ்சிநாரத்தங்காய்	... 289
கொள்ளு	... 289
கொள்ளுக்காய்வேளை	... 290
கொன்றை	... 291
கோ	
கோங்கிலவமரம் இதுவே முள்ளிலவமரம்.	
கோங்குமரம் இதுவே முள்ளிலவமரம்.	
கோங்குமரப் பிசின் இதுவே முள்ளிலவமரப் பிசின்.	
கோடகசாலை	... 291
கோடைச்சம்பா அரிசி	... 33
கோடைப் பூசினிக்காய் இதுவே குழிப்பரங்கிக்காய்.	
கோதுமை அரிசி	... 292
கோபுரந்தாங்கி	... 293
கோரைக்கிழங்கு	... 294
கோரைச்சம்பா அரிசி	... 33
கோவைக்காய்	... 295
கோவைக்கிழங்கு	... 296
கோவை இலை	... 296
கோழிக்கீரை	... 297
கோழியவரை இலை	... 298
கோஷ்டம்	... 298
ச	
சகதேவி இதுவே நெய்ச்சட்டிப்பூண்டு.	
சங்கங்குப்பி	... 300
சங்கஞ்செடி	... 301
சங்கஞ்செடிப்பால்	... 302
சங்கம்வேர்	... 302
சடாமாஞ்சில்	... 303
சணப்பச்செடி	... 304
சண்பகப்பூ	... 305
சண்பகமரத்தின்வேர்	... 306
சதகுப்பை	... 307
சதாப்பு இலை	... 307
சதாவேரிக்கிழங்கு இதுவே தண்ணீர்விட்டான் கிழங்கு.	
சதுரக்கள்ளி	... 309
சதுரக்கள்ளிப்பால்	... 311
சத்திச்சாட்டரணை இதுவே வெள்ளைச்சாறடை.	
சத்திச்சாரணை இதுவே வெள்ளைச்சாறடை.	
சந்தனமரம்	... 312
சந்நிநாயகம் = கரியபோளம்.	
சப்பாத்திப்பூ இதுவே செம்பரத்தம்பூ.	
சப்ஜாசெடி இதுவே உதிரச்சடை.	
சமுத்திரசோஷிவிதை	... 314
சமுத்திரப்பச்சை இதுவே கடல்பாலை.	
சமுத்திராப்பழம்	... 314
சம்பங்கி இதுவே சண்பகப்பூ.	
சம்பாரப்புல் இதுவே கருப்பூரப்புல்.	
சம்புநாவற்பழம்	... 316
சரக்கொன்றைப்புளி	... 316
சரக்கொன்றைப்பூ	... 318
சரக்கொன்றைமரம்	... 318
சரளதேவதாரு	... 319
சருக்கரை	... 320
சருக்கரைக் கும்மட்டி இதுவே பிச்சப்பழம்.	
சருக்கரை வள்ளிக்கிழங்கு	... 321
சருக்கரை வேப்பமரம்	... 321
சருவரசம் இதுவே குங்கிலியம்.	
சவுரிப்பழம்	... 322
சவ்வரிசி	... 323
சவ்வியம்	... 324
சன்னலவங்கப்பட்டை	... 325
சா	
சாதிக்காய்	... 326
சாதி நாரத்தம்பழம்	... 327
சாதிப்பத்திரி	... 328
சாதிப்பூ	... 329
சாத்துக்குடிப்பழம்	... 330
சாமந்திப்பூ = செவ்வந்திப்பூ.	
சாமை அரிசி	... 330

சரக்குகள் — பக்கம்

சாம்பிராணி ... 331
சாயவேர் இதுவே இன்புரூவேர்.
சாரப்பருப்பு ... 332
சாலாமிசிரி ... 333
சாறடை இதுவே வெள்ளைச் சாறடை.
சாறுவேளை ... 334

சி

சிகைக்காய் ... 335
சிங்கடாப்பருப்பு ... 336
சிட்டிமந்தாரை இதுவே மைக் கொன்றை.
சித்திரமூலம் இதுவே கொடி வேலி.
சித்திரப்பாலடை = சிவப்பு அம்மான்பச்சரிசி.
சிரட்குச்சி இதுவே நிலவேம்பு.
சிலாரசம் ... 337
சிவந்திக்கடுக்காய் ... 161
சிவகரந்தை ... 338
சிவதைவேர் ... 339
சிவப்பு அம்மான்பச்சரிசி ... 341
சிவப்புக் காசரைக்கீரை இதுவே சீமைக்காசரைக்கீரை.
சிவப்புச் சித்திரமூலம் இதுவே செங்கொடிவேலி.
சிவப்புப் புளிச்சக்கீரை இதுவே சீமைக்காசரைக்கீரை.
சிவப்பு மணத்தக்காளி ... 572
சிவனார்வேம்பு ... 342
சிறிய கொடிமுந்திரிப்பழம் = சிறுகொடிமுத்திரிப்பழம்.
சிறியாநங்கை ... 342
சிறு அம்மான்பச்சரிசி ... 343
சிறு ஆளிவித்து = அலிசி விதை.
சிறுஏலம் ... 131
சிறு கடுகு ... 154
சிறு கட்டுக்கொடி ... 344
சிறுகாஞ்சொறிவேர் ... 224
சிறு காராமணி இதுவே தட்டைப் பயறு.
சிறு கீரை ... 345
சிறு குறிஞ்சா இலை ... 345
சிறு குறிஞ்சாக்கொடி ... 346
சிறு குறிஞ்சாவேர் ... 347
சிறு கொடிமுந்திரிப்பழம் ... 276
சிறு சின்னி ... 347
சிறு செருப்படை இதுவே செருப்படை.
சிறு துத்தி ... 419
சிறு தேக்கு இதுவே கண்டு பாரங்கி.
சிறு தேட்கொடுக்கு ... 349
சிறு நாகப்பூ ... 349
சிறு நெருஞ்சில் இதுவே நல்ல நெருஞ்சில்.
சிறு பசலைக்கீரை ... 350
சிறு பசரைக்கீரை இதுவே பசலைக்கீரை.
சிறு பயறு இதுவே பச்சைப் பயறு.
சிறு பீளை ... 351
சிறு புள்ளடி ... 352
சிறு வழுதுணைக்காய் ... 278
சிறு வள்ளிக்கிழங்கு ... 353
சிற்றரத்தை ... 354
சிற்றாமணக்குநெய் ... 355
சிற்றாமரைப்பூ இதுவே ரோஜாப்பூ.
சிற்றாமல்லி இதுவே காட்டு மல்லிகை.
சிற்றாமுட்டி வேர் ... 355
சிற்றீச்சங் குருத்து ... 357
சிற்றீச்சம்பழம் ... 358
சிற்றுழா இலை ... 358

சீ

சீக்கிரான் இதுவே உசிலமரம்.
சீதாபோகம் அரிசி ... 33
சீத்தாப்பழம் ... 358
சீந்திற்கிழங்கு ... 359
சீந்திற்சருக்கரை ... 360
சீமைக் காசரைக்கீரை ... 379
சீமைச் செவ்வந்திப்பூ ... 361
சீமைச்சோம்பு ... 362
சீமைத்தக்காளிப்பழம் ... 362
சீமை மாதுளம்விரை ... 363

சரக்குகள்	பக்கம்
சீமையகத்தி	... 364
சீயக்காய் இதுவே சிகைக்காய்.	
சீரகச்சம்பா அரிசி	... 34
சீரகம்	... 365
சீனிச்சருக்கரை	... 366
சு	
சுக்கான்காய்	... 366
சுக்காங்கீரை	... 367
சுக்காங்கீரையின் விதை	... 368
சுக்கு	... 368
சுக்குநாறிப்புல் இதுவே கருப்பூரப்புல்.	
சுண்டைக்காய்	... 370
சுண்டைக்காய் வற்றல்	... 371
சுருள்பட்டை இதுவே செங்கத்தாரிப்பட்டை.	
சுரைக்காய்	... 371
சுரை இலை	... 372
சுவற்றுமுள்ளங்கி இலை	... 372
சுன்னாரிப்புல்லு இதுவே காவட்டம் புல்லு.	
சூ	
சூதப்பிஞ்சு இதுவே மாம்பிஞ்சு.	
சூத்திரநாவி	... 459
சூரணத்தண்டு	... 373
சூரியகாந்தி	... 373
சூரைப்பழம்	... 374
செ	
செங்கடுகு	... 154
செங்கடுக்காய்	... 162
செங்கத்தாரி வேர்ப் பட்டை.	... 375
செங்கரும்பு	... 191
செங்கழுநீர்க்கிழங்கு	... 376
செங்கற்றாழை	... 377
செங்கீரைத்தண்டு	... 249
செங்கொட்டை இதுவே சேங்கொட்டை.	
செங்கொட்டை நெய் இதுவே சேங்கொட்டை நெய்.	
செங்குன்றி இதுவே குன்றிமணிக்கொடி.	
செங்கொடிவேலி	... 281
செங்கோவை	... 296
செஞ்சந்தனம்	... 377
செஞ்சம்பா அரிசி	... 34
செஞ்சோளம்	... 397
செடிக்காசரைக்கீரை	... 378
செடிக்காசரைவித்து	... 380
செந்தராயிலை	... 380
செந்தாமரைப்பூ இதுவே தாமரைப்பூ.	
செந்தாழம்பூ	... 381
செந்துத்தி இதுவே சிறுதுத்தி.	
செந்துளசி	... 426
செந்தொட்டிவேர்	... 224
செந்நாயுருவிச்சமூலம்	... 382
செப்புநெருஞ்சில்	... 383
செம்பரத்தம்பூ	... 383
செம்பருத்திப்பூ	... 385
செம்பை	... 183
செம்முள்ளி	... 385
செருப்படை	... 386
செவ்வகத்திப்பூ	... 387
செவ்வகத்தி இலை	... 388
செவ்வந்திப்பூ	... 388
செவ்வல்லிக்கிழங்கு	... 389
செவ்வல்லிப்பூ	... 389
செவ்வல்லி விதை	... 390
செவ்வள்ளிக்கொடி	... 390
செவ்வாமணக்கு இலை	... 391
செவ்வாழைப்பழம்	... 646
செவ்வியம் இதுவே சவ்வியம்.	
செவ்விளநீர்	... 94
சே	
சேங்கொட்டை	... 391
சேப்பங்கிழங்கு இதுவே சேம்புக்கிழங்கு.	
சேம்பிலை	... 393
சேம்புக்கிழங்கு	... 394
சேராங்கொட்டை இதுவே சேங்கொட்டை.	
சொ	
சொத்தைப்பாக்கு	... 395

சரக்குகள் பக்கம்

சோ

சோகிக்கீரை ... 395
சோகிவித்து = சதகுப்பை.
சோம்பு ... 396
சோயிக்கீரை = சோகிக்கீரை.
சோரியிளநீர் ... 94
சோளம் ... 396
சோற்றுக்கற்றாழை இதுவே குமரி.

டி

டிக்காமல்லி இதுவே திக்காமல்லி.

த

தகரை இதுவே ஊசித்தகரை.
தகரை வித்து இதுவே ஊசித் தகரை வித்து.
தக்கோலப்பொட்டு இதுவே தக்கோலம்.
தக்கோலம் ... 397
தசை அத்திப்பழம் இதுவே அத்திப்பழம்.
தட்டைப்பயறு ... 398
தண்ணீர்விட்டான்கிழங்கு ... 399
தந்தசடம் இதுவே தமர்த்தம் பழம்.
தபாக்கரிசி ... 400
தமர்த்தம்பழம் ... 401
தராசுக்கொடி இதுவே ஈச்சுர மூலி.
தராயிலை ... 401
தருப்பைப்புல் ... 402
தர்ப்பூசனி இதுவே பிச்சப்பழம்.
தலைச்சுருளி இதுவே ஈச்சுரமூலி
தலைச்சுடி இதுவே ஈச்சுரமூலி.
தவசு முருங்கையிலை ... 403
தவனம் ... 404
தழுதாழையிலை ... 404
தனியா இதுவே கொத்துமல்லி வித்து.

தா

தாடிமக்கனி இதுவே மாதுளம் பழம்.
தாண்றிக்காய் இதுவே தான்றிக் காய்.

சரக்குகள் பக்கம்

தாமரைக் கிழங்கு ... 405
தாமரைப்பூ ... 406
தாமரையிலை ... 407
தாமரைவித்து ... 407
தாழை மரம் ... 408
தாளிசபத்திரி ... 409
தாளிப்பனை ... 410
தானிக்காய் இதுவே தான்றிக் காய்.
தான்றிக்காய் ... 411

தி

திக்காமல்லி ... 412
திப்பிலி ... 412
திப்பிலி அரிசி இதுவே திப்பிலி.
திப்பிலிக்கட்டை இதுவே கண்டத்திப்பிலி.
திப்பிலிமூலம் இதுவே கண்டத் திப்பிலி.
திராட்சைப் பழம் இதுவே கொடி முந்திரிப்பழம்.
திருவிருத்திக் கடுக்காய் ... 162
திருகுகள்ளிப்பால் ... 414
திருநீற்றுப்பச்சை இதுவே உருத் திரச்சடை.
திருநீற்றுப்பத்திரி இதுவே உருத் திரச்சடை.
தில்லம்பால் .. 415
தில்லம்வித்து ... 415
தினையரிசி ... 416

தீ

தீம்பாலைப் பழம் இதுவே பாலைப் பழம்.

து

துடைப்பம் ... 416
துத்திப்பூ ... 417
துத்தி இலை ... 418
துத்திவிதை ... 419
தும்ராஷ்டம் இதுவே பேராத்தை.
தும்பைப்பூ ... 420
தும்பை இலை ... 421
தும்மட்டிக்காய் இதுவே ஆற்றுத் தும்மட்டிக்காய்.

சரக்குகள்	பக்கம்
துயிலிக்கீரை	... 421
துராயிலை இதுவே தராயிலை.	
துராலப்பை இதுவே கருங்காஞ்சொறி.	
துரிஞ்சிப்பழம் இதுவே கொமட்டிமாதுளம்பழம்.	
துலுக்கப்பயறு	... 422
துவரம்பருப்பு	.. 422
துவரை	... 423
துளசி	... 424
துளசிவித்து	... 425
தூ	
தூதுளங்காய்	... 428
தூதுளம்பழம்	... 428
தூதுளம்பூ	... 428
தூதுளையிலை	... 429
தூபம் இதுவே சாம்பிராணி.	
தெ	
தெங்கின் கற்கண்டு	... 429
தெங்கின் குருத்து	... 430
தெங்கின் மது	... 430
தெங்கின் வெல்லம்	... 431
தெனையரிசி இதுவே தினையரிசி.	
தென்னங்குருத்து இதுவே தெங்கின் குருத்து.	
தென்னம்பூ	431
தே	
தேங்காயின் நெய்	... 432
தேங்காய்ப்பால்	... 432
தேங்காய்ப் பிண்ணாக்கு	... 433
தேசாவரம் இதுவே கண்டத்திப்பிலி.	
தேட் கொடுக்குச் செடி	... 434
தேயிலை	... 434
தேவகந்தம் இதுவே நெய்ச்சட்டிப்பூண்டு.	
தேவதாரம் இதுவே தேவதாரு.	
தேவதாரு	... 435
தேற்றாங்கொட்டை	... 436
தேற்றான்பழம்	... 437
தொ	
தொட்டாற்சுருங்கி	... 437

சரக்குகள்	பக்கம்
ந	
நஞ்சறுப்பான் பூண்டு	... 438
நஞ்சுமுறிச்சான் பூண்டு இதுவே நஞ்சறுப்பான் பூண்டு.	
நத்தைச்சூரி	... 439
நந்தியாவட்டப்பூ	... 440
நரளை இதுவே புளிநரளைக்கிழங்கு.	
நரிக்கொன்றை இதுவே மைக்கொன்றை.	
நரிப்பயறு இதுவே பனிப்பயறு.	
நரிமிரட்டி இதுவே வட்டக்கிலுகிலுப்பை.	
நரிவிளா இதுவே நிலவிளா.	
நரிவெங்காயம் இதுவே காட்டுருள்ளி.	
நல்லதாளி இதுவே நருந்தாளி.	
நல்ல நெருஞ்சில்	... 441
நல்ல நெருஞ்சில் வித்து	... 442
நல்ல வெல்லம்	... 443
நல்வேளை	... 443
நல்வேளைப்பூ	... 444
நல்வேளைவித்து	... 445
நவரை வாழைப்பழம்	... 648
நறுக்குத் திப்பிலி இதுவே கண்டத்திப்பிலி.	
நறுக்கு மூலம் இதுவே நன்னாரிவேர்.	
நறுநீண்டி இதுவே நன்னாரிவேர்.	
நறுந்தாளி	... 446
நறுமணத்தக்காளி இதுவே மணத்தக்காளி.	
நறுமுன்னை	... 446
நறுமுன்னைவேர்	... 447
நறும்பிசின் இதுவே குந்திரிக்கம்.	
நறுவிலிமரம்	... 447
நன்னிப்பயறு இதுவே துலுக்கப்பயறு.	
நன்னாரிவேர்	... 448
நா.	
நாகதாளிக்கள்ளி	... 449

சரக்குகள்	பக்கம்
நாகப்பழம் இதுவே நாவற்பழம்.	
நாகப்பூ	... 449
நாகமல்லிகைவேர்	... 450
நாகமுட்டி இதுவே நாகமல்லிகை.	
நாகேசுரம் இதுவே சிறுநாகப்பூ.	
நாக்கறுத்தான்பூண்டு இதுவே தருப்பைப்புல்.	
நாட்டு நிலாவாரை இதுவே நில ஆவாரை.	
நாணற் கரும்பு	... 450
நாபி இதுவே நாவி.	
நாயுருவி இதுவே அபமார்க்கி.	
நாய்க்கடுகு	... 451
நாய்த்துளசி	... 427
நாய்ப்பாகல்	... 451
நாய்ப்பாலை இதுவே நஞ்சறுப்பான் பூண்டு.	
நாய்வேளை	... 452
நாரத்தங்கச்சல்	... 452
நாரத்தங்காய்	... 453
நாரத்தம்பழம்	... 453
நாரத்தந்தகரை இதுவே பேயாவாரை.	
நாவல்மரப்பட்டை	... 454
நாவல் மரத்தின்வேர்	... 455
நாவற்பழம்	... 455
நாவி	... 456
நி	
நிர்விஷம்	... 459
நில ஆவாரை	... 460
நிலக்கடம்பு	... 461
நிலக்கடலை இதுவே வேர்க்கடலை.	
நிலக்குழிழ்	... 462
நிலத்துத்தி	... 419
நிலத்துளசி	... 426
நிலப் பனங்கிழங்கு	... 463
நிலப்பூசினிக்கிழங்கு	... 464
நிலம்புறண்டி	... 464
நிலவாகை இதுவே நில ஆவாரை.	
நில விளா	... 465
நிலவேம்பு	... 465

சரக்குகள்	பக்கம்
நிலாவாரை இதுவே நில ஆவாரை.	
நின்றூற்சிணுங்கி	... 466
நீ	
நீரடிமுத்து	... 467
நீரடிமுத்து நெய்	... 467
நீராரைக்கீரை இதுவே ஆரைக்கீரை.	
நீர்ப்பிரமி இதுவே பிரமிய வழுக்கை.	
நீர்ப்பூலா	... 468
நீர்முள்ளி	... 469
நீர்முள்ளிவித்து	... 470
நீர்மேல் நெருப்பு இதுவே கல்லுருவிப்பூண்டு.	
நீலி இலை இதுவே அவுரி இலை.	
நீலிவேர் இதுவே அவுரிவேர்.	
நீலோற்பலம் இதுவே கருநெய்தற்பூ.	
நு	
நுணாமரம்	... 471
நுரைப் பீர்க்கங்காய்	... 472
நெ	
நெட்டப் பிரமட்டை இதுவே பேய்மிரட்டி.	
நெய்சட்டிப்பூண்டு	... 472
நெய்தற் கிழங்கு	... 473
நெரி அரிசிப்பால் இதுவே சிலாரசம்.	
நெல்லிக்காய்	... 474
நெல்லிமரத்தின் வேர்	... 475
நெல்லிமுள்ளி	... 476
நெற்பொரி	... 477
நே	
நேர்வாளக்கொட்டை	... 478
நொ	
நொச்சியிலை	... 478
நொச்சிப்பட்டை	... 479
ப	
பங்கம்பாளை இதுவே ஆடுதீண்டாப்பாளை.	
பசலைக்கீரை	... 480

சரக்குகள்	பக்கம்
பசறைக்கீரை இதுவே பசலைக் கீரை.	
பசுமுன்னை இதுவே நறுமுன்னை.	
பச்சரிசி அன்னம்	... 480
பச்சரிசிக் கஞ்சி	... 481
பச்சிலை	... 481
பச்சை அரிசி	... 482
பச்சை யிளநீர்	... 95
பச்சைக்கடுக்காய் இதுவே அரிதகிக்காய்.	
பச்சைக்குங்குமப்பூ	... 482
பச்சைத்திப்பிலிவேர்	... 483
பச்சை நாவி	... 458
பச்சைப்பயறு	... 483
பச்சை மிளகாய்	... 599
பச்சை வாழைப்பழம்	... 648
பச்சை விலாமிச்சுவேர்	... 484
பட்டாணி	... 484
பண்ணைக்கீரை	... 485
பத்திராட்சி	... 485
பப்பாய்க்காய்	... 486
பப்பாய்ப்பழம்	... 487
பம்பந்தரா	... 402
பயற்றங்காய்	... 487
பரட்டைக்கீரை	... 488
பருங்காராமணி இதுவே பெரும்பயறு.	
பருங்காளான்	... 489
பருங்கோரை இதுவே சடாமாஞ்சில்.	
பருத்தியிலை	... 490
பருநன்னாரி இதுவே மாகாளிக்கிழங்கு.	
பருப்புக்கீரை இதுவே கோழிக்கீரை.	
பருவமுதுணைவேர்	... 278
பலா இலை	... 491
பலாக்காய்	... 491
பலாக்கொட்டை	... 492
பலாசுக்கொட்டை	... 492
பலாசு மரப்பிசின்	... 493
பலாசு மரம்	... 493
பலாப்பழம்	... 494
பலாப்பிஞ்சு	... 495
பல்லிப்பூண்டு	... 495
பவளக்குன்றி இதுவே குன்றி மணிக்கொடி.	
பழம்பாசி	... 496
பழம்புளி	... 497
பழைய வெல்லப்பாகு	... 498
பளிங்கு சாம்பிராணி இதுவே சாம்பிராணி.	
பறங்கி இலை	... 498
பறங்கிக்காய்	... 499
பறங்கிக்காய் வித்து	... 500
பறங்கிச் சாம்பிராணி இதுவே குந்திரிக்கம்.	
பறங்கிப்பட்டை	... 500
பறங்கி வித்து இதுவே பறங்கிக்காய் வித்து.	
பற்பாடகம்	... 501
பனங்கள் இதுவே பனையின் மது.	
பனங்கற்கண்டு	... 502
பனங்கிழங்கு	... 502
பனங்குருத்து	... 503
பனம்பழம்	... 504
பனம்பூ	... 504
பனிச்சிக்காய் இதுவே தும் பளிப்பழம்.	
பனிப்பயறு	... 505
பனைநுங்கு	... 506
பனையின் மது	... 506
பனைவெல்லம்	... 505
பன்றிப் புடலங்காய்	... 507
பன்னீர்	... 507
பன்னீர்ப்பூ இதுவே ரோஜாப்பூ.	
பன்னீர்மரப்பூ	... 508
பா	
பாகல் இலை	... 509
பாகற்பழம்	... 509
பாக்கு மரம்	... 510
பாசிப்பயறு இதுவே பச்சைப்பயறு.	
பாதிரிப்பூ	... 510
பாதிரிவேர்	... 511
பார்லி அரிசி	... 512

சரக்குகள் பக்கம்

பாலமோதிகம் இதுவே பூசினிக்கிழங்கு.
பாலைப்பழம் ... 512
பால்கஞ்சி ... 513
பால்கடுக்காய் ... 163
பாவட்டங்காய் ... 513
பாவட்டை இலை ... 514
பாற்சொரிக்கீரை ... 515

பி.

பிசின்பட்டை ... 515
பிச்சப்பழம் ... 516
பிச்சப்பூ இதுவே ஜாதிப்பூ.
பிஞ்சு வெள்ளரிக்காய் ... 517
பிடங்குநாறி ... 517
பிண்ணாக்குக்கீரை ... 518
பிரண்டை ... 519
பிரப்பங்கிழங்கு ... 520
பிரமதண்டு ... 521
பிரமதண்டுப்பால் ... 521
பிரமதண்டு வித்து ... 522
பிரமதருவின் பிசின் இதுவே பலாசுமரப் பிசின்.
பிரமிய வழுக்கை ... 522
பிராயன் இலை ... 523
பிராயன்பால் ... 524
பிருதிவிக் கடுக்காய் ... 161
பிளப்புச் சீரகம் ... 524
பிஸ்தா ... 525

பீ

பீதரோகணி ... 525
பீர்க்கங்காய் ... 526
பீவேலன் இதுவே வெள்வேலமரம்.
பீளைச்செடி இதுவே சிறுபீளை.
பீனாறிமரம் இதுவே பூதகரப்பான்.

பு

புகையிலை ... 526
புங்கம்பால் ... 527
புங்கம்வேர் ... 528
புங்கின்நெய் ... 529
புங்கின்விதை ... 529
புடலங்காய் ... 530
புதியனா ... 530
புதியன்மூலி இதுவே புதியனா.
புத்திரசீவி விதை ... 531
புரசங்கொட்டை இதுவே பலாசுக்கொட்டை.
புரசமரம் இதுவே பலாசுமரம்.
புல்லகண்டங்கரும்பு ... 191
புழுகுச்சம்பா அரிசி ... 34
புழுங்கலரிசி ... 532
புழுங்கலரிசி அன்னம் ... 532
புளிச்சக்காய் ... 532
புளிச்சக்கீரை இதுவே செடிக்காசரைக்கீரை.
புளிசிறுகீரை இதுவே செடிக்காசரை.
புளிநரளைக்கிழங்கு ... 533
புளிமாங்காய் இதுவே காட்டுமாங்காய்.
புளிமாங்கொழுந்து இதுவே காட்டுமாங்கொழுந்து.
புளியிலை ... 534
புளியங்காய் ... 535
புளியங்கொட்டை ... 535
புளியம்பட்டை ... 536
புளியம்பழம் ... 536
புளியம்பூ ... 537
புளியாரைக்கீரை ... 538
புற்றுக்காளான் ... 489
புனற்றண்டு ... 538
புன்னைக்கொட்டை ... 540
புன்னைநெய் ... 540
புன்னைப்பூ ... 541

பூ

பூசினி இலை இதுவே பறங்கியிலை
பூசினிக்காய் இதுவே பறங்கிக்காய்.
பூசினிவித்து இதுவே பறங்கிக்காய் வித்து.
பூதகரப்பான்பட்டை ... 541
பூத்தாழம்பழம் இதுவே அன்னாசிப்பழம்.
பூந்துடைப்பம் இதுவே துடைப்பம்.
பூமாதுளம்பூ. ... 543

சரக்குகள் பக்கம்

பூமிசருக்கரைக்கிழங்கு ... 544
பூவந்திமரம் இதுவே மணிப் புங்குமரம்.
பூவரசுசமூலம் ... 545
பூனைக்காஞ்சொறி இதுவே சிறுகாஞ்சொறி.
பூனைக்கண் குங்கிலியம் ... 546
பூனைக்காலி வித்து ... 546

பெ

பெரட்டைக்கீரை இதுவே பரட்டைக்கீரை.
பெரிய ஏலம் ... 131
பெரிய தகரை இதுவே கிரந்தி தகரம்.
பெரிய திராட்சைப்பழம் இதுவே பெருங் கொடிமுந்திரிப்பழம்.
பெரிய லவுங்கப்பட்டை இதுவே லவுங்கப்பட்டை.
பெரியா நங்கையிலை ... 547
பெருங் கடுகு இதுவே செங்கடுகு.
பெருங்கட்டுக்கொடி ... 547
பெருங்காஞ்சொறிவேர் ... 224
பெருங்காயம் ... 548
பெருங்குமிழ மரம் ... 549
பெருங்குருந்தொட்டிவேர் இதுவே பேராமுட்டிவேர்.
பெருங் கொடிமுந்திரிப்பழம் 277
பெருங்கோரைக்கிழங்கு இதுவே சடாமாஞ்சில்.
பெருஞ்சின்னி ... 550
பெருஞ்சீரகம் இதுவே சோம்பு.
பெருநாகப்பூ இதுவே தக்கோலம்.
பெருந்தும்பை இதுவே பேய்மிரட்டி.
பெருந்துத்தி இதுவே துத்தி.
பெருந் தேட்கொடுக்கு ... 550
பெருமரப்பட்டை ... 551
பெருமருந்து இதுவே ஈச்சுரமூலி.
பெருமருந்தின்வேர் இதுவே ஈச்சுரமூலிவேர்.
பெரும்பயறு ... 551
பெரும்பீனைச்செடி ... 552

பெரும்பூசினிக்காய் இதுவே கலியாணப் பூசினிக்காய்.
பெரும் லவுங்கப்பட்டை இதுவே லவுங்கப்பட்டை.
பெரும் வள்ளிக்கிழங்கு இதுவே ஆள்வள்ளிக்கிழங்கு.

பே

பேதிக்கிழங்கு இதுவே இரேவல் சின்னி.
பேயகத்தி இதுவே சீமையகத்தி.
பேயத்திப்பால் ... 552
பேயன் வாழைப்பழம் ... 648
பேயாவாரை ... 553
பேய்க்கற்றாழை ... 554
பேய்க்குமட்டி இதுவே ஆற்றுத்தும்மட்டிக்காய்.
பேய்ச்சீந்தல் இதுவே கருடன் கிழங்கு.
பேய்ச்சுரையிலை ... 554
பேய்ச்சுரைவேர் ... 555
பேய்ப்பாலை இதுவே நஞ்சறுப்பான்பூண்டு.
பேய்ப்பாற்சொரிக்கீரை ... 555
பேய்ப்பீர்க்கு ... 556
பேய்ப்புடல் ... 556
பேய்மிரட்டி ... 557
பேய்மிரட்டி இலை ... 558
பேரரத்தை ... 559
பேராமுட்டிவேர் ... 559
பேரீச்சங்காய் இதுவே கர்ச்சூர்க்காய்.
பேரீச்சங் குருத்து ... 560
பேரீச்சம்பழம் இதுவே கர்ச்சூரம்.

பொ

பொடுதலை ... 560
பொறிக்காளான் ... 489
பொற்சீந்திற் கிழங்கு ... 561
பொற்றலைக்கையாந்த கரை. ... 561
பொன்முசுட்டை ... 562
பொன்னாங்காணி ... 563

சரக்குகள்	பக்கம்
பொன்னுங்கொட்டை மரம் இதுவே மணிப்புங்கு மரம்.	
பொன்னுவாரை இதுவே பேயாவாரை.	
பொன்னூமத்தை ...	564

போ

போஜனகஸ்தூரி இதுவே நாரத்தங்காய்.	

ம

மகரப்பூ இதுவே மராட்டிப்பூ.	
மகிழம்பூ ...	564
மகிழம் வித்து ...	565
மக்காச்சோளம் ...	566
மக்கிப்பால் ...	566
மங்குஸ்தான் ...	567
மஞ்சள் ...	568
மஞ்சள்கச்சி இளநீர் ...	95
மஞ்சள் முள்ளங்கி ...	569
மஞ்சள் முள்ளங்கி விதை ...	570
மஞ்சிஷ்டி இதுவே செவ்வல்லி.	
மட்டிப்பால் ...	571
மட்டுப்பால் இதுவே மட்டிப்பால்.	
மணக்கத்தை அரிசி ...	35
மணத்தக்காளி ...	571
மணத்தக்காளிக்காய் ...	573
மணத்தக்காளி வற்றல் ...	573
மணலிக்கீரை ...	574
மணிச்சம்பா அரிசி ...	35
மணிப்புங்கு மரம் ...	574
மதனகாமப்பூ ...	575
மதூகம் இதுவே அதிமதூரம்.	
மந்தாரப்பூ ...	576
மயிர்க்கொன்றை இதுவே மைக்கொன்றை.	
மயிர்மாணிக்கம் ...	576
மயிலாலக்கடி இதுவே பிசின் பட்டை.	
மயூரகம் இதுவே அபமார்க்கி.	
மரக்காரைப்பழம் ...	577
மரக்காரை வேர் ...	578
மரமஞ்சள் ...	578
மரவள்ளிக்கிழங்கு இதுவே ஆள்வள்ளிக்கிழங்கு.	

சரக்குகள்	பக்கம்
மராட்டிப்பூ ...	579
மரியங்காய் இதுவே காட்டு மாங்காய்.	
மரியங்கொழுந்து இதுவே காட்டு மாங்கொழுந்து.	
மருக்காளான்பழம் இதுவே மரக்காரைப்பழம்.	
மருக்கொழுந்து இதுவே தவனம்.	
மருட்கிழங்கு ...	580
மருதமரம் ...	580
மருதோன்றி இலை ...	581
மருதோன்றி வித்து ...	582
மருதோன்றி வேர் ...	583
மருளூமத்தை ...	584
மருவு ...	584
மலைதாங்கிப் பூண்டு ...	585
மலைப்பாலை மரம் ...	586
மலை யேலம் ...	132
மலை வாழைப்பழம் ...	648
மலை வேப்பமரம் ...	586
மலை வேப்பம் பிசின் ...	587
மல்லிகைச் சம்பா அரிசி ...	35
மல்லிகைப்பூ ...	588

மா

மாகாளிக் கிழங்கு ...	588
மாங்காய் ...	589
மாங்கொட்டை ...	589
மாசிக்காய் ...	590
மாசிப்பத்திரி ...	591
மாதுளம்பழத்தின் ஓடு ...	592
மாதுளம்பழம் ...	592
மாதுளம் பிஞ்சு ...	593
மாதுளம்பூ ...	594
மாதுளை வித்து ...	594
மாந்தப்புல் இதுவே காவட்டம்புல்.	
மாமரவேர் ...	595
மாம்பழம் ...	595
மாம்பிசின் ...	596
மாம்பிஞ்சு ...	596
மாவலிக்கிழங்கு இதுவே மாகாளிக்கிழங்கு.	
மாவிலிங்கமரம் ...	597

சரக்குகள்	பக்கம்
மான் செவிக்கள்ளி	... 597
மி	
மிதிபாகற்காய்	... 598
மிரியார்கூந்தல் இதுவே குதிரைவாலி.	
மிளகரணை	... 599
மிளகாய்	... 599
மிளகாய்ப்பழம்	... 600
மிளகு	... 603
மிளகுக்காய்	... 604
மிளகுவேர் இதுவே சவ்வியம்	
மிளகுச்சம்பா அரிசி	... 35
மிளகுத்தக்காளி	... 605
மு	
முகிழ் விரியாக்கத்தரிப் பிஞ்சு இதுவே கத்தரிப்பிஞ்சு.	
முக்காவேளைவேர்	... 606
முக்குளிக்கீரை	... 606
முசற்காதிலை	... 607
முசுட்டை	... 562
முசுமுசுக்கையிலை	... 607
முசுமுசுக்கைவேர்	... 608
முடக்கற்றான்	... 608
முட்காவேளைவேர் இதுவே முக்காவேளைவேர்.	
முட்சங்கஞ்செடி இதுவே சங்கஞ்செடி.	
முதியார்கூந்தல் இதுவே குதிரைவாலி.	
முத்தக்காசு இதுவே கோரைக் கிழங்கு.	
முந்திரிப்பருப்பு	... 609
முந்திரிகையின் மது	... 609
முருக்கமரம் இதுவே பலாசு மரம்.	
முருக்கம்பிசின் இதுவே பலாசுமரப் பிசின்.	
முருங்கைக்காய்	... 610
முருங்கைச் சமூலம்	... 610
முருங்கைப் பிசின்	... 611
முருங்கைப் பிஞ்சு	... 611
முருங்கைப்பூ	... 612
முருங்கைமரப்பட்டை	... 612
முருங்கையிலை	... 613
முருங்கை ஈர்க்கு	... 614
முருங்கை வித்து	... 614
முலாம்பழம்	... 614
முலைப்பால்விதை இதுவே இடிக்கொள்ளு.	
முல்லைப்பூ இதுவே ஊசி மல்லிகை.	
முளைக்கீரை	... 615
முள் துளசி	... 426
முள்முருங்கமரம் இதுவே கலியாணமுருக்கு.	
முள்முருக்கம்பூ இதுவே கலியாணமுருக்கம்பூ.	
முள்வெள்ளரிக்காய் இதுவே கக்கரிக்காய்.	
முள்ளங்கிக்கிழங்கு	... 615
முள்ளங்கியிலை	... 616
முள்ளங்கிவித்து	... 617
முள்ளிக்கீரை	... 617
முள்ளிலவமரம்	... 618
முள்ளிலவம்பிசின்	... 619
முள்ளுத்திராட்சைப்பழம்	... 619
முன்னை இதுவே நறுமுன்னை.	
மூ	
மூக்குறட்டை	... 620
மூங்கில் அரிசி	... 621
மூங்கிலிலை	... 621
மூங்கிலுப்பு	... 622
மூங்கில்	... 623
மூசாம்பரம் இதுவே கரியபோளம்.	
மூதண்டம் இதுவே அருகம்புல்.	
மெ	
மெருகன்கிழங்கு	... 623
மே	
மேனு	... 624
மேனியிலை இதுவே குப்பை மேனியிலை.	
மை	
மைக்கொன்றை	... 625

சரக்குகள்	பக்கம்
மைசாட்சி இதுவே குக்கில்.	
மைச்சம்பா அரிசி ...	36
மைலாலக்கடி இதுவே பிசின் பட்டை.	

மொ

சரக்குகள்	பக்கம்
மொகடம் இதுவே மகிழம்.	
மொச்சைக்காய் ...	626
மொச்சைக்கொட்டை ...	626
மொந்தன்கடுக்காய் இதுவே திருவிருத்திக்கடுக்காய்.	
மொந்தன் வாழைப்பழம் ...	647

மோ

மோடி இதுவே கண்டத்திப்பிலி.
மோதக வல்லிமரம் இதுவே கொழுக்கட்டை மரம்.

யா

சரக்குகள்	பக்கம்
யானைக்கற்றாழை இதுவே இராகாசிமடல்.	
யானைத்திப்பிலி ...	627
யானை நெருஞ்சில் ...	627

ர

ரசத்தாளிக்கரும்பு இதுவே இரசத்தாளிக்கரும்பு.
ரசத்தாளிப்பழம் இதுவே இரசத்தாளி வாழைப்பழம்.
ரத்தபோளம் இதுவே இரத்த போளம்.

ரா

ராமசீத்தாப்பழம் இதுவே இராம சீத்தாப்பழம்.

ரு

ருதந்தி இதுவே அழுகண்ணி.

ரூ

ரூமிமஸ்தகி இதுவே பூனைக் கண்குங்கிலியம்.

ரே

ரேவல்சின்னிக்கிழங்கு இதுவே இரேவல்சின்னிக்கிழங்கு.

ரோ

ரோஜாப்பூ இதுவே உரோஜாப்பூ.

ல

லவுங்கப்பட்டை இதுவே இலவங்கப்பட்டை.
லவுங்கப்பத்திரி இதுவே இலவங்கப்பத்திரி.
லவுங்கப்பூ இதுவே இலவங்கப்பூ.

வ

சரக்குகள்	பக்கம்
வகுளம்பூ இதுவே மகிழம்பூ.	
வங்காரவள்ளைக்கீரை ...	628
வசநாபி இதுவே நாவி.	
வசம்பு ...	629
வசலைக்கீரை இதுவே கொடி வயலைக்கீரை.	
வச்சிரபீஜ இலை இதுவே கழற்சியிலை.	
வச்சிரவல்லி இதுவே பிரண்டை.	
வட்டக்கிலுகிலுப்பை ...	630
வட்டத்திருப்பி இதுவே மலை தாங்கி.	
வயற்பயறு இதுவே பனிப்பயறு.	
வயற்றுத்தி இதுவே நிலத்துத்தி.	
வரகு அரிசிச் சாதம் ...	631
வரிக்கடுக்காய் ...	163
வரிக்காளான் ...	489
வரிக்குமட்டிக்காய் இதுவே ஆற்றுத்தும்மட்டிக்காய்.	
வரிக்குமட்டியிலை இதுவே ஆற்றுத்தும்மட்டியிலை.	
வரிக்கோவை ...	296
வரித் தும்மட்டிக்காய் இதுவே ஆற்றுத் தும்மட்டிக்காய்.	
வரியாத்துக்கிழங்கு இதுவே இரேவல்சின்னி.	
வலம்புரிக்காய் ...	631
வலைக்காளான் ...	489
வல்லாரை ...	632
வழுதலங்காய் இதுவே கொடி வழுதுணைக்காய்.	
வளைதடிச் சம்பா அரிசி ...	36
வள்ளைக்கீரை ...	633
வறட்பூலாயிலை ...	634
வன்னிமரம் ...	634

சரக்குகள்	பக்கம்
வா	
வாகைப்பிசின்	... 635
வாகைப்பூ	... 635
வாகைமரம்	... 636
வாசனைப்புல் இதுவே கருப்பூரப் புல்.	
வாதநாரயண மரம்	... 637
வாதுமை நெய்	... 638
வாதுமைப்பருப்பு	... 639
வாதுமைப்பிசின்	... 640
வாய் விளங்கம்	... 640
வாலான் அரிசி	... 36
வாலுழுவை அரிசி	... 641
வாலேந்திரபோளம்	... 642
வால்மிளகு	... 643
வாழைக்காய்	... 643
வாழைச்சமூலம்	... 644
வாழைநீர்	... 644
வாழைப்பழம்	... 645
வாழைப்பிஞ்சு	... 649
வாழைப்பூ	... 649
வாழையிலை	... 650
வாளம் இதுவே நேர்வாளக் கொட்டை.	
வாளவரைக்காய்	... 650
வி	
விசயன்கடுக்காய்	... 160
விடத்தேரி	... 651
விடத்தேரின் பிசின்	... 651
விதையத்திப்பழம்	... 652
விராலியிலை	... 652
விலாமிச்சுவேர்	... 653
விலாரியிலை இதுவே விராலியிலை.	
வில்வப்பழம்	... 653
வில்வப்பழ ஓடு	... 654
வில்வமர வேர்	... 655
விழலரிசி	... 656
விழுதியிலை	... 656
விளாமரம்	... 657
விளாம்பழம்	... 658
விளாம்பழ ஓடு	... 658
விளாம்பிசின்	... 659
விஷமூங்கிலிலை	... 659
விஷ்ணுகிராந்தி	... 660
வீ	
வீழயிலை இதுவே விழுதியிலை.	
வெ	
வெங்காயப்பூ	... 661
வெங்காயம்	... 661
வெங்காய விதை	... 662
வெட்சிச் செடி	... 663
வெட்டிவேர்	... 663
வெட்பாலை மரம்	... 664
வெட்பாலை யரிசி	... 665
வெண் கடுகு	... 154
வெண்கழற்சி யிலை	... 205
வெண்காக்கட்டான்வேர் இதுவே காக்கட்டான்.	
வெண்காலிமரவேர்	... 665
வெண்கீரைத்தண்டு	... 250
வெண்குன்றி	... 666
வெண்சிவதைவேர்	... 341
வெண்டக்காய் இதுவே வெண்டைக்காய்.	
வெண்டைக்காய்	... 666
வெண்டை மிளகாய்	... 602
வெண்ணொவி	... 457
வெண்ணொச்சி இதுவே நொச்சியிலை.	
வெண்தாமரை இதுவே வெள்ளைத் தாமரை.	
வெண்பயறு	... 667
வெண்பூலா இதுவே நீர்ப்பூலா.	
வெதுப்படக்கி இதுவே பேய் மிரட்டி.	
வெதுப்படக்கியிலை இதுவே பேய்மிரட்டியிலை.	
வெந்தயக்கீரை	... 667
வெந்தயம்	... 668
வெல்லம்	... 669
வெள்வாழைப்பழம்	... 647
வெள்வேலமரம்	... 669
வெள்ளரிக்காய்	... 669
வெள்ளரிப்பழம்	... 670
வெள்ளரிவித்து	... 670

சரக்குகள்	பக்கம்
வெள்ளறுகு	... 671
வெள்ளாமணக்கிலை இதுவே ஆமணக்கிலை.	
வெள்ளிலோத்திரம்	... 671
வெள்ளெருக்கம்பால்	... 672
வெள்ளை அல்லிப்பூ இதுவே அல்லிப்பூ.	
வெள்ளை அல்லிவித்து	... 673
வெள்ளைக்கீரை இதுவே வள்ளைக்கீரை.	
வெள்ளைக் குங்கிலியம் இதுவே குங்குலியம்.	
வெள்ளச்சாறடை	... 673
வெள்ளைச்சாறடைக் கிழங்கு	... 674
வெள்ளைச்சாரணை இதுவே வெள்ளைச்சாறடை.	
வெள்ளைத் தாமரைப்பூ	... 674
வெள்ளைநாபி = வெண்ணாபி.	
வெள்ளை நாவற்பழம்	... 675
வெள்ளைப்பூண்டு	... 676
வெள்ளைப்போளம் இதுவே வாலேந்திரபோளம்.	
வெள்ளை மிளகு	... 676
வெற்பேந்தி இதுவே மலைதாங்கிப்பூண்டு.	
வெற்றிலை	... 677
வெற்றிலை வள்ளிக்கிழங்கு இதுவே காய்வள்ளிக்கிழங்கு.	
வே	
வேங்கைமரம்	... 678
வேப்பநெய்	... 678
வேப்பமரம்	... 679
வேப்பம் பிண்ணாக்கு	... 680
வேப்பம்பூ	... 681
வேப்பம்வித்து	... 681
வேப்பிலை	... 682
வேர்க்கடலை	... 684
வேலிப்பருத்தி = உத்தாமணி.	
வேளைக்கீரை = நல்வேளைக்கீரை.	
வேளைப்பூ இதுவே நல்வேளைப்பூ.	
வேளைவித்து = நல்வேளைவித்து.	

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

உ

முருகன் துணை

பதார்த்த குண விளக்கம்

மூல வர்க்கம்

அகத்திக்கீரை.

(Agati Grandiflora Leaves).

மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்தி வாய்வாந்
திருந்த வசனஞ் சேரிக்கும்—வருந்தச்
சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்
அகத்தியிலை தின்னு மவர்க்கு.

குணம்:—(இதன்பொருள்). அகத்திக் கீரையை உண்ணில் இடுமருந்தும், பயித்திய தோஷமும் நீங்கும். கடுவனும் வாய்வும் உண்டாம். ஆகாரம் எளிதில் சீரணமாகும்.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—அகத்திக் கீரையை, காம்பு, பழுப்பு, புழுக்கள், தூசி முதலியவைகளில்லாமல் சுத்தப்படுத்திச் சலத்தி லிட்டுக் கழுவி நீரில்லாமல் வடித்தெடுத்த கீரையை வழக்கப்படி செய்கின்ற தனிச் சாம்பாரிலிட்டு உண்பதுண்டு. அல்லது அகத்திக் கீரையை முன்போல் சுத்தப்படுத்தி துவட்டலாகச் செய்து அன் னத்துடன் உபயோகிப்பதுமுண்டு.

இப்படி வாரத்திற்கு ஒருமுறை அல்லது வாரத்திற்கு இரு முறை உண்டுவர தேகத்திலுள்ள உஷ்ணம் தணியும். கண்கள் குளிர்ச்சிபெறும். மலம் இளகலாகப் போகும். சிறுநீர் தடை யில்லாமல் தாராளமாகப் போகும். மகோதர வீக்கம், நீரடைப்பு, பித்தமயக்கம், முதலியவைகள் நீங்கும். இன்னும் இந்த இலையை

அரைத்து அடிபட்டு இரத்தம் சொரியும் காயங்களுக்கு வைத்துக் கட்ட சீழ் பிடிக்காமல் விரைவில் ஆறும். அகத்திக்கீரை எல்லா மருந்துகளின் வீறுகளேயும் கெடுத்துவிடுமாதலால் இது பத்திய பதார்த்தங்களிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறது. இதனைக் கறியாகச் சமைத்துண்பதல்லாமல் தைலமாகவும் உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்:—

அகத்திக்கீரைத் தைலம்.

நாம் மேலே சொல்லியபடி சுத்தப்படுத்தின அகத்திக்கீரையை இடித்துப் பிழிந்து வடிகட்டிய சாறு படி ½, அப்பட்டமான நல்லெண்ணெய் படி ½ இவை இரண்டையும் பழகின தைல மண் பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறுக எரித்து, சாறு சுண்டி மெழுகு பதம் வரும்போது கஸ்தூரிமஞ்சள், பளிங்கு சாம்பிராணி, பச்சைக் கிச்சிலிக்கிழங்கு, விளாமிச்சம்வேர் வகைக்குப் பலம் ½ வீதம் இடித்துத் துகள்செய்து போட்டுத் தைலத்தைக் கீழிறக்கி வடித்து ஆறியபின் சீசாவில் பத்திரப்படுத்துக.

இதை வாரம் ஒருமுறை தலையில் தேய்த்து நீராடிவர—பித்தம் தணியும், கண்கள் குளிர்ச்சி பெறும், பித்தத் தலைவலி போம்.

பத்தியம்:—அன்று [ஸ்நானம் செய்த தினத்தில்] பகல் நித்திரை, அலைச்சல், திரிச்சல், கூடாது.

அகத்திப் பூ.
(Agati Grandiflora Flowers).

புகைப்பித்த மும்அழலாற் பூரிக்கும் அந்த
வகைப்பித்த மும்அனலும் மாறும்—பகுத்துச்
சகத்தி லருந்தாத் தனியமிர்தே ! நாளும்
அகத்தி மலருக் கறி.

குணம்:—(இ-ள்.) சுருட்டு முதலிய புகைகளாலும், வெய்யிலாதி உஷ்ணாதிகத்தாலும் பிறந்த பித்தங்களும், தேக அழலையும் அகத்திப் பூவினால் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—காலையில் 1 அல்லது 1½ பலம் எடையுள்ள அன்று மலர்ந்த அகத்திப் பூவை சுத்த ஜலத்தில் அலம்பி,

பொடியாக அரிந்து, வீசம் படி பசுவின் பாலில் போட்டு வேக வைத்துச் சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிடுவதுண்டு. இப்படி 5, 7, நாள் சாப்பிட பித்தம், உட்காங்கை தீரும். இன்னும் அகத்திப் பூவைச் சிறுதுண்டுகளாக அரிந்து துவட்டலாகச் செய்து உபயோகப் படுத்துவதுண்டு. இதனால் இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள பல பிணிகள் தீரும்.

அகத்திவேர்.

(Agati Grandiflora Root).

நல்லகத்தி வேரதனை நாடுங்கால் மேகமெனுஞ்
சொல்லகலுந் தாகமறுஞ் சொல்லவெனின்—மெல்லமெல்ல
மெய்யெரிவு கையெரிவு மேகநத்தி னுள்ளெரிவு
மையெரிவும் போமென் றறி.

குணம்:—(இ-ள்.) நல்ல அகத்தி மரத்தின் வேரால், வெள்ளை, விதாகம், உடல், உள்ளங்கை, ஆண்குறிநாளம், பஞ்சேந்திரிய மிவ்விடங்களில் உண்டாகும் எரிச்சல் இவைகள் நீங்கும்.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—முக்கால் அல்லது ஒரு பலம் அகத்தி மரத்தின் வேர்ப்பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து ஒரு பழகின மட்பாண்டத்தில்போட்டு அரைப்படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை கொடுத்துவர, பித்தத்தாலெழுந்த தேக எரிச்சல், துர்ப்பலம், தாகம் முதலியவைகள் போம். இன்னும் இது உதிரக் கொதிப்பினால் சரீரத்தில் கண்ட தழும்புகளையும் அடக்கும்.

அகருமரம்.

(Aquilaria Agallocha).

நாசி யடைப்பு நவிரவிடி தாளுநோய்
வீசு நமைப்புடைகள் விட்டேகும்—பேசிற்
சுகரு மயக்குந் துணைமுலையாய் நல்ல
அகரு மரத்தா லறி.

குணம்:—(இ-ள்.) அகரு கட்டையினால் பீநசம், தலைக் குத்து, வாதம், தினவுள்ள புடைகள் யாவும் போகுமென்க.

(இதுவுமது)

தளர்ந்தவி ருத்தருக்காங் தக்க மணத்தா
லுளைந்த சுரமுழுது மோடும்—வளந்திகழு
மானே யகிற்புகைக்கு வாந்திய ரோசகம்போங்
தானே தளர்ச்சியறுஞ் சாற்று.

(இ-ள்.) அகில் கட்டையை அரைத்தெடுத்த சந்தனத்தை லேபனம் செய்வதினால் விருத்தர்களுடைய தளர்ந்த தேகம் இறுகும். இதன் வாசனையால் சிற்சில சுரம் நீங்கும். இதன் புகையால் அருசியும், அயர்ச்சியும் நீங்குமென்க.

செய்கை:—பித்தகாரி, சோபாநாசினி, உற்சாககாரி, வேதனா சாந்தினி, உதரவாதஹரகாரி, பூதிகந்த நாசினி.

உபயோகிக்கும் முறை:-அரைப்பலம் அகில் என்று சொல்லப் பட்ட அகருக்கட்டையை இடித்து ஒரு பழகின மட்குடுவையில் போட்டு ஒரு படி சுத்த ஜலம்விட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்து அரைக்காற்படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை சிறிது சர்க்கரைக் கூட்டிக் கொடுப்பதுண்டு. அல்லது ½ பலம் அகருமரத் தூளை ஒரு பழகின மட்குடுவையில் போட்டு ⅛ படி கொதிக்கின்ற ஜலத்தைவிட்டு மூன்று மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி முன் போல் தேக திடத்திற்கு ஏற்றவாறு ½ முதல் 1 அவுன்ஸ் வரை யில் தினம் மூன்று வேளை சிறிது சர்க்கரைக்கூட்டி கொடுப்ப துண்டு. இதனால் தேகத்திற்கு உற்சாகமும், பலமும் உண்டாகும். இது சம்பந்தமான அவிழ்தங்கள் பிடிப்பு, குடைச்சல் முதலிய வற்றிற்கு அதிகச் சிறந்தது.

அகருமரக்கட்டையின் தூளை அசுத்தமான விடத்தில் கரி நெருப்பணலில் தூவி புகையுண்டாக்க நல்ல சுகந்த வாசனையைத் தரும். இதன் கட்டையைத் தண்ணீர் தெளித்துச் சந்தனக் கல்லில் உரைத்து எடுத்த விழுதை தேகத்தில் பூசிக்கொள்வதினால் கற் றாழை நாற்றம் போகும், தளர்ந்த சரீரம் இறுகும். இதனைக் கட்டி களின்மேல் தடவ, கட்டி கரையும், படைகளுக்குத் தடவ ஆறும். அவிழ்தங்களில் இதனைத் தனியாக உபயோகப்படுத்துவது அபூர்வம். இதனை விசேஷமாகத் தைலங்களிலும் சுகந்த வாசனைப் பொடிகளி

னும் உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

விகலதூபப் பொடி.

அகில் கட்டை பலம் 1, செஞ்சந்தனக் கட்டை பலம் 1, மட்டிப்பால் பலம் 1, பளிங்குச் சாம்பிராணி பலம் 1, குங்கிலியம் பலம் 1 ஆகிய இவைகளை இடித்துச் சூரணம் செய்து புட்டியில் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது காலணாயெடைச் சூரணத்தைச் செந்தணலான கரிநெருப்பின்மேல் தூவி புகைபிடிக்க மூர்ச்சை, மயக்கம், அதிக மேல்மூச்சு முதலியவற்றை நிவர்த்தி செய்யும். இச்சூரணத்தைச் சீலையின்மேல் பரப்பித் திரியாகத் திரட்டிக் கொளுத்திப் புகை பிடிப்பதுண்டு.

அகிற்கட்டைத் தைலம்.

12 பலம் அகிற்கட்டைத்தூளை ஒரு மண்பாண்டத்தில் போட்டு இரண்டுபடி ஜலம்விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்துக் கால்படியளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதனுடன் கால்படி நல்லெண்ணெய்யும், கால்படி பசுவின்பாலையும் கூட்டி வைத்துக் கொள்க. அப்பால் அதிமதுரம், தான்றிக்காய்த்தோல் வகைக்கு ¼ பலமாக இடித்துப் பசுவின்பால் விட்டு அரைத்து முன் சித்தப்படுத்திய எண்ணெய்யில் கலக்கி அடுப்பிலேற்றிப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. இந்தத் தைலத்தைக் கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர நீர்தோஷம், மேகம் தீரும்.

குறிப்பு:—சிலர் அகிற்கட்டை சிவந்த நிறத்தையுடையதென எண்ணுவதுண்டு. இந்த இனத்தில் சிகப்பு நிறத்தையுடைய அகிலுக்கு **(Cedrela Toona)** செவ்வகில் என்றும், வெண்மை நிறத்தையுடைய அகிலுக்கு **(Dysoxylum Malabaricum)** வெள்ளையகில் என்றும், கருஞ்சாயலுடைய அகிலுக்கு **(Aquilaria Agallocha)** அகரு என்றும், வழக்கத்தின்கீழ் வந்திருக்கின்றது. இவைகளுமல்லாமல் நெடுநாட் சென்ற கள்ளி மரத்தின் நடுவே வைரம் பாய்ந்து சிவந்திருக்கும் பாகத்தை அகில்கட்டையென்று ஆமோதிப்பதுண்டு. இது அதிக பரிமளமுடையதாக விருக்கும். இக்கருத்தினைக் கொண்டே ஆன்றோர்—

"கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும்; மான்வயிற்றில்
ஒள் அரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி."

என்று கூறியிருக்கின்றனர்.

அக்கரகாரம்.

(Anacyclus Pyrethrum).

அக்கர கார மதன்பே ருரைத்தக்கா
லுக்கிரகா லத்தோட மோடுங்காண்—முக்கியமாய்க்
கொண்டாற் சலமூறுங் கொம்பனையே தாகசுரங்
கண்டாற் பயந்தோடுங் காண்.

குணம்:—(இ-ள்.) அக்கரகாரத்தால், பயங்கரமான வாத தோஷமும், தாகசுரமும் நீங்கும். இதை வாயிலடக்கிக்கொள் ளில் சலம் ஊறும்.

செய்கை:—உற்சாககாரி, திரவகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:-இரண்டு பணவெடை அக்காகாரத்தைத் தட்டி வாயிலிட்டு அடக்கிச் சுரக்கும் உமிழ்நீரை சுவைத்து விழுங்க நாவின் அசதி, பல்வலி, உண்ணுக்கு வளர்ச்சி, தொண்டை கம்மல், தாகம் இவைகள் போம். ஒரு பலம் அக்கரகாரத்தை இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு ½படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொஞ்சங் கொஞ்சமாக வாயில் விட்டு அடக்கிக் கொப்பளித்து உமிழ்ந்துவிட வும். இப்படி தினம் 2-3 முறை மூன்றுநாட்செய்ய வாயிலுண்டான விரணம், தொண்டைப்புண், பல்வலி, பல்லசைவு முதலியவைகள் போம். இதனை தனியாக இடித்தெடுத்த சூரணத்தையாவது அல்லது பற்பொடிக்காக கூறப்பட்ட இதர சரக்குகளுடன் கூட்டி யாவது பற்றேய்த்துவர பற்களைக் கெடுத்துவரும் புழுக்கள் சாகும். பற்சொற்றையும் நீங்கும். இதனைச் சிறுதுண்டுகளாக நறுக்கிக் குழித் தைல முறைப்படி தைலம் வாங்கி, உணர்ச்சி குறைவான இடங் களில் தேய்க்க உணர்ச்சியுண்டாகும். ஆண்குறிக்கு லேசாகப் பூச தளர்ச்சி நீங்கி இன்பம் அதிகரிக்கச் செய்யும். அக்கரகாரச் சூர ணத்திற்கு சமனெடை சோற்றுப்பு கூட்டி காடிவிட்டு அரைத்து

உண்ணுக்கிற் றடவ அதன் சோர்வை நீங்கும். இதனை நாவிற் றடவ தடிப்பை மாற்றும். இதன் தனிச்சூரணத்தை மூக்கிலூத மூர்ச்சை தெளிவதுடன் பற்கிட்டலையும் திறக்கச் செய்யும். இதனுடன் இதர சரக்குகளைக்கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு.

தளகண்டாவிழ்தம்.

அக்கரகாரம், அதிமதுரம், சுக்கு, சிற்றரத்தை, கிராம்பு, திப்பிலி, திப்பிலிமூலம், பவழம், மான்கொம்பு, ஆமைஓடு இவைகளைத் தனித்தனி சந்தனக் கல்லின்பேரில் முலைப்பால்விட்டு ஒவ்வொன்றிலும் சுமார் ஒரு புளியங்கொட்டைப் பிரமாணம் சந்தனம்போலுறைத்து ஒரு கோப்பையில் வழித்துச் சேகரம் செய்யவும். அப்பால் முன்போல் அந்தச் சந்தனக் கல்லின்பேரில் முலைப்பால் விட்டு உருத்திராட்சம், பொன், வெள்ளி இவைகளி லொவ்வொன்றையும் 30-40 சுற்றுறையாக உறைத்து அதனாலேற்பட்ட விழுதையும் வழித்து முன் சித்தப்படுத்திய கோப்பையில் சேர்க்கவும். இதற்குமேல் கருப்புப் பட்டுத்துணியில் மயிலிறகை முடிச்சுக் கட்டித் தேனில் தோய்த்து ஒரு காரம் படாத சட்டியின் மத்தியில் வைத்து அடுப்பிலேற்றி எரித்து நன்றாய்க் கருகினபின் அதனில் ½ விராகனெடை நிறுத்து ஒரு கல்வத்தில்போட்டு அத்துடன் முன் கோப்பையில் சித்தப்படுத்தி வைத்துள்ள கற்கத்தை வழித்துப் போட்டு அப்பட்டமான தேன்விட்டுக் குழம்பு பதமாக அரைத்து வாயகண்ட கோப்பையில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது விரலாலெடுத்து நாவின்பேரில் அடிக்கடி தடவிக்கொண்டுவர சுர ரோகத்தில் காணும் நாவறட்சி, விக்கல், வாந்தி, ஒக்காளம் இவைகள்போம். இன்னும் சில நூல்களில் இச்சரக்குகளுடன் வில்வ பழத்தின் ஓடு, விளாம்பழத்தின் ஓடு இவைகளையும் உறைக்கும்படி கூறப்பட்டிருக்கின்றன. இவைகளும் நற்குணத்தைக் கொடுக்கக் கூடியதே.

அக்கரகார மேழுகு.

அக்கரகாரம் கழஞ்சி 10, திப்பிலி கழஞ்சி 7, கோஷ்டம் கழஞ்சி 4, சிற்றரத்தை கழஞ்சி 8, கிராம்பு கழஞ்சி 7 இவைகளைத் தனித்தனி இடித்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு அதனுடன், சிறு குழந்தைகளின் அமுரியால் 2 நாழிகை சுறுக்கிட்ட 2 விராகனெடை பூரத்தை கூட்டி, தேன்விட்டுக் கையோயாமல் மெழுகு பதத்திலேயே 2 சாமம் அரைத்து, வாயகண்ட சீசாவில் பத்திரப்

படுத்துக. இதனை வேளைக்கு ½ அல்லது 1 தூதுளங்காய் பிரமாணம் தினம் இருவேளை மூன்று நாள் கொடுக்க எரிகுன்மம், வலிகுன்மம், நாவின் சுரசுரப்பு, தோஷாதி சுரங்கள் தீரும். இந்த மெழுகை நீடித்துக்கொடுக்கக்கூடாது. நோய் பூரணமாகக் குணமாகாவிடில் மீண்டும் ஒரு வாரம் சென்றபின் கொடுத்தல் நன்று.

இம்மருந்தை உண்ணுங்காலத்தில், புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

அக்ரோட்டு.

(Juglans Regia).

பாரிலகு மக்ரோட்டின் பாலார்ந்த வெண்பருப்பைப்
கோரியுண் பார்க்குக் கொழுமையுண்டாம்—வேரிலுறும்
பட்டைக்குத் தொண்டைப்புண் பாற்சுரப்பு நீங்கிவிடும்
தட்டைக் கிருமியறுந் தான்.

குணம்:—(இ-ள்.) அக்ரோட் பருப்பினால் தேகபுஷ்டி உண்டாகும். அதன் வேர்ப்பட்டையால் தொண்டைப் புண் ஆறும். வயிற்றிலுண்டான கிருமிகளையும், ஸ்திரீகளுக்குண்டாகும் பால் சுரப்பையும் நீக்கும் என்க.

செய்கை:—பட்டைக்கு-சங்கோசனகாரி, கிருமிநாசினி, காமவிர்த்தினி, க்ஷீரநாசினி.

பருப்பிற்கு:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையைப் பஞ்சுபோல் நறுக்கி, ஒரு பலம் அளவிற்கு ஒரு மட்குடுவையில்போட்டு ஒரு படி ஜலம் விட்டு ¼ படியாகச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு வடித்து வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர பேதி, சீதபேதி, தட்டைக்கிருமிஉபத்திரவம் முதலியவை குணமாகும். இதை வாயிலிட்டுக் கொப்பளிக்க வாய்விரணம் தொண்டைப் புண் ஆறும். இன்னும் பெண்களுக்கு முலைப்பாலை வற்றடிக்கவேண்டிய காலத்தில் இந்தக் கியாழத்தைக் கொடுக்க நன்மையைத் தரும்.

இதன் பருப்பைச் சிறிது கற்கண்டு கூட்டிச் சாப்பிட்டுவர விந்து தடிப்பேறி போகச்சக்தியை அதிகப்படுத்தும். இது இருதயத்துக்கும், தீனிப்பைக்கும் வன்மையைத் தரும். அதிகம் உண்டால் மலம் இளகலாகப் போகும்.

அசுவகந்தி.

(Withania Somnifera Dunal).

கொஞ்சந் துவர்ப்பாங் கொடியகஞ் சூலையரி
மிஞ்சுகரப் பான்பாண்டு வெப்பதப்பு—விஞ்சி
முசுவுறு தோடமும்போ மோகம்அன லுண்டாம்
அசுவகந் திக்கென் றறி.

குணம்:—(இ-ள்.) *சிறிது துவர்ப்புள்ள அசுவகந்திக் கிழங் கினால் க்ஷயம், வாதசூலை, வாதக்கரப்பான், பாண்டு, சுரம், வீக்கம், சலதோஷம் இவைகள் நீங்கும். மற்றும் மாதர்மேல் இச்சையும், பசியும் உண்டாகும் என்று உணர்க.*

செய்கை:—*வியதாபேதகாரி, பித்தகாரி, உதரவாதஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, காமவிர்த்தினி, சமனகாரி.*

உபயோகிக்கும் முறை:—*அசுவகந்திக்கிழங்கை சிறுதுண்டுக ளாக நறுக்கிப் பசுவின்பாலில் அவித்து உலர்த்தி இடித்துச் சூர ணம் செய்து சமனெடை சர்க்கரைக்கூட்டிப் புட்டியில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது இச்சூரணத்தை வேளைக்கு ஒரு விராக னிடை வீதம் தினம் இருவேளை பசுவின்பாலில் கலக்கிக்கொடுக்க தேக வனப்பை உண்டாக்குவதுடன், தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பான், பாண்டு, மேக அழலை, வெட்டை, வீக்கம், கட்டி, பித்த மயக்கம் முதலியவற்றை நீக்கும். இன்னும் அசுவகந்திக் கிழங்குடன் சுக்கு சேர்த்து அரைத்து கட்டி, வீக்கம் முதலியவை களுக்கு பத்துப்போடக்கரையும். இவைகளுமல்லாமல் இதனுடன் இதரசரக்குகளைக்கூட்டிச் சில அவிழ்தங்கள் செய்வதுண்டு அவற் றுள் சில முக்கிய முறைகளாவன:—*

அசுவகந்திச் சூரணம்.

கிராம்பு 1, *சிறு நாகப்பூ* 2, *ஏலம்* 3, *இலவங்கப்பட்டை* 4, *இலவங்கப்பத்திரி* 5, *சீரகம்* 6, *தணியா* 7, *மிளகு* 8, *திப்பிலி* 16, *சுக்கு* 32, *பாலில் அவித்து சுத்திசெய்த அசுவகந்திக்கிழங்கு* 64 *ஆகிய இவைகளை விராகனிடையாக நிறுத்துக்கொண்டு கல்லுரலி லிட்டுக் கடப்பாறையால் நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்து இவைகளின் மொத்த எடைக்கு நிகரான வெள்ளைச் சர்க்கரை கூட்டிப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்கு*

$\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா வீதம் தினம் இருவேளை 20-40 நாள் கொடுக்க மேகம், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சுவாசம், ஈளை, பாண்டு, மேக ஊறல் முதலியவை நீங்கும்.

அசுவகந்தி லேகியம்.

சுத்திசெய்த அசுவகந்திக் கிழங்கு பலம் 20, சீரகம், திராக்ஷை, பேரீச்சங்காய், சந்தனத்தூள், ஜாதிக்காய், கோரைக்கிழங்கு, கடுக்காய்ப்பூ, கூகைநீர், சுக்கு, மிளகு, திப்பிலி, விளாமிச்சம்வேர், கிராம்பு, கண்டத்திப்பிலி, செவ்வியம், சித்திரமூலம், இலவங்கப்பட்டை, ஏலம், சிறுநாகப்பூ, பச்சிலை வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆகிய இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு வாயகண்ட பாத்திரத்தில் $\frac{1}{2}$ வீசை வெள்ளைச் சர்க்கரையைப் போட்டு $\frac{1}{2}$ படி பசுவின்பால் விட்டுக் கரைத்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகு பதம் வரும்போது முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளரி அடுப்பைவிட்டுக் கீழிறக்கி ஆறவிட்டுப் போதிய அளவு நெய்யும் தேனும் விட்டுப் பிசைந்து ஜாடியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது வேளைக்குச் சுண்டக்காய் பிரமாணம் தினம் காலை, மாலை 20 முதல் 40 நாள் கொடுக்க க்ஷயகாசம், சோகை, பாண்டு, காமாலை முதலிய ரோகங்கள் குணமாவதுடன் தேகபுஷ்டியும் உண்டாகும். சுபாவமாக அசுவகந்திக் கிழங்கு உஷ்ண வீரியமுள்ள சரக்காதலால் இது சம்மந்தமான எப்பாகங்களை உட்கொளினும் பால், நெய், பசுவின் மோர் இவைகளை விசேஷமாகச் சேர்த்துக்கொள்க.

அசுவகந்தித் தைலம்.

சுத்திசெய்த அசுவகந்திக் கிழங்கு பலம் 10, சிற்றாமுட்டி வேர் பலம் 10 இவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி, இடித்து, ஒரு பழகிய தைல பாண்டத்தில் போட்டு 12 படி ஜலம் விட்டு அதற்குள் 10 பலம் கொம்பரக்குத் தூளை தளர்ச்சியாக சீலையில் முடிந்து, பாண்டத்தின் அடி மட்டத்திற்கு மேலே நான்கு விரல் உயரத்தில் நிற்கும்படி தோலாந்திரமாகக் கட்டி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரிக்கவும். இந்த மண் பாண்டத்தில் விட்ட ஜலமானது நன்றாய்ச் சுண்டி மூன்றுபடி நிதானத்திற்கு வரும் சமயம் அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிட்டு மறு பாண்டத்தில்

வடித்து வைத்துக்கொள்க. அப்பால் முன் கியாழமிட்ட பாத்திரத்தைச் சுத்தப்படுத்தி அதனில் நல்லெண்ணெய் படி 2, ததிமஸ்து (பசுவின் தயிரைச் சீலேயில் முடிச்சு கட்டி வடித்தெடுத்த சலம்) படி 1, முன் சித்தப்படுத்திய கியாழம் விட்டு உறவாகும்படி கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரிக்குந்தருவாயில் சிற்றரத்தை நன்ஞரி, தேவதாரம், பூலாங் கிழங்கு, பூஞ்சாத்துப்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கண்டத்திப்பிலி வகைக்குப் பலம் $\frac{1}{8}$ வீதம் இடித்து வஸ்திரகாயம் செய்து பால்விட்டு அரைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளரிக் கொடுக்கவும். தைலமானது நன்ருய்க் கொதித்து வண்டல் மெழுகு பதம் வருஞ் சமயம் கீழே இறக்கி ஆறவிட்டு வடித்துச் சீசாவில் அடைத்துத் தானியபுடம் வைத்து எடுத்துக்கொள்க. இதனை வாரம் ஒரு முறை சிரசிற் றேய்த்து ஸ்நானம் செய்துவர கப சம்மந்தமான ரோகங்களும், சுர சம்சந்தமான ரோகங்களும் குணமாகும். இன்னும் தேகம் இறுகும், கண் தெளிவடையும்.

பத்தியம்:—பகல் நித்திரை, அலேச்சல், தேக உழைப்பு கூடாது.

அசோகப் பட்டை.

(Saraca Indica Bark).

பாரிலசோ கப்பட்டை பாலதனிற் கூட்டிநீ
கோரிக் குடிநீராய் கொண்டக்கால்—நேரிழையே
வாதப் பெரும்பாடு வன்சீத பேதியுடன்
காத வழியோடுங் காண்.

குணம்:—(இ-ள்.) அசோகப் பட்டையைப் பாலோடு சேர்த்துக் கியாழமிட்டு அருந்த ஸ்திரீகளுக்கு மாதாந்தர விலக்கு நாட்களில் காணும் பெரும்பாட்டையும், இன்னும் சீதமுடன் கலந்த பேதிகளேயும் குணப்படுத்தும்.

செய்கை:—சங்கோசனகாரி, (கருப்பாசய) சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இரண்டேகால் பலம் நிறையுள்ள அசோகப் பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து ஒரு பழகின மட் பாண்டத்தில் போட்டு $\frac{1}{8}$ படி பசுவின் பாலும், $\frac{1}{2}$ படி சுத்தசலமும் விட்டு சலம் சுண்டக்காய்ச்சி, வடிக்கட்டி மூன்று பாகமாகப் பங்கிட்டு 4, 5 மணி நேரத்திற்கு ஒரு முறையாகக்

கொடுத்துக்கொண்டு வர, ஸ்திரீகளுக்குண்டாகும் பெரும்பாடு குணமாகும். இக்கியாழத்தை வீட்டுவிலக்கம் கண்ட நான்காவது நாள் தொடங்கி உதிரப்போக்கு நிற்கும்வரையில் கொடுக்கவேண்டும். இன்னும் இந்தக் கியாழம் இரத்த மூலத்திற்கும், இரத்த பேதிக்கும் மிகவும் சிறந்தது.

அஞ்சுபார்.

(Polyganum Aviculare).

வெப்ப மதிசாரம் வெள்ளை யழிகிரந்தி
ஒப்புங் குரற்புண் ணுடன்கபமும்—செப்பக்கேள்
மிஞ்சுரத்த மூலம் மிருகக்கு வாயிருமல்
அஞ்சுபா ராலொழியு மாம்.

குணம்:—(இ-ள்.) அஞ்சுபார் என்னும் வேரால் உஷ்ணத்தினுலுண்டான பேதி, வெள்ளை, ஆருத விரணம், தொண்டைப் புண், கப சம்பந்தமான பிணிகள், ரத்தமூலம், கக்குவாயிருமல் இவைகள் குணமாகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, சங்கோசனகாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—அஞ்சுபார் என்னும் வேர் ½-பலம், நிலவேம்பு ½-பலம் இவை இரண்டையும் ஒன்றிரண்டாய் இடித்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு ½-படி ஜலம்விட்டு ⅛-படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு நோயின் வன்மை மென்மைக்கு ஏற்றவாறு ½-1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர முறைசுரம், நாட்சென்ற பேதி, இருமல், கக்குவாய் இருமல், நுரையீரலைப்பற்றிய ரோகங்கள் முதலியவைகள் குணமாகும். இந்த வேரை இடித்துச் சூரணம் செய்து சமனிடை சர்க்கரைக்கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு திரிகடி பிரமாணம் அந்தி சந்தி கொடுத்துவர இரத்த மூலம் உஷ்ணபேதி முதலியவைகளைக் குணப்படுத்தும்.

இந்த வேரை பஞ்சுபோல் நறுக்கி ஒரு குடுவையில்போட்டு எண் மடங்கு ஜலம்விட்டு நான்கிலொன்ருய்க் காய்ச்சி வடிகட்டி வேண்டும்போது சிறிது வெதுப்பி வாய்கொப்பளித்துக்கொண்டுவர-

தொண்டை, நா, பல்லீறு முதலிய விடங்களில் கண்ட விரணங்கள் ஆறும். இன்னும் இந்தக் கியாழத்தைக்கொண்டு ஆருத விரணங்களுக்கு விட்டு அலம்பிவர விரைவில் ஆறும்.

அதிமதுரம்.

(Glycyrrhiza Glabra.)

கத்தியரி முப்பிணியால் வருபுண் தாகங்
கண்ணோயுன் மாதம்விக்கல் வலிவெண் குட்டம்
பித்தமெலும் புருக்கிச் சரமா வர்த்த
பித்தமத மூர்ச்சைவிட பாகம் வெப்பந்
தத்திவரு வாதசோ ணிதங்கா மாலை
சருவவிடங் காமியநோய் தாது நட்டங்
குத்திரும லாசியங்க மிதழ்நோ யிந்து
குயப்புணும்போ மதூக மெனக் கூறுங்காலே.

குணம்:—(இ-ள்.) அதிமதுரத்தினால் ஆயுதங்களினாலுண்டான சத்தியோவிரணம், வாதாதிகளாற் பிறந்த நிஜவிரணம், நாவறட்சி, நேத்திரநோய், உன்மாதம், விக்கல் ஐந்து விதமான வலிகள், வெண் குட்டம், பயித்தியம், எலும்புருக்கி, கிரிச்சரம், மதமூர்ச்சை, பித்த விஷபாகம், சுரம், வாதசோணிதம், காமாலை, தாவர சங்கம விஷங்கள், குய்யரோகம், சுக்கில நஷ்டம், புகையிருமல், முகபாகம், சிரநோய், ஓஷ்டரோகம், சோமரோகம், ஸ்தன வித்திரிதிக்கட்டி இவைகள் போம்.

செய்கை:—கபஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமலகாரி, ரக்தஸ்தம்பனகாரி, ஸோணகாரி, பித்தகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு ½-1 விராகனெடை அளவு தேனில் கொடுக்க மார்பு, ஈரல், இரைப்பை, குரல், தொண்டை இவைகளிலுண்டான வறட்சியை மாற்றும். இன்னும் இருமல், தொண்டைகரகரப்பு, தாகம், நரம்புகளைப்பற்றிய வியாதிகள், நாட்பட்ட மூலவியாதி முதலியவைகள் தீரும். இதை முலைப்பாலில் உறைத்துக் கண்களுக்குத் தீட்ட ஒளி யுண்டாகும். அதிக அளவாகக் கொடுத்தால் மலம் இளகலாகப் போகும். எங்ஙனமெனின் ½ தோலா அதிமதுரச் சூரணம், ½ தோலா சோம்புச் சூரணம் இவை இரண்டையும்

கலந்து இரவு படுக்கைக்குப் போகும்முன் பாலில் கலக்கிக் கொடுக்க மறுநாட் காலையில் ஒரு முறை மலம் தாராளமாகப் போகும். உட் சூடு தணியும். இதனை இதர சரக்குகளுடன் கூட்டிச் செய்யும் சில முறைகளாவன—

அதிமதுரச் சூரணம்.

அதிமதுரம், கோஷ்டம், அக்கரகாரம், விலாமிச்சம்வேர், தக்கோலம், ஏலம், சிறுநாகப்பூ, தணியா, கிராம்பு, சிறுதேக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கூகைநீறு, முத்த காசு, திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நன்னாரிவேர், பருத்திவிதைப்பருப்பு, நெற்பொரி, நற்சீரகம் வகைக்கு விராக னெடை 2, தாளிசப்பத்திரி விராகனெடை 4, இவைகளைப் பொன் மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து புட்டியில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தினம் காலை மாலை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டுவர பித்தம், அரோ சகம், நெஞ்செரிவு, கிறுகிறுப்பு, வாந்தி இவைகள் தீரும்.

(வேறு முறை)

அதிமதுரம் தோலா 3, இஞ்சியை மேல்தோல் சீவி பொடி யாக அரிந்து காயவைத்தது தோலா 2, திப்பிலி தோலா 2, ஏலம் தோலா 1, சீரகம் தோலா 1 இவைகளை இடித்துச் சூரணம் செய்து அதனுடன் நாட்டுச்சர்க்கரை தோலா 4 கூட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தினம் இருவேளை காய்ச்சிய வீசம்படி ஆவின் பாலில் உட்கொண்டுவர பித்தம், தலைநோய், வெள்ளோக்காளம், தேக காங்கை, மயக்கம், தேக ஊறல் இவைகள் போம்.

அதிமதுரப்பால்.

(Glycyrrhiza Glabra Extractum).

பாரி லதிமதுரம் பாலதனை வாயிலிட்டு
ஊறி வருஞ்சுவையை யுட்கொள்ளக் காரிகையே
குத்திருமற் றன்னேடு கூறும் குரல்வளையி
லெத்தி வருங்கபமு மேது.

குணம்:—(இ-ள்.) அதிமதுரப்பாலை வாயிலிட்டு அடக்கி சுவைத்துக்கொண்டிருக்க, புகைந்துவரும் இருமலும் தொண்டையி லுண்டாகும் கப உபத்திரவமும் நீங்கும்.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வேளைக்கு 2 முதல் 5 குன்றி எடை வாயிலிட்டு அடக்கி, அதிலிருந்துவரும் சுவையை விழுங்கிக் கொண்டுவரும்படி செய்ய, தொண்டை, நுரைஈரல் இவைகளின் வறட்சியை நீக்கும். இருமல் தணியும், தாகம் அடங்கும், சிறுநீரி லுண்டான வெப்பை மாற்றும். இன்னும் இதனுடன் இதரச்சரக்கு களைக்கூட்டி மாத்திரையாகச் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

உஷ்ண இருமல் மாத்திரை.

வேலம் பிசின் தோலா 1, வாதுமைப்பிசின் தோலா 1, *அதி மதுரப்பால் தோலா 1, †கோதுமைப்பால் (உலர்ந்தது) தோலா 1, சீனாகற்கண்டு தோலா 1 இவைகளைக் கல்வத்திலிட்டுச் சுத்த சலம் விட்டு நெகிழ அரைத்து, இரவியில் வைத்து மாத்திரைத் திரட்டும் மெழுகு பதத்தில் கையில் கொஞ்சம் அரிசிமாவைத்து, அதில் மேற்படி மெழுகை வைத்து கடலைப் பிரமாண அளவில் மாத்திரை செய்துகொள்ளவும். (இப்படி கையில் அரிசி மாவைத்து மாத்திரை திரட்டாவிட்டால், மெழுகின், பிசுபிசுப்பினால் மாத்திரை உருண்டையாகத் திரளாது.) இம்மாத்திரையை நன்கு இரவியில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இதனை வேளைக்கு ஒரு மாத்திரையாகத் தினம் மூன்றுமுறை கொடுத்து வாயில் அடக்கி சுவைத்துக்கொண்டு வரும்படிச் செய்ய, தொண்டை வறட்சி, தொண்டைப்புண் முதலியவை நீங்கும்.

---

* அதிமதுரப்பாலென்பது அதனுடைய சத்தாகும். எங்ஙன மெனின் 12 பலம் அதிமதுரத்தை பஞ்சுபோலிடித்து ஒரு பழகின மண் பாண்டத்தில் போட்டு $\frac{3}{4}$ படி ஜலம் விட்டு ஒரு பகல் ஊறப்போட்டு முன் போல் பிசைந்து சலத்தை வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இப்படி 2-3 முறை சேகரம் செய்த சலத்தை ஒரு சுத்தமான பழகின மட்பாண் டத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துச் சுண்டக்காய்ச்சி மெழுகுபதம் வரும் சமயம் கீழிறக்கி இரவியில் வைத்துவர கட்டி உறைந்து காய்ந்துவிடும். இதற்கே அதிமதுரப் பாலென்று பெயர்.

† கோதுமையை ஒரு இரவு சலத்தில் ஊறப்போட்டு மறுநாள் அக் கோதுமையைத் தட்டை அம்மிக்கல்லில் வைத்து சலம் தெளித்து அரைத்தாவது, ஆட்டுகல்உரலில் இட்டு ஆட்டியாவது, பிழிந்தெடுத்த பாலை இரண்டு மூன்று முறை சீலையில் வடிக்கட்டிப் பீங்கான்தட்டில் விட்டு இரவியில் வைத்து உலர்த்திக்கொள்வதே கோதுமைப்பால் என்றுணர்க.

அதிவிடயம்.

(Aconitum Heterophyllum)

அதிவிட யஞ்சர்க்க ரார்ப்புதநோய் வெப்பு
கோதிமருவு பேதியோடு கோழை—யெதிர்வாந்தி
யென்றுரைக்கு நோய்க்கூட்ட மில்லா தகற்றிவிடுங்
குன்றை நிகர்முலையாய் கூறு.

குணம்:—(இ-ள்.) அதிவிடயத்தினல் சருக்கராற்புதவிரணம், சுரம், வேகமுள்ள அதிசாரம், ஈளை, மேல்நோக்கிய சர்த்தி முதலிய நோய்கள் விலகும்.

செய்கை:—பலகாரி, முறைவியாதிரோதி, நாசிநீர்விர்த்தினி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை நன்ருய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2 முதல் 5 குன்றி எடை வரையில் தினம் மூன்றுவேளைத் தனியாகவாவது அல்லது சுர ரோகத்தைக் கண்டிக்கக்கூடிய ஏதேனுமொரு செந்தூர மாத்திரைக ளுடனுவது அநுபானமாகச் சேர்த்துத் தேன்விட்டு மத்தித்துக் கொடுக்கச் சீதசுரம் நீங்கும். இதனை விசேஷமாக இதர சரக்குக ளுடன் கூட்டி அதிசார ரோகங்களுக்குக் கொடுப்பதுண்டு. எங்ஙன மெனில்—

அதிவிடய சூரணம்.

அதிவிடயம், வெள்ளைப்பூண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வசம்பு இவைகளைச் சமனெடையாக நிறுத்து, பொன்மேனியாக வறுத்து இடித்து சூரணஞ்செய்து வைத்துக்கொள்க. வேண்டும் போது ஒரு பழகின மட்பாண்டத்தை அடுப்பிலேற்றி நன்ருய்க் காய்ந்தபின் ஒரு பிடி சோற்றுப்பைப் போட்டு, கருக வறுத்து உப்பைக் கொட்டிவிட்டு வெறுஞ் சட்டியை மறுபடியும் அடுப்பில் வைத்து ஒரு பிடி பிரண்டைக்கொழுந்தை அரிந்துபோட்டுக் கருக வறுத்து அதனில் ஒரு படி எருமை மோர் விட்டு, கால்பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் ஷை சூரணத்தில் ஒரு விராகனெடை கூட்டிக் கொடுக்கவும். இப்படி தினம் 3 வேளை கொடுக்க வயிற்றுநோய், வயிற்றுப்பொரு மல், புளியேப்பம், பேதி, தாகம், அஜீரணம் முதலியவைகள் தீரும்.

அத்திக்கள்ளு.

(Ficus Glomerata Toddy).

அத்திமே கஞ்சூ டதிமயக்கந் தாகமும்போ
மத்திமர வேரிலுண் டாமதுவில்—நித்தியமுஞ்
சீனியே னும்பேயன் செங்கனியே னுங்கலந்தே
பானுவுத யங்குடித்துப் பார்.

குணம்:—(இ-ள்.) அத்திமரவேரி லிறக்கிய கள்ளில் சீனிச் சர்க்கரையாவது பேயன் வாழைக்கனியாவது கலந்து தினந்தோறும் சூரிய உதயகாலத்தில் உண்டுவர அஸ்திமேகம், உட்சூடு, மூர்ச்சை, விதாகம் இவைகள் நீங்கும்.

செய்கை:—வியதாபேதகாரி, பலகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தினந்தோறும் காலையில் இச்செய்யுளிற் கூறியபடி உட்கொள்ளவும். அல்லது ஆழாக்கு அத்திக்கள்ளில் ஒரு தோலா சீனி கற்கண்டைப் பொடிசெய்து போட்டுச் சாப்பிடவும். இப்படி இருபதுநாளைக்குக் குறையாமல் சாப்பிட்டுவர மேகவெட்டை, பித்தமயக்கம், அதிதாகம் இவைகள் நீங்கும்.

அத்திக்காய்.

(Ficus Glomerata Raw Fruit).

அத்திக்காய் தன்னை அருந்திறல் ஆரணங்கே!
எத்திக்கும் மேகம் இருக்குமோ—சத்திக்கும்
வாதம் அகலும் மலங்கழியும் சூலையோடு
மீதனலும் புண்ணும்போம் விள்.

குணம்:—(இ-ள்.) அத்திக்காயால் பிரமேகம், வாதநோய், சூலை, சரீர வெப்பம், விரணம் ஆகிய இவைகள் போம், மலங் கழியும்.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—அதிகமாக முற்றாத காய்களைப் புதியதாகக் கொண்டுவந்து தனியாகவாவது அல்லது துவரம் பருப்பு, பச்சைப்பயறு முதலியவற்றுடன் கூட்டியாவது பாகப்படி சமைப்பதுண்டு. இதனுல் பிரமேகம், உட்சூடு, மலக்கட்டு முதலியவைகள்

நீங்கும். இதுவுமல்லாமல் ¼ படி அத்திக்காயைச் சுத்தமாக அலம்பி ஒன்றிரண்டாய் இடித்து ஒரு பழகின மட்பாண்டத்தில்போட்டு 1 படி ஜலம்விட்டு அடுப்பிலேற்றி, 2 ஆழாக்கு ஜலம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி எடுத்த நீரில் சிறிது சர்க்கரைக் கூட்டிக் காலையில் உட்கொள்ளப் பழைய மலத்தை வெளியாக்கும், உட்சூடு தணியும், நீரைக் குறைக்கும், தாகத்தை அடக்கும், மருந்தின் சத்தை இரத்தத்திற்கு ஊட்டும்.

அத்திப்பட்டை.

(Ficus Glomerata Bark).

வீறு கடுப்பிரத்தம் வெண்சீத ரத்தமொடு
நாறுவிர ணங்களெலாம் நாடாவாங்—கூறுங்கால்
அத்திதரு மேகம்போம் ஆயிழையே! எஞ்ஞான்றும்
அத்திப்பாற் பட்டைக் கறி.

குணம்:—(இ-ள்.) அத்திப்பட்டைக்கு ஆசனக்கடுப்பு, உதிரப்போக்கு, சீதரத்தபேதி, விரணம், பிரமேகம் ஆகிய இவைகள் போம்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் புறணிநீக்கிய அத்திப் பட்டையை பஞ்சுபோல் இடித்து ஒரு பழகின காரமில்லாத குடுவையில்போட்டு, ½ படி ஜலம் விட்டு, ⅛ படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி தேகத்திற்கு ஏற்றவாறு வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் 3 வேளை கொடுத்து வருவதுண்டு. இதனால் ஆசனக்கடுப்பு, உதிரப்போக்கு, சீதரத்தபேதி, தந்திப்பிரமேகம் முதலியவைகள் நீங்கும். இந்தத் துவர்ப்புள்ள கியாழத்தைக்கொண்டு விரணங்களை அலம்பிவர விரைவில் ஆறும். இன்னும் இந்தப் பட்டையுடன் சில துவர்ப்புச் சுவையை உடைய பட்டைகளைக் கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

சதுர்முகச் சூரணம்.

அத்திப்பட்டை, நாவல்பட்டை, கருவேலம்பட்டை, நறுவிளம்பட்டை, சமனிடையாகக்கூட்டி இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடி பிரமாணம் 2 அவுன்ஸ் கொதிக்கிற ஜலத்தில் போட்டு ¼ மணி நேரம் சென்றபின் வடிகட்டிக் கொடுக்கவும். இப்படித் தினம் 3 வேளை கொடுத்துவர

பெரும்பாடு, இரத்தபேதி, சீதபேதி முதலியவைகள் குணமாகும். அல்லது ½ பலம் எடையுள்ள சூரணத்துடன், ஊறப்போட்டு ஆற விட்டு இடித்தெடுத்த கார்அரிசிமாவு வீசம்படி கூட்டிப் பிசறி நீராவியந்திரத்தில் பிட்டு அவியல்போல் அவித்து எடுத்துப் போதிய அளவு சர்க்கரை, நெய் கூட்டி கொடுப்பதுண்டு. இப்படிப் பிரதி தினம் காலையில் 3-5 நாள் கொடுக்கப் பெரும்பாடு குணமாகும்.

அத்திப்பழம்.

(Ficus Glomerata Fruit).

தினமுமலக் கட்டொழிக்குந் தேகவெப்ப நீக்கும்
வனமுறுபித் தக்கோப மாற்று—மினுமயிலுந்
துன்னு விழியையுடைச் சொன்னமே வையகத்தோர்
பன்னுவிதை யத்திப் பழம்.

குணம்:—(இ-ள்.) விதையத்திப்பழமானது நித்திய மல பந்தத்தையும், சரீர உஷ்ணத்தையும், பித்தவேகத்தையும் போக்கு மென்க.

(இதுவுமது)

இரத்தமுண் டாக்கு மிளைத்தமெய்யைத் தேற்றுஞ்
சுரத்திலாம் வெப்பைத் தொலைக்குங்—கரத்த
மலத்தைக் கடிதுதள்ளும் வன்னிகபத் தொந்தம்
பலத்ததசை யத்திப் பழம்.

(இ-ள்.) உஷ்ணசீதம் உள்ள தசையத்திப்பழம், ரத்த விருத்தியையும் தேக போஷணையையும் தரும். சுரவெப்பையும், சீரண மலத்தையும் நீக்கும்.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—நன்றாய் முதிர்ந்து தானகப் பழுத்துக் கீழே விழுந்த அத்திப்பழத்தைத் தேனில் ஊறப்போட்டாவது அல்லது சர்க்கரை கூட்டியாவது உண்ணும்படி கொடுக்க மல பந்தத்தையும், பித்தத்தையும் நீக்கும். தவிர நீர்வியாதிக்கு அப்ரேக், தங்கம், வங்கம், காந்தம் முதலிய செந்தூர வகைகளில் தனிச்செந்தூரத்தையாவது அல்லது ஒன்றோடொன்று கூட்டியாவது நெய்யில் அநுபானம் செய்துகொடுத்த பின்னர் சிறிது சலம்விட்டு வேகவைத்துப் பிழிந்தெடுத்த அத்திப்பழச்சாற்றில், ¼-½ அவுன்ஸ் அளவு கொடுப்பதுண்டு. இதனல் உட்சூடு, வெகுமூத்திரம், தாகம் முதலியவைகள் நீங்கும்.

அத்திப்பால்.

(Ficus Glomerata Milk).

காரமோ டுட்டினமாங் காதுகின்ற பித்தத்தை
நீரிழிவைச் சூலேகளை நீடிரத்தஞ்—சேருங்
கிரிச்சரத்தைப் போக்குங் கிளர்கோளி யென்னும்
மரச்சருமப் பாலதனை வாங்கு.

குணம்:—(இ-ள்.) காரமும் உஷ்ணமுமுள்ள அத்திப்பால் பித்தம், அதிநீர், சீல்பிடிப்பு, இரத்தமூத்திரக்கிரிச்சரம் இவைகளை நீக்கும். (கோளி என்றால் அத்திமரம்.)

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது துவர்ப்புக் குணமுள்ளது. ஒரு தோலா அத்திப்பாலைப் பசுவின் வெண்ணெயுடன் சர்க்கரைக் கூட்டி மத்தித்துக்கொடுக்க, நீரிழிவு, இரத்தபேதி, பெரும்பாடு, இரத்தமூத்திரம், நரம்புகளின் பிடிப்பு, பித்தம் இவைகள்போம். சீல்வாதத்திற்கு அத்திப்பாலைப் பற்றுப்போட விரைவில் குண மாகும். பூனைக்காலிவித்து, நிலப்பனங்கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, முருங்கைவித்து இவைகளைச் சமனெடையாக இடித்து சூரணம்செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு, 1-1½ விராகனெடை தினம் இருவேளை 1-1½ தேக்கரண்டி அளவு அத்திப்பாலில் கலந் துக்கொடுக்க 20 நாளில் தாது அளவுகடந்து மீறும். தேகம் பூரிக்கும்.

அத்திப்பிஞ்சு.

(Ficus Glomerata Tender-fruit).

மூலக் கிராணியறு மூல்விரத் தந்தீருஞ்
சாலக் கடுப்புந் தரிக்குமோ—மாலரவத்
துத்திப் படவல்குற் றேகாய் துவர்ப்பையுறு
மத்திச் சிறுபிஞ் சருந்து.

குணம்:—(இ-ள்.) துவர்ப்புச் சுவையுடைய அத்திப்பிஞ்சால் மூலவாயு, கிரகணி, ரத்தமூலம், வயிற்றுக்கடுப்பு முதலியவைகள் நீங்குமென்றுணர்க.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பால்நிறைந்த அத்திப்பிஞ்சுடன் துவ ரம்பருப்பாவது, பச்சைப்பயறாவது சேர்த்துக் கூட்டமுது செய்து

உண்பது வழக்கம். இது தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும். இதனை வேறுவிதமாகவும் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

அத்திப்பிஞ்சுகலவைகற்கம்.

அத்திப்பிஞ்சு, கோவைப்பிஞ்சு, மாம்பட்டை, சிறுசெருப்படை இவைகளைச் சமனிடையாகத் தட்டை அம்மிக்கல்லில் வைத்து வாழைப்பூச்சாறுவிட்டு நெகிழ அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் தினம் 3 வேளை கொடுத்து வர சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகள் நீங்கும்.

அந்தரத்தாமரை.

(Pistia Stratiotes).

அழுகிரந்தி குஷ்ட மடர்ந்த கரப்பான்
புழுவுறுமக் கூடுமுதற் போகும்—அழகாரு
மிந்திரநீ லக்கருங்க ணேந்திழையே யெப்போழ்து
மந்தரத் தாமரையா லாய்.

குணம்:—(இ-ள்.) அந்தரத்தாமரையால் அழுகிரணம், குஷ்டம், கரப்பான், மார்புக்குள் கட்டுகின்ற கிருமிக்கூடு முதலிய ரோகங்கள் போம்.

செய்கை:—சீதளகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—அந்தரத்தாமரையின் சுரசத்தைத் தினம் இருவேளை, வேளைக்கு ¾-1 அவுன்ஸ் சிறிது தேனுடன் கலக்கி 3-5 நாள் கொடுக்க மார்புக்குள் கட்டுகிற கிருமிக்கூடு போம். இன்னும் இதனால் நீர்சுருக்கு, மூலம், சீதபேதி, பொடிஇருமல் முதலியவை போம். இதை அரைத்து கரப்பான், குஷ்டரணம் இவைகளுக்கு வைத்துக்கட்ட ஆறும். இதுவுமல்லாமல் மூலரோகிகளுக்கு ஆசனம் அடித்தள்ளிப்போவதற்கும், மூலவாயுவினாலுண்டான ஆசனக்குத்தலுக்கும், இதனை அரைத்து ஆசனவாயில் வைத்துக்கட்ட குணமாகும். அல்லது வாய்குறுகலான மட்பாண்டத்தில் சலம்விட்டு அந்தரத்தாமரை இலையைப் போட்டுக்கொதிக்க வைத்துக் கீழிறக்கி அதிலிருந்துவரும் ஆவி ஆசனத்திற்கு நேராகத் தாக்கும்படி 10 நிமிஷம் பிடிக்கவும். இப்படிச் சில தினங்கள் செய்துவர மூலஉபாதை நீங்கும். இதனைக்கொண்டு தைலம் முடிப்பதுண்டு. எங்ஙனமெனில்—

ஆகாசதாமரைத்தைலம்.

ஆகாசதாமரை இலைச்சாறு படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி $\frac{1}{2}$ இவை இரண்டையும் ஒரு தைலபாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வண்டல்மெழுகுபதம் வரும்போது கஸ்தூரி மஞ்சள், பச்சைக்கிச்சிலிக்கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், சாம்பிராணி வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆக இடித்துப்போட்டுக் கீழ் இறக்கி ஆறவிட்டு வடித்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. இத் தைலத்தை வாரமொருமுறை ஸ்நானம் செய்துவர உட்சூடு, கண் ணெரிச்சல், மூல உபத்திரவம் தீரும்.

அபமார்க்கி.

(Achyranthes Aspera).

மலிகாரங் கைப்புள்ள அபமார்க்கி யின்வேரால் வசியமுண்டா
மிலைமூல வுதிரமந்தம் பேதிகபம் வியர்வுதந்தி யிறங்குமேகம்
மலையேனும் படிபுரியு முள்ளரிசி பசிமாற்றும் வன்சமூலம்
பலமாதர்க் குள்ளழுக்கை நீக்கும்வங்க செந்தூரம் பண்ணுமாதோ.

குணம்:—(இ-ள்.) கசப்பும், கார்ப்புமுள்ள நாயுருவிவேரால் முகவசீகரமாம். இதன் இலை இரத்தமூலம், அதிசாரம், கப நோய், வியர்வை, தந்திப்பிரமேகம் இவைகளை விலக்கும். இதன் விதை பசியை நீக்கும். இச்செடியின் சமூலத்தைச் சுட்டெரித் தெடுத்த சாம்பல் பிரசவித்த மாதர்களுக்கு உதிரச்சிக்கலை நீக்கும். இவைகளுமல்லாமல் வங்கத்தை செந்தூரமாக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, மூத்திரவர்த்தனகாரி, வியதா பேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அரைத்துக் கட்டி, கொப்புளம் முதலியவைகளுக்கு வைத்துக்கட்ட அவைகளிலுண்டான துர்நீரை வெளியாக்கி ஆற்றும். $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் நாயுருவி இலைச் சுரசத் தோடு சர்க்கரைக்கூட்டித் தினம் இருவேளை 3-5 நாள் கொடுக்க மூலம், பழைய இருமல், அதிசாரம், வியர்வை, தந்திமேகம் இவை கள் போம். இதன் சாறுடன் வெள்ளாட்டுக்கொழுப்பு, மரு தோன்றிக்குழித்தைலம் கலந்து கை, கால், நரம்பின் இசுவுகளுக் குத் தேய்க்க குணமாகும். நாயுருவி இலையைக் கசக்கி ஊறலெடுத் துப் படருகின்ற தேமலுக்குத் தேய்க்கக் குணமாகும். இதன் இலையைக் கியாழமிட்டு வாய் கொப்பளிக்க பல்வலி, உண்ணுக்குவலி

இவைகள்போம். இதன் இலையை அரைத்து ரோஜாப்பூ எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் கலக்கிக்காய்ச்சி வடித்துக் காதுவலிக்கு விடக் குணமாகும். தேள் கொட்டினவிடத்தில் இந்த இலையைக் கசக்கித் தேய்க்க விஷமிறங்கும். இதன் பச்சைவேரால் பல்துலக்கி வர முகவசீகரமுண்டாகும்.

குறிப்பு:—இதனில் "செந்நாயுருவி" என்கிற இனம் ஒன்று உண்டு. அதனை அதன் தலையங்கத்தின்கீழ் கண்டுணர்க.

அபினி.

(Opium).

நல்லவபி னிக்குணத்தை நாடறிய நாம்புகல்வ
தல்லகுன்மம் வாத மருஞ்செவிநோய்—பல்லின்வலி
பேதிமந்த மத்திநோய் பீநசம்போம் வன்மையுண்டாஞ்
சாதியுதி ரச்சுத்தி தான்.

குணம்:—(இ-ள்.) அபினியால் வயிற்றுநோய், வாதாதிக்கம், கர்ணசூலை, தந்தநோய், அதிசாரம், அஜீரணம், எலும்பிற் குடைச்சல், நாசிகாரோகம் இவைகள் போம். இன்னும் இதனால் சாதி லிங்கநிறமுள்ள உதிரச் சுத்தியும் பலமும் உண்டாகும் என்க.

செய்கை:–நித்திராகாரி, வேதனசாந்தினி, சுவேதகாரி, அங்காகர்ஷணநாசினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனில் வேளைக்கு $\frac{1}{4}$-2 உளுந்து எடை தேகதிடத்திற் கேற்றவாறு நெய்யில் மத்தித்துக் கொடுக்கப் பேதி, இருமல், மூர்ச்சை, தலைவலி, பீநசம், இசிவு முதலிய ரோகங்கள் போம். இது முதலில் சிறிது உற்சாகத்தையும், அடுத்தபடியாக உறக்கத்தையும் (மயக்கத்தையும்) உண்டுபண்ணும். இந்தச் சரக்கு முதலில் மூளையிலும், முள்ளந்தண்டு கொடிகளிலும் வியாபித்து வீரியத்தைக் காட்டும். பின்னால் சகல உறுப்புகளிலும் சேர்ந்து உபாதையைச் சாந்தப்படுத்தும். இது தேகத்திலுண்டான சுரப்புநீர்களை வறட்டும், வியர்வையையுண்டாக்கும். அளவு அதிகமானல் ஆபத்தை விளைவிக்கும். வெகு ஜாக்கிரதையாக உபயோகப்படுத்தவேண்டும். குழந்தைகளுக்குக் கொடுக்கலாகாது. மேற்கூறப்பட்ட அளவானது சில தேகிகளின் சுபாவத்திற்குப் பொருந்தியும் பொருந்தாமலு மிருக்கும். ஆகையால் பண்டிதர்கள் இத்தகைய ஔடதங்களைக் கொடுக்கும்போது கூடியவரையிலும் அளவைக்

குறைத்தே கொடுத்தல்வேண்டும். ஒருக்கால் குணமேற்படாமல், வேறுவிதமான தோஷங்களுமில்லை யென உணரின், சிறிது அளவை அதிகப்படுத்திக்கொள்ளலாம். இதனால் குற்றமில்லை. அபினியுடன் சமனெடை குங்குமப்பூ சேர்த்து கோழிமுட்டையின் மஞ்சள் கருவிட்டரைத்துக் கண்களுக்குத்தீட்ட கண் சிகப்பு மாறும். முலைப்பாலிலிழைத்துச் சீலையிலுருட்டித் திரியாகத்திரட்டி ஆசனத் துவாரத்தில் வைக்க உதிரபேதி, உதிரக்கடுப்பு நீங்கும். அபினியை நல்லெண்ணெயிலாவது அல்லது, வாதுமை நெய்யிலாவது இழைத் துக் காய்ச்சி இரண்டு துளி காதில்விட, கர்ணசூலை நீங்கும். அபினியை மெழுகுதைலத்தில் இழைத்துக் கலந்து தேகத்திற்பூச சொறி, சிரங்கு, தினவு நீங்கும். அபினியுடன் ஜாதிக்காய் சேர்த் தரைத்துக்கொடுக்க தாது வன்மைபெறும். அஜீர்ணபேதி கண்ட வர்களுக்கு உடனே அபினியைக் கொடுக்கக்கூடாது. அவர் களுக்கு விரைவில் ஜீரணசக்தியை உண்டாக்கக்கூடிய ஏதே னும் ஒரு மருந்தை முதலில் கொடுத்துப் பின்னால் மலம் மஞ்சள் நிறமாகவும், அஜீரணப்பட்டுள்ள வஸ்துக்கள் மலத்திலில்லை யென்றும் உணர்ந்த பின்னர் அபினி சம்பந்தமான மருந்தைக் கொடுத்தல் நன்று. இதற்குக் காரணமென்னவென்றால், அஜீர்ணப் பட்டிருக்கும்போது மலத்தைக் கட்டக்கொடுப்பது பின்னால் பல தீங்குகளை உண்டாக்கும். அல்லது ஜீரணசக்தியை உண்டாக்கக் கூடிய இதரச் சரக்குகளுடன் அபினி சம்பந்தப்பட்டிருப்பின் குற்றமில்லை. மதுமேகத்திற்கு இதை அயச்செந்தூரத்துடன் கூட் டிக் கொடுக்க விரைவில் குணப்படும். அபினியுடன் வெள்ளெருக் கஞ் செடியின் இலையின் பின்புறத்தில் வெண்மையாகப் பற்றியிருக் கும் சுண்ணையைச் சமபாகமாகச் சேர்த்தரைத்துப் பயறளவு மாத் திரைசெய்து தேனில் மத்தித்துக் கொடுக்க சுவாசகாசம் குண மாகும். எளிதில் கோழையைக் கரைத்துச் சுவாசத்தைச் சரிவரச் செய்யும். சாதாரணமாக ரோகங்களுக் கேற்றவாறு அபினியுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் செய்யும் சில மருந்துகள்—

கட்டுவாதி மாத்திரை.

லிங்கம் பலம் $\frac{1}{4}$, அபினி பலம் $\frac{1}{4}$, கோரைக்கிழங்கு பலம் $\frac{1}{4}$, ஜாதிக்காய் பலம் $\frac{1}{4}$, வெட்பாலைஅரிசி பலம் $\frac{1}{4}$, ஆலத்திக்கற்பூரம் பலம் $\frac{1}{4}$ இவைகளை முதலில் அபினியுடன் சிறிது நெய்விட்டுக் கலந்து ஒரு வெற்றிலையின்மேல் தடவி விளக்கெண்ணெய் தீபத்தில் சிறிது வெதுப்பி மற்றச் சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்திலிட்டு

நான்கு சாமம் கஞ்சாவின் கியாழத்தால் அரைத்து மெழுகுபதத்தில் துவரைப் பிரமாணம் மாத்திரைகளாகச்செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப்படுத்துக. இதனை இரண்டுமணி நேரத்திற் கொருமாத்திரை வீதம் தேனில் கொடுத்துவர வாந்திபேதி, அஜீரணபேதி இவைகள் குணமாகும். பேதி நின்றபின் மாத்திரையைக் கொடுக்கவேண்டிய தவசியமில்லை.

கிராணிகேசரி மாத்திரை.

வாலைரசம், கெந்தகம், அப்பிரகச் செந்தூரம் அல்லது பற்பம், அயச்செந்தூரம், அல்லது அன்னபேதிச் செந்தூரம், லிங்கம், அதிவிடயம், சுத்திசெய்த நாபி, சுக்கு, மிளகு, காட்டாத்திப்பூ, கடுக்காய்த்தோல், விளாம்பழத்திளுேடு, கோரைக்கிழங்கு, ஓமம், சித்திரமூலவேர்ப்பட்டை, மாதுளம்பழத்திளுேடு, பொரித்த வெங்காரம், வெட்பாலைஅரிசி, பழச்சாற்றில் ஊறப்போட்டுலர்த்திய ஊமத்தைவித்து, கழற்சிப்பருப்பு, இலவம்பிசின், வில்வவேர், திப்பிலி, ஜாதிக்காய் இந்தச் சரக்குகளை வகைக்கு ஒரு விராகனெடை வீதம் சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு அவைகளில் முதல் ஐந்து சரக்குகளை நீக்கி, மற்றவைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. அப்பால் சுத்தமாக அலம்பிய கல்வத்தில் முதல்முதல் வாலைரசத்தைப் போட்டுக் கெந்தகம்கூட்டி நன்றாய் அரைத்து, ரசம் உருமாறி கருத்தசமயம் அப்ரகம், அயம், லிங்கம் முதலியவைகளை ஒன்றன்பின் ஒன்றாகக்கூட்டி அரைத்து எல்லாம் நன்றாய் மடிந்தபின், முன் சித்தப்படுத்திய இதரச் சரக்குகளின் சூரணத்தைப்போட்டு அதனுடன் 8 விராகனெடை அபினியைக்கூட்டி ஊமத்தை இலைச் சாற்றால் இரண்டு மூன்று சாமம் அரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் குப்பியில் பத்திரப் படுத்துக. இம் மாத்திரையைத் தேனிலேனும், நெய்யிலேனும் உரைத்துத் தினம் இருவேளை ஐந்து நாள் கொடுக்க, பல பண்டிதர்களால் கைவிடப்பட்ட எத்தகைய கிராணிகளும் குணப்படும். இப்பிரயோகத்தில் சிறிது குணம் தவறுவதாக உணரின் கால தாமதம் செய்யாமல் கிராணி அல்லது பேதி முதலியவைகளைக் குணமாக்கக்கூடிய ஏதேனுமொரு நாகபற்பத்துடன் அநுபானம் செய்து கொடுக்கவும்.

கவனிப்பு:—அபினி சம்பந்தமான மருந்துகளைச் செய்யும் போது மாசிக்காயை ஒத்தத் துவர்ப்பான சரக்குகளையும், சுண்ணும் புச்சலம், பால்துத்தம், மயில்துத்தம், அன்னபேதி, சவ்வீரம் முதலியவற்றைக் கூட்டினால் அபினியினுடைய வீறு சிறிது குறைந்து விடும். ஒருக்கால் அபினி விஷம் அதிகமாகப் போய்விட்டால், உடனே மாசிக்காய் அல்லது நெல்லிவற்றல் முதலிய துவர்ப் புள்ள சரக்கைக் கியாழமிட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அபினி வீறு தணியும்வரையில் கொடுக்க நற்குணத்தை யுண்டாக்கும்.

அம்மான்பச்சரிசி.

(Euphorbia Hirta).

காந்தல் விரணமலக் கட்டுமே கந்தடிப்பு
சேர்ந்த தினவிவைகள் தேசம்விட்—டூர்ந்தோன்று
யோடுமம்மான் பச்சரிசிக் குண்மை யினத்துடனே
கூடுமம்மா னேத்தகண்ணுய் கூறு.

குணம்:—(இ-ள்.) அம்மான் பச்சரிசிக்கு எரிபுண், மலபந்தம், பிரமேகக்கசிவு, சரீரத்தடிப்பு, நமைச்சல் ஆகிய இவைகள் போகு மென்க.

செய்கை:—சங்கோசனகாரி அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமல காரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த மூலிகையைச் சுமார் நெல்லிக் காய்பிரமாணம் நன்ருய் அரைத்து ஆவின்பாலில் கலந்து தினம் ஒரு வேளை மூன்றுநாள் கொடுக்க, இரத்தப்பிரமியம், மலபந்தம், நீர்க் கடுப்பு, தேகநமைச்சல் இவைகள் தீரும். இதன் பாலை நகச்சுற் றுக்கு அடிக்க குணமாகும். இந்த இனத்தில் சிவப்பு அம்மான்பச் சரிசி என்கிறதொன்றுண்டு. அதனை அம்மூலிகையின் தலையங்கத் தின்கீழ்க் கண்டுணர்க.

அரசமரம்.

(Ficus Religiosa).

அரசம்வேர் மேல்விரண மாற்றுமவ் வித்து
வெருவவருஞ் சுக்கிலநோய் வீட்டுங்—குரல்வறளுந்
தாகமொழிக் குங்கொழுந்து தாதுதரும் வெப்பகற்றும்
வேகமுத்தோ ஷம்போக்கும் மெய்.

குணம்:—(இ-ள்.) அரசம்வேர்ப்பட்டை சரும விரணத்தையும், விதை சுக்கிலக் கெடுதியையும், கொழுந்து தொண்டையை வறட்டுகின்ற தாகத்தையும், மகரந்தம் தேக உஷ்ணத்தையும், திரிதோஷத்தையும் நீக்கும்.

செய்கை:—(வேர்) சங்கோசனகாரி, (வித்து) காமவிர்த்தினி, (கொழுந்து) சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் துளிர் இலையை அரைத்து விரணங்களுக்குப்போட ஆறும். ஒரு தோலா நிறையுள்ள துளிர் இலையைப் பாலில்போட்டுக் காய்ச்சி வடிகட்டிப் போதிய அளவு சர்க்கரைபோட்டுக் கலக்கி காப்பிபோல் கொடுத்துவர தேகம் குளிர்ச்சி பெறும். இதன் இலைச்சாற்றைக் கால் வெடிப்புகளுக்குத் தழும்பப் பூசிவர வெடிப்புரணங்கள் ஆறும். தவிர இதன் பட்டைச் சூரணத்தைக் கியாழமிட்டு உள்ளுக்குக்கொடுக்க வெள்ளை, விரணம் முதலியவைகள் குணமாகும். இதைத் தனியாக உபயோகப் படுத்துவதைவிட இத்துடன்நாவல்பட்டை, அத்திப்பட்டை, உதியம் பட்டை, ஆலம்பட்டை வகைக்குப்பலம் $\frac{1}{8}$ ஆக இடித்து ஒருமட் குடுவையில்போட்டு $\frac{1}{2}$ படி ஜலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி பிசைந்து வடிகட்டி இரண்டு பாகமாகப் பங்கிட்டுக் காலை, மாலை கொடுத்துவர அதிக நன்மையைத் தரும். அரசமரத்தின் பட்டைச் சூரணத்தை விரணங்களின்பேரில் தூவிவர விரைவில் ஆறும். இதன் விதை ஜீரணசக்தியையும், தாதுவிருத்தியையும் தரும். மலத்தை இளகலாகப் போகச்செய்யும். இதன் உலர்ந்த பழத்தை இடித்துச் சூரணம்செய்து வேளைக்கு $\frac{1}{4}$ தோலா நிரை வெந்நீரில் போட்டு தினம் இருவேளை 10 நாள் கொடுக்க சுவாசகாசம் போம்.

அரத்தை.

(Alpinia Galanga).

**தொண்டையிற்கட் டுங்கபத்தைத் தூரத் துரத்திவிடும்
பண்டைச்சீ தத்தைப் பறக்கடிக்குங்—கெண்டைவிழி
மின்னே கரப்பனேவே ருக்கும் பசிகொடுக்குஞ்
சொன்னே மரத்தைச் சுகம்.**

(இதுவுமது)

மார்பை யடர்பிணிசு வாசகா சம்மூலஞ்
சோபைதட்டச் சூர்வாத சோணிதநோய்—தீபச்
சுரத்தை யடுபடர்பற் றாருறுக ணேரி
னரத்தை யெடுதுகள தாம்.

குணம்:—(இ-ள்.) அரத்தை நெஞ்சுக்கோழை, சீதளம், கரப்பான், இருத்ரோகம், ஈளை, இருமல், மூலம், வீக்கம், தந்த நோய், வாதசோணிதம், தீச்சுரத்தால் பிறந்த கபம், தந்தமூலப் பிணி இவைகளை நீக்குவதுடன் பசி தீபனத்தை உண்டாக்கும்.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் சிற்றரத்தை, பேரரத்தை என இருவகைப்படும். அவற்றின் குணபாகங்களை அச்சரக்குக்களின் தலையங்கங்களின் கீழ் கண்டுணர்க.

அரிதகிக்காய்.

*(Arithagickai).

பச்சை யரிதகிக்காய் பண்ணும் வகைகேளா
யிச்சை யுறத்துவைத்துப் பிட்டமுத்தி—வைச்சேடுத்துத்
தின்ன வரோசியறுந் தீபனமா முன்மலம்போ
மன்னநடை மாதே யறி.

குணம்:—(இ-ள்.) பச்சைக் கடுக்காயைக் கொட்டை நீக்கி யிடித்து, அதற்கு ஐந்திலொரு பங்கு உப்பிட்டு 15 நாள் சென்ற பின் பிசைந்து அதை அன்னத்திற் சேர்த்தாவது தனித்தாவது புசிக்கின் அரோசகந் தீரும், பசியுண்டாம், மலங்கழியும்.

செய்கை:—மலகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இச்செய்யுளில் நன்கு விளக்கப்பட் டிருப்பதால் அதனைக் குறித்து மீண்டும் கூறுவது அவசியமில்லை.

அரிசி.

(Oryza Sativa).

நெல் சாதாரணமாக இந்தியா, பர்மா, சயாம் முதலிய பிர தேசங்களில் விசேஷமாகப் பயிராகின்றன. இதனைக் குத்தி உமி

* Green and unripen Chebulic myrobalam.

போக்கி எடுத்த அரிசியைப் பச்சரிசி என்றும், சிறிது வேகவைத்து உலர்த்தி குத்தி உமி போக்கி எடுத்ததை புழுங்கலரிசி என்றும் கூறுவர். இந்நூலில் பச்சரிசி, பச்சரிசி அன்னம், புழுங்கலரிசி, புழுங்கலரிசி அன்னம், கஞ்சி முதலியவை தனித்தனியாக அதனதன் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் பயிராகும் நெற்களிலிருந்து எடுக்கும்படியான அரிசியானது ஒரே விதமாக இராது. நிறத்திலும், உருவத்திலும், கனத்திலும், குணத்திலும் பேதப்படும். இக்காரணத்தைக்கொண்டே பல பெயர்களிட்டிருக்கின்றனர். இத்தகைய அரிசிகளை பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு அந்தந்த நகரவாசிகள் அன்னமாகச்சமைத்தும், மாவாக்கித்தோசை, அப்பம், இட்டலி, மோதகம் முதலிய தின்பண்டங்களாகச் செய்தும் உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கம். அத்தகைய அரிசிகளின் பெயர்களையும் குணங்களையும் அடியிற் காண்க.

அன்னமழகி அரிசி.

(Annamazhagi Arisi).

அன்ன மழகியரி யாரோக்கி யங்கொடுக்குந்
தின்ன வெகுருசியாஞ் செப்பக்கே—ளிந்நிலத்து
நோயனைத்துந் தூளாய் நொருங்கத் தகர்த்துவிடுந்
தீயனலைப் போக்குந் தெளி.

குணம்:—(இ-ள்.) மிகு மதுரமுள்ள அன்னமழகி அரிசி சகல சுரங்களையும் பித்த வெப்பத்தையும் போக்கித் தேகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும்.

இலுப்பைப்பூச்சம்பா அரிசி.

(Iluppaippoosambha Arisi).

பித்தம் மிகப்பெருக்கும் பேருலகில் யாவர்க்கு
முற்ற தலைவலிநோ யுண்டாக்குஞ்—சத்தியமாய்த்
தாகமெடுப் பிக்கும் தழலிலுப்பைப் பூச்சம்பா
வாகமதி னேய்வளர்க்கு மாய்.

(இ-ள்.) இலுப்பைப்பூச்சம்பா அரிசி பித்தாதிக்கத்தினால் விளைகின்ற சிற்சில ரோகம், சிரஸ்தாபம், உபசர்க்கதாகம், உஷ்ணம் இவைகளைச் செய்யும்.

ஈர்க்குச்சம்பா அரிசி.

(Eerkkusambha Arisi).

ஈர்க்குச்சம் பாவென் றியம்பு மரிசியது
நாக்குக் கதியுரிசி நல்குங்காண்—பார்க்குமிடத்
தெல்லார்க்குங் காத லியற்றுமற்ப பித்தமுமாம்
வில்லாரும் பூசைகட்காம் விள்.

(இ-ள்.) *தேவாராதனைக்கான ஈர்க்குச்சம்பா அரிசி, நாவிற்கு ருசியையும், பார்க்கில் இச்சையையும் தரும். இதில் கொஞ்சம் பித்தமுண்டு.*

கருங்குறவை அரிசி.

(Karungkuravai Arisi).

குட்டமுடன் மேகரணம் கூறுஞ் சிலவிஷங்கள்
விட்டகலு முண்மையது வேற்கண்ணாய்—மட்டக்
கருங்குறவை சுத்தவன்னங் காதலித்தே யுண்ண
வருங்குணமே நன்று மதி.

(இ-ள்.) *கருங்குறவை அரிசி அன்னம் விரணகுஷ்டத்தையும் சிற்சில விஷத்தையும் நீக்கும், போகசக்தியைத்தரும் என்க.*

கல்லுண்டைச்சம்பா அரிசி.

(Kallundaisambha Arisi).

கல்லுண்டைச் சம்பாவைக் கண்டருந்தி நின்றவர்முன்
மல்லுண்டை பேரெதிர்க்க வாய்க்குமோ—வில்லுண்டை
போலுரையா நல்ல புசபலமா மின்சுவையாம்
பாலனையா மென்மொழியே பார்.

(இ-ள்.) *பாலனைய மிருதுவாகிய பெண்ணே! கல்லுண்டை சம்பா அரிசியை உண்பவர்க்கு மல்யுத்தக்காரரும் எதிர்க்கக்கூடாத புயபலமும் மிருவார்த்தையும் உண்டாம் என்க.*

காடைச்சம்பா அரிசி.

(Kadaisambha Arisi).

காடைச்சம் பாவரிசி கண்டுதரி சித்தவர்க்கு
நீடுற்ற மேகவன னிற்குமோ—காடைப்
பறவைபோ னேயும் பறக்கும் பலத்தி
னுறவையெவர் சொல்வா ருரை.

(இ-ள்.) காடைச்சம்பா அரிசிக்குப் பிரமேக சுரமும், சில அற்ப நோய்களும் நீங்கும். சுக்கிலதாதுவிருத்தியும், பலமும் உண்டாகும் என்க.

கார் அரிசி.

(Kar Arisi).

காரரிசி மந்தங் கனப்புடலிற் றூலிப்பும்
பாரறிய வாயுவையும் பண்ணுங்கா—ணேரே
கரப்பானென் பார்பொருந்திற் காயமது மெத்த
வுரப்பாகு மென்றே யுரை.

(இ-ள்.) மந்த குணமுள்ள பருத்த காரரிசி சரீர புஷ்டியையும், தனி வாத உபரியையும், பலத்தையும் தரும். இது கரப்பான் பண்டமென்பர்.

காளான்சம்பா அரிசி.

(Kalansambha Arisi).

காளான்சம் பாவரிசி கல்லையொத்த மாபலத்தைக்
கேளாம லேகொடுக்குங் கேளின்னம்—நீளு
மானிலத்தை போக்கிவிடு மாரோக்கி யத்தை
நானிலத்திற் செய்துவிடு நாடு.

(இ-ள்.) காளான்சம்பா அரிசி சரீரத்திற்கு மலைபோன்ற உறுதியையும், சவுக்கியத்தையும் தரும். சிற்சில வாத ரோகங்களையும் நீக்கும் என்க.

கிச்சிலிச்சம்பா அரிசி.

(Kichilisambha Arisi).

நாட்டிற் பயிராகும் நற்கிச்சி லிச்சம்பா
வாட்டமுற வேசமைத்து வாயினிக்க—வீட்டினிலே
உண்ணப் பலமுண்டாம் ஒண்டொடியே! மெய்பெருக்கும்
வண்ணமிகு மேனி வழுத்து.

(இ-ள்.) கிச்சிலிச்சம்பா அரிசியைச் சமைத்துண்ணப் பலம், தேகக்கொழுமை, தேஜசு முதலியவைகளுண்டாகும் என்க.

குண்டுச்சம்பா அரிசி.

(Gundusambha Arisi).

குண்டுச்சம் பாவரிசி கொண்டுண்ணும் பேர்களுக்குப்
பண்டையில்லா மந்தநோய் பாரிக்கு—மண்டுபடாத்
தாகமெல் லாமொழியுந் தையலே வன்கரப்பான்
றேகமெல் லாம்பரவுஞ் செப்பு.

(இ-ள்.) *குண்டுச்சம்பா அரிசிக்கு அக்கினிமந்தமும், பலமிகுந்த கரப்பான் ரோகமும் உண்டாம். தாகரோகம் தீரும் என்க.*

குறுஞ்சம்பா அரிசி.

(Kurunsambha Arisi).

குறுஞ்சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும்
வெருங்கரப்பா னுண்டாக்கு மெய்யி—நொறுங்கச்செய்
வாதமருள் வாயுவினை மாற்றும்போ கங்கொடுக்குஞ்
சீதவன சத்திருவே செப்பு.

(இ-ள்.) *குறுஞ்சம்பா அரிசி, பித்தம், கரப்பான், சுக்கிலதாது இவைகளை விருத்தி செய்யும், சரீரத்தில் குத்துகின்ற வாதநோயை நீக்கும் என்க.*

குன்றிமணிச்சம்பா அரிசி.

(Kunrimanisambha Arisi).

குன்றி மணிச்சம்பா கொண்டா லனிலமறும்
வென்றிதருஞ் சக்தி மிகுக்குங்காண்—துன்றியதோ
யெல்லாம் பறக்குமுறை இந்திரிய புஷ்டியுண்டா
நல்லா ரறிய நவில்.

(இ-ள்.) *குண்டுமணிச்சம்பா அரிசியை யுண்ணில் அற்பவாத ரோக முதலிய சிற்சில நோய்கள் நீங்கும். சரீர பலமும், சுக்கில தாதுவும் விருத்தியாம்.*

கைவரைச்சம்பா அரிசி.

(Kaivaraisambha Arisi).

கைவரைச்சம் பாவரிசி கண்டா லவரவர்த
மெய்வரைபோ லென்று மிகுபலமா—மைய
மடையாதேன் பார்க எடர்சுக் கிலமு
முடையா ததிசுகமா முன்.

(இ-ள்.) கைவரைச்சம்பா அரிசியால் உடற்கு மலைபோன்ற வன்மையும், சுக்கில ஸ்தம்பனமும், சுகமும் உண்டாம். இதில் சிறிது பித்தமதிகரிக்கும் என்பர்.

கோடைச்சம்பா அரிசி.

(Kodaisambha Arisi).

கோடைச்சம் பாவரிசி கொண்டாற் றிரிதோஷ
வாடைக் கதிக வலியுமுண்டோ—நீடு
முறுப்பினுள்ள நோயெல்லா மோதாம லேகுங்
கருப்பிலுயர் வார்குடிலே காண்.

(இ-ள்.) கோடைச்சம்பா அரிசியை யுண்ணில் முத்தோஷத்தால் பிறந்த வாதவலியும், சரீரத்திலுள்ள சிற்சில நோய்களும் விலகும் என்க.

கோரைச்சம்பா அரிசி.

(Koraisambha Arisi).

கோரைச்சம் பாநற் குளிர்ச்சியென்பார் பித்தத்தைப்
பேரா வழலைப் பிரித்தோட்டுங்—தீராத
மேக மொடுதினவை வீட்டுஞ் சுகங்கொடுக்கு
மேக முறைகுழலாய்! விள்.

(இ-ள்.) கோரைச்சம்பா அரிசி, பித்தம், உட்சூடு, பிரமேகம், நமைச்சல் இவைகளை நீக்கும். சவுக்கியம் தரும். குளிர்ச்சி என்பர்.

சீதாபோகம் அரிசி.

(Seethabogum Arisi).

வடக்கிற் பயிராகும் வன்சீதா போகம்
இடக்குறு மந்தத்தை யென்றும்—அடக்கிவிடும்
மெத்தபல முண்டாக்கும் மேனிதரும் விந்தூறும்
நித்தமுண் பார்க்கே நினை.

(இ-ள்.) சீதாபோகம் என்னும் அரிசியைச் சமைத்து உண்பவர்க்கு, தேகபலம், தேஜசு, தாதுபலம் முதலியவைகள் உண்டாகும். இன்னும் அஜீரணத்தை ஒழிக்கும் என்க.

சீரகச்சம்பா அரிசி.

(Seeragasambha Arisi).

சீரகச்சம் பாவரிசி தின்னச் சுவையாகும்
பேரகத்து வாதமெல்லாம் பேருங்காண்—வாருலகி
லுண்டவுட னேபசியு முண்டாகும் பொய்யலவே
வண்டருறை பூங்குழலே வாழ்த்து.

(இ-ள்.) மதுரமுள்ள சீரகச்சம்பா அரிசியை உண்டவுடன் மீளவும் உண்பதற்கான தீபனமுண்டாகும். அற்ப வாதரோகங்கள் போகும் என்க.

செஞ்சம்பா அரிசி.

(Sensambha Arisi).

செஞ்சம்பாத் தண்டுலத்தாற் றீராச் சிறுசிரங்கும்
விஞ்சுபுண்ணும் வன்சொறியு மெய்க்கணியாந்—துஞ்சா
ததிகபசி யாரு மணங்கரசே யிந்தப்
பதியதனி னீயுண்டு பார்.

(இ-ள்.) செஞ்சம்பா அரிசியால் கிளைக்கின்ற அற்ப கிரந்தியும், அதிவிரணமும், யானைச்சொறியும், மிகுபசியும் உண்டாகும் என்க.

புழுகுச்சம்பா அரிசி.

(Puzhugusambha Arisi).

புழுகுச்சம் பாவரிசி பூதலத்தி லுண்பார்க்
கழகுமொளி வுஞ்சேர்வ தன்றி—யழலாம்
பசிதாகந் தீரும் பலமுமிக வுண்டா
முசிவே துடற்சுகமா முன்.

(இ-ள்.) புழுகுச்சம்பா அரிசியை உண்பவர்களுக்கு வனப்பும், காந்தியும், அதிதீபாக்கினியும், பலமும் உண்டாம். தாகம் நீங்கும்.

மணக்கத்தை அரிசி.
(Manakkathai Arisi).

மணக்கத்தை நல்லரிசி மன்பதைக்குத் தோன்றும்
இணக்கமிலா குஷ்டவிஷ மேகும்—துணுக்கெனவே
நித்தமுண் பார்க்குலகில் நீங்கிடுமாம் புண்புரைகள்
சித்தரனு போகமிதாஞ் செப்பு.

(இ-ள்.) மணக்கத்தை அரிசியினால் மக்களுக்கு உண்டாகின்ற குஷ்டம், புண், புரையோடும் ரணங்கள் முதலியவை போம் என்க.

மணிச்சம்பா அரிசி.
(Manisambha Arisi).

நல்ல மணிச்சம்பா நாடுகின்ற நீரிழிவைக்
கொல்லு மிகுந்தசுகங் கொண்டளிக்கு—மெல்லப்
பசியளிக்கு மூத்தோரைப் பாலர்களை நாளு
முசியாம லேவளர்க்கு முன்.

(இ-ள்.) நல்ல மணிச்சம்பா அரிசி, அதிமூத்திரத்தை விலக்கும், அதிசுகத்தால் உடலையும் விருத்தர் பாலர்களையும் போஷிக்கும் என்க.

மல்லிகைச்சம்பா அரிசி.
(Mallikaisambha Arisi).

மல்லிகைச்சம் பாவரிசி வாய்க்குரிசி யாயிருக்கு
நல்லது மெய்க்கு நலஞ்செய்யுஞ்—சொல்லாக்
கரப்பானை மேகத்தைக் கண்ணழலை நீக்கு
முரப்பாம் பலங்கொடுக்கு முன்.

(இ-ள்.) நாவிற்கு உரிசியாயிருக்கின்ற மல்லிகைச்சம்பா அரிசி சரீரத்திற்குச் சவுக்கியத்தையும், உறுதியையும் தரும். கரப்பான் பிரமேகம், நேத்திரவெப்பம் ஆகிய இவைகளைப்போக்கும் என்க.

மிளகுச்சம்பா அரிசி.
(Milagusambha Arisi).

மிளகுச்சம் பாவரிசி மென்சுகத்தை செய்யு
மளவில்பல நோயை யகற்றுங்—களகளெனத்
தீபனத்தைத் தூண்டிவிடுந் தீரா வலிதொலைக்குஞ்
சோபனத்தைச் செய்நகையாய்! சொல்.

(இ-ள்.) மிளகுச்சம்பா அரிசி, சவுக்கியத்தைக் கொடுத்துத் தீபாக்கினியை வளர்க்கும். மகாவாத முதலிய பலவிதரோகங்களைப் போக்கும் என்க.

மைச்சம்பா அரிசி.

(Mysambha Arisi).

மைச்சம்பா தண்டுலத்தால் வாயருசி போயொழியும்
வெச்சென்ற வாதபித்த மெய்யைவிடு—நச்சுந்
தனிவாயு வுஞ்சுரக்குஞ் சர்த்தியும்போ மின்பக்
கனிமொழியே! நன்றாகக் காண்.

(இ-ள்.) மைச்சம்பா அரிசியினால் அரோசகம், வாதபித்த தொந்தம், தனிவாதகோபம், வாந்திநோய் ஆகிய இவைகள் போம் என்க.

வளைதடிச்சம்பா அரிசி.

(Valaithadisambha Arisi).

வளைதடிச்சம் பாவிற்கு வாதபித்த முண்டா
முளையு மடிபொருமி யுப்புங்—கோளகோளனைத்
தானே கரப்பானுந் தாங்கொணு மந்தமுமாந்
தேனே இதனைத் தெளி.

(இ-ள்.) வளைதடிச்சம்பா அரிசிக்கு வாதபித்த தொந்தம், வயிறு அளைதலுடன் உப்பிசம், கரப்பான், அலசரோகம் இவைகள் உண்டாம் என்க.

வாலான் அரிசி.

(Walan Arisi).

வாலா னரிசிதின்றல் வாயருசி மந்தமறும்
மேலான தேகத்தில் மேவுமொளி—நூலிடையாய்!
தேகம் பருத்திடுமாந் தெம்புதர விந்திருகும்
பாகமுடன் நீயருந்திப் பார்.

(இ-ள்.) வாலான் அரிசியை சமைத்துண்ணில் அரோசிகம், மந்தம் முதலியவைகள் நீங்கும். தேகத்தின் அழகையும், கொழுமையையும் உண்டாக்கும் என்க.

அரிவாள்மூக்குப் பச்சிலை.

(Sida Rhomboidea).

**வெட்டுகா யத்தை விரைவி லுலர்த்திவிடுந்
துட்டக் கடுவோட்டுந் தோன்றிமிகக்—கெட்ட
பிரிவாற் றலையைப் பிளக்கும்வலி நீக்கு
மரிவாள்மூக் குப்பச்சி லை.**

குணம்:—(இ-ள்.) அரிவாள்மூக்குப் பச்சிலையானது ஆயுதங் களாலுண்டாகிற காயத்தைச் சீக்கிரத்தில் ஆற்றுவதுந்தவிர மகா விஷத்தையும், உதிரக் கெடுதியால் பிறந்த சிரஸ்தாபரோகத்தை யும் விலக்கும் என்க.

செய்கை:—ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—அரிவாள்மூக்குப் பச்சிலையைக் காரமில்லாத தட்டை அம்மிக்கல்லில் வைத்து வெண்ணெய்போல் அரைத்து வெட்டுப்பட்ட காயங்களுக்குத் தடவிச் சீலைகொண்டு அழுத்திக்கட்ட இரத்தம் சொறிதல் நீங்கி விரைவில் ஆறும். இந்த இலையுடன் சிறிது மிளகு, பூண்டு கூட்டி அரைத்து வேளைக்கு சிறு சுண்டைக்காய் பிரமாணம் அந்திசந்தி 3 நாள் கொடுத்து பாற்பத்தியம் வைக்க கடுமையான விஷங்கள் இறங்குவதுடன், தலைவலியும் நீங்கும்.

அருநெல்லிக்காய்.

(Avverrhoea Acida Pod).

**அருநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்பித்தம் போக்கு
மருவுதுவர்ப் பாற்றுரிசை மாற்றும்—விரியுலகிற்
ருகத் துயர்நீக்குஞ் சாரிரும லைத்தொலைக்கு
மாகக் கோதிப்பகற்று மாங்கு.**

குணம்:—(இ-ள்.) துவர்ப்புச் சுவையுடைய அருநெல்லிக் காய், சீதபித்தம், தாகம், காசம், உட்சூடு ஆகிய இவைகளைப் போக்கும்.

செய்கை:—சீதளகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—20-30 அருநெல்லிக்காயைப் பிளந்து அதனுள் இருக்கப்பட்ட விதையைப் போக்கி அத்துடன் தேங் காய்க் கொப்பரைத்துருவல், கொத்துமல்லிக்கீரை, பச்சைமிளகாய்,

இஞ்சி, உப்பு திட்டமாகச் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து பாகப்படி நெய்விட்டு தாளித்து அன்னத்துடன் உபயோகப்படுத்த பித்தம், தாகம், உட்சூடு, ஒக்காளம் இவைகள் போம். இதுவுமல்லாமல் இதனை சர்பத்தாகக் காய்ச்சி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

அருநெல்லிக்காய் சர்பத்.

அருநெல்லிக்காயை விதை நீக்கி இடித்துப் பிழிந்தெடுத்த சாறு படி$\frac{1}{4}$, வெள்ளைச்சர்க்கரை வீசை $\frac{3}{4}$ இவைகளைச் சேர்த்துத் தேன் பதத்தில் காய்ச்சி வடிகட்டிப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது ஒரு தோலா சர்பத்தை சலத்தில் கலக்கிக்கொடுக்க முற்கூறப்பட்ட ரோகங்கள் நீங்கும்.

அருநெல்லிமரத்தின் வேர்.

(Avverrhoea Acida Root).

சுத்த சுரமருசி தோலாப் பெருவாந்தி
பித்தசந்நி பாதமிவை பேருங்காண்—மெத்தமண
நாறுமலர்க் கூந்தலாய்! நாவுக் கினிமையெனக்
கூறுமரு நெல்லின்வேர்க் கு.

குணம்:—(இ-ள்.) அருநெல்லிமர வேரால் தனிச்சுரம், அரோசிகம், திரிதோஷவாந்தி, பித்த உபரியால் வந்த சந்நி முதலியவைகள் போகும்.

செய்கை:—சுரஹரகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—$\frac{1}{2}$ அல்லது 1 தோலா நிறையுள்ள அருநெல்லி மரத்தின் வேர்ப்பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு அதை அடுப்பிலேற்றி $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் இரண்டு, மூன்று வேளை கொடுக்கச் சுரம், தாகம், அரோசிகம், வாந்தி முதலியவைகள் தீரும்.

அலரிப்பூ.

(Nerium Odorum Flower).

வெப்பருசி குஷ்டம் விதாகஞ் சொறிசிரங்கு
செப்பிரத்த புண்பித்தஞ் சென்னியெரி—விப்படியிற்
றங்குமோ கும்பத் தனத்தணங்கே வாசஞ்சேர்
கொங்கலரிப் பூப்பெயரைக் கூறு.

குணம்:—(இ-ள்.) வாசனையுள்ள கொத்து அலரிப்பூவால் சுரம், அரோசகம், குஷ்டம், விதாகம், புடை, கிரந்தி, ரத்தக் கட்டி, பித்தநோய், தலையெரிவு இவைகள்போம்.

செய்கை:—உக்கிரரோககசமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் வெள்ளைப்பூ, சுத்த சிகப்புப்பூ, வெளூர் சிகப்புப்பூ, அடுக்குப்பூ எனப் பலவகையுண்டு. விசேஷமாகச் சுபகாரியங்களிலும், அசுபகாரியங்களிலும் அலங்கா ரங்களுக்கு உபயோகப்படுகின்றது. ஆனால் அவிழ்த பாகங்களில் உபயோகப்படுத்துவதென்றால் ஆழ்ந்த யோசனையுடனும் ஜாக்கிரதை யுடனும் செய்தல் வேண்டும். இதை அநுபவத்தில் நஞ்சு பதார்த் தங்களில் ஒன்றாகக் காணப்பட்டிருக்கிறது. இதனைக்குறித்து அறிய வேண்டின் புலிப்பாணி மஹாமுனிவர் அருளிச்செய்த வைத்தி யம் 500-ல் கண்டுணர்க.

அலிசி விதை.

(Linum Usitatissimum Seeds).

விள்ளும் அலிசி விதையாற் கடும்வெள்ளை
தள்ளுநீர் வெப்பந் தணிந்திடுமே—யுள்ளுறுப்பிற்
கொண்டு வருஞ்சுரமுங் கூறுமழற் கட்டிகள்போம்
கண்டு நிகர்மொழியாய்க் காண்.

குணம்:—(இ-ள்.) அலிசி விதையால் வெள்ளை, நீர்ச்சுறுக்கு, க்ஷயசுரம், இருமல், கட்டி, மேகஅழலை முதலியவைகள் நீங்கும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, கபஹரகாரி, மூத்திரவர்த் தனகாரி.

உபயோகிக்கும் முறை:—அலிசி விதை கழஞ்சி 2, அதிமதுரம் கழஞ்சி 1, இவையிரண்டையும் ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு மூன்றிலொருபாகம் தினம் 3 வேளை கொடுக்க, இருமல், கல் லடைப்பு, நீர் எரிச்சல், தந்திவெள்ளை, இரத்தவெள்ளை, கிராணி முதலியவைகள்போம். அல்லது கொக்குமந்தாரை மேல்பட்டை பலம் ¼, அலிசிவிதை பலம் ¼, கீழ்க்காய்நெல்லி சமூலம் பலம் ½ இவைகளை ஒரு மட்கலயத்தில்போட்டு ½ படி சலம் விட்டு அடுப் பில் வைத்து ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இதனை மூன்று

பாகமாகப் பங்கிட்டுத் தினம் ஒன்றுக்கு 3 வேளை கொடுக்க முற் கூறப்பட்ட பிணிகள் தீரும். இதனை இடித்து மாவுபோல் செய்து போதிய அளவு சலம் விட்டுக் கலக்கி அடுப்பில் வைத்துக் களிப் பதமாகக் கிளரி கட்டிகளுக்கு வைத்துக்கட்ட விரைவில் பழுத்து உடையும். இன்னும் வயிற்றுவலி, மார்புவலி இப்படி நோயுள்ள இடங்களில் வைத்துக்கட்ட குணப்படுத்தும்.

குறிப்பு:—இதனைச் சிறு ஆளிவித்தென்று கூறுவர்.

அல்லிப்பூ.

(Nymphae Alba Flower).

மேகமறும் புண்ணறும் விட்டேகு நீரிழிவு
தாகந் தணியுந் தழலகலும்—வாகான
மெல்லியலே யாயுண்மறை வேதியரே லாமுரைக்கு
மல்லி மலரா லறி.

குணம்:—(இ-ள்.) மருந்தின் குணத்தை நன்கு கண்டறிந்த வேதியர்கள், இந்த அல்லிப்பூவால் ரத்தப்பிரமேகம், ஆண்குறித் துவாரவிரணம், வெகுமூத்திரம், தாகம், உட்சூடு முதலியவைகள் நீங்குமெனக் கூறி இருக்கின்றனர்.

செய்கை:—சீதளகாரி, ரக்தஸ்தம்பனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—$7\frac{1}{2}$ பலம் உலர்ந்த வெள்ளை அல்லித் தாமரைப்பூவை ஒரு மட்பாண்டத்தில் போட்டு $4\frac{1}{2}$ படி ஜலம் விட்டு இரண்டு மணி நேரம் ஊறவைத்துப் பின்னர், அதன் வாய்க்கு வாலைசெருகி மண்சீலை செய்து அடுப்பில் வைத்து பொங்காமல் இருக்கும்படிச் சிறு தீயாக எரித்து, வாலையின் வழியாகச் சொட்டு கின்ற சலத்தைப் பத்திரப்படுத்துக. இங்ஙனம் சேகரிக்கும் தீ நீரானது இரண்டுபடி அளவிற்குக் கிடைத்தவுடன் நிறுத்திவிடவும். இதற்குமேல் கிடைக்கக்கூடிய தீநீரில் சத்திராது. இந்த தீநீரை வேளைக்கு 1-2 அவுன்ஸ் தினம் இருவேளை கொடுத்துவர இரத்தப் பிரமேகம், ஆண்குறி நீர்த்தாரையிலேற்பட்ட விரணம், வெகுமூத் திரம், தாகம், உட்சூடு முதலியவைகள் போம். இன்னும் சில பண்டிதர்கள் $3\frac{1}{2}$ பலம் அல்லித்தாமரைப்பூவும், $3\frac{1}{2}$ பலம் ஆவாரம் பூவும் போட்டு முன்மாதிரி 4 படி சலம் விட்டு 2 படி அள விற்குத் தீநீர் இறக்கி உபயோகப்படுத்துவதுண்டு. இதுவும் விசேஷ குணத்தைக் கொடுக்கின்றது. இத்தகைய தீநீர் படி ஒன்றுக்கு சுத்த

வெண்மை நிறமுள்ள சர்க்கரை வீசை 1 கூட்டி சர்பத்தாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் 2-3 அவுன்ஸ் சுத்த ஜலத்திலாவது பசுவின் பாலிலாவது கலக்கித் தினம் 2 வேளை கொடுப்பதுண்டு. இது ருசிகரமாகவும் நோயாளிக்கு இதமாகவும் இருக்கும். நீடித்து சாப்பிட்டால் தேகத்திலுள்ள வெப்பம் குறைந்து ஆண் தன்மைக் குன்றும். இதன் கிழங்கின் உபயோகத்தை நெய்தற்கிழங்கின் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

அவரைப் பிஞ்சு.

(Dolichos Lablab).

கங்குலுண விற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர்—தங்களுக்கும்
கண்முதிரைப் பில்லநோய்க் காரருக்குங் காமுறையா
வெண் முதிரைப் பிஞ்சாம் விதி.

குணம்:—(இ-ள்.) விதை முதிராத வெள்ளை அவரைப்பிஞ்சு, இராப் போஜனத்திற்கும், மருந்துண்பவர்களுக்கும் வாதாதிமுத் தோஷம், விரணம், சுரம், விழிக்குள் முதிர்ந்த சிலேத்துமபில்லம் முதலிய ரோகிகட்கும் ஆகும்.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—அவரைப்பிஞ்சை சுற்றுநரம்புகள் நீக்கி சிறு துண்டுகளாக்கி சாம்பாரிலிட்டாவது அல்லது துவரம் பருப்புடன் கூட்டிப் பொரியலாகச் செய்தாவது உபயோகிப்பதுண்டு. இது அவிழ்தம் சாப்பிடுகிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆரோக்கியத்தைத்தரும். விதை முதிர்ந்த அவரைக்காயானது பல வித தோஷங்களை உண்டாக்குமாதலால்,

"கோட்டையவ ரைக்காயாற் கோர வரோசகநோய்
கிட்டாதேன் பார்மருந்தின் கீர்த்திகெடுந்—துட்டமந்தம்
பையவுண்டாம் பேதியுண்டாம் பாரிப் பனிலமுண்டாம்
ஐயமுண்டாஞ் சூலையுமுண் டாம்."

எனக் கூறுவாராயினர்.

அவரை இலை.

(Dolichos Lablab Leaves).

அவரையிலைக் குத்தலோ யாழ்ந்தகி ராணி
யிவரும் விஷிசிமுத லேகுந்—தவருமற்
கொண்டவர்க்குத் தீபனமாங் சோதாய் விரணமறுங்
கண்டவர்க்குத் தோற்றுமிது காண்.

குணம்:—(இ-ள்.) அவரை இலைக்குச் சிரஸ்தாபநோய், கிரகணி, ஊழி, சிரங்கு ஆகிய இவைகள் நீங்கும். இன்னும் இதனால் பசி தீபன முண்டாகும்.

செய்கை :— உள்ளுக்கு—சங்கோசனகாரி, வெளிக்கு—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—அவரை இலைச்சாற்றை 1 அல்லது 2 தேக்கரண்டி அளவு எருமைத் தயிரோடு கலந்து காலையில் கொடுக்க கிராணி, மூலக்கடுப்பு, ஆசன எரிச்சல் முதலியவைகள் நீங்கும். இந்த இலையைக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் சிறிது மஞ்சள் கூட்டிச் சிரங்குகளுக்குத் தடவிவர ஆறும்.

அவுரி இலை.

(Indigofera Tinctoria Leaves).

உரியவவு ரித்தழைதா னேது பதினெண்
ணரியநஞ்சைத் தின்றவர்க்கு மாகுந்—தெரிவரிய
வாதவெப்பு காமாலை மைந்தர்க் குறுமாந்தஞ்
சீத மகற்றுந் தெரி.

(இதுவுமது)

சந்நி பதின்மூன்றுஞ் சந்தோடித்த வாதமுத
லுன்னு விஷக்கடியு மோடுங்காண்—மின்னுங்
கவுரிநிற முண்டாகுங் காசினியு ளேநல்
லவுரி யிலையா லறி.

குணம்:—(இ-ள்.) அவுரி இலை தாவரக் கந்தமூல விஷங்கள் 18-ம், வாதசுரம், காமிலம், மாந்தம், சீதளம், சந்நிபாதங்கள், கீல்வாதம், சர்ப்பவிஷம் இவைகளை நீக்கும். இன்னும் தேகத்திற்குப் பொன்மேனியைத் தரும்.

செய்கை:—சோபாநாசினி, விஷநாசகாரி, வியதாபேதகாரி, மலகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை அரைத்து கொட்டைப்பாக்களவு $\frac{1}{8}$ படி வெள்ளாட்டுப் பாலில் கலக்கி வடிகட்டி தினம் ஒரு வேளையாக மூன்று நாள் கொடுக்க மஞ்சட்காமாலை தீரும். இதன் இலையை அரைத்து சிரங்குகளுக்குப் பூசி உலர்ந்த பின் மாலையில் ஸ்நானம் செய்விக்க விரைவில் ஆறும்.

இவைகளுமல்லாமல் அவுரி இலைச்சாற்றிலிருந்து சித்தப்படுத்திய நீலத்தைப் பொடிசெய்து சிரங்குகளின்பேரில் தூவிவர ஆறும். வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றி எடை ஜலத்தில் கலக்கித் தினம் 2 வேளை கொடுத்துவர ரத்தவாந்தி, காக்கைவலி, ஈரல்களின் வீக்கம், நரம்புகளைப்பற்றிய ரோகம் முதலியவைகள் நீங்கும். இதனைச் சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் குழைத்துக் குழந்தைகளின் தொந்தியைச் சுற்றித் தடவ மலத்தை வெளியாக்கும். இப்படித் தனிச்சரக்கை உபயோகப்படுத்துவதுமன்றி இதரச் சரக்குகளுடனும் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

அவுரிகற்பம்.

அவுரிஇலை, கையாந்தகரை, குப்பைமேனி, கொட்டைக்கரந்தை, வல்லாரை, பொற்றிலைக்கையாந்தகரை, செருப்படை இவைகளை நிழலில் உலர்த்தி சமனிடையாக நிறுத்து இடித்துச் சூரணம் செய்து வேளைக்குத் திரிகடி பிரமாணம் தேனில் தினம் இரு வேளை ஒரு மண்டலம் கொடுத்துவர ஸ்திரீகளுக்கு உண்டான உதிரக்கட்டு, வயிற்றிலுண்டாகிற கிருமிக்கூட்டம், கீல்வாதம், சர்ப்பவிஷம் இவைகள் நீங்கும். தேகம் பொன்மேனியாகும். இம்முறையைக் கற்பத்தில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. இதனைக் கொடுக்கும்போது ஆகாரத்தில் புளிதள்ளி இச்சா பத்தியமாக இருப்பதுடன் புகையிலை, போகம் இவைகளைக் கட்டாயம் நீக்க வேண்டும்.

அவுரி வேர்.

(Indigofera Tinctoria Root).

எல்லா விஷங்களுக்கு மேற்ற முறிப்பாகும்
பொல்லாச் சுரமூர்ச்சை பொங்குவெட்டை—நில்லாப்
பவுரிதருங் குன்மமுதற் பன்னோ யொழியு
மவுரிதரு வேருக் கறி.

குணம்:—(இ-ள்.) அவுரிவேரினால் சர்வ விஷம், சுரம், மூர்ச்சை, வெள்ளை, வயிற்றுநோய் முதலிய பல ரோகங்கள் போம்.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—தனி அவுரிவேரை நன்றாய் அரைத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் அரை ஆழாக்குப் பசுவின் பாலில் கலக்கி வடிகட்டி தினம் 1 வேளை 8 நாள் கொடுக்க விஷசிலந்தி, எலிவிஷம் போம். அத்தருணம் உப்பில்லாப்பத்தியம் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அவுரிவேர், சுக்கு, வகைக்குப்பலம் $\frac{1}{4}$ ஆக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி மருந்துகளின் வீறை முறிக்க கொடுப்பதுண்டு. அல்லது ஒரு பண்டிதர் சிகிச்சையிலிருந்து மற்றோர் பண்டிதரின் சிகிச்சைக்கு ரோகி மாறும்போது முன் சாப்பிட்டுள்ள மருந்தின் வீறைத் தணிக்கும்பொருட்டுக் கொடுப்பதுண்டு. இப்பிரயோகம் வேதாரண்யம், கோடிக்கரை முதலிய பிராந்தியங்களில் அநுசரிக்கப் படுகின்றன.

நீலிவேர்ப்பட்டையுடன் சிறிது மிளகு சேர்த்துச் சலம் விட்டரைத்துச் சிறு கொட்டைப்பாக்களவு ஆவின்பாலிலாவது, வெள்ளாட்டுப்பாலிலாவது கலக்கித் தினம் ஒருவேளை கொடுத்துவர, விஷ செந்துக்களின் கடிவிஷமும், நஞ்சுபொருள் விஷமும், கரப்பான் வகைகளும் தீரும்.

நீலிவேர், மிளகு, சிற்றரத்தை வகைக்கு விராகனெடை 1, ஆக இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அடுப்பில் வைத்து $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இருவேளை கொடுக்க விரேசனத்திற்காகக் கொண்ட சிற்றாமணக்கெண்ணெய்ச் சிக்கலாலுண்டான சலதோஷம், சுரம், மார்புசளி இவைகள் நீங்கும்.

நீலிவேர் கழஞ்சி 1, கடுக்காய் கழஞ்சி 1, நன்னாரிவேர் கழஞ்சி 2, திப்பிலி கழஞ்சி 2, பேராமுட்டிவேர் கழஞ்சி 2 இவைகளுடன் சிறிது நல்லவெல்லம் சேர்த்துப் புளித்த காடி விட்டரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி மாவுபோல் பொடியாக்கி வைத்துக் கொண்டு, இதை சர்க்கரை, வறுத்திடித்த அரிசிமாவு, தேன், தின்பண்டம் முதலியவைகளில் தேகத்தின் வன்மை மென்மைக் கேற்றவாறு 4-5 பனவெடை கொடுக்க வாந்தியுண்டாகும். இடு

மருந்து வெளியாகும். இம்மருந்தினால் ஏற்பட்டுள்ள பலவிதப் பிணிகளும் போம்.

நீலிவேர்ப்பட்டை, வெள்ளுள்ளி, வசம்பு, சுருள்பட்டை, வலம்புரிக்காய் வகைக்குப் பலம் ஒன்றாக நிறுத்தெடுத்துக் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் நன்றாக இடித்து வஸ்திரகாயம் செய்து மீண்டும், அதனைக் கல்வத்தில் போட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய்விட்டு மெழுகுபோலரைக்கவும். இச்சரக்குகள் வெண்ணெய்போல் மிருதுவான பின்னர் இத்துடன் 10 பலம் நல்லெண்ணெய்விட்டுக் கலக்கி 7-9 நாள் ரவியில் வைத்துப் பத்திரப்படுத்துக. இதனைக் குழந்தைகளுக்கு மண்டையில் காணும் கரப்பான், சொறி சிரங்கு இவைகளுக்குத் தடவிவர விரைவில் ஆறும்.

அழிஞ்சில்மரம்.

(Alangium Decapetalum).

அழிஞ்சிலது மாருதத்தை பையத்தைத் தாழ்த்து
மொழிஞ்சபித் தத்தை யுயர்த்தும்—விழுஞ்சீழாங்
குட்டமெனு நோயகற்றுங் கூறுமருந் தெய்திடில
திட்ட மெனவறிந்து தேர்.

குணம்:—(இ-ள்.) அழிஞ்சில் மரமானது வாதகோபம், கபதோஷம், சீழ்வடியும் பெருநோய் இவைகளை நீக்கும். ஆனால் பித்தத்தை உபரி செய்யும்.

(இதுவுமது)

பொல்லா விஷக்கடியும் போராடும் பேதிவகை
செல்லாக் கிரந்திரணம் சேர்நோய்க—ளெல்லாமும்
அங்கோலங் காணில் அரந்தைசெய் நோய்களெல்லாம்
பொங்கோல மிட்டோடிப் போம்.

(இ-ள்.) அங்கோலம் என்று சொல்லப்பட்ட அழிஞ்சில் மரத்தினால் ஜீவ ஜந்துக்களின் பற்கடியால் நேர்ந்த எல்லா விஷக்கடி தோஷங்களும், பேதி, கிரந்தி, விரணம் ஆகிய இவைகளும் போம்.

செய்கை:— வியதாபேதகாரி, வமனகாரி, கிருமிநாசினி, மலகாரி, பித்தகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:— இதன் வேர்ப்பட்டையை இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு சுமார் ¾ விராகனெடை வெந்

நீரில் கொடுக்க வாந்தியாகும். 5 குன்றி நிறை கொடுத்தால் சிறிது வாய் குமட்டும். சுரத்தைப் பரிகரிக்கும். இதனை நீடித்துக் கொடுக்க வேண்டின் வேளைக்கு 1-1½ குன்றி நிறைபோதுமானதென அநுபவத்தில் காணப்பட்டிருக்கிறது. இதனால் பற்கடிகளினால் ஏற்பட்ட விஷங்கள், குட்டம், கிரந்தி, விரணம், பேதி இவைகள் நீங்கும். விஷக்கடிகளுக்கு மாத்திரம் ஒருமுறை வாந்தியாகும்படி கொடுத்தல் சாலச் சிறந்தது. இன்னும் அழிஞ்சில்வேர், நொச்சிவேர், விழுதிவேர் இவைகளைச் சமனெடையாகக் கொண்டுவந்து சிறு துண்டாக நறுக்கி 5-6 நாள் நிழலில் உலர்த்தி அடியில் துவாரமிட்ட பெரிய மட்கலத்தில் போட்டு வாய்மூடி ஏழு சீலை செய்து முறைப்படி குழித்தைல மிறக்கவும். இத்தைலத்தை வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொண்டு புறைகொண்ட ரணத்தில் செலுத்திக் கட்டுக் கட்டிக்கொண்டுவர விரைவில் ஆறும்.

இதன் இலைச்சாற்றையாவது அல்லது இலையை அரைத்தெடுத்த கல்கத்தையாவது கொடுக்க கிராணி, குன்மம், கபரோகம் இவைகளைப் போக்கும். தேகத்தில் ஜீவாக்னியை உண்டாக்கும். இதன் வேர்ப்பட்டைச் சூரணத்திற்கு அதிக கசப்பும், வெகுட்டலும், காரமும் உண்டு. இது இரத்த அதிசாரம், கிருமிரோகம், குட்டம், விரணம், தோல்சம்பந்த ரோகம், சுரம், விடாத சுரம், வயிற்று உப்பிசம், வயிற்றுநோய், சர்ப்பவிஷம், வெறிநாய்க்கடி, எலிகடி இவற்றை போக்கும்.

இதனை நெடுநாள் சாப்பிட விகாரம், வியர்வை, வாந்தி, பேதி முதலியவற்றை உண்டாக்கும். சரீரத்தின் தத்துவங்களைக் கெடுத்துவிடும். ஆதலால் ரோகிகள் தங்களுடைய தேகவன்மை மென்மைக்கேற்றவாறு குறைந்த அளவில் ஆரம்பித்து குணம் சரிவர உணராவில்லையாயின் சிறிது அளவை அதிகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். எங்ஙனமாயினும் ஒரு முறை 5-7 நாள் கொடுத்துச் சில தினம் விட்டு அவசியமாயின் மீண்டும் முன்போல் கொடுப்பது நன்று. குஷ்டரோகத்திற்கு ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம் மூன்றையும் இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு அதற்குச் சமனெடை அழிஞ்சில்வேர்ப்பட்டை சூரணம் கூட்டி வேளைக்கு 6-10 கோதுமை எடை தினம் இருவேளை கொடுக்க குணமுண்டாகும். இந்த இனத்தில் கருப்பு, வெள்ளை, சிகப்பு முதலிய பேதங்களுண்டு. அவை

களில் சிகப்புப் புஷ்பம் உடைய மரத்தின் வேர்ப்பட்டைச் சூரணம் குஷ்டத்திற்கு அதிகச் சிறந்தது. இதன் வேர்ப்பட்டையின் குழித்தைலத்தை வாதரோகத்திற்கும், மேகவாயு பிடிப்புகளுக்கும் மர்த்தனம் செய்துவர விரைவில் குணப்படும்.

அழிஞ்சில் வித்து.

(Alangium Decapetalum Seeds).

மின்னை நிகருமிடை மெல்லியளே யித்தரையில்
சன்னழிஞ்சில் வித்ததனற் சாறுபல—மென்னவெனில்
ஆள்மறையு மஞ்சனமு மாகும் சனவசியம்
நாளறிந்துச் செய்திடவே நன்று.

குணம்:—(இ-ள்.) நாளறிந்து காப்பிட்டு எடுத்த அழிஞ்சில் வித்தினல் அஞ்சன மறைப்புமையும், உலக வசியமும் உண்டாகும்.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் சாதார்ண அழிஞ்சலுடன் கருப்பு அழிஞ்சல் என்கிற ஓர் இனமுண்டு. இதன் காய், இலை, நரம்பு இவைகளில் கருப்பு நிற மோடியிருக்கும். இதுவே விசேஷமானது. இதன் உபயோகத்தைப்பற்றி அநுபவசித்தியுள்ள பெரியாரிடமிருந்து கைமுறையாக நேரில் கற்றுணரவேண்டியது. இதைப்பற்றித் தெரிந்துகொள்ள அவா இருப்பின் புலிப்பாணி முதலான மஹரிஷிகளால் கூறப்பட்டுள்ள ஜால காண்டங்களில் கண்டறியவும். இதன் வித்துத்தைலத்தைச் சர்மரோகத்திற்குப் பூச ஆறும். உள்ளுக்குக் கொடுக்கக் கபவாதத்தையும் குட்டத்தையும் நீக்கும்.

அழுகண்ணி.

(Azhukanni).

சொல்லு மழுகண்ணி சுத்தமுற வேயுண்ண
நல்லபசி யுண்டாகும் நானிலத்தில்—வல்லபமாய்
தாது வலுத்திறுகுந் தன்தேகங் கட்டுபெறும்
கோதுளாயா மாமயிலேக் கூறு.

குணம்:—(இ-ள்.) அழுகண்ணியை உட்கொள்ள பசி தீபனம் அதிகரிக்கும், தாதுவலுக்கும், தேகதிடத்தை உண்டாக்கும், வாத பித்த கபப்பிணிகளை நீக்கும்.

செய்கை:—காமவிர்த்தினி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த அழுகண்ணிச் செடியானது கடலை இலையைப்போல் சிறியதாகவும் சுணையுடன் வழுவழுப்பு உள்ளதாகவும் இருக்கும். செடியின் நாற்புறமும் பூமியை நோக்கி கவிழ்ந்திருப்பதால் இலைகளின் பின்புறம் ஆகாயத்தை நோக்கி இருக்கும். அதிலிருந்து சலம் கசிவதாகத் தோற்றும். இதன் சுவையானது சிறிது உப்புக்கறிக்கும். ஆனால் வெகுட்டலிராது. இந்த இனத்தில் இரண்டுவகை யுண்டு. ஒன்று சாண் உயரம் குட்டையாகவும், மற்றொன்று முழ உயரமுமாக இருக்கும். இதில் குட்டையான செடியே சிறந்தது. இதனை ஆதிவாரம் சந்திரன் கடகராசியிலிருக்கும்போது காப்புக்கட்டித் தன் நிழல் அதன்பேரில் படாமல் பிடுங்கி 5 நாள் நிழலில் உலர்த்திச் சூரணம் செய்து வேளைக்கு 1 விராகனெடை வீதம் சமனெடை கற்கண்டுச் சூரணம் கூட்டிக்கொடுக்க தேகம் வலுக்கும். பசி அதிகப்படும். தாது அதிகரிக்கும். இன்னும் பல பிணிகள் போம்.

அறுகங்கட்டை.

(Cynodon Dactylon Stem).

ஆரு வழவெல்லா மாறுமுத் தோஷமது
வீரு திருக்குநல்ல மேனிதரும்—மாருக்
கடியமர லங்கலணி காரளக மின்னே
கோடியறுகம் புற்கிழங்கைக் கூறு.

குணம்:—(இ-ள்.) அறுகின் கிழங்கால் தணியாத பற்பல வெப்பமும், திரிதோஷ ரோகங்களும் நீங்கும். சரீர வனப்புண்டாகும்.

செய்கை:—சீதளகாரி, வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—அறுகு மூலத்தை நன்றாய் அரைத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் பாலில் கலக்கி வடிகட்டிக் கொடுக்கச் சகல விஷமும் தீரும். தேக பலமுண்டாகும். நரம்புக் கூடுகள் வலுக்கும், மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும். அல்லது அறுகுமூலம், மிளகு, சீரகம், அதிமதுரம், பூமாதுளம்பூ வகைக்கு *கழஞ்சி 2 வீதம் தட்டி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அடுப்பில் வைத்து $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி

* கழஞ்சு.

வடிகட்டி அதில் ஆவின் வெண்ணெய் போட்டுக் கொடுக்க மேற்கூறப்பட்ட பிணிகள் அகலும். அல்லது அறுகு சமூலம், நெருஞ்சில்வேர், முருங்கை ஈர்க்கு வகைக்கு ஒரு பிடி அளவு எடுத்து அவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு வாயகண்ட மட்சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துக் கருக வறுக்கவும். அப்போது சீரகம், மிளகு, கசகசா வகைக்கு விராகனெடை 2 வீதம் போட்டு வெடிப்பு சப்தம் அடங்கும்போது 1 படி ஜலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதனை இரண்டுவேளையாக ஆவின் வெண்ணெய் போட்டுக் கொடுக்கவும். இப்படி அந்தி சந்தி 2, 3 வேளை கொடுக்க எத்தகைய ரசகெந்திபாஷாண மருந்துகளின் வீறையும் தணித்துவிடும். வயிற்றுவலி, மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு இவைகள் எல்லாம் விரைவில் குணப்படும். இவைகளுமன்றி இதனைக்கொண்டு தைலங்கள் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

அறுகம்வேர்த் தைலம்.

சிறு துண்டுகளாக நறுக்கப்பட்ட ஒரு வீசை அறுகம் வேரை ஒரு மட்பாண்டத்தில் போட்டு 8 படி சுத்த சலம் விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. பின்னால் முன் காய்ச்சிய பாண்டத்தைச் சுத்தம்செய்து அதனில் முன் சித்தப்படுத்திய கியாழத்தைவிட்டு அதனுடன் ஒரு படி நல்லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து எரிக்குந்தறுவாயில் கோரைக்கிழங்கு, பூமிசர்க்கரைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, வகைக்குப் பலம் 1 ஆக அம்மியிலிட்டுப் பசுவின்பால்விட் டரைத்துக் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இத் தைலத்தைச் சிரசிற்குத் தேய்த்து வாரமொருமுறை ஸ்நானம் செய்துவர மூலச்சூடு, கபாலச்சூடு, மேககாங்கை, பித்தம், வாதம், அரிகிரந்தி, சூலை, வயிற்றெரிவு, நெஞ்சுநோய், தேகவறட்சி, நீர்க்கடுப்பு நீங்கும். தேகம் குளிரும்.

அறுகம்புல்.

(Cynodon Dactylon).

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டீளை
சிறுக வறுக்குமின்றுஞ் செப்பி—லறிவுதருங்
கண்ணோ யொடுதலைநோய், கண்புகையி ரத்தபித்த
முண்ணோ யொழிக்கு முறை.

குணம்:—(இ-ள்.) அறுகம்புல் திரிதோஷம், கோழை கண்ணோய், சிரஸ்தாபம், தூம்பிரமநோய், ரத்தபித்தம், மருந்துசூடு, இவைகளைப்போக்கும். இன்னும் அறிவுதரும்.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—அறுகம் புல்லிற்கு உள்ள குணம் ஏறத்தாழ அதன் மூலத்திற்குப் பொருத்தமாய் இருப்பதால் சில சந்தர்ப்பம் சமூலமாகவும் சேர்த்துக்கொள்ளலாம். இதனால் குற்றமில்லை. ஆனால் இலையைவிட வேருக்குக் குணமதிகமென ஆன்றோர் கூறியிருக்கின்றாராயினும், சில அநுபவ முறைகளிருக்கின்றன: அதாவது, அறுகம்புல்லை அரைத்து இரத்தம் வடியும் காயங்களுக்கு வைத்துக்கட்ட உடனே ரத்தம் நிற்கும். ரணமும் ஆறும். மூக்கில் ரத்தம் சொறிவதற்கு இதன் இலைச் சாற்றை 4-5 துளிவிட நிற்கும். இன்னும் அறுகம் வேர்க்கட்டை பலம் 1, நன்னாரிவேர் பலம் 1, ஆவாரம்வேர்ப்பட்டை பலம் 1, குமரிவேர் பலம் 1 இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு $\frac{3}{4}$ படி சுத்த சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்க. அப்பால் முன் காய்ச்சிய மட்பாண்டத்தைச் சுத்தப்படுத்தி அதில் முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தை விட்டு அடுப்பில் வைத்து $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சிப் புட்டியில் வைத்துக்கொண்டு வேளைக்கு 2-3 தேக்கரண்டியளவு நன்றாய்ப் புட்டியைக் குலுக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு அதனுடன் வெந்நீர் 2-3 அவுன்ஸ் கூட்டிக் கலக்கிக் கொடுக்கவும். இப்படித் தினம் 3-4 மணிநேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவர மதுமேகத்தில் உண்டான அதி தீவிரமான தாகம் அடங்கும். மேக வெப்பம் நீங்கும். நித்திரை உண்டாகும்.

அறுகீரை.

(Amarantus Tristis.)

காய்ச்சல் குளிர்சந்நி காணுங் கபநோயும்
வாய்ச்ச கறியாய் வழங்குங்காண்—வீச்சாய்க்
கறுவுமோ வாயுவினங் காமமிக வுண்டா
மறுகீரை யைத்தின் றறி.

குணம்:—(இ-ள்.) பல பிணிகளுக்கும் நற்கறியான அறுகீரையினால் சுரம், நடுக்கம், சன்னிபாதம், கபரோகம், வாதநோய் இவைகள் போம். தாதுவிர்த்தி உண்டாகும்.

செய்கை:—காமவிர்த்தினி, கபஹரகாரி இலகுமலகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையை நன்றாய் அலம்பி பாகப்படி சமைத்துண்ண இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள குணங்கள் ஏற்படும். இது சாதாரணமாக உஷ்ண தேகிகட்கு ஆகாது. இதனைப் பத்திய பதார்த்தங்களில் ஒன்றாய் கூறப்பட்டிருப்பினும் வாத, கப தேகிகட்கே அவிழ்தங்கள் சாப்பிடுங் காலத்தில் சேர்த்துக் கொள்ளலாம். இதன் விதையைக் கொண்டு தைலம் செய்வது வழக்கம். எங்ஙனமெனில்—

ஒரு முற்றின தேங்காயைக் கொண்டுவந்து கண் திறந்து நீரைப்போக்கி அதனுள் கொள்ளும்வரையில் அறுகீரை விதையை அடைத்து வாய்க்கு ஆப்பிட்டு, மெழுகு தடவி சதுப்பு நிலத்தில் ஒரு மண்டலம் புதைத்து வைத்து எடுத்து உடைத்து ஓட்டை நீக்கி நன்றாய் அரைத்து ஒரு வீசை நல்லெண்ணெயில் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தை வாரத்திற்கு ஒரு முறை சிரசிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவரத் தலைவலி நீங்கும், தலை மயிர் கருக்கும்.

அன்னாசிப்பழம்.

(Ananas Sativus Fruit).

மேகவெட்டை வாந்திபித்த மீறுவா மேனியிடுந்
தாகமுமட் டாகுந் தலைவலிபோம்—பாகமுறு
பூந்தாழை யின்பழத்தைப் பூரிப் புடன்புசிக்க
லாந்தாழ்வு மில்லை யறி.

குணம்:—(இ-ள்.) பூந்தாழம்பழத்தால் பிரமேகவெள்ளை, வமனம், பித்தநோய், தாகம், சிரஸ்தாபரோகம் இவைகள் போம். அழகுண்டாகும்.

செய்கை:—(பழம்) மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, சீதளகாரி. (இலை) கிருமிநாசினி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இப்பழமானது வருஷத்திற்கு ஒரு முறை அதற்கு உரித்தான காலத்திலேயே மிகுதியாகக் கிடைக்கும். அதனைச் சில காலம் வரையில் கெடாமலிருக்க என்ன பக்குவம் செய்தாலும், அதற்குண்டான குணம்கெடும். இதன் இலையினின்று

எடுத்த ரசத்துடன் சர்க்கரை கலந்து கொடுக்க, விக்கல்ரோகம் நிவர்த்தியாகும். இப்பழத்தை மேல்தோல் சீவி சிறு துண்டுகளாக நறுக்கி இடித்துச் சாறு பிழிந்து அதற்குச் சமனெடை சர்க்கரை கூட்டிச் சர்பத்தாகக் காய்ச்சி வைத்துக்கொள்ளவும். வேண்டும் போது வேளைக்கு ஒரு தோலா வீதம் தினம் இருவேளை கொடுத்து வர பிரமேகம், வெள்ளை, வாந்தி, அரோசிகம் முதலியவைகள் நீங்கும். தேகம் அழகு பெறும். இதனை மழை குளிர் காலங்களில் சாப்பிடுவது சிலாக்கியமன்று.

அன்னாசிப்பூ.

(Illicicum Verum).

அன்னாசிப் பூவை யருந்தக் கறியிலிட்டு
என்னாகுந் மன்பதைக்கிங் கேந்திழையே—இன்னுசெய்
வாதமறும் பித்தமறும் மாருப் பிடிப்பகலு
தீதறவே தீபனமாந் தேர்.

குணம்:—(இ-ள்.) அன்னாசிப்பூவைக் கறிகளிலே கூட்டிச் சமைத்துண்ண வாதரோகங்களையும், மேகவாயு பிடிப்புகளையும் குணப்படுத்தும். பசியை அதிகரிக்கச் செய்யும்.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாத ஹரகாரி.

உபயோகிக்கும் முறை:-இந்தப் பூவிற்கு ஒருவிதமான நறுமணமுண்டு. சாதாரணமாக இந்தப் பூவுடன் லவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம், சோம்பு முதலியவற்றை நெய்யிலிட்டு வாசனைக் கிளம்ப வறுத்து அதனில் மாமிசசம்பந்தமான குருமா என்னும் குழம்பை தாளிப்பது வழக்கம். இதனால் சுகந்த வாசனையும், ஜீரணசக்தியுமுண்டாகும். அல்லது முற்கூறப்பட்ட சரக்குகளை நெய்விட்டு வறுத்து வாசனை கிளம்பும் சமயம் ஆறவிட்டு தூளாக்கிக் குழம்பைத் தாளித்தபின் சிறிது தூளைப்போட்டுக் கிளரிக்கொடுப்பதுமுண்டு. இத்தகைய பழக்கமுடையவர்கள் தற்காலத்தில் வடைகறி, உருளைக் கிழங்கு குருமா, சில காய்களைக்கொண்டு செய்யும் கூட்டமுது முதலியவற்றிலும் சேர்ப்பதுண்டு. இத்தகைய ஆகார பட்சணங்களால் வயிற்றிலுள்ள வாயு சாந்தப்படும். உண்ட உணவு எளிதில் ஜீரணமாகும்.

ஆடாதோடை இலை.
(Adhatoda Vasica Leaves).

ஆடாதோ டைப்பன்ன மையறுக்கும் வாதமுதற்
கோடாகோ டிச்சுரத்தின் கோதொழிக்கு—நாடின்
மிகுத்தெழுந்த சந்நிபதின் மூன்றும் விலக்கு
மகத்துநோய் போக்கு மறி.

குணம்:—(இ-ள்.) ஆடாதோடை இலை கபாதிக்கம், வாத தோஷம், பற்பல சுரம், சந்நிபாதம், வயிற்றுநோய் ஆகிய இவைகளை நீக்கும்.

செய்கை:—கபஹரகாரி, கிருமிநாசினி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சுரசம் செய்து ¼-½ தேக்கரண்டி அளவு தேன் கூட்டி தினம்2-3வேளை கொடுக்க கபசம்பந்தமான நோயைக் குணப்படுத்தும். இதன் அளவை அதிகப்படுத்திக் கொடுக்க வாய்க்குமட்டி வாந்தியாகிக் கபம் வெளிப்படும். அல்லது **1-2** தோலா எடையுள்ள ஆடாதோடை இலையைக் குறுக அரிந்து ஓர் பழகின மட்பாண்டத்தில் போட்டு ¼ படி ஜலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை சிறிது திப்பிலி சூரணமும்,தேனும் கூட்டிக்கொடுத்துக்கொண்டு வர ரத்தம் சுத்தியாகும், கபம் கரையும், கஷ்டசுவாசம் நிவர்த்தியாகும்.

குழந்தைகட்கு வயதுக்குத் தக்கவாறு இதன் சுரசத்தை **10-20** துளி தேனுடன் கலந்து கொடுக்கவும். இந்த மூலிகையானது பித்த சீதளத்தை விரைவில் குணப்படுத்தும் தன்மையாதலால் சுரரோகங்களுக்கும் விசேஷமாக உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

ஆடாதோடை கியாழம்.

ஆடாதோடை இலையின் ஈர்க்கு, நிலவேம்பு, சீந்தல்கொடி, பேய்ப்புடல், வெட்பாலைஅரிசி வகைக்குப் பலம் ¼. இவைகளை ஒரு மட்பாண்டத்தில் போட்டு ¼ படி ஜலம் விட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் **2-3** வேளை கொடுக்க விஷசுரம், குளிர்சுரம் முதலியவை குணமாகும்.

(வேறு முறை)

ஆடாதோடை ஈர்க்கு, திப்பிலி, சுக்கு, சித்தரத்தை, ஓமம், கண்டங்கத்திரி வகைக்குப் பலம் $\frac{1}{4}$ இவைகளை முன்போல் ஓர் பழகின மண்பாண்டத்திலிட்டு $\frac{1}{4}$ படி ஜலம் விட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தேன் கூட்டித் தினம் 2 வேளை கொடுக்கக் கபசுரம் நீங்கும்.

ஆடாதோடை வேர்.

(Adhatoda Vasica Root).

காசமொடு மந்தங் கதித்தபித் தங்கொடுஞ்சு
வாசங் கழுத்து வலிமுதனோய்—கூசியே
யோடா திராதிங் கொருநாளு மொண்டொடியே!
யாடாதோ டைத்தூருக் கஞ்சி.

குணம்:—(இ-ள்.) ஆடாதோடை வேரினால் இருமல், அக்கினி மந்தம், சுவேத பித்தம், கஷ்டசுவாசம், களரோக முதலியவைகள் போம்.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப் பட்டை, கபரோகங்களை நிவர்த்தி செய்வதில் சிறந்தது. இதனை விசேஷமாக நிழலில் உலர்த்திச் சூரணங்களில் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

ஆடாதோடைச் சூரணம்.

ஆடாதோடைவேர்ப்பட்டை பலம் 2, ஆடாதோடைப் பூவின் கதிர் பலம் 4, பேரரத்தை, சிற்றரத்தை, வாய்விளங்கம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, இச்சிப்பட்டை, கரிமஞ்சள், மிளகு, கண்டங்கத்திரி உலர்ந்த இலை வகைக்குப் பலம் 1, காஞ்சொறிவேர், தூதுவளை உலர்ந்த இலை வகைக்குப் பலம் 2, அரிசித்திப்பிலி பலம் 3, கோஷ்டம், காட்டாத்திப்பூ வகைக்குப் பலம் $\frac{1}{2}$ இவைகளை நன்றாய் இடித்துச் சூரணம்செய்து அத்துடன் $\frac{1}{2}$ பலம் சாம்பிராணிப் பதங்கம் கூட்டிக் கலந்து புட்டியில் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு $\frac{1}{8}$ ரூபாய் எடை பாலில் கலக்கித் தினம் இருவேளை 10-20 நாள் கொடுத்துவர சீதள சம்பந்தத்தினாலுண்டான சுவாச காசம் இரைப்பிருமல் இவைகள் போம்.

ஆடுதீண்டாப்பாளை.

(Aristolochia Bracteata).

ஆடுதோடாப் பாளைக் ககக்கிருமி வன்சிலந்தி
நீடுகருங் குஷ்டம் நிறைகரப்பான்—ஆடிடச்செய்
யெண்பது வாய்வு மிகில்குஷ்ட முந்தீருந்
திண்பெறுநற் ருதுவுமாய் செப்பு.

குணம்:—(இ-ள்.) ஆடுதீண்டாப்பாளைக்கு மலாஸயக்கிருமி, சிலந்திப்பூச்சி விஷம், கருங்குஷ்டம், கரப்பான், சர்வவாதரோகம், கிடிபகுஷ்டம் இவைகள் நீங்கும். பலமும், சுக்கில விருத்தியும், உண்டாகும்.

செய்கை:—கிருமிநாசினி, பிரசவகாரி, முறைவியாதிரோதி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இவ் விலையை நன்ருய் அரைத்துச் சிறு கொட்டைப்பாக்களவு வெள்ளாட்டுப்பாலில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க சகல விஷம், புண், பிளவை, சிரங்கு, வங்கு, கரப்பான், குஷ்டம் முதலியவைகள் தீரும். இந்த மூலிகையின் சமூலத்துடன் கருங்குருவைநெல்லும் சேர்த்து அவித்து அவல் இடித்து தினம் வேளைக்கு 1 பலம் வீதம் ஒரு மண்டலம் கொடுத்துவர சிரங்கு, சொறி, குஷ்டம், வங்கு, வண்டுகடி, அரணைக்கடி, செய்யான்கடி, பூரான்கடி முதலியவைகள் நீங்கும். அப்போது மிளகை பால்விட் டரைத்து தேய்த்து ஸ்நானம் செய்வதுநன்று. 3 மாதம் வரையில் நல்லெண்ணெய், கடுகு, போகம் கூடாது. இதன் உலர்ந்த இலையை 1-1½ தோலா நிரை ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம் விட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் மரியும். இப்படி இரண்டு மூன்று முறை கொடுத்த பின்னர் பேதியாகும்படியான ஏதேனுமொரு விரேசன மருந்தை கொடுத்தல் வேண்டும். அப்போது உள் மரித்துள்ள கிருமிகள் வெளியாகும். இதன் வேரின் சூரணம் 1-1½ விராகனெடை இரண்டு அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தில் போட்டு மூடிவைத்து ½ மணி நேரம் சென்ற பின் வடிகட்டிக் கொடுக்க குளிர்சுரம்போம். இன்னும் இந்தக் கியாழத்தைப் பிரசவவேதனை அதிகரிப்பதற்கும் கொடுப்பதுண்டு.

ஆதொண்டை.

(Capporis Horrida).

மண்டைக் குடைச்சலறும் வாயுவழிப் பீநசம்போம்
தொண்டைக் கபமுந் தொலையுங்காண்—மிண்டுசெய்யும்
வாதக் கடுப்பகலு மாதே ஆதொண்டைக்குப்
போதப் பலபிணியும் போம்.

குணம்:—(இ-ள்.) ஆதொண்டையினால் கபால ரோகம், வாத பீநசம், நெஞ்சிற்கபாதிக்கம், வாதக்குடைச்சல் முதலிய பல ரோகங்கள் போம்.

செய்கை:—வியதாபேதகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் காயைக் கறியாகச் சமைத்தாவது அல்லது வேகவைத்து உலர்த்தி வற்றலாகவாவது உபயோகப்படுத்துவதுண்டு. 1 அல்லது 1½ பலம் ஆதொண்டை வேர்ப்பட்டையைப் பஞ்சுபோல் நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் 2 அல்லது 3 வேளை கொடுப்பதுண்டு. இவற்றால் இரைப்பையின் தாபனம், வாந்தி, மார்புவலி, அக்கினிமந்தம் முதலியவைகள் போம். இதுவுமல்லாமல் இதனை விசேஷமாக ஸ்நான தைலங்களில் கூட்டுவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

ஆதொண்டத்தைலம்.

ஆதொண்டைவேர் சூரணம் பலம் 4, கருஞ்செம்பைப்பூ பலம் 2, பளிங்கு சாம்பிராணி பலம் 2, வெள்ளுள்ளி பலம் 2, கம்மாறு வெற்றிலைக்கொடி பலம் 2, தும்பைப்பூ பலம் 1, கஸ்தூரி மஞ்சள் பலம் 1, சந்தனத்தூள் பலம் 1, அபினி விராகனெடை ½, மிளகு விராகனெடை 2 இவற்றைப் பசுவின்பால் விட்டரைத்து ¾ படி பசுவின்பாலில் விட்டுக் கலக்கி ஒரு பழகின மட் பாண்டத்தில் விட்டு அதனுடன் 1 படி நல்லெண்ணெய் கூட்டி அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வண்டலானது மெழுகுபதம் வரும்போது கீழிறக்கி வடித்து ஆறவிட்டுப் புட்டியில் பத்திரப்படுத்துக. இத் தைலத்தில் வாரமொருமுறை சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்துவர எத்தகைய கொடிய தலைவலியாயினும் இரண்டு மூன்று ஸ்நானங்களில் குணமாகும்.

(வேறு முறை)

ஆதொண்டைவேர், சங்கம்வேர், நொச்சிவேர், எருக்கம்வேர், சிற்றாமுட்டிவேர் வகைக்குப் பலம் 5, இவைகளை ஒன்றிரண்டாய் இடித்து ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு 5 படி சலம் விட்டு அடுப்பில்வைத்து, சிறு தீயாக எரித்து ½ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து ஆறவிட்டு மீண்டும் வேறு தைல பாண்டத்தில் விட்டு அத்துடன் எருக்கம் பழுப்புச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு படி ½, வேப்பெண்ணெய் படி ¼ கூட்டிக் கலக்கி அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரிக்கும்போது திரிகடுகு, ஓமம், பூண்டு, வசம்பு, ஏலம், மஞ்சள், வகைக்குப் பலம் ½ யாகப் பால் விட்டு அரைத்துப்போட்டுக் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடித்துப் பத்திரப் படுத்துக. இத்தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்ய சிரசுசூலை, சூலைவாயு, வாதசூலை, திமிர்வாதம், இரைப்பு, நேத்திரக் குத்து, சொறி, சிரங்கு இவைகள் போம்.

ஆமணக்கு இலை.

(Ricinus Communis Leaves).

மிக்கவெழுங் காமாலை மிஞ்சிமூ லக்கடுப்பும்
துக்கமிகு முந்திவலித் தொல்லைப்போம்—மக்கட்கு
நாமணக்கப் பாலூட்டும் நாரியர்க்குப் பாற்சுரக்கும்
ஆமணக்கின் சீரிலையா லாம்.

குணம்:—(இ-ள்.) ஆமணக்கின் இலையால் காமாலை, மூலக் கடுப்பு, வயிற்றுவலி முதலியவைகள் நீங்குவதுடன் குழந்தைகட்குப் பால்கொடுத்துவரும் ஸ்திரீகளுக்குப் பாற்சுரப்பு உண்டாகும் என்க.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைச் சிற்றாமணக்கு நெய் தடவி நெருப்பனலில் வதக்கிப் பால்வற்றிய ஸ்தீரிகளின் ஸ்தனங்களுக்கு வைத்துக்கட்ட பால் சுரப்பு உண்டாகும். இந்த இலையைக் குருக அரிந்து சிற்றாமணக்கு நெய்விட்டுப் பிசறி வதக்கி சீலையில் முடிச்சுக் கட்டித் தாளக்கூடிய சூட்டில் ஆசனத்திற்கு ஒற்றடம் கொடுத்து, அந்த இலையையே வைத்துக்கட்ட மூலக்கடுப்பு நீங்கும். இதுவுமன்றி இதனைக் கீல்வாதங்களுக்கும், வாதரத்த வீக்கங்களுக்கும் ஒற்றடம் கொடுத்து, அதனையே வைத்துக்கட்ட அதிக நன்மை

யைத்தரும். துளிர் இலையைச் சிற்றாமணக்கு நெய் தடவி அனலில் வாட்டி உந்தியில் வைத்துக்கட்ட வயிற்றுவலி நீங்கும். இதன் இலையோடு சமனளவு கீழ்க்காய்நெல்லி இலையைக்கூட்டி அரைத்து சிறு எலுமிச்சம்பழ அளவு காலையில் தினம் 1வேளை வீதம் 3 நாள் கொடுத்து, நான்காவது நாள் சிவதைவேரின் தலையங்கத்தின்கீழ் விரேசனத்திற்காகக் கூறப்பட்டுள்ள சுகபேதி சூரணத்தைக் கொடுக்கக் காமாலை குணமாகும்.

ஆமணக்கு நெய்.

(Castor Oil).

ஆமணக்கு நெய்யா லனைவர்க்கு முண்டுநலம்
பூமண்க்கு மேனி புரிகுழலே!—வாய்மணக்க
கொள்ளில் வயிறுவிடுங் கோரமுள்ள வாயுவறு
முள்ளில்வரு குன்மம்போ மோர்.

(இதுவுமது)

அம்பொனிற மும்விந்து மாங்குடலி னேற்றமறு
மைம்பொறிச் சூடெரிவு மாறுங்காண்—அம்புவியிற்
பாமணக்கு மின்பமொழிப் பாவாய்! நலஞ்செறிந்த
ஆமணக்கு நெய்யுண் டறி.

குணம்:—(இ-ள்.) உஷ்ணுதிக்கமுள்ள முத்துக்கொட்டை நெய்யை முறைப்படி குடித்தால் விரேசனமாகும். இதனால் கோர வாதம், குன்மம், குடலேற்றம், தேகம், கண், மூக்கு, செவி, வாய் இவைகளிலுண்டாகிற எரிச்சலும் நீங்கும். பொன் நிறமும், தாது விருத்தியும் உண்டாகும்.

செய்கை:— இலைக்கு—க்ஷீரவர்த்தினி, நெய்க்கு—மலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—பெரியவர்களுக்கு 1 அவுன்ஸ் அளவு சிறிது பசுவின்பால் சேர்த்தாவது இஞ்சி சுரசம் சேர்த்தாவது கொடுக்க 4, 5 முறை பேதியாகும். குழந்தைகளுக்குக் கொடுக்கும் பல விரேசன மருந்துகளில் இந்த ஆமணக்கு நெய்யானது விசேஷ மான பேதி மருந்தாகும். குழந்தைகளின் வயதுக்கு ஏற்றபடி 2, 3 தேக்கரண்டி அளவு எண்ணெயை முலைப்பாலிலாவது, பசுவின் பாலி லாவது கலந்து கொடுக்க உபத்திரவமில்லாமல் பேதியாவதுடன்

அக்னிமந்தம், வயிற்றுவலி, வாயுசம்பந்தமான பிணி முதலியவற்றை நிவர்த்தி செய்யும். இன்னும் இது பிரசவித்த ஸ்திரீகளுக்கும், மூலரோகிகளுக்கும், சீதபேதியுடையவர்களுக்கும் விரேசனமாகக் கொடுப்பதற்குச் சிறந்ததாகும். இதை வழக்கமாக வைத்துக்கொள்ளக்கூடாது. அவசரமாக எப்போது வேண்டுமோ அப்போது உபயோகப்படுத்துவதே சிறந்தது.

ஆயாமரம்.

(Holoptelia Integrifolia).

மேகப் பிடிப்பிற்கும் மிஞ்சுமதன் சூலைக்கும்
வாகுறவே ஆயா மரத்தோலைப்—பாகமுடன்
நன்கரைத்துப் பற்றிடவே நாடாது நோயெனவே
பொன்மலர்ப்பூங் கோதாய்! புகல்.

குணம்:—(இ-ள்.) ஆயாமரப்பட்டையை அரைத்து பற்றிட மேகவாய்வினாலுண்டான பிடிப்பு, குத்தல், குடைச்சல் முதலியவைகள் குணமாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையைப் பஞ்சுபோல் இடித்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு எண்மடங்கு ஜலம்விட்டு எட்டிலொன்றாய்ச் சுண்டக்காய்ச்சி ஆறவிட்டுப் பிசைந்து வடிகட்டித் திப்பியை நீக்கிவிட்டு மீண்டும் அக்கியாழத்தைக் குழம்பு பதமாகச் சுண்டக் காய்ச்சி, ஆறவிட்டுத் தாளக்கூடிய சூட்டில் கீல்களிலுண்டான வீக்கம், பிடிப்பு, குடைச்சல் முதலியவற்றிற்குத் தழும்பப் பூசி உலரவிட்டு முன் நீக்கிவைத்துள்ள திப்பியைப் பஞ்சுபோல் சிதைத்து மேலே வைத்துக் கட்டுவதுண்டு. இப்படி 2-3 நாள் சிரமம் பாராது கட்டிவர மேற்படி நோய்கள் குணமாகும்.

இந்த மரத்தை ஆயிமரமென்றும், ஆயில்மரம் என்றும் கூறுவாருமுளர்.

ஆரைக்கீரை.

(Marsilea Quadrifolia).

தின்றா லரிசைதருந் தீராப் பயித்தியத்தைப்
பொன்றுந் நீரிழிவைப் புண்ணீரை—யென்றுமிந்த
வூராரைச் சாராம லோட்டிவிடு நாவிதழா
நீராரைக் கீரையது நீ.

குணம்:—(இ-ள்.) நல்ல சுவையும் நாவிதழுமுள்ள நீராரைக் கீரை, பித்த நோயையும், அதிமூத்திரத்தையும், இரத்தப் பிரமேகத்தையும் நீக்கும்.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைத் துவட்டலாகச் செய்து உபயோகப்படுத்துவது வழக்கம். இது நாவிற்கு ருசியாக இருக்கும். இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள ரோகங்களுக்கும் இன்றியமையாத தாகும்.

ஆலமரம்.

(Ficus Bengalensis).

சொல்லுகின்ற மேகத்தைத் துஷ்ட வகக்கடுப்பைக்
கொல்லுகின்ற நீரிழிவைக் கொல்லுங்கா—ணல்லாலின்
பாலும் விழுதும் பழமும்விதை யும்பூவும்
மேலு மிலையுமென விள்.

குணம்:—(இ-ள்.) ஆலமரத்தின் பால், விழுது, பழம், விதை, பூ, பட்டை, இலை இவைகளால், பிரமேகம், வயிற்றுக் கடுப்பு, மேக நீர் இவைகள் நீங்கும்.

(இதுவுமது)

வடமரவீழ் பல்லிறுக்கு மாமேகம் போக்கு
மடர்கொழுந்தி ரத்தப்போக் காற்றும்—படரதிலாம்
புல்லுருவி யொன்றெய்திற் பொல்லா விடபாக
வல்லுருவி லுண்மை மதி.

(இ-ள்.) ஆலமரத்தின் விழுது தந்தங்களை இறுகச் செய்யும். பிரமேகத்தை நீக்கும். கொழுந்து இரத்தாதிசாரத்தை விலக்கும். இந்த மரத்தில் முளைத்த புல்லுருவியால் விஷபாகரோகம் நீங்கும்.

செய்கை:—விழுது, பட்டை, இலை இவைகட்கு, சங்கோசன காரி, பலகாரி; வித்துக்கு, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஆலமரத்தின் விழுதைத் தரித்து ஒரு புறத்தைப் பற்களால் மென்று மிருதுவாக்கிப் பல் தேய்த்து வரப் பற்கள் உறுதிப்படும். ஆல மரத்தின் விழுதுகளின் முனைகளிலுள்ள இளம்பாகத்தைப் பறித்து இடித்துச் சாறு எடுத்து அதனில் சவ்வரிசியைப் போட்டு ரவியில் உலர்த்தி அதனைக்

கஞ்சியாகவாவது அல்லது அல்வாவாகவாவது கிளரி சாப்பிடத் தாது பலப்படும். இதன் துளிரை அரைத்துச் சுமார் ஒரு கொட்டைப் பாக்களவு தயிரில் கலக்கிக் கொடுக்க இரத்த அதிசாரம் நீங்கும். இதன் வித்தோடு, அரசம்வித்து, இச்சிவித்து முதலியவைகளை இடித்துச் சூரணம் செய்து லேகியங்களில் உபயோகப்படுத்த தாதுவிருத்தியை உண்டாக்கும். ஆலம்விழுதின் துளிரையும், வித்தையும் பால்விட்டு அரைத்துச் சுமார் கழற்சிக்காய் பிரமாணம் தினம் 1 வேளை 5-7 நாள் பாலில் கலக்கி ஸ்திரீகளுக்குக் கொடுக்கப் பால் சுரப்புண்டாகும். வெட்டை, மேகம், உடல் எரிவு, காங்கை முதலியவைகள் தீரும். ஆலம்வித்தோடு, அரசம் வித்தையும் சேர்த்து பால்விட் டரைத்து வேளைக்குச் சுமார் ஒரு கழற்சிக்காய் பிரமாணம் 5-7 நாள் கொடுக்க இரத்தக்கக்கல் நீங்கும், தாது பலப்படும். இதன் பட்டையில் 1, $1\frac{1}{2}$ தோலா நிறை நறுக்கி ஒரு மட் கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{16}$ படியாகக் காய்ச்சி வடிக்கட்டிச் சிறிது பனங்கற்கண்டுகூட்டி இருவேளையாக அந்தி சந்தி கொடுக்கப் பிரமேகம், இரத்தப்பிரமேகம், நீர்க்கடுப்பு இவைகள் போம். இம் மரத்திலுண்டாகின்ற புல்லுருவியை ஞாயிற்றுக்கிழமை சூரியன், சந்திரன், புதன் ஒரு ராசியில் இருக்கும்போது காப்புக்கட்டிப் பிடிங்கிவந்து பத்திரமாக வைத்துக் கொண்டு தேள் முதலிய விஷம் தீண்டிய விடத்தில் சுத்த ஜலத்தில் உரைத்துப்போட விஷமிறங்கும்.

ஆலம்பால்.

(Ficus Bengalensis Milk).

ஆலம்பால் மேக மறுத்தசையும் பல்லிறுக்குங்
கோல முடிக்குக் குளிர்ச்சிதரும்—ஞாலமதின்
மெத்தவுமே சுக்கிலத்தை விருத்திசெய்யுந் தப்பாமற்
சுத்த மதிமுகத்தாய் சொல்.

குணம்:—(இ-ள்.) ஆலம்பால் பிரமேகத்தை நீக்கும். ஆடும் பற்களை இறுகச் செய்யும். சிகைக்குக் குளிர்ச்சியைத் தரும். இன்னும் தாதுபுஷ்டி யுண்டாக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, சீதளகாரி, பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஆலம்பாலை வாயிலிட்டுக் கொப்பளித்துச் சிறிதுநேரம் அடக்கி வைத்துக்கொண்டிருந்து உமிழ்ந்து விடவும். இப்படி 2-3 நாள் செய்ய நாவில் உள்ள ரணம் ஆறும். ஒரு தோலா நிறையுள்ள ஆலம்பாலைச் சிறிது சர்க்கரையுடன் கூட்டிக் கொடுத்துகொண்டுவர பிரமேகத்தையும், தாதுக் குறைவையும் குணப்படுத்தும். இதனை கால்வெடிப்புகளுக்கு அடித்து உட்செலுத்திவர வேதனை தணிந்து ஆறும்.

ஆல்பகோருப்பழம்.

(Prumus Communis).

நேராய் நடுமார்பில் நெட்டுகின்ற வாதபித்தம்
சேரா தகற்றிவிடுந் திண்ணமிது—பேராத
வெப்பமலக் கட்டை வெளியாக்கும் ஆல்பகோரு
செப்பும் பழத்தினது சீர்.

குணம்:—(இ-ள்.) ஆல்பகோருப்பழத்தினால் வாதமும், பித்தமும் நீங்கும். மலத்தைப்போக்கும். தேக உஷ்ணத்தைச் சாந்தப்படுத்தும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமலகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—தேவையான பழங்களை வாயிலிட்டு அடக்கி, அதிலிருந்து வருஞ் சுவையை அப்பழத்தின் தசையுடன் மென்று உட்கொண்டு கொட்டைகளைத் துப்பிவிடுவதுண்டு. இதனால் இருதயத்தைப்பற்றிய சூடு, பித்தத்தினாலுண்டான தாகம், சூட்டைப்பற்றிய சுரங்கள், தலைவலி, தினவு, சொறிசிரங்கு முதலியவைகள் போம். அதிக அளவில் உட்கொள்ள மலம் இளகலாகப் போவதுடன் பித்தநீரை வெளியாக்கும்.

அவிழ்தங்களை உட்கொண்டு புளி தள்ளிப் பத்தியமிருக்கும் காலத்தில் இந்தப்பழத்தில் சிறிது ஊறப்போட்டுப் பிசைந்து எடுத்த சாற்றைச் சிறு அளவாகக் குழம்பு, ரசம் முதலியவற்றில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் மருந்தின் வீரியம் கெடாது. இந்தப் பழத்தைக்கொண்டு சர்பத்தாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

ஆல்பகோருப்பழச் சர்பத்து

½ வீசை பழத்தை ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு 2 படி சலம் விட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து, சுமார்

½ படி இருக்கும் சமயத்தில் கீழிறக்கி ஆறவிட்டுப் பிசைந்து கொட்டைகளை அப்புறப்படுத்தி, வலவல வென்ற உறப்பான சீலையில் வடிகட்டி சந்துகள் அடைப்பட்டுப் பழத்தின் சத்துத் தடைப்பட்டிருப்பதை அப்படியே முடிச்சுக் கட்டிப் பிசைந்து கூடுமான வரையில் அதிலிருக்கும் சத்தை வாங்கவும். இப்படிக் கொள்ளப்பட்ட திரவத்துடன் ½ வீசை சர்க்கரை கூட்டி சர்பத்தாகக் காய்ச்சிப் புட்டியில் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு 2, 4 அவுன்ஸ் வரை சலத்தில் விளாவி தினம் 2 வேளை கொடுத்துவரப் பித்தநீர் மலத்தில் வெளியாகும். இன்னும் இதனால் இருதயத்தைப்பற்றிய சூடு, பித்தத்தாலுண்டான தினவு, சொறிசிரங்கு இவைகள் போம்.

ஆவாரம்பூ.

(Cassia Auriculata Flower).

தங்க மெனவே சடத்திற்குக் காந்திதரு
மங்காத நீரை வறட்சிகளை—யங்கத்தா
மாவைக்கற் றுழை மணத்தை யகற்றிவிடும்
பூவைச்சே ராவாரம் பூ.

குணம்:—(இ-ள்.) ஆவாரம்பூ, பிரமேகநீர், வறட்சி, உடம்பிற் பூத்த உப்புமா, கற்றாழைநாற்றம் இவைகளை நீக்கும். தேகத்திற்குப் பொற்சாயலைத்தரும்.

செய்கை:—சங்கோசனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பூவை நன்றாய் அலம்பிப் பச்சைப்பயறுடன் கூட்டிப் பாகப்படி கூட்டமுது செய்து உண்பது வழக்கம். இதனால் மதுமூத்திரம், இரத்தமூத்திரம், பெரும்பாடு, உட்காங்கை, தாகம் முதலியவைகள் போம். இன்னும் இந்தப் புஷ்பத்தை நிழலில் இதழ் இதழாகச் சீலையின்பேரில் போட்டு வதங்கி வரும் சமயம் புஷ்பத்தை எடுத்து இரண்டு எடை சீனிகற்கண்டு கூட்டி ஆட்டுக்கல்லில்போட்டு ஆட்டி வழித்தெடுக்கக் குல்கந்து போல் இருக்கும். இதனுடன் போதிய அளவு அப்பட்டத் தேன் கூட்டி கலந்து பிசைந்து சில தினம் ரவியில் வைத்து வேளைக்கு ¼ பலம் அளவிற்கு தினம் 2 வேளை சாப்பிட்டுவர அதிக நன்மையைத் தரும். இந்தப் பூவை உலர்த்தி வேளைக்கு ¼-½ பலம் கியாழமிட்டு பால், சர்க்கரை கூட்டிக் காப்பிபோல் சாப்பிடுவதுண்டு. இதனால்உட்

சூடு, நீரிழிவு, நீர்க்கடுப்பு முதலியவைகள் குணமாகும். இந்தப் பூவை உலர்த்தி நலங்கு மாவுடன் கூட்டித் தேய்த்து ஸ்நானம் செய்துவர கற்றாழைநாற்றம், உப்புபூத்தல் நீங்கும். இன்னும் நல்ல தேஜஜைசத் தரும்.

ஆவாரை.

(Cassia Auriculata Leaves and Bark).

சொல்லுதற்கு மட்டோ தொலையாத மேகநீ
ரெல்லா மொழிக்கு மெரிவகற்று—மெல்லவச
மாவாரைப் பம்பரம்போ லாட்டுந் தொழிலணங்கே!
யாவாரை மூலி யது.

குணம்:—(இ-ள்.) ஆவாரைச் செடியானது சர்வபிரமேக மூத்திர ரோகங்களையும், ஆண்குறி எரிவந்தத்தையும் குணமாக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, வித்திற்கு—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—அரை பலம் ஆவாரம்பட்டையை நன்றாய் இடித்து ஒரு மட் கலயத்தில் போட்டு, ½ படி சலம் விட்டு அடுப்பில் வைத்து, சிறுக எரித்து வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டித் தினம் இருவேளை 1½ அவுன்ஸ் வீதம் கொடுத்துவர மதுமேகம், ரத்தமூத்திரம், பெரும்பாடு, தாகம் இவைகள் போம். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி லேகியமாகவும், சூரணமாகவும், கியாழமாகவும் கொடுப்பதுண்டு. அவற்றுள் சிலமுறைகளாவன-

ஆவாரைபஞ்சகசூரணம்

ஆவாரையிலை, ஆவாரம்பூ, ஆவாரம்பட்டை, ஆவாரம்வேர், ஆவாரங்காய் வகைக்கு விராகனெடை 4, கடலழிஞ்சில்பட்டை, மருதமரப்பட்டை, நாவல்பட்டை, நாவல்கொட்டை, தண்ணீர் விட்டான்கிழங்கு, பாதிரிவேர் வகைக்குப்பலம் 2, மரமஞ்சள், கல் நார் வகைக்குப் பலம் 1, குரோசாணிஓமம் பலம் ¼ ஆகிய இவற்றை நன்றாய் இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க. வேண்டும்போது வேளைக்கு 1 தோலா நிறையுள்ள சூரணத்தை ¼ படி சலத்தில் போட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி தினம் 2 வேளை சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுத்துவர, மதுமேகம், தேககாங்கை, தாகம் முதலியவைகள் நீங்கும். இன்னும் இக் கியாழம் நாவிற்கு ருசியாக இருக்கவேண்டின் சிறிது பசுவின்பாலை யும் கூட்டிக்கொள்ளலாம். இதனால் குணங்கெடாது.

இடி-ஆவாரை லேகியம்.

நன்றாய்க் கழுவித் தேய்த்துக் கறுப்புப்பொட்டுப் போகப் புடைத்து எடுத்த எள்ளு பலம் 10, ஆவாரம்வேர்ப்பட்டைச் சூரணம், வறுத்த கடலை மாவு வகைக்குப் பலம் 5, இவற்றுடன் $\frac{1}{4}$ வீசை சீனிச்சர்க்கரையும், $\frac{1}{8}$ படி அல்லது போதிய அளவு தேனையும் விட்டு நன்றாய் இடித்து ஜாடியில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது வேளைக்கு நெல்லிக்காய் பிரமாணம் அந்தி சந்தி கொடுத்து வர தாகம், அழலை, நீரிழிவு முதலிய பல பிணிகள் போம்.

ஆவாரைப் பிசின்.

(Cassia Auriculata Gum).

பெருநீர் மறிக்கும் பிரமேகம் போக்கும்
வருநீர்ச் சுறுக்குதனை மாற்றுந்—தருநீர்மை
பூணுமே னிக்கமலப் பொன்னே பிடகரெலாம்
பேணுமே காரிப் பிசின்.

குணம்:—(இ-ள்.) ஆவாரைச்செடியின் பிசினானது வெகு மூத்திரத்தையும், பிரமேக ரோகத்தையும், வாதகிரிச்சரத்தையும் போக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஆவாரையின் பிசின் கிடைப்பது அரிது. ஏனென்றால் அதனிலுண்டாகும் பிசினை எறும்புக் கூட்டங்கள் வந்து சிறிதும் விடாமல் தின்றுவிடும். அப்படி அவைகளுக்கு இரையாகாமல் சர்வ ஜாக்கிரதையாகச் சேகரித்துக் கொண்டுவந்த பிசினை 2-3 குன்றி எடை தினம் 2 வேளை 20-40 நாள் பசுவின் பாலில் கலக்கிக் கொடுத்துவர விந்து நஷ்டம் தீரும். இன்னும் மதுமேகம், தாகம், உட்காங்கை முதலியவற்றிற்கு இன்றியமையாததாகும்.

ஆளிவிதை.

(Lepidium Sativum).

வீக்க மதிவாந்தி மேனி வலிவாய்வுந்
தூக்குநரம் பின்குத்த றேல்லழலை—யோர்க்காள
மீளி யருசி விதைவாத மும்போகு
மாளிவிதை தன்னு லிறி.

குணம்:—(இ-ள்.) ஆளிவிதையினால் சோபை, மிருவமனம், உடற்கடுப்பு, வாதவலி நரம்புச்சூலை, அஸ்திச்சூடு, ஒக்காளம், அருசி, பீஜவாயு இவைகள் நீங்கும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமலகாரி, மூத்திரவர்த்தனகாரி, வியதாபேதகாரி, பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனை ஒரு மட்கலயத்தில் போட்டு சலம் விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து நன்றாய் வெந்த பதத்தில் சலத்தை நீக்கி தேங்காய் எண்ணெய் விட்டுக் கடைந்து சீலையில் தடவி வயிறு, மார்பு முதலான இடங்களில் காணும் சகல நோய்களுக்கும் மேலே போட்டுக் கட்ட குணமாகும். அல்லது. இந்த ஆளிவிதையை எலுமிச்சம் பழச்சாற்றிலாவது, குளிர்ந்த சலத்திலாவது அரைத்துக் களிபோல் கிளரி சீலையில் கனமாகத் தடவி கட்டிகளுக்கு வைத்துக் கட்டிவர விரைவில் பழுத்து உடைத்துக்கொள்ளும். இன்னும் இதனைச் சர்பத்தாகச் செய்து உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

ஆளிவிதை சர்பத்து.

5 பலம் ஆளிவிதையை ஒரு மட்கலயத்தில் போட்டு 2 படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து விதையை மலர வேகவைத்து வடித்துக் கஞ்சியை மாத்திரம் எடுத்து அதனுடன் 1 வீசை சீனி சர்க்கரை கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சிப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது $1\text{-}1\frac{1}{2}$ தோலா நிறையுள்ள இச்சர்பத்தைச் சிறிது சலத்தில் விட்டுக் கலந்து இருவேளை கொடுக்கக் குளிர்ச்சியைப்பற்றிய இருமலையும், இரத்தவாந்தியையும் குணப்படுத்தும். மலம் இளகலாகப் போகும். குடலைச் சுத்தப்படுத்தி வாயுவைக் கண்டிக்கும். இன்னும் இந்தச் சர்பத்துடன் வேளைக்கு 3-5 துளி அப்பட்டமான சந்தன அத்தர்விட்டுக் கலக்கிக் கொடுக்க பிரமேகம் குணமாகும். நீர்த்தாரையில் கண்ட விரணம் விரைவில் ஆறி அதனில் கண்ட கசிவு நீங்கும்.

ஆள்வள்ளிக் கிழங்கு.

(Jatropha Manihot).

வாதகபம் பித்தமொடு மாமூலம் வாதகுன்ம
மோதுபல நோய்மந்த முண்டாகும்—போதின்
மருவள்ளிக் கோண்டகுழன் மாதே ! யுலகிற்
பெருவள்ளி யின்கிழங்காற் பேசு.

குணம்:—(இ-ள்.) பெருவள்ளிக்கிழங்கு என்று கூறப்பட்ட ஆள்வள்ளிக்கிழங்கால் திரிதோஷ தொந்தம், வாதமூலம் வாத குன்மம் முதலிய சில நோய்களும், அக்கினி மந்தமும் உண்டாகும்.

பித்தங் கலந்த பெருவாயு வைக்கூவு
மெத்தஅனல் மந்தத்தை மேலெழுப்புஞ்—சுத்த
இரவள்ளிக் கொண்டகுழ லேந்திழையே! யிந்த
மரவள்ளிக் கந்தமென வை.

(இ-ள்.) மரவள்ளிக்கிழங்கு பயித்தியவாத தொந்தத்தையும் அக்னிமந்தத்தையும் உண்டாக்கும்.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சுத்தமாகத் தண்ணீரில் அலம்பி ஒரு பாண்டத்தில் போட்டுத் தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து நன்றாய் எரித்து வெந்த சமயம் ஆறவிட்டு மேற்றோலை உரித்துச் சிறிது தேங்காயுடன் சேர்த்து உண்பதுண்டு. அல்லது முன்போல வேகவைத்த கிழங்கை மேற்றோலை உரித்துக் கொப்பரைத் திருவலைக்கொண்டு திருவி எடுத்து அத்துடன் போதிய அளவு சர்க்கரை, ஏலக்காய்ப்பொடி, தேங்காய்த்திருவல் எல்லாம் ஒரு மிக்கக்கூட்டிக் கலந்து உண்பதுண்டு. இதனால் தாதுவிருத்தியுண்டாகும், நாவிற்கு உருசிதரும், மூலரோகிகளுக்குக் காணும் உதிரம் நிற்கும். ஆனால் மலங்கட்டும். அக்னிமந்தம் உண்டாகும். இத்துடன் தேங்காய் சேருவதால் பெரும்பாலும் கெடுதல் செய்யாது.

ஆற்றலரி.

(Polyganum Barlatum).

வெப்பந் தணியுமே வெய்யபுண் ணாறுமே
வெப்பமதி சார மொழியுமே—செப்பக்கேள்
தோற்று முந்திவலித் தொல்லை யகலுமே
ஆற்றலரிப் பூண்டா லறி.

குணம்:—(இ-ள்.) ஆற்றலரியால் தேகத்திலுள்ள கொதிப்பு, சிரங்கு, உஷ்ணபேதி, குன்மவலி முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, உதரவாதஹரகாரி,

உபயோகிக்கும் முறை:—இதன் இலை, காம்பு இவைகளைக் கியாழமிட்டு விரணங்களுக்குக் கழுவிச் சுத்தம்செய்ய விரைவில் ஆறும். $\frac{1}{4}$ தோலா எடையுள்ள இதன் வித்தைப் பால்விட்டரைத்து உட்கொள்ள வயிற்றுவலி, வயிற்றுப் பிடுங்கல் நிவர்த்தியாகும். இதன் வேரைக் கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுக்கத் தேகம் குளிர்ச்சி யடையும்.

ஆற்றுத்தும்மட்டி இலை.

(Citrullus Colocynthis Leaves).

பற்றுதிரப் பூச்சிகளைப் பற்பலவா மந்தத்தைச்
சுற்றுதிரப் பித்தத்தைத் தூவிடத்தை—முற்று
மரிக்குமட்டி யாயிலைமா தங்கருரை யன்றே
வரிக்குமட்டி யாயிலைமா தே !

குணம்:—(இ-ள்.) வரிக்குமட்டி இலை ரத்தக்கிருமிகள், பலவித மந்தம், ரத்தபித்தம், தசையைப்பற்றிய சர்ப்ப விஷம் இவைகளை விரைவிற் கெடுக்கும்.

செய்கை:—கிருமிநாசனி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது அரிது. இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

விஷாமுர்த சூரணம்

பெரிய தும்மட்டிக்காய், சிறு தும்மட்டிக்காய், பேய்ச்சுரை, பேய்ப் புடல், பேய்ப்பீர்க்கு இவைகளின் சமூலத்தைத் தனித்தனி நிழலில் உலர்த்தி சமனெடையாக நிறுத்து உரலில்போட்டு இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் வெந்நீரில்போட்டு அந்தி சந்தி கொடுத்துவர சகல விஷங்களும் முறிந்துவிடும்.

ஆற்றுத்தும்மட்டிக்காய்.

(Citrullus Colocynthis Pod).

கிடையெங்கே சோம்பலெங்கே கேடுறச்செய் வாதக்
கடையெங்கே யாற்றுக் கலிங்க—மடைதிறக்கி
னண்டை யடைசலெங்கே ஆயிழையார் சூதகத்தி
னுண்டை யுடைசலெங்கே யோது.

குணம்:—(இ-ள்.) ஆற்றுத் தும்மட்டிக்காயால் கீல்பிடிப்பால் நடையின்றிக் கிடத்தல், சோருதல், மலாவிருத முதலிய வாத ரோகங்கள், கருப்பையைப்பற்றி அடைகின்ற ஆமம், இரத்தகுன்மக் கட்டி, அகால ருது இவைகள் போம்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாகக் கொடுப்பது கிடையாது. இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப் படுத்துவது உண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

ஆற்றுத்தும்மட்டிக்காய் எண்ணெய்.

ஆற்றுத்தும்மட்டிக்காய்களைக் கொண்டுவந்து மேல்தோலைச் சீவி விதையை நீக்கி இடித்துப் பிழிந்தெடுத்த சாறு, ஆவின்பால் வகைக்குப் படி 1, தேங்காய்த் துருவலைச் சலம்விடாமல் சுத்தமாகப் பிழிந்தெடுத்த பால் படி $\frac{1}{4}$, சிற்றாமணக்கெண்ணெய் படி 1, வெங்காயச் சாறு படி 1 இவற்றை எல்லாம் தைலம் காய்ச்சுவதற்காகப் பழக்கி வைத்துள்ள ஒரு மட்பாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்க. அப்பால் கடுகு, வெள்ளைப்பூண்டு, இந்துப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, கடுக்காய், கடுகுரோகணி, அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வாய்விளங்கம், சீரகம், சிற்றரத்தை, கோஷ்டம்,சிறுநாகப்பூ,சன்ன இலவங்கப்பட்டை இவைகள்வகைக்கு கழஞ்சி 1ஆக இடித்து அம்மியில் வைத்து முன் சித்தப்படுத்தியுள்ள திரவங்களில் ஏதேனும் ஒன்றை விட்டரைத்து மெழுகுபோலான பதத்தில் வழித்துத் தைலமட்பாண்டத்தில் கூட்டிக்கலக்கி அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வரும் சமயம் இறக்கி, ஆறவிட்டு வடித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும் போது தினம் ஒருவேளை காலை நேரத்தில் $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் கொடுக்கவும். பேதி சுமார் 4 தடவை ஆகவேண்டும். ஒரு சமயம் ஆகாவிட்டால் மறுநாள் எண்ணெயை அதிகப்படுத்திக் கொள்க. பேதி அதிகமானால் எண்ணெயின் அளவைக் குறைத்துக் கொள்ளவும். இப்படி 3-5 நாள் கொடுக்க, வாதநீர், கிருமிகள், ஈரல்களின் வீக்கம், நீர்க்கோவை, பெரும்வயிறு, இடுப்புவலி, கீல்வாயு, ருதுசூலை முதலியவைகள் தீரும்

ஆற்றுத்தும்மட்டிக்காய் மெழுகு.

ஒரு பழகின மட்பாண்டத்தில் 3 படி ஆவின் நீரைவிட்டு அதில் வளையலுப்பு, இந்துப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சவுட்

டுப்பு, வகைக்குப் பலம் 1 ஆக அரைத்துப்போட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து குழம்பு பதமாக வரும்போது 50 பெரிய தும்மட்டிக்காய்களைக் கொண்டுவந்து அவைகளின் மேல் தோலைச் சீவி விதைகளை நீக்கி இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றை விட்டு மீண்டும் கிளரிக்கொடுத்து முடிவில் மெழுகுபதம் வரும் போது கீழிறக்கி ஆறவிட்டுச் சேதப்படாமல் வழித்து ஜாடியில் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது தினம் அந்தி சந்தி சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் கொடுத்துவர உதரரோகத்தைக் குறிப்பிடும்படியான பெருவயிறு, மகோதரம், நீராம்பல், நீர்க்கோவை, கவுசி, கெண்டை, பீலிகை முதலிய நோய்கள் நிவர்த்தியாகும்.

இஞ்சி.

(Zingiber offic nalis. Raw).

இஞ்சி யதனுக் கிருமலைய மோக்காளம்
வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி—விஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போந் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் ! விளம்பு.

குணம்:—(இ-ள்.) இஞ்சிக்கு, காசம், கபம், வெள்ளோக்காளம், சந்நிபாதசுரம், பேதி, வாதசூலை, வாதகோபம் இவைகள் போம். இன்னுமிதனால் மிகுந்த பசிதீபனமுண்டாகும்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உற்சாககாரி, சுவேதகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சாற்றைப் பொதுவாக வாள சம்பந்தமான பேதிமாத்திரையுடன் அனுபானமாகச் சேர்த்துக் கொடுப்பது வழக்கம். இது மருந்தின் குணத்தை அதிகப்படுத்துவதுடன் குடல், இரைப்பை முதலிய உருப்புகளிலுள்ள மாசை வெளியாக்கும். ஒரு தோலா எடையுள்ள இஞ்சியை அரைத்துப் பிழிந்தெடுத்த சாற்றுடன் ஒரு கோழிமுட்டையின் மஞ்சள் கருவைக்கூட்டி நன்றாயுறவாகும்படி கலந்து காண்டியிலிட்டு சிறிது நெய்விட்டு நீர்சுண்டி வெந்த பதத்தில் உட்கொள்ளுவதுண்டு. இப்படிச் சில தினம் சாப்பிட தாதுவலுக்கும், நீனிப்பை, ஈரல் முதலியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். ஞாபகசக்தியை அதிகப் படுத்தும். இஞ்சியில் ஒரு துண்டை வெட்டி வாயிலிட்டு அடக்கி வைத்துக்கொண்டிருக்க தாகம் அடங்கும். இதனுடன் இதரச் சரக்

குகளைக்கூட்டி அவிழ்தங்களாகச் செய்வதுமுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

இஞ்சி லேகியம்.

இஞ்சியின் மேற்றோலைச் சீவி பொடியாக அரிந்து அகலப் பீங்கான் தட்டுகளில் போட்டு இரவியில் வைத்துலர்த்தி இடித்து எடுத்த சூரணம் பலம் 5, திப்பிலி, கிராம்பு, ஏலம், சீரகம், மிளகு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கோஷ்டம், கடுக்காய், தாளிசப் பத்திரி, சிறுநாகப்பூ, அதிமதுரம் இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் ½ ஒருமிக்கக் கலந்து வைத்துக்கொள்க. அப்பால் ½ வீசை சீனி சர்க்கரையை ஜலம் விட்டுக் கரைத்து வடிகட்டி அடுப்பிலேற்றி பாகுபதம் வருஞ்சமயம் முன் சித்தப்படுத்திய சூரணத்தைக் கொட்டிக் கிளறி கீழிறக்கி ஆறவிட்டுப் போதிய அளவு நெய், தேன் விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்க. இதனை வேளைக்குக் கழற்சிக்காய் அளவு அந்தி சந்தி கொடுத்துவர தீபனத்தை உண்டாக்குவதுடன் இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள பிணிகள் நீங்கும்.

இஞ்சித் தைலம்.

நன்றாய்த் தேறின இஞ்சியைக் கொண்டுவந்து மேற்றோலை நீக்கி அம்மியில் வைத்து அரைத்துப் பிழிந்து சாறெடுத்து, தெளிய வைத்து கலங்காமல் வடித்து அதற்குச் சமனளவு பசுவின் பாலாவது அல்லது முலைப்பாலாவது கூட்டி இவ்விரண்டும் சேர்ந்த எடைக்கு நல்லெண்ணெய் சேர்த்து ஓர் பழகின மட்பாண்டத்தில் விட்டு அடுப்பில் ஏற்றிச் சிறு தீயாக எரித்து, வண்டல் மெழுகுபதம் வரும்போது கீழிறக்கி ஆறவிட்டு வடித்துப் புட்டியில் பத்திரப் படுத்துக.

இத் தைலத்தைக் கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்துக்கொண்டுவர, நீர்ப்பீநசம், ஜலதோஷம், தலைவலி, கழுத்து நரம்பு இசிவு, சிரபாரம், அடுத்து அடுத்து வரும் தும்பல் முதலிய பிணிகள் போம்.

இடிக்கொள்ளு.

(Cassia Absus).

ஊறுகின்ற தேமலுட னுற்ற கோறுக்குரணம்
சீறுகின்ற கண்ணோயுந் தீருமே—கூறும்
மலபந்த நீங்கும் மகியிலிடிக் கொள்ளின்
நலமிதுவா மென்றே நவில்.

குணம்:—(இ-ள்.) இடிக்கொள்ளால் படர்தாமரை, ஆண். குறிகளிலுண்டாகின்ற விரணம், கண்ணோய், மலக்கட்டு முதலியவை கள் போம்.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இடிக்கொள்ளின் விதையைத் தேயாத சந்தனக் கல்லின்மீது இரண்டொரு துளி சுத்தசலம் விட்டு உறைத்துக் கண்களுக்கு அஞ்சனமாகத் தீட்டக் கண்பார்வை அதிகப் படும். இதை நன்ருய் மைபோல் அரைத்துச் சீலையில் தடவி ஆண் குறியில் வரும் விரணங்களுக்குமேல் அழுந்தப் போட்டுவைக்க ஆறும். இதன் சுத்தமான மாவை கருகாமல் நெருப்பனலில் சிறிது வெதுப்பிக் கண் இரப்பைகளில் ஓர் உளுந்து நிறை தூவிவரச் சீழ் கொண்ட விரணங்கள் ஆறும். இதனைப் பழச்சாறுவிட்டு அரைத்துப் படைகளுக்குத் தடவ ஊறலடங்கி ஆறும். இதனை வேக வைத்து எடுத்த சலத்தில் போதிய அளவு உப்பு, புளி, மிளகாய் கூட்டி ரசமாகவைத்துத் தாளிதம்செய்து ஸ்திரீகள் அன்னத்தில் உபயோகப்படுத்த முலைப்பால் சுரக்கும்.

இண்டு.

(Mimosa Spinosiliqua. Small variety).

பீநசத்தைப் போக்கும் பெருகியதோர் நீரேற்றந்
தானசிக்கச் செய்யுமிது சத்தியங்காண்—வானசைக்கும்
மண்டைக் குடைச்சல் மருவுமுக சந்நியும்போம்
பண்டையுற்ற யிண்டிதனைப் பார்.

குணம்:—(இ-ள்.) இண்டின் கொடியினுல் பீநசம், சலதோஷம், கபாலக் குடைச்சல், முகசந்நிபாதம் ஆகிய இவைகள் போம்.

செய்கை:—கபஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:— இண்டந்தண்டைத் துண்டு துண்டுகளாக நறுக்கி வாயினுல் ஊதி எடுத்த $\frac{1}{2}$ அவுன்ஸ் சலத்தில் $\frac{1}{2}$ பணவெடை திப்பிலி சூரணமும், $\frac{1}{2}$ பணவெடை பொரித்த வெங்காரமும்போட்டு கலக்கித் தினம் ஒருவேளை 3நாள் கொடுக்க, ஈளை, இருமல் குணமாகும். இன்னும் இதனைக் குழந்தைகளுக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு கொடுக்கக் கப சம்பந்தமான ரோகம், மாந்தம் முதலியவைகள் குணமாகும். இதனுடன் இதரச் சரக்கு

களைக் கூட்டி எண்ணெயாகக் காய்ச்சி உபயோகப் படுத்துவது முண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

அஷ்டகணமாந்த எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்குப் படி ½ ஆக ஒரு பழகின மட்பாண்டத்தில் விட்டு அதனில் கிளுவைப் பட்டை, கருவேலம்பட்டை, வெள்ளை வெங்காயம், இண்டங் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, சீரகம் பலம் ½, காய்ச்சுக்கட்டி பலம் ⅛ இவைகளை அரைத்துப்போட்டு அடுப்பிலேற்றிப் பதமுறக் காய்ச்சி வடித்துத் தினம் ஒருவேளை தேக்கரண்டி அளவு கொடுக்கக் குழந்தைகளுக்குக் காணுகின்ற அஷ்டகணமாந்தம் தீரும்.

மாந்த எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் படி ½, ஈயக்கொழுந்து சாறு படி 1, இவைஇரண்டையும்ஒருதைலமட்பாண்டத்திலிட்டுஅடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துச்சாறு சுண்டி வண்டல் இளம்பதமாக இருக்கும் போது, ½ பலம் கருஞ்சீரகத்தை இடித்து வஸ்திரகாயம் செய்து போட்டு நன்றாய்க் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடிகடத்தில் ½ விராக னெடை உயர்ந்த கோரோசனத்தைச்சன்னமாகஅரைத்துப் போட்டு மெல்லிய சீலை கட்டி எண்ணெயை வடித்துக்கொள்ளவும், சூடு ஆறின பின் எண்ணெயை நன்றாய்க் கலக்கிச் சீசாவில் பத்திரப்படுத் துக. வேண்டும்போது ஷை எண்ணெயை நன்றாய்க் கலக்கிக்குழந்தை கள் பருவத்திற்கு ஏற்றவாறு ½, 1, 1½ தேக்கரண்டி வீதம் தினம் ஒருவேளை காலை நேரத்தில் கொடுத்துவர பேதியாகும்.

இத்திக்காய் பிஞ்சு.

(Ficus Virens or Ficus Tsicla. Tender Fruit).

வாயுமலக் கட்டு மலக்கழிச்சல் கால்வழியே
சாயு மசிர்க்குள்ளே தங்குவெப்பி—னேயினங்க
ளெத்திக்கா தாரமுற் றிருப்பனவி ராவேகல்
லித்திக்காய் பிஞ்சுகளை யெண்.

குணம்:—(இ-ள்.) இத்திக்காய் வாத மலபந்தத்தைப் போக்கும். இதன் பிஞ்சு, அதிசாரம், பெரும்பாடு, உட்சூட்டினால் பிறக்கின்ற பல ரோகங்களையும் போக்கும் என்க.

செய்கை:—காய்க்கு—இலகுமலகாரி, பிஞ்சுக்கு—சங்கோசன காரி, வித்துக்கு—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:-வீசம் படி நடுத்தரமான இத்திக்காயை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டு அடுப்பில் வைத்து, ¼ படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிக் காலையில் சாப்பிட, மலம் தாராளமாய்ப் போகும். மேகக்கூடு தணியும்.

பால் நிறைந்துள்ள இத்திப்பிஞ்சைக் காலையில் ½, 1 பலம் சாப்பிட்டுவர, அதிசாரம், பேதி, கிராணி, உள்ளுறுப்பில் கண்ட விரணங்கள் போம்.

நன்றாய்ப் பழுத்துள்ள இத்திப்பழத்தின் வித்தை லேகியங்களில் சேர்த்துச் சாப்பிடத் தாது விர்த்தியுண்டாகும்.

இரத்தபோளம்.

(Aloe Indica).

விழுந்துதிரந் தங்கிமிக வீங்குமுரு வீக்க
மெழுந்துநிற்க வொட்டா விசுவே—டழுந்தி
யுரத்த மருமவலி யோடுமெதிர் நிற்கா
திரத்தபோ ளத்தை யெடு.

குணம்:—(இ-ள்.) இரத்தபோளத்தினால், விழுந்து இரத்தங்கட்டி அதன்மேலதிகரித்த நோவுடன் வீங்குகின்ற வீக்கமும், எழுந்து நிமிர்ந்து நிற்கவொட்டாத பக்கநோயும், மார்பின் உபத்திரவமும் நீங்கும் என்க.

செய்கை:—சிறிய அளவில்—பலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, அதிக அளவில்—மலகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:-இதனைச் சலம் விட்டு, குழம்பு பதமாக அரைத்துச் சிறிது நெருப்பில் கொதிக்கவைத்து, அடிபட்ட வீக்கங்களுக்கு மேல்தடவிவர இரத்தம் கட்டியிருப்பதைக் கரைத்து, வீக்கத்தை வாடச்செய்யும். இன்னும் இதனைப் பக்கவலி, இடுப்புவலி இவைகளுக்குப்போட, இரத்த ஓட்டத்தைச் சரிப்படுத்தி, நோயை குணப்படுத்தும்.

இந்தச் சரக்கு நிறத்தில் சிறிது பேதப்பட்டு இருப்பதேயன்றி முற்றிலும் கரியபோளத்தின் குணத்தைப் பெற்றிருக்கும். இன்னும் இதன் விசேடத்தைக் கரியபோளத்தின் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

இராக்காசிமடல்.
(Agave Americana).

வெட்டு ரணங்காயம் வீக்கமுறும் பல்வலியும்
முட்டும் பிரமேகம் மோதுகின்ற—கட்டிப்
பிடிப்பகற்றும் மாதே! பெரியவிராக் காசிச்
செடிப்பயனை யெல்லார்க்குஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) இராக்காசி செடியினால், வெட்டுகாயம் வீக்கம், பல்வலி, வெள்ளை, கட்டி, மேகவாயுவினால் உண்டான பிடிப்பு முதலியவைகள் குணமாகும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி, வியதா பேதகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இராக்காசியின் வேரையாவது, மடலை யாவது 5 தோலா எடை இடித்து, அதனுடன் $2\frac{1}{2}$ பலம் நன்னாரி வேர்த்தூள் கூட்டி ஒரு மட்பாண்டத்தில்போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாக சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை கொடுத்து வர ஸ்திரீ சம்பந்தத்தினால் ஏற்பட்ட கொருக்கு விரணம், கிரந்தி முதலியன போம். இதன் வேர்ப்பிசினை ஜலம்விட்டு தேன்பதமாகக் கரைத்து, சொறி, சிரங்கு களுக்குத் தடவ ஆறும். இதன் மடல் சாற்றை அடிப்பட்ட காயங் களுக்குத் தழும்பத் தடவிவரச் சீழ்கொள்ளாமல் ஆறும். இதன் பிசி னைப்பற்பொடிகளுடன் சேர்த்து உபயோகித்துவரப்பல்நோய்கள் நீங் கும்.இந்தச்செடியின் அடி கட்டையிலுள்ளமிருதுவானசதையுடன் சர்க்கரையைக் கூட்டிச் சாப்பிட வெள்ளை போகும். இதன் மடலைச் சீவி உள்ளிருக்கும் சதையை இலேசாக அரிந்து நோயுள்ள பாகங் களில் வைத்துக் கட்டக் குணமாகும்.

இராம சீத்தாப்பழம்.
(Anon Reticulata).

மந்தமுறும் தீபனத்தை மட்டாக்கும் மானிடர்க்கு
தொந்தச் சிரநோயைத் தோற்றுவிக்கும்—செந்திருவே
ஊற்றாய் கபஞ்சுரக்கு மூரி லுளராம
சீத்தாப் பழத்தின் சிறப்பு.

குணம்:—(இ-ள்.) இராம சீத்தாப்பழமானது ஜீவாக்கினி யைக் குறைத்து அஜீர்ணத்தை யுண்டாக்கும். இன்னும் தலைவலியை யுண்டாக்குவதுடன் கபத்தை அதிகமாக உண்டாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சாதாரணமாக இனிப்புள்ள சுவையின்பொருட்டுச் சாப்பிடுவதுண்டு. இதனை அதிகமாக அடுத்து உண்ணப்புகின் சீதளசம்பந்தமான ரோகத்தை யுண்டாக்கும்.

இருவாட்சி.
(Iruvatchi).

கண்ணொளிவு மெய்யிற் கமழ்மணமு நீடழகு
நண்ணும் வலிமூர்ச்சை நாசமாம்—பண்ணளியுங்
கங்குலும்வாழ் வார்குழலே! காரமொடு வெப்புமிகத்
தங்குமிரு வாட்சி தனக்கு.

குணம்:—(இ-ள்.) உஷ்ணமும், கார்ப்புச்சுவையும் உள்ள இருவாட்சியினால் நேத்திரப் பிரகாசமும், தேகத்தில் சுபாவ வாசனையும் வனப்புமுண்டாம். தேகக்குத்தலும், மூர்ச்சாரோகமும் போம்.

உபயோகிக்கும் முறை:—இதன் புஷ்பத்தைக் கூந்தலில் அணிந்துகொள்ள நறுமணம் வீசும், நல்ல வனப்பையும், போக இச்சையையும் உண்டாக்கும். இதன் வேர்ப்பட்டையில் வேளைக்கு தோலா $\frac{1}{4}$ வீதம் பஞ்சுபோல் தட்டி சீலையில் முடிச்சுக்கட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு $\frac{1}{8}$ படி பசுவின்பாலும், $\frac{1}{8}$ படி சுத்த ஜலமுங் கூட்டி அடுப்பிலேற்றி, $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி முடிச்சினை நீக்கி அதில் கற்கண்டைப் பொடித்துப் போட்டுக் கலக்கித் தினம் ஒருவேளை சாப்பிட்டுவர, கண்ணுக்கு ஒளியையும் தேகத்திற்கு அழகையும் உண்டாக்குவதுடன், வலி, மூர்ச்சை முதலியவற்றையும் நீக்கும்.

இருவி.
(Millet Stubble).

குத்துவலி மெய்மயக்கம் கோரத் தலைவலியு
மத்திசெய்யுஞ் சந்நி யடர்விக்க—வித்தரையில்
வாட்டமுற் றேடுங்கோள் வாரணிந்த பூவையரே!
காட்டிருவி கொண்டுண்ணுங் கால்.

குணம்:—(இ-ள்.) காட்டில் விளைகின்ற இருவியினால் வாத சீதளத்தினால் உண்டாகும் வலி, மயக்கம், தாளக்கூடாத தலைவலி, சந்நி, அடுத்துவரும் விக்கல் முதலியவைகள் போம் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:-இதனைத் தனியாகக் கொடுப்பது அரிது. இது நாபியைப்போல் விஷமுடைய சரக்காகும். இதனை சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு கோப்பையில்போட்டுச் சிறு குழந்தைகளின் அமுரிவிட்டு ஓர் இரவு ஊறவைத்து மறுநாள் வடித்துவிடவும். இப்படி 3 நாள் செய்தெடுக்க உயர்தரமான சுத்தியாகும். இத்தகைய சரக்குடன் இதர சரக்குகள் கூட்டி உபயோகப்படுத்துவது உண்டு. அவற்றுள் சில அனுபவமுறைகளாவன—

சஞ்சீவி மாத்திரை.

இருவி, நாபி, தாளகம், சூதம், கெந்தகம், பொரித்த வெங்காரம் வகைக்கு கழஞ்சி 3, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய் வகைக்கு கழஞ்சி 4. சுத்திசெய்த வாளம் கழஞ்சி 38, இவற்றுள் முதலில் சூதத்தையும், கெந்தகத்தையும் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்ருய்க் கறுப்பு நிறமாகி மடியும் வரையில் அரைக்கவும். அப்பால் மிகுதியுள்ள சரக்குகளையெல்லாம் ஒருமிக்க இடித்துச் சூரணம் செய்து கூட்டி நொச்சி இலைச்சாறு, கலியாணமுருக்கன் இலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு, கையாந்தகரை இலைச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு முதலியவற்ருல் வரிசைக் கிரமமாக ஒன்றன்பின் ஒன்ருகவிட்டு ஒவ்வொரு ஜாமம் அரைத்து மெழுகுபதத்தில் மிளகு அளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும். இந்த மாத்திரையில் வேளைக்கு 2-3-சுக்குக் கியாழத்தில் கொடுக்க 4-5 முறை பேதியாகும். ஜுரம், ஜந்நி, வாயு முதலியவைகள் போம். உளுந்தளவு செய்த மாத்திரைகளில் குழந்தைகளின் பருவத்திற் கேற்றவாறு 1-2 முலைப்பாலில் கொடுக்க மாந்தம், சுரம், வலி, சந்தி முதலியவைகள் போம்.

சுரசந்தி மாத்திரை.

சுத்திசெய்த இருவி, சுத்திசெய்த நாபி, மொட்டு நீக்கியகிராம்பு, மிளகு, மேல்தோல் சீவிய சுக்கு, அரிசிதிப்பிலி, சூதம், கெந்தகம், தாளகம், காந்தம், பொரித்த வெங்காரம் இவைகள் வகைக்குக் கழஞ்சி 1, இவற்றுள் இருவிமுதல் அரிசிதிப்பிலி ஈராக உள்ள 6 சரக்குகளையும் இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க. அப்பால் மீதியுள்ள சரக்குகளை முறையே ஒன்றின்பின் ஒன்றைக் கூட்டி நன்ருய் அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தைக் கூட்டி அத்துடன் சுத்திசெய்த நேர்வாளம் கழஞ்சி 2 கூட்டி

இஞ்சி சாற்ருல் 4 ஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்தவும். இந்த மாத்திரையைத் தினம் ஒருபொழுது காலை நேரத்தில் தேன், இஞ்சிசுரசம் முதலிய அனுபானங்களில் கொடுக்கச் சந்நி, சுரம் நீங்கும். மலம் ஒரு தடவை போனல் அன்று மாலை இம்மாத்திரையைக் கொடுக்கக் கூடாது. மலச்சிக்கல் இருந்து சுரம் நீங்காமலிருந்தால் இம்மாத்திரையை அன்று மாலையிலும் உபயோகப்படுத்தலாம்.

இரேவல் சின்னி.

(Rheum Emodi).

பேதிதனை யுண்டாக்கும் பித்தந் தனையெழுப்புந்
தோதக் குடலதனைச் சுத்திசெய்யு—மோதியகால்
பேதிக்குந் தாதுவைப்பெ ருக்கிவிடு மெப்பொழுதும்
பேதிக்கி ழங்கதனைப் பேசு.

குணம்:—(இ-ள்.) பேதிக்கிழங்கு, விரேசனம், பித்தாதிக்கம், குடற்சுத்தி, வீரியவிருத்தி இவைகளை யுண்டாக்கும் என்க.

செய்கை:—மலகாரி, சங்கோசனகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கைப் பொடிசெய்து தேகதிடத்திற்கு ஏற்றவாறு 10-20 குன்றி எடை தேனிலாயினும் வெந்நீரிலாயினும் அல்லது சுக்குக் கியாழத்திலாயினும் கலந்து கொடுக்க சாந்தமான பேதியாகும். இது துவர்ப்பு குணமுடையதாதலால் அடுத்தநாள் மலத்தைக் கட்டிவிடும். இது மலபந்தமுடையவர்களுக்கும், பாண்டுரோகத்தையுடையவர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் அதிகச் சிறந்தது. அதிசார பேதியில் கெட்ட மலம் உள்தங்கி இருப்பதாக உணரின் இதைக் கொடுக்க பழையமலத்தை வெளியாக்கி மலத்தைக் கட்டிவிடும். இதில் 1½ முதல் 4 குன்றி எடைகொடுக்க நல்ல தீபனத்தை யுண்டாக்கும்.

இலந்தைப் பழம்.

(Zizyphus Jujuba Fruit).

பித்த மயக்கருசி பேராப் பெருவாந்தி
மொத்தனில மெல்லா முடிந்திடுங்காண்—மெத்த
வுலர்ந்த வெறுவயிற்றி லுண்டா லெரிவா
மிலந்தை நறுங்கனியை யெண்.

குணம்:—(இ-ள்.) இலந்தைப் பழத்தால் பித்தமூர்ச்சை அரோசகம், திரிதோஷவாந்தி, வலிவாதம் இவைகள் போம். இதைப் பசியிலுண்டால் எரிவந்தமுண்டாம்.

செய்கை:-கபஹரகாரி, இலகுமலகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தைப் பகல் ஆகாரத்திற்குப் பின்னர் உண்பது நலம். இதனால் உண்ட உணவு எளிதில் ஜீரணமாவதுடன், பித்தமும் கபமும் சாந்தப்படும். அதிக அளவு உண்பவர்களுக்கு மறுநாள் மலம் இளகலாகப் போகும்.

புழுக்கள் இல்லாத சுத்தமான பழத்தை கொட்டையுடனுவது அல்லது கொட்டைகளை நீக்கியாவது பிசைந்து போதிய அளவு உப்பு, மிளகாய்த்தூள் கூட்டி வடை தட்டிக் காய வைத்து உபயோகப் படுத்துவாருமுளர். இதனால் வாந்தி, பித்த அரோசிகம், அக்கினிமந்தம், கபக்கட்டு முதலியவைகள் நீங்கி நல்ல பசிதீபனம் உண்டாகும்.

இலந்தைமரம்.
(Zizyphus Jujuba).

வேருக்கா யாசம் விலகும் பசியுண்டாஞ்
சீரோத் திடுமிலைக்குச் சீழ்மூலஞ்—சோரிவிழல்
மேவெரிச்ச லுங்கடுப்பு மேகபித்த மும்போகுந்
தாவும் விழியாயிலந் தை.

குணம்:—(இ-ள்.) இலந்தைமர வேர் அயர்ச்சி நீக்கும், தீபாக்கினியை உண்டாக்கும். இலைக்குச் சீழ்மூலம், ரத்தாதிசாரம், தேக எரிச்சல், வயிற்றுக் கடுப்பு, பித்தமேகம் ஆகிய இவைகள் போகும்.

செய்கை:—வேருக்கு—ஜடராக்கினிவர்த்தினி, இலைக்கு—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டைக்கும் கொழுந்து இலைக்கும்துவர்ப்புக்குணமுண்டு. இவைகளைச்சீதபேதிக்கும்,இரத்த பேதிக்கும் கொடுப்பதுண்டு. $\frac{1}{4}$-$\frac{1}{2}$ ரூபாய் எடை பட்டையைத் தயிரில் அரைத்துக் கொடுக்கவும். அல்லது துளிர் இலையை நன்றாய் அரைத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் தயிரில் கலந்து கொடுக்கவும். இப்படி 2-3 முறை கொடுப்பதற்குள் வயிற்றிலுண்டான கொதிப் படங்கி வயிற்று கடுப்பு, ரத்தபேதி இவைகள் நீங்கும். இதன் பட்

டையை நன்ருய்த் தூள்செய்து தேங்காய் எண்ணெயுடன் மத்தித்துச்சிரங்குகளுக்கும் காயம்பட்ட விரணங்களுக்கும் மேல்தடவிக் கொண்டுவர ஆறும். இதன் பட்டையைப் பஞ்சுபோல் நறுக்கி $\frac{1}{2}$ பலம் அளவிற்கு ஓர் மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி ஜலம் விட்டு $\frac{1}{16}$ படி அளவிற்குக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவரச் சுரத்திலெழுந்த அழற்சி, சந்நி இவைகள் போம். இதன் கொழுந்து இலையை நன்ருய் அரைத்து எவ்விதமான கட்டிகளுக்கும் வைத்துக் கட்டிக் கொண்டுவர அடங்கிவிடும்.

இலவங்கப்பட்டை.

(Cinnamomum Aromaticum).

தாதுநட்டம் பேதி சருவவிட மாசியநோய்
பூதகிர கஞ்சிலந்திப் பூச்சிவிடஞ்—சாதிவிட
மாட்டுமிறைப் போடிரும லாதியநோய்க் கூட்டமற
வோட்டு மிலங்கத் தரி.

குணம்:—(இ-ள்.) இலவங்கப்பட்டையானது சுக்கில நஷ்டம் அதிசாரம், பற்பல விஷங்கள், வாயை யநுசரித்த வாதம், தேவ பூதமாகிய கிரகங்கள், சிலந்திவிஷம், பாம்புவிஷம், சுவாசகாசம் முதலிய நோய்களை நீக்கும்.

இந்த இலவங்கப்பட்டை இனத்தில் பெரிய இலவங்கப் பட்டை என்றும் சன்ன இலவங்கப்பட்டை என்றும் இரண்டு விதங்களுண்டு. அதில் முன்னெழுதப்பட்டுள்ள சூத்திரத்தில் கண்ட குணங்களெல்லாம் பெரிய இலவங்கப்பட்டைக்கு உடைத்தானதென் றுணர்க.

செய்கை:—உதரவாதஹரகாரி,உற்சாககாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சிறிது வறுத்திடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 5-10 குன்றி எடை தேனில் கொடுக்கலாம். அல்லது இதரச் சரக்குகளுடனும் கூட்டிக் கொடுக்கலாம் இது மூளை, இருதயம் முதலிய உறுப்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சந்நி, சயித்தியம், நடுக்கல், கண்துடிப்பு முதலியவற்றை நீக்குவதுடன் வாயுவையும் கண்டிக்கும், ஸ்திரீகளுக்கு மாதவிலக்குக் காலத்தில் தடைப்பட்டுள்ள உதிரத்தை விரைவில் வெளிப்படுத்தும். இச் சூரணத்தைப் பற்பொடிகளில் சேர்த்து உபயோகிக்க வாய்நாற்றம்

பல்லீற்றின் சுரப்பு, பல்வலி முதலியவற்றைக் கண்டிக்கும். இந்தப் பட்டையை முலைப்பாலில் உரைத்துக் கண்களுக்குத் தீட்டப் பார்வையையுண்டாக்கும். இன்னும் இது வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டித்து மலக்கழிச்சலைக் கட்டுகிற சுபாவமுடையதாதலால் குழந்தைகளுக்கு விசேஷமாக உபயோகப்படுகின்றது. இதனைக் கறிமசாலையில் கூட்டிப் பதார்த்தங்களிலிட்டு உண்ண அதிக சுகத்தைக் கொடுக்கும்.

இலவங்கப்பத்திரி.

(Cinnamum Tamala).

மேகசுரஞ் சீதசுரம் வெட்டைசுவா சங்காசந்
தாகபித்தம் வாந்திசர் வாசியநோய்—மேகத்தின்
கட்டியோடு தாதுநட்டங் கைப்பருசி போக்கிவிடு
மிட்டவில வங்கத் திலை.

குணம்:—(இ-ள்.) இலவங்கப்பத்திரி பிரமேகம், சுரம், குளிர் சுரம், வெள்ளை, இரைப்புஇருமல், பித்ததாகம், வமனம், விவுர்தாசியம், சம்விவுர்தாசியம், மேகப்பிடகம், சுக்கில நட்டம், வாய்க் கசப்பு, அரோசகம் இவைகளை நீக்கும்.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக இந்த இலையைப் பெருந் துண்டுகளாக நறுக்கி இதனுடன் இலவங்கப்பட்டை, மொட்டு நீக்கிய கிராம்பு, ஏலக்காய், அன்னாசிப்பூ, சோம்பு சிறிய அளவாகக்கூட்டி நெய்யில் வாசனையுண்டாகப் பொரித்துத் தாளித முறையில் ஆட்டுக்கறி குருமா, கோழிக்கறி குருமா, வடைக்கறி, புலவு, பிரிஞ்சி முதலியவற்றில் சமையல் பாகப்படி கூட்டுவதுண்டு. இது பதார்த்தங்களுக்கு நறுமணத்தையும், ருசியையும் கொடுப்பதல்லாமல் ஆகாரத்தை எளிதில் ஜீரணமாகும்படி செய்யும். வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். மலத்தைக் கட்டும்.

இந்த இலையைப் பொன்மேனியாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு வேளைக்கு 5-10 குன்றி எடை தேனில் தினம் 2-3 வேளை கொடுத்துவரக் கபத்தைக் கரைக்கும். வயிற்றிலுள்ள விரணத்தை ஆற்றும். இன்னும் இதனைப் பலவித சூரணங்களிலும், லேகியங்களிலும் சேர்ப்பது வழக்கம்.

இலவங்கப்பூ.

(Myrtus Caryophyllus).

பித்த மயக்கமறும் பேதியோடு வாந்தியும் போம்
சுத்தவிரத் தக்கடுப்புந் தோன்றுமோ—மெத்த
விலவங்கங் கொண்டவருக் கேற்றசுக மாகு
மலமங்கே கட்டுமென வாழ்த்து.

(இதுவுமது)

சுக்கிலநட் டங்கர்ணச் சூர்வியங்க லாஞ்சனந்தாட்
குக்கல்விடாச் சர்வா சியப்பிணியு—மக்கிக்குட்
டங்கப்பூ வோடு தரிபடருந் தோன்றிலில
வங்கப்பூ வோடுரைத்து வா.

குணம்:—(இ-ள்.) இலவங்கப்பூவுக்குப் பித்தகோபம், அதிசாரம், சர்த்தி, உதிரக்கிராணி, ஆசனப்பிடுங்கல், க்ஷீணவிந்து, செவிநோய், சிவந்த கறுத்த மச்சங்கள், விவுர்தம், சம்விவுர்தம் என்கிற ஆசியவாதங்கள்,கண்ணில் பூப்படர்தல் முதலிய நோய்களைநீக்குகின்ற குணங்களுண்டு. மலக்கட்டும், சவுக்கியமும் உண்டாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி, வமனகாரி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 5-6 குன்றி எடை தேனில் மத்தித்துத் தினம் இருவேளை கொடுக்கலாம். இதனால் உறுப்புக்களுக்குப் பலம் ஏற்படும். இந்தச் சூரணத்தின் எடைக்குச் சமன் பனைவெல்லம் கூட்டியரைத்து ஸ்திரீகளுக்கு மாதவிடாயிருக்கும் காலத்தில் வேளைக்கு 1 விராகனிடை கொடுத்துவர 3 நாளில் உதரச்சிக்கையும், அது சம்பந்தமான அடிவயிற்றின் வலியையும் குணப்படுத்தும். சந்தானமும் உண்டாகும். இந்த இலவங்கப்பூவை முலைப்பால்விட்டு உரைத்து ஜலதோஷம் கண்டவர்களுக்கு நாசியின்பேரிலும், தலைவலி கண்டவர்களுக்கு நெற்றியின் பேரிலும் பற்றிடின் குணமாகும். இந்த இலவங்கப்பூவின் சூரணத்தைப் பற்பொடியில் சிறிதுகூட்டிப் பல்தேய்த்துவர வாய்நாற்றம்,பல் லீற்றின் சுரப்பு, பல்வலி முதலியவைகள் குணமாகும். இவைகளுமல்லாமல் இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு அவற்றுள் சில முறைகளாவன—

ஜீவசக்தி திராவகம்

கிராம்பு தோலா 2, ரோஜாப்பூ, துரிஞ்சிப்பழத்தோல் வகைக்குத் தோலா 3, பச்சைவெற்றிலை தோலா 1 இவைகளையெல்லாம் இடித்து ஒரு பானையில் போட்டு 1 படி சலம் விட்டு ஓர் இரவு வைத்து மறு நாள் வாலையைச்செருகிச் சீலைசெய்து அடுப்பில் வைத்து எரித்துக் காலேயரைக்கால் படிக்குத்தீநீர் வாங்கிப்புட்டியில் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் கொடுத்துக்கொண்டுவரப் பசிதீபனத்தை அதிகப்படுத்தும். உள்ளுறுப்புக்களுக்குப் பலத்தைக் கொடுக்கும். வாதரோகத்தையும் சயித்தியத்தையும்குணப்படுத்தும்.

இலவங்காதிச் சூரணம்

கிராம்பு, சிறுநாகப்பூ, விலாமிச்சம்வேர், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளைச் சமனெடையாக நிறுத்து இடித்துச் சூரணமாகச் செய்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது சமனெடை சர்க்கரை கூட்டித் திரிகடிப்பிரமாணம் கொடுக்க மந்தாக்கினி, வாந்தி, அரோசகம், வயிற்றுப்பிசம் இவைகள் போம்.

சந்நி கலிக்கம்

கிராம்பு, துவரம்பருப்பு, மேட்டுப்பூச்சு இவைகளை முலைப் பாலில் சிறிது உரைத்துக் கண்களில் கலிக்கம்தீட்ட சந்நி, மூர்ச்சை இவைகள் தெளியும்.

இலவமரம்.

(Eriodendron Anfractuosum).

நீர்கடுப்பு நீரெரிவு நீண்டொழுகு மேகமும்போ
மார்க்கும்விந் தோடைக்கு மாண்மையுறும்—பார்க்குள்
நிலவு மதிவதன நேரிழையே ! வெப்பா
மிலவு மரத்தா லியம்பு.

குணம்:—(இ-ள்.) உஷ்ணமுள்ள இலவமரத்தினால் வாதகிரிச்சரம், எரிமூத்திரம், தந்துமேகம் இவைகள் போம். சுக்கிலமும் ரசதாதுவும் பலப்படும்.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி, தாதுக்ஷீணரோதி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டைச் சூரணத்தை வேளைக்குக் கால் தோலா எடை, சர்க்கரை, நெய், தேன் முதலிய அனுபானங்களில் மத்தித்துத் தினம் 2 வேளை கொடுக்கச் சீதபேதி,

உஷ்ணபேதி, இரத்தபேதி, சாந்தமாகும். வெட்டுக் காயங்களுக்கு இதன் சூரணத்தைச் சன்னமாக வஸ்திரகாயம்செய்து மேல் தூவ இரத்தம் மேலிட்டுவராமல் நிறுத்தி இரணத்தையும் ஆற்றும். இதன் சூரணத்தை மோரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கப் பெரும்பாடு குணமாகும். இதன் வேர்ப்பட்டைச் சூரணத்தைப் பாலில் கலக்கிக் கொடுக்க நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், வெள்ளை, இரத்தவெள்ளை குண மாகும்.

இலவம்பிசின்.

(Eriodendron Anfractuosum Gum).

மேகவெட்டை நீர்ச்சுருக்கு மெய்யனற்கி ரிச்சரத்தின்
வேகமதி சாரமென விள்ளுநோ—யேகவென்றல்
வாரணியுங் கும்பமுலை மாதே மறைப்பின்றிப்
பூரணி ரசத்தைப் புகல்.

குணம்:—(இ-ள்.) இலவம்பிசினால் பிரமேகவெள்ளை, மூத் திரக்கடுப்பு, உட்சுரம், கிரிச்சாவேகம், பேதி ஆகிய இவைகள் நீங் கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இலவம் பிசின் சூரணத்தை வேளைக்கு 3-5 குன்றி எடை நெய், தேன், சர்க்கரை இவைகளி லேதேனும் ஒன்றில் மத்தித்துத் தினம் 2 வேளை கொடுக்கப் பிரமேகம்,மூத்திரக் கடுப்பு, உட்சுரம் இவைகள் போம். இச் சூரணத்தைப் பாலில் கலக் கிச் சாப்பிட இந்திரியம் பலப்படும். இச் சூரணத்தை நெய்யில் குழைத்து இரணங்களுக்குப்போட விரைவில் ஆறும்.

இலுப்பை நெய்.

(Bassia Latifolia Oil).

கரப்பா னடருங் கடிசிரங்கு புண்ணு
முரப்பா மிடுப்புவலி யோடுங்—கரப்பான
பாகுமொழி மாதே பலமுண்டாங் துற்பலம்
தேகு மிலுப்பையினெய்க் கே.

குணம்:—(இ-ள்.) இலுப்பை நெய்யால் கரப்பான், கடிவிஷம், சிரங்கு, விரணம், வன்மை பொருந்திய இடுப்புவலி இவைகள் போம். இன்னும் (நரம்புகளுக்கு) வன்மையைத் தரும்.

உபயோகிக்கும் முறை:—புதிய இலுப்பை எண்ணெய்க்கு நல்லச் சுவையுண்டு. இதனைக் குழந்தைகளுக்குண்டான மண்டைக் கரப்பான், கை கால்களில் வருகின்ற சொறிசிரங்கு இவைகளுக்குத் தடவிவர ஆறும். இந்த எண்ணெயைச் சிறிது நெருப்பனலில் வெதுப்பித் தாளக்கூடிய சூட்டில் இடுப்புவலி, நரம்புகளின் பல யீனத்தால் உண்டான நடுக்கம் முதலியவற்றிற்கு நன்றாய்த் தேய்த்து வெந்நீர் தாரையாக விட்டுக்கொண்டுவரக் குணமாகும். இதனை ஏராளமாகச் சவுக்கார வைப்பில் கூட்டுவதுண்டு. இந்த எண்ணெயில் திரிவங்கங்களை உருக்கி 7-9 முறை சாய்க்க அதிலுள்ள குற்றங்கள் நீங்கிச் சுத்தியாகும்.

இலுப்பைப் பிண்ணாக்கு.

(Bassia Latifolia Cake).

பொத்திக் கடுவனொடு புண்ணுங் கரப்பனும்போம்
வித்நதைப்பு தோஷமிவை வீருவாம்—மெத்தேனவே
யெண்ணெய்க் கசிவுகளு மேகு மிலுப்பைவிதைப்
பிண்ணாக்குக் கென்றறியப் பேசு.

குணம்:—(இ-ள்.) இலுப்பைப் பிண்ணாக்குக்குக் கடுவன் விரணம், கரப்பான், பீஜவீக்கம், திரிதோஷம், எண்ணெய்ச்சிக்கு இவைகள் நீங்கும்.

செய்கை:—வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதற்கு வாந்தியாகின்ற குணமுண்டு. இலுப்பைப் பிண்ணாக்கை 1 தோலா நிறை அம்மியிலிட்டுச் சுத்த சலம் விட்டரைத்து 2-3 அவுன்ஸ் சலத்தில் கலக்கிக் கொடுக்கத் தற்கொலைக்காக உட்கொண்ட நஞ்சுப்பொருளை வெளியாக்கும். சுமார் 15 நிமிஷத்திற்குள் வாந்தியாகாவிடின் மீண்டும் முன்போல் கொடுக்கவும். இத்தகைய சிகிச்சையில் பிழைத்துள்ளார் பலர். இதனைப் பொடிசெய்து நெருப்பனலில் போட்டுப் புகையை யுண்டாக்க வீடுகளில் உண்டான கொசு, மேட்டுப்பூச்சி, பல்லி, எலி முதலிய வைகள் சாகும். நல்லெண்ணெய் சிரசிற்கு இட்டு ஸ்நானம் செய்யும் போது சிகைக்காய்க்குப் பதிலாக இந்த இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்ய எண்ணெய்ச்சிக்குப் போம். இலுப்பைப் பிண்ணாக்கு, பூவரசம்பட்டை, வேப்பம்பட்டை இவை

களைச் சுட்டுக் கரியாக்கி சமனெடையாக எடுத்துக்கொண்டு அதனில் நான்கிலொரு பங்கு கார்போக அரிசி மஞ்சள்கூட்டி அரைத்துத் தேங்காய் எண்ணெயில் குழம்புபதமாகக் கலக்கிக் குழந்தைகளுக்கு வரும் மண்டைக்கரப்பான், சொறிசிரங்கு இவைகளுக்குப்போட ஆறும்.

இலுப்பைப் பிண்ணாக்கையும் சாம்பிராணியையும் சமனெடையாகத் தூள்செய்து கரிநெருப்பனலின்மீது தூவி அதிலிருந்து வரும் புகையைச் சாதாரணமாகக் கால்களில் வருகின்ற சேற்றுப் புண்ணுக்குப் பிடித்துக்கொண்டுவர **2-3** வேளையில் குணமாகிவிடும்.

இலுப்பைப் பிண்ணாக்கைச் சலம்விட்டரைத்து அதனை ஒரு கரண்டியில் வழித்தெடுத்து அடுப்பில் வைத்துக் களிபோல் கிளறி வீக்கம்கொண்ட விரையின்பேரில் வைத்துக் கட்டிவர **2-3** முறைக்குள் வீக்கம் வாடும்.

இலுப்பைப் பிண்ணாக்கைச் சிறிது சுட்டுப் பொடியாக்கி நாசியில் வைத்தூத மூர்ச்சை, சந்நி இவைகள் தீரும். உடனே உஷ்ண வீரிய மருந்துகளைக்கொண்டு பரிகாரம் செய்க.

இலுப்பைப் பிண்ணாக்கு, கறிமஞ்சள், எருக்கம்பூ இவைகளை அம்மியிலிட்டுக் குழம்புபதங்காணச் சிறிது சலம்விட் டரைத்துச் சிறிது சுண்ணாம்புகூட்டிக் கரண்டியிலிட்டுக் களிபோல் கிளறிக் குதிக்காலில் காண்கிற கட்டிகளுக்கு வைத்துக்கட்டச் சீழ் அதிகமாகக் கொள்ளாதிருப்பின் அழுந்திவிடும். சீழ்கொண்டு பழுக்கும் சமயமாக இருந்தால் உடைத்துக் கொள்ளும்.

இலுப்பைப்பூ.

(Bassia Latifolia Flower).

குன்று விலுப்பையின்பூ கூர்மதுரம் வாசனையாந்
தின்றூற் பயித்தியமுஞ் சேருங்காண்—மன்றலுறுந்
தார்குழலே பித்தசுரந் தாகந் தணிந்துவிடும்
வார்தயக்க மெய்தும் வழுத்து.

குணம்:—(இ-ள்.) உருசியும், பித்தமணமும் உள்ள இலுப்பைப் பூவினல் பித்தசுரமும், தாகரோகமும் நீங்கும். இதனல் அதிபித்தமும், பிரமையும் உண்டாகும்.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, சங்கோசன காரி, நாசிநீர்விர்த்தினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனிலிருந்து சாராயம் காய்ச்சப் படும். இது சாதாரணமாக சீமையிலிருந்து வருகின்ற பிராந்திக்குச் சமமாக இருக்கும். ஆனால், இது அதிக பித்தத்தையுண்டாக்கும். ஒரு தோலா நிறையுள்ள புஷ்பத்தை வீசம்படி பசுவின்பாலில் போட்டுக் காய்ச்சித் தினம் ஒருவேளை கொடுக்கத் தாதுவிர்த்தியை யுண்டாக்கும். அங்ஙனம் குணம் இல்லையாயின் மறுநாள் $\frac{1}{2}$-1 தோலா புஷ்பத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும். இது சுரத்தை யும் தாகத்தையும் நீக்கும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

பித்தசுரக் கியாழம்.

இலுப்பைப்பூ, சுக்கு, அதிமதுரம், சோம்பு, நன்னாரி, வில்வ வேர், நெருஞ்சிமுள், ஆற்றுமணல், நெல்லிவற்றல், விளாம்பழத் தின் மேல்ஓடு, நெற்பொரி, விலாமிச்சம்வேர், திராட்சைப் பழம் வகைக்கு பலம் $\frac{1}{4}$ ஆக 1 படி சலத்தில் போட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண் டக்காய்ச்சி வடித்துத் தினம் 2 வேளை $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் மூன்று நாள் கொடுக்க எவ்வகைப் பித்தசுரமும் போம். இன்னும் இக் கியாழம் பாரிசவாயுவினாலுண்டான மயக்கம், வாய் உளறல் முதலியவற்றிற்கு அதிக நன்மையைத் தரும்.

இலுப்பை வித்து.

(Bassia Latifolia Seeds).

அந்தமுறும் நல்லிலுப்பை யாகும்வித் தோன்றதினல்
அந்தர வாய்வகலு மாரறிவார்—மந்திரமேன்
பொல்லா விஷம்போக்கும் பூவி னிடையுற்று
ரெல்லார்க்கும் நன்மைதரு மெண்.

குணம்:—(இ-ள்.) பார்வைக்கு அழகாக இருக்கின்ற இலுப்பை வித்தினால் அந்தரவாயு போகும். இன்னும் மந்திரமில்லாமலே இந்த வித்தின் உபயோகத்தால் பல பூச்சிக்கடி விஷங்களும் போம்.

உபயோகிக்கும் முறை:—இலுப்பை வித்தை அரைத்து மேலுக் குத் தடவ அந்தரவாயு, பூச்சிக்கடி விஷங்கள் முதலியவை குண மாகும்.

இலுப்பைவேர்.

(Bassia Latifolia Root).

புண்ணும் புரையுமறும் போதத் துவர்ப்பாகு
மெண்ணு மகக்கடுப்பி ருக்குமோ—பெண்ணேகேள்
நீரிழிவு மேகும் நெடுமோமை* மூலத்தாற்
போரடர்க டுப்பிரத்தம் போம்.

(இதுவுமது)

மந்த மரோசிம காசூலே சர்வசுரம்
விந்துநஷ்டந் தாகமோடு மெய்யிளைப்பும்—முந்த
அலுப்பைப்பெற் றேகு மளகத்திற் காகா
விலுப்பைக்குச் சூடதிக மெண்.

குணம்:—(இ-ள்.) துவர்ப்பாகிய இலுப்பைவேரினால் விரணம், புரை, வயிற்றுக்கடுப்பு, அதிமூத்திரம், இரத்தக்கிராணி, அக்னி மந்தம், அருசி, வாதசூலே, சகல சுரம், விந்து நஷ்டம், தாகம், தேக அயர்வு ஆகியவை நீங்கும். தலேரோமங்களுக்கு ஆகாது. உஷ்ண காரி என்க.

செய்கை:—வியதாபேதகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தோலா எடையுள்ள வேர்ப் பட்டையை நன்றாய் நறுக்கி ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி ஜலம் விட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடிகட்டி இருவேளை கொடுத்துக் கொண்டுவர மேகவாயுவைக் கண்டிக்கும். இதன் பட்டையைச் சிறிது கசகசாவுடன் சேர்த்தரைத்து உடம்புக்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவரச் சொறிசிரங்குகள் ஆறும். இலுப்பைவேர், வில்வவேர், அதிமதுரம், சுக்கு, சிற்றாமுட்டி வகைக்குக் கழஞ்சி 2 இவைகளை நன்றாய் இடித்து ஒரு புது மட்கலயத்தில் போட்டு 2 படி ஜலம் விட்டு $\frac{1}{2}$ படி திட்டத்திற்குக் காய்ச்சி வடிகட்டி அதனில் வீசம்படி நெற்பொரியை உமியில்லாமல் ஆய்ந்து போட்டுக் கஞ்சிபோல் காய்ச்சிக் கொடுத்துவர அசாத்தியமான பித்தசுரம் நிவர்த்தியாகும்.

---

* ஓமை = இலுப்பை.

இலைக்கள்ளி.

(Euphorbia Nerifolia).

காதுவலி பாலுண்ணி கால்பிடிப்புக் கீடவிஷம்
தீது மிருங்காசந் திண்ணிளைக்—கோதுறவே
மூடுஞ் சொறிசிரங்கு முற்று தகற்றிவிட
நாடு மிலைக்கள்ளி நன்று.

குணம்:— (இ-ள்.) இலைக்கள்ளியால் காதுவலி, பாலுண்ணி மறுவு, விஷப்பூச்சிகளின் விஷம், சுவாசகாசம், ஈளை, சொறி, சிரங்கு முதலியவை நீங்கும்.

செய்கை:—உள்ளுக்கு—மலகாரி, கபஹரகாரி; மேலுக்கு—ஷோணகாரி, விரணகாரி.

உபயோகிக்கும் முறை:—இலைக்கள்ளி இலையைச் சிறிது நெருப்பனலில் வாட்டி இடித்துப் பிழிந்த சாறுடன் சமனெடை சர்க்கரைப்பாகு அல்லது தேனைச் சேர்த்துக் குலுக்கி வைத்துக் கொண்டு வேளைக்கு 10-20 துளி ½ அவுன்ஸ் சுத்த சலத்தில் விளாவித் தினம் 3 வேளை கொடுத்துவர, ஈளை, சுவாசகாசம் போம். எருக்கம்பூ, நாயுருவிவேர், வெள்ளைக்காக்கட்டான் வேர் இவைகளைச் சமனெடையாக நறுக்கி இடித்து ஒரு கோப்பையில் போட்டு மூழ்க இலைக்கள்ளிச்சாறு விட்டுச் சிலதினம் ஊறவிட்டு அரைத்து வில்லைசெய்து உலர்த்தி, அப்பால் பொடிசெய்து, கல்கார்க்குச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது 4-5 குன்றி எடை சிறிது கடுக்காய்ச் சூரணத்துடன் கூட்டித் தேன்விட்டு மத்தித்துக்கொடுக்கக் கபத்தைக் கரைத்து மலத்தின் வழியாக வெளிப்படுத்தும்.

இலைக்கள்ளிச் சாற்றை மறு (பாலுண்ணி) முதலியவற்றிற்குப் பூசிவர உதிர்ந்துவிடும். இன்னும் இதனை நெருப்பனலில்வெதுப்பித் தாளக்கூடிய சூட்டில் காதில்விடக் காதுவலி போம். இதன் சாற்றை வெண்ணெயுடன் மத்தித்துச் சொறி, சிரங்குகளுக்குத் தடவி வர விரைவில் ஆறும். இதன் இலைச்சாற்றை வேப்பெண்ணெயுடன் கலந்து நன்றாய்க் குலுக்கி மேகவாயு, பிடிப்பு, வாதக்குடைச்சல் இவைகளுக்குத்தேய்த்துவரக் குணமாகும். இதன் இலையை வதக்கி அடிவயிற்றில்போட மூத்திரக்கட்டு நீங்கும். இதன் இலையை வதக்கிப் பிழிந்து சாறு எடுத்து முலைப்பாலில் 7-8 துளிவிட்டுப் பிறந்த சிசுக்களுக்குக் கொடுக்கப் பழைய மலம் வெளியாகும். அங்ஙனம்

வெளியாகாவிட்டால் 2-3 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துக் கொண்டுவர வெளியாகும். இன்னும் இதனுடன் ஒரு உளுந்து பிரமாணம் கோரோசனை கூட்டிக் கொடுக்க மாந்தம் போம். இதன் வேர்ப்பட்டையையும், மிளகையும் சேர்த்து அரைத்துச் சிறு சுண்டைக்காய் பிரமாணம் உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிற் றேய்க்கப் பாம்பின் விஷம் இறங்கும்.

இலைக்கள்ளிப்பால்.

(Euphorbia Nerifolia Milk).

செய்ய கரப்பான் செவிநோய்வா தம்போக்கும்
பையவருஞ் சூலைதனைப் பாழாக்கு—மெய்யின்மிக
ஊது கிரந்தியோ டுட்புண்ணை யாற்றிவிடு
மோதுமிலைக் கள்ளிப்பா லோரு.

குணம்:—(இ-ள்.) இலைக்கள்ளிப்பால், செங்கரப்பான், கர்ண சூலை, வாதவிகாரம், சூலை, விசர்ப்பிக்கிரந்தி, உள் விரணம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு கோப்பையில், மிளகு, கிராம்பு, கடுக்காய்த்தோல் இவைகளில் ஏதேனும் ஒன்றைப் போட்டு எண் மடங்கு இலைக்கள்ளிப்பாலை விட்டு 40 நாள் காயவைத்து இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க.

இதனைத் தேக திடத்திற்கு ஏற்றவாறு 3-4 குன்றி எடை வெந்நீரில் போட்டுக் கலக்கிக்கொடுக்கப் பேதியாகும். இதனால் ஈரல்களின் வீக்கம், பெருவயிறு முதலியவைகள் கரையும். இன்னும் தோல் சம்பந்தமான ஆறாத புண்கள், சுவாசகாசம், கிரந்திகள் போம்.

இளங்கொட்டைப்பாக்கு.

(Areca Catechu Tender).

வளங்கட் டிலங்கைநகர் வாசியென வந்த
விளங்கொட்டைப் பாக்குண்பார்க் கென்றுங்—களங்கட்டும்
வாயுவே காமறவன் வல்லருசி யேகுமகத்
தேயுவே காமறைவோ தேர்.

குணம்:—(இ-ள்.) வளப்பம்பொருந்திய இலங்கை நகராகிய கொளம்புத் தேசத்திலுண்டாகின்ற இளங்கொட்டைப் பாக்கைத் தின்பவர்க்குத் தற்காலத்தில் தொண்டைக்குள் கோழையடையும், வாதமும் நீங்காக் கபத்தையும் வலிய அருசியையும் விலக்கும். பசி விலகாது. இது ஒளிப்பல்ல என்க.

செய்கை:—கபஹரகாரி, கிரிமிநாசினி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தாம்பூலத்துடன் உபயோகிக்கும் சமயம் இதற்குள்ள துவர்ப்பினால் சிறிது கோழை கட்டினாலும் கெடுதலில்லை. பின்னால் வாதரோகத்தையும், கபத்தையும், அரோசகத்தையும் போக்கும்.

இதைச் சிறிது பொன்மேனியாக வறுத்து இடித்துப் பற்பொடிகளில் கூட்டிப் பல்தேய்க்கப் பற்கள் இறுகும், வாய் நாற்றத்தை விலக்கும், நாபியிலுள்ள இரணங்களை ஆற்றும். கொட்டைப்பாக்கையும், பேரீச்சங்காயிலுள்ள கொட்டையையும் சந்தனக் கல்லின் மீது சலம்விட்டுச் சந்தனம்போ லுரைத்துச் சமனெடையாகக்கூட்டிக் களிபோல் கிளறி அடைதட்டி நெய்யில் வடைபோல் சுட்டு எடுத்து, தேனில் ஊறப்போட்டு வேளைக்குக் கால் ரூபா எடை சாப்பிட்டுவரத் தாது விர்த்தியுண்டாகும்.

இந்த இனத்தில் முதிர்ந்ததை விசேடமாக உபயோகப்படுத்துவதுண்டு. அதனைக் கொட்டைப்பாக்கின் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

இள நீர்.

(Cocos-nucifera Tender Fruit).

இளநீரால் வாதபித்த மேகு மனதுந்
தெளிவாய்த் துலங்குமிரு திஷ்டிக்—கொளியுங்
குளிர்ச்சியுமுண் டாகுங் கொடியவன னீங்குந்
தளிர்த்தகன நொய்தாகுஞ் சாற்று.

(இதுவுமது)

என்றுமிள நீர்நீ ரீறங்குங் கபமறுக்குந்
துன்றனலாஞ் சீதமெனச் சொல்லுவர்கா—ணின்றெழும்பும்
பித்தமொடு வாந்தியும்போம் பேதிகட்டி ரண்டுமுண்டாங்
கோத்தலரும் பூங்குழலாய் கூறு.

குணம்:—(இ-ள்.) இளநீரை முறைமையாகப் பருகினுல் வாத கோபம், பித்ததோஷம், வெப்பம், தேகபாரிப்பு, கபாதிக்கம், பயித்தியகோபம், வமனம், அதிசாரம் ஆகிய இவைகள் நீங்கும். அல்லாமலும் மனத்தெளிவு, நேத்திரத் துலக்கம், குளிர்ச்சி, மூத்திரப் பெருக்கம், மலப்போக்கு ஆகிய இவைகளுமுண்டாம். இது உஷ்ண சீதளத்தை யுடையது.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இளநீரை அருந்துவதில் வழுக்கையையுடைய புதிய இளநீராக இருப்பின் பித்த பிரகோபம் நீங்கும். அதுவே பழைய இளநீராக இருப்பின் சலதோஷத்தை உண்டாக்குவதுடன் சீதள சம்பந்தமான பல ரோகங்களையும் உண்டாக்கும். காலையில் அன்னம் புசிப்பதற்குமுன் இளநீரை யுண்டால் பசி தீபனத்தைக் குறைக்கும். இப்படிப் பழக்கத்திற்குக் கொண்டுவரின் குன்மரோகத்தை யுண்டாக்கும். மாலையில் உண்டால் எரிகிருமிகள் ஒழியும். ஆகாரம் உண்ட பின்பு இளநீரை யுண்டால் வாதபித்தகோபந் தணிவதுமன்றித் தனிப் பித்ததோஷம் நீங்கும். இன்னும் இதனுல் நல்ல தேஜசும், பசிதீபனமும் உண்டாகும். மலம் கிரமமாகப் போம். இளநீர் மட்டையைச் சீவி அதைத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஆற்றிக் கண்திறந் துண்டால், இருமல், சலதோஷம் வரட்சியினுலுண்டான சுரம் போகும்.

சாதாரணமாக எங்கும் கிடைக்கக்கூடிய பச்சை இளநீரைப் போலவே வேறு சில இனங்களும் உண்டு. அவைகள் உருவத்திலும், நிறத்திலும், அளவிலும், குணத்திலும் ஒன்றுக்கொன்று பேதப்படும். இக்காரணத்தைக் கொண்டே ஆன்ருேர் பல பெயர்களை இட்டிருக்கின்றனர். இத்தகைய இளநீர்களை அருந்த விருப்பமுடையவர்கள் தேக சுபாவத்திற்கு ஏற்றவாறு மேற்கூறப்பட்ட பொது விதியின்படி இனமறிந்து உட்கொள்ளுதல் சாலச் சிறந்தது. அத்தகைய இளநீர்களின் பெயரும் குணமும் பின்வருமாறு—

அடுக்கிள நீர்.
(Aduckilaneer).

அடுக்கிளநீ ரையத்தை யண்டா தகற்றும்
வடுக்கண்ணு யின்னும் வகுப்போம்—படுக்கும்போ
துண்டாற் சுகமெய்து முள்ளாங் கிருமியிதைக்
கண்டா விறந்துவிடுங் காண்.

(இ-ள்.) அடுக்கிளநீரை யுண்டால் கபரோகத்தை நீக்கும். இன்னும் இதை நித்திரைக்குமுன் உண்டால், கபதோஷமும், மலப்பையைப் பற்றிய கிருமியும்போம். தேகசுகமும் உண்டாம்.

ஆயிரங்கச்சி இளநீர்.

(Ayirangkachi Ilaneer).

வேகமுறுந் தீபனமாம் விட்டோடும் வாதகப
மாகமதிற் சேர்ந்த வரிப்பும்போம்—வாகுறுபுண்
வாயிறங்கு சீழும் வயிற்றுவலி யுந்தொலையும்
ஆயிரங் கச்சிக் கறி.

(இ-ள்.) ஆயிரங்கச்சி இளநீரால் வெப்பமும், பசியும் உண்டாவதுடன், வாதகபத் தொந்தம், சீழ்விரணம், குன்மம் ஆகிய இவைகளும் நீங்கும்.

கருவிளநீர்.

(Karuvilaneer).

மருமலர்வாழ் மானேகேள் வையகத்தோர் நித்தங்
கருவிளநீ ருண்ணக் கபமுங்—கிருமிநெளி
புண்ணுங் கரப்பானும் போகுமிகக் காந்தியுறு
மெண்ணுமனப் பூரிப்பா மெண்.

(இ-ள்.) கருமைநிற இளநீரால் கபாதிக்கமும், புழு நெளிகின்ற விரணமும், கரப்பானும் நீங்கும். தேஜசும், மகிழ்ச்சியும் உண்டாம் என்க.

குண்டற்கச்சி இளநீர்.

(Kundarkachi Ilaneer).

அண்டையிலே நின்றூர்க் கரோசிகெடுந் தீபனமாங்
கெண்டைவிழி மாதரசே கேளின்னுங்—கண்டபடி
குண்டற்கச் சிக்குக் கொடுந்தாக மாறிவிடும்
பண்டைப் பழமலம்போம் பார்.

(இ-ள்.) குண்டற்கச்சி இளநீரால், அருசி, விதாகம், நாட்பட்ட பழைய மலம் ஆகிய இவைகள்போம். ஜடராக்கினி யுண்டாக்கும் என்க.

கெவுளிபாத்திரை இளநீர்.

(Kevulipathirai Ilaneer).

செப்புகின்ற தெங்கினத்தில் தேர்கெவுளி பாத்திரையென்
றெப்பு மிளநீரை யுண்டக்கால்—இப்புவியில்
மெத்தப் பசியாறும் மெய்யெரிவு தாகமுடன்
பித்தந் தணியுமென்றே பேசு.

(இ-ள்.) *கெவுளிபாத்திரை இளநீரால் தாகம், பித்தம், தேக எரிச்சல் முதலியவைகள் தீரும். இன்னும் பசியடங்கும் என்க.*

கேளி இளநீர்.

(Kayli Ilaneer).

கேளியுண்ண மேகம்போம் கேளாய் மடமயிலே
நீளகட்டுக் கீட நிலையாவாங்—தாளாத
தாகமொடு மந்தமறுந் தானே கரப்பனும்போம்
வேகவன லுந்தணியு மே.

(இ-ள்.) *கேளியிளநீரை யுண்பவர்க்கு இரத்தமேகம், மலக்கிருமிதாகம், மந்தாக்கினி, கரப்பான், அதிசுரம் ஆகிய இவை நீங்கும் என்க.*

செவ்விள நீர்.

(Sevvilaneer).

பித்தமொடு தாகம் பெருத்த வழிநடையா
வெய்த்தலா யாச மிவையேகு—நித்தியமுஞ்
செவ்விளநீ ருண்டக்காற் றீரும் பலகயமு
மவ்விளநீர்க் கொங்கைமின்னே யாய்.

(இ-ள்.) *தினமுஞ் செவ்விளநீரை யருந்தில் பித்த விருத்தி, தாகம், வழிநடையாலுண்டான இளைப்பு, அயர்வு, பற்பல க்ஷயம் ஆகிய இவைகள் நீங்கும்.*

சோரியிள நீர்.

(Sori Ilaneer).

காரிலகு கூந்தற் கருங்கண் மடமயிலே
சோரியிள நீரருந்தச் சோபையறுங்—கூரியதோர்
பூச்சி கிருமிபொன்றும் பொன்மேனி யாமுடலம்
பேச்சிற் றெளிவுண்டாம் பேசு

(இ-ள்.) ரத்தவன்ன இளநீரால், வீக்கமும், வயிற்றிலுள்ள பூச்சியும், சன்னக்கிருமியும் போம். தேஜசும் தெளிந்த வசனமு முண்டாம் என்க.

பச்சை இளநீர்.

(Pachai Ilaneer).

பச்சிளநீர் மேகம் பழஞ்சுரங்க ளைப்போக்குங்
கச்சுமுலை மாதே கபமறுக்கு—மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன்சொறிகண் ணோயும்
அயர்த்தோடச் செய்யு மறி.

(இ-ள்.) பச்சை இளநீர், சிழ்ப்பிரமேகம், புராணசுரம், கபாதிக்கம், எரிகிருமி, யானைச்சொறி, கண்ணோய் இவைகளை நீக்கும் என்க.

மஞ்சள் கச்சி இளநீர்.

(Manjal-Katchi Ilaneer).

பித்தம்போஞ் சோபையறும் பேருலகில் யாவருக்கும்
தொத்து கபமுந் தொலையுங்காண்—தத்துகின்ற
பொல்லாப் பழஞ்சுரமும் போகுமஞ்சட் கச்சிக்குப்
பொல்லாப்பொன் றில்லை புகல்.

(இ-ள்.) மஞ்சள் கச்சி இளநீரை யருந்தினால் பித்த தோஷம், வீக்கம், சிலேஷ்மாதிக்கம் புராணசுரம் ஆகிய இவை நீங்கும் என்க.

இன்புரு வேர்.

(Oldenlandia Umbellata).

இன்புரு வேரை யிதமா யருந்தினர்க்குப்
பின்புரு தையமொடு பித்தமுமே—துன்பா
மிருமல் சுவாச மெரிசுரம்வ யிற்றுப்
பொருமலுப்பி சம்பறந்து போம்.

குணம்:—(இ-ள்.) இன்புரு வேருக்குக் கபாதிக்கம், பித்த கோபம், காசம், ஈளை, பித்தசுரம், வயிற்றிரைச்சல், விக்கல் இவைகள் நீங்கும்.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இன்புரு இலைச்சாற்றைச் சுரத்தின் வேகத்தினால் காணுகின்ற உள்ளங்கை, பாதம் முதலிய அவயவங்களின் எரிச்சல்களுக்குத் தடவி வரக் குணமாகும்.

இதன் சாற்றுடன் பசுவின்பால் கூட்டிச் சாப்பிட்டுவர நெஞ்சுக்குழியில் காணுகின்ற எரிச்சல் அடங்கும்.

இன்புரு, வல்லாரை வகைக்குப் பலம் ஒன்றாக இடித்து, ஒரு மட் கடத்தில்போட்டு அதனில் $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{16}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் கொடுத்துவரச் சுவாசகாசம், ஈளை இருமல் இவைகள் குணமாகும்.

இதன் வேரை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம்செய்து வேளைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம், $\frac{1}{16}$ படி அரிசிமாவுடன் கலந்து சலம் விட்டுப் பிசைந்து இரண்டொரு அடைகளாகத் தட்டிக் காந்தாமல் சுட்டெடுத்துக் காலை, மாலை உட்கொண்டுவரக் கப சம்பந்தமான பல பிணிகள் நீங்கும். இவைகளுமன்றி இதனை லேகியமாகச் செய்வதுமுண்டு.

இன்புரு லேகியம்.

ஒரு பலம் இன்புரு வேர்ப்பட்டையைத் தட்டை அம்மிக்கல்லில் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் பசுவின்பால் விட்டு நெகிழ அரைத்து $1\frac{1}{2}$ ஆழாக்குப் பசுவின்பாலில் கரைத்து, வடிகட்டி எடுத்த பாலில் $2\frac{1}{2}$ பலம் பனங்கற்கண்டைப் போட்டு நன்றாய்க் கரைத்து மீண்டும் வடிகட்டி, அதனை ஒரு இரும்புக்கடாயில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுக எரித்துவரப் பால் சுண்டி லேகிய பதமாகும். அப்பொழுது போதிய அளவு நெய்விட்டுக்கிளறிக் கீழிறக்கி ஆறவிட்டுக் கோப்பையில் பத்திரப்படுத்துக. இந்த லேகியத்தில் வேளைக்குச் சிறு கொட்டைப்பாக்குப் பிரமாணம் இருவேளை உட்கொள்ள இரத்த வாந்தி, இருமல், காசம் முதலிய ரோகங்கள் குணமாகும். இன்னும் இந்த லேகியத்துடன் மான்கொம்பு பற்பம் கூட்டி உட்கொண்டு வர மிகவும் நல்லது.

இஸ்போகல் வித்து.

(Plantago Ispgula).

செப்பும் மலக்கட்டும் சீத மூறும்பேதி
ஒப்பும் பிரமேக முந்திவலி—வெப்பத்தால்
நீண்ட சினுக்கிருமல் நீரடைப்பு தானெழிய
வேண்டக்கே ளிஸ்போகல் வித்து.

குணம்:—(இ-ள்.) இஸ்போகல் வித்தால் மலபந்தம், சீத பேதி, வெள்ளை, வயிற்றுவலி, உஷ்ண இருமல், நீர்க்கட்டு முதலியவைகள் குணமாகும்.

செய்கை:—இலகுமலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:-இரண்டு விராகனெடையுள்ள வித்தைச் சிறிது வறுத்துத் தூள்செய்து சலத்தில் கலந்து கொஞ்சம் கற்கண்டு தூளிட்டுக் குடிக்கச் சகல பேதிகளையும் கட்டும்.

உடையாத கட்டிகளுக்கு இதைச் சலம்விட் டரைத்து மேற் பூசிவர உடைத்துக்கொள்ளும்.

இரண்டு விராகனெடை இஸ்போகல் வித்துடன் 2 விராகனெடை அதிமதுரச் சூரணம் கூட்டி ஒரு கோப்பையில் போட்டு ¼ படி வெந்நீர்விட்டு 3 மணி நேரம் ஊறின பின்னர் வடிகட்டி வேளைக்கு ½ ஆழாக்கு வீதம் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவர நீர் எரிச்சல், பிரமேகம், இருமல் குணமாகும்.

மூன்று விராகனெடை இஸ்போகல் வித்தை ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் போட்டு 4-5 அவுன்ஸ் சலம்விட்டு 3-4 மணி நேரம் ஊறின பின்னர் இரவு படுக்கைக்குப் போகும்போது அதனைக் கலக்கி மெல்லாமல் குடித்துவிடவும். இது ஜவ்வரிசி கஞ்சிபோலிருக்கும். இதனுல் காலையில் ஒரு முறை மலம் தாராளமாகப் போவதுடன், குடலிலும் நீர்ப்பையிலும் உள்ள சூட்டை நீக்கும். இந்த சிகிச்சை சீதபேதிக்கு ஆரம்பத்தில் செய்யின் பின்னுல் அதிக உபத்திரவம் நேரிடாது. இதற்குப் பின்னுல் எந்த அவிழ்தத்தைக் கொடுப்பினும் உடனே குணமாகும்.

இவ்வித்தைக் காடியில் அரைத்து சீல்வாயுவுக்குத் தடவிவர 5-6 முறையில் வீக்கத்தையும் வலியையும் குணப்படுத்தும்.

ஈச்சங்கள்ளு.

(Phoenix Farinifera Toddy).

வெப்பகலு மெய்குளிரு மேகங் கிரிச்சரம்போஞ்
செப்பருசி போம்பித்தஞ் சேருங்கா—ணைப்படியும்
பூச்சு திமிருண்டாம் பொங்கறிவுங் கெட்டிடுமே
யீச்ச மதுவதனுக் கே.

குணம்:—(இ-ள்.) ஈச்சங்கள்ளுக்கு உள் அழலை, பிரமேகம், மூத்திரகிரிச்சரம், அரோசகம், புத்தி ஆகிய இவை நீங்கும். தேகத்

தில் குளிர்ச்சி, பித்தகோபம், வீக்கம், திமிர்வாயு ஆகிய இவைகள் உண்டாகும் என்க:—

உபயோகிக்கும் முறை:—இதைக் குடிக்கத் தேகம் குளிர்ச்சி பெறும். அளவு அதிகப்படின் புத்தி கெடும். மருந்தாகப் பாவித்துச் சிலதினம் குடிக்க மூத்திரக்கிரிச்சரம், உள்அழலை, வெட்டை முதலியவைகள் போம். பித்தம் அதிகரிக்கும். ஆகையால் நீண்ட நாள் பழக்கமாக வைத்துக்கொள்ளாமல் உள்அழலை சாந்தப்பட்டவுடன் நிறுத்திவிடவேண்டியது. தினம் ஒருவேளை 3 அவுன்ஸ் வீதம் உட்கொள்ளலாம்.

ஈச்சங்கற்கண்டு.

(Phoenix Farinifera Sugar-candy).

அரிய மருந்தையெலா மன்றே முறிக்குந்
திரிவிதக பத்தைவரச் செய்யுந்—தெரிவரிய
பன்னோய் விளைக்கும் பகரறிவை மங்குவிக்கு
மென்னேவீச் சங்கண் டிசை.

குணம்:—(இ-ள்.) ஈச்சங்கற்கண்டு மருந்துகளையும், புத்தியையுங் கெடுக்கும். காசசுவாச க்ஷயங்களையும், காணற்கரிய பல பிணிகளையும் தரும்.

உபயோகிக்கும் முறை:—இதனை மருந்துண்ணுங்காலத்தில் உபயோகிக்கக்கூடாது. இது மருந்துகளின் வீறை யடக்கி அதன் குணத்தை முற்றிலும் கெடுக்கும். இதனைப் பழக்கமாக உபயோகப்படுத்தினால் கபசம்பந்தமான பல பிணிகளை உண்டாக்கும்.

ஈச்சம் வெல்லம்.

(Phoenix Farinifera Jaggery).

நீடுபே ரீச்சினயிர்* நின்மலப்புத் திக்குமந்த
மோடு கபவாத முட்சீத—மாடுமதி
பித்த முடனே பெருந்திமிர்நோ யாவையுமே
இத்தரையி லுண்டாக்கு மெண்.

குணம்:—(இ-ள்.) பேரீச்சம் வெல்லம், புத்திமந்தம், சிலேஷ்மவாதம், உள்ளிற்சீதளம், பித்தகோபம், திமிர்வாயு இவை யுண்டாக்கும்.

உபயோகிக்கும் முறை:-இந்த வெல்லமானது சாதாரணமாகக் கரும்பிலிருந்து செய்யப்படுகின்ற நல்ல வெல்லத்தைவிட ருசிகர

* அயிர் = வெல்லம்.

மானது. இதனைப் பழக்கமாக உபயோகிக்கக்கூடாது. இதனால் பாரிசவாதம், திமிர்வாதம் முதலியவைகள் சம்பவிக்கும்.

ஈச்சுரமூலி.

(Aristolochia Indica).

பலபல்வீக் கஞ்சந்நி பாதங்க ளோடு
நலமகல்வி ஷங்கள் நடுங்குங்—கலகலெனப்
பேச்சுரமுண் டாகுமலர்ப் பெண்ணனமே நீகேளா
யீச்சுர மூலிதனக் கின்று.

குணம்:—(இ-ள்.) ஈச்சுரமூலியால் விஷசோபை, வீக்கம், சந்நி, பல விஷங்களும் நீங்கும். உரத்த வார்த்தை யுண்டாம் என்க.

(இதுவுமது)

பாண்டகற்று மெய்யிற் படர்குஷ்ட நோய்விலக்கும்
நீண்ட விருதயநோய் நீங்குங்காண்—தாண்டதப்பை
முன்னே யொழித்துவிடு மூவாத் தலைச்சுருளி
யென்னே யுலகி லிசை.

(இ-ள்.) (ஈச்சுரமூலி) தலைச்சுருளிப்பூண்டு உடல் வெளுப்பு, புண்டரீக குஷ்டம், இருதயரோகம் ஆகந்துகசோபை ஆகிய இவைகளைப் போக்கும்.

(இதுவுமது)

பெருமருந்தின் வேர்பித்தம் பீறிரைப்பு காசம்
வருசுர முடம்புவலி வாத—முருவுவிட
மொன்றிய மாகடிக ளோட்டு முலகிலிது
வன்றியது கோச்சிகிச்சைக் காம்.

(இ-ள்.) பெருமருந்துவேர் பித்தசோபம், சுவாசம், இருமல், சுரரோகம், சரீரக்குத்தல், வாததோஷம், அற்பவிஷக்கடிகள் ஆகிய இவைகளை நீக்குவதுமன்றி கோச் சிகிச்சைக்கும் உதவும் என்க.

(இதுவுமது)

திரிதோஷம் வெப்பு சிரங்குசொறி நஞ்சோ
டரிதேமல் வன்புடையு மண்டா—தொருவா
னருமருந்தை யொத்த வணங்கே யுலகிற்
பெருமருந்தை நீயெடுத்த பின்.

(இ-ள்.) பெருமருந்தினால் வாதாதிமுத்தோஷம், சுரம், நமைக்கிரந்தி விஷம், தினவுத்தேமல், மேகப்புடை இவை நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, உற்சாககாரி, ருதுவர்த்தனகாரி, முறை வியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர் அதிக கசப்பாக இருக்கும். இது சீதள ரோகத்தையும் ஸ்திரிகளுக்குண்டான உதிரச் சிக்கலையும் நீக்கும். ஒரு பலம் வேரை பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு தினம் 1 அவுன்ஸ் வீதம் 2-3 வேளை கொடுக்கலாம்.

இதன் இலைச்சாறாக விருந்தால் 1-1½ தேக்கரண்டி அளவு கொடுக்கலாம். இதன் வேர்க்கியாழத்தால் பாம்புகடி, தேள்கடி முதலிய விஷங்கள் இறங்கும். இதன் இலையைக் கசக்கிக் கடிவாயில் தேய்க்கச் சுகுணத்தை உண்டாக்கும். இதன் வேரைத் தேன்விட்டு உரைத்து தினம் ⅛ ரூபாய் எடை உள்ளுக்குக் கொடுத்துவர வெண்குட்டம், சோபை இவைகள் போம். இதன் இலைச்சாறும், பட்டையும் குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுப்போக்குகளுக்கும், சுரத்திற்கும் விசேஷமாக உபயோகப்படுகின்றன.

உகாமரம்.

(Salvadora Persica).

வாதமுதன் முப்பிணியால் வந்த பிணியையெலாங்
கோதிற் சமப்படுத்துங் கூறவொண்ணச்—சீத
மகாவனச மண்டபத்தில் வாழ்ந்திருக்கு மாதே
யுகாவிதையை நன்று யுரை.

குணம்:—(இ-ள்.) உகாவிதை திரிதோஷங்களால் வந்த நோய்களைச் சாந்தமாக்கும்.

செய்கை:—உதரவாதஹரகாரி, மலகாரி, உற்சாககாரி, வியதாபேதகாரி, சோபாநாசினி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் விதைச் சூரணத்தை உள்ளுக்குக் கொடுக்க வாத, பித்த, கப முதலிய தோஷங்களினால் உண்டான பல பிணிகளைப் போக்கும்.

இதன் பட்டையைக்கொண்டு தந்தசுத்தி செய்ய, பல்லீறுக்குப் பலத்தைக் கொடுக்கும். இதன் வேர்ப்பட்டைக் கியாழத்தை சூதகவாயுவிற்கும், சாதாரண சுரத்திற்கும் கொடுப்பதுண்டு. இதன் இலைச்சாற்றை உள்ளுக்குக் கொடுக்கச் சொறிசிரங்குகள் குணமாகும். இதன் இலைக்கியாழம் சுவாசகாசத்திற்குக் கொடுக்க நன்மையைத் தரும். இதன் இலையை வேகவைத்துக் கீல்வாதநோய் உள்ள இடங்களில் வைத்துக்கட்ட நிவர்த்தியாகும். இதன் இலையை அரைத்துக் கட்டிகளுக்கும் மூலத்திற்கும் வைத்துக்கட்ட அதிக நன்மையைத்தரும். இதன் புஷ்பத்திலிருந்து எடுத்த எண்ணெய் விரேசனத்திற்காகக் கொடுப்பதுண்டு. அதிக குறைந்த அளவில் கொடுத்துவரத் தேகத்திற்கு உற்சாகத்தை யுண்டாக்கும்.

உசிலமரம்.

(Mimosa Amara).

அள்ளுமந்த நெய்ச்சிக் கழன்மேக நீங்குநிதங்
கொள்ளுதயி லக்கறைகுக் கோள்விறகாம்—வினளுமதி
லோதியடை வானினமேன் றென்றுகுழ லேகலிகை
யாதி யடைபிசின்கட் டை.

குணம்:—(இ-ள்.) உசிலமரத்தின் வேர்ப்பட்டை அள்ளுமந்தத்தையும், இலையின் தூள் எண்ணெய்ச் சிக்கையும், பிசின் பித்தமேகத்தையும் நீக்கும். கட்டை பிரதிதினமும் குடிக்கின்ற எண்ணெய் காய்ச்சுதற்கு விறகாகும்.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு எண்ணெய் ஸ்நானம் செய்யுங் காலத்தில், சிகைக்காய், இலுப்பைப் பிண்ணாக்கு முதலியவற்றைத் தேய்த்து எண்ணெய்ச் சிக்கை நீக்குவதற்குப் பதிலாக இதனை உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் சரீரம் குளிர்ச்சி பெறும்.

இதன் பட்டை, உள்ளி, சுட்டெடுத்த வசம்பு வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆக நறுக்கி ஒரு பாண்டத்தில் போட்டு $\frac{1}{4}$ படி ஜலம் விட்டு, $\frac{1}{16}$ படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அவுன்ஸ் தினம் 3 வேளை கொடுத்துவர அள்ளுமாந்தம், சுழிகணம் இவைகள் குணமாகும்.

இதன் பிசினைப் பித்த மேகத்திற்கு உரித்தான லேகியங்களில் கூட்டுவதுண்டு. குளிர்ச்சியான குடித்தைலங்களைக் காய்ச்சும் பொழுது இதன் கட்டையைக்கொண்டு எரித்தல் சாலச் சிறந்தது.

உதிரமரத்தின் வேர்.

(Odina Wodier Root).

புண்புரைகி ராணிரத்தப் போக்கதிசா ரங்கடுப்புந்
திண்பெறுதா கஞ்சோபஞ் சீதளமும்—நண்பி
லதிவிரைவாய்த் தாண்டு மணங்கே பருத்த
வுதிரமரத் தின்றூரா லோது. (தூர்-வேர்.)

குணம்:—(இ-ள்.) உதிரமர வேரினால் விரணம், புரை, கிரகணி, இரத்தபேதி, சீதக்கடுப்பு, தாகம், மூர்ச்சை, பித்தசீதளம் இவைகள் விலகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி, பலகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் உதிரமரப் பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு மட்கலயத்திற்போட்டு ½ படி சலம் விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து, வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம். இதனால் உள்ரணம், பெரும்பாடு, ரத்தமூலம் இவைகள் குணமாகும். ஆனால் மலத்தைக் கட்டிவிடும். இந்தக் கியாழத்தைக்கொண்டு வாய் கொப்பளிக்க வாய் இரணம், பல்லீறலில் இரத்தம், சீழ் சொரிதல் முதலியவைகள் குணமாகும். இதன் பட்டைச் சூரணத்தை வேப்பெண்ணெயிற் போட்டுக் கலக்கி ஆறாத நாட்பட்ட விரணங்களுக்கு மேல் பூசி வர ஆறும். இன்னும் இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

துவர்சீலை

ஓதியம்பட்டை, பெருமரப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, பூதகரப்பான்பட்டை, தேவதாரு வகைக்கு விராகனெடை 2; கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், மிளகு, வெள்ளைக்குங்கிலியம், காய்ச்சுக்கட்டி வகைக்கு விராகனெடை 1; துருசு விராகனெடை ¼ இவைகளை யெல்லாம் சூரணஞ்செய்து, ¼ படி நல்லெண்ணெயிலாவது வேப்பெண்ணெயிலாவது போட்டுக் காய்ச்சி வடித்துச் சீலையில் தடவி ஆறாத இரணங்களுக்குப்போட ஆறும்.

உத்தாமணி.

(Daemia Extensa).

உத்தா மணியிலையா லுள்வயிற்றுக் குன்மமொடு
குத்தாம் வலியும் குளிரும்போம்—பற்றி
யிசுக்கும் வலியிரைப்பு மெத்தடிப்பு மேகும்
பசிக்குமதி மாந்தமும்போம் பார்.

(இதுவுமது)

ஆலித் தெழுந்தநோ யத்தனையுந் தீருமே
வேலிப் பருத்தியதன் மெல்லிலையால்—வேலொத்துக்
கண்டிக்கும் வாதங் கடுஞ்சந்நி தோஷமும்போ
முண்டிக்கும் வாசனையா மோது.

குணம்:—(இ-ள்.) *உணவில் மணத்தைத் தருகின்ற உத்தா மணியிலையால் பலவித நோய்களின் உபத்திரவமும், வாதநோய், விஷம், சந்நி, திரிதோஷம், வாதகுன்மம், சரீரக் குடைச்சல், குத்தல், நடுக்கல், தநுர்வாதம், சுவாசம், பலவிதத் தடிப்பு, அக்கினிமாந்தம் இவை நீங்கும். தீபனமுண்டாக்கும் என்க.*

செய்கை:—*வமனகாரி, கபஹரகாரி; அங்காகர்ஷணநாசினி, முறைவியாதிரோதி.*

உபயோகிக்கும் முறை:—*சாதாரணமாகக் குழந்தைகளுக்கு நுரைஈரலில் கபம் அதிகரித்துச் சுவாசம் மிகுந்திருந்தால் அத்தருணம் உத்தாமணி இலையையும், சிறிது துளசியையும் கூட்டி ஒரு கல் சோற்றுப்புடன் கசக்கிப்பிழிந்தெடுத்த சாற்றில் 1-2 தேக்கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. சிறிது நேரத்திற்குள் கபம் வெளியாகும். ஒருக்கால் வாய் குமட்டலில்லாவிட்டால் குழந்தையின் வாய்க்குள் கைவிரலைவிட்டு குமட்டும்படி செய்து கபத்தை வாங்குவதுண்டு. இதே வண்ணம் பெரியவர்களுக்கு தனி உத்தாமணிச்சாற்றில் ½-1 அவுன்ஸ் கொடுத்து சிறிது நேரம் சென்றபின் குமட்டும்படியான கிரிகைகளைச் செய்தல் வேண்டும். இதனால் கோழை வெளிப்படும். சுவாசம், இரைப்பு இவைகள் மட்டாகும். இதுவுமன்றி இதன் வேர்ப்பட்டை அல்லது வேரைச் சரியாக 1-1½ விராகனெடை பாலில் அரைத்துத் தினம் ஒரு வேளை 3 நாள் கொடுக்க விஷக்கடி, கரப்பான், கிரந்தி, சூலை, பிடிப்பு, வாயு முதலியுவைகள் போம்.*

உத்தாமணிச்சாற்றுடன் சிறிது சுண்ணும்புக்கூட்டி மத்தித்து மேகவாயு, பிடிப்பு, வீக்கம் இவைகளுக்கு மேலே பற்றுப்போட இரண்டொரு தினத்தில் வீக்கம் நீங்குவதுடன் பிடிப்பையும் குணப்படுத்தும்.

இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி கியாழமிட்டுக் கொடுப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

சிலேத்தும மாந்தக்கியாழம்.

உத்தாமணி, பொடுதலை, நொச்சி, துணு இவைகளின் இலைகளை வகைக்கு ஒரு பிடிப் பிரமாணம் காரமில்லாமல் பழகின சட்டியில் போட்டு சிறிது வெதுப்பிச் சாறு பிழிந்து குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு ¼-½ சங்களவு வீதம் கொடுக்க சிலேத்தும மாந்தம் தீரும்.

(வேறுமுறை)

உத்தாமணியிலை, வேளைவேர், நொச்சி, பொடுதலை, துணு ஈர்க்கு, முருங்கை ஈர்க்கு வகைக்கு ஒரு பிடி இவைகளை முன்போல் வெதுப்பி ¼ படி சலம் விட்டு அதில் ஓமம், திரிகடுகு, வசம்பு இவற்றைச் சிறிது பொன்மேனியாக வறுத்திடித்த சூரணத்தில் 1-1½ விராகனெடை ஒரு சீலையில் தளர்ச்சியாக முடிச்சுக்கட்டிப் போட்டு அரை வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து முன்போல்க் கொடுக்க, குழந்தைகட்கு உண்டாகும் சிலேத்தும மாந்தம் போம். இதனுடன் ஆமை ஓடு பற்பம் கூட்டிக் கொடுப்பதுமுண்டு

உப்பிலாங்கொடி.

(Caesalpinia Sepiarie).

பிள்ளைமந் தம்பேதி பேராத சூட்சையும்போம்
வெள்ளைசெய்யுந் தங்கத்தை மென்மலராற்—றெள்ளைபுரி
வேரு நடுங்கும்வடி வேலைநிகர் கூர்விழியாய்
நாருமுப்பி லாங்கொடியி னால்.

குணம்:—(இ-ள்.) உப்பிலாங்கொடியினால் குழந்தைகளின் மாந்தமும், க்ஷீராதிசாரமும், நீங்காத சுரமும் நீங்கும். இன்னும் இது தங்கத்தை பஸ்பமாக்கும்.

செய்கை:—சுரஹரகாரி, ஆம்ல நாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலத்தை நன்றாய் நறுக்கி 2 பலம் எடுத்து ஒரு கோப்பையில் போட்டு 5 பலம் பசுவின் நெய்

விட்டு 2-3 நாள் பரியந்தம் வெயிலில் வைத்து வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொண்டு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டி வீதம் கொடுத்துவரக் குழந்தைகட் குண்டாகும் கழிச்சல், சுரம் முதலியவைகள் நீங்கும். இதன் சாற்றைக்கொண்டு தங்கத்தை அரைத்தரைத்து 3 புடமிட செந்தூரம் தளுக்கில்லாமல் ஆகும்.

உருத்திரச்சடை.

(Ocimum Basilicum).

திருநீற்றுப் பச்சைசி லேஷ்மசர்த்தி தன்னை
விரிநீற்றைப் போலாக்கு மெய்யே—பெரிய
சுரத்திரத்த வாந்தி சுரமருசி நில்லா
வுருத்திரச்ச டைக்கே யுரை.

குணம்:—(இ-ள்.) திருநீற்றுப்பச்சை என்கிற உத்திரச்சடைக்கு கபவாந்தியையும், சுரத்தாலாகிய உதிரவாந்தி, பித்த சுரம், அரோசகம் முதலியவைகளையும் நீக்கும்.

செய்கை:—உற்சாககாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அரைத்துக் கட்டிகளுக்கு மேற்பூசிவரக் கரைந்துவிடும். இந்த இலையின் பரிமளத்தை மோந்து வருவதினால் உஷ்ணத்தைப்பற்றிய தலைவலி, காற்றினாலுண்டான கெடுதல்கள், இருதய கமலத்தின் நடுக்கம் முதலியவைகள் நீங்குவதுடன் நல்ல நித்திரையும் உண்டாகும். இதன் சாற்றில் சிறிது சர்க்கரை சேர்த்துக்கொடுக்க மார்புவலி, மேல் சுவாசம், இருமல், வயிற்றிலுள்ள வாயு இவைகள் குணமாகும். குடலுக்கு பலத்தைக் கொடுக்கும். இதை மென்று வாயில் அடக்குவதினால் வாய் வேக்காடு நீங்கும். இதனை அதிகமாகமோந்துக்கொண்டு வருதல் கூடாது. இதனால் மூளை வறட்சிகொள்ளும். இதன் இலையைச் சிறிது வதக்கி கசக்கிப் பிழிந்த சாற்றில் இரண்டொரு துளி காதுகளில் விட காது நோய், காது மந்தம் போம்.

உருத்திரச்சடை வித்து.

(Ocimum Basilicum Seeds).

சீறுகின்ற மேகவெள்ளை சீத முடன்பேதி
கூறுமுளை மூலங் குடியகல—நாறும்
உருத்திரச்ச டையி னுயர்வித் ததனை
திருத்த முடனுண்ணச் செப்பு.

குணம்:-(இ-ள்.) உருத்திரச்சடை வித்தைப் பாகப்படி உண்ண, மேக வெள்ளை, சீதபேதி, இரத்தமூலம் முதலிய நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—2 விராகனெடை உருத்திரச்சடை வித்தைப் பச்சையாகவாவது அல்லது சிறிது வறுத்தாவது 4 அவுன்ஸ் சலத்திற் போட்டு, 3 மணி நேரம் ஊறவைத்து, உள்ளுக்குக் கொடுக்க வயிற்றுக் கடுப்பு, உதிரபேதி, நீரெரிச்சல், வெட்டை, விஷக்கடி முதலியவைகள் குணமாகும். நாவிற்கு ருசி வேண்டுமாயின், இத்தகைய பானத்துடன் 1 அவுன்ஸ் நன்னாரி அல்லது தாமரைப்பூ சர்பத் முதலியவற்றிலேதேனும் ஒன்றைக் கூட்டிக் கொடுப்பதுண்டு.

உருத்திராக்ஷம்.

(Elaeocarpus Lanceolatus).

நீளுமதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
யாளுவிக்கற் பித்தத்தை யாற்றுங்காண்—நாளும்
மிருத்திரா மற்கபத்தை வீட்டுமே நல்ல
உருத்திராக்கத் தின்பெருமை யோது.

குணம்:—(இ-ள்.) உருத்திராக்ஷமானது அதிதாகம், திரிதோஷம், விக்கல்ரோகம், பித்தரோகம், பித்தகோபம், சிலேஷ்மாதிக்கம் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, (பித்த) சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாகக் கொடுப்பது கிடையாது. இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டிக்கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் தீரும். திருஷ்டாந்தமாக இந்நூலில் அக்கரகாரம் என்ற சரக்கின் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டுள்ள தளகண்டாவிழ்தம் என்னும் பாகத்தில் கண்டுணர்க. இதுவுமல்லாமல் சில அநுபோக முறைகளாவன.

இராஜசேகரித் திருவடிக் குளிகை.

உயர்ந்த உருத்திராக்ஷம், கலைமான்கொம்பு பற்பம், சுத்தி செய்த லிங்கம், குங்குமப்பூ, திராக்ஷைப்பழம், பேரீச்சம்பழம், பச்சைக் கற்பூரம், ஏலரிசி, மொட்டு நீக்கிய கிராம்பு, சாதிக்காய், தேவதாரம், சடாமாஞ்சி, மேல் தோல் நீக்கிய சுக்கு, திப்பிலி, வெள்ளை லோத்திரம், கடுகுரோகிணி, விளாமிச்சவேர், சந்தனக்கட்டை,

இலுப்பைப்பூ, கோஷ்டம், அதிமதுரம், நன்னாரிவேர், தாமரை வளையம், செங்கழுநீர்க் கிழங்கு, வெட்டிவேர், சாஸ்திரவேதி இவைகள் வகைக்கு விராகனெடை $\frac{1}{2}$, கோரோஜனை குன்றி எடை 8, கஸ்தூரி குன்றி எடை 4 இவற்றுள் இடித்துச் சூரணம் செய்யத்தக்கவைகளை சூரணித்தும் மற்றவைகளை அப்படியே கல்வத்திலிட்டுக் கரும்பு ரசம்விட்டு நான்கு சாமமும், மறுநாள் சுத்தசலம்விட்டு இரண்டு சாமமும் அரைத்து மெழுகு பதத்தில் பருத்திக் கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி, சீசாவில் பத்திரப்படுத்துக. இம்மாத்திரையை வேளைக்கு ஒன்றாகக் காலை மாலை முலைப்பாலில் கொடுத்துவரச் சர்வ பித்தரோகம், தேகஎரிவு, அழலை, வாய்பிதற்றல் முதலிய ரோகங்கள் குணமாகும்.

விஜயகோடி மாத்திரை.

உருத்திராக்ஷம், நற்பவளம், கெட்டிமுத்து, மான்கொம்பு பற்பம், கருஞ்சீரகம், சுத்திசெய்த லிங்கம், தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, தாம்பரசெந்தூரம், வாலைரஸம், சுத்திசெய்தகெந்தகம், அப்ரேக்குச் செந்தூரம், சுத்திசெய்த கருநாபி, பொரித்த வெங்காரம் இவைகள் வகைக்கு விராகனெடை $\frac{1}{4}$ இவற்றுள் முதலில் கல்வத்தில் வாலை ரஸத்துடன் கெந்தகத்தைக் கூட்டி அரைத்து கறுப்பு நிறமாக மாறியபின் லிங்கத்தையும் தங்கம் வெள்ளி ரேக்குகளையும் கூட்டி அரைக்கவும். அதன் பின் பற்பம் செந்தூரங்களுடன் மிகுதியுள்ள சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து கூட்டி எலுமிச்சம்பழம் சாற்றைவிட்டு நான்கு சாமம் அரைத்து மெழுகுபதத்தில் பச்சைப் பயறு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது காலை மாலை ஒவ்வொரு மாத்திரையாகத் தேனில் அநுபானம் செய்துகொடுக்கச் சந்நி, சுரம், வலி, மூர்ச்சை, சுவாசகாசம் முதலிய பிணிகள் குணமாகும்.

உருளைக்கிழங்கு.

(Solanum Tuberosum).

போக பலமுண்டாம் பொற்கொடியே வாதமறும்
வேகமுறுந் தும்மலின் வேரறுக்கும்—தேகமதில்
வெந்தவழ லாற்றும் மிகுமந்தம் உண்டாக்கும்
அந்தவுரு ளைக்கிழங்கி னல்.

குணம்:—(இ-ள்.) இந்த உருளைக்கிழங்கினால் தேகபுஷ்டி யுண்டாகும், தும்மலை அடக்கும், வெந்நீரா லுண்டான அழலையை ஆற்றும், வாயுவைக் கண்டிக்கும். ஆனால் ஜீரணம் மந்தப்படும் என்க:-

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணத் தேகபுஷ்டி யுண்டாகும். அடிக்கடி வருகின்ற தும்மலை நீக்கும். எளிதில் ஜீரண சக்தியடையாது. தேகத்திலுள்ள மேகவாயுவைக் கண்டிக்கும், வெந்நீர் முதலியவை தேகத்தில் எப்பாரிசத்திலாவது பட்டு எரிச்சல் கண்டவுடன் இந்த உருளைக்கிழங்கை அம்மியில் வைத்து நெகிழ அரைத்துப் பூசிவிடக் கொப்பளிக்காமல் அடங்கும். இவ்வாறே திடீரென அடிபட்டு நசுங்கப்பெற்ற அவயங்களின்பேரில் தழும்பப்பூசிச் சீலைகொண்டு கட்டிவைக்க வினை கொள்ளாமல் ஆறும். மேக வாயுவினால் நேர்ந்த கணுச்சூலைக்கு மேற்றடவிவைக்க வீக்கம், எரிச்சல், நோய் இவைகள் சாந்தப்படும்.

உரோஜாப்பூ.

(Rosa Gallica).

பித்தவோக் காளம் பிறங்கும் மலக்கட்டு
மெத்தப் பெரும்பாடும் மெய்யாக—நத்தும்
பெருந்தாகம் வாயிரணம் பேசா தகலும்
பொருந்த உரோஜாவின் பூ.

குணம்:—(இ-ள்.) உரோஜாப்பூவால், பித்தவாந்தி, மலச்சிக்கல், பெரும்பாடு, தாகம், வாய்விரணம் முதலியவைகள் போம்.

(இதுவுமது.)

சிற்று மரைப்பூவாற் சேர்ந்தமலக் கட்டுவிடு
முற்றவெப்பு தாகமதி யோக்காளஞ்—சற்றும்விடா
மூல வெரிவிரத்த மூத்ரம் வயிற்றிசிவு
ஞாலம் விடுத்தேகு நாடு.

(இ-ள்.) சிறுதாமரை என்னும் ரோஜாப்பூவினால் மலபந்தம், சுரம், தாகம், ஒக்காளம், ஆசன எரிச்சல், ரத்தப்பிரமேகம், வயிற்றிசிவு இவைகள் போம் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த புஷ்பத்தைக் கியாழமிட்டு வாய் கொப்பளிக்க வாய்விரணம், ரசவீறு முதலியவைகள் குணமாகும். இதனைக்கொண்டு விரணங்களை அலம்பிவர தசை வளர்ந்து ஆறும். தேகதிடத்திற்கேற்றவாறு ½-1பலம் எடையுள்ள உரோஜாப்பூவைக் கியாழமிட்டு வடிகட்டிச் சிறிது பால், சர்க்கரை கூட்டி உட்கொள்ள வாதபித்த நீரை மலத்தின்மூலம்வெளியாக்கும். இந்தப் புஷ்பத்தின் இதழ்களை நிழலில்வதங்கும்படியாகச்சிறிதுஉலர்த்தி இரண்டெடை சீனிக்கற்கண்டு கூட்டி ஆட்டுக்கல்லிலிட்டு குழவிகொண்டு ஆட்டி உறவான சமயம் வழித்து ஒரு அகன்றக் கோப்பையில் போட்டுப் போதிய அளவு அசல் தேன்விட்டுப் பிசறி 5-6 நாள் ரவியில் வைத்து எடுக்க உயர்தரமான குல்கந்து ஆகும். இதை ஜாடியில் பத்திரப் படுத்துக. இதனைக் காலை, மாலை கழற்சிக்காய் பிரமாணம் கொடுத்து வர மலச்சிக்கல் நீங்குவதுடன் உதிரபேதி, மூர்ச்சை, பித்தரோகம், வெள்ளை இவைகள் குணமாகும். இன்னும் இதனை நீடித்துக் கொள் பவர்களுக்கு இருதயம், ஈரல், நுரையீரல், தீனிப்பை, குண்டிக்காய், கருப்பை, குடல், ஆசனவாய் முதலியவற்றிற்குப் பலத்தைக் கொடுக்கும். இந்தப் புஷ்பத்திலிருந்து பன்னீர்செய்வதுண்டு. அதனைப் பன்னீரின் தலையங்கத்தின்கீழ்க் காண்க.

உலர்ந்த திராட்சைப் பழம்.

(Vitis Vinifora Dried Fruit.)

காட்டி லூறுந்தேனிற் கண்டு பதமுறவே
கூட்டுந்தி ராட்சியது கொண்டார்க்கு—வாட்டுகின்ற
சிக்குமலத் தோடுபித்தம் சீறுமழ லுடனெழியும்
தொக்கு ளுதிரமிகுஞ் சொல்.

குணம் (இ-ள்.):—தேனில் பதமாக ஊறப்போட்டுலர்த்திய திராட்சைப்பழத்தை உண்ணப் பழைய மலத்தை வெளியாக்கும். மேக அழலைத் தணிக்கும். உதிரப் பெருக்கை யுண்டாக்கும்.

செய்கை:—மலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—1-3 தோலா நிறை உலர்ந்த திராட்சைப்பழத்தை ½ ஆழாக்கு கொதிக்கிற ஜலத்தில் போட்டு 15-20 நிமிடம் வரையில் அப்படியே வைத்துப் பின்னர் பிசைந்து வடிகட்டிக் கொடுக்கலாம். இதனால் மலம் இளகும். இரைப்பையும், குடலும் சுத்தப்படும். தாதுவிருத்தியுண்டாகும். நுரையீரலையும்,

நீர்த்தாரையையும் பற்றிய விரணங்கள் ஆறும். இதனைக் காடியிலரைத்துக்கொடுக்கக் காமாலைபோம். இதற்குச் சமன் மிளகு சேர்த்து அரைத்துக்கொடுக்கக் கல்லடைப்பு, நீரொழுக்கு முதலியவை போம். இப் பழத்தை அடிக்கடி வாயிலிட்டுச் சுவைத்துக் கொண்டிருக்க நாவின் அரோசகம் போம். இதனை ஆட்டுக்கொழுப்போடு சேர்த்து அரைத்துப் பருக்களின்மீதுபோட உடைத்துக் கொள்ளும். இந்தப் பழத்துடன் மொச்சைப்பருப்பு மாவு, சீரகம் சேர்த்தரைத்துப் பீஜ வீக்கத்திற்குப் பற்றுப்போட வீக்கம் போம்.

உலர்ந்த தேன் அத்திப்பழம்.

(Ficus Carica Dried Fruit).

ஆகத்தும் தொண்டையிலு மானவழ லாற்றிவிடும்
போகா மலக்கட்டுப் போக்கிவிடும்—தேகமதில்
சித்திக்கும் நல்லுதிரஞ் தேனில் உலர்ந்திட்ட
அத்திப் பழமுண்ட வன்று.

குணம் (இ-ள்.):-உலர்ந்த தேன் அத்திப்பழத்தைத்தின்பார்க்கு மார்பிலும், தொண்டையிலும் உண்டான வறட்சியை குறைவுபடுத்தும், மலத்தைப்போக்கும், நல்ல இரத்தத்தை உண்டாக்கும் என்க.

செய்கை:—பலகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—தினந்தோறும் மாலைப்பொழுதில் 3-4 பழம் தின்றுகொண்டுவர நல்ல இரத்தத்தை யுண்டாக்கும். மலத்தையும் கிரமமாகப் போகச்செய்யும். தொண்டை, மார்பு இவைகளில் உண்டான வறட்சியையும் அதனால் உண்டான இருமலையும் நீக்கும். இன்னும் இது நுரைஈரலுக்குப் பலத்தைக் கொடுக்கும். இதனைச் சர்பத்தாகச் செய்து உட்கொள்ளுவதுமுண்டு. எங்ஙனமெனில்—

தேன்அத்திப்பழச் சர்பத்

தேனில் பதப்படுத்தியுள்ள சீமை அத்திப்பழம் பலம் 2, சோம்பு பலம் 2, ரோஜாமொட்டு பலம் 4 இவைகளை 3 படி வெந்நீரில் போட்டு 24 மணி நேரம் ஊறின பின்னர் மறுநாள் அடுப்பிலேற்றிச் சிறுக எரித்து $1\frac{1}{2}$ படியாகச் சுண்டக்காய்ச்சி, பிசைந்து வடிகட்டி அதனுடன் 48 பலம் சீனிசர்க்கரை கூட்டித் தேன்பத

மாகக் காய்ச்சி வைத்துக்கொள்க. மலம் பிரவர்த்தியாக வேண்டின் காலை நேரத்தில் 1-1½ பலம் சர்பத்துடன் 3 பங்கு சலம்விட்டு விளாவிக் குடிக்க. இரண்டொருமுறை விரேசனமாகும். இதனுல் சூடும் தணியும். உள்ளூறுப்புகளுக்குப் பலம் கொடுக்கும்.

உழுந்து.

(Chaseolus Roxburghii).

செய்யவுழுந் திற்குச் சிலேஷ்மவனி லம்பிறக்கும்
வெய்யபித்தம் போமந்தம் வீறுங்காண் —மெய்யதனி
லென்புருக்கி தீரு மிடுப்புக் கதிபலமா
முன்பு விருத்தியுண்டா முன்.

குணம்:—(இ-ள்.) நல்ல உழுந்திற்குக் கபவாதமிஸ்ரம், அலஸம், இடுப்பிற்குறுதி, மிருவீரியம் இவையுண்டாம். பயித்தியமும், எலும்புருக்கியும் நீங்கும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:-உளுந்தை இயந்திரத்திலிட்டு உடைத்துப் பருப்பாக்கி மேற்றேலை எல்லாம் போக்கிச் சுத்தப்படுத்தி மீண்டும் அதைச் சிறிது வறுத்து இயந்திரத்திலிட்டு நன்றாய் மாவு போல் அரைத்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு இரும்புக் கடாயில் சிறிது சுத்தமான எள்ளெண்ணெய்விட்டுக் காய்ந்தசமயம் அதனில் 1-1½பலம் முன் சித்தப்படுத்தியுள்ள உளுத்தம்மாவை சிறிது சலம்விட்டுக் கரைத்து கடாயில்விட்டு களிபோல் கிளறி சிறிது சர்க்கரைகூட்டித் தினம் ஒரு வேளை காலையில் சாப்பிட்டுவரத் தேகபுஷ்டியை உண்டாக்கும், இடுப்புக்கு வலுவைக்கொடுக்கும். ஆனல், சீரணசக்திக்கு ஏற்றவாறு மாவின் அளவைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த மாவைப் பலகாரத்தில் சேர்த்துண்ண நல்ல பலத்தைக் கொடுக்கும். ஆனல், வயிற்றில் வாயுவையும் மலச்சிக்கலையும் உண்டாக்குகின்ற குணமிதற்குண்டு. பொட்டில்லாத உளுத்தம் பருப்பின் மாவைச் சிறிது சலம்கூட்டிப் பிசைந்து அடை தட்டி அப்பம்போல் தீயாமல் சுட்டு அதன்மேற்பாகத்தைச் சிரசில் படும்படி தாளக்கூடிய சூட்டில் வைத்துக்கட்டவும். இப்படி வெவ்வேறு அடைகளை ஒன்றன்பின் ஒன்ருக வைத்துக் கட்டிவர சுரத்தின் பேரில் கண்ட வாய்பிதற்றல், மயக்கம், மூர்ச்சை தீரும்.

ஊசித்தகரை.

(Cassia Tora).

மேகம் பிடிப்புசுரம் வீக்கம் படைகிரந்தி
வேகமுறுங் கட்டி விரைந்தோடும்—பாகமுடன்
ஊசித் தகரையை யோண்மருந்திற் கையாள
காசினியிற் றேடரிலை காண்.

குணம்:—(இ-ள்.) ஊசித்தகரையால் மேகவாய்வு, பிடிப்பு, வீக்கம், படை, கிரந்தி, கட்டி, சுரம் முதலியவைகள் குணமாகும்.

(இதுவுமது)

தகரை படர்தா மரையைச் சொறியைத்
தகர வடிக்குமந்தந் தன்னோ—டிகலான
அத்திசு ரத்தையுந் தஞ்செய்யு மிம்மூலி
யுத்தமமா மென்றே யுரை.

குணம்:—(இ-ள்.) தகரைச்செடியால் படர்தாமரை, புடை, அக்னிமந்தம், அஸ்திசுரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கிரிமிநாசினி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை ஒரு பலம் அரிந்து ஒரு பழகின மட்பாண்டத்தில்போட்டு ½ படி சுத்தசலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வீசம்படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

குழந்தைகட்குப் பல் முளைக்கும்போது உண்டாகும் சுரத்திற்கு முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தில் வேளைக்கு ¼-½ அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுக்கவும். இதன் இலையைச் சலம் விட்டு அரைத்து ஒரு இரும்புக் கரண்டியிலிட்டு நெருப்பனலின்மீது வைத்துக் களிப்போல் கிளறி கட்டி, பிடிப்பு, வீக்கம் இவைகளுக்கு மேல் வைத்துக்கட்ட நோய் பலப்படாமல் அடங்கிவிடும். இதன் வேரை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு உரைத்து ஊறலுண்டான படை, தேமல் முதலியவற்றிற்கு மேற்பூசக் குணமாகும். இதன் இலைச்சாறு படி ¼, சிற்றாமணக்கெண்ணெய் படி ¼ இவை யிரண்டையும் பதமுறக் காய்ச்சிச் சிரங்குகளுக்குத் தடவிவர ஆறும்.

ஊசித்தகரை வித்து.

(Cassia Tora Seeds).

வண்டு கடியுடனே வன்கடுவ னும்பலவாம்
பண்டு நமைபுடையும் பண்டிதர்கள்—கண்டுரைக்காப்
பித்த வனலும் பெருத்த தகரைவிதைக்
கித்தரையுள் நில்லா திசை.

குணம்:—(இ-ள்.) தகரைவித்துக்கு வண்டுகடி, அரைக்கடுவன், நீங்காததினவு, பலவிதபுடை, பண்டிதர் உரைத்தற்கரிய பித்த வேகம் இவைகள் போம்.

செய்கை:—வமனகாரி.

உபயோகிக்கும் முறை:-இதனைப் புளித்த மோர்விட்டுஅரைத்துப் படை, சிரங்கு, ஆறுத இரணம் இவைகளுக்கு மேற்பூச ஆறும். இதனை இன்னும் இலைக்கள்ளிச் சாற்றில் 3-4 மணி நேரம் ஊற வைத்துப் பசுவின் நீர்விட் டரைத்து ஆரம்பமான புரைக்குழல், குஷ்டவிரணம் முதலியவைகளுக்கு மேற்பூசிவரக் குணமாகும்.

ஊசிப்பாலை.

(Periploca Esculenta).

மேக மகலும் விழிகுளிரு நாளத்தின்
வேக மகலுமங்க மேனியிடும்—மோகமண
வாசிப்பா லைப்பருவ மாந்தரைவீக் குங்கோடியே
ஊசிப்பா லைப்பன்ன முன்.

குணம்:—(இ-ள்.) ஊசிப்பாலையால் பிரமேகமும், ஆண்குறியினது துவார வெப்பமும் நீங்கும். கண்குளிர்ச்சியும், தேகபுஷ்டியும் உண்டாகும் என்க.

செய்கை:—பலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொடியின் சமூலத்தைக் கியாழமிட்டு வாய்க்கொப்பளிக்கத் தொண்டைப்புண், வாய் இரணம் ஆறும். இதன் பச்சை வேரை ½ பலம் பஞ்சுபோல் இடித்து ஒரு பழகின மட்கலயத்தில்போட்டு ½ படி சலம்விட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை கொடுத்துவரக் காமாலைத் தீரும்.

ஊசிமல்லிகை.

(Jasminum Auriculatum).

மாந்த கணம்போருமல் வாராது மைந்தர்களுக்
கூர்ந்தே யிரத்தகண மோடுங்காண்—கூந்தள்முடி
மானே சுரந்தணியும் வாங்காத வீக்கம்போங்
கானூசி மல்லிகைக்குக் காண்.

குணம்:—(இ-ள்.) காட்டிலுள்ள ஊசிமல்லிகைக்குக் கணமாந்தம், வயிற்றுப்பிசம், சிசுகளுக்குண்டாகின்ற உதிர சம்பவப் பிணிகள், சுரம், சோபை இவைகள் போம்.

(இதுவுமது)

முல்லையெனு மூசிமல்லி மொய்த்த மலரேவர்க்கு
மொல்லைமன நோயை யொழிக்குங்காண்—மெல்ல
வழலைத் தணிக்கு மரோசகத்தைப் போக்கு
மழலைமொழி யாயறிந்து வை.

(இ-ள்.) முல்லை என்கிற ஊசிமல்லிகைப்பூ மனோவியாதியையும் உள்வெப்பத்தையும் நீக்கும்.

செய்கை:—க்ஷீரநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனை மாலையாகவாவது, கூந்தலிலாவது அணிந்துகொள்ள இதன் நறுமணத்தால் மூளைக்கு ஒரு விதமான உற்சாகத்தை யுண்டாக்கும். அப்போது தனது மனோவியாதியால் நேர்ந்த உள்வெப்பமும் மாறும்.

ஊமத்தங்காய்.

(Datura Alba).

வாதமறும் பித்த மயக்கமுறு மாநிலத்திற்
றீது கரப்பான் சிரங்ககலுங்—கோதாய்கேள்
மாமத்த மாகும் வறட்சியெல் லாம்போகு
மூமத்தங் காய்க்கென் றுரை.

குணம்:—(இ-ள்.) ஊமத்தங்காய்க்கு வாதநோய், கரப்பான், கிரந்தி, சொறி இவைகள் நீங்கும் பித்த மயக்கமும், உன்மாதரோகமும் உண்டாகும் என்க.

செய்கை:—வேதனாசாந்தினி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதை மேல்தோல் நீக்கி அரைத்து உஷ்ணத்தினுல் உண்டாகும் கட்டிகளுக்குப்போடக் கரைக்கும்.

இதை மேல்தோல் நீக்கிப் பசுவின்நெய்விட்டு அரைத்துச் சிறிது அனலில் வெதுப்பி மூல முளையினடியில் வைத்துக்கட்ட ஆசனக் கடுப்பு நீங்குவதுடன் முளையும் அற்றுப்போம். காடி அல்லது தேன் விட்டரைத்துப் பழுக்காத கட்டிகளுக்கும் போட உள்ளமுந்திவிடும். இன்னும் வீக்கம், குத்தல் இவைகளைக் குறைவு படுத்தும். இதனை அப்படியே உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. இதனுல் அளவுக்கு மேலிட்ட மயக்கமும் வெறியும் உண்டாகும். இது கொடிய நஞ்சானதால் வெகு ஜாக்கிரதையாக உபயோகித்தல் வேண்டும். இதனைக்கொண்டு வைத்தியர்கள் ஔஷதங்களின் நிமித்தம் கையாடினபின் கைகளைச் சுத்தமாகச் சாணம், சவுக்காரக்கட்டி முதலியவைகளால் தேய்த்துச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டியது. தவறுதலாக ஏதேனும் சிறிதளவு உள்ளுக்குச் சென்றிட அதன் வீரியத்தைக் காட்டிவிடும். இந்த இனத்தில் கருவூமத்தை என்கிற ஒரு வகுப்புண்டு. இதுவே அதிக பிரயோசனமுள்ளது. இதன் குணத்தை அதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

ஊமத்தம் வித்து.

(Datura Alba Seeds).

சுரம்போம் விஷம்போந் தோஷயாத சந்நி
யுரம்போ மதிசார மோடு—நிரம்பவே
மாமத்த முண்டாம் வளரிளங்கொங் கைத்திருவே
யூமத்தை யின்விதையை யுன்.

குணம்:—(இ-ள்.) ஊமத்த விதையினுல் சுரம், தாவரசங்கமவிஷம், சந்நிபாததோஷம், அதிசாரம் ஆகிய இவை போம்.

செய்கை:—வேதனசாந்தினி, அங்காகர்ஷணநாசினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காய்க்கு கூறிய வண்ணமே பசுவின்நெய்யில் வெண்ணெய்போல் அரைத்து மூலமுளையின்பேரில் தடவிவர மூலமுளை அற்றுப்போம். ஆசனக்கடுப்பும்நீங்கும். இதைக் காடி அல்லது தேன்விட்டரைத்துப் பழுக்காதகட்டிகளுக்குத் தடவி அதன் இலையை மேலே வைத்துக்கட்டக் கட்டி கரைந்துவிடும்.

இதனைப் பழச்சாற்றில் சுத்திசெய்து லேகியம், மாத்திரைகளில் கூட்டிச் செய்வதுண்டு. இதனைத் தேகதிடம் அறிந்து உபயோகித்தல் வேண்டும். இதனால் பல ஆபத்துக்களும் நேர்ந்திருக்கின்றன. இவ் வித்தின் கூட்டுறவால் ஆனமருந்தை ஒருவர் பயந்து சாப்பிட்டு அடையும் குணத்தைவிடப் பயமின்றிச் சாப்பிடக்கூடிய பல பாகங்கள் இருக்கின்றமையால், ஊமத்தம்விதை சம்பந்தமான பிரயோகங்களை விரிவாகக் கூறவில்லை.

ஊமத்தை.

(Datura Alba Leaves).

நாய்க்கடியால் வந்து நலிசெய் விரணமும்போம்
வாய்க்குழிப்புண் கட்டிகளு மாறுங்காண்—தீக்குணத்தைச்
சேமத்தில் வைத்தவிடந் தீருமுத் தோடமறும்
ஊமத்தை யின்குணத்தை யுன்.

குணம்:—(இ-ள்.) ஊமத்தையினால் நாய்க்கடிப்புண், குழி விரணம், வித்திரிக்கட்டிகள், நஞ்சு, திரிதோஷம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—வேதனுசாந்தினி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைச் சிறிது வதக்கிச் சாறு பிழிந்து சமனெடை நல்லெண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு காதுவலி, காதுகுத்தல், காதில் சீழ்வருதல் இவைகட்குத் தினம் 2 வேளை காதில் 2 துளிவிட்டுப் பஞ்சு அடைத்துவைக்கக் குணமாகும். இதன் இலையை விளக்கெண்ணெய் தடவி அனலில் காட்டிக் குழைந்தைகளுக்கு முழங்காலுக்குக் கீழ் காணுகிற கரப்பானுக்கு வைத்துக்கட்ட ஊறல் அடங்கி ஆறும். இதன் காய்ந்த இலையை அல்லது பூவைத் தேகதிடத்திற்கு ஏற்றபடி 5-15 குன்றி எடை பொடியாக நறுக்கிப் பீடிபோல் இலையில்வைத்துச் சுருட்டிப்பிடிக்கச்சுவாசகாசத்தினால் உண்டான இரைப்பு சாந்தப்படும். கபம் எளிதில் வெளியாகும். இதைப் பிடிக்கும்போது சிறிது மயக்கம் கண்டால் உடனே நிறுத்திவிடவேண்டும். இதை அப்பியாசம் செய்கிறவர்கள் அளவைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். கொதிக்கின்ற சலத்தில் இதன் இலைத் தூளைப்போட்டு ஆவியை வாயினுட்கொள்ள இரைப்புப் போம்.

ஊழலாற்றி மரம்.
(Uzhalarri Maram).

அடவி வளரூழ லாற்றியெனு மூலி
படவிரணம் புண்கொறுக்கை பாமை—கடிதடத்தால்
வந்தவரை யாப்புவெள்ளை வாதப் பிடிப்புகுட்ட
மிந்தவகை நோயகலு மெண்.

குணம்:—(இ-ள்.) காட்டில் வளர்கின்ற ஊழலாற்றி மரத்தால், மேக விரணம், ஒட்டுப்புண், ஆண்குறி விரணம், பாமை என்கிற சிரங்கு, போகத்தால் வந்த அரையாப்பு, வெள்ளை, கீல் வாதம், பெருநோய் ஆகிய இவைகள் நீங்கும்.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரணமாக தைல பாகங்களில் உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

ஊழலாற்றியெண்ணெய்.

நாட்சென்ற ஊழலாற்றிமரப்பட்டை, பூவரசமரப்பட்டை, வேப்பமரத்துப்பட்டை வகைக்கு வீசை 1, புனற்றண்டு, பிரப்பங்கிழங்கு வகைக்கு வீசை ½ இவைகளை யெல்லாம் சிறு துண்டாக நறுக்கி, ஒரு வாயகன்ற மட்பாண்டத்தில் போட்டு 12 மரக்கால் சலம்விட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து 1 மரக்கால் அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. பிறகு முன் கியாழமிட்ட பாண்டத்தைச் சுத்தப்படுத்தி அதனில் 1 மரக்கால் சிற்றாமணக்கெண்ணெயும், 1 மரக்கால் தெளிந்த கழுதை மூத்திரமும், ½ மரக்கால் கழுதை லத்தையினின்று பிழிந்தெடுத்த பாலும் விட்டுக் கலக்கி அதில் முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தைவிட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இதனை மூன்று மாதம் வரையில் தானியபுடம் வைத்து உபயோகப்படுத்தல் வேண்டும். இந்த எண்ணெயில் தினம் ஒருவேளை மூன்று நாள் காலையில் தேக திடத்திற்கு ஏற்றவாறு ¾ அல்லது 1 பலம் சாப்பிட, நன்றாய் விரேசனமாகும். இதனால் சமஸ்த தாதுக்களிலும் வியாபித்த விரணங்கள், வெட்டை, மேகப் புண்கள், தினவுகள், குஷ்டம் முதலியவைகள் தீரும். இந்த எண்ணெயை மூன்று நாள் உட்கொண்ட பின் மீண்டும் மூன்று நாள் உப்பில்லாக் கடும்பத்தியமிருந்து ஏழாவது நாள் ஓமத்தைப் பால்விட் டரைத்துச் சிரசிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்தபின் வறுத்த உப்பு சேர்த்துக்கொள்க. அதன்பின் முக்கூட்டு

எண்ணெய் தேய்த்து ஆரோக்கிய ஸ்நானம் செய்து பத்தியத்தை முறித்துக்கொள்க. இத் தைலம் இயற்கையில் அதிக உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடியது. ஆகையால் தேக திடத்தை அறிந்து உட்கொள்ளல் வேண்டும்.

எட்டிக்கொட்டை.

(Strychnos Nux Vomica Seeds).

கைக்கறுப்பு சந்நி கடிவிஷங்குஷ் டுதைவலி
யெய்க்கவரு தாதுநஷ்ட மென்பவைபோ—மைக்கண்ணய்
கட்டி கரப்பான் கனமயக்குப் பித்தமுமி
லெட்டிமரக் கொட்டையினு லே.

குணம்:—(இ-ள்.) எட்டிக்கொட்டையால் கருமேகம், சந்நி, குஷ்டம், வாதவலி, வீரிய நஷ்டம், பிடகம், கரப்பான், மூர்ச்சை, பயித்தியம் இவை போம்.

செய்கை:—மலகாரி, சுவேதகாரி, வமனகாரி, சுரஹரகாரி, காமவிர்த்தினி, பலகாரி, நித்திராகாரி, ருதுவர்த்தனகாரி, உற்சாககாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொட்டையை உபயோகப் படுத்துவதற்கு முன் சுத்தி செய்துக்கொள்வது பண்டிதர்கள் கடமையாகும். எங்ஙனமெனில்—

5 பலம் எட்டிக்கொட்டையை ஒரு படி நெல்லோடு சேர்த்து மட்கடத்திலிட்டுச் சலம்விட்டு அடுப்பிலேற்றி எரித்து நெல் நன்றாய் வெந்த பதத்தில் கீழிறக்கி ஆறவிட்டு இந்தக் கொட்டைகளை அலம்பி எடுத்துக்கொள்க. அதனுடனிட்ட நெல்லை யாருக்கும் உபயோகப்படாமல் குழி தோண்டிப் புதைத்துவிடுக. அதன்பின் முன் வேகவைத்த கொட்டைகளைச் சிறுகீரைச் சாற்றில் ஒரு பகல் ஊறப்போட்டு எடுத்து மேற்றோலை நீக்கிவிடவும். அப்பால் பசுவின் பாலும், சலமும் சமனளவாக ஒரு மட்கலத்திலிட்டு அதனில் இந்தக் கொட்டைகளைப்போட்டு அடுப்பிலேற்றி எரித்து நன்றாய் மிருதுவாக வெந்த சமயம் சுத்தச் சலத்தில் அலம்பி எடுத்துக் கொள்க. இப்படி 2-3 முறைச் செய்துக்கொள்ளல் அதிக உத்தமம்.

இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி ரவியில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. இதனையே வேண்டும்போது அவிழ்தங்களில் கூட்டுவதுண்டு. இந்தச் சூரணத்தில் வேளைக்கு $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ குன்றி எடை லேகியங்களுடன் கூட்டிக்கொடுக்க: இடுப்பு

வலி, பக்கவாதம், சீதளத்தினுலுண்டான நரம்புகளின் இசிவு, தாது நஷ்டம், பல விஷக்கடிகள் நீங்கும். இதனை ஆரம்பிக்கும்போது தேகத்தின் மென்மை வன்மைக்கு ஏற்றவாறு அளவைப் படிப்படியாகக் குணந்தெரிகிறவரையில் அதிகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஒருக்கால், அளவு அதிகப்படின் மயக்கம், இசிவு முதலியவைகள் உண்டாகும். இத்தகைய சூரணங்களை ஆகாரத்திற்குப் பின் சாப்பிடுவதே நல்லது.

சுத்தம் செய்த எட்டி விதையைச் சந்தனக்கல்லின்மீது சலம் விட்டு உரைத்து வழித்துச் சிறிது வெதுப்பித் தலைவலிக்குத் தடவிச் சிறிது அனல் காட்டக் குணமாகும். இன்னும் இதைக் கோழி மலத்துடன் சேர்த்தரைத்து வெறிநாய்க் கடிக்கு மேற்றடவக் குணமாகும்.

எட்டி வித்து விராகனெடை 1, மிளகு விராகனெடை 2, சுக்கு விராகனெடை 2½, மான்கொம்பு விராகனெடை 1½ இவைகளையெல்லாம் சூரணித்து அம்மியில் வைத்துச் சிறிது சலம்விட்டரைத்து வழித்து ஒரு கரண்டியில் விட்டு நெருப்பனலில் வைத்துச் சிறிது வெதுப்பிக் களிபோல் செய்து, அடிவயிறு வீக்கம், கீல்களில் காணும் வீக்கம் இவைகள்மேல் பூசக் குணமாகும்.

இன்னும் இதன் உபயோகத்தை அகஸ்தியர், தேரையர், புலிப்பாணி முதலிய சித்தர்கள் இயற்றிய நூல்களில் காண்க.

எட்டிப்பழம்.

(Strychnos Nux Vomica Fruits).

துன்பமுறுஞ் சந்நி தொடருந் திமிர்வாய்வு
வன்சூலை பக்கத்து வாதமெலாம்—துன்னிசிவு
கட்டமிலா மற்போக்குங் காரிகையே யித்தரையில்
எட்டிப் பழத்தி னியல்.

குணம்:—(இ-ள்.) எட்டிப்பழத்தினுல் சந்நி, இசிவு, திமிர் வாதம், சூலைப்பிடிப்பு இவைகள் போம் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு சுத்தமான மண்தரையில் 1 வீசைப் புளியம் புறணியைப் போட்டுக் கொளுத்திச் சாம்பலான சமயம் அச்சாம்பலை நீக்கிவிட்டு அந்தச் சூடேறிய தரையில் 30-40 எட்டிப்பழத்தைச் சிதைத்துப்போட்டு அதன்பேரில் பாதத்தை

அழுந்தவைத்து எடுக்கவும். இப்படி இரு பாதங்களையும் மாற்றி மாற்றிச் சூடுதாளும்வரையில் வைத்தெடுக்க குதிக்கால்வாதம் குணமாகும். இது விசேஷமாக ஸ்திரீகளுக்கு பிரசவித்தபின் அழுக்குத் தங்கி இரு பாதங்களில் உண்டாகும் எரிச்சல், திமிர், வலி முதலியவற்றிற்கு சிறந்த சிகிச்சையாகும். இன்னும் இப் பழத்தை தைலங்களில் கூட்டுவதுமுண்டு. அதனை தேரையர் தைலவர்க்க சுருக்கத்தில் காண்க.

எட்டிமரத்தின் வேர்.

(Strychnos Nux Vomica Root).

ஆலவிஷ மொக்கு மருந்தக் கடிதீரும்
ஞாலமதிற் பித்தகுண நாசமா—மாலைக்கோ
லட்டியபா காமொழியே யானவிஷ முஷ்டியெனு
மெட்டி மரவே ரிது.

குணம்:—(இ-ள்.) விஷமுஷ்டி என்கிற எட்டி மரத்தின் வேரானது ஆல விஷத்திற்கொப்பானது. இதனால் மகா சர்ப்ப விஷங்களும் பயித்திய குணங்களும் நீங்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பிரயோகம் முற்கூறிய எட்டிக்கொட்டைக்கு உள்ளதேயாம். ஆயினும் கொட்டையின் வீரியத்திற்கு இது சிறிது குறைந்ததேயாம். இதனை வெகு ஜாக்கிரதையாக வழங்குதல் நன்று. அளவு மீறின் கொடிய நஞ்சாகும்.

எருக்கம்பட்டை.

(Calotropis Gigenta Bark).

வாத முடன்பிடிப்பு வந்த சுரஞ்சந்நி
ஓதப் பலவிஷங்க ளோட்டுப்புண்—சேதமுறச்
செய்யு மடமயிலே செப்புதற் கெண்ணளும்
வெய்யெருக்கின் பட்டைதனை வேண்டு.

குணம்:—(இ-ள்.) எருக்கம் பட்டையினால் வாதரோகம் மேக வாயு, பிடிப்பு, சுரம், சந்நி, பல விஷங்கள், புண்புரைகள் யாவும் தீரும் என்க.

செய்கை:—ஷோணகாரி, கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி. அதிக அளவில் வமனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:-எருக்கஞ்செடியின் வேர்ப்பட்டையை மண்ணில்லாமல் சுத்தப்படுத்திச் சித்திரை, வைகாசி மாதங்களில் பால்சுண்ட நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து காற்று நுழையாத கல்கார்க்குச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச்சூரணத்தில் வேளைக்கு ½ குன்றி எடை வீதம் தினம் 2 வேளை கொடுத்து வருக. நாட் செல்லச்செல்ல, வேண்டுமாயின் அளவைக் கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்தி 5 குன்றி எடைவரையிலும் உயர்த்தி நிறுத்திவிட, பல விஷக்கடிகள், மேகவாயு, பிடிப்பு, குன்மம், நாட் சென்ற விஷசுரம் முதலியவைகள் போம். இன்னும் இந்தச் சூரணத்தை 15-30 குன்றிஎடை கொடுக்க வாந்தியாகும். சுபாவமாக இதற்கு வாந்தி, பேதி, வியர்வை உண்டாக்குங் குணமுடையதாதலால் ஜாக்கிரதையாகக் கொடுக்கவேண்டும். இதன் வேர்ப் பட்டையைச் சந்தனக்கல்லின்பேரில் உறைத்து வழித்து விஷக்கடி வாயில்போட விஷம் முறியும்.

எருக்கம்பட்டையைத் தைலங்களில் கூட்டி உயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

எருக்குத் தைலம்

வெள்ளெருக்கம்பட்டை அல்லது எருக்கம்பட்டை பலம் 1 இதனைப் பஞ்சுபோல் நறுக்கி 5 பலம் நல்லெண்ணெயில் போட்டு அடுப்பிலிட்டு எரிக்கும்போது ஒரு வயல் நண்டையும், 20 பூநாகத்தையும் போட்டு ஈரம் வற்றியிருக்கும் சமயம் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. இந்தத் தைலத்தைச் சூரியோதயத்திற்குமுன் சிரசிலிட்டுத் தேய்த்து வெந்நீர் ஸ்நானம் செய்த உடனே உபாயமான ஆகாரம் உட்கொண்டு ஒரு நித்திரைசெய்து எழுந்திருக்க, ஒற்றைத் தலைவலி நீங்கும்.

எருக்கம்பால்.

(Calotropis Gigenta Milk).

எருக்கம்பாற் கட்டிகளை யேகரைக்கும் வாய்வைத்
திருக்கறவே கொன்றுவிடுந் தீராச்—செருக்கான
சந்நி வலிதீர்க்குஞ் சார்ந்தபல சிந்தூர
முன்ன முடிக்குமென் றோர்.

குணம் (இ-ள்.) எருக்கம்பால் வாதக்கட்டிகளைக் கரைப்பதன்றி, வாதநோய், சந்நிபாதம், ஐவகைவலி இவைகளைப் போக்கும். பற்பல சரக்குகளைச் செந்தூரஞ் செய்ய நினைக்கில் முடியுமென்க.

செய்கை:—க்ஷோணகாரி. எருக்கம்பால் + நல்லெண்ணெய்க்கு—நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தேக்கரண்டி அளவு நல்லெண்ணெயில் 7 துளி எருக்கம்பாலை விட்டு நன்றாய்க் குலுக்கி நாசிக்குள் 2-3 துளி விட அளவுகடந்த தும்மல் உண்டாகும். சிரசிலுண்டான நீரையெல்லாம் வெளிப்படுத்தும். காக்கை வலிக்குச் சிகிச்சை செய்யும்போது முதலில் இச் சிகிச்சை செய்வதினால் மூளையை அநுசரித்த சீதளத்தை யகற்றும். அந்தத் தும்மலை நிறுத்தவேண்டுமாயின் முகத்தில் குளிர்ந்த சலத்தால் அடித்துக் குளிர்ந்த சலத்தைக் கொண்டு நாசியைச் சுத்தப்படுத்த வேண்டியது.

எருக்கம்பாலைக் கீல்பிடிப்பு, வீக்கம் இவைகட்கு மேற்றடவி அடியிலிருக்கும் மண்ணை மேற்றாவிக் காயவிடக் குணமாகும்.

விஷ ஜெந்துக்களின் கடிவாயில் எருக்கம்பாலைத் தடவிப் புண்ணுக்க விஷம் முறிந்துபோம். இன்னும் இந்தப் பாலுடன் இதரச் சரக்குகளைக் கூட்டித் தந்தரோகங்களுக்கும், வாதரோகங்களுக்கும் அவிழ்தங்கள் செய்வதுண்டு அவற்றுள் சில முறைகளாவன.

வச்சிரதந்த மெழுகு.

ஒரு தேங்காயின் குடுமியை நீக்கி அதன் ஒரு கண்ணைத்திறந்து சலம்போக்கி அதனுள் $\frac{1}{2}$ பாகம் சோற்றுப்பை உட்செலுத்தி, முக்கால் பாகம் வரையில் நிரம்பும்படி எருக்கம்பாலை விட்டு வாய்க்கு மூங்கிலைச் சீவி ஆப்பிட்டு 3 நாள்வரையில் ஓரிடத்தில் வைத்துவிடவும், நான்காவது நாள் அதன்மீது 4-5 சீலை செய்து 10 வறட்டியில் புடமிடவும். தேங்காய்வெந்து வெடித்து வாசனைவரும் சமயம் வெளியே எடுத்து ஆறின பின்னர் மேலோட்டை நீக்கித் தேங்காய் உள்பட உப்பு யாவற்றையும் அம்மியிலிட்டு நன்றாய் அரைத்து வாயகன்ற சீனுகோப்பையில் பத்திரப்படுத்துக. இதனை இரண்டொரு சிட்டிகை எடுத்துத் தந்த சுத்தி செய்துவரப் பல்வலி பல் சொத்தை பல் சிலு சிலுப்பு முதலியவைகள் போம்.

எருக்கம்பால் தைலம்.

எருக்கம்பால் படி $\frac{1}{4}$, பிரண்டைச் சாறு, பருத்தியிலைச்சாறு வகைக்கு ஒரு அவுன்ஸ், நல்லெண்ணெய் படி $\frac{1}{4}$ இவைகளை ஒரு பழகிய வாயகன்ற மட்கலயத்திலிட்டுப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு வேண்டும்போது உச்சியில் சிறிது தேய்த்துப்

பின்பு தேகமெங்கும் தேய்த்து முறுக்கிப் பிடிக்க, சர்வதேகவலி, குடைச்சல், இசிவு முதலியவைகள் போம்.

எருக்கம்பூ.

(Calotropis Gigenta Flower).

பொல்லா முறைசுரம்போம் போகாநீர்ப் பீநசம்போம்
சொல்லும் பெருங்காசம் சோர்ந்துபோம்—நல்லாய்
புறங்கழுத்துச் சன்னிநோய் போகுமெருக் கம்பூவின்
திறந்தெரிந்தே யிங்கிதனைச் செப்பு.

குணம் (இ-ள்.) எருக்கம்பூவால் முறைசுரம், போகா நீர்ப்பீநசம், சுவாசகாசம், கழுத்து நரம்பின் இசிவு ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:-எருக்கம்பூவிற்குச் சுமனெடை மிளகு சேர்த்து மெழுகுவண்ணம் அரைத்து இரண்டு குன்றிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தினம் 2 வேளை ஒவ்வொரு மாத்திரை வீதம் கொடுத்துவர முறைசுரம் நீங்கும்.

5 பலம் ஆவின் நெய்யில் 10-12 எருக்கம் பூவைப் போட்டுக் காய்ச்சி வடித்தெடுத்து வேளைக்கு $\frac{1}{2}$-1 தோலா வீதம் கொடுக்கச் சுவாசகாசம், நீர்ப்பீநசம் இவைகள் போம்.

உலர்ந்த பூவைச் சூரணம் செய்து வேளைக்கு $\frac{1}{2}$-1 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டிச் சில நாள் கொடுக்க ஆரம்பமான குட்டம், மேகரணம், வெள்ளை இவைகள் போம். இதை உண்ணும் காலத்தில் ஆவின்பாலைத்தவிர வேறொன்றையும் உண்ணலாகாது. 5 பலம் நல்லெண்ணெயில் $1\frac{1}{2}$ பலம் எருக்கம்பூவைப் போட்டுப் பதமுறக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்விக்கப் புறங்கழுத்தின் வலி போம்.

எருக்கிலை.

(Calotropis Gigenta Leaves).

எலிவிஷங் குஷ்டமைய மேறு கிருமி
வலிசூலை வாயுவிஷ மந்தம்—மலபந்த
மெல்லா மகலும் மெருக்கிலையைக் கண்டக்கால்
வில்லாரு நன்றுதலே விள்.

குணம்:—(இ-ள்.) எருக்கம் இலையால் எலி விஷம், பெரும் வியாதி, சிலேத்தும நோய், கிருமிரோகம், ஐவகை வலி, கீல்வீக்கம், தனிவாதகோபம், அக்கினிமந்தம், மலக்கட்டு இவைகள் தீரும் என்க.

செய்கை:—விஷநாசகாரி, வமனகாரி, பித்தகாரி, விரணகாரி, வேதனுசாந்தினி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—பாம்பு கடித்த உடன் ஒன்று அல்லது இரண்டு எருக்கிலையைமென்று தின்னும்படி கொடுக்க விஷமிறங்கும்.

செங்கல்லை அடுப்பில்போட்டு நன்ருய்ச் சூடேறினவுடன் வெளியாக்கி அதன்மீது 5-6 எருக்கிலையை வைத்துக் குதிக்கால் வலியுள்ளவர்களை நோயுள்ள பாகத்தை அதன்மீது தாளக்கூடிய வரையிலும் வைத்தழுத்தும்படி செய்க. அக் கல் ஆறினதும் மற்ருெர்கல்லை முன்போல் சூடேற்றி எருக்கிலையை வைத்து முன்போல் நோயுள்ள பாகத்தை வைத்து அழுத்தும்படி செய்க. இப்படித் தினம் காலைமாலை 3 நாள் செய்ய வலிநீங்குவதுடன் கட்டி முதலியவைகளும் வரவொட்டாமல் செய்துவிடும். குதிக்கால் வாதத்திற்கு இது மிகுந்த குணத்தைக் கொடுக்கத்தக்கது.

எலிக்காதிலை.

(Evolvulus Emarginatus).

தாகசுர வெப்பந் தலையெடுத்த நீர்ச்சுருக்கு
மேகமுறும் நீரிழிவு மிஞ்சாதே—போகமதில்
மெள்ளச் சுகமளிக்கும் மெல்லியலா யிந்நாட்டில்
உள்ளவெலிக் காதிலைக்கா மோது.

குணம்:—(இ-ள்.) எலிக்காதிலையால் தாகசுரம், நீர்க்கடுப்பு, நீரிழிவு முதலியவைகள் சாந்தப்படும். சுகபோகமுண்டாம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் எலிக்காதிலையைச் சிறுக அரிந்து ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு அடுப்பிலேற்றி $\frac{1}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி 3 பங்காக்கி 4-5 மணி நேரத்திற்கு ஒரு முறை 3 நாள் சாப்பிட மேகசுரம், தாகம், நீரிழிவு, பிரமியம், நீர்க்கடுப்பு இவைகள் நீங்கும். தாதுபுஷ்டி யுண்டாகும்.

சரீரத்தில் எந்தப் பாரிசத்திலாவது முள், ஊசி முதலியவைகள் ஏறி உபத்திரவத்தைச்செய்யும்போது இந்த இலையை அரைத்து வைத்துக் கட்ட வெளியாகும். வெட்டுக்காயம் முதலியவைகட்குச் சேர்த்துவைத்துக் கட்ட அப்படியே ஆறும். இதன் இலைச்சாற்றை நாசியில் பிழிய முகவாதம்போம். இதன் கியாழம் மூர்ச்சாரோகம், வலி இவைகளைப் போக்கும்.

எலுமிச்சங்காய்.

(Citrus Bergamia Green Fruit).

தீதிலெலு மிச்சங்காய் சேர்முத்தோ ஷத்தையுமுள்
வாதகபஞ் சூலையையு மாகொடிய—சாதியெனுஞ்
சர்த்திகுன் மத்தையுமுட் டங்கமருந் திட்டதையும்
பித்தவெப்பை யுந்தணிக்கும் பேசு.

குணம்:—(இ-ள்.) குற்றமற்ற எலுமிச்சங்காய்: திரிதோஷம், வாதசிலேத்துமம், சூலை, சர்த்திகுன்மம், இடுமருந்து, பித்த உஷ்ணம் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக ஊறுகாய் இடுவதற்கு எலுமிச்சங்காயே சிறந்தது. அப்படியிட்ட பழமையான ஊறு காயைத் தினந்தோறும் அன்னத்துடன் உபயோகித்துவர, வாத பித்த கிலேத்துமத்தைக் கண்டிக்கும். இடுமருந்தை முறிக்கும். ஜீரண சக்தியைக் கொடுத்து வாந்தியை நிறுத்தும். அதிக உஷ்ணத்தால் எழுந்த பித்தத்தை நாளுக்குநாள் குறைக்கும். பழத்தை ஊறுகாய் இடுதல் சிறந்ததன்று.

எலுமிச்சம்பழம்.

(Citrus Bergamia Fruit).

தாகங் குநகநோய் தாழாச் சிலிபதநோய்
வேகங்கோ ளுன்மாதம் வீறுபித்தம்—மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும்போங் கட்டுவா தித்தொழிலின்
மன்னெலுமிச் சங்கனியை வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) மலபந்தமுள்ள எலுமிச்சம்பழத்தால் தாகம், நகச்சுற்று, யானைக்கால், உன்மாதம், பித்தம், கண்ணோய், காதுவலி, வமனம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, உதரவாதஹரகாரி, ஜடாராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழரசத்தை வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை 3 அவுன்ஸ் சலத்துடன் கூட்டிச் சிறிது சர்க்கரையிட்டுக்கொடுக்கலாம். இதனால் ஆயாசம், தாகம் தீரும். அம்மையினால் நேர்ந்த தேகவெப்பு அடங்கும். ஊர்த்வ முகமாகவேனும் அதோமுகமாகவேனும் பூரித்து வெளியாகும் இரத்தப் போக்கை நிறுத்தும். அரை எலுமிச்சம்பழத்தின் சாற்றுடன் சிறிது சலம் விட்டுக் கலக்கிக்கொடுக்க மார்பு எரிச்சல் நீங்கும். எலுமிச்சம் பழச்சாற்றுக்குச் சமனளவு சலம்விட்டுக் கலக்கி வாய் கொப்பளித்துவர விரணங்கள் ஆறும். இதன் ரசத்தைப் பதார்த்தங்களில்கூட்டச் சுவை அதிகரிப்பதுடன் எளிதில் ஜீரணசக்தியை உண்டாக்கும். இதன் ரசத்துடன் சிறிது உப்புக் கூட்டிச் சாப்பிட்டுவரச் சுரக்கட்டிகள் கரையும். நேர்வாளவித்து, காட்டாமணக்குப் பருப்பு இவைகளால் அளவு கடந்து பேதியானால், 2 அவுன்ஸ் எலுமிச்சம்பழச் சாற்றைக் கஞ்சியில் சேர்த்துக் கொடுக்க அதன் வேகத்தை முறிக்கும்.

எழுத்தாணிப்பூண்டு.

(Prenanthes Sarmentosa).

பழமலங்கள் சாறும் பருங்குடற்சீ தம்போ
மெழுமலச்சீ தக்கடுப்பு மேகு—மொழியாக்
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகலு
முரப்பா மெழுத்தாணிக் கோது.

குணம்:—(இ-ள்.) எழுத்தாணிப்பூண்டுக்கு பழமலக்கட்டு, குடலின் சீதளம், கிரகணி, கரப்பான், புடை, கிரந்தி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பூண்டை வெண்ணெய் போல் அரைத்து வேளைக்கு ½-1 கொட்டைப்பாக்களவு தினம் 2 வேளை 3 நாள் கொடுப்பதுண்டு. இதனால் உந்தியிலுள்ள சீதளம் நீங்கிக் குடலிலுள்ள விரணம் ஆறும். இது சீதபேதிக்கு இன்றியமையாததாகும். முற்கூறப்பட்ட அளவின்படி உட்கொள்ளுங் காலத்தில் சுபாவத்துக்கு மீறிப் பழ மலக்கட்டுகள் வெளியாகக்

கூடியதாக இருக்கவேண்டும். அங்ஙன மில்லையென்றுணரின் அளவைச் சிறிது அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இப்பூண்டை இடித்துச் சாறு வாங்கி, அதன் எடைக்கு நல்லெண்ணெய் கூட்டி ஒரு பழகின மட்பாண்டத்திலிட்டுச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வைத்துக்கொண்டு சொறி சிரங்கு முதலியவற்றிற்குத் தடவிவர விரைவில் ஆறும்.

எள்ளின் நெய்.

(Sesamum Indicum Oil).

புத்திநய னக்குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகஞ்
சத்துவங் காந்தி தனியிளமை—மெத்தவுண்டாங்
கண்ணோய் செவிநோய் கபாலஅழல் காசநோய்
புண்ணோய்போ மெண்ணெய்யாற் போற்று.

குணம்:—(இ-ள்.) எள்ளினது நெய்யால் புத்திக்குத் தெளிவு, விழிக்குக் குளிர்ச்சி, மனமகிழ்ச்சி, தேகபுஷ்டி, பலம், தேஜசு, வாலிபத் தன்மை ஆகிய இவைகள் உண்டாம். அன்றியும் நேத்திரநோய், கர்ணரோகம், கபால உஷ்ணம், காசம், விரணம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—எள்ளின் நெய் என்று கூறப்பட்ட நல்லெண்ணெயை வாரத்திற்கு ஒரு முறை சூரியோதயத்திற்கு முன் தளரச் சிரசிலிட்டு நன்றாய்த் தேய்த்து அதன்பின் அவ்வாறே தேக முழுமையும் தேய்த்து $\frac{1}{4}$ மணி நேரம் சென்றபின் அவ்வெண்ணெய்ச் சிக்கற சிகைக்காய் இட்டு ஸ்நானம் செய்துவரத் தேகமானது செழிப்பாகப் பூரித்துக்காட்டும். தோலும் மிருதுவான மேனிபெறும். தேகத்திலுள்ள கொதிப்பு நீங்கும். ஆகாரத்திற்காகச் செய்யப்படும் பதார்த்த வகைகளில் ஏறத்தாழக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் பிரதி வேளையும் சேர்ந்துவரின் தேகத்தை கொழுமைப் படுத்தும். சொறி, சிரங்கு முதலியவற்றையும் போக்கும். இந்த எண்ணெயுடன் பல மூலிகைகளைக் கூட்டி முடித்தைலமாக உபயோகப்படுத்துவதுண்டு. அவைகள் பெரும்பாலும் அந்தந்த மூலிகைகளுக்குள்ள குணத்தையே விசேஷமாகப் பெற்றிருக்கும். அவற்றை ஆங்காங்குக் கூறப்பட்டுள்ள தைலங்களிற் கண்டுணர்க.

எள்ளு.

(Sesamum Indicum Seeds).

எள்ளுமருந் தைக்கெடுக்கு மேறனலாந் திண்மைதரு
முள்ளிலையைச் சேர்க்கு முதிரத்தைத்—தள்ளுமிரு
கண்ணுக் கொளிகொடுக்குங் காசமுண்டாம் பித்தமுமாம்
பண்ணுக் கிடர்புரியும் பார்.

குணம்:—(இ-ள்.) அபத்தியமாகிய எள்ளு, உஷ்ணம், பலம், கபம், காசரோகம், பித்தநோய் இவைகளை வருவிக்கும். குரலின் தொனியைக் கெடுக்கும். ஸ்திரீகளின் வயிற்றிற் கட்டுப்பட்ட உதிரத்தை வெளிப்படுத்தும்.

செய்கை:—ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—வீசம்படி எள்ளை ஒரு மட்கலயத்தில்போட்டு $\frac{1}{4}$ படி சுத்தசலம் விட்டு ஓர் இரவு ஊறவைத்து மறுநாள் சலத்தை வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் 3 மணி நேரத்திற்கு ஒரு முறையாகச் சிறிது சீனிச் சர்க்கரையிட்டுச் சாப்பிட்டுவர மாத விலக்கத்தை யுண்டாக்கும். ஆனால் இந்தக் கியாழத்தை, மாத விலக்கம் வரும் நாளையறிந்து உட்கொள்ளல் சாலச் சிறந்தது.

எள்ளு லேகியம்.

வீசம்படி கேழ்வரகு மாவைச் சலம்விட்டுப் பிசைந்து அடை சுட்டெடுத்து அதற்குச் சமனெடை கழுவி எடுத்து உலர்த்திய எள்ளையும் நல்லவெல்லத்தையும் கூட்டிச் கல்லுரலிலிட்டு யாவும் உறவாகும்படி புரட்டிப் புரட்டி இடித்து மெழுகுபதமானபின் திரட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு எலுமிச்சம் பழமளவு தினம் 3 வேளை சாப்பிட்டுவரச் சூதகச் சிக்கலை யுடைக்கும்.

எள்ளுப் பிண்ணாக்கு.

(Sesamum indicum Cake).

உள்ளிற்புண் ணுங்கிரந்தி யூரலுமி கக்கிளைத்தே
யெள்ளின்பிண் ணாக்குக் கெழும்புங்காண்—விள்ளுங்
கரப்பான் விரணங் கதித்தநீர் மேக
முரப்பாகு நாளு முரை.

குணம்:—(இ-ள்.) எள்ளுப் பிண்ணாக்கு தாதுவைப்பற்றிய விரணம், சிரங்கு, நமைச்சல், கரப்பான், புண், சலமேகம் முதலியவைகளை யுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாக உட்கொள்ளுவதில் பல தோஷங்கள் இருப்பினும் இதரச் சரக்குகளுடன் கூட்டிக் கொடுக்கும்போது வெகு மூத்திரத்தை நிறுத்தக்கூடிய தன்மை இதனிடத்தில் உண்டு. அவற்றுள் சில அநுபோக முறைகளாவன.

மதுமேக நிவாரண லேகியம்

எள்ளுப் பிண்ணுக்கு பலம் ½, ஆவாரம்பட்டை பலம் ½, பருத்திக்கொட்டையை ஓர் இரவு ஊறப்போட்டு மறுநாள் உடைத்து நடுவிலிருக்கும் பருப்பைச் சேகரம் செய்தது தோலா 4, வால்மிளகு தோலா 2, இலவங்கப்பட்டை தோலா 2, மாசிக்காய் தோலா 1, சிறு நாகப்பூ தோலா 1, பறங்கிச்சக்கை தோலா 2 இவற்றை இடித்துச் சூரணம் செய்து பசுவின்பால்விட்டு மெழுகுபதமாக அரைத்து வைத்துக்கொள்க. அப்பால் 7½ பலம் பழைய வெல்லத்தில் ½ சேர் பசுவின்பால் விட்டுக் கரைத்து ஒரு இரும்புக் கடாயில் விட்டுப்பாகு வரக் காய்ச்சி அதனில் முன் சித்தப்படுத்தியுள்ளதைப் போட்டு நன்றாய்க் கிண்டி லேகிய பதம் காணும்போது 2 பலம் நல்லெண்ணெய் விட்டுக் கிளறிக் கீழிறக்கி ஆறவிட்டு ஜாடியில் பத்திரப்படுத்துக, வேளைக்குச் சுண்டைக்காய்ப் பிரமாணம் அல்லது கழற்சிக்கொட்டைப் பிரமாணம் அந்தி சந்தி சாப்பிட்டு வர எத்தகைய வெகு மூத்திரமாயினும் சிறிது நாளில் குறைந்து அளவிற்கு வந்து விடும்.

ஏலக்காய்.

(Elettari Cardamomum).

விக்கல் பெருவாந்தி வெய்யவழல் நீர்ப்பேதி
மிக்கவெழும் பித்தம் மிகுமயக்கம்—சிக்கலுற்ற
மந்தம் வயிற்றுவலி மாதே விரைந்தோடும்
அந்தமுறு மாஞ்சிக் கறி. (ஆஞ்சி = ஏலம்)

குணம்:—(இ-ள்.) ஏலக்காயினால், விக்கல். வாந்தி, மேகக்காங்கை, நீர்பேதி, பித்தமயக்கம், மந்தம், வயிற்றுவலி முதலியவைகள் நீங்குமென்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, ஊதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—4-5 ஏலக்காயைத் தோலுடன் இடித்து ஓர் மட் குடுவையில் போட்டு 1 ஆழாக்குப் பசுவின் பாலும், ½

ஆழாக்குச் சுத்த ஜலமும் கூட்டி பால் அளவிற்குச் சுண்டக்காய்ச்சி போதியஅளவு நாட்டுச் சர்க்கரை போட்டுகலக்கி வடிகட்டித்தினம் 2 வேளை கொடுக்கப் பித்தத்தால் உண்டான மயக்கம் போம். ஏலக்காய் வித்தை முலைப்பால் விட்டு அரைத்து முலைப்பாலில் கலக்கி ஒரு சீலையில் நனைத்து நெற்றியின்பேரில் போட்டு உலர உலர மிகுதியுள்ள பாலைத் தடவிக்கொண்டுவரத் தலைவலி நீங்கும். ஏலக்காய் வித்து, சுக்கு, கிராம்பு, சீரகம் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½ விராகனெடை வீதம் தினம் 3 வேளை தேனில் கொடுக்க வயிற்றுவலி, வயிற்றுப்புசம், அஜீரணம் முதலியவைகள் குணமாகும். ஏலரிசி, சோம்பு, சீரகம் இம்மூன்றையும் சமனெடையாய்ப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 1 விராகனெடை வீதம் தினம் 2 வேளை வெந்நீரில் போட்டுக்கொடுக்க அஜீரணத்தைப் போக்கும்.

இத்தகைய வீட்டு வைத்தியங்களுமன்றி இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிப் பண்டிதர்கள் சூரணம், வடகம் முதலியவைகளாகச் செய்துகொடுப்பதுமுண்டு. அவற்றுள் சிலமுறைகளாவன:-

ஏலாதிச் சூரணம்.

ஏலக்காய்வித்து விராகனெடை 1, இலவங்கப்பட்டை விராகனெடை 2, சிறு நாகப்பூ விராகனெடை 3, மிளகு விராகனெடை 4, பொரித்த வெங்காரம் விராகனெடை 5, திப்பிலி விராகனெடை 6, இவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து, இதற்குச் சமனெடை சர்க்கரை கூட்டி வேளைக்கு 7-10 குன்றி எடை வீதம் தினம் 3வேளை சாப்பிடக் கப சம்பந்தமான இருமல் ரோகம்போம்.

(வேறுமுறை)

ஏலக்காய் விராகனெடை 5, குங்குலியம் விராகனெடை 2, கோரைக்கிழங்கு விராகனெடை 4, சிவப்புச் சந்தனத்தூள் விராகனெடை 2, திப்பிலி விராகனெடை 3, கிராம்பு விராகனெடை 2, சிறுநாகப்பூ விராகனெடை 1 இவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 7-10 குன்றி எடை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட எத்தகைய வாந்தியும் குணமாகும்.

ஏலாதி வடகம்.

ஏலரிசி, இலவங்கப்பட்டை, விதை நீக்கிய திராட்சைப்பழம், திப்பிலி வகைக்குப்பலம் 3, அதிமதுரம், நாட்டுச் சர்க்கரை,

கொட்டை நீக்கிய பேரீச்சங்காய் வகைக்குப் பலம் 1½. இவற்றுள் இடித்துச் சூரணம் செய்யவேண்டியவைகளைச் சூரணம்செய்து திராட்சை, பேரீச்சங்காய், நாட்டுச் சர்க்கரை முதலியவைகளுடன் கூட்டிக் கல்லுரலில் இட்டுக் கடப்பாறைகொண்டு உஷ்ணம் பிறக்க நன்ருய் இடித்து இளகலாய் இருக்கும் சமயம் சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும். வேளைக்கு 1-2 மாத்திரை வீதம் தினம் 2-3 வேளை கொடுக்க வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், பேதி, பித்தாதிக்கம் முதலியவைகள் குணமாகும்.

இங்குக் கூறப்பட்ட பிரயோகங்களெல்லாம் பொதுவாக ஏலத்திற்குக் கூறப்பட்டதேயாகும். இந்த இனத்தில் சிறிய ஏலம், பெரிய ஏலம், காட்டு ஏலம், மலை ஏலம் என நான்கு விதங்களுண்டு. இவற்றை ரோகங்களுக்கு ஏற்றவாறு அவிழ்தங்களில் சேர்த்துக் கொள்ளுதல் பண்டிதர்களின் கடமையாகும்.

சிறு ஏலம்.

(Elettaria Cardamomum Small).

மலவாத மோடு வயிற்றுக் கொதிப்பு
சலமூறல் வாயினிப்பு தாகஞ்—சலபேதி
வேர்க்குந் தலைநோய் மிகுசுட்சை யையமிவை
போக்குஞ்சிற் றேலம் புகல்.

(இ-ள்.) சிறு ஏலம் மலாவிருதவாயு, நுரைத்தமலம், உமிழ்நீரூறல், வாயினிப்பு, தாகம், சலபேதி, வியர்வைத்தலைவலி, மிகுசுரம், கபம் இவைகளை நீக்கும் என்க.

பெரிய ஏலம்.

(Elettaria Cardamomum Big).

தொண்டை வாய்கவு டாலு குதங்களிற்
றேன்று நோயதி சாரம்பன் மேகத்தா
லுண்டை போலெழுங் கட்டி கிரிச்சர
முழலை வாந்தி சிலந்தி விடஞ்சுரம்
பண்டை வெக்கை விதாகநோய் காசமும்
பாழுஞ் சோமப் பிணிவிந்து நட்டமுள்

ளண்டை யிளைவன் பித்தமிவைக் கேலா
மால மாம்பரு மேல மருந்ததே.

(இ-ள்.) பருத்த ஏலமானது, சுரக்கினம், பித்தமுகபாகம், தாலுபாகம், பித்தஜிக்வாகண்டகம், சருமகீலம், பேதி, அரையாப்புக்கட்டி, கிரிச்சரம், வாயில் உழலை, சர்த்தி, சிலந்திவிஷம், ரூட்சை, உஷ்ணபேதி, விதாகம், இருமல், சோமரோகம், சுக்கிலநாசம், வயிற்றில் கபநிறைவு, நெஞ்சில் கோழை, உரத்த பித்தம் ஆகிய இவ்வித நோய்களை விலக்கும் என்க.

காட்டு ஏலம்.

(Amomum Subulatum).

தீராத வாந்தி சிலேஷ்ம மதிசாரம்
பேரா வருசிபித்தம் பேருங்காண்—சோராமல்
காட்டேல வார்க்குழலே காரம் பரிமளஞ்சேர்
காட்டேல மென்றுரைக்குங் கால்.

(இ-ள்.) உறைப்பும் மணமும் உள்ள காட்டு ஏலத்தினால் நீங்காத வாந்தி, கபம், பேதி, அரோசகம், பித்தம் இவைகள் நீங்கும் என்க.

மலை ஏலம்.

(Ellettaria Cardamomum Hilly).

நாவறட்சி தாகசுர நாடா தகற்றிவிடுந்
தீவறட்சி நீர்க்கடுப்பைத் தீர்க்குங்காண்—மூவறட்சி
கூடு மரோசகத்தைக் கூடாம லோட்டிவிடு
நாடுமலை யேல நவில்.

(இ-ள்.) மலை ஏலமானது நாவறளல், வறட்சுரம், பித்தச்சொறி, நீர்ச்சுறுக்கு, திரிதோஷவறட்சியால் பிறந்த அருசி இவைகளை ஒழிக்கும் என்க.

ஏழிலைப்பாலை.

(Alstonia Scholaris).

சீத முடன்பேதி சீயொழுகுங் காதுவலி
வாதப் பிடிப்பும் வருஞ்சிரங்கின்—வேதனைக
ளெல்லா மொழிந்துபோ மேந்திழையே யுட்கொள்ள
நல்லேழி லைப்பாலை நாடு.

குணம்:—(இ-ள்.) ஏழிலைப்பாலையால் சீதபேதி, காதுவலி, காதில் சீழ்வடிதல், கணுச்சூலை, சிரங்கு முதலியவை நீங்குமென்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி, விரணகாரி, தாதுக்ஷீண ரோதி, கிருமிநாசினி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் வேர்ப்பட்டையை இடித்து ஒரு குடுவையில் போட்டு 10 அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தைவிட்டு ஒரு மணி நேரம் ஊறவைத்துப் பிறகு வடித்துச் சீசாவில் வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கத் தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். இதன் பாலை நல்லெண்ணெயுடன் கூட்டிக் கலக்கிக் காதில்விடக் கர்ணசூலை (காதுவலி) நீங்கும். இதன் இலைச்சாறு ½ அவுன்ஸ், இஞ்சிச் சாறு ½ அவுன்ஸ் கூட்டிப் பிரசவித்த ஸ்திரீகளுக்குக் கொடுக்க அழுக்கை வெளித்தள்ளும். இதன் வேர்ப்பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்துவைத்துக்கொண்டு தினம் பசுவின் பாலில் 3-5 குன்றி எடை போட்டுக் கொடுத்துக்கொண்டுவர ஆரம்பமான குட்டம் நிவர்த்தியாகும்.

இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிக் கியாழமாகச் செய்து கொடுப்பதுமுண்டு. அவற்றுள் சில அனுபவமுறைகளாவன—

சர்வ சுரக் கியாழம்

ஏழிலைப்பாலை, ஆடாதோடை, காய்ச்சுக்கட்டி, வெட்பாலை அரிசி, சீந்தில்கொடி, வசம்பு, கோரைக்கிழங்கு, பேய்ப்புடல் வகைக்குப் பலம் ½ வீதம் இடித்து ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க வாத பித்த கப சம்பந்தமான பல சுரங்கள் போம். சுரத்தின்பேரில் பேதி இருப்பினும் குணமாகும்.

(வேறுமுறை)

ஏழிலைப்பாலையின் வேர்ப்பட்டை, சீந்தில்கொடி, ஆடாதோடை இலை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, காய்ச்சுக்கட்டி, வேம்பினிலை வகைக்குப் பலம் ½ வீதம் இடித்து ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம்விட்டு ⅛ படியாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கச் சர்வ சுரங்களும் குணமாகும். சுரத்தின்பேரில் பேதி இருப்பினும் கண்டிக்கும். இவைகளுமல்லாமல் இதன் பாலைச் சிரங்குகளுக்கும், மேகவாயுப் பிடிப்புகளுக்கும் மேற்பற்றிடக் குணமாகும்.

ஐவேலி.

(Broyonia Laciniosa).

விந்திளைப்புப் பெண்மலடு வீக்க மகக்கிருமி
சந்து வலிப்புண்ணும் சார்கரப்பான்—வந்துடலில்
ஏக்கமுறச் செய்யுங்கால் ஏந்திழையே ஐவேலி
போக்கிவிடு மென்றே புகல்.

குணம்:—(இ-ள்.) ஐவேலியினால் தாது பலவீனம், மலடு, வீக்கம், வயிற்றிலுள்ள கிருமிகள், மேகவாய்வு, பிடிப்பு, சிரங்கு, கரப்பான் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—ஐவேலிக் கொடியைக் காய் முதிர்ந்த சமயம் சமூலத்தோடு கொண்டுவந்து நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1 முதல் 2 விராகனெடை முறைப்படி கியாழமிட்டு உள்ளுக்குக்கொடுக்கவும். அல்லது இந்தச் சூரணத்தில் ¼ முதல் ½ விராகனெடை சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும். இப்படிச் சில தினம் கொடுத்துவர இச் செய்யுளின்கண் கூறப்பட்ட ரோகங்களைக் கண்டிக்கும். இந்தச் சூரணத்தை அதிக அளவில் உட்கொண்டால் மலத்தை இளகலாகப் போகச்செய்யும். ஆகையால் தேக திடத்திற்கு ஏற்றவாறு அடிக்கடி மலம் போகாமலிருக்கும்படியாக அளவைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஓமம்.

(Ptychotis Ajowan).

சீதசுரங் காசஞ் செரியாமந் தம்பொருமல்
பேதியிரைச் சல்கடுப்புப் பேராம—மோதிருமற்
பல்லொடுபல் மூலம் பகமிவைநோ யென்செயுமோர்
சொல்லொடுபோ மோமமெனச் சொல்.

குணம்:—(இ-ள்.) ஓமத்தினால் குளிர்ச்சிசுரம், இருமல், அசீரணம், வயிற்றுப்பிசம், அதிசாரம், குடலிரைச்சல், ஆசனக் கடுப்பு, சீதபேதி, சுவாசகாசம், தந்தரோகம், தந்தமூலரோகம், குய்யரோகம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி, அங்காகர்ஷண நாசினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பொன்மேனியாகச் சிறிது வறுத்துச் சமனெடை கறியுப்புசேர்த்து இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 15-30 குன்றி எடை வாயில் போட்டுச்சிறிது சலத்துடன் விழுங்கத் தீபனத்தை யுண்டாக்கும். வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். குழந்தைகளுக்கு 3-5 குன்றி எடை வயதுக்குத் தக்க படி தேனில் கொடுக்கவும்.

ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் இவைகளை வகைக்குப் பலம ½ ஆக நிறுத்தெடுத்துச்சிறிது நெருப்பனலில் வெதுப்பி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு அதனுடன் சமனெடை சீனிகூட்டி வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி கொடுக்கக் கடூரமான பேதிகளையும், அஜீரணத்தையும் நிவர்த்தி செய்யும்.

ஓமம், கற்பூரம், கறிமஞ்சள் இம்மூன்றையும் தூள் செய்து வைத்துக்கொண்டு, அதிக சீதளத்தினால் தேகம் குளிர்ச்சி பெற்ற வர்களுக்கு, மேலே தூவி தேய்க்கச் சூடு பிறக்கும்.

ஓமத்தைச் சலம்விட்டரைத்துக் களிபோல் கிளறித் தாளக் கூடியசூட்டில் நோயுள்ள பாகத்தில் வைத்துக் கட்ட அவ்விடத்தி லுள்ள நோயும் வீக்கமும் போம்.

ஓமம், மிளகு, சுக்கு வகைக்குப் பலம் ½, ஏலம் பலம் 1 இவை களைச் சிறிது நெருப்பனலில் வெதுப்பி இடித்துச் சூரணம் செய்து சமனெடை சீனிகூட்டித் தினம் 2 வேளை திரிகடிப் பிரமாணம் கொடுக்க வயிற்றுவலியைக் குணப்படுத்தும்.

ஓமம், பெருங்காயம், கடுக்காய், கல்லுப்பு, கறுப்புப்பு எவாச் சாரம் இங்கு கூறப்பட்ட ஆறு சரக்குகளையும் சமனெடையாக நிறுத்து அவற்றுள் முதல் கூறப்பட்ட மூன்று சரக்குகளைச் சிறிது நெருப்பனலில் வெதுப்பி மற்றவைகளுடன் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 10-12 குன்றிநிறை ஒருமிடறு சலத்தில் போட்டுக் கலக்கிக் கொடுக்க அஜீ ரணம், வயிற்றுவலி, வயிற்றுப்பிசம் இவைகள் போம். ஓமத்தை இடித்துத் தூள்செய்து ஒரு சன்னமான சீலையில் முடிச்சுக்கட்டி அதை அடிக்கடி நாசியில்வைத்து மோந்துகொண்டிருக்க ஜலதோ ஷம், சன்னி முதலியவைகள் போம்.

ஓமத்தைச் சூடுபெற வறுத்து ஒரு சீலையில் முடிந்து தாளக்கூடிய நிதானத்தில் மார்பு, முதுகு முதலிய இடங்களில் ஒற்றடம்கொடுக்க சுவாசகாசரோகத்தில் உபத்திரவம் செய்கின்ற கபத்தைக் கரைத்து வெளியாக்கும்.

ஓமம், திப்பிலி, ஆடாதோடையிலை, கசகசாத்தோல் இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் வீதம் ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவரச் சுவாசகாசரோகத்தில் நுரையீரலில் கட்டியுள்ள கபம் கரையும்.

குறிப்பு:—இந்த ஓம இனத்தில் அசம்தா ஓமம் **(Carum Roxburghianum)** என்று ஒன்று உண்டு. இது குணத்தில் அதிகம் சிறந்ததெனச் சில பண்டிதர்களின் கொள்கை. ஆகையால் அவிழ்த முறைகளில் இனமறிந்து சேர்த்துக் கொள்வார்களாக.

ஓமவள்ளி.

(Coleus Aromaticus).

நாறுகின்ற ஓமவள்ளி நாட்டினிலே நற்சேய்க்குச்
சீறுகின்ற மாந்தச் செருக்கொழிக்கும்—மீறுகின்ற
தொண்டைக் கபக்கட்டும் தோன்றும் சுரம்போக்கும்
கெண்டை விழிமாதே கேள்.

குணம்:—(இ-ள்.) ஓமவள்ளியால் குழந்தைகளுக்கு உண்டாகின்ற மாந்தம், தொண்டை, மார்பு முதலிய ஸ்தானங்களில் சேர்ந்துள்ள கபக்கட்டு, சுரம் முதலியவைகள் நீங்கும்.

செய்கை:—சுரஹரகாரி, கபஹரகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றைச் சர்க்கரையுடன் கலந்து குழந்தைகளுக்குக்கொடுக்கச் சீதளத்தினால் உண்டான இருமலைக் குணப்படுத்தும்.

இதன் இலைச்சாறு, நல்லெண்ணெய் சர்க்கரை இம்மூன்றையும் உறவாகும்படி கலக்கி நெற்றியில் பற்றுப்போடத் தலைவலி நீங்கிச் சிரசில் உண்டான சூட்டைத் தணிக்கும்.

இதன் இலைகளையும் காம்புகளையும் கியாழமிட்டுக் குழந்தைகளுக்குக்கொடுக்க இருமல், கபசம்பந்தமான சுரம் முதலியவைகள் போம். இதனுடன் கஸ்தூரிமாத்திரை, கோரோசனை மாத்திரை சேர்த்துக் கொடுப்பது சாலச் சிறந்தது.

ஓரிதழ்த்தாமரை.

(Viola Suffruticosa).

தாதுவையுண் டாக்குந் தனிமேகத் தைத்தொலைக்கு
மாதரவர் மேனிக் கழகுதருஞ்—சீதம்போஞ்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்ய மடவனமே
ஓரிதழ்த் தாமரையை யுண்.

குணம்:—(இ-ள்.) ஓரிதழ்த்தாமரை சுக்கிலத்தையும், சவுந்தரியத்தையும் உண்டாக்கும். மேக ரோகங்களையும் கிரகணியையும் நீக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது சிறிய பூண்டினத்தைச் சேர்ந்தது. இதன் புஷ்பத்தில் ஒரே இதழ் உண்டு. இது பார்வைக்குச் செந்தாமரைப்பூவின் நிறத்தை ஒத்திருப்பதினால் ஓரிதழ்த்தாமரை எனப் பெயரிட்டிருக்கின்றனர். இதை அரைத்துத் தினந்தோறும் நெல்லிக்காய்ப்பிரமாணம் பாலில் கலக்கி உண்ணத் தாது விர்த்தியுண்டாவதுடன் வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல் முதலிய மேகசம்பந்தமான பல பிணிகள் நீங்கும். மோரில் கலக்கி யுண்ணக் கிராணி முதலிய பேதிகள் குணமாகும். இதன் சமூலத்தை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து தாது விர்த்திக்குரிய லேகியங்களுடன் கூட்டுவதுண்டு. எங்ஙனமெனில்—

புருஷ ரத்தின லேகியம்.

நிழலில் உலர்த்திய ஓரிதழ்த்தாமரை பலம் 4, பொட்டுப்போக தேய்த்து எடுத்த சீரகத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறப்போட்டு இரவியில் உலர்த்தி எடுத்தது பலம் 4, நறுந்தாளிக்கீரை நிழலில் உலர்த்தியது பலம் 2, பசுவின்பாலில் வேகப்போட்டு உலர்த்தி எடுத்த நிலப்பனைக்கிழங்கு பலம் 2 இவைகளை யெல்லாம் ஒருமிக்கச் சேர்த்து இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க. ஒரு ஈயம்பூசிய பாத்திரத்தில் 5 கோழிமுட்டையின் வெண்கருவை விட்டு அதனுடன் 10 பலம் வெள்ளை வெங்காயச்சாறு விட்டு நன்ருய் மத்திக்கவும். இவைகள் நன்ருய் உறவான பதத்தைக் கண்டுணர்ந்து மீண்டும் அதனுடன் 5 பலம் பசுவின் வெண்ணெயையாவது அல்லது எருமையின் வெண்ணெயையாவது கூட்டி நன்ருய் மத்திக்கவும். இவைகள் யாவும் நன்ருய் கலந்துறவான பதத்தில் முன் சித்தப்படுத்தியுள்ள சூரணத்தைக் கொட்டிக்கிளறி நன்ருய் உறவான

பின் 15 பலம் சுத்தமான தேனைவிட்டுப் பிசைந்து லேகிய பதமாகச் செய்துகொள்க. இதைத் தினந்தோறும் இரவியில் வைத்துக் கொண்டுவரக் கெடுதல் அடையாது. இந்த லேகியத்தைத் தினம் இரு வேளை அந்தி சந்தி கொட்டைப்பாக்குப் பிரமாணம் உட்கொள்ளச் சொர்ப்பன ஸ்கலிதம் நிவர்த்தியாகும். சரீரத்திலுள்ள துர்பலத் தைப்போக்கி தாதுவை விருத்திசெய்து போக இச்சையை அதிகப் படுத்தும். தேக காந்தியை உண்டாக்கும்.

ஓரிலைத்தாமரை.

(Orilai Thamarai).

ஓரிலைத் தாமரையி னுற்றகுணத் தைக்கேளாய்
மார்பிற்பா லில்லாத மங்கையர்க்கு—மோரில்
குடிக்கப்பா லுண்டாகுங் கோரவன் மேகம்
படிக்கு லிருக்குமோ பார்.

குணம்:—(இ-ள்.) ஓரிலைத் தாமரையை அரைத்துப் பசுவின் மோரில் கலக்கி ஸ்திரீகள் உட்கொள்ளப் பால் சுரப்பு உண்டாகும். கடுமையான மேக ரோகங்கள் போம்.

செய்கை:—க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் சிறிய பூண்டு விசேஷமாக மலைச்சாரல்களிலுள்ள சதுப்பு நிலங்களில் உண்டாகும். இதன் இலையும் பூவும் உருவில் தாமரையைப்போல் இருக்கும். ரூபாய் அகலத்திற்கு ஓரே இலையுண்டு. இக்காரணத்தைக்கொண்டே இதற்கு ஓரிலைத் தாமரை எனப் பெயரிட்டிருக்கின்றனர். மலையாளப் பிர தேசத்தில் கண்ணனூர்க்குச் சமீபத்திலுள்ள ஏழுமலைத்தொடரில் காணலாம். இதன் இலையை அரைத்துச் சுமார் நெல்லிக்காய்ப் பிரமா ணம் மோரில் கலக்கித் தினந்தோறும் காலையில் சாப்பிட்டுவரப் பிரச வித்த ஸ்திரீகளுக்கு முலைப்பால் விருத்தியாகும். இன்னும் இத் தகைய பிரயோகத்தால் வெள்ளை, நீர் எரிச்சல், நீரடைப்பு முதலிய மேக சம்பந்தமான பிணிகள் நீங்கும்.

கக்கரிக்காய்.

(Cucumis Sativus).

கக்கரிக்காய் பித்தங் கடியுங் கபமுயர்த்தும்
மெய்க்குக் குளிர்ச்சிதரும் மென்னுதலே—முக்குகின்ற
மூல வழறணிக்கும் மூடிரத்த பித்தத்தைச்
சால வகற்றிவிடுஞ் சாற்று.

குணம்:—(இ-ள்.) கக்கரிக்காய் பித்ததோஷம், மூலச்சூடு, ரத்தபித்தம் இவைகளை நீக்கும். கோழையையும் குளிர்ச்சியையும் உண்டாக்கும்.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை மேற்றோல் சீவி சிறு துண்டுகளாக அரிந்து மிளகுடன் உப்புக்கூட்டிய பொடியில் சிறிது துவட்டிச் சாப்பிட நாவிற்கு உருசிதரும். இன்னும் வெய்யிலின் கடுமைமையால் ஏற்பட்ட தாக மடங்கும். இது உதிரத்திலுண்டான கொதிப்பையும், பித்தச் சூட்டையும், உஷ்ண சுரத்தையும் சாந்தப்படுத்தும். சிறுநீரை அதிகப்படுத்தும். ஆனால் விரைவில் ஜீரணமாகாது. அதன்பொருட்டே மிளகையும் உப்பையும் கூட்டி உண்ணுதல் சிறந்தது. இதன் விதையைக் கியாழங்களில் சேர்த்து உபயோகப்படுத்த நீர் தாராளமாகப் போகும்.

கசகசா.

(Papaver Somniferum Seeds).

கிருமி நமைச்சல் கிராணியதி சாரஞ்
சிரநீ ரநித்திரைபோஞ் செப்பி—உருவழகுங்
காந்தியுமுண் டாகுங் கசகசா வின்குணத்தைத்
தேர்ந்தவர்க்கு விந்துவுமாந் தேர்.

குணம்:—(இ-ள்.) கசகசாவினால் ரசதாதுகிருமி, தினவு, சீதரத்தக்கழிச்சல், மலபேதி, ஜலதோஷம், நித்திரைபங்கம் இவைகள் போம். தேகத்தில் சவுந்தரியம், தேஜஸ், சுக்கிலம் இவைகள் விருத்தியாகும்.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி, நித்திராகாரி, சங்கோசனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உண்ணும் பதார்த்தங்களிலாவது அல்லது லேகிய சூரணங்களிலாவது கூட்டியுண்ணக் கபக்கட்டு, நித்திரைபங்கம், நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், இரத்தமூலம், சீதபேதி, கிராணி, தாதுநஷ்டம் முதலியவைகள் குணமாகும். இதனைப் பச்சைப்பயருடன் கூட்டி அரைத்துத் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டுவர அழகு, மேனி முதலியவைகளை உண்டாக்குவதுடன் இரத்தக் கெடுதியினால் உண்டான தினவை யகற்றும். கசகசாவுடன் துத்தி இலையைச் சேர்த்து அரைத்து முன்

போல் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்யத் தினவை யகற்றும். வறுத்த துவரம்பருப்பு, கசகசா, தேங்காய், உப்பு, சிறிது மிளகு கூட்டி அரைத்துத் துவையலாக அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுச் சாப்பிட மலத்தைக் கட்டும், தாது பலப்படும். இன்னும் கசகசா, வால்மிளகு, வாதுமைப்பருப்பு, கற்கண்டு இவைகளைச் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து, போதிய அளவு நெய், தேன் கூட்டிக் கலந்து வேளைக்கு 1-2 விராகனெடை வீதம் அந்தி, சந்தி, சாப்பிட்டுவரக் கிராணி, அதிசாரம், இந்திரிய நஷ்டம், இரத்த மூலம், சீதபேதி இவைகள் போம். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

கசகசா லேகியம்.

1 பலம் கசகசாவுடன் 1 ஜாதிக்காய், 1 மாசிக்காய், 15 புளியங்கொட்டையின் மேல்தோல், 1 விராகனெடை சிறிது சுட்டெடுத்த கற்கடகசிங்கி இவைகளை அம்மியில் வைத்துப் பசுவின்பால் விட்டு நெகிழ அரைத்து எடுத்து வைத்துக்கொள்க. அப்பால் 2 பலம் பனங்கற்கண்டை ஜலம் விட்டுக் கரைத்து வடிகட்டி ஒரு கடாயில் விட்டு அதில் முன் சித்தப்படுத்திய கற்கத்தைப்போட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்துச் சுண்டி லேகியபதமாக வரும்போது போதிய நெய் விட்டுக் கிளறிப் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1-1½ கொட்டைப்பாக்களவு தினம் 2 வேளை உட்கொள்ள இரத்தபேதி, சீதபேதி, அதிசாரபேதி, கிராணி இவைகள் போம்.

கசகசாத் தோல்.

(Papaver Somniferum Capsules).

சந்து வலிவீக்கம் சாற்றுங்கண் ணோய்விம்மி
நொந்து வருமுந்தி நோய்களுமே—செந்திருவே
வித்துக் கசகசா வின்றோல் கியாழத்தால்
ஒத்திடவே யோடுமென வோது.

குணம்:—(இ-ள்.) கணுக்களில் உண்டான வலி, வீக்கம், கண்வியாதி, வயிற்றுவலி இவைகட்குக் கசகசாத்தோலை சலத்திலிட்டுக் காய்ச்சி ஒற்றடங்கொடுக்க நீங்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, வேதனசாந்தினி சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—1½ பலம் நிறையுள்ள கசகசாத் தோலை ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம்விட்டு ¼ மணி நேரம்

சிறுக எரித்து வடித்துக்கொண்டு மீண்டும் அதில் ¼ படி சலம்விட்டு முன்போல் ¼ மணி நேரம் எரித்துப் பிசைந்து வடிகட்டி எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து சிறிது நேரம் எரித்துத் தாளக்கூடிய உஷ்ணத்தில் சீலையில் தோய்த்து ஒற்றடம் கொடுக்க அடி, குத்து இவைகளினாலுண்டான வீக்கம், கீல்களிலுண்டான வீக்கம், வலி, வயிற்றுவலி இவைகள் போம். இதுவுமன்றிக் கசகசாவின் தோலோடு துத்தியிலையையும் கூட்டிக் கியாழம் வைத்து முன்போல் ஒற்றடம் கொடுப்பதுமுண்டு. கசகசாவின் தோல், அதிவிடயம், கடுக்காய்ப்பூ, சிறுநாகப்பூ இவைகளை வகைக்குப் பலம் ¼ ஆக ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கப் பேதி முதலியவற்றைக் குணமாக்கும். இதனைக்கொண்டு லேகியமும் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

போஸ்தக்காய் லேகியம்.

கசகசாத்தோல் பலம் 1, சுட்டெடுத்த கற்கடகசிங்கி பலம் 1, மராட்டிமொக்கு கழஞ்சு 1 இவைகளை இடித்துச் சூரணித்து வைத்துக்கொள்க. அதன் பின் 2¼ பலம் பனைவெல்லத்தில் ¼ படி பசுவின்பால் விட்டுக் கரைத்து வடிகட்டி ஒரு இரும்புக் கடாயிலிட்டு அடுப்பிலேற்றி சிறு தீயாக எரித்துப் பாகுபதம் வரும்போது மேற்படி சூரணத்தைக் கொட்டிக் கிளறிப் போதிய அளவு நெய், தேன் விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு 1-1½ விராகனெடை தினம் இருவேளை அந்தி சந்தி கொடுக்கப் பெரும்பாடு, பேதி, இரத்தக்கழிச்சல் முதலியவை குணமாகும்.

கசப்பு வாதுமை.

(Prunus Amygdalus).

அஞ்சக் கசக்கு மடப்பம் விதையதனல்
மிஞ்சு மிருமல் மிதமாகும்—வஞ்சிநல்லாய்
நாணும் படைசொறியும் நாற்றமுறும் புண்புரையும்
பேனு மொழியுமெனப் பேசு.

குணம்:—(இ-ள்.) கசப்பு வாதுமைப்பருப்பால் இருமல், படை, சொறி, புண், தலையிலுள்ள பேன் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—தாதுக்ஷீணரோதி, மலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொட்டையானது பார்வைக்கு வாதுமைக் கொட்டையைப்போலவே வெளுப்பாக இருக்கும். இதன் பருப்பு இயற்கையில் கசப்புச் சுவையைப் பெற்றிருக்கும். இதனை சலம் விட்டு அரைத்துத் தலைக்குப் பூசிக்கொள்ளப் பேன்கள் சாகும். இதை அரைத்துச் சீலையில் தடவித் திரியைப்போல் சுருட்டி மர்மஸ்தானத்தில் செருகிவைக்க மாதர்களுக்குச் சிக்குப் பட்டுள்ள மாத விலக்கத்தை வெளியாக்கும்.

ஒரு பலம் பருப்பைத் தட்டை அம்மிக்கல்லில் வைத்துச் சிறிது சலம் தெளித்து வெண்ணெய்போல் அரைத்து, வழித்து எடுத்து அதற்கு எட்டு மடங்கு சுத்த சலம் விட்டுக் கரைத்து வடிகட்டி வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம், தினம் 2-3 வேளை கொடுத்துவர அதிக காங்கையினாலுண்டான இருமலைத் தணிப்பதுமன்றி, அதனால் ஏற்பட்ட தொண்டை விரணத்தையும் ஆற்றும்.

இதன் பருப்பை முன்போல் அரைத்து ஒரு கரண்டியிலிட்டு நெருப்பனலில் களிபோல் கிளறிப் படை, சொறி, சிரங்கு முதலியவற்றிற்குப் பூசிவர விரைவில் ஆறும்.

இதன் எண்ணெயை விரணங்களுக்குச் செய்யும்படியான களிம்புகளில் கூட்டுதல் விசேஷ நன்மையைப் பயக்கும்.

கஞ்சா.

(Canabis Sativa).

மூலக் கிராணியறு முன்புள்ள பேதிகட்டுஞ்
சாலமயக் கும்பசியுஞ் சாருங்காண்—தூலஞ்செய்
வாதமொடு வையமும்போம் வன்கரப்பா னுந்தோலையுங்
கோதறுகஞ் சாச்சடைக் கு.

குணம்:—(இ-ள்.) கஞ்சாவிற்கு மூலவாயுசிரகணி, நீடித்த அதிசாரம், அதிதூலம், கபரிதக்கம், கரப்பான் இவைகள் போம். மிகுமயக்கமும் அதிதீபனமும் உண்டாம்.

செய்கை:—சமனகாரி, நித்திராகாரி, வேதனசாந்தினி, காம விர்த்தினி, அங்காகர்ஷணநாசினி, மூத்திரவர்த்தனகாரி, பிரசவகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை அவிழ்த பாகங்களில் கூட்டுவதற்கு முன் காம்பு முதலியவற்றை ஆய்ந்து எடுத்துவிட்டுச் சுத்த சலம் விட்டுப் பிசைந்து பிசைந்து தெளிந்த சலத்தை வடித்து

விடவும் இப்படி 10 முறை செய்து காயவைத்துக் கடாயில் சிறிது நெய்தடவி அதில் இதைப்போட்டுப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொள்வதே ஒருவிதமான சுத்தியாகும். இதனைச் சூரணங்களிலும், லேகியங்களிலும், மாத்திரைகளிலும் கூட்டி உபயோகப்படுத்துவது வழக்கம். 1 வேளைக்கு உரித்தான அளவில் கஞ்சா 1-1½ உளுந்தின் நிறைக்கு அதிகரித்திராது. இதனால் அஜீர்ணம், பேதிமுதலியவைகள் குணமாகும். உற்சாகமும், சுறுசுறுப்பும், இணைவிழைச்சில் இன்பமும் தரும். ஒருகால் சிறிது அளவு அதிகப்படின் மூளைக்கு ஒரு விதமான பரபரப்பு உண்டாகி அமைதியாக இருக்கவொட்டாமல் உன்மத்தனைப்போலத் தோற்றுவிக்கும். இன்னும் சந்தோஷத்தை அதிகப்படுத்தி மனத்தோற்றத்திற்கு ஏற்றவாறு மாயைகளைத் தரிசித்துப் பரவசமாகும்படி செய்யும். இன்னும் அளவு அதிகரித்திருப்பின் படுக்கையில் மெய் மறந்திருக்கக் கிடத்திவிடும். ஆகையால் தேகத்தின் சுபாவத்திற் கேற்றவாறு அளவைச் சரிபடுத்தி உட்கொள்ள இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள பல பிணிகளுக்கு இன்றியமையாததாகும். இச் சரக்கு சம்பந்தமான சூரணம், லேகியம் முதலியவற்றை சிகிச்சாரத்நதீபத்தில் கூறி இருப்பினும், சில முறைகளைக் கீழ்க்காண்க:—

விஷபேதி நிவாரணி

சுத்திசெய்த கஞ்சா, அபினி, காயம், கற்பூரம், சாம்பிராணி, பூரம், இலிங்கம், கெந்தகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, திப்பிலி, அதிவிடயம், பூண்டு, ஓமம், வசம்பு, கிராம்பு, சோம்பு (பெருஞ்சீரகம்) பொரித்த வெண்காரம் இவைகளைச் சமனெடையாக எடுத்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு 2 சாமம் அரைத்து, மெழுகு பதத்தில் கடலைப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1 மாத்திரை வீதம் வெந்நீரிலாவது, சாராயத்திலாவது அனுபானஞ் செய்து, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை, பேதி நிற்கும்வரையில் கொடுக்கவும். இதனால் பேதி, வாந்திபேதி முதலியவைகள் குணமாகும்.

(வேறுமுறை)

சுத்தி செய்த கஞ்சா தோலா 1, அபினி தோலா 1, இலிங்கம் தோலா 1, சுத்தி செய்த நெல்லிக்காய்கந்தகம் தோலா 1, சுத்தி செய்த ரசகற்பூரம் விராகனெடை 1, எட்டிவேர்ப்பட்டை

பலம் ½, மிளகாய் விரை பலம் 2, *பெருங்காயம் *மிளகு, வால் மிளகு, சீரகம், சாதிக்காய், வெந்தயம், கருவேலம்பிசின், இந்துப்பு, கற்பூரம் வகைக்கு பலம் 1, இவைகளைக் கல்வத்திலிட்டு, கஞ்சாக் கியாழம், பட்டைச்சாராயம், எலுமிச்சம்பழச்சாறு, முருங்கை வேர்ப்பட்டைச்சாறு ஆகிய இவைகளில் முறையே ஒவ்வொன்றிலும் 2 சாமம் வீதம் அரைத்து மெழுகு பதத்தில் கடலைப்பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக. இம் மாத்திரையை, முன்முறையில் கண்டவாறு அனுபானங்களில் கொடுக்க, விஷபேதி, அதிசாரபேதி குணமாகும்.

குறிப்பு:—இந்தக் கஞ்சாவை பங்கிபானமாகவும், புகைபானமாகவும் உபயோகப்படுத்துவது சிலர் வழக்கம். இது பெரும்பாலும் தீமையையே விளைவிக்கும்.

கஞ்சாப்பால்.

(Canabis Sativa—Resinous Exudation).

மாறிவருங் காய்ச்சல் மாதே யிரைப்பிருமல்
ஊறிவரும் மந்த முளமாந்தை—பாறிப்போம்
அஞ்சாத் தலைவலியு மப்பொழுதே விட்டகலும்
கஞ்சாவின் பாலதனாற் காண்.

குணம்:—(இ-ள்.) கஞ்சாப்பாலால் மாறல்சுரம், சுவாச காசம், அஜீரணம், அடுத்தடுத்து வரும் இருமல், தலைவலி ஆகிய இவைகள் போம்.

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இது இலை புஷ்பமிவைகளிலிருந்து எடுக்கப்படுகின்ற பிசின் சம்பந்தமான பால். இதில் வேளைக்கு ½ உளுந்து அல்லது 1 உளுந்து பிரமாணம் 4-5 மிளகுடன் கூட்டி நெய்யில் வெதுப்பிப் பொடிசெய்து சர்க்கரை கூட்டித் தினம் 2 வேளை கொடுக்கலாம். இது நித்திரைபங்க முள்ளவர்களுக்கு நல்ல நித்திரையை யுண்டாக்கும். இதனுடன் ½ உளுந்து பிரமாணம் அபினி சேர்த்துக் கொடுப்பதுண்டு. இது சுவாசகாசம், ஈளை இரு

---

* இவ்விரண்டையும் எட்டி மரத்தின் கிளையைக் குடைந்து அதில் தனித்தனியாகச் செலுத்தி அச் சக்கையைக்கொண்டு அடைத்துக் சாணம் பூசி 20 நாள் சென்றபின் எடுத்து முன் சரக்குகளுடன் கூட்டிக் கொள்ளவும்.

மல், சூதகவலி, முறைசுரம், குளிர்சுரம், தலைவலி முதலியவற்றைக் குணப்படுத்தும். சாதாரணமாக அபினியைப்போல் பசி மந்தப் படாது. மலங்கட்டாது. நல்ல பசிதீபனத்தை உண்டாக்கும்.

கடப்பம் வித்து.

(Barringtonia Acutangula Seeds).

கடப்பம் விதைக்குக் கடிவிஷமு முண்டோ
தொடுப்புமண்டை நீருந் தொலையு—மிடக்கான
வாத வகையொழியு மாந்தங்க ளேகிவிடுங்
கீத மொழிமாதே கேள்.

குணம்:—(இ-ள்.) கடப்பம் வித்துக்கு விஷக்கடி, சிரஸ்தாப ரோகம், வாதரோகங்கள், அக்னிமாந்த பேதங்கள் நீங்கும்.

செய்கை:—விஷநாசகாரி, உதரவாதஹரகாரி, வமனகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வித்தையாவது அல்லது பழத்தையாவது இஞ்சி ரசத்தில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க சல தோஷம் நீங்கும். இன்னும் சுவாச குழாய்களிலுள்ள கோழைகளை வெளிப்படுத்துவதுடன் வயிற்றுப் பொருமலையும் குணப்படுத்தும். இதனை சலம்விட்டு அரைத்து மார்பு, அடிவயிறு முதலிய இடங்களுக்குப் பற்றுபோட மார்புநோய் வயிற்றுப்பிசம் முதலியவைகள் குணமாகும். குழந்தைகளுக்கு சலதோஷம் கண்டபொழுது சிறு அளவாக இஞ்சிச் சாற்றில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகி சலதோஷம் நீங்கும். விதையின் சூரணத்தை நசியமிட தலைவலி நீங்கும். இதன் இலை ரசத்தை உள்ளுக்குக் கொடுக்க பேதியை நிறுத்தும். விதையையாவது பழத்தையாவது சமனெடை மிளகு சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுவிட் டரைத்து மெழுகு பதமாக திரட்டி வைத்துக்கொண்டு அதனில் 2½ குன்றிமணி எடையாக உட்கொள்ள இந்திரிய பலஹீனத்தைக் குணப்படுத்தும்.

கடலழிஞ்சில்.

(Casearia Esculenta).

தீதில் கடலழிஞ்சில் செய்யுங் குணங்களோ
யோதுமது மேகமோ ழிப்பதன்றி—வாதத்தில்
வந்தசலம் பித்தசல மாகபச்ச லந்தாகத்
தோந்தசல மும்போக்குஞ் சொல்.

(இதுவுமது)

கமல விரணங் கசிநீ ரகற்றும்
நிமல சுரம்விலக்கு நேரே—கமலமுக
மாதே கடலழிஞ்சில் வன்பட்டை பேதிகட்டுஞ்
சீதமே கம்போக்குந் தேர்.

குணம்:—(இ-ள்.) கடலழிஞ்சில் மரமானது மதுநீர் வாத பித்த கப முதலிய தோஷங்களினால் உண்டான நீர்ப்போக்குகள், தாகத்தைத் தராநின்ற தொந்த நீர்ப்போக்கு, படர்தாமரை, சொட்டுமூத்திரம், தனிச்சுரம், அதிசாரம், சீதமேகம் இவைகளைப் போக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—1 பலம் கடலழிஞ்சில் வேர்ப்பட்டையாவது அல்லது அதன் வேரையாவது இடித்து ஓர் மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சுத்த சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இது மண்ணீரலில் உண்டாகும் வீக்கம், பளுவு, அழுத்தம் முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும். 10 பலம் கடலழிஞ்சிப் பட்டையை நன்றாய் இடித்து ஒரு வாயகன்ற மட்கடத்தில் போட்டு 2 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பில் வைத்துக் கால்படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி மீண்டும் முன் பாண்டத்தை அலம்பி அடுப்பில் வைத்து அதில் விட்டுக் குழம்பு பதமாகக் காய்ச்சிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் வைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்து வைத்துக்கொள்வதுண்டு. இதுவே கடலழிஞ்சில்பட்டை சத்தாகும். இதனைத் தேக திடத்திற்கு ஏற்றவாறு வேளைக்கு 5 முதல் 10 குன்றி எடை தினம் இருவேளை சர்க்கரையுடன் கலந்தாவது அல்லது இனிப்புள்ள சர்பத்துகளில் கூட்டியாவது உள்ளுக்குக் கொடுக்க நீர்இழிவு, மதுமேகம் முதலியவைகள் குணமாகும். இத்துடன் இதர சரக்குகள் கூட்டி லேகியமாக செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

கடலழிஞ்சில்பட்டை லேகியம்.

1 வீசை கடலழிஞ்சில்பட்டையை பஞ்சுபோல் நசுக்கி ஒரு பெரிய மட்கடத்தில் போட்டு 8 படி சலம் விட்டு அடுப்பில் ஏற்

றிச் சிறுதீயாக எரித்து, 1 படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும், ஒரு படி பருத்திக்கொட்டையை ஒரு நாள் சலத்தில் ஊறவைத்து மறுநாள் உரலில்போட்டு இடித்துச் சிறிது மசிந்த சமயம் ஆட்டுக் கல்லுரலில் போட்டு சலம் தெளித்துத் தெளித்துக் குழவியைக்கொண்டு ஆட்டி வழித்தெடுத்துச் சீலையில் வைத்துப் பிழிந்து பால் வாங்கவும். மீண்டும் திப்பியை ஆட்டுக் கல்லுரலில் போட்டு சலம் தெளித்துக் குழவிகொண்டு ஆட்டி வழித்தெடுத்து முன்போல் பால் வாங்கவும். இப்படி 1 படி அளவிற்கு சேகரித்து வைத்துக்கொள்க. அப்பால் உலர்ந்த வன்னிஇலை, உலர்ந்த அத்திப்பிஞ்சு, ஆவாரம்பட்டை, கசகசா, சுக்கு, வேப்பம்பட்டை, கிராம்பு, ஓமம், கொத்துமல்லிவிதை ஜாதிக்காய், சிறுநாகப்பூ, ஏலம், ஜடாமாஞ்சி, திரிபலை, மரமஞ்சள் வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துச் சூரணம்செய்து வைத்துக் கொள்க. இதற்குமேல் முன் சித்தப்படுத்திய கடலழிஞ்சில்பட்டை கியாழத்தையும், பருத்திக்கொட்டைப் பாலையும் ஒரு கடாயில்விட்டு அதில் 2 வீசை வெள்ளைசர்க்கரையைப்போட்டுக் கரைத்து அடுப்பிலேற்றி எரித்துப் பாகுபதம் வரும் சமயம் முன் சித்தப்படுத்திய சூரணத்தை கொஞ்சம் கொஞ்சமாக போட்டுக்கிளறி கீழ் இறக்கிப் போதிய அளவு நெய், தேன் விட்டுக் கிளறி வைத்துக்கொள்க. இந்த லேகியத்தை அந்தி, சந்தி கழற்சிக்கொட்டை பிரமாணம் கொடுத்துவர மதுமேகம் நீரிழிவு முதலிய ரோகங்கள் குணமாகும்.

கடலை.

(Cicer Arientum Seeds).

கடலைவயி றூதற் கனத்தாகஞ் செய்யுங்
குடலைவலிப் பித்துமலங் கோட்டுந்—திடமருந்தைச்
சேதமுறப் பண்ணுந் தியக்கமொடு வாயுவையும்
போத வழைக்கும் புகல்.

குணம்:—(இ-ள்.) கடலை வயிற்றுப்பிசம், பித்ததாகம், குடல் நோயுடன்கூடிய கிரகணி, மயக்கம், மூலவாயு இவைகளை யுண்டாக்கும். மருந்தின் நற்குணத்தை முறிக்கும்.

செய்கை:—காமவிர்த்தினி, உற்சாககாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பதார்த்தங்களிலும் பல காரங்களிலும் விசேஷமாகச் சேர்த்து உபயோகப்படுத்துவதுண்டு. இது சரீரத்தில் உஷ்ணவாயுவை அதிகப்படுத்தும். வயிறு நொந்து மலத்தைத் தள்ளும். மூலரோகிகளுக்கு ஆகாது. இந்தக் கடலையைச் செம்மண் கரைத்த சலத்தில் தேக திடத்திற்கு ஏற்றவாறு வீசம் அல்லது அரை வீசம் படி போட்டு ஒரு இரவு ஊறவைத்து காலையில் சாப்பிட்டுத்தேக பலத்தைக் கோரிய அப்பியாசத்தைச் செய்து வரத் தேகத்தை உரமாக்கும். நுரைஈரலுக்குப் பலத்தை உண்டாக்கும்.

கடல்பாசி.

(Gracilaria Lichenoides).

மாருப் பெரும்பாடு வண்டலுறும் நீரேரிச்சல்
பேரா துறும்வெட்டை பெண்மயிலே—நீராய்க்
குடல்பாய்ச்சும் பேதி குணமாகும் நாட்டிற்
கடல்பாசி யுண்டவர்க்கே காண்.

குணம்:—(இ-ள்.) கடல்பாசியினால் பெரும்பாடு, நீரேரிச்சல், வெள்ளை, பேதி முதலியவைகள் நீங்கும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—கடற்பாசியை இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு வேண்டும்போது ½ பலம் தூளோடு ¾ படி சுத்தசலம் விட்டு 20 நிமிஷம் வரையில் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு நோயினின்று குணப்பட்டவர்களுக்கும் குழந்தை கட்கும் ஆகாரமாகக் கொடுக்கலாம். இது உஷ்ணத்தைச் சாந்தப்படுத்தும். சீதபேதி, ரத்தபேதி, நீரேரிச்சல், பெரும்பாடு முதலியவற்றைக் குணமாக்கும். அல்லது 1 பலம் கடற்பாசித்தூளை ஒரு ஈயம் பூசிய பாண்டத்தில் போட்டு அதனில் ¼ படி பசுவின்பால், ¼ படி சுத்த சலம் விட்டுக் கஞ்சிபதம் வரக் காய்ச்சிச் சிறிது சர்க்கரைப்போட்டுக் கலாய்பூசிய அகலத்தட்டுகளில் விட்டுவைக்க நுங்குபோல் உறைந்து விடும். இதனைச் சிறு துண்டுகளாக அறுத்துச் சாப்பிட அதிக உருசியாக இருக்கும். தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும்.

குறிப்பு:—இது இலங்கைக்குச் சமீபத்தில் கடலில் கிடைக்கும் ஓர்வித கடற் பூண்டாகும்.

கடற்பாலை இலை.

(Argyreia Speciosa Leaves).

கேடில்கடற் பாலையிலை கீழ்ப்பாகத் தாற்கட்ட
ஓடியுருள் கட்டி யுடைந்தேகும்—நாடியே
அவ்விலையின் மேற்பாக மாற்றிவிடும் ஆரணங்கே
சேவ்விதனை மேதினியிற் செப்பு.

குணம்:—(இ-ள்.) கடற்பாலை இலையின் அடி பாகத்தைக் கட்டிகளின் பேரில் வைத்துக்கட்ட உடைத்துக்கொள்ளும். அவ்விலையின் மேற்பாகம் கட்டிகளின் மீது வைத்துக்கட்ட ஆறும்.

செய்கை:—இலையின் அடிபாகத்திற்கு, துவக்ஸ்போடகாரி குணமுண்டு. இலையின் மேல்பாகத்திற்கு, அத்தர்ஸங்க்தகாரி குணமுண்டு.

உபயோகிக்கும் முறை:—இவ்விலையின் கீழ்பாகத்திற்கு ஓர் விதமான வீரியமுண்டு. இதற்கு முதிராத கட்டிகளைச் சீக்கிரத்தில் அடக்கிவிடவும், முதிர்ந்த கட்டிகளை உடைக்கவும் சக்தியுண்டு. இவ்விலையின் மேற்பாகத்திற்குச் சாந்தகுணமுண்டு. ஆதலால் மேற்படி இலையால் உடையப்பட்ட கட்டிகளுக்கு அவ்விலையின் மேற்பாகத்தை வைத்துக்கட்ட ஆறிவிடும்.

கடற்பாலைவேர்.

(Argyreia Speciosa Root).

ஆருக் கிரந்தியோடு ஆற்ற லுறும்பிடிப்புத்
தேருப் பலவீனங் தீருமே—பேரா
துடற்சரிக்கும் வாதமெலா மோடி யொளிக்கும்
கடற்பாலை வேரதனுல் காண்.

குணம்:—(இ-ள்.) கடல்பாலைவேரால் கிரந்தி, மேகவாயுவின் பிடிப்பு, பலக் குறைவு, பல வாதரோகங்கள் நீங்கும்.

செய்கை:—வியதாபேதகாரி, சங்கோசனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—கடற்பாலை வேரைச் சிறு துண்டுகளாக நசுக்கித் தண்ணீர்விட்டான்கிழங்கு சாற்றில் போட்டு 7 நாள் இரவியில் வைத்துக்கொண்டு வருக. அப்போதைக்கப்போது கிழங்கின்சாறு சுண்டி வரும்போது புதிதாகக் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்துக்கொண்டு வருக. எட்டாவதுநாள் நன்றாய் உலர்த்தி

இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼ ரூபாய் எடை தினம் 2 வேளை வெண்ணெயில் மத்தித்துக் கொடுத்து வரக் கிரந்தி, மேகரணம், கணுச்சூலை முதலியவைகள் தீரும். நரம்புகளுக்குப் பலத்தையும் மூளைக்குப் புத்தி விசாலத்தையும் உண்டாக்கும்.

கடற்றேங்காய்.

(Lodoicea Sechellarum).

கட்டி யரையாப்பும் கண்டத் துறுமாலை
நெட்டி யெழுமேக நீரிழிவு—மட்டின்றி
ஊறும் படைச்சொறியு மொண்டொடியே விட்டொழியும்
கூறும் கடற்றேங்காய்க் கு.

குணம்:—(இ-ள்.) கடற்றேங்காயினால் கட்டி, அரையாப்பு, கண்டமாலை, மேகம், நீரிழிவு, ஊரற்படை முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இத்தகைய தேங்காய்கள் பொதுவாக மால்டிவிஸ், சிசிலி என்னும் தீவுகளில் விளைகிறது. இவைகள் இந்து மஹா சமுத்திரத்தின் வழியாக இலங்கைத் தீவிற்கும், பம்பாய் முதலிய மேற்கு கடற்கரையோரங்களுக்கும் அடித்துக் கொண்டு வரப்படுகின்றது. இதுவுமல்லாமல் மேற்படி நாட்டிலிருந்து இந்தியாவிற்குச் சில சமயம் இறக்குமதியாவதுமுண்டு. இந்தத் தேங்காயானது ஏறத்தாழத் தொடைபருமனும் 1 அல்லது 1¼ அடி நீளமுடையதாகவும், கறுப்பு நிறமாகவும், பார்வைக்குக் கோழிமுட்டையைப்போல் நீண்ட வடிவமாகவும் மற்றொருபுறம் சிறிது தட்டையாகவும் இருக்கும்.

இதனுள் அடங்கிய சாராம்ஸமுள்ள சதைப்பற்றுத் தேங்காயை முலைப்பாலில் அரைத்து பாகப்படி உள்ளுக்கு கொடுக்க பேதியுடன் காணுகின்ற விஷசுரத்தை (Typhus Fever) நிவர்த்தி செய்யும்.

இதனைச் சிதைத்து முறைப்படி கியாழமிட்டு தேக திடத்திற்கு ஏற்றவாறு வேளைக்கு 1 அல்லது 2 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர நீரிலுள்ள தித்திப்பை நீக்குவதுடன் வெகு மூத்திரத்தையும் குணப்படுத்தும்.

இதனைத்தேன்விட்டரைத்து நாவில் தடவிவர வாய்க்குமட்டல் நீங்கும். இதனைச் சிறுநீரில் உரைத்துக் கட்டி, அரையாப்பு, கண்டமாலை, புரைக்குழல் முதலியவற்றிற்கு மேற்பற்ருகப் போட்டுவரக் குணமாகும். இதனைக் காடிவிட்டு அரைத்துப் படை, சொறி முதலியவற்றிற்கு போடக் குணமாகும்.

இவைகளுமல்லாமல் இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

கடற்றேங்காய்ப் பற்று.

கடற்றேங்காய் 2 எடை, மான் கொம்புத்தூள் 1 எடை, எட்டிக் கொட்டைச் சூரணம் $\frac{1}{2}$ எடை இவற்றை ஒருமிக்கக் கூட்டிக் கல்வத்திலிட்டுச் சுத்தசலம் விட்டு அரைத்துக் கட்டி, அரையாப்பு, கண்டமாலை, புரைக்குழல், மண்ணீரல், கல்லீரல், வீக்கங்கள் முதலிய விடங்களில் மேற்பற்றுப் போட்டுவரச் சிறிதுநாளில் குணமாகும்.

(வேறுமுறை)

கடற்றேங்காய், சுக்கு, அபினி, பெருங்காயம் இவற்றைக் கல்வத்திலிட்டு வெங்காயச்சாறு விட்டு நன்கு அரைத்து முற் கூறப்பட்ட நோய்களுக்குப் பற்றிடக் குணமாகும்.

கடாரநாரத்தங்காய்.

(Kadara Narathangoy).

பித்தமொடு வாயிற் பெருதறல ரோசகம்போம்
பத்தியமா நோயிற் பருகலாங்—குத்துங்
கடாரி யனையவிழிக் கன்னிமட மாதே
கடார்நாரத் தங்காயைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) கடாரநாரத்தங்காயால் பித்தநோயும், வாய்நீரூறலும், அருசியும் போம். இது பத்திய வஸ்துவாம். நோயாளர்க்கும் உதவும்.

செய்கை:—சீதளகாரி, (பித்த) சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பெருந்துண்டுகளாக அரிந்து ஒரு வாயகன்ற ஜாடியில் போட்டுப் போதிய அளவு உப்புத் தூளைக்கூட்டி நன்ருய்க் குலுக்கி வாயை மூடிவைத்து விடவும். தினந்தோறும் இதில் இருக்கும்படியான துண்டுகளைக் கைபடாமல் மர அகப்பையால் எடுத்துப் பீங்கான் சட்டியில் போட்டு வெய்ய

லில் வைப்பதுடன் ஜாடியிலிருக்கும் திரவத்தையும் வாய்மூடி வைத்துக்கொள்க. வெய்யில் தாழ்ந்தவுடன் முன் பீங்கான் தட்டுக்களில் வைத்துலர்த்திய துண்டுகளையெல்லாம் ஜாடியில் போட்டுக் குலுக்கி வாய்மூடிப் பத்திரப்படுத்துக. இப்படித் தினந்தோறும் இப் பழத்துண்டுகளை உலர்த்தி உலர்த்தி அப்போதைக்கப்போது அதில் கசிந்து இறங்கும் திரவத்துடன் சேர்த்துக் குலுக்கி வெய்யலில் வைத்துக்கொண்டுவர பழம்புளிபோல் பாகப்படும். இதை ஆகாரத்துடன் ஒரு சிறு துண்டை உபயோகித்து வர அரோசகம் பித்தம் முதலியவைகள் போம். நல்ல பசியை யுண்டாக்கும்.

கடுகு.

(Sinapis Juncea).

மந்தமயக் கம்வாதம் வாய்நீர்ச் சுழற்றலறு
முந்து சுகப்பிரச வங்களுண்டா—மிந்துநுதன்
மானே கிராணிகுன்ம மாறுமுத்தோ ஷங்களறுந்
தானே கடுகிற்குத் தான்.

குணம்:—(இ-ள்.) கடுகு அக்னிமந்தம், சோபம், வாததோஷம், குழம்பிய உமிழ்நீர், கிரகணி, வயிற்றுவலி, திரிதோஷம் இவைகளை விலக்கும். சுகப்பிரசவத்தைத் தரும்.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்னிவர்த்தினி, அதிக அளவில் வமனகாரி, மேலுக்கு ஷோணகாரி, திரவகாரி, துவக்ஸ்போடகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சாதாரணமாகக் கறிகாய் பதார்த்தங்களைத் தாளிதம் செய்வதற்காக உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் பதார்த்தங்களுக்கு ஒருவிதமான நல்ல மணமும், விரைவில் ஜீரணமுமுண்டாகும். இதன் சூரணத்தை $\frac{1}{8}$-$\frac{1}{4}$ விராகனெடை சாராயத்திலாவது பாயசத்திலாவது கலந்துக் கொடுக்கத் தலை மூளை, உள்ளுருப்பு இவைகளில் இருக்கும் மாசுகளையும் குண்டிக்காய், நீர்ப்பை இவைகளில் உண்டாகும் கற்களையும் அகற்றும். இன்னும் வாதசீதளத்தினாலுண்டான சகல வலிகளையும் நீக்குவதுடன் ஞாபகசக்தி, தாதுபுஷ்டி, பசிதீபனம் முதலியவற்றை உண்டாக்கும்.

கடுகையும் முருங்கைப் பட்டையையும் நன்றாய் அரைத்துக் கால் குடைச்சல் முழங்கால் அல்லது கணுக்களின் வலி, வீக்கம், நரம்புகளின் இழுப்பு முதலியவைகளுக்குப் பற்றுப்போட நோயைக்

கண்டிக்கும். அப்போது தோல் சிவந்திடினும், எரிச்சல் மிகுந்திடினும் உடனே சலம்விட்டு அலம்பிவிட வேண்டும். இன்றேல் கொப்பளித்து ரணமாகும்.

ஒருபிடி கடுகைச் சுத்த சலம் விட்டரைத்து 3 படி சலத்தில் கலக்கி அடுப்பிலேற்றிக் கொதித்த பிறகு கீழ் இறக்கிப் பொறுக்கும் படியான சூட்டில் ஒரு பேசினில்விட்டு இருகால் பாதங்களையும், அதில் படும்படியாக 5-10 நிமிஷம் வைக்கச் சித்தப் பிரமையினுலுண்டான மூளையின் பரபரப்பு, சந்நி, தூக்கமின்மை, அறட்டல், புறட்டல், மனக்கலக்கம் முதலியவைகள் போம். கடுகை நன்ருய் அரைத்து ஒரு கனமுள்ள கடுதாசியில் தழும்பத் தடவி அதன்பேரில் மெல்லிய சீலையைப்போட்டு உள்ளங்கை யகலத்திற்கு வட்டமாகவாவது சதுரமாகவாவது கத்தரித்து நோயுள்ள பாரிசத்தில் மெல்லிய சீலையிட்ட பாகம் சரீரத்தில் படும்படியாகப் போட்டு கையால் அழுத்திவிடுவதுண்டு. எப்பொழுது சருமம் சிவந்து எரிச்சல் காணுகிறதோ அப்போது அந்த லேபனத்தை எடுத்துவிட்டு சுத்தசலம்விட்டு அலம்பிவிடவும். இத்தகைய சிகிச்சைக்கு கடுகு லேபனம் என்று கூறுவர். இந்த லேபனத்தை வலி, சந்நி, தலைவலி முதலியவற்றிற்கு கால் பாதங்களிலும், கால் கெண்டை சதைகளின்பேரிலும் போட குணமாகும்.

வாந்திபேதி கண்டவர்களுக்கு இந்த லேபனத்தை அடிவயிற்றின்பேரில்போடக் குணமாகும். வாந்திபேதி கண்டு நாடி நடை தவறும்போதும், விக்கல், வாந்தி, கண்டபோதும், மார்பின் இடது பாகத்தில் இந்த லேபனத்தைப்போடக் குணமுண்டாகும். கருப்பிணிக்கு உண்டான வாந்திக்கும் இந்த லேபனத்தை நெஞ்சுக்குழியில்போடக் குணமுண்டாகும்.

கோழையின் மிகுதியால் கஷ்டசுவாசம் உள்ளபோது மார்புக்கும் முதுகுபக்கமுள்ள தோள்பட்டைகளின் நடுவிலும் இந்த லேபனத்தைப் போடக் குணமுண்டாகும்.

இங்கு கூறப்பட்ட உபயோகங்களெல்லாம் சிறுகடுகு, செங்கடுகு இவற்றிற்கேயாகும். இன்னும் தனியாக வெண்கடுகை லேபனங்களில் கூட்டுவது வழக்கம். இது அதிக காரமுடையதாதலால் சாக்கிரதையாக உபயோகப்படுத்துதல்வேண்டும். இக் கடுகினங்களுக்குச் சிற்சில விசேஷ குணங்களிருப்பதாக ஆன்ருேர் கூறி இருக்கின்றனர். அவற்றை அடியில்கண்ட செய்யுட்களால் கண்டு உணர்க.

சிறு கடுகு.

(Sinapis Juncea).

தோலிரத நெய்யூன்மே தோதாது வின்வலிக்கு
மேலிரணப் பூச்சு விடங்கபநோய்—காலிங்
கெரியகடு விம்மலும்போ மேங்தெழிலார் மாதே
சிறியகடு கின்குணத்தைத் தேர்.

(இ-ள்.) *சிறிய கடுகினால் விஷம், சிலேஷ்மநோய், மூச்செரியச் செய்கின்ற வயிற்று விம்மல் இவை நீங்கும். இது சருமம், ரசம், ரத்தம், மாமிசம், மேதையாகிய இத்தாதுக்களில் வாயுவினால் பிறக்கின்ற பிணிக்கு விரணம் உண்டாகும்படிபூசுகிற லேபனச் சிகிச்சைகளுக்கும் ஆம்.*

செங்கடுகு.

(Sinapis Juncea Red).

இடிகாச நாசிச்சூ ரீளைகபம் பித்தங்
கடிவாத சீதங் கடுப்போ—டுடலிற்
படுகோட்டு நோயென்னும் பங்கிவைக ளைச்செங்
கடுகோட்டு மேன்மருந்து காண்.

(இ-ள்.) *செங்கடுகினால் தலையிடிப்பைத் தராநின்ற இருமல், பீனிசம், கோழைக்கபம், பயித்தியம், காணுவிஷக்கடி, வாதக்கபம், குடைச்சல், முடம் முதலியவைகள் தீரும்.*

வெண்கடுகு.

(Brassica Alba).

பாலகிர கம்பூத பைசாச மோட்டிவிடு
மால விஷங்கடிக ளாற்றுங்காண்—கோலமிகு
வள்ளைச் செவிமாதே மாபங்க நோய்விலக்கும்
வெள்ளைக் கடுகின் விதி.

(இ-ள்.) *வெண்கடுகினால் கந்தகிரகம் முதலிய* 12 *பாலகிரகங்கள், தேவபூத முதலிய* 18 *வகைப் பூதங்கள், மகா சர்ப்ப விஷம், வண்டுமுதலிய விஷக்கடிகள், பங்குவாதம் இவைகளைநீக்கும் என்க.*

குறிப்பு:—*இந்த இனத்தைச் சார்ந்த நாய்க்கடுகைத் தனியாக அதன் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டுள்ளது.*

கடுகுநெய்.

(Sinapis Juncea Oil.)

கோஷ்டுநோய் பித்தரத்தங் குஷ்ட மடல்வாதம்
வீட்டுகப மூல விரணமறும்—பூட்டின்
முடிகியெழு சூலையொடு மொய்த்தநோ யேகுங்
கடுகின்னெய் யாவனலாங் காண்.

குணம்:—(இ-ள்.) சூடுள்ள கடுகு நெய்யால் குன்மம், ரத்த பித்தம், குஷ்டம், மகாவாதம், க்ஷயம், முளைமூல விரணம், குத்தல் முதலிய பிணிகள் நீங்கும்.

செய்கை:—வமனகாரி, உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய் மஞ்சள் நிறமாகவும் நெடியுடையதாகவும் இருக்கும். இது சரீரத்தில் பட்டால் எரிச்சல் மிகுந்து கொப்பளித்து புண் ஆகும். சாதாரணமாக 1 எடை கடுகு நெய்யிற்கு 10 எடை சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி அதனுடன் சிறிது கர்ப்பூரம் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு சிறுவர்களுக்குக் காணும் மார்புநோய், கீல்களில் உண்டாகும் வலி இவற்றிற்கு விரலால் தொட்டு லேசாகத் தடவிவைக்கக் குணத்தைக் கொடுக்கும். இந்த கடுகு நெய்யுடன் 5 எடை சிற்றாமணக்கு எண்ணெயும், சிறிது கர்ப்பூரமும் கூட்டிப் பெரியவர்களுக்கு முன்போல் உபயோகப்படுத்த அதிக நன்மையைத் தரும்.

வடநாட்டிலுள்ளவர்கள் காய்கறி பதார்த்தங்களைப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறு கடுகுநெய்யைக்கொண்டு தாளிதம் செய்துகொள்வதுண்டு. அளவு அதிகப்படின் வமனத்தை உண்டாக்குவதுடன் அடிவயிற்றில் விரணத்தை உண்டாக்கும்.

கடுகுரோகணி.

(Picrorrhiza Kurroa).

மாந்தஞ் சுரமையம் வாயுகரப் பானமஞ்
சேர்ந்தமலக் கட்டு திரிதோடம்—பேரந்தபொட்டுப்
புண்வயிறு நோயிவைபோம் பொற்கொடியே பேதியுண்டாந்
தின்கடுகு ரோகணிக்குத் தேர்.

குணம்:—(இ-ள்.) கடுகுரோகணிக்கு க்ஷீராலஜகம், கணசுரம், கபாதிக்கம், வாதகோபம், கரப்பான், சீதபேதி பழைய

மலபந்தம், முந்தோஷம், கிருமிவிரணம், வயிற்றின்வலி இவைகள் விலகும். விரேசனம் உண்டாம்.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, மலகாரி, தாதுக்ஷீணரோதி, முறைவியாதிரோதி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு ½-¾ விராகனெடை வெந்நீரில் கலந்து கொடுக்கலாம். அல்லது, 2 விராகனெடை வேரை பஞ்சுபோல் நசுக்கி 20 அவுன்ஸ் கொதிக்கிற ஜலத்தில் போட்டு 4 மணி நேரம் சென்றபின் வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்திற் கொருமுறை மலம் போகிற வரை கொடுக்கலாம். இதனால் வாதபித்த சுரங்கள் குணமாகும். இதன் சூரணத்தை 8-10 குன்றி எடை தினம் 2 வேளை கொடுத்து வர உதிரச் சிக்கல், வயிற்றில் மரித்துப்போன பிண்டம், குண்டிக்காய், மூத்திரப்பை இவைகளிலுண்டான கற்கள் முதலியவைகள் வெளியாகும். இன்னும் இரைப்பையை சுத்தப்படுத்தும். இவைகளில் 5-7 குன்றி எடை தினம் 3 வேளை தேனில் கொடுக்க அதிக சீதளத்தினால் உண்டான சந்நிசுரத்தையும், பட்சவாதத்தையும் குணமாக்கி நல்ல தீபனத்தை உண்டாக்கும். இதை நன்றாய்ப் பொடிசெய்து கண்களிளிடத் துர்நீரை வெளியாக்கும். இதை காடியிலுரைத்து படைகளுக்குப்பூசப் படை ஆறும். இதைப் பொடித்து நசியமிடத் தும்மல் உண்டாகும். இதை அதிகமாகக் கொள்ளக்கூடாது. தவறுதலாகக் கொள்ளத் தொண்டை வீங்கும், நரம்புகளில் இசிவுகாணும், இது பைத்தியநோய், காக்கைவலி, சிரங்கு, வயிற்றிலுண்டாகும் கிருமிகளின் உபத்திரவம் முதலியவற்றிற்கு அதிக நல்லது. தற்காலம் இதை அதிகமாக உபயோகப்படுத்துகிறதில்லை. முக்கியமாக சுரரோகம், நீர்கோவை, சூதகக்கட்டு அல்லது ருதுசூலை இவைகளுக்கே உபயோகப்படுத்துகின்றனர். இதனுடன் மற்றுஞ் சில சரக்குகளைக்கூட்டி உபயோகிப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

மலஜலக்கட்டு கியாழம்.

கடுகுரோகணி, வெள்ளைச்சாட்டரணை (சமூலம்) வேப்பம் பட்டை, பேய்ப்புடல், சுக்கு, சீந்தல்கொடி, மரமஞ்சள், கடுக்காய்த்தோல் வகைக்குப் பலம் ¼. இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சுத்த சலம் விட்டு அடுப்பில் வைத்துச் சிறுதீயாக எரித்து வீசம் படியாகச் சுண்

டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி தினம் 1 வேளை காலை நேரத்தில் கொடுக்கவும். மலப்பிரவர்த்தியாகும். இரத்தக் குறைவினால் ஏற்பட்ட நீர்க்கோவையாகிய வீக்கத்தைப்போக்கும்.

குறிப்பு:—இங்கு கூறப்பட்டது நாட்டுக் கடுகுரோகணியாகும். இது பார்வைககு மேலே அழுக்குவெண்நிறமாகவும், உள்ளே கருப்பு நிறமாகவும் இருக்கும். இது தவிர (Helleborusniger, Veratri Viridi Rhizome)என வேறு 2 இனங்கள் மேல் நாட்டிலிருந்து வருகின்றன. இவைகள் எல்லாம் தேக திடமறிந்து கொடுத்தல் வேண்டும். அளவு அதிகப்படின் விஷமிக்கும்.

கடுக்காய்.

(Terminalia Chebula Dried Fruit).

கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென் றாலுங்
கடுக்காயத் தாய்க்கதிகங் காணீ—கடுக்காய்நோ
யோட்டி யுடற்றேற்று முற்றவன்னை யோசுவைக
ளூட்டியுடற் றேற்று முவந்து.

குணம்:—(இ-ள்.) கடுக்காயும் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்திருந்தாலும் தாயைப் பார்க்கிலும் கடுக்காயே அதிகமாம். ஏனெனில், கடுக்காய் பிணிகளை நீக்கிச் சரீரத்தைத் தேற்றும். தாயானவள் அறுசுவை உணவை ஊட்டி உடலை வளர்ப்பாள். பிணிகளை நீக்கினாலல்லவோ உணவு பயன்பட்டு உடல் தேறும் என்னும் வகையறியாமல் உணவை மாத்திரம் ஊட்டும் தன்மையுடையவளாகிய தாயினும் கடுக்காய் சிறந்ததெனக் கூறினார்.

(வேறு)

தாடை கழுத்தக்கி தாலு குறியிவிடப்
பீடை சிலிபதமுற் பேதிமுட—மாடையெட்டாத்
தூலமிடி புண்வாத சோணிகா மாலையிரண்
டாலமிடி போம்வரிக்கா யால்.

(இ-ள்.) கடுக்காயினால் கன்னம், களம், கண், நா, ஆண்குறி இவ்விடத்து நோய்கள் பாதவன்மீகம், அதிசாரம், பங்குவாதம், அதிதூலம், இடிப்புண், வாதசோணிதவாதம், காமிலம், தாவர சங்கம விஷங்கள் இவை போம்.

செய்கை:—மலகாரி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி, ரக்தஸ்தம்பனகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக கடுக்காயின் சூரணத்தை தேக திடத்திற்கு ஏற்றவாறு தினம் 1 வேளை 2-3 விராகனெடை $\frac{1}{4}$ படி சலத்தில் போட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிக் கொடுக்க மலம் தள்ளும். அளவு அதிகப்பட்டிருப்பின் இரண்டு மூன்று முறை பேதியாகும்.

ஒரு தோலா நிறையுள்ள கடுக்காய் சூரணத்துடன் 1 விராகனெடை இலவங்கப்பட்டை அல்லது கிராம்பு கூட்டி ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு 4-5 அவுன்ஸ் பால் அல்லது சலம் விட்டு அடுப்பில் வைத்து ஒரு கொதி வர வடிகட்டி ஆறினபின் கொடுக்க 3-4 முறை பேதியாகும். இத்தங்கைய விரேசனத்தால் கொமட்டல், வாந்தி, வயிற்றுவலி முதலியவைகள் இராது.

இதற்கு முக்கியமான இரண்டு குணங்களுண்டு. முதல் வயிற்று நோயை யுண்டாக்கிப் பிறகு மலம் கழிக்கச் செய்யும். அடுத்தாற் போல மலத்தைக் கட்டும். இத்துடன் வாதுமை நெய் அல்லது பசுவின் நெய் சேர்த்து கொடுக்க வயிற்று வலியைச் சாந்தப் படுத்தி விரேசனமாகும். இத்தகைய பிரயோகங்களால் இரைப்பைக்குப் பலமுண்டாகும். உந்தியிலெழுந்த உஷ்ண ஆவியை கபாலத்திற்குப் போகவிடாமல் தடுக்கும். மூளையிலுண்டான குற்றங்களை நரம்புகளின் வழியாகக் கீழ் இறக்கும்படியான சக்தியுமுண்டு. புத்தி, புலன், பொறி இவைகளின் சுபாவத்திற்கு யாதொரு கெடுதியும் வரவொட்டாமல் தடுக்கும். இது வாயுக்களைக் கண்டிப்பதுடன் தொந்தரோகங்களாகிய மூலம். பவுத்திரம், வீக்கம், பெருவியாதி, தலைவலி, இருதயதுடிப்பு, முதலிய ரோகங்களையும் உதிரத்தில் உள்ள குற்றங்களையும் நீக்கும். இதன் சூரணத்தைப் பற்பொடியுடன் கலந்து பல் துலக்க ஈறு வலி, ஈறிலிருந்துவரும் ரத்தம் நிற்கும். இதனை நசிய மிட ரத்த பீனிசம் குணமாகும். இதன் கியாழத்தைக்கொண்டு விரணங்களை அலம்ப ஆறும். இரத்தமூலம் உடையவர்கள் கால் அலம்ப உதிரத்தை நிறுத்தும். கடுக்காய் சூரணத்துடன் சிறிது காய்ச்சுக்கட்டி சூரணம்கூட்டி தேனில் மத்தித்து நாவில்தடவ வாய்விரணம்ஆறும்.

இத்தகைய சிகிச்சைகளுமன்றி கடுக்காயை முதன்மையாக கொண்டு செய்யும் சில அவிழ்தங்களாவன—

கடுக்காய் லேகியம்.

கொட்டை நீக்கிய கடுக்காய் தோல் பலம் 5, பாலில் அவித்து நடு நரம்பு நீக்கி நிழலில் உலர்த்திய சிவதைவேர், புளியாரைக் கீரை, வல்லாரைக் கீரை, பாலில் புட்டவியலாகச் செய்துலர்த்திய நிலாவாரைச் சூரணம் வகைக்கு பலம் 1, கடுகுரோகணி, கிராம்பு, திப்பிலி, சிறுநாகப்பூ, வாலுளுவை அரிசி, கற்கடசிங்கி, கருஞ்சீரகம், மிளகு, தான்றிக்காய், தனியா, தாளிச்சபத்திரி வகைக்கு பலம் $\frac{1}{8}$ இவைகளை எல்லாம் நன்ருய் இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொள்க. பின்னர் 25 பலம் சர்க்கரையை $\frac{3}{4}$ படி சலம் விட்டுக் கரைத்து வடிகட்டி ஒரு இரும்பு கடாயில் விட்டு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்துப் பாகுபதம் வரும்போது முன் சித்தப்படுத்தியுள்ள சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கிளறிக் கீழிறக்கி ஆற வைக்கவும். அப்பால் லேகிய பதத்திற்குப் போதிய அளவு தேனும் நெய்யும் கூட்டிப் பிசைந்து சாடியில் பத்திரப்படுத்தி வேளைக்குச் சிறு கொட்டைப்பாக்கு பிரமாணம்கொடுக்க மலக்கட்டு, கோழைக்கட்டு, உஷ்ணவாயு, மேகக் காந்தல், பித்தத்தினுலுண்டான கைகால் எரிச்சல், குலை எரிச்சல், குடலைப்புரட்டும்வாயு, மூலச்சூடு, தேகவறட்சி, புகைந்து புகைந்து வரும் இருமல், எல்லாம் குணமாகும்.

பாவனக் கடுக்காய்.

பச்சரிசியை ஒரு முறை சலம்விட்டு கழுவிவிட்டு இரண்டாவது முறை சலம்விட்டுக் கழுவி எடுத்த கழுநீரை ஒரு பெரிய மட்பாண்டத்திலிட்டு அதனில் சதைமிகுந்துள்ள 100 கடுக்காயைப் போட்டு, ஓர் பகல் ஓர் இரவு ஊறின பின்னர் மறுநாள் கழுநீரை வடித்துவிட்டு முன்போல் இரண்டாவது முறை கழுவி எடுத்த பச்சரிசிக் கழுநீரை விட்டு ஊறவைக்கவும். இப்படி 9 முறை ஊற வைத்து எடுக்க கடுக்காய் மிருதுவாயிருக்கும். இவைகளை இரண்டு இரண்டாகப் பிளந்து உள்ளிருக்கும் விதையை எல்லாம் நீக்கிவிட்டு முன் ஊறவைத்த பாண்டத்தைச் சுத்தப்படுத்தி அதில் போட்டு மிதக்கப் புளிப்புமோர் விட்டு நாலில் ஓர் எடை உப்பைப் போட்டுக் குலுக்கி அடுப்பில்வைத்துத் தீயாமல் மோர் சுண்ட எரித்து எடுக்கவும். அப்பால் சுக்கு, இந்துப்பு, ஓமம் வகைக்குப் பலம் $\frac{1}{2}$, திப்பிலி, கொடிவேலி, செவ்வியம் வகைக்கு பலம் $\frac{1}{4}$ இவைகளை இடித்துச்

சூரணமாகச் செய்து மேல்படி கடுக்காயில் தூவி அதனில் எலுமிச் சம்பழரசம் மிதக்கவிட்டுக் குலுக்கி ரவியில் வைத்து உலர்ந்தபின் இஞ்சி ரசத்தை முன்போல் மிதக்கவிட்டு ரவி முகத்தில் உலர்த்தவும். இவைகள் ஈரமில்லாமல் வரண்ட சமயம் ஜாடியில் பத்திரபடுத்தவும்.

இதனை தினம் 2 வேளை பாக்களவு சாப்பிட்டுவர சூலை, எரி குன்மம், குன்மம், மூலம், அரோசகம், பீநசம், வாந்தி, பாண்டு, இருமல், கிராணி ஆக பல ரோகங்கள் போம்.

விரணசுத்தி கியாழம்

கருவேலம்பட்டை தோலா 3, கடுக்காய்தோல் தோலா 3, மாசிக்காய் தோலா $1\frac{1}{2}$, படிகாரம் தோலா $\frac{1}{2}$ இவைகளை இடித்து ஒரு குடுவையில் போட்டு $\frac{3}{4}$ படி சுத்த சலம் விட்டு அடுப்பில் வைத்து $\frac{1}{4}$ படி அளவுக்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஆறவிட்டுச் சீசாவில் வைத்துக்கொண்டு வாய் கொப்பளித்துக்கொண்டு வர வாய் விரணம் ஆறும். இந்த பாகத்தில் படிகாரத்தை நீக்கிக் கியாழமிட்டு ஸ்திரிகளுக்கு உண்டாகும் மர்மஸ்தான விரணங்களுக்கு அலம்பிவர குணமாகும்.

துவர் களிம்பு.

கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், காய்ச்சுக்கட்டி இவற்றைச் சமெனடையாகச் சூரணம் செய்து கல்வத்தில் போட்டுத் தேங்காய் எண்ணெய் அல்லது நெய் விட்டு களிம்பு வண்ணம் அரைத்து ஒரு வாயகன்ற கோப்பையில் வைத்துக்கொண்டு ஆறுத நாட்சென்ற விரணங்களுக்குப் பூச விரைவில் ஆறும்.

இத்தகைய பிரயோகங்களிற் சேர்க்கப்படுகின்ற கடுக்காயானது எவ்விதத்தினும் நோயினர்களுக்குக் குணத்தை கொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இக் காரணத்தைக்கொண்டே ஆன்றோர் தேசவளப்பத்திற்கு ஏற்றவாறு உற்பத்தியாகின்ற கடுக்காய்களின் குண விசேடங்களை முன்னிட்டு பல பெயர்களிட்டிருக்கின்றனர். அவற்றின் விபரம் பின்வருமாறு:—

(சித்தர் மதாந்தரபடி)

விசயன் கடுக்காய்.

விசய னெனுங்கடுக்காய் வீரியத்தைச் சொல்வோ
நிசமதுதான் வாதத்தை நீக்கு—மிசையுரைக்கப்
பேய்ச்சுரைக்காய் போலிருக்கும் பேரவந்தி யாதேசம்
வாய்ச்சிருக்கு மக்காயை வாழ்த்து.

(இ-ள்.) பேய்ச்சுரைக்காய்க் குறியுள்ள விஜயன் என்கிற கடுக்காய் வாதரோகத்தைப் போக்கும். இது அவந்தியா தேசத்தில் உற்பத்தியாம்.

அரோகிணிக்கடுக்காய்.

ஓது மரோகிணிக்கா யொன்றுண்டா னுற்சந்நி
பாதமொடு சீதம் பறக்கும்காண்—மீதுகுறி
நான்குவரி யாய்த்தோற்று நங்கா யதன்றேச
மாங்குகன்னி யாகுமரி யாம்.

(இ-ள்.) கன்னியாகுமரித் தேசத்தில் பிறக்கின்ற அரோகிணிக் கடுக்காயால் சந்நிபாதமும், சீதமும் நீங்கும். இதன்மீது நாலுவரை போன்ற குறியிருக்கும்.

பிருதிவிக்கடுக்காய்.

தோற்றும் பிருதிவிதான் றேலாப் பயித்தியத்தை
மாற்றும் வயதை வளர்க்குமதன்—மேற்றேலோ
மெல்லியதா மக்காய் விளைதேச மேதென்னில்
வல்லசவு ராட்டிகமாம் வாழ்த்து.

(இ-ள்.) மெல்லிய தோலுள்ள பிருதிவிக்கடுக்காய், பித்த நோயை நீக்கும், ஆயுளை விருத்திசெய்யும்—சவுராஷ்டிக தேசத்தில் உற்பத்தியாம்.

அமிர்தக்கடுக்காய்.

அமிர்த மெனுங்கடுக்கா யம்புவியி லுள்ள
திமிர்தசி லேட்டுமத்தைத் தீர்க்கும்—விமிதச்
சதைப்பற்றுண் டாயிருக்குஞ் சாற்றிலதன் றேசங்
கதிக்கொத்த காசியென்பர் காண்.

(இ-ள்.) விம்மித் தசைமிகுத்துள்ள அமிர்தக்கடுக்காய் கண்டத்தில் ஒரு ஒலியைத் தருகின்ற கபத்தை ஒழிக்கும். காசி தேசத்தில் உற்பத்தியாம்.

சிவந்திக்கடுக்காய்.

சிவந்தி யெனுங்கடுக்காய் செய்குணத்தைக் கேள்வாய்
விவர்ந்தமூ லத்தையெலா மேய்க்குஞ்—சிவந்ததிகப்
பொன்னிறம தாயிருக்கும் பூங்குழலே யக்கடுக்காய்
துன்னுவனந் தோறுமுண்டாஞ் சொல்.

(இ-ள்.) மிகு சிவப்பும் தங்கச்சாயலும் உள்ள சிவந்திக் கடுக்காயானது, வாதமூல ரோகங்களை விலக்கும். இது வனங்களில் உற்பத்தியாம்.

திருவிருத்திக்கடுக்காய்.

திருவிருத் திக்கடுக்காய் தேகத்தி லுளும்
வருவிரணம் போக்குமதன் வன்ன—மொருவிதமோ
பஞ்சவன்ன மூவரம்பு பற்றி யிருக்குமது
விஞ்சுமலை தோறுமுண்டாம் விள்.

(இ-ள்.) வெள்ளை, கருமை, செம்மை, பசுமை, மஞ்சள் என்னும் பஞ்ச வருணமும், மூன்று வரியும் உடைய திருவிருத்திக் கடுக்காய், சகல விரணங்களையும் நிவர்த்தி செய்யும். இது மலைகளில் உற்பத்தியாம்.

அபயன்கடுக்காய்.

அபய னெனுங்கடுக்கா யங்கரோ யெல்லா
மபயமிட் டோட வடிக்கு—மபயற்
கதிக நிறங்கறுப்ப தாகும்விளை பூமி
பொதிய மலையாம் புகல்.

(இ-ள்.) கருமை நிறத்தையுடைய அபயன்கடுக்காய் எனும் மைப்பற்றிய ரோகங்களை யெல்லாம் நீக்கும். இது பொதியமலையில் உற்பத்தியாம்.

(சங்கர மதாந்தரபடி)

கருங்கடுக்காய்.

பழமலத்தைப் போக்கும் பகரி லுடலுக்
கழகுதரும் புத்தி யளிக்கும்—பழகி
மருங்கடுத்த வாதபித்த வன்கபத்தைத் தீர்க்குங்
கருங்கடுக்கா யென்றுளத்திற் காண்.

(இ-ள்.) கருங்கடுக்காயானது, பழைய மலக்கட்டையும் திரிதோஷரோகங்களையும் போக்கும், அழகையும், அறிவையும் கொடுக்கும்.

செங்கடுக்காய்.

சுத்தியோடு புத்தி சுகமும் புகழுமுண்டா
மெத்தவொளிர் பொன்னிறமா மேனியெல்லாஞ்—சுத்தகப
வங்கடுத்த விளைபல வன்காச முமலமுஞ்
செங்கடுக்காய்க் கில்லையெனத் தேர்.

(இ-ள்.) செங்கடுக்காய்க்கு மலாசயச் சுத்தி, அறிவு, இன்பம், கீர்த்தி, சரீரத்தில் பொற்சாயல் ஆகிய இவைகள் உண்டாம். தனிச் சிலேஷ்மக் கோழை, பலவித இருமல், மலக்கட்டு ஆகிய இவை விலகும் என்க.

வரிக்கடுக்காய்.

மிடுக்காக்குந் தேகத்தை விந்துவையுண் டாக்குஞ்
சடக்கெனவே யுண்டியையுட் சாடுந்—துடுக்கான
வாதபித்த வையகற்றும் வன்னியொடு நல்விதருஞ்
சாதி வரிக்கடுக்காய் தான்.

(இ-ள்.) வரிக்கடுக்காய், தேகபுஷ்டி, தாதுவிருத்தி, அசன சீரணம், சடராக்கினி, அழகு இவைகளை உண்டாக்கும் திரிதோஷங்களை நீக்கும்.

பால்கடுக்காய்.

ஆமம் கெடுங்கா ணழகும் பொலிவுமிகுஞ்
சேமம் பெறுபலமுஞ் சேருமே—தாமநெடும்
வேற்கடைக்கண் கும்பமுலை மெல்லியலே யெப்போதும்
பாற்கடுக்கா யுண்பவரைப் பார்.

(இ-ள்.) பால் கடுக்காயால், சீதகிரகணி நீங்கும், வனப்பு, தேஜசு, வன்மை இவை விருத்தியாகும்.

மேற் கூறப்பட்டுள்ள இலட்சணங்களமைந்த கடுக்காய்கள் கிடைக்கப் பெறாத காலத்தில் கூடியவரையில் பருமனாகவும் செங் காய்களாக உலர்த்திய தசைமிகுந்ததாகவு முள்ள கடுக்காய்களை, பாவனைக்கடுக்காய், லேகியம், சூரணம், முரபா முதலியவற்றிற்குச் சேர்த்துக் கொள்வது சாலச்சிறந்தது.

நன்றாய்ப் பழுத்து உலர்ந்த தோல் மிகுந்த கடுக்காயை, குடிநீர், களிம்பு முதலிய பாகங்களில் கூட்டிகொள்வது நன்று.

கடுக்காய்பிஞ்சு.

(Terminalia Chebula Dried tender fruit).

வனதுர்க்கிச் சேய்க்கு மணித்தயிலம் பூசி
யனலிற் பொரித்தாங் கருந்தத்—தினமுமலச்
சிக்கலக்க டுப்பநின்ற சீதமறுங் காற்றுகைத்த
முக்கலக் கடுப்பிருக்கு மோ.

குணம்:—(இ-ள்.) கடுக்காய்ப்பிஞ்சுக்கு ஆமணக்கு நெய் தடவி தீயில் வறுத்துத் தூள் செய்து அப்போதே யுண்டால் மலச் சிக்கலும் எலும்பைப்போல் வெளுத்த சீதமும் போம். மூல வாயு வினல் பிறந்த முக்கலும் ஆசனக்கடுப்பும் இருக்குமோ? இராது என்பது கருத்து.

செய்கை:—சங்கோசனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை விசேடமாக மலப்போக்கிற் காக உபயோகப்படுத்துவதுண்டு. இதை ஆமணக் கெண்ணெய் விட்டு வறுத்துத் தூள் செய்து 1½-2 விராகனெடைக்குக் குறை யாமல் ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு ¼ படி சலம் விட்டு ⅛ படியாகக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி அதனில் 1½ விராக னெடை இந்துப்புக் கூட்டிக் கலக்கிக் கொடுக்க 2-3 தடவை பேதி யாகும். இதனுல் மூலச்சூடு, உஷ்ண வாயுவினுலெழுந்த ஆசனக் கடுப்பு, முக்கல் இவைகள் போம். சிறு குழந்தைகளுக்குக் கொடுக் கும் பேதிக்கியாழத்தில் இதனைச் சேர்ப்பதுண்டு.

கடுக்காய்ப்பூ.
(Rhus Succedanea).

முக்கலையங் காசகய மூடு கிராணிமுளை
கக்கிரத்த பித்தங் கறைப்பேதி—யுட்குடலிற்
றங்கொலிநீர்ப் புண்சுரஞ்ச மீரம்விட வெப்பிவைபோஞ்
சிங்கியினுற் போகமுறுங் தேர்.

குணம்:—(இ-ள்.) கர்க்கடகசிங்கியினுல், முக்கல், ஆமம், இருமல், க்ஷயம், கிரகணி, மூலமுளை, ரத்தபித்தம், ரத்தபேதி, குடலிரைச்சல், மேகவிரணம், சுரம், விஷசுரம் ஆகிய இவை போம். வீரியம் உண்டாம்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—முக்கியமாக இதனைச் சிறிது பொன் மேனியாக வறுத்து முலைப்பால் விட்டுச் சந்தனக் கல்லில் உறைத் துக் குழந்தைகளுக்குக் கொடுப்பதுண்டு. இதனுல் பேதி, சீதபேதி, ஆசனக் கடுப்பு, முக்கல் இவைகள் போம். ஒரு வருஷத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ½ குன்றிப் பிரமாணம் கொடுக்கலாம். இப்படி தினம் இருவேளை கொடுத்துவரின் விரைவில் பேதியைக் கட்டும். இதுவுமல்லாமல் இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் செய்யும் சில முக்கிய மருந்துகளாவன—

கடுக்காய்ப்பூ சூரணம்

கடுக்காய்ப்பூ, இலவங்கப்பட்டை, கிராம்பு இம்மூன்றையும் தனித்தனி பொன் மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து சமனெடையாகக் கலந்துவைத்துக்கொண்டு வேளைக்கு ½ விராகனெடை வீதம் சர்க்கரைக் கூட்டித் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்கச் சீதபேதி, இரத்தபேதி, இரத்த மூலம் இவைகள் போம். இதனுடன் நாகபற்பம் குன்றி எடைக் கூட்டிக் கொடுக்கப் பெருங் குணத்தைத் தரும்.

(வேறுமுறை)

கர்க்கடகசிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காய், சிற்றரத்தை, கண்டங்கத்திரிவேர் இவை களைச் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் வெந்நீரிலாவது தேனிலாவது கலந்துக்கொடுக்க ஈளை, இருமல் இவைகள் போம்.

குறிப்பு:—மருந்துகடைகளில் கிடைக்கும் கடுக்காய்ப்பூ என் கிற கர்கடகசிங்கியானது கடுக்காய் மரத்தின்பூ அல்ல. இது அம் மரத்தின் இலைகளில் தடித்துத் தசை எழும்பி முறடுகட்டி இருப் பதாம். இதற்கே மேற்கூறப்பட்ட குணங்கள் பொருந்தியுள்ளது.

கட்டுக்கொடி.

இந்த இனத்தில் சிறுகட்டுக்கொடி, பெருங்கட்டுக்கொடி என இருவகையுண்டு. அவைகளின் குணபேதங்களை அதனதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

கண்டங்கத்திரி.

(Solanum Jacquinii).

காசசுவாசங் கதித்தக்ஷய மந்த மனல்
வீசுசுரஞ் சந்நி விளைதோஷ—மாசுறுங்கா
லித்தரையு ணிற்கா வெரிகாரஞ் சேர்கண்டங்
கத்தரியுண் டாமாகிற் காண்.

குணம்:—(இ-ள்.) வெப்பமுங் கார்ப்புமுள்ள கண்டங்கத்திரி யினால் காசம், சுவாசம், க்ஷயம், அக்கினிமந்தம், தீச்சுரம், சந்நி பாதம், ஏழுவகைத் தோஷங்கள், வாதரோகம் ஆகிய இவைகள் போம்.

(இதுவுமது)

வேரிலைபூ காய்பழமவ் வித்துடன் பட்டையுமிவ்
வூரி லிருக்க வுடற்கனப்பும்—நீராய்
வரும்பீந சங்கயஞ்சு வாசமுந்தங் காவே
யருங்கண்டங் கத்தரியு ளார்.

குணம்:—(இ-ள்.) கண்டங்கத்திரியின்வேர், இலை, பூ, காய், பழம், விதை, பட்டை இவைகளால் நீரேற்றம், சலப்பீநசம், ஈளை, சுவாசம் இவை போம்.

செய்கை:—கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி, உதரவாதஹர காரி, விதைக்கு—திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் செடியானது பார்வைக்குக் கத்திரிச் செடியைப்போல் குத்தாக வளர்ந்திருக்கும். இலைகளிலும் காம்புகளிலும் முட்கள் நிறைந்திருக்கும். இதன் பூ நீல வர்ண மாகவும், காய் பெருங்கழற்சிக்கொட்டை பிரமாணம் பச்சை நிற மாகவுமிருக்கும். இந்த இனத்தில் வெண்பூவிடுகின்ற செடி கிடைப் பது அரிது. இதன் வெண்மைநிறமான காய்ச்சாற்றினால் இரசம் பற்பமாகின்றது. பொதுவாக நீலப்பூ விடுகின்ற செடியையே பண்டி தர்கள் அவிழ்த பாகங்களில் கூட்டுவதுண்டு.

இதன் இலையைச் சிறிது நெருப்பனலில் வாட்டி இடித்துப் பிழிந்த சுரசத்தை வேளைக்குத் தேக திடத்திற்கேற்றவாறு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் சிறிது தேன் கூட்டிக்கொடுப்பதுண்டு. அல்லது, இதன் உலர்ந்த சமூலத்தைப் பஞ்சுபோல் நசுக்கி, ஒரு குடுவையில் $\frac{1}{2}$ பலம் அளவிற்குப் போட்டுக் $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை சிறிது தேன் கூட்டிக் கொடுப்பதுமுண்டு. இது இருமல், சுரம், சுவாசகாசம் முதலியவற்றை நீக்குவதுடன் கபத்தை எளி தில் கரைக்கும். சிறுநீரை அதிகமாகப் போக்கும். கபத்தோடுவரும் சுரங்களுக்கு இது மிகச் சிறந்தது. இதன் இலைச்சாற்றுடனாவது அல்லது கியாழத்துடனாவது சமனெடை நல்லெண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு, தலைவலி, அக்குள் நாற்றம், கீல்வாதம் முதலியவைகளுக்கு மேற்பூசித் தேய்க்கக் குண முண்டாகும். இதன் புஷ்பத்தை வாதுமை எண்ணெயுடன் கூட்டிக்

காய்ச்சி வடித்து மூலத்திற்குப் பூசிவர முளையின் உபத்திரவம் அடங்கும். இதன் பச்சிலைச்சாற்றுடன் ஆளிவித்து எண்ணெயைக் கூட்டிப் பதமாகக் காய்ச்சிக் கை கால்களில் ஏற்படும் வெடிப்புகளுக்குப் பூசிவர விரைவில் குணமாகும். இது சம்பந்தமான சில முறைகளாவன—

கபசுரக்கியாழம்.

கண்டங்கத்திரிவேர், ஆடாதோடைவேர், திப்பிலி, சுக்கு, சிற்றரத்தை, ஓமம் இவைகளை வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆக இடித்து ஒரு குடுவையிற்போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு, அரைக்கால்படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து, இருவேளையாகப் பங்கிட்டுத் தினம் காலை மாலை கொடுத்துவரக் கபசம்பந்தமான சுரம் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

கண்டங்கத்திரி ரசாயணம்.

கண்டங்கத்தரி சாறு பலம் $1\frac{1}{4}$, கருந்துளசிச் சாறு பலம் $2\frac{1}{2}$, ஆடாதோடைச் சாறு பலம் $3\frac{3}{4}$, தேன் பலம் $7\frac{1}{2}$, ஆக இவைகளை ஒருமிக்கக் கலந்து, ஒரு பழகின வாயகன்ற மட்கலத்தில் விட்டு அடுப்பில் வைத்து, அதனில் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை, ஏலம், ஜாதிபத்திரி, சிற்றரத்தை, பேரறத்தை, அதிமதுரம், தாளிசபத்திரி, ஜாதிக்காய் வகைக்கு விராகனெடை $\frac{1}{2}$ விகிதம், பொன்மேனியாக வறுத்தெடுத்துச் சூரணம் செய்துப் போட்டுச் சிறுதீயாக எரித்து, விரலால் அழுந்தும்படியான இளகிய பதத்திற்குக் கிளறிவைத்துக் கொண்டு தினம் காலை, மாலை, மத்தியானம் ஆக மூன்றுவேளையும், ஒரு விரலில் தோய்த்தெடுத்தஅவிழ்தத்தைக் குழந்தைகளின் நாவில் தடவிவரக் கக்குவான் என்று சொல்லப்பட்ட கொடிய இருமல் 10-15 நாளில் ஏறத்தாழ முக்கால் பாகம் குணத்திற்கு வரும், இதனைவிடாமல் இன்னும் சிலநாள் நீடித்துக் கொடுக்க, முற்றிலும் குணமாகும். சிறு குழந்தைகளுக்குக் காணும் இத்தகைய ரோகங்களுக்கு இதனைவிடச் சிறந்த அவிழ்தமில்லையென்றே கூறலாம். இன்னும் இந்த அவிழ்தத்தைக் கப சம்பந்தமான இருமல், ஈளை, கஷ்ட சுவாசம் இவைகளுக்குக் கொடுத்துக்கொண்டுவரக் கபத்தை எளிதில் கரைத்து உபத்திரவத்தை நீக்கும்.

கண்டங்கத்திரிக்காய்.

(Solanum Jacquinii Fruit).

ஐயமறுந் தீபனமா மாம மலக்கட்டும்
பையவெளி யாகிவிடும் பார்மீதிற்—செய்யமலர்த்
தோத்திருக்கும் வார்குழலே தூமணலா ருங்கண்டங்
கத்திரிக்கா யைப்புசிக்குங் கால்.

குணம்:—(இ-ள்.) வெண்மணலிலுண்டாகின்ற கண்டங்கத்திரிக்காயால் சிலேத்துமநோய் தீரும். சீதம் கலந்த மலமும் பசியும் உண்டாம்.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரணமாகக் குழம்புகளிலிட்டு பாகப்படுத்தியுண்பதுண்டு. இது பசி தீபனத்தை அதிகப்படுத்துவதுமல்லாமல், கபரோகிகளுக்கு மிகுந்த நன்மையைத் தரும். ஆனால் சில சரீரங்களுக்கு சீதபேதியை உண்டுபண்ணும் ஆகையால் ரோகிகள் தங்களுடைய தேகத்தின் கூறறிந்து உட்கொள்ளக்கடவர்.

கண்டங்கத்திரிப்பழம்.

(Solanum Jacquinii Fruit Riped).

காசஞ் சுவாசங் கயஞ்சீதம் பல்லரணை
வீசு சொறிதினவை விட்டோட்டும்—பேசுடலை
யுத்தரிக்குந் தீபனத்தை யுண்டாக்கி டுங்கண்டங்
கத்தரிப்ப ழக்குணத்தைக் காண்.

குணம்:—(இ-ள்.) கண்டங்கத்திரிப்பழம் இருமல், இரைப்பு, சயம், கபம், பல்லரணை, புடை, நமை இவைகளை நீக்கும். பலத்தையும் பசியையும் உண்டாக்கும்.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—கண்டங்கத்திரிப்பழத்தை ஒரு பழைய மட்பாண்டத்திலிட்டு மூழ்க சலம்விட்டு அடுப்பில் வைத்து நன்றாய் வேகவைத்துக் கடைந்துக் குழம்பு பதமாக இருக்கும்போது நாலில் ஒரு பங்கு நல்லெண்ணெய் கூட்டி அடுப்பில் வைத்து மெழுகு பதம் வரக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இத் தைலத்தை வெண் குட்டத்திற்குத் தடவிவர சிறிது நாளில் சுபாவ நிறத்திற்கு மாறும். இதனையே காது நோய்க்கு இரண்டொரு

துளி விட்டுக்கொண்டுவர குணமாகும். இன்னும் கண்டங்கத்திரிப் பழத்தை உமிக்காந்தலிற் சுட்டுக் கல்வத்திலாவது தட்டை அம்மியிலாவது வைத்து பாகலிலைச் சாறுவிட்டு வெண்ணெய்போ லரைத்து வழித்து ஒரு கோப்பையில் போட்டு நல்லெண்ணெய் விட்டு மத்தித்து சூரியபுடம் சில தினம் வைத்து பல்லிற்றடவிவர, பற்பூச்சி அற்றும்போம்.

கண்டத்திப்பிலி.

(Chavica Roxburghii Stem).

தாகபித்தஞ் சோகந் தணியாச் சுரமிருமன்
மேகங் குரற்கம்மன் மெய்க்கடுப்பு—மேகுங்காண்
திப்பிலிமூ லங்கண்டத் திப்பலிய தாநறுக்குத்
திப்பலியென் றேயோருகாற் செப்பு.

குணம்:—(இ-ள்.) திப்பிலிமூலமென்கிற தன்மூலத்திற்கு பித்ததாகம், மூர்ச்சை, சந்ததசுரம், காசம், பிரமேகம், சுரக்கின ரோகம், சரீர நோவு இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி, சுரஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தில் வேளைக்கு 2-2½ குன்றி எடை தேனுடனாவது, சர்க்கரையுடனாவது கலந்து தினம் 2-3 வேளை கொடுக்க சயித்தியம் போம். தேகத்திலுள்ள நீரை வறட்டும். இன்னும் கபத்தைக் கரைப்பதுடன் வாயுவை நன்றாய் கண்டிக்கும். இதை சிறிது வறுத்து இடித்துச் சூரணம் செய்து நாசியில் நசியமிட அல்லது வைத்து ஊத மூர்ச்சை, மார்பு அடைப்பு இவைகள் நீங்கும். சாதாரணமாக ஜீரண சக்திக்காகக் கூறப்பட்டுள்ள சரக்குகளில் இது ஒன்று. ஆனால் திப்பிலியின் சக்திக்கு இது தாழ்வடைந்துள்ளதென்றே கூறவேண்டும்.

கண்டுபாரங்கி.

(Clerodendron Serratifolium Root).

கண்டுபா ரங்கியெனுஞ் சிறுதேக் குண்டேற்
காலெங்கே பித்தமெங்கே கபந்தா னெங்கே
தோண்டு தொட்டுத் தொடர்சுவாச காசமெங்கே
சுரமெங்கே வெறியெங்கே தோனிநோ யெங்கே

மிண்டுபுரி பீநசநீர்க் கோவை யெங்கே
வெளிநீருண் ணீரெங்கே விரற்கா லெங்கே
யண்டுபடாச் சீதசுரங் கடுப்பு மெங்கே
யழலையக நோயெங்கே யறைகு வீரே.

குணம்:—(இ-ள்.) கண்டுபாரங்கி என்னும் சிறுதேக்கினல் திரிதோஷவிகுணம், சுவாசகாசம், சுரம், பயித்தியம், சுரசாதம், நாசிநோய், சலதோஷம், முன்னீர்க்கோவை, பின்னீர்க்கோவை, புச்சாவர்த்தவாதம், குளிர்சுரம், உடல்வலி, உட்காந்தல், மனச் சங்கடம் இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ விராகனெடை வீதம் சர்க்கரை அல்லது தேன் கலந்து கொடுக்கலாம், அல்லது சலம் விட்டு நன்ருய் அரைத்துப் பொங்கவைத்து வடிகட்டிய சுரசத்துடன் தேன் கூட்டிக் கொடுக்கலாம். இவற்ருல் மூர்ச்சை, வலி, சுரம், இருமல், வயிற்றுப்பொருமல் இவைகள் தீரும். கபத்தினுல் உண்டான கஷ்ட சுவாசத்தை உடனே குணப்படுத்தும். இதை அரைத்துக் கிளறிக் கண்டமாலைக்கு வைத்துக் கட்டத் தீரும். சில அசாத்திய சுரங்களுக்கு இதனுடன் சில இதரச் சரக்குகளைக் கூட்டிக் கியாழமிடுவதுண்டு அவற்றுள் சில முக்கிய அநுபவமுறைகளாவன:—

சந்நிசுரக்கியாழம்

கண்டுபாரங்கி, பர்பாடகம், தேவதாரு, நன்னரி, சீந்தல்கொடி, கோஷ்டம், சுக்கு, பேய்ப்புடல், காஞ்சொறி, கோரைக் கிழங்கு ஆக இவற்றை வகைக்கு பலம் $\frac{1}{4}$ வீதம் இடித்து ஒரு புது மட்கலயத்தில் போட்டு 1 படி சலம்விட்டு அடுப்பிலேற்றி $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்துத் தினம் இருவேளை கொடுக்க மூன்று நாளில் எவ்வித கடுமையான சுரமாக இருப்பினும் குணமாகும்.

(வேறுமுறை)

கண்டுபாரங்கி, கோஷ்டம், முத்தக்காசு, செங்கழுநீர்க்கிழங்கு, சுக்கு, பேய்ப்பீர்க்கு, சீந்திற்றண்டு, சிறுகாஞ்சொறி, நிலவேம்பு, ஆடாதோடை வகைக்கு பலம் $\frac{1}{4}$ வீதம் இடித்து, ஒரு புது மட்கலயத்தில் போட்டு 1 படி சலம்விட்டு அடுப்பிலேற்றி $\frac{1}{8}$ படியாகச்

சுண்டக் காய்ச்சி வடித்துத் தினம் இருவேளை 3 நாள் சாப்பிடச் சந்நிபாத சுரங்கள் நிவர்த்தியாகும்.

கத்தக்காம்பு.

(White Catechu or Hydrabad Catechu).

நற்கத்தக் காம்பதனை நாளுமடைக் காயோடு
பொற்புமிகு மாதரசே போட்டுவர—பற்கடாம்
வன்மைபெறு மெயிறுகும் வாய்நாற்ற முற்றுமறும்
வெம்மையறு மென்றே விளம்பு.

குணம்:—(இ-ள்.) கத்தக்காம்பைத் தாம்பூலத்தோடு உபயோகப் படுத்திவரப் பற்களும், தேகமும் வன்மை அடையும். இன்னும் வாய்நாற்றமும் தேக வெப்பமும் நீங்கும் என்க.

(இதுவுமது)

பேதிசிறு நீர்கட்டும் பேசவொணு வாய்ரணமும்
தீதிலுய ருந்திப்புண் தீருமே—மேதினியில்
செங்குருதி தோஷமெலாம் தீர்ந்துவிடும் விந்திறுகும்
பைங்கூந்தல் மானே பகர்.

(இ-ள்.) கத்தக்காம்பால் பேதி, நீர்க்கட்டு, வாய்விரணம்,வயிற்றுப்புண், ரத்தக்கெடுதல், நீங்குவதுடன் விந்து பலப்படும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தாம்பூலத்துடன் சேர்த்து மென்றுதின்ன மலத்தைக் கட்டும், நீரை வறட்டும், உறைந்த உதிரத்தைக் கரைக்கும். இதனைப் பற்பொடிகளில் சேர்த்துப் பற்றேய்த்துவரப் பல்லின் ஈறு பலப்படுவதுடன் பல்லாட்டத்தை நீக்கும். இதைக் கியாழமிட்டு வாய் கொப்பளிக்க வாய் ரணங்களை ஆற்றும். 3-5 குன்றி எடை 3 அவுன்ஸ் கொதிக்கிற சலத்தில் தூள்செய்து போட்டுச் சூடு ஆறுகிறவரையில் மூடிவைத்து, வடிகட்டிக் குடிக்க குடலிலுள்ள சிறு கிருமிகள் மடியும். இன்னும் காமாலை, இரத்தக்கெடுதல், வீரியநஷ்டம் இவைகள்போம். இதைத் தினம் இருவேளை தாம்பூலத்துடன் உபயோகப்படுத்தக் குடலிலும், நீர்த்தாரையிலும் உள்ள புண்ணை ஆற்றும். நீர்ச்சுருக்கு, பேதி, சொற்பனஸ்கலிதம் முதலியவைகளும் போம்.

கத்திரிக்காய்.

(Solanum Melongena unriped Fruit).

**கத்தரிக்காய் பித்தங் கனன்றகபந் தீர்ந்துவிடுந்
தொத்து சொறிசிரங்கைத் தூண்டிவிடு—மெத்தவுந்தான்
பிஞ்சான கத்திரிக்காய் பேசுமுத்தோ ஷம்போக்கு
மஞ்சார் குழலே வழுத்து.**

குணம்:—(இ-ள்.) கத்திரிக்காய் பித்தத்தால் வந்த கபத்தை நீக்கும். புடையையும் கிரந்தியையும் அதிகப்படுத்தும். கத்திரிப் பிஞ்சானது திரிதோஷத்தை விலக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி

உபயோகிக்கும் முறை:—இதனை விசேஷமாக அடுத்தடுத்துச் சமைத்து உண்பவர்களுக்கு கரப்பான் ரோகத்தை யுண்டாக்கும். இரத்தக் கெடுதலினால் தேகத்தில் நமையுண்டானவர்கள் இதனைக் கொள்ளா திருப்பதே நலம்.

கத்திரிப்பழம்.

(Solanum Melongena Fruit).

**பித்தங் கரப்பான் பெருங்கிரந்தி குஷ்டமிவை
மெத்தவுமா மெய்யிலழல் வீறுங்காண்—சத்தான
தாதுநட்ட மாங்கபங்காற் சார்ந்த சுவாசமும்போ
மோதுகத்தி ரிப்பழத்தா லுன்.**

குணம்:—(இ-ள்.) கத்திரிப்பழத்தினால் பித்தரோகம், கரப்பான், பெருவிரணம், குஷ்டம், தேகவெப்பம், சுக்கிலக்ஷீணம் ஆகிய இவைகள் உண்டாகும். கோழையும், வாத தோஷமும், இரைப்பும் நீங்கும்.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உபயோகப்படுத்துவதினால் கபம், வாயு முதலியவை நீங்கப்பெற்றிடினும் இதனாலுண்டாகும் தீமைகள் அதிகமுண்டு. ஆகையால் இது பெரும்பாலும் ஆகாரத்தில் நீக்கப்பட்டிருக்கிறது.

கத்திரிப்பிஞ்சு.

(Solanum Melongena Pod).

அனலுடனே பித்த மகலு மலம்போந்
தோனியுண்டா மையந் தோலையுஞ்—சனியாத
முத்திருக்கும் வெண்ணகையீர் மூடு முகிழ்விரியாக்
கத்தரிப்பிஞ் சுண்பவர்க்குக் காண்.

குணம்:—(இ-ள்.) முகிழ்விரியாத கத்திரிப்பிஞ்சுக்குச் சுரமும், பித்ததோஷமும், கபமும் நீங்கும். மலம் இளகி இறங்கும். குரற்றொனி பலக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதைக் கறிகாய்களில் முதன்மையான பதார்த்தமாக எடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய இளம் பிஞ்சைத் தினசரி பதார்த்தங்களில் ஒன்ருகக் கூட்டிக்கொள்ளலாம். இன்னும் அவிழ்தங்கள் கொண்டபோதும் பத்தியக்கறிக்கு உபயோகப்படுத்திக்கொள்ள மருந்தின் வீரியத்தைக் கெடுக்காது. இதனல் குடலுக்கு பலமுண்டாகும். கபக்கட்டு ஒழியும். மலம் கிரமமாகப் போகும். விதைமுதிர்ந்திருந்தால் வயிற்றில் உஷ்ணத்தையுண்டாக்கி வயிறு கடுத்து மலத்தை வெளிப்படுத்தும். ஆகையால் விதை முதிராத கத்திரிக்காயே சிறந்தது. இன்னும் கத்திரிப்பிஞ்சு, எள்ளு, வெல்லம் இவைகளைச் சமனெடையாக அரைத்து காலை மாலை எலுமிச்சம்பழம் அளவு 3 நாள் கொடுக்க வெறிநாய்கடி குணமாகும். உப்பில்லாத பத்தியம்.

கமலாப்பழம்.

(Citrus Aurantium).

நாட்டிற் கமலா நறுங்கனியை யுண்பார்க்கிங்
கோட்ட மிடும்பித்த மோதக்கேள்—வாட்டுந்
தினவுகரப் பான்கிரந்தி சேருமோ மாதே
தினந்தினம் போகமிகுந் தேர்.

குணம்:—(இ-ள்.) கமலாபழத்தால், பித்தம் தணியும், தினவு, கரப்பான், சொறி, சிரங்கு முதலியவைபோம்; நீடித்துச்சாப்பிடத் தாது பலமுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த பழத்தை ஆகாரத்திற்குப் பின் சாப்பிட்டுவர இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள்

யாவும் சித்திக்கும். இந்த இனத்தில் புளிப்புள்ள பழத்தைச் சாப்பிட முற்றிலும் மாறுபட்ட குணம் உண்டாகும்.

கம்பு அரிசி.

(Holus Spicatus).

கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவர்காண்
பம்பு சொறிசிரங்கைப் பாலிக்கும்—வெம்பு
முடலின் கொதிப்பகற்று முட்பலமுண் டாக்கு
மடலயிற்கண் மாதே யறி.

குணம்:—(இ-ள்.) கம்புஅரிசியால் நெருங்கிய நமைச்சலையும் சிரங்குகளையும் வீரியத்தையும் செய்யும். சரீர வெப்பத்தை நீக்கும். குளிர்ச்சி என்பர்.

செய்கை:—சீதளகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனை உரலிலிட்டு நன்றாய் குத்தி உமி, தவிடு முதலியவற்றை நீக்கும்பொருட்டு நன்றாய்ப் புடைத்துச் சமைத்து உண்பதுண்டு. இன்னும் இதனை மாவாக அரைத்துக் களியாகவும் அடையாகவும் சுட்டுச் சாப்பிடுவதுண்டு. இது மலத்தை நன்றாய் தள்ளும், தாதுவை பலப்படுத்தித்தேகத்தின் வெப்பத்தைத் தணிக்கும், ஆனால் சரீரத்தில் நமைச்சலையும் சிரங்குகளையும் உண்டாக்கும். பழக்கமில்லாதவர்கள் அதன் ருசிக்காகஅடுத்து உண்ணில் தேகத்திற்கு கெடுதலை உண்டாக்கும்.

கம்மாறுவெற்றிலை.

(Piper Betel).

ஏட்டிலொன்று கிட்டினீ ரேற்றஞ் சிரோபார
மாட்டி விடுசந்நி மாந்தமொடு—நாட்டிற்
பரியகுரற் கம்மல்வலி பண்டியுப்பி சம்போ
மரியகம் மாறுவெற்றி லை.

குணம்:—(இ-ள்.) கம்மாறு வெற்றிலையால் சலதோஷம், சிரோபாரம், சந்நி, மந்தாக்கினி, தொண்டைக்கம்மல், வயிற்றுவலி, உப்பிசம் இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை பாக்கு சுண்ணாம்புடன் கூட்டித் தாம்பூலமாக உபயோகப்படுத்த சலதோஷம், சிரோபாரம், மந்தாக்கினி, தொண்டைகம்மல் முதலியவைகள் போம்.

இதை நெருப்பனலில் வதக்கி கசக்கி பிழிந்தெடுத்த சாற்றில், கஸ்தூரி, கோரோசனை முதலியவைகள் சம்மந்தபட்ட மாத்திரையைச் சேர்த்துக் குழந்தைகளுக்காயினும் அல்லது பெரியவர்களுக்காயினும் கொடுக்க, சீதள சம்மந்தமான ரோகத்தை விரைவில் சாந்தப்படுத்தும்.

இதனை அஜீரணபேதிகளுக்குக் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

வெற்றிலைகருக்குக் கியாழம்

25-30 கம்மாறு வெற்றிலையை நன்றாய் இருபுறமும் துடைத்து, சுத்தப்படுத்தி ஒவ்வொரு வெற்றிலையின் பின்புறத்தில் தாம்பூலத்திற்கு தடவுகின்ற திட்டம்போல் சுண்ணும்பைத் தடவி வைத்துக் கொள்க. பிறகு அரைப்பலம் மிளகை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு அதனுடன் 5-6 முன் சித்தப்படுத்தியுள்ள வெற்றிலையைச் சேர்த்து நன்றாய் கசக்கி நிமிட்டவும். அப்போது வெற்றிலை பொடி பொடியாக கீழே விழும். அப்படி விழுவதை மண் தூசி இவைகளுடன் கலக்காமல் ஒரு முறத்திலாவது அல்லது மரத் தட்டிலாவது விழும்படிச் செய்க. இப்படி விழுந்த துண்டுகளை ஒருங்கு சேர்த்து மறுபடியும் அந்த மிளகுடன் கூட்டி மீண்டும் இரண்டொரு புதிய வெற்றிலையைக் கூட்டி இப்படியே கொஞ்சங் கொஞ்சமாக எல்லா வெற்றிலைகளையும் முடிவு பெறுகிறவரையில் வைத்துக் கசக்கிவருதல் வேண்டும். இதனால் வெற்றிலையிலுள்ள சாறணைத்தும் மிளகு கிரகித்துக்கொள்ளும். இவைகளை எல்லாம் ஒரு மட்பாண்டத்தில் போட்டு அடுப்பிலேற்றி எரிக்க வெற்றிலையும் மிளகும் கரிகி வரும் சமயம் காலேயரைக்கால்படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்க எத்தகைய அஜீர்ணபேதியும் குணமாகும்.

வெற்றிலை சர்பத்து

இருநூறு வெற்றிலையைக் கொண்டுவந்து சுத்தமாகத் துடைத்து உரலில்போட்டு ஒன்றிரண்டாய் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு $\frac{3}{4}$ படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றி கால்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி 10 பலம் சீனிசர்க்கரை கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சவும். பதம் வரும்போது, குங்குமப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலக்காய்வித்து வகைக்கு தோலா $\frac{1}{2}$, கிராம்பு தோலா $\frac{1}{4}$ இவைகளைச் சூரணம்செய்து கல்வத்தில்

போட்டு பன்னீர்விட்டு மெழுகுபதமாக அரைத்துப்போட்டுக் கலக்கி இறக்கி ஆறவிட்டு சீசாவில் பத்திரப்படுத்துக.

வேண்டும்போது தினம் 2 வேளை $\frac{1}{2}$ தோலா வீதம் கொடுத்து வர மனச்சந்தோஷம், தாதுபுஷ்டி, இரத்தசுத்தி முதலியவைகள் உண்டாகும்.

கரசனுங்கண்ணி.

(Eclipta Prostata).

குரற்கம்மற் காமாலை குட்டமொடு சோபை
யுரற்பாண்டு பன்னோ யொழியு—நிரற்சொன்ன
மெய்யாந் தகரையொத்த மீளியண்ணு நற்புலத்துக்
கையாந் தகரையொத்தக் கால்.

குணம்:—(இ-ள்.) கையாந்தகரையால் தொண்டைக்கம்மல், காமாலை, குட்டம், வீக்கம், பாண்டு, தந்தரோகம் இவை போம். தேகத்திற் பொற்சாயலும், யாளிக்கு சமதையான பலம் உண்டாகும் என்க.

செய்கை:—பித்தகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—கரசனுங்கண்ணி இலையை சிறிது மிளகுடன் கூட்டி யரைத்து தினம் இருவேளை சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிட்டு வருக.

அல்லது அவ்வுருண்டைகளை ஒரு கோப்பையில் போட்டு மூழ்க தேன்விட்டு தினம் ரவியில் வைத்துக்கொண்டு வேண்டும்போது வேளைக்கு ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டு வருக,

இவற்றால், மஞ்சள்காமாலை, பாண்டு, சோபை தீரும்.

கரசனுங்கண்ணியை சிறிது மிளகு சேர்த்தரைத்து ஒரு சுண்டைக்காய் பிரமாணம் உள்ள கற்கத்தை மோரில் கலக்கிச் சாப்பிடலாம்.

அல்லது கரசனுங்கண்ணியை அரைத்துப் பிழிந்தெடுத்த சாற்றில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி வீதம் மோரிலாயினும் பாலிலாயினும் கலக்கி சாப்பிடலாம். இதனால் முற்கூறப்பட்ட ரோகங்கள் தீரும். இதனை தைலத்தில் கூட்டிச்செய்வதுமுண்டு. எங்ஙனமெனில்—

கரசனுங்கண்ணி தைலம்.

கரசனுங்கண்ணிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு படி 1, குமரிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப்படி $\frac{1}{4}$ ஆக இத்திரவங்

களைத் தைல பாத்திரத்தில் விட்டு அதில் கஸ்தூரிமஞ்சள், சாதிக் காய் வகைக்குப் பலம் 1 ஆகத் தட்டை அம்மியிலிட்டு பசுவின் பால்விட்டு வெண்ணெய்போல் அரைத்துப்போட்டுக் கலக்கிப் பத முறக் காய்ச்சி வடித்துச் சீசாவில் அடைத்து 10-15 தினத்திற்குக் கேழ்வரகு அல்லது நெல்லு முதலிய தானியத்துள் வைத்தெடுத்து வாரத்திற்கு ஒருமுறை ஸ்நானம் செய்துவரக் கண்ணோய், தலை வலி, செவிநோய், பித்த கிறுகிறுப்பு, தேகவெப்பு, பீநசம் முதலிய ரோகங்கள் போம்.

கரியபோளம்.
(Aloe Litoralis).

மார்புவலி வீக்கம் வயிற்றுவலி பங்கநோய்
வார்மேகக் கட்டியோடு மாவாதம்—பாருலகி
னீளங்கை காலி னிலைசூலை யுங்கறுத்த
போளந் தனைக்காணிற் போம்.

குணம்: (இ-ள்.) கரியபோளத்தினால் இருதயவாதம், சோபை, குன்மம், முடம், மேகப்பிடகம், மனவாதரோகம், கைகால் குத்தல் இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வேளைக்கு 1-1½ குன்றி எடை தேனில் கொடுக்கப் பசிதீபனம் உண்டாகும். மஞ்சட்காமாலை, சூதகக்கட்டு, சூதகப்பாண்டு முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும். 2½-5 குன்றி எடை கொடுக்க பேதியாகும். இதை தனியாகக் கொடுப்பதைவிட இதர சரக்குகளுடன் சேர்த்து உபயோகப் படுத்துவதே சிறந்ததாகும்.

இன்னும் இந்த சரக்கானது வயிற்றிலுள்ள கிருமிகளை நீக்கவும், குண்டிக்காய், மண்ணீரல் முதலியவற்றைப் பற்றிய ரோகங்களைப் பற்றறுக்கவும் சிறந்தது. இதைச் சலம் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து அடிபட்ட வீக்கங்களுக்கு மேலுக்குப் பற்று போட வீக்கம் கரைந்துபோகும். ஒருகால் எலும்பு முறிவுபட்டு இருப்பினும் கூடும்படி செய்யும். புரைபோகும் மேக ரணங்களையும், விஷ கடியால் நேர்ந்த ரணங்களையும் ஆற்றும்.

இதைக் கொத்துமல்லிக்கீரைச்சாறு விட்டு அரைத்துக் குழந்தைகளுக்கு காணும், செவ்வாப்பு, அக்கி முதலியவற்றிற்கு பூசக் குணமாகும். இதைச் சுரக்காய் வித்தோடு அரைத்து நாசிப்புண்

களுக்குப்போட ஆறும். இதை காடிவிட்டரைத்துப் போட உதிரு கின்ற ரோமங்கள் உறுதி பெறும்.

இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிச் செய்யும் சில அனு போக முறைகளாவன—

மூசாம்பர மெழுகு.

கரியபோளம் கழஞ்சி 7, வாலேந்திரபோளம் கழஞ்சி 4, குங்கு மப்பூ கழஞ்சி 2, பழைய வெல்லம் கழஞ்சி 4, கருப்பூரம் கழஞ்சி 1, பெருங்காயம் கழஞ்சி 2 இவற்றைக் கல்வத்தில் போட்டுத் தேன் விட்டு பெழுகுப் பதமாக அரைத்து வாயகன்ற கோப்பையிலாவது சீசாவிலாவது வைத்துக்கொள்க. வேளைக்குப் பெரும்பட்டாணிப் பிரமாணம் தினம் இருவேளை கொடுத்து 10-15 நிமிஷத்திற்கப்பால் சோம்பு கியாழம் கொடுக்கவும்.

இதனால் பிரசவித்த ஸ்திரீகளுக்கு சிக்குப்பட்டுள்ள அழுக்கு வெளிப்படும். இன்னும் மாதவிடாய் தடைபட்டுள்ளவர்களுக்கு காலமறிந்து கொடுக்க ஒழுங்குபடுத்துவதுடன் அக்காலத்துண் டாகும் வலியையும் நீக்கும். அழுக்கு தாராளமாக காணுமளவில் மருந்தை உடனே நிறுத்திவிடவேண்டும்.

(வேறுமுறை)

சுத்த கறுப்பாக இல்லாமல் கொஞ்சம் மஞ்சள் நிறமுள்ள கரியபோளம் கழஞ்சி 8, சடாமாஞ்சி, சுக்கு, ரூமஸ்தகி, குங்குமப்பூ, மிளகு, கிராம்பு, பெரிய லவுங்கப்பட்டை வகைக்கு கழஞ்சி $\frac{1}{4}$ இவைகளைத் தனித்தனி தூள் செய்து ஒருமிக்கக் கலந்து அத் துடன் கஸ்தூரி இரண்டு குன்றி எடைக் கூட்டிக் கல்வத்திலிட்டு, காய்ச்சி அழுக்கு நீக்கிய சுத்தமான தேனைத் துளிதுளியாக விட்டு மெழுகுபதமாக அரைத்து பத்திரப்படுத்துக. 1-1$\frac{1}{2}$ குன்றிப் பிர மாணம் தினம் இருவேளைக் கொடுத்துவர, சந்நி, காக்கைவலி, முகவாதம், கழுத்துநரம்புகளின் இசிவு, பாரிசவாதம், முறுக்கல், சூதகவாயு இவைகள் போம்.

இந்த மெழுகை மூல ரோகிகளுக்கும் கருப்பிணிகளுக்கும் கொடுக்கக்கூடாது.

கருங்காக்கட்டான்வேர்.

(Clitoria Ternatia Blue Flower Root).

மாந்தங் கிருமியடல் வாதங் கபமினமுஞ்
சேர்ந்தமலக் கட்டுஞ் சிதையுங்காண்—சூழ்ந்த
அருங்கா குவடுகளி லண்டா மயிலே
கருங்காக்கட் டான்வேரைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) கருங்காக்கட்டான் வேருக்கு மாந்தம், மலக்கிருமி, வாதாதிக்கம், சிலேத்தும ரோகம், மலக்கட்டு ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் பொதுவாகக் காக்கட்டான் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டதே யாகும். இது கொடி வகுப்பில் சேர்ந்தது. நீலப்பூ விடுகின்றதற்கு கருங்காக்கட்டான் என்றும், வெள்ளைப்பூ விடுகின்றதற்கு வெள்ளைக்காக்கட்டான் என்றும் கூறுவர். இவற்றுள் வெள்ளைக்காக்கட்டானையே விசேஷமாக அவிழ்தங்களில் சேர்ப்பதுண்டு. இக் கொடிகளின் ஒவ்வொரு ஈர்க்குகளிலும் மூன்று இலை, ஐந்து இலை, ஏழு இலை விடுவது உண்டு. இவற்றில் ஏழு இலை விடுகின்றதே அதிக குணமுடையதென அனுபவத்தில் கண்டிருக்கிறது.

கருங்காலிப்பிசின்.

(Acacia Catechu Gum).

கருங்காலி யின்பிசின்றுன் காரார் கரப்பான்
வருமேக நீரிழிவை மாற்றும்—விரைவாய்ப்
பெரும்பாட்டை நீக்கும் பெருந்தாது விர்த்தி
யரும்பு மெனக்கண் டறி.

குணம்:—(இ-ள்.) கருங்காலிப்பிசின் கருங்கரப்பான், மேகமூத்திரம், பெரும்பாடு ஆகிய இவைகளை நீக்கும். விந்துவை விர்த்தி செய்யும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்கு கொடுப்பதில்லை. சில லேகியங்களில் சேர்க்கப்படுகிறது. இதனால் விந்து உறதிப்படும், வெள்ளை, வெட்டை, பெரும்பாடு முதலியவைகள் குணமாகும். உதாரணமாக—

வாதுமை லேகியம்

பாதம்பருப்பு, சாரப்பருப்பு வகைக்கு பலம் 5, புளியங்கொட்டைப்பருப்பு பலம் 3, நீர்முள்ளிவித்து பலம் 3, விடதாரி பிசின், கருவேலம்பிசின், கருங்காலிபிசின் ஆவாரம்பிசின், வேப்பம்பிசின், பலாசுபிசின் வகைக்கு பலம் 1, இவைகளை இடித்துச் சூரணமாகச் செய்துவைத்துக்கொள்க. அதன்பின் சர்க்கரையை பாகுபோல் காய்ச்சி முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தை

கல்வத்தில் போட்டு அதினில் சிறுக, சிறுகவிட்டு லேகிய பதத்திற்கு அரைத்துப்போதிய அளவு நெய்விட்டுப் பிசைந்து பத்திரப்படுத்துக.

இதனை வேளைக்கு சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் அந்தி சந்தி சாப்பிட்டுப் பாலருந்திவரத் தாது பலப்படும். உட்சூடு, உள் உருப்பு இரணம் இவைகள் ஆறும்.

கருங்காலிமரத்தின் வேர்.

(Acacia Catechu Root).

கைப்புற் றிருக்குங் கருங்காலி வேருக்கு
மைப்புழுவும் பாகாம் மதுநீரு—மெய்க்குளேழு
குஷ்டுமுதி ரப்போக்குங் கூவி யமுதகலும்
மட்டுறுபூங் கோதாய் வழுத்து.

குணம் (இ-ள்.) கைப்புள்ள கருங்காலிமரத்தின் வேருக்கு மலாசயக் கருங்கிருமி, பாகுபடும் மதுமூத்திரம், குஷ்டம், இரத்த பேதி இவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, கிரிமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரை வேளைக்கு $\frac{1}{4}$-1 தோலா எடை சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து ஒரு மட் குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு அடுப்பிலேற்றி $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவர குடலில் சேருகின்ற கருமை நிறமுடைய கிருமிகள் ஒழியும். இன்னும் நீரைக்காய்ச்சிப்பார்க்க வெல்லப்பாகைபோல் தோன்றுகின்ற மதுமேகத்தையும், இரத்தத்துடன் கூடிய பேதியை யும், ஆசனக்கடுப்பையும் போக்கும். நீடித்துச் சாப்பிட்டுவர குட்டம் என்னும் குறைநோயும் போம்.

கருங்காலிமரப்பட்டை.

(Acacia Catechu Bark).

மேகநீ ரைக்கெடுக்கு மீறுதந்த மூலத்து
ளாகிய வேதனையை யாற்றுங்காண்—சோகந்
தருங்காச ரீளையிவை சாரா தகற்றுங்
கருங்காலிப் பட்டையது காண்.

குணம்:-(இ-ள்.) கருங்காலிமரப் பட்டையானது பிரமேக மூத்திரம், தந்தமூலரோகம், இருமல், சுவாசம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையை வேளைக்கு ½ தோலா எடை நறுக்கி ஒரு பழகின குடுவையில்போட்டு ¼ படி சலம்விட்டு அடுப்பிலேற்றி ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடி கட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளைக்குக் கொடுத்துவர, பேதி, அக்னிமந்தம், துர்பலம் முதலியவைகள் போம். இதுவுமன்றி இந்தக் கியாழத்தை சீதபேதி, பெரும்பாடு, நீர்ச்சுறுக்கு முதலியவைகட்கும் கொடுக்க நற்குணத்தைக் கொடுக்கும். இதன் கியாழத்தைக்கொண்டு வாய் கொப்பளித்து வர வாய்ரணம் ஆறும். ஆருத ரணங்களைக் கழுவிவர விரைவில் ஆறும். இதன் பட்டைச் சூரணத்தைப் பற்பொடியுடன் கலந்து பல்துலக்கிவர பல்சொத்தை, பல்லாட்டம், இரத்தம் சொரிதல், வாய் நாற்றம், ஈறு சுறப்பு இவைகள் போம்.

கருஞ்சீரகம்.
(Nigella Sativa).

கருஞ்சீர கத்தாற் கரப்பனோடு புண்ணும்
வருஞ்சிராய்ப் பீநசமு மாறும்—அருந்தினற்
காய்ச்சல் தலைவலியுங் கண்வலியும் போமுலகில்
வாய்ச்ச மருந்தெனவே வை.

குணம்:—(இ-ள்.) கருஞ்சீரகமானது மண்டைக் கரப்பான், விரணம், சிராய்ப்பீநசம், உட்சூடு, சிரநோவு, கண்ணோய் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, சுரஹரகாரி, கிரிமிநாசினி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைக் கல், மண் முதலியவைகள் இல்லாமல் சுத்தப்படுத்தி இடித்துச் சூரணம்செய்து வைத்துக் கொண்டு வேண்டும்போது 5-10 குன்றி எடை வெல்லத்துடன் கூட்டி கொடுப்பதுண்டு. இதனால் வாயு, உதிரச்சிக்கல், சிறுநீர்க் கட்டு, நீர்க்கோவை முதலியவைகள் குணமாவதுமன்றி, முலைப்பால் சுரப்புண்டாகும். சிறிது அளவு அதிகப்படுத்திக் கொடுக்க ஸ்திரிகளுக்குச் சிசு வயிற்றில் மரித்திருந்தாலும் அதனை வெளிப்படுத்தும். இது குன்மம், மார்புவலி, இருமல், வாந்தி, ஒக்காளம், வீக்கம், காமாலை முதலிய ரோகங்களுக்கு அதிகமாக உபயோகப்படும்.

இதை காடியில் அரைத்துக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் சாகும்.

இதைத் தினந்தோறும் ஒருவேளை காலை நேரத்தில் தேகதிடத்திற்கு ஏற்றவாறு 1-1¼ விராகனெடை காடியில் அரைத்து 3-7நாள் கொடுக்க வெறிநாய்கடி முதல் பல விஷப்பூச்சிக்கடிகளினாலுண்டான உபத்திரவத்தையும் நிவர்த்திசெய்யும். இதைச் சிறிது சுத்த சலம் விட்டரைத்து தேன்கூட்டிக் கொடுக்க மார்பு அடைப்பு, பெருமூச்சு, கல்லடைப்பு தீரும்.

இதை வெந்நீரில் அரைத்துக் கட்டிகளுக்குப் பூசக் கட்டி பழுத்துடையும்.

இதுவுமல்லாமல் தோலைப்பற்றிய தடிப்பு, கீல்களிலுண்டாகும் வாதப்பிடிப்பு, தலைவலி இவைகளுக்கும் பூச விரைவில் நற்குணத்தை யுண்டாக்கும். இதை சிறு பிள்ளைகளின் அமுரிவிட்டரைத்து வீக்கங்களுக்குப்போட வீக்கம் வாடும். இதைக் காடியில் அரைத்து ஊறல் மிகுந்த படைகளுக்குப்போட அவ்விடத்திலுள்ள கிருமிகள் மாண்டு படை ஆறுவதுடன் மீண்டும் பரவ விடாது. இதை வெளவால் இரத்தம் விட்டரைத்து ஸ்திரீகளுக்கு அடிவயிற்றில் பூச கருப்பம் வெளியாகும்.

தேனில் அரைத்து அடிவயிற்றில் பூச கருப்பவலி நீங்கும். இதனைத் துணியில் முடிந்து நன்றாய்க் கசக்கி மோந்துக் கொண்டிருக்க சலதோஷம் போம். இது விசேஷமாக நரம்பைப் பற்றிய ரோகங்களுக்கு அதிகமாக உபயோகப்படும். இன்னும் இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில அநுபவமுறைகளாவன—

கருஞ்சீரக கருக்கு கியாழம்.

இரண்டரை பலம் வறமுள்ளியிலையை ஒரு வாய்அகன்ற சட்டியில்போட்டு அடுப்பிலேற்றித் தீயாமல் நீர் சுண்டப் பொன் மேனியாக வறுத்து அதில் ஒரு பலம் சுத்தமான கருஞ் சீரகத்தைப்போட்டு படபட வென்று வெடிக்கும் தருவாயில் இரண்டு படி. சலம் விட்டு அதில் இரண்டரை பலம் பனவெல்லத்தைப் போட்டு ½ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி இரண்டுபாகமாக பங்கிட்டு அதனில் கோதுமை ரொட்டியை ஊறப்போட்டுப் பிரசவித்த ஸ்திரிகளுக்குக் கொடுக்கவும். இப்படி 2-3 வேளை கொள்வதற்குள் சிக்குப்பட்டுள்ள கெட்ட உதிரத்தை வெளிப்படுத்தும்

பின்னுல் ஸ்திரீகளுக்கு யாதொரு பாதையும் உண்டாகாது. இது பிரசவித்த ஸ்திரிகளுக்கு அழுக்கு சரிவர படவில்லை என்றுணர்ந்த சமயம் சஞ்சீவிக்கொப்பானது.

கருஞ்சீரகக் கியாழம்

கருஞ்சீரகம், ஓமம், சதகுப்பை, மூங்கிலிலை, மாவிலிங்கம் பட்டை, பரங்கிச்சக்கை, சுக்கு, திப்பிலி, சித்திரமூலவேர்பட்டை வகைக்கு விராகனெடை 1 இவைகளை நன்ருய் நறுக்கி ஒரு பழ கின குடுவையில்போட்டு $\frac{1}{2}$ படி சுத்த சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி தினம் 1 வேளை மூன்று நாள் கொடுக்க பிரசவித்த ஸ்திரிகளுக்கு உண்டான உதிரக்கட்டு நீங்கும். இன்னும் ஸ்திரி களுக்கு மாதவிலக்க காலங்களில் சரிவர காணுமலிருப்பின் இக் கியாழத்தை காலமறிந்து கொடுப்பின் ஒழுங்குபடுத்தும்.

கருஞ்செம்பைப்பூ.

(Sesbania Aegyptica Flower—Black variety).

தலைக்குத்த லையஞ் சலதோடம் வாத
முலைப்பீ நசமுமிந்த வூர்க்குண்—ணிலைக்கா
தருஞ்சண் பகநாசி யாயிழையே சுத்தக்
கருஞ்செம்பைப் பூவிருக்குங் கால்.

குணம்:—(இ-ள்.) கருஞ்செம்பைப்பூவால் கபாலச்சூலை, சிலேத்துமகோபம், நீரேற்றம், வாததோஷம், பீநசம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஸ்நானம் செய்ய சிரசிலேற்பட்ட சீதளத்தைக் கண்டித்துத் தலைபாரம், தலைவலி, கழுத்து நரம்பின் இழுப்பு, வலி முதலிய வற்றை நீக்கும்.

கருஞ்செம்பையிலை.

(Sesbania Aegyptica Leaf—Black variety).

விப்புருதிப் புண்ணுறும் விறுகரப் பானும்போந்
தப்பாமன் மேகந் தணியுங்காண்—வெப்பார்
கபரோக மேகுங் கருஞ்செம்பை யொன்றுக்
கிபமா முலைமாதே யெண்.

குணம்:—(இ-ள்.) கருஞ்செம்பை இலையால், வித்திரிதிக்கட்டி, கரப்பான், பிரமேகம், கபரோகங்கள் ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—சோபநாசினி, கிரிமிநாசினி, க்ஷீரநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை வதக்கி வீக்கத்திற்கு வைத்துக்கட்ட வீக்கம் வாடும், கட்டிகளுக்கு இந்த இலையை வதக்கி வைத்துக்கட்ட அழுந்திப்போம். ஒருகால் சீழ்கொண்டிருப்பின் உடைத்துக்கொள்ளும். தலைவலி, தலைபாரம், ஸ்தன வீக்கம், கீல்களில் உண்டான மேக வாயுவின் பிடிப்பு, வீக்கம் முதலியவற்றிற்கு ஒரு சுத்தமான சீலையை விரித்து அதன்மீது இதன் இலையை 2 அங்குலம் கனமிருக்கும்படி பரப்பி அதன் மத்தியில் மணலைச் சிவக்க வறுத்துக்கொட்டி சீலையின் நான்கு மூலையையும் சேரப் பந்துப்போல் பிடித்துத் தாளக்கூடிய சூட்டில் ஒற்றடம் கொடுக்கவும். இது ஆறின பின்னர் மீண்டும் முன்மாதிரி சீலையில் இதன் இலையைப் பரப்பி மத்தியில் மணலை வறுத்திட்டு ஒற்றடம் கொடுக்கவும். இப்படிச் சிறிதுநேரம் தினம் 2 வேளை கொடுக்கக் குணமாகும்.

இதனைத் தைலமாகச் செய்து ஸ்நானம் செய்வதுமுண்டு. எங்ஙனமெனில்—

கருஞ்செம்பைத் தைலம்

கருஞ்செம்பை இலைச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு வகைக்குப் படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி 1 இவைகளை ஒரு பழகின தைல பாண்டத்திலிட்டு அதில் மிளகு, சீரகம், கருஞ்சீரகம், சாம்பிராணி வகைக்குப் பலம் அரைக்கால் வீதம் தட்டை அம்மியிலிட்டுப் போதிய அளவு பசுவின்பால்விட்டு மெழுகுபதமாக அரைத்துப் போட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வண்டல் திரளும் பதத்தில் வடித்துப் பத்திரப்படுத்துக. இந்த தைலத்தை வாரம் ஒரு முறை தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டுவரச் சகல பீநசம், மண்டைக்குத்து, தலைபாரம், கபாலநீர்க்கோவை, வாயுவினால் நேர்ந்த காதுமந்தம் இவைகள்போம். இதில் மஞ்சள்செம்பை, வெண்செம்பை என்கிற இனங்களுமுண்டு. தைலபாகங்களில் கருஞ்செம்பையே விசேஷமானது. வெண்செம்பைக்கு ஆதிவாரம் காப்புக் கட்டி வடக்குபோகும் வேரைத்துண்டித்துக்கொண்டு தேள் கொட்டிய இடத்திற் 3 முறை காட்டி கீழ்முகமாக இறக்கி 3 முறையும் பூமியில் தட்ட விஷமிறங்கும்.

கருடன்கிழங்கு.
(Bryonia Epigoea).

அரையாப்பு வெள்ளை யகலாக் கொறுக்கை
கரையாத கட்டியிவை காணர்—வரையிற்
றிருடரெனச் செல்லும்விடஞ் சேர்பாம்பு மஞ்சுங்
கருடன் கிழங்கதனைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) கருடன்கிழங்குக்கு அரையாப்புகட்டி, வெள்ளை, கொறுக்குமாந்தை, அற்புதவிரணம் ஆகிய இவைகள் நீங்கும். விஷத்தையுடைய சர்பங்களும் இதனைக்கண்டால் நடுங்கும் என்க.

(இதுவுமது)

துட்டவிஷம் பாண்டுவெப்பு சூலைவா தங்கிரந்தி
குட்ட மரிப்பக்கி கோண்குடனேய்—கெட்டகண்ட
மாலைபோங் கொல்லன்கோ வைக்கிழங்கால் முத்தோஷ
வேலைப்போம் பாரில் விளம்பு.

(இ-ள்.) கொல்லன்கோவைக்கிழங்கால் மகாவிஷம், தேக வெளுப்பு, சுரம், வாதசூலை, சிரங்கு, பெருவியாதி, நமைச்சல், வக்கிர நேத்திரம், குடல்வலி, கண்டமாலை, திரிதோஷம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த கிழங்கை அரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு 2-3 அவுன்ஸ் வெந்நீரில் கலக்கி தினம் ஒரு வேளையாக 3 நாள் கொடுக்க நாய், நரி, சிறுத்தை, குரங்கு, பூனை, குதிரை, முதலை, வேங்கை இவைகளின் கடி விஷத்தினுலுண்டான பற்பல தோஷங்கள் போம். கடிவாயிலும் இதனை அரைத்துப் பூசுதல் நன்று. இதனில் இரண்டொரு கடலைப் பிரமாணமுள்ள துண்டுக் கிழங்கை வெற்றிலையுடன் கூட்டிக் கொடுக்க தேள், நட்டுவக்காலி இவைகளினுல் உண்டான விஷமும், நெரி கட்டுதலும் போம்.

கருடன்கிழங்கு, குப்பைமேனி, அவுரி, ஆவாரை, கீழ்காய் நெல்லி இவ்வைந்து இலைகளையும் இடித்துச் சாறு பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பில் துவாலையிட அஷ்டநாக விஷங்கள் போம்.

இன்னும் இதனை எண்ணெய்யாகக் காய்ச்சி உபயோகப்படுத்துவதுமுண்டு.

கருடன்கிழங்கு எண்ணெய்.

கருடன்கிழங்கு பலம் 12, வாய்விளங்கம், வாலுளுவைஅரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம் வகைக்கு பலம் 1 இவைகளை எல்லாம் இடித்து 4 படி சலத்திலிட்டு $\frac{1}{2}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதனுடன் 1 படி சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றி அதனில் 12 பலம் வெள்ளை வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக அரிந்துப்போட்டுச் சிறு தீயாக எரிக்கவும். வெங்காயம் நன்றாய் வெந்து மிதக்கும் சமயம் வடிகட்டிப் பத்திரப்படுத்துக.

இதனைத் தினம் ஒருவேளை $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தேகதிடத்திற்கேற்றவாறு கொடுத்துவர வெள்ளை, வெண்குட்டம், அரையாப்பு, கொறுக்கு, குட்டம், மேகரணம் முதலியவைகள்போம். இதற்கு நல்லெண்ணெய், கடுகு, புளி முதலியவற்றை தள்ளி பத்தியம் இருப்பது நலம்.

கருணைக்கிழங்கு

இந்த இனத்தில் காறுங்கருணை, காருக்கருணை, காட்டுக்கருணை என மூன்றினங்களுண்டு. அவைகளின் குணவிசேஷங்களை அதனதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

கருநெய்தற்பூ.
(Nymhae Cyanea).

பிரசவித்தா ரைத்தேற்றும் பேரசிர்க்கை மாற்றும்
வருசிலேஷ் மப்பிணியை மாட்டுந்—துருசாம்
விடபாக ரோகம் விலக்கும் புவியிற்
றடமார் கருநெய்தல் தான்.

குணம்:—(இ-ள்.) கருநெய்தல் பிரசவித்த மாதர்களைத் தேற்றுவதுமன்றி பெரும்பாட்டையும், கபநோயையும் விஷபாகத்தையும் போக்கும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் மூன்று விதம் உண்டு. வெள்ளைப்பூ புஷ்பிக்கும் இனத்திற்கு அல்லியென்றும், சிகப்புப்பூ புஷ்பிக்கும் இனத்திற்கு செவ்வல்லியென்றும், நீலப்பூ புஷ்பிக்கும் இனத்திற்கு நீலோற்பலம் அல்லது கருநெய்தலென்

றும் கூறுவர். இங்கு கூறப்பட்டுள்ள கருநெய்தல் பூவினால் இருமல், பித்தம், குமட்டல், மயக்கம், தேக எரிச்சல் இவைகள் நீங்கும். அன்று மலர்ந்த புஷ்பமாக இருந்தால் 4 ரூபாய் எடை, நிழலில் உலர்ந்த புஷ்பமாக இருந்தால் 2 ரூபாய் எடை சுத்தமாக ஆய்ந்து ஒரு குடுவையில் போட்டு ஆழாக்குச் சலம்விட்டு ½ ஆழாக்காக சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதனுடன் 2½ ரூபாய் எடை சர்க்கரை கூட்டிச் சர்பத்து பதமாகக் காய்ச்சி வேளைக்கு 2-3 தேக்கரண்டி அளவு கொடுத்துவர மூளையின் கொதிப்பால் அதிகரித்த சுரம் போம். இதை அதிக உஷ்ணத்தினால் வரும் இருமலுக்கும் கொடுப்பதுண்டு. இந்த புஷ்பத்திற்குண்டான விசேஷ குணமென்னவெனில் தேக எரிச்சலை சாந்தப்படுத்தும், இரத்த மூலத்தையும், பெரும்பாட்டையும் நிறுத்தும்.

இதன் கிழங்கின் உபயோகத்தை நெய்தற்கிழங்கின் தலையங்கத்தின்கீழ்க் காண்க.

கருநெல்லிமரம்.

(Phyllanthus Emblica—Black variety).

பதினைந் தேனுஞ்சந்நி பாதந் தயக்கம்
மதினைந்தி டச்செய்வினை மாறும்—பதியிற்
சநித்த கருவுருவந் தானும்வே ருகுந்
தனித்தகரு நெல்லிமரத் தால்.

குணம்:—(இ-ள்.) கருநெல்லிமரத்தினால் பதினைந்து வகை சந்நிபாதங்களும், மயக்கமும், மனோவியாதியும் நீங்கும், காயசித்தியுண்டாகும் என்க.

செய்கை:—பலகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் கனியையாவது அல்லது வேர் பட்டைச் சூரணத்தையாவது சிலநாள் உட்கொள்ள நரை திரை மாறும்; தேகம் வலுக்கும்; இளமைப் பருவத்தையுண்டாக்கும்; தேகத்திலுள்ள பல ரோகங்களையும் போக்கும். இம்மரமானது சாதாரணமாகக் கிடைக்கக்கூடியதன்று. இந்த இனத்தில் சில போலி மரங்களுமுண்டு அவைகளின் காய், இலை முதலியவற்றில் சிறிது கறுப்பு சாயலிருக்கும். இது சாதாரண நெல்லி மரத்திலொன்றாகும். இதனைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது காய் இலை முதலியவைகள் உள்ளும், புறமும், கருப்பாக இருக்கவேண்டு

மெனத் தெரியவருகிறது. ஆகையால் அறிவாளர்கள் தெரிந்து உபயோகப்படுத்த வேண்டியது. அவசியமாகும்.

கருநொச்சில் இலை.

(Gendarussa Vulgaris).

வர்தக் கடுப்பகலு மாருத பீநசம்போ
மோதப்பே யோடி யொளிக்குங்காண்—வேதைசெய்யு
மண்டைக் குடைச்சலறும் மாசில்கரு நொச்சிலுக்குப்
பண்டைத் தலைவலிபோம் பால்.

குணம்:—(இ-ள்.) கருநொச்சில் இலையால் வாதவலி, நாசிகா ரோகம், கபரோகம், மண்டைக் குடைச்சல் ஆகிய இவைகள் நீங்கும், இம்மூலிகையால் ரசவாதம் கிட்டும் என்க.

செய்கை:—வேதனைசாந்தினி, மூத்திரவர்த்தனகாரி, ருதுவர்த் தனகாரி, சுவேதகாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாறுடன் சமனெடை நல்லெண்ணெய் கூட்டித் தைலமாகக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துகொண்டுவரச் சிரசிலுண்டான குடைச்சல், பீநசம் போம். இன்னும் வாத சீதளத்தினாலுண்டான தேகவலியும் போம். இதன் இலைச்சாற்றை வாலை ரசத்திற்குச் சுருக்கு கொடுக்கக் கட்டும். அப் பால் வேதைக்கு இடம் கொடுக்கும். ஒருவர் உண்ணக்கூடிய காரரி சியை ஒரு குடுவையில் போட்டு வேகவைத்துக் கொதிக்கும் தறு வாயில் இம்மரத்தினுடைய சிறு கொம்பைக்கொண்டு கிளற அன் னம் கருத்துப்போகும். இதனைச் சாப்பிட நரை திரை மாறும். காயம் வன்மைபெறும். இது கிடைப்பது அரிது. இந்த இனத்தில் சிறிது நீலவர்ணமான சாயலை உடைய தொன்றுண்டு. இதனைக் கறுப்பு நொச்சிலென்று அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். அசல் கருநொச்சிலானது, இலை, காம்பு, புஷ்பம் யாவும் உள்ளும், புற மும் சுத்த கறுப்பாக இருக்கவேண்டும்.

கருப்பூரப்புல்.

(Andropogon Citratis).

சூதகக் கட்டோடு சோணிதத்திற் சேர்வாயு
வாதக் கடுப்பும் வருங்காய்ச்சல்—வேதனையுந்
தாக்கும் பெரும்வாந்தி தாளாத பேதிவகை
போக்குங் கருப்பூரப் புல்.

(இதுவுமது)

வாசனைப்புல் வாதபித்த மாற்றுவது மன்றிமிகு
சூசனையாய் வந்த சுரம்போக்கும்—பேசரிய
ஐய மறுக்கு மரோசகத்தை விண்ணேற்றுந்
துய்யபசி யைக்கொடுக்குஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) கருப்பூரப்புல், தடைபட்டுள்ள மாதவிலக்கம், சூதகவாயு, வாந்தி, பேதி, குளிர்சுரம், ஊறலுடைய படைகளுடன் இன்னும் வாதபித்தம், தொந்தசுரம், கோழை, அருசி ஆகிய இவைகளைப்போக்கும், பசி தீபனத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சுவேதகாரி, அங்காகர்ஷணநாசினி, உதரவாத ஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பழகின மட்குடுவையில் ½ படி கொதிக்கின்ற சலம்விட்டு அதில் 10 ரூபா எடை கருப்பூரப்புல்லைப்போட்டு வாய்மூடி 3 மணி நேரம் வைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கு வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர இச் செய்யுளிற் கூறப்பட்டுள்ள பிணிகள் நீங்கும். மேற்படி கியாழத்தில் சிறிது இஞ்சிச்சாறும், இலவங்கப்பட்டைச் சூரணமும் கூட்டிக் குழந்தைகள் வயதுக்குத் தக்கவாறு வேளைக்கு 1 அல்லது 2 தேக்கரண்டி அளவு தினம் 3 வேளை கொடுத்துவரப் பேதி, அஜீரணம், வயற்றுப்பொருமல் முதலியவைகள் குணமாகும். மேற்படி கியாழம் பக்குவஞ் செய்யும் பொழுது, புதியனு, மிளகு, சுக்கு வகைக்கு ¼ பலம் வீதம் நசுக்கிப்போட்டு, சிறிது நெருப்பனலில் வெதுப்பி 3 மணி நேரம் ஊறவிட்டு, வடித்து எடுத்தக் கியாழத்தை, முற்கூறிய அளவின்படி கொடுத்துவர வயிற்றுப்புசம், வாந்தி, பேதி, சுரம், சலிப்பு, குடலிறைச்சல் முதலியவைகள் குணமாகும்.

இந்தக் கருப்பூரப்புல்லானது முக்கியமாக வயிற்றிலுள்ள வாயு, சீதளம், நரம்புகளின் இசிவு முதலியவற்றைப் போக்குவதற்கு இன்றியமையாததாகும்.

கருப்பூரப்புல்லெண்ணெய்.

(Andropogon Citratis Oil).

மந்தமுடன் வாந்தியறும் மாருக் கனுச்சூலை
தொந்த முறும்பிடிப்பின் றேல்லையறும்—சிந்தை
வெறுப்பூரும் மாபடையின் வேதனையைப் போக்குங்
கருப்பூரப் புற்றைலங் காண்.

குணம்:—(இ-ள்.) கருப்பூரப்புல்லெண்ணெயால் அஜீர்ணக் கழிச்சல், வாந்தி, பிடிப்பு, படை தீரும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுவேதகாரி, ேஷாணகாரி, அங்காகர்ஷணநாசினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வேளைக்கு 2-5 துளி சர்க்கரையில் கூட்டி 3 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவர வாந்தி, அஜீரணபேதி குணமாகும். இந்த தைலத்துடன் சமனெடை தேங்காய் எண்ணெய்கூட்டிப் பிடிப்பு, படை இவைகளுக்குத் தேய்க்கக் குணமாகும்.

கருப்பூரவள்ளி.

(Anisochilus Carnosus).

காச விருமல் கதித்தம சூரிஜயம்
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண்—வீசுசுரங்
கற்பாறை யொத்துநெஞ்சிற் கட்டுகபம் வாதமும்போங்
கற்பூர வள்ளிதனைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) கருப்பூரவள்ளியினால் காசம் என்கிற பொடியிருமல், அம்மைக்கொப்பளம், சிலேஷ்மதோஷம், புறநீர்க்கோவை, ரூட்சை, மார்புச்சளி, வாதக்கடுப்பு ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, உற்சாககாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றைக் குழந்தைகளுக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டியளவு முலைப்பாலோடு சேர்த்துக் கலக்கிக் கொடுக்கலாம் பெரியவர்களுக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் சிறிது சர்க்கரையுடன் கூட்டிக்கொடுக்கலாம். இது சீதளத்தினாலுண்டான கபத்தைக் கண்டிக்கும், வியர்வையை யுண்டாக்கித் தேகத்தின் கொதிப்பைத் தணியச் செய்யும். இத்துடன் நல்ல கஸ்தூரிமாத்திரை, கோரோசனமாத்திரை சேர்த்துக் கொடுத்தல் சாலச் சிறந்தது.

கரும்பயறு.

(Phaseolus Max).

கொல்லைப் பயறினத்தில் கூறுகின்ற நற்பயறு
இல்லையென விப்புவியி லேங்காதே—சொல்லக்கேள்
காணும் கரும்பயறு கம்புநீர் வாதமுடன்
கோணுவா தத்தையும்போக் கும்.

குணம்:—(இ-ள்.) கரும்பயற்றினுல் சிலேஷ்மவாதம், பங்கு வாதரோகம் முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதைச் சாதாரணமாகப் பச்சைப் பயறை பாகப்படுத்தி உண்பதைப்போல் உபயோகப்படுத்தல் வேண்டும்.

கரும்பு.

(Saccharum Officinarum).

சாற்றும் பெருங்கரும்பைச் சற்றே யனல்வெதுப்பித்
தோற்றமுறுஞ் சாற்றைச் சுவைத்திடவே—சீற்றமுறும்
பித்த மருசியுடன் பேசவொணு விக்கலறும்
நித்த மறிவாய் நிசம்.

குணம்:—(இ-ள்.) கரும்பின்கோலைத் துண்டுதுண்டாக நறுக்கிக் கும்பி அனலில் செருகி சிறிது வெந்தபின் எடுத்து அம்மியில் வைத்து நையவிடித்துப் பிழிந்தெடுத்த சாற்றை வடிகட்டிக் கொடுக்க வாய்குமட்டல், விக்கல் முதலிய பித்தரோகங்கள் நீங்கும் என்க.

இந்த இனத்தில் செங்கரும்பு, ரசதாளிக்கரும்பு, புல்லகண்டங்கரும்பு என மூன்றுவகை உண்டு. அதன் விபரம் அடியிற் காண்க.

விருத்தம்.

செங்கரும் பதனற்சாறு தீர்த்திடும் பித்தமெல்லாம்
அங்குறு மிரசதாளிக் ககன்றிடுந் தாகவேக
மங்குறுப் புல்லகண்டம் வாதகோபத்தைப் போக்குங்
கங்குல்வார் குழலினுளே காரிய மறிந்துகூறே.

குணம்:—(இ-ள்.) செங்கரும்பின் ரசம் பித்த தோஷத்தை நீக்கும், ரசத்தாளிக் கரும்பினது சாற்றினுல் தாகவெப்பம் போம், புல்லகண்டம் என்கிற கரும்பின் சாறுனது வாததோஷத்தை நீக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—மேற்கூறப்பட்ட செய்யுளின்கண் இனிது விளங்கும்.

கருவாகை.

(Mimosa-Amara).

விரணமோ டிட்டினமும் வீறுகின்ற வாய்வுந்
திரண மெனுங்கிருமிச் சேர்வு—மரணமுறச்
செய்யுங் கபத்தின் செயலுங் குடிவிலகும்
வெய்யகரு வாகைக்கு விள்.

குணம்:—(இ-ள்.) கருவாகை மரத்திற்கு புண், வெப்பம், வாதகோபம், சன்னக்கிருமி, க்ஷயரோகம் ஆகிய இவைகள் நீங்கும்.

செய்கை:—பட்டைக்குத் தாதுக்ஷீணரோதி, பூவிற்குச் சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையை மெழுகுவண்ண மரைத்துக் குஷ்டரணங்களுக்கு மேல் தடவிவர விரைவில் ஆறும். ஒரு பங்கு இலைக்கு எண்மடங்கு ஜலம்விட்டு நான்கிலொன்றாகக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி சமனெடை பசுவின் நெய்கூட்டிப் பதமுறக்காய்ச்சி வடித்துத் தினந்தோறும் வேளைக்குத் தேக்கரண்டி அளவு சிறிது கற்கண்டுச் சூரணம்கூட்டித் தினம் 2 வேளை கொடுத்துவர இருமல், க்ஷயம் முதலியவைகள் குணமாகும். இதன் புஷ்பத்தை அரைத்து எரிச்சல்மிகுந்த கட்டிகளுக்கும் வீக்கங்களுக்கும் தடவிவர எரிச்சலைத் தணித்து வீக்கத்தை குறைக்கும்.

கருவூமத்தை.

(Datura Fastuosa).

விந்துவிர தங்கள்கட்டு மேனிதருங் குஷ்டமொடு
வந்த வியர்ப்பரிப்பை மாற்றுங்காண்—முந்தப்
பெருமத்தஞ் செய்சுரத்தைப் பேர்க்குங் கயப்பாங்
கருமத்தம் நன்மூலி காண்.

குணம்:—(இ-ள்.) கசப்பையுடைய கருவூமத்தை சுக்கிலத்தையும் பாதரசத்தையும் கட்டும். உடலுக்கு அழகையுண்டாக்கும், பெருவியாதி, வியர்வைத்தினவு, பயித்தியசுரம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—இலைக்கும், வித்திற்கும், அங்காகர்ஷணநாசினி, வேதனைசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் பொதுவாக ஊமத்தை தலையங்கத்திற் கூறப்பட்டதேயாகும். ஆனால் இந்தக் கறுப்பு நிறத்தைப் பெற்ற மூலிகையின் இலையானது ஒருபுறம் நீல வருணமாகவும் மற்றொரு பாகம் சிறிது பச்சை நிறமாகவும் இரண்டு முதல் 5-6 அடுக்குப் புஷ்பங்களைப் பெற்றதாகவும் இருக்கும். இது அவ்வளவு சிறந்தது அன்று. கருஊமத்தை என்றால் உள்ளும் புறமும் கறுப்பாக இருக்கவேண்டும். காயைப் பிளந்து பார்க்க அதுவும் கறுப்பாக இருக்கவேண்டும். இதுவே உயர்ந்த மூலிகையாகும். பாதரசத்தில் இதனைப் போட்டரைக்க உடனே மடிந்துவிடும். அதை மணிபோல் திரட்டி அக்காய்களில் வைத்து லகுபுடம் போட்டு வர 7-8 புடத்தில் நெருப்புக்கு ஜெயம் பெறும்.

அவிழ்தப் போக்குகளில் கருவூமத்தையைக் குறிக்குங் காலத்தில் முற்கூறப்பட்ட நீல நிறத்தையுடைய இனத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் அதிகமாக மருந்தின் குணம் கெட்டுப் போகாதென்பது அனுபவத்தில் அறிந்த உண்மை.

கருவேப்பிலை.

(Bergera Koenigii).

வாயி னருசி வயிற்றுளைச்ச னீடுசுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுந்தான்—தூய
மருவேறு காந்தளங்கை மாதே யுலகிற்
கருவேப் பிலையருந்திக் காண்.

குணம்:—(இ-ள்.) கருவேப்பிலையால், அரோசிகம், சீதபேதியால் வரும் வயிறளைவு, புராணசுரம், பயித்தியதோஷம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—பலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாத ஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காய்கறி பதார்த்தங்களில் சேர்ப்பதுண்டு. இதனால் நல்ல மணமும், உண்பதற்கு நல்ல சுவையும் ஏற்படும். இன்னும் இது மந்தபசி, பித்தம், அஜீர்ணம் முதலியவற்றை நீக்கும். உலர்ந்த கருவேப்பிலை, மிளகு, சீரகம் இவற்றை வகைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா வீதம் சிறிது வறுத்து அரைத்து அதனுடன் சிறிது உப்புத் தூளிட்டு அன்னத்துடன் நெய்விட்டுப் பிசைந்து

சாப்பிட உஷ்ணவாயுவினுல் படபட வென்று சப்தத்துடன் வெளியாகும் மலக்கழிச்சல் நிவர்த்தியாகும். இதன் பச்சையிலையை ஒரு பிடி அளவிற்கு ½ படி வெந்நீரில் போட்டு 2-மணி நேரம் ஊறவைத்து வடிகட்டித் தினம் மூன்று வேளை ஒரு அவுன்ஸ் வீதம் கொடுத்துவர வாந்தி நிற்கும். அதன் ஈர்க்குகளில் உள்ள மேல்பட்டையை உரித்து முலைப்பாலில் போட்டு ஊறவைத்து வடிகட்டிக் குழந்தைகட்கு கொடுத்துக்கொண்டுவர வாந்தி, ஓக்காளம் இவைகள் நிற்கும். இந்தக் கருவேப்பிலையானது இரைப்பைக்கு வலுவைக் கொடுக்கும். குடலில் வறட்சியை உண்டாக்கும். ஆதலால் இதை அவிழ்தமாகக் கூட்டுங்காலத்தில் அன்ன பதார்த்தங்களில் நெய்யை சிறிது அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கருவேலங் கொழுந்து

(Acacia Arabica Tender Leaves).

கண்டாலு வின்றளிரைக் கல்லிலரைத் துத்தயிரி
லுண்டாற்பா ஷாணவெப்ப மோடுங்காண்—கண்டாவி
வந்தசிவப் பேருமதை மாதர்பா லாலரைத்து
வெந்தவடை கண்ணிலொத்த வே. (கண்டாலு = கருவேல்)

குணம்:—(இ-ள்.) கருவேலங்கொழுந்தைத் தயிரில் அரைத்துக் குடிக்கில் பாஷாணவேகம் நீங்கும். முலைப்பாலில் அரைத்து அடைதட்டிக் காய்ந்த சட்டியிலிட்டு வெதுப்பி அற்பச் சூடாக ஒற்றடமிடில் கண் சிவப்பு மாறும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, கபஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:— இம்மரத்தினுடைய இளமை பொருந்திய துளிர்களைப் பறித்து வெண்ணெய்போலரைத்து வேளைக்கு ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் 2-3 அவுன்ஸ் சலத்தில் கலக்கிச் சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிட அதிக உஷ்ணத்தினுலுண்டான இருமல் நீங்கும். இந்தத் துளிர் இலையைக் கொண்டுவந்து வெண்ணெய்போல் அரைத்து வேளைக்குச் சுண்டைக்காய் அளவு தினம் இருவேளை மோரிலாவது தயிரிலாவது கரைத்துக் குடிக்க, பாஷாணவீறு, சீதபேதி, உஷ்ணபேதி இவைகள் போம். இந்த இலையை அரைத்து ரணங்களின்மீது வைத்துக்கட்ட விரைவில் ஆறும். இந்தக் கொழுந்து இலையை முலைப்பால் விட்டு

அரைத்து அடைதட்டிக் காய்ந்த சட்டியில் வெதுப்பிச் சீலையில் முடிந்து தாளக்கூடிய சூட்டில் கண்களுக்கு ஒற்றடம் கொடுக்கக் கண்சிவப்பு மாறும். இந்தக் கொழுந்து இலையை சலம் விட்டு அரைத்து அடை தட்டி இரவு படுக்கைக்குப் போகும்போது ஆச னத்தில் வைத்துக் கட்டிக்கொண்டுவரச் சில தினத்தில் மூலாதா ரத்திலுள்ள வெப்பம் நீங்கி மூலம் ஒழியும்.

கருவேலமரம்.

(Acacia Arabica).

கருவேலின் வேர்க்குக் கடுப்பிரத்தம் மாந்தம்
பருவாத மூறுகரப் பானும்—பெருகு
பெரும்பேதி யும்போகும் பேச வினிக்குங்
கரும்பே யிதனைக் கருது.

குணம்:—(இ-ள்.) கருவேல்வேரினல் ரத்தக்கடுப்பு, அக்கினி மந்தம், மகாவாதம், கரப்பான், வாதாதிசாரம் ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—வேருக்கு—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இளம்வேரைப் பஞ்சுபோல் நசுக்கி அரைப்பலம் நிறுத்துக் குடுவையில்போட்டு ½ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. வேண்டும்போது வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுக்க இரத்தபேதி, அக்னிமந்தம், உஷ்ண பேதி இவைகள் போம்.

இந்தக் கியாழத்தைக்கொண்டு வாய்கொப்பளிக்க வாய் ரணம், பல்லீறுஅழுகல், பல்லாட்டம் முதலியவைகள் குணமா கும். விரணத்தை அலம்பிவரப் புதிய தசை வளர்ந்து விரைவில் ஆறும்.

கருவேலம்பட்டை.

(Acacia Arabica Bark).

தந்த மிறுகுந் தனிச்சூதப் புண்ணறு
மந்தசுரம் பித்தம் மடியுங்காண்—பந்த
மருவே யகலா மலரளக மாதே
கருவேலம் பட்டைக்குக் காண்.

குணம்:—(இ-ள்.) கருவேலம்பட்டைக்கு ரசவேகத்தின் வாய்வேக்காடு முதலிய விரணங்களும், சுரமும், பித்தநோயும் ஒழியும். பல்லிறுகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்பட்டையையாவது அல்லது வேர்ப்பட்டையையாவது அரைப் பலம் கொண்டுவந்து பஞ்சுபோல் நசுக்கி ஒரு பழகின குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு வாய் கொப்பளிக்க ரசவீறினுலுண்டான வாய் வேக்காடும், உந்தியின் கொதிப்பினுல் ஏற்பட்ட வாய்ரணமும் ஆறும். இந்தக் கியாழத்தை வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை 3 நாள் உட்கொள்ளச் சீதபேதி, வெகுமூத்திரம் முதலியவை நீங்கும். இந்தக் கியாழத்தை ஸ்திரீகள் பிரசவித்த பின்னர் அவர்களுக்கு அதிர்ச்சியினுலுண்டான மர்மஸ்தான ரணங்களுக்கு மேலிட்டு அலம்பிவர ரணம் ஆறுவதுடன் அந்த ஸ்தானமும் சுருக்கமடையும். இதன் பட்டையையும் வாதுமைக் கொட்டையின் மேலோட்டையும் நெருப்பிலிட்டுச் சுட்டுக் கரியாக்கிப் பொடித்துப் பற்றேய்த்து வரப் பல்லீறுகளிலுண்டான ரணம், பல் கூச்சம், பல்வலி, பல்லாட்டம் முதலியவைகள் போம்.

கருவேலம் பிசின்.

(Acacia Arabica Gum).

நீத்தொழுகும் விந்தை நிலைக்கப் புரியுமெரி
பூத்தொழுகும் வெள்ளைதனைப் போக்குமிம்—மாத்திரமோ
தேசு தருமுரமுஞ் செய்யும் பெரியோரராற்
பேசுகரு வேலம் பிசின்.

குணம்:—(இ-ள்.) கருவேலம்பிசினனது நீர்த்துபோன சுக்கிலத்தை இறுகச்செய்வதுமன்றி எரிச்சலோடு விழுகின்ற சீழ்ப்பிரமேகத்தையும் நீக்கும். அழகையும் பலத்தையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, கபஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பிசினை லேகியங்களில் சேர்க்கத் தாதுபுஷ்டி உண்டாகும். இன்னும் பேதி, மதுமேகம், வறட்சியினுலுண்டான இருமல் இவைகள் போம்.

கர்ச்சூர்க்காய்.

(Phoenix Dactylifera Dried).

வாயிலுண்டா மூற்றறலை மர்ற்றும் பசியில்லை
யாயிலுண்டா லுண்டா மதுமேக—நோயின்
பெருநீர் மறுக்குமினும் பெண்களைக்கூ டுங்காற்
றருநீர்மை கர்ச்சூர்க்காய் தான்.

குணம்:—(இ-ள்.) பேரீச்சங்காய் உமிழ்நீர்ப் பெருக்கையும், மதுநீரையும் போக்கும். பசியையும் புணர்ச்சியில் நிறுவாகத்தையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, கபஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயைத் தினம் இருவேளை 2-3 தின்றபின் பசுவின் பாலை யருந்திவர நுரைஈரலில் சேர்ந்துள்ள கபத்தை யறுக்கும். பசி தீபனத்தையும் தாதுவிருத்தியையும் உண்டாக்கும்.

கர்ச்சூர்ப்பழம்.

(Phoenix Dactylifera Preserved).

பேரீந் தேனுங்கனிக்குப் பித்தமத மூர்ச்சைசுர
நீரார்ந்த வைய நெடுந்தாகம்—பேரா
விரத்தபித்த நீரிழிவி லைப்பு மரோசி
யுரத்தமலக் கட்டுமறு மோர்.

குணம்:—(இ-ள்.) பேரீச்சம்பழத்தால் நீரைச் சுரப்பிக்கின்ற பித்தரோகம், மதரோகம், மூர்ச்சை, சுரம், சிலேத்துமம், நீர்க்கோவை, தாகம், ரத்தபித்தம், மேகமூத்திரம், வாயிலைப்பு, அருசி, மலபந்தம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை மிதமாகப் புசித்தல் வேண்டும். இது தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். ஜீரணசக்தியை உண்டாக்குவதுடன் மலச்சிக்கலை நீக்கும். இது உஷ்ணம் செய்யக் கூடிய சரக்கானதால் இத்துடன் வாதுமைப்பருப்பு கூட்டி உண்ணுதல் வேண்டும். அப்போது அதன் வீறை அடக்கித் தேகத்தைத் தழைக்கச் செய்யும். இன்னும் அரோசகம், சுரம், தாகம், பித்தம் முதலியவற்றை நீக்கும்.

கலப்பைக்கிழங்கு.

(Gloriosa Superba).

கலப்பைக் கிழங்கதனாற் கட்செவியின் தோஷம்
உலப்புறவே யோடி யொளிக்கும்—நிலப்பரப்பில்
சென்னிப் பிடரிவலி சீழ்குட்டம் முந்திவலி
சன்னி கரப்பனறுந் தான்.

குணம்:—(இ-ள்.) கலப்பைக்கிழங்கால் பாம்பின் விஷமிறங்கும். இன்னும் தலைவலி, கழுத்துவலி, குட்டம், வயிற்றுவலி, சன்னி, கரப்பான் முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கை 7 வித நஞ்சு பதார்த்தங்களில் ஒன்றாக கூறப்பட்டிருக்கின்றது. இது பாம்புகடி, தேள் கொட்டு, தோல்சம்பந்தமான வியாதி முதலியவற்றிற்கு அதிகச் சிறந்தது.

உலர்ந்த கிழங்கைத் தினந்தோறும் புதிய கோமயத்தில் 3 நாள் வரையில் ஊறப்போட்டு மெல்லிய வில்லைகளாக அரிந்து உப்பிட்ட மோரில் போட்டு இரவுகாலத்தில் ஊறவைப்பதும் பகலில் உலர்த்துவதுமாக 7 நாள் செய்ய அதிலுள்ள நஞ்சு விலகும். பாம்பு கடித்தவர்களுக்கு இதில் ஒரு சிறிய துண்டை மென்று தின்னும்படியாகக் கொடுக்க விஷம் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ மணி நேரத்திற்குள் இறங்கும். உத்தேசித்தபடி குணம் ஏற்படவில்லையென உணரின் 3 மணி நேரத்திற்குப்பின் மீண்டும் ஒருமுறை முன்போல் கொடுக்க உடனே குணப்படும்.

இந்தக் கிழங்கை நன்றாய் அரைத்து ஒரு மெல்லிய சீலையில் தளர்ச்சியாக முடிச்சுக்கட்டி ஒரு மட்பாண்டத்தில் குளிர்ந்த சலத்தை வைத்துக்கொண்டு அதனில் முடிச்சை உள்ளே விட்டுப் பிசைந்து பிசைந்து சலத்தில் அலசிவர மாவைப்போன்ற சத்து வெளியாகும். முடிச்சை எடுத்துவிட்டுச் சிறிது நேரம் சலத்தைத் தெளியவைத்துக் கலங்காமல் தெளிவுநீரை வடித்துவிட்டு மீண்டும் சிறிது சலம் விட்டுக் கலக்கி முன்போல் தெளியவைத்து வடிக்கவும். இப்படி 7 முறை செய்து உலர்த்தி அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும். இதனைத் தேகத்தின் சுபாவத்திற்கு ஏற்றவாறு 1 அல்லது 2 பயறளவு ரோகங்களுக்குரிய அனுபானத்தில் கொடுத்துவரக் குஷ்டம், வயிற்றுவலி, ஜன்னி, சுரம், வாதகபசம்பந்தமான

பலரோகங்கள் குணமாகும். இந்தப் பிரயோகத்தில் சரிவரக் குணம் ஏற்படாவிடின் சிறிது மருந்தை அதிகப்படுத்திக்கொள்ளவும். ஒரு சமயம் கொடுத்த அளவில் ஏதேனும் துர்க்குணம் செய்திருப்ப தாக உணரின் காலதாமதம் செய்யாமல் மிளகு கியாழத்தைக் கொடுத்து மருந்தின் வீறை முறித்துவிட வேண்டும்.

பிரசவ வேதனைப்படுகிற ஸ்திரிகளுக்கும் நஞ்சுக்கொடி சீழ் நோக்காமல் வேதனைப்படுகிற ஸ்திரிகளுக்கும் பச்சைக்கிழங்கை அரைத்துக் கொப்பூழ், அடிவயிறு, உள்ளங்கை, உள்ளங்கால் முத லிய ஸ்தானங்களில் தடவிவைக்க உடனே வெளியாகும். உடனே தடவி வைத்துள்ள பாகத்தைச் சலம் கொண்டு சுத்தப்படுத்தவும். நஞ்சுக் கொடிக்காகச் சிகிச்சை செய்யும்போது கருஞ்சீரகத்தை யும், திப்பிலியையும், சமனெடையாகச் சலம்விட்டு அரைத்துச் சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் வைன் சாராயத்தில் கலக்கி உள் ளுக்குக் கொடுத்தல் சாலச் சிறந்தது.

இந்தக் கிழங்குடன் கருஞ்சீரகம், கார்போகஅரிசி, காட்டுச் சீரகம், கஸ்தூரிமஞ்சள் கிளியுரம்பட்டை, கௌலா, சந்தனத் தூள் முதலியவற்றைச் சமனெடை சிறிய அளவாகச் சலம்விட்டு நெகிழ அரைத்துச் சொறி, சிரங்கு, ஊறல்படை முதலியவற்றிற் குத் தேய்த்து நீராடிவரக் குணமாகும்.

அரை பலம் பச்சைக்கிழங்கைச் சிறு துண்டுகளாக அரிந்து 5 பலம் வேப்பெண்ணெயில் போட்டுச் சிறு தீயாக எரித்துக் கிழங்கு வில்லைகள் மிதக்கும் தறுவாயில் ஆறவிட்டு வடித்துச் சீசாவில் பத் திரப்படுத்துக. இதனைப் பாரிசவாயு, தலைவலி, கழுத்து நரம்புகளின் இசிவு, கணுச்சூலை முதலியவற்றிற்குத் தேய்க்கக் குணமாகும்.

கலியாணப்பூசினிக்காய்.

(Beninkasa Cerifera Fruit).

பெரும்பூ சினிக்காய்க்குப் பித்தமோடுட் காய்ச்ச
லருஞ்சார நீர்க்கட் டருகன்—மருந்திடுதல்
பித்தசுர மஸ்திசுரம் பேய்வறட்சி மேகமும்போ
மெத்த வனிலமுறும் விள்.

குணம்:—(இ-ள்.) கலியாணப்பூசினிக்காய்க்குப் பித்தரோகம், உட்காய்ச்சல், சாரமேகமூத்திரகிரிச்சரம், இடுமருந்து, பித்த சுரம், அஸ்திதாதுகதசுரம், பேய்ச்சொறி, பிரமேகம் ஆகிய இவை கள் போம். ஆனல் வாதாதிக்கமுண்டு என்க.

செய்கை:— சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:— இதனைச் சாம்பாரிலிட்டு உண்ணத் தேகத்தின் வறட்சியை மாற்றும், விந்தூறும், கப தேகிகளுக்கு ஜீரண சக்தியைக் குறைக்கும். ஆகையால் கப தேகிகளுக்கு ஆகாது. இதனை லேகியமாகச் செய்துகொடுக்கத் தேக புஷ்டியை யும் தாதுவிருத்தியையும் உண்டாக்கும். எங்ஙனமெனில்—

கூஷ்பாண்ட லேகியம்

கலியாணப்பூசினிக்காயை மேற்றோல் சீவி அறிந்து உள்ளிருக்கப் பட்ட விதைகளைப் போக்கிக் கல்லுரலில் போட்டுப் பூணில்லா உலக் கையால் இடித்துப் பிழிந்தெடுத்த சாறு படி 2, தாழை விழுதின் குறுத்துச் சாறு, இளம் தென்னம்பூவின் சாறு, எலுமிச்சம்பழத் தின் சாறு, ஆவின்பால் வகைக்கு படி ½ ஆக இவற்றை ஒரு பழ கின மட்பாண்டத்தில் சுத்தமாக வடிகட்டிவிட்டு அடுப்பிலேற்றிச் சிறுக எரித்துக் கொதிவரும் சமயம் அதில் ½ வீசை சீனி சர்க் கரையைப்போட்டு அடிக்கடித் துழாவிக்கொண்டுவந்து, திரவ மெல்லாம் சுண்டி தேன்பதம் வரும்போது சீரகம், தனியா, கோஷ்டம், மிளகு, மாசிக்காய், ஏலக்காய், சாதிக்காய், சாதிப் பத்திரி, அதிமதுரம், தாளிசப்பத்திரி வகைக்கு பலம் 1 வீதம் பொன்மேனியாக வெதுப்பி இடித்து வஸ்திரகாயம் செய்து போட் டுக் கிளறி ஆறவிட்டு லேகிய பதத்திற்குப் போதிய அளவு தேனும் நெய்யும் விட்டுப் பிசைந்து ஜாடியில் பத்திரப்படுத்துக. இந்த லேகியத்தில் வேளைக்கு 1, 1½ கழற்சிக்காய் அளவு தினம் 2 வேளை உண்ணக் காமாலை, அஸ்திசுரம், பிரமேகம், நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல் ஆகிய உள்ளூறுப்புகளின் கொதிப்பை நிவர்த்தி செய்து தேக புஷ்டியையும் தாது விருத்தியையும் விசேஷிக்கச் செய்யும்.

கலியாணமுருக்கமரம்.

(Erythrina Indica).

முள்ளு முருக்கதுதான் மோதுகின்ற சர்த்திகுன்மங்
கள்ளமறத் தீர்க்குங் கனற்சுரமும்—விள்ளரிய
அக்கரமும் போக்கு மனல்வாய்வேக் காடகற்று
மிக்க வலிகொடுக்கும் விள்.

குணம்:—(இ-ள்.) முள்முருக்கமரம் என்கிற கலியாணமுருக் கினால் வாந்தி, வயிற்றுவலி, பித்தசுரம், பித்தஜிக்வாகண்டகம்

(அதாவது அட்சரம்) ஆகிய இவற்றை நீக்கும். மிக்க வலிமையைக் கொடுக்கும் என்க.

செய்கை:—பட்டைக்கு கபஹரகாரி, சுரஹரகாரி, கிரிமி நாசினி, விரணகாரி. இலைக்கு மூத்திரவர்த்தனகாரி, இலகுமலகாரி, ருதுவர்த்தனகாரி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இது சுர ரோகத்தையும், பித்தக் கொதிப்பால் மூலாதாரம், நாபி, இருதயம், கண்டம், நாக்கு இவ்வைந்து ஸ்தானங்களில் உண்டாகின்ற விரணங்களையும் குணப்படுத்தும். இதன் துளிர் இலையை மண், தூசி முதலியவைகள் இல்லாமல் சுத்தமான சீலையால் துடைத்து உள்ளங்கையில் வைத்து நன்ருய் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் சாப்பிடலாம். இதனால் உள் விரணங்கள் குணமாகும். இதன் சாற்றைக் காதில் 2-3 துளிவிட்டுப் பஞ்சு அடைத்துவைக்க காதுவலி நீங்கும். இந்த இலையை அரைத்துக் கட்டிகளுக்குப்போட நோயை நீக்கும். இதன் பட்டையை வெட்டி வெண்மையான உள்பாகத்தில் பசுவின் நெய்யைத் தடவி விளக்கெண்ணெய் தீபத்தின்பேரில் பிடிக்க புகை கப்பும். இதைச் சிறிது நெய் விட்டுக் குழைத்து கண்களுக்கு மை தீட்டக் கண் சிவப்பு, நீர்முட்டல் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

கலியாணமுருக்கம்பூ.

(Erythrina Indica Flower).

கருப்பா சயத்திற் கறுத்துத் தடித்தே
பருத்தவுதி ரத்திரளைப் பஞ்சாய்த்—துரத்திவிடும்
பண்முருக்கு மின்பமொழிப் பாவா யுலகறிய
முண்முருக்கம் பூவை மொழி.

குணம்:—(இ-ள்.) கலியாணமுருக்கம்பூவினுல் கருப்பையிற் கட்டிய ரத்த குன்மத்தை விலக்கும் என்க.

செய்கை:—ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் புஷ்பத்தைப் பூச்சி புழுக்கள் இல்லாமல் நன்ருய்த் தட்டிச் சலத்தில் அலம்பிச் சிறிது மிளகு சேர்த்து அரைத்து 1-1½ சுண்டைக்காய் பிரமாணம் தினம் இருவேளை 5 நாள் சாப்பிடவும். இப்படி விட்டுவிட்டுச் சில தினம் சாப்பிட்டுக்கொண்டுவரக் கருப்பாசயத்தில் அதிக உஷ்ணத்தினுல்

கட்டியுள்ள உதிரக்கட்டு விலகிச் சந்தானப்பேறு உண்டாகும், குழந்தையும் நல்ல தேஜசு அடைந்திருக்கும்.

கல்தாமரை.

(Kalthamarai).

வீரியவி ருத்திதரு மெய்க்குப் பலங்கொடுக்குங்
கூரிய குஷ்டுதனைக் கோபிக்குங்—காரியத்தை
நற்றும் பரமாக்கு நங்கா யடுக்கலுறை
கற்று மரைதனைக் கா்ண்.

குணம்:—(இ-ள்.) மலையில் முளைத்த கல்தாமரை சுக்கிலத்தையும் பலத்தையும் விருத்தியாக்கும், குஷ்டரோகத்தை நீக்கும். இதுவுமல்லாமல் காரீயத்தைச் செம்பாக்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இது சாதாரணமாக கிடைக்கக்கூடிய மூலிகை அன்று, இது சில மலைப்பிரதேசங்களில் கிடைக்கும். இது உருவத்தில் சாதாரண தாமரையை ஒத்தும் சிறுத்தும், ஈரப்பாங்குள்ள மலை இடுக்குகளில் முளைத்திருக்கும். இதில் ஊசியைச் செருகி ஒரு வாரம் விட்டுவைக்கச் செருகிவைத்துள்ள பாகம் வரையில் செம்பாக மாறுதல் அடையும். அதுவே சரியான இனம் என்று கூறுவர். இதில் தாம்பிர சத்து நிறைந்திருக்கும் இதனைத் தனியாக உபயோகப்படுத்துவதில்லை. லேகிய தினுசுகளில் பூமிசர்க்கரைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு முதலியவற்றைப்போல் இதையும் ஒன்ருகச் சேர்த்துப் பாகப்படுத்திக்கொள்ள லேகியமானது தாது புஷ்டியில் விசேஷ வீரியத்தை யுண்டாக்கும். இதில் ரச வாதத் தொழில் ஆகிறதெனப் பெரியார்கள் கூறி இருக்கின்றனர். அனுபவித்தவர்களைக்கொண்டே அறிதல் வேண்டும். முயற்சித்தல்பெரும்பாலும் வீணுகும் என்பதே என் சித்தாந்தம்.

கல்லுருவிப்பூண்டு.

(Ammonia Baccifera).

கல்லுருவிப் பூண்டுபல கட்டிகளை யுங்கரைக்கும்
வல்லுதிரக் கட்டறுக்கும் வந்தபுண்ணை—வெல்லரிய
மேகத்தை வல்விடத்தை மீரு தொடுக்கிடுமு
லோகத்தைச் சுத்திசெய்யு மோர்.

குணம்:—(இ-ள்.) கல்லுருவிப்பூண்டு விரணம், ரத்தத்தடிப்பு, கிரந்தி, பிரமேகம், சர்ப்ப விஷம் இவைகளை நீக்கும். இதுவுமல்லாமல் இரும்பைச் சுத்திசெய்யும் என்க.

(இதுவுமது)

வாதமகா ரோகம் வரினுங் கறையல்கி
மீதடர வன்றிமிரே மேவுகினு—மோதரிய
சீர்மே னிலம்பரவு தெய்வ மடமயிலே
நீர்மே னெருப்பை நினை.

(இ-ள்.) நீர்மேல் நெருப்பினால் மகாவாதரோகமும் ரத்தக் குறைவால் பிறக்கின்ற திமிர்வாத நோயும் விலகும் என்க.

செய்கை:—துவக்ஸ்போடகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை மெழுகுபோல் அரைத்துக் கட்டிகளின்மீது போட ½-1 மணி நேரத்திற்குள் தோல் புண்ணாகி உடைத்துக்கொள்ளும். துர்நீர் உள்ள இடங்களில் பூசிவைக்க எரிச்சல் காணும். தாளக்கூடாத சமயம் எடுத்துவிடக் கொப்பளிக்கும். அதனைக் குத்திவிடத் துர்நீர் வெளியாகி வீக்கம் வாங்கும். இதன் பச்சையிலை அல்லது உலர்ந்த இலை, இஞ்சி இவ்விரண்டையும் சேர்த்துக் கியாழமிட்டுக் கொடுக்க முறை சுரம் போம்.

கழற்காய்.

(Caesalpinia Bonduc Nuts).

கழற்காய் விதைக்குக் கனவண்ட வாதந்
தழற்பக்கச் சூலையுடன் சாற்றுங்—கழற்காலிற்
காய்ப்பாக்கும் வீக்கங் கடுங்குன்மம் போக்குதற்கு
வாய்ப்புள தென்றே வழுத்து.

குணம்:—(இ-ள்.) கழற்காய்ப் பருப்புக்கு அண்டவாதம், பக்கச்சூலை, வாதநீரேற்றத்தினால்வந்த வீக்கம், வயிற்றுநோய் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, முறைவியாதிரோதி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் வெள்ளை, கறுப்பு, பச்சை, மஞ்சள் என நான்கு வகைகளுண்டு. அவற்றுள் கறுப்பு கழற்சிக்காயை ஆட்டுத்தோலில் முடிந்து பிரசவ வேதனைப்படுகிறவர்களின் இடது துடையிற் கட்ட உடனே பிரசவமாகும். அல்

லது அதைப் பொடிசெய்து கரி நெருப்பின்மீது தூவி பிரசவ அறையில் புகையுண்டாக்க எளிதான பிரசவத்தை யுண்டாக்கும். கருப்பிணிகள் இந்தக் கறுப்பு கழற்சிக்காயைத் துளையிட்டுச் சிகப்பு நூலில் கோத்து இடுப்பில் கட்டக் கருப்பத்தைக் காக்கும். வலது கையிற் கட்ட வெற்றியுண்டாக்கும். அதன் பருப்பை முலைப்பாலில் உரைத்து ஆண்குறியிற்றடவிப் புணரக் கர்ப்பமுண்டாகும்.

வெள்ளைக்கழற்சிக்காய்ப் பருப்பைச் சலத்தில் உரைத்துக் குடிக்க அல்லது அடிவயிறு, அரைமுதலிய ஸ்தானங்களில் தழும்ப லாக பூசிவைக்க நீரடைப்பு, கல்லடைப்பு இவைகள் நீங்கும்.

பச்சைக்கழற்சிக்காய்ப் பருப்பை முலைப்பாலில் உரைத்துக் குடிக்க இரத்தவாந்தியை நீக்கும். மஞ்சள் கழற்சிக்காய்ப் பருப் புடன் சிறிது மிளகு சேர்த்து அதன் இலைச்சாற்றால் அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து தினம் 2 வேளை உட்கொள்ளக் குடலிலுள்ள வாயுவை நீக்கும். இன்னும் இது அண்டவாயு, பக்கசூலை முதலியவைகளைப் போக்கும். இது உஷ்ண சரீரத்துக்கு ஆகாது. ஆகையால் பண்டிதர்கள் அத்தகையோர்களுக் குச் சிகிச்சை செய்யும்போது நெய், பால் இவற்றைத் தாராள மாகச் சேர்த்துக்கொள்ள வற்புறுத்துதல் அவசியமாகும். அங்ஙு னம் செய்யத்தவறின் அதிக உஷ்ணத்தை யுண்டாக்கும். இதனைக் கொண்டு குடித்தைலம் காய்ச்சுவதுமுண்டு. எங்ஙனமெனில்—

வஜ்ஜிரபீஜதைலம்.

கழற்சிக்காய்ச் செடியின் வேர்பட்டை பலம் 20, இதை நைய இடித்து ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு 9 படி சலம்விட்டு அடுப்பிலேற்றி ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடி கட்டி மறு பாண்டத்தில் விட்டுவைக்கவும். அதன்பின் 5 பலம் கழற்சிச் செடியின் கொழுந்து இலையையும் 2 பலம் அதன் கொட்டையிலுள்ள பருப்பையும் நெகிழ அரைத்து முன்பு சித்தப் படுத்தி வைத்துள்ள கியாழத்தில் போட்டுக் கரைத்து அதனுடன் ஒரு வீசை உயர்தரமான சிற்றாமணக்கெண்ணெய் விட்டு ரவியில் வைக்கவும். அப்பால் ஏலம், பறங்கிச்சக்கை, வாள்மிளகு, சன்ன இலவங்கப்பட்டை வகைக்கு பலம் ½ வீதம் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம்செய்து முன் ரவியில் வைத்துள்ள எண்ணெயில் போட்டுக் கலக்கி, அடுப்பிலேற்றி, சிறு தீயாக எரித்து வண்டல் மெழுகுபதம் வருஞ்சமயம் வடித்துக்கொள்க. அப்பால்

ஒரு கல்வத்தில் 2 பலம் ஷை எண்ணெயை விட்டு அதில் $\frac{1}{2}$ பலம் சுத்திசெய்த பூரத்தைப் போட்டு 2-3 மணி நேரம் அரைத்துச் சேதப்படாமல் வழித்து முன் சித்தப்படுத்தியுள்ள எண்ணெயில் கலந்து நன்றாய் உறவான பின் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது சீசாவை நன்றாய்க் குலுக்கிக் காலையில் தினம் ஒரு வேளை $\frac{1}{4}$-$\frac{1}{2}$ பலம் தேக திடத்திற் கேற்றவாறு 3 நாள் கொடுக்கவும். ஒரு சமயம் கொடுத்த அளவில் பேதி அதிகமானால் மறுநாள் எண்ணெய்யைக் குறைத்துக்கொள்ளவும். அப்போது பிணியாளிக்கு புளிதள்ளி இச்சாபத்தியமாக வைத்தல் நன்று. இதனால் அடிக்குடலில் சுழல்கின்ற வாயு, விரைவீக்கம் முதலியவைகள் குணமாகும்.

கழற்சியிலை.

(Caesalpinia Bonduc Leaves).

விரைவாதஞ் சூலையறும் வெட்டையன லேகு
நிரைசேர்ந்த குன்ம நிலையா—துரைசே
ரழற்சி விலகு மருந்திற் கசப்பாங்
கழற்சியிலை யென்றுரைக்குங் கால்.

குணம்:—(இ-ள்.) கசப்புள்ள கழற்சியிலையால் அண்டவாதம், சூலை, பிரமேகசுரம், பலவித குன்மம், உட்சூடு ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாக உள்ளுக்குக்கொடுப்பது இல்லை. இதனுடன் மற்றுஞ் சில சரக்குகளைக் கூட்டியே உபயோகப்படுத்துவதுண்டு. இதனைப்பற்றிக் கழற்சிக்காய் என்னும் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

இந்த இனத்தில் வெண்கழற்சி என்கிற ஒரு சாதியுண்டு அதன் கொட்டையானது சிறிது வெளுத்திருக்கும். இது சர்வ அண்டவாத ரோகங்களுக்கும் சிறந்தது. இதன் குணம் பின்வருமாறு—

வெண்கழற்சியிலை.

ஏறண்டத் தோடே யிறங்கண்ட மெத்தவுமே
வீறண்ட மெல்லாம் விலகுங்காண்—தூரண்ட
வள்ளைக் குழையடிபோம் வாள்விழிமா தேநல்ல
வெள்ளைக் கழற்சியிலை விள்.

(இ-ள்.) வெள்ளைக்கழற்சியிலை ஏறண்டரோகத்தையும், இறங்கண்ட நோயையும், தசையண்டப் பிணியையும் போக்கும் என்க.

களாக்காய்.

(Capparis Corundas Unriped Fruit).

காதுவிடாய் தாகங் கடியபித்தம் வாந்தியும்போ
மாதே யரோசகமு மாறுங்காண்—டீதா
மிரத்தபித்தம் போகு மினிய களாக்காய்க்
குரத்த பசியுமுண்டா மோர்.

குணம்:—(இ-ள்.) இன் புளிப்புள்ள களாக்காய்க்குக் காதடைப்பு, தாகம், பித்ததோஷம், வமனம், அருசி, இரத்தபித்தம் இவைகள் போம். இன்னும் இதனால் தீவிரமான பசி யுண்டாகும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—களாக்காயைச் சுத்தமாக அலம்பிச் சிறு துண்டுகளாக அரிந்து உப்பிட்டு நன்றாய்க் குலுக்கிச் சிறிது சாப்பிடப் பித்ததோஷம் நீங்கும். இதை எலுமிச்சங்காய் ஊறுகாயோடுக் கூட்டி நன்றாய் உப்பும் புளிப்பும் ஊறினபின் அன்னம் புசிக்கும்போது உபயோகப்படுத்துவதுமுண்டு. இது நாவிற்கு நல்ல ருசியையும் தீபனத்தையும் உண்டாக்கும், பித்தத்தை நீக்கும்.

களாப்பழம்.

(Capparis Corundas Fruit).

நல்ல பசியிலுண்டா னண்ணுமே சீதரத்தம்
வல்லமந் தத்திலுண்டான் மாபசியா—மெல்லப்
புரையார் களநோய்போம் போற்றுசிர நீர்போந்
தரையார் களாப்பழத்தைத் தான்.

குணம்:—(இ-ள்.) நிலக்களாப்பழத்தை மிகுபசியில் தின்றால் சீதரத்தமும் அதிமந்தத்தில் தின்றால் நல்ல பசியையும் உண்டாக்கும். தொண்டைவலியும் தலைக்கனமும் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த பழத்தை வயிற்றில் ஆகாரம் இல்லாத சமயம் சாப்பிட உஷ்ணத்தை யுண்டாக்கும். அடி வயிற்

றையும் நோகச் செய்யும். அளவு கடந்து உண்டால் இரத்தபேதி சீதபேதி முதலியவற்றை யுண்டாக்கும். ஆதலால் ஆகாரத்திற்குப் பின் சாப்பிட, உண்ட உணவைச் சீக்கிரத்தில் ஜீரண சக்திக்குக் கொண்டுவரும். இதனால் தொண்டை வலியும் சிரசிலுள்ள நீரும் நீங்கும்.

களாப்பூ.

(Capparis Corundas Flower).

கண்ணிற் படருங் கரும்படலம் வெண்படலம்
வண்ணவுதி ரப்படலம் வன்சதைக—ளெண்ணற்
களவினேய் போக்கு மணங்கே சிறிய
களவினது பூவோன்றுங் காண்.

குணம்:— (இ-ள்.) களாப்பூ நேத்திரத்திலுண்டான கரும் படலம், வெண்படலம், இரத்தப்படலம், சதைப்படலம் முதலிய ரோகங்களை விலக்கும் என்க.

உபயோகிக்கும் முறை :—இந்த புஷ்பத்தைச் சுத்தமாக ஆய்ந்து நல்லெண்ணெயிலிட்டு சூரிய புடம் சில தினம் வைத்துப் புஷ்பமெல்லாம் நீர் சுண்டி மிதக்கும் சமயம் வடித்துச் சீசாவில் அடைத்துவைத்துகொள்க. வேண்டும்போது கண்களில் 2 துளி விடக் கண்களிலிருந்து வெப்புநீர் வடியும். கண்களைமாத்திரம் அடிக்கடித் திறந்துதிறந்து விடவேண்டும். கண்களில் மண்ணைக் கொட்டியதுபோல் உணர்ச்சி யுண்டாகும். அப்போது கையை வைத்துத் தேய்த்துவிடக் கூடாது. வேண்டுமாயின் தாளக்கூடாத சமயத்தில் ஒரு சுத்தமான சீலையைப் பந்துபோல் திரட்டி வாயினிடமாக வைத்து உள்ளாவிதாக்க ஊதிக் கண்களுக்கு அடிக்கடி ஒற்றடம் கொடுக்க எரிச்சல் தணிந்துவிடும். எவ்வளவுக் கெவ்வளவு கண்களைத் திறந்துதிறந்து சலம் வடிய விடுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு எரிச்சல் தணிவதுடன் முற்கூறப்பட்ட ரோகங்களும் போம்.

களாவேர்.

(Capparis Corundas Root).

விடத்துறுநோய் பித்தமைய வேர்வையதி தாகந்
திடத்தவுதி ரத்தினது சிக்கற்—சடத்துளெழு
மக்கினி மாந்தமிவை யண்டா தொருநாளுஞ்
சிக்கெனக்க ளாவேரைச் சேர்.

குணம்:—(இ-ள்.) களாவேரினல் விஷசம்பவரோகம், பித்தம், கபாதிக்கம், கபவியர்வை, விதாகம், பிரசவ அழுக்கு, மந்தாக்கினி இவை நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி, கபஹரகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேரைத் தனியாகக் கியாழமிட்டுக் கொடுப்பதில்லை. இதற்குப் பித்தத்தை சாந்தப்படுத்தக் கூடிய குணமுண்டு. ஆகையால் பித்தசுரம் முதலியவற்றிற்குக் கியாழம் இடும் சரக்குகளில் ஒன்ருகச் சேர்த்துக்கொடுக்க அதிக குணத்தையுண்டாக்கும்.

களிப்பாக்கு.

(Areca Catechu Boiled).

களிப்பாக்குத் தின்றக்காற் கண்டத்துட் கோழை
யொளிப்பாகக் கட்டுமிஃ துண்மை—தளிர்ப்பான
பித்த வரோசகம்போம் பேதிமிக வுண்டாகுஞ்
சித்த மகிழ்ச்சியுறுஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) களிப்பாக்கைத் தின்ருல் நெஞ்சிற் கோழையும், அதிசாரமும், மனமகிழ்ச்சியும், உண்டாகும். பித்த அருசி ஒழியும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரணமாக வெற்றிலை சுண்ணும்புக் கூட்டித் தாம்பூலமாக மென்று முதலில் உண்டாகும் உமிழ்நீரை வெளிப்படுத்திவிட்டுப் பின்னர் அருந்த மனமகிழ்ச்சியையும் தேகஆரோக்கியத்தையும் உண்டாக்கும். சிலர் வெறும் களிப்பாக்கை வாயிலிட்டுச் சுவைப்பதுண்டு. இதனல் மார்பில் கோழைக்கட்டும். அதிகமாகத் தின்ன அப்பியாசம் செய்யின் மலப்போக்கையும் உண்டாக்கும்.

களிப்பாக்கு, கருவேப்பிலை, வெல்லம் இவைகளைச் சமனெடையாக அரைத்து வெட்டுக்காயங்களில் வெட்டுப்பட்ட சதையை ஒருங்கு சேர்த்து இதை மேற்றடவிக் கட்ட விரைவில் சீழ் பிடிக்காமல் ஆறும்.

கள்ளிமரப்பட்டை.

(Euphorbia Tirucalli Bank).

நரம்புச் சிலந்தி நளிர்வாத சந்நி
யுரம்பெரிய வாதமிவை யோடும்—பெரும்புவியிற்
கள்ளிமரப் பட்டைதனைக் காணின் மடமயிலே
விள்ளுவதோன் றுண்டோ விளம்பு.

குணம்:—(இ-ள்.) கள்ளிமரப்பட்டையினுல் நரம்புச் சிலந்தியும், கபவாத தொந்த சந்நிபாதமும் வாதப்பிரகோபமும் நீங்கும் என்க.

செய்கை:—பாலுக்கு—சிறிய அளவில் மலகாரி, அதிக அளவில் வமனகாரி, பட்டைக்கு—உள்ளுக்கு மலகாரி, மேலுக்கு தாதுக்ஷீண ரோதி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டையை சலம் விட்டு அரைத்து நரம்புச்சிலந்திக்கு வைத்துக்கட்ட நாளுக்கு நாள் கெடுதல் அடைந்துள்ள நரம்பு வெளியாகிச் சிலந்தியும் ஆறும். இதனைப் பாகப்படி கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுக்கப் பேதியாகும். வாத ரோகமும், கபவாததொந்த சந்நிபாதமும் குணமாகும். இந்தப் பட்டையை அரைத்து எலும்பு முறிவுகளுக்கு மேல் வைத்துக்கட்டக் குணமாகும். இதன் பாலைத் தேள் கொட்டின இடத்தில் தழும்ப பூச விஷமிறங்கும். உடனே சலம் விட்டு அலம்பிவிடுதல் நன்று. இதன் பாலைச் சிறிது பஞ்சியில் நனைத்துச் சொத்தைப் பல்லில்வைக்க வலி நீங்கும். எரிச்சல் மிகுந்தபோது பஞ்சை எடுத்து விட்டுச் சிறிது தேங்காய் எண்ணெயைத் தளரவிடவும், இன்னும் இதன் பாலை நாய், எலி, பூனை முதலியவைகள் கடித்த இடத்தில் தழும்பப்பூசிப் புண்ணுக்கிவிட அக்கடியால் உண்டான விஷநீரை வெளியாக்கி விடும். இதன் பாலைத் தேக திடத்திற்கு ஏற்றவாறு 4 அல்லது 5 துளி வெண்ணெயுடன் கலந்து உள்ளுக்குக் கொடுக்கப்பேதியாகும், இதனுல் மண்ணீரல் சம்பந்தமான வியாதிகள் குணமாகும். இதன் பாலைக் கீல்களில் உண்டான வீக்கம், வலி, முடக்கு முதலியவற்றிற்குப் பூசி அம்மரத்தின் அடிபாகத்திலுள்ள மண்ணை மேற்றாவி வைக்கக் குணமாகும். எப்பொழுது தோல் சிவந்து எரிச்சல் அதிகரிக்கின்றதோ அத்தருணம் சுத்தமாக சலம் விட்டு அலம்பி ஈரமில்லாமல் வஸ்திரத்தால் துடைத்துத் தேங்காய் எண்ணெயைத்தடவி விடவும். ஒருகால் கொப்பளம் உண்டாயினும் குற்றமில்லை. கெட்ட நீர் வெளியாகி விரைவில் குணமாகும்.

கள்ளிமரம்.

(Euphorbia Tirucalli).

வாதக் குடைச்சலறும் வல்லீளைக் காசமறும்
ஓதக் கணுச்சூலை யோடிப்போம்—பாதகமாய்த்
தள்ளிக் குடலிறங்கும் சாரண்ட வாதமறும்
கள்ளிமரக் கொம்பதனுல் காண்.

குணம்:—(இ-ள்.) கள்ளிமரத்தின் கொம்புகளால் வாதத்தாலுண்டான குடைச்சல், சுவாசகாசம், சூலைப்பிடிப்பு, குடல்வாதம் அண்டவாதம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மரத்திலுள்ள இளங்கொம்புகளின் நுனியிலுள்ள கொழுந்திலையை அவ்விளந்தண்டுடன் சிறிது சேரக் கிள்ளிச் சேகரப்படுத்தி அதனுடன் இரண்டொரு மிளகு கூட்டி நெகிழ அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் ஒரு வேளை 3 அல்லது 5 நாள் கொடுக்கச் சுவாசகாசம், இரைப்பு இவைகள்போம். இந்தக் கற்கத்தைக் கொடுக்கும்போது இயற்கைக்கு மீறி இரண்டொரு முறை அதிகமாக மலம்போகுதல் வேண்டும். அங்ஙனம் இல்லையென்று உணரின் மறுநாள் சிறிது அளவை அதிகப்படுத்திக் கொடுத்தல் நன்று. ஒரு சமயம் கொடுத்த அளவில் மலப்போக்கு அதிகப்படின் கற்கத்தின் அளவில் சிறிது குறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இதன் கொம்புகளைக் கரிநெருப்பனலில் சிறிது வாட்டிக் கசக்கி பிழிந்து எடுத்த சாற்றை வடிகட்டி ஏறத்தாழ $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ தேக்கரண்டியளவில் $\frac{1}{2}$ அரிசியெடை கஸ்தூரியையும், 1 அரிசியெடை கோரோசனத்தையும் உறவாகும்படி உரைத்துக் கலக்கிப் பிறந்த குழந்தைகளுக்குத் தினம் 1 அல்லது 2 வேளை கொடுப்பதுண்டு. இதனால் வயிற்றிலுள்ள காட்டுமலம் என்று சொல்லப்பட்ட பழையமலம் வெளியாகும். இன்னும் குழந்தைகட்கு அதிக சீதளத்தினால் காணுகின்ற கருஞ்செவ்வாப்பு, செஞ்செவ்வாப்பு முதலியவைகள் குணமாகும். சாதாரணமாகக் குழந்தைகளுக்கு காணும் கக்குவாயிருமல், கோழைக்கட்டு, வயிற்றுப்பிசம் முதலிய வற்றிற்கும் இது சிறந்ததாகும். இந்தக் கள்ளிமரத்தில் இரண்டு மூன்று விரல் நுழையும்படியான துவாரமிட்டு அதில் கெட்டிமிளகையாவது அல்லது மொட்டு நீக்கிய கிராம்பையாவது போட்டு அதிலிருந்து எடுத்த சக்கையைக்கொண்டே சந்தில்லாமல் அடைத்துச் சாணம் பூசி 21-நாள் சென்றபின் உள்ளிருக்கும் சரக்கை எடுத்து வெய்யிலில் காயவைத்து பத்திரப்படுத்துவதுண்டு. காலை நேரத்தில் இரண்டு மூன்று மிளகையாவது அல்லது கிராம்பையாவது வெற்றிலையில் வைத்து மென்று தின்னும்படி கொடுக்கச் சுகமாக 3 அல்லது 4 முறை பேதியாகும். ஒருகால் சரிவர பேதியாகாவிட்டால் மறுநாள்

அளவைச் சிறிது அதிகப்படுத்தியும், பேதி அதிகமானால்அளவைச் சிறிது குறைத்தும் கொடுத்தல் வேண்டும். இதனால் வயிற்றிலுள்ள வாயுசம்பந்தமான பொருமல், வலி முதலியவைச் சாந்தப்படுவது மல்லாமல் பசிதீபனம் உண்டாகும்.

கள்ளிமுளையான்.

(Stapelia Virgata).

வாய்க்குப் புளித்திருக்கும் வன்பசியை யுண்டாக்கு
மேய்க்குமுடல் வாதத்தை யேறுபித்தஞ்—சாய்க்குந்
தெள்ளிய வின்பமொழித் தெய்வ மடவனமே !
கள்ளிமுளை யானருந்திக் காண்.

குணம்:—(இ-ள்.) புளிப்புச்சுவையுள்ள கள்ளிமுளையான் தீபனத்தை யுண்டாக்கும், வாத விகுணத்தையும் பித்த தோஷத்தையும் மாற்றும் என்க.

செய்கை:—மலகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பறித்துத் தின்ன வாய்க்குப் புளிப்புச் சுவையோடு இதமாக இருப்பதுடன் தீபனத்தை யுண்டாக்கி பித்தத்தைத் தணிக்கும். இன்னும் இதனைத் துவையலாகச் செய்து உபயோகப்படுத்துவது வீட்டு வழக்கம்.

கறிமுள்ளி.

(Solanum Indicum).

இளை யிரும லிரைப்புச் சுவாசமறும்
வாளைவென்ற கண்ணாய் ! வழுத்தக்கேள்—நாளையென்
றில்லைக் கபச்சுரம தின்றே விலகிடுநங்
கோல்லைக் கறிமுள்ளி கொள்.

குணம்:—(இ-ள்.) கறிமுள்ளியினால் நெஞ்சிற் கோழைக்கட்டு, காசம், தமகசுவாசம், சிலேஷ்மசுரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

(இதுவுமது)

வாதபித்த வையத்தை மாற்று மனற்போக்கு
மோது சுவாசத்தை யோட்டுங்காண்—பூதலத்துட்
டுள்ளிப்பாய் கெண்டைவிழித் தோகாய்கேள் ! எப்போதும்
முள்ளிக்காய் செய்யும் முறை.

(இ-ள்.) கறிக்குதவா நின்ற முள்ளிக்காயானது வாதபித்த கபதோஷங்கள், சுரம், சுவாசரோகம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சமூலத்திற்கு—சங்கோசனகாரி, காமவிர்த்தினி. வேருக்கு—கபஹரகாரி, உற்சாககாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேத காரி.

உபயோகிக்கும் முறை:—இப்பூண்டு அடர்ந்த முள்ளுக ளுடன், நீண்ட இலைகளை உடையதாய்த் தரையில் படர்ந்து இருக்கும். இதன் பூ நீலவர்ணமாகவும், காய் பெருங்கழற்சிக் கொட்டைப் பிரமாணமாகப் பச்சை நிறமாகவும் இருக்கும். இது விசேஷமாகத் தானகவே எங்கும் பயிராகின்றது. இந்த இனத்தில் வெள்ளைப்பூவையுடைய செடி அருமையாகக் கிடைக்கும். இதற் குப் பப்ரமுள்ளி அல்லது பாப்பாரமுள்ளி எனக் கூறுவர். இத் தகைய பூண்டைச் சாதாரணமாகப் பொதுஜனங்கள் கண்டங்கத் தரி என்று கூறுவர். இந்தக் கறிமுள்ளிக்கும், கண்டங்கத்தரிக்கும் ஏறத்தாழச் சிற்சில ஒற்றுமைக் குணங்களிருந்தபோதிலும், வைத் திய நூல்களிற் கூறப்பட்ட விதிப்படி, அந்தந்தப் பிரயோகங்களில், அந்தந்த இனத்தைக் கூட்டிக்கொள்வது, பண்டிதர்கள் கடமை யாகும்.

இந்த இலையின் சுரசத்தைத் தேகதிடத்துக்கேற்றவாறு, வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அவுன்ஸ் அளவிற்குச் சிறிது தேன்கூட்டித் தினம் மூன்று வேளை கொடுப்பதுண்டு. இது சுவாசகாச ரோகத்தில் மிகுந்துள்ள கபத்தை எளிதில் கரைக்கும். இன்னும் இதன் சமூ லத்தை முறைப்படிக் கியாழமிட்டு, வேளைக்கு $1\text{-}1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்திற்கொருமுறை கொடுத்துவர மூத்திரத் தடை, மூத்திர எரிச்சல், காசம், சுரம் முதலியவைகள் குணமா கும்.

இதன் விதையைக் காய்ந்த பூவரசன் இலையில் வைத்துச் சுருட்டிச் சுருட்டைப்போல் கொளுத்திப் புகையை இழுத்து வெளியே விடுவதினாலாவது, அல்லது கரிநெருப்பின்பேரில் விதை யைத் தூவி அதிலிருந்து கிளம்பும் புகையை வாயினிடமாகப் பிடித்து வெளியே விடுவதினாலாவது, பற்களினிடையிலுள்ள புழுக் கள் வெளியாகி உபத்திரவம் நீங்கும்.

கறுப்புப்பூலா.

(Phyllanthus Reticulatus).

காட்டமதில் வீரியமாங் காணவிலே மூலரத்த
வோட்ட மறிக்கு முதிருமுளைக்—கூட்டமெழச்
சித்தம்வைக்கி லவ்வண்ணஞ் செய்யுங் கருங்கனிதா
னத்தமுற்ற பூலாவி லாம்.

குணம்:—(இ-ள்.) கறுப்புப்பூலாங் குச்சியினால் பற்றுலக்கில் வீரிய விருத்தியுண்டாம், இலை மூலாரத்தப் பெருக்கத்தைத் தடுக்கும், பழம் உதிருகின்ற ரோமங்களை உதிரவொட்டாமற் செய்யும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் குச்சியினால் பற்றுலக்கிவரப் பல்லீற்றிலிருந்து இரத்தம் வருதல், பல் அசைவு முதலியவைகள் நீங்கும், தாது பலப்படும். இதன் இலைச்சாற்றைத் தினம் 2 வேளை $\frac{1}{4}$ அவுன்ஸ் வீதம் உட்கொள்ள இரத்த மூலம் நீங்கும். இதன் வேர்ப்பட்டையில் 2 பலம் ஒன்றிரண்டாக இடித்து ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம்விட்டு அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வாய் கொப்பளிக்கப் பல்லீற்றிலிருந்து சொரிகின்ற இரத்தம் நிற்கும். இந்தக் கியாழத்தில் வேளைக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளையுட்கொள்ள இரத்தமூலம், இடுப்புவலி, கைகால் சந்துக்களின் வலி தீரும். இதன் பழத்தைக் கூந்தலுக்கு உரித்தான தைலங்களில் சேர்ப்பதுண்டு. எங்ஙனமெனில்—

கறுப்புப்பூலாத் தைலம்.

ஒரு பெரிய தேங்காயைக் கொண்டுவந்து குடுமியை நீக்கிக் கண் திறந்து உள்ளிருக்கப்பட்ட சலத்தைப் போக்கி அதற்குள் $\frac{3}{4}$ பாகம் நிறையும்படியாக இதன் பழத்தைப் போட்டு மூங்கிற் குச்சியால் வாயடைத்து, அதன்மேல் துணி சுற்றி பூமியில் 20-30 நாள் புதைத்து வைத்தெடுத்து உடைத்து ஓடு நீக்கி உள்ளிருக்கப்பட்ட தேங்காயையும் பழத்தையும் ஒருங்குசேர்த்து அம்மியில் வைத்து அரைத்து $\frac{1}{2}$ வீசை தேங்காயெண்ணெயில் போட்டுக் கலக்கிப் பதமுறக்காய்ச்சி வடித்து எடுத்துக்கொள்க. இதனைத் தினந்தோறும் கூந்தலுக்குத் தடவி வாரிவரக் கூந்தலானது அளவுக்கு மிஞ்சி வளரும். இன்னும் இந்தத் தைலமானது மூளைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். கண்களின் எரிச்சலை நீக்கும்.

கற்கண்டு.

(Sugarcandy).

இறின் தடிப்பு மிருமலும்பல் வாந்திகளுஞ்
சீறுகப முட்டினமுஞ் சேராதே—தேறியநற்
சொற்கண் டிளங்குயில்கள் சூழு மடவனமே
கற்கண் டெனவுரைக்குங் கால்.

குணம்:—(இ-ள்.) கற்கண்டினால் பல்லரணை, காசம், பற்பல சர்த்தி, அதிகரித்த சிலேத்துமதோஷம், வெப்பம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—கற்கண்டுப் பொடியைப் பல்லீற்றி லுண்டாகும் நீர்ச்சுரப்பிற்கு வைத்து அழுத்தத் துர்நீர் வெளியாகி வீக்கம் குறையும், அல்லது பற்பொடியில்கலந்து உபயோகப்படுத்த மிகுதியான குணத்தை யுண்டாக்கும். இதைக் காய்ச்சிய பாலில் போட்டுச் சாப்பிடக் கபத்தை அறுக்கும். இதனைச் சூரணங்களு டன் கலந்து சாப்பிட மருந்தினாலுண்டான அருசியைப் போக்கும். இது இருதயத்திற்குப் பலத்தைக்கொடுக்கும். சர்பத், லேகியம் முதலியவற்றைச் செய்வதற்குச் சர்க்கரைக்குப் பதிலாக இதைச் சேர்த்துக்கொள்ளுதல் அதிக நன்மையைத் தரும்.

ஒரு புதிய கோழிமுட்டையினுடைய வெண்கருவை ஒரு தட்டையான கோப்பையில் விட்டுக் கரிநெருப்பனலின்மீது வைத்து ஈரம்சுண்டி அப்பம்போல் வேகும்படியாகவும் தீயாமலும் இருக்கும் படி புரட்டிப் புரட்டிக் கொடுத்து எடுத்து ஆறவிட்டு உளுந்தளவாக அரிந்து அதனுடன் ஒரு தோலா கற்கண்டு சூரணம் கூட்டிப் பிசரி பனியில்வைக்க ஜெயநீர் தேன்போல் ஆகும். வடித்துப் புட்டியில் பத்திரப்படுத்துக. கண்களில் ஒவ்வொரு துளி விட்டுக்கொண்டு வர கண்வியாதி பல போம். ஒளியுண்டாகும்.

கற்பாசி.

(Parmelia Perlata).

பண்டைமே கத்தைப் பறக்கடிக்கும் பேதிகட்டு
மண்டையெரி வாசனையி லாருங்காண்—தொண்டைக்
கனிக்குமெழி லூட்டுமிதழ்க் காரிகையே! காரரற்
சனிக்குமொரு கற்பாசி தான்.

குணம்:—(இ-ள்.) மழையாற் பிறந்த கற்பாசி நீடித்த மேகத்தையும் அதிசாரத்தையும் நீக்கும். வாசனைத் திரவியங்களிலொன்முகப் பொருந்தும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது கல்லின்பேரில் படருகின்ற பாசி. சிறுநீர் இறங்காமல் அடிவயிறு கனத்துக் கஷ்டப்படுங்காலத்தில், அடிவயிற்றுக்கு முதலில் வெந்நீர் ஒற்றடம் கொடுத்து பின்னர் இதனை வேகவைத்து உரலிலிட்டு இடித்து அடிவயிற்றில் வைத்துக்கட்ட ½ மணி நேரத்திற்குள் சிறுநீர் தாராளமாக இறங்கும். இந்தச் சரக்கை சிலகாலத்திற்குமுன் மதுமேகம், அதிசாரபேதி சீதபேதி இவைகட்கு உபயோகப்படுத்தி வந்திருக்கின்றனர். தற்சமயம் தள்ளப்பட்டிருக்கின்றது. இதனை விசேஷமாகச் சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள் இவைகளுடன் சேர்த்தரைத்துத் தலைவலிக்கு மேற்பற்று போடுவதுண்டு. இதனால் வலி உடனே நீங்கும். இன்னும் இதனை சுகந்தப்பொடியில் சேர்ப்பதுண்டு. அதாவது—

ஜகன்மோசனப் பொடி

கற்பாசி, கஸ்தூரிமஞ்சள், கசகசா, கோரைக்கிழங்கு, சீமைகிச்சிலிக்கிழங்கு, கார்போகஅரிசி, சந்தனத்தூள், வெட்டிவேர், குருவிவேர், அகில், தேவதாரு, ரேடிமுத்து, கௌலா, சாம்பிராணி வகைக்கு பலம் 1, இடித்துச் சூரணம் செய்து ¼ படி பச்சைப் பயறு மாவுடன் கலந்து தினம் மேற்றேய்த்து ஸ்நானஞ்செய்ய படை, சொறி, சிரங்கு போம்.

கற்பூரமணி.

(Succinum or Karubha).

நெஞ்சுத் துடிப்போடு நீங்காக் கபம்வாந்தி
அஞ்சுங்கா மாலை யழல்வீக்கம்—மிஞ்சாவாம்
தாயகஞ்சேர் மூளைக்குந் தக்கபலஞ் சேர்ந்திடுமாம்
ஆயகற் பூரமணி யால்.

குணம்:—(இ-ள்.) கற்பூரமணியால் மார்புதுடிப்பு, க்ஷயம், வாந்தி, காமாலை, மேகசுரம், வீக்கம் முதலியவைகள் நீங்கும். இன்னும் மூளைக்கு நல்ல பலமுண்டாகும் என்க.

செய்கை:—சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இது வெண்மை நிறத்தில் சிறிது மஞ்சள் அல்லது சிவப்பு கலந்த விதமாக இருக்கும். இதை மணி

போல் தேய்த்துத் துளையிட்டு வெளிநாடுகளிலிருந்து அனுப்புவதுண்டு. இதனை மகம்மதியர்கள் "கஹரூபா" எனக்கூறுவர். இதன் பொருளாவது துரும்பு, செத்தை முதலியவற்றைத் தன்னளவில் இழுக்கும்படியான சக்தியுடைய தென்பதாம். அதாவது ஒரு மடிப்புள்ள துணியின்பேரில் இந்த மணியை 15-20 முறை கையோயாமல் சூடுபிறக்கத் தேய்த்து வைக்கோல், துரும்பு இவைகளின் சமீபம் இந்த மணியைக் காட்ட, காந்தம் எப்படி இரும்புத்துண்டை இழுக்கின்றதோ அப்படி இந்த மணி துரும்பை இழுக்கவல்லது. அப்படிக் குணமுடையதே அசல் சரக்கென்று நிதானிக்கவேண்டும். இந்த மணியைக் கோர்வையாகக் கழுத்தில் கட்டிக்கொள்ள நெஞ்சுத்துடிப்பு, வீக்கம், மஞ்சள்காமாலை முதலியவற்றை நீக்கும். இதனைப் பாகப்படி உள்ளுக்குக் கொடுக்க மேற்கூறப்பட்ட நோய்களுடன் க்ஷயம், இரத்தபித்தரோகம், மேகசுரம் முதலியவைகள் போம்.

அசல் கற்பூரமணியை இடித்துத் தூள்செய்து ஒரு கல்வத்தில் போட்டு உயர்தரமான பன்னீரைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுத் தினம் ஒன்றுக்கு 2 சாமத்திற்குக் குறையாமல் 7-9 நாள் அரைத்து மெழுகு பதத்தில் இரண்டு மூன்று குன்றி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் 2-3 வேளை அரை ஆழாக்குக் காய்ச்சிய பசுவின்பாலில் பொடிசெய்துபோட்டு நன்றாய்க் கலக்கிக் கொடுத்துவர மேகசுரம், இரத்தவாந்தி, காமாலை, இருதயதுடிப்பு, ஞாபகசக்தியின்மை, இவைகள் போம்.

இன்னும் இதனை இதரச்சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன:—

க்ஷய நிவாரண மாத்திரை

* நஞ்சுமுறிச்சான்கல் தோலா 1, பவழம் தோலா 1, கெட்டி முத்து அல்லது முத்துசிப்பி தோலா 1, கற்பூரமணி தோலா 1, நண்டுமேல்ஓடு பற்பம் தோலா 1, சீமை பூங்காவிக்கல் தோலா 1, படிகாரம் தோலா 1, மூங்கிலுப்பு தோலா 1, ஏலரிசி தோலா 1, சீந்தல்சர்க்கரை தோலா 1, பச்சைக்கற்பூரம் தோலா $\frac{1}{8}$, அபினி தோலா $\frac{1}{8}$. இங்கு கூறப்பட்டுள்ள சரக்குகளில் அபினியைப் படிகாரத்தூளின் இடையில்வைத்துப் பொரித்து எடுத்துக்கொண்டு மற்

* இதனை மகம்மதியர் ஜகர்-மொகரையே-கத்தாயி எனக் கூறுவர். இதன் விபரம் தாதுஜீவவர்க்கத்தில் காண்க.

றச் சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்தில்போட்டு மூன்று அல்லது ஐந்துநாள் உயர்தரமான பன்னீர்விட்டு நன்றாய் அரைக்கவும். அதன்பின் தாழம்பூக் கியாழம் அல்லது தாழம்பூ தீநீர் விட்டு 5 நாள் அரைத்து, மெழுகுபதம் வரும்போது 2-3 குன்றி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இம்மாத்திரையில் வேளைக்கு ஒன்றாக தினம் இருவேளை ½ ஆழாக்குக் காய்ச்சிய பசுவின்பாலில் பொடித்துப்போட்டுக் கலக்கிக்கொடுக்க 10-15 நாளில் க்ஷயம், மேக சுரம், உள்ளுறுப்புகளில் ஏற்பட்டுள்ள விரணம், பேதி, இரத்த வாந்தி இவைகள் நீங்கும்.

கற்பூரமணி சர்பத்

நன்னாரிவேர், அத்திப்பட்டை, ஆலம்விழுதின் நுனிகள், நாக மரத்தின் சல்லிவேர், மகிழமரத்தின் பட்டை, கொட்டை கரந்தைப் பூ, கோரைக்கிழங்கு வகைக்கு பலம் 3, இவைகளைப் பஞ்சுபோல் இடித்து ஒரு பழகினமட்பாண்டத்தில் போட்டு 1½படி கொதிக்குஞ் சலம் விட்டு ஓர் இரவு ஊறவைத்து மறுநாள் பிசைந்து வடிகட்டி அதில் 1¼ வீசை சீனிகற்கண்டு பொடிசெய்துபோட்டு அடுப்பிலேற்றிச் சர்பத்பதமாகக் காய்ச்சிக் கீழிறக்கி ஆறவிட்டு அதில் முற்கூறியவண்ணம் 1½ தோலா கற்பூரமணியைப் பன்னீர்விட்டு 7 நாள் அரைத்துச் சித்தப்படுத்தியுள்ளதை போட்டுக் கலக்கிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தச் சர்பத்தில் 1-1½ தோலா எடை சுத்த சலத்தில் விளாவிக் காலை, மாலை கொடுத்துவர, குண்டிக்காய், இருதயம், மூளை இவைகளுக்குப் பலம்கொடுக்கும். உள்ளுறுப்புகளில் உண்டான விரணத்தை ஆற்றும், தேக வெப்பத்தைத் தணிக்கும்.

கஸ்தூரிமஞ்சள்.
(Curcuma Aromatica).

புண்ணுங் கரப்பானும் போகாக் கிருமிகளும்
நண்ணுமங் தாக்கினியு நாசமாம்—வண்ணமலர்த்
தோத்தே றளகமின்னே சுக்கிலமும் புந்தியுமாங்
கஸ்தூரி மஞ்சளுக்குக் காண்.

குணம்:—(இ-ள்.) கஸ்தூரிமஞ்சளுக்குப் பெருவிரணம், கரப்பான், கிருமிரோகம், அக்னிமந்தம் இவைகள் போம். வீரியமும் அறிவும் விருத்தியாம் என்க.

செய்கை:—பலகாரி, உதரவாதஹரகாரி, வேதனசாந்தினி, முறைவியாதிரோதி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாகவாவது கிச்சிலிக் கிழங்கு, சந்தனக்கட்டை, கோரைக்கிழங்கு, கசகசா முதலியவற்றுடன் கூட்டியாவது அரைத்துத் தேய்த்துக் குளிக்க, சொறி, சிரங்கு, கரப்பான் முதலியவைகள் நீங்கும். கற்றாழை நாற்றம் விலகும் இதன் தூளை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி அடிபட்ட வீக்கங்களுக்கும் நரம்பின் வலிகளுக்கும் மேற்றேய்த்துவரக் குணமாகும்.

இதன் சூரணத்தை 2-5 குன்றி எடை சர்க்கரையுடன் கலந்து தினம் 2 வேளை கொடுக்க வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். இன்னும் வயிற்றுவலி, செரியாமை குணமாகும்.

விசேஷமாக இதனைச் சுகந்த கலவைப்பொடிகளிலும் முடித் தைலங்களிலும் கூட்டுவது வழக்கம்.

காக்கட்டான்.

(Clitoria Ternatia).

ஓதும் பெரும்வயிறு மோவ்வாப் புரைக்குழலும்
தீதுமல நீர்க்கட்டுந் தீருங்காண்—வாதுரைக்கும்
மாந்தமறு முட்கிருமி மாண்டுபோம் காக்கணத்தை
மாந்தருட் கொள்ள மகிழ்ந்து.

குணம்:—(இ-ள்.) காக்கட்டானை உட்கொள்ளப் பெருவயிறு புரைக்குழல், மலசலக்கட்டு, மாந்தம், மலக்கிருமி சேர்க்கை ஆகிய இவைகள் நீங்கும் என்க.

(இதுவுமது)

மாதரால் வந்தவெட்டை வன்மேகஞ் சென்னிவலி
ஓது சுரம்விழிநோ யோடுங்காண்—பேதியோடு
மாக்கட்டாஞ் சீதமறு மாமூலி யாம்வெள்ளைக்
காக்கட்டான் வேரைக் கருது.

(இ-ள்.) மாமூலி யென்னும் காக்கட்டான் வேருக்கு வெள்ளை, பிரமேகம், தலைநோய், சுரம், கண்ணோய், ஆமம் இவை நீங்கும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, கிருமிநாசினி, அந்தர்ஸ்நிக்த காரி, மலகாரி, வமனகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றுடன் சிறிது உப்பிட்டு கரண்டியிலிட்டு கொதிக்க வைத்துத் தாளக்கூடிய சூட்டில் காது, கன்னம் முதலிய பாகங்களில் பற்றுபோடச் சயித்தியத்தாலுண்டான வீக்கம், வலி இவைகள் போம். இதன் வேர்ப்பட்டையை அரைத்துப் பிழிந்தெடுத்த சாற்றில் 2 அல்லது 3 துளி நாசியில்விட தலைவலிபோம். இன்னும் இதன் வேர்ப்பட்டையை 2 அல்லது 2½ விராகனெடை பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்குடுவையில் போட்டு 10 அவுன்ஸ் சுத்த சலம் விட்டுக் கொதிக்க வைத்து 2 மணி நேரம் சென்றபின் பிசைந்து வடிகட்டி வைத்துக் கொண்டு, வேளைக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் வீதம் மலம் போகிறவரையில் 2 மணி நேரத்திற் கொருமுறை கொடுத்து வருக. இந்த பிரயோகத்தினுல் 1 அல்லது 2 முறை மலம் தாராளமாக வெளியான சமயம் மருந்தை நிறுத்தி விடுக. இந்தக் கியாழத்தை அடுத்து 2 அல்லது 3 தினம் கொடுக்க இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்கள் குணமாகும். இதன் விதையை நெய்விட்டு வறுத்துப் பொடிசெய்து 15-20 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டி உள்ளுக்குக் கொடுக்க நல்ல பேதியாகும். இதற்கு சாதாரண நேர்வாளத்தைவிட அதிகமாகப் பேதியாகின்ற குணமுண்டு. இதனுல் தேகத்திலுள்ள துர்நீர் வெளியாகிப் பெரும்வயிறு, புரைக்குழல் முதலியவைகள் போம். 1-2-3 விதையை முலைப்பாலில் ஊறவைத்து நெகிழ அரைத்து முலைப்பாலில் கலக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்க நன்முய்ப் பேதியாகும். மாந்தம், சுரம், இருமல் முதலியவைகள் போம். இதன் வேர்பட்டையை மாத்திரைகளில் கூட்டி குழந்தைகட்குப் பிரயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

காக்கட்டான் மாத்திரை

காக்கட்டான்வேர்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், கெந்தகம், ரசம் வகைக்கு விராகனெடை 1, இவற்றுள் ரசத்தையும் கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு நன்முய் அரைத்துக் கறுப்பு நிறமாக மாறியபின் மற்ற சரக்குகளை இடித்துச் சூரணம் செய்துபோட்டு அதனுடன் சுத்தி செய்த வாளம் விராகனெடை 6, கூட்டி கரிசனுங்கண்ணி இலைச்சாற்முல் 4 சாமம் அரைத்து உளுந்து, மிளகுப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக. வேண்டும்போது குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு 1-2 மாத்திரை

முலைப்பாலிலேனும் வெந்நீரிலேனும் கொடுக்க $1\frac{1}{2}$ மணி நேரத்திற்குள் விரேசனமாகி சுரம், மாந்தம் முதலிய பிணிகள் நீங்கும்.

குறிப்பு:—இங்குக் கூறப்பட்டுள்ள பிரயோகங்கள் யாவும் வெள்ளைக் காக்கட்டானுக்கே யாகும்.

காக்கைக்கொல்லிவிதை.

(Cocculus Suberosus Seeds).

கூவுகின்ற காக்கைதனைக் கொல்லுகின்ற வித்ததனல்
தாவுகின்ற பேன்களுமே தாமடியும்—மேவுகின்ற
புண்களுக் காகாது பூவையே யிக்குணத்தை
மண்களிக்க வென்றும் வழுத்து.

குணம்:—(இ-ள்.) காக்கைக் கொல்லி வித்தால் பேன்கள் நாசமாகும். ஆனால் புண்களுள்ள இடங்களில் பூசக்கூடாததாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த விதையானது கொடிய நஞ்சு ஆகும். இதனை உள்ளுக்குக் கொடுப்பதில்லை. இதன் பருப்பில் $2\frac{1}{2}$ விராகனெடை யளவு கல்வத்திலிட்டுப் பன்றிநெய் $1\text{-}1\frac{1}{2}$ அவுன்ஸ் விட்டரைத்துப் பேன் நிறைந்துள்ள கூந்தலில் தடவப் பேன்கள் மடிந்துபோம். பிறகு எண்ணெயிட்டுச் சிகைக்காய்கொண்டு தேய்த்து ஸ்நானம் செய்யவும். அப்போது வடியும் சலம் கண்களில் படா வண்ணம் ஜாக்கிரதையாக மூடிக்கொண்டிருந்து பின்னால் திறந்து கொள்க. தலையிலாவது அல்லது சரீரத்தில் எந்த பாகத்திலாவது புண், சொரி, சிரங்குகள் இருக்கும்போது இத்தகைய சிகிச்சை செய்யக்கூடாது. ஏனெனில் இந்தக் காக்கைக்கொல்லியின் விஷமானது புண்களில் பட்டால் இரத்தத்தை விஷமிக்கச் செய்யும்.

காசாமரப்பட்டை.

(Memecylon Tinctorium Bark).

வெப்பமிகும் நீர்க்கடுப்பு வெட்டை பிரமேகம்
செப்பவொணு பேதியுடன் சீதமுமே—எப்பொழுதும்
காசா மரப்பட்டை காசியினியில் நீக்கிவிடும்
கூசாம லெல்லோர்க்குங் கூறு.

குணம்:—(இ-ள்.) காசாமரப்பட்டையால் உஷ்ணத்தினாலுண்டான நீர்ச்சுருக்கு, வெள்ளை, பிரமேகம், பேதி, சீதபேதி முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை ஒன்றிரண்டாய் இடித்து, 1-பலம் அளவிற்கு ஒரு பழகின மட்குடுவையிலிட்டு ½ படி சுத்த சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை கொடுத்துவர வெள்ளை, பிரமேகம், சீதபேதி முதலியவைகள் நீங்கும்.

இதன் வேரைப் பஞ்சுபோல் இடித்து ஒரு பலம் அளவிற்கு ஒரு பழகின மட்பாண்டத்தில்போட்டு ½ படி சலம்விட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர ஸ்திரீகளுக்குக் காணுகின்ற பெரும்பாடும், குசும்பாரோக மென்னும் வெள்ளையும் குணமாகும்.

இன்னும் இதன் பட்டை, தேங்காய்திருவல், மிளகு, தேவதாருகட்டை, ஓமம் இவற்றைச் சமனெடையாக இடித்து ஒரு சீலையில் கனமாகப் பரப்பி வறுத்துச் சூடாக இருக்கும் மணலை நடுவே சிறிது போட்டு அசையாமல் முடிச்சுக்கட்டித் தாளக்கூடிய சூட்டில் கீல்களிலுண்டான வலி, வீக்கம், சதைசிதைவு முதலியவற்றிற்கு ஒற்றடம் கொடுத்துவர நோய் சாந்தப்படும்.

காசினிக்கீரை.

(Cichorium Intybus Leaves).

அத்திவெப்ப நீக்கு மடர்சோபை யைத்தொலைக்கு
மெத்தவுதி ரத்தை விளைக்குமந்த—ரத்தத்தின்
மாசினியி லச்சரத* வார்த்தையெனப் பேசுவிக்குங்-
காசினியி லக்குணத்தைக் காண். (* சரதம் = உண்மை.)

குணம்:—(இ-ள்.) காசினிக்கீரை அஸ்திதாதுகதசுரத்தையும், உதிரத்தழுக்கையும், வீக்கத்தையும் நீக்கும். ரத்தவிருத்தி செய்யும் என்க.

செய்கை:—சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பருப்புடன் சேர்த்துப் பாகப்படி கடைந்து முதல் அன்னத்திலிட்டு நெய் சேர்த்துண்ண ரத்த விருத்தியை யுண்டாக்கும். இரத்தத்திலுள்ள மாசுக்களை நீர்வழியாகப் போக்கி வீக்கம் முதலியவைகள் இருப்பினும் வாடச்

செய்யும். தேகத்திலுள்ள அதிக காங்கையை நிவர்த்திக்கும். இதனைச் சர்பத்தாகவும் தீநீராகவும் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றை 'சிகிச்சாரத்ன தீபத்தில்' காண்க.

குறிப்பு:—காசினிக்கீரை என்பது பார்வைக்கு முள்ளங்கி இலையைப்போல் சிறியதாக இருக்கும். இதனையே இங்குக் கூறப்பட்டுள்ளது. சிலர் புளிச்சக்கீரையைக் காசினிக்கீரை என்று கூறுவது வழக்கம். இது பிசகாகும்.

காசினிவிதை.

(Cichorium Intybus Seeds).

காசினிவி தைக்குக் கதித்தவ ரோசிசர்த்தி
காசினியை விட்டேகுங் காணனமே—பேசிலினும்
நீரி னதிவெப்பம் நீங்காச் சுறுக்கேரிச்சல்
சேரி னிலைதவறுஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) காசினிவிதைக்கு அருசி, வாந்தி, நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு முதலியவை நீங்கும்.

செய்கை:—சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, பித்தகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை விசேடமாக சர்பத்துக்களிலும் கியாழங்களிலும் கூட்டுவது வழக்கம். எங்ஙனமெனில்—

காசினிவிதை சர்பத்

காசினிவிதை, காசினிவேர் வகைக்கு விராகனெடை 7, கோழிக்கீரைவிதை, வெள்ளரிவிதை, முலாம்விதை வகைக்கு விராகனெடை 5 இவைகளை இடித்து ஒரு மட்பாண்டத்தில்போட்டு $1\frac{1}{2}$ படி சுத்த சலம்விட்டு அடுப்பில்வைத்து சிறுக எரித்து காலேயரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி பிசைந்து வடிகட்டி ஒரு பழகின மண் பாண்டத்தில்விட்டு 4 அவுன்ஸ் காடிநீரும், $1\frac{1}{2}$ வீசை சர்க்கரையும் கூட்டி தேன்பதமாகக் காய்ச்சிவைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தோலா வீதம் தினம் 2 வேளை சுத்த சலத்தில் விளாவி சாப்பிட்டு வர சிறுநீர் தாராளமாக இறங்கும், தேகத்திலுள்ள வீக்கம் வாடும். தாகத்தை அடக்கும், ஈரல்களில் உண்டான வண்டல்களை அகற்றும்.

காசினிக் கியாழம்

காசினி, சோம்பு, சீரகம் இவைகளின் வேரையும், வித்தையும் வகைக்கு விராகனெடை 2 வீதம் இடித்து ஒரு பழகின மட்கல

யத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளையாக சில தினம் உட்கொள்ள கீல்வாதங்கள், பாதத்திலும் கால்விரல்களிலுமுண்டாகின்ற நோவு, இசிவு இவைகள் நீங்கும். நாவிர்க்கு ருசிவேண்டுமாயின் இந்த கியாழத்தில் 1 பலம் உலர்ந்த தேன் அத்திப்பழத்தையும், $\frac{1}{2}$ பலம் உலர்ந்த திராட்சைப்பழத்தையும் கூட்டிக்கொள்ளலாம்.

காஞ்சொறி.

(Tragia Involucrata).

குற்றமிலாக் காஞ்சொறியைக் கூறுங்கால் மன்பதைக்கு
உற்றசுர வெப்பத்தை யோட்டிவிடும்—மற்றுமுள
மேகஞ் சொறிசிரங்கு மிஞ்சுகப வாதத்தை
வேகமுட னேட்டும் விரைந்து.

குணம்:—(இ-ள்.) காஞ்சொறியினால் சுரவெப்பம், மேகம், சொறிசிரங்கு, கபம், வாதம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சுவேதகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரைச் சலமாவது, துளசிச் சாறுவது விட்டு மெழுகுபோலரைத்துச் சொறி, சிரங்கு, படை, கரப்பான் இவைகளின் மேற்பூச ஆறும். இந்த வேரில் ஒரு பலம் எடுத்துப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு பழகின மட்கலயத்தில்போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்க வியர்வைவிட்டுச் சுரம் போம். இதின் வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணஞ்செய்து வேளைக்கு 5 குன்றியெடைக் காய்ச்சிய வீசம்படி வெள்ளாட்டுப்பாலில் போட்டு சிறிது கற்கண்டு தூள்கூட்டிக் கலக்கித் தினம் இருவேளை கொடுத்துவரச் சுவாசகாசம் நிவர்த்தியாகும்.

இந்த இனத்தில் சாதாரணமாகப் பச்சை நிறத்தையுடைய சிறுகாஞ்சொறி, பெருங்காஞ்சொறி யென இருவிதங்களுண்டு. இவற்றின் உபயோகமே, மேற்கூறப்பட்டதாகும். இவற்றில் இன்னும் கருப்பு, சிவப்பு, நிறப்பேதங்களுண்டு இப்பேதங்களுக்கேற்றவாறே குணவிசேஷங்களும் அமைந்திருப்பதாக ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆகவே பிணியின் வன்மை, மென்மைக்கேற்றபடி கூட்டிக்கொள்ளல் பண்டிதர்கள் கடமையாகும். அவை பின் வருமாறு:—

சிறுகாஞ்சொறிவேர்.

(Tragia Involucrata Root—Small).

சிறுகாஞ் சொறிவேர் சிலேஷ்மசுவா சத்தைக்
குறியாத முச்சுரக்கு மூத்தைச்—சொறியுங்
கரப்பான் சிறுசிரங்கைக் காலைத்தா கத்தை
யுரப்பாகச் சாடுமென வோது.

(இ-ள்.) சிறுகாஞ்சொறி வேரானது சுவாசகாசம், திரிதோஷ சுரங்கள், கரப்பான், புண், தாகம் முதலியவைகளை நீக்கும் என்க.

பெருக்காஞ்சொறிவேர்.

(Tragia Involucrata Root—Big).

காசங் சுவாசங் கபச்சுரங்க ளோடிவன
வாசஞ்செய் யும்மூர்க்குள் வாராமல்—வாசம்
பெருக்கு முலையாய்! பெருங்காஞ் சொறிவே
ரிருக்கு மெனமனத்து ளெண்ணி.

(இ-ள்.) பெருங்காஞ்சொறி வேரினால், இருமல், இறைப்பு, சீதசுரம் ஆகியவைகள்போ மென்க.

செந்தொட்டிவேர்.

(Tragia Involucrata Root—Red).

சந்து வலிவாதந் தாகஞ் சுரங்கரப்பா
னுந்துசுவா சங்கபமு மோடுங்கா—ணந்தமிகு
மிந்தொட் டியவதன வின்ப மடமயிலே
செந்தொட்டி வேராற் றெளி.

(இ-ள்.) செந்தொட்டிவேரினால் சகனுவிருத வாதரோகம் (கீல் வாதம்) விதாகம், ரூட்சை, கடுவன், இரைப்பு, கோழை ஆகியவைகள் போமென்க.

கருங்காஞ்சொறிவேர்.

(Tragia Involucrata Root—Black).

குற்றிருமல் நீரேற்றங் கோர கபரூட்சை
நித்தியவ ரோசகமு நீங்குங்காண்—ரத்ன
அருங்காஞ்சி வாய்ந்தவிடை யன்னமே! சுத்தக்
கருங்காஞ் சொறிவேரைக் கண்டு.

(இ-ள்.) கருங்காஞ்சொறிவேருக்கு பொடியிருமல், ஜல ஸ்ராவம், சிலேஷ்மருட்சை, அன்னரோகம் ஆகியவை நீங்கும் என்க.

காடி நீர்.

(Vinegar of Oryza Sativa).

பித்த மயக்கமறும் பேரவுஷ தம்முறியும்
உற்றபிணி யிற்சிலவை மோடுங்காண்—சற்றும்
வழங்கா வசீரணமும் வன்பேதி யும்போம்
பழங்காடிக் குள்ள பயன்.

குணம்:—(இ-ள்.) பழைமையாகிய காடிச்சலத்தினல் பித்த மயக்கம், சோபாரோகம் முதலிய சிற்சில ரோகங்களும் அசீரணமும் வாதாதிசாரமும் போகும். இன்னும் உயர்ந்த மருந்துகளின் வேகத்தையும்தணித்துவிடும் என்க.

செய்கை:—சீதளகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—கிரமமாக ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காடியில் 2-4 தேக்கரண்டி யளவு சலத்தில் கலந்து கொடுக்கத் தீபனத்தை அதிகப்படுத்தும்; தாகத்தை அடக்கும்; இரத்தத் தாதுவிலுள்ள குற்றங்களைக் கண்டித்து உதிரக் கொதிப்பைச் சாந்தப்படுத்துவதுடன் பித்தத்தை யடக்கும்; வயிற்றிலுள்ள சிறு கிருமிகளை நசிக்கும். இந்தக் காடியுடன் வாதுமை நெய் சேர்த்து அடித்துத் தேகத்தில் பூசச் சொறி, சிரங்கு, தினவு முதலியவைகள் போம். 2 தேக்கரண்டி யளவு காடியில் 5 கரண்டியளவு சலம் சேர்த்துக்கொடுக்க ரத்த வாந்தி, இரத்த பீநசம், அதிக வியர்வை இவைகளைப் பரிகரிக்கும். நாசி, கருப்பை, மூலம், இரணம் இவைகளிலிருந்து இரத்தம் திடீரென்று வரும்போது ஒரு சீலையில் இந்தக் காடியைத் தளர நனைத்து அந்த ஸ்தானத்தில் போட உடனே இரத்தப் பெருக்கு நிற்கும். பெருங் குடலிலிருந்து உதிரம் பெருகினல் காலதாமதம் செய்யாமல் இந்தக் காடியுடன் சலம்விட்டு விரைவில் பீச்சாங் குழலினல் ஆசனத்தில் ஏற்ற உதிரம் வருதல் நின்றுவிடும். நாட்பட்ட கண்ணோய்கட்கு இந்தக் காடியைச் சுத்தமான சீலையில் நனைத்துப் பிழிந்துவிட்டுச் சிறிது ஈரமிருக்கக் கண்களுக்கு ஒற்றடம் கொடுக்கக் குணமாகும். 3 அவுன்ஸ் காடியில் $1\frac{1}{2}$ பயிண்ட் சலம்விட்டு விளாவித் தாகத்

திற்குச் சாப்பிட்டுக்கொண்டுவர அதிகமாகக் காணுகின்ற வியர்வை நீங்கும்.

அன்னக்காடியின் விபரம்.

தை மாதத்தில் ஓர் சுபதினம் பார்த்து பெண்கள் போக்கு வரத்து இல்லாத அகன்ற வெளியில் அல்லது வாசலில் 4 படி கறுப்பு நெல்லு என்கிற கருங்குருவைப் பச்சரிசியை ஒரு புது மட்பாண்டத்தில் போட்டுப் போதிய அளவு சலம்விட்டுப் பொங்கலாகச் சமைத்துத் தூபதீபம் கொடுத்துச் சாங்க சீதளமாகும் பொருட்டு வைத்து விடுக. அப்பால் கள்ளுக்கடையில் உபயோகப்படுத்துகின்ற ஜாடியைப்போலொத்த தொன்றைக் கொண்டுவந்து வெந்நீர் விட்டு அலம்பிச் சுத்தப்படுத்தி, முன் சித்தப்படுத்தி வைத்துள்ள பொங்கலை உருண்டை உருண்டையாகப் பிடித்து, அதில் போட்டு 16 படி அளவுள்ள கொதிக்கக் காய்ச்சி ஆறவைத்துள்ள சலத்தை விட்டு வாய்க்கு மெல்லிய சீலையைக் கட்டிவைத்து விடுக.

இந்தப் பாண்டமானது தினந்தோறும் வெய்யிலிலும் பனியிலும் இருந்துக்கொண்டு வரவேண்டியது. மழையிருப்பின் ஜாடியின் வாயை அகன்ற சட்டியால் மூடிவிடவேண்டியது. தினந்தோறும், இரவியில் சுண்டு மளவிற்கு மீண்டும் கொதிக்கக் காய்ச்சியாறிய சலத்தை விட்டுக்கொண்டு வரவேண்டியது. இந்தக் காடி நாளுக்கு நாள் புளிப்பு ஏறி வரும். இப்படி 6 மாதம் வைத்துவர உயர்தரமான அன்னக்காடியாகும். வேண்டும்போது உபயோகத்திற்காகக் காடியை எடுத்துக்கொள்ளும்போது அப்போதைக்கப்போது கொதிக்கக் காய்ச்சி ஆறிய சலத்தை விட்டுக்கொண்டு வரவேண்டியது. இதற்குப் பழரசம் என்றும், 6 மாதக்காடி என்றும், சுத்த சலம் என்றும் பெரியோர் கூறி இருக்கின்றனர். இப்படி அன்னச் சாரத்தைக்கொண்டு செய்யும் காடியுமன்றி, கடலையின் சாரத்தைக் கொண்டு காடி செய்வதுமுண்டு. எங்ஙனமெனில், கடலைச்செடியில் காய் முதிர்ந்து பால்பிடிக்கும் தருணம் நல்ல மூடுபனி காலத்தில் மெல்லிய சீலையை விரித்துப்போட்டு சூரியோதயத்திற்கு முன் சீலையை பிழிந்தெடுக்க சலம் காணும். இப்படி தேவையான அளவு சேகரம் செய்து குப்பியில் விட்டுவைக்க நாளுக்குநாள் புளிப்பேறி காடியாகும். இதனைக் கடலைப்புளிப்பு என்று கூறுவர். அதன் குணமும் உபயோகிக்கும் விதமும் பின்வருமாறு.

கடலைக்காடி.

(Vinegar of Cicer Arientum).

போற்றுங் கடலைப் புளிப்பதனல் பித்தமறும்
தோற்று மிகுமந்தந் தோல்வியுறும்—கூற்றெனவே
வந்த தொருபேதி வாந்தி யுடன்விக்கல்
சோர்ந்தமிலை யென்றேடுஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) கடலைப்புளிப்பு என்கிற காடி பசி தீபனத்தை அதிகப்படுத்தும். தவிர தேக அழலையையும், அதிக தாகம், வாந்தி, விக்கல் முதலியவைகளையும் பரிகரிக்கும்.

செய்கை:—சமனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காடியை வேளைக்கு ½-1 உச்சிக்கரண்டியளவு ஒரு மிடறு சலத்துடன் விளாவிச் சாப்பிடத் தேக வெப்பம் மாறும், பித்தம் உடனே சாந்தப்படும், தீபனம் உண்டாகும். இதுவுமன்றி 6 பலம் கடலைக் காடியுடன், 15 பலம் வெள்ளைச் சர்க்கரை கூட்டி சர்பத் பதமாகக் காய்ச்சி ஒரு பிடி புதின இலையைப்போட்டு வைத்துக்கொண்டு வேளைக்கு 1 தோலா சர்பத்தில் 2 அவுன்ஸ் சலம்விட்டுக் கலக்கிச் சாப்பிட்டுவரப் பித்தம், வாந்தி இவைகள் போம்.

காட்டாத்திப்பூ.

(Bauhinia Tomentosa Flower).

உதிரக் கடுப்போ டுதிரக் கழிச்சல்
விதிரக் கடும்பேதி மேக—மெதிர்நிற்க
மாட்டா தகலும் வனச மலர்த்திருவே
காட்டாத்திப் பூவுக்குக் காண்.

குணம்:—(இ-ள்.) காட்டாத்திப்பூவுக்கு, ரத்தக்கடுப்பு, ரத்தாதிசாரம், வெளுத்த மலக்கழிச்சல், பிரமேகம் ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இது துவர்ப்புள்ள சரக்கு. தேகத்திலுள்ள வெப்பையாற்றும், பேதியைக் கட்டும், கபத்தை யறுக்கும். இதனை விசேஷமாக தனியாகக் கொடுப்பதில்லை. இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முக்கிய மருந்துகளாவன—

இலகு கங்காதரச் சூரணம்.

காட்டாத்திப்பூ பலம் 1, வில்வம்வேர் பலம் 1, கோரைக் கிழங்கு பலம் 1, வெட்பாலையரிசி பலம் 1, வெள்ளி லோத்திரப் பட்டை பலம் 1, இலவங்கப்பட்டை பலம் 1 ஆக இவற்றை இடித்துச் சூரணம் செய்து சமனெடை சர்க்கரை கூட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு $\frac{1}{2}$ தோலா வீதம் தினம் இருவேளை புளிப்பு மோரிலிட்டுச் சாப்பிட அதிசாரம், கிராணி, சீதபேதி, நீடித்த பேதி முதலியவைகள் போம்.

கிராணி கபாட சூரணம்.

காட்டாத்திப்பூ, சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, வட்ட திருப்பி, உலர்ந்த வில்வப்பழச் சதை, வெட்பாலைப்பட்டை வெட்பாலை அரிசி, உலர்ந்த மாதுளம் பழத்தின் ஓடு, சமனெடையாக இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு திரிகடி பிரமாணம் அரிசி கழுவின சலத்திலாவது சர்க்கரையிலாவது அனுபானம் செய்து தினம் 3 வேளை கொடுக்கக் கிருணி, சீதபேதி, இரத்தமூலம் இவைகள் குணமாகும்.

காட்டாத்திமரம்.

(Bauhinia Tomentosa).

அதிசார மந்தமிக வாலித்த காசம்
விதிராம் விஷமும் விலகு—மெதிரோருவர்
மூட்டாத்தீ யென்னுமதி மோகந் தருமணங்கே
காட்டாத்திக் கென்றுளத்திற் காண்.

குணம்:—(இ-ள்.) காட்டாத்தி மரத்திற்கு அதிசாரபேதி, அக்கினிமந்தம், இருமல், தாவரசங்கம விஷம் ஆகிய இவைகள் நீங்கும், இன்னும் விந்து ஊறும்.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் பட்டையைப் பஞ்சு போல் நசுக்கி ஒரு புது மட்குடுவையில் போட்டு அரைப்படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுவேளை கொடுத்துவர மண் ஈரலின் வீக்கம் குணமாகும். இன்னும் இந்தக் கியாழத்தைச் சீதபேதி, அதிசாரபேதி, அக்கினிமந்தம், குடலில் உண்டாகும் தட்டைக்கிருமிகளின் சேர்க்கை முதலியவற்றிற்குக்

கொடுத்துவர அதிக நன்மையைத்தரும். இதன் விதையைக் காடி விட்டு அரைத்து மிருகங்களால் உண்டான விஷக்கடிவாயில் தடவி வர விஷத்தை முறித்துவிடும். இதன் வித்து சூரணத்துடன் சமன் கற்கண்டு கூட்டி வேளைக்குக் கால் ரூபாய் எடை தினம் அந்திசந்தி கொடுத்துவரத் தாது விருத்தியுண்டாகும் துர்ப்பலமும் நீங்கும். இதன் பட்டையை இடித்துச் சூரணம் செய்து தட்டை அம்மி யில் வைத்து அரிசி கழுவி எடுத்த முதல் சலத்தைவிட்டு நெகிழ அரைத்துக் கட்டி, வீக்கம், கண்டமாலை முதலியவற்றிற்குப் பற்று போட விரைவில் குணமாகும். இதன் வேர்ப்பட்டையை முறைப் படி கியாழமிட்டு வாய் கொப்பளித்துவரப் பல்வலி, வாய்ப்புண் முதலியவைகள் குணமாகும்.

காட்டாமணக்கிலை.

(Jatropha Curcas Leaves).

கட்டி விரணங் கரப்பான்பி லீகமதி
கெட்டியுறு குன்மங் கிளைத்தசிரங்—கோட்டுமே
கூட்டோ டொழியுங் குவடனைய கோங்கைமின்னே!
காட்டா மணக்கிலையைக் கண்டு.

(இதுவுமது)

காட்டா மணக்காற் கபவாத சூலையுடன்
வீட்டு தலைநோய் விரிகிரந்தி—வாட்டுகின்ற
உண்மூலம் போகு முடம்புலர்த்தல் வெட்டையறுந்
திண்மூல தாதுவுமாஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) காட்டாமணக் கிலையினால் மேகக்கட்டி, புண், கரப்பான், பிலீகம், குன்மக்கட்டி, விரணங்கள், சிலேத்தும வாதக்குத்தல், சிரசுரோகம், பெரும் விரணம், கஷ்டப்படுத்துகின்ற உள்மூலம், உள்ளுருக்கி, வெள்ளை ஆகிய இவைகள் போம். இன் னும் இதனால் சுக்கில விருத்தியுண்டாம் என்க.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைச் சிறிது நெருப்பனலில் வதக்கி ஸ்தனங்களுக்கு வைத்துக்கட்டப் பால் சுரப்புண்டா கும். அல்லது ஒரு படி சுத்த சலத்தில் ஒரு பிடி கொள்ளத்தக்க காட்டாமணக்கு இலையைப்போட்டு கால் மணி நேரம் வேகவைத் துக் கீழ் இறக்கித் தாளக்கூடிய சூட்டில் சீலையைத் தோய்த்துச்

சிறிது பிழிந்து அச்சிலையை ஸ்தனங்களுக்கு ¼ மணி நேரம் ஒற்றடம் கொடுத்து அதன்பின் வெந்துள்ள இலையை வைத்துக்கட்ட விரைவில் பால் சுரப்புண்டாகும்.

இந்த இலையை விளக்கெண்ணெய் தடவி நெருப்பனலில் வதக்கிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டக் கரைந்துவிடும். அவ்விடத்திலுள்ள வலியையும் அடக்கும். இதன் இளங் குச்சியை யுடைத்துப் பற்றுலக்கப் பல்லாட்டம், பல்வலி, பல்லீற்றின் சுரப்பு, இரத்தம் சொரிதல் ஆகிய இவை குணமாகும். இதன் வித்திற்குப் பேதியை யுண்டாக்குகின்ற குணமுண்டு. இதனைத் தற்காலத்தில் வைத்தியத்திற் சிறந்த பண்டிதர்கள் இதில் வாந்தியையுண்டாக்குகின்ற சத்திருப்பதாகவும் இது சில சரீரங்களுக்கு விஷமிக்கச் செய்கிறதாகவும் கூறியிருக்கின்றனர். அத்தகைய மருந்துகளைப் பண்டிதர்கள் தேகதிடமறிந்து தக்க அளவாகக் கொடுத்தல் வேண்டும். இந்த வித்திலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயில் 10 துளியை பழச்சாறும் சர்க்கரையும் கூட்டிய பானகத்தில் விட்டுக் கொடுத்தால் ஏறத்தாழ 1 பலம் சிற்றாமணக் கெண்ணெய் கொண்டதினாலுண்டான அளவு பேதி ஆகும். இன்னும் இந்தக் காட்டாமணக்கு வித்தின் எண்ணெய்க்கு வயிற்றுவலியுடன் பேதியாகும் சுபாவமுண்டு. இந்த எண்ணெயுடன் தேங்காய் எண்ணெய் கூட்டிப் புண், சிரங்கு இவைகட்கு போட ஆறும்.

காட்டாமணக்கின்பால்.

(Jatropha Curcas Milk).

விழுமேக வெள்ளைகுன்ம மேல்விரணந் தோலி
லெழுமேருக் கட்டியிவை யெல்லாந்—தொழுதோடுங்
கூட்டா மணக்குழம்பைக் கொண்டவனக் கொங்கைமின்னே!
காட்டா மணக்கம்பாற் கண்டு.

குணம்:—(இ-ள்.) காட்டாமணக்கின் பாலால் மூத்திரத்தோடு விழுகின்ற மேகம், வெள்ளை, வயிற்றுவலி, குறிவிரணம், சருமக் கட்டி இவை நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பாலோடு சமனளவு சுத்த சலம் கூட்டி வாய்க் கொப்பளிக்க வாயிலுள்ள விரணங்கள் ஆறும். இதைச் சீலையில் தோய்த்து வெட்டுக் காயங்களின் பேரில் போட ரத்தம் வர வொட்டாமல் தடுக்கும். பின்னால் சுத்தமான பாலைச்

சீலையில்தோய்த்து அதன் பேரிலிட்டு வைக்கச் சீழ் பிடிக்காமலே ஆறும். இதன் பால் நிறைந்த வேர்பட்டையை பசுவின் பால் விட்டரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்க குட்டம், பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக் கட்டி, பெருவயிறு முதலியவைகள் நீங்கும்.

காட்டிலந்தை.

(Zizyphus Jujuba Jungle).

விறகுணுமெண் ணெய்க்கனலா மெய்யெரிவு நீங்குஞ்
சிறியவிலைக் குக்கடுப்புத் தீரும்—முறிக்கு
அழைத்திடுபித் தும்போ மதன்கனிய டைக்குத்
தழைத்திடுமிக் காட்டினிலந் தை.

குணம்:—(இ-ள்.) காட்டிலந்தை மரம் நித்தியமுங் குடிக்கின்ற குளிர்ச்சி எண்ணெய் காய்ச்சுவதற்கு விறகாகும். இலைக்குத் தேக எரிவும், கொழுந்துக்கு வயிற்றுக் கடுப்பும், பழத்தின் அடைக்குப் பித்தசாந்தமும் உண்டாம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உபயோகிக்கும் முறை சாதாரணமாக இலந்தமரம், இலந்தம் பழம் இவைகட்குக் கூறப்பட்டதேயாகும். விசேஷமாக இதன் உலர்ந்தக் கட்டையைக்கொண்டு குளிர்ச்சியான தைலங்கள் எரித்து எடுப்பதுண்டு. இத்தகைய தைலம் சரீரத்திற்கு அதிக ஆரோக்கியத்தைக் கொடுக்கத்தக்கது. இந்தக் கட்டையை அடுப்பிலிட்டு எரிக்கும்போது மற்றோர் முனையில் சலமும் தைலமுமாகக் கக்கும். இதனைச் சேதப்படாமல் வழித்தெடுத்து வெண்குட்டமுள்ள இடங்களில் பூச நிறம் மாறும். அல்லது இதன் வேரைத் துண்டு துண்டுகளாக நறுக்கி ஒரு பெரிய மட்பானையில்போட்டு முறைப்படி குழித்தைலம் வாங்கியும் உபயோகப் படுத்தலாம்.

காட்டுருள்ளி.

(Scilla Indica).

நஞ்சோடு சீதகபம் சுரடாதி ரைப்புமறும்
பஞ்சாக மூல பகந்தரம்போம்—பஞ்சணைசேர்
வீட்டுள் ளிருக்கும் வினோத மடமயிலே
காட்டுள்ளி யின்கிழங்கைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) காட்டீருள்ளி என்று கூறப்பட்ட நரிவெங்காயத்தால் சர்ப்ப விஷம், சீதளத்தாலுண்டாகிய கோழை, சுவாசம், மூலம், பவுத்திரம் முதலிய ரோகங்கள் போம் என்க.

செய்கை:—கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காடியில் அரைத்துப் பாம்பு கடித்த இடத்தில் தேய்க்க உடனே விஷம் இறங்கும். இதன் சாற்றில் கடலை மாவைப் போட்டுக் கலந்து புளிக்கவைத்து சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம், உருண்டைகளாகச் செய்து தினம் இருபோது கொடுத்துவர மகோதரம் தீரும். இந்த நரிவெங்காயத்தின் நடுவிலுள்ள நரம்பைக் காடியில் உரைத்து படைகளுக்குப் போடக் குணமாகும். ஒரு சிறிய நரிவெங்காயத்தை ஒரு சீமை அத்திப் பழத்தினுட் சொருகி ஒருநாள் தேனில் ஊறப்போட்டு அந்தப்பழத்தை அப்படியே தின்னக் குன்ம ரோகம் போம். அளவு அதிகப்படின் விஷமித்து வாந்தியையும், பேதியையும் உண்டாக்கும். குறைந்த அளவில் கபத்தை வெளியாக்கும். சிறு நீரை அதிகப்படுத்தும். இதற்கு முறிப்பு அவசியமானால் பசுவின் பாலில் செங்கல்லைக் காய்ச்சித் தோய்த்துப் பாலை மாத்திரம் உள்ளுக்குக் கொடுக்கவும்.

காட்டுக்கருணைக்கிழங்கு.

(Dracontium Polyphyllum).

மேகமணு காது வெகுதீ பனமாகுந்
தேகமதில் மூலமுளை சேராவே—போகாச்
சுரதோஷம் போங்கரப்பான் றேன்றும் வனத்திற்
பரவுகரு ணைக்கிழங்காற் பார்.

குணம்:—(இ-ள்.) காட்டுக் கருணைக்கிழங்குக்கு வாதப்பிரமேகமும், முளை மூலமும், சுரதோஷமும் போம். இன்னும் இதனால் மிகு பசியும் கரப்பானும் உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பெரும்பாலும் லேகியங்களில் கூட்டிச் செய்வதுண்டு. இதனால் மூலரோகம் குணப்படும். எங்ஙனமெனில்—

கருணைக்கிழங்கு லேகியம்.

காட்டுக் கருணைக்கிழங்கு, காராக் கருணைக்கிழங்கு, புளியரணைக் கிழங்கு, பிரண்டை, குமரிவேர், மருள்கிழங்கு, கோரைக்கிழங்கு,

விறல்கருணைக்கிழங்கு ஆக இவற்றைச் சுத்தப்படுத்தி மேற்றோல் கழிக்கவேண்டியவைகளைக் கழித்துத் தனித்தனியாக ஒவ்வொன்றையும் சிறு துண்டாக அரிந்து நன்குலர்த்தி வைத்துக்கொள்க. இவைகளுடன் கடுக்காய், சுக்கு, மாங்கொட்டைப் பருப்பு, சித்திரமூலம் வேர்பட்டை, கொன்றைப்புளி ஆக இவற்றையும் நன்குலர்த்தி ஆகமொத்தம் 13 சரக்குகளையும் வகைக்கு பலம் 2 வீதம் கல்லுரலிலிட்டு இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு வீசை பனை வெல்லத்தில் ஒரு படி சலம் விட்டுக் கரைத்து அடுப்பில் வைத்துப் பாகுபதம் வரும்போது முன் சித்தப்படுத்தியுள்ள சூரணத்தைப் போட்டுக் கிளறிப் போதிய அளவு நெய், தேன் கூட்டிப் பிசைந்து வைத்துக்கொள்க. வேளைக்கு ½ கழற்சிக் காய் பிரமாணம் அந்தி சந்தி உண்டுவர நவமூலமும் போம்.

காட்டுச்சீரகம்.

(Vernonia Anthelmintica).

கைக்கறுப்பு மாறுங் கடியமே கம்போகு
மெய்க்குத்தண் ணம்பித்தம் வீறுவாங்—கைக்கரிமாக்
கோட்டுப் பணைமுலையாய் குன்மவா தந்தோலையுங்
காட்டுநற் சீரகத்தைக் காண்.

குணம்:—(இ-ள்.) காட்டுச் சீரகத்தால் உள்ளங்கையிலுள்ள கறுப்புப்புள்ளி, பித்தமேகம், பயித்தியம், வாதகுன்மம் இவைகள் போம். குளிர்ச்சி யுண்டாம் என்க.

செய்கை:—கிரிமிநாசினி, பலகாரி, மூத்திரவர்த்தனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்குக் கால் அல்லது காலேஅரைக்கால் விராகனெடை தினம் இருவேளை 3 நாள் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் மடியும். இன்னும் இதனை வயிற்றுப்பிசம், இருமல் முதலியவற்றிற்கும் கொடுப்பதுண்டு. இந்தக் காட்டுச் சீரகமானது வெண்குட்டத்தை நிவர்த்திசெய்வதில் அதிகப் பெருமை வாய்ந்தது. இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதும் உண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன—

வெண்குட்டநிவாரணி.

காட்டுச்சீரகம் பலம் 5, உலர்ந்த துராஇலை பலம் 5 இவை இரண்டையும் நன்றாய் இடித்துச் சூரணம்செய்து கல்வத்திலிட்டு

30

வெள்ளாட்டின் பித்துநீர்விட்டு நான்கு சாமம் வீதம் 4-5 நாள் அரைத்துத் தேற்றாங் கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்கு ஒரு மாத்திரையாகத் தினம் இருபொழுது 2-3 மாத காலம் சாப்பிட நிதானமாக வெண்படைகளில் கறுப்புப் புள்ளி விழுந்து பின் பரவி சுபாவ நிறத்தை யடையும்.

வெண்குட்டலேபனம்.

நான்கு பங்கு காட்டுச் சீரகத்துடன் ஒரு பங்கு அரிதாரம் கூட்டிப் பசுவின் கோமயம்விட்டுக் குழம்பு பதமாக அரைத்து வைத்துக்கொண்டு வேண்டும்போது வெண்குட்டத்தால் வெளுத்துள்ள பாகங்களில் தடவிவர அப் பழைய நிறம் மாறிச் சுபாவ நிறத்திற்குக் கொண்டுவரும்.

பேன்மடிய லேபனம்.

காட்டுச் சீரகத்தைப் பழச்சாற்றால் அரைத்து தலையின் கூந்தலுக்குள் படும்படியாகப் பூசிவைக்கப் பேன்கள் மடியும்.

காட்டுப்பழுபாகல்.

(Momordica Dioica).

போசனமுட் செல்லும் பொருந்துபசி யுண்டாகுங்
காசபித்த வாதமிவை காணுவா—நேசமுற
வாட்டுப் படாக்கோங்கை மாதே குறிஞ்சிநிலக்
காட்டுப் பழுபாகற் காய்க்கு.

குணம்:—(இ-ள்.) மலையடுத்த காட்டுப் பழுபாகற் காய்க்கு அன்னமிறங்கலும், நல்ல பசியும் உண்டாம். பித்தகாசம், வாதம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரண பாகற்காயைப் போலவே சமைத்துண்பதுண்டு. இதனால் சரீரத்திற்கு அதிக ஆரோக்கியமுண்டு. பசிதீபனத்தை அதிகப்படுத்தும். வாயுவைக் கண்டிக்கும். அற்ப சூட்டைத் தணிக்கும். இதன் இலையை ஒரு சீலையின்பேரில் பரப்பி, மணலை வறுத்து இடையில் கொட்டி நான்கு முனையையும் ஒருமிக்கச் சேர்த்துச் சிரசிற்கு ஒற்றடம் கொடுக்கப் பயித்தியம் குணமாகும்.

காட்டுமல்லிகைவேர்.

(Jasminum Angustifolium Root).

சுரங்களோடு நாவறட்சி தொந்திமந்தம் பேதி
யுரங்கதித்த தாகமிவை யோட்டும்—வருஞ்சோரர்
தாமல்லி லோடுந் தகைமைபோ லோடிவிடுங்
காமல் லிகைவேராற் காண்.

குணம்:—(இ-ள்.) காட்டுமல்லிகைவேரினால் சர்வசுரம், நாவறட்சி, அக்கினிமந்தம், அதிசாரம், விதாகம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேர் அதிக கசப்புச் சுவையை உடையது. இதனுடன் வசம்பு கூட்டிப் பழச்சாறுவிட்டு உரைத்துப் படைகளுக்குப்போட விரைவில் ஆறும். இதைச் சாதாரணமாகச் சுரங்களுக்காகக் கூறப்பட்டுள்ள கியாழங்களில் கூட்டிக் கொடுக்க அதிக நன்மையைத் தரும்.

காட்டுமாமரம்.

(Spondias Mangifera).

உந்திவலி யோக்காளம் உற்றவணி லத்துடனே
வந்திணையும் பித்த மரோசிகத்தைச்—செந்திருவே
ஓட்டு மெனவறிஞர் உள்ளபடி யேயுரைத்தார்
காட்டுமா வின்குணத்தைக் கண்டு.

குணம்:—(இ-ள்.) காட்டுமாமரத்தால் வயிற்றுவலி, வாய்க்குமட்டல், ருசியின்மை, பித்தவாயு முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் காயைச் சட்னியாகவும் ஊறுகாயாகவும் பெண்கள் பக்குவப்படுத்துவதுண்டு. இது நாவிற்கு ருசியாக இருக்கும். இதனால் பித்த அரோசிகம், பித்தவாயு, குன்மம், வயிற்றுவலி முதலியவைகள் குணமாகும். இதன் இலையையாவது, பட்டையையாவது கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி, அதிசாரபேதி முதலியவைகள் குணமாகும்.

காட்டுமிளகு.

(Piper Aurantiacum).

**பித்த மதிகரிக்கும் பேசுநற் றீபனமும்
மெத்த வதிகரிக்கும் மெல்லியலே—இத்தரையில்
வாட்டுங் கபத்தோடு வன்கருவைத் தானழிக்கும்
காட்டுமிள குண்டவர்க்கே காண்.**

குணம்:—(இ-ள்.) காட்டுமிளகினால் பித்தமும், பசியும் அதிகரிக்கும். கபரோகத்தைக் கண்டிக்கும், கருப்பத்தைக் கெடுக்கும் என்க.

செய்கை:—பித்தகாரி, ஜடராக்கினிவர்த்தினி, கபஹரகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—காட்டுமிளகின் கொடியானது ஏறத்தாழ மிளகுக்கொடியையே ஒத்திருக்கும். ஆனால் இதன் காய்கள் கசப்பும் காரமும் உடையது. இதனை இரேணுகம் என்னும் மாறு பெயரால் சில அவிழ்தப் பிரயோகங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதனைப் பெரும்பான்மை தென்னாட்டில் உபயோகப்படுத்தாமையினால் விரிவாகக் கூறவில்லை.

காட்டுமுருங்கை.

(Moringa Pterygosperma—Forest).

**தின்றாற் கசப்பாகுந் தீயாங் கொடுவிஷத்தைக்
கொன்றுவிடுங் கட்குங் குளிர்ச்சிதரு—மென்றுமைய
மோட்டும்வேர் பூவிலைகா யுற்றபிசி னும்பிஞ்சுங்
காட்டுப் புனமுருங்கை காண்.**

குணம்:—(இ-ள்.) கைப்புள்ள காட்டுமுருங்கைவேர் மகாவிஷத்தை நீக்கும். பூ கண்ணுக்குக் குளிர்ச்சிதரும். இலை, காய், பிசின், பிஞ்சு இவைகள் சிலேத்தும ரோகங்களை நிவர்த்தி செய்யும் என்க.

செய்கை:—பலகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப்பட்டையை $\frac{1}{4}$ பலம் அளவிற்கு நறுக்கிப் பஞ்சுபோல் தட்டி ஒரு பழகின குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் குடிக்கவும். இப்படி 3 நாள் தினம் ஒரு வேளை குடித்து உப்பிலாப் பத்தியம் இருக்க விஷக்கடியாலுண்டான பல தோஷங்

கள் போம். இதன் இலை, காய் இவைகளைப் பாகப்படி சமைத் துண்ண வாய்க்கு அரோசகப்படினும் கப சம்பந்தமான ரோகத் தைப் பரிகரிக்கும். இதன் பிசினுடன் அதிமதுரப்பால், கற்கண்டு கூட்டிச் சுத்த சலம்விட்டு அரைத்துத் தேற்றாங்கொட்டை பிரமா ணம் மாத்திரைச் செய்து வாயில் அடக்கி வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கரையும் நீரை உள் விழுங்கக் கபம் கரைந்து இருமல் நீங்கும்.

காப்பிக்கொட்டை.

(Coffea Arabica).

சித்தங் களிப்பாகும் சீராக மெய்யிறுகும்
பித்த மதிகரிக்கும் பிற்போக்கில்—மெத்தவுமே
மூப்பையுண் டாக்கிவிடும் மூண்டபசி குன்றிவிடும்
காப்பியது கொட்டைகுணங் காண்.

குணம்:—(இ-ள்.) காப்பிக்கொட்டை முதலில் உற்சா கம், தேகவலுவு, பித்தம் இவைகளை யுண்டாக்கும், பின்னால் பசிதீப னத்தை நாளுக்குநாள் குறைத்துத் தேஜசை மாறுபடச் செய்யும் என்க.

(இதுவுமது)

கோருநின்ற காப்பிநற் கொட்டைக் குடிநீரால்
சாருகின்ற பேதி சலக்கட்டு—நேருகின்ற
காசங் கடுங்காச்சல் கண்டவர்க்கு நன்மைதரும்
வாசமணி மாதே வழுத்து.

(இ-ள்.) இது, பேதி, நீர்கட்டு, காசம், சுரம் முதலிய ரோகங் கள் கண்டவர்களுக்கு அதிக நன்மையுண்டாக்கும்.

செய்கை:—உற்சாககாரி, பலகாரி, பித்தகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இரும்புக்கடாயில் போட்டு அடுப்பில் வைத்துக் கறுக எண்ணெய் சோறும்பதத்தில் வறுத்து இடித்துப் பொடிசெய்து வைத்துக்கொள்க. வேண்டும்போது வேளைக்கு $\frac{1}{4}$ ரூபாய் எடையுள்ள தூளை 2 அவுன்ஸ் கொதிக்கிற சலத்தில்போட்டு வாய்மூடிவைத்து நன்றாய் ஆறியபின் வடிகட்டி அதனுடன் $\frac{1}{8}$ படி காய்ச்சிய பசுவின்பாலைக்கூட்டிப்போதிய அளவு சர்க்கரைப்போட்டுக் கலக்கிச் சாப்பிடப் பசியை ஆற்றும். தேகக்

களைப்பைமாற்றி உற்சாகத்தை யுண்டாக்கும். இந்தத்தூளை அதிகப் படுத்திக் காப்பிபானம் செய்பவர்களுக்காவது அல்லது அடிக்கடி உட்கொள்கிறவர்களுக்காவது தேகத்தில் பித்தம் அதிகரித்து அக் கினி மந்தத்தை யுண்டாக்குவதுடன் நித்திரையையும் கெடுக்கும். இந்தத் தூளைச் சிறிது அதிகப்படுத்திக் காப்பிபானம் செய்யப் பேதியைக் கட்டும். இத்தகைய பானத்தை அடுத்தடுத்துக் குடிப்பாராகின் பேதியையுண்டாக்கும். இதை அதிகமாக வழக்கத்தின் கீழ்க் கொண்டுவருகிறவர்களுக்கு ஒருவிதமான நரம்பு தளர்ச்சியையுண் டாக்கும். அப்போது இத்தூளை அதிகப்படுத்தியாவது அல்லது அடிக்கடி இப் பானத்தையாவது உட்கொண்டாலன்றி அச்சோர்வு நீங்காது, ஆகையால் மிதமாக உபயோகப்படுத்தல் சாலச் சிறந்தது. இப் பானம் விசேஷமாக அதிகரித்தசுரம், சுவாசகாசம், பாண்டு, கக்கிருமல், மூர்ச்சாரோகம், இருதயத்துடிப்பு முதலிய ரோகங் களால் கஷ்டப்படுகின்றவர்களுக்கு பலன்தரும்.

காய்ச்சுக்கட்டி.

(Acacia-catechu Extract).

தந்த மிறுகும் தனித்தவா யேதுவர்க்கும்
தோந்தமுறும் புண்ணும் தோலையுமே—வந்தகார்
பூச்சிக் குழாமிப் புனலிற்றுன் சாகுங்கேள்
காய்ச்சுகட்டி தானருந்துங் கால்.

குணம்:—(இ-ள்.) காய்ச்சுக்கட்டியினுல் பற்கள் இறுகும். விரணங்களுக்கு இதைப் போட்டுவர ஆறும். இதனை உட்கொண் டால் மலத்திலுள்ள கருப்புநிறமான கிருமிகள் ஒழியும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனை நன்ருயரைத்துப் பொடி செய்து, வேளைக்கு 1-2 குன்றிமணி எடை, தினம் 3 வேளை தேனில் கொடுக்க உஷ்ணசுரம் நீங்கும். இதனை அசல் வாதுமை அல்வாவில் வைத்துத் தினம் 3 வேளை கொடுக்கச் சீதரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகள் குணமாகும். இதனைப் பற்பொடி யுடன் கூட்டிப் பல் துலக்கப் பல்லீற்றிலிருந்து சொரியும் இரத் தத்தை நிறுத்துவதுடன், பல்லாட்டத்தைக் குணப்படுத்தும். இதனை ஸ்திரீகளுக்கு முலைக்காம்பிலுண்டாகும் வெடிப்புகளுக்குத் தூவி வர விரைவில் ஆறும். காய்ச்சுக்கட்டி $2\frac{1}{2}$ விராகனெடை இலவங்கப்

பட்டைச் சூரணம் $\frac{1}{2}$ விராகனெடை இவைகளை ஒரு கோப்பை யிற்போட்டு 10 அவுன்ஸ் கொதிநீரை விட்டு, வாய்மூடி, ஒருமணி நேரஞ் சென்றபின் வடிகட்டி, வேளைக்கு $\frac{3}{4}$ - 1 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர, ஸ்திரீகளுக்குக் காணும் பெரும்பாடு, வெள்ளை, சீதபேதி, கிராணி முதலியவைகள் குணமாகும்.

இன்னும் இதனுடன் இதர சரக்குகளைக்கூட்டி உபயோகப் படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன—

காய்ச்சுக்கட்டி சூரணம்.

காய்ச்சுக்கட்டி பலம் $1\frac{1}{2}$, இலவங்கப்பட்டை பலம் $1\frac{1}{2}$, கிரும்பு பலம் 1, ஜாதிக்காய் பலம் $\frac{1}{2}$ இவற்றைத் தனித்தனியாக இடித்துச் சூரணஞ்செய்து, முன்கூறப்பட்ட எடைபோல் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து, சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு 5-10 குன்றி எடை நெய், சர்க்கரை இவைகளில் அனுபானம்செய்து கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி இவைகள் குணமாகும். இது சம்பந்தமான சுரத்தையும் குணப்படுத்தும்.

(வேறுமுறை)

காய்ச்சுக்கட்டி தோலா 1, உலர்ந்த வில்வப்பழம் தோலா 1, உலர்ந்த மாதுளம்பட்டை தோலா 1 இவைகளை நன்றாய் இடித்துச் சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு $\frac{1}{2}$ - 1 விராகனெடை, சர்க்கரையுடன் கூட்டித் தினம் 2-3 வேளை கொடுத்துவரச் சீதபேதி, கிருணி குணமாகும்.

காய்வள்ளிக்கிழங்கு.

(**Kai-Vallik-Kizhangu**).

அக்கினி வெப்பை யடுக்குமென்பார் வாதமொடு
தொக்கிலதி புண்சிரங்கைத் தூண்டிவிடும்—மிக்குபசும்
வேயையுடைத் தோளணங்கே வெற்றிலையாம் வள்ளியெனுங்
காயையுடை வள்ளியது காண்.

குணம்:—(இ-ள்.) காய்வள்ளிக்கிழங்கு வாதரோகத்தையும், சருமத்தின்மீது பெரிய சிறிய விரணங்களையும் உண்டாக்கும், உஷ்ணத்தை தணிக்கு மென்பர்.

உபயோகிக்கும் முறை:—இது அவிழ்த பாகங்களில் சேரப் பட்ட சரக்கல்ல. இதனைப் பதார்த்த வகைகளிலும் அதிகமாகச்

சேர்ப்பதில்லை. பொங்கல் சமீபத்தில் இக்கிழங்கை வருஷத்திற் கொருமுறை சமைத்து உண்பதுண்டு. இதனால் குற்றமில்லை. ஆனால் இதனைத் தினம் உண்ணும் காய்கறிகளில் வழக்கமாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

காரைப்பழம்.

(Webera Tetrandra Fruit).

சீதக் கடுப்புஞ் செறியிரத் தக்கடுப்பும்
ஓதுமதி சாரமும்போ முண்மையே—மோதுகட
னீரைப் பருகுமுகி னேரளக மின்கொடியே
காரைப் பழத்திற்குக் காண்.

குணம்:—(இ-ள்.) காரைப்பழத்தினால் சீதரத்தக்கடுப்பும், அதிசாரபேதியும் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இப் பழத்தைத் தினம் ஒருவேளை அல்லது இருவேளை காலை மாலை சாப்பிட்டுவரச் சரீரம் குளிர்ச்சி பெறும். இதற்குத் துவர்ப்புக் குணமுண்டு. ஆகையால் சீதரத்த பேதி, அதிசாரபேதி முதலியவற்றைக் குணப்படுத்தும். இந்தப் பழமானது குடலிற்கும் இரைப்பைக்கும் வலுவைக் கொடுப்ப துடன் உள் வெப்பத்தை யாற்றித் தாது விருத்தியைச் செய்யும்.

காரையிலை.

(Webera Tetrandra Leaves).

காரைத் தழைக்குக் கணக்காக வேபுளியைச்
சோரப்பெய் தாக்கிச் சுவைத்திடின்கேள்—பாரதனில்
விள்ளக் கடுப்புரத்தம் விட்டேகு மையமிலை
உள்ளக் குணமிதுவா முன்.

குணம்:—(இ-ள்.) காரையிலைக்குத் தக்கவாறு புளியைச் சிறிது அதிகமாகக் கூட்டிக் கறி சமைத்து உண்பதினால் கடுப்பும், இரத்தம் விழுதலும் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைப் பாகப்படி புளி யிட்டுக் கடைந்து அன்னத்திலிட்டுச் சாப்பிட வயிற்றுக்கடுப்பு, இரத்த சீதபேதி இவைகள் குணமாகும்.

கார்போகஅரிசி.

(Psoralea Corylifolia).

கார்போக மாமரிசி கண்டாற் கரப்பான்புண்
பீர்சருவ நஞ்சிவைபோம் பித்தமுண்டாம்—பார்மீதில்
வாத கபநமைச்சல் வன்சொறிசி ரங்குமறுஞ்
சீத மலர்க்குழலாய் செப்பு.

குணம்:—(இ-ள்.) கார்போகஅரிசியால், கடுவன், விரணம், பயங்கரமான சர்ப்ப கீட தாவர விஷங்கள், வாத சிலேத்தும தொந்தம், தினவு, யானைச்சொறி, கிரந்தி ஆகிய இவைகள் நீங்கும். பித்தம் அதிகரிக்கும் என்பர்.

செய்கை:—வியதாபேதகாரி, இலகுமலகாரி, உற்சாககாரி, கிருமிநாசினி, காமவிர்த்தினி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை 5-10 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டிக் கொடுக்கலாம். இது தீபனத்தை யுண்டாக்கும்; மலத்தைப் போக்கும்; தோல்சம்பந்தமான பல வியாதிகளைக் குணப்படுத்தும். விசேஷமாக இந்தச் சரக்கை வாசனைத் திரவியங்களிலும், வெளிப்பிரயோகங்களிலும், உபயோகப் படுத்துவதுண்டு. உதாரணமாக—

சந்தனாதிச்சூரணம்.

கார்போகஅரிசி, நீரடிமுத்து, கஸ்தூரிமஞ்சள், கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், அகில்கட்டை, தேவதாரு, கற்பாசி, வெட்டிவேர், குருவிவேர் ஆக பத்துச் சரக்குகளையும் வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு ஸ்நாநம் செய்யும்போது, இச் சூரணத்தை நீர்விட்டுக் குழைத்துத் தேகமெங்கும் பூசித் தேய்த்து 5-10 நிமிஷம்வரை ஊறவிட்டுப் பின் நன்றாய்த் தேய்த்துக் குளிக்கவும். இப்படி ஒரு மாதம் செய்ய, சொறி, சிரங்கு, நமைச்சல், படை, தவளைச்சொறி, கருமேகம், இரத்தக்கொதிப்பினாலுண்டாகும் பலநிற வடுக்கள் யாவும் போம்.

காவட்டம்புல்.

(Andropogon Nardus).

பேதிப் பொருமலுடன் பின்னேக்கும் மாந்தவகை
வாதிக்கு முட்காய்ச்சல் வன்கபத்தி—னுதிக்கம்
மீறுங்காற் ருனடக்கும் மேதினியில் கண்டசுகம்
கூறுங்கா வட்டம்புற் கு.

குணம்:—(இ-ள்.) காவட்டம்புல்லால் பேதி, வயிற்றுப் பிசம், குழந்தைகட்குக் காணும் மாந்தம், உள்சுரம், கபஉபரி முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி, அங்காகர்ஷண நாசினி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—அரைப்படி கொதிக்கின்ற சலத்தில் 10 ரூபா எடை காவட்டம்புல்லைப் போட்டு ஓர் இரவு ஊற வைத்து மறுநாள் வடித்து வைத்துக்கொள்ளவும். குழந்தைகளின் பருவத்திற்கேற்றவாறு 1-2 தேக்கரண்டி அளவாகவும்; பெரியவர் களுக்கு 1-1½ அவுன்ஸ் அளவாகவும், தினம் 3 வேளை கொடுக்க சுரம், பேதி, தாகம், வயிற்றுப்பிசம் முதலியவைகள் குணமாகும்.

காவட்டம்புல்லெண்ணெய்.

(Andropogon Nardus Oil).

மாந்தக் கழிச்சலுடன் மட்டுபடுஞ் சீரணத்தை
சாந்தமுற வேபண்ணுஞ் சத்தியமாம்—வாந்தியுட
னுற்றசுர வையத்தை யோட்டிவிடுங் காவட்டம்
புற்றயிலங் கொண்டளவிற் போற்று.

குணம்:—(இ-ள்.) காவட்டம்புல்லெண்ணெயால் மாந்தம், அஜீரணக்கழிச்சல், இருமல், சுரம் இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி, அங்காகர்ஷண நாசினி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—காவட்டம்புல் எண்ணெயைக் குழந் தைகளுக்கு 1-2 துளியும் பெரியவர்களுக்கு 2 முதல் 4 துளி வரை யிலும் சர்க்கரையுடன் கூட்டித் தினம் இருவேளை கொடுக்க வாந்தி, பேதி, சுரம், அஜீரணம் இவைகள் போம். ஸ்திரீகளுக்கு மாதவிலக் கம் வரும் காலமறிந்து கொடுக்கச் சிக்குப்பட்டுள்ள உதிரக்கட்டை வெளியாக்கும். இந்த எண்ணெயுடன் தேங்காய் எண்ணெயைக் கூட்டிக்கலந்து நோயுள்ள இடங்களில் தேய்க்கக் குணமுண்டாகும்.

குறிப்பு:—தைலம் எடுக்கும் விதம். நீர் இறக்குவதற்கு சித்தப் படுத்திவைத்துள்ள பாண்டத்தில், நிழலில் உலர்த்திவைத்துள்ள காவட்டம்புல்லைப்போட்டு அதன் எடைக்குப் பத்துப்பங்கு கொதிக்கிற சலம்விட்டு ஓர் இரவு ஊறவைத்து மறுநாள் வாலை செருகி உளுந்துச்சீலைசெய்து அடுப்பில் வைத்து எரித்துத் நீரை வாங்கவும். இந்த நீரின்பேரில் முத்துமுத்தாக தைலம் மிதக்கும்.

இதனை இறகு கொண்டு வழித்து வைத்துக்கொள்க. இங்ஙனம் செய்வது கஷ்டமென்று உணரின் ஆங்கிலேய முறைப்படி செய்து மருந்துக்கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கும் தைலத்தை வாங்கிக்கொள்வது எளிது. இந்தத் தைலத்திற்கு Oil of Citronelle என்று பெயர்.

காருக்கருணைக்கிழங்கு.

(Tacca Aspera Yam).

ஞால மதிற்கபநோய் நாடாது வாதமறு
மூல முளையிரத்த முன்போழியு—மோலமிட்டு
மாருக் கனல்மந்த மாறுமதி தீபனமாங்
காருக் கருணைதனைக் காண்.

குணம்:—(இ-ள்.) காருக்கருணைக் கிழங்கினால் சிலேஷ்ம ரோகம், வாதநோய், இரத்தமூலமுளை, அக்கினிமந்தம் இவை நீங்கும். மிகு பசியுண்டாம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, கபஹரகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இக் கிழங்கின் மேற்றோலைச் சீவிப் பாகப்படி கறி சமைத்து அன்னத்துடன் வைத்துண்ணத் தேகத்திற்கு எவ்வித ரோகத்தையும் உண்டாக்காது. இது அற்ப கப ரோகங்களையும், வாதரோகங்களையும் கண்டிப்பதுடன் மூலரோகத்தையும் குணப்படுத்தும். மலச்சிக்கல் அறும்.

காறுங் கருணைக்கிழங்கு.

(Typhonium Trilobatum Yam).

கரப்பான் சிரங்குசோறி காணுக் கிரந்தி
யுரப்பாக்கு மூலநோ யோட்டும்—நிரைப்பான
மந்தமொடு கோழைதரு மாருத் தினவுநல்கு
மந்தமிகுங் காறு கருணை.

குணம்:—(இ-ள்.) காறுகின்ற கருணைக்கிழங்கு கரப்பான், பொடிச்சிரங்கு, சொறி, உட்கிரந்தி, மந்தாக்கினி, கபக்கோழை, நமைச்சல் ஆகிய இவைகளை உண்டாக்கும். மூலரோகத்தை நீக்கும் என்க.

செய்கை:—க்ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இக் கிழங்கின் மேற்றோலைச் சீவிப் பாகப்படி சிறிது புளியதிகமாகக் கூட்டிக் குழம்பிட்டு அன்னத் துடன் கூட்டியுண்ண இரத்தமூல முடையார்க்கு அதிக குணத்தை யுண்டாக்கும். ஆனால் காருக்கருணையைப்போல் தினப்படி சேர்த் துக்கொள்ளக் கூடாது. ஏனெனில், இதனால் கரப்பான், சொறி, சிரங்கு முதலியவைகள் உண்டாகும்.

காணும்வாழை.

(Commelina Benghalensis).

காணும்வா ழைக்குமுலைக் கண்குழிப்புண் ஆறிவிடு
மானலும் போக மதிகரிக்கு—மானேகேள் !
ஐயம் விளையு மனற்றணியும் நீங்காத
பையுதிர மாறுமுன்னிப் பார்.

குணம்:—(இ-ள்.) காணும்வாழைக்கு ஸ்தனவித்திரிதி, வெப்பசுரம், ரத்தபேதி இவைகள் நீங்கும். சுக்கில விருத்தியும், கபபெருக்கமும் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—ஸ்திரீகளின் முலைக் காம்புகள் வெடித்துப் புண்ணுவதற்கு இதன் இலையை அரைத்து வைத்துக் கட்ட ஆறும். இதைப் பாகப்படி துவரம் பருப்புடன் கூட்டிக் கடைந்துண்ணத் தேகஅழலை, ரத்தபேதி, சுக்கில நஷ்டம் இவை களைக் குணப்படுத்தும். ஆனால் இந்த மூலிகையை அதிகமாக உப யோகப்படுத்தினால் கபத்தை யுண்டாக்கும்.

கிச்சிலிக்காய்.

(Citrus Aurantium—Sour).

உற்ற பெரும்வாந்தி ஓயாக் கனமயக்கம்
பற்றுங் குடற்கிருமிப் பாறிப்போம்—பொற்றொடியே!
காட்டிலுறுங் கிச்சிலிக் காயதனு லாயபயன்
நாட்டிலெல் லோர்க்கும் நவில்.

குணம்:—(இ-ள்.) கிச்சிலிக்காயால் வாந்தி, மயக்கம், வயிற்றி லுள்ள கிருமிகள் முதலியவைகள் போம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயை நான்கு பிளவாக அரிந்து செல்லும் வரையில் உப்பைச் செலுத்தி ஜாடிகளில்

போட்டு வைக்கவேண்டும். இதைத் தினந்தோறும் மரத்தட்டுகளி லாவது அல்லது கோப்பைத் தட்டுகளிலாவது பரப்பி ரவியில் உலர்த்தவும். அப்போது ஜாடியில் உப்பானது கரைந்து ஜல ரூபமாக இருக்கும். மறுபடியும் உலர்த்திய காயைத் திரும்ப ஷை ஜாடியில்போட்டு வாய்மூடி வைக்கவும். இப்படியே ஜலமெல்லாம் சுண்டி ஷை காய்கள் பதப்பட்டு மிருதுவாக மாறுதலடையும். இதுவே கிச்சிலிக்காய் ஊறுகாய் என்பர். இதைத் தினந்தோறும் அன்னம் அருந்தும்போது உபயோகப்படுத்திவரப் பித்தத்தாலேற் பட்ட வாந்தி, அரோசகம், அக்கினிமந்தம் போம். இது கசப்பும் புளிப்பும் கலந்த சுவையையுடையதாதலால் வயிற்றிலுள்ள கிருமி களை மலத்தின் மூலம் வெளியாக்கும்.

கிச்சிலிக்கிழங்கு.

(Curcuma Zedoaria—Tuber).

ஊட்டுநற் கிச்சிலியி னெண்கிழங்குக் குக்கபமும்
பூட்டுமுட மும்புண்ணும் போகுங்காண்—மோட்டுயரும்
கச்சை யணிந்த கனகமுலை மாதரசே
இச்சையுடன் கேட்பா யிசைந்து.

குணம்:—(இ-ள்.) கிச்சிலிக்கிழங்குக்கு சிலேத்தும நோயும், கீல் பிடிப்பும், விரணமும் நீங்கும் என்க.

செய்கை :—உற்சாககாரி, கபஹரகாரி, உதரவாதஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, ஷோணகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை :—இதன் சூரணத்தை வேளைக்கு 6-10 குன்றி நிறை, சர்க்கரை, தேன் இவைகளில் கொடுக்கலாம். இத ஞல் தொண்டைக்கபக்கட்டு, வயிற்றுப்பொருமல், சுரம் முதலிய வைகள் நீங்கும். அரைத்துப் பற்றுப்போட வாதவலி நீங்கும். இதனுடன் கோரைக்கிழங்கு, வெட்டிவேர், குருவிவேர், கார்போக அரிசி, கஸ்தூரிமஞ்சள், நீரடிமுத்து முதலியவற்றைச் சமனெடை யாகக்கொண்டு மொத்த எடைக்கு பச்சைப்பயறுகூட்டி அரைத்து மாவாக்கிச் சிறிது சலம் விட்டுக் குழைத்துச் சரீரத்தின்மீது தேய்த்து ஸ்நானம் செய்யச் சொறி, சிரங்கு, நமைச்சல், படை இவைகள் போம். இன்னும் தைலங்களைக் காய்ச்சி இறக்கும் சமயத்தில் கிச்சிலிக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், சாம்பிராணி முத லியவற்றைப் போட்டுக் கீழிறக்கி ஆறவிட்டு வடித்து உபயோகப் படுத்துவதுண்டு. இதனுல் தைலத்தில் பரிமளமுண்டாகும்.

கிட்டிக்கிழங்கு.
(Kittikkizhangu).

கிட்டிக் கிழங்கால் கிளர்தீ பனமுண்டா
மெட்டிக் கிழமேக மேகுங்காண்—துட்டஞ்செய்
பித்த சமனமுமாம் பேசில்கப நாசமுமாம்
நிர்த்த மயிலே! நினை.

குணம் :—(இ-ள்.) கிட்டிக்கிழங்கால் நாட்பட்ட பிரமேகம், சிலேஷ்ம நோய் போகும். மிகு பசியும் பித்த சாந்தியும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை :—இதனை மேற்றோல் போகச் சுத்தி செய்து சலத்தில் அலம்பிச் சிறிது உப்பிட்டு வேகவைத்தாவது அல்லது உலர்த்தி நெய், எண்ணெய் இவைகளில் வற்றலாக வறுத்தாவது உண்பதுண்டு. இதனால் நல்ல பசிதீபன முண்டாகும். நாட்பட்ட பிரமேகம் அற்ப சிலேத்துமம், பித்த உபரி இவைகள் குணமாகும்.

கிரந்திதகரம்.
(Cassia Sophera).

சீறுபித்த நோயுந் திரையெறிதல் போலுமெறிந்
தேறுஞ் சுவாசநோ யென்பதுவும்—வீறிப்
பரந்தசர்க்க ரார்ப்புதமும் பன்னப் புகுங்காற்
கிரந்திதக ரத்தாற் கெடும்.

குணம் :—(இ-ள்.) கிரந்திதகரத்தால் பயித்திய ரோகமும், சுவாச ரோகமும், சர்க்கரார்ப்புத விரணமும் ஒழியும் என்க.

செய்கை :—கபஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை :—இதன் இலைச்சாற்றைச் சந்தனக் கல்லில் விட்டுச் சந்தனக் கட்டையைக்கொண்டு உரைத்து எடுத்த விழுதையாவது அல்லது பழச்சாற்றைச் சந்தனக்கல்லில் விட்டு இதன் வேரைக்கொண்டு உரைத்து எடுத்த விழுதையாவது ஊறல் படை முதலியவற்றிற்கு மேற்பூச விரைவில் ஆறும்.

இதன் இலை பலம் 2, மிளகு பலம் $\frac{1}{4}$ இவைகளை இடித்து ஒரு பழகின மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு வீசம் படியாகச்சுண்டக்காய்ச்சி, வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க இருமல், ஈளை, சுவாசகாசம், சுரம் முதலியவைகள் போம். இதன் வேர்ப்பட்டையைக் கியாழமிட்டாவது அல்

லது இதன் வித்தைச் சூரணம்செய்து தேனிலாவது நெய்யிலாவது கொடுக்க மதுமேகம் போம். ஒரு வீசை இலையை ஒரு மட்கடத்தில் போட்டு 8 படி சுத்த சலம் விட்டு ஒரு படியாக இருக்கச் சுண்டக்காய்ச்சி வடித்து ஆருத விரணங்களுக்கு மேல்விட்டு அலம்பிவர ஆறும். காதுக்குள் ஏதாவது பூச்சி, வண்டு முதலியவைகள் நுழைந்து உபத்திரவம் செய்தால் இதன் இலைச்சாற்றை 2-3 துளி காதில் விட அவை மடியும்.

கிரந்திநாயகம்.

(Ruellia Strepens).

சீதமறு மாவிடமுந் தீரும்விழி நோயகலும்
பூத மொடுமருளும் போகுங்கண்—மேதினியுள்
ளாயகத்துப் புண்கிரந்தி யாறுமயி லேகிரந்தி
நாயகத்தி னுலே நவில்.

குணம்:—(இ-ள்.) கிரந்திநாயகத்தினுல் சீதளம், சர்ப்பவிஷம், கண்ணோய், பைசாசம் சங்கைதோஷம், விரணம், சிரங்கு முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை அரைத்து நகச்சுற்று, விரணம் முதலியவற்றிற்கு வைத்துக்கட்ட உபத்திரவம் செய்யாமல் அங்குள்ள துர்நீரை வெளியாக்கிக் குணப்படுத்தும். இதை அரைத்துச் சிரங்குகளுக்குப் பூச ஆறும். தேள், பாம்பு முதலியவை தீண்டின இடத்தில் இந்த இலையை அரைத்து மேல் தேய்த்து 4-5 இலையை மென்று தின்ன விஷம் இறங்கும். இந்த இலையுடன் சமனெடை நாட்டுக் கல்நாரைச் சேர்த்து அரைத்து வறட்டிபோல் தட்டிக் காயவைத்து இதனை 10 வறட்டியின் இடையில் வைத்துப் புடமிட்டெடுக்க வெந்து நீறும். இதனைக்கொண்டு பற்றேய்த்துவரப் பல்வலி, பல்லாட்டம், பல்லரணை, பல்சொத்தை, ஈறுவீக்கம், ஈறுரணம், இரத்தம் சொரிதல் முதலியவைகள் குணமாகும்.

கிளியூரம்பட்டை.

(Kiliyuram Bark).

மணவருக்க மாகும் வருசுரத்தைப் போக்குந்
தணலாய வெப்பைத் தணிக்குங்—குணமார்
கிளியூரற் பட்டையது கீதம் பயிலு
மளியூருங் பூங்குழலே யாய்.

குணம்:—(இ-ள்.) பரிமளச் சேர்க்கையில் ஒன்றாகிய கிளி யூரம்பட்டையானது சுரரோகத்தையும், தேகக் கொதிப்பையும் தணிக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பெரும்பாலும் தேகத்திற் குத் தேய்த்து குளிக்கும்படியான வாசனைப் பொடிகளில் கூட்டுவது வழக்கம். இது தேகத்தின் வெப்பத்தைத் தணிக்கும். இன்னும் முடித்தைலங்களுக்கு வாசனையை உண்டாக்கும் சரக்குகளில் இதனையும் ஒன்றாகக் கூட்டுவதுண்டு.

கீரிப்பூண்டு.

(Ophiorrhiza Mungos).

கொல்லுமர வின்விடமே குற்றமற நீங்கிவிடும்
நல்லுறக்க முண்டாகும் நங்கையே—தொல்லுலகில்
நாற்ற மலங்கழியும் நற்கீரிப் பூண்டதனல்
ஏற்றபல முண்டாகு மெண்.

குணம்:—(இ-ள்.) கீரிப்பூண்டால் பாம்பின் விஷம் நீங்கும், பேதியாகும், பலங்கொடுக்கும், உறக்கத்தையுண்டாக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, இலகுமலகாரி, நித்ராகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மூலிகையானது இந்தியாவின் பல பிரதேசங்களில் உள்ள காடு, மலைகளில் தானாகவே பயிராகின்றது. விசேஷமாக இலங்கைத்தீவில் கிடைப்பதுமன்றிக் கடைகளிலும் விற்கப்படுகின்றது. பாம்பும், கீரியும் சந்திக்க நேர்ந்த காலத்தில் கீரியானது எவ்விதத்திலும் பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டுத் தன் சரீரத்தில் ஏறிய பாம்பின் விஷத்தைப் பரிகாரம் செய்து கொள்ளும்பொருட்டு இந்த மூலிகையினிடம் வந்து கடித்துத் தின்றோ அல்லது மேல்விழுந்து புரண்டோ விஷத்தைப் போக்கிக் கொள்வதுண்டு. இக்காரணத்தை முன்னிட்டே ஆன்றோர் கீரிப் பூண்டு என்று கூறுவராயினர்.

சாதாரணமாக இதன் பட்டையை வெண்ணெய்போலரைத்து வேளைக்குப் கழற்சிக்காய் அளவு ஆவின் பாலில் கலக்கி மூன்று தினம் காலை நேரத்தில் கொடுக்க மலம் இளகலாகப் போகும். பாம்பு, வெறிநாய் முதலியவற்றின் கடிவிஷங்களைக் கண்டிக்கும். இன்னும் பைத்தியரோகத்தில் நித்திரைவராமல் வருந்துகிறவர்களுக்கு நித்திரையை யுண்டாக்க இது இன்றியமையாத

தாகும். இதன் இலையைச் சுத்தமாக ஆய்ந்து ஏறத்தாழ 5 பலம் அளவிற்கு ஒரு குடுவையில் போட்டு 1 படி சலம்விட்டு நான்கி லொருபாகமாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவர நல்ல பசியையுண் டாக்குவதுடன் தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். இன்னும் இந்தக் கியாழத்தால் பூச்சிக்கடியினால் தேகத்திலுண்டான பல தோஷங்கள் நீங்கும். இதன் வேரைக் கையில் வைத்துக்கொண் டிருக்கப் பாம்பு முதலியவைகள் அருகில் தொடராதென ஆன் றோர் கூறியிருக்கின்றனர்.

கீரைத்தண்டு.

(Amaranthus Gangeticus).

தண்டுமெத்த வாயு தணியாத சீதளமாம்
விண்டுரைக்கிற் சின்னேய்போம் விள்ளவோ—கொண்டக்கால்
நீர்க்கடுப்பு வெட்டையனல் நில்லாது நேரிழையே !
போர்க்கடுப்பி ரத்தமும்பேரம் போம்.

குணம்:—(இ-ள்.) அதிவாத சீதளமுள்ள கீரைத் தண்டால் பித்தக்கிரிச்சரம், பிரமேகச்சூடு, வயிற்றுக்கடுப்பு, இரத்தபேதி முதலிய நோய்கள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ண நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு முதலியவற்றைச் சாந்தப்படுத்துவதுமன்றி உஷ்ணத்தைச் சாந்தப்படுத்தும். மூலக்கடுப்பு, பெரும்பாடு இவற் றைக் குணப்படுத்தும். இது கபதேகிகளுக்கு ஆகாது. இதனால் அவர் களுக்குத் தலைப்பாரம், ஜலதோஷம் முதலியவைகள் சம்பவிக்கும்.

இதில் செங்கீரைத்தண்டு வெண்கீரைத்தண்டு என்கிற இரண்டு இனங்களுண்டு. இவற்றை முற்கூறியவாறு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இவற்றிற்குச் சில விசேஷ குணங்கள் உண்டு. அவற்றின் விபரம் பின்வருமாறு:—

செங்கீரைத்தண்டு.

(Amaranthus Gangeticus—Red).

செங்கீரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்
தங்காம லோட்டிவிடுந் தையலர்க்குப்—பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.

(இ-ள்.) பெருங் கறியாகிய செங்கீரைக் தண்டு தீராத பித்த நோயையும், பெரும்பாட்டையும், தேகவெப்பத்தையும் நீக்கும் என்க.

வெண்கீரைத்தண்டு.

(Amaranthus Gangeticus—White).

வெண்கீரைத் தண்டு வியாதியற்ற நற்கறியாங்
கண்காணு தோடிவிடுங் காந்தலெல்லாங்—கண்காணு
மூலமதற் கேற்கு முசியா வெரிவகற்றுந்
தாலமதி லக்குணத்தைச் சாற்று.

(இ-ள்.) நோயற்ற நல்ல பதார்த்தமாகிய வெண்கீரைத்தண்டினால், வெப்பமும், வெளிமூலரோகமும், பித்த எரிச்சலும் நீங்கும் என்க.

கீழ்வாய்நெல்லி.

(Phyllanthus Niruri).

சீதமதி பித்தவிடஞ் செவ்விழியி னேய்க்கூட்டம்
பூதமொடு பேயிரத்தப் போக்குகளும்—பூதலத்துட்
டாழ்வாய்ப் பணிந்தேகுந் தப்பாது நற்புலத்துக்
கீழ்வா யெனுநெல்லிக் கே.

(இதுவுமது)

கீழாநெல் லிக்குணந்தான் கேளாய் மதுமேகந்
தாழாக்கா மாலைகளைச் சண்ணுந்தா—தேழனலுந்
தோக்கினன லுந்தோலைக்குந் தொன்மேகம் போக்கிவிடுந்
தக்கவிர ணங்கெடுக்குந் தான்.

குணம்:—(இ-ள்.) கீழ்வாய்நெல்லிக்கு ஆமக்கட்டு, அக்கினி கிடவிஷம், நேத்திர ரோகங்கள், பூத முதலிய சங்கைதோஷம், ரத்தாதிசாரம், மதுப்பிரமேகமூத்திரம், காமாலை, சப்ததாதுகத சுரம், சருமதாதுவெப்பம், நாட்பட்ட மேகப் புண் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, சோபா நாசினி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை அரைத்து கற்கமாகவாவது, இதரச் சரக்குகளுடன் கூட்டிக் கியாழமாகவாவது, நல்லெண்ணெயுடன் கூட்டித் தைலமாகவாவது செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முக்கிய அனுபவ முறைகளாவன—

கீழ்வாய்நெல்லி கற்கம்.

இதன் சமூலத்தை அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் பசுவின் பாலில் கலக்கிச் சாப்பிட்டு வரச் சோகை, காமாலை, பாண்டு, வாதபித்த ரோகங்கள், குணமாகும். இரத்தம் அதிகப்படும். கண் குளிரும்.

காமாலைக் கியாழம்.

கீழ்வாய்நெல்லி, கரிசலாங்கண்ணி, பேய்ப்புடல், வெண்மிளகு, சோம்பு, வில்வவேர் வகைக்குப் பலம் ¼ வீதம் இடித்து ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை உட்கொள்ளவும். இப்படி 3-5 நாள் உட்கொள்ளப் பாண்டு, சோகை, காமாலை முதலிய ரோகங்கள் போம். இதனைக் கொடுக்கும்போது அயம், காந்தம், மண்டூரம் முதலியவைகள் சம்பந்தப்பட்டுள்ள ஏதேனுமொரு செந்தூரத்தைக் கொடுத்து வருதல் அளவு கடந்த நன்மையை உண்டாக்கும்.

கீழ்வாய்நெல்லித் தைலம்.

ஒரு வீசை உலர்ந்த கீழ்வாய்நெல்லிச்சமூலத்தை சிறு துண்டுகளாகநறுக்கி ஒரு பெரிய மட்கடத்தில் போட்டு 8 படி சுத்த சலம் விட்டுஅடுப்பிலேற்றி ஒரு படி அளவாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. அப்பால் கடுக்காய்த்தோல், வேப்பம் பிசின் வகைக்கு பலம் ½ வீதம் அம்மியில் வைத்துப் பசுவின் பால் விட்டு அரைத்து முன் சித்தப் படுத்தியுள்ள கியாழத்தில் கலக்கி அதனுடன் ஒரு படி நல்லெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதம் வரும் சமயம் ½ பலம் நாட்டுச் சர்க்கரையைத் தூவிக் கிளரிக் கீழ் இறக்கி ஆறவிடவும். தைலம் நன்றாய் ஆறினபின் வடித்துச் சீசாவிலிட்டுப் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தை வாரமொருமுறை சிரசிற்கிட்டு ஸ்நானம் செய்துவரப் பித்தக் கிறுகிறுப்பு, வாய்நீரூறல், எரிபித்தம் (கை, கால் எரிச்சல்) கண்ணெரிச்சல், பித்தப்பயித்தியம் எல்லாம் குணமாகும்.

குக்கில்.
(Balsamodendron Mukul).

காதர நாசிநோய் கட்டிகடி மேகப்புண்
வாதவித்தி ரஞ்சூலை வன்குநக—மோதிவையித்
திக்கி லிருக்கத் திடமுமுள வோவுபயக்
குக்கி லிருக்கநமக் குள்.

குணம்:—(இ-ள்.) கருமை செம்மை என்னும் இருவிதக் குக்கில்களால், கர்ணபூதி, திரிதோஷஷ்டம், கிராணபாகம், பிடகம், காணுவிஷம், மேகரணம், வாதவித்திரிதி, கீல்பிடிப்பு, நகங்களைப்பற்றிய விரணம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, வியதாபேதகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, உதரவாதஹரகாரி, அங்காகர்ஷணநாசினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—சுத்திசெய்துலர்த்தி இடித்து எடுத்த குக்கில் சூரணத்தை வேளைக்கு 2½-7½ குன்றி எடை நெய்யிலாவது, காய்ச்சிய பசுவின் பாலிலாவது கொடுக்கலாம். இதைத் தனியாகக் கொடுப்பதைவிட இதரச் சரக்குகளுடன் கூட்டிக்கொடுப்பது விசேஷம். அவற்றுள் சில முக்கிய அனுபவ முறைகளாவன—

குக்கிலாதி மாத்திரை.

சுத்திசெய்த குக்கில் விராகனெடை 5, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு விராகனெடை 3, திப்பிலி விராகனெடை 1 இவைகளை நன்குய்ச் சூரணம்செய்து கல்வத்திலிட்டுக் கொஞ்சங்கொஞ்சமாகத் தேன்விட்டு மெழுகுபதமாய் அரைத்து இரண்டு குன்றி நிறையுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்க. இதனைத் தினம் 3 வேளை கொடுக்க வெள்ளை, நீர்க்கோவை, பவுத்திரம், அழுகுகிரந்தி, கணுச்சூலை இவைகள் போம். இந்தச் சரக்கானது வெகு நிதானமாகக் குணங்காட்டும். பெரியவர்களுக்கு உண்டாக்கும் குணத்தைவிடச் சிறியவர்களுக்கு அதிகமான குணத்தைக் கொடுக்கும்.

யோகராஜ குக்கிலு.

சித்திரமூலம், கண்டத்திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், குரோசாணிஓமம், சீரகம், தேவதாரு, செவ்வியம், ஏலம், இந்துப்பு, கோஷ்டம், சிற்றரத்தை, நெருஞ்சிமுள், தனியா, கடுக்காய்த்தோல், நெல்லிக்காய்வற்றல், தான்றிக்காய்த்தோல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, லவுங்கப்பட்டை, வெட்டி

வேர், தாளிசப்பத்திரி, லவுங்கப்பத்திரி ஆகிய இவைகளைச் சமனெடையாக இடித்து வைத்துக்கொள்க. அப்பால் முற்கூறப்பட்ட சரக்குகளுக்குச் சமனெடை சுத்திசெய்த குக்கிலைக் கல்வத்திலிட்டுப் பசுவின் நெய்விட்டு நன்றாய் அரைத்து மெழுகு பதம் கண்டபோது முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு நெய்விட்டு எல்லாம் ஒருமிக்கும்படி மெழுகுபதம் அரைத்துப் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு 2-3 குன்றி எடை தினம் இருவேளை உட்கொண்டு சிறிது தாளக்கூடிய சூடான பசுவின் பாலைச் சாப்பிட மேகவாயுப்பிடிப்பு, கணுச்சூலை, நரம்பு சம்பந்தமான பல ரோகங்கள், ஈரல் வீக்கம், வயிற்றிலுள்ள கட்டி, மகோதரம் முதலிய வியாதிகள் போம்.

குங்கிலியம்.

(Shorea Robusta—Resin).

பெரும்பாடு மேகம்போம் பேரா துடலில்
அரும்பியபுண் ணுறுமிவை யல்லால்—துரும்பாம்
எலும்புருக்கி புண்சீழும் ஏகும் உலகில்
சலம்பருகுங் குங்கிலியத் தால்.

குணம்:—(இ-ள்.) நீரை இழுக்கின்ற குங்கிலியத்தால் பெரும்பாடு, தந்துமேகம், விரணங்கள், எலும்புருக்கி, சீழ்விரணம் இவைகள் நீங்கும்.

(இதுவுமது)

வெள்ளைக்குங்கிலியம்.

வெள்ளை யளித்த விரணநா பிக்கமலத்
தொள்ளைவிர ணம்மேகந் தோற்றுகினும்—உள்ளே
வருவரச மேற்புண் வரினுஞ்சு வேதச்
சருவரச மேற்பழியைச் சாற்று.

(இ-ள்.) வெள்ளைக்குங்கிலியத்தால் மேகத்தாற் பிறந்த நாளப்புண், உந்திக்கமல விரணம், சீழ்மேகம், உள்மூலவிரணம் இவை நீங்கும்.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி, ஷோணகாரி, பூதிகந்த நாசினி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் தூயவெண்மை நிறமுடையது, அழுக்குப் படிந்த பழுப்பு நிறமுடையது

என இருவித சரக்குகள் உண்டு. அவற்றுள் தூய வெண்மை நிறமுடையது அவிழ்த பாகங்களுக்கு அதிகச் சிறந்தது. அழுக்கு நிறம் வாய்ந்தது, மேற்சிகிச்சைகளுக்கு உபயோகிக்கத் தக்கது. அவிழ்தபாகங்களுக்கு உபயோகப்படுத்துமுன் சுத்திசெய்து கொள்ளவேண்டியது பண்டிதர்களின் கடமையாகும். எங்ஙன மெனில்—ஒரு குடவான அகண்ட மட்பாண்டத்தில் 5 பலம் வெள்ளைக் குங்கிலியத்தைத் தூள்செய்துபோட்டு அதனில் 3 படி இளநீர் சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரிக்கக் குங்கிலி யம் உருகும். அத்தருணம் ஒரு கெட்டி மூங்கிற் கொம்பைக் கொண்டு ஒரு இடத்திலேயே அக் குங்கிலியத்தைத் தங்கவிடாமல் அகலமாகப் பரவும்பொருட்டும் அடுத்தாற்போல் ஒருங்கு குவியும் பொருட்டும் துழாவிக்கொண்டு வருக. இப்படி முன்விட்ட இளநீர் சலத்தில் அரைப்பாகம் சுண்டும்வரையில் துழாவிக்கொண்டுவர அதிலுள்ள துற்குணங்கள் சலத்தின் வாயிலாகக் கழிந்துவிடும். இப் படிச் சுத்திசெய்யப்பட்ட குங்கிலியத்தை மூங்கிற்கொம்பால் அழுத்திப் புரட்டிப்புரட்டிக்கொண்டுவர நாருபோல் சுற்றிக் கொள்ளும். அதை சிறு துண்டுகளாக நறுக்கிப் பீங்கான் தட்டில் போட்டு இரண்டொரு நாள் நிழலில் வைக்க ஈரம் வற்றி உலர்ந்து கற்களைப்போல் இறுகும். இவற்றைக் கல்வத்தில்போட்டு நன்ருய் அரைக்கத் தூய வெள்ளைநிறமாக இருக்கும். சேதப்படாமல் சுரண்டி எடுத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். சாதாரணமாக மேற்படி சுத்திசெய்த குங்கிலியத்தை 5 முதல் 10 குன்றிவரை யிலும் தினம் மூன்று வேளை பெரியவர்களுக்குக் கொடுத்துவர லாம். அல்லது மேற்படி சுத்திசெய்த குங்கிலியத்தை, நான்கு எடைக்கு ஒரு எடை பொரித்த படிக்காரம் கூட்டி அரைத்துவைத் துக்கொண்டு வேளைக்கு 10-15 குன்றியெடை சர்க்கரையுடன் கலந்து கொடுத்துவரலாம். இதனல், அக்கினிமந்தம், சீதபேதி, வெள்ளை, பெரும்பாடு, நீர்த்தாரையிலுள்ள விரணம், கொப்பூழ் விரணம், சீழ்மேகம், உள்மூல விரணம் முதலியவைகள் தீரும். இன்னும் இக் குங்குலியத்தைக்கொண்டு நவநீதம், சூரணம், களிம்பு முதலிய பல அவிழ்தங்கள் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

குங்கிலிய நவநீதம்.

ஒரு குடவான வாயகண்ட மட்பாண்டத்தில் 3 படி சுத்த சலம் விட்டு வைத்துக்கொள்க. அப்பால் ஒரு பெரிய இரும்புக் கரண்டியில் 2 பலம் சுத்தி செய்த குங்கிலியத் தூளையும், 2 பலம்

பசுவின் நெய்யையும் கூட்டிக் கரிநெருப்பணலில் உருக்கி இரண்டும் உறவானபதத்தில் முன் சித்தப்படுத்திய சுத்த சலத்தில் சாய்க்கவும். அப்பொழுது குங்கிலியமும் நெய்யும் தடிப்பாக சலத்தில் மிதக்கும். அதனைப் பிசைந்து பிசைந்து கொடுக்கச் சிதறுண்டு பரவும். மறுபடியும் அவைகளை யெல்லாம் ஒருமிக்கச் சேர்த்து மறுபடியும் பிசையவும். இப்படி 10-15 நிமிஷம்வரையில் பிசைந்து சுத்தமாக மிதக்கும் வெண்ணெயை எல்லாம் ஒருமிக்கச் சேர்த்து எடுத்துக் கொண்டு சலத்தைச் சாய்த்துவிடவும். மறுபடியும் முன்போல் சுத்த சலம்விட்டு மேற்படி வெண்ணெயைப்போட்டு முன்போல் 10-15 நிமிஷம்வரையில் பிசைந்து பிசைந்து சேதப்படாமல் ஒருங்கு திரட்டி எடுத்துக்கொண்டு சலத்தைச் சாய்த்துவிடவும். இப்படி ஏழு முறை செய்து எடுக்க வெளுப்பாக வெண்ணெய்போல் இருக்கும். இதைப் பீங்கான் கோப்பையில் பத்திரப்படுத்துக. இதனை வேளைக்குச் சிறு கொட்டைப்பாக்களவு தினம் இருவேளை கொடுத்துவர, வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, மூலச்சூடு, உள்விரணம் முதலியவை போம்.

குங்கிலிய கலவைச் சூரணம்.

குங்கிலியத்தூள் விராகனெடை 4, இலவம் பிசின் விராகனெடை 2, ஊறுகாயிட்ட மாங்கொட்டையின் பருப்புத்தூள் விராகனெடை 5, உலர்ந்த வில்வப்பழச்சதை விராகனெடை 5, ஜாதிக்காய்ச் சூரணம் விராகனெடை 5 இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு மிருதுவாக அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும். வேளைக்கு 2-3 குன்றியெடை நெய்யில் தினம் 2-3 வேளை கொடுத்துவரச் சீதபேதி, அதிசாரபேதி முதலியவைகள் குணமாகும்.

குங்கிலியக் களிம்பு.

குங்கிலியத்தூள் விராகனெடை 5, இலிங்கம் விராகனெடை 2, பூனைக்கண் குங்கிலியம் விராகனெடை 3, *காண்டா மிருக ரத்தம் விராகனெடை 3 இவைகளைக் கல்வத்தில் போட்டு மிருதுவாக அரைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் பசுவின் நெய் விட்டுக் களிம்பு பதத்திற்கு அரைக்கவும். இதற்குச் சற்றேறக்குறைய 10 விராகனெடை பசுவின்நெய் செல்லத் தக்கதென்று அநுபவத்தில் கண்டிருப்பினும் பண்டிதர்கள் களிம்பு பதமறிந்து போதிய நெய்யைக் கூட்டி அரைத்துக்கொள்வது கடமையாகும். இந்தக் களிம்பை ஆறாத விரணம், புண், சிரங்கு முதலியவற்றிற்குப் பூசிவர ஆறும்.

* வேங்கைமரத்து பிசின்.

குங்கிலியதூபம்.

குக்கிலியத்தூளை தனியாகவாவது அல்லது சிறிது அசல் சந்தனக் கட்டைத் தூள் கூட்டியாவது கரிநெருப்பணலில் போட்டுப் புகைக்க வீட்டிலுள்ள விஷக்காற்று சுத்தப்படும்; ரோகிக்கும் உற்சாகத்தை யுண்டாக்கும்.

குங்குமப்பூ.

(Crocus Sativus).

விந்துநட்டந் தாகமண்டம் மேகசலஞ் சூலைகப
முந்துசுரம் பித்தங்கா லுச்சிவலி—முந்துகண்ணிற்
றங்குமப்பூ வோடுறுநோய் சர்த்தியிவை நீங்கவென்றூற்
குங்குமப்பூ வோரிதழைக் கோள்.

(இதுவுமது)

குங்குமப்பூ வைக்கண்டாற் கூறுகொண்ட பீநசநோய்
தங்குசெவித் தோடஞ் சலதோடம்—பொங்கு
மதுரதோ டந்தோலையு மாதர் கருப்ப
வுதிரதோ டங்களறு மோர்.

குணம்:—(இ-ள்.) குங்குமப்பூவினல் தாதுநட்டம், நாவறட்சி, குடல்வாதம், மேகநீர், கீல்பிடிப்பு, கபாதிக்கம், அதிக சுரம், பயித்தியம், விகுணவாதம், மண்டைவலி, கருவிழியிற் படருகின்றபூ, கண்ணோய், வாந்தி, சலபீநசம், காதுமந்தம், நீர் ஏற்றம், வாயினிப்பு, பிரசவமலினம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, ருதுவர்த்தனகாரி, உதிரவாதஹரகாரி, உற்சாககாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் குங்குமப்பூவைக் கருப்பமுள்ள ஸ்திரீகள் வேளைக்கு $\frac{1}{2}$-1 குன்றி எடை தாம்பூலத்துடன் சேர்த்துவர, சீதள சம்பந்தமான பிணிகள் அணுகாது. இதுவன்றிப் பிறக்கும் குழந்தை நல்ல தேஜசும், திடகாத்திரமும் பெற்று இருக்கும்.

ஒருவிராகனெடை குங்குமப்பூவை 3 அவுன்ஸ் சோம்புக் கியாழத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க எளிதில் பிரசவமாகும். இரண்டு விராகனெடை குங்குமப்பூவைச் சிறிது சலம் விட்டரைத்து உள்ளுக்குக் கொடுக்க வயிற்றில் மரித்த சிசு வெளி

யாகும். வேளைக்கு மூன்று குன்றியெடை குங்குமப்பூவைத் தினம் 3 வேளை வெற்றிலையில் வைத்துத் தின்னும்படியாகக் கொடுக்க பிரசவித்த ஸ்திரீகளுக்குண்டான உதிரச் சிக்கலை வெளியாக்கும். குங்குமப்பூவைச் சிறிது முலைப்பாலில் கரைத்து வடிகட்டிக் கண்களில் இரண்டொருதுளி விட்டுக்கொண்டுவரக் கண்ணீர்முட்டல் முதலியவைகள் குணமாகும். இதனை முலைப்பால்விட்டு அரைத்து நெற்றிக்குப் பற்றுப்போடத் தலைவலி நீங்கும். குங்குமப்பூவுடன் அபின், விளாம்பிசின், பனைவெல்லம் கூட்டியரைத்து இரண்டு வட்டமான தாளில் தடவிக் கன்னப்பொறிகளில் ஒட்டிவைக்க எவ்வித அசாத்தியமான தலைவலியும் நீங்கும். இதனுடன் இதர சரக்குகளைக்கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில அனுபவ முறைகளாவன—

குங்குமப்பூ மாத்திரை.

குங்குமப்பூ பலம் 1, சுக்கு, திப்பிலி, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், சந்தனத்தூள், கடுக்காய், தான்றிக்காய், நெல்லி வற்றல், தேவதாரு, கடுகுரோகணி வகைக்குப் பலம் $\frac{1}{2}$, கோரோசனம் பலம் $\frac{1}{4}$ இவற்றை சூரணித்துக் கல்வத்திற் போட்டு எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, கண்டங்கத்திரிப் பழச்சாறு இவைகளால் முறையே ஒன்றன்பின் ஒன்றாக மும்மூன்று சாமம் அரைத்து, உளுந்து, மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச்செய்து, நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்துக. குழந்தைகட்கு உளுந்து பிரமாண மாத்திரைகளையும், பெரியவர்களுக்கு மிளகு பிரமாணமான மாத்திரைகளையும், வயதுக்குத் தக்கபடி 1-2, தேன், இஞ்சி சுரசம், கம்மாறுவெற்றிலைச்சாறு இவைகளில் அனுபானஞ் செய்துகொடுக்கச் சலதோஷம், சுரம், நாவறட்சி, சிரபாரம், தலைவலி, சூதகக்கட்டு இவைகள் போம்.

குங்குமப்பூ நெய்.

குங்குமப்பூ, சர்க்கரை வகைக்கு விராகனெடை 1 இவற்றைக் கல்வத்தில் போட்டுச் சிறிது பசுவின்பால் விட்டு நெகிழ அரைத்து, ஆழாக்குப் பசுவின்பாலில் கலக்கிவிடவும். பின்னர் அதனுடன், அப்பட்டமான ஆழாக்குத் தேங்காயெண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடிகட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை நாசியில் 5-6 துளி விட்டுக்கொண்டுவரச் சகல பீநசரோகமும் ஒழியும்.

குசும்பாச்செடி.

(Carthamus Tinctorious).

நீரைப் பிரித்துவிடும் நீண்டசொறி வீக்கம்போம்
காரைப் பழித்தகுழல் காரிகையே—சீரைக்கேள்
வேறுபடும் சூலை விலகும் பிடிப்பறுமே
கூறுங் குசும்பாவிற் கு.

குணம்:—(இ-ள்.) குசும்பாச்செடியினால், சிறுநீர்க்கட்டு, சொறி, வீக்கம், சூலை, பிடிப்பு இவைகள்போம் என்க.

செய்கை :—மலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை :—இதன் புஷ்பத்தை உள்ளுக்கு உபயோகப்படுத்த வாதசம்பந்தமான ரோகங்கள் போம், தாது பலப்படும், இன்னும் ஈரலுக்கு வன்மையைத்தரும். இதைத் தேனில் அரைத்துப் படைகளுக்குத் தடவ ஆறும். இதைக் காடியில் அரைத்துச் சொறி, சிரங்கு, கரப்பான், தினவு முதலியவைகளுக்கு மேற்பூச ஆறும்.

இதன் உலர்ந்த புஷ்பத்தில் வேளைக்கு ½ அல்லது 1 விராகனெடை கியாழமிட்டு தினம் மூன்றுவேளை உள்ளுக்குக் கொடுக்கக் காமாலை தீரும். மலமும் இளகலாகப் போம். இந்தச் செடியின் சமூலத்தை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துச் சொறி சிரங்குகளுக்குத் தடவ ஆறும். இந்த எண்ணெயைக் கை கால் பிடிப்பு, பாரிசவாதம், நோயுள்ள கணுக்களின் வீக்கம் இவைகளுக்குத் தேய்க்கக் குணமாகும். இதில் ¼ பலம் உலர்ந்த புஷ்பத்தை ஒரு மட்குடுவையில்போட்டு மூன்று ஆழாக்கு சலம்விட்டு இரண்டு ஆழாக்கு இருக்கச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் வீதம் சூடாகக் கொடுத்துவரக் காமாலை, சலதோஷம், கைகால் பிடிப்பு முதலியவைகள் நீங்கும்.

குதிரைக்குளம்படி இலை.

(Kuthiraickulambadi Leaves).

குதிரைநடை வாயுசந்நி கூறுநமை யும்போம்
குதிரைக் குளம்படியைக் கோரிச்—சதிராகக்
கொண்டுப் பரிகாரங் கோதையே நீகூட்டக்
கண்டப் பிணியகலுங் காண்.

குணம் :—(இ-ள்.) குதிரைக்குளம்படிப்பூண்டுக்கு அசுவ வாதம், சன்னி, தினவு முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை :—இதனை இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றைக் கட்டிகளின்மீது படிப்படியாகப் பூசிக்கொண்டுவரக் கட்டி உடையும். உள்ளிருக்கப்பட்ட முளையும் வெளியாகும். அல்லது அதன் இலையைச் சலம்விட்டு வேகவைத்து அவ்விலையை மேல் வைத்து கட்ட உடைத்துக்கொள்ளும். வாயுவானது அண்டத்தில் சேர்ந்து பெருத்தும், ஆண்குறியானது சுருக்கமுற்றும், அடிவயிறு முதற்கொண்டு சகிக்க முடியாத பாதையாயும் இருக்கின்ற அசுவவாதத்திற்கு இந்த இலையைக் கியாழமிட்டு இடுப்பு, அடிவயிறு, அண்டம் முதலிய பாகங்களுக்குத் தாளக்கூடிய சூட்டில் 10-12 நிமிஷம்வரையில் தாரையாக மேலூற்ற வலி நீங்கிக் குணமாகும். அடுத்த நாள் மலப்பிரவர்த்தியாகக்கூடிய ஏதேனும் ஒரு சிகிச்சையைச் செய்தல் நன்று.

குதிரைவாலி.

(Convolvulus Tridentatus).

கடுப்பு கழிச்சல் கனன்றசுர தாக
மிடுப்புவலி வாத மிவற்றே—டடுப்ப
விதிரைவா வென்றழைக்கு மேகமும் போகுங்
குதிரைவா லிக்குக் குலைந்து.

(இதுவுமது)

காசம் பருப்படுவன் கண்மயக்க மீளையொடு
வாசங் கமழ்குழலாய் மாந்தமும்போம்—பேசத்
தரியாது வாதகபந் தானே சொறிபோம்
மிரியார்கூந் தற்கு விரைந்து.

குணம் :—(இ-ள்.) குதிரைவாலியால் மூலக்கடுப்பு, அதிசாரம், சுரவேகத்தால் வந்த நாவறட்சி, சகனவிருதவாதம், வாதநோய், பிரமேகம், இருமல், கட்டி, படுவன், நேத்திரமங்கல், கோழை, அக்கினிமந்தம், வாதகபதொந்தம், தினவு ஆகிய இவைகள் போம்.

உபயோகிக்கும் முறை :—பெரும்பான்மை இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

அசீரணசுரக் கியாழம்.

முதியார்கூந்தல், மாம்பட்டை, அதிவிடயம், சுக்கு, கோரைக் கிழங்கு ஆகிய இவற்றை வகைக்குப் பலம் $\frac{1}{4}$ ஆக இடித்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி, அதனை 3 வேளையாகப் பங்கிட்டுத் தினம் 3 வேளை கொடுக்கவும். அப்போது வேளைக்கு ஒரு விராகனெடை இலவம் பிசின் சூரணத்தைக் கூட்டிக் கொடுப்பது சாலச் சிறந்தது. இதனால் அதிசார சுரம் தப்பாமல் குணமாகும்.

மாந்த எண்ணெய்.

முதியார்கூந்தல், கோடகசாலை, துளசி, ஆடாதோடை, தும்பை, நற்சங்கன் இலை, சீந்தல்கொடி, நறுந்தாளி இவைகளின் சாறு வகைக்குப் பலம் 1, இவைகளின் மொத்த எடைக்குச் சமன் சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி அதனில் சாதிக்காய், திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, கோரோசனை, வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனெடை $\frac{1}{4}$ வீதம் அரைத்துப்போட்டுக் கலக்கி அடுப்பிலேற்றி பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதனைக் குழந்தைகட்குத் தினம் ஒருவேளை வயதுக்குத் தக்கபடி 1-2 தேக்கரண்டி அளவு கொடுத்துவரச் சுரம், இரைப்பு, சுவாசம், விக்கல், வாந்தி, நித்திரையின்மை முதலான அறிகுறிகளுடன் காணுகின்ற சுழிமாந்தம் குணமாகும்.

குத்துக்காற்சம்மட்டிவேர்.
(Indigofera Argentia).

சாரமுறு குத்துக்காற் சம்மட்டி வேரெனச்சோற்
கோரமுறு மாவாதக் கூட்டமெங்கே?—வீரமுறு
மேகத் தடிப்பெங்கே? வீறுதிமிர் வாதமெங்கே?
சோகத் தளர்ச்சியெங்கே? சொல்.

குணம்:—(இ-ள்.) பச்சையாயுள்ள குத்துக்காற்சம்மட்டி வேரினால் மகாவாதம் 24-ம், மேகக் கட்டிகளும், திமிர்வாதமும், மூர்ச்சையின் அயர்வும் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—ஒரு எடை இதன் வேருக்கு 10 மடங்கு சலம் சேர்த்துக் கொதிக்கவைத்து ஆறின பின்னர் வடித்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்**ஸ்** வீதம் தினம் 2-3 வேளை

கொடுத்துவர விஷத்திஞலுண்டான பல உபத்திரவங்களை நிவர்த்தி செய்யும். தேக திடத்திற்கு ஏற்றவாறு $\frac{1}{2}$-1 பலம் நிறையுள்ள பச்சை வேரைப் பாலிலிட்டுக் காய்ச்சிக் காலையில் கொடுக்க பேதியாகும். இதனுல் ஓடுவாயு, திமிர்வாயு, கட்டி முதலியவைகள் போம். இதன் காம்புகளைக் கியாழமிட்டுக் கீல்களில் உண்டான வலி, பிடிப்பு இவைகளுக்கு ஒற்றடம் கொடுக்கக் குணமாகும். அல்லது கியாழத்தை நோயுள்ள பாரிசத்தில் பொறுக்கக்கூடிய சூட்டில் தாரையாக விட்டுக்கொண்டுவரக் குணமாகும். இந்தக் கியாழத்தை வேளைக்கு $\frac{1}{2}$-$\frac{3}{4}$ அவுன்ஸ் வீதம் உள்ளுக்குக் கொடுக்கலாம். இரசகெந்திபாஷாணங்களிஞலுண்டான வாய்வேக்காட்டிற்கு இந்தக் கியாழத்தை வாய் கொப்பளிக்க ஆறும்.

இந்த மூலிகையைக் கொண்டுவரும்போது இரும்புக் கோலைக் கொண்டு பெயர்த்தெடுக்கக் கூடாது. சாதாரணமாகக் கெட்டி மூங்கிலைக் கூராகச் சீவி அதனைக்கொண்டு தோண்டிப் பெயர்த்தல் வேண்டும். இது சம்பந்தமான கியாழமோ அல்லது எண்ணெயோ ரோகி உட்கொள்ளும்போது, மருந்து சாப்பிட்டு ஸ்நானம் செய்யும்வரையில் எக்காரணத்தை முன்னிட்டும் இரும்பைத் தொடக் கூடாது. அதனுல் மருந்தின் வீரியம் கெட்டுவிடும். ஆகையால் இதனைப் பெரும்பத்தியமாகக் கருதி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இதனுடன் இதரச்சரக்குகளைக் கூட்டி எண்ணெயாகக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

குத்துக்காற்சம்மட்டி எண்ணெய்.

பரங்கிச்சக்கை பலம் $\frac{1}{2}$, திப்பிலி பலம் $\frac{1}{2}$, வால்மிளகு பலம் $\frac{1}{4}$, ஏலம் பலம் $\frac{1}{4}$, கருஞ்சீரகம் பலம் $\frac{1}{4}$, குத்துக்காற்சம்மட்டி வேர்ப்பட்டை பலம் 2 இவைகளை எல்லாம் இடித்துச் சூரணம் செய்து அதனுடன் சிறு துண்டுகளாக அரிந்த வெள்ளை வெங்காயம் பலம் $\frac{1}{4}$, தோல் உரித்த வெள்ளைப்பூண்டு பலம் ஒன்று கூட்டி அம்மிக்கல்லில் வைத்துப் பசும்பால் விட்டு மெழுகுபதமாக அரைத்துக் கால்படி பசுவின்பாலில் கலக்கி வைத்துக்கொள்க. பிறகு தைலம் காய்ச்சும்படியான ஒரு மட்பாண்டத்தில் முன் சித்தப்படுத்தி வைத்துள்ள திரவத்துடன் பத்து பலம் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து அடிக்கடி மரத்துடுப்பால் கிளரிக் கொடுத்துப் பதமுறக்காய்ச்சி வடித்துக்கொள்க. வேண்டும்போது வேளைக்குக்

கால் அல்லது அரை அவுன்ஸ் வீதம் தினம் ஒரு வேளை காலை நேரத்தில் உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி தேகத்திடத்திற்கு ஏற்றவாறு மூன்று அல்லது ஐந்து நாள் கொடுக்கவும். ஒருக்கால் முன் கூறப்பட்டுள்ள அளவில் சரிவர இரண்டு அல்லது மூன்று முறை பேதியாகாவிடின் சிறிது அளவை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனால் ஓடுவாயு என்கிற விப்புருதி வாயுவும் அதனால் உண்டாகும் கட்டிகளும் குணமாகும். சரீரத்தில் வாயுவானது பல இடங்களில் மாறி மாறி உபத்திரவம் செய்கின்ற நோய்களுக்கெல்லாம் இந்த எண்ணெய் சஞ்சீவிக்கு ஒப்பானது.

இதனை ரோகிகள் உட்கொள்ளும் காலத்தில் நல்லெண்ணெய், கடுகு, மீன், கருவாடு, புளி, வாயுப் பண்டங்கள், மாமிசம், கோழி முட்டை, புகையிலை, லாகிரி வஸ்துக்கள் முதலியவற்றை நீக்க வேண்டும்.

குந்திரிக்கம்.

(Boswellia Glabra).

காசசு வாசங் கருங்குட்ட மேகத்தாற்
பேச வருங்கட்டிப் பேருலவ—வீசும்
படர்தா மரைச்சிரங்கு பண்டைவிர ணங்க
ளிடர்செய்யிற் குந்திரிக்க மெண்.

குணம் :—(இ-ள்.) குந்திரிக்கத்தினால் இருமல், இரைப்பு, கிருஷ்ணகுட்டம், மேகக்கட்டி, தினவுடன் படருகின்ற படை, சிரங்கு, நீடித்த ரணங்கள் யாவும் நீங்கும் என்க.

செய்கை :—உற்சாககாரி, கபஹரகாரி, உதரவாதஹரகாரி, பூதிகந்தநாசினி.

உபயோகிக்கும் முறை :—இதனை அரைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு 5 முதல் 7 குன்றி எடை நெய்யிற்கொள்ள மூளை, இருதயம் இவைகளில் உண்டாகும் சில ரோகங்கள் போம். இதனைக் கோழிமுட்டை மஞ்சள்கருவில் கூட்டிப் பொறித்துச்சாப்பிட இந்திரியம் வலுக்கும். இதன் பொடியை வெண்ணெயுடன் சேர்த்தரைத்து ரணங்களுக்குப் போட ஆறும். இதனை முலைப்பாலிலுரைத்துக் கண்களுக்குப்போடக் கண்களிலுள்ள பல ரோகங்களை நிவர்த்திசெய்யும். ஒரு புது மட்பாண்டத்தில் 3-4

படி சுத்த சலம்விட்டு அதனில் குந்திரிக்கக் கட்டிகளைப் போட்டு ஊறவைத்து அந்தச் சலத்தைத் தினம் சாப்பிட்டுவர ஞாபகமறதி நீங்கும். இதனைப் பழக்கமாக வைத்துக்கொள்ளக்கூடாது. இதன் வீறு சரீரத்தில் பிரபலப்பட்டால் பயித்திய முண்டாகும்.

குந்திரிக்கக் களிம்பு.

குந்திரிக்கம் பலம் 5, தேன்மெழுகு பலம் 5, நல்லெண்ணெய் பலம் 5 இவைகளை ஒரு இரும்புக் கடாயில்போட்டு சிறு தீயில் உருக்கி நன்ருய்க் கலக்கிச் சூடாய் இருக்கும்போதே வடித்து பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்தக் களிம்பைச் சொறி, சிரங்கு, படை, ஆருதரணம் முதலிய ரணங்களுக்கு மேல் தடவி வர விரைவில் ஆறும்.

குப்பைமேனி.

(Acalypha Indica).

தந்தமூ லப்பிணிதீத் தந்திடுபுண் சர்வவிஷ
முந்துகுன்மம் வாத முதிரமூ—லந்தினவு
சூலஞ் சுவாசந் தொடர்பீந சங்கபம்போம்
ஞாலங்கோண் மேனியத னுல்.

குணம்:—(இ-ள்.) குப்பைமேனி இலையால் தந்தமூலரோகம், தீச்சுட்டபுண், தாவர சங்கம விஷங்கள், வயிற்றுவலி, வாதரோகம், ரத்தமூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, பீநசம், கபாதிக்கம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—இலைக்கு—வமனகாரி, கபஹரகாரி; வேருக்கு—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதற்கு மலத்தைப்போக்கும் குணமுண்டு. சிறிது அளவு அதிகப்படின் வாந்தியை உண்டாக்கும். குழந்தைகட்கு ஒரு தேக்கரண்டி அளவு கொடுக்க வாந்தியாகும். கோழையை யறுத்து வெளியாக்கும். இதன் இலையை அரைத்து மேகரணங்களுக்கும் விஷக்கடிகளுக்கும் வைத்துக்கட்டக் குணத்தை யுண்டாக்கும். இதன் இலைச்சாறும் சுண்ணும்பும் கூட்டி மத்தித்துப் பூரான், வண்டு, குளவி முதலிய கொட்டு அல்லது கடிவிஷங்களுக்கு மேற்றடவக் குணமாகும். இந்த இலைச் சாற்றுடன் உப்புக்கூட்டி அரைத்துச் சொறி, சிரங்கு முதலியவற்றிற்குப் பூசித் தேய்த்து ஸ்நானம் செய்யக் குணமாகும். இதன்

உலர்ந்த இலைச் சூரணத்தைத் தீச்சுட்ட புண், நீடித்தநோயில் படுக்கையிலுண்டான ரணம் இவைகளுக்கு மேற்றூவிவர ஆறும். பயித்தியத்திற்கு இதன் இலைச்சாறு ஒரு அவுன்ஸ் வடிகட்டி அதனுடன் 3 குன்றி எடை சாப்பிடும் உப்பைக் கரைத்து வைத்துக்கொண்டு காலையில் ரோகியைப் படுக்கவைத்து நாசியின் இரு துவாரங்களிலும் 5-6 துளி விடவும். நாசியிலிருந்து சளியும் துர்நீரும் வெளியாகும். உடனே குளிர்ந்த சலத்தை சிரசிற்கொட்டி ஸ்நானம் செய்விக்கவும். இப்படி 3 நாள் காலையில் செய்துவைக்கச் சிரசிலுள்ள கெட்டநீரை வெளியாக்கி, மூளையைச் சுத்தப்படுத்திச் சித்தப்பிரமையை குணமாக்கும்.

இதனைச் சுத்தமாக ஆய்ந்து உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்துவைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் அந்திசந்தி சாப்பிட்டுவர மூலம், பவுத்திரம் முதலியவைகள் போம்.

குமரி.

(Aloe Barbadensis).

பொல்லாமே கங்கபம்பு மூச்சூலை குஷ்டரச
மல்லார்மத் தம்பகந்த ரங்குன்ம—மெல்லாம்விட்
டேகு மரிக்கு மெரிச்சற் கிரிச்சரமு
மாகு மரிக்கு மருண்டு.

குணம்:—(இ-ள்.) நறுங் கற்றாழைக்கு வாதமேகம், கபகோபம், கிரிமிக்குத்தல், பெரும்வியாதி, மூலம், உன்மாதம், பகந்தரம், வயிற்றுநோய், தினவுள்ள பித்தகிரிச்சரம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் ஒரு மடலைச் சீவி மேற்றோல் கழித்து உள்ளிருக்கும்படியான சோற்றைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சலம்விட்டு ஏழுமுறை கழுவி எடுத்து சிறிது கற்கண்டுத் தூளிட்டுச் சாப்பிடத் தேகத்திலுள்ள வெப்பம் தீரும். கண், கை, கால் முதலிய அங்கங்களிலுண்டான எரிச்சல் முதலியவைகள் நீங்கும். நீர் எரிச்சலையும் குணமாக்கும். இந்த மூலிகையானது மேகரோகங்களுக்கு அதிகச் சிறந்தது. அயக்காந்தம், மண்டூரம் முதலியவற்றைச் செந்தூரமாக்குவதற்கு இதனைவிடச் சிறந்த மூலிகைக் கிடையாது. இதனைக்கொண்டு குளிர்ச்சி எண்ணெய் காய்ச்சுவது வழக்கம். எங்ஙனமெனில்—

குமரி எண்ணெய்.

ஒரு வீசை சோற்றுக்கற்றாழை மடல்களைக் கொண்டுவந்து மேற்றோல் சீவிக்கழித்து உள்ளிருக்கும் சோற்றைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் போட்டு சலம்விட்டு 7 முறைக் கழுவியெடுத்து ஒரு சுத்தமான பழகின மட்பாண்டத்திலிட்டு அதனில், 5 பலம் கடுக்காய்த்தூளைக் கூட்டிப் பிசைந்துப் பிசைந்து கிடைக்கும்வரையில் அதனிலுள்ள சாற்றை வாங்கி வடிகட்டி ஒரு தைலபாண்டத்தில் விட்டு ஒரு படி சிற்றாமணக் கெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக்காய்ச்சி வடிகட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது 2 அல்லது 3 பலம் எண்ணெயைக் கல்வத்திலிட்டுக் குழம்புப்பதத்திற்குத் தேவையான உயர்ந்த பனங்கற்கண்டைக் கூட்டியரைத்துக் கோப்பையில் பத்திரப்படுத்துக. தினந்தோறும் இரவு படுக்கைக்குப் போகும்போது ஒரு ரசத்தாளி அல்லது பேயன் வாழைப்பழத்தைச் சிறுதுண்டுகளாக அரிந்து இரண்டொரு துண்டுகளைச் சித்தப்படுத்தி வைத்துள்ள எண்ணெயில் தோய்த்துச் சாப்பிட்டு மிகுதியுள்ள பழத்தையும் சாப்பிட்டுவிடவும். இப்படி ½ அல்லது 1 மண்டலம் சாப்பிட்டுவர வெட்டைச்சூடு தணிந்து தேகம் பெருக்கும், மலச்சிக்கல் நீங்கும். தற்காலத்தில் பெருமையாக மதிக்கக்கூடிய "காட் லிவர் ஆயில்" இதற்கு நிகராகாது.

குருவிச்சிப்பூண்டு.
(Ehretia Buxifolia).

குருவிச்சிப் பூண்டெனவே கூப்பிட்டாற் போதும்
வருவிச்ச குஷ்டம் மலடும்—ஒருமிச்ச
மேகக் கரப்பான் விடமாந்தஞ் சீதரத்தம்
பேதமறப் போமொருகாற் பேசு.

குணம்:—(இ-ள்.) குருவிச்சிப்பூண்டினால் பெருவியாதி, மலடு, சிலேஷ்மமேகம், கரப்பான், விஷமாந்தம், சீதரத்தக்கிரகணி முதலியவைகள் தீரும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலத்தை இடித்துச்சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼-½ விராகனெடை சிறிது சர்க்கரை கூட்டித் தினம் இருவேளை கொடுப்பதுண்டு. அல்லது சமூலத்தூளை 1 பலம் அளவுக்கு ஒரு மட்குடுவையில் போட்டு

1 படி சலம்விட்டு, $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுப்பதுண்டு. இதனால் சீதரத்தகிரகணி, மலடு, குஷ்டம், கரப்பான் முதலியவைகள் குண மாகும்.

பொதுவாக வைத்தியர்கள் சமூலத்தைவிட இப் பூண்டின் வேர்ச் சூரணத்தையே விசேஷமாகக் கியாழங்களில் கூட்டுவதுண்டு. இதில் அதிக சாரம் அடங்கியுள்ளது. நீடித்துக் கொடுத்துவருங் காலத்தில் மேகரோகத்தாலுண்டான குஷ்டத்தையும், தோல் சம் பந்தமான பற்பல ரோகங்களையும், எக்காரணத்தினாலும் ஸ்திரீ களைப் பற்றியுள்ள மலட்டு ரோகத்தையும் குணப்படுத்துவதில் இது சிறந்ததாகும்.

குரோசாணிஓமம்.

(Hyoscyamus Niger).

வெகுமூத் திரம்வாதம் வீரியநட் டம்புண்
ணுகுபேதி யுட்கடுப்பி னேடே—மிகுகரப்பான்
தீராக் கபமிவைபோஞ் செய்யகுரோ சானியென்றால்
வாரா மயக்கமுறு மால்.

குணம்:—(இ-ள்.) குரோசாணிஓமத்தால் அதிமூத்திரம், வாதாதிக்கம், விந்துநட்டம், விரணம், வாதாதிசாரம், உடற்கடுப்பு, கரப்பான், நீங்காக் கபநிறைவு ஆகிய இவைகள் நீங்கும். இன்னும் இதனிடத்தில் அதிக மயக்கம் உண்டாம் என்க.

செய்கை:—சமனகாரி, வேதனாசாந்தினி, அங்காகர்ஷண நாசினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 1-2 குன்றி எடை தேனில் தினம் 2 வேளை கொடுக்கவும். $\frac{1}{2}$ விராக னெடை குரோசாணிஓமத்தை சலம்விட்டு அரைத்து $\frac{1}{2}$ ஆழாக்கு சலத்தில் கலக்கி $\frac{1}{4}$ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சிறிது தேன் அல்லது சர்க்கரை கூட்டிக்கொடுக்க இருமல் ரோகத்தினாலுண்டான கஷ்டசுவா சத்தை கண்டிக்கும். நல்ல நித்திரையை உண்டாக்கும். அஜாக்கிரதை யாக அளவு அதிகப்படின் ஊமத்தம்வித்தைப்போல் வெறியுண் டாக்கும். முதலில் தேகதிடத்திற்கு ஏற்றவாறு சிறிய அளவில் ஆரம்பித்து குணம் ஏற்படாவிடின் சிறிது அளவை அதிகப்படுத்திக் கொள்ளலாம். இது அபினி, கஞ்சா முதலியவற்றைப்போல்

மலசலத்தைக் கட்டாது. குழந்தைகளுக்கு மேற்கூறப்பட்ட அளவில் 10-ல் ஒரு பாகம் முலைப்பாலில் கொடுக்கலாம். இது குழந்தைகட்குண்டான அஜீர்ணத்தைப் போக்கும். குழந்தைகள் இரவு காலத்தில் தூக்கம் பிடிக்காமல் உபத்திரவம் செய்யின் அப்போது கொடுக்க நல்ல நித்திரையை யுண்டாக்கும். அபினி, கஞ்சா சேர்ந்த பூரணாதி லேகியம்போல் கெடுதல் செய்யாது. இதன் விதையைச் சலம்விட்டு அரைத்துப் புருவத்தின்மேற் றடவக் கண்தாரை விரியும். இதன் வித்தைப் பிராந்திவிட்டு அரைத்துக் கை, கால், கீல்களின் வீக்கம், ஸ்திரீகளுக்குண்டாகும் மார்பு வீக்கம், அண்டவீக்கம் இவைகட்குத் தடவிவர வீக்கம்போம். கால்விராகனெடை குரோசானிஓமத்துடன் ஒரு விராகனெடை கசகசாவைச் சேர்த்து அரைத்துத் தேன்விட்டுமத்தித்து இருவேளையாகப் பங்கிட்டு அந்திசந்தி கொடுத்துவர, விக்கல், பிடிப்பு முதலியவைகள் போம்.

குழிப்பறங்கிக்காய்.
(Cucurbita Hispida).

வாதக் குடைச்சலுறு மாருத வையமுமாம்
போதவளிச் சூலையுண்டாம் பொற்கொடியே—யோதுங்
குழிப்பறங்கிக் காய்க்குக் குளிர்ச்சி நிறையும்
பழிக்கடுத்த மாந்தமிகும் பார்.

குணம்.—(இ-ள்.) குழிப்பறங்கிக்காய்க்கு வாதக்கடுப்பு, கபவிருத்தி, வாதசூலை, அக்கினிமந்தம் இவைகள் உண்டாம். இதனைக் குளிர்ச்சி என்பர்.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பாகப்படி சமைத்துண்ண உதிரத்தைக் குழம்புபோ லுறையச்செய்யும். வயிற்றில் வாயு உபரியாகும். அக்கினிமந்தத்தை யுண்டாக்கும். ஆகையால் இதனைப் பத்திய பதார்த்தங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றது.

குளப்பாலைமரம்.
(Holarrhena Pubescens).

சுவாசகர சம்பக்க சூலையதி சார
மவாச லியர்ப்போ டனலங்—தவாத
கரப்பா னிவைவிலகுங் காரிகையே நாளு
முரப்பாங் குளப்பாலை யுண்.

குணம்:—(இ-ள்.) பலமுள்ள குளப்பாலை மரத்தினால் விச்சின்னசுவாசம், இருமல், பக்கசூலை, பேதி, வியர்வை, சுரம், கரப்பான் ஆகிய இவைகள்போம் என்க.

(இதுவுமது)

வாதமறும் பேதிகட்டு மாருத நீரிழிவுங்
காதம்போ மேகங் கடக்குங்காண்—தீதடரப்
பொங்கு கரப்பானும் போகா விரணமும்போ
மிங்குகுட சப்பாலைக் கேண்.

(இ-ள்.) குடசப்பாலை மரத்திற்கு வாதநோய், அதிசாரம், அதிமூத்திரம், தந்துப்பிரமேகம், கரப்பான், சிரங்கு ஆகிய இவை போம் என்க.

செய்கை:—முறை வியாதிரோதி, பலகாரி, சுரஹரகாரி, கிருமி நாசினி, விரணகாரி, வமனகாரி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—1½ பலம் குளப்பாலைப்பட்டையை பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கடத்தில்போட்டு 1 படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துக் கால் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுத்துவரச் சுரம், தேகதுர்பலம், சீதபேதி, அதிசாரம் முதலியவைகள் போம். இதன் பட்டைச் சூரணத்தில் வேளைக்கு 15-30 குன்றி எடை சிறிது சர்க்கரையுடன் கூட்டியாவது அல்லது இதன் பட்டைச்சாறு எடுத்து வடிகட்டி வேளைக்கு ஒரு தேக்கரண்டி அளவில், சிறிது இஞ்சி ரசம் கூட்டியாவது கொடுத்துவரச் சீதபேதி, ரத்தபேதி, குடலில் உள்ள கிருமிகள் முதலியவைகள் நீங்கும். இதன் வித்து, கோரைக்கிழங்கு வகைக்கு 3 தோலா வீதம் அம்மியில் வைத்து சலம்விட்டு அரைத்து ¼ படி சுத்த சலத்தில் கலக்கி அடுப்பிலேற்றி நாலில் ஒரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டிச் சிறிது தேன் கூட்டி வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்க ரத்தமூலம் வயிற்றிலுள்ள கிருமிகள் போம். இந்தக் கியாழத்தில் சிறிது இஞ்சிரசம் கூட்டி கொடுப்பது சாலச் சிறந்தது.

இதன் வித்தில் ஒரு தோலா எடை எடுத்து அம்மிக்கல்லிலிட்டுச் சலம்விட்டு அரைத்து ½ படி சுத்த சலத்தில் கலக்கி வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு இதை வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவரச்

சுவாசகாசம், வயிற்றுவலி, நீரிழிவு, இரத்தமூலம், சீதபேதி, அதி சாரம் ஆகிய ரோகங்கள் குணமாகும். இதன் பட்டையைக் கியாழ மிட்டுப் பொறுக்கக்கூடிய சூட்டில் வாய்கொப்பளிக்கப் பல்வலி நீங்கும். இதனுடைய வித்தும் பட்டையும் வெட்பாலையை ஒத் திருக்கும். ஆகையால் பண்டிதர்கள் பகுத்துணர்ந்து உபயோகிக்கக் கடவர்.

குன்றிமணி.

(Abrus Precatorius-seeds).

நேத்திரநோய் பித்த நிறமழுங்கல் காமாலை
வேர்த்திடுதா பச்சோப வெப்புடனே—கோத்திட்ட
வையமும்போம் விந்துவா மாயிழையே காட்டிலுறை
செய்யகுன்றி யின்விதையைச் சேர்.

குணம்:—(இ-ள்.) சிவந்த குன்றிமணிப்பருப்பினால் கண் ணோய், பித்தநோய், மாறுநிறம், காமாலை, வியர்வையோடு வெப் பத்தைத் தருகின்ற மூர்ச்சைசுரம், சிலேத்துமக்கோபம் ஆகிய இவைகள் நீங்கும். சுக்கில விருத்தியும் உண்டாம் என்க.

செய்கை:—சிறியஅளவில்—பலகாரி, காமவிர்த்தினி. அதிக அளவில்—வமனகாரி, மலகாரி, விரணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வித்தை உடைத்து மேற்றோல் நீக்கிச் சன்னமாகப் பொடித்துச் சூரணம்செய்து வேளைக்குத் தேக திடத்திற் கேற்றவாறு $\frac{1}{2}$-1 குன்றி நிறை ஆழாக்கு வெள்ளாட்டுப் பாலிலாவது அல்லது பசுவின்பாலிலாவது போட்டுக் காய்ச்சி வடி கட்டிக் குடிக்க நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும். தாது பலப் படும். பாலிலிட்டுக் கொதிக்கவைக்காவிட்டால் நஞ்சுக்கொப்பா கும். அளவு அதிகமாயின் வாந்தியையும் பேதியையும் உண்டாக் கும். இதனைப் பண்டிதர்கள் தேகதிடம் அறிந்து உபயோகப் படுத்துவது கடமையாகும்.

குன்றிமணிக்கொடி.

(Abrus Precatorius).

வீக்கம் பிடிப்போடு வெய்யநோய் மூச்சடைப்புத்
தாக்கு மிருமல் தனித்துடலில்—நோக்கமுடன்
நன்றுபெரு வெண்குட்டம் நாளும் குன்றிவிடும்
குன்றிகோடி யின்பெருமை கூறு.

குணம்:—(இ-ள்.) குன்றிக்கொடியால் வீக்கம், பிடிப்பு, மூச்சடைப்பு (மார்பு நோய்), இருமல், வெண்குட்டப்படைகள் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—இலைக்கு-வேதனைசாந்தினி, வேருக்கு-கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—மார்பு, முதுகு, இடுப்பு, இன்னும் தேகத்தின் எந்த பாரிசத்திலாவது நோய் கண்டால் அந்த இடத்தில் கடுகு எண்ணெயையாவது அல்லது விளக்கெண்ணெயையாவது தடவி அதன்பேரில் குன்றி இலையைப் பரவும்படியாக அப்பிச் சிறிது நெருப்பனல் காட்ட குணமாகும். கடுகு எண்ணெய் தேய்த்த காரணத்தின்பொருட்டு சிறிது எரிச்சல் மிகின் உடனே வெந்நீரில் சீலையை நனைத்துப் பிழிந்து அச்சீலையால் சுத்தமாகத் துடைத்து விடவும்.

சித்திரமூலப்பட்டையை அம்மிக்கல்லில் வைத்துக் குன்றியிலைச் சாறுவிட்டு அரைத்து இலேசாக வெண்குட்டப்படையுள்ள இடத்தில் தடவிவரவேண்டும். அந்த சந்தர்ப்பம் எரிச்சல் கண்டால் சலம்விட்டுச் சுத்தமாக அலம்பிவிடவேண்டும். இப்படிச் சிலதினம் செய்துகொண்டுவர நிறம் மாறும். சில சந்தர்ப்பம் வியர்க்குருபோல் கொப்பளித்துவிடும். அப்போது தேங்காய் எண்ணெய் தடவிவர ஆறுவதுடன் நிறமும் மாறும்.

இதன் இலையைச் சிறிது மென்று கொஞ்சங் கொஞ்சமாக இதன் சாரத்தை யுட்கொள்ளத் தொண்டை கரகரப்பு நீங்கும். குன்றிச்செடியின் வேர்பட்டை ரூபாய் எடை 5, இலேசாக அரிந்த வெண்டைக்காய் ரூபாய் எடை $2\frac{1}{2}$ இவைகளை ஒரு பழகின மட்குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதனுடன் $7\frac{1}{2}$ பலம் சர்க்கரை கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு குழந்தைகட்கு வயதுக்கு தக்கபடி 1-4 தேக்கரண்டி அளவு தினம் 3-4 வேளைக் கொடுத்துவர இருமல் போம்.

கூகைக்கிழங்கு.

(Curcuma Angustifolia).

மேனியிடும் வாய்க்கு மிருதுவா மாக்கியுண்ணத்
தானிருமல் வெப்பதிக தாகமிவை—ஏனிருக்கும்
அம்பே றிளங்கிழங்கை யாவலித்தே கேட்கப்பூங்
கொம்பேகூ கைக்கிழங்கைக் கூறு.

குணம்:—கூகைக்கிழங்கைச் சமைத்து உண்ணில் தேக புஷ்டி உண்டாகும், இருமலும், சுரமும், தாகமும் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கு பார்வைக்கு மஞ்சட் கிழங்கைப்போல் வெண்மை நிறமாக இருக்கும். இதன் மேற்றோலைச் சீவி அதிக காரம் சேர்க்காமல் பாகப்படி பொறியலாகவாவது அல்லது வறுவலாகவாவது செய்து உண்ணத் தேகம் குளிர்ச்சி பெறுவதுடன் தேக புஷ்டியுண்டாகும். பெரும்பாலும் இந்தக் கிழங்கின் மேற்றோலைச் சீவிச் சிறிது உரலிலிட்டு இடித்து சலம் தெளித்து வெண்ணெய்போல் அரைத்து வலவலவென்ற உரப்பான சீலையில் தளர்ச்சியாக முடிச்சுக்கட்டி ஒரு மட்பாண்டத்தில சலம் விட்டு அதனில் இந்த முடிச்சைவிட்டுச் சத்து இறங்கும்வரையில் பிசைந்து பிசைந்துகொண்டு வருக. அப்பால் 2-3 மணி நேரம் அசையாமல் வைத்திருக்க சலம் தெளிந்திருக்கும். இதை வடித்து விடவும். மீண்டும் சலம்விட்டு மாவைக் கரைத்துக் கரைத்துத் தெளியவிட்டு சலத்தை வடித்து விடுக. இப்படி 7 முறை செய்ய அதிலுள்ள சிறு கசப்பு நீங்கிவிடும். இதனை இரவியில் உலர்த்தச் சுத்தமான மாவாக இருக்கும். இதனையே கூகைநீறு எனக் கூறுவர். இதன் உபயோகத்தை அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

கூகை நீறு.

(Curcuma Angustifolia Flour).

கூகைநீற் றுன்மாதர் குய்யநோய் வித்திரிதி
யாகமெனு மார்புநோ யண்டுமோ—போகமதில்
வீரியமு முண்டாகும் வீழ்கிருமி நோயோடு
தூரிரும லீளையும்போஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) கூகைநீற்றினால் யோனிரோகம், வித்திரிதிக் கட்டி, இருதயவாதம், கீரிப்புழு, காசம், கோழை இவைகள் போம். விந்து புஷ்டியாம்.

செய்கை:—பலகாரி, சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:— நான்கு தேக்கரண்டி அளவுள்ள மாவை $2\frac{1}{2}$ ஆழாக்கு சலத்தில் போட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிக் கொதிக்கவைக்கக் கஞ்சிபோலாகும். இத்துடன் பசுவின்பால் சர்க்கரையிட்டுக் குழந்தைகட்கும், பெரியோர்களுக்கும் கொடுக்க எளிதில் ஜீரணமாகும். வயிற்றிலுள்ள ரணங்கள் ஆறும். சாதாரணமாக

வயிற்றில் ரணமுண்டாகிவருகின்ற விஷசுரம் (டைபாயிட்) உடைய வர்களுக்கும் பல காரணங்களில் அடிக்கடி மலப்போக்கு உடைய வர்களுக்கும் இது சிறந்த பத்தியமான கஞ்சியாகும். இந்தக் கஞ்சி யானது ஆயாசத்தை நீக்கி உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியது.

கூத்தங்குதம்பை.

(Kuthangkuthambai).

குத்துகின்ற நோய்போக்குங் கோரபித்த முண்டாக்கு
மத்திசெய்யுஞ் சந்நி யகற்றுங்காண்—சத்திக்கு
மரத்தங்கு வாய்வொழிக்கும் மண்டூரத் திற்குதவுங்
கூத்தங் குதம்பைக் குழை.

குணம்:—(இ-ள்.) கூத்தங்குதம்பையிலை, சூலைநோய், சந்நி பாதம், மகாவாதம் ஆகிய இவைகளை ஒழிக்கும். பித்தத்தை விருத்தி செய்யும், மண்டூரத்தைச் செந்தூரமாக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சாற்றினால் சோற்றுப்பை அரைத்து அரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். இதன் சமூலத்தை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு வேளைக்கு 5-10 குன்றி எடை தினம் 2 வேளை சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுத்துவர இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்கள் நீங்கும். இன்னும் இதனுடன் இதரச் சரக்குகளைக்கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

வீக்க கண எண்ணெய்.

கூத்தங்குதம்பைவேர், வெள்ளைப்பூண்டு, வசம்பு, ஓமம், அதி மதுரம், கோஷ்டம், கிராம்பு, சுக்கு, மிளகு, ஏலம் வகைக்கு விராக னெடை 1 இவைகளை இடித்து $2\frac{1}{2}$ பலம் சிற்றாமணக் கெண்ணெயில் போட்டு வெய்யிலில் சில நாள் வைத்துக்கொண்டு வருக. இது நன்றாய் ஊறிச் சத்துப் பிரிந்தபின் வடிகட்டி வைத்துக்கொண்டு குழந்தைகட்கு $1\text{-}1\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு தினம் ஒரு வேளைக் கொடுத்துவர வீக்க கணம் குணமாகும்.

* கூந்தற்பனை.

(Caryota Urens).

எழுத்திற் கிடமா யிருக்குநெடுங் காலம்
வழுத்தில தன்மாழை மடலார்—கழுத்திலுறுஞ்
சோறு மலமிறுக்குஞ் சுத்தமது மெய்வளர்க்கும்
கூறுங்கூந் தற்பனைக் கோர்.

---

* இந்த இனத்தில் தாளிப்பனை என்கின்ற ஓர் மரமுண்டு. அதன் விபரத்தை அதன் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

குணம்:—(இ-ள்.) கூந்தற்பனையின் மாழையாகிய ஓலை எழுத்திற்கு இடமாக நீடித்திருக்கும். இதன் சோறு மலத்தைக் கட்டும். இதன் மது மாமிசத்தை வளர்ப்பிக்கும் என்க.

செய்கை:—இதன் சோற்றிற்கு—சங்கோசனகாரி; கள்ளிற்கு—பலகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இம்மரத்திலிருந்து எடுக்கப்பட்ட கள்ளை உண்டுவரத் தேகபுஷ்டி உண்டாக்கும், மலத்தைப் போக்கும். இதன் கொட்டையை வெண்ணெய்போலரைத்துத் தலைவலிக்கு நெற்றியில் தடவக் குணமாகும். இதன் சோறு சவ்வரிசிபோலிருக்கும். இதனை அரைத்து அடையாகச் சுட்டெடுத்தும் கஞ்சியாகச் செய்தும் சாப்பிடுவதுண்டு. இதனால் மலம் கட்டும்.

கேழ்வரகு.

(Eleusine Coraoana).

சுத்தவனி லந்தன்னைத் தோன்றுவிக்கு மல்லவெனில்
பித்தவனி லத்தைப் பிறப்பிக்குஞ்—சித்ரமலர்த்
தாழ்குழலே நீடுபஞ்சந் தாங்கியெனச் சொல்லுகின்ற
கேழ்வரகின் செய்தியிது கேள்.

குணம் :—(இ-ள்.) பஞ்சந்தாங்கி என்கிற கேழ்வரகு சுத்தவாதத்தை வருவிக்கும், அல்லது பித்தவாதத்தை வருவிக்கும் என்க.

செய்கை :—உற்சாககாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நன்றாய்க் குத்திப்புடைத்துக் காயவைத்து இயந்திரத்தில் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு அரைத்துச் சிறு கண்ணுடைய சல்லடையில் சலித்துப் பத்திரப்படுத்துவதுண்டு. இந்த மாவைப் பாகப்படி கூழ் காய்ச்சி மறுநாள் போதிய அளவு உப்பிட்டுத் தயிர் கூட்டிக் குடிக்க வாய்க்கு ருசிகரமாக இருக்கும். சிலர் இக்கூழைக் காய்ச்சுவதில் சிறிது பச்சரிசி நொய்யையும் கூட்டிக்கொள்வதுண்டு. இதுவுமல்லாமல் இந்த மாவைக் களியாக கிளரிச் சிறிது நெய் கூட்டிப் பிசைந்து காரக்குழம்பில் தொட்டு உண்பதுமுண்டு. இதனால் சரீரத்திற்கு நல்ல பலம் ஏற்படும். தேகத்தில் உஷ்ணம் அதிகரிக்கும். இந்தக் களியைக் கட்டிகளுக்கு வைத்து கட்ட எளிதில் பழுத்து உடையும்.

கேழ்வரகைச் சிறிது சலம் தெளித்து ஊறவைத்துக் கோணியின் இடையில் வைத்து மேல்பொட்டுப் போகும்வரையில் நன்றாய்த் தேய்த்து எடுத்து உலர்த்தி மாவாக அரைத்து எடுத்துக் கூழாகவாவது களியாகவாவது பக்குவப்படுத்திக் கொடுக்க நீர்வியாதியுடையவர்களுக்கு அதிக நன்மையைத் தரும். இன்னும் சிலர் பழைய கேழ்வரகைக் கொண்டுவந்து, அதை இரண்டு மூன்றுதரம் சலத்தில் கழுவி, ஒவ்வொரு தடவையிலும் உலர்த்தி முடிவில் சிறிது நெருப்பணலில் தீயாமல் வெதுப்பி, இயந்திரத்திலிட்டு அரைத்து மாவாகச் செய்து அதனை மெல்லிய சீலையில் மேற்பொட்டு இறங்காமல் வஸ்திரகாயம் செய்து, பால் சேர்ந்த கஞ்சியாகவும், ரொட்டியாகவும், தோசையாகவும் பாகப்படுத்தி, உண்பதுண்டு. இத்தகைய ஆகாரம் மதுமேகத்தையுடைவர்களுக்கு அதிக நன்மையைத்தரும்.

*கொடி எலுமிச்சங்காய்.

(Kodi Elumichonkai).

வாந்தி மயக்கம் வயிற்றுக் கழிச்சலனல்
சேர்ந்த வரோசகமுந் தீருங்காண்—தீர்ந்த
தொடியமரு மங்கையிளந் தோகா யடவிக்
கொடியெலுமிச் சங்காயைக் கூறு.

குணம்:—(இ-ள்.) காட்டிலுள்ள கொடி எலுமிச்சங்காய்க்கு வமனம், பித்தமயக்கம், மலபேதி, பித்த அரோசகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை :—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை :—இதன் உபயோகம் பொதுவாக எலுமிச்சங்காயின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

கொடிக்கள்ளி.

(Cynanchum Viminale).

செல்லரச் சொறிசிரங்கு சேருமரை யாப்புடனே
பொல்லாக் கணுச்சூலை புண்கிரந்தி—யெல்லாங்
கொடிக்கள்ளி யைக்காணின் கோதாய்!யென் னுகும்?
நொடிக்குள் ளடங்கும் நுகல்.

---

*Creeper lemon fruit.

குணம்:—(இ-ள்.) கொடிக்கள்ளியால் சொறி, சிரங்கு, அரையாப்பு, கணுச்சூலை, புண், கிரந்தி முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—மலகாரி, க்ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நெருப்பனலில் வாட்டிப் பிழிந்தெடுத்த சாற்றைக் குழந்தைகளின் பருவத்திற்கேற்றவாறு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு கொடுக்கக் கரப்பான் நீங்கும். இன்னும் இதனை விசேஷமாக எண்ணெய் பாகங்களில் சேர்ப்பதுண்டு. எங்ஙனமெனில்—

கோடிக்கள்ளி எண்ணெய்.

கொடிக்கள்ளிச்சாறு படி $\frac{1}{8}$, கொடிக்கள்ளி உலர்ந்த வேர் பலம் 1, சித்திரமூலம்வேர் பலம் 1, எருக்கம்வேர் பலம் 1, அமுக்காரக் கிழங்கு பலம் 1, இரசம், கெந்தகம், இரச செந்தூரம் வகைக்குக் கழஞ்சி 1, இவற்றுள் முதலில் கல்வத்தில் இரசத்தை விட்டுக் கெந்தகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப்போட்டு அரைத்து இரசம் மடிந்து கறுப்பு நிறமாக மாறியபின் இரச செந்தூரத்தைக் கூட்டி யரைக்கவும். அப்பால் கொடிக்கள்ளிவேர் முதலாக அமுக்கராக்கிழங்கு ஈறுயுள்ள நான்கு சரக்குகளின் சூரணத்தையும் ஷை கல்வத்திலிட்டுச் சிறிது நேரம் அரைத்துக் கொடிக்கள்ளிச் சாற்றைவிட்டுப் பிசறி வழித்து ஒரு சுத்தமான தைல பாண்டத்தில் போட்டு ஒரு படி சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் கலக்கி பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்க. இந்த எண்ணெயைத் தினந்தோறும் காலையில் தேக வன்மைக் கேற்றவாறு $\frac{1}{2}$-$\frac{3}{4}$ பலம் வீதம், தினம் ஒருவேளை கொடுக்க நன்றாப் பேதியாகும். இப்படி 5-7நாள் கொடுக்கவும். ஒருகால் சாப்பிட்ட அளவில் 4-5 முறைக்குமேல் பேதியானல் மறுநாள் எண்ணெயைச் சிறிது அளவு குறைத்துக்கொள்ளவும். அல்லது மேற்படி அளவில் சரிவர 3-4 முறை பேதியாகாவிட்டால் மறுநாள் சாப்பிடும்போது சிறிது எண்ணெயை அதிகப்படுத்திக் கொள்ளவும். இந்த எண்ணெயால் ஆறாத மேகரணங்கள், பிடிப்பு, சூலை, அரையாப்பு, கொருக்கு, கண்டமாலை, பௌத்திரம், மார்பு ஆணி முதலிய பிணிகள் போம். புளியில்லாமல் பத்தியம் இருந்தால் விரைவில் குணமாகும். அப்படிக்கொள்ள சாத்தியப்படாதவர்களுக்கு உப்பை வறுத்தும் புளியைச் சுட்டும் சேர்த்துக்கொள்வதுடன் இச்சாபத்தியமாக இருப்பது அவசியமாகும்.

கொடிக்கள்ளிப்பால்.
(Cynanchum Viminale Milk).

துய்ய கரப்பான் சொறிசிரங்கும் புண்ணும்போஞ்
செய்யகடி குஷ்டநோய் சேருமோ—மெய்யி
லடிக்கடியாங் குன்மவலி யத்தனையுந் தீருங்
கொடிக்கள்ளிப் பாலுக்குக் கூறு.

குணம்:—(இ-ள்.) கொடிக்கள்ளிப்பாலால் கரப்பான், புடை, சிரங்கு, பெருவிரணம், அக்கினிகீடக்கடி, குஷ்டம், குன்மம் இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பாலை விசேடமாக எண்ணெய்களில் சேர்ப்பதுண்டு. எங்ஙனமெனில்—

கொடிக்கள்ளிப்பால் எண்ணெய்.

கெந்தகம், கருஞ்சீரகம் வகைக்குக் கழஞ்சி எடை 6, தாளகம், மனோசிலை வகைக்குக் கழஞ்சி எடை 3, இவைகளைக் கல்வத்தில் போட்டுக் கொடிக் கள்ளிப்பாலால் நான்கு சாமம் அரைத்து 6 முற்றின தேங்காயிலிருந்து பிழிந்தெடுத்த பாலைக் கூட்டிக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து நெய் பிரியும் சமயம் கொஞ்சங் கொஞ்சமாக வடித்து எரித்துக்கொண்டு வரவேண்டும். அப்போதைக்கப்போது காணுகின்ற தைலத்தை உடனுக்குடனே வடித்துக்கொள்ளவும். இல்லாவிட்டால் தைலமானது அக்கினிக்கு இரையாகிவிடும். இந்தத் தைலத்தில் 7-8 துளி அதாவது பழய வெள்ளி அரைக்கால் ரூபாய் அகலம் பரவும் படியாக கையில் விட்டு நக்கிவிடவேண்டும். இப்படித் தினம் ஒருவேளை 5-7 நாள் கொடுக்கவும். இதற்கு பத்தியம்: வெங்காயம், பச்சைப்பயறு சம்பந்தமான பொங்கல் சேர்த்துக்கொள்ளவும். புளி, எண்ணெய், கடுகு முதலியவைகள் ஆகாது. இதனால் இடுப்பு வலி, தேகக்குடைச்சல், மேகநீர்க்கட்டு, சூலை இவைகள் போம்.

கொடிமுந்திரிப்பழம்.
(Vitis Vinifera—Small).

வெப்பருசி தாகம் விரணஞ்சு வாசகப
மெய்ப்புடைய பித்த மிரத்தபித்தஞ்—செப்பு
மடிமந்த மேக மதும்போஞ் சின்னக்
கொடிமுந்தி ரிக்கனிக்குக் கூறு.

குணம்:—(இ-ள்.) சிறுகொடிமுந்திரிப் பழத்திற்குச் சுரம், அரோசகம், தாகம், புண், இரைப்பு, க்ஷயம், க்ஷீணபித்தம், ரத்தபித்தம், விஷாலசகரோகம், பிரமேகம், மதரோகம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமலகாரி, சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தை ஆரோக்கியத்திற்காகச் சாப்பிடுவதுண்டு. நன்ருய்ப் பழுத்த இனிப்புள்ள பழமே சரீரத்திற்குக் கெடுதலையுண்டாக்காது. இது ஜீரணசக்தியை யுண்டாக்கும், மலச்சிக்கலை நீக்கும், தாகத்தையடக்கும், இரத்தத்தை விசேஷிக்கச் செய்யும். க்ஷய ரோகிகள் திராட்சை பயிராகும் படியான இடத்தில் இருந்துகொண்டு செடியிலிருந்து நன்ருய்ப் பழுத்து விழுந்த பழமாகச் சேகரம் செய்துவைத்துக்கொண்டு, ஒரு பகல் முழுதும் 10 நிமிஷத்திற்கு ஒரு பழம் வீதம் சாப்பிட்டுக்கொண்டு வரவேண்டும். இப்படிச் சிலகாலம் செய்துவரக் குணமடைவர். இந்தப் பழத்தை உண்பதிஞல் பித்த குன்மம், பெரும்பாடு, நீர்க்கட்டு இவைகள் போம். இன்னும் இது இருதய நோய், இருமல் முதலியவைகளுக்கும் சிறந்ததாகும். நன்ருய்ப் பழுத்தப்பழத்திலிருந்து பிழிந்தெடுத்த ரசம் வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் குழந்தைகளுக்கு பல்முளைக்கும்போது உண்டாகும் மலச்சிக்கலுக்குக் கொடுக்க நன்மைதரும். அதனுல் சுபாவமாகக் காணக்கூடிய கைகால் இழுப்பைத் தடுக்கும். புளிப்புள்ள பழமானது பற்கூச்சத்தையும், தொண்டைக்கட்டையும் உண்டாக்கும். இது ரோகிகளுக்கு நல்லதன்று. இந்த இனத்தைச் சேர்ந்த பெரிய கொடிமுந்திரிப் பழத்தையும் இதைப்போலவே உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதன் குணம் பின்வருமாறு:—

பெருங் கொடிமுந்திரிப்பழம்.
(Vitis Vinifera—Big).

சோமநோய் தாவரத்தாற் றேன்றுவிஷ முன்மாத
நாமமுறு மூத்திரநோய் நாடுமோ—சாமசுரம்
விண்ணேழியு மெய்குளிரும் வீறுகோடி முந்திரிக்குக்
கண்ணேளியுந் தாதுவுமாங் காண்.

(இ-ள்.) பெருங் கொடிமுந்திரிப்பழத்தால் சோம நோய், தாவரவிஷம், உன்மாதம், மூத்திரதோஷம், சாமசுரம், ஆகிய

இவைகள் நீங்கும். உடல் குளிர்ச்சியும், கண் துலக்கமும், சுக்கில விருத்தியும் உண்டாம் என்க.

கொடி வழுதுணைக்காய்.
(Kodi-Vazhuthunaikkai).

எல்லார்க்கு மேநல் லிதமாஞ் சிலேஷ்மத்தைப்
புல்லார்க்கும் பத்யம் புசிக்கலா—முல்லைக்
கடிகமழும் வார்குழலே காசினியிற் சொன்னேங்
கொடிவழுது ணைக்காய்க் குணம்.

குணம்:—(இ-ள்.) கொடி வழுதுணைக்காய் வாத முதலிய மூன்று தேகிகளுக்கும் பொருந்துவதுமன்றிக் கபத்தைக் கரைக்கும். பத்தியத்திற்கு ஆகும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—கொடிவழுதுணை என்பது கத்திரி இனத்தில் ஒன்று. இது கொடியாகத் தரையில் படருவதுமன்றி இதன் காய்கள் அதிக பருமனில்லாமல் நீண்டு திரண்டிருக்கும். இதனைப் பாகப்படி சமைத்துண்ணச் சாதாரண கத்திரிக்காயைவிட ருசியாக இருக்கும். இது கபரோகங்களுக்கு மிகச் சிறந்தது. இந்த இனத்தில் பல பேதங்கள் இருப்பினும் கறுப்பு வழுதுணை, பருவழுதுணை, சிறு வழுதுணை என்னும் இம்மூன்றுமே முக்கியமானவையாகும். இவற்றுள் கருவழுதுணை இலை நீர்க்கட்டையும், பருவழுதுணைவேர் வாத நோயையும், சிறுபஞ்சமூலத்தி லொன்றாகிய சிறு வழுதுணை வேர் பல நோயையும் குணப்படுத்துமெனக் கூறியிருக்கின்றனர். அவற்றுள் சில முறைகளாவன—

சிலேத்மசுர கியாழம்.

சிறுவழுதுணை, தூதுளை, சிறுகாஞ்சொறி, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின்வேர், சோற்றுக்கற்றாழைச் சருகு, இம்புரா, சுக்கு, முத்தக்காசு வகைக்குப் பலம் $\frac{1}{4}$ இவைகளை இடித்து ஒரு பழகின மட்கலயத்தில்போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனில் வறுத்து இடித்த திப்பிலிச் சூரணம் ஒரு விராகனெடை போட்டுச் சிறிது தேன் கூட்டிக் கலக்கி வைத்துக்கொண்டு 3 வேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கச் சிலேத்தும சுரம் போம்.

வேறு.

சிறுவழுதுணை, தூதுளை, கண்டங்கத்திரி, துளசி, முட்காவேளை, வில்வம், சிறுகாஞ்சொறி, வேப்பிலையீர்க்கு, நெல்லியிலை

யிர்க்கு, புளியமிலை யிர்க்கு வகைக்குப் பலம் ¼ இவைகளை ஒரு பழ கின மட்பாண்டத்தில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம்படியாய்ச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனை 3 பாகமாகப் பங்கிட்டு 4 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவர சிலேத்தும சுரம் குணமாகும்.

கொடிவேலி வேர்.
(Plumbago Zeylanica Root).

கட்டிவிர ணங்கிரந்தி கால்க ளரையாப்புக்
கட்டிசூ லைவீக்கங் காழ்மூல—முட்டிரத்தக்
கட்டுநீ ரேற்றங் கனத்த பெருவயிறு
மட்டுங் கொடுவேலி யாம்.

குணம்:—(இ-ள்.) கொடிவேலி வேரானது வித்திரிதி, புண், சொறி, சிரங்கு, வாதரோகம், குதஸ்தான வித்திரிதி, குத்தல், சோபை, மூலரோகம், உதிரக்கட்டு, ஜலஸ்ராவம், மகோதரம் ஆகிய இவைகளைக் குணமாக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, முறைவியாதிரோதி, சுவேதகாரி, துவக்ஸ்போடகாரி, ருதுவர்த்தனகாரி, க்ஷோணகாரி, திரவகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப்பட்டையை அரைத்து வேளைக்கு ¼ அல்லது ½ சுண்டைக்காய்ப் பிரமாணம் பசுவின்பாலிலாவது அல்லது வெள்ளாட்டுப்பாலிலாவது கலக்கி 10 அல்லது 15 நாள் கொடுத்துவரப் பழயசுரம், புரையோடும் அரையாப்புக் கட்டி, சூலைக்கட்டு, சூலைப்பிடிப்பு, வெடிசூலை, தேகத்தில் கரடுமுரடாகக்கட்டுஞ்சூலை, உள் மூலம், கிரந்தி, கருப்பவாயு முதலிய பல பிணிகள் தீரும். ஸ்திரீகளுக்கு வீட்டு விலக்கம் சரியாகக் காணாத சமயம் இதன் வேர்பட்டையை அரைத்துச் சுமார் ½ சுண்டைக்காய்ப்பிரமாண மெடுத்து ஒரு கோழிமுட்டையிலுள்ள வெண் கருவில் கலக்கிக் கொடுக்கவும். இப்படித் தினம் காலை மாலை 3 நாள் கொடுக்க மாத விலக்கம் சரியாகக்காணும். சூதகவாயுவையும் கண்டிக்கும். ஒரு படி பசுவின் பாலில் ஒரு பலம் சித்திர மூலத்தின் பச்சைப் பட்டையைத் தட்டிப்போட்டுச் சிவக்க காய்ச்சி வடிகட்டி பிரைமோர் குத்தி மறுநாட் கடைந்து வெண்ணெய் எடுத்து அன்னத்திலிட்டுச் சாப்பிடவும். அப்போதுண்டாகும் மோரையும் அன்னத்துடன் சேர்த்துக்கொள்வதுடன் மிகுதிப்பட்டிருந்தால், சிறுக சிறுகக் குடித்துவிடவும். இப்படி 3 நாள் சாப்பிட மூலமுளை

அற்றுவிடும். இது அதிக உஷ்ண வீரிய முள்ளதாகையால் சரீரத் தின் வன்மை மென்மைக் கேற்றவாறு அளவை சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பச்சைவேரை அன்ன வடிகஞ்சிநீர் விட்டரைத்து துணியில் தடவிப் புண்ணுக்க வேண்டிய இடங்களில் போட ½ மணி நேரத் திற்குள் எரிச்சல் மிகும். எரிச்சல் மிகுந்த நேரம் துணியை எடுத்து விடக் கொப்பளித்துப் புண்ணுகும். துர்நீர் வெளியாகும், பின்னுல் அப்பட்டமான தேங்காய் எண்ணெயைத் தடவிவர ஆறும். சில நாட்டு மருத்துவச்சிகள் இதை அரைத்துச் சீலையில் தடவித் திரி போல் திரட்டிக் கருப்பையை முட்டும்படியாக வைத்துப் புண்ணுக் கிக் கருவை அழிப்பதுண்டு. இது அதிக கொடுமையான சிகிச்சை யாகும். இதனுல் பாவத்திற்கும் ராஜ தண்டனைக்கும் ஆளாவார் கள் என்பது திண்ணம். இத்தகைய சிகிச்சை செய்துகொண்ட ஸ்திரீகளும் மீண்டும் நல்ல நிலைமைக்கு வருவது மகா கஷ்டம். இதன் பட்டையைக்கொண்டு பல அவிழ்தங்கள் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

சித்திரமூல நெய்.

ஆவின் நெய் பலம் 8, சுத்தமான நல்லெண்ணெய் பலம் 8 இவையிரண்டையும் ஒரு பழகின மட்பாண்டத்திலிட்டு அதனில் இரண்டுபலம் சித்திரமூலம் வேர்ப்பட்டையையும் இரண்டு பலம் வெள்ளை வெங்காயத்தையும் அரைத்துப்போட்டுக் கலக்கி அடுப்பி லேற்றி வண்டல் மெழுகுபதம் வரக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்க. தினம் காலை மாலை ½ அவுன்ஸ் வீதம் 10 அல்லது 12 நாள் கொடுக்க உட்கொதிப்பு, வெள்ளை, சூதகபந்தம், கைகால் பிடிப்பு முதலியவைகள் நீங்கும். பத்தியமில்லை.

கோடிவேலிச் சூரணம்.

கொடிவேலிவேர், புங்கம்வேர், ஆயில்மரப்பட்டை வகைக் குப் பலம் 1, கடுக்காய், கடுகு, திப்பிலி, கருஞ்சீரகம் வகைக்குப் பலம் ½ இவைகளை எல்லாம் ஒருமிக்க இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தினம் 2 வேளை சிறிது வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். இப்படி ஒரு மண்டலம் கொடுக்க, கிராணி, உதிரவாயு, மூலவாயு, பட்சவாதம் முதலிய வைகள் குணமாகும்.

குறிப்பு.—இங்கே கூறப்பட்ட பிரயோகங்களெல்லாம் வெண் கொடிவேலிக்கே உரித்தானதாகும். இந்த இனத்தில் கருங்கொடி

வேலி, செங்கோடிவேலி என்னும் வகைகளுமுண்டு. இவைகள் கிடைப்பதரிது. குணத்தில் வெண்கொடிவேலியையே பெரும்பாலும் ஒத்திருக்கும்.

கொட்டிக்கிழங்கு.

(Aponogeton Mono-stachyon).

கொட்டிக்கி ழங்கு குளிர்ச்சியென்பார் தேமலுடன்
ஒட்டிநின்ற மேக மொழிக்குங்காண்—வட்டமுலை
மானே யகக்கடுப்பும் வந்தவழ லுந்தணிக்குந்
தானே யிதையறிந்து சாற்று.

குணம்:—(இ-ள்.) கொட்டிக்கிழங்கு தேமல், பிரமேகம், தேகக் கடுப்பு, உட்சூடு ஆகிய இவைகளை நீக்கும். இதனைக் குளிர்ச்சி என்பர்.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை ஒரு பாண்டத்தில் போட்டுச் சலம் விட்டெரித்து வெந்தவுடன் மேற்றோலை நீக்கி உண்பதுண்டு. இதனால் தேகத்திலுள்ள வெப்பம் போம். இதுவுமல்லாமல் கொட்டிக்கிழங்கை உப்பிட்டு வேகவைத்து மேற்றோலை நீக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு நெய்யில் பொரித்து உண்பதுமுண்டு. இது நாவிற்கு ருசிகரத்தையும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் உண்டாக்கும்.

கொட்டைக்கரந்தை.

(Sphoeranthus Hirtus).

கொட்டைக் கரந்தைதனைக் கூசாம லுண்டவர்க்கு
வெட்டை தணியுமதி மேகம்போந்—துட்டச்
சொறிசிரங்கு வன்கரப்பான் றேன்று மலப்பை
மறிமலமுந் தானிறங்கு மால்.

குணம்:—(இ-ள்.) கொட்டைக்கரந்தைக்கு வெள்ளை, ஒழுக்குப்பிரமேகம், சினைப்பு, கிரந்தி, கரப்பான் இவைகள் நீங்கும். வெளி வராமல் தங்கிய மலத்தைப் போக்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தசெடியைப் பூ விடுவதற்கு முன்னதாகவே கொண்டுவந்து நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼ தோலா எடை சீனி கூட்

டிக் கொடுத்துவர வெள்ளை, உள்ரணம், கரப்பான், கிருணி இவைகள் போம். மலத்தை இளகலாக வெளிப்படுத்தும். இன்னும் இது தலைமூளை, இருதயம், நரம்பு இவைகட்கு நல்ல பலத்தைக்கொடுக்கும். இந்த மூலிகையுடன் சமனெடை தகரையிலையையும் கூட்டி இடித்துச் சூரணம்செய்து முன்போல் கொடுப்பதுண்டு. அல்லது தேன், நெய் இவைகளை விட்டு மத்தித்தும்கொடுப்பதுண்டு. இப்படிச் சிலநாள் கொடுக்க வெளுப்பாயுள்ள மயிரும் கருத்துவிடும். தேகம் நல்ல ஆரோக்கியம் பெறும்.

கொட்டைப்பாக்கு.
(Areca Catechu Nut).

கோட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம் போமூலத்
தட்டைப்பார்க் குங்கிருமி சாமந்தக்—கோட்டைப்பாக்
கோத்தசுரத் தோர்க்குமருந் துண்டவாய்க் கும்பொருந்து
மெத்தவுண்ணிற் சோபைவரும் விள்.

குணம்:—(இ-ள்.) கொட்டைப்பாக்கினால் கோழைமலம், மலப்பையினது அடித்தட்டிலிருக்கும் கிருமி இவைகள் நீங்கும். இது சுரநோயுடையவருக்கும் ஔஷதஞ் சாப்பிட்டவருக்கும் வாயிற் போட்டுக்கொள்ள உதவும். அதிகமாகத் தின்றால் சோபாரோகம் உண்டாக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—நம் நாட்டில் பலர் பாக்குடன் வால்மிளகையும் வெற்றிலை சுண்ணும்பையும் சேர்த்து வாயிலிட்டுமென்று உற்சாகப்படுவதுண்டு. இப்படிச்செய்வதால் பற்கள் கரையாமல் அசைவு நீங்கி உறுதிப்படுகின்றன. கொட்டைப்பாக்குத்தூளில் 5 முதல் 7 குன்றி எடை கோதுமை மாவுடன் கலந்து 4 மணிக்கு ஒரு முறை கொடுத்துக்கொண்டுவர குடலின் மென்மையினாலுண்டான பேதி நிற்கும். கொட்டைப் பாக்கினால் கோழை, மலக்கிருமி இவை நீங்கும். அதிகமாக உபயோகப்படுத்த இரத்தம் கெட்டுச் சோகைரோகம் உண்டாகும். பாக்குகளைச் சுட்டு கரியாக்கிப் பல் துலக்க உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் பற்கள் உறுதிப்படும். சில பிரதேசங்களில் மரத்திலிருந்து முதிர்ந்த பாக்கின் மேல்மட்டையை நீக்கி உலரப்போட்டு சிறுதுண்டுகளாக நறுக்கியும் மெல்லிய சீவல்பொடிகளாகவும் செய்து வைத்துக்கொள்வதுண்டு. இதற்கு அதிக துவர்ப்புகுணமுண்டு. இன்னும் சில பிரதேசங்களில் பச்

ஸைக் கொட்டைப்பாக்குகளை இரண்டு மூன்று துண்டுகளாக குறுக்கே அரிந்து ஒரு இரும்பு பாண்டத்தில் போட்டு மூழ்க சலம் விட்டு பாகப்படி எரித்து பாக்குகளை எடுத்து உலரவைத்து அரிசி தவிட்டுடன் கலந்து சிலநாள்வைத்து எடுத்துக்கொள்வது வழக்கம். இது பார்வைக்கு கருமைநிறமாக இருக்கும். இதனைப் பெரும் பாலர் உபயோகப்படுத்துவதுண்டு. முன் காச்சிய இரும்பு பாண்டத்திலுள்ள கியாழத்தைச் சுண்ட எரித்து அகன்ற மட்பாண்டத்தில் இட்டு ரவியில் உலர்த்த இது ஓர்விதமான காய்ச்சுக்கட்டியாகும்.

இன்னும் இதனை அவிழ்தபாகங்களில் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு.

கொட்டைமுந்திரிப்பழம்.

(Anacardium Occidentale).

தாகந் தணியுஞ் சகிக்காக் கரப்பானு
மாகத்திற் சேர்ந்த வழலுமறும்—வேகின்ற
துட்டவன்சி ரங்கோடுபுண் டோற்றுங் கரகரப்பாங்
கோட்டைமுந்தி ரிப்பழத்தாற் கூறு.

குணம்:—(இ-ள்.) கொட்டைமுந்திரிப்பழத்தால் தாகமும், சரீரவெப்பமும் நீங்கும். கரப்பான், துஷ்டவிரணம், கிரந்தி, நெஞ்சியிற் கரகரப்பு இவைகளை உண்டாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—கொட்டையை வெளியே உடைத்தாயுள்ள முந்திரிப்பழத்தை உண்பதுண்டு. இதனால் தாகம், உள் வெப்பம்போம்; தொண்டைக் கரகரப்பு, கிரந்தி, கரப்பான் முதலியவைகள் உண்டாகும். இதனை அடுத்து உண்பது தேகத்திற்குக் கெடுதலாகும்.

கொத்தான்.

(Cassytha Filiformis-Luin).

சித்த ரறிவார் செறிகுழலே நீகேளாய்
கொத்தான் மிகக்குளிர்ச்சி கொண்டதக்காற்—சுத்தப்
பிரமேக முட்கிரிச்சம் பித்த மிளைப்பு
மறுமே தவரு தறி.

குணம்:—(இ-ள்.) அதிக குளிர்ச்சியுள்ள கொத்தானுக்கு ஒழுக்குப்பிரமேகம், மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய், அயர்ச்சி ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனில் வேளைக்கு 1-1½ பலம் இருக்கும்படியாக எடுத்துப் பசுவின்மோர் அல்லது எருமையின் மோர் தெளித்திடித்துச் சாறுவாங்கி நன்றாய் வடிகட்டி ¼ படி பசுவின்மோரிலாவது அல்லது எருமையின் மோரிலாவது கலக்கிச் சிறுகச் சிறுகக் கொடுக்கவும். இதனால் வெள்ளை, நீர் எரிச்சல், நீர்ச்சுருக்கு, அதிக உஷ்ணத்தினாலுண்டான பித்தம் முதலியவைகள் குணமாகும். இது குண்டிக்காய், நீர்ப்பை இவைகளிலுள்ள வெப்பத்தை வெளிப்படுத்தும். இது கபதேகிகளுக்கு ஆகாது. இதனை 3 நாட்களுக்குமேல் கொடுப்பதாக எண்ணமிருந்தால் தேகத்தின் நிலைமையையறிந்து கொடுக்கவேண்டும். அதிக குளிர்ச்சியானால் சிலருக்குச் சுரங்காணும்.

கொத்துமல்லிக்கீரை.
(Coriandrum Sativum).

கொத்துமல்லிக் கீரையுண்ணிற் கோரவ ரோசகம்போம்
பித்தமெல்லாம் வேருடனே பேருங்காண்—சத்துவமாம்
வெச்சேனவே போகம் விளையுஞ் சுரந்தீரும்
கச்சுமுலை மாதேநீ காண்.

குணம்:—(இ-ள்.) கொத்துமல்லிக் கீரையால் அரோசகமும், பித்தவர்க்கமும், பித்தசுரமும் போம். வன்மையும், சுக்கிலமும் விருத்தியாகும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பருப்பிலிட்டுப் பாகப்படி வேகவைத்துக் கடைந்து முதலன்னத்தில்போட்டு நெய்விட்டு உண்பதுண்டு. அல்லது ஆட்டுமாமிசத்தில் போட்டுப் பாகப்படிச் சமைத்து உண்பதுண்டு. அல்லது இதனை உப்பு, புளி காரத்துடன் கூட்டித் துவையலாகச்செய்து தாளித்து அன்னத்திலிட்டு நெய்கூட்டி சாப்பிடுவதுண்டு. இவற்றால் கபாலத்தைப்பற்றிய சூடு தணியும், நித்திரை யுண்டாகும், பித்தத்தையும் அரோசகத்தையும் நீக்கித் தீபனத்தை யுண்டாக்கும். இது சீதள தேகிகளுக்கு ஆகாது. இன்னும் இந்தக் கீரையை வேளைக்கு 1 அல்லது 1½ பலம்

நெகிழ அரைத்து ஆழாக்குப் பசுவின்பாலில் கலக்கிச் சுத்தமான சீலையில் வடிகட்டிப் போதிய அளவு சுத்தமான கருப்பு சர்க்கரை கூட்டிக் கலந்து காலையில் கொள்ளப் பயித்தியம் நீங்கும். இத்தகைய சிகிச்சை தேகபலத்திற்கு ஏற்றவாறு தினம் ஒருவேளை அல்லது இருவேளை மூன்று நாள் கொள்ளல் சாலச் சிறந்தது.

கொத்துமல்லி விதை.
(Coriandrum Sativum-Seeds).

கொத்துமலி வெப்பங் குளிர்காய்ச்சல் பித்தமந்தஞ்
சர்த்திவிக்கல் தாகமொடு தாதுநட்டங்—கத்தியெழும்
வாத விகாரமடர் வன்கர்த் தபிவிரணம்
பூதலத்தில் லாதகற்றும் போற்று.

குணம்:—(இ-ள்.) கொத்துமல்லி விதையால் உட்சூடு, நளிர்சுரம், பயித்தியவேகம், அசீரணம், வாந்தி, விக்கல், நாவறட்சி, க்ஷீணசுக்கிலம், பெரும் ஏப்பம், கர்த்தவிரணம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, சீதளகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—வேளைக்கு ¼ அல்லது ½ தோலா நிறையுள்ள வித்தை இடித்து ஒரு குடுவையில்போட்டு கால்படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் தேவையான பால், சர்க்கரை கூட்டிக் காலைமாலை சாப்பிடுவதுண்டு. அல்லது இதன் சூரணத்தில் வேளைக்கு 10-30 குன்றியெடை சமன் சர்க்கரை கூட்டிச் சாப்பிடுவதுமுண்டு. இவற்ருல் இருதயத்திற்குப் பலமுண்டாகும். வயிற்றுக்குள் உண்டாகும் உஷ்ண ஆவியைச் சிரசிற்கு ஏறவிடாமல் தடுக்கும். இன்னும் மயக்கம், உதிரபேதி, அசீரணபேதி இவைகளையும் குணமாக்கும். சந்தனத்தோடு இதன் விதையையும் கூட்டியரைத்து உஷ்ண தலைவலிக்குப் பற்று போட்டுச் சிறிது நெருப்பணலில் காட்டத் தலைவலிபோம். கொத்துமல்லி விதையை காடியில் அரைத்துச் சாப்பிடச் சாராய வெறி நீங்கும். சீதள சரீரத்திற்கு ஆகாது.

இவைகளும் அல்லாமல் இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிச் சூரணங்களாகச் செய்து உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

தணியாச்சூரணம்.

சந்தனத்தூள் பலம் 1, கொத்துமல்லி விதை பலம் 2, நெல்லி வற்றல் பலம் 1 இவைகளை இடித்துச் சூரணம்செய்து சமனெடை சர்க்கரை சேர்த்துத் தினம் இருவேளை திரிகடிப் பிரமாணம் கொடுக்கத் தலைசுற்றல், நெஞ்செரிவு, வாய்நீரூறல் அரோசகம் முதலியவை நீங்கும்.

சம்சக்ரசூரணம்.

சீரகம், அதிமதுரம், கிராம்பு, கருஞ்சீரகம், சன்னலவங்கப் பட்டை, சதகுப்பை வகைக்குப் பலம் 1, கொத்துமல்லிவித்து பலம் 6 இவைகளைப் பொன்மேனியாக வறுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து இந்த எடைக்குச் சமனெடை சீனிகற்கண்டு கூட்டிக் கலந்து வைத்துக்கொள்க. வேளைக்கு $\frac{1}{4}$ ரூபாயெடை வீதம் தினம் இரண்டு அல்லது மூன்றுவேளை சாப்பிட்டுவர உட்சூடு, நளிர்சுரம், பயித்தியம், அஜீரணம், வாந்தி, விக்கல், நாவறட்சி, தாது நட்டம், பெரும் ஏப்பம், நெஞ்செரிவு, நெஞ்சுவலி முதலியவைகள் நீங்கும். நல்ல தேஜசு உண்டாகும். இவைகளுமல்லாமல் நீடித்துச் சாப்பிடச் சிரசில் உண்டாகும் பல பிணிகள், கண்ணீர்வடிதல், பார்வைமந்தம், சித்தப்பிரமை, உட்காய்ச்சல், இடுப்புவலி, கல்லடைப்பு, வலி, வாய்க்கோணல், வாய்க்குளறுதல் முதலியவைகள் நீங்குவதுடன் மனோசக்தி அதிகப்படும்.

கொத்தவரைக்காய்.

(Cyamopsis Tetragonoloba).

கோத்தவரைக் காய்பித்தங் கூடாது பத்தியத்தின்
மெத்தேனவு மையம் விளைக்குங்காண்—பித்தத்தாற்
சீத மகற்றிவிடுந் தின்மருந்தைப் பாழாக்கும்
வாதக் குடைச்சறரு மால்.

குணம்:—(இ-ள்.) அபத்தியமான கொத்தவரைக்காய் பித்தம், கபம், வாதக்கடுப்பு இவைகளையுண்டாக்கும். பித்தத்தால் நளிரையும் மருந்தையும் முறிக்கும் என்க.

செய்கை :—பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி கறியாகச் சமைத்துண்ண நாவிற்கு நல்ல ருசியாக இருக்கும். இது பத்தியத்திற்கு உதவாது. இது வயிற்றில் வாயுவை உபரிசெய்து பித்தவாயு, மார்பு வலி முதலியவற்றை உண்டாக்கும்.

கொமட்டிமாதுளம் பழம்.

(Citrus Medica).

அருசிகெடும் பித்த மகலுமையந் தீரு
முரிசை யுறுங்கபமு மோடுஞ்—சரசமுறக்
காதளவும் பாய்ந்தவிழிக் காரிகையே நற்கொமட்டி
மாதுளையின் பொற்கனியை வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) கொமட்டிமாதுளம் பழத்தினால் அரோசகம் பித்தகோபம், சிலேத்துமதோஷம் கூடிய ரோகம் இவைகள் நீங்கும். உருசியையுண்டாக்கும் என்க.

செய்கை :—சீதளகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை :—இதனை உப்பிட்டு ஊறுகாயாக அன்னத்துடன் உட்கொள்வதுண்டு. இன்னும் இதனை அவிழ்த பாகங்களில் கூட்டிக்கொடுப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

கோமட்டிமாதுளம்பழச் சர்பத்து.

சில பழங்களை அரிந்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டுச் சிறிது சலம் விட்டு வேகவைத்துப் பிசைந்து வடிகட்டி எடுத்த சாறுடன் இரண்டு அல்லது மூன்று பங்கு சர்க்கரை கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ தோலா எடை கொடுப்பதுண்டு. அல்லது—

(வேறுமுறை)

முன் சித்தப்படுத்திய சாறுடன் சமனெடை இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, புதினாச்சாறு, கடலைக்காடி அல்லது சீமை மால்டட் வினிகர் கூட்டி மொத்த எடைக்கு மூன்று பங்கு சர்க்கரைக் கூட்டி சர்பத் பதமாகக் காய்ச்சி முன்போல் உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் இருதயத்திற்கும் மூளைக்கும் பலமுண்டாகும். தீபனத்தை அதிகரிக்கச் செய்யும். பித்தத்தையும் அஜீரணத்தையும் ஒழிக்கும். பித்தவாயுவிற்கு அதிகச் சிறந்தது.

கொம்புப்பாகல்.

(Momordica Charantia—Long Fruit).

மருந்துகளி னற்குணத்தை மாற்றுமஃ தொன்றே
திருந்துவலி வாதத்தைச் சேர்க்கும்—பொருந்துபித்தங்
கூட்டுமவ பத்தியத்தைக் கொண்டிருக்கும் வன்கரப்பான்
காட்டுங்கொம் புப்பாகற் காய்.

குணம் :—(இ-ள்.) அபத்திய பதார்த்தமாகிய கொம்புபாகற் காய் நல்ல ஔஷதங்களை முறிப்பதுமன்றி வாதபித்த கோபங்களை உண்டாக்கும் என்க.

செய்கை :—தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை :—இதனைப் பொரியலாகவும் அல்லது புளியோடு இனிப்பிட்ட குழம்பாகவும் செய்து உண்பதுண்டு. இதனால் சரீரத்தில் உஷ்ணம் அதிகரிக்கும், நெஞ்சுகரிப்பு, தேகத்தில் தினவு முதலியவற்றை உண்டாக்குவதுடன் வாயுவையும் பித்தத்தையும் உபரிசெய்யும். இது மருந்துகளின் வேகத்தைக் குறைக்குமாதலால். அபத்திய பதார்த்தமெனக் கூறப்பட்டிருக்கின்றது.

கொய்யாப்பழம்.
(Psidium Pomiferum).

திரிதோஷஞ் சென்னித் திருப்ப மரோசி
பொருமாந்தம் வாந்தி பொருமல்—கரப்பானு
மெய்யாய்ப் பரவுமல மெத்தவிடும் போகமுண்டாங்
கோய்யாப் பழத்தினற் கூறு.

குணம் :—(இ-ள்.) கொய்யாப்பழத்தினால் முத்தோஷம், தலைமயக்கம், அருசி, மந்தம், சர்த்தி, வயிற்றுப்பிசம், கரப்பான், வீரியம் இவைகள் உண்டாம். மலங்கழியும் என்க.

உபயோகிக்கும் முறை :—நன்றாய்க் கனிந்தப் பழத்தையுண்ண மனதிற்குக் களிப்பையுண்டாக்கும், இரைப்பைக்குப் பலத்தைக் கொடுப்பதுடன் விக்கல் இருப்பின் நிறுத்திவிடும். எளிதில் ஜீரணப் படாமல் மந்தம், வயிற்றுப்பிசம், அரோசகம் முதலியவற்றை உண்டாக்கும். இதன் விதை வயிற்றில் சிக்குமாயின் சீதபேதி, உஷ்ணபேதி முதலியவற்றை யுண்டாக்கும்.

இந்த இனத்தில் சிவப்பு, வெள்ளை என இருவகையுண்டு. இவைகள் நிறத்தில் பேதப்பட்டிருப்பினும் குணத்தில் ஒன்றேயாம்.

கொழுக்கட்டை மரம்.
(Kozhukkattai Maram).

பொங்கிவரு வெள்ளப் புனலினசிர்க் குங்காலா
லங்கியுந்த வீழுமிரத் தாமயநோய்—தங்காவே
போதகத் துச்சியெனப் பூரித்த மாமுலையாய்
மோதகப் பூருகத்தை முன்.

குணம்:—(இ-ள்.) மோதகவல்லி என்று கூறப்பட்ட கொழுக் கட்டை மரத்தினால் அசிர்க்கரமும், வாதத்தால் மூலாக்கினி தள்ள வீழா நின்ற ரத்த சீதமும் நீங்கும் என்க.

செய்கை :—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டைக்குத் துவர்ப்புச் சுவை யுண்டு. இதனைச் சூரணமாகவும், குடிநீராகவும் வழங்குவதுண்டு. இதனால் இரத்தமூலம், பெரும்பாடு முதலிய ரோகங்கள் குண மாகும்.

கொளுஞ்சிநார்த்தங்காய்.

(Kozhunjinarthangkai).

சொல்லுங் கொளுஞ்சிக்காய் தோன்றுகின்ற காசத்தை
வல்லவுட் சீதத்தை மாருதத்தைப்—பொல்லாத
வையத்தைத் தாகத்தை யப்பொழுதே நீக்கிவிடும்
வையத்துட் பெண்ணரசே வாழ்த்து.

குணம் :—(இ-ள்.) கொளுஞ்சிநார்த்தங்காய் இருமல், ஆம தோஷம், வாதவிகுணம், கபாதிக்கம், தாகம் இவைகளை நீக்கும்.

உபயோகிக்கும் முறை :—இதனைச் சிறு துண்டுகளாக அரிந்து போதிய அளவு உப்பிட்டுத் தினந்தோறும் நன்றாய்க் குலுக்கி, குலுக்கி வெய்யிலில் வைத்துக்கொண்டுவர நீர்சுண்டிப் பழம்புளி போல் மிருதுவாக இருக்கும். இதனைக் கொளுஞ்சிநார்த்தங்காய் ஊறுகாய் எனக் கூறுவர். வேண்டும்போது அன்னத்துடன் பதார்த்த வகையில் ஒன்றாகப் பாவித்து உபயோகப்படுத்திவர இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்களை உண்டாக்கும்.

கொள்ளு.

(Dolichos Biflorus).

குடல்வாதங் குன்மமுண்டாங் கொண்மருந்தோ நாச
மடலேறு பித்தமிக வாகுங்—கடுகடுத்த
வாதநீ ரேற்றமொடு மன்னுகுளிர் காய்ச்சலும்போஞ்
சாதிநறுங் கொள்ளுக்குத் தான்.

குணம் :—(இ-ள்.) நல்ல கொள்ளுக்குப் பீஜவாயுவும், பித்த குன்மமும், பயித்தியமும் உண்டாம். வாதவலி, நீரேற்றம், களிர் சுரம், மருந்தின் வீரியம் போம் என்க.

செய்கை :—பலகாரி, உற்சாககாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை :—இதை வேகப்போட்டு வடித்தெடுத்த நீரில் புளி, உப்பு, காரமிட்டு ரசமாக வைத்து உபயோகப்படுத்துவதுண்டு. இது வாயுவைக் கண்டிக்கும், தேகத்திலுள்ள நீரை வற்றடிக்கும், குண்டிக்காய், நீர்த்தாரை இவைகளில் விளையும் கற்களைப் பொடி பொடியாகக் கரைத்து நீரின் வழியே வெளியாக்கும். ஸ்திரீகளுக்குண்டான உதிரக்கட்டை உடைத்துவிடும். இதை நீடித்துப் பழக்கமாக வைத்துக்கொண்டால் தேகம் அதிக உஷ்ணப்படும். இதனால் தலை சுற்றல், வாந்தி, ஒக்காளம், வயிற்று கடுப்பு இவைகள் உண்டாகும். இன்னும் சீதளத்தினால் சரீரம் வாழைத்தண்டு போல் குளிர்ச்சி பெற்றிருப்பின் வறுத்து எடுத்த கொள்ளு, மஞ்சள், கற்பூரம் சமனெடையாக அரைத்துத் தூளாக்கி தேகத்திற்குப் பூசித்தேய்க்க விரைவில் சூடுண்டாகும்.

கொள்ளுக்காய்வேளை.

(Tephrosia Purpurea).

வாதமிக்க தென்பார்க்கும் வாய்வறட்சி யென்பார்க்கு
மீதுதந்த மூலநோ யென்பார்க்கு—மோதமுற்ற
சொள்ளுக்கா தாரகபந் தோற்றியதென் பார்க்குமொரு
கொள்ளுக்காய் வேளைதனைக் கூறு.

குணம்:—(இ-ள்.) கொள்ளுக்காய்வேளையினால் வாதாதிக்கமும், நாவறட்சியும், தந்தமூல நோயும், சொள்ளுவடியச் செய்கின்ற கபமும் போம் என்க.

செய்கை:—சோபாநாசினி, மூத்திரவர்த்தனகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரை இடித்துச் சூரணமாகச்செய்து உக்கா அல்லது சிலிமி இவைகளில் வைத்து நெருப்பிட்டுப் புகையை உள்ளுக்கு இழுக்க அதிக கபத்தினாலுண்டான இருமல், இரைப்பு, நெஞ்சடைப்பு இவைகள் போம். இதன் வேருடன் மஞ்சள் கூட்டி அரிசி கழுவி எடுத்த சலம் அல்லது பசுவின்பால் விட்டு அரைத்துக் கண்டமாலையினாலுண்டான வீக்கத்திற்குப் போடக் குணமாகும். இதன் வேருடன் மிளகு கூட்டிக் கியாழமிட்டுத் தினம் இருவேளை 5 அல்லது 7 நாள் கொடுக்கப் பித்த சம்பந்தமான ரோகங்கள், மண்ணீரல், கல்லீரல், குண்டிக்காய் இவைகளில் உண்டான வீக்கங்கள் போம். இதன் வேரை மோர் விட்டு அரைத்துக்கொடுக்க வீக்கம், பாண்டு இரத்தக் கெடுதலினாலுண்டாகும் முகப்பரு, கட்டி, இராஜப் பிளவை முதலியவைகள்

குணமாகும். இதன் வேரைக் கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுக்க குன்மம், அஜீரணபேதி இவைகள் போம். இந்தக் கியாழத்தைக் கொண்டு வாய் கொப்பளித்து வர வாய் ரணம், தந்த மூல ரோகங்கள் குணமாகும்.

கொன்றை.

இந்த இனத்தில் சரக்கொன்றை, மைக்கொன்றை என இரு வகையுண்டு. அவைகளின் குணங்களை அதன் அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

கோடகசாலை.
(Justicia Procumbens).

கோடகசா லைக்குக் கொடியஅனல் மேகமொடு
போடகங்கி ரந்திகுஷ்டம் புண்ணுறும்—நாடகஞ்செய்
யப்பித்த வாய்வு மலர்வாய் விரணமும்போம்
பொற்புற்ற பொன்னே புகல்.

குணம்:—(இ-ள்.) கோடகச்சாலைப் பூண்டால் சுரம், வாதப் பிரமேகம், விஸ்போடக ரோகம், சிரங்கு, குஷ்டம், விரணம், பித்த வாத தொந்தம், ஜிக்வாகண்டக ரோகம் ஆகிய இவை விலகும்.

(இதுவுமது)

கோட்டுவிஷம் பூச்சுகடி கூறெலும் பின்முறிவும்
வெட்டுபடு காயமொடு மீறிரத்த—முட்டுதற்கும்
கோடகச்சா லைத்தழையைக் கோய்திங்கு மேற்பற்றும்
போடக் குணமாம் புகல்.

(இ-ள்.) கோடகச்சாலை பூண்டால் பூச்சுகளின் கொட்டு விஷம், கடி, எலும்பு முறிவு, வெட்டுக்காயம், இரத்தம் சொரிதல் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைச் சுத்தமாக ஆய்ந்து இரண்டொரு மிளகுகூட்டி அரைத்துச் சுமார் சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் தினமிருவேளை, மூன்று அல்லது ஐந்து நாட்கள் தனியாகவாவது அல்லது பசுவின்பாலிற் கரைத்து வடிகட்டித் திரவமாகவாவது உள்ளுக்குக் கொடுத்துவர, தேகத்திலுண்டான வெப்பம், வெள்ளை, நீர்ச்சுருக்கு, பித்தவாயு, பூச்சுக்கடி, வயிற்றிலுண்டான விரணம் முதலியவை குணமாகும். இன்னும் தேவையான

இலையை ஒரு கல்வத்தில் போட்டுப் புங்கம்பால் விட்டு இரண்டு ஜாமம் அரைத்துச் சிறு சுண்டைக்காயளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி முன்போல் கொடுத்துவர முற்கூறப்பட்ட நோய்கள் யாவும் தீரும். இவ்விலையை அரைத்து இரத்தஞ் சொரிகின்ற வெட்டுக் காயம், புண் இவைகளுக்குத் தடவிவர விரைவில் ஆறும். கை கால் முதலிய இடங்களிலுள்ள பெரிய எலும்புகள் திடீரென அடிபட்டு முறிவுபட்டால், இவ்விலையை அரைத்து அவ்விடத்தில் தழும்பப் பூசி, அதன் பின் இரண்டு கோழி முட்டையின் வெண் கருவோடு, சிறிது சுண்ணாம்பு கூட்டி உறவாகும்படி சலந்து ஒரு சுத்தமான சீலையிற் பூசி, எலும்பின் முறிவைப்பொருத்தமாக வழுந் தும்படி சேர்த்து அதன்பேரில் இச்சீலையை இறுக மூன்று சுற்று சுற்றி மஞ்சள் தூளைச் சீலையின் மேல்பாகத்தில் முழுவதும் படும் படித் தூவி, மட்டமாக இழைத்து வைத்துள்ள மூங்கிற் சட்டத் தைக் கீழும் மேலும் வைத்து, எலும்பின் பொருந்துவாய் நழுவா மல் இருக்கும்பொருட்டு வலுவான கயிற்றைக்கொண்டு நெறுங்க இறுகச் சுற்றிக் கட்டியபின், ஒரு வாரம் வரை எக்காரணத்தைப் பற்றியும் கட்டைப் பிரிக்காமலிருக்கவும். கட்டு கட்டிய இடத் திற்கு மேற்புறமும், கீழும் வீக்கமிருப்பினும் இல்லாவிடினும்,இந்த இலைச் சாறுடன் சமனெடை நல்லெண்ணெயைக் கூட்டிக் காய்ச்சி வடித்து அவ்விடத்திலுள்ள வீக்கங்களுக்குப் போடுவதுடன் கட் டின் மேலும் விட்டு வரலாம். ஒரு வாரங் கழித்து கட்டை மெது வாகத் தளர்த்தி, முன் காய்ச்சிய எண்ணெயைத் தழும்பச் சீலை நனை யும்படி விட்டு, மெதுவாகச் சில நாட்கள் கட்டுகட்டி வைக்கவும் வீக்கமும், நோயுங் குறைந்து எலும்பு கூடிவிட்டதாகத் தெரிந்தால் கட்டை அவிழ்த்துவிடவும்.

கோதுமை அரிசி.

(Triticum Sativum).

கோதுமையி னற்குணந்தான் கோதில்பலங் கொடுக்குந்
தாதுவிர்த்தி யாக்குந் தனிவாய்வைச்—சேதிக்கும்
பித்த மளிக்கும் பிரமேகத் தைக்கெடுக்கு
முத்தமமா மென்றே யுரை.

குணம்:—(இ-ள்.) கோதுமை அரிசி, நல்ல பலம், சுக்கிலம், பித்தம் இவைகளை விருத்தி செய்யும். தனிவாதகோபத்தையும், பிரமேகத்தையும் நீக்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதற்கு உஷ்ண குணமுண்டு. தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். இதனை உபயோகப்படுத்துவதில் பல விதங்களுண்டு. இதன் மாவை ரொட்டி அல்லது அடையாகவும் சன்ன நொய்யைக் கஞ்சியாகவும், பெரும் நொய்யைப் பொங்கலாகவும் செய்து உண்பதுண்டு. முக்கியமாக எலும்புருக்கி ரோகம், சுரம், ஈளை, இருமல், மதுமேகம், ஈரலைப்பற்றிய ரோகங்களுக்குப் பத்திய உணவாகும். இது மலத்தைத் தீயச்செய்யும். சிறுநீரைக் கட்டும். கோதுமையை அரைக்குங் காலத்தில் மேல் தவிடு உட்படச் சேர்த்துக்கொண்டால் மலச் சிக்கல் உண்டாகாது. அதிக உஷ்ணத்தையும் விளைவிக்காது. எங்ஙனமாயினும், இந்தத் தானியத்தை உபயோகப்படுத்துகின்றவர்கள் பால், நெய் இவற்றை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். கோதுமையின் பெரும் நொய்யுடன் மாமிசம் சேர்த்துப் புலவைப்போல் பக்குவப்படுத்தும் ஆகாரம் மதுமேகத்தை உடையவர்களுக்குச் சிறந்ததாகும். இது அவர்களுக்கு அடுத்து, அடுத்துப்போகும் நீரை வறட்டும். இழந்த பலத்தை மீண்டும் விருத்தி செய்யும். இதனைக் காப்பிக்கொட்டையைப்போல் கறுக வறுத்து இடித்த தூளைக் காப்பிக்கொட்டைப் பொடிக்கு பதிலாக உபயோகப்படுத்துவதுண்டு. இது பெரும்பாலும் தேகத்திற்கு நன்மையை யுண்டாக்குகின்றது. இன்னும் ரசம், தாம்பரம், நாகம், வெள்ளி, வங்கம் முதலிய மருந்துகளை அளவு கடந்து உண்டதினாலுண்டான கெடுதலுக்குக் கோதுமை மாவைச் சலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க முறித்துவிடும். இதன் மாவைக் களிபோல் இளகலாகக் கிளறிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட விரைவில் பழுத்து உடையும்.

கோபுரந்தாங்கி.

(Andrographis Echioides).

தொடுக்கும் புழுவெட்டின் தோல்லையறும் நீங்காக்
கடுக்குமொரு மண்டைக் கரப்பா—னெடுக்கமுறு
மேங்கித் தவிக்காதே யேந்திழையே கோபுரத்தைத்
தாங்கியெனும் பூண்டின்சீர் சாற்று.

குணம்:—(இ-ள்.) கோபுரந்தாங்கியினால் புழுவெட்டு, மண்டைக்கரப்பான் முதலியவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றுடன் சமனெடை நல்லெண்ணெய் கூட்டிப் பதமாகக் காய்ச்சி வடிகட்டி ஸ்நானம் செய்யத் தலைமயிர் உதிராது. கபாலத்திலுண்டான கொதிப்பு அடங்கும், மயிர் வளரும்.

கோரைக்கிழங்கு.

(Cyprus Rotandus).

அதிசாரம் பித்த மழற்றுக மையங்
குதிவாதஞ் சோபங் கொடிய—முதிர்வாந்தி
யாரைத் தொடர்ந்தாலு மவ்வவர்க்கெல் லாங்குளத்துக்
கோரைக் கிழங்கைக் கொடு.

குணம்:—(இ-ள்.) கோரைக்கிழங்கால், அதிசாரபேதி, பித்தம், தேக எரிச்சல், தாகம், கபம், குதிக்கால் வாதம், மூர்ச்சை, திரிதோட வாந்தி இவைகள் போம் என்க.

(இதுவுமது)

சீத சுரந்தீர்க்குஞ் செம்புனர்பித் தம்போக்கும்
வாத சுரந்தணிக்கும் வையகத்தில்—வேதைசெய்ய
வந்தபிணி யையெல்லாம் வாட்டுமுத் தக்காசு
கொத்துலவும் வார்குழலே கூறு.

(இ-ள்.) முத்தக்காசுக்குக் குளிர்சுரம், ரத்தபித்தம், வாத சுரம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, அந்தர்ஸ்நிக்த காரி, சங்கோசனகாரி, உற்சாககாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலைச் சீவிச் சுத்தம் செய்து இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணத்தில் வேளைக்குக் கால் விராகனெடை வீதம் தினம் 2 வேளை தேனில் மத்தித்துக் கொடுக்கலாம். அல்லது 1 தோலா எடையுள்ள கோரைக்கிழங்கைத் தட்டி ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை சிறிது தேன் கூட்டிக் கொடுக்கலாம். இதற்குத் துவர்ப்புச் சுவையுண்டு. வியர்வையை யுண்டாக்கும், சிறு நீரை அதிகமாக இறங்கச் செய்யும். புத்திக்கூர்மை, தாதுவிர்த்தி, தீபனம், தேஜசு முதலியவற்றை யுண்டாக்கும். இத்துடன் இதர சரக்குகளைக் கூட்டிக் கியாழமிட்டு உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

தாகசுரக் கியாழம்.

கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், பற்பாடகம், பிரமட்டை, சுக்கு வகைக்கு விராகனெடை 1 இவைகளை இடித்து ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கத் தாகம், சுரம் இவைகள் நீங்கும்.

பித்தசுரக் கியாழம்.

கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரிவேர், நிலவேம்பு, சீந்தில் கொடி, சுக்கு, புளியாரைக்கீரை, செஞ்சந்தனத்தூள், கசகசாத் தோல் வகைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் சிறிது இடித்து ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு 1 படி சுத்தசலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் சிறிது தேனும் $\frac{1}{4}$ விராகனெடை திப்பிலிச் சூரணமும் கூட்டிக் கலக்கிக் கொடுக்கவும். இவ்வாறு தினம் 3 வேளை 3 நாள் கொடுக்க விடாதசுரம் நீங்கும்.

கோவைக்காய்.

(Cephalandra Indica-Pod).

வாயி னரோசகம்போ மாரு வழலையறு
நோயின் கபமகலு நுண்ணிடையே—தூயவதன்
வற்றற் கருசி மருவுகரப் பான்போகுஞ்
சுத்தக்கோ வைக்காயைச் சொல்.

குணம்:—(இ-ள்.) நல்ல கோவைக் காயால் அருசி, நீங்காத வெப்பம், சுரகபதோஷம் இவைகள் போம். இதன் வற்றலால் அரோசகமும், கரப்பானும் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயைப் பச்சையாக மென்று தின்ன நாவில் உள்ள ரணம் ஆறும். புளியிடாத பொரியலாகவாவது குழம்புகளிலாவது சேர்த்துப் பாகப்படுத்தி யுண்ணச் சுரத்தையும், கப உபரியையும் நீக்குவதுடன் அரோசகத்தையும் நீக்கும்.

இதை அரிந்து காயப்போட்டு உப்பிட்டமோரைத் தெளித்துத்தெளித்து உலர்த்திப் பதப்படுத்திய வற்றலை எண்ணெய் அல்லது நெய் விட்டுப் பொரித்து அன்னத்துடன் கூட்டியுண்ண அரோசகம், கரப்பான் இவைகள் போம்.

கோவைக்கிழங்கு.

(Cephalandra Indica Tuber).

முத்தோஷஞ் சூலைபித்த மூடுகுஷ்டஞ் சிக்குவைநோ
யெத்துசுவா சங்கபமி னிப்புநீ—ரித்தனையுங்
கூட்டோ டகற்றுங் குளிர்ச்சியொடு காரத்தைக்
கர்ட்டியகோ வைக்கிழங்கு காண்.

குணம்:—(இ-ள்.) சீதளத்தையும், உறைப்பையும் உடைய கோவைக்கிழங்கு திரிதோஷம், சந்திகளின் குத்தல், பித்தகோபம், சருமதலகுஷ்டம், ஜிக்வாரோகம், இரைப்பு, கோழை, மதுப்பிரமேகம் இவைகளை நீக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதை இடித்துச் சாறு எடுத்து உள்ளுக்கு 1-2 தேக்கரண்டி அளவு கொடுத்துக்கொண்டுவர மதுமேகம், கண்டமாலை, வீக்கம், தலையில் உண்டாகும் சுண்டு இவைகள் போம்.

இதன் மேற்றோலைச் சீவி, சிறிய வில்லைகளாக அரிந்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம்செய்த சூரணத்துடன் நான்கிலொன்று விபூதி கூட்டி வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் சாப்பிட வெள்ளை எவ்வளவு கடினமான தெனினும் குணமாகும்.

கோவையிலை.

(Cephalandra Indica Leaves).

கண்ணுங் குளிர்ச்சிபெறுங் காசமோடு வாயுவறும்
புண்ணுஞ் சிரங்கும் புரண்டேகு—நண்ணுடல
மீதிலார் வெப்பகலும் வீழாநீர்க் கட்டேகுங்
கோதிலாக் கோவையிலைக் கு.

குணம்—(இ-ள்.) கோவையிலைக்கு இருமல், வாதகோபம், பெருவிரணம்,சிறுசிரங்கு, தேகச்சூடு, நீரடைப்பு இவைகள்போம். கண்களுக்குக் குளிர்ச்சியுண்டாம் என்க.

இந்தக் கோவையினத்தில் ஐந்து விதங்களுண்டு. அவையவைகட்குண்டான சில சிறந்த குணங்களை அடியிற்கூறிய பாவினாற் கண்டுணர்க.

வீக்கம கற்றுநஞ்சை வீட்டுநீர்ப் பேதிதரும்
போக்கு மதுவையழற் புண்ணொழிக்குந்—தேக்குறுகற்
கோவைவரிக் கோவையப்பைக் கோவைசெங் கோவைகருங்
கோவைமுறை யேயுணர் குணம்.

(இ-ள்.) இனிப்புள்ள கற்கோவை, சோபையையும்; வரிக்கோவை, விஷத்தையும்; அப்பைக்கோவை, நீரடைப்பையும்; செங்கோவை, மதுநீரையும்; கருங்கோவை, மேகவிரணத்தையும் நீக்கும் என்க.

செய்கை :—உற்சாககாரி, சுவேதகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை :—கோவையிலையை நெய்விட்டு அரைத்துச் சாதாரணமாகக்காணும் புண்களுக்கும் அம்மையினாலுண்டான ரணங்களுக்கும் மேற்பூச ஆறும். இதன் இலைச்சாற்றுடன் நல்லெண்ணெய் கூட்டிக் காய்ச்சி வடித்துப் படர்தாமரை புண், ஆசனத்துவாரத்தில் காணும் எரிச்சல், ரணம் இவைகட்கு மேற்றடவிவர ஆறும். இன்னும் இதனை எண்ணெயாகக் காய்ச்சிக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

மேகசஞ்சீவி எண்ணெய்.

கோவையிலைச்சாறு படி $\frac{1}{2}$, இந்துப்பு பலம் 4, மிளகு பலம் 2, சீரகம் பலம் 2, பெருங்காயம் பலம் 2, வெள்ளைப்பூண்டு பலம் 2 இந்தக் கற்கங்களை எல்லாம் கோவையிலைச் சாறுவிட் டரைத்து நன்றாய்க் கலக்கித் தைலப்பாண்டத்தில் விட்டுக் கழுதை மூத்திரம் படி $\frac{1}{2}$, கழுதைப்பால் படி $\frac{1}{4}$, சிற்றாமணக்கெண்ணெய் வீசை 1 விட்டு, பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணெயில் தினம் காலையில் $\frac{1}{2}$ பலம் கொடுக்க 2-3 தடவை பேதியாகும். பேதிச்சரிவர ஆகாவிட்டால் மறுநாள் எண்ணெயைச் சிறிது அதிகப்படுத்திக்கொள்க. ஒருகால் முன் அளவில் 2-3 தடவைக்குமேல் அதிமாகப் பேதி ஆனதாகக் கண்டால் ஷை அளவில் குறைத்துக்கொள்ள வேண்டும். இப்படி தேகதிடத்திற்கு ஏற்றபடி 3-5 நாள் கொடுக்கவும். இதனால் வெள்ளை, அரையாப்பு, கொருக்கு, இன்னும் அசாத்தியமான மேகரணங்கள் தீரும். இச்சாபத்தியம் அநுசரிக்கவும்.

கோழிக்கீரை.

(Portulaca Oleracea).

சொறியுங் கரப்பானுந் தோற்றுமென் மேலுஞ்
செறியுங் கிருமிமிகச் சேரு—மெறிகின்ற
வாழிக்கீ டானவிழி யாரணங்கே வையகத்திற்
கோழிக்கீ ரைக்குணத்தைக் கூறு.

குணம்:—(இ-ள்.) கோழிக்கீரையால் புடையும், கரப்பானும் கிருமியும் உண்டாம் என்க.

செய்கை :—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, இலகுமல காரி.

உபயோகிக்கும் முறை :—இதனைப் பருப்பிலிட்டுக் கடைந்து அன்னத்திலிட்டுச் சாப்பிடுவதுண்டு. வாய்க்கு ருசியாக இருக்கும். ஆனால் பழக்கமாக அடுத்து உண்பதினால் தேகத்திற்கு அசௌக்கியத்தையுண்டுபண்ணும். இது சிறுநீரை அதிகப்படுத்தும், மலத்தை இளகலாகப் போக்கும், கண்களுக்கு ஒளியைத்தரும். இது அதிக குளிர்ச்சியை உண்டுபண்ணுமாதலால் கபதேகிகட்கு ஆகாது.

கோழியவரை இலை.

(Kozhi Avarai Leaves).

ஆழிசூற்றும் வையத் தடர்ந்தபே ராமையொரு
நாழியினிற் கெட்டு நலியுங்காண்—தோழிகேள்
கோழியவ ரைத்தழைக்குக் குன்மங் குடல்வாத
மூழிவரைக் கும்வாரா தோர்.

குணம் :—(இ-ள்.) கோழியவரை இலைக்கு வயிற்றிற் காண்கிற பருத்த ஆமைக்கட்டியும், வயிற்றுநோயும், ஆந்திர பித்தவாதமும் போம் என்க.

உபயோகிக்கும் முறை :—இதன் இலைச்சாற்றை வேளைக்கு ¼-½ பலம் வீதம் தயிரில் கலக்கிக் கொடுப்பதுண்டு. இதனால் உஷ்ணத்தினாலுண்டான வயிற்றுநோய், ஆசன கடுப்பு இவைகள் நீங்கும். இது குளிர்ச்சியான மூலிகை. சிறுநீரை அதிகப்படுத்தும், ஈரல்களின் வீக்கத்தைக் கரைக்கும்.

கோஷ்டம்.

(Costus Speciosus).

திட்டிகவு ளகடுகளஞ் சென்னி நாவாய்
செறிபிணிவெப் பதைப்புதா வர்த்த மூதை
முட்டியெரு முளைவிரணஞ் சுவாச காச
மூடிகத்தோ டரவுமர விடங்கண் மேகக்
கட்டியஜ கல்லிவிட பாகம் பூத
கணம்பால கிரகமோடு தாது நட்டஞ்
சொட்டிவரு பிரமிபித்த மிவை யொருங்கே
தொலையும்விர ணரிக்குச் சுகப்பே ருமே.

குணம் :—(இ-ள்.) கோஷ்டத்தினால் கண், தாடை, வயிறு, கழுத்து, சிரசு, நா, வாய் இவ்விடங்களிலுள்ள நோய்கள், தோஷ சுரம், வீக்கம், உதாவர்த்தம், கம்பவாதம், முளைமூலம், ஈளை, இருமல், எலி, சர்ப்பம், நாவி முதலிய விஷங்கள், மேகப்பிடகம், அஜ கல்லிகாரோகம், விஷப்பாகம், 18வகை பூதகணங்கள், பாலகிரக தோஷம், வீரிய நஷ்டம், வெள்ளை விழல், பயித்தியம் ஆகிய இவைகள் நீங்கும். சுகப்பிரசவம் உண்டாம் என்க.

செய்கை :—உற்சாககாரி, சுவேதகாரி, காமவிர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை :—இதன் சூரணத்தில் வேளைக்கு $\frac{1}{8}$-$\frac{1}{4}$ விராகனெடை தேனிலாவது பாலிலாவது தினம் இரு வேளை கொடுக்கலாம். இது வாயுவைப்பற்றிய பல ரோகங்களை நீக்கும். ஸ்திரீகளுக்குண்டான உதிரச்சிக்கலை யகற்றும். பூச்சிக்கடி விஷங்களை முறிக்கும். வாந்திபேதி, முறைக்காய்ச்சல், இருமல், ஈளை, கணுச்சூலை, கல்லடைப்பு, கைகாலெரிவு, கற்றாழைநாற்றம் இவைகளைப் போக்கும். இதனை பன்னீர்விட்டரைத்துக் கை, கால், வயிறு முதலிய விடங்களிலுண்டான வீக்கத்திற்கு மேற்றடவ நீர்வற்றி வீக்கம் வாடும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப் படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

சர்வ சுர கியாழம்.

கோஷ்டம், சிறுதேக்கு, சீந்தல்கொடி, பற்பாடகம், திப்பிலி, நிலவேம்பு, சுக்கு, சிறுகாஞ்சொறி, கோரைக்கிழங்கு, ஆடாதோடை வகைக்கு பலம் $\frac{1}{4}$ இவைகளை இடித்து ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு 1 படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கப் பழைய சுரம் நீங்கும்.

தோஷ சுர கியாழம்.

கோஷ்டம், அதிமதுரம், நெல்லிவற்றல், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சந்தனம், நெற்பொரி வகைக்குக் கழஞ்சு 2, இவைகளை அரைப்படி இளநீரில் போட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கத் தாகசுரம் போம்.

சங்கங்குப்பி.

(Clerodendron Inerme).

கரப்பான் கிரந்தி கருங்குட்ட ரோக
முரப்பான மேக மொழியுங்—கருப்பக்
கருங்கிரந்தி செவ்வாப்புக் கட்டிகளு மேகு
மருஞ்சங்கங் குப்பிக் கறி.

(இதுவுமது)

வெட்டை சொறிசிரங்கு வீறிவ ருஞ்சூலே
துட்டவா தங்கபந்து ணுக்கிருமல்—கெட்டவிஷம்
அங்கங்கொள் பூச்சியிவை யாவும்போம் பித்தமுறுஞ்
சங்கங்குப் பிக்கெனவே சாற்று.

குணம்:—(இ-ள்.) சங்கங்குப்பிச் செடிக்கு அரைக்கடுவன், சிரங்கு, விசர்ச்சிகா குஷ்டம், வாதப்பிரமேகம், கருப்பத்திலுண்டாகிய கருங்கிரந்தி, குண்டாலக்கட்டி, வெள்ளை, தவளைச்சொறி, விரணம், கீல்வீக்கக்குத்தல், மகாவாதம், சிலேஷ்மதோஷம், வறட்டிருமல், சர்ப்பவிஷம், ரத்தக்கிருமி ஆகிய இவைகள் போம். பித்தாதிக்கமாம் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, பித்தகாரி, முறை வியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை வதக்கியாவது அல்லது அரைத்து களிபோல் கிளறியாவது அரையாப்புக் கட்டிக்கு வைத்துக்கட்ட அமுந்திவிடும். இதன் இலை எடைக்கு 10 எடை சலம் விட்டு $\frac{1}{2}$ பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கவும். அல்லது இதன் இலையைக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றை வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் கொடுக்கவும். இவற்றால் விடாத சுரம், விட்டு வரும் சுரம், கண்டமாலை, மேகவியாதி, ரத்தக் கெடுதலினால் வரும் பல ரோகங்கள் நீங்கும். ஸ்நானத்திற்காக வைத்திருக்கும் சலத்தில் இந்த இலையைக் கொஞ்சம் போட்டுக் காய்ச்சி ஸ்நானம் செய்யச் சித்தப்பிரமை, சொறி, சிரங்கு இவைகள் போம். இதன் வேரைத் தட்டி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கீல்களின் பிடிப்புக்குத் தேய்க்கக் குணமாகும். இதனுடன் இதரச்சரக்குகளைக்கூட்டி எண்ணெயாகக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

சிகப்பெண்ணெய்.

சங்கங்குப்பி இலைச்சாறு ஆழாக்கு 3, வல்லாரைச்சாறு ஆழாக்கு 3, புங்கம்பட்டையைச் சலத்தில் ஊறப்போட்டு இடித் தெடுத்த சாறு ஆழாக்கு 3 இவைகளை ஒரு தைல பாண்டத்தில் விட்டு ஒரு வீசை சிற்றாமணக்கெண்ணெய்க் கூட்டி அடுப்பிலேற் றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்க. அப்பால் சுத்திசெய்த இரச செந்தூரம், லிங்கம், பூரம் வகைக்கு விராகனெடை 1 கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து முன் சித்தப்படுத்திய எண்ணெயில் சிறிது துளித்துளியாக விட்டு 2 சாமத்திற்குக் குறையாமல் அரைத்து மிகுதியுள்ள எண்ணெயில் கலக்கிப் புட்டியில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது இந்த எண் ணெயைத் தினம் 1 வேளை காலையில் ½ அவுஸ் வீதம் தொடர்ச்சி யாக 3-5 தினம் கொடுக்கச் சகல மேகரணங்கள், தடிப்பு, வெடிப்பு, பிடிப்பு, கண்டமாலை, அரையாப்பு, கொருக்கு, கிரந்தி, கைகால் முடக்கு, சதை கோளங்களிலுள்ள வீக்கம் முதலியவைகள் குண மாகும். மருந்து சாப்பிட்ட பின்னர் 2 நாள் பத்தியமாக இருந்து அடுத்த நாள் தைல ஸ்நானம் செய்விக்கவும்.

சங்கஞ்செடி.

(Azima Tetracantha).

வீக்கங் கரப்பான் விதாகங் கிரந்திகுன்ம
மூக்கமிகு சூலைவாய் வோடுபித்தந்—தாக்குவிஷம்
வீறுமோ கண்டுலங்கும் வீசுபசி ரத்தமுண்டாங்
கூறுசங்கம் வேரிலைகட் கு.

குணம்:—(இ-ள்.) முட்சங்கின் வேருக்கும் இலைக்கும் சோபை, கரப்பான், விதாகம், விரணம், குன்மம், கீல் வீக்கம், வாத கோபம், பித்தநோய், பல நஞ்சு இவை விலகும். கண் துலக்கமும், மிகுபசியும், ரத்த விருத்தியும் ஆகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைக் குடிநீரிட்டு வாத ரோகிகட்குக் கொடுக்கச் சுகம் பெறுவர். இதன் இலையை அரைத் துச் சிரங்கு, சொறி, புண், வைசூரி, கொப்பளம் முதலியவற்றிற் குப் பூசிவர விரைவில் குணப்படும். இதன் இலைச்சாற்றை வயதுக் கேற்றபடி குழந்தைகளுக்குச் சிறிது அளவாகப் புகட்டக் கபத்தை

வெளியாக்கி இருமலைச் சாந்தப்படுத்தும். இந்த இலையுடன் சமனெடை வேப்பிலை கூட்டி அரைத்து வேளைக்கு நெல்லிக்காய் அளவு அந்தி, சந்தி பிரசவித்த ஸ்திரீகளுக்குக் கொடுத்துவரப் பிரசவ பலவீனத்தை நீக்குவதுடன் எத்தகைய சீதளரோகத்தையும் வரவொட்டாது. வேரின் குணத்தைப்பற்றி அதன் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

சங்கஞ்செடிப்பால்.

(Azima Tetracantha Milk).

சங்கஞ் செடிப்பாலைச் சற்றருந்த வீக்கமறும்
பொங்குஞ் சுரவெப்பம் போக்கிடுங்கா—ணிங்கிதனில்
காந்தமயச் சிந்தூரங் காதலித்தேக் கொண்டார்க்குச்
சாந்த முறும்பிணிகள் சாற்று.

குணம்:—(இ-ள்.) சங்கஞ்செடிப்பாலால் வீக்கம், சுரம் இவைகள் நீங்கும். காந்தம், அயம் முதலிய செந்தூரங்களைக் கொடுக்கும்போது இந்தப் பாலை அனுபானமாகக் கொடுத்தல் நன்மையைப் பயக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—முட்சங்கின் வேர்ப்பட்டையை மெல்லியதாய்ச் சீவிப்பிழிந்தெடுத்த பால் வேளைக்கு 1-2 தேக்கரண்டி அளவு தினம் இருவேளை கொடுத்துக்கொண்டுவரச் சோபை, பாண்டு, நீரேற்றம், சுரவேகம் முதலியவை நீங்கும். இன்னும் பாண்டு ரோகிக்குக் காந்தச்செந்தூரம், அயச்செந்தூரம், அயகாந்தச் செந்தூரம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைக்கொடுத்துக் கொண்டு வரும்போது இந்தப் பாலை வெள்ளாட்டுப்பாலுடன் கலந்து கொடுத்துவரின் ரோகம் விரைவில் குணமாகும்.

சங்கம்வேர்.

(Azima Tetracantha Root).

சங்கம்வேர்ப் பட்டை சளியிரும லைச்சுரத்தை
யங்கவா தக்கடுப்பை யாடதைப்பைப்—பங்கமே
செய்யுங் கிரந்தியையுட் டீகால் கிருமியையிவ்
வையந் தனிலொழிக்கு மால்.

குணம்:—(இ-ள்.) சங்கம் வேர்ப்பட்டை கோழை, காசம், கபச்சுரம், வாதக்கடுப்பு, சிலேத்மசோபை, பங்கவிசர்ப்பி,

உட்சுரம், தனிவாதகோபம், கிருமிரோகம் இவைகளைப்போக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, மூர்த்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—அரைபலம் வேர்ப் பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு பழகிய மட்பாண்டத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளைகொடுத்துவரக் கை கால் பிடிப்பு, பாண்டு, குன்மம், கிராணி முதலிய ரோகங்கள் தீரும்.

இவ்வேர்ப்பட்டையை வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா எடை பசுவின் பாலில் அரைத்து வடிகட்டித் தினம் 2 வேளை 5-7 தினம் கொடுக்க வண்டுகடி, ஆரம்பமான குஷ்டம், சொறி, சிரங்கு, தேமல், வெட்டை, சூலை, கரப்பான் இவைகள் போம். இவ்வேர்ப்பட்டைப் பலம் 1, மிளகு பலம் $\frac{1}{2}$, ஆவின்பால் விட்டு அரைத்து உடம்பில் தேய்த்து ஸ்நானம்செய்யச் சொறி, சிரங்கு, நமைச்சல், விரணம் இவைகள் போம்.

இவ்வேர்ப்பட்டை பலம் 1, மிளகு பலம் $\frac{1}{2}$, இடித்துச் சூரணம் செய்து, 1 பலம் சர்க்கரை கூட்டித் தினம் 2 வேளை திரிகடிப் பிரமாணம் கொடுத்துவர முற்கூறப்பட்ட ரோகங்கள் போம்.

இந்த வேர்ப்பட்டையைச் சந்தனக்கல்லின்மீது சலம்விட்டு உரைத்து ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் வழித்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கிக் கொடுக்கப் பாண்டுரோகம் போம். இதனுடன் அயகாந்தம், மண்டூரம் இவைகளில் ஏதேனும் ஒரு செந்தூரத்தைக் கொடுத்தல் சாலச் சிறந்தது.

சடாமாஞ்சில்.

(Nardostachys Jatamansi).

குட்டஞ் சிலந்திவிடங் கோர புராணசுர
முட்டினங்கால் பேதிகண்ணோ யோட்டிருமல்—சொட்டிரத்த
பித்தமிரைப் பேகும் பெருங்கோரை யென்றுரைக்குஞ்
சுத்தசடா மாஞ்சிதனைச் சொல்.

குணம்:—(இ-ள்.) சடாமாஞ்சியால் குஷ்டம், சிலந்தி விஷம், பழையசுரம், உட்சூடு, வாயுபேதி, விழிநோய், காசம், ரத்தபித்தம், சுவாசம் போம் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, உற்சாககாரி, உதரவாத ஹரகாரி, காமவிர்த்தினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம்செய்து வேளைக்கு $\frac{1}{4}$ விராகனெடை தேனில் தினம் 2 வேளை கொடுக்க லாம். அல்லது 2 விராகனெடை சடாமாஞ்சியை நசுக்கி ஒரு மட் கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்க லாம். இவை இரைப்பைக்கும், ஈரலுக்கும் பலத்தைக் கொடுக்கும். உதிரச்சிக்கலை நீக்கும். நீரை வாட்டும். தீபனத்தை உண்டாக்கும். இதனை அதிக அளவாகவும் நீடித்தும் கொடுக்கக்கூடாது. அங்ஙனம் கொடுக்க தலைவலி, மயக்கம், பார்வை மந்தம் இவற்றை உண்டாக்கும். இதனைக் கொத்துமல்லிக்கீரை சாற்றில் உரைத்து வடிகட்டிக் கண்களில் 1-2 துளிவிடக் கண்சிவப்பு மாறும். பார்வை தெளிவுபடும். தலையில் தடவ மயிர்வளரும். இந்தச் சரக்கு விசேஷமாகக் காக்கைவலி, சூதகசந்நி, சுவாசகாசம், மந்தாக்கினி, குடைச்சல், இருதயத்துடிப்பு, மேல்சுவாசம், மூர்ச்சாரோகம் முதலியவைகட்குப் பயன்படுகிறது. இன்னும் இதனை இதர சரக்கு களுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

சடாமாஞ்சில் சூரணம்.

சடாமாஞ்சில் விராகனெடை 4, கருவாப்பட்டை விராகனெடை 1, வால்மிளகு விராகனெடை 1, சோம்பு விராகனெடை 1, சுக்கு விராகனெடை 1, இவ்வைந்து சரக்குகளையும் இடித்துச் சூரணம் செய்து இதனுடன் 2 விராகனெடை சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{2}$-$1\frac{1}{2}$ விராகனெடை தினம் 2 வேளை கொடுத்துவர வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, மூர்ச்சாரோகம் முதலியவை குணமாகும்.

சணப்பச்செடி.

(Cotalaria Juncea).

சொல்லும் புளிவஞ்சி சூதகத்தைத் தானுடைக்கும்
அல்லலுறும் பித்த மடங்கிப்போம்—மெல்லியலாய்
தாகமுடன் வெப்புசுரம் தங்காதே யிப்புவியில்
பாகமுடன் நீயருந்திப் பார்.

குணம்:—(இ-ள்.) புளிவஞ்சி என்று சொல்லப்பட்ட சணப்பச் செடியால் ஸ்திரீகளுக்குக் கட்டுப்பட்டிருக்கும் சூதகத்தை வெளிப்படுத்தும். தாகம், தேகவெப்பம், பித்தசுரம் முதலியவைகளையும் பரிகரிக்கும் என்க.

(இதுவுமது)

கைப்பும் உறைப்புங் கலந்திருக்குந் தின்றக்கால்
மெய்ப்புள்ள பித்தம் விலகுங்காண்—நெய்ப்பாங்
கருப்பங்க ளெல்லாங் கரைந்து விழுமே
உருப்பங்க மாஞ்சணப்புக் கோர்.

(இ-ள்.) கசப்பும் காரமும் உள்ள சணப்பச்செடிக்கு பித்த கோபமும், சில வாதரோகங்களும் நீங்கும். இளங்கருப்பத்தைக் கரைக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, ருதுவர்த்தனகாரி, வமனகாரி, நாருக்கு—க்ஷீரநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தச் செடியானது காசறைச்செடி இனத்திலொன்று. இதன் இலைக்குக் கசப்பும், காரமுமுண்டு. இதை அரைத்துக் கட்டிகளுக்கு வைத்துக்கட்ட உடைத்துக்கொள்ளும். இதைக் கியாழமிட்டுக்கொடுக்கப் பித்தவாயு, நீர்க்கசிவுகொண்ட படை, கரப்பான் இவைகள் குணமாகும். இதன் கியாழத்தை ஸ்திரீகளுக்குக் கொடுக்க மாதவிலக்கத்தை விரைவில் உண்டாக்கும். இதன் விதையை ½-1 விராகனெடை அரைத்து உள்ளுக்குக் கொடுக்கக் கருவை வெளியாக்கும். கருப்பிணிகள் நீங்கலாக மற்றவர்கள் சாப்பிட இரத்தத்திலுள்ள மாசுகளை அகற்றி நல்ல ரத்தத்தை உண்டாக்கும். இதன் விதையைப் பொடிசெய்து நல்லெண்ணெயில் போட்டு ஊறவைத்துத் தலைக்குத் தடவிவரக் கூந்தல் வளரும். இதன் நாரை ஸ்தனங்களுக்கு வைத்துக்கட்டப் பாற்சுரப்பு வற்றும்.

சண்பகப்பூ.

(Michelia Champaca Flower).

வாதபித்த மஸ்திசுர மாமேகஞ் சுத்தசுரந்
தாதுநஷ்டங் கண்ணழற்சி தங்காவே—மாதேகேள்
திண்புறும னக்களிப்பாந் திவ்யமண முட்டினஞ்சேர்
சண்பகப் பூவதற்குத் தான்.

குணம்:—(இ-ள்.) நல்ல மணமும் சூடும் உள்ள சண்பகப் பூவிற்கு வாதபித்த தொந்தம், அஸ்திசுரம், பிரமேகம், தனிதோஷ சுரம், சுக்கில நஷ்டம், நேத்திர அழலே ஆகிய இவைகள் போம். மனக்களிப்பு உண்டாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, அங்காகர்ஷணநாசிநி, உதரவாத ஹரகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—அரைப்பலம் சண்பகப் புஷ்பத்தை ஒரு மட்கலயத்தில்போட்டு $\frac{1}{4}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் இரு வேளை கொடுத்துவரக் குன்மம், ஒக்காளம், சுரம் இவைகள் நீங்கும். இன்னும் பிரமேகத்தால் உண்டான பல கஷ்டங்களும் நீங்கும்.

இது உஷ்ண வீரியமுடைய சரக்காதலால், பல ஜன்னி சுரக் கியாழங்களிலும், நரம்புகளிலுள்ள துற்பலத்தைக் கண்டிக்கின்ற லேகியங்களிலும் சேர்க்கப்படுகின்றது.

சண்பகமரத்தின் வேர்.

(Michelia Champaca Root).

தீராத வுட்டினத்தைத் தீர்க்குஞ் சுரம்போக்கும்
நேரே பசியெழுப்பு நிச்சயமே—போருங்கால்
பண்புறுகண் டோடத்தைப் பற்றறுக்கும் வாசமுள்ள
சண்பக மரத்தின்வேர் தான்.

குணம்:—(இ-ள்.) சண்பகமரத்தின் வேரானது உஷ்ணம், சுரம், நேத்திரதோஷம் ஆகிய இவைகளை நீக்கிப் பசியை யுண்டாக்கும் என்க.

செய்கை:—முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேர்ப்பட்டையில் ஒரு பலம் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் உள்ளுக்குக் கொடுத்துவரக் குளிர்சுரத்தை நிவர்த்தி செய்யும். இன்னும் இது இரைப்பையின் கொதிப்பையும் ஆற்றும். இதன் பட்டையைத் தயிர்விட்டு அரைத்துக் கட்டிகளுக்குப் போடக் கரையும். ஒருகால் சீழ்கொண்டிருப்பின் உடைத்துக் கொள்ளும்.

சதகுப்பை.

(Peucedanum Graveolens)

வாதமொடு சூதிகா வாதஞ் சிரசுநோய்
மோதுசெவி நோய்கபநோய் மூடுசுர—மோதுகின்ற
மூலக் கடுப்பு முதிர்பீந சம்போக்கு
ஞாலச் சதகுப்பை நாடு.

குணம்:—(இ-ள்.) சதகுப்பை வாதரோகம், அசிர்க்கரம், தலைவலி, கர்ணசூலை, சலதோஷம், கபரூட்சை, ஆசனக்கடுப்பு, சலபீநசம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உற்சாககாரி, ருதுவர்த்தனகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு ¼ விராகனெடை சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுக்கலாம். இது தீபனத்தையுண்டாக்கும். வாதரோகத்தை கண்டிக்கும். ஈரல், நுரைஈரல், இரைப்பை இவைகளிலுள்ள மாசுக்களை நீக்கிச் சுத்தப்படுத்தும். இதனோடு கருஞ்சீரகம், மரமஞ்சள், சமனெடையாகச் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து அதற்குச் சமனெடையாகப் பனைவெல்லம் சேர்த்து அரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு தினம் இருவேளை கொடுத்து அதன் பின் சோம்பைக் கியாழமிட்டாவது அல்லது சோம்புத் தீநீரையாவது கொடுத்துவர ஸ்திரீகளுக்கு உண்டான உதிரச் சிக்கலை நீக்கும். கருப்பம் தரிக்கச் செய்யும். குழந்தைகட்குக் காணுகின்ற வயிற்றுவலிக்கு முற்கூறப்பட்ட அளவில் 8-ல் 1 அல்லது 10-ல் 1 பங்கு கொடுக்க நன்மை பயக்கும். இது உஷ்ண தேகிகட்டு வாந்தி, ஓக்காளம், தலைச்சுற்றல் முதலியவற்றை யுண்டாக்கும். இதற்குப் பரிகாரம் எலுமிச்சம்பழச் சாற்றைச் சலத்தில் விளாவிச் சர்க்கரையிட்டுக் கொடுக்கவும். அல்லது புளிப்பு மாதுளம்பழ சர்பத்தைச் சலத்தில் விளாவிக் கொடுக்கவும்.

குறிப்பு:—இதன் கீரைக்குச் சோகிக்கீரை என்று பெயர். அதனை அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

சதாப்பு இலை.

(Ruta Graveclens).

கணமாந்த ரூட்சை கணக்கழிச்சல் வாந்தி
குணமாம் பசியுங் குலவும்—வணமயிலே
கூடு நிறைகருப்பக் கோதையர்க்காம் வேதகலு
நாடு சதாபலையி னல்.

குணம்:—(இ-ள்.) சதாபலை என்னும் சதாப்பு இலையினால் பால் மந்தம் முதலியவற்றால் விளைகின்ற சுரம், கணபேதி, கப வமனம், பிரசவ மாதர்களின் வேதனை இவைகள் நீங்கும். தீபன முண்டாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, அங்காகர்ஷணநாசினி, ருதுவர்த்தன காரி, கிருமிநாசினி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையுடன் சிறிது மிளகு சேர்த்து வெண்ணெய்போல் அரைத்து வேளைக்கு 2-3 குன்றிஎடை முலைப்பாலில் கலக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்க மார்பில் உள்ள கோழையைக் கரைக்கும்; சுரம், வலி (இசிவு) இவைகளைப் போக்கும். அல்லது இதன் இலைச்சாற்றில் 10-15 துளி முலைப்பாலுடன் கலந்து கொடுக்க முற்கூறப்பட்ட பிணிகளைக் குணப்படுத்தும். இந்த இலையுடன் மஞ்சள் சேர்த்தரைத்துக் குழந்தைகட்குத் தேகத்தில் பூசி ஸ்நானம் செய்விக்கச் சீதள சம்பந்தமான பல பிணிகளையும் வரவொட்டாமல் தடுக்கும்.

இன்னும் இதனை இதர சரக்குகளுடன் கூட்டிச் சூரணமாகவும் மாத்திரைகளாகவும் செய்வதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

சதாப்பிலைச் சூரணம்.

நிழலில் உலர்த்திய சதாப்பு இலை, சீரகம், அதிமதுரம், கருஞ் சீரகம், சன்னலவங்கப்பட்டை, சதகுப்பை வகைக்குப் பலம் 1, தண்ணியா பலம் 6 இவைகளை ஒருமிக்கக் கல்லுரலில் போட்டு கடப் பாறையால் நன்றாய் இடித்துச் சூரணம்செய்து வேளைக்குத் திரிகடி பிரமாணம் சமஎடை கற்கண்டு சூரணம் சேர்த்து தினம் 2-3 வேளை கொடுத்துவர வாயுவைக் கண்டிக்கும். சீதளத்தை விரைவில் அகற்றும். ஸ்திரீகளுக்கு உண்டான உதிரச் சிக்கலையும் வயிற்றில் மரித்துப்போன கருவையும் வெளியாக்கும். இன்னும் இதன் பெருமையைக் கூறுமிடத்துச் சூதகசந்நிவாயுவினால் காணுகின்ற வயிற்றுவலி, இசிவு முதலிய ரோகங்களுக்குச் சிறந்த அவிழ்தமாகும்.

சதாப்பிலை மாத்திரை.

பச்சை சதாப்பு இலை விராகனெடை 8, மிளகு விராகனெடை 2, குங்குமப்பூ விராகனெடை 1, கோரோசனை விராகனெடை 1, உரித்த வெள்ளைப்பூண்டு விராகனெடை 2. இவற்றை கல்வத்தி

லிட்டுக் கையோயாமல் ஒரு சாமம் அரைத்துவருக. ஒரு சமயம் மெழுகு பதத்திற்குப்போதிய ஈரமில்லாவிட்டால் சிறிது முலைப்பால் கூட்டியரைத்துப் பச்சைப்பயறு, உளுந்து பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் 2 வேளை முலைப்பாலில் கொடுக்கச் சுரம், வலி, மாந்த இருமல் முதலிய பிணிகள் தீரும்.

நாசிகாரோகத் தைலம்.

இச்செடியில் தனக்குத்தானே ஒருவிதமான புழுக்கள் உற்பத்தியாகி நாளுக்கு நாள் இந்த இலைகளையே ஆகாரமாகக் கொண்டு உருவில் பெருத்துவரும். இந்தச் சமயமறிந்து புழு ஒன்றுக்கு 2 பலம் நல்லெண்ணெய் வீதம் ஒரு வாயகண்ட கோப்பையில் விட்டு அதனில் ஷை புழுக்களைப் போட்டு ரவியில் வைத்துக் கொண்டு வருக. இப் புழுக்கள் நீர் வற்றிச் சுருக்கமடைந்து சருகு போல் காய்ந்தபின்னர் வடித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது 3-4 துளி நாசியின் வழியாக 5-6 நாள் தினம் இருவேளை விட்டுக்கொண்டுவர, மேகத்தினால் நாசியினுட்புறத்தில் தின்றுகொண்டு போகும்படியான விரணங்கள் வெகு சீக்கிரத்தில் ஆறும்.

காதில் 1-2 துளி விட்டுக்கொண்டுவர மண்டையின் உட்கரப்பான், சீழ்வடிதல், காதுவலி, காதுமந்தம், கர்ணவாதம் முதலியவை தீரும்.

சதுரக்கள்ளி.

(Euphorbia Antiquorum).

கரப்பான் சொறியுங் கடியுங் கபமு
முரப்பாங்குன் மத்தை யொழிக்கும்—நிரைப்பான
பேதிதருஞ் சீதமென்ற பேச்சகற்றும் பூவுலகிற்
சாதுசது ரக்கள்ளி தான்.

குணம்:—(இ-ள்.) சதுரக்கள்ளியானது கரப்பான், நமைச்சல், காணுக்கடி, கபநோய், வாதகுன்மம் இவைகளை நீக்கும்; விரேசனத்தைத் தரும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—சதுரக்கள்ளி யென்பது கணுக்களின் இடையில் உள்ள துண்டானது நான்கு மூலையையுடையதாக

இருத்தல் வேண்டும். இத்தகைய செடி சில பிரதேசங்களில் உண்டு. விசேடமாக மூன்று மூலையையுடைய கள்ளியே எங்கும் காணப்படு கின்றன. இதனையே சதுரக்கள்ளியென்று கூறுவது வழக்கம். நான்கு மூலையையுடைய கள்ளியின் குணமே சிறந்ததென அறிவாளிகள் கூறியிருக்கின்றனர்.

பொரித்த வெண்காரத்தையும், சோற்றுப்பையும் சமனெடையாகக் கல்வத்தில் போட்டுச் சதுரக்கள்ளியை யிடித்துச் சாறு பிழிந்து கொஞ்சம் கொஞ்சமாக விட்டு அரைத்துக் குழம்பு பதத்தில் வீக்கம், வலி, பிடிப்பு முதலிய இடங்களில் தடவி உலரவிடக் குணமாகும்.

இந்தச் சதுரக்கள்ளியை யுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கித் தேங்காய் எண்ணெயுடன் மத்தித்துக் கோழியிறகால் தொட்டு விரணங்களுக்குத் தடவ விரைவில் ஆறும்.

இதன் பச்சைச் சக்கையைக் கரி நெருப்பனலில் வாட்டி நகச் சுற்றுக்கு வைத்துக் கட்ட சீழ் கொள்ளாதிருப்பின் அழுந்திவிடும். சீழ் பிடித்திருப்பின் உடனே உடைத்துக்கொள்ளும்.

இன்னும் இதனை விசேடமாகத் தைல பாகங்களில் கூட்டுவதுமுண்டு. எங்ஙனமெனின்—

நவநாத சித்தத் தைலம்.

சதுரக்கள்ளி, ஆடாதோடை, தழுதாழை, எருக்கு, ஊமத்தை, ஆமணக்கு, கண்டங்கத்திரி, கையாந்தகரை, நொச்சி இவைகளின் வேர் வகைக்குபலம் $2\frac{1}{2}$, இவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பெரிய பானையில் போட்டு 10 படி சலம்விட்டு 2 படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து அதனைத் தைலபாண்டத்தில் விட்டுவைக்கவும். அதன்பின் சுக்கு, தாமரைவளையம், கடுகு, கோஷ்டம், அகிற்கட்டை, வசம்பு, சிகப்பு சந்தனம், சிற்றரத்தை, பூண்டு, இந்துப்பு, கோரைக்கிழங்கு, திப்பிலி, திப்பிலிமூலம், அதிமதுரம், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், முசுமுசுக்கை வேர், வாய்விளங்கம் வகைக்குப் பலம் $\frac{1}{8}$ ஆக இடித்து அம்மியிலிட்டு அரைத்து முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தில் போட்டுக்கலக்கி அதனுடன் நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி $\frac{1}{2}$ ஆக விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்க. வாதரோகிகள் இந்தத் தைலத்தைச் சிரசிலிட்டுத் தேய்த்து

நன்றாய் ஊறினபின் வெந்நீராட வாதநோய் தீரும். வாத நோயுள்ள இடங்களில் இத்தைலத்தைத் தேய்த்து முறுக்கிப் பிடித்துத் தாளக் கூடிய சூட்டில் வெந்நீரைத் தாரையாக விட்டுக் கொண்டுவர வலி சாந்தப்படும்.

சதுரக்கள்ளிப்பால்.

(Euphorbia Antiquorum Milk).

குட்டங் கடிசூலை குன்மமே கம்வாயு
துட்டக் கிருமியோடு தூறுபுண்ணு—முட்ட
முதிரக் கரப்பனும்போ மொய்குழலே நாளுஞ்
சதிரக்கள் ளிப்பாற்குத் தான்.

குணம்:—(இ-ள்.) சதுரக்கள்ளிப்பாலால், குட்டம், காணுக் கடி, கீல்வீக்கம், வாதகுன்மம், வாதப்பிரமேகம், வாதாதிக்கம், கிருமிநெளிகின்ற துஷ்டவிரணம், கரப்பான் முதலியவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, ஷோணகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உள்ளுக்கு அதிக ஜாக்கிரதை யாகக் கொடுக்கவேண்டும். அளவு அதிகரித்தால் அதிக வாந்தியை யும் உரப்பான பேதியையும் உண்டாக்கிக் குடலை புண்ணாக்கும். இதன் உறைந்த பாலைக் காலையில் ஒரு வேளை 1 அல்லது $1\frac{1}{2}$ குன்றி யெடை புளியிலாவது வெண்ணெயிலாவது வைத்து விழுங்கும் படியாகக் கொடுப்பதுண்டு. பேதியதிகமானால் சந்தனத்தை உரைத் துத் தேகம் எங்கும் பூசுவதுடன் குடலின் வெப்பம் தணியச் சீன லிங்கச் செந்தூரம் கொடுப்பதுண்டு. இத்தகைய விரேசனத்தை யடுத்தடுத்துக் கொடுப்பதினால் குட்டம், ஆனைக்கால் வாதம், மேகப் பிடிப்பு முதலிய கடுமையான ரோகங்கள் குணமாகும். இதனைக் கீல்களில் உண்டான வீக்கம், வலி, பிடிப்பு முதலிய வற்றிற்கு மேற் றடவி அதன் வேரின் அடிபாகத்தில் உள்ள மண்ணை மேல் தூவிவரக் குணமாகும். எப்பொழுது தோல் சிவந்து எரிச்சல் அதிகரிக்கின் றதோ அத்தருணம் சலம்விட்டு அலம்பி வஸ்திரத்தால் துடைத்து விட்டுத் தேங்காய் எண்ணெயை மேற்றடவிவரக் குணமாகும்.

இதனைப் பாலுண்ணி என்னும் மருவுக்குச் சுப்பலால்தொட்டு வைக்கக் கரையும்.

இதனை எலி, நாய், பூனை முதலியவைகள் கடித்த இடத்தில் தடவிப் புண்ணாக்கிச் சிறிதுநாள் ஆறவிடாமல் வைத்து ஆற்றிவிடப் பற்களின் தோடம் சரீரத்திற் பிரபலப்படாமல் ஒழியும்.

இதனை விசேஷமாக முடித்தைலங்களில் கூட்டிக் காய்ச்சுவதுண்டு.

சந்தனமரம்.
(Santalum Album).

நற்சந் தனமரத்தா னல்லறிவு மின்புமெழிற்
பொற்செந் திருவருளும் பூதலத்துண்—மெச்சுஞ்
சரும வழகுந் தனிமோ கமுமாம்
பிரமிநோ யேகும் பிறழ்ந்து.

குணம்:—(இ-ள்.) சாதிச் சந்தனமரக் கட்டையைக் கிரமப் படி யனுபவிப்பவர்களுக்கு நல்ல விவேகமும், மனமகிழ்ச்சியும், லட்சுமி விலாசமும், சருமதாது ஒளியும், மாதரிடத்திச்சையும் உண்டாகும்; சீழ் பிரமியம் நீங்கும் என்க.

(இதுவுமது)

சந்தனஞ் சீதோஷ்ணம் சார்ந்திடுந் தன்குணத்தால்
வந்ததிரி தோஷ மனப்பிரமை—தொந்தசுரம்
மேகந் தனித்தாகம் வெப்புசோறி யும்போக்கு
மாகந் தனக்குறுதி யாம்.

(இ-ள்.) குளிர்ச்சியும் வெப்பமும் உள்ள சந்தனமானது வாதபித்தகபம் என்கிற திரிதோஷங்களையும், சித்தப்பிரமை, ரூட்சை, ஒழுக்குப்பிரமேகம், நாவறட்சி, உட்சூடு, நமைச்சல் இவைகளையும் போக்கும். சரீரத்திற்குப் பலத்தைக் கொடுக்கும் என்க.

சந்தனத்தின் பேதம்.

மும்மையெனச் சொல்வார் முருகுசந்தப் பேதமவை
செம்மைமஞ்சள் வெண்மையெனத் தேர்முறையே-நன்மைதரும்
உத்தமமும் மத்திபமும் ஓத்தம மும்மாகும்
தத்தை மொழியணங்கே! சாற்று.

(இ-ள்.) சந்தனத்தில் மூன்றுபேதம் உண்டென்பர். அவை யாவன: சிவப்பு, மஞ்சள், வெள்ளை என்பனவாம். இவற்றுள் சிவப்பு மருந்துகளுக்கு உத்தமம், மஞ்சள் மத்திமம், வெள்ளை அதமம் என்க.

செய்கை:—உற்சாககாரி, மூத்திரவர்த்தனகாரி, (இதன் புகைக்கு) பூதிகந்தநாசினி.

உபயோகிக்கும் முறை:—நல்ல வாசனைப்பொருந்திய சந்தனக் கட்டை ½ தோலா எடை எடுத்து நன்றாய் இடித்து, ஒரு மட் கலயத்தில் போட்டு ¼ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனை இருபாகமாகப் பங்கிட்டுத் தேனாவது சர்க்கரை யாவது கூட்டிச் சாப்பிட அக்கினிமந்தம், சுரம், மார்புத் துடிப்பு இவைகளைக் கண்டிக்கும். இது இரைப்பையின் துர்ப்பலத்தையும், பித்தத்தால் ஏற்பட்ட அழலை, தாகம் முதலியவற்றையும் குணப் படுத்தும். சந்தனக்கட்டையை எலுமிச்சம்பழச் சாறுவிட்டு உரைத்து அக்கி, சொறி, தேமல், நமைச்சல் இவைகளுக்கு மேற் பூசக் குணமாகும். இதனைச் சுத்தமான கல்லின்பேரில் அரைத் துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் சந்தனத்தைத் திரட்டிப் பாலில் கலக்கி உள்ளுக்குச் சாப்பிடப் பிரமேகம்போம். நீர் தாரையின் விரணத்தை ஆற்றும். இதனைப் பன்னீர் விட்டு அரைத்து மேனுக் குப்பூச உஷ்ணத்தினால் மேற்றோலில் காணும் சிறு சிரங்குகள் பொரிந்து ஆறிப்போம். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிச் சில அவிழ்தங்களைச் செய்வதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

பஞ்சகற்பம்.

சந்தனம், மஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவைகளை சமனெடையாகக் கல்வத்திலிட்டு, ஆடாதோடைச் சாற்றினால் நெகிழ அரைத்து தூதுளங்காய் பிரமாணம் மாத்திரை களாகத் திரட்டிக் காயவைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் இருவேளை சாப்பிட்டுவர உட் கொதிப்பு, மலச்சிக்கல், தாது துர்பலம், வெள்ளை, இரத்தக்கெடு தல் இவைகள் போம். இது ஆயுளை விர்த்திசெய்யும். நீடித்துச் சாப்பிட சர்வபிணிகளையும் நீக்கும்.

மனோமகுட தூபப்பொடி.

சந்தனத்தூள், ஐவனவிதை, வாய்விளங்கம், பளிங்குச் சாம்பி ராணி, வெள்ளைப்பூண்டின் மேற்றோல், ஓமப்பொட்டு, காட்டுச் சீரகம், அவுரிவேர், மட்டிப்பால் இவைகளைச் சமனெடையாக இடித்து வைத்துக்கொள்க. இதனை ஸ்நானம் செய்தபின் ஈரம் போகத் துடைத்துவிட்டு நெருப்பனலில் சிறிது பொடியைத்தூவி

கூந்தலுக்குத் தூபம் பிடிக்கச் சிரசிலுண்டான நீர் ஏற்றத்தை வரட்டும். இது சாதாரணமாக நோய்களிலிருந்து குணப்பட்டு ஸ்நானம் செய்கின்றவர்களுக்கும், பிரசவித்தபின் ஸ்நானம் செய்கிற ஸ்திரீகளுக்கும் சீதளத்தை வரவொட்டாமல் தடுக்கவல்லது. இந்தச் சூரணத்தையாவது அல்லது தனிச் சந்தனக்கட்டைச் சூரணத்தையாவது கரி நெருப்பனலில் போட்டுப் புகையுண்டாக்க விஷக்காற்றினால் உண்டாகும் வியாதிகளை வரவொட்டாமல் தடுக்கும்.

சமுத்திரசோஷிவிதை.

(Barringtonia Racemosa Seeds).

ஐய மகற்று மரோசகத்தை மாற்றிவிடும்
பையுதிர வாயுவையும் பற்றறுக்கு—மெய்யை
யமிழ்த்துகின்ற நீரை யனிலத்தைப் போக்குஞ்
சமுத்திரநற் சோஷிவிதை தான்.

குணம்:—(இ-ள்.) சமுத்திரசோஷி விதையானது,கபதோஷம், அருசி, சோணிதவாதம், அதிமூத்திரம், வாதாதிக்கம் இவைகளையொழிக்கும் என்க.

செய்கை;—ருதுவர்த்தனகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—சமுத்திராப்பழத்தின் விதைக்கே சமுத்திரசோஷியென இங்குக் கூறப்பட்டது. இதன் குணம் ஏறத்தாழப் பழத்திற்கு உள்ளதேயாகும்.

இந்த விதையைத் தேகதிடத்திற்கு ஏற்றவாறு சிறிது அரைத்துப் பசுவின்பாலில் கலக்கித் தினம் இருவேளை கொடுப்பதுண்டு. இது வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டித்து வயிற்று வலியைக் குணப்படுத்தும். இப்படியே ஸ்திரீகளுக்குக் கொடுக்கக் கர்ப்பாஸயத்தில் தங்கியுள்ள உதிரச் சிக்கலையும், கர்ப்பத்தையும் வெளியாக்கும். ஆகையால் பண்டிதர்கள் நோக்கமறிந்து உபயோகப்படுத்துவது சாலச்சிறந்தது.

சமுத்திராப்பழம்.

(Barringtonia Racemosa Fruit).

மிஞ்சுந் தலைவலியு மீளாச் சுரமூர்ச்சை
அஞ்சு மிரும லதிசாரம்—எஞ்சுகப
நாடுநீர்ப் பீநசமும் நற்சமுத்தி ராப்பழத்தால்
ஓடுமிவ் வையகத்தி லோது.

குணம்:—(இ-ள்.) சமுத்திராப்பழத்தினால் தலைவலி, சுரம், மூர்ச்சை, இருமல், அதிசாரபேதி, கபத்தை விருத்தி செய்யும் நீர்ப்பீநசம் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—ஜ்வரஹரகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை :—இந்தப் பழத்தைக் கிழக்குத் திசையிலுள்ள தீவாந்திரங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றது. இது ஏறத்தாழப் பெரிய எலுமிச்சம்பழ அளவிற்கு நான்கு பிளவை ரேகையுள்ளதாக இருக்கும். இந்தப் பழத்திற்குக் கசப்புச் சுவையுண்டு.

இந்தப் பழத்தில் $\frac{1}{2}$ பலம் அளவிற்கு சிதைத்து ஓர் மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு, $\frac{1}{4}$ படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டித் தேக திடத்திற்கு ஏற்றவாறு வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அவுன்ஸ் அளவிற்குத் தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர இருமல், சுரம், அதிசாரபேதி, சூதகக்கட்டு முதலியவைகள் குணமாகும்.

சமுத்திராப்பழ மரவேருக்கும் அதிக கசப்புச் சுவையுண்டு. இதனைக் கொய்னாவிற்குப் பதிலாக முன்போல் கியாழமிட்டு உபயோகப்படுத்துவதுண்டு.

இந்தப் பழத்தின் தனிச்சூரணத்தை நசியமிட்டுக்கொண்டுவர ஒற்றைத் தலைவலி, நீர்ப்பீநசம் முதலியவைகள் குணமாகும்.

இன்னும் இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டி மூர்ச்சை, தலைவலி, பற்கிட்டல், அலர்ஜன்னி, வலி முதலியவைகட்கு நாசிகாபரணமென்னும் சூரணமாகச் செய்து உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில் —

இலகு நாசிகாபரணச் சூரணம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சௌரிப்பழம், இந்துப்பு, பொரித்த வெண்காரம், கண்டங்கத்திரிப்பழம், நரம்பு நீக்கிய புகையிலை வகைக்கு பலம் $\frac{1}{4}$, சமுத்திராப்பழம் பலம் 1 இவைகளை சிறிது காய்ந்த சட்டியில் வெதுப்பிக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடியாக்கி எருக்கம்பால் விட்டு $\frac{1}{4}$ மணி நேரம் அரைத்து மாத்திரையாகத் திரட்டி உலர்த்தி வேண்டும்போது பொடித்தாவது அல்லது கல்வத்தோடே காயவைத்து அரைத்துச் சூரணமாக வைத்துக்கொண்டாவது தலைவலி, ஜன்னி, வலி, மூர்ச்சை, பற்கிட்டல் முதலியவற்றிற்கு ஒரு சிட்டிகை நாசியில் வைத்து ஊத அல்லது நசியமிடக் குணமாகும்.

சம்புநாவற்பழம்.

(Eugenia Jambos—Rose colour fruit).

அனில வழலு மரும்பித்த வெப்புந்
தனியுலவு தாகமுந் தயங்குந்—தனிவேட
னம்புநா ணுங்கண் ணணியிழையே கானிலுறுஞ்
சம்புநா வற்கனிக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) காட்டிலுள்ள சம்புநாவற் பழத்தால் வாத உஷ்ணம், பித்த உஷ்ணம், ஒரு தோஷத்தாற் பிறந்த தாக ரோகம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தை உண்ண வாய்க்கு அதிக ருசியாக இருக்கும். இதில் ஒருவிதமான துவர்ப்பு சுவை உண்டு. உடனே தொண்டையைக் கட்டும். ஆகையால் சிறிது உப்புத்தூளை இட்டுக் குலுக்கிச் சிறிது நேரம் ஊறவிட்டுத் தின்ப துண்டு. இது மதுமேகத்தையுடையவர்களுக்கு உண்டாகும் தாகத்தையும், தேக அழலையையும், அதிக நீர் போவதையும் நீக்கும். இது வருஷத்திற்கு ஒருமுறை இரண்டொரு மாதம் கிடைக்கக்கூடிய பழமாதலால் இதன் அப்பட்டமான பழச்சாறுக்கு இரண்டு பாகம் சர்க்கரைக் கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தோலா வீதம் சலத்தில் விளாவிக் கொடுக்க, உட்சூடு தணியும்.

குறிப்பு:—சாதாரண நாகப்பழத்திற்கும் சம்புநாகப் பழத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கும் அளவில் பிற்கூறப்பட்டது உரோஜாப்பூ நிறமுடையது என்று அறிக.

சரக்கொன்றைப்புளி.

(Cassia Fistula Pulp).

வன்பனில மேக மலக்கட் டோடுகுடரின்
றுன்பமலி னம்வெப்புத் தோன்றுங்கா—லின்பந்
தருதமா லப்பரிம ளத்தனத்தா யிந்தக்
கிருதமா லப்புளியைக் கேள்.

குணம்:—(இ-ள்.) சரக்கொன்றைப்புளி வாதப்பிரமேகம், மலபந்தம், குடல்வலி, அக்குடலைப்பற்றிய அழுக்கு, உஷ்ணம் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை :—மலகாரி.

உபயோகிக்கும் முறை :—ஒரு சேர் சரக்கொன்றைப் புளியை ஒரு மட்கலயத்திலாவது அல்லது என்னுமில்டு கோப்பையிலாவது போட்டு மூழ்கச் சலம் விட்டு குலுக்கிக் குலுக்கி 6 மணி நேரம் ஊற வைத்துச் சிறிது பிசைந்து சல்லடைக் கண்களுக்கு ஒப்பான சீலை யில் வடிகட்டிப் பீங்கான் தட்டுகளில் விட்டு ரவியில் லேகியபதம் வருகிற வரையில் வைத்து வருக. இதுதான் சுத்தி. இதனுடன் சாதாரணமாகக் காய்கறிகளுக்கு உபயோகப்படுத்துகின்ற பழைய புளியையும் கூட்டிச் செய்வதுண்டு. இதனில் வேளைக்கு 1-1½ விராகனெடை சலத்தில் கரைத்துப் பருக மலம் இளகலாகப் போகும். ½-¾ பலம் சாப்பிட நன்ருய்ப் பேதியாகும். இதை சரீரத் திற்கு ஏற்றவாறு திட்டத்தைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். சில சரீரங்களுக்குச் சிறிய அளவிலேயே அதிகமாகப் பேதியாகக் கூடும். சில சரீரங்களுக்குப் பேதியாகக்கூடிய அளவு சாப்பிட்டுங் கூட ஒரு முறை மலம் போவது கஷ்டமாகிவிடும். ஆகையால் முதல் தடவை கோரியவண்ணம் எதிர்பார்க்கக்கூடாது. மறுமுறையில் சிறிது குறைத்தோ அல்லது சிறிது அதிகப்படுத்தியோ சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தப் புளியைத் தனியாகச் சலத்தில் கரைத்துப் பருகினுல் சிறிது வாயு செய்து வயிற்றில் சிறிது நோயுண்டாக்கும். ஆதலால் சிறிது திரிகடுகுச் சூரணம் சேர்த்துச் சாப்பிடுவது அதிகச் சிறந் தது. இதனுல் வயிற்றிலுள்ள வாயு வெளியாகும். குடலில் தங்கியுள்ள மாசுகளை வெளியாக்கும். கருப்பிணிகளுக்கும் கொடுக் கலாம்.

சாதாரணப் புளியுடன் சம்பந்தப்பட்ட சரக்கொன்றைப்புளி பித்தநீரை வெளியாக்கும். சிவதை வேருடன் சம்பந்தப்பட்ட கொன்றைப்புளி வாயுவைப் போக்கும், கொத்துமல்லி இலைச் சாற்றில் சரக்கொன்றைப் புளியைக் கரைத்து வேகவைத்து வடிகட் டின சாற்றை வாய்கொப்பளிக்க, தொண்டையைப் பற்றிய சகல வீக்கங்களும் குணப்படும். இந்தப் புளியைச் சலம் விட்டு அரைத் துக் கொதிக்கவைத்து கணுச்சூலை, வீக்கம் இவைகளுக்குப் பற்றுப் போடக் குணமாகும். இந்தப் புளியுடன் மிளகாய், உப்பு, சாதா ரண புளி, சர்க்கரை, இஞ்சி முதலியவைகள் சேர்த்துத் துவையலாக அரைத்து ஆகாரத்துடன் 1-1½ கொட்டைப் பாக்குப்பிரமாணம் கூட்டிச் சாப்பிட ஒரு முறை மலம் தாராளமாகப் போகும். அல்

லது இதன் புளியோடு மிளகு, உப்புக் கூட்டி ரசம்போல் செய்து அன்னத்தில் விட்டுச் சாப்பிட மல விரேசனமாகும்.

இதன் காயின்மேல் ஒட்டின சூரணம், குங்குமப்பூ, சர்க்கரை சமனெடை கூட்டிப் பன்னீர் விட்டரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு பிரசவ வேதனைப்படும் ஸ்திரிகளுக்கும் அல்லது வயிற்றில் மரித்த பிள்ளையால் வேதனைப் படுகிறவர்களுக்கும் 10 நிமிஷத்திற்கு 1 மாத்திரை வீதம் கொடுக்கச் சிசுவை வெளித்தள்ளும்.

சரக்கொன்றைப்பூ.

(Cassia Fistula Flower).

மலக்கிருமி யோடு மதுநீர் குடலாந்
தலத்துநோ யுங்குலைந்து சாயு—நிலத்திற்கு
ளென்றைக்கும் வாடாத வின்ப மலர்க்கொம்பே
கொன்றைப் பசுமலரைக் கொள்.

குணம்:—(இ-ள்.) கொன்றைப்பூவால் மலாசயக் கிருமி, மதுமேகம், குடலைப்பற்றிய ரோகங்கள் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, உதரவாதஹரகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா எடை ஒரு பழகின மட்கலயத்தில்போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டிக் கொடுக்கக் குடலில் ஏற்பட்ட நோய்களைப் போக்கும். நீடித்துச் சாப்பிட மதுமேகம் போம். வயிற்றிலுள்ள கிருமிகள் மடியும்.

இந்தப் புஷ்பத்தை வதக்கிப் புளி, உப்பு, மிளகாய், சேர்த்துத் துவையலாகச் செய்து அன்னத்தில் கூட்டிச் சாப்பிட மலந் தள்ளும்.

சரக்கொன்றைமரம்.

(Cassia Fistula).

குட்டங் கிருமி கொடுஞ்சூலை வாதமையந்
துட்ட மலமருசி தூரப்போந்—தட்டிச்
சுரக்கின்ற பேதியுண்டாந் துய்க்கத் துவர்க்குஞ்
சரக்கொன்றைக் காரணங்கே சாற்று.

குணம்:—(இ-ள்.) சரக்கொன்றை மரத்தால் பெருவியாதி, கிருமிரோகம், கீல்பிடிப்பு, வாதகபதொந்தம், விஷமலம், அரோசகம் ஆகிய இவைகள்போம். இதில் துவர்ப்புச் சுவையுண்டு, விரேசனம் ஆகும் என்க.

செய்கை:—மலகாரி, வியதாபேதகாரி, சுரஹரகாரி, தாதுக்ஷீணரோதி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப்பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கலயத்தில் $\frac{1}{4}$-$\frac{1}{2}$ பலம் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இதனுடன் திரிகடுகுச் சூரணம் திரிகடிப் பிரமாணம் கூட்டிக் கலக்கி இருவேளையாகப் பங்கிட்டுக்கொடுக்கச் சுரம்போம், இருதய சம்பந்தமான ரோகங்கள் போம். இப்படிச் சிறு அளவாக நீடித்துக் கொடுத்துவர மேகரணங்கள், கணுச்சூலை முதலியவைகள் தீரும். எந்த விதத்திலும் உட்கொள்ளும் கியாழத்தினால் ஒரு முறை சரிவர மலம் போகக்கூடிய அளவாக இருக்கவேண்டும். அங்ஙனம் முற்கூறப்பட்டுள்ள அளவில் இல்லை என உணரின் மறுமுறை கியாழமிடும்போது சிறிது அளவை அதிகப்படுத்திக் கொள்வது அவசியம்.

சரளதேவதாரு.

(Pinus Longifolia).

சரள மெனுந்தேவ தாருவினற் கண்ணீர்
விரளமா குங்கபமும் வீடுங்—தரளவெயிற்
றுமயஞ்சு வாசம்வலி யண்ணுதங் கம்பக்காற்
போமயச் சுரத்துரமும் போம்.

குணம்:—(இ-ள்.) சரளதேவதாருக் கட்டையினால், கபஸ்ராவரோகம், ஸ்லேஷ்மதோஷம், தந்தநோய், இரைப்பு, ஐவகைவலி, கர்ணநாதரோகம், நடுக்குவாதம், கபச்சுரம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கட்டையில் $\frac{1}{2}$-1 தோலா எடையை நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு வீசம்படி வீதம் தேனாவது சர்க்கரையாவது இட்டுக் குடிக்கக் கபசம்பந்தமான உபத்திரவத்தையும் அதன் காரணமாகக் கண்ட தேக எரிச்சலையும், ஆயாசத்தையும் குணப்படுத்தும். இந்தக் கட்டையைப் பழச்சாறு

விட்டு அரைத்துச் சொறி, சிரங்கு, படை இவைகளுக்கு மேற்பூச ஆறும்.

இதன் பிசின் குங்கிலியத்தை ஒத்திருக்கும். இதனைக் குங் கிலியத்தைச் சுத்திசெய்வதைப்போலவே சுத்திசெய்து வேளைக்கு ½-1 விராகனெடை நெய்யில் கொடுக்க க்ஷயம், ஈளை, மேக அழலை ஆகிய இவைகள் குணமாகும்.

சருக்கரை.
(Saccharine Sugar)

**அருந்து மருந்திற் கனுபான மாகப்
பொருந்துமடல் வாந்திபித்தம் போக்கும்—வருந்தருசி
நீக்கு மதிகபத்தை நீற்று மகிழ்ச்சியையுண்
டாக்கு நறுஞ்சருக்க ரை.**

குணம்:—(இ-ள்.) சருக்கரையானது மருந்துகளுக்கு அனு பானமாக இருப்பதுந்தவிர, வாதவமனத்தையும், பித்ததோஷத்தை யும், அரோசகத்தையும் போக்கும். கெட்டிப்பட்ட கபத்தை யிளக்கி மகிழ்ச்சியைத்தரும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:-அரை முதல் 1 தோலாஎடை சர்க்கரை யில் சிறிது ஆவின் நெய் கூட்டியாவது அல்லது பாலுடன் சிறிது ஏலக்காய் வித்தின் சூரணமிட்டாவது உட்கொள்ளப் பித்தம், அரோ சகம், மெய்மயக்கம் முதலியவைகள் நீங்கும். இதனால் இரத்தம் சுத்தப்படுவதுடன் மலத்தை இளகலாகப் போகச்செய்யும். இது சுவாச உறுப்புகளுக்கும், ஈரலுக்கும், இருதயத்திற்கும் வலுவைக் கொடுக்கும். நரம்புகள் கெட்டிப்படும். இக்கருத்தினைக்கொண்டே அறிவாளர்கள் பெரும்பான்மையான சூரணங்களில் சமனெடை சர்க்கரை கூட்டி உபயோகம் செய்யும்படியாகக் கூறியிருக்கின்றனர். எப்படி ஆங்கிலேய வைத்தியர்கள் பெரும்பான்மையான மருந்து களில் (ஆல்கோஹால்) சாராயசம்பந்தம் கூட்டி விரைவில் மருந்தின் சத்தை இரத்தத்தில் புகட்டும்படியாகச் செய்கின்றனரோ அப் படி நம் சித்தவைத்தியர்கள் தேன், சர்க்கரை இவைகளை அனு பானமாக ஏற்படுத்தி இருக்கின்றனர். சர்க்கரையுடன் வாதுமை நெய்யைக் கூட்டிச் சாப்பிட தொண்டைக் கம்மலை நீக்கும். இன் னும் இது குன்மவலியையும்,அபானவாயுவின் தடையையும் குணப் படுத்தும். சிற்றுமணக்கு எண்ணெயிற் சர்க்கரை கூட்டிக்கொடுக்

கப் பிரசவித்த ஸ்திரீகளுக்கு தடைப்பட்டுள்ள உதிரச்சிக்கல், நீரடைப்பு இவைகளை நீக்கும். சர்க்கரையைப் பாலிலாவது சலத்திலாவது கரைத்து வடிகட்டிச் சாப்பிட தொண்டைப் புகைச்சல், இருமல், குரல்கம்மல், மார்பு உலர்ந்துபோதல், துர்பலமானவர்கள் போகத்தில் ஈடுபட்டு உண்டான நடுக்கம், இருதயத்துடிப்பு முதலியவைகள் போம். சுத்தமான சர்க்கரையைப் பொடிசெய்து கண்களில் சிறிதுபோட கண்களிலுள்ள மாசுகளை வெளிப்படுத்தும். சதை வளர்ந்திருப்பினும் கரைக்கும். சர்க்கரையைச் சிறிது கரிநெருப்பனலில்போட்டு முகத்தை அதற்கு நேராக வைத்துக் கொண்டு கண்ணைத்திறவாமல் மேற்போர்வையிட்டு புகையை நாசியின் வழியாக உள்ளுக்கு கொள்ளச் சலதோஷம், அதனுலுண்டான நாசியின் அடைப்பு, தும்மல் ஆகிய இவைகள் போம். வெட்டுக்காயம், அடிபட்டகாயம் இவைகளுக்குச் சர்க்கரையுடன் சிறிது சுண்ணும்புகூட்டி மத்தித்துக் காயத்தின்மேற்போட ரத்தம் வெளிவரவொட்டாமல் ஆறும்.

சருக்கரைவள்ளிக்கிழங்கு.

(Ipomoea Batatas).

உள்ளிற்கோண் ணன்மருந்தை யும்முறிக்குஞ் சர்க்கரையாம்
வள்ளிக் கிழங்கதிக மந்தந்தா—னுள்ளிலெழு
மூல விளையுநித மோதிரைச்ச லுண்டாக்குங்
கோலவயி றுங்கடுக்குங் கூறு.

குணம்:—(இ-ள்.) அதிமந்தமுள்ள சருக்கரைவள்ளிக்கிழங்கு திவ்விய அவிழ்த குணங்களைக் கெடுப்பதுமன்றி மூலமுளையையும், குடலிரைச்சலையும், கிரகணியையும் விளைவிக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சலம்விட்டு வேகவைத்து மேற்றோலை நீக்கிச் சிறிது சர்க்கரை, ஏலரிசித்தூள் முதலியவைகளை இட்டுப் பிசைந்து உண்பதுண்டு. இது நாவிற்கு அதிக ருசியாக இருக்கும். ஆனால் சரீரத்திற்குப் பலவிதமான கெடுதல்களை விளைவிக்கும், ஆதலால் அதிகமாகப் புசிக்கக் கூடாது.

சருக்கரைவேப்பமரம்.

(Melia Azadirachta—Sweet).

காயசித்தி யாகுங் கடியசி லேஷ்மமறுந்
தூயவிந்து நாதமிவை சுத்தியுமாந்—தூயவருக்
கெத்திக்குங் கிட்டு மிலையருந்தில் வாயெல்லாந்
தித்திக்கும் வேம்பதற்குத் தேர்.

41

குணம்:—(இ-ள்.) இலையில் மதுரமுள்ள சர்க்கரை வேம்பினால் காயசித்தியும், சுக்கில சோணித சுத்தியும் உண்டாம். கபரோகம் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப்பட்டையை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு தினம் காலைமாலை திரிகடிப்பிரமாணம் பாலில் போட்டுக் கலக்கிக் கொடுத்துக்கொண்டு வர சுக்கிலம், சுரோணிதம் முதலியவைகளில் உள்ள குற்றங்களை நீக்கும். கபரோகத்தைக் குணப்படுத்தும். இதனால் ஆயுள் விருத்தியுடையும்.

சவுரிப்பழம்.

(Trichosanthes Palmata Fruit).

தலைவலிகு டைச்சல் சலப்பீ நசங்கள்
குலைகுலைந்தே காட்டிற் குடிபோ—நிலைவா
னவரிப் படிமாதேன் றையுறுமா மாதே
சவரிப் பழத்தினாற் றான்.

குணம்:—(இ-ள்.) சவுரிப்பழத்தினால் சிரநோயும், உடற் கடுப்பும், நீர்பீநசமும் நீங்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்துடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து அரைத்துப் பதமுறக் காய்ச்சி, வடித்து வைத்துக் கொண்டு காதுவலி, காதுக்குள் உண்டாகும் ரணம், நாசிக்குள் உண்டாகும் ரணம் இவைகளுக்கு 2-3 துளி விட்டுக்கொண்டுவர ஆறும். இதன் பழத்தை உலர்த்திப் பொடிசெய்து கடுதாசியில் வைத்து சிகரேட், பீடிபோல் சுற்றிப் புகைபிடிக்கக் கோழையை இளகச் செய்யும். பெரும்பாலும் இதை உள்ளுக்குக் கொடுப்பதில்லை. இது ஸ்நான தைலங்களில் சேர்க்கப்படுகின்றது. அவற்றில் சில முக்கிய முறைகளாவன—

சவுரிப்பழத்தைலம்.

இந்தப் பழத்தை அரிந்து நல்லெண்ணெயில் போட்டு மிதக்கக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, ஸ்நானம் செய்துகொண்டு வரத் தலைவலி, சிரபாரம் இவைகள் போம். நாட்சென்றதாயினும் நிவர்த்தி செய்வதில் இது சிறந்ததாகும்.

சவுரித்தைலம்.

100 பலம் சவுரிக்கொடியை இடித்து ஒரு கியாழ பாண்டத்தில் போட்டு 8 படி சலம் விட்டு ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி, ஒரு தைலபாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்க. அப்பால் கருஞ்சீரகம் பலம் 1, அதிவிடயம், மரமஞ்சள் வகைக்குப் பலம் ½, இவற்றை இடித்துச் சூரணமாக்கி அம்மிக்கல்லில் வைத்து ஆவின்பால் விட்டு அரைத்து, முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தில் போட்டுக் கலக்கி அதனுடன் ஒரு படி சுத்தமான நல்லெண்ணெயை விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தைச் சிரசிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவரக் குஷ்டம், வாதகரப்பான், கண்ட வீக்கம், சிரோபாரம், மண்டை இடி முதலியவைகள் போம்.

சவ்வரிசி.

(Sagus Laevus).

மேகமத்தி மேகஞ்சீழ் மேகரத்த மேகும்போந்
தேகத்திற் ருதுவுஞ் சிலேஷ்மமுண்—டாகுமெழிற்
செவ்வரிப டர்ந்தவிழித் தேமொழிமா தேயுலகிற்
சவ்வரிசி யின்குணத்தைச் சாற்று.

குணம்:—(இ-ள்.) சவ்வரிசியினுல் சீழ்பிரமேகம், ரத்தப்பிரமேகம் முதலியவைகள் நீங்கும். சுக்கிலமும், கபமும் விளையும் என்க.

செய்கை:—பலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைக் கஞ்சிபோல் சலம்விட்டு வேகவைத்துப் பாலும் சர்க்கரையும் கூட்டிச் சாப்பிட நல்ல ருசியாக இருக்கும். ஆயாசமும் பலவீனமும் போம், தேகம் பெருக்கும், அழகு உண்டாக்கும், குடலில் ஏற்பட்ட உஷ்ணத்தை யடக்கும், மூல உபத்திரவத்தை நீக்குவதுடன் இரத்தப்பெருக்கத்தையும் நீக்கி, மலத்தை இளகலாகப் போகச்செய்யும். இந்த அரிசியைச் சிறிது வறுத்து இயந்திரத்தில் இட்டு மாவுபோல் சன்னமாக அரைத்துக் கஞ்சிசெய்து பால் சேர்த்து அதற்குப் போதிய அளவு சிறிய அளவில் சர்க்கரை கூட்டிப் பாலில்லாத குழந்தைகளுக்குக் கொடுத்துவர நல்ல ஆகாரமாகும். குழந்தை புஷ்டியடையும். கபசம்பந்தமான குழந்தைகளுக்கு ஆகாது.

குறிப்பு:—ஆதியில் இந்தச்சரக்கு மெலூக்கா என்னும் தீவி லுள்ள (Libby tree) லிப்பிட்ரீ என்னும் மரத்தின் உட்பாகத்தி லிருக்கும் சோற்றை உருண்டை வடிவமாக அரிசிகளைப்போல் பக்கு வப்படுத்தி இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. அப்போது அதனை "Sagus Rumphii" யென ஆங்கிலேய பாஷையில் கூறினர். தற் காலத்தில் பனைமரத்தைப்போன்ற கொண்டைப்பனை, சிற்றீச்சம் முதலிய மரங்களின் உட்பாகத்திலுள்ள சோற்றையும் பக்குவப் படுத்துவதுண்டு. இவை சற்றேறக்குறைய உருவத்தில் ஒத்திருப் பினும் மரங்களுடைய சாரத்திற்கு ஏற்றவாறு சீத, உஷ்ண, வீரியங் களை பெற்றிருக்கும். தற்காலத்தில் "Sagus Laevus" யென் னும் மரத்திலிருந்து எடுக்கப்படும் சரக்கிற்கே விசேஷ நற்குணம் இருக்கிறதாகக் காணப்படுகிறது.

சவ்வியம்.

(Piper Nigrum Root.)

சூலை யருசிசந்நி தோல்லிரும லீளைபித்த
மேலைக் குரற்கம்மல் வெங்களநோய்—மூலசுரங்
கவ்வியங்கத் தேறு கனதா வரவிஷமுஞ்
சவ்வியங் கொள்ளவிடுந் தான்.

குணம் :—(இ-ள்.) சவ்வியத்தால் குத்தல், அரோசகம், சந்நி பாதசுரம், நீடித்தகாசம், கோழை, பயித்தியம், தொண்டைக் கம்மல், பழைய சுரம், எலும்பைப்பற்றி யேறுகின்ற தாவரவிஷம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தோலா நிறையுள்ள செவ்வியத் தைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து இருவேளையாகப் பங்கிட்டுச் சிறிது தேன் கூட்டிக்கொடுக்கச் சீதளத்தினால் ஏற் பட்ட சுரம், கபம், இரைப்பு இவைகளைப் போக்கும். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிக் கியாழமிடுவதும் உண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

முறைசுரக் கியாழம்.

திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு விராகனெடை 5, சவ்வியம், சுக்கு, வாயுவிளங்கம், தணியா வகைக்கு விராகனெடை 3, கடுக்

காய், பேய்ப்புடல், நெல்லிவற்றல் வகைக்குப் பலம் 1 இவைகளை எல்லாம் நன்றாய் இடித்து ஆறு பங்காகச்செய்து ஒரு பங்கை ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஒரு வேளைக்குக் கொடுக்கவும். இப்படித் தினம் 2 வேளையாக 3 நாள் 6 வேளை கொடுக்கச் சகல முறை சுரங்களும் போம்.

சர்வசுரக் கியாழம்.

சவ்வியம், சந்தனம், அதிமதுரம், கிராம்பு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தணியா, சுக்கு, நிலவேம்பு, பற்பாடகம், சீந்தல் கொடி வகைக்கு கழஞ்சு 1 வீதம் இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து இருவேளையாகக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்க திரிதோஷ சுரங்கள் குணமாகும்.

சன்ன லவங்கப்பட்டை.

(Cinnamomum Zeylanicum).

சன்னலவங் கப்பட்டை தான்குளிர்ச்சி யுண்டாக்கு
மின்னுமிரத் தக்கடுப்பை யீர்க்குங்காண்—முன்னமுறு
முந்திக் கடுப்பகற்று முண்மூலப் புண்போக்குங்
கந்தமிகு பூங்குழலே காண்.

குணம்:—(இ-ள்.) சன்னலவங்கப்பட்டை இரத்தக்கிராணி, வயிற்றுப்பிடுங்கல், மூன்றும்வலைய மூலவிரணம் இவைகளை நீக்கும். தேகத்திற்கு குளிர்ச்சியைத் தரும் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் குணம் ஏறத்தாழ இலவங்கப் பட்டைக்கு கூறப்பட்டுள்ளதேயாகும். ஆனால் சன்ன லவங்கப் பட்டையானது ரத்தக்கிராணி, மூலநோய், வயிற்றுப்பிடுங்கல் இவைகளுக்கு அதிகச் சிறந்தது. இதன் சூரணத்தை வேளைக்கு 5-10 குன்றி எடை வரையில் தேனில் கொடுக்கலாம். இதனுடன் எப்போதும் துவர்ப்பும், கசப்பும் உள்ள சரக்குகளைக் கூட்டிக் கொடுப்பது சாலச்சிறந்தது. எங்ஙனமெனில்—

கட்டுவாதி சூரணம்.

சன்ன லவங்கப்பட்டை விராகனெடை 3, காய்ச்சுக்கட்டி விராகனெடை 3, கிராம்பு விராகனெடை 2, ஜாதிக்காய் விராக

னெடை 1 இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொள்க. வேளைக்கு 5-10 குன்றி எடை நெய், சர்க்கரை முதலிய வற்றுடன் கூட்டி தினம் 3 வேளை கொடுக்க சீதபேதி, இரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு இவைகள் போம்.

சன்னலவங்கப்பட்டை, ஏலரிசி, சுக்கு வகைக்கு பலம் ½ இவற்றை நன்ருய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5-10 குன்றி எடை நெய், சர்க்கரை இவற்றில் கலந்து தினம் இருவேளை கொடுக்க வயிற்றுவலி, அதிசாரபேதி, வாந்தி இவைகளைக் கண்டிக்கும். இன்னும் இது கருப்பையைச் சுருங்கச் செய்யும்.

இந்த சரக்கானது சன்னமாகவும், சிவப்பாகவும், இனிப்பு காரமுடையதாகவும் இருக்கும். இது விசேஷமாக சிலோன் முத லிய இடங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றது.

சாதிக்காய்.

(Myristica Officinalis).

தாதுநட்டம் பேதி சருவாசி யஞ்சிரநோ
யோதுசுவா சங்காச முட்கிரணி—வேதோ
டிலக்காய் வரும்பிணிபோ மேற்றமயல் பித்தங்
குலக்கா யருந்துவர்க்குக் கூறு.

குணம்:—(இ-ள்.) ஜாதிக்காய்க்கு விந்து நஷ்டம், அதிசாரம் ஆகிய வாதங்கள், தலைநோய், இரைப்பு, இருமல், உஷ்ணவாதகிர கணி முதலிய ரோகங்கள் விலகும். மயக்கமும், பித்தமும் அதி கரிக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, காமவிர்த்தினி, உதரவாதஹரகாரி, ஷோணகாரி, நித்ராகாரி.

உபயோகிக்கும் முறை:—(இ-ள்.) இதன் சூரணத்தில் வேளைக்கு ⅛-¼ விராகனெடை தினம் 2-3 வேளை பசுவின்பாலில் போட்டுக் கலக்கிக் கொடுத்துவர விந்துகட்டும், பேதிகட்டும், வாத கிராணி தீரும். இது இரைப்பைக்கும், ஈரலுக்கும் வலுவைக் கொடுக்கும், தேக அழலையாற்றும், சந்தோஷத்தை உண்டாக்கும். நடுக்கம், பக்கவாதம், வாந்தி, ஒக்காளம் இவற்றைப் போக்கும். சிறு அளவில் கொடுக்க ஜீரணசக்தியையும் சுறுசுறுப்பையும் உண்

டாக்கும். அதிக அளவில் கொடுக்க மயக்கத்தை உண்டாக்கும். ஆகையால் தேககுபாவத்திற் கேற்றவாறு அளவைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். இதனை விசேஷமாகத் தாதுவிர்த்திக்குரிய லேகியங்களிலும் மலப்போக்கை நிவர்த்திக்கும் லேகியங்களிலும் சேர்ப்பது வழக்கம்.

தீபாக்கினி சூரணம்.

ஜாதிக்காய், சுக்கு வகைக்கு விராகனெடை 5, சீரகம் விராகனெடை 10 இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து புட்டியில் வைத்துக்கொண்டு 7-8 குன்றி எடை சூரணத்துடன் சிறிது சர்க்கரைகூட்டி ஆகாரத்திற்குமுன் கொடுத்துவர வயிற்றி லுள்ள வாயுவைக் கண்டித்து ஜீரணசக்தியை அதிகப் படுத்தும்.

சாதி நாரத்தம்பழம்.

(Sathi Narathum).

சாதிநாரத் தம்பழத்தாற் ருக மினிதடங்கும்
மோதருசி வாய்கசப்பு மோடுங்காண்—பூதலத்தில்
உப்பிட்ட காயா லுரைக்கக்கே ளற்பவா
தப்பிணிக ளோடுந் தவித்து.

குணம்:—(இ-ள்.) சாதிநாரத்தம்பழத்தால் தாகம், வாய்க் கசப்பு நீங்கும். உப்பிட்டகாயால் அற்ப வாதரோகங்கள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இப் பழத்தின் சாற்றைப் பிழிந்து வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் போதிய அளவு சர்க்கரை கூட்டிச் சிறிது சலத்தில் விளாவி வடிகட்டி உட்கொள்ளவும். இப்படி இரண்டொரு வேளை சாப்பிட்டுவரத் தாகத்தை அடக்குவதுடன் வாய்க்கசப்பை நீக்கும். இந்தப் பழம் வேண்டும்போதெல்லாம் கிடைப்பதரிதாகையால், பழம் மிகுந்த காலத்தில் இதனின்று சாறு எடுத்து இரண்டுபங்கு சர்க்கரை கூட்டித் தேன்பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் சலத்துடன் கலக்கி தினம் இருவேளை உட்கொள்ளுவதுண்டு. இதன் நடுத்தர மான காயைத் துண்டுதுண்டாக அரிந்து உப்பிட்டு ரவியில் வைத்துப் பதப்படுத்திய ஊறுகாயை வாதப்பிணி உடையவர்கள் உபயோகப் படுத்திக் கொண்டுவரச் சிறந்தது.

சாதிப்பத்திரி.

(Myristica Officinalis Arillus).

சாதிதரும் பத்திரிக்குத் தாபச் சுரந்தணியு
மோதுகின்ற பித்த முயருங்காண்—தாதுவிர்த்தி
யுண்டாங் கிரகணியோ டோதக் கழிச்சலறும்
பண்டாங் குரையே பகர்.

குணம்:—(இ-ள்.) சாதிப்பத்திரிக்கு அழற்சுரம், கிரகணி, சலமந்தபேதி இவை நீங்கும்; பித்தமும், சுக்கிலப் பெருக்கமும் உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, காமவிர்த்தினி, உதரவாதஹரகாரி, நித்திராகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு $\frac{1}{8}$-$\frac{1}{4}$ விராகனெடை வீதம் தினம் இருவேளை சிறிது சர்க்கரையுடன் கூட்டிக் கொடுக்கலாம். இது வயிற்றிலுள்ள வாயுவை கண்டிக்கும், சீதளத்தை நீக்கிச் சந்தோஷத்தை யுண்டாக்கும், இரைப்பைக்குப் பலத்தைக்கொடுத்துத் தீபனத்தை அதிகப்படுத்தும், வாய் நாற்றத்தை அகற்றும், தாதுவிருத்தியுண்டாக்கும், பழைய பேதிகளைக் கண்டிக்கும். இன்னும் இது கருப்பைக்கு வலுவைக்கொடுப்பதுடன் அங்குள்ள சீதளத்தையும் நீக்கும். இதைச் சிறிது வறுத்துப் பொடி செய்து நசியமிடத் தலைவலி, காக்கைவலி முதலியவைகள் போம். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

கட்டுவாதி மாத்திரை.

சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கிராம்பு, கோஷ்டம், அதிமதுரம், அதிவிடயம், லவங்கப்பட்டை, இலவம்பிசின், விளாம்பிசின் இவைகளை வகைக்கு விராகனெடை 1 வீதம் சுத்தசலம் விட்டரைத்து ஒரு மாதுளங்காய் நடுவில் பள்ளம் செய்து அதனில் செலுத்தி மேலே அந்தத் துகளைப்போட்டு அடைத்து அதன்பேரில் வெள்ளைத்துணிசுற்றிக் கனமாகப் பசுவின்சாணத்தை அப்பி 5-6 வறட்டியில் புடமிடவும். காய், சாணம் வெந்த பதங்கண்டு புடத்திலிருந்து எடுத்து கவசம் நீக்கி, காய், மருந்து உட்பட கல்வத்திலிட்டு, $\frac{1}{2}$ விராகனெடை கெஞ்சா சம்பந்தப்பட்ட கியாழத்தால் அரைத்துப் பட்டாணிப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலி

லுலர்த்திப் பத்திரப்படுத்துக. வேளைக்கு 2-3 மாத்திரை வீதம் தினம் இருவேளை தயிரில் கொடுக்க வயிற்றுக்கடுப்பு, சீதம் விழுதல், இரத்தமூலம் முதலியவை போம். தேனில் கொடுக்க அதிசாரம் போம். இவைகளைக் கொடுக்கும்போது காரசம்பந்தமான ஆகாரம் கூடாது. புளிவேண்டுமாயின் சேர்த்துக்கொள்ளலாம்.

கட்டுவாதி சூரணம்.

சாதிபத்திரி, சாதிக்காய், கிராம்பு, ஓமம், அதிவிடயம், தாளிசபத்தரி, ஏலம் இவைகள் வகைக்கு பலம் 1 ஆக தனித்தனி இளஞ்சூட்டில் பொன்மேனியாக வறுத்து எல்லாவற்றையும் ஒருமிக்க இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொள்க. இந்த சூரணத்தில் வேளைக்கு 5-7 குன்றி எடை தினம் இருவேளை சிறிது சர்க்கரை கூட்டி கொடுத்துவர சீதபேதி, ரத்தபேதி, உஷ்ணபேதி, கிராணி முதலியவைகள் நீங்கும்.

சாதிப்பூ.

(Jasminum Grandiflorum).

முத்தோஷஞ் சென்னிவலி மூடுஞ் சீரவெப்ப
மொத்த விழியினோ யோடுங்கா—ணித்தம்
விலகாத காந்தியுண்டா மேனிதனில் வாசங்
குலவுசா திப்பூவுக் கு.

குணம்:—(இ-ள்.) சாதிப்பூவுக்கு திரிதோஷம், தலைநோய், தேக உஷ்ணம், கண்படலம் இவைகள் நீங்கும். நீங்காத ஒளியும் மணமும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை நல்லெண்ணெயில் போட்டு, ரவியில் வைத்து வாசனை ஊட்ட அதிக பரிமளமுடையதாக இருக்கும். இதனைக் கூந்தலுக்குத் தடவிவர கண்கள் குளிர்ச்சியைப்பெறும், பார்வை அதிகரிக்கும். இந்தத் தைலத்தைச் சரீரம் முழுதும் தடவிச் சிறிதுநேரம் சென்றபின் ஸ்தானம் செய்யச் சொறி, சிரங்கு, நமைச்சல் முதலியவைகள் போம். இதன் இலையைச் சிறிது வாயிலிட்டு மென்று வாயில் அடக்கிச் சிறிது நேரம் வைத்துக்கொண்டிருந்து உமிழ்ந்துவிட வாய்ரணம் ஆறும். இதன் இலைச்சாற்றைக் கால்விரல்களுக்கு இடையில்வரும் மெதுவான புண்களுக்குப்போட ஆறும். இதன் இலையை நெய்யிற்போட்டுக் காய்ச்சி வடித்து, வாய்ரணம் பல்லீறுகளின் ரணம், தொண்டை ரணம் இவைகளுக்குப்பூச ஆறும்.

சாத்துக்குடிப்பழம்.
(Satghur-Orange Sweet).

சொல்லு மிருதயத்தின் சோர்வை யறநீக்கும்
நல்லுதிர மேபரவும் நாவிற்கு—வல்லுருசி
உண்டாமெந் நோய்க்கு முதவுநல்ல சாத்துகுடி
கண்டறிந்து மாதே களி.

குணம்:—(இ-ள்.) எவ்வித ரோகத்திற்கும் மத்தியக்கனியாக உபயோகப்படுகின்ற சாத்துக்குடிப்பழத்திஞல் இருதயபலம், சுத்த ரத்தம், நாவின்ருசி முதலியவைகள் உண்டாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த பழத்தினுடைய தோலானது அதிக மெல்லிய இதழாகவும், பழத்தோடு வலுவாய்ப் பிடித்திருக்கும். இதன் தோலே உரித்து எடுக்கப் பழத்தின்பேரில் ஒருவிதமான வெண்மை நிறமுள்ள மெல்லிய இதழ் படர்ந்து இருக்கும். இதனேயும் பக்குவமாக உரித்து எடுக்கச் சுளேகள் நன்கு விளங்கும். இதனே உட்கொள்ள அதிக இனிப்பாக இருக்கும். இதுவே அசல் சாத்துகுடிப்பழம். இத்தகைய பழத்தைத் தினந்தோறும் காலே, மாலே, இரவு ஆகாரத்திற்கு பின்பு சாப்பிட்டுவர இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். நல்ல இரத்தத்தைத் தேகத்தில் பரவும்படி செய்யும். நாவின் அரோசகத்தை மாற்றி ருசியை யுண்டாக்கும். ஐம்புலன் அறிவை விசேஷிக்கச்செய்து இரத்தத்திலுள்ள மாசுக்களே நீர் மூலமாக வெளியாக்கும். இன்னும் மலச்சிக்கலேக் கண்டிக்கும். ஜீரணசக்தியை அதிகப்படுத்தும். எவ்வித நோயாளிகளுக்கும் இதனே உபயோகப்படுத்தலாம். ஆஞல் சில இடங்களில் பயிராகின்ற சாத்துக்குடிப்பழமானது புளிப்புச்சுவையைப் பெற்றிருக்கும். இதனே உபயோகப்படுத்துவது கூடாது. அப்படி உபயோகப்படுத்திஞல் கபத்தை விருத்திசெய்து தேக ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும். ஆகையால் வியாதியஸ்தர்களுக்கு அதிக மதுரமுள்ள சாத்துக்குடிப்பழத்தை உபயோகப்படுத்துவதே சிறந்தது.

சாமை அரிசி.
(Panicum Miliaceum).

உடலிலுறு தாகசுர மோடுமே கம்போ
மடலுறுகால் வீக்க மகலுங்—கடலிலுறை
யாமை யனேயபதத் தன்னமே மேனியிடுஞ்
சாமை யரிசிக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) சாமை அரிசிக்குத் தாகசுரம், பிரமேகம், மகாவாதரோய், சோபாரோகம் இவை நீங்கும். தேகபுஷ்டியுண்டாகும் என்க.

செய்கை:—சோபாநாசினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த அரிசியை நன்முய்க் குத்தித் தவிடு முதலியவை நீங்கப் புடைத்துப் பாகப்படி சமைத்து உண்ண மேனி அழகு பெறும், தேகபுஷ்டி உண்டாகும். இன்னும் பித்தத்தாலும் வாதத்தாலும் ஏற்பட்ட உபரியை நீக்கும்.

சாம்பிராணி.

(Benzoinum).

வாதசீ தங்கண்ணோய் மாருத சென்னிவலி
யோதமுறு பீநசத்துன் போட்டுங்காண்—பூதலத்தில்
வேம்பிதுதா னென்ன மிகுகசப்பைத் தானளிக்குஞ்
சாம்பிரா ணிச்சரக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) வேம்பைப்போற் கசப்புள்ள சாம்பிராணி, வாதகபம், விழிநோய், நீங்காத சிரநோய், சலபீநசம் இவைகளை நீக்கும் என்க.

(இதுவுமது)

வாதச் சயித்தியமும் மாருத் தலைவலியும்
ஓதநீர்ப் பீநசமு மோடிப்போம்—வேதனையாற்
றேம்பும் பிணிவிக்கற் றீராப்பற் கூச்சம்போம்
சாம்பிராணி யின்குணத்தைச் சாற்று.

(இ-ள்.) சாம்பிராணியால் வாதசீதளம், தலைவலி, நீர்ப்பீநசம், விக்கல், பற்கூச்சம் இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பொடிசெய்து நெருப்பனலில் போட்டுப் புகை யுண்டாக்க அப் புகையானது இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும், சீதளத்தை வறட்டும், சந்தோஷத்தை யுண்டாக்கும். இதனுடன் படிகாரத்தைச் சேர்த்துப் பற்றேய்த்துவரப் பற்கூச்சம், வலி, ரணம் இவைகள் நீங்கும். சாம்பிராணியை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் காதுகளில் இரண்டொரு துளி விட்டுக்கொண்டுவர காதுவலி நீங்கும். தேகத்தில் பூசித்தேய்க்க வாதவலிகள் போம். இதனை நெருப்பனலில் போட்டுக் கூந்தலுக்கு புகை பிடிக்கச் சிரசில் உள்ள சீதளத்தை வறட்டும். இந்தப் புகையைக் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்வித்தபின்

தேகமாதி யெங்கும் படும்படியாய்ப் பிடிக்கச் சர்வதோஷமும் நீங்குவதுடன் சீதள சம்பந்தமான ரோகங்களை வரவொட்டாமல் தடுக்கும். இந்தச் சாம்பிராணியைத் தைலமாகவும் பதங்கமாகவும் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

ஒரு பெரிய மட்கடத்தின் அடிப்பாகத்தில் 2 அங்குல உயரமுள்ள 3 கற்களை அடுப்புப்போல் வைத்து அதன்பேரில் 10-12 அவுன்ஸ் அளவு சலம் பிடிக்கக்கூடிய ஓர் எனுமில்ட் கோப்பையை வைத்து அரைப்பாகம் சலம்விட்டுச் சட்டியின் அடிப்பாகத்தில் கோப்பையைச் சுற்றி 5 பலம் பளிங்கு சாம்பிராணியைப் பொடி செய்துபோட்டு, அடிகடத்தை யொத்த மற்றோர் கடத்தின் நிறைய சலம்விட்டு மூடியாக அமர்த்திச் சந்திற்கு உளுத்தமாவு சீலைசெய்து அசையாமல் அடுப்பில் வைத்துத் தீபம்போல் 2-2½ சாமம் எரிக்கவும். அத்தருணம் மேற் சட்டியிலுள்ள சலம் சூடேறும் சமயம் அப்போதைக்கப்போது அகப்பைகொண்டு வெளியாக்கிக் குளிர்ந்த சலம் விட்டுக்கொண்டுவருக. பிறகு ஆறவைத்து உளுத்தம் சீலையை நீக்கிக் கோப்பையைப் பார்க்க தைலம் கோப்பையின் அடிபாகத்திலும், பதங்கம் சலத்தின்பேரிலும் காணும். இவைகளை எடுத்துத் தனித்தனி பத்திரப்படுத்துக. அடியிலுள்ள சாம்பிராணி சிட்டத்தைச் சிறிது நெருப்பணலில் போட்டுப் பார்க்கப் புகை கிளம்பின் மீண்டும் முன்போல் ஒரு முறை எரித்து வாங்கவும்.

இங்ஙனம் சித்தப்படுத்திய தைலத்தை இரண்டொரு துளி வெற்றிலைத் துண்டில் தடவி கன்னப் பொறியில் ஒட்டிவைக்கத் தலைவலி நீங்கும். இத் தைலத்தில் இரண்டொரு துளி தேனுடன் மத்தித்துக் கொடுக்கச் சீதள சம்பந்தமான பிணிகள் போம். இது இருமல், ஈளை முதலிய ரோகங்களைக் கண்டிக்கும், வாதவலிகளுக்கு மேற்பூசித்தேய்க்க வலி நீங்கும். சாம்பிராணி பதங்கத்தில் 1-2 குன்றி எடை சர்க்கரை கூட்டிக் கொடுக்கச் சீதள சம்பந்தமான சுரம், சலதோஷம், சயித்தியம் ஆகிய இவைகள் போம். தாது பலப்படும்.

*சாரப்பருப்பு.

(Buchanania Latifolia—Seeds).

சாரப் பருப்பதனுற் சாருங் குணங்கேட்கின்
நீரப் பருங்கடுப்பு நீர்ச்சீதந்—தீரத்
தோலையுமிர தந்தந்தி துய்த்தார்க்கு நன்றுங்
கலையுவிந்து விற்கூக்கங் காண்.

---

* காட்டு மாம்பழம் என்னும் சிறிய பழத்திலிருந்து எடுக்கப்படும் விதையின் பருப்பிற்கே சாரப்பருப்பு என்று பெயர். ஆனால் காட்டு மாம்பழம் என்பது மரிமாங்காய் என்கிற காட்டுமாமரத்தின் பழமன்று.

குணம்:—(இ-ள்.) சாரப்பருப்பால் சிறுநீரைப்பற்றிய கடுஞ் சுருக்கு, மூத்திரக்கடுப்பு, சலப்பிரமேகம், நீங்கும். நீற்ற சுக்கிலம் இறுகும், ரசகெந்தகங்களைத் தின்றவர்களுக்கு அதன் அழலையை ஆற்றும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, காமவிர்த்தினி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பருப்பைத் தினந்தோறும் 1-1½ தோலா எடை சிறிது கற்கண்டு கூட்டிச் சாப்பிட்டுக்கொண்டு வர குடல், குண்டிக்காய் இவைகளிலுள்ள வெப்பத்தை யாற்றும். சிறுநீரைத் தாராளமாகப் போகச் செய்யும். தாது இறுகும். விசேஷமாக இந்தப் பருப்பு லேகியங்களில் கூட்டப்படுகின்றது. இத்தகைய லேகியங்களால் சரீரத்திற்கு அதிக நன்மையுண்டு. ரச கெந்தி முதலிய அவிழ்தங்களைச் சாப்பிட்டு உஷ்ணபேதி, வயிற்று பிடுங்கல், வாய் ரணம், சீதரத்தப் போக்குக் கண்டவர்கள் இதனைச் சாப்பிட உள் வெப்பத்தைத் தணிக்கும்.

சாலாமிசிரி.

(Orchis Mascula).

தாது விருத்தியுறும் சம்போக சக்திமிகும்
ஏது மயிர்ப்பில்லை யேந்திழையே—ஓதமிகு
காலார் பெரிஷியாக் கண்விளைந்த நற்கிழங்காம்
சாலா மிசிரியினற் றுன்.

குணம்:—பெரிஷியா தேசத்திலிருந்துவரும் சாலாமிசிரியினல் விந்து தடிப்பாகும். போகத்தில் அளவுகடந்த சக்தியை உண்டாக் கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதை இடித்து நன்றாய்த் தூள் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½ தோலா எடை காய்ச்சிய பசுவின்பாலில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் குச்சியால் துழாவிக்கொடுத்துக் கஞ்சிபோல் ஆன சமயம் போதிய அளவு கற் கண்டுகூட்டி தினம் 2 வேளை குடித்துக்கொண்டுவரத் தாது புஷ்டி உண்டாகும். இன்னும் இதனை லேகியங்களில் சேர்த்து உப யோகிப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

மதனபோக அல்வா.

கசப்புச் சுவையில்லாத இனிப்பான வாதுமைப்பருப்புகளைக் கொதிக்கிற சலத்தில் ஊறப்போட்டு மேற்தோல் நீக்கிச் சுத்தப்

படுத்திய பருப்பு சேர் ½, நெய்யில் தனித்தனியாகப் பொன்மேனியாக வறுத்த ஏலம், ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிபத்திரி, வால்மிளகு இவைகள் வகைக்குக் கழஞ்சி 1, கசகசா பலம் 2, சாலாமிசிரிமாவு பலம் 1 இவைகளை எல்லாம் தட்டை அம்மியில் வைத்துப் பசுவின்பால்விட்டு நெகிழ அரைத்து, 3 சேர் பசுவின்பாலில் கலக்கி, வெள்ளியைப்போல் பளபளப்பாக இருக்கும்பொருட்டுத் தேய்த்து சுத்தப்படுத்திய இரும்பு கடாயில்விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்துக் கையோயாமல் கிளறிக்கொடுத்துக்கொண்டேவருக. களிபோல் வரும் சமயம் நீர்முள்ளிவிதை, பூனைக்காலிவித்து இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து வகைக்குப் பலம் ½ ஆகப் போட்டு 2 பலம் பன்னீரில் ¼ விராகனெடை குங்குமப்பூவைக் கரைத்துவிட்டு, ½ சேர் பசுவின்நெய்யையும் 1 சேர் சீனுக்கற்கண்டுத் தூளையும்போட்டு சேர்த்துக்கிளறி, வாயகன்ற கோப்பையில் வழித்து வைத்துக்கொள்க. இந்த ஹல்வாவை 1 பலம் அளவிற்குத் தினம் 2 வேளை சாப்பிட்டுவரத் தாதுபுஷ்டி யுண்டாகும். இதனைத் தினந்தோறும் இரவியில் வைத்துவருதல் சாலச்சிறந்தது; இன்றேல் ருசி மாறுதலடையும்.

சாறுவேளை.

(Trianthema Portulacastrum).

ஏக்கமுறுங் காமாலை எய்துமல நீர்க்கட்டும்
வீக்கமுறும் பாண்டும் மிகுகபமும்—போக்குமே
வாளைநிகர் வாள்விழியாய் வையகத்தே நற்சாறு
வேளைதனை யுண்டவர்க்கே விள்.

குணம்:—(இ-ள்.) வாளின் ஒளியையொத்த விழியையுடைய மாதே உலகில் சாறுவேளையை உட்கொண்டவர்களுக்குக் கவலையைத் தராநின்ற காமாலை, மலஜலக்கட்டு, வீக்கத்தை முதன்மையாகக்கொண்ட பாண்டுரோகம், அதிகரித்த கபம் முதலியவைகள் நீக்கும் என்க.

செய்கை:—மலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உயர்ந்த சமூலத்தை இடித்துச் சூரணம்செய்து சுக்குத்தூள் கூட்டி உள்ளுக்குச் சாப்பிட வயிற்றிலுள்ள மலத்தை வெளியாக்கும். சிறுநீரை அதிகப்படுத்தும். அல்லது ஒரு பங்கு வேரைப் பஞ்சுபோல்தட்டி ஓர் மட்பாண்டத்தில்போட்டு 20 பங்கு கொதிக்கின்ற சலத்தைவிட்டு சிறிது

காய்ச்சி இரண்டு மணி நேரம் ஊறவிட்டு வடிகட்டி இரண்டுமணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு அவுன்ஸ் வீதம் மலம் தாராளமாகப் போகிறவரையில் கொடுக்கவும். இதனால் காமாலை, பாண்டு, நீர்க் கட்டு, மலச்சிக்கல் முதலியவைகள் குணமாகும்.

இதன் இலையைச் சுத்தமாக ஆய்ந்து துவட்டலாகக் கறி சமைத்து உட்கொள்ள மேற்கூறப்பட்ட நோய்கள் நீங்கும். இந்த மூலிகையானது குண்டிக்காய், மண்ணீரல் இவைகளின் தொழில்களைச் சரிவர நடத்தும்படியாகச் செய்யும். இன்னும் இருதயத்தின் நடைகெட்டு, நீர்க்கோவை, மகோதரம் முதலியவை கள் கண்டிருப்பினும் இது விரைவில் குணப்படுத்தும். இதன் இலையை வதக்கிக் கீல்களிலுண்டான வீக்கத்திற்கு வைத்துக்கட்ட விரைவில் குணப்படும்.

இவைகளுமல்லாமல் திரிவங்கத்தை கிரமப்படிச் சுத்தம் செய்து சமனெடையாக உருக்கி இச் சாறுவேளையின் சமூலத்தை கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுச் சத்து இல்லாமல் பற்பமாகிற வரையில் வறுத்து எடுத்து வேளைக்குத் துவரம்பருப்பு பிரமாணம் தினம் இரண்டுவேளை ஐந்துநாள் கொடுப்பதுமுண்டு. இதனால் செம்படை, மேகவிரணம், குழிரணம், மூலம், பௌத்திரம் முதலியவைகள் குணமாகும்.

குறிப்பு:—இந்தக் கொடியின் இலையானது ஏறத்தாழ அகலமும் நிகளமும் வித்தியாசப்படாமல் வட்டமாக இருக்கும். இதன் மேற்பாகம் பசுமையாகவும் அடிப்பாகம், வெண்மையாகவும் இருக்கும். இதன் இலையும் தண்டும், நீர்பற்றி மிருதுவாகத் தடித்திருக்கும். இந்தக் கொடிகளில் வெள்ளைப்பூ, சிகப்புப்பூ விடுகின்ற இரு இனங்கள் உண்டு. அதில் வெள்ளைப்பூ விடுகின்ற வெண்சாறு வேளையையே அவிழ்தபாகங்களில் கூட்டவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

சிகைக்காய்.

(Acacia Concinna).

மூக்கின் சிகிச்சைக்கு முக்கியமாம் பேதியையுண்
டாக்குவம ணத்தை யழைப்பிக்குந்—தேய்க்கும்
வகைநெய்ச்சிக் கைப்போக்கு மாதரசே! நாளுஞ்
சிகைக்கா யதனைத் தெரி.

குணம்:—(இ-ள்.) சிகைக் காயானது நாசியுட் புரிகின்ற ஆக்கிராண நசியச் சிகிச்சைகளுக்கு முக்கிய மருந்தாயிருக்கும். அன்றியும் பேதியையும் வாந்தியையும் உண்டாக்கும். பலவித நெய்ச் சிக்குகளை நீக்கும் என்க.

செய்கை:—வமனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதற்கு வாந்தியையும், பேதியையும் உண்டாக்குகின்றகுணமுண்டு. ஆதலால், குழந்தைகளுக்கு, எண்ணெயிட்டு ஸ்நானம் செய்விக்கும்போது அரைத்து வைத்துள்ள சிகைக்காயில் சிறிது விரலால் தொட்டு தொண்டையில் விட்டு துழாவ குமட்டல் உண்டாகி உள்ளிருக்கும் கபமெல்லாம் வெளிப்படும். தைல ஸ்நானம் செய்யும்போது அரைத்த சிகைக்காயைத் தேய்த்து சலம் விட்டுக்கொள்ள எண்ணெய் சிக்கலறும். தேகத்திலுள்ள அழுக்கையும் சுத்தப்படுத்தும். சொறி, சிரங்கு முதலியவற்றை ஆற்றும். இன்னும் கூந்தலைச் செழிப்பாக வளரச் செய்யும்.

சிகைக்காயையும் புகையிலையையும் சுட்டுக் கரியாக்கிச் சமனெடையாகக் கலந்து வைத்துக்கொண்டு பல் வலிக்கு வைத்து அழுத்தத் துர்நீர் வெளியாகி நோய் சாந்தப்படும். சிகைக்காயைச் சுட்டுக் கரியாக்கி நல்லெண்ணெயில் மத்தித்து மண்டைக்கரப்பான் தேகக் கரப்பான் இவைகளுக்குத் தடவிவர ஆறும்.

சிகைக்காய்க் கொழுந்திலையுடன் மிளகு, புளி, உப்பு, மிளகாய் சேர்த்து அரைத்து துவையலாக உபயோகப்படுத்தப் பித்த சம்பந்தமான காமாலை, அரோசகம் முதலியவைகள் போம்.

சிங்கடாப் பருப்பு.

(Trapa Bispinosa Seeds).

தாது வளருமிடர் தங்குகபம் பித்தமொடு
தீது பயித்தியமும் தீருமே—ஓதும்
மகதிநிகர் சொல்லணங்கே மந்தாக் கினியும்
புகழ்சிங் கடாப்பருப்பாற் போம்.

குணம்:—(இ-ள்.) சிங்கடாப் பருப்பால் தாது பலப்படும். கபம், பித்தம், பயித்தியம், அக்னிமந்தம் இவைகள் நீங்குமென்க.

செய்கை:—கபஹரகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொட்டையானது முக்கோணவடிவமாகவும், கறுப்பு நிறமாகவும், சிறிது நீண்ட முட்களுடனும் காணப்படும். இது ஏரி, குளம், குட்டைகளிலுள்ள ஒருவித சிற

கொடியின் காயாகும். இதனை உப்பிட்டு வேகவைத்து மேற்றோலை நீக்கி உண்பதுண்டு. இது நாவிற்கு நல்ல ருசியாக இருக்கும். உலர்ந்ததாக இருப்பின் மேல் ஓட்டை நீக்கி எடுத்த பருப்பை மாவாக அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$ - $\frac{1}{2}$ தோலா எடை பாலில் கலந்து சிறிது சர்க்கரை கூட்டித் தினம் 2-3 வேளை கொடுக்கலாம். இதனால் தாது விருத்தியுண்டாகும். தேகம் கொழுமை பெறும். இந்த மாவின் எடைக்கு அரை எடை வேங்கைப்பிசின் தூள்கூட்டி மிருதுவாக அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1 கழஞ்சி வீதம் தினம் 1 வேளை சமன் சர்க்கரை கூட்டி ஸ்திரீகளுக்குக் கொடுத்துவரப் பெரும்பாடு நிவர்த்தியாகும்.

சிலாரசம்.

(Liquidambar Orientalis).

தலைவலிநீ ரேற்றந் தநுர்வாதஞ் சந்நி
குலைகுலையுந் தும்மற் குடிபோஞ்—சிலைநுதலே
மாசுடைய மஞ்சுநிறம் வாய்ந்திருப்ப தன்றிமணம்
வீசு சிலாரசத்தால் விள்.

குணம்:—(இ-ள்.) மலின மேகநிறமும் மணமுமுள்ள சிலா ரசத்தால், சிரஸ்தாபம், ஜலதோஷம், தநுர்வாதம், சந்நி, அதிதும்மற் பீநசம் இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை வேளைக்கு 2-3 குன்றி எடை வெந்நீரில் கலந்து கொடுக்கலாம். இதனால் பேதியாகும். சில சரீரங்களுக்குப் பேதி சரிவர ஆகாவிட்டால் மறுநாள் அளவை அதிகப்படுத்திக் கொள்ளவும். இது வயிற்றிலுள்ள வாயுவை வெளிப்படுத்தும். சிறு நீரைப் பெருகச் செய்யும். ஸ்திரீகளுக்கு உண்டாகும் உதிரச் சிக்கலை நீக்கும். தலை, மூளை, ஈரல் முதலிய உறுப்புகளுக்குப் பலம் கொடுக்கும். மார்புவலி, இடுப்புவலி, தொண்டைக் கம்மல், சயித்தியம், நீர்பீநசம், குண்டிக்காய்வலி, கபக்கட்டு இவைகளைபோக்கும். இதனைப்பொடிசெய்து நெருப்பனலில் சிறிதுபோட்டு அதிலிருந்து கிளம்புகின்ற புகையை நாசியின்மூலம் ஆக்கிராணிக்கக் கப சம்பந்தமான ரோகங்கள் போம். இதை நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி மேலுக்குத் தேய்க்க நாவிழுப்பு, பாரிசவாதம், திமிர் முதலியவைகள் போம். மேக ரணங்களுக்கு மேற்றடவ

ஆறும். இதனை இதர சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவ துண்டு, எங்ஙனமெனில்—

சிலாரச மெழுகு.

சிலாரசம் 3½ விராகனெடை, நீர்நாய் சவ்வாது 1¼ விராக னெடை, அபினி 7½ குன்றி எடை இவைகளைக் கல்வத்திலிட்டுத் தேனை கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டி அரைக்கவும். இவைகள் யாவும் நன்றாய் உறவாகி மெழுகு பதமாகத் திரளும்போது 2-2½ குன்றி எடை இருக்கும்படியாக மாத்திரைகள் திரட்டி வைத்துக் கொள்க. இந்த மாத்திரையில் ஒன்றை வாயில் போட்டு அடக்கி வைத்துக்கொண்டு அது உமிழ் நீரோடு சேர்ந்து கரையக் கரைய உள் விழுங்கி வரவும். இப்படித் தினம் 2 வேளை உபயோகித்து வர நாட்பட்ட இருமல், சுவாசகாசம், ஈளை முதலிய ரோகங்கள் தீரும்.

சிவகரந்தை.

(Sphoeranthus Zeylanicus Nob).

வாந்தி யரோசகத்தை மாற்றும் பசிகோடுக்குஞ்
சாய்ந்தவிந்து வைக்கட்டுங் தப்பாதே—ஏந்தழைகைத்
தண்டா துறச்சேர்க்குஞ் சார்ந்த பரிமளத்தைத்
தண்டாச் சிவகரந்தை தான்.

(இதுவுமது)

கந்த நாறு கரந்தை யதன்குணம்
மந்த வாதங் கரப்பனை—மாற்றிடுந்
தோந்த ரோகந் துடைக்கு மிருமலா
மந்த நோயுந் தணிக்குநம் மாணையே.

குணம்:—(இ-ள்.) மணமுள்ள சிவகரந்தை வமனம், அருசி, விந்து நஷ்டம், க்ஷீணவாதம், கரப்பான், வாதாதிதொந்தம், காசம், அக்கினிமந்தம் இவைகளை நீக்கும். சடராக்கினியையும் வனப்பை யும் உண்டாக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—புஷ்பம் விடுவதற்கு முன்னதாகவே இச் செடியைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்திச் சமூலமாக இடித் துச் சூரணம் செய்து ஒரு புது மட்கலயத்தில் போட்டு வாய்மூடிப் பத்திரப்படுத்துக. இந்தச் சூரணத்தைத் தினம் இருவேளை காலை

மாலை திரிகடிப் பிரமாணம் சிறிது சர்க்கரைக் கூட்டிச் சாப்பிட்டுக் கொண்டுவர நல்ல பசிதீபனத்தை உண்டாக்கும். இரத்தத்திலுள்ள மாசுகளை யகற்றிச் சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய தோல் சம்பந்தமான நோய்களை அகற்றும். கபத்தைக் கரைக்கும், இந்திரியத்தைப் பலப்படுத்தும். இதனை 40 நாள் உட்கொள்ள மேனி அழகு பெறும்.

சிவதைவேர்.

(Ipomoea Turpethum Root).

உள்ள மலமு முதாவர்த்த மும்வயிற்றைக்
கொள்ளுபித்த வாதமும்போங் கூறுங்காற்—பிள்ளைகட்குச்
செப்பு கிரகமும்போந் தேனே யுலகத்துட்
டப்பிற் சிவதைக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) குற்றமற்ற சிவதைக்கு பழைய மலம், உதாவர்த்தவாதம், பித்தவாதரோகம், பாலகிரகதோஷம் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—பத்து பலம் வேரைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு குடுவையில் போட்டு ½ படி பசுவின் பாலும், ½ படி சுத்த சலமும் விட்டு ¾ பாகம் சுண்டக்காய்ச்சி ஷை சிவதை வேர்த்துண்டுகளைச் சுத்த சலம் விட்டு அலம்பி, நடு நரம்பு நீக்கிக் காயவைத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்க. வேண்டும்போது தேகதிடத்திற் கேற்றவாறு ½-1 விராகனெடைச் சூரணத்தைச் சர்க்கரையுடன் கூட்டிக் கொடுக்கப் பேதியாகும். இந்தச் சூரணத்துடன் காபூல்கடுக்காய் சூரணத்தைச் சேர்த்துக் கொடுக்கக் காக்கைவலி, பக்கவாதம், பயித்தியம் முதலியவற்றை நீக்கும். இது நிலாவாரை, நேர்வாளம் முதலியவற்றைப்போல் அடிவயிற்றில் அதிக வலியை உண்டாக்காது. குண்டிக்காய்க்கும் யாதொரு உபத்திரவத்தையும் கொடுக்காது. கருப்பிணிகளுக்குக் கூடத் தேகதிட மறிந்து கொடுக்க யாதொரு உபத்திரவமும் நேரிடாது. விசேஷமாக இருதயம், ஈரல், குண்டிக்காய், உடம்பின் மேற்றோல் முதலியவைகளில் ஏற்பட்ட நீர்க்கோர்வையைக் குணப்படுத்துவதற்காக இந்த வேரை இதரச்சரக்குகளுடன் கூட்டி உபயோகிப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

சுகபேதிச்சூரணம்.

நெல்லிவற்றல், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, ஏலம் இப்பதினொன்றும் வகைக்குத் தனித்தனி சூரணம் விராகனெடை 1, சுத்தி செய்த சிவதை வேர் சூரணம் விராக னெடை 30 ஆகமொத்தம் விராகனெடை 41-க்கு சமனெடை சீனி சர்க்கரை கூட்டிக்கலந்து புதுக்கலயத்திலாவது அல்லது காற்று நுழையாத கல்கார்க்கிட்ட புட்டியிலாவது பத்திரப்படுத்தி வேளைக்கு 1-1½ விராகனெடைச் சூரணம் வெந்நீரில் போட்டுக் கலக்கிச் சாப் பிடவும். இதனால் 4-5 முறை பேதியாகும். மேற்கூறப்பட்ட நோய் களை எல்லாம் நிவர்த்தி செய்யும். ஒரு முறை உட்கொண்ட அள வில் சரிவரப் பேதி ஆகாவிடின் மறுமுறை கொள்ளும்போது அளவை அதிகப்படுத்திக் கொள்க. அன்றிரவு மருந்தின் வேகம் தணியும்பொருட்டு சுக்கு, சீரகம் வகைக்குக் கழஞ்சு 1 ஆகத்தட்டி ஒரு மட்பாண்டத்தில் போட்டு ¼ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிப் போதிய அளவு பனங்கற்கண்டு போட்டு உட்கொள்ளவும்.

இங்கு கூறப்பட்ட பிரயோகங்களெல்லாம் பொதுவாக சிவ தைக்கென்றே அறிக. இந்த இனத்தில் கருஞ்சிவதை, வெண் சிவதை என்கிற பேதங்களுண்டு. இவற்றை ரோகங்களுக்கேற்ற வாறு உபயோகித்தல் சாலச்சிறந்தது. அவற்றின் குணம் பின் வருமாறு—

கருஞ்சிவதைவேர்.

(Ipomoea Turpethum—Black Root).

காரமுடன் கைப்புமுண்டாங் காணு வெலிவிடத்தைப்
பாரவனற் குன்மத்தைப் பற்றறுக்கும்—பாரிற்
றெரிஞ்சுரைத்தோம் பேதிதருந் தேமொழியே கேளாய்
கருஞ்சிவதைக் கந்தமது காண்.

(இ-ள்.) காரமும் கசப்புமுள்ள கருஞ்சிவதை அறிவதற்கரிய எலி விஷத்தையும் பித்த குன்மத்தையும் நீக்கும். விரேசனத்தைச் செய்யும் என்க.

வெண்சிவதைவேர்.

(Ipomoea Turpethum—White Root).

கைப்புந் துவர்ப்புங் கலந்திருக்கும் பித்தத்தை
யிப்புவியி னுடோட்டா திவ்வளவோ—செப்புதரத்
தோள்ளைக் கிருமி தொலைக்குமிகு பேதிதரும்
வெள்ளைச் சிவதைதனை விள்.

(இ-ள்.) கசப்புந் துவர்ப்புமுள்ள வெண்சிவதை, பித்தகோபத்தையும், மலாசயக்கிருமியையும் போக்கும், விரேசனத்தை தரும் என்க.

சிவப்பு அம்மான்பச்சரிசி.

(Euphorbia Thymifolia—Big).

அரத்தவம் மான்பச் சரிசியேனு மூலிக்
குரத்தவன் மேக மொழியுங்—கரத்ததொரு
விந்துவுமுண் டாகுமினும் வெண்டாது வும்பொடியா
மிந்துவினும் வாண்முகத்தா யெண்.

குணம்:—(இ-ள்.) சிவப்பு அம்மான்பச்சரிசி மூலிக்கு வாதப் பிரமேகம் போகும், சுக்கிலதாது விர்த்தியாம். இதனால் வெள்ளி பஸ்பமாகும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5-7 குன்றி எடை வீதம் மோரில் கலக்கிக் குழந்தைகளுக்கு கொடுக்க மலத்தைப் போக்கும், வயிற்று உபத்திரவத்தையும், கிருமிக் கூட்டத்தையும் ஒழிக்கும். இந்த இலையை அரைத்துச் சுமார் 1-1½ கழற்சிக்காய்ப் பிரமாணம் பால் அல்லது மோரில் கலக்கிப் பெரியவர்களுக்குக் கொடுக்க வெட்டை, வெள்ளை, மருந்துகளின் உஷ்ணம் இவைகள் போம். இதை அரைத்து ஊறலுடன் பரவுகின்ற படைகளுக்குப் பூசக் குணமாகும்.

குறிப்பு:—இந்த இனத்தில் பச்சைநிறமுடையது ஒன்று உண்டு. அதனைச் சிறு அம்மான்பச்சரிசி என்னும் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

சிவனார்வேம்பு.

(Indigofera Aspalathoides).

சாய்க்குமிடிப் புண்பழம்புண் சர்மகுட் டம்பிளவை
தீக்கடுகால் வன்பெருநோய் சிந்துமா—நோய்க்கு
விதையாதி வேம்பினு மெய்க்கழகு காலை
யுதையாதி வேம்பினு லுன்.

குணம்:—(இ-ள்.) சிவனார்வேம்பினால் ஆகந்துகவிரணம், நாட்பட்டபுண், சர்மதலகுஷ்டம், ராஜப்பிளவை, கர்ப்பவிஷம், மகாவாதம், குஷ்டு, அக்கினிமந்தம் இவை நீங்கும். அழகுண்டாம்.

செய்கை:—சோபநாசினி, விஷநாசகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரை வாயிலிட்டு மென்று சிறிதுநேரம் அடக்கிவைத்திருந்து உமிழ்ந்துவிட வாய்ரணம், பல்வலி இவைகள்போம். இதன் சமூலத்தை வெண்ணெய்கூட்டி மெழுகுபோல் அரைத்து நீர்சம்பந்தமான புரைக்குழலுக்கு (கிரந்தி கட்டுக்கு) மேற்றடவிவரக் கரைந்துபோம். இதைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேங்காய் எண்ணெயிற் குழைத்துத் தலையில் உள்ள சிரங்குகளுக்குத் தடவ ஆறும். இதன் இலையை அரைத்துக் கட்டிகளுக்கு வைத்துக்கட்ட உடைத்துக்கொள்ளும். சீழ்சேராமல் இருப்பின் அழுந்திவிடும். இதன் வேரிலிருந்து எடுக்கப்பட்ட குழித்தைலமானது மேகரணங்களை ஆற்றுவதில் அதிகச் சிறந்தது. இன்னும் இதனுடன் இதர சரக்குகளைக்கூட்டிக் குழிதைலமாக இறக்கி உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

சிவனார்வேம்புத் தைலம்.

சிவனார்வேம்பு, நல்ல சங்கம்வேர், பூவரசம்பட்டை, வால் உளுவைஅரிசிஆகிய இவைகளைச் சமனெடையாக ஒருதுவாரமிட்ட மட்கலயத்தில் போட்டு, வாய்மூடிச் சீலைசெய்து குழிப்புடமாகத் தைலம்வாங்கி வைத்துக்கொண்டு வேளைக்கு அரைகாசு எடை சர்க்கரையில் கூட்டித் தினம் இருவேளை கொடுக்க, ரணம், மேகத் தடிப்பு, ஆருத புண்புரைகள் தீரும்.

சிறியா நங்கை.

(Polygala Glabra).

சிறியாநங் கைத்தழையைச் சேவித்த பேரைப்
பிறியார் மடந்தையர்கள் பின்னு—மறியதனல்
டங்கணமும் நீறுங் தனியழகு முண்டாகுந்
திங்கண் முக மாதே தெளி.

குணம்:—(இ-ள்.) சிறியாநங்கை என்னு மூலி ஸ்திரீவசியத்தைச் செய்யும். வெங்காரத்தை பஸ்பமாக்கும். தேகத்தில் வனப்பை உண்டாக்கும்.

செய்கை:—விஷநாசகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—ஞாயிற்றுக்கிழமை சூரியோதயமாகும் சமயம் இந்தச்செடிக்குக் காப்புக்கட்டித் தூபதீபம் கொடுத்து வேரைப்பிடுங்கித் தங்க குளிசத்தில் வைத்து அணிந்துகொள்ள ஸ்திரீகள் வசியமாவரென ஆன்றோர் கூறியுள்ளனர். இதன் இலையை அரைத்துக் கைப்புசுவை தெரிகிறவரையில் கொடுத்துக்கொண்டுவர அரவின் கடிவிஷம் நீங்கும். அல்லது சிறியாநங்கை வேரையும் நன்னாரிவேரையும் சமபாகமாக அரைத்துத் கசப்புச்சுவை தெரிகிறவரையில் கொடுத்துவர கடிவிஷம் நீங்கும். இத்தகைய சிகிச்சைகள் செய்யும்போது இதன் இலைச்சாற்றைக் கடிவாயிலும் தேய்த்து வருதல் சாலச்சிறந்ததாகும். சாதாரணமாக இந்த இலையை அரைத்துத் தினம் ஒருவேளை சிறுகொட்டைப்பாக்களவு பாலில் கலக்கிச் சில தினம் கொடுத்துவர நல்ல பலமும் தேஜசும் உண்டாகும்.

இந்த மூலிகையை அரைத்து வெண்காரத்திற்குக் கவசமிட்டுச் சீலைசெய்து 5-6 வறட்டியில் புடமிடப் பற்பமாகும். அது நீர்க்கட்டை உடைப்பதற்கு இன்றியமையாததாகும்.

சிறு அம்மான்பச்சரிசி.

(Euphorbia Thymifolia—Small).

யாதுபுகல் வேனமுதா லங்கி கருமெழுகாந்
தீதுபுரி மேகவெப்பந் தீருமினு—மோதுங்காற்
றேறம்மான் க்ஷீரமொக்குந் தின்னுதையஞ் செம்மைநிறச்
சீறம்மான் பச்சரிசிச் சீர்.

குணம்:—(இ-ள்.) பாலுள்ள சிறு அம்மான் பச்சரிசியால் அங்கிகரு என்கிற சாதிலிங்கம் மெழுகாகும், மேக உஷ்ணம் நீங்கும், நல்ல பசுவின்பாலுக்கொக்கும், ஆதலால் இதனை உதயகாலந்தோறும் உண்பாயாக.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையுடன் சிறிது மிளகு கூட்டி அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு தினந்தோறும் காலையில் கொடுத்துவர 3 நாளில் நீர்ச்சுருக்கு, வெள்ளை இவைகள்

போம். இதனை மருந்துகளின் வேகம் தணிக்கவும் கொடுப்பதுண்டு. நகச்சுற்றில் உண்டான ரணங்களுக்கு இதன் பாலைத் தடவிவர விரைவில் ஆறும்,

சிறுகட்டுக்கொடி.

(Cocculus Villosus—Small).

சிறுத்தகட் டுக்கொடியாற் சீதரத்த நீங்கு
மிறுத்தபுன லைக்கட்டு மின்னுந்—திருத்தமுறுங்
கொங்கைமட மாதே குளிரும்மெய் யெல்லார்க்குஞ்
சங்கையற நீயெடுத்துச் சாற்று.

குணம்:—(இ-ள்.) சிறுகட்டுக்கொடியால், சீதரத்தபேதியும், மேகநீரும் கட்டும். இன்னும் இது சரீரத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மூலிகையை நன்றாய்க் கசக்கிச் சலத்தில் சாறுபிழிந்து கையால் துழாவ, சலம் குழகுழப்பாகிக் கட்டும். இந்தக் கட்டுண்ட சலத்தை சொறி, சிரங்கு, கசிவுள்ளபடை ஆகிய இவைகளின்மீது பூசிவர ஆறும். இந்த கட்டுசலத்தில் சர்க்கரையிட்டு உள்ளுக்குக் கொடுக்க வெள்ளை, வெட்டை, சீதபேதி, ரத்தபேதி ஆகிய இவைகள் போம். இதன் வேரில் ஒருபலம் எடுத்துப் பஞ்சுபோல் தட்டி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 அவுன்ஸ் கியாழத்தில் 3-4 குன்றி எடை திப்பிலிச் சூரணமும்' சிறிது வெள்ளாட்டுப்பாலும் கூட்டிக்கொடுக்க மேக வாயுப் பிடிப்பு, மேகநீரொழுக்கு முதலியவை போம்.

இதன் வேர் பலம் $\frac{1}{4}$, சுக்குப் பலம் $\frac{1}{4}$ இவை இரண்டையும் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் சிறிது சர்க்கரை அல்லது தேன்கூட்டிக் கொடுக்க அஜீரணம், பசியின்மை, வாந்தி இவைகள் போம்.

இந்தக் கியாழத்துடன் $\frac{1}{4}$ பலம் நிலவேம்பு கூட்டிக் கியாழமிட்டு முன்போல் கொடுக்கச் சுரம்போம். இதன் வேரையும், கழற்சிக்காய்ப் பருப்பையும், சந்தனக்கல்லில் சலம்விட்டு உறைத்து ஒரு புளியங்கொட்டைப் பிரமாணம் பசுவின்பாலிலாவது சுத்த சலத்திலாவது கொடுக்கக் குழந்தைகளுக்கு உண்டான வயிற்றுவலி போம்.

சிறுகீரை.

(Amaranthus Campestris).

கண்புகைச்ச னேத்திரநோய் காசம் படலரசப்
புண்கிரிச்ச ரஞ்சோபை பொங்குபித்த—மண்பரவு
தாவரவி ஷங்களும்போந் தாழாத் திருவுமுண்டாங்
கூவுசிறு கீரைதனைக் கொள்.

குணம்:—(இ-ள்.) சிறுகீரையால் தாம்பிரநோய், காசம், படலம், பாதரசவேகம், விரணம், மூத்திரகிரிச்சரம், வீக்கம், பித்தநோய், நாவிபாஷாணம் முதலிய விஷங்கள் ஆகிய இவைகள் போம். அழகுண்டாகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி பருப்போடு சேர்த்துச் சமைத்துண்ண ருசியாக இருக்கும். இதனால் சிறுநீர் அதிகமாகப் போகும். தேகத்திலுள்ள நீர்க்கோவை நீங்கும். இதன் வேரைக் கியாழமிட்டுக் கொடுக்க, நீர் தாராளமாக இறங்கும். இது பத்தியத்திற்கு ஆகாது. இது எவ்வித மருந்துகளின் வீறையும் முறித்துவிடும்.

சிறுகுறிஞ்சா இலை.

(Gymnema Sylvestre Leaves).

கரப்பான் கிரந்தி கடிய விரும
லுரப்பாம் விஷபாக மோட்டு—நிரைப்பான
அக்கரத்தை மாற்றிவிடு மாயிழையே பித்தமுமாந்
தக்ககுறிஞ் சாவினிலை தான்.

குணம்:—(இ-ள்.) பித்த குணமுள்ள சிறுகுறிஞ்சா இலை, அரைக்கடுவன், சிரங்கு, காசம், விஷபாகம், நாப்புண் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—பித்தகாரி, விஷநாசகாரி, தாதுக்ஷீணரோதி, வமனகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை அரைத்து அரைக்கடுவன், சொறி, சிரங்கு இவைகளுக்கு மேற்பூசி வர ஆறும். இந்த இலையை வாயிலிட்டு மென்று சுவைக்கக் கசப்பாக இருக்கும். அதன்பின் எவ்விதமான இனிப்பான வஸ்துக்களை உட்கொள்ளினும் அதன் சுவை தெரியாது. இத்தகைய நாவின் உணர்ச்சி ஏறத்

தாழ 24 மணி நேரம் இருக்கும். இந்த இலையைக் காயவைத்து இடித்துச் சூரணம் செய்து, 1 பலம் சூரணத்தை ஒரு பழகின குடுவையில் இட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் கொடுத்துவர, சுரம், இருமல் தீரும்.

இந்த இலையை அரைத்து விளக்கெண்ணெயில் கூட்டிப் பிசைந்து வீக்கம் உள்ள இடங்களில் வைத்துக்கட்ட வீக்கம் கரையும். இன்னும் இதனை சுரக்கட்டிக்கு மேல் பாகத்தில் வைத்துக் கட்டக் குணமாகும். இன்னும் இதன் உபயோகத்தை அடுத்த செய்யுளில் காண்க.

சிறுகுறிஞ்சாக்கொடி.

(Gymnema Sylvestre).

சிறுகுறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிர மில்லாத மாதர்க்—குறுமுலகி
லத்தி சுரமு மகலாக் கடிவிடமுந்
தத்தியக லத்தகர்க்குந் தான்.

(இதுவுமது)

வாதசுரஞ் சந்நிசுர மாருக் கபச்சுரமும்
பூதலம்விட் டோடப் புரியுங்காண்—மாதேகே
ளக்கரநோய் தீர்க்கு மதிசுரந்தா கம்போக்குந்
தக்க சிறுகுறிஞ்சா தான்.

குணம்:—(இ-ள்.) சிறுகுறிஞ்சா வாதரோகம், சீதபேதி, மாதாந்த உதிரச்சிக்கல், அஸ்திகதசுரம், காணுக்கடிவிஷம், வாதசுரம், சந்நிபாதசுரம், கபசுரம், பித்த ஜிக்வாகண்டகம், சந்ததசுரம், தாகரோகம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, விஷநாசகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு வெந்நீரில் கலக்கிக்கொடுக்க விஷமிறங்கும். இதன் சமூலத்தை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு ஆறாத ரணங்களின்மேல் தூவிவர ஆறும். இதன் இலையையும் அரைத்து ரணங்களின்மீது வைத்துக் கட்டுவதுண்டு. இதன் இலையை இடித்துச் சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு ரவியில் வைத்து இரண்டு மூன்று நாள் காய்ந்தபின் இந்த எண்ணெ

யைக் கீல்களில் காணும் எத்தகைய வீக்கத்திற்கும் மேற்றேய்க்கக் குணமாகும். இன்னும் ஈரல்களின் வீக்கத்திற்கு வயிற்றின் மேற் பக்கம் தடிப்புக்காணும் பாகத்தில் இந்த எண்ணெயைத் தடவி வரக் கரைந்துவிடும்.

சிறுகுறிஞ்சாவேர்.

(Gymnema Sylvestre Root).

சிறுகுறிஞ்சா வேர்விஷத்தைத் தீர்க்கு மனிலத்
துறுசுரங்கள் வாத மொழிக்குந்—தெறிபாணக்
கண்ணு யிருமன்முதற் காசசுவா சந்தணிக்கும்
விண்ணுட ருக்குமிதை விள்.

குணம்:—(இ-ள்.) சிறுகுறிஞ்சாவேரானது அற்பசெந்துக் களின் நஞ்சு, வாதசுரம், வாததோஷம், காசம், சுவாசகாசம் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, விஷநாசகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் சிறுகுறிஞ்சாவேரைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து அதனில் வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர சுரம், இருமல், காசம் இவைகள்போம். இன்னும் இதனை இதரச் சரக்கு களுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

கரப்பானெண்ணெய்.

சிறுகுறிஞ்சாவேர், செங்கத்தாரிப்பட்டை, சின்னிஇலை, மிளகு வகைக்கு பலம் $\frac{1}{2}$. இவைகளைச் சலம் விட்டு மெழுகு போல் அரைத்து $2\frac{1}{4}$ பலம் சிற்றாமணக்கெண்ணெயிற் கலக்கிப் பத முறக் காய்ச்சி, வடித்துக் குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி அளவு தினம் ஒரு வேளை காலை நேரத்தில் கொடுத்துக்கொண்டுவரப் பித் தத்தாலெழுந்த கரப்பான் குணமாகும்.

சிறுசின்னி.

(Acalypha Betulina).

கடிவிஷமுங் காணுக் கடிவிஷமு மாத
ரீடுவிஷமு மோடுங்கா ணின்னும்—நெடியவிழிக்
கன்னிகையே மேகங் கணக்காய்ச்சல் மாந்தமும்போஞ்
சின்னி யிலைக்குத் தெறித்து.

குணம்:—(இ-ள்.) சிறுசின்னி இலைக்கு, வண்டு முதலிய கடி விஷங்கள், இன்னதென்று தெரியக்கூடாத செந்துக்களின் விஷங்கள், இடுமருந்து, பிரமேகம், கணச்சுரம், அக்கினிமந்தம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—விஷநாசகாரி, ஜடாராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—சிறுசின்னி இலையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு தினம் ஒரு வேளை 3 நாள் காலையில் கொடுக்கப் பலவிதமான ஜெந்துக்களின் விஷத்தை முறிக்கும். கடிவாயில் இதன் இலையைக் கசக்கித் தேய்க்கலாம். வசியத்திற்காகக் கொடுக்கப்பட்ட மருந்துகளின் விஷத்தையும் முறிக்கும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

கரப்பானெண்ணெய்.

சிறுசின்னி இலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப் படி ½ ஆக ஒன்றாகக் கலந்து ஒரு தைல பாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்க. அப்பால் மிளகு, செங்கத்தாரிப்பட்டை, சிறுகுறிஞ்சா வேர்ப்பட்டை வகைக்குப் பலம் ¼ இவைகளைச் சலம்விட்டு மெழுகு போல் அரைத்து முன் சித்தப்படுத்தியுள்ள தைல பாண்டத்தில் போட்டுக் கலக்கி, அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி, வடித்து வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு கொடுத்துக்கொண்டுவரப் பலவிதமான கரப்பான் குணமாகும்.

விஷக்கடி சிகிச்சை.

பெருங்காயம், சிறுசின்னிஇலை, வசம்பு இவைகளைச் சமன் எடையாக அம்மிக்கல்லில் வைத்து சலம்விட்டு அரைத்துக் கொட்டைப்பாக்களவு உள்ளுக்கு கொடுத்து, மற்ற அரைத்த விழுதை தேகத்திற்குப் பூசி, முறுக்கி நாசியில் நசியமிட அரவுகளின் விஷத்தினால் தேகத்தில் உண்டாகும் முறுக்கலைக் குணப்படுத்தும். காணாக் கடிக்குச் சுத்திசெய்த கருஞ்சிவதை வேரை அரைத்து ஒரு சிறு கொட்டைப்பாக்களவு உள்ளுக்குக் கொடுத்தபின் சிறுசின்னி இலையை அரைத்து தேகத்தில் பூசி முறுக்கி முறுக்கிப் பிடிக்க காணாக் கடி விஷம் தீரும்.

சிறுதேட்கொடுக்கு.

(Heliotropium Indicum—Small).

சிறுதேட் கொடுக்கதனுற் சேயிழையே கேளாய்
சொறிசிரங்கு புண்கரப்பான் சூலே—கொறுமாந்தை
மேகவெட்டை பித்தவெட்டை மீளா வெலும்புருக்கி
யாகம்விடுத் தோடு மறி.

குணம்:—(இ-ள்.) சிறு தேட்கொடுக்கால் நமைச்சிரங்கு, விரணக்கரப்பான், கீல்வீக்கம், கொறுக்குமாந்தை, ஒழுக்குப் பிரமேகம், பித்தவெள்ளை, அஸ்திசிராவம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதினின்று பிழிந்தெடுத்த சாற்றைச் சொறி, சிரங்கு, புண் முதலியவைகட்கு மேற்பூச ஆறும். இதன் இலையை வெண்ணெய்போல் அரைத்து, ஆருத ரணம், கொருக்குப் புண், முகப்பரு முதலியவற்றிற்குத் தடவ ஆறும்.

தேள் கொட்டினவிடத்தில் இதன் இலையை கசக்கித் தேய்க்க விஷமிறங்கும். இவைகளுமல்லாமல் இதனைப் பெரும்பாலும் தைலங்களில் கூட்டுவதுண்டு. எங்ஙனமெனில்—

சிறு தேட்கொடுக்குத் தைலம்.

சிறு தேட்கொடுக்கிலையை இடித்து 2 படி சாறு பிழிந்து அதனுடன் ஒரு படி சுத்தமான நல்லெண்ணெய் கூட்டித் தைல பாண்டத்திலிட்டு பதமுறக் காய்ச்சி வடிகட்டி பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தைச் சிரசிற்கிட்டுத் தேய்த்துத் தேகமாதியெங்கும் பூசி ஸ்நானம் செய்ய அதிக உஷ்ணத்தினுலெழுந்த பல ரோகங்களுடன் நாசியில் நீர் வடிதல், கண்களில் நீர்வடிதல், காதில் நீர்வடிதல் முதலியவற்றைக் குணப்படுத்தும். சரீரத்திலுண்டான நமைச்சிரங்கு, விரணம், கரப்பான் முதலியவைகளைப் போக்கும்.

சிறுநாகப்பூ.

(Mesua Ferrea).

சிறுநாகப் பூவினது செய்கைதனைச் சொல்வோங்
குறியாடு மேகத்தைக் கொல்லு—நெறியைவிட்டுத்
தீதாச்செல் வாயுவையுந் தீர்க்குமிரு மற்போக்குங்
கோதா யிதையறிந்து கொள்.

குணம்:—(இ-ள்.) சிறுநாகப்பூவானது, ஆண் குறியால் விழுகின்ற வெள்ளை, மார்க்கந்தப்பிய ஆவிருதவாதம், காசரோகம் இவைகளை விலக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, உதரவாதஹரகாரி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் தனிச் சூரணத்தில் வேளைக்கு 5-10 குன்றி எடை தேன், சர்க்கரை, வெண்ணெய் இவைகளில் மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கலாம். இதனால் வயிற்றிலுண்டான வாயு, நீரடைப்பு, ஸ்திரீகளுக்குண்டான உதிரச்சிக்கல் முதலியவை நீங்கும். ½ விராகனெடை சிறுநாகப்பூவை ஒன்றிரண்டாய்ப் பொடித்து, ஒரு மட்கலயத்தில் போட்டு ¼ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி, கற்கண்டு போட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படிச் சில தினம் கொடுத்து வரக் கை, கால், பாதம், விரல் இவைகளில் உண்டான நரம்பின் இசிவு குணமாகும். சிறுநாகப்பூவையும், சதாப்பு இலையையும் சமனெடையாகக் கூட்டி அரைத்து வேளைக்கு ½ விராகனெடை தினம் இருவேளை கொடுக்க முறைசுரம் போம்.

இதன் தனிச் சூரணத்தை வெண்ணெய், சர்க்கரையுடன் கூட்டிக் கொடுக்கச் சீதரத்தபேதி, ரத்தமூலம், பெரும்பாடு குணமாகும். இந்த சூரணத்தை தயிரில் கலக்கிக் கொடுக்க ஸ்திரீகளுக்குக் காணும் வெள்ளை குணமாகும்.

சிறுநாகப்பூச் சூரணத்தை வெண்ணெயுடன் கூட்டி அரைத்துக் குளிர்ந்த ஜலத்திற்போட்டுப் பிசைந்து பிசைந்து கழுவி வெண்ணெயை ஒருங்கு திரட்டி எடுத்துக்கொண்டு சலத்தை வடித்து விடவும். இப்படி 100 தடவை பிசைந்து பிசைந்து கழுவியெடுத்த வெண்ணெயைக் கை கால் எரிச்சலுக்குத் தடவிவரக் குணமாகும்.

சிறுபசலைக்கீரை.

(Portulacea Quadrifida).

போக மிகக்கொடுக்கும் போர்செய்கபத் தைப்பெருக்கு
மாகமதிற் றுகமன லேத்தணிக்கு—மாகுடரின்
மன்னு மலமிளக்கு மாறு வுருசிதரு
தின்னுஞ் சிறுபசலைத் தேர்.

குணம்:—(இ-ள்.) அதிக சுவையுள்ள சிறுபசலை, புணர்ச்சியில் இச்சையையும், கபத்தையும் பெருக்கும். தாகத்தையும், சூட்டையும் தணிக்கும். மலத்தை இளகச்செய்யும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, காமவிர்த்தினி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைத் துவரம்பருப்புடன் சேர்த்துக் கடைந்து அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுச் சாப்பிட ருசியாக இருக்கும். இதனால் உட்சூடு தணியும், நீரும், மலமும், தாராளமாக இறங்கும். தாதுகட்டும், போகத்தில் இன்பம் இழைக்கும். அக்கி முதலிய ரோகங்களுக்கு இந்தக் கீரையை அரைத்துப் பசுவின் வெண்ணெய் கூட்டி மத்தித்து மேலே பூச எரிச்சல் தணியும், விரைவில் ஆறும். சீதள சரீரத்திற்கு ஆகாது.

சிறுபீளை.

(Aerna Lanata—Small).

பாண்டுபெரும் பாடு பகர்மூத்தி ரக்கிரிச்சம்
பூண்டதிரி தோடமிவை போகுங்காண்—தாண்டிப்
பறியவே ஊத்துரத்தும் பாரவயிற் கண்ணாய்
சிறிய பீளைக்குச் சிதைந்து.

(இதுவுமது)

நீரடைப்புக் கல்லடைப்பு நீங்காக் குடற்சூலை
போரடரி ரத்தகணம் போக்குங்காண்—வாரிறுக்கும்
பூண்முலையே கேளாய் பொருந்துஞ் சிறுபீளை
யாமிதுகற் பேதி யறி.

குணம்:—(இ-ள்.) சிறுபீளைச் செடிக்குத் தேகம் வெளிறல், அசிர்க்காரோகம், வாதமூத்திரக்கிரிச்சரம், முத்தோஷம், மூத்திரச் சிக்கல், அஸ்மரி, அந்திர பித்தவாதம், சோணிதவாதங்கள் ஆகிய இவை போம் என்க. இந்த இனத்தில் பெரும்பீளை என்றோர் மூலிகை யுண்டு அதனை அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரில் $\frac{1}{2}$ பலம் பஞ்சுபோல் தட்டி, $\frac{1}{2}$ படி சலத்தில் போட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி உள்ளுக்கு இருவேளை கொடுக்க நீர்க்கட்டை உடைக்கும், நாகத்தைச் சுத்திசெய்து கடாயிலிட்டு கன்னான் உலையில் வைத்து

ஊதிக் கடாயானது நெருப்பைப்போல் இருக்கும்போது சிற பிளேயை பொடியாக வெட்டிப்போட்டுக் கரண்டியினால் துழாவிக் கொடுக்கப் பூத்துப் பற்பமாகும். ஆறவிட்டு வஸ்திரகாயம் செய்து 1-1½ குன்றி எடை நெய், வெண்ணெய் முதலியவைகளில் தினம் இருவேளை கொடுக்க நீர்க்கட்டை உடைக்கும், வெள்ளை, வெட்டை குணமாகும்.

சிறுபுள்ளடி.

(Desmodium Triflorum).

மாந்தகணம் போராமம் வன்மந்த நீங்கிவிடு
மேய்ந்தமுலைப் பாலு மொழுகுங்காண்—மோந்தே
சிறுபுள் ளடிதுதையாத் தேமலர்பூங் கோதாய்
சிறுபுள் ளடியைநிதஞ் சேர்.

குணம்:—(இ-ள்.) சிறுபுள்ளடியால், எண்வகைமாந்தம், சீதக் கட்டு, வாதாலசகம் ஆகிய இவைகள் நீங்கும். வற்றிய முலைப்பாலும் பெருகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, க்ஷீரவர்த்தினி, ரக்தஸ்தம் பனகாரி.

உபயோகிக்கும் முறை:— இதன் இலையை பசுவின்பால் விட்டு அரைத்து ஒரு சிறு கொட்டைப்பாக்கு அளவு தினம் ஒருவேளை காலைநேரத்தில் கொடுப்பது உண்டு. இதனால் சீதபேதி, மந்தம் முதலியவைகள் போம். சிறிய அளவாகக் குழந்தைகளின் பருவத் திற்கேற்றவாறு பாலில் கலக்கிக் கொடுக்க அஜீர்ணம், பேதி, வலி இவைகள் போம். ஆறுத ரணங்களுக்கு இதன் சாற்றை மேற் றழும்பப் பூசிவர ஆறும். இதன் வேரை நறுக்கிச் சுமார் ¼ பலம் ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கப் பித்தஉபரி அடங்கும். இன்னும் இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙன மெனில்—

கணச்சூட்டு எண்ணெய்.

சிறுபுள்ளடி, செப்புநெருஞ்சி, சிறுஅம்மான்பச்சரிசி, தகரை வேர், நரிப்பயற்றங்கொடி, அகத்திப்பட்டை, வெங்காயம் வகைக் குக் கழற்சிக்காய்ப் பிரமாணம் அரைத்து ⅛ படி சிற்றாமணக்

கெண்ணெயில் போட்டுக் கலக்கிச் சிலநாள் ரவிமுகத்தில் வைத்து வருக. ஈரம் வற்றியபின் வடிகட்டிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த எண்ணெயில் குழந்தைகளின் பருவத்துக்கு ஏற்றபடி 1-1½ தேக்கரண்டி அளவு காலையில் கொடுக்கவும். இப்படித் தொடர்ச்சியாகவாவது அல்லது ஒன்றுவிட் டொருநாளாகவாவது 3 நாள் கொடுக்கக் குழந்தைகளுக்குக் காணும் பல வித கணங்களையும் குணப்படுத்தும்.

கணமாந்த எண்ணெய்.

சிறுபுள்ளடி, பொடுதலை, தகரை, மிளகு, தக்காளி, கருநொச்சி, பழம்பாசி, வெங்காயம் இவைகளின் சாறு வகைக்குப்பலம் 1, சிற்றாமணக்கெண்ணெய் படி ⅛ இவைகளை ஒன்ருய்க்கூட்டி அதனில் வெள்ளைப்பூண்டு, வசம்பு வகைக்குப் பலம் ¼ அரைத்துப் போட்டுப் பதமுறக்காய்ச்சி, வடித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனை முன்போல் கொடுக்க, கணமாந்தம் குணமாகும்.

சிறு வள்ளிக்கிழங்கு.

(Dioscorea Aculeata).

மந்தமிகுந் தீபனம்போ மாருக் கரப்பானுஞ்
சிந்த மிகுகபமுஞ் சேருங்கான்—தொந்தமா
மூல முளைவளரு முட்டைச் சிறுகிழங்கா
லேல வளகமின்னே யெண்.

குணம்:—(இ-ள்.) சிறுவள்ளிக்கிழங்கால் மந்தம், கரப்பான், சிலேஷ்மவிருத்தி, முளைமூலம் ஆகிய இவைகள் உண்டாகும். உதராக்கினி கெடும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை பாகப்படி வேகவைத்து மேற்றோலைக் கழித்து உண்பதுண்டு. இது நாவிற்கு ருசியாக இருக்கும். இரைப்பைக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இருதயத்தின் சக்தியை அதிகப்படுத்தும். உஷ்ணத்தினுலாவது பித்தத்தினுலாவது உண்டான தாகத்தை யடக்கும். சிறுநீரைத் தாராளமாக இறங்கச் செய்யும். இது ஜீரணமாவதற்கு அதிக நேரம் பிடிக்கும். அக்கினி மந்தப்பட்டவர்களுக்கு ஆகாது. இதை அடுத்துண்பவர்களுக்குக் கரப்பான், கபசம்பந்தமான ரோகங்கள் முதலியவை வரும்.

சிற்றரத்தை.

(Alpinia Galanga Small).

வாந்திபித் தங்கரப்பான் வாதஞ் சிரோரோகஞ்
சேர்ந்தகப முத்தோஷஞ் சீதமொடு—நேர்ந்தசுர
மற்றரத்தைக் காட்டி வருமிரும லுந்தீருஞ்
சிற்றரத்தை வன்மருந்தாற் றேர்.

குணம்:—(இ-ள்.) சிற்றரத்தையால் சர்த்தி, பித்தம், கரப்பான், வாயு, சிரரோகம், சிலேத்துமம், திரிதோஷம், சீதளம், பலசுரம், காசம் இவைகள் போம் என்க.

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் தனிச்சூரணத்தில் $\frac{1}{4}$-$\frac{1}{2}$ விராகனெடை வீதம் சர்க்கரை சேர்த்தாவது அல்லது $\frac{1}{2}$ தோலா சிற்றரத்தையை சலம் விட்டு அரைத்து 2 அவுன்ஸ் சலத்தில் கலக்கி ஒரு கடாயிலிட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பொங்கும் சமயம் கீழ் இறக்கி வடிகட்டி தேன் கூட்டி தினம் 2 வேளை கொடுக்கச் சயித்தியம், சுரம், கபசம்பந்தமான ஈளை, இருமல், தொண்டைப்புண், நீர்த்தோஷம், வாயு, பீநசம் இவைகள் போம். சிற்றரத்தை பலம் $\frac{1}{2}$, நிலவேம்பு பலம் $\frac{1}{2}$ இவை இரண்டையும் தட்டி ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை 3 நாள் கொடுக்கக் குளிர்சுரம், முறைசுரம் இவைகள் போம். ஆனால் சுரம் வலுத்து இருந்தால், சுரத்தைக் கேட்கத்தக்க ஏதேனும் ஒரு செந்தூரத்தையாவது மாத்திரையையாவது கூட்டிக்கொடுக்க விரைவில் குணம் காட்டும்.

சிற்றரத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்குத் தோலா $\frac{1}{2}$ இவைகளை இடித்து ஒரு புது மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சுத்த சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை 3 நாள் கொடுக்கச் சயித்தியம், நீர்ப்பீநசம், மண்டைக்குடைச்சல் ஆகிய இவைகள் நீங்கும்.

சிற்றரத்தை, ஓமம், கடுக்காய், மிளகு, திப்பிலி, அக்கரகாரம், தேசாவரம் இவைகளைச் சமனெடை ஆக இடித்துச் சூரணம்

செய்து வைத்துக்கொண்டு அதன் மொத்த எடைக்கு ½ பாகம் சர்க்கரை கூட்டிக் கலந்து புட்டியில் பத்திரப்படுத்துக. இந்தச் சூரணத்தில் வேளைக்கு ¼-½ தோலா எடை தினம் 2 வேளைக் கொடுத்துவர ஈளை, இருமல், சலதோஷம், சயித்தியம் முதலிய வைகள் போம்.

சிற்றாமணக்கு நெய்.

(Ricinis Communis Seed Oil).

மருந்தி னழலும் வளியான்மூ லத்துட்
பொருந்து மழலுமறப் போக்குங்—குருந்திற்கு
நற்று யெனவளர்க்கு நாளுமழ லைத்தணிக்குஞ்
சிற்றாம ணக்கினெய்தான் றேர்.

குணம்:—(இ-ள்.) சிற்றாமணக்குநெய், பற்பல ஔஷதங்களின் வெப்பங்களையும், வாயுவினால் மூலத்திலுண்டாகின்ற உஷ்ணங்களை யும் நீக்கும். அன்றியும் சிசுக்களைத் தாய் வளர்ப்பதுபோல் உடலை வளர்ப்பிக்கும் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் சாதாரணமாக ஆமணக்கு எண்ணெய்க்கு கூறப்பட்டதேயாகும். சிற்றாமணக் கெண்ணெயானது விசேஷமாகக் கிடைக்கின்ற பெரிய ஆமணக் கெண்ணெயைவிடச் சிறந்தது.

சிற்றாமுட்டிவேர்.

(Pavonia Zeylanica).

அத்தி சுரமுத லனந்தசுரம் பித்தமும்போ
மெத்த விழிக்கொளியாம் வீறுதயி—லத்திற்காம்
நற்று மரைத்திருவு நாடு மெழிற்றிருவே
சிற்றாமுட் டித்தூரைச் செப்பு.

குணம்:—(இ-ள்.) சிற்றாமுட்டி வேரினால் அஸ்திசுரம் முத லிய சுரங்களும், பித்தநோயும் நீங்கும். கண்ணுக்கொளியாம். இது தைலத்திற்கு உதவும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தோலா எடையுள்ள சிற்றா முட்டிவேரைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பஞ்சுபோல் சிதைத்து

ஒரு குடுவையில் போட்டு ½ ஆழாக்கு (3 அவுன்ஸ்) சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து மூன்றிலொன்ருகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதனில் 2-3 சிட்டிகை திப்பிலிச் சூரணத்தை யாவது அல்லது திரிகடுகு சூரணத்தையாவது போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். இப்படித் தினம் 2 வேளையாக 3 நாள் கொடுக்க, வாதரோகத்தையும், சுரரோகத்தையும் போக்கும்.

தூதுளைவேர்க்கு, கருங்காஞ்சொறிவேர், சீந்தல்கொடி, பற்பாடகம், நொச்சிவேர்க்கு, சிற்ருமுட்டிவேர், பேராமுட்டிவேர், கடுக்காய்த்தோல் வகைக்குப் பலம் ¼ இவற்றை ஒன்றிரண்டாய் இடித்து ஒரு குடுவையில்போட்டு ½ படி சலம் விட்டு ½ ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி 3 வேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்க எத்தகைய சுரமும் போகும். சுரத்தின்பேரில் பேதியிருந்தால் கடுக்காயைத் தள்ளிச் சுக்கைச் சேர்த்துக்கொள்க. இதனை விசேஷமாகத் தைலபாகங்களில் சேர்ப்பதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

சிற்ருமுட்டித் தைலம்.

சிற்ருமுட்டிவேர் பலம் 20, வெட்டிவேர், மிளகு, விலாமிச்சம் வேர் வகைக்குப் பலம் 2 இவைகளை நன்ருய் பஞ்சுபோல் மிருதுவாக இடித்து ஒரு பெரிய பாண்டத்தில்போட்டு 16 படி சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து 2 படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து, வடிகட்டி, மீண்டும் முன் கியாழமிட்ட பாண்டத்தைச் சுத்தம்செய்து அதனில் விட்டுவைக்கவும். அப்பால் கோஷ்டம், அதிமதுரம், மிளகு, சீரகம், பூலாங்கிழங்கு வகைக்குப் பலம் ¼ ஆக அம்மியிலிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக ஆவின்பால் விட்டு நெகிழ அரைத்து முன் சித்தப்படுத்தியுள்ள கியாழத்தில் கலக்கி அதனுடன் நல்லெண்ணெய் படி 2, பசுவின்பால் படி 1 கூட்டி அடுப்பிலேற்றிச் சிறு தீயாகஎரித்துப் பதமுறக்காய்ச்சி வடித்துச் சிலநாள் தானிய புடம் வைத்து எடுத்துக்கொள்ளவும். இந்தத் தைலத்தைக்கொண்டு வாரம் ஒரு முறை ஸ்நானம் செய்துவரப் பித்தரோகம், நேத்திரவாயு, சிரோரோகம், பீநசம், பழைமையான சுரம் முதலியவைகள் போம்.

சிற்ருமுட்டி மடக்குத்தைலம்.

ஒரு வீசை சிற்ருமுட்டி சமூலத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒன்றிரண்டாக இடித்து ஒரு பெரிய மட்பானையில் போட்டு 8 படி

சுத்த சலம்விட்டு அடுப்பிலேற்றி எரித்து, ஒருபடி அளவிற்குச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து, வடிகட்டி வைத்துக்கொள்க. அப்பால் சுத்திசெய்து வைத்துள்ள தைல பாண்டத்தில் முன் சித்தப்படுத்தி வைத்துள்ள கியாழத்தை விட்டு அதில் அப்பட்டமான நல்லெண்ணெய் படி 1, பசுவின் பால் படி 1, மெழுகுவண்ணம் பசுவின்பால் விட்டு அரைத்து யெடுத்த சிற்றுமுட்டிவேர்க் கற்கம் சேர் 1, போட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிப் பதமுறக்காய்ச்சி, வடிகட்டி வைத்துக் கொள்க. இப்படி முடிவு ஆன தைலத்துடன் மீண்டும் 1 படி பசுவின் பாலும், ஒரு சேர் சிற்றுமுட்டி கல்கமும் சேர்த்துக் காய்ச்சி வடித்து எடுப்பதுண்டு. இப்படி 10-21 முறை மடக்கி எடுக்க விசேஷ குணம் உடையதாக இருக்கும். இந்தத் தைலத்தை நரம்புகள் சம்பந்தமான பாரிசவாதம், முகவாதம், மேகவாயு, பிடிப்பு இவைகளுக்கு மேல் தேய்த்து முறுக்கிப் பிடிக்கவும். ஸ்நானத்திற்கும் உபயோகப்படுத்தலாம்.

குறிப்பு:—இத்தகைய மடக்குத்தைலம் ஆரம்பிக்கும்போது அடிக்கடி தைலம் சேதப்படும் காரணத்தால் அதிக அளவில் ஆரம்பிக்கவேண்டும்.

சிற்றீச்சங்குருத்து.

(Phoenix Farinifera Tender Leaves).

சிறியவீச் சுக்குருத்தைத் தின்றல் வயிற்றில்
மறியுதிர வாயுவறும் வைய—மறிந்திடவே
கட்டமுகு வன்பசியும் காந்தி யுறும்மேனி
வட்டமுலை மாதே வழுத்து.

குணம்:—(இ-ள்.) சிற்றீச்சங்குருத்தால் ஸ்திரீகளுக்கு வயிற்றில் கட்டுப்பட்ட ரத்தவாதகுன்மம் போம். இன்னும் நல்ல பசியும் தேஜசும் உண்டாம் என்க.

செய்கை:— ஜடராக்கினிவர்த்தினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—சிறிய ஈச்சமரத்தின் உட்பாகமாக இருக்கின்ற வெளுத்த குருத்தை அரைத்துச் சுமார் ஒரு கொட்டைப்பாக்களவு தினம் 2 வேளை கொடுத்துவர ஸ்திரீகளுக்கு கட்டுப்பட்டுள்ள உதிரச்சிக்கலை வெளிப்படுத்தும். நல்ல தீபனத்தை யுண்டாக்கும்.

சிற்றீச்சம்பழம்.

(Phoenix Farinifera Fruit).

சிற்றீந் தேனுங்கனிக்குச் சீத முழலையோடு
உற்ற சிரங்குகளு முண்டாகுஞ்—சுற்றிச்
சேறியும் பலபிணியுந் தேமொழியே நாளு
மறிவு மழுங்கு மறி.

குணம்:—(இ-ள்.) சிற்றீச்சம்பழத்திற்குச் சீதபேதி, உழலை நோய், விரணம் முதலிய ரோகங்களும் புத்திக்கு மலினமும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை சாப்பிடுவதுண்டு. இது வாய்க்கு ஒருவிதமான ருசியாக இருப்பினும் இரைப்பைக்கும், குடலிற்கும் உஷ்ணத்தை யுண்டாக்கிச் சீதபேதி முதலியவற்றை யுண்டாக்கும். இரத்தத்தைத் தடிப்பாக்கிச் சொறி, சிரங்கு முதலியவற்றை யுண்டாக்கும். ஆதலால் இது அசுத்த உணவாகக் கருதப்படுகின்றது.

சிற்றுழா இலை.

(Sitruzha Leaf).

சிற்றுழா மூலரத்தஞ் சீழ்மூலம் போக்கிவிடும்
மற்று முடல்வெப்பம் மாற்றிவிடும்—குற்றமிலை
மாதே யிதன்பெருமை மானிலத்தி லுண்டார்க்கிங்
கோதலே யாதுக் குரை.

குணம்:—(இ-ள்.) சிற்றுழா இலையால் இரத்தமூலம், சீழ்மூலம், வெட்டை முதலிய ரோகங்கள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—சிற்றுழா மரத்தின் துளிர் இலையைக் கொண்டுவந்து வெண்ணெய்போல் அரைத்துச் சுமார் கொட்டைப் பாக்களவு பசுவின் தயிரில் கலக்கித் தினம் ஒரு வேளை 3 நாள் கொடுக்க சீதபேதி, இரத்தபேதி, இரத்தமூலம், சீழ்மூலம் முதலியவைகள் போம்.

சீத்தாப்பழம்.

(Anona Squamosa).

பித்தகப மெத்தப் பெருகுமந்த மேலாடுஞ்
சித்த மதிற்றயக்கஞ் சேருங்கா—ணத்துலவும்
பூத்தானத் தாரும் பொலன்கொடியே பூவுலகிற்
சீத்தாக் கனியாற் றெளி.

குணம்:—(இ-ள்.) சீத்தாப்பழத்தால் பித்த சிலேத்தும தொந்தமும், அக்கினி மந்தமும், சித்தபிரமையும் உண்டாகும் என்க.

செய்கை:—பித்தகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இப்பழத்தை யுண்ண அதிக ருசியாக இருக்கும். இது தேகத்தைப் பெருக்கச் செய்யும். இருதயத்திற்கு வலிவைக்கொடுக்கும். உள்ளிருக்கப்பட்ட வியாதிகளை வெளிப்படுத்தும். பித்தத்தை உபரி செய்யும். இது சீதள தேகிகட்கு ஆகாது.

சீந்திற் கிழங்கு.

(Cocculus Cordifolius Fleshy Root).

சீந்திற் கிழங்கருந்தத் தீபனமா மேகவகை
போந்த வுதிரபித்தம் பொங்குசுர—மாந்த
மதிசாரம் வெய்யகண மாம்பலநோ யோடே
கதிவிஷமுங் கெட்டுவிடுங் காண்.

குணம்:—(இ-ள்.) சீந்திற்கிழங்கு அல்லது கொடி: சர்வ மேகம், ரத்தபித்தரோகம், சுரம், மாந்தசுரம், பேதி, பித்தகணம், ஆம்பில பித்தரோகம், சர்ப்பவிஷம் இவைகளைப் போக்கும். இன்னும் இதனால் பசிதீபனம் உண்டாம் என்க.

செய்கை :—பலகாரி, முறைவியாதிரோதி, மூத்திரவர்த்தனகாரி, வியதாபேதகாரி, காமவிர்த்தினி, க்ஷீரவர்த்தினி, பித்தகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—அரை பலம் சீந்திற் கொடியையாவது அல்லது அதன் மூலத்தையாவது பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு ½ படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து ⅛ படியாகக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் சிறிது தேன்கூட்டித் தினம் 2 வேளை கொடுக்க பொடி இருமல், காமாலை, மூர்ச்சை, வாந்தி முதலியவைகள் குணமாவதுடன், தீபனமும் தாதுவிர்த்தியுமுண்டாகும். இதனை இதர சரக்குகளுடன் கூட்டிப் பிரயோகம்செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

சீந்தல் கியாழம்.

சீந்திற்கொடி பலம் ½, நெற்பொரி பலம் ½ இவைகளை ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து, வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, அதனை வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை கொடுக்க மேக அழலை, தாகம் அடங்கும்.

சீந்திற் சருக்கரை.

(Cocculus Cordifolius—Starchy Extract).

இங்குப் பெருந்தாகம் என்புருக்கி ரத்தபித்தம்
ஓங்கும் மதுமேக முட்டிணம்போம்—ஓங்கிவளர்
கூந்தல் முடிமாதே கூறுஞ்சஞ் சீவியெனுஞ்
சீந்தல் சருக்கரையின் சீர்.

குணம் :—(இ-ள்.) சீந்திற் சருக்கரையால் இடைவிடாத பெருந்தாகம், எலும்புருக்கி ரோகம், இரத்தவாந்திரோகம், மதுமேகம், தேககாங்கை இவைகள்போம் என்க.

செய்கை:—சமனகாரி, மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை :—இதனைத் தனியாக உபயோகப்படுத்துவதில்லை. இதனுடன் சில சரக்குகளைக் கூட்டி அவிழ்தங்களாக முடித்துக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

அமிர்தாதி லேகியம்

சீந்திற் சருக்கரை, பூமி சருக்கரைக்கிழங்கு வகைக்கு பலம் 2½, பரங்கிச்சக்கை பலம் 3, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சிற்றரத்தை, சிறுநாகப்பூ, மகரப்பூ, கடலிராஞ்சிப்பட்டை, கிராம்பு, கோஷ்டம், ஏலம், சிறுதேக்கு, அதிமதுரம், சந்தனத்தூள், சீரகம், சடாமாஞ்சி, வால்மிளகு, தாளிசபத்திரி, அக்கரகாரம், சாதிப்பத்திரி, கடுக்காய்ப்பூ, வகைக்குப் பலம் ½, குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு பலம் ¼ ஆக இவற்றைக் கல்லுரலில்விட்டுக் கடப்பாறையால் நன்கிடித்துச் சூரணஞ்செய்து வைத்துக் கொள்க. அப்பால் ஒரு பெரிய மட்பாண்டத்தில் ஆவாரம்பூ, ஆவாரம்பட்டை, ஆவாரம்இலை, ஆவாரங்காய், ஆவாரம்வேர் வகைக்குப் பலம் 5 வீதம் இடித்துப்போட்டு 10 படி செவ்விளநீர் சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து, எட்டிலொன்றாகக் காய்ச்சிக் கீழிறக்கி வடிகட்டி, அதில் ஒரு வீசை வெள்ளைச்சருக்கரைப் போட்டுக் கரைத்து ஒரு சுத்தமான மட்பாண்டத்தில் விட்டு மீண்டும் அடுப்பிலேற்றி எரிக்கவும். அது பாகுபதம் வருஞ் சமயத்தில்முன் சித்தப்படுத்தி வைத்துள்ள சூரணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கிளறிக் கீழிறக்கி ஆறவிட்டுப் போதிய அளவு நெய்யும் தேனும் விட்டுப் பிசைந்து ஜாடியில் பத்திரப்படுத்

துக. வேண்டும்போது இந்த லேகியத்தில் வேளைக்குக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் தினம் இருவேளை 20-40 நாள் கொடுத்துவர பிரமேகம், நீரிழிவு, மதுமேகம், அஸ்திமேகம், தாகம், வறட்சி, மேககாங்கை முதலிய பிணிகள் போம்.

சீமைச் செவ்வந்திப்பூ.

(Anthemis Nobilis).

சீர்மைச்சா மந்திப்பூச் சிக்குண்ட சூதகத்தை
நேர்மையுறத் தானுடைக்கும் நிர்ப்பயமாம்—கூர்மையுறத்
தாக்கு மதிமூர்ச்சை தாளாச் சுரஞ்சந்நி
போக்கிவிடு மாதே புகல்.

குணம்:—(இ-ள்.) சீமைச் சாமந்திப்பூவால் ஸ்திரீகளுக்குத் தங்கியுள்ள உதிர அழுக்கு வெளியாகும். இன்னும் சீதசுரம், அக்கினிமந்தம், மூர்ச்சை முதலிய பிணிகள் நீங்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி, பலகாரி, ருதுவர்த்தனகாரி, முறைவியாதிரோதி, வமனகாரி, கிருமிநாசனி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தோலா சீமை சாமந்திப்பூவை ¼ படி கொதிக்கின்ற சுத்த சலத்தில் போட்டு 15-20 நிமிஷம் வாய்மூடி ஊறவிட்டு வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கவும். அல்லது சீமை சாமந்திப்பூ, சீமை நிலவேம்பு, அதிமதுரம், சந்தனத்தூள், கோரைக்கிழங்கு, ஆடாதோடை, சீந்தல்கொடி, விஷ்ணுகிரந்தி வகைக்குப் பலம் ½ ஆக இடித்து, ½ படி சுத்த சலத்தில் போட்டு 2 மணி நேரம் ஊறவிட்டு காய்ச்சி அரைக்கால்படி யளவில் பிசைந்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர சீதசுரம், அக்கினிமந்தம், மூர்ச்சை இவைகள் போம்.

சீமை சாமந்திப்பூ பலம் ½, சன்ன லவுங்கப்பட்டை பலம் ½ இவைகள் இரண்டையும் இடித்து ஒரு பழகின மட்கலயத்தில் போட்டு ½ படி சுத்த சலம் விட்டு ½ ஆழாக்கு திட்டத்திற்குக் காய்ச்சி, வடிகட்டித் தினம் இருவேளை மூன்றுநாள் கொடுக்கப் பிரசவகாலத்தில் உண்டான உதிரச்சிக்கலை நீக்கும். இந்தக் கியாழத்தைக் கொடுக்கும்போது மூசாம்பர சம்பந்தமான மாத்திரை, மெழுகு முதலியவற்றில் ஒன்றை கொடுப்பது சாலச் சிறந்தது.

சீமைச்சோம்பு.

(Carum Carui or Caraway Fruit).

வயிற்று வலியங்கி மந்தமோடு தீமை
வயிற்றுப் பொருமலு மாயும்—அயிர்ப்பென்ன?
ஆம்பனிகர் செவ்வாய் அணியிழையே நற்சீமைச்
சோம்பின் குணமெனவே சொல்.

குணம்:—(இ-ள்.) சீமைச்சோம்பால் வயிற்றுவலி, அக்கினி மந்தம், வயிற்றுப்பிசம் முதலியவைகள் நீங்குமென்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, உற்சாககாரி, ஜடராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த விதை இளமஞ்சள் நிறமாயும், நல்ல மணமாயும், கார்ப்புள்ள இனிப்போடுங்கூடிய ருசியாயும் இருக்கும். இந்த விதையை கறிமாத்தூளுடன் கூட்டி உபயோகப் படுத்த வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், அக்கினிமந்தம், ஸ்திரீ களுக்குண்டான உதிரக்கட்டு முதலியவைகளைக் குணப்படுத்தும். இதிலுள்ள ஒருவித சுகந்த வாசனையின் நிமித்தம் இதனைக் கேக்கு களில் சேர்த்துச் செய்வதுண்டு. இக் காரணத்தைக்கொண்டே இத னைக் கேக்குவிதை என்றும் கூறுவர். இந்த விதையை வாலையிலிட் டுத் தீநீராக இறக்கி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—

சீமைச்சோம்பு தீநீர்.

10 பலம் சீமைச்சோம்பை ஒரு மட் பாண்டத்தில் போட்டு 5 படி கொதிக்கின்ற சலத்தைவிட்டு 2 மணி நேரம் ஊறின பின்னர் வாலையைச் செருகி சீலைசெய்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து $2\frac{1}{2}$ படி அளவிற்குத் தீநீரை வாங்கிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவர, மந்தம், வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், ஸ்திரீகளுக்குண்டான உதிரக்கட்டு முதலியவைகள் நீங்கும்.

சீமைத்தக்காளிப்பழம்.

(Lycopersicum Esculentum Fruit).

சோரியோடு பைங்குடலைச் சுத்திசெயு மைம்புலனுக்
கோரினிமை யுண்டாக்கு முள்ளிரணம்—நேருமலச்
சிக்கலையும் போக்கும் செறிந்தபித்தம் போஞ்சீமைத்
தக்காளி நற்கனிக்குச் சாற்று.

குணம்:—(இ-ள்.) சீமைத்தக்காளிப் பழத்தினால் இரத்தத்திலும் குடலிலும் பற்றியுள்ள மாசுகள் நீங்கி சுத்தப்படும். ஐம்புலன் அறிவு விசேடப்படும். வயிற்றிலுள்ள விரணம், மலச்சிக்கல், பித்தஉபரி முதலியவைகளும் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, இலகுமலகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தைச் சாதாரணமாகக் கத்திரிக்காயை உபயோகப்படுத்துவதுபோல் பருப்புக் குழம்பிலாவது, இறைச்சிக் குழம்பிலாவது இட்டுப் பாகப்படுத்தி உண்ண நாவிற்கு அதிக ருசியாக இருக்கும். இன்னும் சிலர் வேறுவிதமாகப் பாகப்படுத்தி உட்கொள்ளுவதுமுண்டு. எங்ஙனமெனில்—இந்த பழத்தைச் சிறு துண்டுகளாக அரிந்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு அதனில் சிறிது வெண்ணெய்போட்டு அடுப்பிலேற்றிப் புறட்டிப் புறட்டிக் கொடுத்து வெந்த பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு உண்பதுண்டு. இந்தப் பாகத்தில் சிறிது உப்புத்தூள் கூட்டிக் கலக்கித் தாளித்தும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இன்னும் இந்தப் பழத்தின் மேற்றோலை நீக்கி அதனுடன் அரிசிமாவு அல்லது கோதுமைமாவு சிறிதுகூட்டி. முட்டைக்கருவிட்டுச் சிறிது உப்புகூட்டி மத்தித்து முட்டைவடைபோல் நெய்யில் காந்தாமல் சுட்டு எடுத்துச் சாப்பிடுவதும் உண்டு. இத்தகைய உபயோகங்களால் இரத்தம் சுத்தியாகும்; குடலில் பற்றியுள்ள மாசுக்கள் வெளியாகும்; மலம் இளகலாகப் போகும்; உள்ளுறுப்புக்குநற்பலமுண்டாகும்.

இந்தப் பழத்திலிருந்து தனியாகப் பிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் குழந்தைகட்குக் கொடுக்கலாம். இது ஏறத்தாழ ஆரஞ்சிப் பழத்தின் குணத்தை ஒத்திருக்கும். இந்தப் பழம் ஈரலின் கெடுதலை நிவர்த்திசெய்து ஒழுங்கீனமான பித்தத்தைச் சரிபடுத்தும்; ஜீரண சக்தியை உண்டாக்கும். ஆனால் சீதளதேகிகள் காலமறிந்து உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

சீமை மாதுளம் விரை.

(Pyrus Cydonia).

தேகக் கோதிப்பிருமல் சீதமோ டுந்திரணம்
தாகக் குலையெரிவுஞ் சாரீர—மாகட்டும்
ஓதுநுரை யீரற் குறுவறட்சி யுஞ்சீமை
மாதுளைவித் தாற்போம் மகிழ்.

குணம்:—(இ-ள்.) சீமை மாதுளம் பழத்தின் வித்தால் தேக உஷ்ணம், உஷ்ண இருமல், சீதபேதி, வயிற்றிலுண்டான விரணம், குலேஎரிவு, தொண்டைக்கம்மல், நுரையீரலின் வறட்சி முதலிய வைகள் நீங்குமென்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த விரையானது சாதாரணமாக ஆப்பில் என்று சொல்லும்படியான சீமை இலந்தம்பழத்தின் விரையைப்போல் கருப்பும், சிவப்பும் கலந்த நிறமாக இருக்கும். வாயிலிட்டு மென்ருல் ருசியற்றதாகவும் வழுவழுப்பாகவும் தோற்றும். இதனே மகமதிய வைத்தியர்கள் பேதானு என்று கூறுவர். இந்த விரையை ஒரு தோலா எடை ஒரு பளிங்கு பாத்திரத்தில் போட்டு 4-5 அவுன்ஸ் சுத்த சலம்விட்டு 4-5 மணிநேரம் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டிஎடுத்த சலத்தை தினம் 2 வேளே கொடுத்து வரத் தொண்டை, மார்பு இவைகளின் வறட்சி, உஷ்ணத்தினுலுண்டான இருமல், குலேஎரிவு, நீர்எரிச்சல் முதலியவை நீங்கும். இதனுடன் நன்னுரிவேர் சர்பத்து, வாதுமைசர்பத்து கூட்டிக் கொடுக்க கடும் வெய்யலினுல் உண்டான வெப்பத்தைச் சாந்தப்படுத்தும்.

சீமை மாதுளம்விரை பலம் ½, நெல்லிவற்றல் பலம் ½, வாதுமைப்பிசின் பலம் ½ இம்மூன்றையும் இடித்துச் சூரணம்செய்து சமனெடை கற்கண்டு சூரணம் கூட்டி வேளேக்கு ¼-½ ரூபா எடை நெய்யுடன் மத்தித்துத் தினம் 2 வேளே கொடுத்துவரச் சீதபேதி, வயிற்றுவலி முதலியவைகள் குணமாகும்.

சீமை மாதுளம் விரை, வெண்மிளகு, வெட்பாலேயரிசி, தோல் சீவிய சுக்கு, பஞ்சாப்மிசிறி (சாலாமிசிறியில் ஓர்இனம்) இவைகளே சமனெடையாக எடுத்து இடித்து, சூரணித்து சமன் சீனி கூட்டி வேளேக்கு திரிகடி பிரமாணம் 1 அவுன்ஸ் சலத்தில் கலக்கித் தினம் 3 வேளே கொடுத்துவர குளிர் அல்லது நளிர் சுரம் நீங்கலாக மற்ற சுரங்கள், பித்தவாயு குணமாகும். மருந்துண்ணுங் காலத்தில் ஏப்பமும் அபானவாயுவும் தாராளமாக வெளிக்காணும்.

சீமையகத்தி.
(Cassia Alata).

தம்மைக்கண் டாலிரத தாதுவிலாம் பொட்டுகளும்
வெம்மைப் புடைநமையும் வீறுநெய்—யம்மையுறுந்
தூயகத்தி யுங்கலங்குந் தோதகக் கண்மாதே
பேயகத்தி மூலிகண்ட பேர்.

குணம்:—(இ-ள்.) பேயகத்தியால் ரசதாதுக் கிருமிகளும், உஷ்ண சொறியும் தினவும் நீங்கும். இரத்த நரம்பு பிரகாசிக்கும்.

செய்கை:—மலகாரி, கிருமிநாசனி.

உபயோகிக்கும் முறை :—இதன் இலையைப் பழச்சாறு விட்டரைத்து நமைச்சல் உள்ள படைகளுக்குப்போட ஆறும். ஒரு தோலா எடையுள்ள இலையை ஒரு குடுவையில்போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி அதனை 3 வேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கவும். இப்படி 3-5 நாள் சாப்பிட ஊறல் எடுத்துப் படருகின்ற படைகள், பூச்சிக்கடிகள், சர்ம சம்பந்தமான பல சொறி சிரங்குகள் போம். இந்த இலையை அதிகமாகப் போட்டு வேகவைத்த சலத்தில் படை, சொறி, சிரங்கு இவைகளை அலம்ப விரைவில் ஆறும். இதை வாயிலிட்டுக் கொப்பளிக்க வாய் ரணம் ஆறும். இதன் புஷ்பம் இலை இவ்விரண்டையும் கூட்டி 1-1$\frac{1}{2}$ தோலா எடையை முன்போல் கியாழமிட்டுக் கொடுக்க இருமல், ஹீனத்தொனி முதலியவற்றைக் குணப்படுத்தும். உள்ளுக்குச் சாப்பிடும் அளவு அதிகப்படின் மலம் போக்கும். அதனால் குற்றமில்லை. மறுமுறை அளவைக் குறைத்துக் கொள்க.

சீரகம்.

(Cuminum Cyminum).

வாந்தி யருசிகுன்மம் வாய்நோய் பிலீகமிரைப்
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனமுட்—சேர்ந்தகம்ம
லாசனகு டாரியெனு மந்தக் கிரகணியும்
போஜனகு டாரியுண்ணப் போம்.

(இதுவுமது)

வாயுவோடு நாசிநோய் வன்பித்தஞ் சேராது
காய நெகிழாது கண்குளிருந்—தூயமலர்க்
காரளகப் பெண்மயிலே கைகண்ட தித்தனையுஞ்
சீரகத்தை நீதினமுந் தின்.

குணம்:—(இ-ள்.) சீரகத்தினால் வாந்தி, அரோசகம், வயிற்று வலி, முகரோகம், பிலீகநோய், சுவாசம், காசம், அஸ்மரி, மச்சம், சுரக்கினம், சீதரத்த கிரகணி, வாதாதிக்கம், பீநசம், பித்தம் இவைகள் விலகும். இது சரீரத்திற் குறுதியையும், கண்களுக்குக் குளிர்ச்சியையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, உற்சாககாரி, ஜடராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் தனிச்சூரணத்தை வேளைக்கு ¼-½ விராகனெடை தேனில் மத்தித்தாவது அல்லது பாலில் கலந்தாவது தினம் 2 வேளை கொடுக்கப் பித்தம், வாயு, உதிரச்சிக்கல் முதலியவை சாந்தப்படும். இன்னும் இதனைச் சீதபேதி அஜீரண பேதி இவைகட்கும் கொடுப்பதுண்டு. வெல்லத்துடன் சேர்த்துக் கொடுக்க விக்கல்போம். இதனைப் பித்தசுர கியாழங்களில் கூட்ட அதிக பலன் தரும். இதனைத் தனியாக உபயோகப்படுத்துவதை விட எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு இவைகள் ஒவ்வொன்றிலும் பல முறையாக ஊறப்போட்டு உலர்த்தி இடித்தெடுத்த சூரணம், பித்தம், தேகக்காங்கை, அஜீரணம், அரோசகம், மயக்கம், கண்ணெரிச்சல், வயிற்றுவலி, மூலக் கொதிப்பு, சீதபேதி முதலியவற்றிற்குச் சிறந்தது.

சீனிச்சருக்கரை.

(Saccharie—White).

சீனிச் சருக்கரைக்குத் தீராத வன்சுரமுங்
கூனிக்கும் வாதத்தின் கூட்டுறவு—மேனிற்கும்
வாந்தி யொடுகிருமி மாருத விக்கலுமே
போந்திசையை விட்டுப் புரண்டு.

குணம்:—(இ-ள்.) சீனிச்சருக்கரைக்கு வாதசுரம், வக்கிரிக்கின்ற வாதநோய்கள், வமனம்,கிருமிரோகம், நீங்காத விக்கல் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—பலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் பொதுவாகச் சருக்கரை என்னும் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

சுக்கான்காய்.

(Chukkankai).

மைக்குழலே நீகேளாய் வாதமறும் பித்தமென்பார்
சுக்கான்காய் வற்றலது தொல்லுலகிற்—கைக்கின்ற
வாயுவை நீக்கும் வருமருசி போக்கிவிடு
நீயு மறிவாய் நிசம்.

குணம்:—(இ-ள்.) சுக்கான்காயினால், வாததோஷம் நீங்கும். இது பித்தம் என்பர். அதன் வற்றல், வாதகோபத்தையும் அரோசகத்தையும் நீக்கும்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் துண்டு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி உப்பிட்ட மோர்விட்டுப் பிசரிக் காயவைத்து வற்றலை நெய்யிலாவது நல்லெண்ணெயிலாவது பொரித்து இரவு காலத்தில் அன்னத்துடன் உண்ணச் செய்யுளில் கூறப்பட்ட குணங்கள் யாவும் உண்டாகும்.

சுக்காங்கீரை.

(Rumex Vesicarius).

பேசுகின்ற குன்மமுடன் பித்தத் தழும்புபோம்
கூசுகின்ற வெட்டை குறைந்துபோம்—வாசநல்லாய்
கண்டமா லைபோகும் காணுஞ்சுக் காங்கீரை
கொண்டருந்து வோரிடத்தாங் கூறு.

குணம்:—(இ-ள்.) சுக்கான்கீரையால் குன்மம், பித்தஊறல் தேகவெப்பம், கண்டமாலை முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை :—இக் கீரையைப் பாகப்படி பருப்புடன் சேர்த்துக் கடைந்தாவது அல்லது மாமிசத்துடன் சேர்த்துக் குழம்பிட்டாவது உண்பதுண்டு. இது உட்சூட்டைத் தணிக்கும். ஜீரணசக்தியை யுண்டாக்கும். வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். தேகத்தில் பித்தத்தினால் உண்டான ஊறலையும் தழும்பலையும் குணப்படுத்தும். இதுவுமன்றி இதன் தனி இலைச்சாற்றை வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம் மூன்று வேளை சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுப்பதுண்டு. அல்லது ஒரு பலம் சுத்தமான சுக்கான் கீரையைப் பொடியாக அரிந்து ஒரு பழகிய மட்குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சுத்த சலம் விட்டுச் சிறு தீயில் எரித்து $\frac{1}{8}$ படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இத்தகைய பிரயோகங்களால் ரத்தம் சுத்தியாகும். மாமிச கோளங்களில் சேர்ந்துள்ள துர்நீர் வெளியாகும். சொறி, சிரங்கு முதலியவைகள் குணமாகும்.

சுக்கான்கீரையின் விதை.

(Rumex Vesicarius Seeds).

வல்லபசி யுண்டாகும் வாய்வமனந் தானொழியும்
தொல்லையுறுஞ் சீதம் தொலைந்துபோம்—கொல்லுந்தேள்
கூரியவி ஷம்போகும் கோதைநல் லாய்சுக்காங்
கீரைவிதைக் கென்றே கிளத்து.

குணம்:—(இ-ள்.) *சுக்கான்கீரை விதையால் தீபனமும், அரோசகமும், சீதபேதியும், தேள்விஷமும் நீங்குமென்க.*

செய்கை:—*சங்கோசனகாரி.*

உபயோகிக்கும் முறை:—*இதன் சூரணத்தை வேளைக்கு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ விராகனெடை வீதம் காலை, மாலை இருவேளைகொடுத்து வரப் பசியை உண்டாக்கும், அரோசகத்தை மாற்றும், சீதபேதியைக் குணப்படுத்தும். தேள்விஷம் ஏறியவர்களுக்குச் சிறிது வாயிலிட்டு மென்று தின்னும்படியாகக் கொடுத்து அதன்பின் சிறிது விரையை சலம்விட்டு அரைத்துத் தேள்கொட்டிய இடத்தில் மேற்பூச விஷம் இறங்கும்.*

சுக்கு.

(Zingiber Offic Nalis).

சூலமந்த நெஞ்செரிப்பு தோஷமேப் பம்மழலை
மூல மிரைப்பிருமன் மூக்குநீர்—வாலகப
தோஷமதி சாரந் தொடர்வாத குன்மநீர்த்
தோஷமா மம்போக்குஞ் சுக்கு.

வேறு.

வாதப் பிணிவயி றூதற் செவிவாய்
வலிதலை வலிகுலை வலியிரு விழிநீர்
சீதத் தொடுவரு பேதிப் பலரோ
சிகமலி முகமக முகவிடி கபமார்
சீதச் சுரம்விரி பேதச் சுரநோய்
தெறிபடு மெனமொழி குவர்புவி தனிலே
யீதுக் குதவுமி தீதுக் குதவா
தெனும்விதி யிலைநவ சுறுகுண முனவே.

குணம்:—(இ-ள்.) சுக்கினால் விலாக்குத்தல், அஜீரணம், மார் பெரிச்சல், தோஷகுணம், புளியேப்பம், வெப்பம், ஆசனநோய், சுவாசம், காசம், ஜலபீநசம், நீரேற்றம், பேதி, வாதகுன்மம், ஜல தோஷம், சீதகிரகணி, வாதநோய், வயிற்றுப்பிசம், செவிகுத்தல், முகநோய், சிரநோய், சூலைவலி, கபஸ்ராவம், சீதபேதி, பலவித அரோசகம், அலிமுகப்பாண்டு, வயிற்றுக்குத்தல், கபசீதசுரம் முத லாகப் பலசுரங்கள் ஆகிய இவைகள் நீங்கும். ஆயினும் இதனால் உண்டாகும் ஆரோக்கியத்தைக் கருதுமிடத்தில், இந்த நோய்க் குதவும், இந்த நோய்க்குதவாது என்னும் நிபந்தனை இல்லாமை யால் சகல ரோகங்களுக்கும் உபயோகப்படத்தக்கதாம்.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாத ஹரகாரி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு சிறிய சுக்குத் துண்டை வாயி லிட்டு மென்று அடக்கிவைக்கச் சீதளத்தாலுண்டான பல்வலி நீங் கும். சுக்கைப் பஞ்சுபோல் நறுக்கி ஒரு சிறிய சீலையில் முடிச்சுக் கட்டிக் காதில் செருகிவைக்கச் சயித்தியம், காதடைப்பு, களைப்பு இவைகள் நீங்கும். சுக்கை முலைப்பாலில் ஊரவைத்து நெற்றிக்குத் தடவி நெருப்பணலில் காட்டத் தலைவலி நீங்கும். சுக்கின் மேல் தோலைச் சீவி சுண்ணும்பையாவது அல்லது அரைத்த உப்பையா வது தழும்பப்பூசிச் சிறிது உலர்த்திக் கும்பிசாம்பலுக்குள் செருகி வைத்து வாசனைவரும் சமயம் எடுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ விராகனெடை, தினம் 2 வேளை ஆகாரத்திற்குமுன் புளிப்புமோரில் போட்டுக்கொடுக்க உஷ்ணபேதி வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், மந்தாக்கினி முதலியவைகள் குணமாகும். மேற்தோல் சீவிய சுக்கைச் சிறிது நெருப்பணலில் வெதுப்பி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ விராகனெடை, தினம் 2 வேளை சிறிது சர்க்கரை கூட்டிச் சிலநாள் கொடுக்கலாம். அல்லது $\frac{1}{4}$ பலம் சுக்கைப் பஞ்சு போல் நறுக்கி ஒரு பழகின குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி, வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளையாகக் கொடுக்கலாம். இவற்றால் வயிற்று வலி, வயிற்றுப்பொருமல், பேதி, குன்மம், அக்கினிமந்தம், இருமல், இருதயநோய், வீக்கம், வாந்திபேதி, குமட்டல், அரோசகம், சுரம், நரம்புசம்பந்தமான பிணி முதலியவைகள் நீங்கும். இதனைப் பிரதானமாகக்கொண்டு சில மருந்துகள் செய்வதுண்டு. அவற்றுள் சில—

தயிர் சுண்டிச் சூரணம்.

ஐந்து பலம் மேற்தோல் சீவிய சுக்கை இடித்துச் சூரணம் செய்து அதனுடன் 1 தோலா சோற்றுப்பைக் கூட்டி அம்மியில் வைத்துப் புளித்த தயிர் விட்டரைத்து அடைதட்டி ரவிமுகத்தில் வைக்கவும். மறுநாள் மீண்டும் இந்த வில்லையை அம்மியில் வைத்துப் புளித்த தயிர் விட்டரைத்து வில்லை தட்டி இரவிமுகத்தில் காய வைக்கவும். இப்படி 7 முறை செய்து காயவைத்து இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு திரிகடிப் பிரமாணம் தினம் இரு வேளை புளிப்புமோரில் போட்டுக்கொடுக்க வயிற்றுப் பொருமல், பேதி, மூலவாயு முதலியவைகள் போம்.

நாகருதி லவணம்.

ஒரு பலம் சுக்கை மேல்தோல் சீவிச் சுத்தம்செய்து அம்மிக்கல்லின்மீது வைத்து உத்தாமணிச் சாறு விட்டு 1 மணி நேரம் மெழுகு பதத்திற்கு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஒரு அகலில் ஒரு விரற்கடை சோற்றுப்பைப் பரப்பி அதன்மீது வில்லையை வைத்து மேலும் ஒரு விரற்கடை சோற்றுப்பைப் பறப்பி மேல் அகல்மூடிச் சீலை செய்து 5 வறட்டியில் புடமிடவும். புடம் ஆறியபின் அகலில் உள்ள யாவற்றையும் ஒருங்கு சேர்த்து அரைக்கக் கருப்பு நிறமாக இருக்கும். இதனில் வேளைக்கு 5 குன்றி எடை தினம் 3 வேளை மோரில் போட்டுக்கொடுக்க அக்கினிமந்தம், வயிற்றுப்பொருமல், வாந்தி, புளியேப்பம் இவைகள் போம். அபானவாயு நன்றாய் வெளியாகும். மிகுந்த பசிதீபனத்தை யுண்டாக்கும்.

சுண்டைக்காய்.

(Solanum Pubescens).

நெஞ்சின் கபம்போ நிறைகிருமி நோயும்போம்
விஞ்சுவா தத்தின் விளைவும்போம்—வஞ்சியரே
வாயைக் கசப்பிக்கு மாமலையி லுள்ளசுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்.

குணம் :—(இ-ள்.) கசப்பு சுவையையுடைய மலைச்சுண்டைக் காயால் மார்புச்சளி, கிருமிரோகம், வாதாதிக்கம் ஆகிய இவைகள் போம்.

செய்கை :—கபஹரகாரி, கிருமிநாசனி.

உபயோகிக்கும் முறை :—இதைப் பாகப்படி உப்பு, புளி, காரமிட்டு குழம்பு செய்வதுண்டு. இதனை அன்னத்துடன் கூட்டிச் சாப்பிட வாதரோகத்தைக் கண்டிக்கும். வயிற்றிலுள்ள கிருமிகளை நீக்கும். கபத்தை யறுக்கும்.

சுண்டைக்காய் வற்றல்.

(Solanum Pubescens—Dried).

பித்தவ ரோசகம்போம் பேராப் புழுச்சாகு
முற்ற கிராணியறு முட்பசியாஞ்—சத்தியமாய்ப்
பண்டைக் குதவாமம் பற்றுமிங் கியாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச் சொல்.

குணம்:—(இ-ள்.) சுண்டைக்காய்வற்றலால் பித்தஅரோசகம், மலக்கிருமி, கிரகணி, ஆசனத்துவாரசீ சீதகட்டு இவைகள் போம். பசியுண்டாகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, கிருமிநாசனி.

உபயோகிக்கும் முறை :—காய்ந்த சுண்டைக்காய் வற்றலை உப்பிட்ட மோரில் போட்டு பல முறையாகப் பிசரிப் பிசரி உலர வைத்து நெய்யிலாவது அல்லது நல்லெண்ணெயிலாவது வறுத்து இரவு ஆகாரத்துடன் சாப்பிடுவதுண்டு. அல்லது வறுத்த சுண்டைக் காய் வற்றலை நன்றாய்ப் பொடிசெய்து உப்பு, புளி, காரம் கூட்டிய குழம்பில் சேர்த்துக் காய்ச்சி அன்னத்தில் கலந்து சாப்பிடுவது உண்டு. இது உஷ்ணபேதியை நிறுத்தும், வாயுவைக் கண்டிக்கும்.

சுரைக்காய்.

(Lagenaria Vulgaris).

வாதபித்தம் வாயருசி வன்பிலீ கஞ்சீத
மோதிருத்து நோயுமுண்டா முள்ளனற்போ—மோதத்
திருப்பாற் கடற்றிருவே தீக்குணத்தை மேவுஞ்
சுரைக்காயைத் தின்பவர்க்குச் சொல்.

குணம்:—(இ-ள்.) தீயகுணமுள்ள சுரைக்காயினால் வாதபித்த அரோசகம், பிலீகரோகம், ஆமம், மார்பு நோய் இவை யுண்டாம். உட்சூடு நீங்கு மென்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி சமைத்துண்ணத் தேகத்தின் அழலையாற்றும், தாகத்தை யடக்கும், சிறுநீரை அதிகப்படுத்தும், மலப்பிரவர்த்தி யுண்டாக்கும். இது பித்த வாயுவை உண்டுபண்ணுமாதலால் அடுத்துண்ணுமல் இருப்பதே நலம்.

சுரையிலை.

(Lagenaria Vulgaris Leaves).

நீரிழியும் வீக்கம்போ நேரே மலமிறங்கும்
பாரமுறு சோபை பறக்குங்காண்—தீராத்
திரிதோஷம் போகுஞ் செறிந்த சுரையி
னுரிய கொழுந்திலையை யுண்.

குணம்:—(இ-ள்.) நீரை யிறக்கா நின்ற சுரையிலையால் சோபைரோகம், தேகபாரிப்பு, நீங்காமுத்தோஷங்கள் இவைகள் போம். மலமிளகியிறங்கும் என்க.

(இதுவுமது)

சுரையிலையோ சோபையொடு தோற்றுநீர்க் கட்டைத்
தரையதனில் வைக்காமற் சண்ணுஞ்—சுரையினது
தண்டோபித் தத்தைத் தரிக்கவொட் டாதகற்றும்
கண்டோ ருரைத்தகுணம் காண்.

முறை:—(இ-ள்.) சுரையிலையானது வீக்கத்தையும் மூத்திரக் கட்டையும் நீக்கும். இன்னும் இந்தக் கொடியானது பித்தரோகங் களைப்போக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை ஒரு பிடி கொண்டு வந்து சிறுக அரிந்து ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்க நீரை அதிகமாக இறங்கச் செய்யும். வீக்கம் வாடும். இதனுடைய கொடியையும் இப்படியே கியாழமிட்டுக் கொடுக்கலாம்.

சுவற்றுமுள்ளங்கி இலை.

(Blumea Lacera).

நீரை யிறக்கிவிடு நெஞ்சுவலி யைத்தொலைக்குங்
கோர வதைப்பைக் குடிகெடுக்கு—நேரே
தவத்திலுயர்ந் தோர்மயங்குஞ் சாயகக்கண் மாதே
சுவற்றுமுள் ளாங்கியது சொல்.

குணம் :—(இ-ள்.) சுவற்றுமுள்ளங்கிஇலையானது நீர்க்கட்டையும், மார்பு நோயையும், வாதசோபையையும் போக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, அங்காகர்ஷணநாசினி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலைச்சாற்றில் சிறிது சர்க்கரை கூட்டி வேளைக்கு 2-4 விராகனெடை உள்ளுக்குக் கொடுக்கலாம். இதனால் ஸ்திரீகளுக்குண்டான உதிரச் சிக்கல், நீரடைப்பு, நுரைஈரலைப்பற்றிய சகல ரோகங்கள், நாட்பட்ட இருமல், வீக்கம், காமாலை முதலியவைகள் நீங்கும். இன்னும் இது வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளியாக்குவதுடன் சாதாரணமாக ஸ்திரீகளுக்குக் காணுகின்ற வெள்ளையையும் மார்பு நோயையும் தணிக்கும். இதன் சாறு விராகனெடை 4, நல்லெண்ணெய் விராகனெடை 3, சுத்த சலம் சேர் ½ இவைகளை ஒருமிக்கச் சேர்த்துக் குலுக்கிக் காய்ச்சி உள்ளுக்குச் சாப்பிடக் கல்லடைப்பு, நீரடைப்பு முதலியவை நீங்கும்.

சூரணத்தண்டு.

(Tacca Aspera Stem).

சுத்த குதாங்குரத்தைத் துட்டகப மேதையதி
கத்தை விலக்குங் கறியமைக்கிற்—பத்தியமாஞ்
சீரணத்தை யும்மிகுத்த தீபனத்தை யுங்கொடுக்குஞ்
சூரணத்தின் றண்டெனவே சொல்.

குணம்:—(இ-ள்.) பத்தியத்திற்கான கருணைத்தண்டால் மூலரோகம், கபபிரகோபம், மேதோதாதுவிருத்தி ஆகிய இவைகள் நீங்கும். சீரணமும் பசியும் உண்டாம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படி பொரியலாகவாவது அல்லது பருப்பிட்ட குழம்புகளில் சேர்த்தாவது உண்ண மூல ரோகத்தைப் பரிகரிக்கும், பசிதீபனத்தை யுண்டாக்கும், கப சம்பந்தமான உபரியை அடக்கும்.

சூரியகாந்தி.

(Helianthus Annuses).

வீரியங் கொண்டே விளங்குரவி முன்னோக்கும்
சூரிய காந்திக்குச் சொல்லக்கேள்—பாரிய
வாத முடற்கடுப்பு வன்சூலை நீரேற்றஞ்
சாதகமாய் விட்டொழியுந் தான்.

குணம் :—(இ-ள்.) சூரியகாந்தியால் சகஞவர்த்தவாதம், உடற்கடுப்பு, கணுச்சூலை, நீரேற்றம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பூண்டை வீட்டின் தோட்டங்களில் வைத்துப் பயிராக்க அசுத்தமான காற்றைச் சுத்தமாக்கும். இதனுல் ஆரோக்கியத்திற்குப் பெரும் லாபமுண்டு. இந்தப் புஷ்பத்திலிருந்து எடுக்கப்பட்ட வித்தின் தைலம் மிதமாகப் பதார்த்தங்களைத் தாளிதம் செய்யவும் பலகார பட்சணங்களில் சேர்க்கவும் உதவும். அளவு அதிகரிப்பின் மலத்தைச்சிறிது இளகலாகப் போகச் செய்யும். இதன் பிண்ணுக்கை ஆடு, மாடு, கோழி இவைகளுக்கு ஆகாரமாகவும் கொடுக்கலாம்.

இந்தப் புஷ்பத்தின் எடைக்கு நான்கு பாகம் நல்லெண்ணெய் கூட்டிப் பதமுறக்காய்ச்சி வடிகட்டி ஸ்நானம் செய்துவரச் சிரசில் ஏறிய துர்நீரை நீக்கி ஜலதோஷம், தலைவலி முதலியவற்றை நீக்கும். இன்னும் இந்தத் தைலத்தை வாதரோகத்தில் கண்ட பிடிப்பு, வலி, குடைச்சல் முதலியவற்றிற்கு மேல் தேய்த்து வெந்நீர் விடக் குணமாகும். சிலர் 15 பலம் தைலத்திற்கு $\frac{1}{8}$ ரூபாயெடை அபினியை அரைத்துக் கலக்கி உபயோகப்படுத்துவதுமுண்டு.

சூரைப்பழம்.

(Zizyphus Oenoplia Fruit).

மந்த மதிகரிக்குங் வன்சீத ளஞ்சேரு
முந்து குடல்வலியு முண்டாங்காண் —முந்துநவில்
காரைப் பழத்திற் கதித்தவொரு பேதமுமாஞ்
சூரைப் பழத்திற்குச் சொல்.

குணம்:—(இ-ள்.) முற்கூறிய காரைப்பழத்தின் ஓர் இனமாகிய சூரைப்பழத்திற்கு அதிமந்தமும், கபதோஷமும், குடல்நோயும் உண்டாம் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தைச் சாதாரணமாகத் தின்பதுண்டு. இது அதிகக் குளிர்ச்சியானது. இது தீபனத்தை மந்தப்படுத்திக் கபத்தை விருத்தி செய்யும்.

செங்கத்தாரி வேர்ப்பட்டை.

(Capparis Aphylla Root's Bark).

செங்கத்தா ரிச்சடைக்குத் தீராத வன்மேகம்
பொங்கி வருங்கிரந்திப் புண்புரைகள் — தங்குகின்ற
சந்திகசி லேஷ்மந் தனித்த மகாவாத
முந்திவிட் டோடு மொழி.

குணம்:—(இ-ள்.) செங்கத்தாரிவேர் பிரமேக நீர், ஒட்டுப் புண் புரைகள், கீல்களில் வீங்கச் செய்கின்ற கபமகாவாதம் இவைகளைப் போக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டையைச் சலம்விட்டு நன்றாய் அரைத்துத் தேகத்திற்குப் பூசிச் சில நிமிஷம் உலர விட்டு ஸ்நானம் செய்யக் கரப்பான், கிரந்தி, செங்கரப்பான், கொள்ளிக் கரப்பான் முதலிய தோல் சம்பந்தமான ரோகங்கள் போம். இன்னும் இதன் மூலத்தைப் பால்விட்டு அரைத்து அந்தி, சந்தி ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் பாலில் கலக்கிக் குடித்துக்கொண்டு வர மேற்கூறப்பட்ட ரோகங்கள் போம். இன்னும் இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டி எண்ணெயாகக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

கரப்பான் எண்ணெய்.

செங்கத்தாரி, கருநொச்சி, முடக்கத்தான், கழற்சி, புங்கு, சங்கு, சங்கங்குப்பி, கிரந்திநாயகம், சிறுசெருப்படை, சிறுசின்னி, முதியார்கூந்தல், உத்தாமணி, கொடிவேலி, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சிவதை, கண்டங்கத்திரி, பூதகரப்பான்பட்டை, சீரகம், கருஞ்சீரகம் இவைகள் வகைக்குப் பலம் ½ ஆக உரலில்போட்டு நன்றாய் இடித்துத் தைல பாண்டத்தில் போட்டு 20 பலம் சிற்றாமணக் கெண்ணெய் விட்டுச் சிறுக எரித்து வருக. எண்ணெயிலிட்ட சரக்குகள் சிவந்து வருஞ்சமயம் வடிகட்டிப் பத்திரப்படுத்துக. குழந்தைகளின் வயதுக்குத் தக்கபடி 1-2 தேக்கரண்டி வீதம் தினம் ஒரு வேளை 3 நாள் கொடுக்க எவ்விதக் கரப்பானும் போம்.

செங்கத்தாரி எண்ணெய்.

செங்கத்தாரி, பூவரசு, பூதகரப்பான்பட்டை, கண்டங்கத்திரி, நிலாவாரை வகைக்குப் பலம் 10 இவைகளை இடித்து ஒரு மட்

பாண்டத்தில் போட்டு 10 படி சலம் விட்டு ஒரு படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதனுடன் ஒரு படி ஆட்டுப்பாலும் ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயும் கூட்டி வைத்துக்கொள்க. அப்பால் மிளகு, சதகுப்பை, வசம்பு, வலம்புரிக்காய், வெள்ளுள்ளி, பறங்கிப் பட்டை, கார்போக அரிசி, கருஞ்சீரகம் வகைக்குக் கழஞ்சு 2 வீதம் இடித்துச் சூரணித்து அம்மிக்கல்லில் வைத்துப் பால்விட்டு நன்றாய் அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்துள்ள பாண்டத்தில் போட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடிகட்டிக்கொள்க. குழந்தைகளின் பருவத்திற் கேற்றவாறு 1-2 தேக்கரண்டி வீதம் தினம் 1 வேளை 3 நாள் கொடுக்கக் கரப்பான் 18-ம் போம். இன்னும் இதனை மேற்பூசி வருவதனால் விரைவில் குணம் ஏற்படும்.

செங்கழுநீர்க்கிழங்கு.

(Pontederia Vaginalis).

கண்ணுங் குளிர்ந்திருக்குங் காசம்போம் பித்தமறு
மெண்ணரிய மேக மிடையுங்காண்—பெண்ணேகேள்
பொங்கெழின் மாதைப் புணர்ந்தவழ லுந்தணியுஞ்
செங்கழு நீர்க்கிழங்காற் றேர்.

குணம்:—(இ-ள்.) செங்கழுநீர்க்கிழங்கால், இருமல், பித்த நோய், சர்வமேகம், புணர்ச்சியின் வெப்பம் இவைகள் நீங்கும். விழிக்குக் குளிர்ச்சியாம்.

(இதுவுமது)

உடற்குக் குளிர்ச்சியதா முள்ளுழலை மாற்றும்
அடற்கபவ ரோசகத்தை யாற்றுங்—கடற்குள்
எழுநீர்க் குமிழி யிகழு முலையாய்!
கழுநீர் மலரெனவே காண்.

(இ-ள்.) கழுநீர்ப்பூவால் தாகரோகம், சிலேத்தும அரோசகம் முதலியவைகள் நீங்கும். உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

செய்கை :—சங்கோசனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கைச் சுத்தமாக அலம்பிப் பால்விட்டு அரைத்து வேளைக்கு ஒரு சிறு கொட்டைப்பாக்களவு தினம் 2 வேளை பாலில் கலக்கிக்கொடுத்துவரச் சரீரம் குளிர்ச்சியைப் பெறும், விந்து தடிப்பேறும். நீடித்துக்கொடுக்க சரீரத்

தில் நோயணுுக வொட்டாது. இன்னு மிக்கிழங்கைப் பலவிதமான லேகியங்களிலும், கிருதங்களிலும் இதரச்சரக்குகளுடன் கூட்டிச் செய்வதுண்டு.

இதன் புஷ்பத்தை ஒரு சுத்தமான சீலையில் பரப்பி அதன் நடுவில் சிறிது குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம் பொடி செய்து வைத்து நான்கு மூலையும் ஒருங்குசேர்த்து முடிந்து மோந்துவரப் பித்தத்தினுல் உண்டான மூர்ச்சை நீங்கும்.

இதன் புஷ்பத்தைக் குளிர்ந்த சலத்தில் 12 மணிநேரம் ஊறப்போட்டு, வடிகட்டி அந்நீரைக் கொடுத்துவரத் தாகம் அடங்கும், மெய் குளிரும்.

செங்கற்ருழை.

(Aloe Litoralis Red).

செய்யறிய நற்குணத்தைச் செய்யுமொரு பூண்டுகளில்
உய்யவகை தேரா துழைத்தார்கள்—பொய்மக்கள்
நீர்சிவந்த கற்ருழை நீக்கிவிடும் வெப்பத்தைப்
பாரிரும்பைப் பொன்னுக்கும் பார்.

குணம் :—(இ-ள்.) செங்கற்ருழையினுல் உட்சூடகலும், இரும்பைத் தங்கமாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்ருேலைச் சீவிச் சலம்விட்டு நன்ருய் ஏழுமுறை அலம்பி எடுத்துத் தினம் 1-1½ பலம் வீதம் சாப்பிட்டுவர உட்சூட்டை (தேக அழலே) நீக்கும், நித்திரை பங்கத்தை அகற்றும், நல்ல தேஜசை யுண்டாக்கும். இதில் அயம் தங்கமாகின்றதென்பது ஆன்ருேர் வாக்கு.

செஞ்சந்தனம்.

(Pterocarpus Santalinus).

சீலமொழிக் குஞ்சிரங்கு சீத முறும்பேதி
மூலம் பெரும்பாடு மூண்டுவளர்—காலமதில்
செஞ்சந் தனத்தால் சிறந்தசிகிச் சைசெய்ய
வஞ்சியிடை யாயோடு மால்.

குணம்:—(இ-ள்.) செஞ்சந்தனத்தால், சிரங்கு, சீதபேதி, மூலம், பெரும்பாடு முதலியவைகள் நீங்குமென்க.

செய்கை:—சங்கோசனகாரி, சமனகாரி, பூதிகந்தநாசினி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—செஞ்சந்தனக் கட்டையை நன்ருய் இடித்துத் தூள் செய்து வேளைக்கு கால் ரூபாய் எடை காய்ச்சிய பசுவின்பாலில் போட்டுச் சீனிசர்க்கரை கூட்டித் தினம் இரு வேளை கொடுத்துவர, ரத்தமூலம், பெரும்பாடு, சீதபேதி முதலிய வைகள் நீங்கும். அல்லது ½ பலம் செஞ்சந்தனக் கட்டையை பஞ்சுபோல் நறுக்கி ஒரு பழகின மட்குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை சிறிது கற்கண்டுச் சூரணம் கூட்டிக் கொடுத்துவரச் சொறி, சிரங்கு, நமைச்சல் தீரும். இந்தக் கட்டையைச் சந்தனம்போல் உரைத்துக் கண்ணேய்க்குக் கண்ணைச் சுற்றி வளையமாகப் பூசக் கண்வலி நீங்கும். தலைவலிக்குப் பூச தலைவலி நீங்கும். இதனுடன் தேனாவது அல்லது எண்ணெயாவது கூட்டி மத்தித்துக் கட்டிகளுக்குப் போடக் குணமாகும்.

* செடிக்காசரைக்கீரை.

(Hibiscus Cannabinus).

சார்ந்த செடிக்கா சரையி னிலையதனல்
ஊர்ந்தகப மேயொழியு மூழ்வலியாற்—சேர்ந்ததொரு
பித்த மருசியுடன் பேசும் மயக்கமறும்
மெத்துமெழின் மாதே விளம்பு.

குணம்:—(இ-ள்.) செடிக்காசரைக்கீரையினுல் கபம் ஒழியும். இது பித்தத்தால் ஏற்பட்ட அரோசிகத்தையும் மயக்கத்தையும் நீக்கும் என்க.

(இதுவுமது)

தேகசித்தி யாகுஞ் சிறுகர்ச மந்தமறும்
போகமுறு விந்துவுநற் புஷ்டியுண்டாம்—வாகாம்
வெளிச்சிறுமா னேக்கும்விழி மென்கோடியே நாளும்
புளிச்சிறுகீ ரையுண்ணும் போது.

(இ-ள்.) புளிச்சிறுகீரையினுல், சிணுக்கிருமல், அஜீரணம் ஒழியும். காயசித்தியும், புணர்ச்சியில் விருப்பமும், வீர்யவிர்த்தியுமுண்டாமென்க.

செய்கை:—இலகுமலகாரி, காமவிர்த்தினி, சமனகாரி.

---

* சாதாரணமாக கறிக்கு உதவுகின்ற புளிச்சக்கீரைக்கே கூறப்பட்டதாகும்.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையை நன்றாய்ச் சலத்தில் அலம்பி ஒரு மட்பாண்டத்தில் போட்டு, வெங்காயம், பச்சை மிளகாய் முதலியவற்றைக் கூட்டி அடுப்பிலேற்றி வெந்தபின் உப்பிட்டுக் கடைந்து முறைப்படி தாளித்து அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுச் சாப்பிடச் சரீரத்திற்கு ஆரோக்கியத்தையுண்டாக்கும். இந்தக் கீரையை ஆட்டிறைச்சி, ஆட்டின் இரைப்பை, குடல் முதலியவற்றுடன் சேர்த்துப் பாகப்படுத்தி உண்பதுமுண்டு. இதனால் சரீரத்திற்குப் பலமுண்டாகும், தாது வலுக்கும், பித்த உபரி தணியும். இதன் காயைச் சர்பத்தாக காய்ச்சி உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்—ஒரு சேர் காயை இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 8 சேர் சலம் விட்டு 2 சேர் அளவிற்குக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி அதனுடன் 4 சேர் சர்க்கரை கூட்டி சர்பத்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு 1-1½ தோலா எடை சலத்தில் விளாவிச் சாப்பிட்டுவரப் பித்தம், மந்தம் போம். உற்சாகமுண்டாகும்.

இதுவுமன்றி சீமைக்காசரைக்கீரை (சிவப்புக்காசரை) கொடிக்காசரைக்கீரை என்கிற இரண்டு இனங்களுண்டு. இவற்றுள் சீமைக்காசரைக் கீரையே அதிகம் உயர்ந்தது. இது விசேடமாக வேலூரில் கிடைக்கும். அவற்றின் குண விசேடங்களைக் கீழ்க்கண்ட செய்யுட்களால் கண்டுணர்க.

சீமைக்காசரைக்கீரை.

(Hibiscus Cannabinus—Red).

பித்தமறும் தீபனமாம் பேசிய தாதுவுமே
மெத்த வதிகரிக்கும் மெய்குளிரும்—இத்தரையில்
வாச மலர்சூழ்ந்த வார்குழலே நற்சீமைக்
காசரைக் கீரையதாற் காண்.

(இ-ள்.) சிவப்பு நிறத்தையுடைய சீமை காசரைக்கீரையினால் பித்தம் நீங்கும், தீபனமும் தாது பலமும் உண்டாகும், தேகத்தில் உஷ்ணம் குறையுமென்க.

கொடிக்காசரைக்கீரை.

(Hibiscus Cannabinus Creeper).

சாற்றுங் கொடிக்கா சரையிலையாற் மாந்தர்க்கு
தோற்றுங் கடும்பித்தம் தோல்வியுறும்—நீற்றதொரு
விந்து தடிப்பேறி விம்மலுறு மெந்நாளும்
கந்தமலர் வார்குழலே காண்.

(இ-ள்.) கொடிக்காசரைக் கீரையினால் அதிகரித்த பித்தமடங்கும், நீற்றுப்போன விந்து தடிப்பேறி போகத்தில் இச்சையை யுண்டாகுமென்க.

செடிக்காசரைவித்து.

(Hibiscus Cannabinus Seeds).

கட்டுபடும் சூதகத்தைக் காணும லோட்டிவிடும்
தட்டுபடுங் கர்ப்பத்தைத் தானழிக்கும்—இட்டமுடன்
உற்றசெடிக் காசரையி னோர்வித்தைப் பாலதனில்
பொற்றொடியே தானருந்தும் போது.

குணம்:—(இ-ள்.) செடிக்காசரைக்கீரையின் வித்தை பசுவின் பாலில் அரைத்து ஸ்திரீகளுக்குக் கொடுக்க சிக்குப்பட்டுள்ள சூதகத்தை வெளியாக்கும், கருவையும் அழிக்கும்.

இந்த இனத்தைச் சார்ந்த கொடிக்காசரை வித்திற்கும் இதே குணம் உண்டென்பதை கீழ்க்கண்ட செய்யுளால் கண்டுணர்க:—

கொடிக்காசரைவித்து.

(Hibiscus Cannabinus Creeper Seeds).

வெய்யகொடிக் காசரையின் வித்ததனைக் காடிவிட்டு
பைய வரைத்துப் பருகிடவே—மெய்யாய்
கருவை யறவொழித்துக் காணுஞ்சேந் நீரி
லுருவைவெளி யாக்குமென ஓர்.

(இ-ள்.) கொடிக்காசரையின்வித்தை காடிவிட்டு அரைத்துக் குடிக்கக் கருவை அழித்துவிடுமென்க.

மேற்குறிப்பிட்ட செய்யுட்களில் நன்கு விளக்கப்பட்டிருப்பதால் மீண்டுமதனை விரிவாகக் கூறவில்லை.

செந்தராயிலை.

(Pharnaceum Molugo-Red).

அனில முளையு மரோசகமு நீங்குந்
தனியான தோஷமது தாழுங்—கனிமொழியே
வெந்தாரைச் சூடும் விடாயும்போந் தீபனமாஞ்
செந்தரா வின்றழைக்குச் செப்பு.

குணம்:—(இ-ள்.) செந்தரா இலைக்கு வாதமுளை, மூலம், அருசி, வாத முதலிய தனிதோஷங்கள், நீர்த்தாரைச்சூடு, ஆயாசம் இவை நீங்கும், தீபனமுண்டாம்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலம் 2 பலம் ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம்விட்டு ⅛ படியாகச் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை 5-7 நாள் கொடுக்கலாம். அல்லது இந்த இலையுடன் சிறிது மிளகு சேர்த்தரைத்து வேளைக்கு ஒரு சிறு கொட்டைப் பாக்களவு தினம் 2 வேளை கொடுக்கலாம். இதனால் மேகசம்பந்தமான கண்டமாலை, குஷ்டம், மலச்சிக்கல், குன்மம், காமாலை, சுரம், சிறுகுடல், ஈரல் இவைகளில் கண்ட வியாதிபோம். இந்த இனத்தில் வெள்ளைப் பூவிடுகிற கொடிகளும் உண்டு. இதனைச் சாதாரணமாகத் தரா எனக் கூறுவர்.

செந்தாழம்பூ.

(Pandanus Odoratissimus Sovereign Colour).

தலைநோய் சலதோடஞ் சண்ணுகபங் காச
முலைவாத மெல்லா மொடுக்கு—நிலைசேர்
திருந்துடற்குக் காந்திதருஞ் செம்மணப்பில் வெம்மை
பொருந்துகின்ற செந்தாழம் பூ.

குணம்:—(இ-ள்.) உஷ்ண மணம் பொருந்திய செந்தாழம்பூ சிரஸ்தாபரோகம், நீரேற்றம், நெஞ்சிற் கபாதிக்கம், இருமல், சலிக்கின்ற வாதகோபம் இவைகளைப் போக்கும். சரீரத்தில் மினுமினுப்பை யுண்டாக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—தாழம்பூவின் மடலைத் துடைத்து ஸ்திரீகள் கூந்தலில் வைத்துகொள்ள வனப்பையும், மணத்தையும் கொடுக்கும். இதனை அவிழ்தமாக உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில முக்கிய பாகங்களாவன—

தாழம்பூத் தீநீர்.

அரைவீசை செந்தாழம்பூவை நாருநாராகக் கிழித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 5 படி சலம்விட்டு ஒரு இரவு ஊறவிட்டு மறுநாள் வாலையைச் செருகி ஆவிநீராக 2½ படி அளவிற்கு இறக்கிப் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டு வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவரத் தேகத்தின் கொதிப்பு அடங்கும். அம்மை கண்டவர்களுக்குக் கொடுக்கச் சாந்தப்படும்.

தாழம்பூ கலிக்கம்.

ஒரு புஷ்பத்தில் உள்ள இதழ்களை நாருநாராகக் கிழித்து 10 பலம் சுத்தமான நல்லெண்ணெயுடன் கூட்டிப் புட்டிக்குள் செலுத்திச் சூரிய புடமாகச் சில நாள் வைக்கவும். தாழம்பூ கறுத்துப் போனபின் வடிகட்டி வைத்துக்கொண்டு கண்களில் இரண்டொரு துளிவிடக் கண்களில் ஊறலுண்டாகி நீர்கொட்டும். கைவைத்துத் தேய்க்கக்கூடாது. கண்களை அடிக்கடித் திறந்து திறந்துவிட வெண்மை நிறமான நீர் சொட்டும். கண்ணூறல் சகிக்கக்கூடாதவர்கள் துணியைப் பந்துப்போல் சேர்த்துக் கண்களில் ஒத்தி எடுக்க எரிச்சல் தணியும். இதனால் தலைவலி நீங்கும். கண்களுக்குப் பிரகாசம் உண்டாகும். கண்குளிர்ந்து நல்ல நித்திரையை உண்டாக்கும். இந்த எண்ணெயைத் தேய்த்து ஸ்நானம் செய்யத் தலைவலி, நீரேற்றம் இவைகள் போம்.

செந்நாயுருவிச்சமூலம்.

(Achyranthes Aspera Red).

ஓதமுறு சோபை யுயர்பாண்டு வைப்போக்குந்
தீதுறுகா மாலைநோய் தீர்க்குமினர்—சூதகநீர்
பொய்ப்புறுகா லத்ததனைப் பொங்குவிக்குங் காரமொடு
கைப்புறுசெந் நாயுருவி காண்.

குணம் :—(இ-ள்.) கார்ப்புங் கைப்புமுள்ள செந்நாயுருவியின் சமூலம், ஏறுவீக்கம், பாண்டு, காமிலம் இவைகளை நீக்கும். மாதர்களின் ருதுகால சோணிதத்தை வழக்கப்படி யுண்டாக்கும் என்க.

செய்கை :—சங்கோசனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றை வேளைக்கு 1-1½ தேக்கரண்டி அளவு தினம் 2 வேளை கொடுக்க வயிற்று நோயைக் குணப்படுத்தும். இதனை அதிக அளவில் கொடுக்க ஸ்திரீகளுக்குக் கட்டுப்பட்டுள்ள உதிரத்தையும் பிண்டத்தையும் வெளிப்படுத்தும். இதன் இலையை அரைத்து ஒரு சிறு கொட்டைப் பாக்களவு நல்லெண்ணெயில் மத்தித்துத் தினம் இருவேளை 7 நாள் கொடுக்க இரத்தமூலம் போம். இதன் இலையுடன் மிளகு, வெள்ளைப்பூண்டு, சிறிது வெல்லம் சேர்த்து அரைத்துத் தூதுளங்காய்ப் பிரமாணம் மாத்திரைகளாய்ச் செய்து வைத்துக்கொண்டு முறை சுரத்திற்குத் தினம் 3 வேளை கொடுத்துக்கொண்டுவரக் குணமாகும். வேளைக்கு 2 குன்றி எடை செந்நாயுருவி வேர்ப்பட்டைச் சூரணமும், 2 குன்றிஎடை மிளகு சூரணமும் கூட்டித் தேன்விட்டு மத்தித்துத் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க இருமல் குணமாகும். நாயுருவி

இலைச்சாற்றுடன் சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுத்துவர இரு மலக் குணப்படுத்தும். இதனை அரைத்துக் கட்டி, கொப்பளம் முதலிய வற்றிற்கு வைத்துக்கட்டப் பழுத்துடைந்து விரைவில் ஆறும். இதன் இலைச்சாற்றைப் படைகளுக்குத் தடவக் குணமாகும். இதன் இலைச்சாற்றுடன் வெள்ளாட்டுக் கொழுப்பும், மருதோன்றிக் குழித்தைலமும் கூட்டிக் கால்நரம்புகளுக்குத் தடவித் தேய்க்க இசிவு குணமாகும். இதன் இலைச்சாற்றில் சிறிது அபினியைக் கரைத்துப் பீங்கான் தட்டில்விட்டு ரவியில் காயவைத்துக் களிம்பு பதம் வரும்போது மேகரணங்களுக்குத் தடவிவர ஆறும். இந்த இலையைக் கசக்கித் தேள், பூரான், வண்டு முதலியவைகள் கடித்த அல்லது கொட்டின இடத்தில் தேய்க்கக் குணமாகும். இதன் சமூலத்தைக் கியாழமிட்டு வாய்கொப்பளிக்கப் பல்வலி, உண்ணாக்கு வலி இவைகள் போம்.

செப்புநெருஞ்சில்.

(Indigofera Enneaphylla).

செப்பு நெருஞ்சில் திரிதோஷம் போக்கிவிடும்
வெப்பு முதலனைத்தும் வீட்டுங்காண்—செப்பரிய
சுக்கிலமே கம்போக்குந் தொல்லை யனல்மாற்றும்
மிக்கு மருந்தாம் விரி.

குணம்:—(இ-ள்.) செப்புநெரிஞ்சில், திரிதோஷம், சுர முதலிய நோய்கள், சுக்கிலமேகம், நீடித்த உட்சூடு ஆகிய இவைகளை நீக்கும் நல்ல மருந்தாம்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சமனகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையில் 1-1½ பலம் ஒரு குடுவையில் போட்டு ½ படி சுத்த சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் 4 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுத்துவரச் சிறுநீர் தாராளமாக இறங்கும், சுரம் இருமல் முதலியவைகள் குணமாகும்.

செம்பரத்தம்பூ.

(Hibiscus Rosa Sinensis).

செம்பரத்தை மேகவெட்டை தீராப் பிரமியோடு
வம்பிரத்த வெள்ளை வழுவழுப்பும்—வெம்பும்
பெரும்பா டிரத்தபித்த பேத மகற்றுங்
கரும்பா மொழிமயிலே காண்.

குணம்:—(இ-ள்.) செம்பரத்தம்பூ, மேகவெள்ளை, பிரமிய மேகம், ரத்தபிரமேகம், பெரும்பாடு, அசிக்கரவருக்கம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, அந்தர்ஸ்னிக்தகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த புஷ்பத்தில் உள்ள இதழ்களில் வேளைக்கு 1-1½ தோலா எடை எடுத்துச் சுத்தமாகத் துடைத்து நெய்யில் வதக்கி ஸ்திரீகளுக்குத் தினம் இருவேளை 3-5 நாள் உள்ளுக்குக் கொடுக்கப் பெரும்பாடு நீங்கும். வேளைக்கு 1-1½ தோலா எடையுள்ள புஷ்ப இதழ்களை 3 அவுன்ஸ் சலத்தில்போட்டு பிசைந்து பிசைந்து வடிகட்டி எடுத்த குழகுழப்பான நீருடன் சிறிது சர்க்கரை கூட்டித் தினம் 2 வேளை 5 நாள் கொடுக்க மேக வெள்ளை, ரத்தபிரமேகம் போம். இதுவுமல்லாமல் இந்தப் புஷ்பத்தைச் சர்பத்தாகச் செய்து உபயோகப்படுத்துவதுமுண்டு. எங்ஙனமெனில்—

செம்பரத்தம்பூ சர்பத்து.

ஒரு கலியாணப் பூசனிக்காயைத் துளைத்து அதனுள் 5-10 பலம் நிறையுள்ள இப் புஷ்பத்தைச் செலுத்தி 2 நாள் வைத்துக் காயைப் பிளந்து உள்ளிருக்கும் மெதுவான பாகத்தை எல்லாம் சுரண்டி எடுத்துப் புஷ்பம் உட்படப் பிசைந்து சாறுவாங்கி வடிகட்டி அதற்குச் சமனெடை சர்க்கரை கூட்டி (சர்பத்பதம்) தேன் பதமாகக் காய்ச்சித் தினம் காலைமாலை 1-1½ தோலா நிறை கொடுத்து வர நீரெரிச்சல், உட்சூடு நீங்கும்.

வேறுமுறை

10 பலம் சுத்தமான புஷ்பத்தைத் தட்டை அம்மியில் வைத்து நெகிழ அரைத்து வைத்துகொள்க. அப்பால் ½ வீசை சர்க்கரையை ½ படி சலம்விட்டுக் கரைத்து, வடிகட்டி அதனில் முன் அரைத்து வைத்துள்ள புஷ்பத்தைப் போட்டு நன்றாய்க் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துக் குழம்பு பதமாகக் காய்ச்சிச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் சர்பத்துக் குழகுழப்பாகத் தடித்திருக்கும். இதனில் வேளைக்கு 2-3 தேக்கரண்டி வீதம் காலை, மாலை கொடுத்துவர உட்சூடு, நீரெரிச்சல், உள்ளுறுப்புக்களில் கண்ட விரணம், ஈரல்களின் வீக்கம், நீர்க்கட்டு முதலிய ரோகங்கள் போம்.

செம்பருத்திப்பூ.

(Gossypium Indicum—Red Flower).

செம்பருத்திப் பூவழலைத் தீயரத்த பித்தத்தை
வெம்புவயிற் றுக்கடுப்பை விந்துவைநீர்த்—தம்பனசெய்
மேகத்தை வெட்டையை விசூசிமுதற் பேதியையுட்
டாகத்தை யோட்டிவிடுந் தான்.

குணம்:—(இ-ள்.) *செம்பருத்திப்பூ தேகஅழர்ச்சி, ரத்த பித்தரோகம், உதரக்கடுப்பு, சலமேகம், வெள்ளை, விசூசி முதலிய பேதிகள், தாகம் இவைகளை நீக்கும்.*

செய்கை:—*மூத்திரவர்த்தனகாரி, முறைவியாதிரோதி, சீதள காரி, அந்தர்ஸ்நிக்தகாரி, இலகுமலகாரி, காமவிர்த்தினி, கபஹரகாரி.*

உபயோகிக்கும் முறை:—*புஷ்ப இதழ்களை வேளைக்கு* 1-1½ *தோலா எடை அரைத்துக் கற்கமாகவாவது அல்லது பாலில் கலக்கிப் பானமாகவாவது தினம்* 2 *வேளை* 5 *நாள் கொடுக்க இரத்தப் பிரமேகம், வெள்ளை, இரத்தவாந்தி, உட்கொதிப்பு முதலியவைகள் குணமாகும்.*

இதன் இலையை அரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு பாலில் கலக்கித் தினம் 2 *வேளை* 3 *நாள் கொடுக்கச் சீழ்பிரமேகம், ரத்தப்பிரமேகம், உட்கொதிப்பு முதலியவைகள் குணமாகும்.*

இதன் பிஞ்சுக்காயை முன்போல் அரைத்துக் கொட்டைப் பாக்களவு மோரில் கலக்கித் தினம் 2 *வேளை* 3 *நாள் கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி முதலியவைகள் குணமாகும்.*

செம்முள்ளி.

(Barleria Prionitis).

செம்முள்ளி யென்றுற் சிலேஷ்ம நடுநடுங்கும்
விம்முமூலை மாதே விளம்பக்கேள்—கம்முகின்ற
மாந்தகண மையமிவை மாறுஞ் சிறுவருக்குச்
சேர்ந்தசுர தோஷமும்போஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) *செம்முள்ளியினால் கபப்பெருக்கம், கண மாந்தம், சுவாசம், குழந்தைகட் குண்டாகின்ற சுரதோஷம் இவை கள் போம் என்க.*

செய்கை :—*கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி, தாதுக்ஷீண ரோதி.*

உபயோகிக்கும் முறை:—இதனை விசேஷமாகக் கியாழங்களில் கூட்டுவதுண்டு. எங்ஙனமெனில்: செம்முள்ளி, தூதுளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, விஷ்ணுகிரந்தி, சங்கு, இண்டு, சடைச்சி, துளசி இவைகளின் இலையை வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்து வைத்துக்கொள்க. அப்பால் ஒரு வாய் அகன்ற சட்டியில் சலம் விட்டு வாய்க்கு ஒரு சீலை கட்டி முன் சித்தப்படுத்தி வைத்துள்ள மூலிகைகளில் பாதிப்போட்டு அதன்மேல் ஒரு விராகனெடை ஓமத்தைச் சீலையில் முடிந்து வைத்து அதன்பேரில் மிகுதியுள்ள மூலிகையைப் போட்டு வாய்மூடி ஈரச்சீலையை வாய் பொருத்தத் திற்குச் சுற்றி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரிக்கவும். இதனைப் பிட்டவியல் எனக் கூறுவர். உள்ளிருக்கப்பட்ட மூலிகையை வெந்த சமயம் எடுத்து, இடித்துச் சாறு பிழிந்து, முடிச்சுக்கட்டி வைத்துள்ள ஓமத்தை அரைத்து, அச்சாற்றில் சலக்கிக் குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ சங்கு அளவு கொடுக்கக் கணகாய்ச்சல் தீரும். இப்படித் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க நோய் பற்றறும். செம்முள்ளி, தூதுளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, சங்கு இவைகளின் இலைகளில் வகைக்கு ஒரு பிடி எடுத்து முன்போல் பிட்டவித்துச் சாறு பிழிந்து அதிற் சுக்கு, மிளகு, சிறுதிப்பிலி, இந்துப்பு வகைக்கு $\frac{1}{4}$ விராகனெடை வீதம் சிறிது வெதுப்பிப் பொடி செய்து போட்டுத் தேன் விட்டுக் கலக்கி முன்போல் குழந்தைகளின் பருவத்திற் கேற்றவாறு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ சங்கு அளவு தினம் 2 வேளை 3 நாள் கொடுக்கக் குழந்தைகளுக்குண்டாகும் இருமல் குணமாகும்.

செருப்படை.

(Glinus Laloides).

செருப்படைக்கு வாதமந்தஞ் சேர்வான மேக
மிருப்படிகோள் பொல்லா இசிவும்—விருப்படிக்குஞ்
சூலையொடு வாதகுன்மந் தோற்று தொருநாளும்
வேலையொத்த கண்ணாய் விளம்பு.

குணம்:—(இ-ள்.) செருப்படைக்கு, வாதகோபம், மந்தாக்கினி, வெள்ளை வீழ்தல் ஆகிருஷ்ணஸ்தம்பனவாதம், சூலை, குன்மம் இவைகள் நீங்கும்.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் சிறு செருப்படை, பெருஞ்செருப்படை என இருவகையுண்டு. இவைகளுள் சிறுசெருப் படை விசேஷ குணமுடையது. இதனைச் செந்தூர மூலி எனக்கூறு வர். இம் மூலிகைச்சாற்றால் அயம், காந்தம், அப்பிரகம், ரசகெந்தி முதலிய கூட்டுறவான சரக்குகளை அரைத்து, அரைத்து வில்லை தட் டிப் பாகப்படி புடமோ அல்லது எரிப்போ கொடுத்தெடுக்கச் செந் தூரமாகும். இதுவுமன்றி வாதகோபம், மந்தாக்கினி, வெள்ளை, ஆகி ருஷ்ணஸ்தம்பவாதம், சூலை, குன்மம், இவை முதலியவைகளுக் குச் சூரணமாகவும் கியாழமாகவும் செய்து உபயோகிக்கலாம். எங் ஙனமெனில்: சிறு செருப்படையையும், வெள்ளை வெங்காயத்தை யும் சமனெடையாக இடித்துச் சாறு வாங்கி 6-7 தடவை வடிகட் டித் தினம் ஒரு வேளை காலையில் ½ ஆழாக்குக் கொடுக்கப் பேதியா கும். மேகச் சொறி, சிரங்கு, வெள்ளை, வாதநோய் முதலியவைகள் போம். இன்னும் இதனைச் சில பெரிய எண்ணெய்களில் கூட்டி உள் ளுக்கு உபயோகப்படுத்துவதுமுண்டு.

செவ்வகத்திப்பூ.

(Agati Grandiflora—Red Flower).

நாடிற் பனிப்பீனு நாடிக் கறைக்கதழ்வை
யோடித் துடைத்துள் ளொளியாற்றும்—பாடேத்
தவரகத்தி னுந்துணங்கைத் தண்டா மயிலே
துவரகத்தி வீக்காண் டுதி.

குணம்:—(இ-ள்.) செவ்வகத்திப்பூ பார்க்கிற் பயங்கரத்தைக் கொடுக்கின்ற நாசியால் வருகிற ரத்தப்பெருக்கை விரைவில் நிறுத்து வதுடன் உள் வெப்பத்தையும் நீக்கும் என்க.

செய்கை:—சமனகாரி, ரத்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தைச் சாதாரணமாக அகத்திப்பூவிற்குக் கூறிய வண்ணம் சமைத்துச் சாப்பிடுவதுண்டு. இன்னும் இதனை நல்லெண்ணெயில் போட்டு மிதக்கக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவருவதுமுண்டு. இது சிரசிலுண்டான அதிக அழற்சியையும், அதனால் மேல்நோக்கி நாசியின் வழியாக விழச்செய்கின்ற இரத்தபீநச ரோகத்தையும் குணப்படுத்தும். இந் தப் புஷ்பச்சாற்றால் அப்பிரகத்தை அரைத்து அரைத்துப் புடமிட் டுக் கொண்டுவர உயர்தரமான செந்தூரமாகும்.

செவ்வகத்தி இலை.

(Agati Grandiflora Leaves—Red variety).

**செவ்வகத்திப் பன்னஞ் சிலேஷ்மமதை யுண்டாக்கும்
வவ்வுபல சிந்தூரம் வைப்பதற்காங்—கவ்வு
நவநீத பஸ்பமதை நாளுமுடிப் பிக்குஞ்
சிவமாக்குந் தாளகத்தைத் தேர்.**

குணம்:—(இ-ள்.) செவ்வகத்தியிலை, கபதோஷத்தை உண்டாக்கும். பற்பல சிந்தூரம் நவநீத பஸ்பம், தாளகசுத்தி இவைகளைச் செய்வதற்கு உதவும் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரண அகத்திக்கீரையைப் போலவே சமைத்து உண்பதுண்டு. இது அதிக சீதள குணத்தை யுடையது. இலைச் சாற்றால் அப்பிரகம், அயம், காந்தம், மண்டூரம் முதலியவற்றை அரைத்துப்புடம் போட்டுக்கொண்டுவர உயர் தரமான செந்தூரமாகும். அச்செந்தூரம் தேகத்தில் உஷ்ணிக்காமல் ரோகங்களைத் தீவிரமாகக் குணப்படுத்தும்.

செவ்வந்திப்பூ.

(Chrysanthemum Indicum).

**அலைமயக்கஞ் சுற்றலறு மட்சிக் கொளியாந்
தலைமயிருண் டாமனலஞ் சாரும்—நிலைமணமா
மோவ்வந்தி வான்பிறையை யொத்த நுதற்றிருவே
செவ்வந்திப் பூவதனைச் செப்பு.**

குணம்:—(இ-ள்.) வாசனையுள்ள செவ்வந்திப்பூவால் மூர்ச்சையும், தலைச்சுழற்றலும் நீங்கும். கண்ணுக்கொளியும் ரோமச் செழிப்பையும் தரும் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை ஸ்திரீகள் அலங்காரத்திற்காகக் கூந்தலில் அணிவதுண்டு. இதிலுள்ள ஒருவிதமான பரிமளத்தால் மூளைக்கு உற்சாகம் உண்டாகும். இதனை அதிகமாக நம் நாட்டு ஔஷத முறைகளில் சேர்ப்பதில்லை. இதற்குப் பதிலாகச் சீமைச் செவ்வந்திப்பூ என்கிற சீமைச் சாமந்திப்பூவை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இதன் உபயோகத்தை அச் சரக்கின் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

செவ்வல்லிக்கிழங்கு.

(Nymphaea Rubra Tuber).

செம்பைக்க ளிம்பகற்றிச் சிந்தூர மாக்கிவிடும்
வெம்புபித்த மேகம் விலக்குங்கா—ணம்புவியி
லல்லிற் கறுத்தகுழ லாரணங்கே நற்சிவப்பா
மல்லிக் கிழங்கென் பது.

குணம்:—(இ-ள்.) சிவந்த அல்லிக்கிழங்கு செம்பின் களிம்பை நீக்குவதுந் தவிர, அதைச் செந்தூரமாக்கும். பித்தப் பிரமேகத்தை விலக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—தாம்பரத்திற்குச் சமனெடை கெந்தகத் தூளைக் கூட்டிப் பழச்சாறு விட்டரைத்துத் தாம்பர தகட்டிற்குப் பூசி அகலில் வைத்து மேல் அகல் மூடிச் சீலை செய்து 7-8 வறட்டியில் புடமிட வெட்டையாகும். இதைக் கல்வத்தில்போட்டு செவ்வல்லிக் கிழங்குச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒட்டிலடக்கிச் சீலை செய்து 10-12 வறட்டியில் புடமிடவும். இப்படி 10-12 புடம் சிவக்கிற பரியந்தம் போட்டு எடுத்து உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் தாம்பரத்தினுடைய களிம்பு அற்றுச் செந்தூரமாகும்.

இந்தக் கிழங்கின் உபயோகத்தை நெய்தற் கிழங்கின் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

செவ்வல்லிப்பூ.

(Nymphaea Rubra Flower).

செவ்வல்லிப் பூவுக்குச் சேர்ந்திறங்கு நீர்ப்பிணியோ
டோவ்வுமே கப்பிணியு மோய்வதன்றி—யிவ்வுலகிற்
கண்ணினோய் தீருங் கனத்தபித்த ரத்தமொடு
புண்ணினோய் பன்னோயும் போம்.

குணம்:—(இ-ள்.) செவ்வல்லிப்பூவுக்கு மூத்திரரோத்சங்க வாதம், மேக மூத்திரம், வெய்யிலாதியாற் பிறந்த நேத்திர ரோகங்கள், ரத்த பித்தம், விரணம், தாதுநஷ்டம் முதலிய சில நோய்கள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் வெள்ளைப்பூ, சிவப்புப்பூ, நீலப்பூ விடுகின்ற மூன்று வகைகளுண்டு. இதன் உபயோகத்

தைக் கூறமிடத்துச் சாதாரணமாக அல்லிப்பூவின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

செவ்வல்லி விதை.

(Nymphaea Rubra Seeds).

மிக்கசெவ் வல்லி விதையே யுலகுக்குத்
தக்கவாண் டன்மை தருமால்—பக்கபலம்
பேசவிதி வீரற் பிலீகங்க ளுக்குறுதி
பாசமுடன் ஞன்கொடுக்கும் பார்.

குணம்:—(இ-ள்.) செவ்வல்லியின் வித்துச் சுக்கிலத்தைப் பலப்படுத்தும். ஈரலுக்கும், பிலீக கண்டங்களுக்கும் வலுவையுண்டாக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை :—சில நூல்களில் இந்தச் செவ்வல்லி வித்தானது ஸ்திரீகளுக்குண்டாகிய சோணிதத்தைப் பலப்படுத்துமென்றும், வெள்ளை அல்லி வித்தானது புருஷர்களுக்குண்டான விந்துவை பலப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. எங்ஙனமாயினும் இவ்வித்துப் பேதமின்றி இருதிறத்தார்க்கும் நன்மையைக் கொடுக்கும் என்றறிக. இதனை வேளைக்கு $\frac{1}{4}$—$\frac{1}{2}$ தோலா எடை பாலில் அரைத்து வடிகட்டிக் கற்கண்டு சூரணம் போட்டுத் தினம் 2 வேளை சாப்பிடலாம். இந்த வித்தைப் பெரும்பாலும் தாதுவிருத்திக்குறிய லேகியங்களில் சேர்க்க நல்ல குணத்தைக் கொடுக்கும்.

செவ்வள்ளிக் கொடி.

(Rubia Manjith).

செவ்வள்ளி யின்கொடிக்குச் சேடித்த குட்டமொடு
கவ்வு குறைநோய் கரப்பானு—மிவ்வுலகின்
மானே குடல்வாதம் வல்ல படுவனுட
னுனபரு மூலமும்போ மால்.

குணம்:—(இ-ள்.) செவ்வள்ளிக் கொடிக்கு வீறு குட்டம், பெருவியாதி, கடுவன், குடலண்டம், நகம் குதிகால்களைப்பற்றிய கொப்பளம், மூலம் இவைகள் தீரும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 10-15 குன்றி எடை குளிர்ந்த சலத்தில் போட்டுக் கலக்கிக் கொடுக்க இரத்தம் சுத்தியாகும். குட்டம், படை, சொறி முதலியவைகள் போம். ஸ்திரீகளுக்குண்டாகும் வெள்ளையை நீக்கும். பிரசவித்த ஸ்திரீகளுக்குக் கொடுக்க அழுக்கைச் சரியாகத் தள்ளும். இந்தச் சூரணத்தைச் சில நாள் கொடுத்துக்கொண்டுவர சரீரத்தினுடைய நிறம் மாறி நல்ல நிறத்தையும் தேஜசுவையும் உண்டாக்கும். இந்தச் சரக்கானது இரத்தத்திலுண்டான மாசுகளை ஒழிப்பதில் அதிகச் சிறந்தது. இந்தச் சரக்குடன் சந்தனம் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுத்துவர மஞ்சட் பிரமேகம் போம். இதன் வேர் தைலங்களுக்கும் வஸ்திரங்களுக்கும் சாயம்போட உபயோகப்படுகிறது.

செவ்வாமணக்கு இலை.

(Ricinus Tanarius).

குன்மமொடு மந்தங் கொடுவாத மெய்வலியுஞ்
சன்மமட்டும் வாராமற் றுண்டுங்கா—ணன்மைதரு
மெவ்வா மணக்குகட்கு மேற்றமென்பார் காந்தியுள்ள
செவ்வா மணக்கிலையைச் சேர்.

குணம்:—(இ-ள்.) செவ்வாமணக்கு இலையால் வயிற்றுநோய், செரியாமந்தம், வாதகோபம், தேகக்கடுப்பு ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, வேதனசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைச் சிறிது வெதுப்பி ஸ்திரீகளுக்கு மாதவிலக்கு காலத்தில் உண்டாகும் வயிற்றுவலிக்குப் போட இரண்டொரு வேளையில் நன்மையை யுண்டாக்கும். முன் போல் வதக்கி ஸ்திரீகளின் ஸ்தனங்களுக்குப் போடப் பால் சுரப்பு அதிகப்படும்.

சேங்கொட்டை.

(Semicarpus Anacardium Nut).

கிருமிகயஞ் சூலை கிரந்திதிமிர் வாதம்
பொருமுகுன்ம முண்மூலம் புண்ணைத்—தருமா
கரிமுகிக் குட்டங் கடிவிடபா கம்போ
மெரிமுகிக் குச்சுகமா மெண்.

குணம்:—(இ-ள்.) சேங்கொட்டைக்குப் புழு, க்ஷபம், கீல் பிடிப்பு, சிரங்கு, சருமத்திமிர், மகாவாதம், வாதகுன்மரோகம், உள்மூலம், விரணக்கருங்குட்டம், காணுக்கடி, விஷபாகம் இவைகள் எல்லாம் விலகும், வீரியவிருத்தியுண்டாம் என்க.

செய்கை:—விரணகாரி, வியதாபேதகாரி, க்ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொட்டையானது சஞ்சீவிக் கொப்பானதெனச் சித்தர்கள் கூறியிருப்பினும் சில சந்தர்ப்பங்களில் அபக்குவமருந்துகளால் தீமைகளையுண்டாக்குகிறது. இதனை அவிழ்தபாகங்களில் கூட்டுவதற்குமுன் மூக்கை நறுக்கி எடுத்துவிட்டுச் சுண்ணும்புக்கல்லின் இடையில் வைத்துக் காடிநீர் தெளித்து நீற்றவும். இப்படி 7 முறை செய்து எடுத்த கொட்டைகளைச் சாணிப்பால், புளியமிலைக்கியாழம், சோற்றுக்கற்றாழை மடல்நீர், பனங்கள், பசுவின்பால், இளநீர் முறையே ஒவ்வொன்றிலும் போட்டு ஒவ்வொரு சாமத்திற்குக் குறையாமல் எரித்து எடுத்து அலம்பி 7 நாள் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்வது உயர்தரமான சுத்தியாகும்.

இப்படிச் சுத்திசெய்யும் சமயம் கொட்டையின் பாலும், எரிக்கும் வாடையும் மேலேபடாமல் இருக்கும்பொருட்டு ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும். இதன் வாடை சில சரீரங்களுக்குப் பொருத்தப்படாமல் வீக்கத்தையும், இதன் பால் தேகத்தில் நமைச்சல், புண் முதலியவைகளை யுண்டாக்கித் தேகத்தை வீங்கச்செய்து பிராணுபத்தையும் உண்டாக்கும். இந்தக் கொட்டையையாவது பாலையாவது தனியாக உபயோகப்படுத்துவதைவிட இதர சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவது சாலச்சிறந்தது. இத்தகைய மருந்துகளை உள்ளுக்குக் கொடுக்கும்போது ரோகியின்தோல் சிவந்தாலும் சரீரத்தில் நமைச்சல் வீக்கம் முதலியவைகள் உண்டானும் உடனே நிறுத்திவிடவேண்டும். இதனை முதன்மையாகக் கொண்டு செய்யும் சில முறைகளாவன—

இடிவல்லாதி லேகியம்.

சுத்திசெய்த சேங்கொட்டை 20, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கொத்துமல்லிவித்து, வாய்விளங்கம், செவ்வியம், தக்கோலம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, வகைக்குப் பலம் $\frac{1}{2}$, எள்ளு பலம் $1\frac{1}{2}$, பனவெல்லம் பலம் 10. இவற்றுள் முதலில் பனவெல்லத்துடன் எள்ளைக்கூட்டி இடிக்கவும். அத்தருணம்

இரண்டு சேங்கொட்டைகளைப்போட்டு நன்றாய் மசியும்படியாக இடிக்கவும். இவ்வண்ணமே ஒவ்வொரு முறையும் இரண்டிரண்டு கொட்டைகளாகப் போட்டுப் புரட்டிப் புரட்டி இடித்து யாவும் ஒருங்குசேர்ந்து மெழுகுபதம்வரும் தருவாயில் மற்றச் சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டுப் போதிய அளவு நெய்யும் தேனுங்கூட்டி, இடிக்கவும். இந்தப்படிச் செய்வதில் சிரமம்பாராமல் சேங்கொட்டையினுடைய ஓடுகள் நன்றாய் மசிந்து மெழுகுபதம் வரவேண்டும். அங்ஙனம் செய்யத் தவறின் குணம் பேதப்படும். ஆகையால் பொறுமையோடு நன்றாய் மெழுகுபதம்வர இடித்துப் பத்திரப்படுத்துக. இந்த லேகியத்தில் வேளைக்குக் கழற்சிக்காய்ப் பிரமாணம், தினம் இருவேளை கொடுக்கவும். இதனால் அண்டவாதம், கிரந்தி, சூலை, அரையாப்பு, கை கால் வெடிப்பு, திமிர்தடிப்பு தீரும். இந்த லேகியத்தை உட்கொள்ளும்போது புளிதள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

வேறுமுறை.

சேராங்கொட்டை பலம் 6, பொட்டுநீக்கிய பச்சைக்கடலை பலம் 5, பறங்கிச்சக்கை பலம் 5, நெல்லிவற்றல் பலம் 3, பழைய வெல்லம் பலம் 15, சுத்தி செய்த கந்தகம் பலம் ½, இவைகளை யெல்லாம் ஒரு கல்லுரலில் போட்டுக் கடப்பாரைகொண்டு நன்றாய் மசியும்படி இடித்துப் பத்திரப்படுத்துக. இந்த லேகியத்தில் வேளைக்குச் சிறு கழற்சிக்காய்ப் பிரமாணம் காலை, மாலை ஒரு மண்டலம் கொடுத்துவரச் சகலமேகவாயு, சர்மத்திலுண்டான ஊறல்படை, கிரந்தி, விரணம் முதலியவைகள் குணமாகும். இம்மருந்தைக் கொடுக்கும்போது ரோகிக்குக் கடுகு, நல்லெண்ணெய், கைப்பு, புளிப்பு, மீன்கருவாடு, லாகிரிவஸ்துக்கள், புகைப்பானம் முதலியவைகள் சேராவண்ணம் பத்தியமாக வைத்தல் வேண்டும்.

சேம்பிலை.

(Arum Colocasia Leaves).

சேம்பிலைக்கு நற்புளியைச் சேர்த்துச் சமைத்துண்ணக்
கூம்பிட்ட மூலமுடன் கோதைநல்லாய்—தேம்பியழத்
தோக்குமூ லக்கடுப்புஞ் சொல்புன்மை ரத்தமூலம்
திக்குவிட் டோடுந் திகைத்து.

குணம்:—(இ-ள்.) செம்பிலையுடன் புளிசேர்த்துப் பாகப்படி உண்ண, வெளித்தள்ளிய மூலமும், இரத்தக்கடுப்பும் நீங்கும் என்க.

செய்கை :—மேலுக்கு-ரக்தஸ்தம்பனகாரி, உற்சாககாரி, உள்ளுக்கு-மலகாரி.

உபயோகிக்கும் முறை :—இந்தச் செடியின் இளமையான இலைகளைப் பறித்துப் பாகப்படி புளி, உப்பு இட்டு வேகவைத்துக் கடைந்து ஒரு மிளகாயைக் கிள்ளி நல்லெண்ணெயில் போட்டுக் கருத்துவரும் பதத்தில் தாளித்து அன்னத்துடன் சேர்த்து நெய் விட்டுச் சாப்பிட மூலவாயு, மூலச்சூடு, இரத்தமூலம், முளைமூலம் இவைகள் போம்.

இதன் இலைச்சாற்றை இலிங்கத்திற்கு 4 சாமம் சுறுக்குக் கொடுக்க உயர்தரமான கட்டாகும்.

சேம்புக்கிழங்கு.
(Arum Colocasia Tuber).

வாத கபத்தையுள்ளே வைத்திருக்குந் தின்றக்காற்
கோதிலாத் தொண்டைதனிற் கோழைகட்டு—மாதரசே
யுண்மருந்தி னற்குணம் தோடுஞ்சேம் புக்கிழங்கைத்
தண்மேக சாந்தியென்பர் தாம்.

குணம்:—(இ-ள்.) வாதகபதோஷத்தையுடைய சேம்புக்கிழங்கைத் தின்றால் தொண்டையில் கோழை கட்டும். நன் மருந்தின் குணமும் கெடும். இது கபத்திரவியமாகையால் மேகசாந்தி யென்பர்.

செய்கை:—மேலுக்கு—ரக்தஸ்தம்பனகாரி, உற்சாககாரி, உள்ளுக்கு—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கை நன்றாய் வேகவைத்து மேல்தோலை நீக்கிப் பொரியலாகவாவது, குழம்பிலிட்டாவது பாகப்படி சமைத்துண்பதுண்டு. இது வெட்டையைத் தணிக்கும். தாதுவிருத்தியை யுண்டாக்கும். ஆனால் வாதத்தையும் கபத்தையும் விருத்திசெய்யும்.

இதன் தண்டின் ரசத்தை ரத்தம் சொரிகின்ற காயங்களுக்குத் தடவிவர விரைவில் ஆறும், ரத்தம் மேற்கொண்டு சொரியாது. இதைக் காதில் இரண்டொரு துளிவிட்டுப் பஞ்சடைத்து வைக்கக் காதுவலியும் நிவர்த்தியாகும். இதைக் குளவி, பூரான், வண்டு

முதலிய விஷப்பூச்சுகளின் கடி, அல்லது கொட்டுவாயில் வைத்துத் தேய்க்க விஷம் இறங்கும்.

சொத்தைப்பாக்கு.

(Soththaippakku).

சொத்தைப் பிளவிடித்துத் தோயமதி லூறவிட்டுச்
சத்துவர நூறுவிசை தான்கழுவி—வைத்துலர்த்தி
வாசமமைத் துத்தின்ன மந்தமொடு தோடமறுந்
தேசு மழகுமுறுஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) சொத்தைப்பாக்குகளை இடித்து, நல்ல சலத்தில் ஒருநாள் ஊறவைத்து நூறுதரங் கழுவி உலர்த்தி, அதில் வால்மிளகு முதலிய வாசனைத்திரவியங்களைக் கலந்து, தாம்பூலந் தரித்துக்கொள்ளில், அக்கினிமந்தமும், திரிதோஷமும் நீங்கும். இன்னும் ஒளியும் அழகும் உண்டாகும். அங்ஙனம் செய்யாவிடில் துர்க்குணத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சுத்திசெய்ததற்கு ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகத்தை இச்செய்யுளின்கண் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றது.

சோகிக்கீரை.

(Peucedanum Graveolens Leaves).

உந்தி ருதுச்சூலை யுற்ற குடல்வாதம்
மந்தம் பசியின்மை மாண்டுபோம்—சிந்தைகொண்
டுகிக்கப் பித்த முறுதீயுறும் பெண்மணியே
சோகிக்கீ ரைக்கெனவே சொல்.

குணம்:—(இ-ள்.) சோகிக்கீரையினால் ஸ்திரீகளுக்கு உண்டாகின்ற சூதகச்சிக்கல், குடலில் சஞ்சரிக்கின்ற வாயு, செரியாமை, பசியின்மை ஆகிய இவைகள் போம். ஆனால் பித்தத்தையுண்டாக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையை ஆட்டிறைச்சியுடனாவது அல்லது துவரம்பருப்போடாவது கூட்டிப் பாகப்படி சமைத்துண்பதுண்டு. இது வயிற்றிலுண்டான வாயுவை நன்றாய்க் கண்டிக்கும், பசிதீபனத்தை யுண்டாக்கும், ஸ்திரீகளுக்குக் கட்டுண்ட உதிரச்சிக்கலை நீக்கும், சிறுகுடலைச் சுத்திசெய்து அங்கிராநின்ற

வாயுவையும் வெளியாக்கும். இதற்குப் பித்தம் செய்யும்படியான குணமுண்டு. அப்போது தலைகிறுகிறுப்பு, அரோசகம் முதலிய வைகள் காணும். அதனால் விவேகம் உடைய ஸ்திரீகள் தனிக் கீரையை உபயோகப்படுத்தாமல் அதனுடன் புளிச்சக்கீரையையும் சேர்த்துச் சமைப்பதுண்டு. அதனால் அதன் துர்க்குணம் மாறும்.

சோம்பு.

(Pimpinella Anisum Seeds).

யோனிநோய் குன்ம முருட்சைமந் தம்பொருமல்
பேனமுறு காசம் பிலீகமிரைப்—பீனவுரை
சேர்க்கின்ற வாதமும்போஞ் சீர்பெரிய சீரகத்தான்
மூக்குநோ யில்லை மொழி.

குணம்:—(இ-ள்.) பெருஞ்சீரகம் என்று சொல்லப்பட்ட சோம்பினால் வாமினியோனிரோகம், வயிற்றுவலி, சுரம், அசீரணம், வயிற்றுப்பிசம், நுரைத்த கபஇருமல், பிலீகம், சுவாசம், தொனி கத்தகவாதம், அதிதும்மற்பீநசம் இவைகள் போம் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, இலகுமலகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 5-15 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டித் தினம் 3 வேளை கொடுக்க அஜீரணம், வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி முதலியவற்றைக் கண்டித்து மலத்தையும் போக்கும். இது விசேஷ மாகக் குழந்தைகளுக்கே வெகு உத்தமமானது. ஒரு வீசை சோம்புக்கு 10 படி வெந்நீர்விட்டு ஒரு இரவு ஊறப்போட்டு மறுநாள் வாலையைச் செருகி அடுப்பிலேற்றி எரித்து 4 படி அளவிற்கு தீநீர் வாங்கி வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் கருப்பிணிகளுக்குக் கொடுத்துவர மலஜலங்களைக் கிரமமாகப் போக்கித் தேகபளுவைக் குறைக்கும். இதன் தைலத்தில் வேளைக்கு 5-10 துளி சலத்தில் விளாவிக் கொடுக்கலாம்.

சோளம்.

(Holcus Saccharatus—White).

சோளமெனப் பேர்படைத்த சோறுகளி னுலுடலில்
மீளச் சொறிசிரங்கும் விர்த்தியா—நாளுங்
கரப்பனுமுண் டாகுங் கனமருந்தும் பாழாம்
பரப்பனைய கண்மாதே பார்.

குணம்:—(இ-ள்.) பொதுவாகச் சோள சோற்றினால் தினவும், விரணமும், கரப்பானும் அதிகரிக்கும். நல்ல அவிழ்தமும் கெடும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைக் குத்திப் புடைத்துத் தவிடு நீக்கி அன்னமாகச் சமைத்துண்பதுண்டு. அல்லது இயந்திரத்திலிட்டு மாவாக அரைத்து ரொட்டியாகச் சுட்டுச் சாப்பிடுவதுண்டு. இது விரைவில் ஜீரணமாகாது. கரப்பான், சொறி, சிரங்கு இவைகளை யுண்டாக்கும், தேஜஸையும் கெடுக்கும். இதுவுமன்றி இவற்றில் கருஞ்சோளமென்றும், செஞ்சோளமென்றும் இரண்டு இனங்கள் உண்டு. இவைகள் யாவும் மேற்கூறப்பட்ட வெண் சோளத்தின் குணத்திற்கு ஒத்தே இருக்கும். அதனைக் கீழ்க்கண்ட செய்யுட்களால் கண்டுணர்க.

கருஞ்சோளம்.

(Holcus Saccharatus—Black).

சொறியைச் சிரங்கைத் தொலையாத புண்ணை
மறுவிலா மெய்யில் வளர்க்குங்—குறியா
வழகைக் கெடுக்கு மசதியையுண் டாக்கும்
பழகுகருஞ் சோளமது பார்.

(இ-ள்.) கருஞ்சோள அரிசி நமைச்சல், கிரந்தி, விரணம், அயர்வு இவைகளை யுண்டாக்கும். அழகைக் கெடுக்கும் என்க.

செஞ்சோளம்.

(Holcus Saccharatus—Red).

செஞ்சோளம் தின்றாற் சிறுசிரங்கு புண்ணுகளும்
விஞ்சு மெழிலான மேனிகெடும்—செஞ்சேரிந்து
மந்தமிகுந் தீபனம்போ மாறாக் கரப்பானுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

(இ-ள்.) செஞ்சோள அரிசியால் அற்ப கிரந்திகள், விரணங்கள், மந்தரோகம், கரப்பான் இவைகள் அதிகரிக்கும். சரீர அழகும், பசியும் விலகும் என்க.

தக்கோலம்.

(Calyptranthes Jambolana).

பாண்டுசுரம் போகும் பகரிற் பலஞ்சேருந்
தீண்டுமுப யாசியமுந் தீருங்கா—ணீண்டதொரு
தாதுவிர்த்தி யாகுந் தளர்ந்தமல முங்கட்டுங்
கோதகலுந் தக்கோலங் கொள்.

குணம்:—(இ-ள்.) தக்கோலத்தினால் பாண்டு நோய்ச் சுரமும், இருவித ஆசிய வாதங்களும் போம். பலமும், வீரியமும், மலக் கட்டும் உண்டாம் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சூரணம் செய்து வேளைக்கு 5-10 குன்றி எடை சர்க்கரையுடனாவது தேனுடனாவது கலந்து கொடுக்கலாம். இதனால் மலம் கட்டும், சுரம் தணியும், நீரிறங்கும். இதை விசேடமாகத் தாதுவிர்த்திக்குரிய லேகியங்களில் சேர்ப்பதுண்டு. இதைத் தனியாகக் கொடுப்பதைவிட இதரச் சரக்குகளுடன் கூட்டிக்கொடுப்பது அதிக நன்மையைப் பயக்கும். எங்ஙனமெனில்—

தக்கோலாதிக் கியாழம்.

தக்கோலம், சிறுதேக்கு, வாய்விளங்கம், வால்மிளகு, கடுகுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, கிராம்பு, தான்றிக்காய், கசகசாத் தோல் வகைக்கு விராகனெடை ஒன்றாக இடித்து 1 படி சுத்த சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் தினம் 3 வேளை 3 நாள் கொடுக்க கிராணி, மாந்தபேதி, சுரக்கட்டி, விஷதோஷம், இழுப்பு, சோகை, காமாலை, சுரம், கோழைக்கட்டு, பித்தகணம், பாண்டு தீரும்.

தட்டைப்பயறு.
(Dolichos Catiang).

தட்டைப் பயிற்றைத் தகவாப் புசித்திடவே
மட்டில்லா வாதம் வளர்ந்திடுமால்—கட்டாகும்
மந்தங் குடல்வலியும் வன்மை யுறுஞ்சன்னி
சோந்தமெனத் தான்வருத்துஞ் சோல்.

குணம்:—(இ-ள்.) தட்டைப்பயிற்றினால் அக்கினிமந்தமும், வாயுவும், சந்நிபாதமும் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பயற்றை வேகவைத்து, உப்பு இட்டுத் தாளித்து உண்பதுண்டு. இது வாய்க்கு ருசியாக இருப்பினும் வாயு, மந்தம் முதலியவற்றை உண்டாக்கும். ஆகையால் ஏதோ ஒரு சமயம் பிரியப்பட்டபோது கொள்ளலாம்.

இந்த இனத்தில் பெரும்பயறுக்கு காராமணியென்றும், சிறுபயறுக்கு தட்டைப்பயறென்றும் பெயர். இவ்விரண்டிற்கும் குணம் ஒன்றே.

தண்ணீர்விட்டான்கிழங்கு.

(Asparagus Racemosus Root).

நீரிழிவைப் போக்கு நெடுநாட்சு ரத்தையெலா
மூரைவிடுத் தோட வுறுக்குங்காண்—நாரியரே
வெண்ணீர்பெய் சோமநோய் வெட்டை யனற்றணிக்குந்
தண்ணீர்விட் டான்கிழங்கு தான்.

குணம்:—(இ-ள்.) தண்ணீர்விட்டான்கிழங்கு வெகுமூத்திரம், பழைய சுரம், சோமரோகம், வெள்ளை, உட்சூடு ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி, அங்காகர்ஷணநாசினி, க்ஷீரவர்த்தினி, தாதுக்ஷீண ரோதி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த கிழங்கை இடித்துச்சூரணம் செய்து வேளைக்கு 1-2 விராகனெடை நெய், சர்க்கரை, பால் இவைகளில் இட்டுத் தினம் 3 வேளை கொடுக்கலாம். அல்லது பச்சைக் கிழங்கை இடித்துப் பிழிந்த சாற்றில் வேளைக்கு $\frac{1}{4}$—$\frac{1}{2}$ அவுன்ஸ் அளவு பால், சர்க்கரையிட்டுக் கொடுக்கலாம். இதனால் நீர்கடுப்பு, எலும்புருக்கி, மேகக்காங்கை, கைகால் எரிவு, சுக்கிலப்பிரமேகம், தாதுபலவீனம், கரப்பான் முதலிய வியாதிகள் போம். தேகபுஷ்டியுண்டாகும். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிச்செய்வதுமுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

சதாவேரிக்கிருதம்.

தண்ணீர்விட்டான்கிழங்கின் சாறு படி 3, குழிமீட்டான் கிழங்குச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, சாம்பற்பூசனிக்காய்ச்சாறு, கரும்புச்சாறு வகைக்கு படி $\frac{1}{4}$, பசுவின்நெய் படி 1 இவைகளை ஒரு பழகின மட்பாண்டத்தில் விட்டு அடுப்பிலேற்றி உடனே சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெப்பாலை யரிசி, கொத்துமல்லிவித்து, ஏலம், கிராம்பு, லவுங்கப்பத்திரி, சிறு நாகப்பூ, சீரகம், விலாமிச்சம்வேர், அதிமதுரம், கூகைநீர், திராட்சை, பேரீச்சங்காய், இந்துப்பு, ஓமம், கோரைக்கிழங்கு, சிறுதேக்கு, கோஷ்டம், சந்தனத்தூள் வகைக்கு விராகனெடை $\frac{3}{4}$ ஆக இடித்துச் சூரணம்செய்து பால்விட்டரைத்து போட்டுக்கலக்கிப் பொங்காமல் சிறுக எரித்துப் பதமுறக்காய்ச்சி, வடித்து வைத்துக் கொள்க. இந்தக் கிருதத்தில் வேளைக்கு 2-2$\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு

அந்திசந்தி கொடுத்துவர, நீர்கட்டு, நீர்எரிச்சல், எலும்புருக்கி, மேக சுரம், கைகால் எரிவு நீங்கும், தேகம் புஷ்டி பெறும், தாது இறுகும்.

வேறுமுறை.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு படி ½, பசுவின் நெய் படி ½ இவைகளை ஒரு பழகின வாயகன்ற மட்பாண்டத்தில் விட்டு, அதனில் அத்திவிதை, அரசம்விதை, ஆலம்விதை, நிலப்பனங்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகனெடை 1 ஆக இடித்துச் சூரணம் செய்து பசுவின்பால் விட்டரைத்துப் போட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாகப் பொங்காமல் எரித்துப் பதமாகக் காய்ச்சி வடிகட்டிப் பத்திரப்படுத்துக. இந்த நெய்யை வேளைக்கு 2 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை கொடுத்துவர மேகக்காங்கை, இரத்தக்காசம், உடல்வற்றல், நாவுலர்தல், கைகாலெரிவு இவைகள் நீங்கித் தேகம் புஷ்டிபெறும்.

தபாக்கரிசி.

(Tapioco).

பித்த மதிகரிக்கும் பேச மலமிளகும்
மெத்தப் பலமுண்டாம் மேற்றிசையில்—சுத்தமுறப்
பண்ணுந்த பாக்கரிசி பாலார்ந்தக் கஞ்சியதை
உண்ணுமவர்க் குண்டா முயர்வு.

குணம்:—(இ-ள்.) தபாக்கரிசியினால் தேகபுஷ்டி யுண்டாகும். ஆனால் சிறிது பித்தம் அதிகரிப்பதுடன் மலத்தை இளகலாகப் போகச்செய்யும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நன்றாய் இடித்துச் சல்லடையால் சலித்து மாவாகச் செய்துவைத்துக்கொண்டு வேண்டும்போது சிறிது ஜலத்தில்போட்டுக் கஞ்சியாகக் காய்ச்சிப் பசுவின்பால்விட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிக் குழந்தைகளுக்குக் கொடுப்பதுண்டு. இது அக் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரமாகவும், தேக புஷ்டிக்குச் சிறந்ததாகவும் காணப்படுகிறது. இந்த உணவு சில குழந்தைகளுக்கு ஏற்றுக்கொள்ளாமல் பேதியை உண்டாக்கும். அத்தகைய குழந்தைகளுக்குக் கொடுக்காமல் நிறுத்திவிடுவதே உத்தமம். இந்த உணவை ஜீரணசக்தி குறைந்தவர்கள் எப்பருவத்தினராயினும் உட்கொள்ளத் தேகபுஷ்டிக்குச் சிறந்ததாகும்.

இந்த இனத்தில் இரண்டு வகையுண்டு. ஒன்று வெண்மையாகவும், மற்றொன்று சிறிது சிவந்து மிருக்கும். இது நெல், கேழ்வரகு, சோளம் முதலியவற்றைப் போல் புற்களில் உண்டாகும் அரிசியன்று. மரவள்ளிக்கிழங்கு முதலியவற்றைப்போன்ற மாவுள்ள வஸ்துக்களிலிருந்து தயார் செய்யப்படுகின்றது. இது வில்லைகளாகவும், மாவாகவும் கிடைக்கும்.

தமர்த்தம்பழம்.

(Averrhoa Carambola Fruit).

தீதில் தமர்த்தமெனச் செப்புகனி யுண்ணுங்கால்
வாதபித்தம் வாதகபம் வாந்தியோடு—பேதமுறுங்
சித்தப் பிரமையுடன் சீறுகண் ணோய்போக்கும்
இத்தரையில் மாதே யிசை.

குணம்:—(இ-ள்.) தமர்த்தம்பழத்தினால் வாதபித்தம், வாதகபம், வாந்தி, பயித்தியம், கண்ணோய் இவைகள் போம் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—முதிர்ந்த காயைப் பச்சையாகத் தின்பதுடன், குழம்புகளில் புளிக்குப்பதிலாக இதைப்போட்டுச் சமைத்து உண்பதுண்டு. இது வாய்க்கு அதிக ருசியாக இருக்கும். இன்னும் இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஊறுகாயாகப் போடுவதுமுண்டு. நன்றாய்ப்பழுத்த பழத்தை இடித்துச் சாறு எடுத்து 4 பங்கு சர்க்கரைகூட்டிச் சர்பத்தாகக் காய்ச்சி வேளைக்கு ஒரு தோலா வீதம் உட்கொள்வதுண்டு. இத்தகைய பிரயோகங்களினால் உண்ட உணவு எளிதில் ஜீரணிக்கும். வாந்தியும் பித்தமும் விரைவில் சாந்தப்படும்.

தராயிலை.

(Pharnaceum Molugo Leaves).

புண்கிரந்தி கட்டி பொருசந்நி கீடமும்போங்
கண்புகைச்சல் காசங் கதிக்குமென்பார்—பெண்களுக்குப்
பாலும் பெருகுமுள்ளே பற்றுதிரச் சிக்கல்விடு
மேலுந் தராவினிலைக் கே.

குணம்:—(இ-ள்.) தராயிலைக்கு விரணம், கிரந்தி, வித்திரிதிக் கட்டி, சந்நிபாதம், எரிகிருது இவைகள் போம். நேத்திரப் புகை, கண்காசம் இவைகள் உண்டாகும். இன்னும் மாதாந்திர உதிரச்

சிக்கலை நீக்குவதுடன் முலைப்பால் விருத்தியை உண்டாக்கும் என்க.

(இதுவுமது)

பாலிராக் கொங்கைகளிற் பாலாங் கருப்பப்பை
மூலை யுறையழுக்கு முன்பிழியும்—மேலிலெழுத்
தம்பமெனத் தங்குஞ் சலன மரோசகம்போம்
பம்பந்த ராயருந்திப் பார்.

(இ-ள்.) பம்பந்தராயினால், பிரசவ அழுக்கும், எஃகு ஸ்தம்பம் போற்றடிக்கின்ற வாதரோகமும், அருசியும்போம். பால் வற்றிய ஸ்திரீகளுக்குப் பால் விருத்தியாகும் என்க.

செய்கை:—பலகாரி, மலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை நன்றாய் அரைத்து விரணம், கிரந்தி, பிளவை, கட்டி இவைகளுக்குப் போட விரைவில் ஆறும். இந்த இலையை அரைத்துச் சிறிது கொட்டைப் பாக்களவு தினம் இருவேளை 3 நாள் ஸ்திரீகளுக்குக் கொடுக்க மாதாந்தர காலத்தில் உண்டாகின்ற உதிரச்சிக்கலை நீக்கும். இந்த இலையை உப்பிடாமல் கடைந்து சிறு எலுமிச்சம்பழப் பிரமாணம் தினம் ஒருவேளை 3நாள் ஸ்திரீகளுக்குக் கொடுக்க உதிரக் கட்டை வெளியாக்கும். ஒருகால் விரைவில் குணம் ஏற்படாவிடில் மீண்டும் இரண்டொருநாள் கொடுக்கவேண்டும். இதனுடன் சிறிது மிளகு சேர்த்தரைத்துச் சிறு அளவாகப் பாலூட்டும் மாதர்க்குக் கொடுக்கப் பால்சுரப் பதிகரிக்கும். இதனைக்கொண்டு வெண்குட்ட ரோகத்திற்கு மாத்திரை செய்துகொடுப்பதுண்டு. இதனைக் காட்டுச் சீரகத்தின் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

குறிப்பு:—தராவிற்கும், பம்பந்தராவிற்கும், சிறிது பேதமுண்டு. தராவானது படர்ந்து கொடியாக ஓடுவதுடன் சிறிய இலைகளைப் பெற்றிருக்கும். பம்பந்தராவானது தரையில் அதிகம் படராமல் இலைகள் சிறிது பெருத்திருக்கும். இவை இரண்டிற்கும் ஏறத்தாழக் குணங்கள் ஒன்றே.

தருப்பைப் புல்.
(Poa-Cynosuriodes).

தோடஞ் சிறியவிடஞ் சோராக்க பப்பெருக்கஞ்
சாடுஞ் சகலசுரந் தாகமிவை—யோடு
மரிப்பு மகலு மடல்வேள்வி கட்காந்
தருப்பையெனும் புல்லுக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) தருப்பைப் புல்லுக்குச் சப்ததோஷம், அற்பவீரியவிஷம், கபாதிக்கம், சர்வசுரம், தாகம், நமைச்சல் முதலிய நீங்கும். இது யாகங்கட்குமா மென்க.

செய்கை:—சங்கோசனகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு தோலா குசதர்ப்பையை ஒன்றிரண்டாயிடித்து, ஒரு பழகிய மட்குடுவையிற்போட்டு, 20 தோலா கொதிநீரை விட்டு 3 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு, வேளைக்கு ½ அல்லது ¾ அவுன்ஸ் வீதம் இரண்டு, மூன்று வேளை கொடுக்கச் சிறுநீரை யதிகப்படுத்தும், இரத்தப் போக்கைத் தடுக்கும். இதை விசேஷமாகப் பெரும்பாடு ரோகத்திற்கும், சீதபேதிக்குங் கொடுப்பதுண்டு. இதன் வேருக்குச் சிறுநீரிலுள்ள மாசுகளை வெளித்தள்ளும் குணம் உண்டு.

தவசுமுருங்கையிலை.

(Justicia Tranquebariensis—Leaves).

தவசு முருங்கைத் தழையதற்குக் கேளா
யவசியம் பீநசமுண் ணுக்கு—முவசர்க்கி
யையஞ்சு வாசகப மண்டாது குற்றிருமல்
வையம்விட் டேகும் வழுத்து.

குணம்:—(இ-ள்.) தவசுமுருங்கையிலைக்கு வாதபீநசம், உபஜிக்வாரோகம், தொந்தநோய், கபம், சுவாசகாசம், பொடி இருமல் இவை நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலைச்சாற்றை வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுத்துவர இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள ரோகங்கள் நீங்கும். இது தேகத்தின் வெப்பத்தைத் தணிப்பதுடன் மலத்தை இளகலாகப் போகச் செய்யும். பெரும்பாலும் இதன் சாற்றை அம்மை கண்டு இறக்குமுகமாக இருக்கும் சமயம் குழந்தைகளின் பருவத்திற்கு ஏற்றவாறு ½-1 தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை கொடுத்து வர அதிக நன்மையைத் தரும். இதன் இலையை வதக்கி அடிபட்ட வீக்கத்திற்கும் காயங்களுக்கும் வைத்துக்கட்ட உடனே சாந்தப்படும்.

தவனம்.

(Artemisia Austriaca).

கக்கிருமல் காசம் கனத்தருது சூலையோடு
மிக்க வெழுமந்தம் வீக்கமிவை—மக்கட்குத்
தீதே புரிந்திடினும் சீர்மேவுஞ் நற்றவனம்
மாதே யொழிக்குமவர் மாட்டு.

குணம்:—(இ-ள்.) பெருமைபொருந்திய நல்ல தவனத்தால் குழந்தைகட்குக் காணுகின்ற கக்குவாய் இருமல், கபத்தோடு நிறைந்த காசரோகம், சூசிகாவாதம், அஜீரணம், வீக்கம் முதலிய வைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹாரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் மருக்கொழுந்து என்னும் தவனத்தை ஒரு பீங்கான் கோப்பையில் போட்டு 10 பலம் கொதிக்கின்ற ஜலத்தை விட்டு வாய்மூடி 2 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்து வரத் தீபனத்தை யுண்டாக்கி வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். இன்னும் மாதர்களுக்கு வீட்டு விலக்குக் காலங்களில் தடைப்பட்டுள்ள உதிரச் சிக்கலை வெளியாக்கும். இவைகளுமல்லாமல் இக்கியாழத்தை உட்கொள்ளும்போது உற்சாகமும் தேக பலமும் உண்டாகும். இதன் இலையைக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு 10-15 துளி வயதிற்கேற்றவாறு முலைப்பாலில் கலக்கித் தினம் 3 வேளை குழந்தைகளுக்குக் கொடுத்துவரக் கக்குவாய் இருமலைக் குணப்படுத்தும். இதன் இலையை அரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து இரவி முகத்தில் சில நாள் வைத்துச் சொறி சிரங்கு இவைகட்குத் தடவிவர ஆறும். இதன் இலையை வதக்கி நோயுள்ள இடங்களில் ஒற்றடம் போடுவதினாலாவது அல்லது வைத்துக் கட்டுவதினாலாவது நோய் நீங்கும்.

தழுதாழையிலை.

(Clerodendron Phlomoides—Leaves).

வாதப் பிடிப்பென்ற வற்காலி யைப்புலிபோற்
போதப் பிடிக்கும் புகலவற்றே—காத
அழுதாழைப் பீநசத்தை யண்டா தகற்றுந்
தழுதாழைப் பன்னமது தான்.

(இதுவுமது)

சேர்ந்த சொறிசிரங்கைத் திண்வாதக் கூட்டத்தை
யாய்ந்தொழிக்கும் பித்தை யழைக்குமந்த—மோய்ந்திடா
ஐயின் சுரந்தணிக்கு மானதழு தாழையது
மெய்யின் கடுப்பகற்றும் விள்.

குணம்:—(இ-ள்.) தழுதாழையிலையால், பங்குவாத முதலிய 80 வாத ரோகங்கள், சிலேஷ்ம பீநசம், புடை, கிரந்தி, ஆவிருத வாதங்கள், மந்த கடாசுரம், தேகக் குடைச்சல் இவைகள் நீங்கும். இது பித்தத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—தனித் தழுதாழையையாவது, அல்லது அதனுடன் நொச்சி, வாதநாராயணன் இலையைக் கூட்டியாவது சுத்தமான சலத்தில் போட்டுக் காய்ச்சி அந்த சலத்தைப் பொறுக்கக்கூடிய உஷ்ணத்தில் தோள், முழங்கால், கீல்கள் முதலிய இடங்களில் உண்டாகின்ற வலி, வீக்கம் இவைகட்குத் தாரையாக மேல் விட்டு அதன் பின் நன்றாய்த் துடைத்துவிட்டு விளக்கெண்ணெய் பூசிப் பிடிக்கவும். இப்படிச் சில தினம் செய்யக் குணமாகும்.

தழுதாழை இலை, ஊமத்தம் இலை, நொச்சி இலை இம் மூன்றையும் சமனெடையாக அம்மியில் வைத்து அரைத்து ஒரு கரண்டியில் நல்லெண்ணெய் விட்டு அதனில் போட்டுக் களிபோல் கிளறி, ஆறவிட்டுத் தாளக்கூடிய சூட்டில் ¼ ரூபாய் எடை பொரித்த வெங்காரம் போட்டுப் பிசறிக் கணுக்களிலுண்டாகும் வீக்கம், வலி, பிடிப்பு இவைகட்கு வைத்துக் கட்டிக்கொண்டுவரக் குணமாகும். இன்னும் இது வாதரோகங்களுக்காகக் கூறப்பட்ட பிடித்தைலங்களிற் சேரும்.

தாமரைக்கிழங்கு.

(Nelumbium Speciosum—Tuber).

கண்ணுக் கொளிகொடுக்குங் காசபித் தம்போக்கு
மெண்ணுங் குளிர்ச்சிதரு மேந்திழையே—மண்ணுலகிற்
றாமரைப்புண் ணும்போக்குந் தொந்திக் கடுப்பகற்றுந்
தாமரைக் கந்தமது தான்.

குணம்:— (இ-ள்.) தாமரைக்கிழங்கு நேத்திர ஒளியையும், குளிர்ச்சியையும் தரும். பித்த காசம், மாமிச தாதுவைப் பற்றிய தவளைச்சொறி, வயிற்றுக்கடுப்பு ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—அரை தோலா எடையுள்ள கிழங்கை மேற்றோல் சீவிக் கழித்து ஆவின்பால் விட்டரைத்துப் பாலில் கலக்கிச் சில தினம் கொடுத்துவர மேகவெட்டை, நீர்கிரிச்சரம் தீரும். தேகம் குளிர்ச்சி பெறுவதுடன் தேக காந்தியும், கண் ஒளியும் மிகும். இந்தக் கிழங்கை ஆவின்பால் விட்டரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து பதமுறக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துகொண்டுவரக் கண்களின் எரிச்சலையும், கண்ணீர்முட்டலையும் குணப்படுத்தி, கண்களுக்குப் பிரகாசத்தை யுண்டாக்கும்.

* தாமரைப்பூ.

(Nelumbium Speciosum—Flower).

பருத்தநற் றமரைப்பூ பல்வாந்தி நோயைத்
துரத்திவிடு மின்னுஞ் சொலவோ—கரத்தி
லெடுத்தணைக்கக் கண்குளிரு மேகுஞ் சுரமு
மெடுத்த விதாகமும்போ மெண்.

குணம்:—(இ-ள்.) தாமரைப்பூ, பலவிதமான வமனரோகம், வெப்பத்தாற் பிறந்த விழிஎரிச்சல், சுரம், விதாகம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சமனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ பலம் புஷ்பத்தை $\frac{1}{2}$ படி சுத்த சலத்தில் போட்டு வேகவைத்து $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிழிந்து வடிகட்டி அதனை 2 வேளையாகக் கொடுக்கத் தேகச் சூட்டைத் தணிக்கும். அல்லது நிழலில் உலர்த்திய ஒரு வீசை தாமரைப்பூவை ஒரு மட்பாண்டத்தில் போட்டு 10 படி சுத்த சலம் விட்டு ஓர் இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் வாலைசெருகி அடுப்பிலேற்றித் தீநீராக 10 புட்டிக்குக் குறையாமல் பிடித்து வைத்துக்கொள்க. வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்க, இருதயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். உட்சூடு, தாகம் முதலியவற்றைத் தணிக்கும்.

இப்படி விடாமல் 10-15 தினம் கொடுத்துவர நித்திரைபங்கம், சொப்பன ஸ்கலிதம், தேகத்தின் உள்ளும் புறமும் உள்ள புண்கள், பித்தத் தலைவலி, மார்புவறட்சி, இருமல் முதலியவைகள் குணமாகும். நீடித்துக் கொடுக்குங்கால் போகசக்தி குன்றும்.

* இங்குக் கூறப்பட்ட குணங்கள் செந்தாமரைக்கென்றே யுணர்க.

தாமரையிலே.

(Nelumbium Speciosum—Leaves).

தாமரைப்பன் னத்திலுண்டாற் ருங்கரிய வுட்டினமா
நாமவா தஞ்சினந்து நண்ணுங்காண்—தூமமுரு
வக்கினிமந் தங்களுண்டா மன்றே மலர்த்திருவத்
திக்கினிலி ராளெனவே தேர்.

குணம்:—(இ-ள்.) தாமரையிலேயிற் புசிக்கில், வெப்பமும், வாதரோகமும், மந்தாக்கினியும் உண்டாகும். சம்பத்து நீங்கிவிடும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலேயானது புஷ்பம், கிழங்கு இவைகளுக்குண்டான குணங்களுக்கு முற்றிலும் விரோதமானது. ஆகையால் இதனை உபயோகப்படுத்தாமலிருப்பதே சிறந்தது. இந்த இலே பார்ப்பதற்கு அழகாக இருப்பதினுல் சில இடங்களில் பிரசாதங்களேவைத்து உண்பதுண்டு. இது ஆரோக்கியத்திற்கு நன்றன்று. இதன் இலேயை சுரரோகிகளுக்குப் படுக்கையாகப் போடுதலினுல் சுரத்தின் வேகமும் எரிச்சலும் அடங்கும்.

தாமரைவித்து.

(Nelumbium Speciosum Seeds).

மந்தத் துவமகற்றும் வல்லருசி நீக்கிவிடு
மந்தத் துறைதாது விற்கடலே—தந்திடும்பின்
னுன்னிலின்னுந் தோடகுண மியாவுமோட்டுஞ் சலசந்
தன்னிலண் ணுங்கிரவுஞ் சம்.

குணம்:—(இ-ள்.) தாமரை விதையானது அலசத்தையும் அருசி முதலிய சகல நோய்களேயும் நீக்கும். கடைத்தாதுவாகிய சுக்கிலத்தை விருத்தி செய்யும் என்க.

செய்கை:—பலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வித்திலுள்ள பருப்பை வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ விராகனெடை பசுவின்பாலில் அரைத்துப் பாலில் கலந்து தினம் 2 வேளை கொடுக்க சுக்கிலத்தை விருத்தி செய்யும். தேகத்தின் வெப்பத்தை ஆற்றும். இதனைப் பல தாதுவிருத்தி லேகியங்களில் சேர்ப்பதுண்டு.

இதன் வித்துச் சூரணத்துடன் சமனெடை ஆமையோடு பற்பம் கூட்டி வேளைக்கு மூன்று குன்றி எடை முலைப்பாலில் அனுபானம் செய்து இரண்டு மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை உள்ளுக்குக் கொடுக்க விக்கல் குணமாகும்.

தாமரைக் கொட்டையின் பருப்பு, மண்குளவிக்கூண்டு, எருமைச்சாணியிலிருந்து பிழிந்தெடுத்த நீர், இம் மூன்றையும் நன்றாய் அரைத்துத் தேன்விட்டுக் குழைத்து அடிக்கடி நாவில் தடவிக்கொண்டு வர வாந்தி, விக்கல் முதலியவைகள் குணமாகும்.

தாழைமரம்.

(Pandanus Odoratissimus).

மடிச்சோற்றுன் மங்கையர்க்கு மாதாந்தப் பூப்பாம்
வெடிச்சப்பூ வாற்பசியு மீறும்—தடிச்சமுளை
சுக்கிலத்தை நெய்யைத் துலக்குவிக்குஞ் சோபையெனு
மக்குலத்தை நீக்கு மறி.

குணம்:—(இ-ள்.) தாழைச் சோற்றினல் மாதர்க்குச் சோணிதம் விகுணமின்றி யுண்டாம். பூ தீபாக்கினியைத் தரும். விழுதுவிந்துவையும் இரத்தத்தையும் பிரகாசப்படுத்தும், சோபாரோகக் கூட்டங்களை நீக்கும் என்க.

செய்கை:—சுவேதகாரி, உற்சாககாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பூவை மாதர்கள் கூந்தலில் அணிவதுண்டு. இதனல் மிகுந்த வனப்பும் மணமும் உண்டாகும். இதன் விழுதை இதரச் சரக்குகளுடன் கூட்டி தைலமாகக் காய்ச்சுவதுண்டு. எங்ஙனமெனில்—

தாழைத் தைலம்.

தாழைவிழுதுச்சாறு, பசுவின்பால், நல்லெண்ணெய் வகைக்கு படி 1 ஆகத் தைலபாண்டத்தில் விட்டுக் கலக்கி அதில் மூங்கில் இலை, சிந்தல்கொடி, சிற்றாமுட்டி, விலாமிச்சம் வேர் வகைக்குப் பலம் 2½, தக்கோலம், வெட்டிவேர், தேவதாரம், சந்தனம், கோஷ்டம், அகில், அரத்தை, அசுவகெந்தி, சாம்பிராணி, குங்குமப்பூ, அதிமதுரம், நன்னாரி, சடாமாஞ்சில், மரமஞ்சள், சதகுப்பை, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம் வகைக்குக் கழஞ்சு 1 ஆக இடித்துப் பசுவின்பால் விட்டு அரைத்துக் கலக்கி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமாகக் காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்துக. இந்தத் தைலத்தை ஸ்திரீகள் சிரசிற்கிட்டு ஸ்நானம் செய்துவரச் சோணித வாதம் குணப்படுவதுடன் பல வாதரோகங்களும்போம்.

குறிப்பு:—இந்த இனத்தில் வெண்தாழை என்றும் செந்தாழை என்றும் இருவகையுண்டு. அவற்றுள் இங்குக் கூறப்பட்டது வெண்தாழையேயாகும். விசேடமாக அவிழ்தபாகங்களில் செந்தாழையே உபயோகப்படுகின்றது. இன்னும் இது சம்பந்தமான சிலமுறைகளைச் செந்தாழையின் தலையங்கத்தின் கீழ்க்கண்டுணர்க.

தாளிசபத்திரி.

(Flacourtia Cataphracta).

நாசி களப்பிணிக ணட்பட்ட காசஞ்சு
வாச மருசி வமனங்கால்—வீசிவரு
மேகமந்த மத்திசுரம் விட்டேகுந் தாளிசத்தா
லாகுஞ் சுகப்பிரச வம்.

குணம்:—(இ-ள்.) தாளிசபத்திரியால் பீநசம், களரோகம், நாட்சென்ற இருமல், இரைப்பு, அரோசகம், வாந்தி, வாயு, சீழ்ப்பிரமேகம், அஜீரணம், அஸ்திதாதுகச்சுரம் ஆகிய இவை போம். சுகப்பிரசவம் உண்டாம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் தனிச் சூரணத்தை வேளைக்கு 5-10 குன்றி எடை தேனுடனுவது அல்லது வேறு கபத்தை நிவர்த்தி செய்யும் சரக்குகளுடனுவது கலந்து கொடுத்துவர நுரையீரலில் உள்ள மாசுகளை விலக்குவதுடன் நீடித்த ஈளை, இருமல் முதலிய ரோகங்களை எளிதில் குணப்படுத்தும். இன்னும் இது பித்தம், பித்தசுரம், அரோசகம் முதலியவற்றை நீக்கிப் பசி தீபனத்தை யதிகப்படுத்தும். இதனுடன் இதரச் சரக்குகளைக் கூட்டிப் பல சூரணம், வடகம் முதலியவைகளாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

தாளிசபத்திரி சூரணம்.

தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கூகைநீர், சிறுநாகப்பூ, ஏலம் இவைகளைச் சமனெடையாகப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து சமனெடை சர்க்கரை கூட்டிக் காலை மாலை திரிகடிப் பிரமாணம் கொடுத்துவரப் பித்தம், வாந்தி, மந்தம், சுரம், மூர்ச்சை முதலியவைகள் போம்.

தாளிசபத்திரி வடகம்.

முற்கூறப்பட்ட சரக்குகளின் எடைக்குச் சர்க்கரையைச் சுத்த சலம் விட்டுக் கரைத்து ஒரு கடாயில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துத் தேன் பதம் வரும்போது சரக்கின் சூரணத்தைக் கொட்டிக் கிளறி ஒரு கலாய் பூசிய அகல தாம்பாளத்தில் விட்டு நன்ருய் இறுகியபின் சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. இத்துண்டுகளில் வேளைக்கு 1-1½ விராகனெடை காலை மாலை சாப்பிட்டுவர முற்கூறப்பட்ட சூரணத்திற்கு வசப்படும்படியான ரோகங்கள் எல்லாம் குணமாகும்.

தாளிப்பனை.

(Corypha Umbraculifera).

தாய்ப்பாலுக் கொப்பான தாளிப் பனஞ்சோற்ருல்
வாய்ப்பாகும் வன்மை மலமிறுகும்—காயதனுல்
ஓய்ச்சலறும் மெய்பெருகும் ஒண்டொடியே கஞ்சியதாக்
காய்ச்சியுண் பார்க்குலகில் காண்.

குணம்:—(இ-ள்.) தாளிப்பனஞ் சோற்றை கஞ்சியாகக் காய்ச்சி உண்பவர்க்கு தேக பலமும், மலக்கட்டும் உண்டாகும். காயினுல் தேக பலவீனம் ஒழிந்து கொழுமை பெறும் என்க.

செய்கை:—பலகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தத் தாளிப்பனையானது மலையாளம், இலங்கை முதலிய பிரதேசங்களில் விசேஷமாகக் காணப்படுகின்றது. இதன் காயை நன்ருய் உலர்த்தி இடித்துச் சல்லடை கொண்டு அரித்து எடுத்த மாவைக் கஞ்சியாகக் காய்ச்சி ஏழை மக்கள் உபயோகப் படுத்துவதுண்டு. இதனுல் தேகத்திற்கு நல்ல பலம் உண்டாகின்றதென அனுபவத்தில் கண்டிருக்கிறது. இதுவுமல்லாமல், அம் மரத்தின் குருத்தின் அடியில் இருக்கும்படியான சோற்றை நன்ருய் உலர்த்தி அரைத்து மாவாக்கிக் கஞ்சியாகக் காய்ச்சியும் அல்லதுஜலமிட்டுப் பிசைந்து அடைதட்டிச் சுட்டெடுத்தும் உபயோகப் படுத்துவதுண்டு. இத்தகைய ஆகாரத்தினுல் சரீரத்திலுள்ள வெப்பம் நீங்கும். ஆனுல் மலபந்தம் உண்டாகும். ஆகையால் இது அதிசார பேதி, உஷ்ணபேதி, சீதபேதி முதலியவைகள் கண்டிருப்பவர்களுக்குச் சிறந்த உணவாகும்.

தான்றிக்காய்.
(Terminalia Belerica).

சிலந்திவிடங் காமியப்புண் சீழான மேகங்
கலந்திவரும் வாதபித்தங் காலோ—டலர்ந்துடலி
லூன்றிக்காய் வெப்ப முதிரபித் துங்கரக்குந்
தான்றிக்காய் கையிலெடுத் தால்.

(இதுவுமது)

ஆணிப்பொன் மேனிக் கழகு மொளிவுமிகுங்
கோணிக்கொள் வாதபித்தக் கொள்கைபோங்—தாணிக்காய்
கொண்டவர்க்கு மேகமறுங் கூரு வனற்றணியுங்
கண்டவர்க்கு வாதம்போங் காண்.

குணம்:—(இ-ள்.) தான்றிக்காயால் சிலந்தி விஷம், ஆண்குறிக் கிரந்தி, சீழ்பிரமேகம், திரிதோஷ சுரம், ரத்தபித்தம், வாதபித்த தொந்தம், பித்தநீர், உட்சூடு, வாதகோபம் ஆகிய இவைகள்போம். இன்னும் இதனால் அழகும் ஒளியும் உண்டாம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—கொட்டை நீக்கிப் பொன்மேனியாக வறுத்து இடித்த சூரணத்தை வேளைக்கு 10-15 குன்றி எடை சர்க்கரை சேர்த்துத் தினம் 2 வேளை 5 நாள் கொடுக்க இரைப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும். மலம் இளகலாகப் போகச் செய்யும். பித்தத்தலைவலி, சுரம், இரத்தமூலம், சீதபேதி இவைகளை நீக்கும். இதன் சூரணத்தில் ஒரு விராகனெடை எடுத்து அதனுடன் சமன் சர்க்கரை கூட்டி வெந்நீரில் போட்டுக் கலக்கித் தினம் 2 வேளை கொடுக்க வாய்நீரொழுக்கு (பித்தத்தாலெழுந்தது) குணம் ஆகும். இன்னும் இதனால் கண்களுக்குத் தெளிவான பார்வையுண்டாகும். இந்தக் காயைச் சந்தனக் கல்லில் சலம்விட்டு உறைத்து ரணங்களுக்குப்போடக் குணமாகும். இதைக் கியாழமிட்டு வாய் கொப்பளித்துவர வாய், தொண்டை முதலிய ஸ்தானங்களில் உண்டான ரணங்களை ஆற்றும். அல்லது தான்றிக்காயைச் சிறிது நெய்யில் பொன்மேனியாக வறுத்து எடுத்து அதன்பேரில் கோதுமைமாவைச் சலம்விட்டுப் பிசைந்து மேல் கவசமிட்டுக் கரி நெருப்பின்மேல் வைத்து மாவுவேகச்சுட்டு எடுத்து உள் இருக்கும் கொட்டையை நீக்கி அதன் சதையை வாயில் அடக்கி வைத்துக் கொண்டு சுரப்பு நீரை விழுங்கிவரத் தொண்டைப்புண், நாவின்

ரணம், இருமல் முதலியவைகள் குணமாகும். இன்னும் இதனை விசேஷமாக லேகியங்களில் கூட்டுவதுண்டு.

திக்காமல்லி.

(Gardenia Gummifera).

நத்துகின்ற பல்சரக்கில் நாறுந்திக் காமல்லி
குத்துகின்ற மூலத்தின் கோளறுக்கும்—தொத்துகின்ற
புற்றிரணம் சந்நிசுரம் புன்மலத்தின் கட்டுகுன்மம்
இத்தரையில் விட்டகலு மே.

குணம்:—(இ-ள்.) திக்காமல்லியினால், மூலரோகம், புற்று மேகவிரணம், சந்நி, சுரம், மலக்கட்டு, குன்மம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—முறைவியாதிரோதி, கிருமிநாசினி, வியதாபேத காரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பிசினியை வெண்ணெயுடன் கூட்டி அரைத்து மூலரணம், மேகரணம் முதலியவைகளுக்குத் தடவிவர விரைவில் ஆறும். ஈக்கள் ரணத்தினிடத்தில் அணுகா. இதன் வேர் அல்லது பிசின், பளிங்கு சாம்பிராணி, கொம்பரக்கு, சந்தனத்தூள், கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், செம்மரத்தூள் இவைகளை சமனெடையாகக் கூட்டி இடித்து வைத்துக்கொண்டு ஒரு ஸ்நானத்திற்குப் போதிய அளவு நல்லெண்ணெயில் ½ தோலா எடை சூரணத்தைப் போட்டுக் காய்ச்சி, வடிகட்டி, ஸ்நானம் செய்யச் சிரசிலுள்ள நீரேற்றத்தைக் குணப்படுத்துவதுடன் அதனாலுண்டாகிய தலைவலி, தலைபாரம், நீர்ப்பீநசம் முதலியவற்றைக் குணமாக்கும்.

திப்பிலி.

(Piper Longum).

இருமல் குன்ம மிரைப்பு கயப்பிணி
இளை பாண்டு சந்நியாச மரோசகம்
பொரும லூதை சிரப்பிணி மூர்ச்சைநோய்
பூரிக் குஞ்சல தோஷம் பிலீகமும்
வரும லப்பெருக் கோடு மகோதரம்
வாத மாதிமுத் தோஷஞ் சுரங்குளிர்
பெரும லப்புரி மேகப் பிடகமும்
பேருந் திப்பிலிப் பேரிங்குரைக்கவே.

(இதுவுமது)

ஆசனநோய் தொண்டைநோ யாவரண பித்தமுத
னுசிவிழி காதிவைநோய் நாட்புழுநோய்— வீசிடுவி
யங்கலாஞ்ச னஞ்சிதையு மம்பா யழிவிந்தும்
பொங்கலாஞ்சீர் நங்கையர்கோட் போல்.

குணம்:—(இ-ள்.) திப்பிலியால், காசம், கபகுன்மம், சுவாசம், க்ஷயம், கோழை, பாண்டு, சந்நியாசம், அருசி, வயிற்றுப் பிசம், வாயு, சிரஸ்தாபம், மூர்ச்சை, நீரேற்றம், பிலீகநோய், அதிசாரம், பெருவயிறு, திரிதோஷம், நடுக்கல்சுரம், மேகக்கட்டி, குதரோகம், நெஞ்சுநோய், ஆவிருத பித்தம், பீநசம், விழிநீர்க் கம்மல், கர்ணநாதம், கிருமி, முகத்தில் எழும்புகின்ற கருத்தமச்சம், கருமை செம்மைநிறமுள்ள மச்சம் இவைகள்போம். நீர்த்த சுக்கிலம் இறுகும் என்க.

(இதுவுமது)

திப்பிலியின் றண்டுலத்தாற் றீராத வையமற்று
முப்பிசத்தை மேகத்தை யோட்டுங்காண்—தப்பாமல்
வாத சுரந்தணிக்கு மாகபரோ கந்தொலைக்குந்
தாதுவைநன் றுய்வளர்க்குந் தான்.

(இ-ள்.) திப்பிலிஅரிசியானது கபம், வயிற்றுப்பிசம், மேகம், வாதசுரம், க்ஷயரோகம் இவைகளை நீக்கும். விந்துவைப் போஷிக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி, உதரவாதஹரகாரி, நாசிநீர்விர்த்தினி, பிரசவகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பொன்மேனியாக வருத்திடித்த சூரணத்தில் ரோகத்தின் வன்மை மென்மைக்கேற்றவாறு வேளைக்கு 5-10 குன்றி எடை தேன் சர்க்கரை இவைகள் ஏதேனுமொன்றில் மத்தித்து தினம் 2 வேளை கொடுக்கவும். அல்லது கழஞ்சு எடை திப்பிலியைப் பொடித்து 10 அவுன்ஸ் சலத்தில் போட்டு அடுப்பிலேற்றி 3 அவுன்ஸ் திட்டத்திற்குக் காய்ச்சி வடிகட்டி 2வேளையாகச்சிறிதுதேன்கூட்டிக் கொடுக்கவும்.இது இருமல், தொண்டைக்கம்மல், வீக்கம், சயித்தியம், அக்கினிமந்தம், தாதுநஷ்டம் முதலியவைகளைக் கண்டித்து இரைப்பைக்கும் ஈரலுக்கும் பலத்தைக் கொடுக்கும். இந்தச் சூரணத்துடன் கம்மாறு வெற்றிலைச்சாறும் தேனுங் கூட்டிப் பெரியவர்களுக்குக் கொடுக்கச் சயித்

தியம், கப சம்பந்தமான சுரம் முதலியவைகள் போம். இதைக் குழந்தைகளுக்கு 1-1½ குன்றி எடை கொடுக்க வயிற்றிலுள்ள புளிப்பைக் கண்டிக்கும்.

திப்பிலி, திப்பிலிமூலம், மிளகு, மேல்தோல் சீவிய சுக்கு இவற்றைச் சமனெடையாக எடுத்துப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு ரோகத்தின் வன்மைமென்மைக்கு ஏற்றவாறு 5-10 குன்றி எடை தினம் 3 வேளை தேனில் அனுபானம் செய்து கொடுத்துக்கொண்டுவர ஜல தோஷம், தொண்டைக்கம்மல், இருமல், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல் முதலியவைகள் குணமாகும்.

திப்பிலி, மேல்தோல் சீவிய சுக்கு, மிளகு, இலவங்கப்பட்டை, சீரகம் இவைகளைச் சமனெடையாக எடுத்துப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு முன்போல் கொடுக்கக் கப சம்பந்தமான உபத்திரவத்தை நீக்கும். இதனை விசேஷமாகச் சூரணங்களிலும், லேகியங்களிலும் கூட்டுவதுண்டு.

திருகுகள்ளிப்பால்.

(Euphorbia Tortilis—Milk).

வாத முடக்ககலும் வன்கிரந்தி குட்டம்போஞ்
சீதமொழி யுங்கிருமி சேராவாம்—மாதே
பருகுபக்க நோயுடனே பாழ்கரப்பான் றீருந்
திருகுகள்ளிப் பாலாற் றெளி.

குணம்:—(இ-ள்.) திருகுகள்ளிப்பாலினால் கஞ்சவாதம், கிரந்தி, பெருவியாதி, சீதக்கட்டு, கிருமிரோகம், பக்கசூலை, கரப்பான் இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பாலைக் கைகால்களின் கீல்களிலுண்டாகும் பிடிப்பு முதலியவற்றிற்குப் பூசி அதன் வேரடியிலிருக்கும் மண்ணையே எடுத்து மேற்றாவுதல் உண்டு. இதனால் அவ்வலி, பிடிப்பு, வீக்கம் இவைகள் குறையும், இந்தப் பாலை உள்ளுக்குக் கொடுத்தால் வாந்தியும், பேதியும் உண்டாகும். இதன் வேர்ப்பட்டையை ஆவின்பாலில் அவித்துக் கழுவி நிழலில் உலர்த்திவைத்துக் கொண்டு தாம்பூலத்துடன் தேகதிடத்திற்கு ஏற்றவாறு ⅛-¼ விராகனெடை சேர்த்து மென்று அருந்த நன்றாய்ப் பேதியாகும். இது வாதரோகத்தை நீக்கும். பேதி அதிகமானால் சந்தனத்தைத் தேகத்

தில் தழும்பப் பூசப்பேதிகட்டும். இதனை இதரச் சரக்குகளுடன் கூட்டித் தைலம் காய்ச்சுவதுண்டு. அவற்றைத் தேரையர் தைலவருக்கச்சுருக்கத்தில் காண்க.

தில்லம்பால்.

(Execaria Agallocha—Milk).

பாரிசவா தஞ்சந்தி பாதஞ்சூ லங்குஷ்டஞ்
சேருமுட வாதவலி சில்விஷம்போம்—பேருரைக்க
இல்லையில்லை யென்றேடு மெண்பது வாதமுமே
தில்லைமரப் பாலாற் றெளி.

குணம்:—(இ-ள்.) தில்லைமரப்பாலால் பாரிசவாதம், சந்திபாதம், கீல்பிடிப்பு, குட்டரோகம், பங்குவாதம், அமரகண்டன் முதலிய ஐவகைவலிகள், சில்விஷம், 80 வித வாதரோகங்கள் எல்லாம் போம் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இது கள்ளி இனத்திலொன்று. இது அதிக வீரியமுடையது. சில சந்தர்ப்பங்களில் இதன் பால் சில தேகங்களுக்குப் பொருத்தப்படுவதில்லை. இது சரீர வீக்கமும் அரிப்பும் உண்டாக்கும். ஆகையால் இதனைப் பெரும்பாலும் உபயோகப்படுத்துவதில்லை.

தில்லம்வித்து.

(Execaria Agallocha—Seeds).

தில்லம் விதைக்குச் சிறுவிஷம காவிஷமுஞ்
செல்லுஞ் செருக்குந் திமிர்வாய்வும்—வெல்லங்கோள்
வாரை வருத்துகின்ற வன்கபமுங் குஷ்டமுமிவ்
வூரைவிடுத் தேகு முரை.

குணம்:—(இ-ள்.) தில்லம் விதைக்குக் கீடவிஷம், சர்ப்பவிஷம், திமிர்வாதம், இனிப்புச்சுவையாற் பிறந்த கபரோகம், குஷ்டநோய் இவைகள் தீரும்.

செய்கை:—வியதாபேதகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை விசேடமாக அவிழ்தபாகங்களில் கூட்டுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் விஷக்கடி சிகிச்சைகளில் கூட்டுவதுண்டு.

தினையரிசி.

(Panicum Italicum).

சந்நிசுர மையந் தனிவாத மும்போகுந்
துன்னுபித் தத்தைமிகத் தூண்டிவிடுந்—தின்னப்
பினையும் பசியாம் பெருவீக்கம் நீங்குந்
தினையரிசி யின்குணத்தைத் தேர்.

குணம்:—(இ-ள்.) *தினையரிசி, சந்நிபாதசுரம், கபரோகம், சுத்தவாதம், சோபாரோகம் இவைகளைப் போக்கும். பித்தத்தையும் பசியையும் உண்டாக்கும் என்க.*

(இதுவுமது)

தினைமா கபவாதந் தீர்க்குமதின் சாதம்
புனைபித்த மாயினுநற் போகந்—தனைக்கொடுத்து
வாதம்போக் குங்கஞ்சி மாசோபைத் தோடமிதன்
பேதம்போக் கும்மெனவே பேசு.

(இ-ள்.) *தினைமாவானது சிலேஷ்ம வாத தொந்தத்தை விலக்கும். தினைச் சோறானது பித்த குணத்தை யுற்றிருந்தாலும் வீரியத்தை விருத்தி செய்து வாத கோபத்தை நீக்கும். தினைக்கஞ்சியானது வீக்க தோஷவருக்கங்களை ஒழிக்கும் என்க.*

செய்கை:—*பித்தகாரி, ஜடராக்கினிவர்த்தினி, சோபாநாசினி.*

உபயோகிக்கும் முறை:—*இந்த அரிசியை நன்றாய்க் குத்திப் புடைத்து அன்னமாகச் சமைத்துண்பதுண்டு. நொய்யைக் கஞ்சியாகக் காய்ச்சி உப்பிட்டுக் குடிப்பதுண்டு. தினைமாவைக்கொண்டு பலபலகார பட்சணங்கள் செய்வதுண்டு. இது வாத தேகிகட்குச் சிறந்த ஆகாரமாகும். நீடித்துச் சாப்பிட சிறிது பித்தத்தையுண்டாக்கும்.*

துடைப்பம்.

(Scoparii Cacumina).

மிஞ்சிவரும் நீர்க்கட்டை மீருமற் றுனுடைக்கும்
நெஞ்சி லுறுங்கபத்தை நீக்கிவிடும்—அஞ்சாதே
மற்றுமுடல் வீக்கம் மகோதரமும் வாடிவிடும்
நற்றுடைப்பஞ் சீரிதுவாம் நாடு.

குணம்:—(இ-ள்.) *துடைப்பத்தினல் தேகத்தில் கட்டப்பட்ட சிறுநீர் வெளியாகும், கபம் நீங்கும், இரத்தத்தாதுவில் நீர்க்கோவை*

யுண்டாகி அதனால் கண்ட வீக்கம், மகோதரம் முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் தோகையிலுள்ள உவ்வா முள்ளை ஒரு மண்ஓட்டில் இட்டு எரித்துச் சாம்பலாக்கி வைத்துக்கொண்டு, வேளைக்கு 1-1½ குன்றி எடை தேனில் கொடுத்துவர இருமல் குணமாகும். நெஞ்சில் தட்டுப்பட்டுள்ள கோழை கரையும். இதன் நுனித் தோகையை எடுத்து ஒன்றிரண்டாக இடித்து 2 விராகனெடை சூரணத்தை 20 அவுன்ஸ் கொதிக்கிற சலத்தில்போட்டு வாய்மூடி ¼ மணி நேரம் வைத்துப் பின்னர் வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன் ஸ்வீதம் தினம் 2-3 வேளை கொடுத்துவர மகோதரம், கை கால் வீக்கம் முதலியவைகள் குணமாகும். இதை அதிக அளவாகக் கொடுக்க, வாந்தியும், பேதியும் உண்டாகும்.

துத்திப்பூ.

(Abutilon Indicum—Flower).

துத்தி மலரைநிதந் துய்க்கின்ற பேர்களுக்கு
மெத்தவிந்து வும்பெருகு மெய்குளிருஞ்—சத்தியமே
வாயால் விழுமிரத்த மாறு மிருமலறுந்
தேயா மதிமுகத்தாய் செப்பு.

குணம்:—(இ-ள்.) துத்திப்பூவால் ரத்த வாந்தியும், காசரோகமும் நீங்கும். சுக்கில விருத்தியும் தேகக் குளிர்ச்சியும் உண்டாம் என்க.

செய்கை:—ரக்தஸ்தம்பனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை ஒரு பிடி பிரமாணம் பசுவின் பாலில் போட்டு அடுப்பிலேற்றி வெந்து குழையும் பதத்தில் கடைந்து சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிடலாம். அல்லது துவரம்பருப்பு வெந்து வருஞ்சமயம் துத்திப் பூவைச் சுத்தமாக அலம்பிப் போட்டு வேகவைத்து உப்பிட்டுக் கடைந்து, தாளித்து உண்ணலாம். இதனால் தேகத்தின் வெப்பம் அடங்கும். தாதுகட்டும். இரத்த காசம் குணப்படும்.

துத்தியிலை.

(Abutilon Indicum—Leaves).

மூலநோய் கட்டி முளைபுழுப்புண் ணும்போகுஞ்
சாலவதக் கிக்கட்டத் தையலே—மேலுமதை
எப்படியே னும்புசிக்கி லெப்பிணியுஞ் சாந்தமுறு
மிப்படியிற் றுத்தியிலை யை.

குணம்:—(இ-ள்.) துத்தியிலையை ஆமணக்கு நெய்யால் வதக்கிக் கட்ட மூலரோகமும் கட்டி விரண முளைகளும், கிருமி விரணமும் போம். அதை எவ்விதமாவது பாகஞ் செய்துண்ணில் சகல ரோகங்களும் போம் என்க.

செய்கை:— அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:— துத்தி இலையைச் சிற்றாமணக்கெண்ணெய் சிறிது விட்டு வதக்கி மூல உபத்திரவம் உள்ளவர்களுக்கு ஆசனத்தில் வைத்துக் கட்ட 2-3 வேளையில் கடுப்பு நீங்கும். உஷ்ணத்தினால் வந்த கட்டிகளுக்கு அரைத்துவைத்துக் கட்ட உடைத்துக்கொள்ளும். இந்தக் கீரையை உடைத்த பச்சைப் பயறு அல்லது துவரம் பருப்பிட்டுப் பாகப்படி வேகவைத்துக் கடைந்து அன்னத்துடன் கூட்டி உண்ண மூலாதாரத்திலுள்ள வாயுவைக் கண்டிக்கும், மலத்தை இளகலாகப் போக்கும். இதன் சமூலத்தில் வேளைக்கு 1 பலம் தட்டி, ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிச் சர்க்கரை கூட்டி 3 வேளையாகக் கொடுத்துவரத் தினவு, சொறி, சிரங்கு முதலியவைகள் போம். இன்னும் இந்தக் கியாழம் குடலில் உண்டான புண், நீர்ச்சுறுக்கு, தொண்டைக்கம்மல், காமாலை, மருந்துகளின் வீறு, குண்டிக்காயிலுள்ள வலி இவற்றை நீக்கும். முறிந்த எலும்பை ஒருங்கு சேர்த்து இந்த இலையை அரைத்து மேலே கனமாகப் பூசிச் சீலை சுற்றி அசையாமல் இருக்கும் பொருட்டு மூங்கிற்பத்தை வைத்துக்கட்ட எலும்பின் முறிவு கூடும். இந்த இலையைக் காயவைத்துச் சிறுநீர் விட்டரைத்துக் குழந்தைகளுக்குண்டாகும் கபால கரப்பானுக்குப் போடக் குணமாகும். இதுவுமன்றி இந்த இனத்தில் கருந்துத்தி, சிறு துத்தி, நிலத்துத்தி என வேறு வகைகளுமுண்டு. இவைகள் யாவும் குணத்தில் அதிக மாறுதல் அடையா. ரோகத்தின் வன்மை மென்மைக்கு ஏற்றவாறு அவிழ்த பிரயோகங்களில் கூட்டிக்கொள்ளலாம். அவைகளின் விசேட குணங்களை அடியிற் காண்க.

கருந்துத்தி.

(Abutilon Indicum—Black variety).

செப்புங் கருந்துத்தி சீருறவே கொண்டார்க்கு
வெப்புநீர்க் கட்டு விலகுங்காண்—எப்பொழுதும்
நீங்கா முளைமூலம் நீள்கிருமிப் புண்வகைகள்
பாங்காகத் தானொழியும் பார்.

(இ-ள்.) கருந்துத்தியைப் பாகப்படி உபயோகப்படுத்த நீர் எரிச்சல், முளைமூலம், புண்கிருமிக் கூட்டம் இவைகள் போம் என்க.

சிறு துத்தி.

(Habiscus Obtusifolia).

ஓங்கு மலக்கட்டு மோயாத வன்கரப்பன்
வீங்கும் கடிவிஷமும் விட்டுப்போம்—பூங்குழலே
மீறுஞ் சிறுநீரின் வெப்பந் தணிந்துபோம்
கூறுஞ் சிறுதுத்திக் கு.

(இ-ள்.) சிறுதுத்தியால் மலபந்தம், கரப்பான், அற்ப விஷங்களையுடைய பூச்சிகளின் கடி, நீர் எரிச்சல் முதலியவைகள் போம் என்க.

நிலத்துத்தி.

(Sida Cordifolia).

தொடங்கரசங் கட்டி தொலையவப்பு லோக
மடங்கிநீ ருகவெண்ணி னம்பொற்—குடம்போ
னலத்துத்தி பூத்தமுலை நல்லா ரமிர்தே
நிலத்துத்திப் பூண்டை நினை.

(இ-ள்.) நிலத்துத்திப் பூண்டானது ஆரம்ப மூல ரோகத்தையும் வித்திரிதிக் கட்டிகளையும் போக்கும். கருவங்கத்தைப் பஸ்பம் செய்யும்.

துத்தி விதை.

(Abutilon Indicum—Seeds).

கையிற்கா லிற்படர்ந்த கார்மேகம் போயொழியு
மெய்யிலுறு குஷ்டம்போம் வெப்பகலுந்—துய்யதிரை
யத்திதனை யொத்தவிழி யாரணங்கே நாட்டிலுறுந்
துத்தி விதையைச் சுவை.

குணம்:—(இ-ள்.) துத்தி விதையினால் கைகால்களினுண்டாகும் கருமேகமும், குஷ்டரோகமும், உட்சூடும் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த விதையில் சிறிது கரிநெருப்பனலில் போட்டு, அதினின்று கிளம்பும் புகையைச் சிறு மலக் கிருமிகளுள்ள குழந்தைகளின் ஆசனத்தில் தாக்கும்படி செய்யக் கிருமிகள் வெளிப்படும். ஆசனத்தின் ஊறலும் அடங்கும். இதன் விதையை முறைப்படி கியாழமிட்டு வடிகட்டிச் சிறிது கற்கண்டு கூட்டிக் கொடுக்க வெள்ளை, வெட்டை, மூலம், தந்திமேகம் முதலியவைகள் நீங்கும். இதன் விதையைச் சிறிது அனலில் வெதுப்பி இடித்துச் சூரணம்செய்து, சிறிது சர்க்கரைகூட்டித் தினந்தோறும் அந்தி சந்தி திரிகடிப் பிரமாணம் கொடுத்துவர இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள பிணிகள் நீங்கும்.

இதன் கியாழத்தையாவது அல்லது சூரணத்தையாவது அளவுக்கு மிஞ்சிக் கொடுத்தால் மலத்தை இளகலாகப் போகச் செய்யும்.

தும்பைப்பூ.

(Leucus Aspera—Flower).

தாகங் கடிதோழியுஞ் சந்நிபா தங்களறு
மாகந் தனில்வருநோ யண்டுமோ—மாகந்த
வம்பைப்பீ றுங்குயத்து மாதேநின் செங்கரத்தாற்
றும்பைப்பூத் தன்னைத் தொடு.

குணம்:—(இ-ள்.) தும்பைப்பூவினால் தாகரோகமும், சந்நிபாதசுரங்களும், நேத்திரத்தைப் பற்றிய தோஷங்களும் நீங்கும் என்க.

செய்கை:—முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை நன்றாகக் கசக்கிச் சாறு எடுத்து 15-30 துளிவரையில் இரண்டு பங்கு தேனுடன் கூட்டிப் பெரியவர்களுக்குக் கொடுப்பதுண்டு. இதனால் சந்நிசுரம், தாகம் இவைகள்போம். இதனுடன் பண்டிதர்கள் சமயோசிதமாகக் கட்டுமாத்திரைகளோ அல்லது செந்தூரங்களோ கூட்டிக் கொடுப்பது வழக்கம். குழந்தைகளுக்கு 12 துளி பூச்சாறுடன் தேன் கூட்டிக் கொடுப்பதுண்டு. இதனுடன் கோரோசனையாவது கஸ்தூரியாவது கூட்டிக்கொடுக்க விரைவில் சீதளத்தையும் கபத்தை

யும் கண்டிக்கும். பூவைக் கசக்கித் துணியில் முடிச்சுக்கட்டி கண்களில் இரண்டொரு துளிவிடச் சந்நிரோகம் பிரியும்.

தும்பையிலை.

(Leucus Aspera—Leaves).

சீறுகின்ற பாம்போடு சில்விஷங்கால் சென்னிவலி
யேறுகப மாந்த மிருக்குமோ—நாறுமலர்க்
கொம்பனைய மாதே குளிர்சீத சந்நிவிடுந்
தும்பையிலை யென்றொருகாற் சொல்.

(இதுவுமது)

தும்பையிலை யையுண்ணுஞ் சோற்றுக்கெ லாங்கறியா
யம்புவியோர் மிக்க வருந்துங்கால்—வெம்பிவரு
மேகமொடு கண்புகைச்சல் வீறுகை காலசதி
தாகமதி சோம்பலுறுந் தான்.

குணம்:—(இ-ள்.) தும்பையிலையால் சர்ப்பகீட விஷங்கள், வாதநோய், தலைவலி, கபதோஷம், அக்கினிமந்தம், சிலேஷ்மசந்நி இவைகள் நீங்கும். இதைப் புளியிட்டுக்கடைந்து உணவோடருந்தில் பிரமேகம், நேத்திரப்புகை, கைகால்களின் அசதி, தாகம், சோம்பல் இவைகள் உண்டாம் என்க.

செய்கை:—கபஹரகாரி, உற்சாககாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—தும்பை இலையை அரைத்துப் பாம்புக் கடிக்கும், சிரங்குகளுக்கும் போடுவதுண்டு. இதன் சாற்றை நசியமிடத் தலைவலி, ஜலதோஷம், பாம்பு விஷம் போம்.

தும்பையிலை, அவுரியிலை, பெருங்காயம், வசம்பு, வெள்ளைப் பூண்டு, மிளகு இவைகளைச் சமன்எடையாகக் கல்வத்திலிட்டுச் சிறுபிள்ளைகளின் அமுரி விட்டரைத்துத் துணியில் முடிந்து காது, நாசி இவைகளில் துளித்துளியாகவிட விஷம் இறங்கும்.

துயிலிக் கீரை.

(Achyranthes Polygonoides).

சீதம் விளையுஞ் சிறுசிரங்கு புண்ணுமாங்
காது பழமலமுங் கட்டறுங்காண்—கீதக்
குயிலனையாய் வெட்டையெனக் கூறுநோ யில்லை
துயிலி யிலைக்கறிக்குச் சொல்.

குணம்:—(இ-ள்.) துயிலிக்கீரைக்கு ஆமமும், நமிட்டுச் சிரங்குகளும், விரணமும் உண்டாகும். பழமலக்கட்டும், பிரமேக வெள்ளையும் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைத் துவரம் பருப்போடு சேர்த்துப் பாகப்படி கடைந்து அன்னத்துடன் சேர்த்துண்பதுண்டு. இதனால் பிரமேகமும் வெட்டைச்சூடும் தணியும். ஆனால் கபத்தையும் சிரங்கையும் உண்டாக்கும்.

துலுக்கப் பயறு.

(Phaseolus Aconitifolius).

தொல்லுலகி லுண்ணுந் துலுக்கப் பயிறதனல்
அல்லலுறும் பித்த மடங்கிப்போம்—சொல்லுங்கால்
வாதமோ டார்ந்தகப வன்மையெலாம் விட்டுப்போம்
சாதகமாய் மெய்பெருக்குந் தான்.

குணம்:—(இ-ள்.) துலுக்கப் பயற்றினல் மிகுதிபட்ட பித்தம் அடங்கும். இன்னும் வாதத்தோடு சம்பந்தப்பட்ட கபம் நீங்குவதுடன் தேகம் கொழுமை பெறும் என்க.

செய்கை:—பலகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சிறிது வறுத்து உடைத்துக் கியாழமிட்டுக் கொடுக்கப் பித்தத்தைச் சாந்தப்படுத்தும். இன்னும் வாத, பித்த, கப, உபரி அடங்கித் தேகத்திற்கு நல்ல வலுவும், தாது விருத்தியும் உண்டாகும்.

துவரம்பருப்பு.

(Cajanus Indicus).

தண்ணக் குறிஞ்சித் தலத்தா டகிப்பிளப்பை
வண்ணச் சுடரதற்குள் வைத்தாக்கி—யுண்ணற்
கடிக்குப் பசுவினறு மாச்சியத்தோ டுண்ணிற்
பிடிக்குப் பிடிசதையாம் பேசு.

குணம்:—(இ-ள்.) சீதமுள்ள மலைநாட்டுத் துவரம்பருப்பை வெந்நீரிலிட்டுச் சமைத்துப் போசன முதலில் பசுவின் நெய்யுடன் அன்னத்திற் கலந்து உண்ணில் ஒரு பிடி அன்னத்திற்கு ஒரு பிடி சதை வளரும் என்க. குறிஞ்சி நில வஸ்துக்கள் மிகு வன்மை

யுள்ளவையாதலால் அந்நிலத்துத் துவரையைப் பெருமைபடுத்திக் கூறலாயினர்.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—சுத்தமாகப் பொட்டுநீக்கி எடுத்த துவரம்பருப்பை வேகப்போட்டு உப்பிட்டுக் கடைந்து அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுச் சாப்பிட ஆரோக்கிய உணவாகும். இது இரைப்பைக்கும் குடலுக்கும் பலத்தைக்கொடுக்கும். மலத்தை இளகலாகப் போகச் செய்யும். வயிற்றிலுள்ள வாயுவை வெளியாக்கும். தீபனத்தை யுண்டாக்கும். தேகத்திற்குக் கொழுமையைத் தரும். இந்தத் துவரம்பருப்பானது எல்லாப் பருப்பினங்களிலும் சிறந்தது. இதனைவிடப் பத்திய பதார்த்தங்களில் சிறந்தது ஒன்றுளது என்று கூறுவதற்கில்லை. தினசரி பதார்த்த வகைகளில் பெரும்பாலும் உபயோகப்படுத்துவதற்குக் காரணம் இதன் நற்குணமே யாகும்.

துவரை.

(Cajanus Indicus—Seeds).

பஞ்சமுட்டிக் காகுமரும் பத்தியவி யஞ்சனமாம்
விஞ்சுசுரஞ் சந்நிகட்கு மெத்தநன்றும்—பஞ்சின்
விழுந்துவரை யாது மெலிந்தாரைத் தேற்றுங்
கொழுந்துவரை யாயினீ கோள்.

குணம்:—(இ-ள்.) நறுந்துவரை, லங்கண முடிவிற் சேர்க்கிற பஞ்சமுட்டித் தாரகபத்தியத்திற்கும், உப்பில்லாப் பத்தியத்திற்கும், சுரத்திற்கும், சந்நிக்கும், பஞ்சணையே கிடையாக எழுந்திருக்கச் சக்தியில்லாமல் மிக மெலிந்தவர்களுக்கும் உதவும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக ரோகிகள் கடும் பத்தியமாக இருக்கும்போது, துவரையை வாசனை கிளம்ப வறுத்துப் பொடித்து உப்பில்லாத வெந்நீர் சாதத்திற்குக் கறியாகக் கூட்டிக்கொள்ளலாம். அல்லது இதன் தூளை அன்னத்திலிட்டுப் பிசைந்து சிறிது சாப்பிடலாம், இது குற்றமாகாது. வாதரோகத்திலிருந்தாவது, ஜுரரோகத்திலிருந்தாவது இலங்கணமிருந்து அல்லது நெடுநாள் கஞ்சிபத்தியத்திலிருந்து தேகம் மெலிந்து குணப்பட்டு வருங் காலத்தில் தேகத்தைப் போஷிக்கும்

பொருட்டுத் துவரை, உழுந்து, கடலை, சிறுபயறு, பச்சரிசி வகைக்கு ஒரு பிடி அளவிற்குத் தனித்தனிச் சீலையில் தளர்ச்சியாக முடிச்சுக்கட்டி ஒரு காரமில்லாத மட்பாண்டத்தில் போட்டு 2 படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி வடித்துச் சிறிது உப்புக்கூட்டிக் கொடுப்பதுண்டு. இதனைப் பஞ்ச முஷ்டிக் கஞ்சியெனக் கூறுவர்.

துளசி.

(Ocimum Sanctum).

ஐயம் வயிறுளைச்ச லஸ்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்—மெய்யாக
வாயி னரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.

குணம்:—(இ-ள்.) சார்ப்பும், வெப்பும் உள்ள துளசியினால், கடதோஷம், வயிறளைதல், அஸ்திதாதுகதசுரம், தாகம், மாந்தசுரம், அருசி இவைகள் போம் என்க.

செய்கை:—கபஹரகாரி, உற்சாககாரி, சுவேதகாரி, முறை வியாதிரோதி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைப் பிட்டவியல்போல் அவித்தெடுத்துக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் பெரியவர்களுக்கு வேளைக்கு அரை ரூபாய் எடையாகவும், குழந்தைகளுக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டி அளவாகவும் தினம் 2 வேளை கொடுக்கலாம். உலர்ந்த துளசியாக இருந்தால் ஒரு எடைக்கு 10 எடை சலம் விட்டு 4-ல் ஒன்றாகக் காய்ச்சி வேளைக்கு 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம். இது இருதயத்திற்கும், ஈரலுக்கும் பலத்தைக் கொடுப்பதுடன் தீபனத்தை யுண்டாக்கும், கபத்தை யொழிக்கும். ஸ்திரீகளுக்கு முலைப்பால் சுரப்புண்டாக்கும். உதிரச் சிக்கலை நீக்கும். இதன் இலையைக் கசக்கி முகர நாசியடைப்பு நீங்கும். இதன் சாற்றுடன் காடி கலந்து நாசியில் இரண்டொரு துளிவிடப் பீநசம் போம். இதன் இலையை வாயிலிட்டு மெல்லுவதனால் பற்கூச்சம், பல்வலி முதலியவைகள் போம். இதன் இலைச் சாற்றை மார்பு வீக்கத்திற்குப் பூச வீக்கத்தைக் குறைக்கும். இதன் இலைச் சாற்றைத் தனியாகவாவது அல்லது சமனெடை நல்லெண்ணெயுடன் கலந்து பதமுறக் காய்ச்சியாவது காதில் விடக் காதுவலி நீங்கும்.

இதன் வேரைக் கியாழமிட்டுக் கொடுக்கச் சுரம் போம். நொச்சி, துளசி, முசுமுசுக்கை வகைக்கு ஒரு பிடி, பிட்டுப்போல் அவித்தெடுத்துக் கசக்கிச் சாறுபிழிந்து $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டியளவு குழந்தைகளுக்குக் கொடுக்கக் கணமாந்தம் தீரும்.

துளசி வித்து.

(Ocimum Sanctum—Seeds).

நற்றுளசி வித்ததனை நங்கையே யுட்கொள்ளப்
பற்றுநீர்ச் சூடும் பறக்குமே—மற்றுமுள
சீத முடன்பேதி சீரழிக்கு முட்சூடு
சேதமுற் றோடுமெனச் செப்பு.

(இ-ள்.) துளசி வித்தினால், நீர் எரிச்சல், சீதபேதி, உட்காங்கை முதலியவை போம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வித்தைத் தூசிதும்பு இல்லாமல் ஆய்ந்து காய்ச்சிய பசுவின்பாலில் போட்டு ஊறவைத்துக் குடிக்கத் தாதுபுஷ்டி உண்டாகும். வெள்ளை, நீர்ச்சுருக்கு, சீதபேதி முதலியவைகள் போம். இந்த வித்தைப் பல தாது விருத்திக்குரிய லேகியங்களில் சேர்ப்பதுண்டு.

இந்தத் துளசிப் பெயரினைக்கொண்டு பல இனங்களுண்டு. இவைகள் யாவும் துளசியைப்போலவே உபயோகப்படும். அவற்றின் பெயரும் குணமும் பின்வருமாறு:—

கருந்துளசி.

இருமலொடு நெஞ்சி லிழுப்புச்சு வாசங்
கிருமி சலதோஷங் கேவல்—மருமச்
சளிசுட்சை சூலைவிஷஞ் சந்நியிவை போக்குந்
தளிரார் கருந்துளசி தான்.

(இ-ள்.) கருந்துளசியினால் காசம், தொண்டைக்குள் குறுகுறு என்னும் ஒரு சத்தம், இரைப்பு, கிருமி, நீர்க்கோவை, இருமலால் வரும்கேவல், மார்புசளி, சுரம், குத்தல், விஷம், சந்நிபாதம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

முற்கூறப்பட்ட நல்ல துளசியைவிட இதற்குக் காரம் அதிகம். அவிழ்தபாகங்களில் அதிக நன்மையைத்தரும்.

செந்துளசி.

செய்ய துளசிவிஷந் தீர்க்குங் கபமறுக்கும்
வெய்ய கடிவிஷத்தை விண்ணேற்றுந்—தையலரே
முத்தோஷத் துண்டா முரனேட்டு மவ்வழியா
மெத்தோஷ மும்போக்கு மெண்.

(இ-ள்.) சிவப்புத்துளசி: நஞ்சு, கபாதிக்கம், அக்கினிகீட விஷம், திரிதோஷத்தால் சனிக்கின்ற பற்பல ரோகங்களை விலக்கும்.

நிலத்துளசி.

நிலத்துளசி மாதர்தரு நீண்முலைப்பால் மந்தம்
வலத்தசுரம் பித்தகண மாற்றும்—அலத்துகண்
மாந்தசுரம் பித்தசுர மாபெரிய சீதசுரஞ்
சேர்ந்தோடச் செய்யுந் தெளி.

(இ-ள்.) நிலத்துளசி: முலைப்பாலால் வரும் மந்தம், வாத சுரம், பல்வித பித்த நோய்கள், கணச்சூடு, மந்தம், பித்தருட்சை, குளிர்சுரம் இவற்றை நீக்கும் என்க.

கல்துளசி.

தாபச் சுரமுந் தனிவித் திரிதிகளுஞ்
சோபச் சிலவிஷமுந் தோற்றவே—கோபிச்சங்
குற்றுளசி லேஷ்மத்தா லூன்றுகா சம்பறக்குங்
கற்றுளசிப் பேருரைக்குங் கால்.

(இ-ள்.) கல்துளசியால் தீச்சுரம், வித்திரிதிக்கட்டி, நீர்வண்டு முதலிய சில் விஷம், கோழையைத் தள்ளுகின்ற கபகாசம் இவை கள் போம் என்க.

முள்துளசி.

எலிவிஷம்போம் வெட்டுண் டிருக்கும் விரணக்
கிலிவிடும்வி ஷங்கள் கிளைக்கா—துலவிவரு
மட்டுறச்சி வந்தமலர் மண்டபத்துள் வாழனமே
முட்டுளசிப் பேரை மொழி.

(இ-ள்.) முள்துளசியால் எலிவிஷம், வெட்டுப்புண், அற்ப விஷம் போம் என்க.

நாய்த்துளசி.

மாந்தக் கழிச்சலறும் மாந்தஞ் சுரக்கணம்போஞ்
சேர்ந்தமூ லத்தின் தினவடங்கும்—பூந்தடக்கை
யன்னமே மேக மறுங்கஞ்சாங் கோரையினை
யுண்ண இருமலிலை யோது.

(இ-ள்.) கஞ்சாங்கோரையால் மாந்தபேதி, அக்னிமந்தம், சுரம், கணச்சூடு, ஆசன நமைச்சல், பிரமேகம், காசம் இவைகள் நீங்கும்.

(இதுவுமது)

கபத்தோடு குற்றிருமல் காணு தொழிக்குஞ்
சபத்தைச்செய் முத்தோஷஞ் சாடும்—விபத்தழலைச்
சாய்த்துடலைப் போஷிக்குந் தாரணியி லுள்ளோர்க்கு
நாய்த்துளசி யீது நவில்.

(இ-ள்.) நாய்த்துளசி என்று சொல்லப்படுகின்ற கஞ்சாங் கோரையானது கோழை, பொடிஇருமல், சந்நிபாதம் ஆகிய இவை களை மாற்றும். சரீரத்தைப் போஷிக்கும். நாய்த்துளசி என்னும் கஞ்சாங்கோரை துளசி இனத்தைச் சார்ந்ததாக இருப்பினும் சிற் சில விசேஷ குணங்களுடையது. அதாவது—

இதன் இலைச்சாற்றைச் சிறிது பொங்கவைத்து முறித்து வடி கட்டித் தனியாகவாவது அல்லது கஸ்தூரி, கோரோஜனை மாத்திரை களுடன் கூட்டியாவது வயதுக்குத் தக்கபடி $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு குழந்தைகட்குக் கொடுத்துவர மாந்தம், சுரம், இருமல் இவைகள் போம். இந்த இலையை நன்றாய் நிழலில் உலர்த்தி இடித்துத் சூரணம் செய்து வைத்துக்கொண்டு தினம் 2 வேளை $\frac{1}{2}$ ரூபாய் எடை சூரணத்தை அரை ஆழாக்கு கொதிக்கிற ஜலத் தில் போட்டுக் கால் மணி நேரம் சென்ற பின் வடிகட்டிச் சிறிது பாலும் சர்க்கரையும் கூட்டிக் கொடுத்துவரக் கப சம்பந்த மான ரோகங்கள் போம். சுரத்தின்பேரில் கைகால் குளிர்ந்து இருந்தால் இந்த இலையை அரைத்துக் கை, கால் விரல்களுக்குக் கனமாகப் பூசி வைக்க மீண்டும் சரீரத்தில் உஷ்ணம் பிறக்கும். இதை அரைத்து ஊறலுண்டாகிய படைகட்குத் தடவிவரக் குண மாகும்.

தூதுளங்காய்.

(Solanum Trilobatum—Pod).

ஐயமுடன் பித்த மகலு மரோசகம்போந்
தையலே வாதந் தணியுங்காண்—வையமிசை
யோதுங் குடல்வாத மோடு மலமொழியுந்
தூதுளங் காயுண்ணச் சொல்.

குணம்:—(இ-ள்.) தூதுளங்காயால் கபரோகங்கள், பித்த தோஷம், அருசி, ரத்தாசயவாயு, ஆந்திர பித்தவாதம், மலபந்தம் இவைகள் விலகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நெய்விட்டு வதக்கிக் குழம்புக ளில் சேர்த்துப் பாகப்படி சமைத்து உபயோகப்படுத்துவதுண்டு. இது வாதபித்த சிலேத்தும தொந்தங்களைப் பிரித்துச் சமனப்படுத்தும்.

தூதுளம்பழம்.

(Solanum Trilobatum—Fruit).

கபக்கட்டு கோழை கதித்ததிரி தோஷங்
குபுக்கென் றெழும்புநீர்க் கோவை—கபுக்கென்
றழுத்துவிஷ மும்போ மடர்தூது ளந்திற்
பழுத்து விழும்பழத்தாற் பார்.

குணம்:—(இ-ள்.) தூதுளம்பழத்தினால் இறுகிய மார்பு சளி, க்ஷயம், வாதாதி மூன்று தோஷங்கள், சலதோஷம், சர்ப்ப விஷம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக இந்தப் பழத்தைத் தின்னச் சரீரத்திற்கு அதிக நன்மையைத் தரும். திரிதோஷங்களின் உபரியை அடக்கும். கபத்தைக் கரைக்கும்.

தூதுளம்பூ.

(Solanum Trilobatum—Flower).

புட்டியுண்டாந் தாதுவுமாம் பொங்கழகோ டாற்றலுறும்
முட்ட நரைத்து முதிர்ந்தவனைக்—கட்டழகு
மாதுளத்தி னீங்காது வைத்திடவு மெண்ணமுற்றாற்
றூதுளத்தின் பூவுண்ணச் சொல்.

குணம்:—(இ-ள்.) தூதுளம்பூவால் தேகபுஷ்டி, சுக்கில தாதுவிருத்தி, வனப்பு, சரீரபலம், ஸ்ரீவசியம் ஆகிய இவைகள் உண்டாகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை ஆய்ந்து நெய் விட்டு வதக்கிச் சாப்பிடத் தாதுபுஷ்டி யுண்டாகும். தேஜசும் மிகும்.

தூதுளையிலை.

(Solanum Trilobatum—Leaves).

காதுமந்தங் காதெழுச்சி காசந் தினவுமத
மோதுமந்த முத்தோஷ முட்சூலை—தாதுநட்ட
மீதுளைப் பத்திரியை மேவச்செய் வாராய்ந்தோர்
தூதுளைப் பத்திரியைத் துய்த்து.

குணம்:—(இ-ள்.) தூதுளையிலையால் பாதிரியவாதம், சிலேஷ்ம கர்ணசூலை, இருமல், நமைச்சல், மதரோகம், அக்னிமாந்தம், திரிதோஷம், உட்குத்தல், விந்து நஷ்டம், மேஜுளைப்பு ஆகிய இவை கள் விலகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, கபஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலத்தில் ஒரு பிடி கொண்டு வந்து இடித்து, ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் சிறிது தேன் கூட்டித் தினம் 2-3 வேளை கொடுக் கச் சீதளத்தினுலுண்டான இருமலைக் குணப்படுத்தும். இந்த இலை யைச் சிறிது நெய்விட்டு வதக்கி உப்பு, புளி, காரம் கூட்டித் துவை யலாக அரைத்து அன்னத்துடன் கூட்டிச் சாப்பிடத் தீபனத்தை யுண்டாக்கும். வாயுவையும் கண்டிக்கும். இதன் வேரை வெற்றி லைப் பாக்குடன் தின்றுவர முத்தோஷத்தையும் நீக்கும்.

தெங்கின் கற்கண்டு.

(Cocos Nucifera—Sugar-candy).

நெஞ்சிற் றிமிருஞ்செந் நீரிலழுக் கும்புடையு
மஞ்சுகப வாதமொடு வாதமுமே—விஞ்சுமிளந்
தொங்கினதே கர்க்கயர்வுந் தூயபுத்தி மந்தமுமாந்
தெங்கினது கண்டாற் றெளி.

குணம்:—(இ-ள்.) தெங்கின் கற்கண்டினுல் தொண்டைக்குள் திமிர், உதிரத்திலழுக்கு, சொறி, மேகம், சிலேஷ்ம வாத தொந்தம், வாதகோபம், தளர்ந்த தேகிகளுக்கு ஆயாசம், மந்த புத்தி முதலியவை யுண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—தெங்கின் வெல்லத்தைச் சுத்தப்படுத்திச் செய்கின்ற கற்கண்டானது பெரும்பாலும் தெங்கின் வெல்லத்திற்கு ஒத்திருக்கும். இதன் குணத்தை அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

தெங்கின் குருத்து.

(Cocos Nucifera—Tender leaves).

தென்னங் குருத்தாற் றிருமகளே தீருநோ
யென்னவென் றேங்காதே யெக்காலும்—இன்னலுறும்
மூலரத்தச் சூடுகணம் முந்தும் பெரும்பாடு
ஓலமிட் டோடு மொழிந்து.

குணம்:—(இ-ள்.) தெங்கின் குருத்தால் இரத்த மூலம், கணச்சூடு, பெரும்பாடு இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—அதிக இளசாக உள்ள தெங்கின் குருத்தை மட்டையுடன் நெருப்பனலில் வாட்டிப் பிழிந்தெடுத்த சாற்றில் வேளைக்கு ½-¼ அவுன்ஸ் அளவு உள்ளுக்குக் கொடுக்க இரத்தமூலம், பெரும்பாடு, கணச்சூடு முதலியவைகள் போம். ஆனல் மலபந்தம் உண்டாகும். இன்னும் இது சூட்டினுல் இறுகப்பட்டுள்ள கபத்தை இளகலாக மாறுதலடையச் செய்யும். இதனைத் தினம் 2 வேளையாக 3 நாள் கொடுக்கப் போதுமானது. நீடித்துக் கொடுக்கக்கூடாது.

தெங்கின் மது.

(Cocos Nucifera—Toddy).

நாதவிந் தூறு நளிர்பாண் டொடுசோபை
வாதபித் தங்கிராணி வன்கரப்பான்—பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாந்
தெங்கின்மது விற்கென்றே செப்பு.

குணம்:—(இ-ள்.) தென்னங்கள்ளுக்குச் சோணித சுக்கிலப் பெருக்க முறும். பாண்டுரோகம், வீக்கம், வாத பித்த

தொந்தம், ரத்தக்கழிச்சல், கரப்பான், அதிசாரம், பிரமேகம் ஆகிய இவைகள் உண்டாம். அறிவும் கெடும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—சூரியோதயத்திற்கு ½ நாழிகைக்கு முன்னதாக இறக்கப்பட்ட இனிப்புள்ள கள்ளில் சிறிது சீரகம், ஏலம், கற்கண்டுத் தூள் கூட்டித் தினம் ஒரு வேளை சாப்பிட்டு வரத் தேகத்திற்குச் சுறுசுறுப்பைக் கொடுக்கும். தேகம் பூரித்துக் கொழுமை பெறும். சூடு தணியும், நீர்த்தாரையின் வெப்பு அடங்கும். இது, புளித்துப் போதையை யுண்டாக்கும் பதத்தில் சாப்பிட்டால், போக சக்தியை அதிகப்படுத்தும், புத்தியைக் கெடுக்கும், பல ரோகங்களை யுண்டாக்கும். இதை நீடித்துக் கொள்வதினால் பல தீங்குகள் உண்டு.

தெங்கின் வெல்லம்.

(Cocos Nucifera—Jaggery).

வீக்க மதிகரிக்கும் வெய்யவழல் தானேங்கும்
ஆக்க மதினீ ரதிகரிக்கும்—தூக்கமறும்
தங்கிவிடு நல்லுணவு தான்செரியா மந்தமுறும்
தெங்கினது வெல்லச் செயல்.

குணம்:—(இ-ள்.) தெங்கின் வெல்லத்தால் வீக்கம், தேக காந்தல், நீரேற்றம், அஜீரணம், நித்திரையின்மை முதலியவை உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—தென்னங்கள்ளைப் புளிக்க வைத்துக் காய்ச்சி எடுக்கின்ற வெல்லத்தை உட்கொள்ளும் பானங்களிலும், பலகாரங்களிலும் சேர்க்கச் செரியாமந்தம், நீரேற்றம், வீக்கம் முதலியவைகள் உண்டாகும். ஆகையால் இதனை உபயோகப்படுத்தாமலிருப்பதே உத்தமம்.

தென்னம் பூ.

(Cocos Nucifera—Flower).

மேக மகக்கொதிப்பு வீறு மிரத்தபித்தம்
வேக வசிர்க்கரநோய் வீழ்பிரமி—தேகத்தில்
வின்னம்பா லிக்கும் விஷபாகம் போகவென்றுற்
றென்னம்பா ளைப்பூவைத் தின்.

குணம்:—(இ-ள்.) தெங்கின் இளம்பாளைப்பூவால் பிரமேகம், உட்காய்ச்சல், ரத்தபித்தம், அசிர்க்கரம், ஒழுக்குப்பிரமியம், விஷபாகநோய் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இளசான தென்னம் பூவின்மே லுள்ள பாளையை நீக்கி உள்ளிருக்கும் பூவைப் பூண் இல்லாத உலக்கையால் நன்றாய் இடித்துப்பிழிந்தெடுத்த சாற்றை வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை, சமன் சலத்தில் விளாவிக் கொடுத்துவரப் பெரும்பாடு, வெள்ளை முதலிய ரோகங்கள் தீரும்.

தேங்காயின் நெய்.

(Cocos Nucifera—Oil).

தேங்காயி னெய்யதனற் றீயால் வருபுண்போம்
பாங்காகக் கூந்தல் படர்ந்தேறு— நீங்காத
பல்லடியின் னோயும் படர்தா மரைசிரங்கு
மல்லலறப் போமேன் றறி.

குணம்:—(இ-ள்.) தேங்காயின் நெய்யினால் சத்தியோவிரணம், தந்த மூலரோகம், படர்தாமரை, சிரங்கு ஆகிய இவைகள் போம். மயிர் வளரும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த எண்ணெயைக் கூந்தலுக்குத் தடவிவரச் செழிப்பாக வளரும். இந்த எண்ணெயைச் சுண்ணாம்பு நீருடன் கூட்டி விரலால் சிறிது நேரம் அடிக்க நெய்போல் கட்டி யுரையும். அதை நெருப்புப் பட்ட ரணங்களுக்குத் தடவி வர விரை வில் ஆறும். இதனை, விரணங்களுக்காகச் செய்யப்படுகின்ற பலவித மான களிம்புகளினும் எண்ணெய்களினும் சேர்ப்பதுண்டு. இந்த எண்ணெயைச் சில பிரதேசங்களில் நல்லெண்ணெய்க்குப் பதிலாகச் சமையல் பாகங்களில் சேர்ப்பதுண்டு.

தேங்காய்ப் பால்.

(Cocos Nucifera—Milk).

வாதமாம் பித்தமுறும் வன்கரப்ப னும்படருந்
தாதுவும் விருத்தியாந் தாழ்குழலே—யோதநல்ல
அன்ன மிறங்கு மதியுரிசை யுண்டாகுந்
தென்னங்காய்ப் பாலாற் றெளி.

குணம்:—(இ-ள்.) மிருமதுரத்தால் உணவை யுட்செலுத்து கின்ற தெங்கின்பாலால் வாதவிகாரம், பித்தவாதிக்கம், கரப்பான், சுக்கில விருத்தி முதலிய உண்டாகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—தேங்காய்ப்பாலை அன்னத்துடனுவது அல்லது பலகாரங்களுடனுவது சேர்த்துண்ணச் சுத்தரத்த முண்டாவதுடன் தாதுபலப்படும். இன்னும் இடுப்புவலி, கீல் வாதம், பாரிசவாதம், ரணம், தேக அழற்சி, மூலம், வாய்நாற்றம் முதலியவைகள் குணமாகும். இந்தப் பாலை அதிக அளவாக உட்கொண்டால் பேதியாகும். தேங்காயுடன் கசகசா சேர்த்து அரைத்துப் பிழிந்தெடுத்த பாலைக் குழம்புகளில் சேர்க்க மிளகாயின் வீறை அடக்கி வாய்க்கு ருசியைக் கொடுக்கும். ஆனுல் இது சிறிது பித்தத்தையும், கரப்பானையும் உண்டாக்கும். இந்தப் பாலை வாய் கொப்புளிப்பதனுலும் உள்ளுக்கு அருந்துவதாலும் ரசத்திஞலுண்டான வாய் வேக்காடு குணமாகும்.

தேங்காய்ப்பிண்ணுக்கு.

(Cocos Nucifera—Cake).

சொறிசிரங்கு புண்ணுமாந் தோலாக் கரப்பான்
மறுவாகு மேனியெல்லா மாதே—சிறுக
வயிற்றிற் புழுவினங்கண் மாரு துதிக்குஞ்
சுயத்தேங்காய்ப் பிண்ணுக்காற் சொல்.

குணம்:—(இ-ள்.) தேங்காய்ப் பிண்ணுக்கினுல் நமைச்சல், சிரங்கு, விரணம், நீங்காத கரப்பான், மறு, மலாசயக் கிருமிகள் முதலிய வுண்டாகும்.

உபயோகிக்கும் முறை:—தேங்காய்க் கொப்பரையைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் பிரித்தபின் தள்ளப்பட்ட பிண்ணுக்குடன் சிறிது வெல்லம் சேர்த்து உண்பதுண்டு. இதனுல் சொறி, சிரங்கு, நமைச்சல், சரீரமெங்கும் மறு, வயிற்றில் கிருமிகள் முதலிய உண்டாகும். ஆகையால் இதனை அசுத்த உணவாகக் கூறுவர்.

தேட்கொடுக்குச் செடி.

(Heliotropium Indicum).

**தேட்கொடுக்குண் டாயிற் றினவடங்குந் தப்பாது
நாட்பட்ட புண்கரப்பான் நாசமாங்—கீட்பட்ட
மாந்த கணமுமறு மானிலத்துட் சில்விஷம்போம்
போந்தமருந் தாகும் புகல்.**

குணம்:—(இ-ள்.) பொதுவாகத் தேட்கொடுக்குச் செடியால் நமைச்சல், பழைய விரணம், கடுவன், கணமாந்தம், அற்பவீரிய விஷம் ஆகிய இவைகள் விலகும் என்க.

இந்த இனத்தில் சிறுதேட் கொடுக்குச் செடியென்றும், பெருந் தேட்கொடுக்குச் செடியென்றும் இரண்டு வகைகள் உண்டு. அவைகளின் உபயோகங்களை அதனதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

தேயிலை.

(Camellia Theifera—Leaves).

**ஊக்கமிக வாகும் உடம்பின் நரம்பிறுகும்
தூக்கமது தோன்றுதே தோகைநல்லாய்—ஏக்கமுறச்
செய்திடுமே பிற்பலந்தான் சேர்பித்த குன்மவகை
கோய்தநற் றேயிலையாற் கூறு.**

குணம்:— (இ-ள்.) உலர்ந்த தேயிலை மனத்திற்கு உற்சாகம், நரம்புகளுக்குப் பலம் கொடுக்கும். ஆனால் நித்திரை பங்கம் உண்டாக்கும். நீடித்து உபயோகப்படுத்துகின்றவர்களுக்குக் குன்மமும் பித்தமும் உண்டாக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—தேயிலைக் கியாழத்தால் சொறி சிரங்குகளைக் கழுவிவர விரைவில் ஆறும். ஒரு விராகனெடை தேயிலையை ஒரு ஈயம் பூசிய பாண்டத்தில் போட்டு அதனில் 5 அவுன்ஸ் கொதிக்கிற சலம் விட்டு வாய்மூடி 3 நிமிஷம் சென்றபின் வடிகட்டி அதனில் போதிய அளவு பசுவின் பாலும் சர்க்கரையும் கூட்டிப் பானம் செய்வதுண்டு. இதனால் மனோமுயற்சியினாலும் அதிக உழைப்பினாலும் ஏற்பட்ட நரம்புகளின் தளர்ச்சி போகும். பால், சர்க்கரை சம்பந்தப்படாத தனிக் கியாழத்தை அபினி,

ஊமத்தை முதலியவைகளால் உண்டான வெறிக்குக் கொடுக்கத் தூக்கம் வரவொட்டாமல் தடுத்து அவ் விஷத்தையும் முறிக்கும். காபி பானத்தைவிடத் தேயிலை பானத்திற்குத் தீய குணம் குறைவு என்று அனுபவத்தில் கண்டிருக்கிறது. இந்தத் தேயிலைப் பான மானது நித்திரை பங்கம் செய்யும் சுபாவமுடையதாதலால் காலை யில் அருந்துவதே சிறந்தது. இதனை மாலை 3 மணிக்கு மேல் உப யோகப்படுத்துவராயின் அன்றிரவு நித்திரையைக் கெடுத்துவிடும். இதனால் பல பிணிகளுக்கும் இடமாகும். இந்தத் தேயிலைப் பானத்தை வழக்கமாக அடிக்கடி உபயோகப்படுத்தி வந்தால் குன் மம், அக்கினிமந்தம் முதலிய ரோகங்களை யுண்டாக்கி முடிவில் ஆயுளைக் குறைக்கும். இந்தத் தேயிலையை அளவுக்கு மிஞ்சிக் கியா ழம் இட்டுப் பானம் செய்து குடிப்பவர்களுக்கு இருதயம் பல வீனப்படும், ஒக்காளம் வாந்தி உண்டாகும், வாயுவினால் வயிற்றுப் பொருமல் உண்டாகும், கீல்கள் தளர்ச்சி அடையும், நாடியின் வேகம் மெலியும், தலைநோயும், இரவில் கெட்ட கனவுகளும் உண் டாகும்.

தேவதாரு.

(Pinus Deodara).

தேவதா ருக்குணந்தான் சேர்ந்துவளர் பீநசத்தைக்
காவகத்தி லோட்டுங் கரப்பலவே—மாவலர்கள்
சொல்லும்பு ராண சுரமொடுநீ ரேற்றத்தை
வெல்லு மனற்றணிக்கும் விள்.

குணம்:—(இ-ள்.) தேவதாருக்கட்டை நாசிகாரோகம், புராண சுரம், சலதோஷம், சரீரவெப்பம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:-ஒரு தோலா தேவதாருக்கட்டையைப் பஞ்சுபோல் இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, இரண்டு பங்காகச் செய்து, சிறிது பால், சர்க்கரை கூட்டிக் காலைமாலை கொடுத்து வரத் தோல் சம்பந்தமான பல விரணங்கள், பீநசம், பழைய சுரம், நீரேற்றம் போம்.

5 பலம் தேவதாருக்கட்டை, 5 பலம் நாகப்பட்டை இவை யிரண்டையும் பஞ்சுபோல் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு

2 படி சலம்விட்டு $\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டி, இதனுடன் $1\frac{1}{2}$ வீசை பூராச்சர்க்கரை கூட்டிச் சர்ப்பத்துப் பதமாகக் காய்ச்சி வடிகட்டிப் பத்திரப்படுத்துக. இதனைத் தினம் இருவேளை ஒரு அவுன்ஸ் வீதம் சலத்தில் விளாவிக் கொடுத்துவர நீர் எரிச்சல், நீர்க்குத்தல், இரத்தமூலம், பெரும்பாடு, உட்சூடு, அதிதாகம் முதலியவைகள் போம். இந்த மரத்திலிருந்து எடுக்கப்படும் தைலத்தைச் சிரங்கு, புண்களுக்குப் போட ஆறும். இதனை வேளைக்கு 5-6 துளி சர்க்கரையுடன் கூட்டிக் கொடுக்கத் துஷ்டரணங்கள் ஆறும்.

தேற்றுங்கொட்டை.

(Strychnos Potatorum—Seeds).

பிரமிவெள்ளை வெப்புபசி பேராக் கடுப்போ
டெரிகிரிச்ச ரம்புண்ணு மின்றும்—வருமந்தந்
தேற்றுங்கொட் டைக்கஃதோ திட்டி மருந்தாகுங்
கூற்றுங்கண் மாதேநீ கோள்.

குணம்:—(இ-ள்.) தேற்றுங் கொட்டைக்குப் பிரமேகம், வெட்டை, உட்சூடு, ஜடராக்கினி, வயிற்றுக்கடுப்பு, எரிகின்ற மூத்திரக்கிரிச்சரம், உள்விரணம் இவைகள் நீங்கும். மந்தம் உண்டாம். அது கண்ணுக்கு மருந்தாம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கொட்டையைச் சந்தனக் கல்லில் உரைத்துச் சலத்தில் கலந்துவிட்டால் அந்தச் சலத்தினுள்ள அசுத்தங்களை யெல்லாம் பிரித்துத் தெளிவாக்கிவிடும். இந்தக் கொட்டையை ஒருநாள் முழுதும் ஊற விட்டு மறுநாள் வில்லை வில்லையாக அரிந்து சலம் வைக்கும்படியான பானையின் உட்புறம் தேய்த்து ஆறவிட்டு அதில் சலம் விட்டு வைக்கச் சலம் தெளிந்து சுத்தமாக இருக்கும். இதனை ஆரோக்கிய பானமாகக் கொள்ளலாம். ஊறப்போட்டு எடுத்த கொட்டையை மெழுகுபோல் அரைத்தாவது அல்லது உரைத்தாவது வீக்கங்களுக்குத் தடவி வர வீக்கம் 2-3 வேளையில் நீங்கிச் சதை சுருக்கம் அடையும். $\frac{1}{2}$ அல்லது 1 கொட்டையைச் சந்தனக்கல்லில் உரைத்துப் பசுவின் மோரில் கலக்கி ஒரு வாரம் காலை மாலை கொடுக்க நாட்சென்ற பேதி போம். இப்படிப் பாலில் கலக்கிக் கொடுக்க நீர் சம்பந்தமான ரோகங்கள், வெள்ளை முதலியவைகள் போம்.

தேற்றான்பழம்.

(Strychnos Potatorum—Fruit).

தேற்றான் கனிதனக்குச் சேயிழையே வன்காசந்
தோற்ற தொழியுஞ் சுவாசமும்போஞ்—சாற்றின்மிக
வாந்தி பெருகு மலம்போமுத் தோஷத்தைச்
சேர்ந்த பிணிகளும்போஞ் செப்பு.

குணம்:—(இ-ள்.) தேற்றான்பழத்தால் வாத இருமல், இரைப்பு, மலக்கட்டு, திரிதோஷரோகங்கள் ஆகிய இவைகள் போம். வமனம் உண்டாம் என்க.

செய்கை:—வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தைச் சாப்பிட வாந்தியாகும், கோழைக் கட்டுகளை வெளியாக்கும். இதன்பொருட்டு இந்தப் பழத்திலுள்ள திரவத்தை ஓர் சுத்தமான வெள்ளைச் சீலைக்கு ஊட்டி உலர்த்தி வைத்துக்கொள்வதுண்டு. பழங்கிடைக்காத காலங்களிலும், பழங் கிடைக்காத பிரதேசங்களிலும் இந்தச் சீலையைச் சிறிது சலத்தில் போட்டுக் கசக்கிக் கசக்கி அதன் சத்து எல்லாம் சலத்தில் கலந்தபின் அதை உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. இது விசேடமாக சிறு குழந்தைகட்குக் கோழை மிகுந்து கஷ்டப் படுங் காலத்தில் ஒரு சிறந்த அவிழ்தமாகும். இதனைப் பண்டிதர்கள் மாந்த சீலை என்று கூறுவர்.

தொட்டாற்சுருங்கி.

(Mimosa Pudica).

மேகநீ ரைத்தடுக்கு மேதினியிற் பெண்வசிய
மாகவுன்னி னல்கு மதுவுமன்றித்—தேகமிடைக்
கட்டாகக்காட்டுகின்ற காலைத் துரத்திவிடுந்
தொட்டாற் சுருங்கியது சொல்.

குணம்:—(இ-ள்.) தொட்டாற்சுருங்கி மேகமூத்திரத்தை நீக்கும், பெண்வசியம் செய்யும், உடலில் ஓடிக் கட்டுகின்ற வாதத் தடிப்பைக் கரைக்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் தொட்டாற்சுருங்கி வேரைப் பஞ்சுபோல் தட்டி ஒரு மட்குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி

வடிகட்டி வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுக்கவும். அல்லது ஒரு பங்கு இலைக்கு 10 மடங்கு கொதிக்கின்ற சலம் விட்டு ஆறினபின் வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுக்கவும். இவற்றால் நீர் அடைப்பு, கல்லடைப்பு தீரும். இதன் இலையையும் வேரையும் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1 விராகனெடை பசுவின்பாலில் போட்டுக் கொடுத்துக் கொண்டுவர மூலம், பவுத்திரம் போம். இதன் இலைச்சாற்றைப் பவுத்திர, மூல ரணங்களுக்கு ஆசனத்தில் தடவிவர ஆறும். இதன் இலையை மெழுகுபோலரைத்து விரைவாதம், கை கால் மூட்டுக்களின் வீக்கம் இவைகட்கு வைத்துக்கட்டக் குணமாகும். இதன் இலைச்சாற்றைப் பஞ்சில் தோய்த்து ஆறாத ரணங்களுக்கு உட் செலுத்திவைக்க ஆறிவரும். இதன் இலையை ஒரு பெரிய மட் கடத்தில் போட்டுச் சலம்விட்டு வேகவைத்து இடுப்பிற்குத் தாளும்படியான சூட்டில் தாரையாக விட இடுப்புவலி, குண்டிக்காய்வலி நீங்கும்.

நஞ்சறுப்பான்பூண்டு.

(Tylophora Asthmatica).

தொடுநஞ்சு நாவாரத் துய்க்குநஞ்சு மற்றே
ரிடுநஞ்சுந் தாவர நஞ்சேறிப்—படுநஞ்சுங்
கூண்டுடனே காதோ குயின்மொழியாய் நஞ்சறுப்பான்
பூண்டுதனை நீயெடுக்கும் போது.

குணம்:—(இ-ள்.) நஞ்சறுப்பான் பூண்டினால் கீடசர்ப்பம் தீண்டுதலாலும், தானே நுகரலாலும், இடுமருந்தாலும், பாஷாணங்களாலும் வியாபித்த விஷம் தீரும் என்க.

செய்கை:—வமனகாரி, சுவேதகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உலர்ந்த இலையை இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 3-5 குன்றி எடை வெந்நீரில் போட்டுத் தினம் 3 வேளை கொடுக்க வியர்வை விடும். கபத்தைக் கண்டிக்கும்; சீதபேதி, அதிசாரபேதி இவைகளை நீக்கும். குழந்தைகளுக்கு வரும் கக்குவாய் இருமலுக்கு வேளைக்கு 1-1$\frac{1}{2}$ குன்றி எடை முன்போல் கொடுக்கக் கபத்தை இளகச் செய்து இருமலையும் சாந்தப்படுத்தும். இந்தச் சூரணத்தை 10-15 குன்றி எடை உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும். இந்தச் சூரணத்தை வேளைக்கு 5 குன்றி எடையாகத்

தினம் 3 வேளை நீடித்துக் கொடுக்க மேக வாயுவினுல் நேர்ந்த பிடிப்பு நீங்கும். இந்த மூலிகை கசப்புச் சுவையை உடையதாதலா லும் வாந்தியை யுண்டாக்கின்ற குணமுடையதாதலாலும் விஷக்கடி களுக்கு அதிகமாகக் கொடுப்பதுண்டு.

நத்தைச்சூரி.

(Spermacosae Hispida).

சுத்தமுறு மாநத்தைச் சூரியெனும் பூண்டதனல்
மெத்தநல மேயுண்டாம் மேதினியில்—வித்திற்கோ
வெப்ப முறுபேதி வெண்சீதக் கட்டுப்போம்
துப்பறிந்த மாதேநீ சோல்.

குணம்:—(இ-ள்.) நத்தைச்சூரிப் பூண்டால் தேகத்திலுள்ள பல பிணிகள் நீங்கும். வித்தின் உபயோகத்தால் உஷ்ணபேதி, சீதபேதி இவைகள் நீங்கும் என்க.

(இதுவுமது)

கணத்திலெழு மாந்தத்தைக் காணுவுட் சூட்டைக்
கணத்திலே வேரைக் களையும்—மணத்தமுலைப்
பாலைச் சுரப்பிக்கும் பாரிற் குழிமீட்டான்
காலைத் தொழுதுண்ணுங் கால்.

(இ-ள்.) குழிமீட்டான்பூண்டு கணமாந்தத்தையும், உள் வெப் பத்தையும் போக்கும். முலைப்பாலைச் சுரக்கும்படிச் செய்யும் என்க.

செய்கை:—வேருக்கு—வியதாபேதகாரி, பலகாரி. வித்துக்கு— அந்தர்ஸ்நிக்தகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:-இந்த வேரானது பார்வைக்கு நன்னாரி வேரைப்போல் தோன்றும். இதை வாயிலிட்டு மென்றால் சிறிது இனிப்பாக விருக்கும். இவ்வேரில் ½ பலம் எடுத்து, ஒன் றிரண்டாக இடித்துக் கால்படி கொதிக்கும் நீரிற் போட்டு, 2 மணி நேரம் ஊறிய பின்னர் வடிகட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு 1 அல்லது 1½ அவுன்ஸ் வீதம், தினம் 3 வேளை கொடுத்துவரத் தேக முழுவதும் பற்றியாவது, அல்லது ஒரு அவயவத்தைப் பற்றி யாவது உண்டாகிற நோய் படிப்படியாகக் குணப்படும். இதிற் கால் பலம் வேரைப் பசுவின்பால் விட்டரைத்து, வடிகட்டித் தினம் இருவேளை ஸ்திரீகளுக்குக் கொடுத்துவர முலைப்பால் சுரப்புண் டாகும்.

இதன் விதையைச் சூரணம் செய்து, 2 பங்கு சர்க்கரையுடன் கூட்டி லேகியமாகச் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ விராகனெடை, தினம் 3 வேளை கொடுத்துவர, உஷ்ணபேதி, சீதபேதி முதலியவைகள் குணமாவதுடன் தேகமும் குளிர்ச்சி பெறும். இவ்வித்தைப் பொன்மேனியாக வறுத்துப் பொடி செய்து, காப்பித்தூளிற்குப் பதில் உபயோகிப்பதுமுண்டு. இதனால் தேகம் குளிர்ச்சி பெறும்.

நந்தியாவட்டப்பூ.

(Tabernaemontana Coronaria—Flower).

காசம் படலங் கரும்பாவைத் தோஷமெனப்
பேசுவிழி நோய்களையும் பேர்ப்பதன்றி—யோசைதரு
தந்திபோ லேதெறித்துச் சாருமண்டை நோயகற்று
நந்தியா வட்டப்பூ நன்று.

குணம்:—(இ-ள்.) நந்தியாவட்டப்பூவானது நேத்திரகாசம், படலம், லிங்கநாச தோஷங்கள், சிரஸ்தாபரோகம் ஆகிய இவைகளை விலக்கும் என்க.

செய்கை:—உக்கிரரோகசமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதில் ஒற்றைப்பூ, இரட்டைப்பூ, என்கிற இரண்டு இனமுண்டு. இவைகளுக்கெல்லாம் குணம் ஒன்றே. கண்களில் உண்டான கொதிப்புக்கு இந்தப் புஷ்பத்தைக் கண்களை மூடிக்கொண்டு மிருதுவாக ஒற்றடம் கொடுக்கக் கண் எரிச்சல் நீங்கிக் குளிர்ச்சியாகும். இதன்வேரைவாயிலிட்டு மென்றுதுப்பிவிடப் பல்வலி நீங்கும். நந்தியாவட்டம்பூவும் தேட் கொடுக்கிலையும் ஓர் நிறையாகக் கசக்கிக் கண்களில் இரண்டொரு துளிவிட்டுக் கொண்டுவர, சில தினத்தில் கண்களில்காணும்பூ எடுபடும். சண்பகப்பூ 60, கார்எள்ளுப்பூ 100, நந்தியாவட்டப்பூ 100, இவைகளைச் சுத்தமாகத் தூசி மண் முதலியவைகள் இல்லாமல் இதழ்களாகச் சுத்தமான கல்வத்தில் போட்டு அதனுடன் துளசிவேர், சங்குப்பொடி, மண்டை ஓட்டுப் பொடி வகைக்குக் கழஞ்சு 1, மயில் துத்தம் கழஞ்சு 2, கூட்டிப் புளியம்பூச் சாற்றினும், எலுமிச்சம் பழச் சாற்றினுமாக அரைத்துப் பலப்பக்குச்சிபோல் திரட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் உரைத்துக் கண்களுக்குத் தீட்டிவரக் கண்வலி, பூவீழ்தல், சதைவளர்ச்சி முதலியவைகள் போம்.

நந்தியாவட்டப்பூ காம்பு நீக்கியது பலம் 2, சிறு களாப்பூ பலம் 2 இவை இரண்டையும் ஒரு சுத்தமான வெள்ளை புட்டியில் போட்டு இந்தப் புஷ்பங்கள் மூழ்க, நன்றாய்க் கழுவிச் சுத்திசெய்த எள்ளைச் செக்கிலிட்டாட்டி யெடுத்த நல்லெண்ணெய் 3 சேர் விட்டுப் புதிய சடை கார்க்கால் அழுத்தமாக அடைத்து உள்ளே சலம் செல்லாமல் மெழுகினுல் சீலை செய்து மண் தரையான பசுவின் தொழுவத்தில் ஓாடி ஆழத்தில் 40 நாள் புதைத்து வைத்து எடுத்து ரவி முகத்தில் 21 நாள் வைத்தபின்னர் வடிகட்டி வைத்துக்கொள்க. இந்தத் தைலத்தைக் கண்களுக்கு வேளைக்கு 1-2 துளி வீதம் தினம் இருவேளை காலை மாலை விட்டுக்கொண்டுவர கண்களில் உண்டாகும் பூ, சதைவளர்ச்சி, பலவித கண்படலம், பார்வை மந்தம் முதலியவைகள் குணமாகும். இது கண் ரோகங்களுக்கு இன்றியமையாததாகும்.

நல்லநெருஞ்சில்.

(Tribulus Terrestris).

நல்ல நெருஞ்சிலது நாளுங் கிரிச்சரத்தை
வல்ல சுரமனலை மாற்றுங்காண்—மெல்லியலே
மாநிலத்திற் கல்லடைப்பும் வாங்காத நீர்க்கட்டுங்
கூனுறுமெய் வாதமும்போக் கும்.

(இதுவுமது)

மேகவெட்டை நீர்ச்சுறுக்கு வீறுதிரி தோஷம்புண்
வேகசுர தாகவெப்பை விட்டோட்டும்—போகந்
தருஞ்சின் மதலைமொழித் தையலே நல்ல
நெருஞ்சி லதனை நினை.

குணம்:—(இ-ள்.) நல்லநெருஞ்சில் சொட்டுமூத்திரம், சுரவெப்பம், அஸ்மரிரோகம், நீரடைப்பு, முடவாதம், பிரமேக வெள்ளை, மூத்திரகிரிச்சரம், திரிதோஷகோபம், விரணம், சுரதாகம், உஷ்ணம் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, காமவிர்த்தினி, பலகாரி, தாதுக்ஷீணஹ்ராதி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பிடி நெருஞ்சிலின் பசசை யிலையைச் சிறுக அறிந்து ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி

சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கப் பிரமேகம், நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு இவைகள் போம். இதன் இலையையும் வேரையும் துண்டு துண்டாக நறுக்கி ஒரு குடுவையில் போட்டு அதனுடன் அரிசிகூட்டி நீர்விட்டு அடுப்பில் வைத்து, அரிசி வெந்த சமயம் வடித்தெடுத்தக் கஞ்சியைச் சர்க்கரை கூட்டிக்கொடுக்கச் சிறுநீர் தாராளமாக இறங்கும். இதன் கொழுந்து இலையை ஒரு பிடி கொண்டுவந்து அலம்பிச் சிறுக அரிந்து வெந்த துவரம்பருப்புடன் கூட்டித் துவட்டலாகச் செய்து உண்ண நீர் இறங்கும், நீர்க்கடுப்பு, வீக்கம் இவைகள் போம்.

இந்த இனத்தில் யானைநெருஞ்சிலென்றும், செப்பு நெருஞ்சிலென்றும்வேறு இரண்டு விதங்கள் உண்டு. அதனதன் குணபேதங்களை அதனதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

நல்லநெருஞ்சில் வித்து.

(Tribulus Terrestris—Thorn).

சொல்லவொண்ணு நீர்க்கட்டு துன்மா மிசமருகல்
கல்லடைப்பெ னும்பிணிகள் கண்டக்கால்—வல்லக்
கடுஞ்சினவேற் கண்மாதே காசினியிற் றேன்று
நெருஞ்சினறும் வித்தை நினை.

குணம்:—(இ-ள்.) நல்லநெருஞ்சில் வித்துக்கு மூத்திரக்கட்டு, சதையடைப்பு, கல்லடைப்பு முதலியவைகள் நீங்கும் என்க.

(இதுவுமது)

மேக வழலாற்றும் மேவுநீர்க் கட்டறுக்கும்
போகமதி லின்பமுமே பூரிக்கும்—மோகமிக
உண்டாக்கும் மெல்லியர்பால் ஓது நெருஞ்சின்முள்
கொண்டார்க்கிங் கிக்குணத்தைக் கூறு.

(இ-ள்.) நெருஞ்சில் வித்தால் மேக அனல், நீர்க்கட்டு முதலியவைகள் போம். இணைவிழைச்சில் புத்தி அதிகமாகச் செல்லும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த வித்தைப் பசுவின்பாலில் போட்டு வேக வைத்து உலர்த்தி, இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா எடை பசுவின்பாலில் போட்

டுச் சர்க்கரை சேர்த்துத் தினம் 2 வேளை கொடுத்து வரத் தாது கட்டும். இளநீரில் போட்டுக்கொடுக்க நீர்க்கட்டு நீங்கும். சுத்திசெய்த நெருஞ்சிமுள் சூரணம் தோலா 9, வால்மிளகு, சிறுநாகப்பூ, வெடியுப்பு வகைக்குத் தோலா 3, இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5-10 குன்றி எடை இளநீரில் கொடுத்துவரச் சிறுநீர்த் தாராளமாகப் போகும்.

நல்லவெல்லம்.

(Jaggery).

குன்மபித்தம் போக்குமதி கோழைதனை யுண்டாக்குந்
துன்மலத்துட் கீடத்தைத் தோற்றுவிக்கும்—நன்மைபோல்
மெல்லமது நீரை விளைவிக்கு மாமதுர
வெல்லமென நாளும் விளம்பு.

குணம்:—(இ-ள்.) நல்லவெல்லம் பித்த குன்மத்தை நீக்கும்; நெஞ்சிற் கபக்கட்டு, மலாசயக்கிருமி, மதுமேகம் இவைகளை யுண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது கரும்பின் சாற்றிலிருந்து காய்ச்சப்படுகிறது. இதனைக் காப்பி, பாயசம் முதலான பானங்களிலும், சர்க்கரைப்பொங்கல், அதிரசம் முதலான பண்டங்களிலும் விசேடமாக உபயோகப்படுத்துவதுண்டு. இது அதிக உஷ்ண குணம் பொருந்தியது. ஆகையால் பானவர்க்கங்களில் பாலை அதிகப்படுத்தியும், பண்டவர்க்கங்களில் நெய்யை அதிகப்படுத்தியும் உபயோகித்தல் வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறின் சூடு செய்யும். இதற்கு நெஞ்சில் கபத்தைக்கட்டுகிற குணமுண்டு. இது அதிக இனிப்புச் சுவையுடையதாதலால் வயிற்றில் கிருமிகளையும், சிறுநீரில் இனிப்பையும் தவறுமல் உண்டாக்கும்.

நல்வேளை.

(Gynandropsis Pentaphylla).

சிரநோய் வலிகுடைச்சல் தீராச் சயித்ய
முரநோ யிவைக ளொழியு—முரமேவும்
வில்வேளைக் காயும் விழியாய் பசிகொடுக்கும்
நல்வேளை தன்னை நவில்.

(இதுவுமது)

நல்லவே ளைப்பூண்டை நாடுங்கால் வாதமும்போஞ்
சொல்லும்ஐ யத்துடனே சோபையறும்—மெல்லமெல்லத்
தக்கவன லும்பித்துந் தானெழும்புஞ் சாந்தமின்றி
யக்கரநோய் விஞ்சு மறி.

குணம்:—(இ-ள்.) நல்வேளையினால் சிரஸ்தாபரோகம், சரீர நோவு, குடைச்சல், சீதளம், மார்புவலி, வாததோஷம், கபகோபம், வீக்கம் இவைகள் போம். பசியும், சூடும், பித்தாதிக்கமும், ஜிக்வா கண்டகரோகமும் உண்டாம் என்க.

செய்கை:—ஷோணகாரி, துவக்ஸ்போடகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைத் தனியாக உபயோகப் படுத்துவதைவிட இதர சில கீரைகளாகிய மூக்கரட்டை, காணுவாழை, சாறுவேளை, குப்பைமேனி, பிண்ணாக்குக்கீரை முதலியவற்றுடன் கலந்து துவட்டலாக வதக்கித் தாளித்து அன்னத்துடன் கூட்டிச் சாப்பிட வாதசம்பந்தமான ரோகங்கள், சீதள சம்பந்தமான ரோகங்கள் போம். இந்த வேளைக்குரிய முக்கிய குணமென்னவெனின் வாயுவைக் கண்டிக்கும், நீரை வறட்டும், வயிறு நொந்து மலத்தை வெளியாக்கும், ஸ்திரீகளுக்குச் சிக்குப்பட்டுள்ள உதிரத்தை வெளியாக்கும். இத்தகைய பதார்த்தங்களை உட்கொள்ளும்போது நெய் அதிகமாக விட்டுப் புசிக்கச் சிறிது பரிகாரமாகும்.

நல்வேளைப்பூ.

(Gynandropsis Pentaphylla—Flower).

கணமாந்தம் வாதங் கபக்கோவை கோழை
யணுமாந்த வெப்பு மகலு—மணமாரும்
பாளைக் குழலே பசிமெத்த வுண்டாகும்
வேளைப்பூ வென்றுரைகால் விள்.

குணம்:—(இ-ள்.) வேளைப்பூவினால் மாந்தகணம், வாதகோபம், சலதோஷம், மார்புசளி, மாந்தசுரம் இவைகள் நீங்கும். தீபனமுண்டாகும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, கபஹரகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தைப் பிட்டவித்து அல்லது வதக்கிக் கசக்கிப் பிழிந்தெடுத்தச் சாற்றை வடிகட்டிக்

குழந்தைகட்கு 10 முதல் 15 துளி வீதம் கோரோசனை மாத்திரை, கஸ்தூரி மாத்திரை இவைகளில் ஏதேனும் ஒன்றை உரைத்து மத்தித்துக் கொடுக்க, மாந்தம், மார்புசளி, சுரம் முதலியவைகள் போம், தீபனம் உண்டாகும். இதனைப் பெரியவர்களுக்கு ஏற்றவாறு $\frac{1}{4}$–$\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு முற்கூறப்பட்ட ஏதேனும் ஒரு மாத்திரையுடன் அநுபானம் செய்து கொடுக்கச் சலதோஷம், இருமல், சுரம், அக்கினிமந்தம் முதலியவை குணப்படும்.

நல்வேளை வித்து.

(Gynandropsis Pentaphylla—Seeds).

கட்டமுறு முந்திவலி காணுங் குடரிரைச்சல்
துட்ட மலக்கிருமித் தொல்லையெலாம்—விட்டகல
நல்வேளை வித்ததனை நன்னுதலாய் உட்கொள்ள
நல்வேளை வந்ததென்றே நாடு.

குணம்:—(இ-ள்.) நல்வேளை வித்தினால் வயிற்றுவலி, வயிற்றுப் பொருமலுடன் இரைச்சல், வயிற்றிலுண்டான கிருமிசேர்க்கை முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:— அங்காகர்ஷணநாசினி, கிருமிநாசினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:— இந்த விதையைச் சிறிது நெய்விட்டு வறுத்துப் பொடிசெய்து குழந்தைகளின் வயதுக்கு ஏற்றபடி 5-6 குன்றி எடையும், பெரியவர்களுக்கு $\frac{1}{2}$-1 விராகனெடையாகவும் தினம் 2 வேளை 2 நாள் கொடுத்து, மூன்றாவது தினம் காலையில் சிற்றாமணக்கு எண்ணெய் கொடுக்க வயிற்றிலுள்ள தட்டைக் கிருமிகள் வெளியாகும். இதனால் குழந்தைகளுக்குச் சில சமயம் காணும் வயிற்றுவலி, இழுப்பு முதலியவைகள் போம். ஒரு விராகனெடை விதையை வேக வைத்தாவது நெய் விட்டு வறுத்தாவது அரைத்து, வீசம்படி வெந்நீரில் கலக்கி ஒரு சிட்டிகை உப்புத்தூள் போட்டுக் கொடுக்கச் சுளுக்கு நீங்கும். இந்த வித்தைக் காடி, எலுமிச்சம்பழச்சாறு, சலம் இவைகளில் ஏதேனும் ஒன்றை விட்டு மெழுகுபதமாக அரைத்துக் களிபோல் கிளறிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட உடைத்துக்கொள்ளும்.

நறுந்தாளி.

(Convolvulus Gemellus).

நாவு களமரும நாபிமு லங்களிலுட்
டாவி வருமிரணஞ் சாத்தியமாங்—கூவவிடு
மெய்யழலு மேதணியு மேகமறும் வீரியமா
முய்யவேனி னற்றளி யுண்.

குணம்:—(இ-ள்.) நறுந்தாளியினால் நா, தொண்டை, மார்பு, உந்தி, மூலம் இவற்றின் புண்கள், தேகவெப்பம், பிரமேகம் இவைகள் போம். சுக்கில முண்டாகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, சமனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைச் சுத்தமாக அலம்பித் துவரம்பருப்புடன் கூட்டிப் பாகப்படிக் கடைந்து அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுப் புசிக்க உள்ளுறுப்புக்களில் உண்டான எல்லாவிதமான அழலை, விரணம் முதலியவைகள் போம். இந்திரியம் கட்டும்.

நறுமுன்னை.

(Premna Integrifolia).

வாயருசி சோபையைய மாருக் கரப்பனெழும்
வாயுமந் தாக்கினியு மாமயக்க—நோய்க
ளறுமுன்னை யுன்னுவர்கட் காழி யுலகி
னறுமுன்னை தன்னிலையை நாடு.

குணம்:—(இ-ள்.) பசுமுன்னையிலையால் அரோசகம், வீக்கம், கபம், கரப்பான் இவைகள் உண்டாகும். ஆனால் வாததோஷமும், அக்கினி மந்தமும், மயக்கமும் போம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி, உதரவாதஹரகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையினெடைக்குப் பத்துப் பங்கு சலம் விட்டுக் கால்பாகமாகக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கலாம். இதன் கீரையைப் பருப்புடன் கூட்டிக் குழம்பாகச் செய்து சாப்பிடலாம். இது வாத ரோகத்தையும், பசி மந்தத்தையும், மயக்கத்தையும் கண்டிக்கும். ஆனால் வீக்கம், கரப்பான், கபம் முதலியவற்றை யுண்டாக்கும்.

நறுமுன்னைவேர்.

(Premna Integrifolia—Root).

முன்னைவேர் வாத முதிரேப்பந் தான்போக்கு
மன்னமி றக்கு மதனிலைதான்—சொன்ன
வியல்வாத மெண்பதையு மில்லையெனச் செய்யுங்
கயல்பொருவுங் கண்ணாய் கருது.

குணம்:—(இ-ள்.) பசுமுன்னை மரத்தின்வேர் வாதம், சித்மாரோகத்தை நீக்கும். இதன் இலை உணவைச் செலுத்துவதுந் தவிர வாதரோகம் எண்பதையும் நீக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி, பலகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேர்ப்பட்டையில் ஒரு பலம் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ¼ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு தினம் 3 வேளை கொடுக்க, வாதரோகத்தையும், ஊர்த்துவமுகமாய் வாயு கிளம்பி அதிக ஏப்பத்தை யுண்டாக்கின்ற ரோகத்தையும் கண்டிக்கும். இதன் இலையின் உபயோகம் முன்னரே கூறப்பட்டுள்ளது.

நறுவிலிமரம்.

(Cordia Myxa).

நறுவிலியி லைக்கிரத்த நாசமவ் வேர்க்கு
மறுவி லெலும்புருக்கி மாறு—நறுவிலியின்
றன்பழமி ரத்தபித்தஞ் சார்மேக முந்தீர்க்கு
மின்புறயா வர்க்கு மிசை.

குணம்:—(இ-ள்.) நறுவிலியிலைக்கு மூலரத்தமும், வேருக்கு எலும்புருக்கி நோயும், பழத்திற்குப் பித்தமும் பிரமேகமும் நீங்கும் என்க.

செய்கை:—பட்டைக்கு: சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் துளிர் இலையைச் சுத்தமாக அலம்பி அம்மியிலிட்டு வெண்ணெய்போல் அரைத்து அதில் ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்துப் பசுவின் வெண்ணெய் சமன் கூட்டி மத்தித்துத் தினம் 2 வேளை கொடுக்க ரத்தமூலம் நீங்கும்.

இதன் வேர்ப்பட்டையைக் கியாழமிட்டு வாய் கொப்புளிக்க, வாய்ரணம், பல்லாட்டம், வாய்நாற்றம் இவைகள் போம்.

இதன் பழத்தையுண்ண இருமல்போம். இன்னும் நுரையீரல், மார்பு, கருப்பை, நீர்தாரை சம்பந்தமான ரோகங்கள் போம். பித்த சம்பந்தமான ரோகங்களுக்கு இந்தப் பழத்தை மலம் இளகலாகப் போகும்வரை சாப்பிடக் கொடுப்பதுண்டு. இதன் கொட்டையை இடித்துச் சூரணம் செய்து எண்ணெயில் குழைத்துப் படைகளுக்குப்போட ஆறும்.

நன்னாரிவேர்.

(Hemidesmus Indicus).

நன்னரி வேரை நறுக்கி யரைத்துமதன்
வின்னரி யூனல் வெதுப்பியே—தின்னவெறி
தோணுது கற்ருழைச் சோற்றிற் கலந்துண்ணக்
காணுது வண்டு கடி.

(இதுவுமது)

சலதோஷம் பித்தமதி தாக முழலை
சலமேறு சீதமின்னுர் தஞ்சூ—டுலகமதிற்
சொன்மதுமே கம்புண் சுரமிவையே லாமொழிக்கு
மென்மதுர நன்னரி வேர்.

குணம்:—(இ-ள்.) நன்னாரிவேரை அரைத்துத் தேனில் மத்தித்து உண்ணில் அதிபித்தம் தீரும். அதைக் கற்ருழைச் சாற்றுடன் உண்ண வண்டுகடி போம். இன்னும் கிரமப்படி உபயோகிக்க நீரேற்றம், பித்தநோய், தாகம், வாய்நீர்ச்சுரப்பு, புணர்ச்சியின் சூடு, மதுநீர், கிரந்தி, சுரவேகம் இவைகள் போம் என்க.

செய்கை:—பலகாரி, வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி, சுவேதகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—சுகந்த வாசனையுடைய நன்னாரி வேர்ப் பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்துவைத்துக் கொண்டு வேளைக்கு ½-1 விராகனெடை காய்ச்சிய பசுவின்பாலில் போட்டுக் கற்கண்டு சூரணம் கூட்டித் தினம் 2 வேளை கொடுத்துவர நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், அதிக சிவந்த நிறமுடன் குறைந்த அளவாகப் போகும் நீர்க்கொதிப்பு முதலியவைகள் குணமாகும். 1 பலம் நன்னாரிவேரைக் குடுவையில் போட்டு ¼ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 1 அவுன்ஸ் அளவு சிறிது சலமும் கற்கண்டும் கூட்டித் தினம் 2 வேளை கொடுத்து வரப் பழைமையான இருமல், மூர்ச்சை, பித்தஎரிச்சல்

நீர்எரிச்சல், வெள்ளை முதலியவை தீரும். முன் சித்தப் படுத்திய கியாழத்துடன் காடிசேர்த்து வாய் கொப்புளிக்கப் பல் வலி நீங்கும். நன்னாரிவேரை இடித்துச் சூரணம் செய்து அதற்குச் சமனெடை சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு 1-1½ விராகனெடை வீதம் தினம் 2 வேளை 7 நாள் கொடுக்கச் செரியாமை, அக்கினி மந்தம், வெள்ளை, கீல்பிடிப்பு, பிரமேகம் தீரும். இருதய ரோகத்தின் பேரில் நீர்க்கோவை யுண்டாகியவர்களுக்குக் கொடுக்க விரைவில் வீக்கத்தைத் தணிக்கை செய்யும்.

நாகதாளிக்கள்ளி.

(Opuntia Dillenii).

சேந்து விஷங்கள் செடிவிஷங்க ளைத்தோலைக்கு
நொந்திடச்செய் வாதத்தை நூறுங்காண்—முந்தவெகு
வேகமா லிக்கும்வடி வேல்விழிமா தேபணைத்த
நாகதா ளிக்குணத்தை நாடு.

குணம்:—(இ-ள்.) நாகதாளிக்கள்ளி சங்கமவிஷம், தாவர விஷம், மஹாவாதரோகம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதிலிருந்து வரும்படியான பாலை 10 துளி அளவு சர்க்கரையில்விட்டுக் கலந்துகொடுக்கப் பேதியாகும். இது ரத்தத்தில் கலந்துள்ள விஷத்தை வெளியாக்கும். இதன் மேலுள்ள முட்களைக் கழித்துவிட்டு ஒரு புறத்திலுள்ள மேற்றோலைச் சீவி நெருப்பனலில் வெதுப்பித் தாளக்கூடிய சூட்டில் கட்டிகளின்பேரில் வைத்துக்கட்ட அழுந்திவிடும். இதன் பழத்தின்மே லிருக்கப்பட்ட முட்களை நீக்கிச் சாறு எடுத்து இரண்டு பங்கு சர்க்கரை கூட்டிச் சர்ப்பத்தாகக் காய்ச்சி வேளைக்கு ஒரு தேக்கரண்டி யளவு தினம் 3 வேளை கொடுக்க, இருமல் ரோகங்களைக் குணப்படுத்தும்.

நாகப்பூ.

(போது குணம்)

மதமூர்ச்சை பிரமியஞ்சு வாசகா சம்புகைச்சல்
விதிர்குரற் கம்மல்கீட விடஞ்சரு வாசியந்தே
ளதிசாரங் கமலப்புண்ணோ டரத்தமூ லம்மேகஞ்சூ
டதிநீர்விந் துவினட்டம்போ மறிநாக மலரினுக்கே.

(இ-ள்.) நாகப்பூவிற்கு மதமூர்ச்சை, ரத்தப்பிரமியம், இரைப்பு, இருமல், கண்புகை, நடுக்கல், சுரசாதம், எலி தேள் முதலிய விஷம், வாயைப்பற்றிய வாதரோகங்கள், பேதி, புண்டரீகக் குஷ்டம், உதிரமூலம், பிரமேகம், வெப்பு, வெகுமூத்திரம், க்ஷீணசுக்கிலம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

இந்த இனத்தில் சிறுநாகப்பூ, பெருநாகப்பூ என இருவகைகளுண்டு. அவைகளின் குணங்களை அதனதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

நாகமல்லிகை வேர்.

(Rhinacanthus Communis—Root).

சீராரு நாகமல்லி கைச்சிவையைக் கண்டக்காற்
றீரா நமைச்சற் செறிபுடைக—ணீராருஞ்
சன்னப் புழுச்சங்கந் தங்காவாஞ் சரம்புனத
வன்னக் குயிலனையாய் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) நாகமல்லிகை வேரால், ஒழியாத்தினவும், நெருங்கிய புடைகளும், ரசதாதுவைப்பற்றிய கிருமிக்கூட்டங்களும் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர் அல்லது விதை இவ்விரண்டில் ஏதேனுமொன்றைப் பழச்சாறுவிட்டு அரைத்து ஊறல் எடுத்துப்பரவிவருகின்ற புடைகளுக்கு இலேசாகப் பூசிவர 2-3 வேளையில் தினவு அடங்கிப் படை குணமாகும். இதன் இலையையாவது வேரையாவதுமென்று தின்னப் பாம்பு விஷம் நீங்கும்.

நாணற்கரும்பு.

(Saccharum Spontaneum).

வாயுபித்தம் வாந்திநீர் மாறு மதிதூல
நோயு ளெழும்வயிற்றி னேய்கலங்கு—மோயாத
ஈளையொடு பாண்டு மெதிரா தடங்கிநிற்கு
நாளுநா ணற்கரும்பி னல்.

குணம்:—(இ-ள்.) நாணற்கரும்பின் ரசத்தினால் வாதபயித்தியம், வமனம், அருசி, அதிதூலம், குன்மம், இரைப்பு, பாண்டு இவைகள் மீறுமற் சாந்தமாம்.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—நாணற் கரும்பை நெருப்பனலில் வாட்டிப் பிழிந்தெடுத்தச் சாற்றை வடிகட்டி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை உட்கொள்ள பித்த வாந்தி, அருசி, குன்மம், பாண்டு, தேக எரிச்சல் முதலியவைகள் குணமாகும்.

* நாய்க்கடுகு.

(Cleome Viscosa—Seeds).

சூதக வாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்ம மடியுங்காண்—மாதுநல்லாய்
பேய்க்குப் புகைபோடப் பேசா தொழிந்துவிடு
நாய்க்கடுகை நீவிரும்பி னல்.

குணம்:—(இ-ள்.) நாய்க்கடுகினால் வாதாசிர்க்கரம், வாத சோணிதம், வாதக்கடுப்பு, குன்மம் இவைகள் போம். இதன் புகையால் பூதப்பைசாசங்கள் விலகும்.

செய்கை:—உதரவாதஹரகாரி, கிருமிநாசினி, தாதுக்ஷீணரோதி, ஷோணகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பாகப்படித் துவையலில் சேர்த்து அன்னத்துடன் கூட்டியுண்ண வாதரோகத்தையும், ஸ்திரீகளுக்குண்டான உதிரச்சிக்கலையும், பசியின்மையையும் குணப்படுத்தும். இந்த விதையைக் கரி நெருப்பனலில் போட்டுப் புகை உண்டாக்கப் பூதப்பைசாச முதலியவைகள் விலகும்.

நாய்ப்பாகல்.

(Bryonia Maysorensis).

நாய்ப்பாக லின்குணத்தை நன்று யுரைக்கக்கேள்
வாய்ப்பான பீநசத்தை மாற்றுங்காண்—தீப்பாயி
லிங்கமதைச் சுத்திசெய்யு நேரிற்பா டாணத்தைப்
பங்கமறச் சுத்திசெய்யும் பார்.

குணம்:—(இ-ள்.) நாய்ப்பாகல் நாசிகாரோகத்தை நீக்கும். சாதிலிங்கத்தையும், பாஷாணத்தையும் சுத்திசெய்யும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது பெரும்பாலும் அவிழ்த பாகங்களில் சேர்க்கப்படுகின்ற மூலிகையன்று. இதை இடித்துச் சாறு பிழிந்து இலிங்கத்திற்குச் சுருக்குக் கொடுக்க லிங்கம் மெழுகாகும் என்பது சிலர் கொள்கை.

---

* இதுவே நாய்வேளையின் வித்தாகும்.

நாய்வேளை.

(Cleome Viscosa).

வாத முடற்கடுப்பு வன்சூலை காதிரைச்ச
லோதமிகு பீநசமு மோடுங்காண்—போதெறிந்து
காய்வேளைக் காயும்விழிக் காரிகையே வையமதில்
நாய்வேளை யுண்டு நவில்.

குணம்:—(இ-ள்.) நாய்வேளையால் வாதப் பொருமல், தேகக் கடுப்பு, குத்தல், கர்ணநாதரோகம், சிலேஷ்ம பீநசம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஷோணகாரி, துவக்ஸ்போடகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையுடன் நல்லவேளை, காணுவாழை, மூக்கரட்டை, சாறுவேளை முதலியவற்றைக் கூட்டிக் கலவைக்கீரையாக நெய்விட்டுத் துவட்டி அன்னத்துடன் சாப்பிட, வாயுவைக்கண்டிக்கும், பசிதீபனத்தை அதிகப்படுத்தும், ஸ்திரீகளுக்கு மாதவிலக்கிலுண்டான உதிரச்சிக்கலை வெளியாக்கும். நாய்வேளைக்கீரையை அரைத்துக் கட்டிகளின்பேரில் வைத்துக்கட்டத் தோல் சிவந்து, கட்டி உடையும். மற்றும் எந்தப் பாகத்திலாவது புண்ணுக்கி நீரை வெளிப்படுத்த, அவசியமானால் ஷ்டி சிகிச்சையைச் செய்யலாம். இதன் சாற்றைக் காதுகளில் 2 துளிவிட்டுப் பஞ்சை அடைத்துவைக்கக் காதுவலி நீங்கும்.

நாரத்தங்கச்சல்.

(Naraththangkatchal).

அன்னமிகுஞ் சீத மருசியுப்பி சங்கிருமி
மன்னுமோ விந்துவுடன் வன்பசியாம்—வன்னமலர்
வாசனையே றுங்குழலீர் மாநோய் தனிலுண்ணும்
போசனகஸ் தூரிக்குப் பூ.

குணம்:—(இ-ள்.) உலகில் சுரரோகிகளும் உண்ணுகின்ற நாரத்தங்கச்சலால் சீதளம், அரோசகம், வயிற்றுப்பொருமல், எரி கிருமி இவை நிலைக்காவாம். சுக்கிலதாதுவும், தீபாக்கினியும், உண்டாம். இது உணவையும் மிகுதியாக உட்செலுத்தும்.

செய்கை:—கிருமிநாசினி, ஜடராக்கினிவர்த்தினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதை வட்டமிட்டு அரிந்து நிறைய உப்பிட்டு ரவியில் வைத்து ஊறுகாயாகப் பாகப்படுத்தி நாட்பட வைத்திருந்து உபயோகப்படுத்தத் தீபனத்தை உண்டாக்கும். இன்னும் இதனால் அன்னத்தை அதிகமாக உட்கொள்ள இச்சைமிகும். இது விசேடமாகப் பலநோய்களிலிருந்து விடுபட்டுக் குணமாகி வருகிற சமயத்தில் தேக போஷணைக்கு முக்கியமாக இருக்கவேண்டிய பண்டமாகும்.

நாரத்தங்காய்.
(Naraththangkai).

நன்றி யுறவுலகி னாரத்தங் காயருந்த
வென்றி தரும்புளிப்பான் மெய்ச்சுத்த—மன்றியுமோ
வாதமொடு குன்மமறும் வாற்கிருமி யும்போகுங்
காதலுறு தீபனமாங் காண்.

குணம்:—(இ-ள்.) நாரத்தங்காயால் வாதநோயும், குன்மமும், வாலுள்ள மலக்கிருமியும் நீங்கும். பசியுண்டாம். இதன் புளிப்பினால் தேகஞ் சுத்தியாம்.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் துண்டுபடாமல் நான்கு பிளவாக அரிந்து நிறைய உப்பிட்டு அழுத்தி, ஜாடியில் போட்டு ரவியில் தினந்தோறும் வைத்து நீர்சுண்ட பதப்படுத்தி நாட்சென்று உபயோகப்படுத்த ரத்தத்தைச் சுத்திசெய்யும், மலத்திலுள்ள கிருமிகளை நசிக்கச்செய்யும், அரோசகத்தை விலக்கிப்பசிதீபனத்தை அதிகப்படுத்தும். மருந்துண்ணும் காலங்களில் பத்தியத்திற்கு உதவும்.

நாரத்தம்பழம்.
(Naraththampazham).

பித்தவழிக் குன்மமறும் பேராத தீபனமாம்
வித்தான தாது விளைந்திடுங்காண்—முத்திணைத்த
வாரத்தைத் தாங்குமுலை யாயிழையே யெக்காலு
நாரத்தை யின்கனியி னால்.

குணம்:—(இ-ள்.) நாரத்தம்பழத்தினால் பித்தகுன்மரோகம் நீங்கும். நீங்காத ஜடராக்கினியும் சுக்கில விருத்தியும் உண்டாகும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—நன்றாய்க் கனிந்த, மதுரமும் புளிப்புமுள்ள பழத்தின் சாற்றை வடிகட்டி வேளைக்கு ½-1 அவுன்ஸ் அளவுக்குச் சமன் சலங்கூட்டிச் சர்க்கரை சிறிது அளவு போட்டுக் கலக்கிச் சாப்பிட வெய்யிலின் தீட்சணியமும் தாகமும் அடங்கும். இது பித்தத்தைச் சாந்தப்படுத்தும். இரைப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும், சிறுநீரைத் தாராளமாக இறங்கச்செய்யும். உஷ்ணத்தைப் பற்றிய இருமலையும் பித்தரோகத்தையும் குணப்படுத்தும். கபதேகிகட்கு ஆகாது. புளிப்புச் சுவையையுடைய பழத்தின் சாற்றை முன்போல் பக்குவம் செய்து சாப்பிடச் சூட்டைத் தணிக்கும், உதிரத்தின் கொதிப்பை யகற்றும், பித்தரோகத்தைச் சாந்தப்படுத்துவதுடன் சாராயத்தின் வெறியையும் முறிக்கும். இதன் கொட்டையிலுள்ள பருப்பை 1-1½ விராகனெடையென்று தின்னப் பாம்பு விஷ மிறங்கும்.

நாவல்மரப்பட்டை.

(Syzygium Jambulanum—Bark).

ஆசியநோய் காச மசிர்க்கரஞ்சு வாசவினை
கேசமுறு பால கிரகநோய்—பேசரிய
மாவியங்க லாஞ்சனமிவ் வன்பிணி யெலாமேகு
நாவலுறு பட்டையத னல்.

குணம்:—(இ-ள்.) நாவல்மரப்பட்டையினால் வாயிற் பிறக்கும் நோய்கள், இருமல், பெரும்பாடு, ஈளை, பிள்ளைகளின் கிரகதோஷங்கள், வியங்கம், லாஞ்சனம் என்னும் மச்சபேதங்கள் ஆகிய இவைகள் தீரும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டையைச் சூரணம்செய்து வேளைக்கு ½ தோலா எடை வீசம்படி கருங்குறுவை அரிசிமாவுடன் கூட்டிச் சலம் விட்டுப் பிசைந்து அடையோலாவது அல்லது ஏடுகட்டிப் பிட்டவியலாகவாவது செய்து, சர்க்கரை, நெய் கூட்டிச் சாப்பிடப் பெரும்பாடு, ரத்தக்கழிச்சல், சீதபேதி முதலியவைகள் போம். பட்டையைக் கியாழம்வைத்து வாய் கொப்புளிக்க வாய்ரணம், தொண்டைப்புண் முதலியவைகள் ஆறும். இதன் சூரணத்தை ரத்தம் சொரிகின்ற புண்களின்மேற் றூவ இரத்தத்தை வறட்டி ஆறச் செய்யும்.

நாவல்மரத்தின் வேர்.

(Syzygium Jambulanum—Root).

வாத மறுங்கரப்பான் மாறும் விரணமோ
டோதமுறு நீரிழிவு முந்துரத்த—சீதமுங்காய்
மாவன் சுரமும் வளர்மேக மும்போகும்
நாவன் மரவேரி னல்.

குணம்:—(இ-ள்.) நாவல்மரவேரால் வாதவிகாரம், கரப்பான்புண், வெகுமூத்திரம், ரத்தசீதபேதி, வாதசுரம், மச்சைமேகம் இவைகள் விலகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகத்தைத் தனியாகக் கூறவேண்டியது அவசியமில்லை. இதன் பட்டைக்குக் கூறிய பாகத்தையே மேற்கொள்ளவேண்டும்.

நாவற்பழம்.

(Syzygium Jambulanum).

மாந்தம் விளையும் வலிகரப்பா னுண்டாகுஞ்
சேர்ந்ததொரு நீரிழிவுஞ் சேருமோ—நாந்தலொடு
வாய்வுங் கடுப்பும் வருங்கோதிப்புந் தாகமும்போந்
தூயநா வற்பழத்தாற் சொல்.

குணம்:—(இ-ள்.) நாவற்பழத்தினால் அக்கினிமந்தம், சரீரநோவு, கடுவன், சீதவாதம், கடுத்தல் இவை யுண்டாம். அதிநீரும், வெப்பமும், தாகமும் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இனிப்புள்ள நாவற்பழத்தை யுண்ண இரைப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும், இருதயத்தில் தாக்கிய சூட்டைத்தணிக்கும், மலத்தையும் நீரையும் கட்டும். புளிப்புச்சுவையுள்ள பழத்தை யுண்ண முற்கூறப்பட்ட குணங்கள் யாவும் இருப்பினும் தொண்டையைக்கட்டும். இதைக்கருப்பிணிகள் உட்கொண்டுவரின் பிறக்கும் குழந்தைகட்குச் சீதள சம்பந்தமான ரோகம் பிரபலப்பட்டிருக்கும். புளிப்பு நாவற்பழத்துடன் சிறிது உப்பிட்டு உண்ணத் தொண்டைக்கட்டுக்குச் சிறிது பரிகாரமாகும். இதன்

பழத்திலிருந்து தனிச்சாருக எடுத்து இருபங்கு, சர்க்கரைகூட்டிச் சர்பத்தாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு 1-1½ தோலா வீதம் சுத்த சலத்தில் கலந்து உட்கொள்ளப் பெரும்பாடு, வெகு மூத்திரம், உட்காங்கை முதலியவைகள் போம். இதன் கொட்டையைக் கல்வத்தில்போட்டு, ஆடுதின்னப் பாளைச் சாறுவிட்டு 8 சாமம் அரைத்துப் பட்டாணிப் பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்திக் காலை மாலை ஒவ்வொரு மாத்திரை சாப்பிட்டுவர மதுமேகம் குணமாகும்.

நாவி.

(Aconitum Ferox).

வாதவலி மந்தமறன் மாருக் கபப்பிணிக
ளோதுகுட்டு குன்மந்தே ளோடுங்காண்—காதலர்தம்
புத்தியோ டாருயிரும் பூவும் வனைகுழலே
சுத்திசெய்த நாவியின்பேர் சொல்.

குணம்:—(இ-ள்.) சுத்திசெய்த நாவியினல் வாதக்கடுப்பு, அஜீரணம், ஓதமுள்ள ஜலதோஷங்கள், குஷ்டம், வயிற்றுவலி, தேள்விஷம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—முறைவியாதிரோதி, வேதனசாந்தினி, உக்கிர ரோகசமனகாரி, சுவேதகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள விதிப்படிச் சுத்திசெய்யாத உலர்ந்த நாவிக்கிழங்கை எத்தகைய காரணத்தைமுன்னிட்டும் அவிழ்தபாகங்களில் சேர்க்கக்கூடாது.இந்தக் கிழங்கைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு, மூழ்கப் பசுவின்நீர் (கோசலம்) விட்டு ஒரு பகல், இரவு, ஊறவிட்டு மறுநாள் அந்நீரை வடித்துவிட்டு மீண்டும் முன்போல் பசுவின்நீர்விட்டு ஊற வைக்கவும். இப்படி 3 முறை செய்து எடுத்துலர்த்தி வைத்ததே அவிழ்தங்களுக்கு நன்மை கொடுக்கக் கூடியதாகும்.

இந்தச் சரக்கை ஜாக்கிரதையாக உபயோகப்படுத்தவேண்டும். அளவு அதிகப்படின் இருதயத்தின் நடையைக் கெடுத்து ஆபத்துக்கு இடமுண்டாக்கும். இதனைத் தனியாகக் கொடுப்பதில்லை. இதர சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில அநுபவ முறைகளாவன—

விஷ்ணுசக்கர மாத்திரை.

பாதரசம், கந்தகம், இலிங்கம், அரிதாரம், மனோசிலை, காந்தம், நாபி வகைக்குக் கழஞ்சு 1. இவற்றுள் முதலில் பாதரசத்தைக் கல்வத்திலிட்டுக் கந்தகம் கூட்டி அரைக்கவும். இது நன்றாய் உறவாகிக் கறுப்பு நிறமாக மாறியபின் வரிசைக்கிரமமாக மற்றச் சரக்குகளை ஒன்றன்பின் ஒன்று சேர்த்து அரைத்துக்கொண்டு வருக. எல்லாந் துகளானபின் பழச்சாறுவிட்டு 3 சாமம் அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்க. இம் மாத்திரையைத் தினம் இருவேளை பிணிக்குத் தக்கவாறு தேன், திரிகடுகு, இஞ்சிசுரசம் முதலிய அநுபானங்களில் கொடுக்கப் பக்கசூலை, வாதரோகம், சந்நிதோஷங்கள் தீரும். பத்தியம் புளி நீக்கவும்.

சித்தாந்த பைரவ மாத்திரை.

சுக்கு, பொரித்த வெங்காரம், நாபி, பொரித்த பெருங்காயம், மிளகு, இலிங்கம், திப்பிலி இவைகளைச் சமனெடையாகக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 2-சாமம் நன்றாய் அரைத்து, மெழுகுபதத்தில் மிளகுப் பிரமாணம் மாத்திரைகளாகத்திரட்டி உலர்த்திப் பத்திரப்படுத்துக. குழந்தைகள் வயதுக்கேற்றவாறு $\frac{1}{2}$-$\frac{3}{4}$ மாத்திரையாகவும், பெரியவர்களுக்கு நோயின் மென்மை வன்மைக்கேற்றவாறு 1-2 ஆகவும், இஞ்சிரசம், தேன், முலைப்பால் இவைகளில் தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கச் சந்நி, சுரதோஷம் முதலியவைகளை நிவர்த்தியாக்கும். இதற்குப் புளி தள்ளி இச்சாபத்தியமாக இருத்தல் வேண்டும்.

இன்னும் இவ்வித நாபி சம்பந்தமான மாத்திரைகளை இருவி, நிர்விஷம் முதலியவற்றின் தலையங்கத்தின் கீழ்க் காண்க.

இத்தகைய பிரயோகங்களுக்குப் பயன்படும் நாபியில் நான்கு விதங்களுண்டெனச் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். அவைகளின் பெயரும் குணமும் பின் வருமாறு:—

வெண்ணாவி.

குட்டங் கடிசூலை கூடுபுரி வன்கிருமி
துட்டகுன்ம வாதந் தொலையுங்காண்—வட்டமுலைப்
பெண்ணே சுரந்தணியும் பேருலகத் தார்பகைக்கும்
வெண்ணாவி தன்னை விரும்பு.

(இ-ள்.) வெண்ணாவியால் குஷ்டம், காணாக்கடி, குத்தல், மார்பை வீங்கச்செய்கின்ற கிருமிரோகம், வாதகுன்மம், ரூட்சை இவை ஒழியும் என்க.

இதன் உபயோகம் நாவியின் கீழ்க் கூறப்பட்டதேயாகும். இது அவிழ்தப் போர்குகளுக்குச் சிறந்ததென அனுபவத்தில் கண்டறிந்தது.

பச்சைநாவி.

கடியதொரு குஷ்டங் கனத்தவிஷ சந்நி
கொடியதொரு குன்மங் குலையும்—படியிற்
றளிரத்தி வெப்புடனே தாகசுரந் தீரும்
வளர்பச்சை நாவிதனை வாழ்த்து.

(இ-ள்.) பச்சைநாவியால் குறைநோய், விஷசந்நிபாதம், வயிற்றுநோய், அஸ்திச்சூடு, தாகசுரம் ஆகிய இவைகள் தீரும் என்க.

இதன் உபயோகம் நாபியின்கீழ்க் கூறப்பட்டதே ஆகும். ஆனால் தற்காலத்தில் கிடைப்பதரிது.

கருநாவி.

எண்ணைச் சுரம்போ மிறங்கும் பிலீகமறும்
புண்ணறு மூரும் புழுக்களறும்—தண்ணறும்
வல்லை கவிசையொடு வாத சுரமிவைக
ளில்லையொரு கார்நாவிக் கே.

(இ-ள்.) கருநாவிக்கு நாவொட்டிக்காய்ச்சல், நழுவிய பிலீகம், விரணம், கிருமிகள், வல்லைக்கட்டி, மகோதரம் இவைகள் தீரும்.

இதன் உபயோகம் நாவிக்குக் கூறப்பட்டதே ஆகும். நாவி இனத்தில் இது சிறந்ததாகும். இதற்கு வீரியம் அதிகம். இதனை நாவிசம்பந்தமான மாத்திரை, சூரணம் முதலியவற்றில் சேர்த்துக் கொள்வது சாலச் சிறந்தது. அசல் சரக்காகக் கடைகளில் கிடைப்பது அரிது. சிலர் வெண்ணாவியைக் கடுக்காய்க் கியாழத்தில் சில நாள் ஊறப்போட்டுக் காயவைத்து அப்பால் எண்ணெயிலிட்டுச் சில நாள் ஊறப்போட்டு அதன் மேனியை வேறுபடுத்தி வைத்திருப்பர். அதனால் விவேகிகள் கண்டறிந்து உபயோகப்படுத்தல் வேண்டும். அசல் சரக்கானது சுருக்கமடையாமலும் உடைத்தால் கோப்பையைப்போல் பளிங்குவண்ணமாகவும் இருத்தல் வேண்டும்.

சூத்திர நாவி.

காய்ச்சல் தலைநோய் கனத்தசந்நி பாதமெரிப்
பூச்சி விடக்கடியுட் புண்குட்டங்—கூய்ச்சறரு
காத்திரத்தே ளுங்குடிபோங் காரளகப் பைங்கொடியே
சூத்திரநா விக்குத் துவண்டு.

(இ-ள்.) சூத்திரநாவிக்குச் சுரம், தலைவலி, சந்நி, எரிகிருமி, சர்ப்ப விஷக்கடி, உள்விரணம், குறைநோய், தேள்விஷம் இவைகள் போம்.

இதன் உபயோகம் நாவியின் கீழ்க்கூறப்பட்டதேயாகும். இது தற்காலத்தில் கிடைப்பதரிது. இனமறிந்து கூட்டிக்கொள்ளல் வேண்டும்.

நிர்விஷம்.

(Delphinium Denudatum).

வாதக் குடைச்சலொடு வந்தசுரம் பல்வலியும்
ஓத வலிச்சூலை யோடுமால்—கோதரவின்
துர்விஷமு நீங்குறுமை தோய்ந்தவிழி மாதரசே
நிர்விஷத்தா லென்றே நினை.

குணம்:—(இ-ள்.) நிர்விஷத்தால் வாதக்குடைச்சல், சுரம், பல்வலி, வாதப்பிடிப்பு, பாம்பின் விஷம் இவைகள் போம் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, காமவிர்த்தினி, வேதனைசாந்தினி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக மருந்து கடைகளில் ஆகாசகருடன் கிழங்கின் வற்றலை நிர்விஷமெனக் கொடுப்பது வழக்கம். இங்குக் கூறப்பட்ட சரக்கு வேறு. இதனை இந்துஸ்தானியில் ஜத்துவார் எனக் கூறுவர். இது பார்வைக்குக் கருநாபியைப் போலிருக்கும். இதன்வேரைச் சிறிது வாயிலிட்டு மெல்லப் பல்வலி நீங்கும். உள்ளுக்கு விழுங்கிவிடக்கூடாது. கொஞ்சநேரம் சென்றபின் உமிழ்ந்துவிட்டு வெந்நீரில் வாய் கொப்புளித்துச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இதன் சன்னவேர் 1 எடைக்கு 20 எடை சலம் விட்டு $\frac{1}{4}$ மணி நேரம் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-2 தேக்கரண்டியளவு உட்கொள்ளலாம். அல்லது வேளைக்கு $\frac{1}{2}$-1 குன்றி எடை சூரணத்தைத் தேனில் கொள்ளலாம். இவற்றால் சுரம், அதனால் உண்டான நரம்புகளின் இசிவு, கைகால் குடைச்சல், மேகம் இவைகள் போம். இதனைக்கொண்டு சில பிரயோகங்கள் செய்வதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன:—

ராஜகெம்பீர மாத்திரை.

நிர்விஷம் விராகனெடை 1, அம்பர் குன்றி எடை 5, குங்குமப்பூ விராகனெடை ½ இவைகளைச் சூரணம் செய்து கல்வத்தில் போட்டுப் பன்னீர்விட்டு அரைத்து மெழுகுபதத்தில் 1-2 குன்றி எடை அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் 2 வேளை கொடுக்க இந்திரிய உடைச்சலையும் ஆண்குறித் தளர்ச்சியையும் குணப்படுத்துவதுடன் இருதயம், மூளை இவைகளை அநுசரித்த ரோகங்களையும் குணமாக்கும்.

கோடாசுழி மாத்திரை.

நாவி, நிர்விஷம், வாலைரசம், கந்தகம், பொரித்த வெங்காரம் சுக்கு, மிளகு, திப்பிலி, கொட்டை நீக்கிய கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு விராகனெடை 1, சுத்திசெய்தவாளம் விராகனெடை 6 கல்வத்தில் போட்டுக் கரிசலாங்கண்ணிச் சமூலச் சாற்றால் தினம் ஒரு சாமம் வீதம் ஒரு வாரம் அரைத்து, மெழுகுபதத்தில் குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்துக. இதில் பெரியவர்களுக்குத் தேகதிடத்திற்கேற்றவாறு 1-2 மாத்திரை தக்க அனுபானங்களில் கொடுக்கப் பேதியாகும், சகல ரோகமும் போம்.

நில ஆவாரை.

(Senna Indica).

நிலாவாரை யின்குணந்தா னீகேண் மயிலே
பலமூல வாயுவெப்பு பாவைச்—சிலகிரந்தி
பொல்லாத குன்மம் பொருமுமலக் கட்டுமுத
லெல்லா மகற்றுமென வெண்.

குணம்:—(இ-ள்.) நில ஆவாரை பற்பல மூலவாயுக்கள், சுரம், சீழ்ச்சிரங்குகள், வயிற்றுவலி, வயிற்றை உப்பச்செய்கின்ற மலக்கட்டு இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—மலகாரி, பித்தகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைத் தனியாகக் கியாழமிட்டுக் கொஞ்சம் காடிசேர்த்துச் சொறி, சிரங்கு, படை இவைகட்குப் பூசிவர ஆறும். கூந்தல் உதிரும் இடங்களில் இதைப் பூசிவர உதிரவிடாமல் தடுத்துவிடும். நிலாவாரையிலையுடன் மருதோன்றி இலை கூட்டி அரைத்துச் செம்மட்டைக் (சிவந்த மயிர்) கூந்தலுக்குத் தடவிவரக் கருக்கும். இதனுடன், இதர சரக்குகளைக் கூட்டி

விரேசனத்திற்காக உபயோகப்படுத்துவதுமுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

சுகபேதிக் கியாழம்.

நிலாவாரை, சோம்பு, சுக்கு, தனியா வகைக்குப் பலம் ¼ இவைகளையெல்லாம் ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்குடுவையில் போட்டு அரைப்படி சலம்விட்டு 1 ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிப் போதிய அளவு சீனிக்கற்கண்டு சூரணம் கூட்டிச் சாப்பிடப் பேதியாகும்.

(வேறு முறை)

நிலாவாரை தோலா 1, ரோஜாமொக்கு தோலா 1, பிஞ்சு கடுக்காய் தோலா 1, சோம்பு தோலா ½, அதிமதுரம் தோலா ½, நெல்லிவற்றல் தோலா ¼, சுக்கு தோலா ¼, வெள்ளரி விரை தோலா ¼, விதையுள்ள திராட்சைப்பழம் தோலா ¼, கொட்டை நீக்கிய ஆல்பகோருப்பழம் தோலா ¼ இவைகளையெல்லாம் ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு அரைப்படி சலம்விட்டு அரைக்கால்படி அளவுக்குக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி அதனோடு சீமை இந்துப்பு அல்லது நாட்டு இந்துப்பு இவையிரண்டினுள் ஒன்றைத் தேகநிலைமைக் கேற்றபடி ½ அல்லது ¾ தோலா அளவு சேர்த்துக் கலக்கிச் சாப்பிட ஐந்தாறு முறை பேதியாகும். தேகம் உஷ்ணப்படாது. பேதி நின்றபின் வேண்டிய உணவைக் கொள்ளலாம்.

குறிப்பு:—இத்தகைய அவிழ்தங்களை மூலரோகிகளுக்கும், கருப்பிணிகளுக்கும் கொடுக்கக்கூடாது. இன்னும் சுரம் மிகுந்திருக்கும்போதும் கொடுக்கக்கூடாது.

நிலக்கடம்பு.
(Asarum Europaeum).

அன்னஞ் செரியாமை யாராத மேகரணம்
சன்னக் குடற்கிருமி சன்னிவிடஞ்—சென்னிவலி
தீதே புரிந்திடினும் தீர்த்திடுமே மக்கட்குக்
கோதாய் நிலக்கடம்பைக் கூறு.

குணம்:—(இ-ள்.) நிலக்கடம்பால் அஜீரணம், மேகப்புண்கள், வயிற்றிலுள்ள சிறு கிருமிகள், விஷம், தலைவலி முதலியவைகள் நீங்குமென்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைக் கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுக்க வாயுவைக் கண்டிக்கும். சிறுநீரைப் பெருகச்செய்யும். இரைப்பை, ஈரல், மண்ணீரல் முதலியவைகளில் உண்டாகும் மாசுகளை வெளியாக்கும். இன்னும் இந்தக் கியாழத்தால் இசிவு, கணுச்சூலை, காமாலை, வீக்கம், உதிரக்கட்டு, பல்வலி, தலைவலி, நாட்பட்ட நேத்திரரோகம், கபநோய், கல்லடைப்பு முதலியவைகள் நீங்கும். இதைக் கசக்கிப் பிழிந்த சாற்றைக் கண்களைச் சுற்றிப் புறவளையமிடக் கண்வலி நீங்கும். இப் பூண்டினைக்கொண்டு சித்தப்பிரமைக்குத் தைலமாகச் செய்துகொடுப்பதுமுண்டு. இம்முறை கீழ் வருமாறு:—

நிலக்கடம்புத் தைலம்.

நிலக்கடம்பு இலைச்சாறு படி $\frac{1}{4}$, எலுமிச்சம்பழச்சாறு படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் படி $\frac{1}{2}$, இம்மூன்றையும் ஒரு தைலபாண்டத்தில் விட்டு, அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்துப் பதமுறக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, வாரமிருமுறை ஸ்நானம் செய்விக்கப் பைத்தியரோகம் குணமாகும்.

நிலக்குமிழ்.
(Gmelina Parviflora)

பேதியொடு கண்செருகல் பேராத சீதளமும்
வாதவலி கோட்டாவி மாந்தமும்போம்—ஓதச்
சலக்குமிழை யொத்த தனக்கருங்கண் மாதே
நிலக்குமிழைக் கையிலெடு நீ.

குணம்:—(இ-ள்.) நிலக்குமிழினால் சலமந்தபேதி, விழிசெருகல், சீதளம், வாதக்கடுப்பு, அதிகொட்டாவி, மந்தம் ஆகிய இவை போம் என்க.

செய்கை:—பித்தகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைக் கத்தையாகக் கட்டிக்கொண்டு சுத்த சலத்தில் சிறிது நேரம் அலசிவர, ஜலமானது விளக்கெண்ணெயைப்போல் தடிப்பேறி இருக்கும். இந்த ஜலத்தை வேளைக்கு ஒன்று அல்லது ஒன்றரை அவுன்ஸ் வீதம், தினம் மூன்று வேளை கொடுத்துவர மேகவெட்டை, நீர்ப்பை உட்சூடு, நீர் எரிச்சல் முதலியவை குணமாகும். இன்னும், இதன் வேரை அரைத்து நீராகாரத்தில் கலந்துகொடுக்க, இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்களைப் பரிகரிக்கும். சாதாரணமாகக் குழந்தை

களுக்குச் செய்யுங் கணஎண்ணெய்களில் விசேஷமாகச் சேர்ப்பது சித்தர் நூன்முறையாகும். எங்ஙனமெனில்—

கண எண்ணெய்.

நிலக்குமிழ், ஆவாரை, சரக்கொன்றை, விஷ்ணுகரந்தை இவைகளின் வேர், சிறு அம்மான்பச்சரிசி, ஏலம், சீரகம், நெருஞ்சி வகைக்குப் பலம் $\frac{1}{2}$ ஆக யாவற்றையும் இடித்து அரைத்து ஒரு படி சிற்றாமணக் கெண்ணெயில் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 தேக்கரண்டி அளவு குழந்தைகட்குக் கொடுத்துவரக் கணபாண்டு, கணசுரம், அஸ்திவெட்டை, ரத்தக்கழிச்சல், இருமல் இவைகள் போம்.

நிலப்பனங்கிழங்கு.

(Curculigo Orchioides).

மேக வனற்றணியும் வெண்குட்டங் தான்விலகும்
போக மிகவுமுறும் பொற்கொடியே—போகாத
சூலமே கங்களோடு துன்னுகரும் புள்ளியும்போஞ்
சால நிலப்பனைக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) நிலப்பனங்கிழங்கினால் மேகமூத்திரவெப்பமும், வெள்ளைக் குஷ்டமும், விலாக் குத்தலும், ஒழுக்குப் பிரமேகமும், நீலாஞ்சன ரோகமும் போம். புணர்ச்சியில் இச்சையுண்டாகும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மலகாரி, காமவிர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—முதலில் இதன்மேல் இருக்கப்பட்ட தோலைச் சுறசுறப்பான கல் அல்லது புது மட்பாண்டத்தின் ஓட்டால் தேய்த்துச் சுத்தப்படுத்தவேண்டும். (இரும்பு சம்பந்தமான கத்திகொண்டு மேற்றோலைக் கழிப்பது நல்லதன்று). அதன்பின், நரம்புநீக்கிச் சிறு துண்டுகளாகக் கல்லைக்கொண்டு நறுக்கிப் பாலில் போட்டு அவித்து உலர்த்திக் கல்லுரலில் போட்டுப் பூண் இல்லாத உலக்கையால் இடித்துச் சூரணமாக்கி வஸ்திரகாயம்செய்து பத்திரப்படுத்துக. இதை வேளைக்கு $\frac{1}{4}$ ரூபா எடை சமன் சர்க்கரை சேர்த்துக் கலந்து தினம் 2 வேளை சாப்பிட்டுவர இடுப்பு வலி, மாரடைப்பு, மூலரோகம், சொறி, சிரங்கு, மேகவூறல் இவைகள் நீங்கும். இன்னும், தாதுபுஷ்டி மிகும். இது சூடுசெய்யும் குணத்தை உடையதாதலால் பால், நெய், மோர் இவைகளை ஆகா

ரத்தில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். முன் சித்தப் படுத்தி வைத்துள்ள சூரணத்தில் வேளைக்கு ½ தேக்கரண்டி அளவு பாலில்போட்டுச் சர்க்கரை கூட்டிக் கலக்கித் தினம் 2 வேளை சாப் பிட்டுவர வெள்ளை, உதிரச்சிக்கல், ஸ்திரீகளுக்குச் சாதாரணமாகப் படும் வெள்ளை இவைகள் போம்.

நிலப்பூசினிக்கிழங்கு.

(Ipomoea Digitata).

மெய்யிறுகுந் தாதுகளும் வீறுமதி தேஜசுமாம்
நோய்யவுட லம்பருக்கு நுண்ணறிவாம்—பைய
மலப்பூச லேகு மலர்த்திருவே நல்ல
நிலப்பூசி னிக்கிழங்கின் நேர்.

குணம்:—(இ-ள்.) நிலப்பூசினிக் கிழங்கினால் தளர்ந்ததேகம் இறுகுவதுமன்றி இளைத்த சப்தநாதுக்களுக்குச் செழுமையுஞ் சருமதாதுவிற்கு ஒளியும் நுட்ப அறிவும் உண்டாகும். மலபந்தம் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலை நீக்கிக் காய வைத்து இடித்துச் சூரணமாகச்செய்து வைத்துக்கொண்டு வேளை க்கு 1-2 விராகனெடை வீதம் தினம் 2 வேளை பாலில் போட்டுச் சர்க்கரைகூட்டிக் கொடுக்கலாம். இதனால் இளைத்த தேகம் புஷ்டி யடையும். இதை க்ஷய ரோகிகட்குக் கொடுத்துவரத் தேகம் இளைக்கவிடாது. பிரசவித்த ஸ்திரீகள், குழந்தைகட்குப் போது மான அளவு பால் கொடுக்கச் சக்தி குன்றியபோது இதைச் சாப்பிடப் பால் அதிகமாகச் சுரக்கும். இது சிறுநீரில் உள்ள மாசுகளை வெளிப்படுத்தித் தேகத்திலுள்ள வெப்பத்தை அடியோடு ஒழிக்கும். இதன் சூரணத்தோடு கோதுமைமாவு அல் லது பார்லிமாவு சமனெடையாகச் சேர்த்துப் பால்விட்டுப் பிசைந்து நெய்தடவி அப்பம்போல் சுட்டுச் சர்க்கரை கூட்டிக் குழந்தைகட் குக் கொடுத்துவரச் சரீரம் புஷ்டியாகும்.

நிலம்புறண்டி.

(Nilampurandi).

நிலம்புறண்டி மூலிகையை நேர்மையுறக் கொண்டால்
அலம்புறண்ட நோய்க ளனைத்தும்—தலம்புரண்டு
அஞ்சி வழிகடக்கு மாள்வசிய மாமுலகில்
வஞ்சிக் கொடியாய் வழுத்து.

குணம்:—(இ-ள்.) நிலம்புறண்டி மூலிகையினால் அற்பவிஷ ரோகங்கள் நீங்கும். புருஷ வசியம் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பூண்டை அரைத்துச் சுமார் ஒரு கொட்டைப் பாக்களவு தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க அற்பவிஷங்களினால் தேகத்தைப் பாதிக்கின்ற ஊறல், தடிப்பு இவைகள் போம். இதனை வசியத்திற்காக ஆதிவாரத்தில் காப்பிட்டுப் பிடுங்கிக் குளிசமாடுவதுண்டு. இதனை அநுபவமுடையவர்களிடம் தெரிந்துகொள்வது சாலச்சிறந்தது.

நிலவிளா.

(Feronia Elephantum).

அழன்றகண வேக மதிதாகந் தீருஞ்
சுழன்றுவரு பித்தந் தொலையு—முழன்று
பொருநிலமே கத்துடனே புண்சுரமும் போகு
மருநிலவி ளாவுக் கயர்ந்து.

குணம்:—(இ-ள்.) நிலவிளாவினால் வெதும்புகின்ற கணச்சுரம், விதாகம், பித்தகோபம், மாருப்பிரமேகம், விரணசுரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை வேளைக்கு 1-1½ தோலா எடை கால்படி சலத்தில் போட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி இருவேளையாகப் பங்கிட்டுக் காலைமாலை கொடுக்கப் பித்தம், அதிக தாகம், சுரம் இவைகள் போம். இதன் இலையை மஞ்சளுடன் சேர்த்தரைத்துக் குழந்தைகட்கு மேற்றேய்த்து ஸ்நானம் செய்விக்கப் பலதோஷங்கள், சொறி, சிரங்கு நிவர்த்தியாகும்.

நிலவேம்பு.

(Gentiana Kurooa).

வாதசுர நீரேற்ற மாற்றுஞ் சுரதோஷங்
காதமென வோடக் கடியுங்காண்—மாதரசே
பித்த மயக்கறுக்கும் பின்புதெளி வைக்கொடுக்குஞ்
சுத்தநில வேம்பின் றேழில்.

குணம்:—(இ-ள்.) நிலவேம்பு வாதசுரம், மேகநீர்க்கோவை, சுரதோஷம், பித்தமயக்கம் ஆகிய இவைகளை நீக்கும். தெளிவை யுண்டாக்கும் என்க,

செய்கை:—பலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, சுரஹரகாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சூரணத்தை வேளைக்கு ¼-½ விராகனெடை வீதம் தினம் 2 வேளை 2 அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தில்போட்டு ½ மணி நேரம் ஊறின பின்னர் வடிகட்டிச் சிறிது தேன் கூட்டிச் சாப்பிடலாம். இது சுரத்தைக் கண்டிப்பதில் மிகவும் சிறந்தது. இன்னும் இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிக்கொடுப்பதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

பஞ்சமூலிக்கியாழம்.

நிலவேம்பு தோலா 1, சீந்தில்கொடி, கோரைக்கிழங்கு, பற்பாடகம், கடுகுரோகணி வகைக்குத் தோலா ½ வீதம் ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½படி சலம்விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுக்கவும். இப்படி 3 தினம் உட்கொள்வதற்குள் சுரம் நீங்கும். சுரத்தின்பேரில் பேதி இருந்தால் இந்தக் கியாழத்தில் கூட்டப்பட்டுள்ள கடுகுரோகணியைத் தள்ளிச் சுக்கு சேர்த்துக்கொள்ளவும்.

பழைய சுரக்கியாழம்.

நிலவேம்பு, பற்பாடகம், சீந்தில்கொடி, கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரிவேர், சுக்கு, சிற்றரத்தை, அதிமதுரம், கோஷ்டம், சந்தனத்தூள், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்குத் தோலா 1, இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம்விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுக்க எத்தகைய சுரமும் குணமாகும்.

நின்ருற்சிணுங்கி.
(Ninrarchinungi).

நீண்டுயர்ந்த கார்குழலே நின்ருற் சிணுங்கியதால்
தீண்டுமர வின்விஷமும் தீர்ந்துபோம்—மீண்டுங்கேள்
முன்னே முகமறியார் முன்னிலையில் மைதீட்டப்
பின்னே வருவரெனப் பேசு.

குணம்:—(இ-ள்.) நின்ருற் சிணுங்கிச் செடியானது சர்ப்ப விஷத்தை நீக்கும். ஸ்திரீ வசியத்திற்கும் ஆகும் என்க.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மூலிகையைப் பெரும்பாலும் அவிழ்தப் போக்குக்களில் சேர்ப்பதில்லை. வாதத் தொழிலிலும் வசிய ஈடு பாகங்களிலும் சேர்ப்பதுண்டு. அனுபவமுடையவர்களிடத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது கடமையாகும்.

நீரடிமுத்து.

(Hydnocarpus Wightiana).

நீரடி முத்திற்கு நீங்காக் கிரந்திகுட்டம்
போரிடு வாதவினை போகுங்காண்—காரடுக்கு
மென்குழலாய் பித்த மிகுமனல முண்டாகு
முன்கிளர்ந மைச்சலறு முன்.

குணம்:—(இ-ள்.) நீரடிமுத்துக்குத் தீராச் சிரங்கு, பெருநோய், வாதரோகம், தினவு இவைகள் நீங்கும். பைத்தியமும் உஷ்ணமும் உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பருப்பைத் தயிரில் ஊறப் போட்டு மறுநாள் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துச் சொறி சிரங்கு மிகுந்தவர்களுக்குத் தேகத்தில் பூசிச் சிறிது நேரம் சென்றபின் பசுவின் சாணம் அல்லது அரைத்த சிகைக்காய் கொண்டு தேய்த்து ஸ்நானம் செய்ய ஆறும்.

நீரடிமுத்துப் பருப்பு பலம் 4, சுக்கு பலம் 2, நாட்டு அமுக்கிராங் கிழங்கு பலம் 5, நன்னாரிவேர் பலம் 5, பாலில் அவித்துச் சுத்தி செய்த பறங்கிச் சக்கை பலம் 5 இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, இதனுடன் சமன் சர்க்கரை கூட்டி நெய் விட்டு அரைத்துப் பத்திரப்படுத்துக. இதனைத் தினம் 2 வேளை சுண்டக்காய்ப் பிரமாணம் சாப்பிட்டுவரப் பல தோல் சம்பந்தமான ரோகங்கள் தீரும். இதனில் கந்தக நெய் வேளைக்கு 3-4 துளி வீதம் சேர்த்துக் கொடுத்துவரின் விசேட குணத்தைத் தரும்.

நீரடிமுத்து நெய்.

(Hydnocarpus Wightiana—Oil).

பூசுகுடி வாதகணம் பொங்கு கிரந்திபுடை
வீசுகுட்டஞ் சூலையிவை விட்டேகும்—தேசஞ்சச்
சீரடியை யொத்தாடைத் தெய்வ மடமயிலே
நீரடிமுத் தின்வந்த நெய்க்கு.

குணம்:—(இ-ள்.) நீரடிமுத்து நெய்யை மேலிற் பூசினும் உள்ளுக்குக் குடிக்கினும் வாதக் கூட்டம், சிரங்கு, சொறி, பெருவியாதி, சூலை இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, வியதாபேதகாரி. (அதிக அளவில்) வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய்யில் வேளைக்கு 3-5 துளி சர்க்கரையுடன் பிசறிக் கொடுத்து வர வெண்குட்டம், கருங்குட்டம், திமிர்க்குட்டம் முதலிய தோல்சம்பந்தமான ரோகங்கள்போம். இங்குக் கூறப்பட்ட அளவானது மிகக் குறைந்ததாகும். இப்படிக் கொடுப்பதில் சரீரத்திற்குப் பொருத்தமாகவும் பித்தத்தை விருத்தி செய்யாமலுமிருந்து வியாதி விரைவில் குணப்படாவிடின் 2-3 துளி அதிகப் படுத்திக் கொள்ளலாம். இந்த நெய்யை விரணங்களின் மேல் தடவி வர ஆறும். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிப் பாகப்படுத்தி உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

நீரடிமுத்து எண்ணெய்.

வேப்பம்பட்டை வீசை $1\frac{1}{2}$, பூவரசம்பட்டை வீசை $1\frac{1}{2}$, சிவனார்வேம்பு வீசை $1\frac{1}{2}$ இவைகளை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு 8 படி சலம் விட்டு $\frac{1}{2}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதனுடன் 10 பலம் நீரடிமுத்து எண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த நெய்யைத் தினம் ஒரு வேளை 5 நாள் ஒரு காசு அளவு பரவும்படியாகக் கையில் விட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிட்டுவரத் தோல் சம்பந்தமான வியாதிகள் அனைத்தும் குணமாகும்.

நீர்ப்பூலா.

(Phyllanthus Multiflorus).

மாந்தங் கணம்பொருமல் மாருச் சலத்துடனே
சேர்ந்த சொறிசிரங்குந் தீருங்காண்—ஏந்தெழிலைச்
சேர்ப்பாகக் கொண்ட செழுந்திருவே பூவிலுறை
நீர்ப்பூலாப் பூண்டை நினை.

குணம்:—(இ-ள்.) நீர்ப்பூலாச் செடியால் மாந்தம், கணச்சூடு, வயிற்றிரைச்சல், அதிமூத்திரம், மேகப்புடை, கிரந்தி ஆகிய இவைகள் ஒழியும் என்க.

செய்கை:—பட்டைக்கு: வியதாபேதகாரி, இலகு மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையையாவது அல்லது பட்டையையாவது, 1-க்கு 10 எடை சலம் விட்டுக் கால் பாகமாகச் சுண்டக் காய்ச்சி வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை நீடித்துக் கொடுத்து வர நிதானமாகச் சர்ம ரோகங்கள், கீல்வாதம் போம். இதன் இலைச்சாற்றை வேளைக்கு $\frac{1}{4}$ அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கும். இதன் பட்டையைக் கியாழமிட்டு வாய் கொப்புளிக்க வாய் ரணம், இரத்தம் சொரிதல் நீங்கும்.

நீர்முள்ளி.

(Asteracantha Longifolia).

பாண்டு குளுப்பையறும் பாரித்த நீரேற்ற
மாண்டுவிடு நீர்க்கட்டு மாறுங்காண்—பூண்டதொரு
வீக்கமெல்லா நீராய் விடுமேநீர் முள்ளிக்குத்
தாக்கு மயில்விழியாய் சாற்று.

குணம்:—(இ-ள்.) நீர்முள்ளிச் செடிக்குப் பாண்டு, குளுப்பை, நீர்க்கோவை, மூத்திரச் சிக்கல், சர்வசோபை ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையையாவது அல்லது சமூலத்தையாவது 1-க்கு 20 எடை சலம் விட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை கொடுப்பதுண்டு. அல்லது புதியதாக நிழலில் உலர்த்திய 5 ரூபாய் எடை நீர்முள்ளி இலையை ஒரு ஜாடியில் போட்டு 3 ஆழாக்கு காடிவிட்டு 3 நாள் சென்றபின் வடிகட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் அளவு சிறிது சுத்த சலத்துடன் கூட்டித் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இவற்றால் பாண்டு, சோகை, காமாலை, வயிற்றிலுள்ள கட்டி, மகோதரம் முதலியவைகள் போம். சிறு நீரும் தாராளமாக இறங்கும். இதன் சாம்பலைச் சிறு நீரிலாவது பசுவின் கோமயத்திலாவது கரைத்து வீக்கமுள்ள இடங்களில் தழும்பப் பூசிவர வீக்கத்தைக் குறைக்கும். இந்த மூலிகை இரத்தத்திலுள்ள மாசுகளை நரம்புகளின் வழியாகக் குண்டிக்காய்க்குக் கொண்டுவந்து அதன் பின் நீர்ப்பை, நீர்த்தாரை மூலமாக வெளி

யாக்கும். இன்னும் நீர்த்தாரையிலுள்ள மாமிச வளர்ச்சி, ஜவ்வு, கல் முதலியவற்றை விரைவில் கரைத்து நீரடைப்பு ரோகத்தைக் குணப்படுத்துவதுமன்றி அத்தாரையிலுள்ள அழலையும் ஆற்றும். இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டிக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

நீர்முள்ளி எண்ணெய்.

நீர்முள்ளிச் சமூலச்சாறு பலம் 10, சிற்றாமணக் கெண்ணெய் பலம் 10, நாட்டு நவாச்சாரம் பலம் 1 இவைகளில் முதலில் நீர் முள்ளிச் சாற்றை வடிகட்டி ஒரு தைல பாண்டத்தில் விட்டு நவாச்சாரத்தைப் பொடித்து ஷை சாற்றில் போட்டுக் கலக்கி அதன்பின் சிற்றாமணக் கெண்ணெயை விட்டு அடுப்பிலேற்றிப் பதமுறக்காய்ச்சி வடித்து வைத்துக்கொள்க. இந்த எண்ணெயில் வேளைக்கு 1 அவுன்ஸ் அளவு காலை நேரத்தில் கொடுத்துவர 2-3 தடவை பேதியாகும். இப்படி 3 தினத்திற்குக் குறையாமல் 5 அல்லது 7 அல்லது 9 நாள் வரையிலும் கொடுத்துக்கொண்டு வரப் பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், வயிற்றிலுண்டான பலவித மான கட்டிகள், சதையடைப்பு, கல்லடைப்பு, கை கால் பிடிப்பு, மூலம், வெள்ளை, குன்மம் முதலிய பல ரோகங்கள் போம்.

பத்தியம்:—புளிதள்ளி இச்சா பத்தியமாக இருத்தல் அவசிய மாகும். மருந்துண்ணுங்காலத்தில் ஆட்டு மாமிசம் வேண்டுமாயின் சேர்த்துக்கொள்ளலாம்.

நீர்முள்ளி வித்து.

(Asteracantha Longifolia—Seeds).

விந்துவுமாந் தாதுவுமா மேகரோ கந்தொலையு
முந்துமதி சார மொழியுங்காண்—வந்துடலி
லேறியநீர் விக்க மிறங்கு மிளைப்புமறுங்
கூறியநீர் முள்ளிவிதைக் கு.

குணம்:—(இ-ள்.) நீர்முள்ளி வித்துக்குப் பிரமேகம், அதிசாரம், கபசோபை, ஆயாசம் இவைகள் நீங்கும். சுக்கிலமும் சப்த தாதுக்களும் விருத்தியாம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, காம விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5 முதல் 15 குன்றி எடை சர்க்கரை கூட்டி நெய் விட்டு மத்தித்துச் சாப்பிடலாம். அல்லது காய்ச்சிய பாலில் போட்டுக் கலக்கிச் சர்க்கரையிட்டுக் குடிக்கலாம். இவற்ருல் மேகம், அதிசாரம், நீர்க்கோவை, இரைப்பு, இருமல் முதலியவைகள் தீரும். இன்னும் இதனல் இரத்தம் சுத்தமாகி விந்தூறும்.

நுணாமரம்.

(Morinda Umbellata).

பட்டை கரப்பனேடு பாரச்சி லேஷ்மசுர
மொட்டிநின்ற புண்கிரந்தி யோட்டுங்காண்—மட்டலரை
யேந்து நுணவி னிலைமாந்தந் தீர்த்துநல்ல
காந்திதரு மேகமடுங் காண்.

குணம்:—(இ-ள்.) நுணாப்பட்டையானது கரப்பான், கபசுரம், புண், கிரந்தி இவைகளையும்; இலையானது மந்தம், மேகம் இவைகளையும் விலக்கும். ஒளியைத்தரும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலை நடுவிலிருக்கின்ற ஈர்க்குகளை எடுத்து அதனுடன் துளசி, கரிசலாங்கண்ணி, மிளகு, சுக்கு முதலியவற்றைச் சேர்த்துக் கியாழமிட்டு வடித்துக் குழந்தைகளின் வயதுக்கேற்றபடி $\frac{1}{4}$ - $\frac{1}{2}$ சங்கு அளவாக விட்டுக்கொண்டுவர மாந்தபேதி நிற்கும். இதன் இலையை அரைத்துப் புண், சிரங்கு, ரணம் இவைகட்கு வைத்துக்கட்ட ஆறும். இதன் இலையை இடித்துப் பிழிந்தெடுத்தச் சாற்றை இடுப்பு வலிக்குப்பூச நீங்கும்.

பூதகரப்பான்பட்டை, பூவரசம்பட்டை, நுணாப்பட்டை, இலுப்பைக்கட்டி இவைகளைச் சமனெடையாகச் சுட்டுக் கரியாக்கி நல்லெண்ணெயிற் குழைத்துக் கரப்பான் மேற்றடவ நீங்கும். நுணாக்காய்களை ஒரு வீசை அளவிற்குச் சேகரித்துச் சிறுதுண்டுகளாக நருக்கி அதனுடன் 10 பலம் சோற்றுப்பு கூட்டி ஒரு மட்பாண்டத்தில் போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து வறுக்கவும். காய்கள் கரியான சமயம் கீழே இறக்கி ஆறவைத்து அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இதனைக்கொண்டு தந்தசுத்தி செய்துவரப் பல்லரணை, பல்லாட்டம், ஈறுகளில் இரத்தம் சீழ் சொரிதல் பல்கூச்சம், முதலியவைகள் குணமாகும்.

நுரைப் பீர்க்கங்காய்.

(Cucumis Sulcatus).

நீக்கும் மலக்கட்டை நீங்காத நாவறட்சி
போக்குநற் றீபனமும் புன்மைசெயும்—ஆக்கையதில்
வெய்ய கபசுரத்தை வேண்டி யுபசரிக்கும்
கொய்யுநுரைப் பீர்க்கின் குணம்.

குணம்:—(இ-ள்.) நுரைப் பீர்க்கங்காய் தாகத்தையும் மலச் சிக்கலையும் நீக்கும். இரைப்பையின் சக்தியைக் கெடுத்துப் பசி தீபனத்தை மட்டாக்கும். ஆனால் கபத்தையும் சுரத்தையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலைச் சீவித் துண்டு துண்டுகளாக அரிந்து பருப்புக் குழம்பிலிட்டாவது அல்லது பொரியலாகப் பாகப்படுத்தியாவது அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. இது சீதளத்தை உண்டாக்கும் குணமுடையதாதலால் கபத்தையும் சுரத்தையும் விளைவிக்கும்.

நெய்ச்சட்டிப் பூண்டு.

(Vernonia Cinera).

நெய்ச்சட்டி யென்றால் நிறையுமெய்யுட் சுக்கிலமும்
பொய்ச்சிட்ட கண்ணொளியாம் பூவையரே—வெய்ச்சிட்ட
மேகமறுந் தீபனமாம் வெட்டையழ லுந்தணியுந்
தாகமறும் பித்தமும்போந் தான்.

(இதுவுமது)

தூயழகு றப்புரியுஞ் சூதகந்த மாதிகளால்
வாயழுகி நாறுபுண்ணை மாற்றிவிடுந்—தீயழலை
நீக்கிவிடு நிம்பநெய்யை நெய்யாக் கிடும்வமனம்
போக்கிவிடு நெய்ச்சட்டிப் பூண்டு.

குணம்:—(இ-ள்.) நெய்ச் சட்டிப் பூண்டு வீரிய விருத்தி, நேத்திர ஒளி, பசி, அழகு இவைகளை யுண்டாக்கும். பித்தமேகம், வெள்ளை, உட்சூடு, தாகம், பித்தகோபம், ரசகந்தக முதலியவற்றால் பிறந்த வாய்ப்புண், அழற்சி, வாந்தி இவைகளை நீக்கும். வேப்பெண்ணெய்க்குரிய கசப்பை விலக்கும்.

செய்கை:— காமவிர்த்தினி, சுவேதகாரி, தாதுக்ஷீணரோதி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:— இதன் சமூலத்தில் $\frac{1}{2}$ பலம் எடை ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 - $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர வியர்வை யுண்டாகும், உட்சூடு போம். இன்னும் நீர் சம்பந்தமான பல நோய்களையும், குதிக்கால் வலியையும் நீக்கும். ரசகெந்தி பாஷாணங்களின் வேகத்தையும் அதனாலுண்டான வாய்ரணத்தையும் ஆற்றும். இதன் பச்சை இலைச்சாற்றைக்கொண்டு தைலம் செய்து ஸ்நானம் செய்து வருவதுண்டு. எங்ஙனமெனில்—

சகதேவித் தைலம்.

சகதேவிச்சாறு, ஆவின்நெய் வகைக்குப் படி 1ஆகத் தைலபாண்டத்தில் விட்டு வைத்துக்கொள்ளவும். அதன்பின் ஏலம், அதிமதுரம், சந்தனம், சிறுநாகப்பூ, விலாமிச்சம்வேர், சீதாசெங்கழுநீர் வேர், கோஷ்டம், கடுகுரோகணி, லவுங்கப்பட்டை வகைக்கு விராகனெடை 2 வீதம் ஷை சீதாசெங்கழுநீர்ச் சாற்றாலரைத்து முன் சித்தப் படுத்தியுள்ள பாண்டத்தில் கலக்கிப் பதமுறக் காய்ச்சி ஸ்நானம் செய்ய, தேகவலி, சிரோபாரம், பாண்டு, காமாலை, அஸ்திசுரம், கை காலெரிவு, கண்ரோகங்கள் தீரும்.

நெய்தற்கிழங்கு.

(Nymphae Stellata—Tuber).

கண்ணுங் குளிருமக்கி காணது காந்துபித்த
மெண்ணுந்தோ ஷம்மேக மேகுங்காண்—பெண்ணே
வயிற்றுக் கடுப்பிரத்த மாறு நெய்தலுக்குப்
பயித்தியம்போம் விந்தூறும் பார்.

குணம்:—(இ-ள்.) நெய்தற் கிழங்குக்கு அக்கிப்புண், பித்த எரிச்சல், திரிதோஷம், பிரமேகம், ரத்தக்கிரகணி, பித்தநோய் ஆகிய இவைகள் போம். விழிக்குக் குளிர்ச்சியும், சுக்கிலவிருத்தியும் உண்டாகும் என்க.

செய்கை:— சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:— இந்த இனத்தில் * மூன்று விதங்கள் உண்டு. இவைகளின் கிழங்குகள் யாவும் ஏறத்தாழ ஒரு குணத்

* இவ்வினங்களைச் செவ்வல்லிப்பூவின் கீழ்க் காண்க.

தையே பொருந்தியுள்ளது. இதன் கிழங்கை வேகவைத்து மேற்றோலை நீக்கிப் பால் சர்க்கரை கூட்டிச் சாப்பிடுவதுண்டு. இதனால் தேகம் குளிர்ச்சி பெறும். பித்த எரிச்சல், பிரமேகம், ரத்தபேதி இவைகள் போம். இதை உலர்த்தி மாவாக்கி காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுச் சர்க்கரை கூட்டி உள்ளுக்குச் சாப்பிடுவதுண்டு. இதனால் குன்மம், பேதி, மூலம் இவைகள் போம். ஸ்திரீகள் கருப்பமாக இருக்கும்போது மாதாந்திரம் காணுவதாக இருந்தால் இதன் மாவைப் பாலில் போட்டுக் காய்ச்சிச் சர்க்கரை கூட்டிக் கொடுப்பது அதிக அனுகூலமான சிகிச்சையாகும்.

நெல்லிக்காய்.

(Emblica Officinalis).

பித்த மனலையம் பீநசம்வாய் நீர்வாந்தி
மத்தமலக் கட்டு மயக்கமுமி—லொத்தவுரு
வில்லிக்கா யம்மருங்கா மென்னுட்கா லந்தேர்ந்தே
நெல்லிக்கா யம்மருந்து ணீ.

(இதுவுமது)

நெல்லிக்காய்க் குப்பித்த நீங்கு மதன்புளிப்பாற்
செல்லுமே வாதமதிற் சேர்துவர்ப்பாற்—சொல்லுமைய
மோடுமிதைச் சித்தத்தி லுன்ன வனலுடனே
கூடுபிர மேகமும்போங் கூறு.

குணம்:—(இ-ள்.) கடல் அமிர்தம் ஒத்த நெல்லிக்காயைப் பகற்போது உண்ணில் பயித்தியம், கபநோய், பீநசம், வாய்நீர் சுரப்பு, வமனம், உன்மத்தம், மலபந்தம், தலைசுழலல், பிரமேகம் இவைகள் போம். காமன் அழகுண்டாம். அதன் புளிப்பால் வாயுவும், துவரால் கபமும் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி, இலகுமலகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—நெல்லிக்காயை இடித்துக் கொட்டைகளைத் தள்ளிச் சதையாக உள்ளவற்றை நன்றாய் மயனமாகும் பொருட்டு இடித்தாவது அறைத்தாவது வடைதட்டி உலர்த்தி வைத்துக்கொள்க. வேண்டும்போது இந்த வடையிலொன்று எடுத்து அதற்குத் திட்டமாகப் பச்சைமிளகாய், உப்பு, கொத்துமல்லிக்கீரை, இஞ்சி இவைகளைக் கூட்டி அரைத்துத் துவையலாக

உபயோகப்படுத்தலாம். அல்லது பச்சை நெல்லிக்காய் 10-15 கொண்டுவந்து அடுப்புக்கும்பியில் செருகி நீர் வறண்டபின் கொட்டை நீக்கி அதனுடன் கொத்துமல்லி இலை, கொப்பரைத் தேங்காய், பச்சைமிளகாய், வெங்காயம், பூண்டு, உப்பு முதலியவற்றைத் திட்டமாகச் சேர்த்து அம்மியிலிட்டுச் சிறிது பழச்சாறு விட்டு அரைத்துத் தட்டைப் பீங்கானில் வைத்து ரவியில் தினம் வைத்துக்கொண்டு வருக. இந்தத் துவையலில் தினம் சுண்டைக்காய்ப் பிரமாணம் அன்னத்துடன் கூட்டி உண்ணத் தீபனத்தையும் உற்சாகத்தையும் கொடுப்பதுடன் தேகத்தின் வெப்பத்தையும் ஆற்றும். பித்தத்தைத் தணிக்கும். 3 தோலா நிறையுள்ள நெல்லிக்காயைக் கொட்டை நீக்கி பச்சைமிளகாய், இஞ்சி, கொத்துமல்லிக்கீரை, உப்பு இவைகளைச் சேர்த்து அரைத்துப் புளிப்புத் தயிரில் கலக்கித் தாளித்துப் பச்சடியாக உபயோகப்படுத்தப் பித்த ரோகங்களைச் சாந்தப்படுத்தும்.

ஒரு தோலா நிறையுள்ள இடித்த நெல்லிக்காயைக் கால்படி சலத்தில் போட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொஞ்சம் தேன் கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை, 3 நாள் சாப்பிடப் பித்த உபரி அடங்கும்.

நெல்லிமரத்தின் வேர்.

(Emblica Officinalis—Root).

வமன மரோசியறும் வாதமுதன் மூன்றுஞ்
சமன முறுமலமுஞ் சாறு—மமானசுரம்
புல்லிவரு தோஷசந்நிப் பொல்லாச் செயலும்போம்
நெல்லிமர வேரை நினை.

குணம்:—(இ-ள்.) நெல்லிமரத்தின் வேரால் வாந்தி, அருசி திரிதோஷகோபம், தருணசுரத்தில் அபத்தியத்தாற் பிறந்த பீதஜிம்மகதோஷம், அதிற்கிளைத்த சந்நி இவை நீங்கும். திரிதோஷ சமனமும் மலப்போக்கும் உண்டாம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பச்சை வேர்ப் பட்டையைச் சிறிது இளநீர் தெளித்து இடித்துப் பிழிந்த சாற்றில் வேளைக்கு 1-1½ தோலா எடை தினம் 2 வேளை இரண்டொரு குன்றி எடை மஞ்சள் பொடியும், சிறிது தேனும் சேர்த்துக் கொடுத்துவரப் பிர

மேகம் போம். இதன் வேர்ப்பட்டையைத் தேன்விட்டு உரைத்து நாவிற்குத் தடவிவரத் துத்திரோகம் என்கிற நாவின்ரணம் ஆறும். இதன் இலையைக் கியாழம் வைத்து வாய் கொப்புளிக்க வாய்ப்புண் ஆறும்.

நெல்லிமுள்ளி.

(Emblica Officinalis—Dried fruit).

ஆகவன லஞ்சசிய சிர்க்கென்பு ருக்கிகண்ணோய்
தாக முதிரபித்தந் தாதுநட்டம் —மேகனத்தி
னில்லிமுள்ளி போலருக லெண்கா மியவியங்க
நெல்லிமுள்ளி யாற்போ கினே.

(இதுவுமது)

நல்லநெல்லி முள்ளியது நாவுக் குரிசைதரு
மல்லல் விரிபித்த மஞ்சிடுமே—மெல்லத்
தலைமுழுகக் கண்குளிருந் தாவுபித்த வாந்தி
யிலையிழிமே கங்களும்போ மெண்.

குணம்:—(இ-ள்.) நாவுக்குரிசை தராநின்ற நெல்லிமுள்ளியால் உட்சூடு, சோமரோகம், மாதர்கள் ருதுதோஷம், அஸ்திசிராவம், தூம்பிரம், தாகம், ரத்த பித்தம், விந்துநட்டம், மூத்திர அருகல், ஆண்குறிக் கொப்புளம், பயித்தியம், பித்தவாந்தி, பிரமேகம் ஆகிய இவைகள் விலகும். இதை அரைத்துச் சிரசுக்கிட்டு முழுக நேத்திரங் குளிரும் என்க.

செய்கை:—சீதளகாரி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் நெல்லிவற்றலை இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு அரைப்படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம், தினம் 2 வேளை கொடுத்துவர இரத்தமின்மை, காமாலை, பித்த குன்மம் போம். நெல்லிவற்றல் பலம் $\frac{1}{2}$, கடுக்காய் பலம் $\frac{1}{2}$ இவைகளை இடித்து ஒரு மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் ஒரு விராகனெடை இரேவல்சின்னியைப் பொடிசெய்து போட்டு வேளைக்கு 2 அவுன்ஸ் அளவு கொடுக்கப் பேதியாகும். அப்படி ஆகாவிட்டால் 2 மணி நேரம் பொறுத்து மீண்டும் 1 அவுன்ஸ் அளவு கொடுக்கப் பேதியாகும். பேதிஆக ஆரம்பித்தால்மறுபடியும் கொடுக்க

வேண்டியதில்லை. இதனால் பித்தவாயு, அரோசிகம் முதலியவைகள் போம். நெல்லிவற்றல் கியாழத்தில் சர்க்கரை கூட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க ஸ்திரீகளுக்கு மர்மஸ்தானத்தில் உண்டான எரிச்சல் அடங்கும். நெல்லிக்கொட்டை விதை, திராட்சைப் பழம் வகைக்குப் பலம் 1: இவ்விரண்டையும் இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டு ¼ படியாகக் காய்ச்சி வடித்துச் சர்க்கரை கூட்டி வாயிலடக்கிச் சிறிது நேரம் சென்றபின் கொப்புளித்து உமிழ்ந்துவிடச் சுரத்தின்பேரில் வந்த அரோசிகம் தீரும்.

நெற்பொரி.

(Oryza Sativa—Fried).

நெற்பொரியைத் தின்றா னெடுந்தாகம் வாந்திமந்த
மற்பித்த வாத மதமூர்ச்சை—பற்பலவாம்
பேதி யருசியிவை பேருலகை விட்டோழியுஞ்
சாதி மடமயிலே சாற்று.

குணம்:—(இ-ள்.) நெற்பொரியைப் பாகப்படிக்குத் தின்றால் அதிதாகம், வமனம், மந்தாக்கினி, பித்தவாதரோகம், மதரோகம், மூர்ச்சை, அதிசாரவருக்கம், அரோசிகம் இவைகள் நிவர்த்தியாகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—உமிநீக்கிய ஆழாக்குப் பொரியை ½ ஆழாக்குப் பசுவின்பாலில் போட்டு ஊறவைத்துச் சர்க்கரை நெய் கூட்டிப் பிசைந்து அதில் ஏலக்காய்ப்பொடி 2 குன்றியெடை போட்டுக் கலந்து சாப்பிட வாய்க்கு ருசியாக இருக்கும். மலம் தள்ளும். பித்தம் அடங்கும். சுரரோகத்தில் மலச்சிக்கல் இருக்கும்போது சுரக்கியாழங்களில் நெற்பொரி சேர்த்துக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

சுரரோகத்தின்பேரில் மலச்சிக்கலிருந்தால் கியாழம்.

பாதிரிவேர், வில்வவேர், பெருங்குமிழம்வேர் வகைக்குக் கழஞ்சு 2, இவைகளை இடித்து 4 படி நீரில் போட்டு 1 படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் உமிநீக்கிய நெற்பொரியைப் போட்டுக் கஞ்சிபோல் காய்ச்சிக் கொடுக்க மலம் போம். சுரம் நீங்கும்.

நேர்வாளக்கொட்டை.

(Croton Tiglium—Seeds).

ஓதி லுதரத் துறுமலம்பன் னோய்விலகும்
பேதி மருந்திற் பெரிதாகும்—வாதமறுங்
கூர்வாளை யொத்தவிழிக் கொம்பனையே பண்டிதர்சொன்
னேர்வாளக் கொட்டைதனை நீ.

குணம்:—(இ-ள்.) பேதி மருந்தில் முக்கியமாகிய நேர்வாளப் பருப்பால் மலாசயப் பழையமலமும் அதைப்பற்றிய பல பிணிகளும் வாதநோயும் போம் என்க.

செய்கை:—மலகாரி, உற்சாககாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாகக் கொடுப்பதில்லை. இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி மாத்திரை, மெழுகு, எண்ணெய் முதலியவைகளாகச் செய்துபேதியாகும்படி கொடுப்பதுண்டு.

இதனை அவிழ்த பாகங்களிற் கூட்டுமுன் சுத்தி செய்துகொள்வது அவசியமாகும். எங்ஙனமெனில்—பசுவின் சாணியைக் கரைத்துத் தேவையான அளவு நேர்வாளக் கொட்டையைப் போட்டு ஒரு ஜாமம் எரித்து ஆறவிட்டுக் கொட்டைகளை எடுத்து மேலோடு நீக்கி உள்ளிருக்கும் பருப்புக்களை எடுத்து ஒவ்வொன்றையும் பிளந்து நடுவில் இருக்கும் நஞ்சு என்று சொல்லும்படியான முளையைப் போக்கிச் சீலையில் தளர்ச்சியாக முடிச்சுக் கட்டி, அரிசி நொய்யுடன் பால் கூட்டி, முடிச்சை அதில் போட்டு எரித்து அரிசி வெந்த பதத்தில், முடிச்சை எடுத்துப் பருப்புக்களை அலம்பி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு நெய்யில் சிறிது வறுத்து எடுத்துக்கொள்ள உயர்தரமான சுத்தியாகும்.

இது சம்பந்தமான சில அவிழ்தங்களைத் தாளகம், வீரம், நிர்விஷம்,நாபி, இருவி முதலியவைகளின் தலையங்கத்தின்கீழ்க் காண்க.

* நொச்சியிலை.

(Vitex Negundo).

நாசந் தருவாத நாசிப் பிணியழல்சு
வாசந் தசனவுரு வன்ரேடங்—காசமறு
லுச்சி யடையை யுறைநோயு மேன்படுமோ
நொச்சி யடையை நுவல்.

---

* இங்குக் கூறப்பட்ட குணங்களெல்லாம் வெண்நொச்சிக்கென்றே யுணர்க.

குணம்:—(இ-ள்.) நொச்சியிலையால் மகாவாதம், பீநசம், சுரம், இரைப்பு, தந்தவலி, திரிதோஷம், இருமல், நீரேற்றம், கபசிரஸ்தாபம் இவைகள்போம்.

செய்கை:—வேதனைசாந்தினி, மூத்திரவர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி, வியதாபேதகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலைச்சாற்றை வேளைக்கு ¼ அவுன்ஸ் அளவில் சிறிது மிளகுத்தூள் கூட்டித் தேன்விட்டுத் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. அல்லது 2 தோலா இலையைக் குறுக அரிந்து ஒரு மட்குடுவையில் போட்டு ¼ படி சலம்விட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் அளவு தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இதுவுமல்லாமல் இந்த இலையுடன்சிறிது மிளகுகூட்டி மெழுகுபோல் அரைத்துச் சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் 3 வேளைகொடுப்பதுண்டு. இவற்றால் குளிர், சுரம், அஜீரணம்,கைகால்பிடிப்பு, தேகவலி இவைகள் போம். இந்த இலையைக் கசக்கித் தலையில் வைத்துக் கட்டத் தலைபாரம், கழுத்து நரம்பு இசிவு போம். இதன் இலையை அரைத்துக் கட்டி கணுக்கும் வீக்கத்திற்கும் வைத்துக்கட்ட உள்ளுக்கு அடங்கும். இந்த இலையை வதக்கிச் சீலையில்வைத்து முடிச்சுக்கட்டித் தாளக்கூடிய சூட்டில் ஒற்றடம்கொடுக்கக் கணுச்சூலை, பிடிப்பு, வலி, வீக்கம் முதலியவைகள் குணமாகும்.

இவ்விலைச் சாற்றைக்கொண்டு நிற்குண்டித்தைலம் காய்ச்சுவதுண்டு. இதனைத் தேரையர் தைலவர்க்கச் சுருக்கத்தில் காண்க.

நொச்சிப்பட்டை.

(Vitex Negundo—Bark).

கடியதொரு சந்நி கனத்தநீ ரேற்றம்
கொடியதொரு வாதங் குலைந்து—குடியகலக்
கச்சுமுலை மாதேநீ காசினியிற் பேர்விளங்க
நொச்சியதன் பட்டை நுவல்.

குணம்:—(இ-ள்.) நொச்சிப் பட்டையால் சந்நி, சிரசில் நீரேற்றம், வாதரோகம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுரஹரகாரி, பலகாரி, கபஹரகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேர்ப்பட்டைச் சூரணத்தில் வேளைக்கு 5 - 10 குன்றி எடை தேனில் கொடுக்கலாம்.

இதனால் பிடிப்பு, நரம்புகளின் வலி, குன்மம், சலதோஷம் முதலிய வைகள் போம். ஒரு தோலா எடையுள்ள வேரைப் பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க முற்கூறப்பட்ட வியாதிகள் யாவும் போம்.

* பசலைக்கீரை.

(Portulaca Quadrifida).

நீர்க்கடுப்பு நீரடைப்பு நீங்காத மேகமுமிவ்
வூர்க்கடுத்து வாராம லோடுங்காண்—பார்க்கவொண்ணு
வற்பவிடை மாதே யரோசிசர்த்தி யுந்தோலையு
நற்பசலைக் கீரையத னுல்.

குணம்:—(இ-ள்.) நல்ல வயலைக் கீரையால் மூத்திரக் கடுப்பு, மூத்திரக் கிரிச்சரம், ஒழுக்குவெள்ளை, அருசி, வாந்தி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையுடன் பருப்பு சேர்த்துப் பாகப்படிக் கடைந்து முதல் அன்னத்தில் சேர்த்து நெய்விட்டுச் சாப்பிட அதிக ருசியாக இருக்கும். இது நல்ல ரத்தத்தை யுண்டாக்கும். தேகத்திலுள்ள வெப்பத்தைத் தணிக்கும். தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு இவைகளை நீக்கும். மலத்தை இளகலாகத் தள்ளும். இது கபதேகிகளுக்கு ஆகாது.

பச்சரிசி அன்னம்.

(Raw Rice—Cooked).

பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்
நிச்சயமா கப்பித்தை நீக்குங்கா—ணச்சமற
மூத்திரக்கி ரிச்சரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த
மாத்திரமுண் டாக்கும் வழுத்து.

குணம்:—(இ-ள்.) பச்சரிசி அன்னமானது பலத்தையும் குழந்தைகட்கு மாந்தத்தையும் உண்டாக்கும். பித்த கோபத்தையும் கிரிச்சர ரோகத்தையும் நீக்கும் என்க. இதில் வாயு உண்டென்பர்.

செய்கை:—பலகாரி, உற்சாககாரி.

* இதுவே கொடிப்பசலை யாகும்.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாகப் பச்சரிசி அன்னத்தால் தேகத்திற்குப் பல நன்மைகள் உண்டு. இத்தகைய அன்னத்தில் நெய் அதிகமாகச் சேராவிடின் சில தேகிகட்கு உஷ்ணவாயு சம்பந்தமான பிணிகள் உண்டாகும்.

பச்சரிசிக் கஞ்சி.

(Raw Rice—Gruel).

பச்சரிசி நொய்யோடு பச்சைப் பயறிட்ட
இச்சை யுறுங்கஞ்சை யிங்கருந்தக்—கச்சையுறுங்
கோங்கை மடமாதே கூறுகின்ற பித்தம்போம்
சங்கையினி வேறில்லை சாற்று.

குணம்:—(இ-ள்.) பச்சரிசி நொய்யுடன் பச்சைப்பயறிட்டுக் காய்ச்சிய கஞ்சியை உட்கொண்டால் பித்தகோபம் தணியும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:— இச்செய்யுளின்கண் கூறியபடி பச்சரிசி நொய்யுடன் பச்சைப் பயற்றின் பருப்பைக் கூட்டிக் கஞ்சிசெய்து, உப்பிட்டுச் சாப்பிட ஆயாசம் தீரும், பித்த பிரகோபம் நீங்கும்.

பச்சிலை.

(Basella Alba).

கந்தம் பரிமளிக்கும் காணுகின்ற பச்சிலைக்கு
வந்த சொறிசிரங்கும் வன்படையும்—சோந்தமிலா
விட்டகலு மக்கணமே வீசுமலை சூழ்புவியில்
கட்டழகு மாதே கழறு.

குணம்:—(இ-ள்.) பரிமளமுள்ள பச்சிலையினால் சொறி, சிரங்கு முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இது வாசனைத் திரவியங்களில் ஒன்றாகும். இதை நலங்குமாவு முதலிய வாசனைப் பொடிகளில் சேர்த்து உபயோகப்படுத்தத் தேகத்தில் இருக்கின்ற வியர்வை நாற்றத்தைக் கழிப்பதுடன் சரும சம்பந்தமான பல சொறி, சிரங்குகளையும் விலக்கும்.

பச்சை அரிசி.

(Raw Rice).

சுத்த வனிலமந்தந் தோன்றுமெரி பித்தம்போம்
பத்தியத்தி லெண்ணுர்கள் பண்டிதர்கள்—மெத்தவுமே
வைச்சசுமை தாங்க வலியுண்டாந் தேகத்திற்
பச்சரிசி யைப்புசித்துப் பார்.

குணம்:—(இ-ள்.) பத்தியத்தில் விலக்கான பச்சரிசியினுல் தனிவாதகோபமும், அலசரோகமும், மிகுந்த பலமும் உண்டாம். பித்த எரிச்சல் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அன்னமாகவும், இட்டிலி, தோசை முதலிய தின்பண்டங்களாகவும் செய்து உண்பதுண்டு. இவற்ருல் தேகத்திற்குப் பலமும், பித்த சாந்தமும் உண்டாகும். ஆனல் வாதப் பிரகோபத்தை உபரி செய்யும்.

பச்சைக்குங்குமப்பூ.

(Crocus Sativus—Fresh).

சங்கையின் மதுரதோடஞ் சலதோடம் பீநசங்கள்
செங்கயற் கண்ணின்ரேடஞ் செவித்தோடம் பித்ததோடங்
கெங்கையாங் கபதோடங்கள் கெஞ்சிடும் பச்சையான
குங்குமப் பூவினுலே கோதையே யிதனைக்கொள்ளே.

குணம்:—(இ-ள்.) பச்சைக்குங்குமப்பூவுக்கு இன்சுவையால் பிறந்த துர்க்குணங்கள், நீரேற்றம், நாசி, நேத்திரம், செவி இவை களைப்பற்றிய ரோகங்கள், பயித்தியம், சிலேஷ்ம தோஷம் இவை கள் விலகும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் குங்குமப்பூவிற் குக்கூறப்பட்டதேயாகும். இந்தச் சரக்கு தற்காலத்தில் கிடைப்பது அரிது. குங்குமப்பூ விளையும்படியான பிர தேசங்களில் பச்சை யாகக் கிடைக்கும். இது உலர்ந்ததைவிட அதிகக் குணத்தைக் கொடுக்கும்.

பச்சைத் திப்பிலிவேர்.

(Piper Longum—Raw).

தாகமுடன் சோபந் தணிக்குங்கா ணெவ்வகையின்
மேகமுடன் பித்தம் விலக்குமே—போகமிகும்
நவ்விய ரன்ன நயங்கொடுக்கும் பச்சையாஞ்
செவ்வியம் மூலச் செயல்.

குணம்:—(இ-ள்.) சிவந்து நீர்ப்பச்சையுள்ள திப்பிலிவேர், விதாகம், ஆயாசம், பற்பல மேகம், பித்தாதிக்கம் இவைகளை நீக்கும். சுக்கிலத்தையும், அழகையும் விருத்தி செய்யும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் திப்பிலிமூலத்திற்குக் கூறப்பட்டதேயாகும்.

பச்சைப்பயறு.

(Phaseolus Mungo).

பச்சைப் பயறதுதான் பாரிற் பயித்தியத்தை
யச்சமற நாளு மகற்றுங்காண்—கச்சுலவு
கொங்கைமட மாதே குளிர்ச்சியென்பா ரெப்போதுந்
தங்குவா தத்தைத் தரும்.

குணம்:—(இ-ள்.) பச்சைப்பயறு பித்தத்தை நீக்கும், வாயுவைத் தரும், சீதளம் செய்யும் என்பர் என்க.

(இதுவுமது)

ஐயைப்பித் தத்தை யரோசகத்தைப் போக்கிவிடும்
வெய்யவா தத்தை விளைவிக்கு—மெய்யா
மறுவொழிந்த தூய மதிவதன மாதே
சிறுபயறு செய்யுஞ் செயல்.

(இ-ள்.) சிறுபயறு கபரோகத்தையும், பித்தத்தையும், அரோசகத்தையும் போக்கும். பித்த வாதத்தை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, சமனகாரி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பச்சைப்பயற்றைச் சலம்விட்டு வேகவைத்து வடித்து, உப்பிட்டுச் சுண்டலாக உண்பதுண்டு. இதன் பருப்பை, அரிசி நொய்யுடன் கலந்து கஞ்சியாகவும் அல்லது அரிசி, கோதுமைநொய் முதலியவற்றுடன் கூட்டிப் பொங்கலாக

வும் செய்து உண்பது வழக்கம். இத்தகைய ஆகாரம் தேகத்தின் வெப்பத்தை நீக்குவதுமன்றிப் பித்தத்தைச் சாந்தப்படுத்தும். இன்னும் இப்பயறுடன் சில கீரைகளைக் கூட்டிக் கடையலாகவும் செய்வது வீட்டு வழக்கம். இதனால் தாது விருத்தி உண்டாகும். அளவு கடந்து பயறை அதிகப்படுத்தினால் மலக்கழிச்சலை யுண்டாக்கும். இதன் மாவைச் சலம்விட்டுக் களிபோல் கிளரிப் பால் கட்டு உண்டான ஸ்திரீகளுக்கு மார்பில் வைத்துக்கட்ட நோய் நீங்கி எளிதில் பால் சுரப்பு உண்டாகும்.

பச்சை விலாமிச்சுவேர்.

(Andropogon Muricatus).

திரிதோஷந் தாகஞ் செறிகுஷ்ட மீளை
பெரிதான சூலைமந்தம் பேராச்—சுரவெப்ப
மச்சையுண்ணுங் கீடமுதன் மாறுமெய்க்குங் காந்தியுண்டாம்
பச்சைவிலா மிச்சுக்குப் பார்.

குணம்:—(இ-ள்.) பச்சை விலாமிச்சுவேருக்கு வாதபித்த கபாதிக்கம், தாகரோகம், பெருவியாதி, சுவாசம், சரீரக்கடுப்பு, அக்கினிமந்தம், உஷ்ணசுரம், மச்சை, தாதுக்கிருமி ஆகிய இவைகள் நீங்கும், அழகுண்டாம் என்க.

செய்கை:—பலகாரி, உற்சாககாரி, அங்காகர்ஷணநாசினி, மூத்திரவர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—'விலாமிச்சுவேர்' என்கிற தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

பட்டாணி.

(Pisum Sativam).

துய்யநுரை யீரலுக்கும் தோன்றுநடு மார்புக்கும்
உய்யபலந் தந்திடினு மொன்றுகேள்—தையலே
சாற்றுங் குடலதனிற் சாரும் வலிமந்தம்
ஏற்றதிரள் பட்டாணிக் கே.

குணம்:—(இ-ள்.) பட்டாணி நுரையீரலுக்கும் இருதயத்திற்கும் பலத்தைக் கொடுக்கும். ஆனால் சிறிது வாயுவையும் மந்தத்தையும் உண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த பட்டாணியை வறுத்து உண்பதுண்டு. அல்லது இதை நன்றாய் ஊறப்போட்டுக் காய்கறி

களில் கூட்டிப் பொரியலாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. இதுவுமல்லாமல் பச்சைப் பட்டாணியையாவது, ஊறப்போட்டெடுத்த உலர்ந்த பட்டாணியையாவது சலம்விட்டு வேக வைத்துச் சுண்டலாகச் செய்து, தாளித்து உபயோகப்படுத்துவதுண்டு. இவைகள் எல்லாம் நாவிற்குச் சுவையைக் கொடுக்கத் தக்கவைகளே. இதனால் நுரையீரல், இருதயம் முதலிய உறுப்புகளுக்குப் பலமுண்டாகும். இது எளிதில் ஜீரணிக்கக் கூடியதன்று. ஆதலால் இதனை அதிகமாக உண்ணில் குடலில் வலியையும் மந்தத்தையும் உண்டாக்கும்.

பண்ணைக்கீரை.

(Celosia Argentia).

பண்ணையிளங் கீரையது பற்று மலமிளக்கு
மெண்ணுங் குடருக் கிதங்கொடுக்கும்—பெண்ணேகேள்
சீதங் கரப்பான் சிரங்குபுண் மாற்றுவிக்குங்
கோதங் கிலையதனைக் கொள்.

குணம்:—(இ-ள்.) குடலுக்கு நன்மையைத் தராநின்ற பண்ணைக்கீரை ஆமம், கரப்பான், கிரந்தி, விரணம் இவைகளை நீக்கும். மலத்தை யிளக்கி வெளியாக்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—துவரம்பருப்பைச் சலம்விட்டு வேக வைத்து மலரும் பதத்தில், சுத்தம்செய்து அலம்பி வைத்துள்ள கீரையையும் சிறிது பச்சை மிளகாயையும் போட்டு ஒரு ஆவி வேக வைத்து உப்பிட்டுக் கடைந்து அதன்பின் பாகப்படித் தாளித்து அன்னத்துடன் கூட்டி நெய்விட்டு உண்ணலாம். அல்லது இக்கீரையுடன் போதிய அளவு பச்சை மிளகாய், வெங்காயம், கரைத்த புளி சேர்த்து வேகவைத்து உப்பிட்டுக் கடைந்து தாளித்து அன்னத்துடன் கூட்டி உண்ணலாம். இது மலத்தைச் சிக்கலின்றிப் போக்கும். குடலைச் சுத்தப்படுத்திப் பலத்தைக் கொடுக்கும்.

பத்திராட்சி.

(Myrabilis Jalapa).

மண்ணிற் கிழங்கோங்கும் மாபத்தி ராட்சியிலை
எண்ணிற் சிலகொண்டிங் கேந்திழையே—நண்ணியுளம்
வெந்தணலில் நீவெதுப்பி மேற்போடக் கட்டிபல
நொந்துடையு மென்றே நுவல்.

குணம்:—(இ-ள்.) பத்திராட்சி இலைகளைச் சிறிது பறித்து அனலில் வாட்டிக் கட்டிகளின்பேரில் போட்டு வைக்க விரைவில் பழுத்து உடையும் என்க.

செய்கை:—கிழங்கிற்கு: இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை 10-12 கொண்டு வந்து விளக்கெண்ணெய் தடவிக் கரிநெருப்பின்பேரில் சூடேற வாட்டிக் கட்டியின்பேரில் பொறுக்கக் கூடிய சூட்டில் ஒன்றின் மேல் ஒன்ருக வீக்கம்கொண்ட அளவு மறையும்படியாகக் கனமாகப் போட்டு வைக்கவும். சீலைகொண்டு கட்டுவதற்குக் கூடுமாஞல் அவ் விலைகள் அந்த இடத்தைவிட்டு நழுவாவண்ணம் கட்டி வைக்கவும். இதனல் கட்டி உடையும். சீழ்கொள்ளாதிருப்பின் அழுந்திவிடும். இதன் கிழங்கை மேற்ருேல் நீக்கிப் பாகப்படிப் பச்சைப்பயறு, வெங்காயம் கூட்டிக் கூட்டமுதாகச் செய்து சாப்பிட மூலம் குணமாகும்.

பப்பாய்க்காய்.

(Carica Papaya—Raw).

வாத வலிபோக்கும் வற்றியபால் தான்சுரக்கும்
மாத ருதுவழுக்கை மாற்றிவிடும்—பூதலத்தில்
தப்பா துருவழிக்கும் தட்டைக் கிருமியறும்
பப்பாய்க்கா யுண்டவர்க்குப் பார்.

குணம்:—(இ-ள்.) பப்பாய்க்காயால் தேகத்திலுண்டான வாத வலி நீங்கும், பால்குடிக்கும் குழந்தைகளையுடைய ஸ்திரீகளுக்குப் பால்சுரப்புண்டாகும், மாதவிலக்கு சிக்கல்பட்டவர்களுக்கு ஒழுங்காகும், வயிற்றிலுள்ள கிருமிகள் நீங்கும் என்க.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, கிருமிநாசினி, க்ஷீரவர்த்தினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயைத் தோல் நீக்கி அரிந்து கடலைப்பருப்புடன் சேர்த்துக் கூட்டமுதாகப் பாகப்படுத்திச் சாப்பிட வாயுவினல் உண்டான தேகவலியைப்போக்கும். ஸ்திரீகளுக்குப் பால் சுரப்புண்டாக்கும். வயிற்றில் உள்ள கிருமிகளைப் போக்கும். இந்தக் காயைக் கீறி, இதிலிருந்து ஒரு தேக்கரண்டிப் பால் சேகரித்து அதற்குச் சமன் தேன்கூட்டி அதில் வெந்நீர் கொஞ்சங் கொஞ்சமாக ½ அவுன்ஸ் அளவிற்கு விட்டுக் கலக்கி, அதிகாலையில் சாப்பிட்டு இரண்டுமணி நேரம் பொறுத்து ஒரு அவுன்ஸ் சிற்ரு

மணக்கெண்ணெய் சாப்பிட மலத்தில் கிருமிகள் வெளியாகும். மீண்டும் கிருமிகள் இருப்பதாக சந்தேகமிருந்தால் மறுநாள் காலையி லும் இப்படிக் கொள்ளச் சுத்தமாகக் கிருமிகளை வெளியாக்கிவிடும். இந்தக் காயிலிருக்கும் பாலைத் தேள்கொட்டின இடத்தில் தேய்க்க விஷமிறங்கும். ஊறல் உள்ள படைகளுக்குத் தடவத் தினவு அடங்கி ஆறும். இதன் இலையை நெருப்பனலில் வதக்கியாவது அல்லது வெந்நீரில் தோய்த்து நன்றாய் வெந்தபின் எடுத்தாவது எந்த பாரிசத்தில் நரம்பைப்பற்றிய நோய் இருக்கின்றதோ அந்தப் பாரிசத்தில் போட வலி நீங்கும்.

பப்பாய்ப்பழம்.

(Carica Papaya—Fruit).

பப்பாய்ப் பழமுண்ணப் பாவையர்தம் சூலைதனைத்
தப்பா தழித்துவிடும் தன்மையிதைச்—செப்பாதே
மூல முடன்கிராணி முந்துங் குடல்வாயு
சாலக் குணமாமே சாற்று.

குணம்:—(இ-ள்.) பப்பாய்ப்பழம் உண்பதினால் கருவழியும். மூலம், கிராணி, வாயு முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தின் மேற்றோலைச் சீவிச் சாதாரணமாக உண்பதுண்டு. இதை ஸ்திரீகள் அளவு கடந்து உபயோகப்படுத்தினால் கருப்பாசயத்தில் உள்ள கருவை வெளியாக்கிவிடும். இப் பழச்சாற்றை ஒரு கோப்பையில் விட்டு உலர வைத்துச் சிறிது ஈரம் இருக்கும்போதே 1-2 குன்றி எடை மாத் திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்க. வேண் டும்போது வேளைக்கு 1 மாத்திரை வீதம் தினம் 2-3 வேளை கொடுக்க யானைக்கால் வீக்கம் வாங்கும். இதனுடன் பப்பாய் இலையை நன்றாய் மெழுகுபோல் அரைத்து அந்தக் காலின்பேரில் வைத்துக் கட்ட வீக்கம் குறையும்.

பயற்றங்காய்.

(Dolichos Tranquebaricus).

ஐய மகலு மரோசிகெடுந் தீபனமாம்
பையுதிர வாய்வும் பறக்குமென்பார்—செய்யு
நயத்த வவுடதமு நாச மடையும்
பயற்றங்காய் தன்னையுண்டு பார்.

குணம்:—(இ-ள்.) மருந்தை முறிக்கின்ற பயற்றங்காயினுல், கபாதிக்கம், அருசி, ரத்தவாத குன்மம் இவைகள் விலகும். பசி தீபனமுண்டாகும் என்க.

(இதுவுமது)

பண்ணுங் கறிவகையில் பண்ணிகருஞ் சொன்மடவாய்
எண்ணும் பயற்றங்கா யின்கறியை—யுண்ணுங்கால்
மெய்யதனைப் போஷிக்கும் மெத்தபசி யுண்டாக்கும்
பையக் கபமொழிக்கும் பார்.

(இ-ள்.) பயற்றங் காயைக் கறியாகச் சமைத்துண்ணத் தேகத்தைப் போஷிப்பதுமல்லாமல் தீபனத்தைக் கொடுத்துக் கபசம்பந்தமான ரோகங்களை ஒழிக்கும் என்க.

செய்கை:—பலகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயைச் சாதாரணமாகப் பொரியல் செய்து வீடுகளில் உபயோகப்படுத்துவது வழக்கம். இது உண்பதற்கு உருசியாக இருக்கும். தீபனத்தையும், பலத்தையும் கொடுப்பதல்லாமல் கபாதிக்கம், அருசி, ரத்தவாதகுன்மம் முதலியவற்றைப் போக்கும். மருந்தின் வேகத்தை முறிக்கும்.

பரட்டைக் கீரை.

(Corchorus Capsularis).

பரட்டைநறுங் கீரையது பத்தியத்திற் காகும்
வெருட்டுகின்ற பித்தமிக வீறும்—புரட்டுங்
கபமுடனே வாதங் கரப்பானு மேகுஞ்
சுபவசன மாதே துதி.

குணம்:—(இ-ள்.) பத்தியத்திற்கு உரித்தாய் நின்ற பரட்டைக் கீரையினுல் சிலேஷ்மநோயும், வாதப்பிணியும், கரப்பானும் போம்; பித்தம் உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலைக்குக் கசப்புக் குணம் உண்டு. இதைத் துவட்டலாகச் செய்து அன்னத்துடன் சேர்த்துண்ண அஜீரணத்தைப் போக்கும். ஒரு எடை கீரைக்கு 10 எடை சலம் விட்டு நாலில் ஒன்ருய்க் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு சாப்பிட்டுவர, மூத்திரப்பையின் வீக்கத்தையும், அதன் அழற்சியையும் சாந்தப்படுத்துவதுடன் வெள்ளை விழுவ

தையும் குணப்படுத்தும். இதைக் குழந்தைகளுக்கு சிறு அளவாகக் கொடுக்க, வயிற்றிலுள்ள கிருமிகளை அகற்றும். இன்னும் இந்தக் கியாழத்தை அடிக்குடலில் ஏற்பட்ட வயிற்றுவலி, வாயு சம்பந்தமான வயிற்றுப் பொருமல் முதலியவைகளுக்கும் கொடுக்கலாம். இதன் உலர்ந்த கீரையையும் முன்போல் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. இதனால் வாயுவினால் உண்டான சீதபேதி, அக்கினி மந்தத்தினால் ஏற்பட்ட அரோசிகம், துர்ப்பலம் இவைகள் குணப்படும். இந்தக் கீரையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 3-4 குன்றி எடை சூரணத்துடன் சமனெடை மஞ்சள்தூள் சேர்த்து நெய்யில் மத்தித்துத் தினம் 2-3 வேளை சாப்பிட்டு வரச் சீதபேதி குணமாகும். இதன் விதையைப் பொடிசெய்து வேளைக்கு 30-40 குன்றி எடை சலத்தில் போட்டுக் கலக்கிக் கொடுக்கச் சுரத்தைக் குணப்படுத்தும். அடிக்குடலில் சேர்ந்துள்ள மலத்தை வெளியாக்கும்.

பருங்காளான்.

(Agaricus Campestris).

கயங்கிரந்தி தாகங் கரக்குமண்டம் விக்கல்
மயங்குவிக்கும் பித்தமடல் வாதம்—பயங்கரத்தைச்
செய்ய வருபேதி திட்டிமந்த நோய்களுண்டாம்
வெய்யபரு மாம்பியால் விள்.

குணம்:—(இ-ள்.) பருங்காளானால் க்ஷயமும், விரணமும், தாகமும் நீங்கும்; குடல் விருத்தி, விக்கல்ரோகம், பித்தகோபம், மகாவாதம், அதிசாரம், கண்புகைச்சல் ஆகிய இவைகள் உண்டாம் என்க.

இந்த இனத்தில் புற்றுக்காளான், வலைக்காளான், பொறிக்காளான், வரிக்காளான் என நான்கு வகைகளுண்டு.

புற்றுக்கா ளான்வலையைப் போலும் பொறிவரியை
யுற்றெழுகா ளானென் றுரைக்குமவை—முற்றும்
பழுதின்று நற்குணமும் பண்ணுவன மாந்தர்
தொழுதின்று முண்பரெனச் சொல்.

(இ-ள்.) புற்றின்றன்மையாயும், வலை விலக்கண்ணுருவமாயும், பலநிறமாயும், வரிநிறைந்த குறியுள்ளதாயும் இராநின்ற நான்கு வகைக் காளான்களைப் புசிப்பதினால் குற்றமில்லை. நற்குணத்தைச் செய்யினும் செய்யும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் பலஜாதிகள் உண்டு. அவைகளில் நல்ல சலத்தின் ஓரத்தில் மணற்பாங்கில் விளைவது வெளுத்த நிறமுடையதாகவும், மேற் குவிந்து கோழி முட்டையைப் போலவும் இருக்கும். இதுவே சிறந்தது. இதனைப் பாகப்படிக் கடலைப் பருப்புடன் கூட்டிக் கூட்டமுதாகவும் அல்லது ஆட்டு இறைச்சியுடன் கூட்டிக் குழம்பாகவும் செய்து உண்பதுண்டு. இது சரீரத்திலுள்ள நீரைப் பிரிக்கும். க்ஷயம், தாகம், குடல் விரணம், பேதி இவைகளை நீக்கும். இதனை உள்ளங்கையில் வைத்துக் கசக்கிச் சாறு பிழிந்து, வடிகட்டிக் கண்களில்விட மாசுகளை நீக்கிப் பிரகாசத்தை யுண்டாக்கும். இன்னும் இந்தச் சாற்றை 2-3 துளி கண்களில் விட்டுக்கொண்டுவர நீர் வடிதல் நிற்கும். இதை உலர வைத்துப் பொடி செய்து ¼-½ தோலா எடை சாப்பிடப் பேதியைக் கட்டுவதுடன் வயிற்றுக் கடுப்பையும் உதிரப் போக்கையும் நிறுத்தும். இதனுடன் மீன் வஜ்ஜிரம் சேர்த்துக் காடிவிட்டு அரைத்து அண்டவாதத்தின்பேரில் தடவிவர அண்ட வீக்கத்தையும் வலியையும் குணப்படுத்தும். இந்த இனத்தில் சில மரத்தின் வேர்களிலும் களிப்பு நிலத்திலும் விளைவது உண்டு. இது கறுப்பு நிறமாகவும், மஞ்சள் நிறமாகவும், சிவந்த நிறமாகவும், வரிகள் விழுந்ததாகவும் இருக்கும். இது நஞ்சுக் கொப்பானது. ஆகையால், இது எவ்விதப் பிரயோகத்திற்கும் பயன்படாது.

பருத்தியிலை.

(Gossypium Indicum—Leaves).

பருத்தியிலை மொட்டிரண்டைப் பாலில்ரைத் துண்ண
வருத்துகின்ற மேகமெலாம் மாறும்—பருத்த
விரத்தபித்தத் தோடு விரணவீக் கம்போ
மரத்தவிதழ் மாதே யறை.

குணம்:—(இ-ள்.) பருத்தியினது இலையையாவது மொக்கையாவது கால்பலம் அரைத்து அரை ஆழாக்குப் பசுவின் பாலில் கரைத்துண்ணில் சீழ்ப்பிரமேகம், ரத்தபித்த ரோகம், விரண சோபை முதலியவை நீங்கும் என்க.

செய்கை:—ரக்தஸ்தம்பனகாரி, வேருக்கு-ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் கொழுந்து இலையை இடித்துச் சாறுபிழிந்து வேளைக்கு ¼ ஆழாக்கு வீதம், தினம் 2 வேளை குடித்துவர, அதிசாரபேதி குணமாகும். இதன் இளம் பிஞ்சுக்

காயுடன் கொழுந்து இலைகூட்டி அரைத்து அரை பலம் அளவிற்குத் தினம் 2 வேளை பாலில் கலக்கிச் சாப்பிடச் சீதபேதி, ஸ்திரீகளுக்குக் காணுகின்ற பெரும்பாடு போம். இதன் இலைச்சாற்றுடன் இரண்டு பங்கு சர்க்கரை கூட்டிச் சர்பத்துப்போல் காய்ச்சி வேளைக்கு 2 பலம் வீதம் சாப்பிடப் பித்தப்பயித்தியம் போம், கருப்பம் தரிக்கும், தேகபுஷ்டியுண்டாகும். இதன் இலையை நன்றாய் உலர்த்தி எரித்துச்சாம்பலாக்கி விரணங்களின்மேல் தூவிவர ஆறும். இன்னும் உதிரம் சொரிகிறதாயினும் உடனே நிற்கும். இதன் கொட்டைகளை ஊறப்போட்டு மேல்தோல் நீக்கி, காயப்போட்டு எடுத்த பருத்திப் பருப்பை லேகியங்களில் சேர்த்துச் செய்யத் தாதுவிருத்தியை யுண்டாக்கும். இதைச் செக்கிலிட்டுப் பிழிந்தெடுத்த நெய்யை அன்னத்தில் விட்டுச் சாப்பிடத் தேகபுஷ்டியுண்டாகும்.

பலா இலை.

(Artocarpus Integrifolia—Leaves).

பலாவிலையி லுண்ணப் பதுங்கிநின்ற பித்தங்
குலாவி யெழும்பிக் குதிக்கு—முலாவிவரு
கன்ம மகோதரநோய் காணு தகலாத
குன்ம மகலுங் குறி.

குணம்:—(இ-ள்.) பலா இலையில் உண்டால் அடங்கிய பித்தமும் அதிகரிக்கும். ஊழால்வந்த பெருவயிறும் குன்மமும் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இச்செய்யுளின் கண்ணே இனிது விளக்கப்பட்டிருக்கின்றது.

பலாக்காய்.

(Artocarpus Integrifolia—Raw fruit).

உண்ணின் மிகுமந்த முறுசெய் வாதநோ
யண்ணு மிளைப்பிரைப்பு மண்டுங்காண்—வண்ணப்
பலாக்காய்க்கு விந்துவுமாம் பாரி லுவமை
சொலாக்காம வாரிதியே சொல்.

குணம்:—(இ-ள்.) பலாக்காய்க்கு அக்கினிமந்தம், வாதகோபம், ஆயாசம், சுவாசம், சுக்கிலவிருத்தி ஆகிய இவைகள் உண்டாகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பிஞ்சில்லாத முதிர்ந்த காயைச் சமைத்து உண்பதினால் இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் சித்திக்கும்.

பலாக்கொட்டை.

(Artocarpus Integrifolia—Seeds).

அள்ளேறு நீள்குடரி னப்பான் மலங்கட்டுங்
கள்ளேறு நெஞ்சர்நெஞ்சாங் கல்லகட்டி—னுள்ளே
சலாக்கோட்டை யிட்டசுகந் தானுங் கருக்கும்
பலாக்கோட்டை யிட்ட பலன்.

குணம்:—(இ-ள்.) கருக்கிய பலாக்கொட்டையினால் அள்ளு மாந்தம், குடலின் கபத்தால் மலச்சிக்கல், கட்குடியர்க்கு ஒப்பாக நெஞ்சிற் புளித்த ஏப்பத்தை அடைதல், கற்போல் வயிறு கெட்டிப் படல், அதில் ஓட்டுசாண் அளவு இரும்புச் சலாகை சொருகியது போல் உபத்திரவம் இவைகள் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனை நெருப்பனலில் சுட்டு மேற் றோலை நீக்கி உண்பதுண்டு. இது வாய்க்கு உருசியாயிருக்கும். இதனை மேற்றோலை நீக்கிப் பொரியல்களிலும் ஆட்டிறைச்சியுடனும் கூட்டிப் பாகப்படுத்தி உண்பதுண்டு. இதனால் இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள எல்லாவித துர்க்குணங்களும் சம்பவிக்கும். இதனை அடுத்து உண்ணாது இருத்தலே சாலச் சிறந்தது.

பலாசுக்கொட்டை.

(Butea Frondosa—Seeds).

வயிற்றுக் கிருமிகணம் வாதமொடு சீத
நியத்தபடர் தாமரையு நீங்கும்—வயிற்று
வலியிரைச்சல் வன்கரப்பான் மாறுபித் துண்டா
மலிபுரசங் கோட்டைதனை வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) புரசங்கொட்டையினால் மலப்புழுக்குலம், வாதவலி, சீதம், படர்தாமரை, குன்மம், வயிறிரைச்சல், கரப் பான் இவைகள் நீங்கும். பித்தமிகும் என்க.

செய்கை:—கிருமிநாசினி, விரணகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை ஒரு பானையில் போட்டுச் சலம்விட்டு ஓர் இரவு ஊறவிட்டு, மறுநாள் காலையில் மேற்றோலைப் பிதுக்கி எடுக்கச் சுளுவாக வந்துவிடும். அதன்பின் உள்ளிருக்கும்

பருப்புக்களை நன்ருய் ரவியில் காயவைத்து இடித்துச் சூரணம் செய்துகொள்க. இந்தச் சூரணத்தை எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து மெழுகுபோல் செய்து படர்ந்துவருகின்ற படைகளுக்குமேல்தடவ ஊறல் அடங்கிப் படை ஒழியும். ஆனல் சிறிது எரிச்சல் மிகும். அதனைச் சிறிது சகித்துக்கொள்ள வேண்டும். முன் சித்தப்படுத்திய சூரணத்தில் 7 முதல் 10 குன்றி எடை தினம் மூன்றுவேளை மூன்று நாள் கொடுத்து நான்காவது நாள் காலையில் 1 அவுன்ஸ் சிற்ருமணக்கு எண்ணெய் கொடுக்க வயிற்றுக் கிருமிகள் வெளியாகும்.

பலாசுமரப் பிசின்.

(Butea Frondosa—Gum).

சந்திகட்கு நாடிகட்குந் தங்குசுக்கி லந்தனக்கும்
புந்தியுரங் கட்குமுரம் பூட்டுங்கா—ணுந்து
சரமதனுக் காகமநூல் சாற்றுமலர் மாதே
பிரமதரு விற்சம் பிசின்.

குணம்:—(இ-ள்.) பிரமதருவின் பிசினனது கில்கள், நரம்புகள், சுக்கிலம், அறிவு, மார்பு ஆகிய இவைகளுக்குப் பலத்தையுண்டாக்கும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனை அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5 - 10 குன்றி எடை இலவங்கப்பட்டைச் சூரணத்துடன் கூட்டிக்கொடுக்கப் பேதி, கிராணி, சீதபேதி இவைகள் போம். இந்தக் கலவைச் சூரணத்துடன் அபினி $\frac{1}{8}$ - $\frac{1}{4}$ குன்றி எடை சேர்த்துக்கொடுக்க இன்னும் வியாதி விரைவில் குணமாகும். இந்தப் பிசின் சூரணத்தை வேளைக்கு 10-20 குன்றி எடை வீதம் தினம் 2 வேளை நெய்யில் கொடுக்க இரத்தவாந்தி, பெரும்பாடு, இரத்தமூலம், இரத்தப்பிரமேகம் முதலிய ரோகங்கள் குணமாகும்.

பலாசுமரம்.

(Butea Frondosa).

புரசுவா தம்பித்தம் பொங்குகபங் குன்மங்
கிருமி யுடனே கிராணி—பெருவலிநோ
யோட்டுமதி தீபனத்தை யுண்டாக்கு மப்பொழுதே
தீட்டியவேற் கண்ணய் தெளி.

குணம்:—(இ-ள்.) புரசமானது வாதாதிக்கம், பித்தகோபம், சிலேஷ்ம தோஷம், வயிற்றுநோய், மலக்கிருமி, சிரகணிரோகம், தேகக்குடைச்சல் ஆகிய இவைகளை நீக்கும். உதராக்கினியை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பலம் பலாசுமரப் பட்டையுடன் சிறிது இஞ்சித் துண்டு சேர்த்து இடித்து ஒரு குடுவையில் போட்டு ¾ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கப் பாம்புவிஷ மிறங்கும். ½-¾ தோலா பலாசுமரப் பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவரச் சலதோஷம், சீதள இருமல் இவைகள் தீரும். ஒரு சிறு துண்டு பட்டையுடன் சிறிது வெல்லம் சேர்த்து மென்று சுவைக்க அதிகமான நாவறட்சி அடங்கும்.

பலாப்பழம்.

(Artocarpus Integrifolia—Fruit).

தித்திக்கும் வாத சிலேஷ்மபித்த முண்டாக்கு
மெத்தக் கரப்பான் விளைவிக்குஞ்—சத்தியமாய்ச்
சேராப் பிணியையெலாஞ் சேர்ப்பிக்கு மோர்நொடியிற்
பாராய்ப் பலாவின் பழம்.

குணம்:—(இ-ள்.) இனிப்புள்ள பலாப்பழம் வாத கபபித்த தொந்தங்களையும், கரப்பானையும், முன்பில்லாத பிணிகளையும் உண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தின் சுளைகளை உண்ண வாய்க்கு மதுரமாக இருக்கும். இது கபாலத்தைப்பற்றிய நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுக்கும். ஆனால் எளிதில் ஜீரணமாகாது. அதிக உஷ்ணத்தையும் வாயுவையும் உண்டாக்குவதுடன் சில சமயங்களில் வயிற்றுப் பொருமலையும் உண்டுபண்ணும். இதை ஒரு சமயா சமயங்களில் பிரியமாக உண்ண விரும்புகிறவர்கள் நல்ல பசுவின் நெய்யில் தோய்த்து உண்பதுடன், இதன் கொட்டையையும் நெருப்பனலில் வேகச்சுட்டெடுத்துச் சாப்பிட்டால் இதற்குப் பரிகாரமாகும்.

பலாப்பிஞ்சு.

(Artocarpus Integrifolia—Tender fruit).

**தாகம்போம் வந்தபித்தஞ் சாந்தமா மாடவர்க்குப்
போக மிகப்பொழியும் பொய்யன்றே—மூக
வலஜமந்தங் குன்மமிவை யண்டிவருஞ் சொன்னேங்
கலசப்ப லாப்பிஞ்சாற் காண்.**

குணம்:—(இ-ள்.) பாலுள்ள பலாப்பிஞ்சால் தாகமும், பித்த நோயும் நீங்கும்; சுக்கில விருத்தி, அடங்கிய அலசம், மந்தாக்கினி, குன்மம் இவையுண்டாகும் என்க.

(இதுவுமது)

**தாகமுடன் பித்தந் தணியு மரிவையர்க்கு
வேகமுடன் பால்சுரக்கும் வெட்டையறும்—போகமுறத்
தாது வலுத்திறுகுந் தப்பாமல் மந்திக்கும்
ஓதுபலாப் பிஞ்சை யுரை.**

(இ-ள்.) பலாப்பிஞ்சால் தாகம், பித்தம், உஷ்ணம் தணியும். ஸ்திரீகளுக்குப் பால் சுரப்புண்டாகும். தாதுவின் சக்தி அதிகப்படும். ஆனால் வயிற்று வலியும் மந்தமும் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—பலாப் பிஞ்சின் மேற்றோலைச் சீவிக் கழித்துவிட்டுப் பொடியாக அரிந்து மிருதுவாக இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டுப் போதியவளவு சலம் விட்டு அடுப்பிலேற்றி எரித்துக் காய் வெந்த பதத்தில் சலத்தை வடித்துவிட்டு ஏற்கெனவே மலர வேகவைத்துள்ள துவரம்பருப்பைக் கூட்டிப் பாகப்படித் தேங்காய் முதலியவை சேர்த்துப்பொரியலாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. அல்லது வேகவைத்த பலாப்பிஞ்சுடன் கடலைப் பருப்பு, தேங்காய்த் திருகல் சேர்த்துக் கூட்டமுதாகச்செய்து உபயோகப்படுத்துவதுண்டு. இவற்றை உண்பதற்கு ருசியாக இருக்கும். இதனால் இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள குணங்கள் யாவும் சித்திக்கும்.

பல்லிப்பூண்டு.

(Buchnera Asiatica).

**வல்விடந் தோடசுரம் வாயுபித் தங்களோடு
பல்வலியும் பஞ்சாய்ப் பறக்குங்காண்—நல்லோர்பாற்
சொல்லிப்பார் பாடாண தாளகமுஞ் சுத்தியதாம்
பல்லிப்பூண் டுண்டாயிற் பார்.**

குணம்:—(இ-ள்.) பல்லிப்பூண்டினுல் சர்ப்பவிஷம், சுரதோஷம், வாதபித்த தொந்தம், பல்வலி இவைகள், போம். பாஷாணமும், தாளகமும் சுத்தியாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது விசேஷமாக அவிழ்த பாகங்களில் உபயோகப்படுவதன்று. இதை அரைத்துச் சுமார் ஒரு விளாங்காய்ப் பிரமாணம் எடுத்து ஒரு பலம் இலிங்கத்திற்குக் கவசம் செய்து மண்சீலை ஏழுசெய்து ஈரம் வறட்டும்படி சிறிது சாம்பலில் புறட்டி 10-15 வறட்டியில் புடமிட இலிங்கம் ஒருவாறு கட்டும். இதைப்பொடித்துச் சீசாவில் வைத்துக்கொண்டு ½-1 குன்றி எடை தேனில் கொடுக்கச் சுரம் போகும். இதை இடித்துச் சாறு எடுத்துப் பாஷாணம், தாளகம் இவைகட்குச் சுறுக்குக் கொடுக்கக் கால் தரமான கட்டாகும். அவைகட்கு உரிய தோஷமும் சிறிது நீங்கும். இது அவ்வளவு விசேஷமான மூலிகையாகக் காணப்படவில்லை.

பழம்பாசி.

(Pazhampasi).

மஞ்சட்கா மாலையொடு மாந்தங் கணச்சூடும்
விஞ்சுகட்டி சோகைகணம் மேதினியில்—அஞ்சிடவே
குத்தலுறு மூலங் குதநெகிழ்ச்சி சீதமும்போம்
நத்துபழம் பாசிகுணம் நாடு.

குணம்:—(இ-ள்.) பழம்பாசியினுல், காமாலை, மாந்தம், கணச்சூடு, கட்டி, சோகை, ஊதுகணம், மூலம், சீதபேதி முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—பழம்பாசியை 1 பிடி அளவு கொண்டுவந்து குறுக அரிந்து ஒரு மட் குடுவையில் போட்டு ¼ படி வெள்ளாட்டுப்பால் விட்டு அடுப்பிலேற்றி எரித்து இலைகள் நன்றாய் வெந்தபின் வடிகட்டி அதிலொரு எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து சாப்பிடுவதுண்டு. இப்படி 2-3 வேளை சாப்பிட மூலச்சூடு தணியும். இதனைக் குழந்தைகட்கு 1-1½ சங்களவு தினம் இருவேளை கொடுத்துவர இரத்த சீதக்கழிச்சல், ஆசனம் வெளித்தள்ளுதல் முதலியவைகள் குணமாகும்.

இந்த இலையுடன் பச்சரிசி கூட்டி அரைத்துக் களிகிண்டி விப்புருதிக்கட்டிகளுக்கு வைத்துக் கட்டப் பழுத்துடையும்.

பழம்புளி.

(Tamarindus Indica—Old Pulp).

தீதில் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோஷம்
வாதமொடு சூலைகப மாறுங்கா—ஞேதுசுரஞ்
சர்த்தியென்ற தோஷமிவை சாந்தமாங் கண்ணேய்போம்
பித்தமென்ற பேரோழியும் பேசு.

குணம்:—(இ-ள்.) குற்றமற்ற பழம்புளியால் திரிதோஷம், வாதநோய், சூலை, சிலேஷ்மகோபம், ரூட்சை, வாந்தி, விழிநோய், பயித்தியம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, உதரவாதஹரகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—கறுப்பு நிறத்தையுடைய பழைய புளியைக் குழம்பு, ரசம் முதலியவற்றில் சேர்த்துக்கொள்ளல் சாலச் சிறந்தது. இதனைச் சர்பத்தாகச் செய்து உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனில்-1¼ பலம் பழைய புளியைக் கோது, கொட்டை முதலியவைகளில்லாமல் எடுத்து வீசம்படி சலம் விட்டு நன்றாய்க் கரைத்துப் புளிப்புச்சத்தெல்லாம் இறங்கும்படியாகக் கவனித்து வடிகட்டி அதனில் ஒரு பலம் கருப்புச் சர்க்கரையைப் போட்டுக் கரைத்து மீண்டும் வடிகட்டிச் சர்பத்துப் பதமாகக் காய்ச்சி அதனில் 7-8 ஏலக்காயிலுள்ள வித்துக்களை ஒரு கல்வத்தில் இட்டு நெகிழ அரைத்து மத்தித்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்தச் சர்பத்தைக் கைவிரலால் தொட்டு ¼ மணி நேரத்திற்கு ஒரு முறை நாவில் தடவிக்கொண்டு வர வாந்தி, ஓக்காளம் முதலியவைகள் குணமாகும்.

இந்தப் பழம்புளியிலுள்ள *கோதுகளைச் சேகரித்து அதன் எடைக்குச் சோற்றுப்பை அம்மியில் வைத்து 1-2 துளி சலம் விட்டு அரைத்து உப்பெல்லாம் கோதுக் கேறுமாறு புரட்டிக்கொடுத்து ஒரு புதுச்சட்டியில் போட்டு அடுப்பிலேற்றி எரித்துச் செந்தணலாக இருக்கும்போது கீழ் இறக்கி மத்துக்கொண்டு கடைந்து ஆறவிட்டுப் புட்டியில் பத்திரப்படுத்தவும். வேண்டுமாயின் எரிக்கும் தறுவாயில் இரண்டொரு மயில் கண் சிறகுகளையும் சேர்த்துகொள்ளலாம். இது இன்னும் விசேஷ நற்குணத்தைக் கொடுக்கும். இந்தப் பற்பத்தை ¼-½ மணி நேரத்திற்கு ஒரு தடவை குண்டுமணியளவு

* கோதுகள் = புளியின்பேரில் பற்றியிருக்கும் நார்.

தேனில் மத்தித்துக் கொடுத்துவர ஓயாத வாந்தி நிற்கும். குளிர் சுரத்தில் (Malaria) காணுகின்ற வாந்தியை நிறுத்துவதற்கு இன்றியமையாததாகும்.

ஒரு எடை புளிக்கு ½ எடை உப்புகூட்டி குழம்பு பதமாகச் சலம் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்துத் தாளக்கூடிய சூட்டில் அடிபட்ட வீக்கங்களுக்குத் தடவிவரக் குணமாகும்.

பழைய வெல்லப்பாகு.

(Saccharum Officinarum—Old Syrup).

வெப்ப முறும்பழைய வெல்லப்பா குக்கருசி
செப்பு மதிசாரந் தீர்ந்துபோம்—இப்புவியில்
மாருத பித்தமது மானிடர்பால் வந்திடினும்
மீரும லோடும் விளம்பு.

குணம்:—(இ-ள்.) பழைய வெல்லப்பாகினல் அரோசிகம், பேதி, பித்தகோபம் இவைகள் எல்லாம் தணியும் என்க.

உபயோகிக்கும் முறை:—பழைய வெல்லப்பாகை வேளைக்கு ½ தோலா எடையாகத் தினம் 2 வேளை சுவைத்து வரப் பித்தம் சாந்தப்படுவதுடன் அரோசிகமும் நீங்கும்.

பறங்கி இலை.

(Cucurbita Maxima—Leaves).

பித்தமோடு வாதம் பெருந்தாக மும்பெருகுஞ்
சத்தமோடு பேதி தலைப்படுங்காண்—சுற்றுங்
கறங்காடு மேனியுள்ளே கவ்வுபுழு குச்சேரும்
பறங்கி யிலைக்குப் பகர்.

குணம்:—(இ-ள்.) பறங்கி இலைக்குப் பித்தகோபம், வாதாதிக்கம், அதிதாகம், இரைச்சலான பேதி, சரீரப் படபடப்பு, கிருமி இவைகள் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—பெரும்பாலும் இந்த இலையை ஆகாரத்திற்காகவும் அல்லது அவிழ்தத்திற்காகவும் உபயோகப்படுத்துவதில்லை. சில ஏழை மக்கள் இந்த இலையில் அன்னத்தை யிட்டுச் சாப்பிடுவதுண்டு. அன்னத்தின் சூடுகையால் அவ்விலையின் சத்து அன்னத்தில் கலந்து பற்பல ரோகங்களை உண்டாக்கும். ஆகையால்

இந்த இலையை எக்காரணத்தை முன்னிட்டும் உபயோகப்படுத்தா திருத்தல் நன்று.

பறங்கிக்காய்

(Cucurbita Maxima—Fruit).

அனலழலை நீக்கு மதிபித்தம் போக்குங்
கனலெனவே வன்பசியைக் காட்டும்—புனலாரு
மிக்கவைய முண்டாக்கு மென்கொடியே யெப்போதுஞ்
சர்க்கரைப்ப றங்கிக்காய் தான்.

குணம்:—(இ-ள்.) இனிப்புள்ள பறங்கிக்காய் அனலால் வரும் அழற்சியையும், மிகுபித்தத்தையும் நீக்கும். நல்ல பசியையும் கப கோபத்தையும் விளைவிக்கும்.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதை மேற்றோலைச் சீவிச் சிறு துண்டுகளாக அரிந்து வெந்த கடலைப்பருப்புடன் கூட்டி மஞ்சள், மிளகாய்த்தூள், உப்பு, வெங்காயம் முதலியவற்றை அளவாகப் போட்டு அடுப்பிலேற்றி ஒரு கொதி வந்து பூசினிக்காய் வெந்த சமயம் தேங்காய்த் திருகலைப் போட்டுக் கிளரித் தாளித்து அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. அல்லது இதைப் பெருந் துண்டுகளாக நறுக்கி வேகப்போட்டு மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு, வெங்காயம் திட்டமாகப்போட்டு வெந்த சமயம் சல்லிக் கரண்டியால் துழாவிக்கொடுத்து நீர் சுண்டின பதத்தில் தாளித்துப் பொரியலாக உண்பதுண்டு. இவைகள் யாவும் அன்னத்துடன் கூட்டி உண்பதற்குச் சுகமாக இருப்பினும் சரீரத்திலுள்ள உதிரத்தைக் குழம்புபோல் உறையச் செய்யும். எளிதில் ஜீரணப்படாது. வயிற்றில் வாயு உபரியாகி வயிற்றுப் பொருமலை யுண்டாக்கும். இதை வேகவைத்து அரைத்துக் களிபோல் கிளறி அழுகிய ரணங்களுக்கு வைத்துக் கட்ட ஆறும்.

இந்தக் காயின் மேற்றோலைச் சீவி நன்றாய் உலர்த்தி அதனுடன் சிறிது சீரகம் கூட்டி இடித்துச் சூரணம்செய்து வைத்துக் கொண்டு, வேண்டும்போது வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் கற்கண்டு சூரணம் கூட்டித் தினம் 2 வேளை உண்ணக் கோடைக்கால அழற்சி நீங்கும்.

பறங்கிக்காய்வித்து.

(Cucurbita Maxima—Seeds).

பித்தம்போ மேகம்போம் பேரா வனலும்போ
மெத்தவுட லங்குளிரு மேனியிடு—மித்தலத்து
ளாசினியோன் றில்லா வலர்ந்தவன சத்தனமே
பூசினிவித் தைத்தின்னும் போது.

குணம்:—(இ-ள்.) பூசினிவித்தினுல் பயித்தியமும், பிரமேகமும், சரீரஅழலையும் நீங்கும். தேகத்திற்குக் குளிர்ச்சியும் புஷ்டியும் உண்டாம் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—பூசினி வித்தைச் சாம்பலில் புரட்டிக் காயப்போட்டு மேல்தோலை உரித்துச் சாப்பிட நாவிற்கு ருசியாக இருக்கும். இது சரீரத்தின் வெப்பத்தை ஆற்றித் தேகக் கொழுமையையும், தாதுபுஷ்டியையும் உண்டாக்கும். உஷ்ணத்தினுல் உயர்ந்த பித்தத்தையும் சாந்தப்படுத்தும்.

பறங்கிப்பட்டை.

(Smilax Chinensis).

தாகம் பலவாதந் தாதுநட்டம் புண்பிளவை
மேகங் கடிகிரந்தி வீழ்மூலந்—தேகமுடங்
குட்டை பகந்தரமேற் கோள்வமனம் போம்பறங்கிப்
பட்டையினை யுச்சரித்துப் பார்.

குணம்:—(இ-ள்.) பறங்கிப்பட்டையால் தாபம், பற்பல வாத நோய், விந்து நஷ்டம், விரணம், பிளவை, நீரிழிவு, கடிவிஷம், சிரங்கு, மூலமுளை, முடவாதம், குறைநோய், கபம், பகந்தரப்புண், வாந்தி இவைகள் போம்.

செய்கை:—வியதாபேதகாரி, பலகாரி, சுவேதகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைத் தனியாகக் கொடுப்பது கிடையாது. இதைச் சிறுதுண்டுகளாக நறுக்கிப் பசுவின்பாலில் வேகப்போட்டு உலர்த்திக்கொள்க. அல்லது கழுதை லத்தியில் அதன் அமுரியைவிட்டுக் கரைத்து வடிகட்டி அதில் பறங்கிச் சக்கைத் துண்டுகளைப் போட்டு மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்க. இதுவே சுத்தியாகும். இத்தகைய பறங்

இச் சக்கையைக்கொண்டு அவிழ்தங்கள் செய்துகொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

பறங்கிச்சக்கைச் சூரணம்.

பறங்கிப்பட்டை, நீரடிமுத்து, கடுக்காய் வகைக்குப் பலம் 1, அமுக்கிராவேர் பலம் 4, கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்கு விராகனெடை 1, இவைகளை இளவறுப்பாக வறுத்து இடித்துச் சூரணம்செய்து 6 பலம் சீனி சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் தேனில் உட்கொள்ள மேகசூலை, மேகஊறல், மேகக்காங்கை, மேகத் தடிப்பு, மேகவாயு முதலிய ரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி உப்பு நீக்கவும்.

இன்னும் இத்தகைய சூரணங்களைச் சிகிச்சாரத்ன தீபத்தில் காண்க.

பற்பாடகம்.
(Mollugo Cerviana).

சீதவா தச்சுரமுந் தீராத தாகமும்போம்
போதவிரு கண்குளிரும் பொய்யலவே—பூதலத்துள்
வற்பார் பயித்தியமு மாபித்த முந்தோஷமும்
பற்பாட கத்தையுன்னிப் பார்.

குணம்:—(இ-ள்.) பற்பாடகத்திற்குக் கபவாதசுரம், பித்த தாகரோகம், உளமாந்தம், பித்ததோஷம் இவைகள் போம். விழிக்குக் குளிர்ச்சியுண்டாகும்.

செய்கை:—சுவேதகாரி, வியதாபேதகாரி, சுரஹரகாரி, முறை வியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இது தேகத்தில் உள்ள காங்கை, எரிச்சல், தாகம் இவைகளைச் சாந்தப்படுத்தக் கூடியது. இதனில் வேளைக்கு ½-1 தோலா எடையை ஒரு குடுவையில்போட்டு ¼ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வேளைக்கு 1-1½ அவுன்ஸ் அளவு தினம் 3 வேளை கொடுக்க வியர்வையுண்டாக்கிச் சுரத்தைச் சாந்தப்படுத்தும். அதனாலுண்டாகிய எரிச்சல், தாகம் முதலியவற்றையும் அடக்கும். இதை இதரசரக்குகளுடன் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

கிரகாதிக்கியாழம்.

பற்பாடகம், பேய்ப்புடல், அதிமதுரம், சீந்திற்றண்டு, அதன் மூலம், கொடுப்பைவேர், முத்தக்காசு, மல்லி, சுக்கு வகைக்கு விராக

னெடை 3, இவைகளைச் சிதைத்து ஒரு குடுவையில்போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு அடுப்பிலேற்றி அரைக்காற்படியாய் வற்ற வைத்து வடிகட்டித்தேன்விட்டு வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை மூன்று நாள் கொடுக்கச் சர்வசுரமும் நீங்கும். இது ஒன்றைவிட் டொருநாள் வருகிற சுரத்திற்கு மிகவும் சிறந்தது.

பனங்கற்கண்டு.

(Borassus Flabelliformis—Sugar-candy).

மேக வனலுமிக வீசும சூரிகையா
லாக முறுகனலு மாறுங்காண்—மேகனத்திற்
றங்கிவரு நீர்ச்சுறுக்குந் தாகவெப்ப முந்தணியு
மிங்குபனங் கற்கண்டுக் கே.

குணம்:—(இ-ள்.) பனங்கற்கண்டுக்கு மேகசுரம், மசூரிகையின் வெப்பம், மூத்திரம் வருகையில் ஆண்குறி கடுத்தல், உஷ்ண தாகம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைக் காய்ச்சிய பசுவின்பாலில் போட்டு வடிகட்டிச் சாப்பிட நாவிற்கு ருசியாக இருக்கும். ஒரு தோலா எடையுள்ள மிளகை ஒரு புதுச்சட்டியிலிட்டுச் சாம்பல் வண்ணம் வெளுக்கவறுத்து அதனில் $\frac{1}{4}$ தோலா எடை சீரகத்தைப் போட்டுப் படபடவென்று வெடித்தசமயம் $\frac{1}{4}$ படி சலம்விட்டு வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் தேவையான அளவு பால் விட்டுப் பனங்கற்கண்டைப்போட்டுச் சாப்பிட நீர்க்கடுத்தல், நீர் எரிச்சல், உஷ்ணதாகம், மருந்துகளின்வேகம் இவைகள் நீங்கும். காபி, தேயிலை பானங்களில் சாதாரணமாகச் சர்க்கரையைவிடப் பனங்கற்கண்டையிட்டு உபயோகப்படுத்துவது சாலச்சிறந்தது.

பனங்கற்கண்டிற்கும் ஈச்சம்கற்கண்டிற்கும் உள்ள பேதமறிந்து உபயோகப்படுத்திக் கொள்க.

பனங்கிழங்கு.

(Borassus Flabelliformis—Bulb).

நேர்ந்தவுட் சூடும் நிறைந்தபன் மேகமுடன்
சேர்ந்தபல வீனஞ் சுகமாகும்—ஓர்ந்து
பலமறிந்து பேசும் பனங்கிழங்கிற் குள்ள
நலமிதுவாம் நாட்டிற் பகர்.

குணம்:—(இ-ள்.) பனங்கிழங்கால் அஸ்திச்சூடும், பித்தமேக முதலிய மேகங்களும், குளிர்ச்சியும், வனப்பும் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இரண்டு அல்லது மூன்று பனங்கிழங்கை அவித்தாவது அல்லது நீர்சுண்ட வைக்கோலில்வைத்துச் சுட்டாவது உண்பதுண்டு. இப்படிச் சிலதினம் கொள்ளச் சரீரத்திற்குக் குளிர்ச்சியையும் தேஜசையும் கொடுக்கும். இன்னும் மேகம், கரப்பான், ரத்தபேதி, சீதபேதி இவைகளைப்போக்கும். ஆனல் எளிதில் ஜீரணமாகாது.

பனங்குருத்து.

(Borassus Flabelliformis—Tender leaves).

நல்ல பனங்குருத்தால் நாவரண்டு பேதிமிகும்
வல்லரத்த மூலம் வலுத்துவிடும்—தொல்லை
இணங்குரச நாக மிருவங்க நீறும்
அணங்கரசே இதே யறி.

குணம்:—(இ-ள்.) பனங் குருத்தானது ரத்த மூலத்தை யதிகப்படுத்தும், பேதியையும் உண்டாக்கும். இன்னும் இந்தக் குருத்தின் சாற்றால் வாலைரசம், வங்கம் முதலியவைகள் மாசற மடிந்து பற்பமாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—பஞ்ச 'காலத்தில் ஏழைகள் பனைமரத்தின் அதிக இளங்குருத்தையும் அதற்கடியில் உள்ள சோற்றையும் தின்பதுண்டு. இது அடிக்குடலில் உஷ்ணித்துப் பேதியையும் இரத்தப் போக்கையும் உண்டாக்கும். இதை யிடித்துச் சாறு பிழிந்து அதனுடன் சமனளவு கம்மாறு வெற்றிலைச் சாறு விட்டு வாலைரசத்தை மடிகிற பரியந்தம் அரைத்து வில்லை செய்து ஒரு பனைஓலைத் துண்டை நீக்கி அதன் இடுக்கில் வைத்து மற்றுமோர் பனைஓலைத் துண்டின் மடிப்புக்குள் செருகி இருபுறமும் மடித்து நூல்கொண்டு சுற்றிக் கட்டி, மண்சீலை ஏழு செய்து காய வைத்து 3-4 வறட்டியில் புடமிடப் பற்பமாகும். இதில் அரிசி எடை தேனில் கொடுக்கப் பசி அதிகமாகும். பலமேக சம்பந்தமான துஷ்டரணங்கள் ஆறும். வங்கத்தை உருக்கி *இளங்குருத்துடன் அடி

* ஒரு முழத்திற்கு மேற்படாத உயரமுள்ள இளஞ்செடியின் குருத்தும், அடிமட்டையும், மூலமுமே இத்தகைய பாகங்களில் அதிகப் பயன் தரும்.

மூலம் கூட்டி இடித்துக் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுவறுக்கப் பற்பமாகும். இந்தப் பற்பம் பல மேக ரோகங்களைப் போக்கும்.

பனம்பழம்.

(Borassus Flabelliformis—Fruit).

நாளும் பனம்பழத்தை நல்லமுதா யுண்ணுங்கா
லாளுங் கரப்பா னழுகிரந்தி—நீளுமலஞ்
சிக்கும்பித் தத்தில்வளி சேருதலா னேய்க்கணமு
திக்கும் பலக்குமெனச் செப்பு.

குணம்:—(இ-ள்.) பனம் பழத்தையே உணவாக வுண்டால் கரப்பான், அழுகிய சிரங்கு, மலபந்தம், பித்தவாயுவாற் பிறந்த நோயினங்கள் முதலிய உண்டாகும். இது யாழ்ப்பாண தேசத்து ஊணும். இதனைப் பனுட்டு என்பர்.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தை வைக்கோல் போட்டுச் சுட்டாவது அல்லது கொட்டையைத் தள்ளித் துண்டு துண்டுகளாக அரிந்து வேக வைத்தாவது சாப்பிடுவதுண்டு. அல்லது சுட்டெரித்தப் பழத்தைப் பிசைந்து நாருகளை எல்லாம் நீக்கி மஞ்சள் நிறத்தைப் பொருந்திய சத்தை எல்லாம் சேகரித்து அல்வாபோல் சாப்பிடுவதுண்டு. இது எளிதில் ஜீரணம் ஆகாது. பல ரோகங்களை உண்டாக்கும்.

பனம்பூ.

(Borassus Flabelliformis—Flower).

பனையிலுறு பூவதுதான் பங்கமுறக் குன்ம
வினையகற்று நீர்க்கட்டை மீட்கும்—முனையான
பன்னே யொழிக்கும் பழஞ்சுரத்தைப் போக்கிவிடு
மின்னே யிதனை விளம்பு.

குணம்:—(இ-ள்.) பனம்பூவானது வாதகுன்மம், மூத்திரச் சிக்கல், தந்தரோகம், புராணசுரம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பூவைக் காயவைத்துக் கொளுத்தி வெள்ளை நிறங்காணச் சாம்பலாக்கி வைத்துக்கொண்டு, வேளைக்கு 5 குன்றி எடை சலத்தில் போட்டுக் கொடுக்க வாதகுன்மம், மூத்திரக்கிரிச்சரம் முதலியவைகள் போம்.

பனைவெல்லம்.

(Borassus Flabelliformis—Jaggery).

வட்டுபன வெல்லத்தால் மார்பெரிச்சல் குன்மமறும்
முட்டுந் திரிதோஷம் முன்னிற்கா—கட்டுபடா
வாந்தி ருசியின்மை வாளா யுற்றிடினும்
சாந்தி பெருகுமென்றே சாற்று.

குணம்:—(இ-ள்.) *பனை வெல்லத்தால் சுரசந்நிபாதம், திரி தோஷ தொந்தங்கள், அரோசகம், குன்மம், மார்பு எரிச்சல் இவை கள் நீங்கும் என்க.*

உபயோகிக்கும் முறை:—*பனை வெல்லத்தைக் கரைத்து வடி கட்டிப் பாகு எடுத்துப் பச்சை அரிசிமாவு கூட்டி அதிரசமாகச் சுட்டு உண்பதுண்டு. காபி, தேத்தண்ணீர் இவைகளில் சாதாரண மாக அஸ்கா, பூரா முதலிய சர்க்கரைக்குப் பதிலாக இந்தப் பனை வெல்லத்தைப் போட்டுச் சாப்பிடுவதுண்டு. இதனால் தேகத்தின் வெப்பம் அடங்கும், பித்தம் தணியும், தேக ஆரோக்கியம் உண் டாகும்.*

பனிப்பயறு.

(Phaseolus Trilobatus).

பித்த மரோசிகம்போம் பேருலகில் மாந்தர்க்கு
நித்த முறுகபமும் நீங்கிப்போம்—மெத்தெனவே
கண்டபிர மேகமுடன் காற்கடுவன் ஓடிப்போம்
உண்ட பனிப்பயறால் ஓது.

குணம்:—(இ-ள்.) *பனிப்பயறால் பித்தம், அரோசிகம், கபம், பிரமியம், கரப்பான் இவைபோம் என்க.*

(இதுவுமது)

நரிப்பயற் றங்கொடிக்கு நாடாது பித்தந்
தரிப்புற்ற ஐயமெல்லாந் தாழு—மிருப்பொழிக்கும்
மேகவெட்டை பித்தவெட்டை மீளாக் கரப்பனிவை
யாகம்விடுத் தோடு மறி.

குணம்:—(இ-ள்.) *நரிப்பயற்றங்கொடிக்குப் பித்தகோபம், கபரோகங்கள், பிரமேக வெள்ளை, அத்திராமேகம், கரப்பான் இவைகள் போம்.*

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக இந்தப் பயற்றை நஞ்சை நிலங்களில், அறுவடையான பின்பு போட்டுப் பயிராக்குவது வழக்கம். இந்தப் பயறானது பச்சைப் பயற்றைவிட உருவத்தில் சிறிது பெருத்தும், கறுப்பு நிறமாகவும், சுவையுடையதாகவும் இருக்கும். இதைப் பச்சைப் பயற்றுக்குப் பதிலாக உபயோகப்படுத்துவதுண்டு. இதனால் இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள பயனை அடைவர்.

இதன் இலையைச் சமைத்து உண்பதுமல்லாமல் இதன் இளங்காய்களைப் பாலில் வேகவைத்துக் கடைந்து போதிய அளவு கற்கண்டு கூட்டிச் சாப்பிடுவதுண்டு. இது கபத்தைப் போக்குவதுமன்றித் தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும்.

பனை நுங்கு.

(Borassus Flabelliformis—Tender kernel).

நீர்வார் வியர்க்குருவை நீக்குமன லாக்குந்தோற்
சார்வா மயஞ்சீதந் தானெழிக்குஞ்—சேர்வார்
விழிக்கரையாந் துஞ்சளிக்கு மென்சுரத மானே
கழிக்கரையாந் தாளியிளங் காய்.

குணம்:—(இ-ள்.) நெய்தனிலப்பனையின் இளங்காயினுள்ள நுங்கின் சலமானது வியர்க்குருவை நீக்கும், பசியைத்தரும். தோலுடனே யிருக்கும் நுங்கு சீதபேதியை விலக்கும்.

உபயோகிக்கும் முறை:—அதிக இளசான நுங்கைத் தோலுடன் தினம் 4-5 வீதம் 3 நாள் சாப்பிடச் சீதபேதி போம். அதன் சலத்தைச் சாப்பிடத் தேகம் குளிர்ச்சி யடையும், விக்கல் நின்றுவிடும். இதைத் தேகத்திற்குப் பூச வியர்க்குருவை நீக்கும். இது முற்றியிருந்தால் வாயு செய்வதுடன் பசிமந்தமும், வயிற்று வலியுமுண்டாக்கும்.

பனையின்மது.

(Borassus Flabelliformis—Toddy).

விந்துதிர மூறுமதி வெப்புடனே தாகம்போம்
பந்தமாந் தாதுவுமோ பாரிக்கு—முந்துபித்தந்
தோன்றும்பா ஷாணங்கள் சுத்தியுமாந் தோகைமின்னே
யேன்ற பனைமதுவிற் கே.

குணம்:—(இ-ள்.) பனங்கள்ளுக்குச் சுக்கில சுரோணித விருத்தி, சப்த தாதுக்களுக்கும் உறுதி, பித்தாதிக்கம் இவைகள் உண்டாகும். தேகஉஷ்ணமும் விதாகமும் நீங்கும். இதில் பாஷாண வகைகள் சுத்தியாகும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—மதுரமுள்ள பனங்கள்ளைத் தினம் ஒருவேளை காலை நேரத்தில் 6-10 அவுன்ஸ் வீதம் சில தினம் சாப்பிட்டுவரப் பித்தவெட்டை, அழலைவெள்ளை, சொறி, சிரங்கு முதலியவைகள் நீங்கும். நல்ல தேஜசும், தாது விருத்தியும் உண்டாகும். இதைப் பழக்கமாக வைத்துக்கொண்டால் அறிவுகெடும். புளிப்பேறிய கள்ளைக் குடிக்க, உள்ளதேகசுகமும் கெடும். ஆகையால் தேக சுகத்திற்காகச் சாப்பிட உத்தேசிப்பவர்கள் முற்கூறப்பட்ட மதுரமுள்ள கள்ளைச் சிறு அளவாக $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ மண்டலம் சாப்பிட்டு நிறுத்திவிடவேண்டும். அதனையே ஆகாரமாக நினைத்து விடக்கூடாது. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும்.

பன்றிப் புடலங்காய்.

(Trichosanthes Anguina—Fleshy & Short).

கரப்பான் சொறிசிரங்கு காணுச் சிலந்தி
யுரப்பாம் விஷக்கடியு முண்டா—முரைத்தவகை
யன்றிச் சயித்தியமு மாம்பன்றி தன்னையொத்த
பன்றிப் புடலுக்குப் பார்.

குணம்:—(இ-ள்.) பன்றிமாமிசத்தையொத்த பன்றிப்புடலங்காய்க்குக் கரப்பான், புடை, கிரந்தி, சீதளம் இவைகள் உண்டாவதுமன்றிக் காணுக்கடி, சிலந்தி, சர்ப்பம் முதலிய விஷங்கள் இறங்கியதாயினும் உடனே ஏறும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—குட்டையாகவும் தடிப்பாகவும் உள்ள பன்றிப்புடலங்காயைக் கூட்டமுதாகவும் பொரியலாகவும் செய்து உண்பதுண்டு. இது சரீரத்தில் பலவிதமான ரோகத்தை யுண்டாக்குமாதலால் அறிவாளர்கள் சேர்க்காமலிருத்தலே அதிக நன்மை.

பன்னீர்

(Aqua Rosa).

பன்னீர் மிகக்குளிர்ச்சி பாராய் சுகசந்நிக்
கிந்நீருண் ணேகு மிளைப்புமறுஞ்—சந்நிகளும்
வாதபித் தையமொடு மானே வியாகுலமும்
பூதலம்விட் டேகும் புகல்.

குணம்:—(இ-ள்.) பன்னீரை ஔஷத அநுபானங்களிற் கூட்டி அருந்தில் சுகசந்நியும் சந்நிபாதங்களும் விலகும். தனியே குடித்தால் ஆயாசமும், திரிதோஷங்களும், மனச்சங்கடமும் நீங்கும். பன்னீர் சீதோஷ்ண திரவியமாதலால் இதில் இறக்கிய நீரைக் குளிர்ச்சி என்றார்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—சில குளிர்ச்சிபொருந்திய தேசங்களில் அன்று மலர்ந்த ரோஜா புஷ்பங்களின் இதழ்களை ஒரு படிக பாத்திரத்தில் போட்டுச் சலம்விட்டு ஓர் இரவு ஊறியபின், மறுநாள் வாலையில்விட்டு முறைப்படித் தீநீர் வாங்குவதுண்டு. இதுவே அசல் பன்னீர் ஆகும். ஆயிரம் பூக்கொண்ட அளவிற்கு ½ படி பன்னீர் ஆகும். இப்படி இலட்சம் பூ போட்டு எடுக்க ஒரு தோலா சுயமான அத்தர் என்னும் தைலம் பன்னீர்க்குமேல் மிதக்கும். இப்படிச் சேகரிக்கப்பட்ட பன்னீரே சிறந்தது. இது சீதளம் மிகுந்துள்ள காலத்தில் உள்ளுக்குக் கொடுக்கச் சூட்டை யுண்டாக்கும். தேகத்தில் சூடுண்டான காலத்தில் உள்ளுக்குக் கொடுக்கக் குளிர்ச்சி செய்யும். கண்களுக்கு விட்டுக்கொண்டுவரக் குளிர்ச்சியைத் தரும். இதை உள்ளுக்கு 1-2 அவுன்ஸ் அளவு சாப்பிட்டுவர ஆயாசத்தைத் தீர்ப்பதுடன் மனக்களிப்பை யுண்டாக்கும். இனிப்பான பண்டங்களில் தெளித்து வைக்கச் சாப்பிடுவதற்கு இன்பந்தரும்.

பன்னீர்மரப்பூ.

(Guettarda Speciosa).

சர்த்தி யரோசகமுட் டாதுநஷ்ட மேல்வறட்சி
யோத்த வழலு மோதுங்குங்கா—ணைத்தரத்துந்
தன்னீர்மை குன்றுத் தளிர்வண்ண மாதரசே
பன்னீர் மரப்பூவைப் பார்.

குணம்:—(இ-ள்.) பன்னீர்மரப்பூவினல் வாந்தி, அருசி, சுக்கில க்ஷீணம், நாவறட்சி, பித்தகோபம் ஆகிய இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை அதிகமாக ஔஷத பாகங்களில் சேர்ப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் பித்தம் மிகுந்த சுரங்களுக்குக் கூறிய கியாழங்களில் இதனையும் ஒன்றாகச்சேர்த்துக் கொள்ளலாம். இதனல் குணமேயன்றிக் குற்றம் கிடையாது.

பாகல் இலை.

(Momordica Charantia—Leaves).

பிறியாக் கிருமியறும் பேதியுண் டாங்தோஷ
முறியு மிரத முறியுங்—குறியாத
மாகற் புடைய மடமயிலே யெப்போதும்
பாகற் றழைக்குப் பயந்து.

குணம்:—(இ-ள்.) பாகல் இலைக்குக் கிருமிரோகம், திரிதோஷ கோபம் இவைகள் நீங்கும். விரேசன முண்டாகும். இன்னுமிதனால் பாதரசவேகம் முறியும் என்க.

செய்கை:—கிருமிநாசினி, பலகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—பாகல் இலையைப் புதியதாகக்கொண்டு வந்து கசக்கிப் பிழிந்த சாற்றில் குழந்தைகட்கு ஒரு தேக்கரண்டி அளவு முலைப்பாலுடன் கூட்டிக் கொடுக்கப் பேதியாகும். சில குழந்தைகட்கு வாந்தியாவதுமுண்டு. இதனால் கிருமிகள் நசியும். இந்த இலைச்சாற்றைப் பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் அளவு கொடுக்கலாம். இதுவும் சில சமயம் வாந்தியும் பின் பேதியும் ஆகும். நெய்யும் சாதமும் சேர்த்துச் சாப்பிட ஷை இலைச்சாற்றின் தோஷம் முறிந்து விடும். இதன் இலைச்சாற்றை உள்ளங்கால்களில் தேய்க்க எரிச்சல் அடங்கும்.

பாகற்பழம்.

(Momordica Charantia—Fruit).

சுரமேகங் காசஞ் சுவாசமோடு மூலந்
திரிதோஷங் குஷ்டமிவை தீருங்—கிருமியறு
மோகப் புணரியேறு மொய்குழலே வெம்பிவிழாப்
பாகற் பழத்தையுண்டு பார்.

குணம்:—(இ-ள்.) வெம்பி விழாத பாகற் பழத்தினால் சுரம், பிரமேகம், இருமல், இரைப்பு, மூலம், முத்தோஷம், குஷ்டம், மலக்கிருமி இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கிருமிநாசினி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—பாகற் பழத்தையாவது அல்லது பாகற் காயையாவது பாகப்படிப் பொறியல், குழம்பு செய்து உண்பதுண்டு. இதுவுமல்லாமல் பாகற்காயை வேகவைத்துப் பாகப்படி வற்றலிட்டு வறுத்து உண்பதுண்டு. இதனால் மூலம், காமாலை,

குட்டம், மண்ணீரல் கல்லீரல் தோஷங்கள் முதலியவை குண மாகும்.

பாக்குமரம்.

(Areca Catechu).

ஏக்கமுறும் பல்லசைவோ டெச்சில்மிகு வாய்ரணமும்
பாக்குமர வேரதனாற் பாறிப்போம்—பூக்குழலே
சொல்லுமதன் வெண்குருத்தால் சூழுமிடை வாதம்போந்
தொல்லுலகில் யாவர்க்குஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) பாக்கு மரத்தின் வேரால் பல்லசைவும், வாய்ரணமும், அதன் இளங்குருத்தால் இடுப்புவலியும் நீங்கு மென்க.

உபயோகிக்கும் முறை:—இதன் குருத்து இலையை இடித்துச் சாறு பிழிந்து சமன் நல்லெண்ணெய் கூட்டிக் கொதிக்கவைத்துத் தாளக்கூடிய சூட்டில் இடுப்புக்குத் தழும்பப் பூசிவைக்க வலி நீங் கும். இதன் வேரைப் பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில்போட்டு, எண் மடங்கு சலம் விட்டு நான்கிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி, அடிக்கடி ஒவ்வொரு வாய் குடிநீரை வாயிலிட்டுக் கொப்புளித்துவர வாய் ரணம் ஆறும். இன்னும் இந்தக் கியாழத்தை ஆறாத கட்டுப் புண்களுக்கு விட்டு அலம்பிவர விரைவில் ஆறும். இந்த மரத்தின் காய்க்குக் "கொட்டைப் பாக்கு" என்று கூறுவர். இதனை அதன் தலையங்கத்தின் கீழ்க்கண்டுணர்க.

பாதிரிப்பூ.

(Bignonia Chelonoides—Flower).

பித்த சுரந்தணியும் பெண்வசிய முண்டாகு
முற்றியதோர் வெட்டை முடியுங்காண்—மெத்தவுமே
மாதுரிய நீங்கா வசன மடவனமே
பாதிரியின் பூவையுண்டு பார்.

குணம்:—(இ-ள்.) பாதிரிப்பூவினால் தீச்சுரமும், வேகமும் நீங் கும், ஸ்திரீ வசியமாம்.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை விசேடமாக ஔ ஷத பாகங்களில் கூட்டுவதில்லை. சில சமயம் சுரத்திற்குரிய கியா ழங்களில் இதனையும் ஒன்றாகக் கூட்டுவதுண்டு.

பாதிரிவேர்.

(Bignonia Chelonoides—Root).

பாதிரியின் வேரினற் பாரமது மேகம்போ
மோதுகரப் பானுழலை யோடிவிடும்—மாதேகேள்
கண்ணெரிவு காதெரிவு கையெரிவு காலெரிவு
திண்ணயமாய்ப் போகு நிசம்.

(இதுவுமது)

மேகத்தால் வந்த மிகுபிளவை மாவிரணம்
போகத்தால் வந்து பொருமூல—மாகத்தில்
வந்தசோறி யோடுகப வாதமந்த மும்போகுங்
கொந்தடரும் பாடலத்தாற் கூறு.

குணம்:—(இ-ள்.) பாதிரிவேருக்கு மதுமூத்திரம், கரப்பான், உழலை, கண், காது, கைகால் இவைகளைப்பற்றிய எரிச்சல், மேகப் பிடகம், பெரு விரணம், ஆகந்துக மூலரோகம், புடை, சிலேஷ்மவாத தொந்தம், அக்கினிமந்தம் ஆகிய இவைகள் போகும்.

செய்கை:—வியதாபேதகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டையைத் தனியாக உபயோகப்படுத்துவது கிடையாது. இதர சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

கபசுரக் கியாழம்.

பாதிரி, வில்வம், பெருங்குமிழம் முதலியவற்றின் வேர்ப் பட்டை வகைக்குக் கழஞ்சு 2. இவைகளை இடித்து ஒரு குடுவையில் போட்டு 4 படி சலம் விட்டு ஒரு படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, அதில் சுத்தஞ் செய்த $\frac{1}{4}$ படி நெற்பொரியைப்போட்டுக் கஞ்சிபோல் காய்ச்சிக் கொடுத்து வரச் சிலேத்தும சுரம் போம்.

சந்நி கியாழம்.

பாதிரி, எருக்கம்வேர், பற்பாடகம், பேய்ப்புடல், சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் $\frac{1}{4}$; இவைகளை ஒரு குடுவையில்போட்டு ஒரு படி சலம் விட்டு, அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதனை இரு வேளையாகப் பங்கிட்டுக் கொடுக்க விக்கல், தாகம், காய்ச்சல், கண்ணீர் சொரிதல், மயக்கம், காதடைப்பு முதலிய குணங்களையுடைய பொக்கநேத்திர சந்நி குணமாகும்.

பார்லி அரிசி.

(Hordeum Vulgare).

வெண்பார்லி யிட்டுலையில் வேகின்ற கஞ்சியதை
உண்பார்க் கிளைப்பாற்று மொண்டொடியே—நண்பார்ந்த
நீரை வெளியாக்கும் நீள்பேதி கட்டுபடுஞ்
சீரை யறிவாரார் செப்பு.

குணம்:—(இ-ள்.) உஷ்ணமான பார்லிஅரிசி மந்தபேதியைக் கட்டும், சிறுநீரைப் பெருகச்செய்யும், ரோகிகட்குப் பசியைத் தணிக்கும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி, பிரசவ காரி.

உபயோகிக்கும் முறை:—ஐந்து ரூபாய் எடை பார்லி அரிசியைக் கழுவி ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சலம்விட்டு அடுப்பிலேற்றி ஏறத்தாழ அரிசி நன்றாய் வேகும்பரியந்தம் 20-25 நிமிஷம் எரித்து கஞ்சியை வடித்து எடுத்துக்கொள்க. இதனுடன் பால்கூட்டி உப்பிட்டு ரோகிகட்குக் கொடுக்க நல்ல ஆகாரமாகும். விஷ்சுரம் கண்டவர்களுக்கு இதனைவிடச் சிறந்த கஞ்சி வேறுகிடையாது. வாந்திபேதி கண்டவர்களுக்கு இதுவே ஜீவனைக் காப்பாற்றக் கூடிய ஔஷதம். இந்தக்கஞ்சி தாகம், நாவறட்சி, சுரம், பேதி முதலியவைகள் கண்டபோது அதிகம் சிறந்தது.

பாலைப்பழம்.

(Mimusops Hexandra—Fruit).

வாத கரப்பனறும் வல்லசி லேஷ்மமும்போம்
வேது கிரந்தியுஞ்சா மேன்பசியா—மோதுமதன்
கோலைப் பழித்தவிழிக் கோதா யினிமையுள்ள
பாலைப் பழத்தானீ பார்.

குணம்:—(இ-ள்.) பாலைப்பழத்தால் கருங்கரப்பான், சிலேஷ்ம தோஷம், வெப்பத்தைச் செய்கின்ற கிரந்தி இவை போம். மிகு பசியுண்டாம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இப்பழத்தைச் சாதாரணமாகக் கிராமத்திலுள்ளவர்கள் ருசிக்காகச் சாப்பிடுவதுண்டு. இதனைச் சில நாள் சாப்பிட்டுவர இச்செய்யுளின் கண் கூறப்பட்டுள்ள நோய்கள்

நீங்கும். இதனைத் தேனில் ஊறப்போட்டு வைத்துக்கொண்டு சாப்பிடுவதுமுண்டு.

இப்பழத்தின் விதையிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயைக் கைகால்களின் கீல்களில் உண்டாகும் கரடுமுரடுகளுக்குத் தேய்த்து வர மெதுவாகி நீட்டவும், மடக்கவும் வசதிபெறும்.

இதன் பட்டையில் ஒரு பலம் அளவிற்குப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்பாண்டத்தில்போட்டு 1 படி சலம்விட்டு அரைக்கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுத்துவரச் சீதபேதி, ரத்தபேதி ரத்தமூலம், பெரும்பாடு, உஷ்ணபேதி முதலியவைகள் குணமாகும். இந்தக் கியாழத்தை வாயிலிட்டுக் கொப்புளித்துவர வாய்ரணம் ஆறும். அசைந்த பற்கள் இறுகும்.

பால்கஞ்சி.

(Lactus-Porridge).

பச்சரிசி நொய்யோடு பால்சேர்த்தே யிட்டகஞ்சி
மெச்சிடவே நற்குணமாம் மேதினியில்—எச்சரிக்கும்
பித்த முடன்வெப்பு பின்னடையும் தாதுநட்டம்
சுத்தமறத் தானேடுஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) பச்சரிசி நொய்யும் பசுவின்பாலும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியால் பித்த எரிபு நீங்கும், புத்தி விசாலமாகும், சுக்கில விருத்தியுண்டாம் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பச்சரிசி நொய்யைக் கஞ்சியாகக் காய்ச்சி, அதில் பசுவின்பால் கூட்டி அவரவர்கள் இஷ்டத்திற்கு ஏற்றவாறு, சர்க்கரையாவது உப்பாவது இட்டுச் சாப்பிடப் பித்தத்தால் எழுந்த எரிச்சல் அடங்கும். புத்தி தெளிவடைவதுடன் தாது பலப்படும்.

பாவட்டங்காய்.

(Pavetta Indica—Fruit).

வாத சுரந்தணியும் வாயருசி யேகிவிடுஞ்
சீதக் கடுப்பகலுந் தேமொழியே—வாதுபுரி
பித்தவதி சாரமொடு பேராக் கபமுமறு
முற்றபா வட்டங்காய்க் கு.

குணம்:—(இ-ள்.) பாவட்டங்காய்க்கு வாதசுரம், அரோசகம், சீதக்கடுப்பு, பித்தாதிசுரம், சிலேஷ்ம தோஷம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பலகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காய்க்கு முத்தோஷங்களையும் கண்டிக்கின்ற குணமுண்டு. இதனை வாதசுரங்களுக்குச் சித்தப் படுத்தும்படியானக் கியாழங்களில் சிறிது சேர்த்துப் பாகப்படுத்தலாம். இன்னும் பச்சைச் சுண்டைக்காயை எப்படிக் குழம்புகளில் உபயோகப்படுத்துகின்றார்களோ அப்படியே இதனையும் உபயோகப் படுத்தலாம். இதனால் கபசம்பந்தமான ரோகங்கள் வாதசம்பந்தமான ரோகங்கள் விரைவில் குணமடையும்.

பாவட்டையிலை.

(Pavetta Indica—Leaves).

சீதவா தங்களறுந் தீபனமோ வுண்டாகும்
வாதங் கபமொழியும் வார்குழலே—போதவே
ஆவட்டைத் தாகசுர மற்றுவிடுந் தோஷம்போம்
பாவட்டைப் பத்திரிக்குப் பார்.

குணம்:—(இ-ள்.) பாவட்டையிலையால் சிலேஷ்மவாதம், வாதகபதோஷம், ஆயாசம், தாபசுரம், திரிதோஷம் ஆகிய இவைகள் போம், பசியுண்டாம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பது இல்லை. விசேடமாக இதர சரக்குகளுடன் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

வாதசுரக் கியாழம்.

பாவட்டைவேர் அல்லது இலை, கொன்றை, சிற்றாமுட்டி, உத்தாமணி இவைகளின் வேர் வகைக்குப்பலம் $\frac{1}{4}$, இவைகளை இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு இரண்டுபடி சலம்விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க வாதசுரம் போம்.

பாற்சொரிக்கீரை.

(Ruellia Secunda—Leaves).

வயிற்றுக் கடுப்பு மலஞ்சீதப் பேதி
நியத்தரத்தப் போக்கை நிறுத்துங்—குயத்தையொரு
பாற்சரியக் காட்டும் பருவ வணங்கரசே
பாற்சொரிக் கீரையது பார்.

குணம்:—(இ-ள்.) பாற்சொரிக்கீரையானது வயிற்றுக் கடுப்பையும், மலம், சீதம், ரத்தம் இவ்வகைப் பேதிகளையும் நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பருப்புடன் சேர்த்துக் கடைந்து முதல் அன்னத்துடன் கூட்டி நெய்விட்டுச் சாப்பிட வயிற்றுக் கடுப்பு, சீதபேதி, ரத்தபேதி முதலியவற்றை நீக்கும். உள் ளுறுப்புக்களில் உள்ள விரணங்களை யாற்றும். நல்ல தேஜசை யுண் டாக்கும்.

பிசின்பட்டை.

(Litsaea Sebifera).

தசையிலுஞ் சோரி தனிலும் பரந்தே
வசிபோற்குத் திக்குடையும் வாய்வை—நிசமாகக்
கொல்லு முடம்பின் கொதிப்பை யொருநொடியில்
வெல்லும் பிசின்பட்டை விள்.

குணம்:—(இ-ள்.) பிசின்பட்டை மாமிசத்தையும், உதிரத்தையும் பற்றி யிருக்கின்ற ஆவிருதவாதத்தையும் சரீர வெப்பத்தையும் போக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—அரைப் பலம் பட்டையைப் பஞ்சு போல் நசுக்கி, ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் சிறிது தேன் கூட்டித் தினம் 2 வேளை அல்லது வியாதி கடினமாக இருந்தால் 3 வேளை கொடுத்துவரப் பேதி, சீதபேதி இவைகள் போம். சாதாரணமாகத் தேகத்தில் எந்தப் பாரிசத்திலாவது கல், இரும்பு முதலியவைகள் விழுந்து சதை நசுங்கப்பெறின் தனிப் பிசின்பட்டையை

அரைத்துப் பற்றுப்போட நோய் நீங்கிக் குணமாகும். இன்னும் இதைச் சுளுக்கு, பிடிப்பு, இடுப்புவலி முதலியவைகட்கும் போடுவதுண்டு.

மைலாலக்கிடி பலம் 1, கடல் நுரை பலம் 1, கிராம்பு பலம் 1, நீர்முள்ளி விதை பலம் 1, இவைகளைத் தனித்தனியாக இடித்துச் சூரணம் செய்து சலம் விட்டுப் பிசைய இறுகும். இதைக் கல்வத்திலிட்டுக் குழவி கொண்டு இடிக்க மெழுகுபோல் ஆகும். இதை இரண்டுநூல் கனத்திற்கு வில்லைதட்டிக் கட்டிகளின்மேல் போட்டுச் சதா ஈரம் இருக்கும்படிச் சலம் தெளித்துக்கொண்டிருக்கக் கட்டி உடைத்துக்கொள்ளும். சீழ் சேராதிருந்தால் கரைந்துவிடும். குணம் ஆகிற பரியந்தம் இரண்டு நாளுக்கு ஒரு முறையாவது அல்லது பிரதிதினமாவது புதிதாக அடை செய்து கட்டிக்கொண்டு வர வேண்டும். இன்னும் உடைந்த எலும்பை ஒழுங்காகக் கூடும் பொருட்டுச் சரிபார்த்து, அதன்பேரில் இந்த அடையை வைத்து, மேலே துணி சுற்றி மூங்கில்பத்தை வைத்து அசையாமல் கட்டி அதன்பேரில் எந்நேரமும் ஈரம் இருக்கும்பொருட்டு சலம் விட்டுக் கொண்டு வர எலும்பின் முறிவைக் கூட்டிவைக்கும். அங்கு நசுங்கப்பட்ட மாமிசத்தையும் அழுகவொட்டாமல் செய்யும். இது வாசனைத் திரவியங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படுகிறது.

பிச்சப்பழம்.

(Cucurbita Citrullus).

தந்தம் விழுந்திடுமே தாது மெலிந்திடுமே
விந்தைமிகுங் காந்தி விலகிடுமே—சந்ததமும்
வாத மிகுந்திடுமே வந்துகபஞ் சேர்ந்திடுமே
யோதுகுமட் டிக்காயா லுன்.

குணம்:—(இ-ள்.) குமட்டிக்காயால் பல்வீழல், சுக்கில நஷ்டம், தேக ஒளி கெடல், வாதகோபம், சிலேத்தும மிகுதி ஆகிய இவைகள் உண்டாம் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தை உண்ணத் தாகம் அடங்கும், நீர்ச்சுருக்கு நீங்கும், இது அதிக சீதளமுள்ள பதார்த்தமாதலால் தேகத்தின் சுபாவமறிந்து உண்ணவேண்டும்.

குறிப்பு:—தர்ப்பூசினிப் பழமானது சில பிரதேசங்களில் குமட்டிப் பழமென்று வழங்கப்படுகின்றது. துமட்டிக் காய்க்குச் சில பிரதேசங்களில் குமட்டிக்காய் என்று வழங்கப்படுகின்றது. பொதுவாகக் குமட்டி என்னும் பதமானது மலையாள பாஷையைத் தழுவி இருப்பதால் பேய்க் குமட்டி என்னும்போது துமட்டிக்காயாகவும் குமட்டி என்னும்போது தர்ப்பூசினி என்கிற பிச்சப் பழமாகவும் பாவித்தல் வேண்டும். பொதுவாக ஔஷதப் போக்குகளில் குமட்டிக்காய் என்று கூறும்போது துமட்டிக்காயையே குறிப்பிடும்.

பிஞ்சு வெள்ளரிக்காய்.

(Cucumis Sativus—Tender).

பிஞ்சுவெள்ள ரிக்காய்க்குப் பேசுமுத் தோடமறும்
மிஞ்சி வருந்தாக மேயடங்கும்—கொஞ்சுமொழி
மாதே புசியடங்கும் மக்கட் களைப்பேகும்
இதே குணமென்பர் இங்கு.

குணம்:—(இ-ள்.) பிஞ்சு வெள்ளரிக் காய்க்கு முத்தோஷங்களும் அதிதாகமும் தணியும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலைச் சீவி வில்லையாக அரிந்து மிளகும் உப்பும் பொடித்ததூளில் தொட்டு உண்பதுண்டு. இது விசேடமாகக் கோடைக்காலத்தில் உண்டான நாவறட்சியை அடக்கும். பசியை உண்டாக்கும். இதைப் பகல் ஆகாரம் கொண்ட சிலமணி நேரத்திற்குப் பின் உண்பதே சிறந்தது.

பிடங்குநாறி.

(Pidangunari).

பிடங்குநா றிப்பன்னப் பேச்சை யெடுக்கில்
அடங்கு மசலமிஃ தன்றித்—தொடங்குகின்ற
நீர்ச்சுரப்பும் வாங்கிவிடும் நீடுசட ராக்கினியாந்
தேர்ச்சியுறும் புத்திக்குத் தேர்.

குணம்:—(இ-ள்.) பிடங்குநாறி இலையால் செரியாமந்தமும், ஆரம்ப நீர்க்கோவையும் போகும். சமாக்கினியும், புத்திக்குத் தெளிவும் உண்டாம்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைக்கொண்டுவந்து பெரு நரம்புகளை நீக்கி வெண்ணெயைப்போல் அரைத்த கற்கத்தில் தினம் ஒரு வேளை 3-நாள் 1 அல்லது 2 கொட்டைப்பாக்கு அளவு சலத்திலாவது,பசுவின் பாலிலாவது கலக்கி உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. இதனால் ஸ்திரீகளுக்கு மாதவிலக்குக் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி நீங்கும். முற்கூறப்பட்ட அளவின்படி 21-முறை வடிகட்டிச் சுத்தப்படுத்திய 1 அவுன்ஸ் பசுவின் மூத்திரத்தில் கலக்கி மூன்றுநாள் கொடுக்கக் கல்லீரல், மண்ணீரல் முதலியவற்றின் வீக்கத்தைக் குறைப்பதுமல்லாமல் பாண்டு, சோகை, காமாலை முதலியவற்றையும் குணப்படுத்தும். இன்னும் இதர சரக்குகளைக் கூட்டிக் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

5 அல்லது 6 இலையைச் சிதைத்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதனுடன் ½ பலம் கடுக்காய்த் தோலையும், சிறிது மஞ்சள் துண்டையும் இடித்துப்போட்டு, ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டிக் காலை நேரத்தில் தேகதிடத்திற்கு ஏற்றவாறு, 3 அல்லது 4 அவுன்ஸ் அளவிற்குக் கொடுக்க இரண்டொருமுறை பேதியாகும். 3 அல்லது 5 நாள் கொடுக்கப் பாண்டு, காமாலை, சோகை, கைகால் பிடிப்பு, கீல்களில் வீக்கம், கல்லீரல் மண்ணீரல் வீக்கம் முதலியவைகள் குணமாகும்.

பிண்ணாக்குக்கீரை.

(Melochia Corchorifolia).

மலமிறங்கும் வாதமுடன் வன்கரப்ப னுண்டாஞ்
சலமிறங்கு மேகந் தணியு—மலர்விழியா
யுண்ணுக்குக் கின்பமா மோடுமனல் வெட்டையெலாம்
பிண்ணாக்குக் கீரையுண்ட பேர்க்கு.

குணம்:—(இ-ள்.) உரிசையுள்ள பிண்ணாக்குக்கீரையால் மலமும் மூத்திரமும் தாராளமாக இறங்குவதுந் தவிர வாததோஷமும் கரப்பானு முண்டாகும். பிரமேக வெள்ளையும் அரித்திரா மேகமும் போகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைப் பருப்புடன் கூட்டிக் கடைந்து முதல் அன்னத்தில் போட்டு நெய் விட்டுண்ண வாய்க்கு அதிக இன்பமாக இருக்கும். உட்சூடு, வெள்ளை, சீதபேதி, இரத்தபேதி இவைகளைக் குணப்படுத்தும்.

பிரண்டை.

(Vitis Quadrangularis).

பிரண்டையைநெய் யால்வறுத்துப் பின்பரைத்து மாதே
வெருண்டிடா தேற்று விழுங்கி—லரண்டுவரு
மூலத் தினவடங்கு மூல விரத்தமறும்
ஞாலத்தி னுள்ளே நவில்.

(இதுவுமது)

மாந்தம் வயிற்றுவலி வாயுவதி சாரமுளை
சேர்ந்தமூ லங்கபமுட் செம்புனற்போக்—கோய்ந்தநடை
யெல்லா மகலு மெழும்பு மதிகபசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

குணம்:—(இ-ள்.) பிரண்டையை நெய் விட்டு வறுத்து அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் எட்டு நாள் அந்திசந்தி சாப்பிட ஆசனத்தினவும் ரத்த மூலமும் ஒழியும். இதைப் பற்பல அவிழ்தங்களாகப் பிரயோகிப்பதில் அக்கினிமந்தம், குன்மம், வாதாதிசாரம், முளைமூலம், கபதோஷம், ரத்தபேதி, காலசதி இவைகள் நிவர்த்தியாம். சடராக்கினி விளையும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி, கிருமி நாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் அடி வேரைச் சலத்தில் அலம்பி உலர்த்திப் பொடி செய்து வைத்துக்கொண்டு 10-15 குன்றி எடை உள்ளுக்குக் கொடுக்க எலும்பு முறிவைக் கூட்டுவிக்கும். அந்தச் சமயம் மேலுக்கும் எலும்பு முறிவை ஒழுங்காக வைத்து மூங்கில் பத்தை வைத்துக்கட்டி அந்தப் பாகத்தை அசையாமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். பிரண்டையுடன் சிறிது மிளகு கூட்டி அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் 2 வேளை கொடுக்கச் சுவாசகாசம் சாந்தப்படும். பிரண்டையுடன் உப்பு, புளி, மிளகாய் கூட்டி அரைத்துத் துவையலாகவும், வேக வைத்தப் பிரண்டையை உப்பிட்ட மோரில் போட்டு உலர்த்தி வற்றலாகவும் உபயோகப்படுத்துவதுண்டு. பிரண்டையுடன் சமனெடை கறியுப்புக் கூட்டி இடித்து, ஒரு சிறு குடுவையில் போட்டு ஓடு மூடிச் சீலை செய்து, புடமிட்டு அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2-3 குன்றி எடை புளித்த மோரிலிட்டுக் கொடுப்பதுண்டு. இத்தகையப்

பிரயோகங்களினுல் அஜீரணம், வயிற்றுப் பொருமல், உஷ்ண வாயு விஞலுண்டான பேதி முதலியவைகள் குணமாகும்.

பிரப்பங்கிழங்கு.

(Calamus Verus—Tuber).

தந்தரோ கத்தைத் தணியாத வாதத்தை
யுந்துசூ லைப்பிடிப்பை யோட்டுங்காண்—வந்து
கரப்புந் திறப்புமெனக் காட்டுநகை மாதே
பிரப்பங் கிழங்கதனைப் பேண்.

குணம்:—(இ-ள்.) பிரப்பங்கிழங்கு தந்த மூலரோகம், வாத கோபம், சீல்பிடிப்பு, சிலேத்தும தோஷம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை இதர சரக்குகளுடன் கூட்டிக் கியாழங்களாக வாதசம்பந்தமான சுரங்களுக்கும், கை கால் பிடிப்பு, குடைச்சல் முதலியவற்றிற்கும், மண்ணீரல், கல்லீரல் முதலியவைகளின் தொழில் மந்தத்தினுல் உண்டாகும் வீக்கம், பாண்டு, சோகை, காமாலை, மகோதரம் முதலியவற்றிற்கும் கொடுப்பதுண்டு. எங்ஙனமெனில்—

வாதசுரக் கியாழம்.

பிரப்பங்கிழங்கு, சுக்கு, மிளகு, பறங்கிச்சக்கை, வாய்விளங்கம், கடுகுரோகிணி வகைக்குத் தோலா 1; இவற்றை நறுக்கி ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம்விட்டு ஆழாக்கு அளவிற்குக் காய்ச்சி வடித்து, மூன்று வேளையாகப் பங்கிட்டு, நான்கு மணி நேரத்திற் கொருமுறை கொடுத்துவரச் சுரம், குளிர், தேகக் குத்தல், கைகால் பிடிப்பு இவைகள் நீங்கும்.

சண்முகக் கியாழம்.

பிரப்பங்கிழங்கு பலம் $\frac{3}{4}$, கீழாநெல்லி சமூலம் பலம் $\frac{3}{4}$, இஞ்சி பலம் $\frac{1}{4}$, ஏலரிசி பலம் $\frac{1}{8}$, வெண்மிளகு பலம் $\frac{1}{4}$, நற்சீரகம் பலம் $\frac{1}{4}$, இவைகளை யெல்லாம் இடித்து ஓர் இரும்பு பாண்டத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $1\frac{1}{2}$ ஆழாக்கு அளவிற்குக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 3 அவுன்ஸ் வீதம் $\frac{1}{2}$ விராகனெடை முள்ளங்கி உப்புக் கூட்டித் தினம் 2-3 வேளை கொடுக்கவும். இப்படி 10 நாள் கொடுக்க நீர் இறங்கி மகோதரம், பாண்டு முதலிய ரோகங்கள் குணமாகும்.

பிரமதண்டு.

(Argemone Mexicana).

புண்ணேடுக ரப்பான் பொடிசிரங்கு சில்விஷங்கள்
சண்ணிருமல் மேகவளி தண்மேக—மெண்ணிற்
படியோட்டு மாவிஷமும் பல்நோயுந் தீருங்
குடியோட்டுப் பூண்டாற் குலேந்து.

குணம்:—(இ-ள்.) பிரமதண்டு என்னும் குடியோட்டிப் பூண்டினல் பெருவிரணம், கரப்பான், சிறு சிரங்கு, அற்பவீரிய விஷங்கள், காசம், மேகவாயு, சலப்பிரமேகம், சர்ப்பவிஷம், தந்த ரோகம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, வேதனுசாந்தினி, நித்திராகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலேச்சாற்றைத் தினம் ஒரு வேளே காலேநேரத்தில் வெறும்வயிற்றில் ஒரு ரூபாய் எடை உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி 20-30 நாள் கொடுத்துவர குட்டம், பொல்லாத சொறி, சிரங்கு, மேகரணங்கள் ஆறும். இன்னும் இந்தச் சாறு நீர்க்கோவை, காமாலே, வெள்ளே முதலிய ரோகங்களேயும் குணப்படுத்தும். இதன் வேரை அரைத்துத் தேள்கொட்டு, பூரான்கடி முதலியவற்றிற்கு வைத்துக் கட்டக் குணமாகும்.

பிரமதண்டுப்பால்.

(Argemone Mexicana—Milk).

கண்கூசல் கண்ணருகல் கண்ணெழுகல் கண்ணேதல்
கண்சிவத்த லெல்லாங் கடிதேகுந்—திண்ணச்
சரமதண்ட னேப்பிளக்குஞ் சாயகக்கண் மாதே
பிரமதண்ட னற்பாற்குப் பேர்ந்து.

குணம்:—(இ-ள்.) பிரமதண்டின் பாலால் கிரிச்சிரோன் மீலன வர்த்தரோகம், சிக்தாவர்த்தரோகம், கபஸ்ராவம், அலசிரோகம், ரத்தாபிஷந்தரோகம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—தாது க்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனேக் கண்களில் மைதீட்டுவதைப் போல் தீட்டிவரக் கண்பூ கரையும், கண்களில் வளர்ந்துவரும் துர்மாமிசங்கள் கரையும், இன்னும் இந்தப் பாலே மூல முளேக்குத் தடவிவரச் சில நாளில் முளே இருந்த இடம் தெரியாமல் சுருங்கிப் போம்.

பிரமதண்டுவித்து.

(Argemone Mexicana—Seeds).

அந்த மழிக்கின்ற ஆருத மெய்க்கரப்பான்
தொந்தபிர மேகஞ் சொறிசிரங்கும்—வந்தரையில்
குத்தலுறுங் கட்டி குடியோட்டிப் பூண்டதனின்
வித்தால் ஒழியுமென விள்.

குணம்:—(இ-ள்.) பிரமதண்டு வித்தினால் கரப்பான், பிரமேகம், சொறி, சிரங்கு, அரையாப்பு முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மலகாரி, வமனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் விதையைத் தூள் செய்து ஒரு இலையிலாவது கடிதத்திலாவது வைத்துச் சுருட்டி சிகரேட் பீடி பிடிப்பதுபோல் புகையைப் பிடித்து வெளியில் விட்டுக்கொண்டுவரப் பல்வலி, பற்றேய்வு, பற்சொத்தை, பல்லீற்றில் கிருமி சேர்க்கை முதலியவைகள் போம்.

பிரமதண்டுவித்தெண்ணெய்.

பிரமதண்டு விதை பலம் 15, கெந்தி பலம் 5, பூவரசம் வித்து பலம் 2½ இவைகளைக் குமரிச்சாறு விட்டு அரைத்து உருண்டை பிடித்து ஒரு நாள் ஆறப்போட்டுத் துவாரமிட்டக் குடுவையில் போட்டு வாய்க்கு ஓடுமூடிச் சீலைசெய்து குழித்தைலம் வாங்கி வடிகட்டி இரண்டிற்கு ஒரு பாகம் சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி வேளைக்கு 3-7 துளி வரையில் சர்க்கரையில் விட்டுத் தினம் 2 வேளை 5 நாள் கொடுத்துக்கொண்டுவர மேகவாயுப்பிடிப்பு, மேக வாயுக் குடைச்சல், இடுப்புவலி, படை, சொறி, சிரங்கு முதலிய வியாதிகள்போம். இன்னும் இதைக் கூன் ரோகத்திற்கு ஆரம்பத்தில் கொடுத்துவரப் பூரண சுகத்தைக் கொடுக்கும்.

பிரமியவழுக்கை.

(Gratiola Monieri).

கீலின் பசையாற் கிளைத்த வலிவீக்கங்
காலின் பிடிப்பொடுகை காலெரிவு—மேலிலெழு
வாதத்தா கோவு மலக்கட்டுஞ் சோபையும்போஞ்
சீதத்தாஞ் சப்தளைக்குத் தேர்.

குணம்:—(இ-ள்.) சப்தளை என்கிற பிரமிய வழுக்கைக்குக் கீல்களின் கபம் விருத்தியடைவதாற் பிறந்தவலி, வீக்கம், கால்பிடிப்பு,

கைகாலெரிவு, வாதக்கடுப்பு, மலபந்தம், சோபை ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, இலகுமலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச் சாற்றுடன் மண்ணெண்ணெயையாவது அல்லது பெற்ரேலியம் எண்ணெயையாவது சமன் சேர்த்து நன்ருய் மத்தித்துக் கீல்வாதத்திற்குத் தேய்க்க அவ்விடத்திலுள்ள வலி, வீக்கம், பிடிப்பு இவைகள் போம். அரைத் தோலா எடைச் சாற்றுடன் அரைத்தோலா நெய் கூட்டிக் காய்ச்சி கிருதம்போல் தினம் இருவேளை உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. அல்லது அரைத் தோலா எடையுள்ள சாற்றில் 10-15 குன்றி எடை நன்ருய்த் தூள் செய்துள்ள கோஷ்டத்தைப் போட்டுத் தினம் 2 வேளை உள்ளுக்குக் கொடுப்பதுண்டு. இதனுல் சித்தப் பிரமை, காக்கைவலி, பித்தாதிக்கம் முதலியவைகள் தீரும். இதன் இலையை வேக வைத்து அரைத்து மார்பின்மேல் வைத்துக்கட்டக் கப உபரியால் அடுத்து அடுத்துவரும் இருமல் குணமாகும். இதன் இலையை யரைத்து வீக்கங்களுக்குப் பற்றுப்போடக் குணமாகும்.

பிராயன் இலை.

(Streblus Asper—Leaves).

சீதமுறும் பேதியுடன் செங்குருதிப் போக்கும்போம்
ஓதக் கிரகணியும் ஓடிப்போம்—பூதலத்தில்
நண்ணும் பிராயனிலை நங்கையே நன்கறிந்தே
உண்ணுமவர்க் கென்றே உரை.

குணம்.—(இ-ள்.) பிராயன்இலையால் சீதபேதி, அதிசார பேதி, இரத்தப்போக்கு, கிரகணி முதலிய ரோகங்கள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைக் கொண்டுவந்து நரம்புகளை நீக்கி ஒன்றிரண்டாக அரிந்து, நெய் தடவிப் பிசறி ஒரு இரும்புக்கடாயில் போட்டுச் சிறிது வேகும்படியாகக் கிண்டிக் கொடுத்து இறக்கி, அவ் விலைகளை அம்மிக்கல்லில் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் பனைவெல்லம் கூட்டி லேகிய பதத்திற்கு அரைத்து எடுத்துக்கொள்ளவும். இதனில் வேளைக்குச் சிறு சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் 3 வேளை கொடுத்துவரச் சீதபேதி, ரத்தபேதி, உஷ்ணபேதி, கிரகணி முதலியவைகள் குணமாகும்.

பிராயன்பால்.

(Streblus Asper—Milk).

பார்க்கும் பிராயன்றன் பாலதனற் பற்றேய்க்க
மூர்க்க முறுநோயை முன்னகற்றும்—கார்குழலாய்
வேகமுறும் பித்த வெடிப்பகற்றும் விந்திறுகும்
போகத்தி லென்றும் புகல்.

குணம்:—(இ-ள்.) பிராயன்பாலால் பல்வலி, பித்தவெடிப்பு குணமாகுவதுடன் விந்து வன்மை பெறும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—பிராயன்பாலைப் பாதங்களிலும், கரங்களிலும் காணுகின்ற பித்த வெடிப்பிற்குத் தடவிவர விரைவில் ஆறும். மூல முளைக்குத் தடவச் சுருங்கும். இன்னும் பற்களுக்குத் தேய்க்கப் பல்லாட்டம், பல்வலி, ஈறுசுரப்பு முதலியவைகள் குணமாகும்.

வறுத்தக் கடலைமாவுடன் பிராயன்பாலைக் கூட்டிப் பிசைந்து பட்டாணிபோல் மாத்திரைகள் செய்து தேக திடத்திற்கு ஏற்றவாறு 1-2 மாத்திரை வீதம் தினம் 2 வேளை சில நாள் சாப்பிட்டு வரப் போக சக்தியை யுண்டாக்கும்.

பிளப்புச் சீரகம்.

(Carum Nigrum).

உடலுக் கழகா முறைபித்த மேகு
மடலுறு வாத மதமாங்—கடிசேர்
தளவுநகைக் கோட்டுமுலைத் தையலே நாளும்
பிளவுநறுஞ் சீரகத்தைப் பேண்.

குணம்:—(இ-ள்.) பிளப்புச் சீரகத்தினால் நீங்காப் பயித்தியமும், வாத கோபமும் நீங்கும். சரீரத்திற்கு அழகுண்டாகும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சிறிது பொன் மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டி உட்கொள்ளுவதுண்டு. இதனால் அஜீரணம், அஜீரணபேதி, மண்ணீரலின் வீக்கம், வயிற்றுவலி முதலிய வியாதிகள் நீங்கும். இதுவுமன்றி இரைப்பை, ஈரல்,

குடல், குண்டிக்காய் முதலிய விடங்களில் சஞ்சரிக்கின்ற வாயுவை நீக்கும்.

பிஸ்தா.

(Pistha).

தேகபல முண்டாகும் தெம்புதர விந்திறுகும்
போகமதி லிச்சையுறப் போராடும்—வேகமுடன்
மங்கையர்க்குப் பால்சுரக்கும் மாதரசே பிஸ்தாவைச்
சங்கையறத் துய்த்தார்க்குச் சாற்று.

குணம்:—(இ-ள்.) பிஸ்தாப் பருப்பை உண்பவர்களுக்குப் பலத்தையும், ஸ்திரீ போகத்தில் இச்சைகொள்ளும்படி விந்துகிளர்ச்சியையும் உண்டாக்கும். இன்னும் பிரசவித்துள்ள ஸ்திரீகளுக்குப் பால்சுரப்பை அதிகப்படுத்தும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பருப்புடன் சிறிது கற்கண்டு கூட்டித் தினம் காலை மாலை சாப்பிட்டு வர வாய்க்கு ருசியாக இருக்கும். இப்படி நீடித்துச் சாப்பிடத் தேகம் கொழுமை பெருவதுடன் போக சக்தியும் அதிகப்படும். இன்னும் இது இருதய கமலத்திற்கும் இரைப்பைக்கும் பலத்தைக் கொடுக்கும்.

இதனை அதிகமாக உபயோகப்படுத்தின் தலைவலி காணும். அச்சமயம் புளிப்புப் பதார்த்தங்களைக் கூட்டிக்கொள்ளப் பரிகாரமாகும்.

பீதரோகணி.

(Thalictrum Foliolosum).

படர்நீல காசம் படலமொரு பில்லந்
தொடரிமைக ளிற்ரோன்றுந் தோட—மடரு
மருவியெனச் சொல்லுகின்ற வக்கிரோ யேகு
மொருபீத ரோகிணியை யுன்.

குணம்:—(இ-ள்.) பீதரோகணியால் கருவிழி, நீலகாசம், கிருஷ்ணமண்டல படலம், இமையைப்பற்றிய நீர்ப்பில்லம், கிரிச்சிரோன்மீலனம் முதலிய ரோகங்கள், கபஸ்ராவம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, பலகாரி, வியதாபேதகாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 5-7 குன்றி எடை தேனில் கொள்ள வாயுவைக் கண்டிக்கும், உதிரச் சிக்கலை உடைக்கும். இதைச் சுத்த சலத்திலாவது முலைப்பாலிலாவது உரைத்துக் கண்களுக்குத் தீட்டப் பார்வை மந்தம் நீங்கும். இது விசேஷமாகக் கண் வைத்தியத்திற்கே மிகச் சிறந்தது.

பீர்க்கங்காய்.

(Cucumis Acutangula).

தின்றவுடன் பீர்க்கங்காய் சீதமுறுங் காண்பித்த
மொன்றுமுன் றாக வுயருமே—மன்றலணிக்
காரளகக் கச்சுமுலைக் காரிகையே வாதகப
நேரளவைத் தாண்டு நினை.

குணம்:—(இ-ள்.) பீர்க்கங்காயை உண்ணில் சீதளமும் பித்தமும் தன் மாத்திரைக்குமேல் மூன்றுபங்கு அதிகரிக்கும், வாத கபங்கள் தத்துவ நிலை பிசகும்.

செய்கை:—சீதளகாரி, பித்தகாரி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை மேற்றோலைச் சீவி வில்லை வில்லையாக அரிந்து பொரியலாகவும், சிறு துண்டுகளாக அரிந்து கடலைப்பருப்புடன் கூட்டிக் கூட்டமுதாகவும் செய்து, அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. இது பித்த சீதளத்தை அளவுக்கு மிஞ்சி விளைவிக்கும்.

புகையிலை.

(Nicotiana Tabacum—Leaves).

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யுந்
திருந்து பலவீனஞ் சேர்க்கும்—பொருந்துபித்த
முண்டாக்கும் விந்தழிக்கு மோர்து புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்.

குணம்:—(இ-ள்.) புகையிலை வாய்வறட்சி, துர்ப்பலம், பித்தாதிக்கம், சுக்கிலக்ஷீணம் இவைகளையுண்டாக்கும். நல்ல மருந்தையும் முறிக்கும் என்க.

செய்கை:—சமனகாரி, அங்காகர்ஷணநாசினி, வமனகாரி, திரவகாரி, நாசிநீர்விர்த்தினி, மலகாரி (சில சந்தர்ப்பம்).

உபயோகிக்கும் முறை:—இதை விசேஷமாக உள்ளுக்கு ஒளஷதமாகக் கொடுப்பதில்லை. இது பழக்கமில்லாதவர்களுக்கு

உள்ளுக்குச் சென்றால் பித்தத்தை உபரிசெய்து மயக்கத்தையும் உண்டாக்கும். இதன் இலையைச் சிறிது துண்டித்து உமிழ்நீர் தடவிக் கட்டி, பருவு முதலியவற்றிற்கு மேற்போட்டுவர விரைவில் உடைத்துக்கொள்ளும். இதைச் சுட்டுச் சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்துச் சிரங்குகளுக்குப்போட ஆறும். இன்னும் இதைக் குழந்தைகளின் கொப்பூழ் விரணங்களுக்கும் போடுவதுண்டு. புகையிலையையும், சிகைக்காயையும் தனித்தனிச் சுட்டுக்கரியாக்கிச் சமனெடையாகக் கூட்டிப் பல்வலி, பல்ஈறுசுரப்பு முதலிய விடங்களில் சிறிது வைத்து அழுத்தத் துர்நீர் வெளியாகி, வீக்கமும் நோயுங் குறையும். உடனே வெந்நீர்கொண்டு வாய் கொப்புளித்துவிடல் வேண்டும். 5 தோலா எடைக்கு மேற்படாத ஒரு இதழ் புகையிலையை ½ படி சலத்தில் கசக்கி அதன் சத்து எல்லாம் சலத்தில் சேரும் படிச் செய்து, வடிகட்டிப் பாம்பு கடித்தவர்களுக்குக் கொடுக்க வாந்தியாகும். விஷம் இறங்கும். தற்காலத்தில் இதனைச் சுருட்டாகவும், பொடியாகவும், தாம்பூலங்களுடன் சேர்த்தும் உபயோகப்படுத்துவதுண்டு. இத்தகையப் பிரயோகங்களினால் நரம்புகளுக்கு ஒருவித உற்சாகம் உண்டாகிறது. அளவுடன் சுருட்டுப் பிடிப்பதால் திரேகதிடம் உள்ளவர்களுக்கு ஒருவிதக் கெடுதியும் ஏற்படுகிறதில்லை. இதனால் அவர்களுக்கு மலம் சிக்கலின்றி வெளியாகும். தேகத்தில் ஒருவிதமான சுறுசுறுப்பும் உண்டாகும். இதற்குப் பசியை அடக்கும் தன்மை உள்ளதாதலால் இதனை ஆகாரம் உட்கொண்டபின்னர் உபயோகப்படுத்தல் சாலச்சிறந்தது.

புங்கம்பால்.

(Pongamia Glabra—Milk).

புண்ணும் புரையுமறும் பொல்லாத வாதமறும்
நண்ணும் கிரந்திபடை நாசமுறும்—மண்ணுலகில்
தங்கம்போல் மேனி தழைத்தோங்கு மெந்நாளும்
புங்கம்பாற் செய்தி புகல்.

குணம்:—(இ-ள்.) புங்கம்பாலால் புண், புரையோடும் ரணம், வாயு, கிரந்தி, படை இவைகள் போம். இன்னும் தேகம் நல்ல மேனியை அடையும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனை ஆறுத ரணங்களின் பேரிலும் பவுத்திரத்திற்கும் பூசிவர ஆறும். புரை ஓடுகின்ற கட்டிகளுக்கு இந்தப் பாலைக் குழையில் வைத்து உள்ளுக்குச் செல்லும் வண்ணம் ஊதுவதுண்டு. அல்லது சுத்தமான வெள்ளைச் சீலையை இந்தப் பாலில் தோய்த்து மெதுவாகக் கட்டியின் துவாரத்தின் வழி செல்லும் பரியந்தம் உள்ளுக்குத் தள்ளி வருவதுண்டு. தினத்திற்குத் தினம் உள் ரணம் ஆற ஆறப் பாலூட்டிய சீலையை உள்ளுக்கு அதிகம் வாங்காது. இந்தப் பாலை மேகரோகத்திற்குரிய எண்ணெய்களில் கூட்டத் தேகத்திலுள்ள ஊழல்கள் அறும்.

குறிப்பு:—புங்கமரத்தின் வேர்களை 1 அல்லது $1\frac{1}{2}$ அடி நீளமாக வெட்டி சலத்தில்போட்டு மண்ணில்லாமல் அலம்பி எடுத்துக் கத்தியினால் பஞ்சுபோல்சீவியாவது அல்லது சுரண்டியாவது இடித்துக் கையினால் கசக்கி அழுத்தமாகப் பிழியப் பால் சொட்டும். இதனை வடித்துப் பத்திரப்படுத்துக. இதுவே முற்கூறப்பட்ட பாகங்களில் சேர்க்கத்தக்கது.

புங்கம்வேர்.
(Pongamia Glabra—Root).

வாதக் கடுப்பு மகாமூர்ச்சை தாபசுரம்
வாதகுன்மம் ரத்தத்தால் வந்திடுநோ—யோதுகின்ற
புண்புரையும் வல்விஷமும் போகுந் திரண்டுருண்டே
பண்புறுபுங் கம்வேர்க்குப் பார்.

குணம்:—(இ-ள்.) புங்கமர வேரினால் வாதக்குடைச்சல், திரிதோஷ மூர்ச்சை, தாபசுரம், வாயுகுன்மம், ரத்த தாதுவினாற் பிறக்கின்ற ரோகங்கள், விரணம், புரையோடல், சர்ப்பவிஷம் ஆகிய இவைகள்போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—புங்கம்வேர்ப் பட்டையையாவது அல்லது இலையையாவது அல்லது இரண்டையும் சேர்த்தாவது கியாழமிட்டுக் கணுக்களில் உண்டான வலி,பிடிப்பு,குடைச்சல் முதலியவற்றிற்குப் பொறுக்கக்கூடிய சூட்டில் தாரையாக விடலாம். இன்னும் பஞ்சுபோல் இடித்து வேகவைத்தப் பட்டை அல்லது இலையை சீலையில் தளர்ச்சியாக முடிந்து ஒற்றடம் கொடுத்துவரலாம். இப்படி 2-3 நாள் கொடுக்க நோய்கள் குணமாகும். புங்கம்இலை, ஐந்து இலை விடும் நொச்சியிலை, வேப்பிலை இவைகளைச் சமனெடை

யாக அம்மியில் வைத்து அரைத்து வேளைக்குப் பெருங்கொட்டைப் பாக்களவு தினம் ஒரு வேளை மூன்று நாள் கொடுக்க வயிற்றி லுள்ள கிருமிகள் ஒழியும். இதன் இலைச்சாற்றுடன் தேங்காய்ப் பால், சுண்ணும்புசலம் கூட்டி நன்றாய்க் குலுக்கி வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை 3-5 நாள் கொடுக்க வெள்ளை போம். இதன் இலையையாவது வேர்ப்பட்டையையாவது அரைத் துக் கிருமிகண்ட ரணங்களுக்குப் போட ஆறும்.

புங்கின்நெய்.

(Pongamia Glabra—Oil).

அங்க மழகிடும்வெற் பாம்புங்கி னெய்தனக்குத்
தங்கம்போற் காந்தியது தானுண்டாங்—திங்கண்முக
மானே கரப்பான்போம் வந்தசொறி யுஞ்சிரங்குந்
தானே விலகுமெனச் சாற்று.

குணம்:—(இ-ள்.) மலைப்புங்கம் பருப்பின் நெய்க்கு அழகும், ஒளியும் உண்டாம்; கரப்பானும், புடையும், கிரந்தியும் ஒழியும் என்க.

செய்கை:—உற்சாககாரி, தாதுக்ஷீணரோதி, வேதனைசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய்யைத் தனியாகவாவது அல் லது சிறிது ரசகற்பூரம்கூட்டி அரைத்தாவது சொறி, சிரங்கு, புண், படர்தாமரை முதலியவற்றிற்குத் தடவிவர விரைவில் குணமாகும். புங்கின்நெய்யும் எலுமிச்சம்பழச்சாறும் சமனெடையாகக் கூட் டிக் கலக்கிக் கணுச்சூலை, பிடிப்பு இவைகட்குத் தேய்க்கக் குணமா கும். இன்னும் இதைக் கரப்பான், நமிட்டுச் சிரங்கு இவைகட்குத் தடவிவரக் குணமாகும். பேன் தலைக்குத் தடவப் பேன்கள் சாகும்.

புங்கின்விதை.

(Pongamia Glabra—Seeds).

புங்கின்விதை காற்கிரந்தி புண்கரப்பான் காதெழுச்சி
யங்கசந்நி கண்ணோய்க்கு மாம்பேதி—யுங்கட்டுங்
காட்டுப்புங் கின்விதைக்குக் கண்டதே மற்சொறிமெய்ப்
பூட்டுப்பங் கின்வாய்வும் போம்.

குணம்:—(இ-ள்.) புங்கங்கொட்டை கழல்விரணம், கிரந்தி, கரப்பான், கர்ணபரிஸ்போடகம், சந்நி, கண்ணோய் இவைக்குதவும். மலத்தைக்கட்டும். இன்னும் காட்டுப்புங்கின் கொட்டையாக இருப் பின் தேமலும், புடையும், கீல்களைப்பற்றிய வாய்வும் போம் என்க.

செய்கை:—தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் கொட்டையை மாலையாகக் கோர்த்துக் குழந்தைகளின் கழுத்திலிடக் கக்குவாய்இருமல் நீங்கும். இதன் பருப்பைச் சூரணம் செய்து குழந்தைகட்கு 1-2 குன்றி எடையாகவும், 8 வயதுக்கு மேல்பட்டவர்களுக்கு 4-5 குன்றி எடையாகவும் தேனில் தினம் 2 வேளை கொடுத்துவரக் கக்குவாய் இருமல் போம். இதைக் கஞ்சி ச்லம் விட்டு மெழுகு போல் அரைத்துத் தேமல், படை, கீல்வாதம் முதலியவற்றிற்குப் பற்றுப்போடக் குணமாகும்.

புடலங்காய்.

(Trichosanthes Anguina—Long Gourd).

போகம் விளையும் பொருந்தி வளருமைய
மாகமதிற் பித்த மணுகுங்காண்—மேக
படலங் கவியளகப் பாவாய்கே ளூம்
புடலங்காய்க் குள்ள புகழ்.

குணம்:—(இ-ள்.) புடலங்காய்க்குச் சுக்கிலமும், கபமும், பித்தமும் அதிகரிக்கும் என்க.

செய்கை:—பித்தகாரி, சீதளகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—நீளமாயுள்ள புடலங்காயை வில்லை வில்லையாக அரிந்து பொரியலாகவும், சிறு துண்டுகளாக அரிந்து கடலைப்பருப்புடன் கூட்டிக் கூட்டமுதாகவும் பாகப்படுத்தி அன்னத்துடன் உண்பதுண்டு. இது தேகத்தின் அழலையை ஆற்றும், உள்வறட்சியை நீக்கும், தேகம் தழைக்கச் செய்யும். ஆனால் கபதேகிகளுக்கு ஆகாது.

குறிப்பு:—இந்த இனத்தில் குட்டையாகவும் சதை கனத்தும் உள்ள ஒருவிதக் காய் உண்டு. இதனைப் பன்றிப் புடலங்காய் எனக் கூறுவர். இதன் குணத்தை அதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

புதியனு.

(Mentha Sativa).

அருசி யொடுவாந்தி யக்கினி மந்தங்
குருதி யழுக்குமலக் கொட்ட—லிரியுந்
துதியதன்று சோறிறங்குந் தொல்லுலகி னூளும்
புதியனல்ல மூலி புகல்.

குணம்:—(இ-ள்.) புதியன் மூலி என்னும் புதியனுவினல் அருசி, சர்த்தி, மந்தாக்கினி, ரத்ததாதுவினழுக்கு, மலப்போக்கு இவைகள் நீங்கும். போஜனமும் செல்லும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—புதியனுவைச் சிறிது நெய் விட்டு வதக்கி அதனுடன் புளி, உப்பு, மிளகாய் முதலியவற்றைத் திட்டமாக வைத்து அரைத்துத் துவையலாக அன்னத்துடன்கூட்டி உண்ணத் தீபனத்தை யுண்டாக்கும். வாயுவைக் கண்டிக்கும்.

புதியனு சர்பத்து.

புதியனு இலைச்சாறு படி $\frac{1}{8}$, இஞ்சிச்சாறு படி $\frac{1}{8}$, பழச்சாறு படி $\frac{1}{8}$, கடலைக்காடி அல்லது மால்டட் வினிகர் படி $\frac{1}{8}$ இவைகளுடன் 1 வீசை பழுப்புச்சர்க்கரை (நாட்டுச் சர்க்கரை) கூட்டிச் சர்பத்தாகச் செய்து வேளைக்கு $\frac{1}{2}$ தோலா எடை சாப்பிட்டுவர வாந்தி, குமட்டல், அஜீரணம், மயக்கம், மார்பு எரிச்சல் முதலியவைகள் போம்.

புத்திரசீவி விதை.

(Putranjiva Roxburghii).

ஆகியதோர் மூலமன லம்வெட்டை மேகமும்போம்
போகம் விளையும் பொருமலறுந்—தாகம்போம்
புத்திர சீவியெனப் போற்றும் விதையதறு
லித்தரையுள் மாதே யியம்பு.

குணம்:—(இ-ள்.) புத்திரசீவி விதையினுல் மூலம், காங்கை, பிரமேகம், நீர்ப்பிரமேகம், வயிற்றுப்பிசம், நாவறட்சி இவைகள் போம். சுக்கிலம் விளையும் என்க.

செய்கை:—சீதளகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலை, காம்பு, காய் இவையனைத்தையுமாவது அல்லது இரண்டொன்றையாவது கூட்டிச் சுமார் $\frac{1}{2}$ பலத்திற்கு ஒரு குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி ஆறவிட்டு, இருவேளையாகக் கொடுக்கச் சுரம், நாவறட்சி, குளிர், வயிற்றுப்பிசம் இவைகள் போம். இதன் கொட்டையைக் கயற்றில் மாலையாகக் கோர்த்துக் குழந்தைகளை அலங்கரிக்கும்பொருட்டுக் கழுத்தில் கட்டுவதுண்டு. இதன் சத்து சரீரத்தில் படுவதினுலேயே குழந்தைகள் நோய் இல்லாமல் வளரும் என்பது ஆன்றோர் கருத்து.

புழுங்கலரிசி.
(Puzhungalarisi).

புழுங்க லரிசியது புத்திரர்க்கு மாகு
மழுங்குகின்ற வாயுவிற்கு மாகு—மொழுங்காய்
நிலைத்தபத்தி யத்திற்கு நீட்டலா மெய்க்குப்
பலத்தைக் கொடாததனைப் பார்.

குணம்:—(இ-ள்.) புழுங்கலரிசி குழந்தைகள், வருந்துகின்ற வாதரோகியர், அரும்பத்திய முள்ளவர் இவர்களுக்கு உதவும். ஆனால் உடலுக்கு உறுதியில்லை.

உபயோகிக்கும் முறை:—இதனை மாவாக்கிப் பலகாரபட்சணங்களாக உபயோகப்படுத்தச் சரீரத்திற்கு விரோதம் செய்யாமல் எளிதில் ஜீரணமாகும். பத்தியத்தில் இருக்கின்றவர்களுக்கு இதைத் தின்பண்டங்களாகச் செய்து கொடுப்பது நன்று. நெல்லை ஒரு முறை வேகப்போட்டு உலர்த்தி இடித்து அரிசியாக எடுத்தபடியால் இதிலுள்ள சில அம்சங்கள் குறைவுபட்டக் காரணத்தால் சரீரத்திற்குப் போதிய பலம் கொடுப்பதற்கில்லை யெனக் கூறியிருக்கின்றனர்.

புழுங்கலரிசி அன்னம்.
(Boiled Rice).

தென்புவியி லுளுஞ் செழித்துவள ருஞ்சாலி
வன்பு புழுங்கல் வடிசாத—முன்புணவே
வாயுவிலை யத்தால் வலியும்வன் னோயுமிலை
நோயுடையார்க் காகு நுவல்.

குணம்:—(இ-ள்.) புழுங்கலரிசி அன்னத்தைப் புசிக்கில் வாத கோபமும், வலிய ரோகங்களும் இல்லை. இது நோயாளருக்குதவும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த அன்னத்தை உண்ண எல்லாப் பருவத்தினர்க்கும் எளிதில் ஜீரணமாகும். இதுவே பத்தியத்திற்கு அடுத்த உணவாகப் பெரியார் கூறியிருக்கின்றனர்.

புளிச்சக்காய்.
(Averrhoea Bilimbi).

பித்த முடன்மயக்கம் பேச்சடங்கா வெட்டையறும்
மெத்தருசி நாவிளக்கும் மேதினியில்—சத்துவமாம்
சீறுங் கபக்கட்டுச் சிக்குண்டே நெஞ்சுறைதல்
கூறும் புளிச்சக்காய்க் கு.

குணம்:—(இ-ள்.) புளிச்சக்காய்க்குப் பித்தமயக்கமும் அன்னத் துவேஷமும் விலகும். ஆனால் இது கபத்தை உற்பத்தி செய்யும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைக் குழம்புகளில் கூட்டிப் பாகப் படுத்தி உண்பதுண்டு. இது நாவிற்கு ருசியாக இருக்கும். இதை இரண்டிரண்டு துண்டுகளாக நறுக்கி எலுமிச்சம் பழத்துடன் கூட்டி ஊறுகாயாகப் போடுவதுண்டு. இதை மர உரலில் போட்டுப் பூண் இல்லாத உலக்கையால் இடித்துப் பிழிந்தெடுத்த அப்பட்டமான $\frac{1}{4}$ படி சாற்றில் சமனெடை சலம் கூட்டி அதில் 30 பலம் வெள்ளைச் சர்க்கரையைப் போட்டுச் சர்பத் பதமாகக் காய்ச்சி வேளைக்கு $\frac{1}{2}$ தோலா வீதம் அந்தி சந்தி சாப்பிடத் தேகம் குளிர்ச்சியாகும். மூலம், வெட்டை முதலிய ரோகங்கள் சாந்தப்படும். இது கபதேகிகட்கு ஆகாது.

புளிநரளைக் கிழங்கு.

(Vitis Setosa--Root).

புளிநரளை யின்கிழங்கோ பொன்போலச் செம்பைத்
தெளிவாகச் சுத்தியது செய்யும்—வெளியான
மூல முளையறுக்கு முந்துசுவைக் கேதுவுமாங்
கோல மடமயிலே கூறு.

குணம்:—(இ-ள்.) புளி நரளைக் கிழங்கு செம்பைத் தங்கம் போற் புனிதமாக்கும், வெளி மூலத்தைப் போக்கும், உணவிற் சுவையைத் தரும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் சிறு நரளையென்றும், பெரு நரளையென்றும் இரண்டு வகைகள் உண்டு. அவற்றுள் பெரு நரளைஇலை தடிப்பாகவும், பெரிதாகவும் இருக்கும். இதன் கிழங்கும், இலையும் பெரும்பாலும் அவிழ்தங்களில் சேர்க்கப்படுகின்றன. இதன் இலையைப் பாகப்படிக் கியாழமிட்டுக் கொடுக்க வயிற்றுவலி, குன்மம், ஸ்திரீகளுக்குண்டான ரத்த குன்மம் முதலியவைகள் குணமாகும்.

இந்தக் கிழங்கை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து சமனெடை சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்குத் திரிகடிக் பிரமாணம் அந்தி சந்தி 20 நாள் கொடுக்கக் கரப்பான், அழுபுண், முளைமூலம் முதலியவைகள் குணமாகும்.

இதன் சமூலத்தை யரைத்துக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டச் சீழ் பிடித்திருப்பின் விரைவில் உடைத்துக்கொள்ளும். சீழ் பிடிக்காமல் இரத்தங் கெடுதலடைந்திருப்பின் துர்நீர் வெளியாகி கட்டி கரைந்துவிடும்.

இதனுடன் இதர சரக்குகளைக் கூட்டி மூலரோகத்திற்கு உரித்தான சூரணங்களும் லேகியங்களும் செய்வதுண்டு.

புளியிலை.

(Tamarindus Indica—Leaves).

அழுபுண்ணை நீக்கு மடற்சோபை மாற்று
மெழுபாண்டு வைப்போக்கு மிப்பான்—முழுது
மளியச்சி வந்தகண்ணோ யாற்றுங் கனலாம்
புளியிலையை நன்ருய்ப் புகல்.

குணம்:—(இ-ள்.) வெப்பமுள்ள புளியிலை அளிந்த விரணம், சோபாரோகம், பாண்டுரோகம், சிவந்த கண்ணோவு இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதனை அரைத்து ஆருத ரணங்களின்மீது தடவிச் சீலை சுற்றிக் கட்டிவர ஆறும். வேப்பங்கொழுந்தும் புளியங்கொழுந்தும் சமனெடையாக இடித்துக் காரமில்லாத சட்டியில் போட்டு இதற்கு மூன்று எடை சலம் விட்டு அரைப்பாகம் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிச் சுத்தமாகக் கஞ்சியில்லாமல் கசக்கிக் காயப்போட்ட வெள்ளைத்துணியை 2-3 தரம் நனைத்து நனைத்துக் காயப்போட்டுத் திரியாகத் திரட்டி, ஒரு அகலில் போட்டு ஆவின் நெய் விட்டு எரித்து, அதிலிருந்து வரும் புகையை, ஊமத்தம் இலைச்சாறு பூசி உலரவைத்து இருக்கும் ஒரு சட்டியைக்கொண்டு பிடிக்கவும். அப்பால் முன் மிகுதி பெற்றுள்ள கியாழத்தில் திப்பிலி, கடுக்காய், நெல்லிவற்றல் முதலியவற்றைச் சமனெடையாகச் சிறிது இடித்து அரைத்துப் போட்டுக் கலக்கி, முன்போல் சுத்தமான வெள்ளைச் சீலையில் நனைத்து நனைத்துக் காயபோட்டுத் திரிபோல் திரட்டி ஆவின் நெய்யிலிட்டுத் தீபம்போல் எரித்து மை வாங்கவும். இந்த இரண்டையும் ஆவின் வெண்ணெயில் மத்தித்துக் கண்களில் தீட்டி வர அமரம், கண்வலி குணமாகும்.

மேற்படிக் கியாழத்தைக்கொண்டு விரணங்களை அலம்பி வர ஆறும். இந்த இலையைச் சிறிது சலம் விட்டு வேக வைத்துக் கணுச் சூலையுண்டான வீக்கத்திற்கு வைத்துக் கட்டக் குணமாகும். புளியம் இலையும், புங்கம் இலையும் ஜலத்தில் போட்டுக் காய்ச்சி ஸ்நானம்செய்யச் சேங்கொட்டையினுலுண்டான உபத்திரவம் நீங்கும்.

புளியங்காய்.

(Tamarindus Indica—Raw fruit).

சோபமோடு பித்தந் தொலைக்கு முரிசைதருங்
கோபமுற வாயுவையே கொண்டாடுந்—தாபக்
கருப்பமட வார்க்குக் கனவிருப்ப முள்ளே
பருப்பையுருப் பைம்புளியங் காய்.

குணம்:—(இ-ள்.) ருசியைக் கொடுக்கின்ற கொட்டை முதிராத புளியம்பிஞ்சு சோருதலையும், பித்த கோபத்தையும் நீக்குவதுந் தவிர வாததோஷத்தையு முண்டாக்கும். இது கருப்பஸ்திரீகளுக்கு விருப்பமாம்.

உபயோகிக்கும் முறை:—இதன் இளங்காயுடன் பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லிக்கீரை, உப்பு இவைகளைத் திட்டமாக வைத்து அரைத்துத் தாளித்துத் துவையலாக அன்னத்துடன் கூட்டிச் சாப்பிட நாவிற்கு ருசியாக இருக்கும். இது பித்தத்தைத் தணிக்கும், தீபனத்தை யுண்டாக்கும், கருப்பஸ்திரீகளுக்கு அதிக விருப்பத்தைக் கொடுக்கும், ஆனல் சிறிது வாயுவைச் செய்யும்.

இதன் முதிர்ந்த காய் கபதேகிகட்குச் சயித்தியம், தலைவலி, சுரம் முதலியவற்றை யுண்டாக்கும்.

புளியங்கொட்டை.

(Tamarindus Indica—Seeds).

சுக்கில மேகமனற் றுன்னுமதி சாரமோடு
மிக்கிரண நீர்க்கடுப்பு வெட்டையறுந்—தொக்குடுவ
ருற்றபுளி வித்திற் குறுகுணத்தை மேன்மேலு
நற்றரையுண் மாதே நவில்.

குணம்:—(இ-ள்.) தோலில் துவர்ப்புள்ள புளியங்கொட்டைக்குச் சுக்கில மேகம், பித்தாதிசாரம், அதிவிரணம், மூத்திரக் கடுப்பு, வெள்ளை இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மூர்த்திரவர்த்தனகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சிறிது வறுத்து இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா எடை சர்க்கரை கூட்டிக் கொடுக்கச் சீதபேதி நிற்கும். இதை வேகவைத்து அரைத்து ஒரு கரண்டியில் போட்டுக் களிபோல் கிளறிக் கட்டிகளுக்குப் போட விரைவில் பழுத்து உடையும். இதன் சிவந்தமேற்றோலைச் சேகரித்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு $\frac{1}{4}$ விராகனெடை சூரணத்துடன் $\frac{3}{4}$ விராகனெடை சீரகம் கூட்டிச் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படித் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க இரத்தமூலம், சீதபேதி, மூத்திரக்கடுப்பு, சுக்கில நட்டம் இவைகள் போம்.

புளியம்பட்டை.

(Tamarindus Indica—Bark).

புளிய மரத்தின் புரணிதனைக் கண்டா
லுளமாந்தை குன்மவலி யோடும்—வளியார்ந்த
பேதிகட் டுஞ்சுரம்போம் பித்தமுறுந் தீபனமா
மோத வசீரணமே துன்.

குணம்:—(இ-ள்.) புளியமரப்பட்டையினால் உளமாந்தை, குன்மநோய், வாதாதிசாரம், சுரம், அசீரணம் இவைகள் நீங்கும்; பித்தமும் பசியும் விருத்தியாம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை நறுக்கித் தூள் செய்து சரியெடை கறியுப்புக் கூட்டிச் சட்டியிலிட்டு நன்றாய் வெளுக்கிற பரியந்தம் வறுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 1-1$\frac{1}{2}$ குன்றி எடை தினம் 2 வேளை சீரகக் கியாழத்தில் போட்டுக்கொடுக்க வயிற்றுவலி, அஜீரணம், குன்மம் இவைகள் போம். இதன் பட்டையைச் சுட்டுச் சாம்பலாக்கி வெந்நீரில் போட்டுக் கலக்கி வாய் கொப்புளிக்க வாய்ரணம், தொண்டைப்புண் ஆறும்.

புளியம்பழம்.

(Tamarindus Indica—Fruit).

புத்தியு மந்தமாகும் பொருமியே யுடலமுதும்
பத்தியந் தவறுஞ்சந்நி பாதமாஞ் சுரங்கள்வீறுஞ்
சர்த்தியும் பித்துந்தீரும் தனுவெலாம் வாதமேறு
மத்திபந் தாதுபுட்டி வருந்திரை நரைபுளிக்கே.

குணம்:—(இ-ள்.) அபத்தியமான புளியம் பழத்தினுல் மந்த புத்தி, தேகந்தூலித்தல், சந்நிபாத சுரங்கள், அங்கசலனவாதம், சுக்கிலதாது மத்திமம், திரை நரை இவைகள் உண்டாம்; வாந்தியும் பித்த ரோகமும் நிவர்த்தியாம் என்க.

செய்கை:—சீதளகாரி, உதரவாதஹரகாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—ஊமத்தங்காய், சாராயம் முதலியவற்ருலுண்டான பித்த வெறிக்குப் புளியைக்கரைத்து வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்கக் குணமாகும். இரண்டரை ரூபாய் எடை புளியுடன் சமனெடை பேரீச்சம் பழம் கூட்டிக் கால்படி பசுவின் பால் விட்டுக் காய்ச்சிப் பிசைந்துவடிகட்டி அதில் சிறிது இலவங்கம், ஏலக்காய், இரண்டு குன்றி எடை பச்சைக் கற்பூரம் கூட்டிக்கொடுக்கப் பேதியாகும். இது பித்த சுரம், சூரிய வெப்பத்தால் நேர்ந்த மயக்கம், மூர்ச்சை இவைகட்கு நல்லது. புளியை அரைத்து வீக்க முற்று நோகும் இடங்களில் வைத்துக்கட்ட நோய் நீங்கும். புளியை ஊறப்போட்டுப் பிழிந்தெடுத்த சலத்தில் வாய் கொப்புளிக்க வாய் ரணம், தொண்டைப்புண் ஆறும். இங்குக் கூறப்பட்ட குணங்களெல்லாம் புதிய புளிக்கே யென்றுணர்க.

புளியம்பூ.

(Tamarindus Indica—Flower).

பித்தத் துடனே பெருத்தவ ரோசகம்போ
மெத்தவெழும் வாந்தி மிதத்துணிற்கு—மெத்தக்
கனத்துப்பூ ரித்தமுலைக் காரிகையே வெற்பார்
வனத்துப் புளியம்பூ வால்.

குணம்:—(இ-ள்.) மலையைச் சார்ந்த காட்டில் முளைத்த புளியம்பூவினுல் பித்த கோபமும், அருசியும், அதிகரித்த வமனமும் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—வெந்து மலர்ந்த துவரம்பருப்பில் புளியம் பூவையாவது அல்லது புளியம் துளிர் இலையையாவது போட்டு அதனுடன் மிளகாய், உப்பு, வெங்காயம் கூட்டி ஒரு ஆவி வெந்தவுடன் கடைந்து தாளித்து, அன்னத்துடன் கூட்டி நெய் சேர்த்துண்ண நாவிற்கு ருசியாக இருக்கும். இது சரீரத்திற்குக் குளிர்ச்சிசெய்யும். பித்த மயக்கம், அரோசிகம், குமட்டல் முதலியவற்றை நீக்கும்.

புளியாரைக்கீரை.

(Oxalis Corniculata).

பித்த மயக்கமறும் பேருலகின் மானிடர்க்கு
நித்தமருள் வாதகப நேருமோ—மெத்தெனவே
மூலக் கிராணிவிடு மூல வுதிரமறுங்
கோலப் புளியாரைக் கு.

குணம்:—(இ-ள்.) புளியாரைக் கீரைக்குப் பித்த மயக்கம், தீமையை விளைக்கின்ற வாதகபசிரம், மூலவாயு, கிரகணி, ரத்த மூலம் இவைகள் போம் என்க.

செய்கை:—சீதளகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைப் பருப்புடன் கூட்டிக் கடைந்தாவது அல்லது ஆட்டு இறைச்சியோடு கூட்டிக் குழம்பாகப் பாகப்படுத்தியாவது உண்ண மூலவாயு, பித்த உபரி, அரோசிகம், மயக்கம் முதலியவைகள் நீங்கும்.

புனற்றண்டு.

(Mimosa Spinosiliqua—Big variety).

கபவமன நாடிக் கமலங் கரப்ப
னிபமறுக னத்தொலியு நீங்காச்—சுபமா
ரனற்றண்டைக் காட்டா வறற்சுரமு மேகும்
புனற்றண்டைச் சிந்திக்கும் போழ்து.

(இதுவுமது)

கட்டுவா தங்கொடிய கான்மேகங் கீல்கடோறு
முட்டுவா தஞ்சூலை மூடிரணம்—விட்டுவிடுஞ்
சொல்லவொண்ணு வின்ப சுகமளிக்கு மாரமிர்தே
நல்ல புனற்றண்டி னுல்.

குணம்:—(இ-ள்.) புனற்றண்டுக்குச் சிலேஷ்ம வாந்தி, நாசியால் வீழ்கின்ற சலம், கரப்பான், காரணமின்றி அடைப்பட்ட கண்டத்தொனி, பசியின் வரம்பைக் காட்டாத சீத சுரம், கட்டு வாதம், வாதப்பிரமேகம், சந்திகவாதம், சூலைநோய், கிரந்தி இவை போம்.

உபயோகிக்கும் முறை:—விசேடமாக இதனை வாதரோகத்தைக் கண்டிக்கும்பொருட்டுச் சுரசம், கியாழம், பற்று முதலிய அவிழ்தங்களில் கூட்டுவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

புனற்றண்டு லேபனம்.

1 வீசை புனற்றண்டைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பெரிய மட்சாலில் போட்டு, 16 படி சலம் விட்டு ஒரு இரவெல்லாம் ஊறவைத்து, மறுநாள் காலையில் அடுப்பிலிட்டுச் சிறு தீயாக எரித்து, 2 படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சிச் சூடு ஆறிய பின் பிசைந்து வடிகட்டி வைத்துக்கொள்க. அப்பால் முன் காய்ச்சிய மட்சாலை சுத்தி செய்தாவது அல்லது வேறு சுத்தமான குடி நீர்ப் பாண்டத்திலாவது முன் சித்தப்படுத்தி வைத்துள்ள கியாழத்தை விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துக் குழம்பு பதம் வரும் சமயம் வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்துக. வேண்டும்போது ஒரு இரும்புக் கரண்டியை அடுப்பில் வைத்துச் சூடாக்கி அதனில் முன் சித்தப்படுத்தி வைத்துள்ள குழம்பில் சிறிது விட்டு ஒரு சுப் பலால் கலக்கிக்கொடுத்துத் தாளக்கூடிய சூட்டில் நோய் உள்ள பாகங்களில் பற்றுப்போட இரண்டு மூன்று வேளையில் குணமாகும். இதனை விசேடமாகக் கணுக்களில் உண்டான சூலைப்பிடிப்பு முதலிய ரோகங்களுக்கும், முழங்காலில் உண்டாகும் நரித்தலைவாதத்திற்கும் உபயோகப்படுத்துவதுண்டு. இதுவுமல்லாமல் இந்தக் குழம்பை ஒரு காசு அகலம் உள்ளங் கையில் பரவ விட்டுச் சிறிது கற்கண்டு சூரணம்கூட்டிக் காலை, மாலை தினம் இருவேளை கொடுப்பதுண்டு. அத்தருணம் கடும் பத்தியமாக இருத்தல்வேண்டும். அடுத்த மூன்று நாள் வறுத்த உப்பு, சுட்ட புளி முதலியவைகளைச் சேர்த்துக்கொண்டு இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும். இதற்கு மேல் ஏழாவது நாள் ஓமத்தைப் பால் விட்டு அரைத்துச் சிரசுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். அதற்கடுத்தநாள் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுவின் நெய் இம் மூன்றையும் கூட்டி ஆரோக்கிய ஸ்நானம் செய்து பத்தியத்தை முறித்து ஆகாரத்தில் எல்லாவற்றையும் கூட்டிக்கொள்க.

புனற்றண்டு சுரசம்.

புனற்றண்டு பலம் 1, பிரப்பங்கிழங்கு பலம் 1; இவை இரண்டையும் ஒரு கல் உரலில் போட்டு அரை ஆழாக்குப் பசுவின் பாலைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டிப் பூணில்லாத உலக்கையால் இடித்துப் பிழிந்து வடிகட்டித் தினம் 1 வேளை காலை நேரத்தில் மூன்று நாள் கொடுத்து வருக. அத் தருணம் மலச்சிக்கல் இருப்பின் விரேசனமாகக்கூடிய ஏதேனும் ஒரு மாத்திரையைக் கூட்

டிக் கொடுக்கவும். இதனல் சர்வ வாதரோகம், கணுச்சூலை முத லியவைகள் குணமாகும். இதற்குப் பத்தியம் முற்கூறியபடி கடும் பத்தியமாக இருத்தல் அவசியமானது.

குறிப்பு:—சிலர் புனற்றண்டை இண்டு எனக் கூறி இருக்கின்றனர். இது என்னுடைய அபிப்பிராயத்திற்குச் சரியாகத் தோற்றவில்லை. இண்டு என்னும் கொடியானது பச்சை வர்ணமாகவும் கனத்தில் சிறுத் தும் இருக்கும். இது கபரோகத்திற்குச் சிறந்தது. புனற்றண்டு வெளுப் பாகவும் பருமனுகவும் இருக்கும். இது வாதரோகத்திற்குச் சிறந்தது. இதற்கு முறையே சிற்றிண்டு பேரிண்டு எனக் கூறுவர். இவை இரண் டிற்கும் குணபேதம் உண்டு என்பதைப் பண்டிதர்கள் அறிவார்களாக.

புன்னைக்கொட்டை.

(Calophyllum Apetalum—Seeds).

கன்ன விரணங் கடுஞ்சந்நி பாதமுட
னின்ன லுறுவாதை யேகுங்காண்—புன்னைக்கோட்
டைக்கம்மட் டோவென்னி லார்சூதி காவாய்வு
மெய்க்கம்மிட் டாழ்வாய்வு மில்.

குணம்:—(இ-ள்.) புன்னைக்கொட்டைக்குச் செவிப்புண், சந்நி, தநுர்வாதம், சூதகவாயு, உடம்பில் நீரை ஏற்றி அதில் அழுந்திய சீதளவாயு இவை நீங்கும்.

செய்கை:—வித்துக்கு: ஷோணகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதை விசேஷமாக உள்ளுக்குக் கொடுக்கின்ற பிரயோகங்கள் கிடையா. இந்தக் கொட்டையின் பருப்பைப் பழச்சாறு விட்டு உரைத்துச் செவிப் புண்ணுக்குப் போட ஆறும். அல்லது இதனுடைய பருப்பு, முந்திரிப்பருப்பு, பொரித்த வெங்காரம், இரேவல்சின்னிப்பால் இவைகளைக் கல்வத்திலிட்டு, வேப்பெண்ணெய் விட்டு அரைத்துச் சுளுக்கு, வீக்கம், சர்வாங்க நோய், பிடிப்பு இவைகட்குப் போட்டுத் தேய்க்கக் குணமாகும். இன்னும் செவி கனத்துவரும் புண், விரல்களின் நகக் கண்களைச் சுற்றிக் கனத்துவரும் நமைச்சல், புண் இவை களுக்குப் போட ஆறும்.

புன்னைநெய்.

(Calophyllum Apetalum—Oil).

புன்னையிலுண் டாநெய்யாற் பொங்குசந்நி பாதமுதன்
மன்னியலைக் குங்கொடிய வாயுவுமுன்—பின்னிசிவும்
பொல்லா வலியினமும் புண்கிருமி யுந்தொலையு
மல்லார் குழலே யறி.

குணம்:—(இ-ள்.) புன்னை நெய்யால் சந்நிபாதம், மகாவாத ரோகம், தநுர்வாதம், ஐவகை வலி, விரணம், கிருமி ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, அங்காகர்ஷண்நாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த எண்ணெயைச் சொறி, சிரங்கு, குட்டரணம் முதலியவற்றிற்குப் பூசி வர ஆறும். மகாவாத ரோகங்கட்கு மேற்பூசிப் பிடிக்கக் குணமாகும். இந்த எண்ணெயில் வேளைக்கு 10-15 துளி வீதம் சிறிது சர்க்கரையுடன் கூட்டித் தினம் 2 வேளை கொடுத்துவர வெள்ளை, வெட்டை, மூத்திரதாரை விரணங்கள் முதலியவை போம்.

புன்னைப்பூ.

(Calophyllum Apetalum—Flower).

புன்னைப்பூ பித்தமென்பார் போராடு வன்மேகம்
வின்னப் படாச்சித்த விப்பிரமம்—பின்னுங்
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகற்று
முரப்பாக வேமயக்கு முன்.

குணம்:-(இ-ள்.) புன்னைப்பூ நீங்கா மேகம், சித்தவிப்பிரமசந்நி, கரப்பான், புடை, விரணம் இவைகளை நீக்கும். மயக்க முண்டாக்கும். பித்தம் என்பார்.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தின் மணமே தலை நோய், பித்தமயக்கம் முதலியவற்றை யுண்டாக்கும். இது உஷ்ண வீரியமான சரக்கு. இதைவிசேஷமாக ஔஷத பாகங்களில் கூட்டுவதில்லை.

பூதகரப்பான்பட்டை.

(Sterculia Foetida).

சூதத்தின் வீறுஞ் சொறிகிரந்தி சீழ்மேகம்
வாதப் பிடிப்போடு மாந்தமிவை—தீதிழைக்கிற்
போக்கிவிடும் பூதலத்தில் பூதக் கரப்பானின்
வீக்கமுறுந் தோலால் விளம்பு.

குணம்:—(இ-ள்.) பூதகரப்பான் என்னும் மரத்தினுடைய தடித்த பட்டை ரசவேகம், சொறி, கிரந்தி, வெள்ளை, கைகால் குடைச்சல், மாந்தம் முதலியவைகளைப் போக்கும்.

(இதுவுமது)

கட்டு மலம்போக்கும் காணச் சிறுநீரை
விட்டுவெளி யாக்கும் வியர்வையுறத்—தட்டுங்கேள்
வாட்டமுறும் புண்சிரங்கு வன்கரப்பான் தானகலும்
காட்டுபீ ளுறிக்குக் காண்.

(இ-ள்.) பீளுறி என்ற பூதகரப்பான், மலத்தை இளக லாகப் போகச் செய்யும், சிறு நீரைப் பெருக்கும், வியர்வையை யுண்டாக்கும், சொறி சிரங்குகளை ஆற்றும் என்க.

உபயோகிக்கும் முறை:—அரைப் பலம் பூதகரப்பான் என்னும் பீளுறிமரப்பட்டையைப் பஞ்சுபோல் தட்டி ஒரு மட்கலத்தில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை சாப்பிட்டு வரச் சிறு நீர்த் தாராளமாய்ப் போகும். மலம் இளகலாக வெளியாகும். தோல் சம்பந்தமான பல பிணிகள் குணமாகும். இந்தப் பட்டையை நன்ருய் மெழுகுபோல் அரைத்துச் சொறி, சிரங்கு, ஆருத ரணம் இவைகளுக்கு மேல்பூச ஆறும்.

இந்தப் பட்டையை நன்ருய் இடித்துச் சூரணம் செய்து வேளைக்கு 10 குன்றி எடை சூரணத்தில், வாய் பிடிக்கும்படியான எத்தகைய ரசமருந்துகளையும் சிறிய அளவாகச் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க வாய் பிடிக்காது. ரசத்திற்குரிய நற்குணங் கள் யாவும் உண்டாகும்.

இந்தப் பட்டையை முலைப்பாலில் உரைத்துக் குழந்தைகளுக் குக் கொடுக்க மாந்தம், இசிவு முதலியவைகள் குணமாகும்.

இதனை இடித்துக் கியாழமிட்டுச் சத்து இறங்கியபின் வடிகட் டிக் குழம்புபதமாகக் காய்ச்சிக் கீல்களின் வீக்கம் பிடிப்பு இவை களுக்குத் தடவக் குணமாகும்.

இந்தப் பட்டையுடன் செங்கத்தாரிப்பட்டை கூட்டி மெழுகுபோல் அரைத்துச் சொறி, சிரங்கு முதலியவற்றிற்குப் பூசிச் சிறிதுநேரம் உலரவிட்டு ஸ்நானம்செய்ய விரைவில் ஆறும்.

இந்தப் பட்டையைப் பெரும்பாலும் தைலங்களில் கூட்டுவ துண்டு. எங்ஙனமெனில்—

வல்லாரை எண்ணெய்.

பூதகரப்பான்பட்டை பலம் 5, வெந்தயம் பலம் 5, வாய் விளங்கம் பலம் 5, இவைகளை இடித்துச் சூரணம் செய்து

வைத்துக்கொள்க. அப்பால் வல்லாரை இலைச்சாறு படி ½, பொன்னாங்காணிச்சாறு படி ½, மணித்தக்காளிச் சாறு படி ½, சிறு செறுப்படைச்சாறு படி ½, கொட்டைக்கரந்தைச்சாறு படி ½, சோற்றுக் கற்றாழை மடற்சாறு படி ½, வெள்ளை வெங்காயச்சாறு படி ½, எலுமிச்சம்பழச்சாறு படி ½ பசுவின்பால் படி ½, இளநீர்படி ½; இவைகளை எல்லாம் சூரணம் உள்பட ஒரு தைல பாண்டத்தில் விட்டுக் கலக்கி 2 படி சிற்றாமணக்கெண்ணெய் கூட்டி அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடித்துக்கொள்க. வேண்டும்போது இந்த எண்ணெயைக் கோடை காலத்தில் வேளைக்கு ¾-1 அவுன்ஸ் வீதம் 1 வேளை 3 நாள் கொடுக்கத் தேகத்திலுள்ள கொதிப்பு அடங்கும். கரப்பான், சொறி, சிரங்கு, மேகக்காரகம் என்று சொல்லப்பட்ட கை கால் விரல்களில் காணுகின்ற வெடிப்பு, அரிப்பு, நீர்க்கசிவு, சூலை, பிடிப்பு முதலியவைகள் குணமாகும்.

இன்னும் இது சம்பந்தமான எண்ணெய்களைச் செங்கத்தாரி, பூவரசு சமூலம் இவற்றின் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

பூமாதுளம்பூ.

(Punica Granatum—Flower, male variety).

தோற்றும்பூ மாதுளையின் துய்யமலர் கொண்டார்க்குச்
சீற்றமுறும் பேதியுடன் சீதமறும்—சாற்றக்கேள்
மூலரத்த வாந்தியுடன் முட்டி விழும்வெட்டை
சால வொழியுமெனச் சாற்று.

குணம்:—(இ-ள்.) பூமாதுளம்பூவால் சீதபேதி, ரத்தமூலம், ரத்தவாந்தி, வெள்ளை முதலியவைகள் குணமாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த புஷ்பத்தை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு ½ விராகனெடை தயிரில் போட்டுக் கலக்கித் தினம் 2 வேளை கொடுத்துவரச் சீதபேதி, ரத்தபேதி முதலியவற்றை நீக்கும். சிறு குடலுக்குப் பலத்தைக் கொடுக்கும். இதனை இதர சரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவதுண்டு. அவற்றுள் சில முறைகளாவன—

பூமாதுளைச் சூரணம்.

பூமாதுளம்பூ பலம் 1, மூங்கிலுப்பு பலம் ½, சீந்தில் சர்க்கரை பலம் ½, ஏலக்காய் அரிசி பலம் ½, சீனாக் கற்கண்டு பலம் ½;

இவைகளை எல்லாம் நன்றாய் இடித்துச் சூரணம் செய்து, கல்வத்தி லிட்டு ஒரு நாள் முழுதும் அரைத்து மிருதுவான பதத்தில் சீசா வில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது இச்சூரணத்தை வேளைக் குக் கால் ரூபாய் எடை காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுக் கொடுக்க உட்காய்ச்சல், ரத்தவாந்தி, உஷ்ணபேதி, வறட்டு இரு மல், இரத்தக் கழிச்சல் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

வேறுமுறை.

பூமாதுளம்பூவையும், பொன் மேனியாக வறுத்த சீரகத்தை யும் சமனெடையாகக் கலந்து இடித்துச் சூரணம் செய்து வைத் துக்கொள்க. இந்தச் சூரணத்தை வேளைக்குக் கால் அல்லது காலே அரைக்கால் ரூபாய் எடை, சமன் சர்க்கரை கூட்டிக் கொடுத்துவர உஷ்ணபேதி, மூலவாயு, ரத்தபேதி முதலியவற்றைக் குணப்படுத் தும். இதனுடன் நாகபற்பம், வெள்வங்க சிலாசத்து சம்பந்த மான பற்பம் கூட்டிக் கொடுத்தல் சாலச் சிறந்தது.

பூமிசருக்கரைக்கிழங்கு.

(Merma Arenaria).

மேகமறு முள்ளுருக்கு வெட்டை யனற்றணியும்
போகுமே மூலம் புகலக்கேள்—பாகுமொழிப்
பொன்னனையாய் பூமிச் சருக்கரைக்கி ழங்குக்கு
வன்ன வுடல்பருக்கும் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) பூமிசருக்கரைக் கிழங்குக்குப் பிரமேகம், அதிசுஷ்கம், வெள்ளை வீழல், சுரம், மூலம் ஆகிய இவைகள் போம். தேகம் பூரிக்கும் என்க.

செய்கை:—பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை விசேஷமாகத் தாதுவிருத்திக் குரிய லேகியங்களில் சேர்ப்பதுண்டு. இதன் தனிச் சூரணத்தை வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தேனில் கொடுக்க மூர்ச்சை, நாட்பட்ட இருமல், உதிரச்சிக்கல், கீல்வாதம், காமாலை, வயிற்று வலி, சீதளத்தினால் ஏற்பட்ட நரம்புகளின் சோர்வு முதலியவைகள் நீங்கும். இதனை வெந்நீர் விட்டு அரைத்துப் பற்றுப்போடக் கை கால்குடைச்சல் நீங்கும். இதைச் சலம் விட்டரைத்து நல்லெண் ணெயில் கலக்கிக் காய்ச்சி வடித்துப் பக்கவாதம், சூலை முதலியவற் றிற்குப் பூசிப் பிடிக்கக் குணமாகும். இதனைக் காதில் விடக் காது

வலி நீங்கும். இந்தக் கிழங்கைக் காடியில் உரைத்து உதிருகின்ற ரோமங்களுக்குத் தடவிவர உதிராமல் வேரூன்றச் செய்யும்.

பூவரசு சமூலம்.

(Thespesia Populnea).

நூறுண்டு சென்றதொரு நுண்பூ வரசம்வேர்
தூறுண்ட குஷ்டைத்தோ லைக்குங்காண்—வீறிப்
பழுத்த விலைவிதைப்பூ பட்டையிவை கண்டாற்
புழுத்தபுண்வி ரேசனமும் போம்.

(இதுவுமது)

குட்டங் கடிசூலை கொல்லும் விஷபாகந்
துட்டம கோதரமுஞ் சோபையொடு—கிட்டிமெய்யிற்
றுவுகரப் பான்கிரந்தி தண்மேகம் போக்கிவிடும்
பூவரசங் காய்பட்டை பூ.

குணம்:—(இ-ள்.) நூறு வருஷத்திய பூவரசம்வேர் நாட்பட்ட குஷ்டத்தை நீக்கும். பழுப்பிலை, விதை, பூ, பட்டை, காய் இவைகள் கிருமிவிரணம், பேதி, பெருவியாதி, காணுக்கடி, குத்தல், விஷபாகம், பெறுவயிறுவீக்கம், கரப்பான், சிரங்கு, சலப்பிரமேகம் இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, உற்சாககாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, உக்கிரரோகசமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் காயிலிருந்து எடுக்கும் மஞ்சள் நிறமான பாலை ஊறல் உள்ள படைகள், பூச்சிக்கடி, தேமல், சொறி, கிரந்தி இவைகட்குமேல்தடவிவர ஆறும். இதன் இலையைச் சலம்விட்டு அரைத்துக் களிபோல் கிளறிக் கீல்களிலுண்டாகும் வீக்கம், நோய் இவைகட்குத் தழும்பத் தடவிவைக்கப் பாதை நீங்கும். ½-1 பலம் பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கடத்தில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சர்க்கரை கூட்டிக் கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி முதலியவைகள் போம். இந்தக் கியாழத்தை விட்டு ரணங்களை அலம்பிச் சுத்தம் செய்துகொண்டு வர விரைவில் ஆறும். இன்னும் இதன் காய், பட்டை இவைகளைக் கொண்டு சில அருமையான எண்ணெய்கள் காய்ச்சுவதுண்டு, இவற்றைச் சிகிச்சாரத்நதீபத்தில் கண்டுணர்க.

பூனைக்கண் குங்கிலியம்.

(Pistacia Lentiscus).

தந்தவலி துர்ப்பலமும் தாதுவின் நட்டமொடு
வந்ததொரு பேதி வகைகளுமே—கந்தமிகுந்
தேனைக் கவிழ்மலர்கோள் சேயிழையே யெந்நாளும்
பூனைக்கண் குங்கிலியாற் போம்.

குணம்:—(இ-ள்.) பூனைக்கண் குங்கிலியத்தால் பல்வலி, தேகதுர்ப்பலம், தாது நட்டம், பேதி இவைகள் போம் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, உற்சாககாரி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சலத்தில் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் குழந்தைகட்குக் கொடுக்கப் பேதி கட்டும். சொத்தைப் பல்லில் வைத்து அடைக்க வேதனையைத் தணிக்கும். அதிலுள்ள பூச்சிகளைக் கொன்று வெளியாக்கும். இதனை விசேஷமாக மகம்மதியர்கள் பற்பொடிகளில் கூட்டி உபயோகப் படுத்துவதுண்டு. இதனால் பல் சம்பந்தமான ரோகங்கள் போம். இதனைத் தூபமிடப் பரிமளமாக இருக்கும். இன்னும் இது தாதுவிருத்திக்குரிய பல லேகியங்களில் சேரும்.

பூனைக்காலிவித்து.

(Mucuna Pruriens—Seeds).

தழுதனைநாற் றத்தோடு சாரிரத்தப் போக்கும்
பழுதுபுரி கின்றகரப் பானு—மழுதேகுந்
தாலமிசை விந்துவுமாஞ் சாற்றுங் கரும்பூனைக்
காலி விதையினுற் காண்.

குணம்:—(இ-ள்.) கருமைநிறப் பூனைக்காலி விதையினால் கற்றுழைநாற்றமும், இரத்தக் கிரகணியும், கரப்பானும் நீங்கும், தாதுபுஷ்டி யுண்டாகும் என்க.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—பூனைக்காலிவித்தானது பார்வைக்கு அவரைக்கொட்டையைப்போல் இருக்கும். இந்த இனத்தில் கறுப்பு, வெளுப்பு என்னும் நிறபேதங்களுடைய கொட்டைகள் உண்டு. அவற்றுள் கறுப்பே மிகச் சிறந்தது.

இந்தக் கொட்டைகளைச் சிறிது பாலில் போட்டு வேகவைத்து, மேற்றோல் நீக்கிக் காயவைத்து, நன்றாய் இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 10 முதல் 20 குன்றியெடை சிறிது சர்க்கரை கூட்டிக் காய்ச்சின பசும்பாலில் போட்டுத் தினம் இரு வேளை சாப்பிட்டுக்கொண்டுவர ஸ்திரீகளுக்கு அதிக உஷ்ணத்தினால் காணுகின்ற வெள்ளையையும் ஆண்பிள்ளைகளுக்குக் காணுகின்ற விந்து நஷ்டம் என்று சொல்லும்படியான சொர்ப்பன ஸ்கலிதத்தையும் குணப்படுத்தும்.

இவ்வித்தின் சூரணத்தைப் பெரும்பாலும் தாது விருத்திக்குரிய லேகியங்களிலும் சூரணங்களிலும் கூட்டுவதுண்டு.

பெரியா நங்கையிலை.

(Polygala Glabra—Big variety).

பெரியாநங் கைத்தழைக்குப் பித்தமென்ப தேல்லாந்
தெரியாம லோடுமிது திண்ணம்—பிரியா
மலமறுக்கும் பஸ்மவகை வைப்பதற்கு மாகுஞ்
சிலைநுதலே நன்றாய்த் தெரி.

குணம்:—(இ-ள்.) பெரியாநங்கையிலைக்குப் பித்தரோகங்களும், மலபந்தமும் நீங்கும். இந்த மூலிகை பலவித பஸ்பங்கள் செய்வதற்கும் பயன்படும்.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை விசேஷமாக ஔஷத பாகங்களில் சேர்ப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் இத்துடன் சிறிது மிளகுகூட்டி அரைத்துக் கல்கமாகக் கொடுப்பதுண்டு. இதனால் பித்தம், மலபந்தம், சொறி, சிரங்கு, பூச்சிக்கடி முதலியவைகள்போம்.

பெருங்கட்டுக் கொடி.

(Cocculus Villosus—Big variety).

காட்டி லுறும்பெரிய கட்டுக் கொடியணங்கே
நாட்டிற் பெரும்பாடு நாவறட்சி—யோட்டிவிடும்
பித்தக்கை காலெரிச்சல் பேரோழியப் போக்கிவிடும்
சித்த மகிழ்ந்திடவே செய்.

குணம்:—(இ-ள்.) பெரிய கட்டுக்கொடிக்குப் பெரும்பாடு, நாவறட்சி, பித்தத்தினால் கைகால் எரிதல் முதலியவை நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக இதன் உபயோகம் சிறு கட்டுக்கொடியின் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

பெருங்காயம்.

(Ferula Asafoetida).

தந்தவேதந்த மூலத் தெழும்பிணி
சருவகாளம் விருச்சிகங் கீடமா
மந்தவாத முதாவர்த்த மல்குநோய்
மார்பணங் கட்டகுன்ம மகோதர
முந்துகெர்ப்பத்தின் வித்திரஞ் சூலைச்சூ
ருதிரப்பூச்சி சிலேஷ்மத் துறும்வலி
வந்தமெய்க்கடுப் போடிவை முற்றுமே
மாயுநாறுநற் காயங்கி டைக்கினே.

குணம்:—(இ-ள்.) மணமுள்ள பெருங்காயத்தினால் தந்தரோகம், தந்தமூலரோகம், சகல சர்ப்பவிஷம், தேள்விஷம், கிருமி, அசீரணம், வாதாதிக்கம், உதாவர்த்த வாதம், யோனிரோகம், இருத்வாயு, எண்வகைக் குன்மம், உதரரோகம், கருப்பவித்திரிதி, சூலை, ரத்தக்கிருமி, கபநோய், சூடைச்சல் இவைகள் கெடும் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, உற்சாககாரி, க்ஷோணகாரி, ருதுவர்த்தனகாரி, நாசிநீர்வர்த்தினி, கிருமிநாசினி, கபஹரகாரி, மலகாரி, உதரவாதஹரகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:— பொரித்த பெருங்காயத்தை வேளைக்கு 2-10 குன்றி எடை பனைவெல்லத்துடன் கூட்டிக் கொடுக்கலாம். இதனால் சந்நி, வாதரோகம், சிரசைப்பற்றிய சீதளம், ஸ்திரீகளுக்கு மாதவிலக்கத்திலுண்டான உதிரச்சிக்கல், கீல்வாதம், வெறிநாய்க்கடி, காக்கைவலி, தொண்டைக்கம்மல், அஜீர்ண பேதி, வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, குடலில் சேர்ந்துள்ள கிருமிகள் முதலிய நீங்கும். இதனைக் கோழிமுட்டை மஞ்சட்கருவோடு சேர்த்துண்ண வறட்டிருமல், பக்கசூலைபோகும். இதனுடன் வாலேந்திரபோளமும் மிளகும் கூட்டியுண்ண ஸ்திரீகளுக்குக் கட்டுப்பட்டுள்ள உதிரச்சிக்கலை வெளியாக்கும். இதனை நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் காதுக்குவிடக் காதுவலி நீங்கும். இன்

னும் இந்தப் பெருங்காயம் நரம்புகளின் ஒழுங்கீனத்தால் உண்டாகும் பல ரோகங்களையும் குணப்படுத்தும். ஸ்திரீகள் பிரசவித்தபின்னர் வேளைக்கு 3 குன்றி எடைவீதம் பனைவெல்லத்தில் வைத்துக் கால் மணி நேரத்திற்கு ஒரு முறையாகக் கொடுத்துக்கொண்டுவர நஞ்சு விரைவில் வெளியாகும். இதனை இதர சரக்குகளுடன் கூட்டிச் சில அவிழ்தங்கள் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

காய லேகியம்.

5 பலம் பெருங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு அகல பேசினில் போட்டு மூழ்க சலம் விட்டு ஊறவைத்துக் கரைத்து ஒரு பழகின மட்பாண்டத்தில் விட்டு, ஒருபடி சலம் கூட்டி அடுப்பிலேற்றி அரைக்கால்படியாகச் சுண்டக்காய்ச்சி வடி கட்டி, அதனில் சுத்தமான நான்கு பலம் பனைவெல்லத்தைப் போட்டுக் கரைத்துக் கடாயில் விட்டுப் பாகுபதம் வரக் காய்ச்சி, அதனில் சுக்கு, மிளகு, கடுகு, பூண்டு வகைக்குப் பலம் ஒன்றாகச் சூரணம் செய்து போட்டு லேகிய பதமாகக் கிளறி நெய்விட்டுப் பிசரி ஜாடியில் பத்திரப்படுத்துக. இதனில் வேளைக்கு 1 விராகனெடை வீதம் தினம் 2 வேளை சில தினம் கொடுத்துவரச் சூதக சம்பந்தமான பல பிணிகள் தீரும். இன்னும் இது ஸ்திரீகளுக்குக் காணும் மூர்ச்சா ரோகத்திற்குச் சிறந்தது.

பெருங்குமிழ மரம்.

(Gmelina Asiatica).

பெரியகுமி ழின்பேரைப் பேசின்மே கத்தி
னெரிவுசுக்கி லக்கடுப்பு மேகும்—பிரியாத
வல்ல வனற்சுரமும் வாதசுர முந்தணியும்
மெல்லெனமுத் தோஷம்போம் விள்.

குணம்:—(இ-ள்.) பெருங்குமிழ மரத்தினால் மதுமேக எரிச்சல், வெள்ளை வீழலிற் கடுத்தல், பித்தசுரம், வாதசுரம், திரிதோஷ கோபம் இவைகள் போம் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—பெருங்குமிழ் மூலத்தை அரைத்துச் சுண்டைக்காய் அளவு பசுவின் பாலில் கொள்ளச் சுக்கிலக் கடுப்பு, மேக எரிவு, பித்தசுரம், வாதசுரம் போம்.

பெருஞ்சின்னி.

(Acalypha Betulina—Big variety).

காணுக் கடியுமெதிர் கண்ட விஷக்கடியு
நாணு திருந்திடவு ஞாயமுண்டோ—தோணு
வருஞ்சின் மதலைமொழி மாதரசே கேளாய்
பெருஞ்சின்னி மூலியுண்ட பேர்க்கு.

குணம்:—(இ-ள்.) பெருஞ்சின்னி யிலைக்குக் காணுக்கடி விஷமும், பார்க்கும்படிக்குக் கடித்த பற்பல செந்து விஷங்களும் நீங்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—1-1½ விராகனெடை சுத்தி செய்த கருஞ்சிவதை வேரைப் பால்விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுத்துப் பெருஞ்சின்னி இலையை அரைத்து உடம்பில் பூசி முறுக்கிப் பிடிக்கக்காணுக்கடியின் விஷம்போம். அப்போது கடும்பத்தியமிருக்க வேண்டும். அல்லது பெருஞ்சின்னி இலையை அரைத்துச் சிறு கொட்டைப்பாக்களவு உள்ளுக்குக் கொடுத்துக் கடிவாயிலும் இந்த மூலிகையின் சாற்றைப் பூசி முறுக்கிப் பிடிக்க விஷம் இறங்கும்.

பெருந்தேட்கொடுக்கு.

(Heliotropium Indicum—Big variety).

சுடுகாடு முட்டா னெனப்பெரியோர் சொல்லும்
நெடியபெருந் தேட்கொடுக்கால் நீரார்—பொடிக்கிருமி
புண்கிரந்தி மேகப்புண் பொல்லாக் கருங்கிரந்தி
விண்கரந்து போகாதோ விள்.

குணம்:—(இ-ள்.) சுடுகாடுமுட்டானென்கிற பெருந் தேட்கொடுக்கால் ரசதாதுவைப் பற்றிய அணுக்கிருமி, விரணக்கிரந்தி, மேகக்கட்டி, கருங்கிரந்தி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—உள்ளுக்கு: வேதனைசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் ஏறத்தாழச் சிறு தேட் கொடுக்கின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

பெருமரப்பட்டை.

(Ailanthus Malabarica—Bark).

பெருமரப் பட்டையது பேதி கிராணி
மருவிரத்த நோயினத்தை மாற்றுந்—திருவே
நடலைபுரி வாதத்தை நாடா தகற்று
முடலையிரட் சிக்குமென வோர்.

குணம்:—(இ-ள்.) பெருமரப்பட்டையானது அதிசாரம், கிரகணி, உதிரநோய், வாதாதிக்கம் இவைகளை நீக்கும். சரீரத்தைப் போஷிக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டைக்குக் கசப்புச் சுவையுண்டு. பச்சைப் பட்டையை இடித்துச் சாறு பிழிந்து ஒரு அவுன்ஸ் அளவு எடுத்துச் சமன் தயிர்கூட்டிக் காலைமாலை கொடுத்துவரச் சீதபேதி, இருமல் குணமாகும். அல்லது 1 பலம் பட்டையை நன்றாய்ப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட் பாண்டத்தில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கவும். இதனால் உள் ரணங்கள் ஆறும். கிராணி, சீதபேதி, அதிசாரபேதி இவைகள்போம். பெருமரப்பட்டை, அதன் இலை, அதன் வேர், இம்மூன்றையும் சமனாகக் கூட்டி உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் பசுவின் வெண்ணெயில் மத்தித்து 10-15 நாள் கொடுக்க எலிக்கடி விஷம் குணமாகும். இந்த மரத்தினுடைய பிசினுக்கு மட்டிப்பால் என்பர். அதன் உபயோகத்தை அதன் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

பெரும்பயறு.

(Dolichoscatiang—Big variety).

பெரும்பயற்றை மேன்மேலும் பேணியுண்ணு வார்க்குப்
பெருஞ்சாட ராக்கினிபோம் பின்னும்—வருமந்தம்
பேதி யதிகரிக்கும் பேராக் கபங்கதிக்கும்
வாதகுடி லம்பெருகும் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) பெரும்பயற்றை அதிகமாகத் தின்பவர்க்குத் தீபாக்கினி கெடுவதுமல்லாமல், அசீரணம், அதிசாரம், கபரோகம், வாதப்பிடிப்பு இவைகள் உண்டாகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தட்டைப் பயறுபோல் சுண்டல் செய்து உண்பதுமன்றிக் கத்தரிக்காய், வாழைக்காய், கருணைக்கிழங்கு முதலியவைகளை இட்டுச் செய்யும் காரக் குழம்புகளிலும் கூட்டிக்கொள்வதுண்டு. இவைகள் யாவும் வாய்க்கு இதமாக இருக்கும். பழக்கமாக அடுத்து உண்ண வாயு அதிகரிக்கும்.

பெரும்பீளைச்செடி.

(Aerna Lanata—Big variety).

பாடான பேதியெனப் பன்னுபெரும் பீளைக்கு
மேடான வீக்கம் விலகுங்காண்—நாடறியப்
பேய்பூத மும்பறக்கும் பேசிற் பலபிணிபோந்
தூயோ ரறிவரிதைச் சொல்.

குணம்:—(இ-ள்.) *பாஷாணபேதி என்கிற பெரும் பீளைச் செடிக்கு மிகுசோபையும், பைசாச முதலிய சங்கை தோஷமும், கல்லடைப்பு முதலிய சில ரோகங்களும் தீரும் என்க.

* பாஷாணம்-கல். பேதித்தல் - பிளத்தல்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரைத் தட்டி ½ பலம் எடைக்கு ஒரு குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-1½ அவுன்ஸ் அளவு தினம் 2-3 வேளை உட்கொள்ள நீர்க்கட்டு, கல்லடைப்பு, சதையடைப்பு இவைகள் போம். இதன் கியாழம் பாஷாணங்களின் வீறை அடக்கும்.

பேயத்திப்பால்.

(Ficus Hispida—Milk).

வெடிப்பை மேகப்புடையை வீறிவரு குட்டத்
தடிப்பை முளைரணத்தைச் சாடும்—படிக்குண்மயி
லென்னவொளிர் மாதரசே யெங்குஞ் சுணைகணிறை
பன்னமுறு பேயத்திப் பால்.

குணம்:—(இ-ள்.) சுணையையுடைய பேயத்திப்பால் பாதபேதரோகம், மேகச்சொறி, குஷ்டரோகத் தடிப்பு, முளைவிரணம் இவற்றை விலக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பாலைக் கைகால்களிலுள்ள வெடிப்பிற்குத் தடவிவர ஆறும். கட்டிகளுக்குத் தடவிவர அழுந்தி விடும். இதன் பட்டைச் சூரணத்தை வேளைக்கு 20-30 குன்றி எடை சலத்தில் கலக்கிக் கொடுக்க வாந்தியும் பேதியும் ஆகும். இதன் பழத்திலுள்ள வித்தை ஒரு விராகனெடை அல்லது 5-6 பழத்திலுள்ள வித்தை உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும். இதன் பட்டையை மெழுகுபோல் சலம் விட்டு அரைத்துக் கரண்டியில் விட்டுச் சிறிது கொதிக்க வைத்து அரையாப்புக் கட்டிக்கு வைத்துக் கட்ட உடைத்துக்கொள்ளும். இதன் துளிர் இலையைக் கொண்டு தைலம் காய்ச்சுவதுண்டு, எங்ஙனமெனில்—

பேயத்தித் தைலம்.

10 பலம் பேயத்திக் கொழுந்திலையை அம்மிக்கல்லில் வைத்து நெகிழ அரைத்து 10 வடையாகத் தட்டி $\frac{3}{4}$ வீசை நல்லெண்ணெ யில் சிவக்கச் சுட்டு முதிராத பதத்தில் இறக்கி ஆறவிட்டு வடைகளை நீக்கிச் சீசாவில் பத்திரப்படுத்துக. வாரம் ஒரு முறை ஸ்நானம் செய்துவரப் பித்த மயக்கம் நீங்கும். நித்திரையை யுண்டாக்கும்.

பேயாவாரை.

(Cassia Occidentalis).

வெடிப்புத் துவக்குதிரல் மேகப் புடைகள்
தடிப்புத் தினவுகடி தங்கா—அடிக்கடியிங்
கென்னு வறைய விசையா வெழிலணங்கே
பொன்னு வரையதனைப் போற்று.

குணம்:—(இ-ள்.) பேயாவாரை என்னும் பொன்னுவாரைச் செடியினால் சருமவெடிப்பு, சொறிந்தால் சருமத்தூள் சிந்துதல், மேகப்புடைகள், கண்டு கண்டாகத் தடித்தல், நமைச்சல், காணாக் கடி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரையாவது, இலையையாவது, வித்தையாவது பழச் சாறுவிட்டு அரைத்து, வண்டுகடி, அரைக்கடுவன், நீங்காத தினவு, பலவிதப்புடை இவைகளுக்குப் பூச விரைவில் குணமாகும்.

பேய்க்கற்ருழை.

(Aloe Perfoliatia—Bitter).

பேய்க்கற்ரு ழைக்குப் பெருமேக மும்மெரிவும்
வாய்க்குங் கனவழலு மட்டாகுந்—தாய்க்கு
நிகரான மூலிதனை நேரிழையே யொன்றும்
பகராம லுண்டிடவே பார்.

குணம்:—(இ-ள்.) பேய்க்கற்ருழையினுல் அதிநீரும், சரீர எரிவும், சுரமும் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—கசப்புச் சுவையையுடைய சோற்றுக் கற்ருழை கிடைப்பது அரிது. அப்படி கிடைக்கப்பெறின் குமரியின் தலையங்கத்தின் கீழ்க் கூறிய வண்ணம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

பேய்ச்சுரையிலை.

(Lagenaria Vulgaris—Leaves, Bitter).

மூலரோ கத்தின் முளையைக் களைந்துவிடு
மாலவிஷத் தையு மகற்றுங்காண்—ஞாலமதில்
வாய்ச்சிவிடங் கிட்டுவது மாவருத்தம் வெற்பிலுறும்
பேய்ச்சுரையின் பத்திரத்தைப் பேண்.

குணம்:—(இ-ள்.) மலையில் முளைத்த பேய்ச்சுரை யிலையானது முளைமூலரோகத்தையும், கொடிய சர்ப்ப விஷத்தையும் கெடுக்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை விஷக்கடிகளுக்கு உபயோகப்படுத்துவதுண்டு. எங்ஙனமெனின்—பேய்ச்சுரை, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, பேய்க்குமட்டி, சிறுபேய்க்குமட்டி இவைகளின் சமூலத்தை இடித்துச் சூரணம் செய்து, பேய்ச்சுரைக் குடுக்கைக்குள் அடைத்து வைத்திருந்து, வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் வெந்நீரில் போட்டுத் தினம் 2 வேளை கொடுக்கச் சகல விஷமும், அதனுலுண்டான பல துர்க்குணங்களும் போம். இதன் இலையை மெழுகுபோல் அரைத்துச் சிறிது வெதுப்பி ஆசனத்தில் வைத்துக் கட்ட மூன்று நாளில் ஆசனக் கடுப்பு, முளை இவைகள் போம்.

பேய்ச்சுரைவேர்.

(Lagenaria Vulgaris—Bitter Root).

**கடுவேறு பேய்ச்சுரைவேர் கண்டா லரவின்
கடுவேரு துண்மைமுக் காலுங்—கொடுவிடமு
மீளை யிருமலும்விட் டேகுமுண்டால் வாந்தியுண்டாம்
வாளையுறுங் கண்ணாய் வழுத்து.**

குணம்:—(இ-ள்.) கசப்புள்ள பேய்ச்சுரைவேரினால் சர்ப்ப சப்தவேகம், மகாவிஷம், கோழை, காசம் இவைகள் நீங்கும். இதனால் வமனம் உண்டாம் என்க.

செய்கை:—வமனகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் தனிவேரை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து திரிகடிப் பிரமாணம் வெந்நீரில் கொடுக்க வாந்தியாகும். கபம் வெளியாகும். விஷம் தீண்டியவர்களுக்குக் கொடுக்க விஷத்தை வாந்தி மூலமாக வெளியாக்கும். இந்தச் சூரணத்தின் வீறு கெடாமலிருப்பதற்கு அதன் காய்க் குடுக்கையில் போட்டு அடைத்து வைத்திருப்பதே சாலச் சிறந்தது. இன்னும் பலவிதமான விஷக்கடிக்களுக்குச் சித்தப்படுத்தியுள்ள சூரணங்களை யெல்லாம் இக்குடுக்கையில் அடைத்து வைப்பது அதிக குணத்தை யுண்டாக்கும்.

பேய்ப்பாற்சொரிக்கீரை.

(A kind of Rucilla Secunda—Bitter taste).

**பேய்ப்பாற் சொரியினாற் பேதிமுதல் வெப்பகலும்
வாய்ப்பார் கடுப்புதிர மாறுங்காண்—போய்ப்பாய்ந்
துருவாம லுள்ளனலக்கு மோங்கயிற்கண் மாதே
பொருவார் பயித்தியமும் போம்.**

குணம்:—(இ-ள்.) பேய்ப்பாற்சொரியால் அதிசாரம், உட்சூடு, ரத்தக்கிரகணி, பித்ததோஷம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் சாதாரணமாகப் பாற்சொரிக்கீரையின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

பேய்ப்பீர்க்கு.

(Luffa Amara).

பேய்ப்பீர்க்கின் மூலிகையைப் பேசக் கழற்காலில்
காய்ப்பாகுந் துஷ்டக் கடிவிஷத்தின்—நோய்ப்பலத்தை
அன்றே தொலேத்துவிடும் ஆரணங்கே நாளுளும்
நன்றே யறிந்துளத்தில் நாடு.

குணம்:—(இ-ள்.) பேய்ப் பீர்க்கம் செடிக்குக் காலிற்றழும்பு ஏறும்படி கடித்த துஷ்ட விஷங்கள் எல்லாம் நீங்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—பேய்ப்பீர்க்கம்வேரையும் மிளகையும் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து வேளேக்குத் திரிகடிப் பிரமாணம் பசுவின் வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கச் செவிப் பாம்பு என்கிற செய்யான் கடியினுல் நமைச்சலுண்டாகித் தடிப்பேறுவதை நிவர்த்திசெய்யும். பேய்ப்பீர்க்கம் இலையை இடித்துச் சாறு வாங்கித் தினம் ஒரு வேளை 3 நாள், காலையில் 1 அவுன்ஸ் அளவுகொடுக்க வாந்தியாகும். சகல விஷங்களேயும் கண்டிக்கும். அப்போது உப்பில்லாத பத்தியம் இருத்தல் அவசியம். இதன் காயை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து நசியமிட மஞ்சட்காமாலே போம். அல்லது இதன் காய்ச்சாற்றில் 3 துளி நாசியில் விடவும். இந்தக்காயின் தூளேயாவது அல்லது விதையின் தூளேயாவது கடிதத்தில் வைத்துப் பீடிபோல் சுருட்டிப் புகை பிடிக்கப் பற்றேய்வு, பற்சொத்தை, பல்லீறுகளில் உபத்திரவம் செய்யும் கிருமி முதலியவைகள் நீங்கும். இந்தத் தூளே நசியமிட நாசியில் நீர்வடிந்து ஒற்றைத் தலேவலி போம்.

பேய்ப்புடல்.

(Trichosanthes Cucumerina).

பித்தசுரஞ் சீதசுரம் பிரிக்குங் காமாலே
யுற்றம தூரி யுழற்றுக—நித்தியமுங்
காய்ப்புடலே யுண்ணக் கவிழ்க்கின்ற பித்தமும்போம்
பேய்ப்புடலே யுண்பாரைப் பேணு.

குணம்:—(இ-ள்.) பேய்ப்புடலால் பித்தகபசுரங்கள், காமாலே, மசூரிகை, தாகம், தேகங் காய்ப்பேறும்படி தள்ளுகின்ற மயக்கம் இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, வமனகாரி, சுரஹரகாரி, முறைவியாதிரோதி, தாதுக்ஷீணரோதி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உலர்ந்த காயைச் சுரத்திற்குக் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. இதனால் இரத்தம் சுத்தம் ஆகும். மலம் இளகலாகப்போகும். இது வயிற்றிலுள்ள கிருமிகளைப்போக்குவதுடன் சுரத்தின் வேகத்தையும் தணிக்கும். இதை வேளைக்கு ½-1 தோலா எடைக்கியாழமிட்டுக் கொடுக்கலாம். இதன் இலைச்சாற்றை உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும். இதன் வேரின் சாற்றை ¼ ஆழாக்குக் குடிக்க அதிக பேதிஆகும். இதன் கொழுந்திலையில் 1-1½ தோலா எடை கொதிக்கிற சலத்தில்போட்டு ½ மணி நேரம் சென்றபின் சாப்பிட, மலம் இளகலாகப் போகும். சிலருக்குப் பேதியானாலும் ஆகும்.

பேய்மிரட்டி.

(Anisomeles Malabarica).

மாந்தக ணங்கழிச்சல் மாரு வயிற்றுவலி
சேர்ந்து வருங்கரப்பான் றீச்சுரமும்—பேர்ந்துவிடும்
வேய்மிரட்டுந் தோளுடைய மெல்லியலே ராசியமாய்ப்
பேய்மிரட்டி யென்றோருகாற் பேசு.

குணம்:—(இ-ள்.) பேய்மிரட்டியினால் கணமாந்தம், பேதி, வயிற்றுநோய், கரப்பான், கோரசுரம் ஆகிய இவைகள் போம் என்க.

(இதுவுமது)

ஏக்க முறுங்கழிச்சல் ஏந்திழையே மாந்தசுரம்
வீக்கம் வயிற்றுவலி விட்டோடும்—தாக்குகின்ற
பேய்மிரட்டும் பாதகமும் பேருலகில் அஞ்சிவிடும்
பேய்மிரட்டி நற்குணத்தைப் பேசு.

(இ-ள்.) பேய்மிரட்டிப் பூண்டால் கழிச்சல், மாந்தசுரம், வீக்கம், வயிற்றுவலி, பேய்மிரட்டு என்னும்படியான கிரகதோஷம் முதலியவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி, சுவேதகாரி, சுரஹரகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலம் கசப்புச்சுவையுள்ளது. இதைக் கியாழமிட்டுக் கொடுக்க வாந்தி, பேதி, இருமல்,

சீதசுரம் இவைகள்போம். ஒரு பலம் சமூலத்தைத் தட்டி ஒரு மட்குடுவையில் போட்டு ½ படி சலம் விட்டு ⅛ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கலாம். அல்லது கால் ரூபாய் எடை ஓமத்தையும், கால் ரூபாய் எடை மிளகையும் ஒரு புது சட்டியில் போட்டு அடுப்பி லேற்றி வறுத்துக் கரியான சமயம், கால்படி சலம் விட்டு, ஒரு பலம் பேய்மிரட்டி யிலையைக் குறுக வரிந்து சேர்த்து, நாலிலொன் ருகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ½ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்கலாம். இத்தகயக் கியாழங்கள் குழந்தைகளுக் குப் பல் முளைக்கும் சமயம் காணுகின்ற பேதியைக் குணப்படுத்த இன்றியமையாததாகும். இதன் சமூலத்தை ஒரு பெரிய பாண்டத் தில் போட்டுச் சலம் விட்டுக் கொதிக்க வைத்து வேதுபிடிக்கச் சுரம், தலைவலி முதலியவைகள் போம்.

குறிப்பு:—இந்த இனத்தில் இலை நீளமாக இருப்பதை இரட் டைப் பேய்மிரட்டி என்றும், இலை வட்டமாக இருப்பதை ஒற் றைப் பேய்மிரட்டி என்றும் கூறுவதுண்டு. இவைகள் முறையே ஆண், பெண் எனக் கருதப்படுகின்றன. ஆண் பிள்ளைகளுக்குக் காணுகின்ற நோய்களுக்குப் பெண் இலையும், பெண்களுக்குக் காணுகின்ற நோய்களுக்கு ஆண் இலையும் சிகிச்சைக்கு ஏற்ற தென்பது சில அறிவாளர்களின் கருத்து. பேய் பூதகண தோஷங் களுக்கு வேப்பிலையைக்கொண்டு மந்திரித்து அடிப்பதைப்போல் பேய்மிரட்டி இலைகளையும் கத்தையாகக் கட்டிக்கொண்டு அடிப்பது நாட்டு வழக்கம். ஆகையாற்றான் இது "பேய்மிரட்டி" யெனக் கூறப்படுகிறது.

பேய்மிரட்டியிலை.

(Anisomeles Malabarica—Leaves).

வெள்ளேடுப்பு சீதம் வெதும்பல் சுரத்துடனே
யள்ளேடுக்கு மாந்த மதிவாதந்—தெள்ளுமொழி
மாதே வெதுப்படக்கி வன்றழையுட் காய்ச்சலோடு
கோதேறி ரத்தமும்போக் கும்.

குணம்:—(இ-ள்.) வெதுப்படக்கி என்னும் பேய்மிரட்டி யின் இலையானது வெளுப்பான பேதி, சிலேஷ்மகிரகணி, தாபம், ரூட்சை, அள்ளுமாந்தம், வாதாதிக்கம், உட்சுரம், ரத்த தாதுவி லுண்டாகின்ற மலினம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, சுவேதகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் முற் கூறப்பட்ட சமூலத்திற்கு உரித்தானதேயாகும்.

பேரரத்தை.

(Alipinia Galanga—Root Major).

வாத மிசிவு வலிசந்நி பித்தகபஞ்
சீதசுரந் தாவிரணஞ் சென்னிநீ—ரோதுபல
வாங்கடுப் பூப்படரு மாறு மொளியாரு
மீங்கடரும் பேரரத்தை யால்.

குணம்:—(இ-ள்.) பேரரத்தையினால் வாதநோய், பின்னிசிவு, வலிப்பு, சந்நிபாதம், பித்தகபம், நடுக்கற்சுரம், கிளைக்கின்ற புண், சிரசில் நீரேற்றம், சர்வவிஷம், ஸ்திரீகள் ருதுதோஷம் இவைகள் யாவும் ஒழியும். தேஜசு உண்டாம் என்க.

செய்கை:—கபஹரகாரி, சுரஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 3-5 குன்றி எடை தேனிலாவது சர்க்கரையிலாவது தினம் 2 வேளை கொடுக்கப் பசிதீபனத்தை அதிகப்படுத்தும். கபத்தையும், சுரத்தையும், சிரசிலுண்டான நீரேற்றத்தையும் உடனே குணப்படுத்தும். ஒரு விராகனெடை பேரரத்தையுடன் ஒரு விராகனெடை நில வேம்பு கூட்டி $\frac{1}{4}$ படி சலம்விட்டு வீசம்படியாகக் காய்ச்சி வடித்துத் தினம் 2 வேளை கொடுக்கக் குளிர்சுரம், முறைசுரம், சாதாரணமாகச் சீதளத்தினாலுண்டான சுரம் இவைகள்போம். இதைப் பஞ்சுபோல் நசுக்கிச் சாராயத்தில் ஊறப்போட்டு வடிகட்டி வாதநோய்களுக்கு மேல் பூச வலி நீங்கும். சயித்தியத்தால் கன்னம் தாடைகளில் வீக்கம் கண்டவர்களுக்கு மேற்பூச நீரைப்போக்கி வீக்கத்தை நீக்கும்.

பேராமுட்டிவேர்.

(Pavonia Odorata—Root).

வாதசுரந் தாகம் மதலைக் கணமாந்தஞ்
சீதசுரம் பித்தமெனச் செப்பணங்கு—மோதுநம்பாற்
சேராமுட் டிக்கேகுஞ் செய்ய மடமயிலே
பேராமுட் டித்தூரைப் பேசு.

குணம்:—(இ-ள்.) பேராமுட்டிவேரினல் வாதசுரம், தாகரோகம், மாந்தகணம், நளிர்சுரம், பித்தரோகம் ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேரை ஒரு தோலா எடை கொண்டுவந்து பஞ்சுபோல் இடித்து ஒரு மட்குடுவையில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து, அதனை 2 வேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கச் சுரம், தாகம் முதலியவைகள் போம்.

பேரீச்சங்குருத்து.

(Phoenix Dactylifera—Tender leaves).

வாசமலர்க் கோதைநல்லாய் வண்பேரீச் சங்குருத்தை
நேசமுட னேயருந்த நீள்புவியில்— வீசியெழும்
வாந்தி வயிற்றுவலி வன்மையுறும் குன்மமெலாம்
சாந்திபெறு மென்றேநீ சாற்று.

குணம்:—(இ-ள்.) பேரீச்சங்குருத்தால் குன்மநோய், வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மரத்தின் இலைகளை யெல்லாம் கழித்துவிட்டு நடுமத்தியில் சோதிக்க அதிக இளமையான வெண் குருத்து கிழங்கைப்போல உள்ளடங்கி இருக்கும். இது தின்பதற்கு இனிப்பாக இருக்கும். இது கபத்தையும் குன்மரோகத்தையும் கண்டிக்கும்.

பொடுதலை.

(Lippia Nodiflora).

பொடுதலையின் பேருரைத்தாற் போராமப் போக்கு
மடுதலைச்செய் காசமு மடங்குங்—கடுகிவரு
பேதியோடு சூலைநோய் பேசரிய வெண்மேகம்
வாதமும்போ மெய்யுரக்கும் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) பொடுதலையால் சீதபேதி, இருமல், அதிசாரம், சூலைநோய், சிலேஷ்மப்பிரமேகம், வாதநோய் இவை போம். தேகம் பலக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் துளிர்காம்பும் இலையுமாகப் பரித்து 1 பலம் எடைக்கு $\frac{1}{4}$ படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடித்து வேளைக்குப் பெரியவர்களுக்கு 1 அவுன்ஸ் அளவாகவும் குழந்தைகளுக்கு 1-2 தேக்கரண்டி அளவாகவும் கொடுக்கப் பேதி, அஜீரணம் முதலியவைகள் குணமாகும். இன்னும் இதை நீரில் இனிப்பு உள்ளவர்களுக்குக் கொடுக்க நீரைக் குறைத்து இனிப்பை மாற்றும். இந்தக் கியாழத்தில் வால்மிளகுச் சூரணம் கூட்டிக் கொடுக்க வெள்ளையும், நீர்த்தாரையிலுண்டான விரணமும் போம். இதன் இலையையும் காயையும் நெய்விட்டு வதக்கி உப்பு, புளி, மிளகாய் கூட்டி அரைத்துத் துவையலாக அன்னத்துடன் சேர்த்து நெய்விட்டுப் பிசைந்துண்ண மூலவாயு, ரத்தமூலம், மூலக்கிராணி இவைகள் போம்.

பொற் சீந்திற் கிழங்கு.

(Menispermum Cordifolium—Yellow variety).

பொற்சீந்தி லின்கிழங்கு பொங்கு மதுமேக
மெச்சுகய ரோக மிளைப்புவிஷம்—பச்சையா
யோடிரத்த பித்த முயர்சுரங்க ளைக்களையுந்
தேடரிய மேனிதருஞ் சேர்.

குணம்:—(இ-ள்.) பொற்சீந்தில்கிழங்கானது மதுநீர், க்ஷயம், அதிசுஷ்கம், சர்ப்பவிஷம், ரத்தபித்தம், விஷசுரம் இவைகளை நீக்கும். காயசித்தி பண்ணும் என்க.

செய்கை:—விஷநாசகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் சீந்தில் கொடியின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதே யாகும்.

பொற்றலைக்கையாந்தகரை.

(Wedelia Calendulacea—Yellow variety).

பொற்றலைக்கை யாந்தகரை பொன்னிறமாக் கும்முடலைச்
சுத்தமுறக் கட்குச் சுகங்கொடுக்குஞ்—சிற்றிடையாய்
சிந்துரங் கட்காகுஞ் சிந்தை தனைத்துலக்கும்
உந்திவளர் குன்மமொழிக் கும்.

குணம்:—(இ-ள்.) பொற்றலைக்கையாந்தகரை தேகத்திற்குப் பொற்சாயலையும், விழிகளுக்கு ஒளியையும், புத்திக்குத் தெளிவையும் உண்டாக்கும். குன்மக் கட்டியைப் போக்கும். இது பலவித சிந்தூரஞ் செய்வதற்கும் ஆம் என்க.

செய்கை:—வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—சித்த வைத்தியத்தில் பலவிதமான செந்தூரங்களுக்கு இதன் சாறு உபயோகப்படுகின்றது. நல்ல செந்தூர நிறம் வாராமலிருக்கும் மருந்துகளை இதன் சாறு விட்டு அரைத்து வில்லைதட்டிப் புடமாவது அல்லது எரிப்பாவது கொடுக்க விரைவில் நிறம் செந்நிறத்திற்குத் திரும்பும். சாதாரணமாக இந்த மூலிகையைக் கரிசலாங்கண்ணியின் தலையங்கத்தின் கீழ்க் கூறியபடி உபயோகப்படுத்திக்கொள்க.

பொன்முசுட்டை.

(Cissampelos Pereira).

வாதமொடு பித்தத்தை மாற்றுமே மாநிலத்திற்
சீத மகற்றுந் தினவடக்கு—மாதேகே
ளுண்டிக்கும் வாசனையா மோங்கி வளரனலைக்
கண்டிக்கும் பொன்முசுட்டை காண்.

குணம்:— (இ-ள்.) பொன்முசுட்டை, வாதவலி, மயக்கம், ஆமம், நமைச்சல், உட்சூடு இவைகளைப் போக்கும். இதனால் உணவில் மணமுண்டாம் என்க.

(இதுவுமது)

மாதே முசுட்டையது வாதமோ டையத்தைத்
தீதே புரிநீரைத் தீர்க்குங்காண்—வேதனைசெய்
வன்மலத்தைத் தள்ளும் வறட்சி சொறிசிரங்கைச்
சன்மமறப் போக்குநிசந் தான்.

(இ-ள்.) முசுட்டையானது வாதகோபம், கபதோஷம், பிரமேகநீர், தினவு, படை, சொறி, சிரங்கு இவைகளை நீக்கும். மலத்தை யிறக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் வெண்மை நிறமாகப் புஷ்பிக்கிற பூண்டை முசுட்டை என்றும், மஞ்சள் நிறமாகப் புஷ்பிக்கிற பூண்டைப் பொன்முசுட்டை என்றும் கூறுவர். இதன் சமூலச்சாறு வேளைக்கு ½-2 விராகனெடை உட்கொள்ளலாம். இதன் வேர்ச் சூரணத்தை வேளைக்கு 5-10 குன்றி எடை தேனில் மத்தித்துக் கொடுக்கலாம். ½ தோலா எடையுள்ள பட்டையைப் பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் அளவு கொடுக்கலாம். இவற்ருல் சுரம், பேதி, சீத பேதி, சீர்ண மின்மை, நீர்சம்பந்தமான ரோகங்கள் தீரும். முக்கியமாய் நீர்ப்பை, குண்டிக்காய் வீக்கம், நீர்த்தோஷம் முதலியவற்றிற்குச் சிறந்தது. பாம்புக்கடி, தேள்கொட்டு முதலியவற்றிற்கு இதைச் சலத்தில் உரைத்துக் கடிவாயில் தடவிச் சிறிது நெருப்பனலில் காட்டக் குணமேற்படும். இதன் இலையையும் பட்டையையும் அரைத்து ஆருத ரணங்களுக்கும் புரையோடும் ரணங்களுக்கும் மேற் போட ஆறும்.

குறிப்பு:—பொன்முசுட்டைக்கும் வட்டத்திருப்பி என்னும் மலைதாங்கிப் பூண்டுக்கும் பேதமுண்டு என்பதை அறிவார்களாக.

பொன்னுங்காணி.

(Alternanthera Sessiles).

காசம் புகைச்சல் கருவிழிநோய் வாதமனற்
கூசும்பி லீகங்கு தாங்குரநோய்—பேசிவையா
லென்னுங்கா ணிப்படிவ மேமமாஞ் செப்பலென்னைப்
பொன்னுங்கா ணிக்கோடியைப் போற்று.

குணம்:—(இ-ள்.) பொன்னுங்காணியினுல் விழியைப்பற்றிய வாதகாசம், தாம்பிரரோகம், கிருஷ்ண மண்டலரோகம், வாத தோஷம், தேகச்சூடு, பிலீகம், மூலரோகம் இவை போம். சரீரத்தில் பொன்னிறம் உண்டாகும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, ஜடராக்கினிவர்த்தினி, மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் துவட்டலாகச் செய்து உபயோகப்படுத்த உட்சூடு, மூலம் முதலியவைகள் குணமாகும். நீடித்துச் சாப்பிட நல்லதேஜசும், கண்களுக்கு ஒளியும் உண்டாகும். இதன் இலையை நெய் விட்டு வதக்கித் தாளக்கூடிய சூட்டில் கண்

களுக்கு வைத்துக் கட்ட வாதகப சம்பந்தமான கண் ரோகங்கள் போம். இதன் இலையை அரைத்து நீர் நிரம்பிய புதுப் பானையின் பேரில் தட்டி வைத்து மறுநாள் வழித்தெடுத்துக் கண்களுக்கு வைத்துக் கட்டப் பித்த சம்பந்தமான கண் வியாதிகள் குணமாகும். இதனைத் தைலங்களிலும் கிருதங்களிலும் சேர்த்து உபயோகப் படுத்துவதுண்டு. இதனால் தேகத்தின் வெப்பம் தணியும்.

பொன்னூமத்தை.

(Datura Fastuosa—Yellow Flower).

பொன்மத்த முண்டாகிற் பூவையரே புண்கிரந்தி
தொன்மைக் கிராணிவரு சூசிகா—வன்பேதி
பித்த சுரத்துடனே பேரா விடச்சுரமுஞ்
சுத்தவதி சாரமும்போஞ் சொல்.

குணம்:—(இ-ள்.) பொன்னூமத்தையினால் விரணக்கிரந்தி, நாட்சென்ற கிரகணி, கருப்பாதிசாரம், பித்த விஷசுரங்கள், தனிப் பேதி இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, வேதனைசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—ஊமத்தம் செடி இனத்தில் மஞ்சள் நிறமாகப் புஷ்பிக்கின்ற செடியே பொன்னூமத்தை என்று கூறப்படுகின்றது. இதன் உபயோகம் ஏறத்தாழ ஊமத்தம் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும். இது கொடிய நஞ்சுக் குணத்தை பெற்றிருப்பதினால் பண்டிதர்கள் தேகபலம் நோய்பலம் அறிந்து உபயோகப்படுத்தல் வேண்டும்.

மகிழம்பூ.

(Mimusops Elengi—Flower).

வெகுவனல மாகும் விரகமிக வுண்டா
முகர வரோசி முறியு—மிகவு
மகிழச் சுரத வகைகாட்டு மாதே
மகிழத் துரும மலர்க்கு.

குணம்:—(இ-ள்.) மகிழம்பூவினால் தேக வெப்பமும் புணர்ச்சியில் இச்சையும் உண்டாகும். இதனை முகர அரோசகரோகம் நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த புஷ்பத்தை நன்ருய்ப் பொடி செய்து நசியமிட ஏராளமான சளி (நீர்) நாசியிலிருந்து வெளியாகும். இதனுல் தலை பாரம், தலைவலி, சிரசின் நீரேற்றம் இவைகள் போம். இந்தப் புஷ்பம், காய், பட்டை முதலியவற்றுடன் இன்னும் சில துவர்ப்புச் சுவையுள்ள கருவேலம்பட்டை, காய்ச்சுக்கட்டி முதலியவற்றைக்கூட்டிக் கியாழமிட்டு ஆருத விரணங்களுக்கு விட்டு அலம்பி வர எளிதில் ஆறும். இதன் பட்டையைக் கியாழமிட்டு வாய் கொப்புளிக்க வாய்ரணம் ஆறும். $\frac{1}{2}$ தோலா பட்டையைச் சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு மட்பாண்டத்தில் போட்டு $\frac{1}{4}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிச் சிறிது தேன் கூட்டி, வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கச் சுரமும் துர்ப்பலமும் போம். இந்தக் கியாழத்தை ஸ்திரீகள் சில நாள் கொள்ளக் கருப்பைக்குப் பலம் உண்டாகிக் கர்ப்ப மடைவார்கள். இந்தப் பழத்தின் உள்தசை உண்ணக்கூடியது. நன்ருய்ப் பழுத்தப் பழத்தைக் கருப்ப ஸ்திரீகள் சாப்பிடப் பிரசவ வேதனையை யுண்டாக்கும். இதன் காயை மென்று வாயிலடக்கி வைத்து உமிழ்ந்துவிடப் பல்லாட்டம் நீங்கி பல் உறுதிப்படும்.

மகிழம் வித்து.

(Mimusops Elengi—Seeds).

தாதுவைநன் மெய்யழகைச் சத்தியையுண் டாக்கிவிடுஞ்
சீதளமென் பார்கலிக்கஞ் செய்மருந்தாம்—வாதை
மலத்தைவிழித் தோஷத்தை வல்விஷத்தை வெப்பை
விலக்கு மகிழம் விதை.

குணம்:—(இ-ள்.) கண்கலிக்கத்துக்கான மகிழம்வித்து மலாவிருதவாதம், நேத்திரதோஷம், சர்ப்பவிஷம், சுரம் இவைகளை நீக்கும். சுக்கிலத்தையும், தேகவனப்பையும், பலத்தையும் விருத்தி செய்யும். இது சீதளம் என்பர்.

செய்கை:—சீதளகாரி, பலகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த வித்திலுள்ள பருப்பை வேளைக்கு ஒரு விராகனெடை அரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிட்டு வரத் தாது விருத்தியுண்டாகும். தேகவெப்பு, விஷம், மலக்கட்டு நீங்கும்.

மக்காச்சோளம்.

(Zea Mays).

பசியதனை யாற்றும் பலமோடுவிந் தூறும்
கசிவுடைய பேதியுமே கட்டும்—உசிதமிகு
தக்கார்வாய் வென்றிதனைச் சாற்றிடுவர் மாதரசே
மக்காச்சோ ளத்தால் மகிழ்.

குணம்:—(இ-ள்.) மக்காச்சோளம் பசியையடக்கும், பலங் கொடுக்கும், விந்திறுகச் செய்யும், பேதி முதலியவற்றைக் கட்டும். இதைச் சிலர் வாயுவென்றும் கூறுவர்.

செய்கை:—பலகாரி, காமவிர்த்தினி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—அதிக இளசாகவும் முதிர்ச்சியாகவும் இராத நடுத்தரமானக் கதிர்களைக் கரிநெருப்பனலில்வாட்டி எடுத்தும் அல்லது வேகவைத்து எடுத்தும் தின்பதுண்டு. இது வாய்க்கு அதிக ருசியாக இருக்கும். முதிர்ந்த கதிர்களிலிருந்து எடுத்தத் தானியத்தைக் குத்திப் புடைத்துப் பொரியாக வறுத்துத்தின்பதுடன் இயந்திரத்தில் அரைத்துச் சல்லித்து பொட்டுப்போக்கிச் சர்க்கரை கலந்து 'சத்துமாவாக' உண்பதுண்டு. சில பிரதேசங்களில் இந்த மக்காச்சோளத்தைக் குத்திப்புடைத்து மாவாக அரைத்துச் சல்லித்துப் பொட்டு நீக்கிக் கூழாகக் காய்ச்சியும், அடையாகச் சுட்டும் உபயோகப்படுத்துவதுண்டு. இதன் மாவைக் களிகிளறிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட விரைவில் உடைத்துக்கொள்ளும்.

மகம்மதிய வைத்தியர்கள், இந்த மக்காச்சோளத்தின் மாவின் உபயோகத்தால் பலவீனம் நீங்கித் தேகம் கொழுமை பெறுகிறதென்றும், க்ஷயரோகத்தில் இளைத்தவர்களுக்கு நல்ல உணவென்றும் கூறுகின்றனர். சாதாரணமாக 'கார்ன்ப்ளோர்' (Corn flour) மாவென்று கடைகளில் விற்கப்படுவது பெரும்பாலும் மக்காச்சோளத்திலிருந்து செய்ததேயாகும்.

மக்கிப்பால்.

(Garcinia Pictoria—Resin).

மிக்கவறி வாளருமே மேதினியில் மெச்சுகின்ற
மக்கியெனும் பாலதனை மன்பதைகள்—பக்குவமாய்க்
கொள்ளருது சூலையுடன் கோவைநீர்ப் பாண்டோழியும்
உள்ளமலக் கட்டோழியு மோது.

குணம்:—(இ-ள்.) மக்கிப்பாலால் சூதகக்கட்டு, நீர்க்கோவை, பாண்டு, மலக்கட்டு முதலியவைகள் குணமாகும். இன்னும் இதனால் உறப்பான பேதி உண்டாகும் என்க.

செய்கை:—மலகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த மக்கிப்பாலைச் சூரணம்செய்து காலை வேளையில் 1-2 குன்றிமணி எடை திராக்ஷைப்புப்பு, சர்க்கரை, குல்கந்து, மேனுப்பால் இவைகளுடன் கூட்டிக்கொடுக்க நன்றாய்ப் பேதியாகும். அப்போது வயிற்றில் ஒருவிதமான உபத்திரவத்தை உண்டாக்கி நீர்மயமான மலத்தைப் போக்கும். இத்தகைய பேதியை அடுத்துக் கொடுத்துக்கொண்டுவர நீர்க்கோவை, பாண்டு, பெருவயிறு, சூதகக்கட்டு, வயிற்றிலுள்ள தட்டைக்கிருமிகள் முதலியவைகள் குணமாகும். இதை அதிக அளவிற் கொடுக்க விஷமிக்கும்; வாந்தியையும் உண்டாக்கும். ஆகையால் தேகத்தின் திடத்திற்கு ஏற்றவாறு, நான்கு அல்லது ஐந்து முறைகளுக்குமேல் பேதியாக வொட்டாமல் தகுந்த அளவாகக் கொடுத்தல் வேண்டும். வயிற்றில் கிருமிகள் அதிகமாக இருப்பதாகத் தோற்றின், மக்கிப்பால் 5 குன்றி எடை; அன்னபேதி 3 குன்றி எடை; நல்லவெல்லம் 10 குன்றி எடை; இவைகளை ஒரு புட்டியில் போட்டு, 3 அவுன்ஸ் சுத்த சலம் விட்டு நன்றாய்க் குலுக்கி அதில் வாசனைக்காக 3 துளி 'பெப்பர்மின்ட்' எண்ணெய் விட்டு வைத்துக் கொண்டு, காலையில் 1 அவுன்ஸ் அளவு கொடுக்கவும். இதனால் 2, 3 மணி நேரத்திற்குள் இரண்டொரு முறை பேதியாகித் தட்டைக்கிருமிகள் வெளிப்படும். அப்படிப் பேதியாகாவிட்டால் மருந்து சாப்பிட்ட 4 மணி நேரத்துக்குப் பின் மீண்டும் ஒரு முறை 1 அவுன்ஸ் சாப்பிடவும். எப்பொழுது பேதியாகிறதோ அப்பொழுது மருந்தை நிறுத்திவிட வேண்டியது. இந்த மருந்தை, வயிற்றில் விரணம் இருக்கிறவர்களுக்கும், கருப்பிணிகளுக்கும், பெரும்பாடு உடையவர்களுக்கும் கொடுக்கக்கூடாது.

மங்குஸ்தான்.

(Garcinia Mangostana).

இரணமுடன் சீத மிரத்தமிகும் பேதி
சரணமென வாடுமதி சாரம்—திரணமெனப்
பொங்குகர்ப்ப மேகமெலாம் போமே புரையில்லா
மங்குஸ்தான் ஓடால் மதி.

குணம்:—(இ-ள்.) மங்குஸ்தான் பழத்தின் மேல்ஓட்டால் வயிற்று விரணம், சீதபேதி, இரத்தபேதி, அதிசாரம், கர்ப்ப மேகம் முதலியவைகள் நீங்குமென்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—மங்குஸ்தான் மேல்ஓடு ரூபா எடை 2½, கொத்துமல்லி விதை, சீரகம் வகைக்கு விராகனெடை 3, இவைகளை இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு, ½ படி சலம் விட்டு அடுப்பிலேற்றி, ¼ படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு 2-3 அவுன்ஸ் கியாழத்துடன் சிறிது சர்க்கரைக்கூட்டித் தினம் 2-3 வேளை கொடுத்துவர அதிசார பேதி, சீதபேதி, இரத்தபேதி முதலியவைகள் குணமாகும்.

உலர்ந்த மங்குஸ்தான், வால்மிளகு, படிகாரம், வேலம்பிசின், வகைக்கு ரூபா எடை 1, இவைகளை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்குத் திரிகடிப்பிரமாணம் தினம் 2, 3 வேளை பசுவின் மோரில் கலந்து உள்ளுக்குக் கொடுத்துவர வெள்ளை, நீர்ச்சுறுக்கு, நீர்எரிச்சல் முதலியவைகள் குணமாகும்.

இந்தப் பழத்தின் மேல்ஓட்டைச் சத்து இறங்கக் கியாழம் காய்ச்சி ஸ்திரீகளின் மர்மஸ்தானம் அல்லது ஆசனம் முதலியவைகள் வெளித்தள்ளி இருக்கும் சமயம் அலம்பிவரச் சுருக்கமடைந்து உள்ளுக்கு இழுத்துக்கொள்ளும்.

மங்குஸ்தான் பழ ஓடு ரூபா எடை 5, கசகசா ரூபா எடை 4, சர்க்கரை ரூபா எடை 6, மாதுளம் பழவோடு ரூபா எடை 5, ரோஜாப்பூ உலர்ந்தது ரூபா எடை 4. இவைகளை எல்லாம் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5-10 குன்றி எடை குழந்தைகளின் வயதுக்கு ஏற்றவாறு கொடுத்துவரச் சீதபேதி, இரத்தபேதி, அதிசாரம் முதலியவைகள் குணமாகும்.

மஞ்சள்.

(Curcuma—Longa).

பொன்னிறமாம் மேனி புலானுற்ற மும்போகும்
மன்னு புருஷ வசியமாம்—பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போந் தீபனமாங்
கூர்ந்தநறு மஞ்சடனக் கு.

(இதுவுமது)

தலைவலிநீ ரேற்றஞ் சளையாத மேக
முலைவுதரு பீநசத்தி னூடே—வலிசுரப்பு
விஞ்சு கடிவிஷமும் வீறுவிர ணங்களும்போ
மஞ்சட் கிழங்குக்கு மால்.

குணம்:—(இ-ள்.) உடலைப் பொற்சாயலாக்கிப் புலால் நாற்றத்தை நீக்குகின்ற மஞ்சளினால் புருஷவசியமும், பசியும் உண்டாம். வமனம், பித்தகபவாதகோபங்கள், தலைவலி, சலதோஷம், பிரமேகம், நாசிகாரோகம், ஐவகைவலி, வீக்கம், வண்டுக்கடி விஷம், பெருவிரணம் இவைகள் போம் என்க.

செய்கை:—பலகாரி, உற்சாககாரி, சோபாநாசினி, உதரவாதஹாரகாரி,ஜடராக்கினிவர்த்தினி,வேதனுசாந்தினி,தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு ¼ விராகனெடை கொதிக்கிற சலத்திலாவது அல்லது காய்ச்சிய பசுவின் பாலிலாவது போட்டுச் சிறிது கலக்கி ஆறவிட்டுத் தேனாவது சர்க்கரையாவது போதிய அளவு கூட்டிச் சில நாள் சாப்பிட்டுவர மதுமேகம், குஷ்டம், விரணங்கள் தீரும். இன்னும், இந்தச் சூரணத்தை நெல்லிக்காய்க் கியாழத்தில் போட்டுக்கொடுக்க மதுமேகம் விரைவில் குணமாகும். பசுவின் கோமயத்தில் கொடுக்கக் குஷ்டம் குணமாகும். இதைத் தனிச்சூரணமாகக் கொடுப்பதைவிட மர மஞ்சள் சூரணத்தையும் சமன் கூட்டுவது உத்தமம். மஞ்சள் சூரணத்தைத் தேங்காய் எண்ணெயுடனாவது, வேப்பெண்ணெயுடனாவது அல்லது வேப்பிலையுடனரைத்தாவது அம்மைகொப்புளங்களுக்குப்போட ஆறும். மஞ்சள் சூரணத்தைப் பாலில் போட்டுச் சாப்பிட தொண்டைக் கபம் நீங்கும். இதனைக் கொளுத்திப் புகை பிடிக்கச் சலதோஷம், தலைவலி, நாசியடைப்பு முதலிய போம். ஸ்திரீகள் உரைத்துத் தேகத்தில் பூச நாற்றம் நீங்கி வனப்புண்டாகும், சேற்றுப் புண்ணுக்குப் போட ஆறும்.

மஞ்சள் முள்ளங்கி.

(Daucus Carota).

விந்துமிகும் நீர்ப்பாண்டு வெங்கபமும் நீர்க்கட்டு
முந்துதுயர் மார்புநோய் முக்குமலம்—தோந்தமிகு
கல்லடைப்பு நீங்கும் கவின்மஞ்சள் முள்ளங்கி
சொல்கேட்ட போழ்தத்தே சோர்ந்து.

குணம்:—(இ-ள்.) மஞ்சள் முள்ளங்கி பாண்டு, கடரோகம், நீரடைப்பு, மார்புவலி, மலபந்தம், கல்லடைப்பு முதலியவற்றை நீக்குவதன்றி அதிக தாது பலத்தைக் கொடுக்குமென்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, பலகாரி, ஜடராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சாதாரணமாக முள்ளங்கிக் கிழங்கை உபயோகப்படுத்துவதுபோற் கறியாகச் சமைத்து உண்பதுண்டு. இதனை அடுத்து உண்ணச் சரீரத்தில் நல்ல இரத்தம் பரவும். இருதயம், மூளை, குண்டிக்காய்முதலிய உறுப்புக்களுக்குப் பலத்தைக் கொடுக்கும். தாதுபுஷ்டி விசேஷிக்கச் செய்யும். இந்தக் கிழங்கை இருமல், மார்புவலி, பாண்டு, நீர்க்கட்டு, கல்லடைப்பு, மலச்சிக்கல் முதலியவற்றை உடைய ரோகிகள் தினந்தோறும் கறிகளில் சேர்த்து உண்ண விசேஷ நன்மை யுண்டாகும். இந்தக் கிழங்கை அரைத்துச் சிறிது நெருப்பனலில் வெதுப்பித் தாளக்கூடிய சூட்டில் ஆறுத விரணங்களின்பேரில் வைத்துக் கட்ட ஆறும்.

மஞ்சள் முள்ளங்கி விதை.

(Daucus Carota—Seeds).

மஞ்சள்முள் ளங்கிவிதை மன்பதைக ளாமுண்ண
அஞ்சுகிகர் மாதே யறையக்கேள்—நெஞ்சுவலி
கல்லடைப்பு நீரடைப்புங் கட்டு ருதுசூலை
தொல்லைவிட் டேகுந் தொலைந்து.

குணம்:—(இ-ள்.) மஞ்சள் முள்ளங்கி விதையால் மார்பு நோய், கல்லடைப்பு, நீரடைப்பு, சூதகச்சிக்கல் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—மஞ்சள் முள்ளங்கி விதையை வறுத்துப் பருப்பை எடுத்து உண்பவர்களுக்கு நீரடைப்பு, கல்லடைப்பு, வயிற்றுப்பிசம், விரணங்கள், ஹஸ்மரிரோகம் முதலியவைகள் குணமாகும். இதுவுமல்லாமல் போக சக்தியும், தாதுவிருத்தியும் அதிகப்படும். இந்த விதை, அடுத்து உண்பவர்களுக்கு நீர்க்கட்டு, இரைப்பையிலுண்டான அசுத்தம், மார்புநோய் முதலியவற்றை நீக்குவதுடன், நல்ல ரத்தத்தையும் வனப்பையும் உண்டாக்கும். இந்த விதையை ஸ்திரீகள் அதிக அளவாக உட்கொண்டால் கர்ப்பத்தை வெளியாக்கும்.

மட்டிப்பால்.

(Ailanthus Malabarica).

**தலைவலிநீ ரேற்றந் தனித்தவடல் வாத
மலைவுறுமேல் வாந்தி யரோசி—நிலைகுலையும்
வட்டுப்பால் வஞ்சமுறு மாமுலைமா தேமணக்கு
மட்டுப்பா லிற்கு மருண்டு.**

குணம்:—(இ-ள்.) வாசனையையுடைய மட்டிப்பாலினால் சிரஸ்தாபரோகம், சலதோஷம், பாதாக்ஷேபகவாதம், கபவாந்தி, அருசி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, பலகாரி, சுரஹரகாரி, பூதிகந்த நாசினி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனில் வேளைக்கு 2 குன்றி எடை பொடிசெய்து காய்ச்சிய பசுவின் பாலில் போட்டு, ஆறினபின் வடி கட்டிக் கொடுக்கவும். இப்படி, ரோகத்தின் நிலைமைக் கேற்றவாறு தினம் 2-3 தடவை கொடுக்கச் சீதபேதி, கபரோகம், அருசி முத லியவற்றை நீக்கும். இன்னும் இது ஸ்திரீகளுக்குப் பால் சுரப்பை உண்டாக்கும். சிறிது அளவை அதிகப்படுத்திக் கொடுக்க வியர் வையை யுண்டாக்கும். பிரசவ காலத்திலுண்டான உதிரச் சிக்கலை யொழிக்கும். வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளியாக்கும். பழைய வெல்லத்துடன் சமனெடை மட்டிப்பால் கூட்டி அரைத்து மெழுகுபோல் செய்து, 2 மிளகுப் பிரமாணம் சாப்பிட்டுவரச் சீத ளத்தினாலுண்டான விக்கல், தலைவலி இவைகள் போம். மட்டிப் பாலைக் கரிநெருப்பனலில் போட்டுப் புகையுண்டாக்கக் காற்றிலுள்ள அசுத்தங்கள் ஒழியும்.

மணத்தக்காளி.

(Solanum Nigrum).

**காய்க்குக் கபந்தீருங் காரிகையே யவ்விலைக்கு
வாய்க்கிரந்தி வேக்காடு மாறுங்காண்—தீக்கு
ளுணக்கிடு வற்ற லுறுபிணியோர்க் காகும்
மணத்தக்கா ளிக்குள்ள வாறு.**

குணம்:—(இ-ள்.) மணத்தக்காளிக்காய்க்குச் சிலேஷ்மரோக மும், இலைக்கு நாப்புண்ணும், வேக்காடும் நீங்கும். வற்றல் நோயாளி களுக்காகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைத் துவரம்பருப்புடனாவது பச்சைப்பயறுடனாவது கூட்டிப் பாகப்படிக் கடைந்து உண்ண உட்சூடு, வாய்ரணம், ஆசனக்கடுப்பு, நீர்ப்பைக் கொதிப்பு, தாகம் முதலியவைகள் குணமாகும். இந்த இலையை அரைத்து ஆசனத்தில் வைத்துக்கட்டத் தினவு, புண் முதலியவைகள் குணமாகும். இதன் இலைச்சாற்றில் வேளைக்கு $\frac{3}{4}$-1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுத்துவர நீர் தாராளமாக இறங்கும். இதனால் பாண்டு, மகோதரம் முதலியவைகள் குணமாகும். இதன் உலர்ந்த இலையைக் கியாழமிட்டு ஸ்திரீகள் மர்மஸ்தானத்தை அலம்பிவர வெட்டைச் சூட்டால் படும் வெள்ளை குணமாகும்.

இந்த இனத்தில் கறுப்பு, சிவப்பு என்கிற இரண்டு வகைகளுண்டு. இவைகளையும் மேற் கூறிய வண்ணம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். என்றாலும் அவையவைகட்குண்டான நிறபேதங்களினால் சிற்சில விசேட குணங்களுண்டு. ரோகத்தின் வன்மை மென்மைக் கேற்றவாறு இனமறிந்து கூட்டிக் கொள்ளுதல் பண்டிதர்கள் கடமையாகும்.

கறுப்பு மணத்தக்காளி.

(Solanum Nigrum).

வெவ்வழலு மாறும் விரிகுரற்கம் மற்போகு
மோவ்வுசிசு வுக்கா முலவைவிடுஞ்—செவ்வி
யருமணிக் கச்சுமுலை யாயிழையே கேளாய்
கருமணத்தக் காளிதனைக் கண்டு.

(இ-ள்.) கருமணத்தக்காளியினால் பயித்திய வெப்பம், சுரசாதரோகம், வாததோஷம் இவைபோம். இது பாலர் சிகிச்சைகளுக்குதவும்.

சிவப்பு மணத்தக்காளி.

(Solanum Rubrum).

கந்ததா ளிப்புண்ணைக் காங்கையினு லுள்ளுக்குள்
வந்தவேக் காட்டைமிக மாற்றுங்காண்—முந்தியெழும்
ஐய வினையை யகற்றிவிடு நற்புலத்துச்
செய்யமணத் தக்காளிச் சீர்.

(இ-ள்.) சிவப்பு மணத்தக்காளியானது கந்ததாளி விரணம், உட்சுரவேகம், வாதகப தொந்தம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

மணத்தக்காளிக்காய்.

(Solanum Nigrum—Pod).

மலமிளகுந் தானே மகாகபமும் போகும்
பலமிகுந்த வாதம்போம் பார்க்குள்—மலைபோற்
பணைத்துப்பூ ரித்தமுலைப் பாவாய்கே ணல்ல
மணத்தக்கா ளிக்காயை வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) நல்ல மணத்தக்காளிக் காயால் மலம் இளகிச் சுபாவமாக இறங்குவதுமன்றிச் சிலேஷ்மநோயும், வாதாதிக்கமும் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—தனிக்காயையாவது அல்லது அதனுடன் அதன் புஷ்பத்தைக் கூட்டியாவது மொத்த எடைக்குப் பத்துப்பங்கு சலம்விட்டு $\frac{1}{4}$ மணிநேரம் எரித்து வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு கொடுக்க, இருமல், க்ஷயம், மலச்சிக்கல், வாதாதிக்கம் இவைகள் போம். இந்தக் காயை நெய்விட்டு வதக்கிப் புளி, காரம் இட்டக் குழம்பில் சேர்த்துத் தாளித்து உண்பதுண்டு. இதனால் வெட்டைச்சூடு தணியும்.

மணத்தக்காளி வற்றல்.

(Solanum Nigrum—Dried pod).

நீர்ப்பேதி யாகு நிலைவமனம் போம்வாயிற்
கூர்ப்ப விலைப்புமறுங் கூறுவதோ—பார்க்கிலினு
மிக்கான நோயோர் விரும்புகின்ற நல்லமணத்
தக்காளி வற்றலுக்குத் தான்.

குணம்:—(இ-ள்.) நோயுற்றோர்க் காகின்ற நல்ல மணத்தக்காளி வற்றலுக்கு நீர்ப்பேதி யுண்டாவதுந் தவிர வாந்தியும், வாயிலைப்பும் நீங்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த மணத்தக்காளிக் காயை உப்பிட்ட மோரில் இரண்டொருமுறை போட்டுப் பிசறி உலர்த்தி

வற்றலாக வைத்துக்கொள்வதுண்டு. வேண்டும்போது இதில் கொஞ்சம் எடுத்து நெய்விட்டு வறுத்துப் புளியிட்டக் காரக் குழம்பில் போட்டு அன்னத்துடன் சேர்த்து உண்பதுண்டு. இதனால் உட்சூடு, நீர்க்கடுப்பு, அரோசகம் முதலியவைகள் குணமாகும்.

மணலிக்கீரை.

(Gisekia Pharnaceoides).

வாதமறு நெஞ்சேறி வந்த கபம்விலகுஞ்
சீதமுட னேய்பலவுந் தீருங்காண்—போதவுள்ளே
வீறு கிருமியொடு மேவாய் பயித்தியம்போங்
கூறுமண லிக்கீரைக் கு.

குணம்:—(இ-ள்.) மணலிக்கீரைக்கு வாதகோபம், மார்பு சளி, சிலேஷ்மமுதலிய பலநோய், கிருமிரோகம், பயித்திய தோஷம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைச் சுத்தமாக ஆய்ந்து அலம்பி ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதனுடன் வெந்து மலர்ந்த துவரம்பருப்பு, பச்சைமிளகாய், வெங்காயம் இவைகளைச் சேர்த்து அடுப்பிலேற்றி எரித்து, வெந்த சமயம் கடைந்து தாளித்து அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. இதனால் இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள ரோகங்கள் குணமாகும்.

மணிப்புங்குமரம்.

(Sapindus Emarginatus).

நல்ல மணிப்புங்கோல் நாயகமே நெஞ்சுகபம்
வல்ல விஷபேதி வன்மூர்ச்சை—அல்லலுறும்
வீக்கம் கணுச்சூலை வீறிட்ட வுந்திவலி
ஏக்கமுற்று விட்டோடு மே.

குணம்:—மணிப்புங்கு நெஞ்சில் அடைந்திருக்கும் கபம், விஷபேதி, மூர்ச்சை, வீக்கம், கீல்களில் வியாபித்த வலி, வயிற்றுவலி முதலியவற்றை நீக்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையையாவது வேரையாவது சலத்தில்போட்டுக் காய்ச்சித் தாளக்கூடிய சூட்டில் இடுப்புவாதம்,

பாரிசவாதம், கணுச்சூலை முதலியவற்றிற்குத் தாரையாக விட்டுக் கொண்டுவரக் குணமுண்டாகும். இதன் வேர்ப்பட்டையில், வேளைக்கு அரைக்கால் பலம் பஞ்சுபோல் தட்டிக் கால்படி சலத்தில்போட்டுக் கால் ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்கப் பக்கசூலை, ஸ்திரீகளுக்குண்டான உதிரச் சிக்கல் முதலியவைகள் குணமாகும். இதன் பழச்சதையை வேளைக்கு 1-2 விராகனெடை வீதம் தினம் 1 வேளை சலத்தில் சத்து வரும் வரையில் பிசைந்து பிசைந்து வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும். இதனை விசேஷமாக விஷக்கடிகளுக்குக் கொடுப்பதுண்டு. 4-5 குன்றி எடையைச் சலத்தில் கரைத்துக் கொடுக்க இறுகியுள்ள கபத்தை இளகலாக்குவதுடன் குமட்டி வெளியிலும் கொண்டுவரும். இதன் கொட்டைக்குள்ளிருக்கும் படியான பருப்பில் 2-3 குன்றி எடை நறுக்கி முலைப்பாலில் ஊறப் போட்டு வடிகட்டி நாசியின் வழியாக 2-3 துளி விட மூக்கிலும் வாயிலும் கபத்தை வெளியாக்கும். இதனால் மூர்ச்சை, பற்கிட்டல், காக்கைவலி முதலியவைகள் போம்.

மதனகாமப்பூ.

(Cycas Circinalis—Flower)

பித்தமே மேல்நோக்கும் பேசவொணுப் பேதிகட்டும்
சித்தமது தான்குளிர்ந்து சீர்விந்து—மெத்தவுமே
கட்டி யிறுகிநிற்குங் காண்மதனப் பூவதனல்
நட்டமிலை மாதரசே நாடு.

குணம்:—(இ-ள்.) மதனகாமப்பூவால் பித்தம் அதிகரிக்கும், பேதிகட்டும், விந்து இறுகும் என்க.

செய்கை:—பித்தகாரி, காமவிர்த்தினி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மதனகாமப்பூவானது மலையாள தேசங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றது. இதன் புஷ்பம், கொட்டை, காம்பு முதலியவற்றைக் கூட்டிப் பொடிசெய்து விற்பதுண்டு. இதற்கு இண்டம் பொடியென்று கூறுவர். இதைச் சிறிய அளவில் சாப்பிடக் கஞ்சா அபினுக்கு உள்ள குணம் ஏற்படும். பழத்தின் அடிக்காம்பைச் சலம்விட்டு அரைத்துக் களிபோல் கிளறி முதுகின் அடிப்பாகத்தில் (இடுப்பு) பூசிவரக் குண்டிக்காய் சம்பந்தமான வியாதிகள் குணமாகும். இந்தப் புஷ்பத்தின் இதழ்

களை இடித்துச் சூரணம்செய்து தாது விருத்திக்குரிய சரக்குக ளுடன் கூட்டி லேகியங்களாகச் செய்து உபயோகிப்பதுண்டு.

மந்தாரப்பூ.

(Bauhinia Candida—Flower).

மந்தாரப் பூக்குளிர்ச்சி மன்னர் வசியமுமாஞ்
செந்தா மரைத்திருவே செப்பக்கேள்—சந்ததமுங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காணுங் கோதிப்பகற்று
மண்ணினறும் பூவெனவே வை.

குணம்:—(இ-ள்.) குளிர்ச்சியுள்ள நல்ல மந்தாரப்பூ ராஜ வசியத்தையும், விழிக்குக் குளிர்ச்சியையும் செய்யும். சரீர வெப் பத்தை நீக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த புஷ்பத்தைச் சூரணம் செய்து சர்க்கரை கூட்டி வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் அந்தி சந்தி சாப்பிட்டுவர உஷ்ணஇருமல், இரத்தமூலம், பெரும்பாடு உட்காங்கை முதலியவைகள் குணமாகும்.

இந்தப் புஷ்பத்தைக் கியாழமிட்டுக் கொடுக்க முற்கூறப்பட்ட நோய்கள் குணமாகும்.

இந்தப் புஷ்பத்தைக் குளிர்ச்சிக்காகக் கூறப்பட்டச் சில தைலங்களிற் கூட்டிக் கொள்வதுண்டு.

மயிர்மாணிக்கம்.

(Sida Rhombifolia).

மயிர்மாணிக் கத்தால் வளர்மேகம் போகுஞ்
செயிரான மேகவெட்டை தீருங்—கயரோகம்
மாவிரணம் போக்கவிதில் வல்லிரதஞ் சேர்த்தரைத்துத்
தாவியுண்பா ருண்டறிந்தோர் தாம்.

குணம்:—(இ-ள்.) மயிர்மாணிக்கத்தால் ஒழுக்குமேகமும், வெள்ளையும், க்ஷயமும் நீங்கும். இதில் முறைப்படி சூதஞ்சேர்த் துண்ண விரணம் ஆறும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இம் மூலிகையைச் சிறிது மிளகுடன் சேர்த்து அரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு தினம் 1 வேளை

7 நாள் கொடுக்க வெள்ளை வெட்டை குணமாகும். இதன் இலையை அரைத்து வீக்கங்களுக்கும் கட்டிகளுக்கும் வைத்துக்கட்ட மிருதுவாகும். சீழ்கொண்டிருந்தால் சீக்கிரம் பழுத்துடையும். ஒரு எடை வேருக்கு 10 எடை சலம் விட்டு ¼ மணி நேரம் கொதிக்கக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுத்துவர மேகவாயு, வெள்ளை, மேகக்காங்கை முதலியவைகள் போம்.

¼ பலம் வாலைரசத்தைக் கல்வத்திலிட்டு மயிர்மாணிக்கம் இலையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு 4 ஜாமம்வரை அரைக்க ரசம் உருவு தெரியாமல் மடிந்துவிடும். ஒரு சமயம் அரைப்பின் குறைவால் சரிவர ரசம் மடியவில்லை என்று உணரின் மீண்டும் 1 அல்லது 2 ஜாமம் அரைத்துப் பயறு அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேக திடத்திற்கேற்றவாறு 1 அல்லது 2 மாத்திரை தினம் 2 வேளை வெல்லத்தில் வைத்து 3 அல்லது 5 நாள் கொடுக்க மேக ரணம் ஆறும். தாது பலம் மிகும். பத்தியம் பால் அன்னமே சிறந்தது.

மரக்காரைப்பழம்.

(Randia Dumetorium—Fruit).

சுரமும் பொருமலும்போந் தோன்மயக்கு மில்லு
தரவூதற் போமறிவுந் தங்கும்—பருகு
மரக்காரை மெல்லித்ழ்வா யஞ்சுகமே நாளு
மரக்காரை யின்கனியை வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) மரக்காரைப் பழத்தினால் சுரம், வயிற்றுப் பிசம், மூர்ச்சை, மகோதரம் இவைகள் நீங்கும். புத்திக்குத் தெளிவுண்டாகும் என்க.

செய்கை:—வமனகாரி, அதிக அளவில் மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தைச் சாதாரணமாக வாந்தியாகக் கொடுப்பதுண்டு. இந்தப் பழத்தின் தோலையும் கொட்டையையும் நீக்கித் தசையை நன்றாய் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, சோம்பின் கியாழத்தில் 10-30 குன்றி எடை போட்டுக் கலக்கிச் சிறிது நேரம் ஊறவிட்டு வடித்துச் சிறிது தேன் கூட்டி உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும். 3 மாதத்திற்குட்பட்ட கருப்பிணிகளுக்குக் கொடுக்கக் கருவை வெளியாக்கும்.

இந்தச் சூரணத்தைச் சிறிய அளவாக 3-5 குன்றி எடை கொடுக்க வியர்வை தட்டிச் சுரம் விடும். இருமல் உண்டாகிக் கபம் வெளியாகும். இத்தகைய சிகிச்சையால் பாரிசவாதம், பக்கசூலை, இருமல், மூர்ச்சை, நரம்புகளிலும் மூளைகளிலும் பற்றிய சீதளம் முதலியவைகள் குணமாகும்.

மரக்காரை வேர்.

(Randia Dumetorum—Root).

சீதங் கடுப்பு திரிதோஷ மாந்தபித்தம்
வாதங் கரப்பனைய மாந்தகண—மியாதிங்
கிருக்கா வமனமருந் தென்பா ருலகில்
மரக்காரை வேரால் மதி.

குணம்:—(இ-ள்.) மரக்காரைவேரால் சீதக்கடுப்பு, திரிதோஷம், உதிரபித்தம், வாதநோய், கரப்பான், கபம், கணமாந்தம் இவைகள் போம். இது வாந்தி மருந்து என்க.

செய்கை:—வமனகாரி, சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதனை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு $\frac{3}{4}$-1 விராகனெடை வீதம் சதகுப்பி, சோம்பு, ஓமம் முதலிய கியாழங்களில் ஏதேனும் ஒன்றில் போட்டுச் சிறிது நேரம் ஊறவிட்டு வடிகட்டிக் கொடுக்க வாந்தியாகும். வாதபித்த கப உபரிகள் அடங்கும். இந்தச் சூரணத்தில் வேளைக்கு 3-5 குன்றியெடை கொடுக்கச் சீதபேதி, கப உபத்திரவம், வாதநோய்கள் போம்.

வேர்ப் பட்டையைச் சலம் விட்டு நன்கு அரைத்துக் கணுச் சூலைக்குப் பற்றுப்போட விரைவில் குணமாகும். இதைக் கட்டிகளின் மேல் தழும்பப் பூசிவரச் சீழ்கொண்டிருப்பின் உடைத்துக் கொள்ளும், இன்றேல் அழுந்திவிடும்.

மரமஞ்சள்.

(Coscinium Fenestratium).

அழன்றகண மூல மருசி யுடனே
யுழன்ற கணச்சுரமு மோடுஞ்—சுழன்றுள்ளே
வீறுசுர முந்தணியும் வீசுமர மஞ்சளுக்குத்
தேறு மொழியனமே செப்பு.

குணம்:—(இ-ள்.) மரமஞ்சளுக்கு முக்குகணம், மூலநோய், அரோசிகம், கணச்சுரம், உட்சுரம் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—பலகாரி, ஜடராக்கினிவர்த்தினி, சங்கோசனகாரி, முறைவியாதிரோதி, வியதாபேதகாரி, சுவேதகாரி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை இடித்துச் சூரணமாக்கி வேளைக்கு ½ விராகனெடை தேனிலாவது சர்க்கரையுடனாவது கலந்து கொடுக்கலாம். அல்லது 2 அவுன்ஸ் வெந்நீரில் போட்டு 10-15 நிமிஷம் ஊறவிட்டு வடித்துப் பால் சர்க்கரை கூட்டிக்கொடுக்கலாம். இதனால் வாயு, உதிரச்சிக்கல் நீங்கும். இதனை விசேஷமாகக் குளிர் சுரம், மாறல்சுரம் முதலியவற்றிற்கு அதிகமாகச் சேர்ப்பதுண்டு. இந்த மரமஞ்சளை அபினுடன் கூட்டிச் சலம் விட்டு உரைத்துக் கண்களைச் சுற்றிப் பற்றுப் போடக் கண்ணோய் நீங்கும்.

மராட்டிப்பூ.

(Spilanthus Oleraceae—Flower).

விந்துகட்டும் நாச்சுரணை மேவும்பல் நோயகற்றும்
வந்தபெரும் பாட்டின் வலியகற்றும்—முந்தும்
தலைவலியும் பேதியையும் சாடுமராட் டிப்பூ
நிலைமையினை மாதே நிகழ்த்து.

குணம்:—(இ-ள்.) மராட்டிப்பூவால் தாதுபலமும், நாவின் சுரணையும் விசேஷிக்கும்; பல்வலி, பெரும்பாடு, தலைவலி, பேதி இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை வாயிலிட்டு மெல்லப் பல்வலி, பல்லீறுகளின் வீக்கம், நாவின்சுரணையின்மை முதலியவைகள் நீங்கும். இதை லேகியங்களிலும், சூரணங்களிலும் சேர்த்து உபயோகிக்கத் தாது விருத்தியுண்டாகும், பேதியும் கட்டும். இதைக் குழந்தைகளுக்கு வாயிலிட்டு மென்று சிறிது நேரம் அடக்கி வைத்திருந்து உமிழ்ந்துவிடச் செய்ய அவர்களுக்குண்டான தெற்றுவாய் நீங்கும். இது, அதிக அளவு கொடுப்பதினாலும் மென்று உள்ளே விழுங்க விடுவதினாலும் மயக்கத்தை யுண்டாக்கும். ஆதலால் சிறிய அளவாகக் கொடுத்து உமிழ்ந்து விடும்படியாகக் கவனிக்க வேண்டியது பண்டிதர்களின் கடமையாகும்.

குறிப்பு:—அன்னுசிப்பூவை மராட்டி மொக்கு என்று கடைகளில் கொடுப்பது வழக்கம். இனமறிந்து அவிழ்த்த பாகங்களில் கூட்டிக்கொள்ளவும்.

மருட்கிழங்கு.

(Sansevicria Roxburghiana).

தொண்டைக்கட் டையந் தொலையு மகோதரமும்
பண்டைப்பல் வீக்கம் பறக்குங்காண்—கெண்டைவிழி
மானே மருட்கிழங்கால் மாறுமு லங்களெலாந்
தானே பசியெழும்புந் தான்.

குணம்:—(இ-ள்.) மருட்கிழங்கால் நெஞ்சைப்பற்றிய கபக்கட்டு, பெருவயிறு, பலவித சோகை, மூலம் இவைகள் போம். தீபாக்கினி யுண்டாம் என்க.

செய்கை:— ஜடராக்கினிவர்த்தினி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கை அரைத்து ஒரு கழற்சிக்காய்ப் பிரமாணம் ஆவின் பாலில் கலக்கி வடிகட்டி அந்தி சந்தி கொடுக்கவும், அல்லது இதன் வேர் ரசத்தில் வேளைக்கு ½-1 தேக்கரண்டியளவு சலத்தில்விளாவித் தினம் 2 வேளை கொடுக்கவும். இவை ரத்தத்திலுள்ள கொதிப்பை ஆற்றும். இன்னும் நாட்சென்ற இருமல், மூலம், கரப்பான், வண்டுக்கடி, எரிகுட்டம், தாகம், இருதயவியாதி, கணுச்சூலை முதலியவைகளைப் போக்கும். இதன் மடலை நெருப்பனலில் வதக்கிப் பிழிந்த சாற்றை வேளைக்கு 10-15 துளி முலைப்பாலோடு கலந்து குழந்தைகட்குக் கொடுக்கத் தொண்டையிலுள்ள கபத்தை நீக்கும். இந்த இலைச்சாற்றைக் காதுவலிக்கு விடக் குணமாகும். இன்னும் இதனை மூலரோகத்திற்கு உரித்தான லேகியங்களிற் சேர்ப்பதுண்டு.

மருதமரம்.

(Terminalia Arjuna).

ஓதமெனு நீரிழிவை யோட்டும் பிரமேகங்
காதமெனு வோடக் கடத்துங்காண்—போத
மயக்க மொடுதாக மாருச் சுரத்தின்
றயக்கமறுக் கும்மருதந் தான்.

(இதுவுமது)

குட்டரோ கங்கிருமி கோர வயிற்றுவலி
துட்டவறட் சூலை தொலையுங்காண்—கிட்டிப்
பொருதம்பா மென்னும்விழிப் பூவையரே நாளு
மருதம்பா ரென்றளவில் மாய்ந்து.

குணம்:—(இ-ள்.) மருதமரமானது வெகுமூத்திரம், பிரமியம், மயக்கம், விதாகம், நீங்காத சுரத்தினால் வரும் ஆயாசம், பெருவியாதி, கிருமிரோகம், உதரநோய், வறட்சூலை இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—பட்டைக்கு: சங்கோசனகாரி, பலகாரி, வேதனை சாந்தினி. இலைக்கு: சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—1 பலம் பட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை கொடுக்கலாம். இது பெரும்பாடு, பேதி, சீதபேதி முதலியவற்றைக் குணமாக்கும். இன்னும் ஜீவஜெந்துக்களின் விஷத்தையும் பித்த உபரியையும் குணப்படுத்தும். 6 அவுன்ஸ் காய்ச்சிய பசுவின்பாலில் $\frac{1}{2}$ விராகனெடை மருதம் பட்டைச் சூரணமும் போதிய அளவு சர்க்கரையும் கூட்டிக் கலக்கித் தினம் 1 வேளை வெறும் வயிற்றில் கொடுத்துவர இருதய சம்பந்தமான பல வியாதிகள் குணமாகும்.

இதன் பட்டைச் சூரணமும், செஞ்சந்தனச் சூரணமும் வகைக்கு அரைக்கால் ரூபாய் எடைவீதம் 3 அவுன்ஸ் அரிசி கழுவி எடுத்த சலத்தில் போட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிக்கொடுக்க இருமலில் இரத்தம் விழுதல் குணமாகும். பட்டைச் சூரணத்தை வெள்ளாட்டுப் பாலில் போட்டுக்கொடுக்க இரத்தசீதபேதி குணமாகும்.

இதை நசியமிடத் தலைபாரம், சயித்தியம், சலதோஷம் முதலியவைகள் நீங்கும். இதன் இலையை வதக்கிப் புண், புரையோடும் ரணம் இவைகட்கு மேல்வைத்துக் கட்டக் குணமாகும்.

மருதோன்றி இலை.

(Lawsonia Alba—Leaves).

சொல்லுநகக் கண்களிலே சுற்றிவரும் புண்ணரிப்புக்
கொல்லும் மதுமேகங் கொம்மைமுலை—மெல்லியர்க்குக்
காணும் பெரும்பாடு கட்டழிக்கும் வெட்டையெலாம்
நாணுமரு தோன்றிக்கு நாடு.

குணம்:—(இ-ள்.) மருதோன்றி இலையால் நகக்கண்களிலே சுற்றி அரிப்புடன் வருகிற ரணங்கள், மதுமேகம், பெரும்பாடு, வெட்டை முதலிய ரோகங்கள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பித்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைக் காடியிலாவது பழச்சாற்றிலாவது அரைத்துக் குதிக்கால் வலிக்கும், பாதங்களின் எரிச்சலுக்கும் வைத்துக் கட்டக் குணமாகும்.

இந்த இலையைச் சுத்தசலம் விட்டரைத்து மேகவாயுப் பிடிப்புகளுக்குப் பற்றுப்போடக் குணமாகும். வீக்கமிருப்பினும் நிவர்த்தி செய்யும். இந்த இலையைச் சலத்தில் போட்டு வேகவைத்து வடித்து வாய்கொப்புளிக்க வாய்ரணம் ஆறும். இந்த இலையை நன்றாய் அரைத்து, ஒரு நெல்லிக்காய்ப் பிரமாணம் பசுவின்பாலில் கரைத்து, 2-3 தடவை வடிக்கட்டித் தினம் ஒரு வேளை 3 நாள் காலை நேரத்தில் சாப்பிட்டுப் பாலன்னம் உண்ண அதிக நீர்போதல், வெள்ளை, பெரும்பாடு முதலிய ரோகங்கள் போம். இதன் இலையை வெண்கருவிட்டு அரைத்துச் சொத்தை நகங்களுக்குவைத்துக்கட்டி 3 நாள் வரையில் ஈரம்படாமல் வைத்துவைக்கவும். இப்படி 4-5 தினத்திற்கு ஒரு முறை செய்துகொண்டுவரச் சில தினத்தில் சொத்தை நகங்கள் போய்ச் சுத்தமான நகங்கள் முளைக்கும். இந்த இலையை அரைத்து நல்லெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி வடித்துக் கூந்தலுக்குத் தடவிக்கொண்டுவர மயிர் செழிப்பாக வளரும்.

மருதோன்றி வித்து.

(Lawsonia Alba—Seeds).

மருதோன்றி யின்வித்தால் வன்பில்லி யேவல்
விருதாண்ட பேய்பூதம் வீயு—முருதோன்று
துள்ளுருக்கும் மேகவெட்டை ஓடும் பெரும்பாடு
கள்ளவிழி மாதரசே காண்.

குணம்:—(இ-ள்.) மருதோன்றி வித்தினால் பில்லி, சூனியம், பேய், பூதம், ஸ்திரீகளுக்குண்டாகும் வெள்ளை, பெரும்பாடு முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:--இதனைப் பொடித்துக் கரி நெருப்பின் மீது போட்டுப் புகையுண்டாக்க மானிடர்களுக்கு உண்டாகும் திகிலாலாகிய பில்லி, சூனியம், பேய், பூதம் முதலிய உபத்திரவங்கள் நீங்கும். இதன் உண்மையை ஆராயுமிடத்து இப்புகையானது அதிகக் கொடூரமான பித்த உபரியை மூளையினின்று தணிக்கை செய்யத்தக்கதாதலால் இதனை ஷை ரோகங்களுக்காகப் பரிகாரம் செய்கிறவர்கள் அநேகமாய் இப்பொடியைக்கொண்டு தூபமிடுவது வழக்கம். இதன் வித்தையும் இலையையும் அரைத்துச் சுண்டைக் காய்ப் பிரமாணம் ஒரு சீலையில் முடிந்து யோனியின் உட்புறத்தில் செலுத்தி 1-2 சாமம் வைக்க ஸ்திரீகளுக்கு காணும் வெள்ளை, பெரும்பாடு இவைகள் நீங்கும். இதில் குணமில்லை யென்றுணரின் மீண்டும் முன்போல் 2-3 நாள் செய்ய அவசியம் குணமுண்டாகும்.

மருதோன்றி வேர்.

(Lawsonia Alba—Root).

சோணித தோஷமெலாஞ் சொல்லாம லேகிவிடும்
பேணுவர்க்கி ரத்தமொடு பித்தம்போங்—காணு
ஒருதோன்ற லென்னுமத னேதுமெழின் மாதே
மருதோன்றி வேரால் மறைந்து.

குணம்:—(இ-ள்.) மருதோன்றி வேரால் மாதர்கள் ருதுகால சோணிததோஷங்கள், அசிர்க்கரரோகம், பித்தநோய், ஆகிய இவை நீங்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சமனகாரி.

உபயோகிக்கும் முறை: —1 கழஞ்சு நிறையுள்ள முற்றின மருதோன்றி வேரைப் பஞ்சுபோல் நசுக்கி ½ படி சுத்த சலத்தில் போட்டு, ஓர் இரவு ஊற வைத்து, மறுநாள் காலையில் அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து ஆறவிட்டுச் சாப்பிடுக. இப்படி 40 நாள் வரையில் சாப்பிட ஆரம்பமான குஷ்டம் தவறாமல் நீங்கும். இந்தப்படி 10 நாள் கொள்ளச் சொத்தை விழுந்த நகங்கள் விழுந்து புதிய சுத்தமான நகங்கள் முளைக்கும். இன்னும் இக்கியாழம் காமாலை, கல்லடைப்பு, நீரடைப்பு, உதிரச்சிக்கல் இவைகளைக் குணப்படுத்தும். ½ கழஞ்சு எடையுள்ள வேரைப் பாலில் அரைத்து வடிகட்டிச் சாப்பிடச் சில நாளில் குன்மம் போம்.

மருளூமத்தை.

(Xanthium Strumarium).

சீதசுரம் நீரேற்றஞ் சில்விடங்கள் மந்தத்தோ
டூதையிவை யெல்லா மொழியுங்காண்—போத
இருளூருங் கூந்த லெழின்மாதே கான
மருளூமத் தைக்கறிந்து வை.

குணம்:—(இ-ள்.) மருளூமத்தைக்குக் குளிர்சுரம், சரீரத்தி லுண்டான நீர்க்கோவை, அற்பவீரிய விஷம், அக்கினிமந்தம், வாததோஷம், இவைகள் விலகும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் வித்தைச் செம்மண் சலத்தில் ஒரு நாள் ஊறப்போட்டு அதன்பின் எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு உலர்த்தி எடுக்கச் சுத்தியாகும். இதைத் தாது விருத்திக்குரிய லேகியங்களில் சேர்ப்பதுண்டு. சிறிய அளவில் உட்கொள்ளத் தீபாக்கினியை யுண்டாக்கி, உற்சாகத்தைக் கொடுத்து, இந்திரிய ஸ்தம்பனத்தை யுண்டாக்கும். இதன் அளவு அதிகப் படின் சோர்வடைதல், பிதற்றல், புறளல், பிரமை முதலிய துர்க் குணங்களை யுண்டாக்கும்.

மருவு.

(Origanum Marjorana).

உந்தி வலிகுன்ம முற்ற ருதுசூலை
சந்தி லுறுவீக்கஞ் சார்வலியும்—கந்தமிகும்
பூக்குழலே விட்டொழியும் பூதலத்தே நன்மருவைப்
போக்கறிந்தே யீயப் புகின்.

குணம்:—(இ-ள்.) இவ்வுலகில் மருவை உபயோகிக்கும் விதமறிந்து கொடுக்கும் பக்ஷத்தில் வயிற்றுவலி, குன்மம், சூசிகா வாதம், கணுக்காலில் உண்டான வீக்கம், வலி முதலியவைகள் விட்டு நீங்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, பலகாரி, அங்காகர்ஷண நாசினி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையில் 1 பலம் அளவிற்கு ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு, 10 பலம் கொதிக்கிற ஜலம் விட்டு வாய் மூடி 2 மணி நேரம் ஊறவைத்து வடித்து, வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம், தினம் 3 வேளை கொடுத்துவர வயிற்று வலி, குன்மம், சூசிகாவாதம், வலி முதலியவைகள் குணமாகும்.

இன்னும், இதன் இலையை வதக்கி ஒற்றடம் கொடுப்பதினு லாவது அல்லது வைத்துக் கட்டுவதினுலாவது கணுக்களில் உண் டான வீக்கம் குணப்படும்.

மலைதாங்கிப்பூண்டு.

(Sida Acuta).

வாதமெண்ப துஞ்சுரமும் வாத சயித்தியமுங்
காதுவலி பாரங் கரந்திடுங்காண்—போதச்
சிலைதாங்கி நின்றநுதற் செந்திருவே நீயும்
மலைதாங்கிப் பூண்டை வழுத்து.

குணம்:—(இ-ள்.) மலைதாங்கிப் பூண்டினுல் சகல வாத ரோகங்கள், சுரம், வாதகபதொந்தம், கர்ணசூலை, தேகப்பாரிப்பு இவைகள் நீங்கும் என்க.

(இதுவுமது)

ஐயநஞ் சூதைபித்தத் திக்கரைவு மாபிரமி
வெய்யசுரம் பேதி விரணமெலாம்—வையம்விடுத்
தெட்டத் திருப்பிவிடு மென்பையூ னுக்குமன்றி
வட்டத் திருப்பிவிடு மா.

குணம்:—(இ-ள்.) வட்டத்திருப்பியால் சிலேத்துமகோபம், விஷம், வாததோஷம், பித்தநோய், அஸ்திசிராவம், பிரமியம், பித்தசுரம், அதிசாரம், சிரங்கு ஆகிய இவைகள் நீங்கும். இது மாமிச தாதுவை விருத்தி செய்யும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, பல காரி, சுரஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேருக்கு ஏறத்தாழப் பொன் முசுட்டையினுடைய கசப்புச் சுவை பொருந்தி யிருக்கும். இது விசேஷமாக இரைப்பையினுடைய தொழிலைச் சரிவர நடத்தவும், வியர்வை யுண்டாக்கிச் சுரத்தைச் சாந்தப்படுத்தவும், வாத ரோகங்களைக் கண்டிக்கவும் உபயோகப்படுகின்றது. இதன்

வேரை ½ தோலா எடை சிதைத்து, ஒரு குடுவையில் போட்டு ¼ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, 2 வேளை யாகப் பங்கிட்டுக் கொடுக்கலாம். அப்போது வியர்வை விட்டுச் சுரம் தணியும். அப்படி ஒருவேளை கோரிய குணம் ஏற்படாவிட்டால் ஷை வேர் அளவை அதிகப்படிச் சேர்த்துக் கொள்க. இந்தக் கியாழத்தில் இஞ்சி ½ தோலா எடை சேர்த்துக் கொள்வது அதிக உத்தமம். இதனால் இரைப்பையில் சேர்ந்துள்ள வாயுவும் நீங்கும். இதன் வேருடன் சிட்டுக்குருவி (அடைக்கலங் குருவி) மலம் கூட்டியரைத்துக் கட்டிகளுக்குப் போட உடைத்துக் கொள்ளும். இதன் இலையை நல்லெண்ணெய் விட்டு வதக்கிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட அமுந்திவிடும், சீழ் கொண்டிருந்தால் உடைத்துக் கொள்ளும்.

மலைப்பாலை மரம்.

(Malaippalai tree).

விக்கல்வலி வாந்திகுன்ம மீறுபக்கச் சூலையோடு
மைக்கரப்பான் மந்தமிவை மாறுங்காண்—மைக்கண்
நிரைப்பாலை யொத்தமொழி நேரிழையே கேளாய்
வரைப்பாலை யையுண்ட வர்க்கு.

குணம்:—(இ-ள்.) மலைப்பாலை மரத்திற்கு விக்கல், ஐவகை வலி, வாந்தி, பக்கசூலை, குன்மம், கருங்கரப்பான், மந்தாக்கினி இவைகள் நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இது ஏறத்தாழ குடசப்பாலையை ஒத்திருக்கும். இதன் பட்டையும், வேர்ப்பட்டையும் கறுப்பு நிறமாக இருக்கும். கசப்புச் சுவையும் மிகுந்து இருக்கும். இதைப் பாம்புக்கடி, தேள்கொட்டு இவைகட்குக் கொடுப்பதுண்டு. மற்றப்படி இதன் பிரயோகம் சாதாரணமாகக் குடசப்பாலைக்குக் கூறப்பட்டதேயாகும்.

மலைவேப்ப மரம்.

(Melia Azedarach).

மலட்டுப் புழுவும் வயிற்றின் வலியு
மலட்டுவாய் வும்போ மடங்கிக்—கோலட்டு
முலைவேஞ் சினவேற்கண் ணேதிமமே கேளாய்
மலைவேம்பின் பேரை வழுத்து.

குணம்:—(இ-ள்.) மலை வேப்பமரத்திற்கு மலட்டுக்கிருமி, ரத்தகுன்மரோகம், ஓடிஓடிக் குதிக்கின்ற வாதம் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—இலைக்கும் பட்டைக்கும்: கிருமிநாசினி, ருது வர்த்தனகாரி, தாதுக்ஷீணரோதி, மலகாரி, முறைவியாதிரோதி, வமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பச்சை வேர்ப்பட்டையை 1 பலம் கொண்டுவந்து பஞ்சுபோல் இடித்து ஒரு குடுவையில் போட்டு $\frac{3}{4}$ படி சலம் விட்டு, ஒரு ஆழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு அரைப் பாலடை வீதம் 3 மணி நேரத்திற்கு ஒரு முறையாகக் கொடுத்துவந்து, மறுநாள் காலையில் சிற்றாமணக்கெண்ணெய் அல்லது பேதிமருந்து ஏதாவது கொடுக்கக் கிருமிகள் வெளியாகும். இதன் இலையையும் பூவையும் அரைத்துத் தலைவலிக்குப் பூசக் குணமாகும். $\frac{1}{2}$ பலம் பட்டைக்கு $\frac{1}{4}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு $1\frac{1}{2}$ அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை கொடுத்துவரத் தோல் சம்பந்தமான பல ரோகங்கள் குணமாகும். இன்னும் இதனால் கண்டமாலை, குட்டம் முதலியவைகள் போம். மலட்டுப் பூச்சி என்னும் கிருமிகளால் கருப்பம் தடைப்பட்ட ஸ்திரீகளுக்கு, மாதவிலக்குக் காலத்தில் ஸ்நானம்செய்த 3-வது நாள், இதன் இலைச் சாற்றைக் காலையில் ஒரு வேளை ஒரு தேக்கரண்டியளவு, பாலுடன் கலக்கிக் கொடுக்கக் கிருமிகள் விலகிக் கருப்பம் உண்டாகும். சிலருக்கு வாந்தியும் பேதியும் ஆவதுமுண்டு.

மலைவேப்பம் பிசின்.

(Melia Azedarach—Gum).

மலைவேம்பு தன்பிசின்றான் வாதக் கரப்பான்
வலுமேகக் கட்டியிவை மாற்று—நலமீறு
தாதுவுமுண் டாக்குஞ் சலப்பேதி யைக்கட்டு
மாதே யிதனை வழுத்து.

குணம்:—(இ-ள்.) மலைவேப்பம்பிசின் கருங்கரப்பான், மேகக் கட்டி, சலமந்தபேதி ஆகிய இவைகளை நீக்கும். சுக்கிலத்தை விருத்தியாக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தாதுவிருத்திக்காகக் கூறப்பட்ட லேகியங்களில் கூட்டிச் செய்யின், தாதுவைப் பலப்படுத்தும். இந்தப் பிசினுடன் நெல்லிவற்றல், சீனக்கற்கண்டு கூட்டிச் சூரணித்து, வேளைக்குத் திரிகடிப்பிரமாணம் நெய்யில் மத்தித்துச் சாப்பிடச் சலபேதி கட்டும்.

மல்லிகைப்பூ.

(Jasminum Sambac).

போகமிக வுண்டாகும் பொங்குகபங் கட்பிரமை
யாகவனற் சூனியமு மண்டுமோ—பாகனையாய்
மன்னு திருவசியம் வாய்க்குஞ்சூ டென்றெவரும்
பன்னுமல்லி கைப்பூவாற் பார்.

குணம்:—(இ-ள்.) புணர்ச்சியிலதிவிருப்ப முண்டாக்குகின்ற மல்லிகைப்பூவால் கோழை, கண்மயக்கம், தேக உஷ்ணம், சூனியம் ஆகிய இவை நீங்கும். லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும். இதனை உஷ்ணம் என்பர்.

செய்கை:—க்ஷீரநாசினி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—நல்லெண்ணெயில் இப் புஷ்பங்களைப் போட்டு வெய்யிலில் வைத்துப் புஷ்பங்கள் வாடிவதங்கிக் கருத்தபின் வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொண்டு, தினம் கூந்தலுக்குத் தடவிவரச் சுகந்த வாசனையையும் உற்சாகத்தையும் உண்டாக்கும். இந்தப் புஷ்பத்தை ஸ்திரீகள் ஸ்தனங்களுக்கு 3 நாள் வைத்துக் கட்டப் பால்சுரப்பை அடக்கிவிடும். இந்த இனத்தில் கொடிமல்லிகை, ஊசிமல்லிகை, குடமல்லிகை, ஜாதிமல்லிகை எனப் பலவகைகள் உண்டு. ஆயினும் குணம் ஏறத்தாழ ஒன்றேயாகும்.

மாகாளிக் கிழங்கு.

(Hemidesmus Indicus—Big variety).

அனலையதி பித்தத்தை யாற்றும் பசியா
மனலையெழுப் புங்கபம றுக்கு—மனிலத்தாம்
வேகாளத் தைத்தணிக்கு மென்கொடியே காட்டிலுறை
மாகாளிக் கந்தமிது வாம்.

குணம்:—(இ-ள்.) மாகாளிக்கிழங்கு உட்சூடு, பித்தகோபம், சிலேஷ்மநோய், வாததோஷம் இவைகளை நீக்கும். ஜடராக்கினியை வளர்ப்பிக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கிழங்கைச் சுத்தமாகச் சலம் விட்டு மண்ணில்லாமல் அலம்பி, மேல்தோல்சீவிச் சிறுதுண்டுகளாக நறுக்கி, எலுமிச்சம்பழத்துடன் கூட்டி ஊறுகாயாகப்போட்டு அன்னத்துடன் உபயோகப்படுத்த உட்சூடு, பித்தம், அரோசகம் இவைகள்போம். ஜீவாக்கினியை அதிகப்படுத்தும்.

மாங்காய்.

(Mangifera Indica—Green Pod).

தாதுநட்டம் வாதந் தனிக்கிரந்தி யாம்பசிபோங்
காதுமுட்டப் பக்குவிடுங் காயமதி—லோதுகின்ற
பாங்காருப் புண்வளரும் பற்கூசுஞ் சோற்குளறு
மாங்காயுண் பாரை மறு.

குணம்:—(இ-ள்.) மாங்காயால் சுக்கிலநாசம், மிருவாயு, சிரங்கு, தேகம்வெடித்தலோடு ஆறுவிரணம், தந்தங்கூசுதல், சொற்றவறல் இவையுண்டாம்; பசிபோம் என்க.

உபயோகிக்கும் முறை:—தனிப் பச்சைக்காயை யுண்ணப் பல தீமைகள் உண்டாவதுடன், இரத்தமுங் கெடும். ஆனால் இதனை ஊறுகாயாகப் போட்டு உபயோகப்படுத்த வாய்க்கு இன்பத்தையூட்டி ஆகாரத்தை அதிகமாக விரும்பச் செய்யும். தோலையும் கொட்டையையும் போக்கிய மாங்காய்ச் சதை பலம் 1, விதை போக்கிய மிளகாய் பலம் $1\frac{1}{2}$, கோது கொட்டை நீக்கியப் புளி பலம் 2, கற்கண்டு பலம் 1, தோல் சீவிய இஞ்சி பலம் $1\frac{1}{2}$, வெள்ளைப்பூண்டு பலம் $\frac{3}{4}$, விதையில்லாத திராட்சைப்பழம் பலம் $1\frac{1}{2}$, கறியுப்பு பலம் 1; இவைகளை அம்மியிலிட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகக் காடிவிட்டு அரைத்துச் சட்ணி பதமாக வழித்தெடுக்கவும். இதை அன்னத்துடன் உபயோகப்படுத்த நாவிற்கு ருசியாக இருக்கும், அன்னம் அதிகம் செல்லும்.

மாங்கொட்டை.

(Mangifera Indica—Nut).

பேசுமோ சீதப் பெருக்குஞ்சோ ரிக்கடுப்பும்
வீசுமோ மூலமுறு வெங்கொதிப்பு—மாசுடைய
பூங்கொட்டை யைத்தள்ளிப் போட்டுக் கனியிலார்
மாங்கொட்டை யைக்காணில் வாது.

குணம்:—(இ-ள்.) மாம்பழக்கொட்டைப் பருப்பால் சீத பேதி, ரத்தாதிசாரம், உதிரக்கடுப்பு, மூலச்சூடு ஆகிய இவைகள் போகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் பருப்பைத் துண்டு துண்டாக நறுக்கி நெய்விட்டு வதக்கி அரைத்து, மிதமாகக் காரமிட்ட புளிக் குழம்பில் கூட்டிப் பாகப்படிப் பக்குவப்படுத்தி அன்னத்துடன் கூட்டிச் சாப்பிடப் பேதி கட்டும். மாங்கொட்டைப் பருப்பை அரைத்துத் தயிரில் கலக்கிச் சாப்பிட மூலச்சூடு, உஷ்ணவாயுவா லுண்டான பேதி இவைகள் போம்.

மாங்கொட்டைப் பருப்பைச் சிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி இடித்துச்சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 7-10 குன்றி எடை மோரில் கலக்கிச் சாப்பிடத் திமிர்ப் பூச்சிகள் மடியும். இரத்தமூலம், பெரும்பாடு, பேதி இவைகள் போம்.

மாசிக்காய்.

(Quercus Infectoria—Nut).

அக்கரங்கள் போக்கிவிடு மாருத வெப்பாற்று
மெய்க்குறுதி மாசிக்காய் மென்மேலுந்—தக்கதொரு
பாலர் கணச்சூடும் பன்மேக முந்தொலைக்கும்
வேலனைய கண்ணாய் விரி.

குணம்:—(இ-ள்.) மாசிக்காய் ஜிக்வாகண்டகம், மாருத உட் சூடு, சிசுக்களின் கணச்சூடு, பல மேகங்கள் இவைகளை நீக்கும். உடற்குப் பலந்தரும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, முறைவியாதிரோதி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு $\frac{1}{8}$-$\frac{1}{4}$ விராகனெடை தேன், நெய் இவைகளில் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கப் பெரும்பாடு, அதிசாரபேதி, ரத்தபேதி, சீதசுரம், அதிக வியர்வை, பெண்குறியில் காணும் கசிவு இவைகள் குணமாகும். இதன் சூரணத்தைக் கோழிமுட்டையின் மஞ்சட் கருவில் சேர்த்து மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கக் குடலில் உண்டான புண்களும், நாட்பட்ட பேதிகளும் குணமாகும். மாசிக்காயைச் சலம் விட்டுச் சந்தனக் கல்லில் உரைத்து ஆசனவாயில் பூச அதி லுண்டான வெடிப்பு, புண் முதலிய்வைகள் ஆறும். ஆசன உறுப்பு

வெளித் தள்ளப்பட்டிருப்பதற்கு, இதை உரைத்துப் பூச உள் ளடங்கும். கண்களுக்குத் தீட்டக் கண்களில் நீர்வடிதல் நிற்கும். தேகத்திற்குப் பூச நாற்றத்தை விலக்கும். இந்தக் காயைக் காடி விட்டு உரைத்துத் தேமல், படைகளுக்குப் பூச நீங்கும். இதைக் கியாழமிட்டு வாய் கொப்புளிக்கப் பல்நோய் தீருவதுடன், ஈறு பலப் படும். இந்தச் சூரணத்தை நசியமிட ரத்தபீநசம் குணமாகும்.

குறிப்பு:—இது மரத்தினுடைய பூவிலிருந்து காய்க்கும் காய் அல்ல. ஒரு விதப்பூச்சி இம்மரக்கிளைகளைத் துளைப்பதினால் அதி லிருந்து ஒருவித சத்து வடிந்து உறைந்து திரண்டு கட்டுப்படுவதே மாசிக்காயாகும்.

மாசிப்பத்திரி.

(Artemesia Indica—Leaves).

புளிப்புந் துவர்ப்பும் பொருந்தியிருந் தாலுந்
தளிர்த்தகா லைக்கனலைச் சாடும்—நெளித்த
வலிதனைவிட் டோட்டுமட மாதேநீ கேளாய்
மலிமாசிப் பத்திரிதான் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) புளிப்பும் துவர்ப்புமுள்ள மாசிப்பத்திரி வாதநோயையும், உஷ்ணத்தையும், ஐவகை வலியையும் போக்கும் என்க.

செய்கை:—கிருமிநாசினி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உலர்ந்த இலைச்சூரணத் தில் வேளைக்கு 10-15 குன்றி எடை வெந்நீரில் போட்டு ¼ மணி நேரம் ஊறினபின் வடிகட்டிக் கொடுக்க வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும். கல்லடைப்பு, நீர் அடைப்பு இவைகளை நீக்கும். இதன் உலர்ந்த இலைச் சூரணத்தை விரணங்களின்மேல் சிறிது தூவச் சீக்கிரத்தில் ஆறும். இதன் பச்சை இலையை ஒரு சீலையில் பரப்பி, மணலை வறுத்துச் சூடேறின சமயம் இலையின்பேரில் கொட்டிச் சீலையின் நான்கு மூலையும் ஒருங்கு சேரப் பிடித்துத் தாளக்கூடிய சூட்டில் வீக்கங்களின்பேரில் ஒற்றடம் கொடுக்க வீக் கம் குறையும். இதன் இலை ரசத்துடன் இஞ்சிச்சாறு, சர்க்கரை ஆகிய இவ்விரண்டையும் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கக் குன்மம், மூர்ச்சாரோகம், சூதகவாயு முதலியவைகள் குணமாகும். இதன் பச்சை இலையைக் கசக்கிப் பிழிந்து 1-2 துளி காதில் விடக் காது நோய் நீங்கும்.

மாதுளம்பழத்தின் ஓடு.

(Punica Granatum—Dried rind).

சீராக்கும் வாய்ப்புண்ணைச் சீதமுடன் ரத்தமெனப்
பேராக்கும் பேதிகளைப் பேசுங்கால்—நேராக்கும்
தாதுமே லோங்கும் தணியாத தாகமறும்
மாதுளத்தின் நற்கனித்தோல் மாண்பு.

குணம்:— (இ-ள்.) மாதுளம்பழத்தின் மேற்றோலினால் வாய்ப்புண், சீதபேதி, ரத்தபேதி முதலியவைகள் போம். தாது பலப்படும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—உலர்ந்த மாதுளம்பழத்தின் தோலை இடித்து, $2\frac{1}{2}$ ரூபாய் எடை சூரணத்தை ஒரு பழகின மட்குடுவை யில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு, 15-20 நிமிஷம் கொதிக்க வைத்து வடிகட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு $1\text{-}1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை உள்ளுக்குக் கொடுத்து வரச் சீதபேதி, ரத்தபேதி முதலியவைகள் போம். இந்தக் கியாழத்தைக்கொண்டு வாய் கொப்புளித்துவர வாய்ப்புண், மருந்துகளின் வீறினாலுண்டான வாய் வேக்காடு முதலியவைகள் குணமாகும்.

மாதுளம் பழம்.

(Punica Granatum—Fruit).

சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சந்நியா சஞ்சர்த்தி
யங்கையதி தாகமெமைச் சாருமோ—கங்கை
யிருந்தாடி மக்கட் கிரத்தலைச்செய் நோய்போ
மிருந்தாடி மக்கனிகட் கேண்.

(இதுவுமது)

வாய்நீரு றற்கசப்பு வாந்திவிக்கன் மந்தமிகக்
காய்வெப்ப நெஞ்செரிவு காதடைப்பு—வோயா
மயக்கமுந் தீர்ந்துவிடு மாதுளம்ப ழத்தாற்
றயக்கமறத் தேமொழியே சாற்று.

(இதுவுமது)

விருத்தம்.

வெடித்துவீழ் பழத்தைவாங்கி மெல்லிய சீலைகட்டிக்
கடுக்கெனப் பிழிந்துகொண்டு கண்டதற்கிணங்கக் கூட்டிக்
குடித்திட வெப்புமாறுங் குளிர்ந்திடு மங்கமெல்லாம்
வடித்தநன் மொழியினளே மாதுளம்பழத்தின் சாறே.

குணம்:—(இ-ள்.) *பெருமை பொருந்திய மாதுளம் கனிகளுக்குச் சந்தேகம் நீங்க, நினைப்பையும் பேச்சையும் ஒழிக்கின்ற சந்நியாச ரோகம், வாந்தி, கபம், மிகுதாகம், பித்தநோய் ஆகிய இவைகள் விலகும். புத்திர நிமித்தம் கங்கா ஸ்நானஞ் செய்து யாசிக்கச் செய்யும் மலட்டு வியாதி போகும். மேலும் அப்பழத்தைத் தின்பதினல் வாய் நீர்ச் சுரப்பும், கசப்பும், வாந்தியும், விக்கலும், மாந்தமும், அதிசுரமும், செஞ்செரிவும், காதடைப்பும் நீங்காத மயக்கமும் ஒழியும். வெடித்த அந்தப் பழத்தைச் சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய சீலையால் வடிகட்டித் தகுந்த அளவு கற்கண்டு கூட்டிச் சாப்பிட உஷ்ணம் ஒழியும். சரீர முழுதுங் குளிர்ச்சி யடையும்.*

செய்கை:—*சீதளகாரி.*

உபயோகிக்கும் முறை:—*இச்செய்யுளின் கண்ணே இனிது விளங்கும்.*

மாதுளம் பிஞ்சு.

(Punica Granatum—Tender fruit).

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்
சலக்கழிச்சல் சோரியாற் சாரும்—பலகழிச்சல்
மாளும் புளிப்பான மாதுளம்பிஞ் சாலயிலை
யாளுங்கண் மாதே யறி.

குணம் :—(இ-ள்.) *புளிமாதுளம் பிஞ்சால் மலம், சீதம், சலம், ரத்தம் இவைகளினிறமாக ஆகின்ற பற்பல அதிசார ரோகங்கள் தீரும் என்க.*

செய்கை:—*சங்கோசனகாரி, வியதாபேதகாரி.*

உபயோகிக்கும் முறை:—*புளிப்புச் சுவையையுடைய மாதுளம் பிஞ்சை யுலர்த்தி அதன்மேல் தோலை இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 10-15 குன்றி எடை தயிரில் கலக்கிக்*

கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி நிவர்த்தியாகும். இதன் பிஞ்சுக் காயை அரைத்து ஒரு சிறு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் தயிரில் கலக்கிக் கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி முதலியவைகள் குணமாகும். புளிப்பு மாதுளம் பிஞ்சு கிடைக்காத சமயத்தில் சாதாரண மாதுளம் பிஞ்சைக்கூடப் பிரயோகத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

மாதுளம்பூ.

(Punica Granatum—Flower).

வாந்திபித்த தோடமோடு மாருக் கடுப்பனலஞ்
சேர்ந்துநின்ற மூலரத்தந் தீர்க்குங்காண்—மாந்தளிர்க்கை
மாதே கறைப்புஷ்டி வல்லபல னுண்டாக்கும்
பூதலத்துண் மாதுளையின் பூ.

குணம்:—(இ-ள்.) மாதுளம்பூ பித்தவாந்தி, வயிறளைதல், வெப்பம், ரத்தமூலம் இவைகளைப் போக்கும். ரத்தப் புஷ்டியையும், பலத்தையும் தரும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—மாதுளம்பூ, மாதுளம் பிஞ்சு, மாதுளம்துளிர் இவைகளைத் தனித்தனியாகவாவது அல்லது ஒருமிக்கச் சேர்த்தாவது அரைத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்க ரத்தபேதி, சீதபேதி முதலியவைகள் போம்.

மாதுளைவித்து.

(Punica Granatum—Seeds).

சுக்கிலத்தைக் கட்டுமந்தச் சுக்கிலதோ ஷம்போக்கு
மக்கணமே கக்கடுப்பை யாற்றுங்கா—ணெக்காலுங்
கோதுளத்தெண் ணுதமலர்க் கொம்பனையாய் தித்திக்கு
மாதுளத்தின் *பீச வலி. *பீசம்=வித்து.

குணம்:—(இ-ள்.) இனிப்புள்ள மாதுளம் வித்தானது சுக்கிலத்தை இறுக்குவதுந்தவிர, அதிலுள்ள குற்றத்தையும் பிரமேகச் சுறுக்கையும் நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பசுவின் பால்விட்டு அரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிட மேகக்கடுப்பு, சுக்கில நஷ்டம் முதலியவற்றைப் போக்குவதுடன் மலத்தைக்கட்டும்.

மாமர வேர்.

(Mangifera Indica—Root).

சீதரத் தப்போக்கைச் சிக்கெனவே தான்பிடிக்கும்
போதவயிற் றுக்கடுப்பைப் போக்குங்கா—ளேதுநின்ற
வாந்தியையுந் தீர்க்குமுயர் மாமரத்தின் வேர்ப்பட்டை
பூந்துகின் மாதே புகல்.

குணம்:—(இ-ள்.) மாமரத்தின் வேர்ப்பட்டையானது சீதரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு, வாந்தி இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மரத்தின் வேர்ப்பட்டையில் 3 ரூபாய் எடை பஞ்சுபோல் தட்டி, ஒரு குடுவையில் போட்டு ஒரு படி சலம் விட்டு, $\frac{1}{4}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் அளவு தினம் 2-3 வேளை உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு, சீதபேதி, ரத்தபேதி, இரத்த பித்த வாந்தி, பெரும்பாடு இவைகள் நீங்கும். இன்னும் மாமர வேர்ப்பட்டை, நாகமரத்துப் பட்டை, மருதமரத்துப்பட்டை சமனெடையாக இடித்து, மொத்த எடைக்கு எண்மடங்கு கொதிக்கின்ற சலம்விட்டு, 3-4 மணி நேரம் ஊறப்போட்டு வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு தினம் 2-3 வேளை கொடுக்கப் பேதி, ரத்தமூலம் இவைகள் போம். இன்னும், இதன் வேர்ப்பட்டைச்சாறு $\frac{1}{2}$ அவுன்ஸுடன் சுண்ணும்புத் தெளிவு நீர் சிறிதுகூட்டித் தினம் 1 வேளை 7 நாள் கொடுக்கப் புதியதாக உண்டான வெள்ளை தீரும்.

மாம்பழம்.

(Mangifera Indica—Fruit).

தின்றுற் றினவெடுக்குந் தீபனம்போ நெஞ்செரிவா
மன்றே விழிநோ யடருங்காண்—துன்றிமிக
வாதக் கரப்பானும் வன்கிரந்தி யும்பெருகுஞ்
சூதக் கனியின் சுகம்.

குணம்:—(இ-ள்.) மாம்பழத்தை யுண்ணில் நமைச்சலும், மார்பு எரிச்சலும், கண்ணோயும், கருங்கரப்பானும், கிரந்தியும் அதிகப்படும். பசி நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இனிப்புள்ள மாம்பழத்தை உண்பதினால் தேகம் தழைக்கும். இருதயத்திற்கும் மூளைக்கும் பலம்

கொடுக்கும். மலந் தள்ளும். மூலரோகிகட்கு ஆகாது. இதன் நார் வயிற்றில் சிக்குண்டால் வயிற்றுப்பிசம், வலி முதலியவைகள் காணும். புளிப்புச்சுவை கலந்திருப்பின் தீபனமுண்டாகும், மலந் தள்ளும். இந்தப் பழத்தை யுண்ணும்போது பசுவின் பாலை நிரம்பக் குடித்தல் சாலச்சிறந்தது.

மாம்பிசின்.

(Mangifera Indica—Gum).

பெரும்பாடெங் கேயிரத்த பேதியெங்கே முக்க
றரும்பாழும் வெள்ளையெங்கே சாற்றுய்—கரும்பாம்பின்
நாதநிரி யாசஞ்செய் நங்காய் வனத்திலுறை
சூத*நிரி யாசமெனச் சொல்.

*நிரியாசம் = பிசின்.

குணம்:—(இ-ள்.) மாம்பிசினால் பெரும்பாடு என்கிற அசிர்க்கர நோயும், ரத்தாதிசாரமும், வாதப்பிரமேகவெள்ளையும் நீங்கும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப்பிசினைச் சலம்விட்டு அரைத்துக் கால் வெடிப்புகளுக்குப் பூசிவர ஆறும். எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் படை, சிரங்கு இவைகளுக்குப்பூச ஆறும். இந்தப் பிசினுடன் நெல்லிவற்றல், கற்கண்டு கூட்டித் திரிகடிப் பிரமாணம் நெய்விட்டுப் பிசறிச்சாப்பிடப் பெரும்பாடு, ரத்தபேதி இவைகள் போம்.

மாம்பிஞ்சு.

(Mangifera Indica—Tender Fruit).

கவைவாத பித்த கபமருசி வாந்தி
சுவைமறுத்த மந்தமெனுந் தோஷ—மிவையெல்லாங்
காதத்துக் கப்புறம்போங் கான மடமயிலே
சூதத்தின் புன்வடுவைத் துய்.

குணம்:—(இ-ள்.) மாம்பிஞ்சைத் தின்றால் கிளைத்த வாதாதி முத்தோஷங்கள், அரோசகம், சர்த்தி, அக்கினி மந்தம் இவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சாதாரணமாகத் தின்பதுடன், உப்பிலிட்டு ஊறுகாயாகப்போட்டு உபயோகப்படுத்துவது

முண்டு. இன்னும் இதனை அரிந்து வற்றலாகக் காயப்போட்டுக் குழம்புகளில் புளிக்குப் பதிலாகச் சேர்த்துப் பாகப்படுத்துவது முண்டு இதனால் சர்த்தி, அக்கினிமந்தம் முதலியவை நீங்கும்.

மாவிலிங்க மரம்.

(Crataeva Religiosa).

சுரங்கடியின் றேஷந் தோலையாத வாத
முரம்பெறுவி ஷங்க ளொழியும்—அரமுங்.
கருமா வடுவயிலுங் கண்டஞ்சுங் கண்ணு
யொருமாவி லிங்குக் குரை.

குணம்:—(இ-ள்.) மாவிலிங்க மரத்திற்குச் சுரம், கடிகளின் தோஷம், மகாவாதரோகங்கள், சர்ப்பகீடவிஷம் ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—இலைக்கு: ஜடராக்கினி வர்த்தினி, பலகாரி. வேருக்கு: வியதாபேதகாரி. பட்டைக்கு: மலகாரி.

உபயோகிக்கும் முறை:-இதன் பட்டையை நன்றாய் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 5-10 குன்றி எடை, 1 அவுன்ஸ் கொதிக்கிற சலத்தில் போட்டு ஆறவிட்டுக் கலக்கித் தினம் 2 வேளை கொடுக்கவும். அல்லது இதன் வேர்ப்பட்டையை அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் பசுவின் பாலில் கலக்கித் தினம் 2 வேளை கொடுக்கவும். அல்லது 3 ரூபாய் எடையுள்ள பட்டையைப் பஞ்சுபோல் தட்டி ஒரு குடுவையில் போட்டு ஒரு படி சலம் விட்டு ½ படி அளவிற்குச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை கொடுக்கவும். இவற்றால் சுரம், வெட்டை, சூலை, சூதகச்சிக்கல், குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண்புரைகள், பிளவை, வீக்கம், நீர்க்கட்டு, வாதம், சந்நி, தாகம், கல்லடைப்பு, விஷக்கடி முதலியவைகள் போம்.

மான்செவிக்கள்ளி.

(Cacalia Klerini).

மான்செவிக்கள் ளிப்பாற்கு மாரு விரணங்கள்
ஏன்கிளைக்கு நன்மலமி றங்குங்காண்—ஊன்சேர்
வரிகிரந்தி நீங்கா வறட்சிசொறி யோடு
பொரிகிரந்தி யும்போம் பொரிந்து.

குணம்:—(இ-ள்.) மான்செவிக்கள்ளிப்பாலால் ஆறாத புண்கள், மாமிசத்தைப்பற்றிய வரிக்கிரந்தி, தேகவறட்சி, புடை, பொரிக்கிரந்தி யென்னும் ஒருவிதத் தேமல் இவை நீங்கும். தோஷமற்ற மலமுஞ் சாடும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்தக்கள்ளி இலைக்கள்ளி இனத்தில் சார்ந்ததெனினும் சிறிது வீறியமுடையது. இதன் இலையை வதக்கிச் சாறுபிழிந்து வடிகட்டி, இலைக்கள்ளிக்குக் கூறிய அளவில் சிறிது குறைத்தே முலைப்பாலோடு சேர்த்துக் குழந்தைகள் பருவத்திற்கேற்றவாறு கொடுக்கலாம். இதனால் அசுத்தமான மலங்கள் சேராமல் வெளியாகிவிடும். அக்காரணத்தை முன்னிட்டு வந்த சொறி, சிரங்கு, படை முதலியவற்றைக் குணப்படுத்தும். இன்னும், இதன் இலையை அரைத்து எண்மடங்கு நல்லெண்ணெய் கூட்டிப் பிசறிச் சிறிது நாள் ரவிமுகத்தில் வைத்தாவது, அல்லது காய்ச்சியாவது வடிகட்டிச் சிரங்கு, சொறி, புண் முதலியவற்றிற்குத் தடவிவர விரைவில் ஆறும். இதன் இலையைச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரித்துத் தீய்ந்து கரியான சமயம் நல்லெண்ணெயில் குழைத்துச் சிரங்குகளுக்குத் தடவுவது வழக்கம். இதுவும் ஏறத்தாழ நற்குணத்தைக் கொடுக்குமென்பதிற் சந்தேகமில்லை.

மிதிபாகற்காய்.

(Momordica Charantia—Pods, small variety).

பித்தமொடு வாதப் பெருக்கைமிக வுண்டாக்குந்
தத்துகரப் பானைத் தருவிக்கும்—பற்றிரத
தாரபா ஷாணந் தனைமுறிக்குந் தப்பாது
காரவல்லி யாம்பாகற் காய்.

குணம்:—(இ-ள்.) காரவல்லி என்கிற மிதபாகற்காய் பித்த வாத கோபங்களையும், கரப்பானையும் உண்டாக்கும்; பாதரசம், அரிதாரம், பாஷாணம் முதலிய வேகங்களை முறிக்கும். இது கேரள தேசத்துப் பத்தியக்கறியாம்,

செய்கை:—கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதில் பச்சை, வெண்மை நிறங்களையுடைய இரு இனங்களுண்டு. அதில் பச்சை நிறமுடைய மிதிபாகற்காயைச் சமைத்துண்ண உஷ்ண வாயுவைக் கண்டிக்கும், இரைப்பையிலுள்ள கிருமிகளைக் கொல்லும், குடலுக்குப் பலத்தைக் கொடுக்கும். வெண்மை நிறமுடைய மிதிபாகற்காய்க்கு

மேற்கூறப்பட்டக் குணங்களெல்லாம் இருப்பினும் பாஷாணுதிகளின் வீறை அடக்கும்படியான ஓர் பெருங்குணமுண்டு.

மிளகரணை.

(Toddalia Aculeata).

ஐய மகற்று மசீரணவா தம்போக்குஞ்
செய்யபித்த சூலேதனைத் தீர்க்குங்காண்—பையவரு
மீளே யிரும லிரைப்புப்பி சந்தோஷேக்கு
நாளு மிளகரணை நன்று.

குணம்:—(இ-ள்.) மிளகரணை கபவிருத்தி, அசீரணவாயு, பித்தசூலை, க்ஷயம், காசம், சுவாசம், வயிற்றுப்பிசம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—கபஹ்ரகாரி, ஜடராக்கினிவர்த்தினி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—½ பலம் மிளகரணை வேர்ப்பட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு குடுவையில் போட்டு, ¼ படி சலம்விட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து, அரைக்கால் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, இருவேளை உள்ளுக்குக் கொடுக்கவும். இதனுல் தேகத்திற்குப் பலமும் தீபனமும் உண்டாகும். இது குளிர்சுரம் முதலியவற்றைப் போக்கும், கபத்தைக் கரைக்கும். இதன் காய், வேர்ப்பட்டை முதலியவற்றை இடித்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு பிடிப்பு, வீக்கம், நோய் உள்ள இடங்களில் விட்டுத் தேய்க்கக் குணமாகும்.

மிளகாய்.

(Capsicum Annum).

கறிக்கு உதவும்படி பயிரிடப்படுகின்ற மிளகாய்களில் பல இனங்களுண்டு. அவற்றின் குண விசேடங்களும் உபயோகங்களும் பின்வருமாறு:

பச்சைமிளகாய்.

(Capsicum Annum—Green).

பொன்னுக்கு வீங்கிப் புரட்டுங் குரல்துத்தி
பின்னு மிடுப்புவலி பேர்ந்துபோம்—இன்னுங்கேள்
கச்சை யணிமாதே கறிக்குதவும் வாய்வகற்றும்
பச்சை மிளகாயின் பண்பு.

குணம்:—(இ-ள்.) கறிக்குதவுகின்ற பச்சைமிளகாயால் புட்டாலம்மை என்று கூறப்பட்ட சயித்தியமும், குரல்வளையில் காணும் துத்திரோகமும், இடுப்புவலியும், வாத உபரியும் நீங்கும் என்க.

செய்கை:—திரவகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைக் கறிகாய் பதார்த்தங்களில் கூட்டி உபயோகப்படுத்தப் பதார்த்தங்களின் சுவையை அதிகப்படுத்தும், நாவின் அரோசிகத்தை மாற்றும். குளிர்ச்சியான கீரைகளில் இதைப்போட்டுக் கடைந்து உண்ணச் சீதளத்தை மிகவொட்டாமல் பாதுகாக்கும். இதனுடன் வெங்காயத்தைத் தாராளமாகச் சேர்த்துப் பாகப்படுத்தி உண்ணப் பச்சைமிளகாய்க்குள்ள துர்க்குணமான வயிற்றுப் பிடுங்கலை நீக்கும். இது மூல ரோகிக்கு ஆகாது. வாததேகிகட்கும், கபதேகிகட்கும் பொருத்தப்படும். இதனைப் பிளந்து, உள்ளிருக்கப்பட்ட விதைகளைப் போக்கித் துவரம்பருப்பிட்டச்சாம்பாரில் போட்டுப் பாகப்படுத்தி, அன்னத்துடன் கூட்டி உண்ண நாவிற்கு அதிக சுவையுண்டாக்கும். விதை நீக்கியதால் அதிக உஷ்ணம் செய்யாது.

இத்தகைய மிளகாய் கூட்டுறவான பதார்த்தங்களை உண்பதினால் சயித்தியம், குரல்கம்மல் முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

மிளகாய்ப் பழம்.

(Capsicum Annum—Red).

மூல விரத்த முளைகடுப்பு முண்டாகுந்
தாலமதிற் றுதுவுந் தான்றழைக்கு—மாலமெனு
மந்த மரோசிகுன்மம் வாய்வும் பொருமலும்போ
முந்துமிள காய்ப்பழத்தா லோர்.

(இ-ள்.) மிளகாய்ப் பழத்தினால் ரத்தமூலமுளையும், ஆசனக் கடுப்பும், வீரிய விருத்தியும் உண்டாம். இன்னும் நஞ்சைப் போன்ற அருசி, வயிற்றுநோய், விகுணவாதம், வயிற்றுப்பிசம் முதலியவை நீங்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பச்சை மிளகாய்க்குக் கூறிய வண்ணம் பதார்த்தங்களில் சேர்த்து உண்ண இச் செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள குணங்கள் சித்திக்கும்.

உலர்ந்த மிளகாய்.

காய்ந்த மிளகாய்க்குக் காணுந் தலைவலிபோம்
ஓய்ந்தமு லக்கடுப்பு முண்டாகும்—ஆய்ந்துரைக்கின்
வெப்பமிகுந் தீபனமாம் மேதினியி லெல்லோர்க்கும்
ஒப்பரிய மாதே யுரை.

(இ-ள்.) காய்ந்த மிளகாய் தலைவலியைப் போக்கும், பசிதீபனத்தையும் தேகவெப்பத்தையும் முண்டாக்கும். ஆனால் மூலரோகிகளுக்கு ஆகாதென்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இத்தூளைக் காய்கறிகளுடன் கூட்டிச் சமைத்துண்ணத் தீபனத்தை யுண்டாக்கும். உஷ்ணதேகத்திற்கு ஆகாது. ஆனால் சமனெடை கொத்துமல்லிவிதை சேர்த்து உபயோகிக்கச் சிறிது பரிகாரமாகும். ரோஜாப்பூவைக் கியாழமிட்டு, அதில் சிறிது மிளகாய்த்தூள் போட்டுக் கலக்கி, வாயில்விட்டுத் தொண்டைவரையிலும் பிரவேசிக்கும்படி வாய்கொப்புளித்து உமிழ்ந்துவிடத் தொண்டைநோய் தீரும். மிளகாயை அரைத்து ஓர் சீலையில் தடவிச் சந்நிசுரம், தலைவலி, தலையிடி இவைகளுக்கு நெற்றியின்பேரில் போடக் குணமாகும். ஆனால் எரிச்சல் மிகும்போது எடுத்துவிடவேண்டும். இல்லாவிட்டால் தோலை வேகச்செய்யும். இந்த மிளகாய் மூலரோகிகளுக்கு ஆகாது. அப்படி உபயோகிக்கக்கருதின், அக்காரத்தைக் குறைக்கக், கொத்துமல்லிவித்து, கசகசா, தேங்காய், நெய் இவைகளைக் கறிகளில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

இதனைக்கொண்டு சிரரோகங்களுக்குத் தைலமாகவும், வெட்டு அடி காயங்களுக்குச் சிகிச்சையாகவும் செய்வதுண்டு. எங்ஙனமெனில்—

மிளகாய்த் தைலம்.

இரண்டுபடி சலத்தை ஒரு மட்பாண்டத்தில் விட்டு, அதனில் மிளகாய் பலம் 5, மிளகு பலம் $2\frac{1}{2}$; இவைகளை ஒன்றிரண்டாக இடித்துப்போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து, $\frac{1}{4}$ படி திட்டத்திற்கு வரும் சமயம் இறக்கி ஆறவிட்டுப் பிசைந்து வடிகட்டித் தைலம் காய்ச்சும்படியான பாண்டத்தில் விட்டு, அதனுடன் $\frac{1}{4}$ படி நல்லெண்ணெயும் $\frac{1}{4}$ படி பசுவின்பாலும் விட்டுப் பதமுறக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, வாரம் ஒரு முறை ஸ்நானம் செய்துகொண்டுவரச் சகலவிதமான தலைவலிகளும் குணமாகும்.

அடிகாய சிகிச்சை.

கண்ணாடித்துண்டு, முள்ளு, ஆணி முதலியவைகள் காலில் தைத்துப் பிடுங்கிவிட்ட காயத்திற்கும் அல்லது எக்காரணத்தைக் கொண்டாவது அடிப்பட்டு ரத்தம் சொரியும் காயங்களுக்கும், நகம் பெயர்தலுக்கும், மிளகாயை வெண்ணெய்போல் அரைத்துவைத்துக் கட்டச் சீழ்பிடிக்காமல் ஆறும். சிறிது எரிச்சல் மிகினும் பொறுமையாக இருத்தல் வேண்டும்.

கருங் குண்டுமிளகாய்.

விண்ணோக்கிக் காய்காய்க்கும் வித்து மடர்ந்திருக்கும்
கண்ணோக்கி யுண்டார்க்குக் காரமிகும்—ஒண்டொடியே
மண்டுவெம்மை மூலம் வளருங் கருநிறத்த
குண்டுமிள காய்க்குணத்தைக் கூறு.

(இ-ள்.) ஆகாயத்தை நோக்கிக் காய்க்கின்ற கருங்குண்டு மிளகாய் தேகத்தில் அதிக வெப்பத்தையும் மூலரோகத்தையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தினம் உண்ணுகின்ற பதார்த்தங்களில் கூட்டிவரத் தேகம் அதிக வெட்டைபெறும். ஆகையால் விலக்குவதே நலம்.

வெண்டுமிளகாய்.

உற்றவுடற் றூன்பெருத்தே உள்ளே தசையற்றுக்
குற்றமிலாக் காரத்தைக் கொண்டுலகில்—பெற்றிருக்கும்
வெண்டுமிள காய்க்கு விரைந்தோடும் வாதநோய்
கண்டுமொழி யாரணங்கே காண்.

(இ-ள்.) பெருத்து உள்ளிற் போலாயிருக்கும் காரமற்ற வெண்டுமிளகாயால் வாதகோபம் நீங்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதை வேகப்போட்டு உலர்த்தி, உப்பிட்ட மோர் தெளித்து ரவியில் காயவைத்து, வற்றலைப்போல் வறுத்து அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. இன்னும், இதனைச் சாதாரணமாகப் பச்சைமிளகாயை உபயோகப்படுத்த வேண்டிய இடங்களிலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இதனால் அற்ப வாதரோகங்கள் குணமாகும்.

ஊசிமிளகாய்.

சீதக் கழிச்சற் சிறுநீர்ச் சுறுக்கரசங்
காதக் குதநெகிழ்ச்சி காட்டுங்கா—ணுதித்தன்
வீரகிர ணம்பருகி மேனோக்கிக் காய்த்தடங்காக்
காரமுறு மூசிமிள காய்.

(இ-ள்.) ஆகாய முகமாய்க் காய்த்துச் சூரியனது அக்கினிக் கிரணத்தைப் புசித்து மிகக் கார்ப்புச்சுவையைப்பெற்ற ஊசி மிளகாய் சீதபேதி, மூத்திரக்கிரிச்சரம், மூலம், குதநெகிழ்ச்சிரோகம் இவைகளை உண்டாக்கும்.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இது அதிக வீரிய முடையதாததால் உபயோகிக்காமலிருப்பதே உத்தமம். எந்தச்சரீர அங்கங்களுக்கும் ஆகாது. இது குடலிலும், இரைப்பையிலும், நீர்ப்பையிலும் மிகுதியான வெப்பத்தை உண்டாக்கித் துன்புறச் செய்யும்.

மிளகு.

(Piper Nigrum—Dried Fruit).

சீதசுரம் பாண்டு சிலேஷ்மங்கி ராணிகுன்மம்
வாத மருசிபித்த மாமூல—மோதுசந்நி
யாசமபஸ் மார மடன்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி னல்.

(இதுவுமது)

கோணுகின்ற பங்கவலி குய்யரோ கம்வாத
சோணிதங்க மூத்திற்குட் டோன்றுநோய்—காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தமென்றீ
ரேதுநோய் காயிருக்கி லீங்கு.

குணம்:—(இ-ள்.) மிளகினால் குளிர்சுரம், பாண்டு, கபம், கிரகணி, குன்மம், வாயு, அரோசகம், பித்தம், மூலம், சந்நியாசம், அபஸ்மாரம், பிரமேகம், இருமல், பங்குவாதம், குய்யரோகம், வாதசோணிதவாதம், களயநாய், செவிவலி, ரத்தகுன்மம், காமிலம், அசீரணம் இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, முறைவியாதிரோதி, ஷோணகாரி, உதரவாதஹரகாரி, நாசிநீர்விர்த்தினி, திரவகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பொன்மேனியாக வறுத்து, இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு, வேளைக்கு 5-10 குன்றியெடை தேனில் மத்தித்துக்கொடுக்க வாயு, சயித்தியம், கபம், அஜீரணம், மிகுந்த ஏப்பம் இவைகளை நீக்கித் தீபனத்தை யுண்டாக்கும். ஒரு விராகனெடை மிளகைத் தட்டி ஒரு குடுவை யில் போட்டு, ¼ படி சலம் கூட்டி அடுப்பில் வைத்து வீசம் படியா கச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, உள்ளுக்குக் கொடுக்கச் சுரம் தணி யும். அஜீரணம், மந்தம் முதலியவற்றை நீக்கும். இன்னும் ரசம், கெந்தி, வீரம், முதலிய மருந்துகளின் வீறையும் அடக்கும். மிளகு; பெருங்காயம், அபினி வகைக்குக் குன்றியெடை 10 ; இவைகளைச் சேர்த்தரைத்து 12 மாத்திரைகளாகச் செய்துவைத்துக்கொண்டு, பெரியவர்களுக்கு ஒரு மாத்திரையாகவும், சிறியவர்களுக்கு அரை மாத்திரையாகவும் ஒருமணி நேரத்திற்கு ஒரு தடவை வாயில் போட்டுச் சிறிது சலம்விட்டு விழுங்கும்படியாகக் கவனித்துவர எத்தகைய அசாத்தியமான வாந்திபேதியாயினும் குணமாவது திண்ணம். பேதி நின்றுவிட்டால் மருந்தை நிறுத்திவிடவும். 20 குன்றியெடை மிளகு, 5 குன்றியெடை பெருங்காயம், 50 குன்றி யெடை கழற்சிக்காய்ப் பருப்பு முதலியவற்றைக் கல்வத்தில் போட் டுத் தேன் விட்டு நன்றாய் அரைத்து 30 மாத்திரைகளாகச் செய்து பெரியவர்களுக்கு வேளைக்கு 2 மாத்திரைவீதமும், 7 முதல் 14 வயது உள்ள பாலர்களுக்கு 1 மாத்திரை வீதமும் சுரம் இல்லாத நேரத்தில் தினம் 2-3 வேளை கொடுக்க முறைசுரம் போம்.

மிளகுக்காய்.

(Piper Nigrum—Raw fruit).

அளவையுருக் கார மடைந்திருக்கும் வாத
விளைவையெல் லாமறுக்கு மெய்யே—மிளகின்காய்
கண்டவர்க்கு மின்பமாங் காரிகையே சீழ்மூலங்
கொண்டவர்க்கு நன்மருந்தாங் கூறு.

குணம்:—(இ-ள்.) மிகுகார்ப்புச் சுவையையுடைய மிளகுக்காய் வாதரோகங்களையும் சீழ்மூலத்தையும் நீக்கும். அதைப் பார்க்கில் விருப்பமுண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:-புளியைச்சலம்விட்டுக்கரைத்துக் குழம்பு பதமாகக் கோது, கொட்டை இல்லாமல் எடுத்து, அதில் மிளகுக் காய்களையும், மேல்தோல் சீவிச் சிறு துண்டுகளாக நறுக்கிய இஞ்சித்

துண்டுகளையும்போட்டு உப்பிட்டுக் குலுக்கி ரவியில் வைத்துப் பாகப் படுத்தவும். வேண்டும்போது இதில் கொஞ்சம் எடுத்து, அம்மியில் வைத்துச் சிறிது மிளகாய்ப் பொடி சேர்த்து அரைத்துத் தாளித்துத் துவையலாக அன்னத்துடன் சேர்த்துச் சாப்பிடத் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும். எலுமிச்சம்பழத்தை ஊறுகாய் போடும் போது இந்தக் காயையும் போட்டுப் பாகப்படுத்தி யுண்ணத் தீப னத்தை யுண்டாக்கும். மந்தத்தை நீக்கும்.

மிளகுத் தக்காளி.

(Solanum Melongena).

மந்தாக் கினிசோபை வாந்திகழல் வாயுவெப்ப
மிந்துநோய் பாண்டோ டெதிர்விக்கன்—முந்த
வளருமுத் தோஷநோய் மாற்றுங்கைப் பான
மிளகுத்தக் காளியிலை மெய்.

(இதுவுமது)

மிளகுத்தக் காளியிலை வெண்ணாகங் கட்டு
மிளகுபற்சிந் தூரத்திற் கேற்குங்—கோளுவுகின்ற
மேகச் சொறியகற்றும் வெட்டை யனற்றணிக்கு
மாகச் சணிமுலையாய் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) கசப்புள்ள மிளகுத் தக்காளியிலை அக்கினி மந்தம், வீக்கம், சர்த்தி, பாதாக்ஷேபகவாதம், சுரம், சோமரோகம், பாண்டு, விக்கல், திரிதோஷ நோய்கள், மேகச் சொறி, வெள்ளை, உட்சூடு இவைகளை நீக்கும். வெள்ளீயத்தைக் கட்டும், பலவித செந்தூரங்களுக்குதவும் என்க.

செய்கை:—சோபாநாசினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு கைப்பிடி அளவு இலையைச் குறுக அரிந்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு, 1 படி சலம் விட்டு ¼ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, இருவேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கக் கை கால்களில் சஞ்சரிக்கின்ற வாயுவை நீக்கும். இன்னும் பாண்டு, மேகவாயு, உட்சூடு முதலியவைகளும் குண மாகும்.

மிளகுத் தக்காளியிலை ஒரு பிடி, மணத்தக்காளியிலை ஒரு பிடி, இவை யிரண்டையும் குறுக அரிந்து ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு இரண்டு படி சலம் விட்டு ½ படியாகச் சுண்டக் காய்ச்சி

வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் அளவு தினம் 2 வேளை கொடுக்க, ஸ்திரீகளுக்குக் காணும் வெள்ளை குணமாகும்.

முக்காவேளை வேர்.

(Galega Spinosa—Root).

தாகாதி மந்தமதி சார மதிவறட்சி
போகாச் சுரந்தாபம் போக்கமருந்—தோகையிற்
சிக்காவே ளைப்*பதத்தைத் தின்னச்செய் விக்கவென்றுன்
முக்காவே ளைப்*பதத்தை முன்.

*பதம்=சோறு, வேர் எனப்பொருள்.

குணம்:—(இ-ள்.) முக்காவேளை வேரினல் வாததாகம், மந்தாக்கினி, அதிசாரம், நாவறட்சி, சந்ததசுரம், வெப்பம், அன்னத்துவேஷம் இவைகள் போம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—அரைப் பலம் முக்காவேளை வேரைத் துண்டுதுண்டாக நறுக்கியும், ¼ பலம் இஞ்சியைச் சிதைத்தும், ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு ¼ படி சலம் விட்டு அரைக்கால் படி அளவிற்குக் காய்ச்சி வடிகட்டி, இதனை இருவேளையாகப் பங்கிட்டுக் கொடுக்கத் தாகம், நாவறட்சி, சுரம், அன்னத்துவேஷம் இவைகள் போம்.

முக்குளிக்கீரை.

(Portulaca Pilosa).

ஐய மிகக்கொடுக்கு மார்ந்தபோ கந்தருங்காண்
மெய்யனலை யெல்லாம் விலக்குமே—தையலே
பேதி யளிக்கும் பெருமுக்கு ளிக்கீரை
சீதம் விளைக்குமெனத் தேர்.

குணம்:—(இ-ள்.) முக்குளிக்கீரை கபதோஷம், புணர்ச்சியிலிச்சை, அதிசாரம், ஆமம் ஆகிய இவைகளை உண்டாக்கும்; வெப்பத்தை நீக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் பருப்புக்கீரையின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதே யாகும். இந்தக்கீரை வழுவழுப்பான குணமுடையது. இரத்தத்திலுள்ள அக்கினியை ஆற்றித் தடிப்பிக்கச் செய்யும். அப்போது சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய ரோகங்களையும் கப சம்பந்தமான ரோகங்களையும் உண்டாக்கும். இது அவ்வளவாக விரும்பத்தக்கதன்று.

முசற்காதிலை.
(Ipomoea Biloba—Leaves).

பீசத் தெழுந்த பெருவீக்கங் கைகாலில்
வீசிப்பு டைத்த வெறுவீக்கம்—பேசாம
லேகு முயற்கா திலையிருக்கு மூரைவிட்டுப்
பாகுமொழி மாதே பகர்.

குணம்:—(இ-ள்.) முசற்காதிலையால், குடலண்ட வீக்கமும், கைகால்களின் கீல்களைப்பற்றிய வீக்கங்களும் தீரும் என்க.

செய்கை:—சோபாநாசினி, வேதனாசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை வேகவைத்து எடுத்துத் தாளக்கூடிய சூட்டில் கீல்களிலுண்டான வீக்கம், வலி முதலிய வற்றிற்குக் கனமாக வைத்துக் கட்ட 3 நாளில் குணமாகும். இன்னும், இதனை அண்டவாதத்திற்கு வைத்துக் கட்டக் குணமாகும்.

முசுமுசுக்கை இலை.
(Mukia Scabrilla—Leaves).

இருமலுட னீளை யிரைப்புப் புகைச்சன்
மருவுகின்ற நீர்த்தோஷ மாறுந்—திருவுடைய
மானே முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்.

குணம்:—(இ-ள்.) மாமூலியாகிய முசுமுசுக்கையிலைக்குக் காசம், கோழை, சுவாசம், நெஞ்சிற் புகைக் கம்மல், சலதோஷம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றில் ஒரு இரும்புக் காம்பை பழுக்கக் காய்ச்சித் தோய்க்க அவ்விலைச் சாறு முறிந்துவிடும். இதனை வடித்துக் குழந்தைகளின் வயதுக்குத் தக்கபடி $\frac{1}{4}$-$\frac{1}{2}$ பாலடை வீதம் தனியாகவாவது அல்லது கோரோசனை மாத்திரையுடனாவது உள்ளுக்குக் கொடுக்கக் கபம் கரைந்துவிடும். இருமல் அடங்கும். சலதோஷம், சுரம் முதலியவைகளும் குணமாகும்.

இதன் இலைச்சாற்றைப் பெரியவர்களுக்குத் தினம் ஒருவேளை காலை நேரத்தில் 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் அளவு மூன்று நாள் கொடுக்கச் சுவாசகாசம், ஈளை முதலிய ரோகங்கள் போம்.

முசுமுசுக்கை வேர்.
(Mukia Scabrilla—Root).

கந்தம் பரவு களிச்சளியும் புன்விடமு
மந்தம் பெறுவிடமு வாந்திகளு—மந்தம்
பெருகுரங்குக் கிச்சூரும் பித்தமுமி ருக்கா
திரு*குரங்குக் கைவேருக் கே.

குணம்:—(இ-ள்.) முசுமுசுக்கை வேரினால் துர்க்கந்தத்துடன் இறுகிய கோழை, அற்ப வீரிய விஷாலசக ரோகம், வமனம், மார்பு நோய், குன்மம், பித்தாதிக்கம் இவை போம்.

*குரங்குக்கு-முசு என்றொரு பெயர்.

செய்கை:—கபஹரகாரி, விஷநாசகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—முசுமுசுக்கை வேர் விராகனெடை 1, முக்காவேளை வேர் விராகனெடை $\frac{1}{4}$, இவைகளை ஒருமிக்க இடித்துச் சூரணம் செய்து $\frac{1}{8}$ படி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். இப்படித் தினம் 2 வேளை மூன்றுநாள் கொடுத்து வரத் தொண்டைக் கரகரப்பு, கோழை மிகுதி இவைகள் குணமாகும். அப்போது ரோகிக்குச் சுபாவமாக ஏற்பட்ட வமனம், மார்பு வலி இவைகள் நீங்கும்.

முடக்கற்றான்.
(Cardiospermum Helicacabum).

சூலைப் பிடிப்பு சொறிசிரங்கு வன்கரப்பான்
காலைத் தொடுவளியுங் கன்மலமுஞ்—சாலக்
கடக்கத்தா னேடிவிடுங் காசினியை விட்டு
முடக்கற்றான் றன்னை மொழி.

குணம்:—(இ-ள்.) முடக்கற்றான் மூலிகையால் கீல் பிடிப்பு, சினைப்பு, கிரந்தி, கரப்பான், பாதத்தை யனுசரித்த வாதம், மலக்கட்டு ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பிடி முடக்கத்தானை இடித்து ஒரு பழகின சட்டியில் போட்டு, $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை 3 நாள் கொடுக்க நரம்புகள் சம்பந்தமான மேகவாயுப்பிடிப்பு, மூலம், கபசம்பந்தமான இருமல், மலச்சிக்கல் முதலியவைகள் போம்.

இதன் இலையை வதக்கி அடிவயிற்றில் வைத்துக் கட்டச் சிக்கல்பட்டுள்ள உதிரத்தை வெளியாக்கும்.

இதன் இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி, வாதத்தால் கீல்களில் உண்டான பிடிப்பு, நோய், வீக்கம் முதலியவற்றிற்கு வைத்துக்கட்டக் குணமாகும்.

இதன் இலையை வதக்கிப் பிழிந்த சாற்றில் 2-3 துளி காதில் விடக் காதுவலி நீங்கும்.

முந்திரிப்பருப்பு.

(Anacardium Occidentale—Seed).

மெத்த வினிப்பாகு மென்கொடியே தின்றக்காற்
பித்த வனிலம் பிறக்குங்காண்—சத்தியமா
யிந்திரியப் புஷ்டி யிளைக்காது மாந்தமுண்டா
முந்திரியி னற்பருப்பான் முன்.

குணம்:—(இ-ள்.) மிகுந்த உருசியுள்ள முந்திரிப் பருப்பைத் தின்னுல் பித்தவாத தொந்தம், தாது விருத்தி, அக்கினிமந்தம் ஆகிய இவைகள் உண்டாம் என்க.

செய்கை:—காமவிர்த்தினி. கொட்டைக்கு: ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—முந்திரிப்பருப்பைச் சிறிது வறுத்துக் கற்கண்டு கூட்டிச் சாப்பிட்டுவரத் தாதுபுஷ்டி யுண்டாகும். விசேஷமாகப் பலகாரங்களிலும் பதார்த்தங்களிலும் கூட்டிச் சமைப்பதுண்டு. இதைச் சாப்பிட இன்பந்தரும். இது சிறிது பித்தத்தையும் வாயுவையும் உண்டாக்குவதுடன், அக்கினியைக் குறைத்து ஜீரண சக்தியை மந்தமாக்கும்.

முந்திரிகையின் மது.

(Anacardium Occidentale—Vinegar).

முந்திரிகைக் கள்ளுக்கு மூடுதிரி தோஷம்போம்
விந்துறுமி ரத்தமுறும் வெப்பகலும்—இந்தவகைக்
கள்ளெல்லாங் காமமுறுங் காமமற்ரு ருண்டக்கால்
விள்ளரிய தோஷமிலை மெய்.

குணம்:—(இ-ள்.) முந்திரிகைமது என்கிற திராட்சைப் பழச் சாராயத்திற்கு வாதபித்த கபதோஷங்களும், தேக அழற்சியும் நீங்கும். விந்துவும், இரத்தத் தாதுவும் விருத்தியாகும். இந்த மது

வர்க்கம் எல்லாம் காமத்தை யுண்டாக்கும். ஆதலால் காமமற்ற பெரியார் அருந்தில் குற்றமில்லை என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—கொடி முந்திரிப்பழம் என்னும் திராட்சைப் பழத்திலிருந்தாவது அல்லது மர முந்திரிப் பழத்திலிருந்தாவது சேகரிக்கப்படும் சாராயம் தேகத்திற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். உழைப்பினால் தேகத்திற்கு உண்டானக் கஷ்டத்தையும் விலக்கும். அதிக அளவாக உட்கொண்டால் புத்தி கெடும்.

முருங்கைக்காய்.

(Moringa Pterygosperma—Pod).

சொல்லுநோய் கட்கெல்லாந் தோஷமில்லை யையமறும்
பல்லுயிர்க்குந் தாதுமிகும் பத்தியமாம்—வில்லார்
பெருங்கைக்கா மன்றுதிக்கும் பெண்ணே நறிய
முருங்கைக்காய் தன்னை மொழி.

குணம்:—(இ-ள்.) நிதான நூலிற் கூறும் பலபிணிக்கும் குற்றமில்லாத பத்தியக் கறியாய் இராநின்ற முருங்கைக் காயால் கபம் நீங்கும், விந்து கட்டும் என்க.

செய்கை:—கபஹரகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயைச் சிறு துண்டுகளாக அரிந்து, துவரம்பருப்புச் சாம்பாரிலாவது அல்லது ஆட்டு மாமிசம் சம்பந்தப்பட்டக் குழம்பிலாவது போட்டுப் பாகப்படுத்தி அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. பொரியலாகச் செய்து உபயோகப்படுத்துவதுமுண்டு. இதனால் குடலுக்குப் பலம் ஏற்படும். இது வயிற்றிலுள்ள வாயுவை நீக்கும், விந்துவைக் கட்டும், கபத்தை ஒழிக்கும்.

முருங்கைச் சமூலம்.

(Moringa Pterygosperma).

பிஞ்சாற் றிரிதோஷம் பேரும்பூ வாற்போக
முஞ்சுவிழிக் குக்குளிர்ச்சி யுஞ்சேரும்—பிஞ்சிலைவெப்
பாற்றுந்தோ னஞ்சறுக்கு மவ்வேர்வா தச்சினத்தை
யாற்று முருங்கையி னது.

குணம்:—(இ-ள்.) முருங்கையின் சிறிய பிஞ்சால், திரிதோஷம் நீங்கும். பூவால் புணர்ச்சியில் வன்மையும் கண்ணுக்குக் குளிர்ச்சி

யும் உண்டாம். இலை சுரத்தையும், பட்டை விஷத்தையும், வேர் வாத கோபத்தையும் நீக்கும் என்க.

உபயோகிக்கும்முறை:—அவையவைகளின் உபயோகம் தனித் தனியே கூறப்பட்டிருப்பதைக் காண்க.

முருங்கைப்பிசின்.

(Moringa Pterygosperma—Gum).

முந்துநீ ரைத்தடுக்கு மோரைப்போ லேயொழுகும்
விந்துவைத்த டிப்பித்து மேனிதருந்—தொந்தக்
கரியநிற வாயுதனைக் காதிவிடு நாளும்
பெரிய முருங்கைப் பிசின்.

குணம்:—(இ-ள்.) முருங்கைப் பிசின் அதிமூத்திரம், பிஷ்ட மேகம், தொந்தவாதம் இவைகளை நீக்கும். சுக்கிலத்தைக் கட்டி அழகையுண்டாக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, காமவிர்த்தினி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனை நன்றாய் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, தினம் காலை மாலை வேளைக்கு ½ விராகனெடை காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுக் கற்கண்டுத் தூளிட்டுக் கலக்கிச் சாப்பிட்டுவரத் தாது பலப்படும். அதிமூத் திரம் நிற்கும். தேஜசு உண்டாகும்.

முருங்கைப்பிஞ்சு.

(Moringa Pterygosperma—Tender pod).

[1]சிக்குருக்[2]கு யப்பிஞ்சத் திச்சுரத்திற் குஞ்சநிக்கு
[3]மக்குருக்கு ருப்ப மரோசிகட்குஞ்—சுக்கிலத்தின்
கொர்சை யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்
[4]பச்சை யுறவருந்திப் பார்.

[1]முருங்கை, [2]இளமை, [3]எலும்பு இளைத்தல், [4]தோல்.

குணம்:—(இ-ள்.) முருங்கையினது பூப்பிஞ்சைப் பாகஞ் செய்து தோலுடன் உண்ணில் அஸ்திசுரம், எலும்பை யுருக்குகின்ற வெப்பம், அரோசகம், விந்துநஷ்டம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—முன் காய்க்குக் கூறியதைப்போலவே இதையும் கறியாகச் சமைத்து உண்ண வயிற்றிலுள்ள வாயுவைக் கண்டிக்கும், நீர் சிறிது அதிகப்படும், விந்து கட்டும். இது பத்தியத் திற்கு அதிகம் சிறந்ததாகும்.

முருங்கைப்பூ.

(Moringa Pterygosperma—Flower).

விழிகுளிரும் பித்தம்போம் வீறருசி யேகு
மழிவிந்து வும்புஷ்டி யாகு—மெழிலா
ரொருங்கையக லாக்கற் புடைவா ணகையே
முருங்கையின் பூவை மொழி.

குணம்:—(இ-ள்.) முருங்கைப் பூவினால் பித்த தோஷமும், அரோசகமும் நீங்கும். கண் குளிர்ச்சியும், சுக்கில விருத்தியும் உண்டாகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பிடி முருங்கைப் பூவைச் சுத்தமாக ஆய்ந்து அலம்பிப் பாலில் போட்டுக் காய்ச்சிக் கடைந்து, கற்கண்டுத் தூள் போட்டுக் கலக்கி மாலை 6 மணிக்குச் சாப்பிடவும். இப்படிச் சில தினம் சாப்பிடத் தாது பலப்படும். இரவு காலத்தில் இணைவிழைச்சில் இன்பத்தை யூட்டும். இதை வெந்து மலர்ந்த துவரம் பருப்புடன் கூட்டிப் போதிய அளவு உப்பிட்டுத் தேங்காய்த் திருகலையும் கூட்டிக் கிளரி, மிளகாய் கிள்ளிப்போட்டு முறைப்படி தாளித்துத் துவட்டலாகச் சாப்பிடுவதுமுண்டு. இந்தப் புஷ்பத்தை விசேஷமாகத் தாது விருத்திக்கான ரசாயனங்களிலும், இலேகியங்களிலும் சேர்ப்பதுண்டு.

முருங்கைமரப்பட்டை.

(Moringa Pterygosperma—Bark).

முருங்கைவேர்ப் பட்டைக்கு மூடு கபத்தோ
டொருங்குருச் சந்நிசுர மோடு—மருங்கனக
வட்டைப் பொருமுலையாய் வாய்வொடுவி ஷங்களுமேற்
பட்டைக்குப் போமே பறந்து.

குணம்:—(இ-ள்.) முருங்கை வேர்ப்பட்டைக்குக் கபதோஷமும், சந்நிபாத சுரமும், மரப்பட்டைக்கு, வாததோஷமும், சில விஷங்களும் நீங்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, கபஹரகாரி, விஷநாசகாரி, திரவகாரி, ஷோணகாரி, துவக்ஸ்போடகாரி, உதரவாதஹரகாரி, விரணகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பட்டையைச் சலம் விட்டு வேகப்போட்டு எடுத்தக் கியாழத்தில் புளி, மிளகாய், உப்பு முதலிய

வற்றைத் திட்டமாகக் கூட்டி, ரசம்போல் வைத்து அன்னத்தில் விட்டேனும், தனியாகவேனும் சாப்பிடப் பாரிசவாயு, குளிர் சுரம், காக்கைவலி, சூதகசந்நி இவைகள் போம். இந்தப் பட்டையுடன் கடுகு சேர்த்தரைத்துக் கீல் வாதங்களுக்குப் பற்றுப் போடக் குணமாகும். அத்தருணம் எரிச்சலுண்டானால் சலம்விட்டு அலம்பிவிடவும்.

முருங்கையிலை.

(Moringa Pterygosperma—Leaves).

செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலைநோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகு—மறமே
நெருங்கையிலை யொத்தவிழி நேரிழையே நல்ல
முருங்கை யிலையை மொழி.

குணம்:—(இ-ள்.) முருங்கையிலையால் அக்கினிமந்தம், உட்சூடு, சிரஸ்தாபரோகம், பித்தமூர்ச்சை, கண்ணோவு ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—வமனகாரி (அதிக அளவில்), மலகாரி, (சில சந்தர்ப்பம்).

உபயோகிக்கும் முறை:—இதன் இளங்கீரையைச் சுத்தமாகப் பழுப்பு முதலியவைகள் இல்லாமல் ஆய்ந்து, அலம்பிப் பாகப்படித் துவட்டலாகச் செய்து அன்னத்துடன் கூட்டி உண்பதுண்டு. இதனால் இச்செய்யுளின்கண் கூறப்பட்டுள்ள நோய்கள் நீங்கும். மிதமிஞ்சி இக்கீரையை உட்கொள்ளுகிறவர்களுக்குச் சில சந்தர்ப்பம் பேதியாகும். இதன் இலைச்சாற்றில் இரண்டொரு துளி கண்களில்விடக் கண்ணோய், ஸ்திரீகளுக்குக் காணும் மூர்ச்சா ரோகம் போம். இரண்டு பலம் முருங்கைச் சாற்றுடன் ஒரு தோலா சயிந்தலவணம் கூட்டிக் கொடுக்க நீர்க்கட்டு, மலக்கட்டு இவைகள் வெளியாகும். இது மேல் நோக்கி வாந்தி ஆவதுமுண்டு. இந்த இலையின் சாற்றுடன் மிளகு சேர்த்து அரைத்துத் தலைவலி, தொண்டைவலி, சயித்திய வீக்கம் இவைகளுக்குப் பற்றுப்போடக் குணமாகும். இதன் சாற்றில் 4 தோலா எடை உள்ளுக்குக் கொடுக்க வாந்தியாகும்.

இந்த இலைச்சாற்றுடன் சிறிது சுண்ணாம்பு, தேன் கூட்டி மத்தித்துத் தொண்டைக் குழியில் தடவ இருமல், குறல் கம்மல் தீரும்.

முருங்கை ஈர்க்கு.

(Moringa Pterygosperma—Tender stems).

சேங்கோட்டை யின்வேகம் சேயிழையே யூறலுற்றே
ஓங்குமுடல் வீக்கத்தை ஓட்டிவிடும்—பாங்கதனை
இங்குணர நன்முருங்கை யின்னீர்க்கை வேகவிட்டுப்
பொங்குசல மூட்டப் புகல்.

குணம்:—(இ-ள்.) முருங்கை ஈர்க்கு சேங்கொட்டையின் வீறைத் தணிக்கும். தேகத்திலுண்டான துர்நீர்க்கோவையை வடித்துவிடும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—ஒரு பிடி முருங்கை யிலையின் ஈர்க்கைச் சிதைத்து ஒரு மட்கடத்தில் போட்டு 1 படி சுத்த சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 3 அவுன்ஸ் வீதம் சாப்பிட நீர் இறங்கும். சேங்கொட்டையினால் உண்டான விஷம் முறிபடும்.

முருங்கை வித்து.

(Moringa Pterygosperma—Seeds).

நீரான விந்துவுமே நிச்சயமாய்க் கட்டிவிடும்
சீரான மேனி செழிப்பாகும்—நேராய்
நெருங்க மலர்சூடும் நீண்டகுழல் மாதே
முருங்கை விதையை மொழி.

குணம்:—(இ-ள்.) முருங்கை வித்தினால் சலரூபமான இந்திரியம் தடிப்பாகும், சரீரம் பலக்கும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தாது விருத்திக்குரிய லேகியங்களில் பெரும்பாலும் சேர்ப்பதுண்டு. இதனால் விந்து தடிப்பாகும், விரைவில் ஸ்கலிதம் ஆகாது.

முலாம்பழம்.

(Melon Fruit).

நீர்பெருகும் கட்டுடையும் நீங்காத வெப்பமறும்
பாற்பெருகும் மங்கையர்பால் பஞ்சமிலை—சீர்பெருகும்
நல்முலாம்பழத்தை நாவினிக்கத் தின்றவருக்
கல்ல லினியே தறி.

குணம்:—(இ-ள்.) நல்ல முலாம்பழத்தினல் நீர் பெருகும், நீர்ச்சுறுக்கு நீங்கும், சூடு தணியும், பாலுண்ணும் குழந்தையையுடைய மாதர்க்குப் பால் சுரப்புண்டாகும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பழத்தின் மேற்றோலையும் விதைகளையும் நீக்கிச் சிறு துண்டுகளாக அரிந்து, ஒரு ஈயம் பூசிய பாத்திரத்தில் போட்டுச் சர்க்கரை கூட்டி உண்ண நாவிற்கு அதிக உருசியாக இருக்கும். இதனல் உட்சூடு தணியும். நீர் எரிச்சல், நீர்க்கட்டுப் போம். ஸ்திரீகளுக்குப் பால் சுரக்கும்.

முளைக்கீரை.

(Amaranthus Polygamus).

தளர்ந்தவர்க்கும் பாலருக்குந் தக்கவய தோர்க்கு
மிளங்கீரை நாவுக் கிதமாங்—கிளம்பு
சுரகாசம் போக்குந் தொடர்பசியுண் டாக்கும்
பிரகாச மாயெடுத்துப் பேசு.

குணம்:—(இ-ள்.) விருத்த பால யௌவன பருவத்தவர்க்கும் நாவுக்கிதவைத் தராநின்ற முளைக்கீரை காச சுரத்தை நீக்கும். பசியைத்தரும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதை ஆய்ந்து அலம்பிச் சுத்தப் படுத்தி ஒரு சட்டியில் போட்டு, அதனுடன் கொஞ்சம் அரிந்த வெங்காயத்தையும் சிறிது பச்சை மிளகாயையும் போட்டு வேக வைத்து உப்பிட்டுக் கடைந்து உட்கொள்வதுண்டு. இதனல் உட்சூடு, உதிரக்கொதிப்பு, பித்த எரிச்சல் முதலியவைகள் சாந்தப்படுவதுடன் கண் குளிர்ச்சிபெறும். சொறி, சிரங்கு முதலியவைகளும் போம். இது சில சரீரங்களுக்குப் பொருத்தப்படாது. சயித்தியம், சலதோஷம் முதலியவற்றை யுண்டாக்கும்.

முள்ளங்கிக் கிழங்கு.

(Raphanus Sativus—Tuber).

வாதங் கரப்பான் வயிற்றெரிவு சூலைகுடல்
வாதங்கா சம்மையம் வன்றலைநோய்—மோதுநீர்க்
கோவைபன்னேய் பல்சிலந்தி குன்மமிரைப் புக்கடுப்புஞ்
சாவுமுள்ளங் கிக்கந்தத் தால்.

குணம்:—(இ-ள்.) முள்ளங்கிக்கிழங்கால் வாதப்பிணி, கரப்பான், வயிற்றிலெரிச்சல், குத்தல், குடல்விருத்திநோய், இருமல்,

கபம், தலைவலி, நீரேற்றம், பல்நோய், பல் சிலந்தி, குன்மம், சுவாசம், மூலக்கடுப்பு ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை அலம்பிச் சிறு துண்டுகளாக அரிந்து பாகப்படிச் சமைத்துண்ணத் தீபாக்கினியை அதிகப்படுத்தும். தொண்டைக் கம்மல், மூலம், கல்லடைப்பு முதலிய ரோகங்களுக்கு அதிக நன்மையைத்தரும். முள்ளங்கிக்கிழங்கையும் வெள்ளை வெங்காயத்தையும் குறுக அரிந்து, சமனெடையாக ஒரு இரும்புக் கடாயில் போட்டு, அடுப்பிலேற்றிச் சிற்றாமணக்கு எண்ணெய்விட்டு, நீர் சுண்டப் புரட்டிப் புரட்டிக் கொடுத்துச் சுத்தமாக எடுத்து, அம்மிக்கல்லில் வைத்துப் பனங்கற்கண்டு கூட்டி அரைத்து, மெழுகு பதமாக எடுத்துத் தினம் காலை மாலை எலுமிச்சம் பழம் அளவு சாப்பிட்டு வர ரத்தமூலம் குணமாகும். மலச்சிக்கல் இருந்தால் இதைச் சாப்பிடும்போது இரவு காலத்தில் சிறிது சிற்றாமணக்கெண்ணெயையும் உட்கொள்ளலாம்.

முள்ளங்கிக் கிழங்கின் தனிச்சாற்றை வேளைக்கு $1\frac{1}{2}$-3 அவுன்ஸ் அளவு தினம் 2-3 வேளை கொடுக்கலாம். முள்ளங்கிக் கிழங்கைப் பகல் ஆகாரத்திற்குமுன் உட்கொள்ளத் தீபனத்தையுண்டாக்கும். ஆகாரம் கொண்டபின் உட்கொள்ள விரைவில் ஜீரணிக்கக் கூடிய உதவியைச் செய்யும்.

முள்ளங்கியிலை.

(Raphanus Sativus—Leaves).

வாயுமிகும் பித்தம் வளருங் கிருமியுமா
மோய்வுரு நெஞ்செரிவு முண்டாங்காண்—டூயநிற
முள்ளாங் கியினிலையை முற்றுமுண்டாற் குன்மவலி
யுள்ளாங் கிளம்பா துரை.

குணம்:—(இ-ள்.) முள்ளங்கியிலையால் வாதகோபம், பித்த நோய், கிருமிரோகம், மார்பு எரிச்சல் ஆகிய இவைகள் உண்டாகும். வயிற்று நோயடங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, மூத்திரவர்த்தனகாரி, ஜடராக்கினி வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—முள்ளங்கியினுடைய இளங்கீரையை அரிந்து சலத்தில் போட்டு அலம்பி வெந்து மலர்ந்துள்ள துவரம் பருப்புடன் கூட்டி உப்பிட்டுத் துவட்டலாகச் செய்து, சிறிது

மிளகாய் கிள்ளிப் போட்டுத் தாளித்து அன்னத்துடன் கூட்டி உட் கொள்ளலாம். இது ஆகாரத்திற்கு ஏற்ற கறியாகவும் நோயைப் பரிகாரம் செய்வதற்குச் சிறந்த அவிழ்தமாகவும் இருக்கும். இதன் தனியிலைச்சாறு வேளைக்கு ½-1 தேக்கரண்டியளவு தினம் 3 வேளை சாப்பிடலாம். இதனால் மலசலக்கட்டு, சூதகக்கட்டு அற்பவாத ரோகங்கள் தீரும்.

முள்ளங்கி வித்து.

(Raphanus Sativus—Seeds).

நாற்ற மலநீரை நாளுளு நீக்கிவிடும்
ஊற்றஞ்செய் கல்லடைப்பை யோட்டிவிடும்—ஏற்றமுடன்
உள்ளங் களிப்புறவே ஒண்ணுதலாய் எஞ்ஞான்றும்
முள்ளங்கி வித்தை மொழி.

குணம்:—(இ-ள்.) முள்ளங்கிவித்து மலத்தையும் நீரையும் ஒழுங்காகக் கழிக்கும்; நீரில் உண்டான கல்லடைப்பை நிவர்த்தி செய்யும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—10 பலம் வெந்நீரில் 1 பலம் முள் ளங்கி வித்தை ஒன்றிரண்டாய் இடித்துப்போட்டு, 3-4 மணிநேரம் நன்றாய் ஊறினபின் வடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 4-5 தேக்கரண்டி வீதம் 3 வேளை கொடுத்துவர மலசலக்கட்டு, சூதகக் கட்டு வெளியாகும். பிரமேகம் சாந்தப்படும்.

முள்ளிக்கீரை.

(Amaranthus Spinosus).

நீரைப் பெருக்கிவிடு நீடனலைத் தானெழுப்பும்
பாரநறுந் தங்கத்தைப் பஸ்மிக்கு—நேரே
விடவிருக்கும் பொற்றட்டை மேவுமல்குன் மாதே
யடவிநிற்கு முள்ளிக்கீ ரை.

குணம்:—(இ-ள்.) காட்டு முள்ளிக்கீரை நீர்ப்பேதியையும் ஜடராக்கினி விருத்தியையும் உண்டாக்கும். தங்கத்தைப் பஸ்ப மாக்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைச் சலம் விட்டு நெகிழ அரைத்துக் களிபோல் கிளறிப் பொறுக்கக்கூடிய சூட்டில்

கட்டிகளுக்கு வைத்துக் கட்டிவர எளிதில் பழுத்து உடையும். இன்னும் இதன் வேரைச் சுட்டுச் சாம்பலாக்கி, அன்னம் வடித்த கஞ்சிச் சலத்தில் குழப்பிக் கட்டிகளுக்குக் கனமாகப் பூசிவைக்க விரைவில் உடைத்துக் கொள்ளும். இதன் வேரையும் இலையையும் இடித்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு எண்மடங்கு சலம் விட்டு ஒரு பங்கு இருக்கச் சுண்டக் காய்ச்சி, வேளைக்கு ½-¾ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுக்க, நீர்க்கட்டை உடைக்கும். முள்ளிக்கீரை வேர் பலம் 1, ஓமம் விராகனெடை 2½, வெள்ளைப் பூண்டு விராகனெடை ½; இவைகளைக் கூட்டி அரைத்து வேளைக்குச் சுண்டைக்காய் அல்லது கழற்சிக்காய்ப் பிரமாணம் தினம் 3 வேளை கொடுக்க வயிற்று வலி போம். தங்கத்தை இதன் சாறு விட்டு அரைத்துப் புடமிடப் பஸ்பமாகும்.

முள்ளிலவமரம்.

(Bombax Malabaricum).

தந்துமே கஞ்சிறுநீர்த் தாரைவெப் பம்வாயு
வுந்தவரும் பேதியிவை யோட்டுங்காண்—முந்திக்
கிளர்வள்ளை பாயும்வரிக் கெண்டை விழியாய்
வளர்முள் ளிலவ மரம்.

குணம்:—(இ-ள்.) முள்ளிலவமரம் பஞ்சுநூலைப்போல வீழ்கின்ற தந்துமேகத்தையும், மூத்திரநாளச் சூட்டையும், வாதாதிசாரத்தையும் போக்கும் என்க.

(இதுவுமது)

கோங்கினறும் பட்டையாற் கூறரிய மேகம்போந்
தாங்கரிய பற்பிணியுஞ் சாந்தமாம்—வாங்குவெண்மைக்
கன்னு ரதுவெள்ளிக் காசெனவே பஸ்மிக்கும்
மின்னுர் சிகாமணியே வின்.

(இ-ள்.) கோங்கின் பட்டையால் பிரமேகமூத்திரமும் தாளக்கூடாத தந்தரோகமும் நீங்கும். இதில் கல்நார் பஸ்பமாகும் என்க.

செய்கை:—பட்டைக்கு: மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பச்சைப் பட்டையை வேளைக்கு ½ பலம் கொண்டுவந்து இளநீர் விட்டாவது, பசுவின்பால் விட்டாவது அரைத்துப் பிழிந்து உள்ளுக்குச் சாப்பிட நீர்க்கடுப்பு,

நீர் எரிச்சல், வெள்ளை, ரத்தவெள்ளை, சீதபேதி, இரத்தபேதி இவைகள் போம்; விந்துகட்டும். அல்லது ஒரு பலம் பட்டையைக் கொண்டு வந்து பஞ்சுபோல் நசுக்கி ஒரு புது மட்கலயத்தில் போட்டு ½ படி சலம் விட்டுச் சிறு தீயில் வைத்து எரித்து, வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை உட்கொள்வதாலும் மேற்கூறப்பட்ட வியாதிகள் குணமாகும்.

முள்ளிலவம்பிசின்.

(Bombax Malabaricum—Gum).

பொல்லாத மூலம் புகலும் பெரும்பாடு
நில்லாத பேதியுமே நீக்கமுறு—மல்லாமல்
உள்ளிருக்கும் வெப்பா லுறுஞ்சீத பேதியறும்
முள்ளிலவ நற்பிசினின் முன்.

குணம்:—(இ-ள்.) முள்ளிலவம் பிசினியால் பெரும்பாடு, மூலம், பேதி, சீதபேதி இவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனை உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 10-20 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டித் தினம் 3 வேளை கொடுக்கப் பெரும்பாடு, பேதி, சீதபேதி, ரத்தபேதி இவைகள் குணமாகும். இலவம்பிசின் தோலா 1, வெப்பாலையரிசி தோலா 1, இவைகளிரண்டையும் இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 3-5 குன்றி எடை வில்வப் பழச்சதைக் கியாழத்தில் போட்டுத் தினம் 2 வேளை கொடுக்கச் சீதபேதி, பேதி இவைகள் குணமாகும்.

இலவம்பிசின், உலர்ந்த வில்வப்பழச்சதை, மாங்கொட்டைப் பருப்பு வகைக்கு விராகனெடை 1, அபினி குன்றி எடை 2½, இவைகளை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 10-20 குன்றி எடை நெய்யில் கொடுக்கச் சீதபேதி, பேதி, வயிற்றுக்கடுப்பு இவைகள் தீரும்.

முள்ளுத்திராட்சைப் பழம்.

(Thorny Grapes).

சீராரும் முள்ளுத் திராட்சைப் பழமுண்ணப்
பேராரும் பித்தம் பெருகாதே—போராடும்
வாந்தியுட னெஞ்செரிவு வன்மை யுறுமயக்கஞ்
சாந்தமுறு மென்றுலகில் சாற்று.

குணம்:—(இ-ள்.) முள்ளுத்திராட்சைப் பழத்தினால் பித்தம், வாந்தி, மார்பு எரிச்சல், மயக்கம் இவைகள் நீங்குமென்க.

செய்கை:—சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—*இந்தப் பழத்தை முள், குச்சி முதலியவைகள் இல்லாமல் ஆய்ந்து எடுத்து வாயிலிட்டு அடக்கி வைத்துக்கொண்டு, அதிலிருந்துவரும் புளிப்புச்சுவையை விழுங்கிக் கொண்டுவர நாவின் அருசியை நீக்கி, வாந்தியை அடக்கும். பித்த சம்பந்தமான பல பிணிகளையும் நீக்கும். இதனைச் சர்ப்பத்தாகச் செய்து உபயோகப்படுத்துவதும் உண்டு. எங்ஙனமெனில்—

முள்ளுத் திராட்சைச் சர்ப்பத்து.

காலே அரைக்கால் படி சுத்த சலத்தில் 6 பலம் பழம் புளியை இட்டு நன்றாய்ப் பிசைந்து பிசைந்து தெளிவு நீரை வடிகட்டி, அதனில் 4 தோலா சுத்தப்படுத்திய முள்ளு திராட்சைப் பழத்தைப் போட்டுச் சிறிது நேரம் ஊறவிட்டுப் பிசைந்து வடிகட்டித் திப்பியை நீக்கிவிட்டு,மேற்படி சலத்தில் 12 பலம் வெள்ளை சர்க்கரை கூட்டிச் சர்ப்பத் பதமாகக் காய்ச்சிச் சீசாவில் பத்திரப் படுத்துக. இந்தச் சர்ப்பத்தில் வேளைக்கு ஒரு தோலா வீதம், 2 அவுன்ஸ் சலத்தில் விளாவித் தினம் 2 வேளை உள்ளுக்குக் கொடுத்துவர முற்கூறப் பட்ட ரோகங்கள் குணமாகும்.

மூக்குறட்டை.

(Boerhavia Diffusa).

சீத மகற்றுந் தினவடக்குங் காந்திதரும்
வாத வினையை மடிக்குங்காண்—பேதி
கொடுக்குமதை யுண்டக்காற் கோமளமே பித்த
மடுக்குமே மூக்குறட்டை யாய்.

குணம்:—(இ-ள்.) மூக்குறட்டை ஆமம், நமைச்சல், வாத நோய் இவைகளை நீக்கும். அழகையும், விரேசனத்தையும், பித்தப் பிணியையும் உண்டாக்கும் என்க.

செய்கை:—வேருக்கு: மலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை இதர கீரைகளுடன் கூட்டித் துவட்டலாகச் சமைத்து உண்பதுண்டு. இதனால் நீர், தாராளமாகப் போகும், மலம் தள்ளும், வாயுவும் நீங்கும். இதன் வேரை நன்றாயுலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்

* இதனை ஜெரிஸ் பழமென மகம்மதியர் கூறுவர்.

துக்கொண்டு, வேளைக்கு ஒரு விராகனெடை வீதம் 3 அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தில் போட்டு, 2 மணி நேரம் ஊறவிட்டு வடிகட்டிச் சாப்பிட மலம் தள்ளும், நீர் இறங்கும். அதிக அளவில் உட்கொள்ள வாந்தி ஆகும். குறைந்த அளவில் சாப்பிட்டு வரக் கபத்தைக் கரைத்துச் சுவாச காச ரோகத்தைக் குணப்படுத்தும். இன்னும் குண்டிக்காய், ஈரல், இருதயம் முதலிய விடங்களில் சேர்ந்துள்ள துர்நீரை மலசல மூலமாக வெளிப்படுத்தி நீர்க்கோவை, மகோதரம் முதலியவைகளைக் குணப்படுத்தும்.

மூங்கில் அரிசி.

(Bambusa Arundinaceae—Rice).

உதிரபித் தந்தீர்க்கு மோங்குசுரத் திற்கு
மதிரவரு கண்ணோ யதற்கும்—புதிதாகக்
கஞ்சிசெய்ய லாகுங் கருதிற்சிற் றுண்டியுமாஞ்
செஞ்சிலம்பார் மூங்கிலரி சி.

குணம்:—(இ-ள்.) பாயசம், பலகாரம் முதலியவை செய்வதற்கான மூங்கிலரிசி ரத்தபித்தரோகம், விபரீதசுரம், நேத்திர நோய் இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—ரக்தஸ்தம்பனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த அரிசியை நன்றாய்க் குத்திப் புடைத்துச் சுத்தப்படுத்தி அன்னமாகச் சமைத்தாவது அல்லது பாயசமாகச் செய்தாவது ஏழைக் குடியானவர்கள் உண்பது உண்டு. இதனால் ரத்த பித்தரோகம், உட்சூடு, நேத்திர நோய் இவைகள் போம்.

மூங்கிலிலை.

(Bambusa Arundinaceae—Leaves)

குடற்கட்டுச் சூலையுடன் குன்ம முதிர
முடற்கெட்ட ா தோடி யொழியு—மடற்றங்கு
வேல்விழிமா தேகேளாய் வேயி னிலைதனக்குக்
கால்வழியுஞ் சோணிதம்போங் காண்.

குணம்:—(இ-ள்.) மூங்கில் இலைக்குக் குடற்சூலையும், வயிற்று நோயும், ரத்தத் தடிப்பும், பிரசவ காலத்திற்றங்கிய அழுக்கும் நீங்கும் என்க.

செய்கை:—ருதுவர்த்தனகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—மூங்கில் இலையை அரைத்து முள் தைத்த இடத்தில் வைத்துக்கட்ட முள்ளை வெளியாக்கும். மூங்கில் இலைச் சாற்றுடன் காடிகூட்டி இடுப்புக்குப் பூச இடுப்புவலி நீங்கும். இதன் சாற்றுடன் தேன் கூட்டிச் சாப்பிட இருமலைக் குணப்படுத்தும். மூங்கில் இலையைச் சுட்டுச் சாம்பலாக்கி ரணங்களின் மேல் தூவிவர விரைவில் ஆறும். இதன் சாம்பலைக் கொண்டு பல் விளக்க முத்துப்போல் பல் வெளுக்கும். மூங்கில் இலையின்பேரில் படிந்துள்ள பனிநீரைச் சேகரித்து வைத்துக்கொண்டு கண்களில் விடக் கண் சிவப்பு மாறுவதுடன் கண் கூச்சமும் நீங்கும்.

மூங்கிலுப்பு.

(Bambusa Arundinaceae—Silicious Concretion)

பித்தக்கை காலெரிச்சல் பேசுமதிற் றூகசுரம்
தொத்துஞ் சயகாசந் தொல்லிருமல்—சுத்தலுற
முற்றியநீர்க் கட்டை முறித்துவிடும் மூங்கிலதில்
பற்றியதோர் உப்பினது பண்பு.

குணம்:—(இ-ள்.) மூங்கில் உப்பினால் பித்தத்தினாலுண்டாகின்ற கைகால் எரிச்சல், தாகம், சுரம், க்ஷயம்காசம் முதலிய இருமல், நீர்க்கட்டு இவைகள் போம் என்க.

செய்கை:—உற்சாககாரி, சங்கோசனகாரி, பலகாரி, அங்காகர்ஷணநாசினி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைக் கல்வத்தில் போட்டுப் பன்னீர் விட்டு ஏழுநாள் நன்றாய் அரைத்துக் குன்றி அளவு மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2-3 மாத்திரைகளைக் காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்

மூங்கிலுப்பு, ஏலரிசி, அசல் சீந்தில்சர்க்கரை இம்மூன்றும் வகைக்குப் பலம் $\frac{1}{2}$, கற்கண்டு பலம் $1\frac{1}{2}$; ஒருங்கு கூட்டி அரைத்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்குக் கால்ரூபாய் எடை பாலில்போட்டுத் தினம் இருவேளை கொடுக்கவும். இதைக் கொடுக்கும்போது ரோகிக்குப் பேதி இருந்தால் பூமாதுளம் பூவையும் $\frac{1}{2}$ பலம் சேர்த்துக்கொள்ளவும்.

திப்பிலி தோலா $\frac{1}{2}$, ஏலரிசிதோல $\frac{1}{4}$, இலவங்கப்பட்டை தோலா $\frac{1}{8}$, மூங்கிலுப்பு தோலா 1, கற்கண்டு தோலா 2; இவைகளை யெல்லாம் ஒருமிக்க அரைத்து வஸ்திர காயம் செய்து, வேளைக்கு ஒரு விராகனெடை பசுவின் பாலில் போட்டுத் தினம் 2 வேளை கொடுக்கவும்.

இந்தச் சூரணங்கள் எல்லாம் தேகத்திலுள்ள மேக அழலையைத் தணிக்கவும், உஷ்ணத்தினாலெழுந்த இருமலைக் குணப்படுத்தவும் சிறந்தவையாகும்.

மூங்கில்.

(Bambusa Arundinaceae).

சூதக வாய்வினது சோணிதந்தங் காதுவரு
மாதே சுரந்தணியும் வாதம்போம்—பூதரமே
லோங்கி வளர்ந்திழையு மோங்கலெனு மூங்கிலுக்கு
வாங்குஞ்சு வாசம்போ மாய்ந்து.

குணம்:—(இ-ள்.) மூங்கில் மரத்திற்கு மாதாந்த ருதுச் சோணிதக்கட்டு, சுரம், வாதநோய், இரைப்பு இவைகள் போம் என்க.

செய்கை:—வேருக்கு: ருதுவர்த்தனகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—மூங்கில் மரத்தின் புறணியைச் சீவி எடுத்தது பலம் $\frac{1}{2}$, கருஞ்சீரகம், மஞ்சள் வகைக்குப் பலம் $\frac{1}{4}$, சேர்த்துக் கியாழமிட்டு வடிகட்டிப் பனைவெல்லம் கூட்டிப் பிரசவம் ஆன ஸ்திரீகட்குக் கொடுக்கச் சிக்கல்பட்டுள்ள உதிரம் வெளியாகும்.

மெருகன் கிழங்கு.

(Arum Macrorhizon).

மெருகன் கிழங்கதுதான் மேகத்தைப் போக்குந்
துருவுகுன்ம மூலந் துடைக்கும்—பெருமீளை
யத்திசுரம் ஐயறுக்கு மங்கங் குளிர்விக்கு
மத்திமுலை மாதே யறி.

குணம்:—(இ-ள்.) மெருகன் கிழங்கு கட்டிப்பிரமேகம், வயிற்றுநோய், அரசம், கபரோகம், அஸ்திதாதுகதசுரம், சிலேஷ்மாதிக்கம் ஆகிய இவைகளைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பெரும்பாலும் குடித்தைலங்களில் சேர்ப்பதுண்டு. எங்ஙனமெனில்—

மெருகுள்ளி எண்ணெய்.

இந்தக் கிழங்கின் மேற்றோலைச் சீவி வில்லை வில்லையாக அரிந்தது பலம் 5, உரித்த வெள்ளைப்பூண்டைத் துண்டுகளாக நறுக்கியது

பலம் 5; இவையிரண்டையும் ஒரு தைல பாண்டத்தில் போட்டு, 10 பலம் சிற்றாமணக்கெண்ணெய் விட்டு, அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துச் சரக்குகள் நீர்வற்றி மிதக்கும் தறுவாயில் வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதில் பெரியவர்களுக்கு வேளைக்கு ஒரு அவுன்ஸ் அளவாகவும், குழந்தைகளுக்கு 1-1½ தேக்கரண்டி யளவாகவும் தினம் ஒரு முறை கொடுக்கவும். இரண்டு மூன்று முறை பேதியாகும். இதனால் வாயு, சொறி, சிரங்கு, கரப்பான், கபாதிக்கம் இவைகள் போம். இது வாததேகிகட்குப் பொருத்தமாகும். இந்தப் பாகத்தில் வெள்ளைப்பூண்டை நீக்கி, அந்த அளவிற்கு வெள்ளை வெங்காயம் சேர்த்துக்கொண்டால் உஷ்ண தேகிகட்குப் பொருத்தமாகும். அல்லது வெள்ளை வெங்காயம் பலம் 2½, வெள்ளைப்பூண்டு பலம் 2½, மெருகன் கிழங்கு பலம் 5, சிற்றாமணக்கெண்ணெய் பலம் 10, கூட்டிப் பதமுறக் காய்ச்சியது சமசீதோஷ்ண தேகிகட்குப் பொருத்தமாகும்.

மேனு.

(Tamarix Gallica).

**துய்யநுரை யீரலிலே தோங்தமுறு மாசதனைப்
பய்ய வொழித்துப் பலங்கொடுக்கும்—மெய்யதாய்
மானுர் விழியாய் மலபந்தந் தானகற்றும்
மேனுவின் சீரை விளம்பு.**

குணம்:—(இ-ள்.) மேனுவானது நுரையீரலிலுள்ள அசுத்தங்களை நீக்கிப் பலங் கொடுக்கும். இன்னும் மலச்சிக்கலை நீக்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மேனுப் பாலைக் குழந்தைகளுக்கு வயதுக்குத் தக்கவாறு 1 - 3 விராகனெடையாகவும் பெரியவர்களுக்கு 2 - 4 தோலா எடையாகவும் சலத்தில் கரைத்தாவது, அல்லது குல்கந்துடன் சேர்த்தரைத்தாவது உள்ளுக்குக் கொடுக்க, வயிற்றில் யாதொரு உபத்திரவமு மில்லாமல் இலகுவாக மலத்தை வெளியாக்கும். இன்னும் நுரையீரலிலுள்ள அசுத்தங்களை வெளியாக்கிச் சுவாசக் குழலைச் சுத்தப்படுத்தும். இது வயிறிரையும் குன்மரோகமுடையவர்களுக்கு உதவாது. இந்த மேனுச் சரக்குடன் சில இதர சரக்குகளைக் கூட்டிக்

கபரோகங்களைக் கண்டிப்பதற்கு அவிழ்தங்களாகச் செய்து கொடுப்பதுண்டு. அவற்றுள் சில முக்கிய முறைகளாவன—

மேனு மாத்திரை.

மேனு பலம் 1, அதிமதுரப்பால் பலம் 1, வெண்மிளகுச் சூரணம் பலம் 1, சீனாக்கற்கண்டு பலம் 2, இவைகளைக் கல்வத்திலிட்டுத் துளித் துளியாகச் சலம்விட்டு அரைத்து 2 நாள் வெய்யிலில் வைக்கவும். இது மெழுகு பதம் வராது. விரல்களில் பிடித்துக் கொள்ளும். ஆதலால் கையில் சிறிது கோதுமைமாவு தொட்டுக் கொண்டு, பட்டாணிப் பிரமாணம் மாத்திரைகளாகத் திரட்டிக் குளிர்ந்த காற்றுவாடை படாமல் இரவியில் 5, 6 நாட்கள் வரை உலரவைத்துச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த மாத்திரையை வேளைக்கு இரண்டு வீதம், வாயில் அடக்கிக் கரைந்துவரும் உமிழ் நீரை விழுங்க இருமலின் வேகம் தணியும். இப்படி மூன்று மணி நேரத்துக் கொருமுறையாக இரவு படுக்கைக்குப் போகும்வரை 5 முறைக்குக் குறையாமல் சுவைத்துக்கொண்டுவர அதிக நன்மையைத்தரும். இப்படி இரண்டு நாட்கள் உட்கொள்ளுகிறவர்களுக்கு எத்தகையக் கொடிய இருமலும், இராப்பகல் ஓயாமல் இரும்புதலினால் உண்டான தொண்டை விரணம், வீக்கம், அழற்சி முதலியவையும் குணமாகும்.

மேனு ஷர்பத்து.

20 பலம் சோம்புத் தீநீரில், 10 பலம் உயர்ந்த மேனுப்பாலைக் கரைத்து வடிகட்டி, ஒரு ஈயம் பூசிய பாத்திரத்தில் விட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து, ஷர்பத்துப் பதமாகக் காய்ச்சிக் கீழ் இறக்கி ஆறவிட்டுச் சீசாவில் பத்திரப்படுத்துக. இந்த ஷர்பத்தில் தினம் காலையில் பெரியவர்களுக்கு 1 முதல் $1\frac{1}{2}$ பலம் உள்ளுக்குக் கொடுக்க மலம் இளகலாகப்போகும். உள்ளுறுப்பிலுள்ள அசுத்தங்களை வெளியாக்கி மேற்படி உறுப்புக்களுக்குப் பலத்தைக்கொடுக்கும். கப சம்பந்தமான ரோகிகளுக்கு விசேஷ நன்மையைத்தரும்.

மைக்கொன்றை.

(Caesalpinia Pulcherrima).

குடல்வாதஞ் சூலை கொடுமேக மெல்லா
மடைவாகப் போக்க வலைந்தே—படிமீது
எக்கொன்றைத் தேடிநெஞ்சி லெண்ண மிடுவானேன்
மைக்கொன்றை யீங்கிருக்கு மால்.

குணம்:—(இ-ள்.) மைக்கொன்றை மரம் குடல் விருத்தி வாயுவையும், தேகக்குடைச்சலையும், மேக ரோகத்தையும் போக்கும் என்க.

(இதுவமது)

மைக்கண் விழியனமே வையகத்தி லெப்போது
மைக்கோன்றைப் பூமேக மாற்றுங்காண்—மிக்கதனைக்
கொண்டாற் சலமேகங் கூகூவேன் றேபதறி
யண்டாதீ துண்மை யறி.

(இ-ள்.) மைக்கொன்றைப் பூவால் பிரமேகமும் சலமேகமும் நீங்கும் என்க.

செய்கை:—இலைக்கு: மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையைப் பேதி ஆவதற்குக் கியாழமிட்டுக் கொடுப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் நிலாவாரைக்குப் பதில் இந்த இலையை உபயோகப்படுத்துவதுண்டு. இது வயிற்றிலுள்ள வாயுவை வெளியாக்கும். இதன் பட்டை அல்லது பூவை ஒரு எடைக்கு 10 எடை சலம்விட்டு 10-15 நிமிஷம் கொதி வரும் வரையில் காய்ச்சி வடித்து, வேளைக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2-3 வேளை கொடுக்கவும். இதனால் தேகக்குடைச்சல், வாயு, மேகரோகம் முதலியவைகள் குணமாகும்.

மொச்சைக்காய்.

(Lablab Vulgaris).

அனிலபித்த வையங்க ளேக்கடிதுண் டாக்குந்
தொனியெடுக்கும் வாயுதனைத் தூண்டு—மனுதினமுங்
கோச்சைமலத் தைப்பெருக்குங் கோரவுட்டி னந்தணிக்கு
மொச்சைக்காய் செய்யு முறை.

குணம்:—மொச்சைக்காயானது திரிதோஷங்கள், தொனிக்கத் தக்கவாதம், க்ஷீணமலம் இவைகளை விருத்தி செய்யும்; மிகு சூட்டைத் தணிக்கும் என்க.

(இதுவமது)

அனிலபித்த வைய மனைத்தையுமுண் டாக்குந்
தொனியெடுக்க வாயுவினைத் தூண்டுந்—தனிவேள்
குனிக்குஞ் சிலைப்புருவக் கோதையே நாளு
மினிக்குமொச் சைக்கொட்டை யே.

(இ-ள்.) இனிப்புள்ள மொச்சைக்கொட்டையானது திரி தோஷங்களேயும் இரைச்சலேயும் தருகின்ற ஆவிருத வாயுவை உண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் பச்சை அல்லது உலர்ந்த கொட்டையைச் சுண்டலாகவும், அன்னத்துடன் கூட்டியுண்ணும் பதார்த்த வகைகளாகவும் பக்குவப்படுத்துவதுண்டு. இது தேகத்தைத் தழைக்கச்செய்யும், ஆனல் சிறிது வாயுவை உண்டாக்கும்.

யானைத்திப்பிலி.

(Scindapsus Officianalis).

வாதமறுந் தீபனமா மாருக் கபங்கரப்பா
னேதுசுரற் கம்மலிவை யோடுங்காண்—பூதலத்திற்
சோனையைநேர் நாசியினீர் தோலாச் சுவாசமும்போம்
யானையினற் றிப்பிலியா லாய்.

குணம்:—(இ-ள்.) யானைத்திப்பிலியால் வாதகோபம், சிலேஷ்மம், கரப்பான், சுரசாதரோகம், நீர்ப்பீநசம், இரைப்பு ஆகிய இவைகள் நீங்கும். தீபனம் உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி, சுவேதகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பொன்மேனியாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 4-8 குன்றி எடை தேன், நெய், சர்க்கரை முதலியவற்றி லொன்றில் கலந்து தினம் 2 வேளை சாப்பிட ஈளை, இருமல், அஜீரணம், வயிற்றுப்பிசம் முதலியவைகள் நீங்கும்.

யானைநெருஞ்சில்.

(Pedalium Murex).

மேகத்தைப் போக்கிவிடும் வெண்குஷ்டந் தானொழிக்குந்
தேகத்திற் கல்லடைப்பைத் தீர்க்குங்கா—ணுகத்தாந்
தேனையரும் பாகைத் திருத்துங் கிளிமொழியே
யானை நெருஞ்சி லது.

(இதுவுமது)

யானே நெருஞ்சி லதுசீ தளமாகும்
மானே யெலும்புருக்கி மாற்றுங்காண்—மேனிதனி
லுள்ள வெரிச்ச லுழலையுட் டாகமோடு
தள்ளுபித்த மும்போக்குந் தான்.

குணம்:—(இ-ள்.) குளிர்ச்சியையுடைய யானைநெருஞ்சில் வெள்ளை வீழல், வெண்குஷ்டரோகம், அஸ்மரி, அஸ்திசிராவ ரோகம், தேக எரிவு, உழலை, தாகம், பித்த மயக்கம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலை, காம்பு, காய் முதலியவற்றைப் பாலிலாவது, சலத்திலாவது போட்டுக் கையினால் சிறிது நேரம் துழாவித் துழாவிக் கொடுத்துக்கொண்டுவர அத் திரவம் தடித்துக் குழகுழப்பாக மாறும். இதைச் சர்க்கரை கூட்டி உள்ளுக்குச் சாப்பிட நீர் தாராளமாக இறங்கும். நீர்க்கடுப்பு, வெள்ளை, சொர்ப்பன ஸ்கலிதம், தாது உடைச்சல் முதலியவை நீங்கும். இப்படிக் குழகுழப்பாகச் செய்த சலத்தைத் தினம் ஒரு வேளை காலையில் 6 அவுன்ஸ் அளவு 10 நாள் சாப்பிட்டு வரப் புதியதாக உண்டாகிய வெள்ளை நீங்கும். நீர்க்கோவைக்கு இதைக் கொடுக்க நீர் இறங்கி வீக்கம் வாடும். இதன் இலையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு 2 விராகனெடை அளவு பாலில் போட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிச் சாப்பிட வெள்ளை, அது சம்பந்தமான பிடிப்பு முதலியவைகள் போம்.

யானை நெருஞ்சிலின் சமூலத்தைக் கொண்டுவந்து, வெண்ணெய்போல் அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு எருமைத் தயிரில் கலக்கித் தினம் ஒரு வேளை காலை நேரத்தில் 3 நாள் சாப்பிட நீர்க்கட்டு, நீர் எரிச்சல், வெள்ளை, தேக எரிச்சல் இவைகள் போம். இதன் இலையை அரைத்து ரணங்களுக்குப் போட ஆறும்.

வங்காரவள்ளைக் கீரை.

(Sesuvium Adscendens).

மாரிக்கா லத்தாய வங்கார வள்ளையினாற்
பூரித்த வாதம் பொருமலொடு—காரித்
திறங்கா மலநீ ரிறங்குமின் புண்டா
முறங்கா விழியணங்கே யுன்.

குணம்:—(இ-ள்.) மழைக்காலத்து வங்காரவள்ளைக் கீரையினால் வாதநோயும் வயிற்றுப்பிசமும் நீங்கும். கருத்துச் சிக்கிய மலமும் மூத்திரமும் சரியாயிறங்கும். குடலுக்குச் சுகமுண்டாகும் என்க.

செய்கை:—இலகுமலகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையைப் பருப்புடன் கூட்டிக் கடைந்து அன்னத்துடன் உட்கொள்ள முலைப்பால் அதிகரிக்கும். மலசலம் தாராளமாகப் போகும். இன்னும், அற்பவாத ரோகங்கள் குணமாகும்.

வசம்பு.

(Acorus Calamus).

பாம்பாதி நஞ்சற் புதப்புண் வலிவிடபா கங்குன்மஞ்
சூம்பா ரிரத்தபித் தம்முக நாற்றம்வன் சூலைசந்நி
வீம்பாம்பை சாசம் பிலீகஞ் சிலிபதம் வீறிரும
ரும்பாங் கிருமி யிவையேகு மாசிவ சம்பினையே.

குணம்:—(இ-ள்.) வசம்பை உபயோகிக்கச் சர்ப்ப கீட தாவர கிருத்திரம் முதலிய விஷங்கள், அற்புத விரணம், ஐவகை வலி, விஷபாகரோகம், குன்மம், ரத்த பித்தம், வாய் நாற்றம், சூலை, சந்நிபாதம், பைசாசம், பிலீகநோய், பாதவன்மிகம், காசம், கயிறு போல் நீண்ட மலக்கிருமி ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—கிருமிநாசினி, கபஹரகாரி, முறைவியாதிரோதி, உதரவாதஹரகாரி, வமனகாரி, ரக்தஸ்தம்பனகாரி, ஜடராக்கினி வர்த்தினி, அங்காகர்ஷணநாசினி, பலகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைச் சிறிது வறுத்து இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு, வேளைக்கு 3-5 குன்றி எடை தேனில் கொடுக்கக் கபத்தையும் வாயுவையும் நீக்கும்; நல்ல தீபனத்தை யுண்டாக்கும். இதைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் கூட்டி நாவிற்றடவிவர வாந்தி, ஒக்காளம், நேர்வாளம் கொடுத்ததின் பயனாக நேர்ந்த தோஷம் போம். இதனுடன் சுக்குச் சேர்த்துச் சலம்விட்டு அரைத்து வீக்கங்களுக்குப் போடக் குறையும். இதன் சூரணத்தை வேளைக்கு 5 குன்றி எடை வீதம், சுவாசகாச

ரோகத்திற்கு 2-3 மணி நேரத்திற் கொருமுறையாகத் தேனில் கொடுத்துவரக் குணம் உண்டாகும். விஷசுரம், விஷபேதி முதலிய வைகள் உண்டாகிறகாலத்தில் இதில் ஒரு சிறுதுண்டை வாயிலிட்டு அடக்கிவைத்துக்கொண்டிருக்க ஷை நோய்களை வரவொட்டாமல் தடுக்கும். இதைச் சுட்டுக் கரியாக்கி விளக்கெண்ணெயில் குழைத்து அடிவயிற்றுக்குப் பூச வாயுவையும் வயிற்று வலியையும் நீக்கும். இந்தக் கரித்தூளை வேளைக்கு 1-1½ குன்றி எடை முலைப்பாலில் கலக்கிச் சிறு குழந்தைகட்குக் கொடுக்க வயிற்றுப்பிசம், பேதி, வலி இவைகளை நீக்கும். இன்னும் இதனில் ஒரு துண்டைச் சலத்தில் போட்டுக் காய்ச்சி குழந்தைகட்கு ஸ்நானம் செய்துவைக்க வலி முதலியவைகள் நீங்கும்.

வசம்பு, பெருங்காயம், திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய்த் தோல், அதிவிடயம், பிடாலவணம் (கருப்பு உப்பு) இவைகளைச் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்துவைத்துக்கொண்டு, வேளைக்கு ½-1 விராகனெடை அளவு தினம் 2 வேளை கொடுத்து வரக் குன்மம், சுரத்தினாலுண்டான அசக்தி, மூர்ச்சை, பயித்தியம், காக்கைவலி முதலியவைகள் குணமாகும்.

வட்டக் கிலுகிலுப்பை.

(Crotalaria Verrucosa)

வட்டக் கிலுகிலுப்பை மாருச் சொறிகிரந்தி
துட்டகண்ட மாலைபல சோபைநோய்—வட்டமுலை
மானே விரணவகை மாந்தமுத னேயெல்லாந்
தானேய கற்றுமெனச் சாற்று.

குணம்:—(இ-ள்.) கிலுகிலுப்பைச் செடி சினைப்பு, சிரங்கு, கண்டமாலை, பற்பல வீக்கம், விரணங்கள், அக்கினிமந்தம் இவற்றை நீக்கும் என்க.

செய்கை:—சோபாநாசினி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை அரைத்துச் சொறி, சிரங்கு, கண்டமாலை இவைகட்குப் பூசிவர ஆறும். இதைக் குடிநீரிட்டுக் கொடுக்க அஜீரணம், வயிற்றுவலி, தோல் சம்பந்தமான பல பிணிகள் குணமாகும்.

வரகு அரிசிச் சாதம்.

(Paspalum Frumentaceum—Cooked).

எறிகபத்தோ டேபலனோ யெய்தும் வறட்சி
சொறிசிரங்கு பித்தந் தொடரு—நிறையுங்
கரகரெனப் பூரித்தக் கச்சுமுலை மாதே
வரகரிசிச் சோற்றால் வழுத்து.

குணம்:—(இ-ள்.) வரகரிசிச் சாதத்தினால் மூச்செறிகின்ற சுவாசம், இதைச் சேர்ந்த சில நோய்கள், புடை, தினவு, கிரந்தி, பித்தாதிக்கம் இவைகள் உண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த அரிசியைச் சில ஏழை மக்கள் நன்றாய்க் குத்திப் புடைத்துச் சாதமாகவும் பலகாரங்களாகவும் செய்து உண்பது வழக்கம். இது கபத்தையும் பித்தத்தையும் விருத்தி செய்யும். தேகத்தில் படை, சொறி, சிரங்கு, நமை முதலிய வற்றை யுண்டாக்கும்.

வலம்புரிக்காய்.

(Helicteres Isora).

பூதபை சாசம் பொறுக்கொணு நேத்திரச்சூர்
சீத மிகுசெவிநோய் கேவல்விக்க—லோதுகுளிர்த்
தோடமொடு மேகங்கூன் சொன்னவையெ லாநடுங்கி
யோட வலம்புரியை யுன்.

குணம் (இ-ள்.) வலம்புரிக்காயால் பதினெண் பூதகணங்கள், சகிக்காவிழிநோய், கர்ணநாதரோகம், இருமலின் தீவாத்தால் வராநின்ற கேவல், விக்கல், சீதசுரத்தினது ஆயாசம், மேகம், கூன் விழுதல் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் காயை நறுக்கி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டிக் காதில் 2-3 துளிவிட்டுக்கொண்டு வரக் காதுவலி, காதில் சீழ்வடிதல் குணமாகும். இதன் வேர்ப் பட்டையில் வேளைக்கு ¼-½ தோலா எடை ¼ படி சலத்தில் போட்டு, வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டித் தினம் இருவேளை கொடுத்துவர நீரில் உள்ள இனிப்பு, பேதி, சீதபேதி முதலிய

வைகள் குணமாகும். இதன் சூரணத்தை வேளைக்கு 5-10 குன்றி எடை சர்க்கரையுடன் கலந்து கொடுக்கலாம், இதுவும் முற்கூறிய நற்பயனைக் கொடுக்கும்.

வல்லாரை.

(Hydrocotyle Asiatica).

அக்கரநோய் மாறு மகலும் வயிற்றிழிவு
தக்கவிரத் தக்கடுப்புத் தானேகும்—பக்கத்தி
லெல்லாரை யும்மருந்தென் றேயுரைத்து நன்மனையுள்
வல்லாரை யைவளர்த்து வை.

குணம்:-(இ-ள்.) வல்லாரையினால் பித்த ஜிக்வாகண்டகரோகமும், மலக்கழிச்சலும், ரத்தக் கிரகணியால் பிறக்கின்ற கடுப்பும் நீங்கும் என்க.

செய்கை:--உற்சாககாரி, வியதாபேதகாரி, பலகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:-இதன் பச்சையிலையை நன்றாய் அரைத்துப் பிழிந்த அப்பட்டமானச் சாற்றில், வேளைக்கு 3-5 துளி பாலுடன் கூட்டிச் சிறிது அதிமதுரச் சூரணம் கூட்டித் தினம் 3 வேளை கொடுக்கலாம். அல்லது இதன் இலையைக் காம்பு முதலியவைகள் இல்லாமல் ஆய்ந்து, ஒரு சுத்தமான சீலையின்பேரில் பரப்பி நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, கல்கார்க்கிட்ட சீசாவில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, வேளைக்கு 2-3 குன்றி எடை சிறிது சர்க்கரை கூட்டித் தினம் 3 வேளை கொடுக்கலாம். அல்லது உலர்ந்த இலையில் ஒரு தோலா நிறை, 8 அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தில் போட்டுச் சூடாறினபின் வடித்து வேளைக்கு $\frac{1}{2}$-1 அவுன்ஸ் வீதம் பால், சர்க்கரை கூட்டித் தினம் இருவேளை கொடுக்கலாம். இவற்றால் குட்டம், கண்டமாலை, மேகரணம், கட்டி, பல்லீறுகளினுண்டான ரணம், சூதகவாயு, சூதகசந்நி, மூர்ச்சாரோகம், மேகவாயுப் பிடிப்பு, கணுச்சூலை, வீக்கம், ப்பயித்தியம், ஞாபகசக்திக் குறைவு, வெள்ளை முதலியவைகள் குணமாகும்.

இதன் இலையைச் சலம்விட்டு நன்றாய் அரைத்துக் காண்டியிலிட்டுக் களிபோல் நெருப்பனலில் வெதுப்பி ரணங்களுக்கு வைத்துக் கட்டக் குணமாகும். இந்த இலைச்சூரணத்தைத் தேங்காய் எண்ணெயில் குழப்பி ரணங்களுக்குத் தடவிவர ஆறும். இந்த இலையை

அரைத்து யானைக்கால், கணுச்சூலை, வீக்கம், கண்டமாலை, மேகப் படை, ரணம் இவைகட்கு மேல்பூசுவதுடன் முற்கூறப்பட்டுள்ள மருந்துகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்துவருதல் அதிக நன்மையைத் தரும். குழந்தைகட்குக் காணும் சீதபேதிக்கு 1-2 இலையுடன் சிறிது சீரகம் சேர்த்து அரைத்துச் சர்க்கரைகூட்டிக் கொடுக்கக் குணமாகும். அப்போது 5-6 இலையை அரைத்துக் கொப்பூழைச் (நாபியைக்) சுற்றித் தடவிவைக்க அதிக நன்மையைத் தரும்.

குறிப்பு:—இங்கு உள்ளுக்குக் கொடுக்கும்படி கூறப்பட்ட அளவு குறைந்ததேயாகும். சிலதினம் கொடுத்துக் குணம் ஏற்படவில்லையென உணரின் சிறிது அளவை அதிகப் படுத்திக்கொள்ள வேண்டும். இதை அளவுக்கு மிஞ்சி உபயோகப்படுத்தத் தலைவலி, மயக்கம், விகாரபுத்தி முதலியவைகள் சம்பவிக்கும். எப்பொழுது சரீரத்தில் சொறி, சிரங்கு, நமை காண்கிறதோ அப்பொழுது மருந்தை நிறுத்திவிட்டு உஷ்ணம் தணிய இரண்டு மூன்று ஸ்நானம் செய்து, மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.

வள்ளைக்கீரை.

(Convolvulus Repens).

வள்ளைக்கீ ரையைத்தின்ன மங்கையர்க்குப் பால்சுரக்கும்
கொள்ளையிடும் வாதங் குடிவிலகும்—விள்ள
மலங்கழிக்கும் மாசகற்றி மாந்தற் கறிவு
துலங்கியழ காக்குமெனச் சொல்.

குணம்:— (இ-ள்.) வள்ளைக்கீரை ஸ்திரீகளுக்குப் பால் சுரப்புண்டாக்கும். வாதப் பிணியை நீக்கும். தேகத்திலுள்ள அசுத்தங்களை மல மூலமாகக் கழித்து நல்ல தேஜசை உண்டாக்கும் என்க.

செய்கை:—க்ஷீரவர்த்தினி, இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பாகப்படித் துவரம் பருப்புடன் கூட்டிக் கடைந்து, அன்னத்துடன் கூட்டிச் சாப்பிட ஸ்திரீகளுக்குப் பால் சுரப்புண்டாகும். மலம் கிரமமாகப் போகும். தேஜசு மிகும்.

வறட்பூலா யிலை.

(Fluggea Leucopyrus—Leaves).

சீதரத்தஞ் சேர்ந்தேனுஞ் சேர்க்கையின்றி வந்தனுகும்
பேதிகள்வ யிற்றின் பிடுங்கலினு—பாதிகளும்
பூதலத்தி னில்லைவறட் பூலா விலையரைத்து
மேதித் தயிரிலுண்ண வே.

குணம்:—(இ-ள்.) வறட்பூலா இலையை அரைத்து எருமைத் தயிரிற் கரைத்துக் குடிக்கச் சீதரத்தம் கலந்தாவது தனித்தாவது காணுகிற பேதிகளும், இவைகளினுலுண்டாகிற வயிற்று நோயும், ஆயாசமும் விலகும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் இச்செய்யுளின் உரையின்கண்ணே இனிது விளக்கப்பட்டிருக்கிறது.

இன்னும், இதன் வேர்ப் பட்டையை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, குழந்தைகளின் பருவத்திற்குத் தக்கவாறு 2-3 குன்றி எடை, தினம் 3 வேளை, பாலில் கலக்கிக் கொடுத்துக்கொண்டு வரச் சீதபேதி, ரத்தபேதி, உஷ்ணபேதி முதலியவைகள் குணமாகும்.

வன்னி மரம்.

(Prosopis Spicigera).

வாதசந்நி தோஷமறு மாருத் தழலுளதேன்
ரேதுவரிவ் வன்னிக் குவமையுண்டோ—பூதலத்திற்
கானுர் விஷமுங் கபமுஞ் சொறியும்போந்
தேனே யிதையறிந்து செப்பு.

குணம்:—(இ-ள்.) வெப்பத்தையுடைய வன்னி மரத்திற்கு வாதசந்நி பாதம், திரிதோஷம், விஷம், சிலேஷ்ம கோபம், புடை இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுரஹரகாரி, கபஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையில் 2-3 தோலா எடை பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்பாண்டத்தில்போட்டு, ½ படி சலம் விட்டு வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் அளவு தினம் 3 வேளை கொடுத்துவரச் சுவாசரோகம்,

தந்தரோகம், கபரோகம், விஷக்கடி, வாதசிலேத்தும சந்நி முதலியவைகள் போம். இது அதிக உஷ்ணம் செய்யும். தலைமயிரை உதிரச் செய்யும். ஒரு வீசை சிற்றாமணக்கெண்ணெயில் 5 பலம் வன்னிப் பட்டையைப் பஞ்சுபோல் இடித்துப்போட்டு அடுப்பிலேற்றி முறியாப் பதமாகக் காய்ச்சி வடிகட்டித் தினம் காலையில் ½ பலம் வீதம் 5 நாள் கொடுத்துவர வெள்ளை தீரும்.

வாகைப்பிசின்.

(Albizzia Lebbek—Gum).

வாகைப் பிசின்மேகம் வன்கிரந்தி கட்டியையு
மேகத் துரத்து மிதுநிசமே—மாகனக
மேனி கொடுக்கு மிகுத்தபல முண்டாக்குந்
தேனினிய மென்மொழியே தேர்.

குணம்:—(இ-ள்.) வாகைப்பிசின் பிரமேகம், வாதகிரந்தி, மேகக்கட்டி ஆகிய இவைகளை விலக்கும். அழகையும் வன்மையையும் உண்டாக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைப் புது மண் ஓட்டிலிட்டு வெதுப்பி இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு ¼ ரூபாய் எடை காய்ச்சிய பசுவின் பாலில் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கலக்கிச் சாப்பிட்டு வரப் பிரமேகம், உள் ரணம், குடலில் கண்ட கொதிப்பு, பேதி முதலியவைகள் போம். தாது இறுகி வன்மையும் தேஜசும் பெருகும். இன்னும், இதனைக் கருவேலம் பிசினிக்குப் பதிலாக லேகிய பாகங்களில் கூட்டிக் கொள்ளலாம்.

வாகைப்பூ.

(Albizzia Lebbek—Flower).

வாதசம னஞ்செய்யும் வல்விடத்தைப் போக்கிவிடுஞ்
சீதசிலேஷ் மத்தைச் சிதைக்குங்காண்—போதவுள்ளே
மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்தி லேபெரிய
வாகைப்பூ தன்னை வழுத்து.

குணம்:—(இ-ள்.) கைப்புச் சுவையையுடைய வாகைப்பூ வாத தோஷத்தையும், சர்ப்ப விஷங்களையும், சிலேஷ்ம கோபத்தையும் கெடுக்கும் என்க.

செய்கை:—விஷநாசகாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் புஷ்பத்தை நன்ருய் அரைத்து எரிச்சல் மிகுந்த கட்டிகளுக்கு மேல்வைத்துக்கட்ட எரிச்சல் அடங்கும். வீக்கம், சரீரத்தில் கண்ட பித்தத் தழும்பு இவைகட்குப் பூசிவர அவைகள் சாந்தப்படும். இந்தப் புஷ்பத்தை அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் வெந்நீரில் கலக்கிச் சாப்பிடச் சர்ப்ப விஷமிறங்கும். கடிவாயினும் இதை வைத்துக்கட்ட விஷத்தை முறிக்கும்.

வாகைமரம்.

(Albizzia Lebbek).

வாகைகா ரங்கசப்பை வைத்திருக்கு முள்ளபடி
யோகையு றப்பசியை யுண்டாக்குந்—தோகையரே
தீரா விஷத்தோடு சில்விஷத்தை யுந்தீர்க்கு
மாராயத் தோன்று மது.

(இதுவுமது)

வாகை யனல்விரணம் வாத வறட்சியுடன்
தாக சுரமுந் தணிக்குங்கா—ணுகமதி
லக்கர மெல்லா மகற்றிவிடும் பூவனமே
யக்கணத்தி லென்றே யறி.

குணம்:—(இ-ள்.) கார்ப்பும் கைப்புமுள்ள வாகைமரம் ஜடராக்கினியை விருத்தி செய்யும். சர்ப்பகீட விஷங்கள், பித்த விரணம், வாதச்சொறி, தாகசுரம், கந்ததாளிரோகங்கள் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையை இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் தினம் இருவேளை கொடுத்துவர இரத்த மூலம், உஷ்ண பேதி, பிரமேகம் முதலியவைகள் குணமாகும். இதன் வேர்ப் பட்டையைக் கொண்டுவந்து பஞ்சுபோல் நசுக்கி, ஒரு பலம் அளவிற்கு ஒரு பழகிய மட்குடுவையில் போட்டு $\frac{1}{2}$ படி சலம் விட்டு வீசம்படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, நோயின் வன்மை மென்மைக்கு ஏற்றவாறு $\frac{1}{2}$ அல்லது 1 அவுன்ஸ் வீதம் தினம்

இருவேளை கொடுத்துவரப் பேதி, வெப்ப சுரம், உந்திரணம் முதலியவைகள் குணமாகும். இந்தக் கியாழத்தை வாய் கொப்புளித்துவர வாய்ரணம், பல்லாட்டம், ஈறு சுரப்பு முதலியவைகள் குணமாகும். இதன் பட்டையைச் சுட்டுக் கரியாக்கிப் பற்றேய்த்துவரப் பல்லாட்டம், பல் ஈறு குறைதல், பல்வலி முதலியவைகள் குணமாகும். இதன் விதையிலிருந்து எடுத்தத் தைலத்தை உள்ளுக்குக் கொடுத்துக்கொண்டுவரக் குஷ்டரோகம் முதலியவைகள் குணமாகும்.

வாதநாராயண மரம்.

(Poinciana Elata).

நன்மை தரும்வாத நாரா யணமரத்தின்
தன்மை இனிதுரைக்கின் தாழ்குழலே—வன்மையுறும்
வாத வலிகுடைச்சல் வாட்டுகணுச் சூலைஎலாம்
பூதலத்தில் விட்டோடிப் போம்.

குணம்:—(இ-ள்.) வாதநாராயண மரத்தால் வாதவலி, குடைச்சல், கீல்வாதம் முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—பித்தகாரி, உற்சாககாரி.

உபயோகிக்கும் முறை:—அரை வீசை வாதநாராயண இலையை ஒரு பெரிய மட்பாண்டத்தில் போட்டு, எட்டுப்படி சுத்த ஜலம் விட்டு அடுப்பிலேற்றி எரித்து, ஜலம் கொதிக்கும் சமயம் கீழிறக்கி ஆறவிட்டுப் பொறுக்கக்கூடிய சூட்டில் நோயுள்ள பாரிசத்தில் தாரையாக விடுவதுண்டு. இதுவுமல்லாமல் இந்த இலையை ஒரு சீலையின்பேரில் கனமாகப் பரப்பிச் சிவக்க வறுத்த மணலை நடுவில் கொட்டி முடிச்சுக் கட்டிக்கொண்டு, இலைக்குச் சூடேறிய சமயம் பொறுக்கக்கூடிய சூட்டில் நோயுள்ள இடத்தில் ஒற்றடம் கொடுப்பதுண்டு. இத்தகையச் சிகிச்சைகளினால் கீல்களில் காண்கின்ற வீக்கம், பிடிப்பு, நோய் முதலியவைகள் நிவர்த்தியாகும். இத்தகையச் சிகிச்சைகளில் ஏதேனும் ஒன்று செய்துவிட்டு, உடனே வாதநாராயண இலையைச் சிறிது சிற்றாமணக்கு எண்ணெய் விட்டுப் பிசறி, ஒரு மட்பாண்டத்திற் போட்டு, நெருப்பனலில் சிறிது வெதுப்பிப் பொறுக்கக்கூடிய சூட்டில் நோயுள்ள பாரிசத்தில் வைத்துக் கட்டுவது சாலச் சிறந்தது. இப்படித் தினம் இருவேளை செய்துவரச் சில நாளில் முழுக் குணத்தை யுண்டாக்கும். இந்த

மூலிகையை வாதமடக்கி என்றும், வாதநாராயண மரம் என்றும் இடுகுறிப் பெயராக வாதரோகங்களை நிவர்த்தி செய்வதில் சிறந்ததெனப் பெரியார் கூறி இருக்கின்றனர். இதனை மேலுக்கு உபயோகப்படுத்துவதுமன்றி, உள்ளுக்குக் கொடுப்பதுமுண்டு. எங்ஙனமெனில்—

வாதநாராயண எண்ணெய்.

சுத்தம் செய்த வாதநாராயண இலையை இடித்துப் பிழிந்தெடுத்தச் சாறு படி 1, சிற்றாமணக்கெண்ணெய் படி 1, இவை இரண்டையும் ஒருமிக்கக் கலந்து ஒரு தைல மண்பாண்டத்தில் விட்டு, அதனில் தோல் உரித்த பத்துப்பலம் வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக அரிந்துபோட்டு அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்து, வண்டல் மெழுகு பதம் வரும்போது வடிகட்டி எடுத்துக் கொள்க. இந்த எண்ணெயில் ஏறத்தாழ 1-2½ அவுன்ஸ் அளவு ஒரு சுத்தமானக் கல்வத்திலிட்டு, அதனில் கால் பலம் சுத்திசெய்த பூரத்தைப்போட்டுக் கை ஓயாமல் 1 அல்லது 1½ ஜாமம் அரைத்து, முன்சித்தப்படுத்திய தைலத்தில் வழித்துவிட்டுக் கலக்கி, நன்றாக உறவானபின் சீசாவில் பத்திரப் படுத்துக. வேண்டும்போது இந்த எண்ணெயை வெறும் வயிற்றில், காலையில் ½ அவுன்ஸ் வீதம் உள்ளுக்குக் கொடுக்க நாலைந்துமுறை பேதியாகும். பேதி சரிவர ஆகாவிடில் மறுமுறை சிறிது அளவை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். கொடுத்த அளவில் பேதி அதிகமானால் மறுநாள் அளவைக் குறைத்துக்கொள்ளவேண்டும். இப்படி மூன்று அல்லது நான்கு நாளைக்கு ஒரு தடவை மூன்று முறை கொடுக்க ஓடு வாயு, குடைச்சல், குத்தல், கீல்வாதம், வீக்கம், சர்வாங்கப்பிடிப்பு முதலியவைகள் நீங்கும். பத்தியம்: புளி, நல்லெண்ணெய், கடுகு, மீன், கருவாடு முதலியவற்றைத் தள்ளி இச்சா பத்தியமாக இருத்தல் வேண்டும்.

வாதுமை நெய்.

(Amygdalus Communis—Seed oil).

அழலெல்லா மாற்று மரிய வுடம்பி
லழலோடு விந்துவையுண் டாக்கும்—வழுவழுப்பைப்
பூண்டகபம் போக்கும் பொறிகட் கொளிசெய்யு
நீண்டடப்பம் வித்திலிறும் நெய்.

குணம்:—(இ-ள்.) அடப்பம்வித்து நெய் என்கிற வாதுமை நெய் ஔஷதங்களினாலும், உழைப்பினாலும் கிளைத்த வெப்பங்களையும், கபதோஷத்தையும் நீக்கும். இது சமோஷ்ணமாம். இன்னும் சுக்கிலம், பஞ்சேந்திரியங்களுக்கு ஒளி இவைகளை யுண்டாக்கும்.

செய்கை:—மலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த நெய்யை உச்சிக்குத் தடவிக் கொண்டுவரக் கண் எரிச்சல் நீங்கும். மருந்துகளின் வீறினாலும் அதிக உழைப்பினாலும் ஏற்பட்ட உஷ்ணத்தைச் சாந்தப்படுத்தும். நாசிக்குள் வரும்படியான ரணங்களுக்கு இதை இரண்டொரு துளி அடிக்கடி விட்டுக்கொண்டுவர ஆறும்.

வாதுமைப் பருப்பு.

(Amygdalus Communis—Kernel).

அடப்பம்வித் தாம்வாது மைப்பருப்பி னாலே
மடற்பெரிய கட்படல மாறுஞ்—சடக்கெனவே
புண்மேற் கொழுப்பகலும் போகமுமுண் டாமென்றே
மண்மேற் றுணிபாய் வழுத்து.

குணம்:—(இ-ள்.) அடப்பம்வித்து என்கிற வாதுமைப் பருப்பினால் விழிப்படலமும், விரணக் கொழுமையும் நீங்கும். கலவியில் அதிக விருப்பமுண்டாகும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—தோல் நீக்கிய வாதுமைப் பருப்புடன் கற்கண்டு கூட்டிச் சாப்பிட உள்ளுறுப்புக்கள் சுத்தப்படுவதுடன் உள்ளழலையும் சாந்தப்படும். தேகம் கொழுமை பெரும். இதைப் பால்விட்டு அரைத்துப் பால் பிழிந்து வடிகட்டிச் சர்க்கரை கூட்டிச் சாப்பிட மார்பு எரிச்சல், இருமல், உள் வறட்சி, சுவாசம், சூலை, உதிரச்சிக்கல் முதலியவைகள் போம். 10 பலம் வாதுமைப் பருப்பைச் சலம்விட்டு அரைத்துக் கிடைக்கும்வரையில் பாலெடுத்து வடிகட்டி, இதனுடன் ஒரு வீசை சீனாக்கற்கண்டு கூட்டிச் சர்பத்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு, வேளைக்கு 1-2 தோலா எடை, காய்ச்சியப் பசுவின் பாலில் கலக்கிக் கொடுத்துவரத் தேகம் கொழுமை பெரும். தலைமூளை, கண் முதலியவற்றிற்குப் பலம் உண்டாகும். மலம் தாராளமாக வெளியாகும். தாது விருத்திக்குரிய லேகியங்களில் கூட்டிப் பாகப்படுத்தி உண்ண விந்து இறுகிப்

போகத்தில் உற்சாகம் விளையும். இந்த இனத்தில் கசப்பு வாதுமைப் பருப்பு என்றொன்றுண்டு. இதை உள்ளுக்குச் சாப்பிடலாகாது ஒருக்கால் உண்ணும்போது வாயிலகப்பட்டால் உமிழ்ந்துவிடவேண்டும்.

வாதுமைப் பிசின்.

(Amygdalus Communis—Gum).

நெஞ்ச முரக்கு நெகிழ்விந்து வுங்கட்டும்
நஞ்சு மருந்துகளு நல்லமிர்தாம்—விஞ்சுகயக்
கோழை யடங்குங் குலவா துமையெனவே
வாழையடப் பஞ்சளிக்கு மால்.

குணம்:—(இ-ள்.) அடப்பமரத்தின் பிசினால் சுக்கிலத்திற்குத் தடிப்புண்டாவதுமன்றி, விஷமான மருந்துகளும் அமிர்தமாம். க்ஷயத்தினால் அதிகரித்தக் கபக்கோழையானது தன்னிலையை விட்டுப் பெயராதடங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாக உள்ளுக்குக் கொடுப்பதைவிட இதாசரக்குகளுடன் கூட்டி உபயோகப்படுத்துவது சாலச்சிறந்தது. வேலம் பிசினின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டுள்ள இருமல் மாத்திரையைக் கவனிக்கவும். இன்னும் இதனைத் தாது விருத்திக்குரிய லேகியங்களில் கூட்டுவதுண்டு.

வாய்விளங்கம்.

(Emblica Ribes).

பாண்டுகுட்டங் குன்மம் பருந்தூல நோய்வாதந்
தீண்டு திரிவிடஞ்சி ரந்துண்ட—நீண்டமடி
நோய்விளங்கக் காட்டாத நுண்கிருமி யாசனப்புண்
வாய்விளங்கங் காட்டவிடு மால்.

குணம்:—(இ-ள்.) வாய்விளங்கத்தால் பாண்டு, குட்டம், குன்மம், அதிதூலம், வாயு, சர்ப்பகீட தாவரவிஷங்கள், சிரசு, நாசி, வயிறு இவைகளில் இப்பிணியுளதென்றறிதற்கரிய சன்னக்கிருமி, பகந்தரம் இவை போம்.

செய்கை:—வியதாபேதகாரி, உற்சாககாரி, உதரவாதஹாரகாரி, கிருமிநாசினி, மலகாரி, நாசிநீர்விர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த விதையை (வாய்விளங்கத்தை)ச் சூரணித்துவைத்துக்கொண்டு, வேளைக்கு 1-1¼ விராகனெடை வீதம் தேனில் மத்தித்துத் தினம் 3 வேளை சாப்பிட்டு, மறுநாள் காலையில் சிற்றாமணக்கெண்ணெயை 1 அவுன்ஸ் அளவிற்கு உட்கொள்ள வயிற்றிலுள்ள கிருமிகள் வெளியாகும். இந்தச் சூரணத்தைச் சிறுவர்களுக்கு வேளைக்கு ¼-½ விராகனெடை தினம் 2 வேளை தேனில் மத்தித்துக் கொடுத்துக்கொண்டுவர வயிற்றுப் பொருமல், அஜீரணத்தால் காணும் வயிற்றுவலி முதலியவைகள் குணமாகும். வாய்விளங்கத்தை அரைத்துத் தேள்கொட்டு வாயிலும், ஊறலுள்ள படைகளிலும் தடவிவர விரைவில் குணமாகும்.

இதன் பட்டையை உலர்த்தி இடித்துச் சூரணம்செய்து பற்பொடிகளில் கூட்டிப் பல்தேய்த்து வரப் பல்வலி, பல்லீற்றிலுண்டான விரணம் முதலியவைகள் குணமாகும். இதன் பட்டையை அரைத்து மார்பு, விலா முதலிய விடங்களில் தழும்பப்பூசக் கபத்தைக் கரைக்கும். நோயும் சாந்தப்படும். அத்தருணம் ரோகிக்குச் சித்தப்படுத்தும் அரிசிநொய்க் கஞ்சியில், இந்தப் பட்டையில் சிறிது தட்டிச் சீலையில் முடிந்துபோட்டுக் காய்ச்சிப் பட்டையை நீக்கிவிட்டுக் கஞ்சியைச் சிறிது உப்பிட்டுக் கொடுத்தல் சாலச் சிறந்தது.

வாலுழுவை அரிசி.

(Celastrus Paniculatus).

வயிற்றுக் கடுப்புவலி மாருக் கிராணி
பயித்தியங் காசமல பந்தஞ்—சயிக்கவொணாச்
சூதிகா வாதமும்போந் தோல்வா லுழுவைவிதைக்
கோதிவைத்த நல்மொழியை யோர்.

குணம்:—(இ-ள்.) வாலுழுவை அரிசிக்கு வயிற்றுப்பிடுங்கல், கடுப்பையுடைய ரத்தபேதி, பித்தம், இருமல், மலக்கட்டு, அசிர்க்கரம் இவைகள் போம்.

செய்கை:—உற்சாககாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 5-7 குன்றி எடை சர்க்கரையுடன் கூட்டித் தினம் 3 வேளை சாப்பிடவும். அல்லது, கால் அல்லது அரை விராகனெடை அரிசியைப் பசுவின் பாலில் அரைத்துப் பாலில் கலக்கி வடிகட்டித் தினம் ஒரு

வேளை சாப்பிடவும். இப்படிச் சிலதினம் உட்கொள்ளப் பாலரைப் போல் மேனியுண்டாகும். மேற்கூறப்பட்ட நோய்களும் குண மாகும். வாலுழுவையரிசி, மரமஞ்சள், கடுகுரோகணி, அதிவிடயம், சித்திரமூலவேர்ப்பட்டை, வட்டத்திருப்பி இவைகளைச் சம னெடையாக இடித்துச் சூரணம் செய்து, வேளைக்குத் திரிகடிப் பிர மாணம் சர்க்கரை கூட்டித் தினம் 2 வேளை சாப்பிட்டுவர இரைப் பையிலுண்டான பல பிணிகள் போம்.

வாலேந்திரபோளம்.

(Balsamodendron Myrrha).

சூலைகய ரோகஞ் சொறிகரப்பான் குன்மமிவை
யாலைவா யின்கோற்போ லாகுங்கா—ணீலசக்ர
வாளமெனத் தோன்றுமுலை மாதரசே வாலேந்த்ர
போளந் தனையெடுக்கும் போது.

குணம்:—(இ-ள்.) வாலேந்திர போளத்தினல் கீல்பிடிப்பு, க்ஷயம், நமைச்சல், கரப்பான், வயிற்றுநோய் ஆகிய இவைகள் விலகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, கபஹரகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு 5-7 குன்றி எடை வெல்லத்தில் பிசைந்து, தினம் 2 வேளை கொடுக்கச் சூதகக்கட்டு, சூதகப்பாண்டு, கருப்பாசயரோகங்கள், காசம், அக்கினிமந்தம் குணமாகும். இது மலத்தைப் போக்கும், வாயுவை நன்றாய்க் கண்டிக்கும். ஸ்திரீகளுக்குக் காணும் உதிரச்சிக்கலையும், மரித்த பிண்டத்தையும் வெளியாக்கும். இதைப் பொடித்துக் காயங்களுக்குத் தூவிவர ரணத்தை ஆற்றும். பற்பொடியுடன் கூட்டிப் பற்றேய்க்கப் பற்களின் வலியை நீக்குவதுடன், பல்தேய்வதையும் குணப்படுத்தும். வாலேந்திரபோளம், இரேவல்சின்னி வகைக்குக் குன்றி எடை 3, கொடிக்காக்கட்டான் விதை குன்றி எடை 5, இவைகளை அரைத்து இருபாதியாகப் பங்கிட்டுச் சர்க்கரைகூட்டிக் காலையில் சாப்பிடப் பேதியாகும். வயிற்று வலி, வயிற்றுப்பிசம் முதலியவைகள் போம். வேண்டுமாயின் மறுபாதியை அடுத்தநாள் சாப்பிடவும். இதைத் தனியாக ஸ்திரீகளுக்குக் கொடுப்பதைவிடக் கரிய போளத்துடன் கூட்டிக் கொடுப்பது விசேட நன்மையைத்தரும். இதைக் கரிய போளத்தின் தலையங்கத்தின் கீழ்க் கண்டுணர்க.

வால்மிளகு.

(Cubeba Officinalis).

வாதபித்த வையம் வயிற்று வலிதாகஞ்
சீதம் பலநோய் சிதையுங்காண்—போத
வதிதீ பனமா மணங்கரசே நாளுந்
துதிவான் மிளகருந்தச் சொல்.

குணம்:—(இ-ள்.) வால் மிளகினால் திரிதோஷகோபம், குன்மம், விதாகம், வெட்டை முதலிய சிற்சில ரோகங்கள் விலகும். பசி தீபனமுண்டாகும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சூரணத்தை வேளைக்கு **3-7** குன்றி எடை தேனில் மத்தித்துச் சாப்பிடலாம். இது நீர்த்தாரையிலுண்டான ரணம், தந்திமேகம், ஸ்திரீகளுக்குப் படும்படியான வெள்ளை (குசும்பா ரோகம்), பிரமேகம், தளர்ந்த வயதிற் காணும் கபக்கட்டு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடன் உட்கொள்ளத் தலைவலி, வாய்நாற்றம், வாய்ரணம், ஈறின்வலி, தொண்டைப்புண், குரல் கம்மல் முதலியவற்றைப் போக்கும். இளநீரில் போட்டுச் சாப்பிட நீர்ச்சுறுக்கு, கல்லடைப்பு முதலியவற்றை நீக்கிச் சிறுநீரைச் சுத்தப்படுத்தும். இன்னும் வாயுவையும் கண்டிக்கும்.

வாழைக்காய்.

(Musa Sapientum—Raw fruit).

வாந்திபித் தம்பேதி வாய்நீர் வயிறுளைத
லார்ந்தவன லங்காச மண்டாவாஞ்—சூழ்ந்தேறு
செம்புனலுந் தேன்புமுண்டாந் திண்டி மிகப்பெருகு
மம்புவியுள் வாழைக்காய்க் காய்.

குணம்:—(இ-ள்.) வாழைக்காயினால் பித்த வாந்தி, பயித்தியம், பித்தாதிசாரம், உமிழ்நீர் சுரப்பு, வயிறுளைதல், உஷ்ணம், இருமல் இவை போம்; ரத்த விருத்தியும் பலமும் உண்டாம்; போஜனம் அதிகரிக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலை நன்றாய்ச் சீவிச் சுத்தப்படுத்தித் துண்டுதுண்டாக அரிந்து பொரியலாகவாவது வறுவலாகவாவது பாகப்படுத்திச் சாப்பிட முற்கூறப்பட்ட நோய்கள் போம், தேகம் பருக்கும். ஆனால் வாய்வு மிகும்.

வாழைச்சமூலம்.

(Musa Sapientum).

நற்கதலிக் கந்தமன னூரார்தண் டோகுடலிற்
சிக்குமயிர் தோனஞ்சுந் தீர்த்திடுங்காண்—தொக்குறுபூ
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பே குங்காயாற்
றேகமுழு துங்காலாந் தேர்.

குணம்:—(இ-ள்.) கிழங்கிற் சூடுள்ள நறும் வாழைத்தண்டு குடலிற் சிக்கிய ரோமம், தோல், விஷம் இவைகளை விடுவிக்கும். பூ பிரமேகத்தை நீக்கும். பிஞ்சு மூலத்தைக் குணப்படுத்தும். காய் உடல் முழுவதும் வாயுவை யுண்டாக்கும் என்க.

வாழைநீர்.

வாழைநீர் சீதவெப்பு வல்லபல முண்டாக்கும்
பேழை வயிறுடைக்கும் பெண்மயிலே—வீழுவல்லி
ரத்தக் கிரிச்சர மெரிநீ ரிவையுடனே
சிற்றிரணம் போக்குந் தெரி.

(இதுவுமது)

சோமரோ கங்க டுலையு மிளைப்புழலை
நாமமறும் பாண்டுவகை நாடாதே—பூமிதனில்
காழை யெலும்புருக்கி காணு வணங்கரசே
வாழைநீர்க் கென்றுளத்தில் வை.

குணம்:-(இ-ள்.) வாழைக்கிழங்கில் ஊறியிராநின்ற சீதோஷ்ண நீரானது பெருவயிறு, இரத்தக்கிரிச்சரம், எரிமூத்திரம், அற்ப விரணம், சோமரோகம், அயர்வு, உழலைநோய், பாண்டு, அஸ்தி சிராவம் ஆகிய இவைகளை நீக்கும். தேகத்திற்கு வன்மையை யுண்டாக்கும் என்க.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—வாழைக் கிழங்கின் சாற்றில் வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு, அதில் பொரித்த வெங்காரம், வெடியுப்பு 2-3 குன்றி யெடை போட்டுக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க நீர்க்கட்டை உடைக்கும். வாழைக் கட்டைச் சாற்றுடன் நெய் அல்லது வெண்

ணெய் கூட்டிக் கொடுக்க வெள்ளை, நீர்ச்சுருக்கு, கடுப்பு இவை கள் போம். வாழைக்கட்டைச் சாற்றுடன் தயிர் கூட்டிக் கொடுக்கச் சீதபேதி, பெரும்பாடு போம். சாதாரணமாக வாழைக்கட்டைச் சாற்றை உள்ளுக்குக் கொடுக்க அபினி, கஞ்சா முதலிய வற்றாலுண்டான மயக்கத்தை முறித்துவிடும். ஒரு அவுன்ஸ் வாழைக்கட்டைச் சாற்றுடன், ஒரு அவுன்ஸ் பசுவின் நெய் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கச் சாந்தமாக ஒரு முறை அல்லது 2 முறைப் பேதியாகும். வாழைக் கிழங்கைப் பதார்த்த வகைகளில் கூட்டச் சிக்குப் பட்டுள்ள மயிர், கல் முதலியவற்றை வெளியாக்கும். வாழை நீரையும் மேற்கூறிய வண்ணம் உபயோகித்துக்கொள்ளலாம். இன்னும் பூ, பிஞ்சு, காய், பழம், இலை இவைகளை அதனதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

வாழைப்பழம்.

(Musa Sapientum—Fruit).

சுத்த வருச்சுனஞ்செய் சோமநோ யென்பதுவும்
பித்தநோ யென்னப் பிறந்தவையு—மெத்த
வரம்பைக் கடந்த மதமூர்ச்சை யும்போ
மரம்பைக் கனிக்கென் றறி.

குணம்:—(இ-ள்.) வாழைப்பழத்தால் உடம்பை வெளுக்கச் செய்கின்ற சோமரோகம், பித்தப்பிணிகள், மதநோய், மூர்ச்சை ஆகிய இவைகள் போம் என்க.

செய்கை:—இலகுமலகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாக நன்றாய்க் கனிந்த வாழைப்பழத்தை இரவு ஆகாரத்திற்குப்பின் ஒன்று அல்லது இரண்டு உட்கொள்வது சாலச் சிறந்தது. இதனால் மலம் நன்றாய் வெளியாகும். இன்னும், உடம்பை வெளுக்கச் செய்கின்ற சோம ரோகம், பித்தப்பிணிகள், மதநோய், மூர்ச்சை முதலியவைகள் போம்.

நம் நாட்டில் வைத்துப் பயிரிடும் வாழைகளில் பல இனங்களுண்டு. இவற்றின் பழங்கள் உருவத்திலும், நிறத்திலும், கனத்திலும், குணத்திலும் ஒன்றுக்கொன்று பேதப்படும். இக்காரணத்தை முற்கொண்டு ஆன்றோர் பல பெயர்களிட்டிருக்கின்றனர். இவற்றுள் இரசத்தாளி, கருவாழை, செவ்வாழை, மொந்தன் வாழை, வெள்

வாழை முதலிய பழங்கள் நோயினர்க்கு ஆகுமெனச் சித்தர்கள் கூறி இருக்கின்றனர். பொதுவாக வாழைப்பழம் வாததேகிகட்கு ஆகாது. மற்றுமிது ஜீவாக்கினி குறைவுபடாத பித்த, கப தேகிகட்கு அதிக நன்மையைத் தரும்.

விசேஷமாக இந்நாட்டில் கிடைக்கக்கூடிய வாழைப்பழமும் அதற்குரிய குணமும் அடியிற் கூறப்பட்ட செய்யுட்களால் இனிது விளங்கும்.

இரசத்தாளி வாழைப்பழம்.

(Irasathali Vazhaippazham).

தின்னச் சுவைகொடுக்குந் தீபனத்தை மாற்றிவிடும்
எந்நாளும் வாதமது ஏறிநிற்கு—மிந்நாட்டில்
கண்டரசத் தாளிக் கனியால் உறுங்குணத்தைத்
தண்டார் குழலணங்கே சாற்று.

குணம்:—(இ-ள்.) இரசத்தாளி வாழைக்கனியைத் தின்ன நாவிற்கு இதமாக இருக்கும். அக்கினிமந்தத்தை யுண்டாக்கும். வாதநோயை உபரியாக்கும் என்க.

கருவாழைப்பழம்.

(Karuvazhaippazham).

தின்று ருசியையுறுந் தீராத பித்தமறும்
மன்றுடுந் தீபனமும் மட்டாகும்—நன்று
மருவாணம் போற்கூந்தல் மங்கைக் கரசே
கருவாழை நற்பழத்தைக் காண்.

குணம்:—(இ-ள்.) அதிக உருசியை யுடைய கருவாழைப் பழத்தால் பித்தம் தணியும், தீபனம் அடங்கும் என்க.

செவ்வாழைப்பழம்.

(Sevvazhaippazham).

மந்தங் கதித்திடுமே வாயினிக்கத் தின்றூர்க்கு
விந்தூறும் மெய்யிறுகும் மேதினியில்—தொந்தமுறு
மெவ்வாத ரோகிக்கு மேற்கா தெனவகுத்த
செவ்வாழை யின்கனியின் சீர்.

குணம்:—(இ-ள்.) செவ்வாழைக்கனி அக்கினிமந்தத்தையும், விந்து சரீரம் முதலியவற்றிற்குப் பலத்தையும் கொடுக்கும். வாதரோகிகளுக்கு உதவாது. இது உண்பதற்கு அதிக ருசியாக இருக்கும் என்க.

மொந்தன் வாழைப்பழம்.

(Monthan Vazhaippazham).

மந்தமுட னேய்கனத்தல் வாத வலிசீதந்
தொந்தமுறு தாகமிவை தோன்றுங்காண்—புந்திவலி
யோட்டுபித்தங் காமாலை யுள்வறட்சி யுந்தோலையு
நாட்டுமொந் தன்பழத்தி னால்.

குணம்:—(இ-ள்.) மொந்தன் பழத்தினால் அக்கினிமந்தம், உடல் வலியுடன் பாரிப்பு, இசிவு, சீதளம், திரிதோஷதாகம் இவைகள் உண்டாம். மன உறுதியை விலக்குகிற பித்தம், காமிலம், மேதோ தாதுவைப்பற்றிய வறட்சி இவை நீங்கும் என்க.

வெள்வாழைப்பழம்.

(Velvazhaippazham).

மூட்டுமொரு தீபனத்தை முற்றும் முரணுக்கும்
கூட்டமுறும் வாதத்தைக் கொண்டணுக்கும்—மீட்டுமிசை
யாழைப் பழிக்குமொழி யாரணங்கே உண்டவெண்
வாழைக் கனிக்காம் வகுத்து.

குணம்:—(இ-ள்.) வெள்வாழைப்பழம் அக்கினிமந்தத்தையும், வாதரோகத்தையும் விருத்தி செய்யும் என்க.

அடுக்கு வாழைப்பழம்.

(Adukku Vazhaippazham).

மந்தங் கதித்தெழும்பும் மாருட்டப் பித்தமறும்
வெந்தமலக் கட்டு வெளியாகு—மந்தமுற
மேனி யழகுபெறு மீசடுக்கு வாழைகனி
சீனி கிகர்மொழியாய் செப்பு.

குணம்:—(இ-ள்.) அடுக்கு வாழைப்பழம் அக்கினிமந்தத்தையுண்டாக்கும், பித்த மிகுதியையும் மலம் தீய்வதையும் வெளியாக்கும். நல்ல தேகக் காந்தியை உண்டாக்கும்.

பச்சை வாழைப்பழம்.

(Pachchai Vazhaippazham).

வெப்ப முடன்பித்த வேதனையைப் போக்கிவிடும்
செப்பும் மலக்கட்டைச் சேரவிடா—திப்புவியில்
இச்சை மொழிகூறி யின்புறுத்தும் மாதரசே
பச்சைவா ழைப்பழத்தின் பண்பு.

குணம்:—(இ-ள்.) *பச்சை வாழைப்பழம் தேகத்தின் உஷ்ணத்தையும், பித்தத்தையும், மல பந்தத்தையும் நீக்கும் என்க.*

மலை வாழைப்பழம்.

(Malai Vazhaippazham).

நல்ல மலைவாழை நற்கனியை யுண்டார்க்குச்
சொல்லுமலச் சிக்கலறும் சோபையறும்—பொல்லாத
மந்தமுறுந் தீபனம்போம் வாயினிக்கு மெல்லார்க்குங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

குணம்:—(இ-ள்.) *அதிக மதுரத்தையுடைய நல்ல மலை வாழைப்பழத்தால் மலபந்தமும், சோபை ரோகமும் நீங்கும். ஆனால் இது அக்கினி மந்தத்தை யுண்டாக்கும் என்க.*

நவரை வாழைப்பழம்.

(Navarai Vazhaippazham).

மாந்த மொடுநமைச்சல் வாதகப மும்பெருகும்
பாந்த லுறுகரப்பான் பாவுங்காண்—பூந்தடக்கை
யாழைப் பழித்தமொழி யன்னமே சேணவரை
வாழைப் பழத்தான் மதி.

குணம்:—(இ-ள்.) *நவரை வாழைப்பழத்தினால் மந்தாக்கினி, தினவு, வாதசிலேஷ்ம தொந்தம், கரப்பான் ஆகிய இவைகள் அதிகரிக்கும் என்க.*

பேயன் வாழைப்பழம்.

(Musa Textilis).

பேயன் பழமருந்திற் பித்தரோ கம்போகும்
வாயுவுண் டாகு மலங்கழியும்—தீயே
தகத்தி லதிகுளிர்ச்சி யாகு மணங்கே
சகத்தி லிதையறியச் சாற்று.

குணம்:—(இ-ள்.) பேயன் பழத்தினால் பயித்தியமும், உட்சூடும் நீங்கும். வாதாதிக்கமும், மிகு குளிர்ச்சியும், இலகுவாக மலமிறங்கலும் உண்டாகும்.

இவைகளுமன்றித் தற்காலத்தில் கொட்டை வாழை, நேந்திர வாழை, பூவம் வாழை முதலிய பல இனங்களும் உண்டு.

வாழைப்பிஞ்சு.

(Musa Sapientum—Tender fruit).

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்த
மெதிரில்விழு நீரிழிவு மேகு—மதிநுதலே
பேழை வயிற்றுப்புண் பேருந் துவரார்ந்த
வாழைக்கச் சற்கு மருண்டு.

குணம்:—(இ-ள்.) துவர்க்கின்ற வாழையின் பிஞ்சுக்கு ரத்தக்கடுப்பு, உள்வலய ரத்தமூலம், அதிமூத்திரம், கீழ்வயிற்று விரணம் இவைகள் போம்.

செய்கை:—சங்கோசனகாரி, தாதுக்ஷீணரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலை நீக்கித் துண்டு துண்டாக நறுக்கிப் பொரியலாகவாவது வறுவலாகவாவது பாகப்படுத்தி உட்கொள்ள, மூலரோகத்தினாலுண்டான உதிரப்போக்கு, பேதி, பெரும்பாடு முதலிய ரோகங்களைக் குணப்படுத்தும். இதை அதிகமாக உண்ண ஜீரணசக்தியைக் கெடுத்து மந்தப்படுத்தும்.

வாழைப்பூ.

(Musa Sapientum—Flower).

வாழைப்பூ மூலரத்த மாபிரமி வெட்டைபித்தங்
கோழைவயிற் றுக்கடுப்பு கோல்காச—மாழியன
லென்னவெரி கைகா லெரிவுந் தொலைந்துடலின்
மன்னவளர்க் குந்தாது வை.

குணம்:—(இ-ள்.) வாழைப்பூ ரத்தமூலம், பிரமேகம், வெள்ளை, பயித்தியம், கபாதிக்கம், உதிரக்கடுப்பு, இருமல், கைகால் எரிச்சல் இவைகளை நீக்கும்; சுக்கிலவிருத்தியைத் தரும்.

செய்கை:—சங்கோசனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—வாழைப்பூவைப் பாகப்படிப் பொரிய லாகவாவது, அல்லது துவரம்பருப்புடன் கூட்டிக் கூட்டமுதாக வாவது செய்து உண்பது வழக்கம். இதனால் உஷ்ணபேதி, இரத்த மூலம், சீதபேதி முதலியவைகள் குணமாகும். இந்தப் பூவை இடித்துச் சாறுவாங்கி அதனுடன் தயிர்கூட்டி ஸ்திரீகளுக்குக் கொடுக்கச் சூதக வயிற்றுவலி, பெரும்பாடு முதலியவைகள் போம். இதனைக் கிருதங்களிற் கூட்டுவதுமுண்டு.

வாழையிலை.

(Musa Sapientum—Leaves).

தோக்கினுறு மின்னுஞ் சுகபோ கமுமன்னு
மக்கினி மந்த மபலமொடு—திக்கிடுகால்
பாழை யிலைப்புமறும் பன்னுபித்த முஞ்சமனும்
வாழை யிலைக்குணரு வாய்.

குணம்:—(இ-ள்.) வாழையிலைக்குச் சருமதாதுவிற் பளபளப் பும் சுகபோகங்களும் பொருந்தும். மந்தாக்கினி, துர்ப்பலம், க்ஷீண வாதம், சிலேஷ்ம அரோசகம் இவைகள் நீங்கும். பித்தகோபம் சாந்தமாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் இலையை நன்றாய் அலம்பி அதனில் அன்னத்தையிட்டுச் சாப்பிடச் சரீரத்திற்கு ஆரோக்கியத் தைத் தரும். அன்னம் உண்ணுவதற்காக உபயோகப்படுத்தும் எல்லா இலைகளிலும் வாழையிலையே மிகவும் சிறந்தது.

வாளவரைக்காய்.

(Sword Beans).

அதிபித்தம் வாந்தி யரோசகமு முண்டாங்
குதிவாதம் வாய்ச்சுரப்புங் கூடுந்—துதிசக்ர
வாளவரை யொத்த வனமுலைமா தேபசிய
வாளவரைக் காயான் மதி.

குணம்:—(இ-ள்.) பசுமையுள்ள வாளவரைக்காயால் பித்தா திக்கம், வமனம், அருசி, களாயகஞ்சவாதரோகம், வாய்நீரூறல் ஆகிய இவைகளுண்டாம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் பிஞ்சுக்காயைப் பொரியலாக வாவது அல்லது பருப்புச் சாம்பார், ஆட்டிறைச்சி முதலியவற்றில் கூட்டியாவது சமைத்துண்ண ருசியாக இருக்கும். ஆனால், இதற்குப் பித்தத்தை விருத்தி செய்யும்படியானக் குணமுண்டு.

விடத்தேரி.

(Mimosa Cinerea).

முளையைவரு விக்கின்ற மூலரோ கத்தை
யிளையுமுதி ரத்தை யடங்கா—துளைதாக
வேகத்தைப் போக்கிவிடும் வெய்யவிடத் தேர்சக்கிர
வாகத்தைக் காய்முலையாய் வாழ்த்து.

குணம்:—(இ-ள்.) வெப்பத்தையுடைய விடத்தேரிச் செடிக்கு முளைமூலம், வயிற்றுப்பிடுங்கலையுடைய ரத்தக்கிரகணி, அதிதாகம் இவைகள் போம் என்க.

செய்கை:—சங்கோசனகாரி

உபயோகிக்கும் முறை:—விடத்தேரிவேர்ப்பட்டை, வறட்பூலா வேர்ப்பட்டை, நீர்ப்பூலாவேர்ப்பட்டை, ஆலம்விழுதின் கொழுந்து வகைக்குப் பலம் ½; இவைகளை ஒன்றிரண்டாகச் சிதைத்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு, ஒருபடி சலம் விட்டு அரைக்கால் படித் திட்டத்திற்குக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் அளவு தினம் 2-3 வேளை சாப்பிட்டு வர வயிற்றின் கடுப்பு நீங்கும். இரத்தம் விழுதல் குணமாகும்.

வேறு.

விடத்தேரின் வேர்ப்பட்டை, வறட்பூலா வேர்ப்பட்டை, மருத மரத்தின் வேர்ப்பட்டை, நீர்ப்பூலா வேர்ப்பட்டை, அதிவிடயம், நெல்லிவற்றல், வில்வப்பிஞ்சு முதலியவற்றை நன்றாய் உலர்த்திச் சமனெடையாகக் கல்லுரலில் போட்டுக் கடப்பாறையால் நன்கு இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு ½ தோலா எடை பசுவின் தயிரில் போட்டுக் கலக்கிச் சாப்பிட வயிற்றுக்கடுப்பு, இரத்தக் கழிச்சல் முதலியவைகள் தீரும்.

விடத்தேரின் பிசின்.

(Mimosa Cinerea—Gum).

விடத்தேரின் றன்பிசின்றுன் வெண்மேகம் போக்கு
மடுத்தபிர மேகத்தை யாற்றுந்—தொடுத்த
மேகக் கரப்பானை விட்டோட்டு மென்றுலகி
னுகரிக மாதே நவில்.

குணம்:—(இ-ள்.) விடத்தேரிப் பிசின் வெண்மேகம், சீழ்ப் பிரமேகம், மேகவெப்பத்தால் வந்த கரப்பான் ஆகிய இவைகளை விலக்கும்.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைச் சிறிது வெதுப்பி நன்றாய் உலர்த்தி இடித்துச் சூரணம்செய்து வைத்துக்கொண்டு, தினம் இருவேளை, காய்ச்சிய பசுவின் பாலில் $\frac{1}{4}$ ரூபாய் எடை போட்டுக் கலக்கிப் போதிய அளவு சீனிக்கற்கண்டுத் தூள்போட்டுச் சாப்பிட்டு வர உள் வெப்பத்தை ஆற்றும், வெள்ளையைக் குணப்படுத்தும், தாது விருத்தியை உண்டாக்கும். இன்னும் இதனைத் தாது விருத்திக்குரிய லேகியங்களில் சேர்ப்பதுண்டு.

விதையத்திப்பழம்.
(Sweet Fig).

தினமுமலக் கட்டொழிக்குந் தேகவெப்ப நீக்கும்
வனமுறுபித் தக்கோப மாற்று—மினுமயிலுந்
துன்னு விழியையுடைச் சொன்னமே வையகத்தோர்
பன்னுவிதை யத்திப் பழம்.

குணம்:—(இ-ள்.) விதையத்திப்பழமானது நித்திய மலபந்தத்தையும், சரீர உஷ்ணத்தையும், பித்தவேகத்தையும் போக்கும் என்க.

செய்கை:—இலகுமலகாரி.

உபயோகிக்கும் முறை:—விதை முதிர்ந்து பழுத்துள்ள அத்திப்பழத்தை உண்ண மலம் இளகலாகப் போகும், உஷ்ணமும் பித்தமும் சமனப்படும்.

விராலியிலை.
(Dodonaea Viscosa—Leaves).

ஆன்ற துருசிநீ ரூகமனத் துன்னில்வே
ரூன்ற வருகட்டி யோடதைப்புத்—தோன்றிற்
சுராலிக் குதலையிளந் தோகாய் விரைவாய்
விராலிக் குழையோடு விள்.

குணம்:—(இ-ள்.) விராலியிலை பெருமைதங்கிய துரிசை வெளுக்கச் செய்வதுந்தவிர அடி கனத்த கட்டிகளையும் வீக்கத்தையும் போக்கும் என்க

செய்கை:—பலகாரி, சுரஹரகாரி, சங்கோசனகாரி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை வதக்கிக் கட்டிகளின் மேல் கனமாய்ப் போட்டுக் கட்டுக் கட்டச் சீழ் கொள்ளாமலிருந் தால் அழுந்திவிடும், ஒருக்கால் சீழ் கொண்டிருப்பின் விரைவில் உடைந்துவிடும். இதைப்போலவே வீக்கங்கள் கண்ட இடத்தில் போட வீக்கத்தைக் கரைத்துவிடும். இதை உலர்த்தி இடித்துச் சீலையில் அரித்து எடுத்தச் சூரணத்தைத் தேங்காய் எண்ணெயில் கலக்கி நெருப்புப்பட்டப் புண் முதல் மேகரண முதலியவற்றிற்குப் போட ஆறும்.

விலாமிச்சுவேர்.
(Vilamichu Root).

மேகம் விழியெரிச்சல் வீறிரத்த பித்தமொடு
தாகமத மூர்ச்சைபித்தஞ் சார்மயக்கஞ்—சோகஞ்
சிரநோ யிவையேகுஞ் செய்யவிலா மிச்சுக்
கெரிசுரமு மின்றென் றிசை.

குணம்:—(இ-ள்.) விலாமிச்சினால் மேகநீர், கண் எரிவு, உதிர பித்தம், தாகம், மதம், மூர்ச்சை, பைத்தியம், மயக்கம், சோபம், தலைவலி, தீச்சுரம் இவைகள் போம் என்க.

செய்கை:—சீதளகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—விலாமிச்சு வேரானது வெட்டி வேரைப்போலவே சன்னமாகவும், கூந்தலைப்போல் அடர்த்தியாக வும் நீண்டு கருநிறமாகப் பூமியில்இறங்கி இருக்கும். இதற்கு அதி கப் பரிமளமுண்டு. இதனை ஜலத்தில் சுத்தப்படுத்திச் சிறிது நிழலில் ஈரம் போக்கி மாதர்கள் கூந்தலில் அணிந்துகொள்வதுண்டு. இதுவு மல்லாமல் பித்தக் கியாழங்களில் சேர்த்துக் கொடுக்கத் தாகம், மதம், மூர்ச்சை, பைத்தியம், மயக்கம், சோபம், தலைவலி, உஷ்ண சுரம் முதலியவைகள் குணமாகும். முடித்தைலங்களில் சேர்க்க அதிக வாசனையைக் கொடுப்பதுடன் கண், கை, கால் முதலிய இடங்களில் கண்ட எரிச்சலைச் சாந்தப்படுத்தும்.

வில்வப் பழம்.
(Aegle Marmelos—Fruit).

சீதக் கழிச்சலுடன் சேர்மூல நெஞ்செரிவு
ஓதக் கிராணியு மோடிப்போம்—பூதலத்தில்
அல்வளருங் கூந்தல்மட வாரணங்கே மக்கட்கு
வில்வப் பழத்தை விளம்பு.

குணம்:—(இ-ள்.) வில்வப் பழத்தினுல் சீதபேதி, மூலம், நெஞ்செரிவு, கிராணி முதலியவைகள் போம் என்க.

செய்கை:—மலகாரி, வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—வில்வப்பழச் சதையை நன்ருய் உலர்த்தி இடித்துச் சூரணம்செய்து, வேளைக்கு 10-15 குன்றியெடை சர்க்கரை கூட்டித் தினம் 3 வேளை சாப்பிடவும். இதனுல் பேதி, சீதபேதி, அக்கினிமந்தம் போம். இதைக் குழந்தைகள் பருவத்திற்கு ஏற்றவாறு சிறு அளவாகக் கொடுக்கப் பேதி, சீதபேதி முதலியவைகள் போம்.

நன்ருய்க் கனிந்த பழத்தைச் சலம்விட்டுப் பிசைந்து வடிகட்டிச் சமனெடை சர்க்கரை கூட்டிச் சர்ப்பத்துப் பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் கொடுக்கப் பித்த ஒக்காளம், நெஞ்செரிவு, மூலம், கிராணி, சீதபேதி இவைகள் போம்.

வில்வப்பழம் விராகனெடை 5, சீந்தில் கொடி விராகனெடை 4, இவைகளை இடித்து ஒரு மட் கலயத்தில் போட்டு, ¼ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் கொடுக்க வாந்தி நிற்கும்.

வில்வப்பழ ஓடு.

(Aegle Marmelos—Fruit shell).

பாரதனில் வில்வப் பழத்தோடு சேர்ந்த
நீரதனை யுட்கொள்ள நேரிழையே—சீரதனை
செப்புங்கால் நாவரட்சி சேர்ந்தகை காலெரிச்சல்
வெப்புருசி கேடகலும் விள்.

குணம்:—(இ-ள்.) வில்வப்பழ ஓட்டினுல் அதிகரித்த பித்தம், கபாதிக்கம், தாகம், சுரம், சந்நி, மயக்கம், வாந்தி முதலியவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சுரஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதனைத் தனியாகக் கியாழமிட்டுக் கொடுப்பதில்லை, இதர சரக்குகளுடன் கூட்டியே கொடுப்பதுண்டு. இவற்றுள் சில முறைகளாவன—

பித்தசமனக்கியாழம்.

வில்வப் பழத்தோடு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சீந்தில் கொடி, விதை இல்லாத திராட்சை, நன்னாரிவேர் வகைக்குப் பலம் $\frac{1}{4}$; கறிவேப்பிலை ஈர்க்கு, ஏலக்காய்த் தோல் வகைக்குப் பலம் $\frac{1}{8}$; ஆல்பகோராப் பழம் 3; இவைகளையெல்லாம் ஒன்றிரண்டாக நறுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு, $\frac{1}{2}$படி சலம் விட்டு $\frac{1}{8}$ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-1$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை உட்கொள்ளப் பித்த அழலை, எரிச்சல், மயக்கம், தேகக் குத்தல், வாந்தி முதலியன தீரும்.

கட்டுவாதிக் கியாழம்.

வில்வப்பழத்தின் ஓடு, விளாம்பழத்தின் ஓடு, மாதுளம் பழத்தின் ஓடு, நாவல்பட்டை, பெருமரப்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை வகைக்குப் பலம் $\frac{1}{2}$; அதிவிடயம், ஏலம், சிறுதேக்கு, மிளகு, சுக்கு வகைக்கு விராகனெடை 2; இவைகளை இடித்து ஒரு மட்கடத்தில் போட்டு, 1 படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சாப்பிட்டுவர எத்தகைய உஷ்ண பேதிகளும் குணமாகும்.

இது ஸ்திரீகளுக்குப் பிரசவத்திற்கு முன்னும், பின்னும் காணுகின்ற பேதிகளுக்கு மிகவும் சிறந்தது.

வில்வ மரவேர்.

(Aegle Marmelos—Root).

வில்லுவத்தின் வேருக்கு வீறுகுன்ம வாயுகபஞ்
சொல்லவொணுப் பித்தந் தொடர்சோபை—வல்லகப
தாகசுர நீரேற்றஞ் சந்நியொடு மெய்வலியும்
வேக மொடுநீங்கு மே.

(இதுவுமது)

அக்கினி மந்த மரோசியதி சாரவிக்கல்
நிற்கரிய பித்தசுரம் நீள்வாந்தி—சுட்கநோ
யாதிபநோ யேகு மழகோடு புஷ்டியுண்டாங்
கோதில்வில்வ வேரதனைக் கொள்.

குணம்:—(இ-ள்.) வில்வ வேரினல் வாதகுன்மம், கபாதிக்கம், பித்த சோபை, கபத்தால் வந்த தாகம், சலக்கோவை, சந்நிபாதம், தேகக் கடுப்பு, மந்தாக்கினி, அருசி, உஷ்ணபேதி, விக்கல்,

பித்தரூட்சை, வமனம், அதிசுட்கம் முதலிய ரோகங்கள் நீங்கும். அழகும் தேக புஷ்டியும் உண்டாகும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி, சங்கோசனகாரி, ரக்தஸ்தம்பன காரி.

உபயோகிக்கும் முறை:—கால் பலம் பச்சை வேர்ப்பட்டையுடன், அரைக்கால் ரூபாய் எடை சீரகம் கூட்டி அரைத்துப் பசுவின்பாலில் கலக்கி வடிகட்டித் தினம் ஒருவேளை சாப்பிட்டுவரத் தாதுவைப் பலப்படுத்தும்.

வில்வவேர்ப்பட்டை, நெற்பொரி, பச்சைப் பயறு, முல்லை வேர்ப்பட்டை, ஏலம், சுக்கு, நெல்லிவற்றல் வகைக்கு விராகனெடை 1 ஆக இடித்து ஒரு குடுவையில்போட்டு, ½ படி சலமாவது இளநீராவது விட்டு ¼ படியாகக் காய்ச்சி வடித்து, இரு வேளையாகப் பங்கிட்டுச் சாப்பிடவும். இப்படி 3 நாள் கொள்ளப் பித்த எரிச்சல், வாந்தி, மயக்கம், தாகம் இவைகள் போம்.

விழலரிசி.

(Sedge—Rice)

விழலரிசி யென்றுன் மிகுபித்த மேகு
மழல்குடலின் வாத மகலுந்—துழவு
திரிதோட மேகமிவை சோராவா நீயுங்
குறியா யிதையறிந்து கோள்.

குணம்:—(இ-ள்.) விழலரிசியால் பித்தாதிக்கம், சுரம், ஆந்திர பித்தவாதம், வாதபித்த கபதோஷம், சீழ்ப் பிரமேகம் ஆகிய இவைகள் விலகும் என்க.

உபயோகிக்கும் முறை:—விழலரிசியைக் குத்திப் புடைத்துச் சுத்தப்படுத்தி மாவாக அரைத்துப் பலகாரங்களாகப் பாகப்படுத்திச் சாப்பிட்டு வரக் குடல்வாதம், திரிதோஷம், மிகுந்த பித்தம், பிரமேகங்கள் போம்.

விழுதியிலை.

(Cadaba Indica—Leaves.)

விழுதித் தழைகரப்பான் வெண்மேகம் நீக்கும்
பழுபடுவன் சூலை பறிக்கு—மெழுபேதி
யாக்குமதி மந்த மகக்கிருமி துன்மலமும்
போக்கு மதுவே புகல்.

குணம்:—(இ-ள்.) விழுதியிலை கரப்பான், சுவேதப்பிரமேகம், வித்திரிதிக் கட்டி, சரீரக்குத்தல், அக்கினிமந்தம், மலாசயக் கிருமி, விரோத மலம் ஆகிய இவைகளைப் போக்கும். விரேசனத்தை உண்டாக்கும் என்க.

செய்கை:—மலகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்குப் பலம் 2-2½ வீதம் கூட்டிக் கலந்து காலையில் உட்கொள்ளப் பேதியாகும். இப்படி 3 நாள் சாப்பிட இடுப்புவலி, காலசதி நீங்கும்.

விழுதியிலை, பிண்ணாக்குக்கீரை, ஆவாரையிலை, வெள்ளைப் பூண்டு இவைகளைச் சமனெடையாக இடித்துத் துணியில் முடிந்து, விளக்கெண்ணெயைக் கொதிக்கவைத்து அதில் தோய்த்துத் தாளக் கூடிய சூட்டில் முழங்கால் வாதத்திற்கு ஒற்றடங் கொடுத்து, அந்த முடிச்சியிலுள்ள சரக்கை முழங்காலில் வைத்துக் கட்டவும். இப்படி 6 நாள் கட்ட வீக்கமும் வலியும் நீங்கும்.

விளாமரம்.

(Feronia Elephantum).

காச சுவாசங் கதித்த வருசிமுதற்
பேசரிய தாகமிவை பேருங்காண்—வீசு
தபித்தலைச்செய் பித்தந் தரிக்குமோ பூவிற்
கபித்த மரமிருக்குங் கால்.

குணம்:—(இ-ள்.) கபித்தம் என்கிற விளாமரத்தினால் இருமல், இரைப்பு, அரோசகம், தாகம், பித்த கபரோகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையை நன்றாய் இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு ½-1 விராகனெடை சர்க்கரை அல்லது தேன் விட்டு மத்தித்துச் சாப்பிடப் பித்தம் சாந்தப்படும். பட்டையைக் கியாழமிட்டும் குடிப்பதுண்டு. இதன் பூ, வேர், இலை, பட்டை, பழம் இவ்வைந்தையும் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு ஒரு விராகனெடை சர்க்கரை கூட்டிச் சாப்பிடப் பித்தம், பசியின்மை, பேதி, சீதபேதி, வாய்நீர் ஊறல் இவைகள் போம். இதன் துளிர் இலையைச் சிறிதுசலம் தெளித்து அரைத்துப் பாலிலாவது தயிரிலாவது கலந்து சாப்பிடப் பித்தம் தணியும்.

இதன் சாற்றைப் பித்தத்தால் தோலின்பேரில் கிளம்பிய தழும்ப லுக்குப் பூச அடங்கும்.

விளாம்பழம்.

(Feronia Elephantum—Fruit).

எப்போது மெய்க்கிதமா மீளையிரு மல்கபமும்
வெப்பாருந் தாகமும்போ மெய்ப்பசியா—மிப்புவியி
லென்றுகி லுங்கனிமே லிச்சைவைத்துத் தின்னவெண்ணித்
தின்றால் விளாங்கனியைத் தின்.

குணம்:—(இ-ள்.) விளாம்பழத்தினால் சுவாசம், காசம், கபாதிக்கம், பித்ததாகம் இவை விலகும். உடலுக்குச் சுகமும் நல்ல பசியும் உண்டாகும் என்க.

செய்கை:—கபஹரகாரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—நன்றாய்க் கனிந்துள்ள ஒரு பழத்தை உடைத்து உள்ளிருக்கும் சதையுடன் சர்க்கரை கூட்டிப் பிசைந்து சாப்பிடப் பித்தம் சாந்தியாகும். இன்னும் வாய்நீர் ஊறல், தொண்டைப்புண், வாய்ரணம் ஆறும். இதன் பழத்தைச் சிறிது வெந்நீர் விட்டுப் பிசைந்து வடிகட்டி, அதற்கு இரண்டுபங்கு சர்க்கரை கூட்டிப் பாகுபதம் வரக்காய்ச்சி அதில் குங்குமப்பூ, ஏலக்காய்வித்து, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு சிறு அளவாகக் கல்வத்தில் போட்டுப் பன்னீர்விட்டு அரைத்துக் கலக்கி வைத்துக்கொண்டு, வேளைக்கு ½-1 அவுன்ஸ் வீதம் சாப்பிட உட்சூடு, பித்தம், மயக்கம், வாய் ரணம் இவைகள் போம். செங்காயாக இருந்தால் உள்ளிருக்கும் சதையுடன் திட்டமாக உப்பு, மிளகாய், இஞ்சி இவைகளைக்கூட்டி அரைத்துக் துவையலாக அன்னத்துடன் சாப்பிடப் பித்தம் தணியும். பழச்சதையுடன் திப்பிலிப் பொடி சிறிது கூட்டித் தேன் விட்டுப் பிசைந்து சாப்பிடக் கஷ்ட சுவாசம், விக்கல் நிற்கும். இந்தப் பழத்தின் சதையை விஷப்பூச்சிகளின் கடிவாயில் தடவிவர விஷமிறங்கும்.

விளாம்பழ ஓடு.

(Feronia Elephantum—Fruit shell).

துய்யவி ளாம்பழத்தின் தோன்றுமே லோடுதனைப்
பய்யகுடி நீராக்கிப் பாரிலுண—மெய்யதனை
நாடும் பெரும்பித்தம் நாவறட்சி விக்கலுடன்
இீடுவிடந் தானகலு மிங்கு.

குணம்:—(இ-ள்.) விளாம்பழத்தின் ஓட்டைக் குடிநீராகக் காய்ச்சிக் குடிக்க இருமல், பித்தம் இவைகள் விலகும். இன்னும் இது ஈடு என்னும் மருந்தை முறித்துவிடும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—$\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பலம் எடையுள்ள விளாம்பழத்தின் மேல் ஓட்டைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு குடுவையில் போட்டு, $\frac{1}{2}$ படி சலம்விட்டு அரை வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிச் சர்க்கரையிட்டுத் தினம் 2 வேளை சாப்பிட, இடுமருந்துகளின் வீறியத்தை அடக்கும். அந்த விஷத்தால் பிறந்துள்ள இருமல், மயக்கம், புத்தியின்மை தெளிவடையும். இன்னும் இதன் ஓட்டைப் பல பித்தக் கியாழங்களில் சேர்த்தல் விசேட நன்மையுண்டாக்கும்.

விளாம்பிசின்.

(Feronia Elephantum—Gum).

நல்ல விளாம்பிசினை நற்பாகஞ் செய்தருந்தத்
தொல்லையதி சாரந் தொலைவதொன்றே—மெல்லியரால்
வந்தவெள்ளை தன்னுடனே மாதர் பெரும்பாடு
முந்துநீர்ப் போக்கும்போ முன்.

குணம்:—(இ-ள்.) சுத்திசெய்த விளாம்பிசினைச் சூரணம், மாத்திரை முதலிய அவிழ்த ரூபமாகச் செய்து உண்டால் நீடித்த அதிசாரம், புணர்ச்சியால் வந்த வெள்ளை, அசிர்க்குரோகம், வெகுமூத்திரம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தப் பிசினியைப் பல தாதுவிருத்திக்குரிய லேகியங்களில் சேர்த்து உண்பதுண்டு. இதைப் பொடித்து வேளைக்கு 10-15 குன்றி எடை தேனில் மத்தித்துச் சாப்பிடச் சீதபேதி, அஜீரணபேதி போம். தாது பலப்படும்.

விஷமூங்கிலிலை.

(Crinum Deflexum—Leaves).

பிளவையுகிர்ச் சுற்று பெரும்படுவன் வீக்க
மளவினேய் காதெழுச்சி யாற்று—மளவையுரு
தோங்கி வளர்ந்தமூலை யோவியமே நீண்டவிஷ
மூங்கிலிலை நன்மூலி முன்.

குணம்:—(இ-ள்.) விஷமூங்கிலிலை பிளவை, நகச்சுற்று, பெரும் படுவன், சோபை, கர்ணசூலை முதலிய நோய்களைப் போக்கும் என்க.

செய்கை:—வமனகாரி, சுவேதகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இலையை நன்றாய் அரைத்து விளக்கெண்ணெயுடன் கூட்டி மத்தித்து, நெருப்பனலில் வெதுப்பி நகச்சுற்று, பிளவை முதலியவற்றிற்கு வைத்துக் கட்டக் குண மாகும். இன்னும் விளக்கெண்ணெய் தடவி வெதுப்பிச் சீலையில் முடிந்து, பொறுக்கக்கூடிய சூட்டில் நோய்கொண்ட இடங்களில் ஒற்றடம் கொடுக்க நோய் பலப்படாமல் அடக்கமுறும். இலையி னுடன் ஒரு உப்புக்கல்லை வைத்துக் கசக்கிச் சாறு வாங்கிச் சிறிது சுடவைத்துப் பொறுக்கக்கூடிய சூட்டில் காதுகளில் 2-3 துளி விடக் காதுவலி நீங்கும்.

விஷ்ணுகிராந்தி.

(Evolvulus Alsinoides).

செய்யமா லின்கிராந்தி தீராத வல்லசுரத்
தைய மறுக்கு மனற்றணிக்கும்—பையவரு
காச மிருமலையுங் கட்டறுக்கும் வாதத்தா
லூசலா டும்பிணிபோக் கும்.

குணம்:—(இ-ள்.) விஷ்ணுகிராந்தி சந்ததசுரத்தாற் பிறந்த கபம், உட்சூடு, கோழை, இருமல், வாதசம்பந்தப் பிணி இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சுவேதகாரி, கபஹரகாரி, பலகாரி, சுரஹரகாரி, வியதாபேதகாரி, கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் சமூலத்தில் 1-1½ பலத்தை ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு, ½ படி சலம் விட்டு ¼ படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 2-3 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை பெரியவர்களுக்குக் கொடுக்கலாம். அல்லது வேளைக்கு ½ ரூபாய் எடை சமூலத்தைப் பசுவின்பால் விட்டு அரைத்துப் பாலில் கலக்கி வடிகட்டித் தினம் 3 வேளை கொடுக்கலாம். இவற்றால் சீதபேதி, சுரம், மேகம், க்ஷயம், காசம், இருமல், ஈளை, வாதபித்த ரோகங்கள் எல்லாம் தீரும். இன்னும் கண்களுக்குப் பிரகாசம் அதிகரிக்கும். கபரோகங்களுக்குக் கியாழ

மிடும் சமயம் சிறிது சிற்றரத்தை, துளசி கூட்டிக் கொள்வது சாலச் சிறந்தது. சுரத்துடன் காணுகிற சீதபேதி, அஜீரணபேதி முதலிய வைகட்கு இத்துடன் சிறிது சீரகம், லவங்கப்பட்டை கூட்டிக் கியாழமிடுவது நன்று.

வெங்காயப்பூ.

(Allium Cepa—Flower).

வயிற்றுச் சிறுநோயை வாத வலியை
யுயித்தியஞ் செய்யாம லோட்டுங்—குயிற்றுத
சிங்காரக் கொங்கைச் செழுந்திருவே நாட்டிலுறை
வெங்காயப் பூவெனவே விள்.

குணம்:—(இ-ள்.) நாட்டுவெங்காயப் பூவானது சாமான்ய வாத முதலிய மூன்று குன்ம ரோகங்களையும் குடலைப்பற்றிய வாத நோயையும் போக்கும் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—வெங்காயப் பூவையும் தாளையும் குறுக அரிந்து, வெங்காயம் கூட்டவேண்டிய காய்கறிகளில் சேர்த்துச் சமைத்து உண்பதுண்டு. பருப்புச்சாம்பார், வடை முதலியவை களிலும் கூட்டிப் பாகப்படுத்தி யுண்பதுண்டு. இது ஜீவாக்கினியை விருத்தி செய்யும். குன்ம ரோகத்தைக் கண்டிக்கும். குடலில் சஞ்சரிக்கும்படியான வாயுவையும் அறவொழிக்கும்.

வெங்காயம்.

(Allium Cepa—Bulb).

வெப்பமூ லங்கிரந்தி வீறிரத்த பித்தமுடன்
செப்புநா அக்கரந்தீ ராத்தாகம்—வெப்புக்
கடுப்பறுமந் தஞ்சந்நி காசவயிற் றுப்பல்
தடிப்பேறும் வெங்காயத் தால்.

குணம்:—(இ-ள்.) வெங்காயத்தால் தேக உஷ்ணம், மூலம், சிரங்கு, ரத்தபித்த ரோகம், பித்த ஜிக்வாகண்டகம், தாகம், உஷ்ண பேதி இவைகள் நீங்கும். அக்கினிமந்தம், சந்நிபாதம், இருமல், வயிற்றுப்பிசம் இவைகள் விருத்தியாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஷோணகாரி, மூத்திரவர்த்தனகாரி, சீதளகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த இனத்தில் வெள்ளை வெங்காயமென்றும், சிவப்பு வெங்காயமென்றும் இரண்டு வகைகள் உண்டு. இதில் சிவப்பு வெங்காயத்தைப் பதார்த்த வகைகளிலும், வெள்ளை வெங்காயத்தை அவிழ்த பாகங்களிலும் கூட்டிக் கொள்வதுண்டு.

வெங்காயத்தை அடுப்புக் கும்பிக்குள் செருகிவைத்து வெந்த பதத்தில் எடுத்து அரைத்து, அரையாப்புக் கட்டிகளுக்கு வைத்துக் கட்டக் குணமாகும். வெங்காயத்தைக் கசக்கித் தேள் கொட்டு, வண்டுக்கடி முதலியவற்றிற்குத் தேய்க்க விஷமிறங்கும். வெங்காயத்தைக் கசக்கி மெல்லிய சீலையில் முடிந்து முகர்ந்துகொண்டிருக்க மூர்ச்சை நீங்கும். வெங்காயச் சாற்றைக் காதில் 2-3 துளி விட்டுப் பஞ்சடைத்து வைக்கக் காதுவலி நீங்கும். இதை அரிந்து சிறிது உப்புடன் கூட்டி உண்ண வயிற்றுவலி, ரத்தபித்த ரோகம் போம். வெறும் வெங்காயத்தை ஸ்திரீகள் மாத விலக்குக் காலத்தில் உட்கொள்ள உதிரச் சிக்கலை நீக்குவதுடன் சிறுநீரைப் பெருக்கும். இதனை நெய்யில் வதக்கிச் சாப்பிடத் தேகக் காங்கையை நிவர்த்திக்கும். இரண்டு பலம் வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக அரிந்து பன்றி நெய்விட்டு வதக்கிப் பனங்கற்கண்டு கூட்டித் தினம் 2 வேளை சாப்பிட ரத்த மூலம் குணமாகும்.

வெங்காய விதை.

(Allium Cepa—Seeds).

வெப்ப மலைந்தோடும் வெய்யபிணி குன்மமறுஞ்
செப்புஞ் சிறுநீரின் சிக்குடையும்—இப்புவியில்
வெங்காய வித்தை விதமறிந்தே தின்பார்க்குத்
தங்காய மேகுளிருந் தான்.

குணம்: (இ-ள்.) வெங்காய வித்தை முறைப்படி அவிழ்த முறைகளில் கூட்டி உண்பவர்களுக்கு உட்சூடு, குன்மம், நீரைப் பற்றிய தோஷங்கள் விலகும் என்க.

செய்கை:—உதரவாதஹரகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அரைத்துக் கோழிமுட்டைக் கருவிலாவது தேனிலாவது கலக்கிச் சாப்பிடத் தாதுவிருத்தி யுண்டாக்கும். வாயுவைக் கண்டிக்கும். ஆனால் நீடித்துச் சாப்பிடச் சிறிது சீதளம் செய்து தலைவலியை யுண்டாக்கும்.

வெட்சிச் செடி.

(Ixora Coccinea).

வெட்சிப்பூ மேகவழல் விட்டோட்டும் வாசனையா
மட்சிவழி யாயுயிர்கோ ளாரணங்கே—யெச்சுஞ்
சுரமுடனே தாகந் தொலைக்கு முலகில்
விரைவா யிளைப்பகற்றும் விள்.

குணம்:—(இ-ள்.) பரிமளத்தையுடைய வெட்சிப்பூ மேகச்சூடு, சுரரோகம், தாகம், சரீர ஆயாசம் ஆகிய இவைகளை நீக்கும் என்க.

செய்கை:—சமனகாரி, ஜடராக்கினிவர்த்தினி, பித்தகாரி, தாதுக்ஷீணரோதி, வியதாபேதகாரி, சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் வேரில் 1 பலம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு மட் குடுவையில் போட்டு, ½ படி சலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி ஆறவிட்டு வடிகட்டி எடுத்தக் கியாழத்தை, வேளைக்கு 1–1½ அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை உள்ளுக்குக் கொடுத்துவர இரத்தக் கொதிப்பை அடக்குவதல்லாமல், விக்கல், வாய்க்குமட்டல், இரத்த பித்த வாந்தி, பசியின்மை முதலியவைகளைக் குணப்படுத்தும்.

இதன் வேர்ப்பட்டையில் 15–20 குன்றியெடை கல்வத்திலிட்டுச் சிறிது திப்பிலிகூட்டிச் சலம் விட்டரைத்து, மெழுகுபதத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை மூன்று மணி நேரத்துக் கொருமுறை கொடுத்துக்கொண்டுவரச் சீதபேதி, வெள்ளை முதலியவைகள் குணமாகும்.

இரண்டு தோலா எடையுள்ள வெட்சிப்பூவை நெய்யில் வதக்கி, அதனுடன் 4 குன்றி எடை வால்மிளகுச் சூரணமும், 4 குன்றி எடை சிறு நாவற்பூச் சூரணமும், சிறிது வெண்ணெய் சர்க்கரையும் கூட்டி இளகலாக அரைத்து வேளைக்கு மூன்றிலொரு பாகத்தைத் தினம் 2-3 வேளை கொடுத்துவரச் சீதபேதி குணமாகும்.

வெட்டிவேர்.

(Andropogan Muricatus).

பித்தவி தாகஞ் சசிகா மிலங்கறைப் பித்தமனற்
றத்திடு குட்டஞ் சிரநோய் களமடி தாதுநட்ட
மத்தம னற்புண்ட னப்புண்வன் மூர்ச்சை வரிவிழிநோய்
வித்திர மேகத்தின் கட்டியும் போம்வெட்டி வேரினுக்கே.

குணம்:—(இ-ள்.) வெட்டிவேருக்குப் பித்தத்தால் அகாலத்தி லுண்டாகின்ற தாகம், சோமரோகம், காமாலை, ரத்தபித்தம், சுரம், பரவுகின்ற குட்டம், தலைநோய், கழுத்துநோய், சுக்கில நஷ்டம், உன்மத்தம், தீயால்வந்த புண், மூலைச் சிலந்தி, திரிதோஷம், மூர்ச்சை, நேத்திரரோகம், வித்திரிதிக்கட்டி, மேகக்கட்டி ஆகிய இவை நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, சுவேதகாரி, உதரவாதஹரகாரி, ருதுவர்த்தனகாரி, ரக்தஸ்தம்பனகாரி, ஷோணகாரி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்த வேரை இடித்துச் சூரணம் செய்து, வேளைக்கு 5-10 குன்றி யெடை வரையிலும், தினம் 2-3 வேளை சிறிது சர்க்கரை கூட்டிக் கொடுப்பதுண்டு. அல்லது 2 விராகனெடை வேரைப் பஞ்சுபோல் நசுக்கி 10 அவுன்ஸ் கொதிக்கின்ற சலத்தில் போட்டு இரண்டு மணிநேரம் ஊறவிட்டுப் பிசைந்து வடிகட்டி, வேளைக்கு 1-2 அவுன்ஸ் வீதம் சிறிது சர்க்கரை கூட்டித் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இவற்றால் பித்த உபரி, தாகம், அழலை, சுரம் முதலியவைகள் சாந்தப்படும். வியர்வையும் சிறுநீரும் பெருகும்.

குறிப்பு :-வெட்டிவேரானது வெண்மஞ்சள் நிறமாகவும், கூந்தலைப்போல் அடர்த்தியாகவும் நீளமாகவும் பூமியில் இறங்கி இருக்கும். இதற்கு ஒருவிதமானப் பரிமளமுண்டு. தென் நாட்டில் சிலர் வெட்டிவேரை விலாமிச்சுவேர் என்றும், விலாமிச்சுவேரை வெட்டிவேரென்றும் கூறுவது வழக்கம். எங்ஙனம் கூறினும் கூறுக. இந்த இடத்தில் வெண்மஞ்சள் நிறமானதே என அறிவார்களாக.

வெட்பாலை மரம்.

(Wrightia Tinctoria).

அக்கினியை வைத்திருக்கு மார்ந்தவா தம்போக்குந்
திக்குள்திரி தோடத்தைத் தீர்த்துவிடுஞ்—சொக்கவிரு
கட்பாலைக் கூற்றைவைத்தக் கான மடமயிலே
வெட்பாலை நன்மருந்தாம் விள்.

குணம்:—(இ-ள்.) அக்கினிக் குணத்தையுடைய வெட்பாலை மரமானது வாதவலியையும், திரிதோஷகோபத்தையும் நீக்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பட்டையில் 1 பலம் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கடத்தில் போட்டு, ½ படி சுத்த சலம் விட்டு அடுப்பிலேற்றி ¼ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு, ½ அல்லது 1 அவுன்ஸ் வீதம் தினம் இருவேளை கொடுப்பதுண்டு. இது ரத்தபேதி, வயிற்றிலுண்டான பல உபத்திரவங்கள், சுரம், சுரத்திலுண்டாகும் இசிவு முதலியவற்றைக் குணப்படுத்தும். இதன் இலையை வாயிலிட்டுச் சிறிது நேரம் மென்று துப்பிவிடப் பல் வலியை நீக்கும்.

வெட்பாலை யரிசி.

(Wrightia Tinctoria—Seeds).

வெட்பாலை தன்னரிசி வீறுபித்த வாதமொடு
கொட்பார் கரப்பான் குடல்வாத—முப்பிசத்தைக்
காணும லேநாளுங் கண்டிக்குங் காசினியிற்
பூணுர் முலையாய் புகல்.

குணம்:—(இ-ள்.) வெட்பாலை யரிசியானது பித்தவாத தொந்தம், கடுவன், குடல் சம்பந்தமான ரோகம், வயிற்றுப்பொருமல் இவைகளை நீக்கும்.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த விதையை ஒரு தோலா எடை எடுத்து அம்மிக்கல்லில் வைத்துச் சலம் விட்டு நன்ருய் அரைத்து, ½ படி சலத்தில் கலக்கி அடுப்பிலேற்றி வீசம்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் மூன்று வேளை கொடுத்துவரத் தாதுபலவீனம், குடல் சம்பந்தமான ரோகங்கள், கடுவன், வயிற்றுப்பொருமல் முதலியவைகளை நீக்கும்.

வெண்காலி மரவேர்.

(White Catechu).

விம்மு மகோதரமு மேனேக்கு பித்தமொடு
ஜிம்ம கிருஷ்ணதோடஞ் சேருமோ—கம்முகின்ற
கள்ளைப் பொருநீருங் காணுது கைப்பையுறும்
வெள்ளைக் கருங்காலி வேர்க்கு.

குணம்:—(இ-ள்.) கசப்புள்ள வெள்ளைக் கருங்காலி வேருக்குப் பெருவயிறு, ஏறு பித்தம், கிருஷ்ண ஜிம்மகதோடம், கருமேகம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—வியதாபேதகாரி.

உபயோகிக்கும் முறை:—1 பலம் வேர்ப்பட்டையைப் பஞ்சு போல் நசுக்கி ஒரு மட்கலயத்தில் போட்டு, 1 படி சலம்விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, 4 மணி நேரத்திற்கு ஒரு முறை 1 அவுன்ஸ் அளவாகத் தினம் 3 வேளை கொடுத்து வர அதிக சீதளத்தினால் நாவு கருத்து, நீர் வறண்டு, சுரசுரப்படைந்த தோஷம் போம். இதன் வேர்ப்பட்டையை நன்றாய் நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, தினம் காலை மாலை கால் ரூபாய் எடை சர்க்கரை கூட்டிக் கொடுத்துவர இரத்தம் சுத்தியாகிக் கருமேகம், சொறி, சிரங்கு, படை முதலிய நோய்கள் குணமாகும்.

வெண்குன்றி.

(Abrus Precatorius—White).

வீரியத்தை யுண்டாக்கும் வெண்குன்றி வித்ததன்வேர்
பாரியதா கத்தைப் பறக்கடிக்கும்—சீரியவோர்
சிற்றிலையி னற்சுளுக்குத் தீருங் கோடிகாயாற்
சுற்றிலைப்பேய்க் கூட்டமெனச் சொல்.

குணம்:—(இ-ள்.) வெண்குன்றி விதை சுக்கிலத்தை விருத்திக்கும்; வேர் தாகத்தையும், இலை சுளுக்கையும், காய், கொடி பைசாசங்களையும் நீக்கும் என்க.

செய்கை:—விதைக்கு: காமவிர்த்தினி, வேருக்கு: திரவகாரி, இலைக்கு: வேதனசாந்தினி.

உபயோகிக்கும் முறை:—சுளுக்கு நேர்ந்த இடத்தில் சிற்றாமணக்கெண்ணெய் தடவி இதன் இலையை மேல் அப்பிவைக்கச் சுளுக்கு வாங்கும். 10 பலம் வெண்குன்றிப் பருப்பை ஒரு நாள் முழுவதும் வெள்ளாட்டுப்பாலில் ஊறப்போட்டு மறுநாள் உலர்த்தவும். இப்படியே 7 முறை செய்து குழித் தைலம் இறக்கி, அதில் வேளைக்கு 2-3 துளி வீதம், தினம் 2 வேளை சர்க்கரையில் கொடுத்துவரத் தாது விருத்தியாகும்.

வெண்டுக்காய்.

(Abelmoschus Esculantus).

கண்ட கிராணி கடிய வதிசாரம்
விண்டவெண் சீதரத்த மேவுங்கா—ணெண்டோடியே
வண்டற்காம் வெய்யகப வாதமிகும் வாய்க்குணவாம்
வெண்டுக்கா யுண்பார்க்கு விள்.

குணம்:—(இ-ள்.) வற்றலுக் குதவியான வெண்டைக்காய்க்குக் கிரகணி பேதி, சீதாத்தாதி சாரம், சிலேஷ்மவாதம், நாவுக்குரிசை ஆகிய இவைகள் உண்டாம் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, மூத்திரவர்த்தனகாரி, காம விர்த்தினி, க்ஷீரவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பதார்த்த வகையிலொன்றாகப் பாகப்படுத்தி உண்பதுண்டு. இதனால் உட்சூடு, உஷ்ண இருமல் குணமாகும்; கபம் விருத்தியாம். இது விந்துவைக் கட்டிப் போகத்தில் உற்சாகத்தையுண்டாக்கும். இதன் *வேரை நன்றாய்க் காயவைத்து இடித்துச் சூரணித்து, வேளைக்கு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ தோலா எடை காய்ச்சிய பசுவின் பாலில் போட்டுச் சாப்பிட விந்து நுங்குபோல் இறுகும். போக சக்தி அதிகரிக்கும்.

வெண் பயறு.

(Phaseolus Max—White variety).

பண்டுள வெண்பயற்றைப் பாரதனி லுண்பார்க்குக்
கொண்டுலவும் வாதமது குன்றிப்போம்—கண்டயர்ந்த
நித்திரையை விட்டெழுப்ப நேருகின்ற வாதவலி
இத்தரையி லோட்டமிடு மே.

குணம்:—(இ-ள்.) வெண்பயற்றால் நித்திரையில் திடீரென எழுப்பும் வாய்வுகளும், ஓடியோடிக் கட்டுகின்ற வாதமும் விலகும் என்க.

உபயோகிக்கும் முறை:—சாதாரணமாகப் பச்சைப்பயற்றை உபயோகிக்க வேண்டிய காய்கறி பதார்த்தங்களில் வெண்பயற்றை உபயோகிக்கச் சிற்சில வாத ரோகங்களைக் கண்டிக்கும்.

வெந்தயக் கீரை.

(Trigonella Foenum Graecum—Greens).

பொருமன்மந்தம் வாயுகபம் போராடு கின்ற
விரும லருசியிவை யேகுந்—தரையிற்
றீதி லுயர்நமனைச் சீறும் விழியணங்கே
கோதில்வெந்த யக்கீரை கொள்.

குணம்:—(இ-ள்.) வெந்தயக் கீரையால் வயிற்றுப்பிசம், அக்கினிமந்தம், வாதகோபம், சிலேஷ்மதோஷம், காசம், அரோசகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

---

* காட்டு வெண்டைச் செடியாயிருப்பின் அதிக நன்மையைத் தரும்.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, காமவிர்த்தினி, மூத்திரவர்த்தனகாரி, உதரவாதஹரகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கீரையை ஆய்ந்து, சலம்விட்டு அலம்பி நீர் வடித்துப் பருப்புடன் கூட்டிக் கடையலாகவாவது, அல்லது ஆட்டு இறைச்சியுடன் கூட்டித் தேங்காய்,கசகசா முதலியவற்றை அரைத்துப் போட்டுப் பாகப்படிப் பக்குவப்படுத்தியாவது அன்னத்துடன் கூட்டி யுண்ண ருசியாக இருக்கும். இதனால் மூலவாயு, ரத்தமூலம், வயிற்றுக் கடுப்பு முதலியவைகள் குணமாகும். இந்தக் கீரையைச் சிறிது சலம்விட்டு அரைத்துக் களிபோல் கிளறி நெருப்பனலில் வெதுப்பிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட உடைத்துக்கொள்ளும்.

வெந்தயம்.

(Trigonella Foenum Graecum—Seeds).

மேதிகண மத்திசுர மேகங் கயஞ்சீத
பேதியதி சாரநெய்ப் பித்திரும—லாதியநோய்
நீக்கு மனற்றணிக்கு நித்தமுற விந்துவையுண்
டாக்கு மனமே யறி.

குணம்:—(இ-ள்.) வெந்தயமானது கணமாந்தம், அஸ்திசுரம், பிரமேகம், க்ஷயம், சீதக்கழிச்சல், பேதி, ரத்த பித்தம், காசம், உட்சூடு முதலிய பிணிகளை விலக்கும். நிரந்தரமாகச் சுக்கிலத்தை விளைக்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி, பலகாரி, உதரவாதஹரகாரி, ருதுவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—அரை அல்லது ஒரு தோலா எடை வெந்தயத்தை நெய்விட்டு வறுத்துச் சிறிது உப்பும், சோம்பும் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்கப் பேதி கட்டும். ½ தோலா எடை வெந்தயத்தை நெய் விட்டு வறுத்துப் பொடிசெய்து,கொதிக்கிற சலத்தில்போட்டு ஆறவிட்டு வடித்துச் சாப்பிடச் சீதபேதி குணமாகும். ½-தோலா வெந்தயத்தை நன்றாய் வேகப்போட்டுக் கடைந்து தேன் கூட்டிச் சாப்பிட ஸ்திரீகளுக்குப் பால் சுரப்புண்டாகும். சிறிது புளியையும், சீமையத்திப்பழத்தையும் சலம்விட்டுக் கரைத்துப் பிழிந்தெடுத்தச் சாற்றில் ½ தோலா எடை வெந்தயத்தை வேகப் போட்டுக் கடைந்து தேன்விட்டுச் சாப்பிட மார்புவலி, மூர்ச்சை

தீரும். இந்த வெந்தயத்தைச் சீமை அத்திப்பழத்துடன் சிறிது சலம்விட்டு அரைத்துக் களிபோல் கிளரிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட உடைத்துக்கொள்ளும். வெந்தயத்தைச் சலம்விட்டு அரைத்து நெருப்பு, கொதிக்கின்ற எண்ணெய் முதலிய பட்ட வேக்காட்டிற்கு மேற்பூச எரிச்சல் தணிந்து ஆறும்.

வெல்லம்.

(Jaggery).

இந்த இனத்தில் நல்லவெல்லம், பனைவெல்லம், ஈச்சம் வெல்லம், தெங்கின் வெல்லம் எனப் பலவகை யுண்டு இவைகளின் உபயோகத்தை அதனதன் தலையங்கத்தின்கீழ்க் கண்டுணர்க.

வெள்வேலமரம்.

(Acacia Farnesiana).

பித்தம யக்கமறும் பேருலகின் மானிடருங்
குற்ற சுரவாத மோடுங்காண்—குத்துகின்ற
சந்துக்கு டைச்சல்விடுஞ் சர்வாங்க வாதம்போங்
கொந்துலவும் வெள்வேலுக் கு.

குணம்:—(இ-ள்.) வெள்வேல் மரத்திற்குப் பித்தமயக்கம், வாதசுரம், இடுப்புவலி, சர்வாங்கவாதரோகம் ஆகிய இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் கொழுந்து இலையை நன்றாய் அரைத்து, ஒரு சிறு கொட்டைப்பாக்களவு தினம் ஒரு வேளை காலையில் 3 நாள் சாப்பிட வெள்ளை குணமாகும். இதன் பட்டையுடன் சிறிது இஞ்சி கூட்டி இடித்துக் கியாழமிட்டு வாய் கொப்புளித்துவர வாய் ரணம், ரத்தம் சொரிதல் முதலியவைகள் போம்.

வெள்ளரிக்காய்.

(Cucumis Memordica).

உண்டருந்தத் தீயெழுப்பு முண்மருந்தைத் தான்முடுக்குங்
கண்டகரப் பானைக் கடுக்குங்காண்—பண்டிதரே
யுள்ளரிப்பை நீர்க்கடுப்பை யூரைவிடுத் தோட்டிவிடும்
வெள்ளரிக்கா யின்குணத்தை விள்.

குணம்:—(இ-ள்.) வெள்ளரிக்காய் கரப்பான், நீர்த் துவாரத் தினவு, நீர்ச்சுறுக்கு இவைகளை நீக்கும். இதை ஆகாரத்திற்குப் பின் உண்ணப் பசியாம். இது மருந்தை முறிக்கும்.

செய்கை:—மூத்திரவர்த்தனகாரி. ஆகாரத்துக்குப்பின் சாப்பிட: ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்றோலைச் சீவி வில்லை வில்லையாக அரிந்து மிளகும், உப்பும் சேர்ந்துள்ள பொடியில் தொட்டுச் சாப்பிடுவதுண்டு. முதிர்ந்த வெள்ளரிக்காயைப் பெருந்துண்டுகளாக நறுக்கிச் சுரக்காயைப்போல் பருப்புச் சாம்பாரில் கூட்டிச் சமைத்து உண்பதுண்டு.

இது உஷ்ணத்தை யகற்றும், தாகத்தை யடக்கும், சிறு நீரைத் தாராளமாக இறங்கச் செய்து நீர்ச் சுறுக்கு, நீர்க் கடுப்பு முதலியவற்றை நீக்கும். இது கபதேகிகட்கு ஆகாது.

வெள்ளரிப்பழம்.

(Cucumis Memordica—Fruit).

வெள்ளரியின் நற்கனியை வேட்கைகொண் டுண்டிடவே
விள்ளரிய தாகம் விரைந்தோடும்—தள்ளரிய
நற்பசியு முண்டாகும் நாவினிக்க வையமுறும்
பொற்பூண் முலையாய் புகல்.

குணம்:—(இ-ள்.) வெள்ளரிப் பழத்தை உண்ணத் தாகம் அடங்கும். இது நல்ல பசியையும் கபத்தையும் உண்டாக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—கனிந்துள்ள வெள்ளரிப்பழத்தை மேற்றோல் சீவி, விதை நீக்கித் துண்டு துண்டாக அரிந்து போதிய அளவு சர்க்கரையிட்டுச் சாப்பிட ருசியாக இருக்கும். இதனால் பசி அதிகரிக்கும். கபம் விருத்தியாகும்.

வெள்ளரி வித்து.

(Cucumis Memordica—Seeds).

கடுப்போடுநீர்க் கட்டுவெறுங் கல்லடைப்பு தாரை
வெடிப்பு சதையடைப்பு மேக—மெடுத்துரைக்கா
வுள்ளரிவி யென்னு முறைகிரிச்ச ரம்மிவைகள்
வெள்ளரிவி தைக்கேகும் விள்.

குணம்:—(இ-ள்.) வெள்ளரி விதைக்குக் கடுக்கின்ற நீரடைப்பு, சர்க்கராஸ்மரி, நீர்த்துவார வெடிப்பு, சதையடைப்பு, பிரமேகம், கிரிச்சரம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சீதளகாரி, மூத்திரவர்த்தனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேலுள்ள உறப்பான தோலைப் போக்கி, உள்ளிருக்கப்பட்டப் பருப்பில் வேளைக்கு அரைத் தோலா எடை அம்மிக்கல்லில் வைத்துப் பால் விட்டு அரைத்து, மெழுகு பதத்தில் தேவையான பாலில் கலக்கிச் சிறிது கற்கண்டுத் தூள் இட்டுத் தினம் 2 வேளை சாப்பிடவும். அல்லது வாதுமைப் பருப்பு, வெள்ளரி வித்தின் பருப்பு, கசகசா, கோதுமை நொய் இவைகளைச் சமனெடையாகக் கல்வத்திலிட்டுப் பசுவின் பால் விட்டு அரைத்துப் பாலெடுத்துச் சிறிது அடுப்பில் வைத்துக் கஞ்சிபோல் காய்ச்சிக் கற்கண்டுத் தூள் போட்டுக் காலை மாலை சாப்பிடவும். இவைகள் உள் அழலையை ஆற்றுவதுடன் நீர்ச்சுறுக்கு, நீர்க்கட்டு, கல்லடைப்பு, வெட்டை முதலியவைகளை நீங்கும்.

வெள்ளறுகு.

(Adenema Hissopifolia).

குன்மமொடு வாயு குடல்வாதஞ் சூலையிவை
சென்மம்விடுத் தோடிச் சிதையுங்காண்—வன்முலையா
யுள்ளுறுகி ரந்திசொறி யொட்டியசி ரங்குமறும்
வெள்ளறுகு தன்னை விரும்பு.

குணம்:—(இ-ள்.) வெள்ளறுகினால் குன்மம், வாதப்பிணி, வாதக்குடல்விருத்தி, கீல்பிடிப்பு, நரம்புகளைப் பற்றிய கிரந்தி, தினவு, சிறு சிரங்கு இவைகள் போம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, வியதாபேதகாரி, பலகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை அரைத்து வேளைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு, பசுவின் பாலில் கலக்கித் தினம் ஒரு வேளை மூன்றுநாள் சாப்பிடப் பிரமேகம், சொறி, சிரங்கு, குஷ்டம், கிரந்தி, வெட்டை, வாயு முதலியவைகள் போம். இதைச் சாப்பிடும் போது பால்சாதம் தவிர வேறொன்றும்ஆகாது. இதை மேகரோகங்களுக்குச் சித்தப்படுத்துகின்ற பல எண்ணெய்களில் சேர்ப்பதுண்டு.

வெள்ளிலோத்திரம்.

(Symploces Racemosa).

தாவரநஞ் சென்புருக்கி தாழா மகோதரநோய்
கூவவொட் டாத குரற்சாதம்—பூவுலகில்
வெல்லவரி தாய வியங்கமுதா வர்த்தமும்போம்
நல்லவெள்ளி லோத்திரத்தி னால்.

குணம்:—(இ-ள்.) வெள்ளிலோத்திரத்தினல் விஷ விருக்ஷங்களின் நஞ்சு, எலும்புருக்கி, பெருவயிறு, குராற்கம்மல், வியங்க ரோகம், உதாவர்த்தம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—சங்கோசனகாரி, அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் பச்சைப் பட்டையை இடித்துச் சாறு எடுத்து, வேளைக்கு 30 துளி வீதம் தினம் 2 வேளை உட்கொள்ளக் கருப்பாசய ரோகங்கள், சீதபேதி, உஷ்ணபேதி முதலியவைகள் குணமாகும்.

வெள்ளிலோத்திர மரத்துண்டுகளை இடித்து ஒரு கடத்தில் போட்டு, 8 மடங்கு சலம்விட்டு $\frac{1}{8}$ ஆகக் காய்ச்சி வாய் கொப்புளித்துவரப் பல்லாட்டம், வாய் நாற்றம், பற்களில் சீழ்ரத்தம் சொரிதல் யாவும் போம்.

வெள்ளெருக்கம்பால்.

(Calotropis Gigantea—Milk, white variety).

வலியின் வலிசுளுக்கு மாவாத சந்நி
யெலியின் விஷஞ்சுரங்க ளெல்லாம்—வலியற்றுக்
காலைத் தொழுதே கடற்புக்கும் வெள்ளெருக்கம்
பாலைத் தொடுவாரைப் பார்.

குணம்:—(இ-ள்.) வெள்ளெருக்கம் பாலால் ஐவகைவலியின் வன்மை, சுளுக்கு, மகாவாதம், சந்நிபாதம், எலிவிஷம், குளிர் சுரம் இவைகள் போம் என்க.

செய்கை:—அங்காகர்ஷணநாசினி, விஷநாசகாரி, சுரஹரகாரி, ஷோணகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம் சாதாரணமாக எருக்கம்பாலின் தலையங்கத்தின்கீழ்க் கூறப்பட்டதேயாகும். இது சாதாரண எருக்கம்பாலைவிடக் காரமுடையது. குணத்திலும் சிறந்தது. இது அதிகமாகக் கிடைப்பது அரிது. இதன் காயிலுண்டாகின்ற பஞ்சை இதன் பாலில் தோய்த்துப் பட்டாணிப் பிரமாணம் உருண்டைகளாகச் செய்து 2-3 மாதத்திய பிண்டங்களை வெளியாக்கக் கொடுப்பது வழக்கம். இது நன்றன்று. எலி, நாய் முதலியவற்றின் கடிவாயில் இந்தப் பாலைத் தடவிப் புண்ணுக்கி ஆற்றிவிட விஷம் முறியும்.

வெள்ளை அல்லிவித்து.

(Nymphae Alba—Seeds).

மெல்லியலைக் கொண்டசீர் மேவுநல் லாரணங்கே
அல்லிசிறு வித்ததனு லாம்பயனைச்—சொல்லக்கேள்
உள்ளுறுப்பி னீர லுரமாகும் நீரதனில்
தள்ளுமது வும்போகுந் தான்.

குணம்:—(இ-ள்.) வெள்ளை அல்லிவித்து ஈரல், பிலீகம் இவைகளுக்குப் பலம் கொடுக்கும்; மதுமேகத்தையும் நீக்கும் என்க.

உபயோகிக்கும் முறை:—இந்த வித்தைப் பெருமணலுடன் கூட்டி அடுப்பிலிட்டு வறுத்துப் பதமாக எடுத்துச் சாப்பிட ருசியாக இருக்கும். இது ஈரல், பிலீகம் முதலியவற்றிற்குப் பலம் கொடுக்கும், மது மேகத்தையும் நீக்கும்.

வெள்ளைச் சாறடை.

(Trianthema Decandra—Leaves).

வித்திரிதி மூலம் விழிப்படல மார்புநோய்
தத்து சுவாசந் தனிக்கருப்பை—யுற்ற
கருச்சிதறச் செய்சூதி காவாத மும்போம்
விருச்சிகத்தின் பேரை விரி.

குணம்:—(இ-ள்.) விருச்சிகம் என்கிற வெண்சாறடையால் வித்திரிதிக்கட்டி, மூலவாயு, கண்படல ரோகம், நெஞ்சுநோய், சுவாசரோகம், கருப்பத்தைச் சின்னப்படுத்துகிற சூதிகாவாதம் ஆகிய இவைபோம் என்க.

செய்கை:—ஜடராக்கினிவர்த்தினி, சோபாநாசினி.

உபயோகிக்கும் முறை:—இதன் இலைச்சாற்றை முலைப்பாலில் கலந்து, கண்களில் மைபோல் தீட்டி வர நேத்திரத்தைப் பற்றிய பலரோகங்கள் போம். இதன் இலைச் சாற்றில் வேளைக்கு ½ முதல் ¾ அவுன்ஸ் அளவு, வெள்ளாட்டுப் பாலிலாவது பசுவின் பாலிலாவது கலந்து உட்கொள்ள, வீக்கம், குன்மம், வயிற்றுளைச்சல் இவைகளை நீக்கும். இன்னும் சிறு தாவர விஷங்களையும், வாத பித்த கப இம்மூன்றின் ஏற்றக் குறைவினலுண்டாகும் கெடுதல்களையும் நீக்கும். தீபனசக்தியை யதிகப்படுத்தும். இதன் இலையைச் சுத்தமாக ஆய்ந்து, நெய்விட்டு வதக்கித் திட்டமாக உப்பு, மிளகாய் போட்டுத் துவட்டலாகச் செய்து, ஆகாரத்துடன் கூட்டிச்

85

சாப்பிட மேற்கூறப்பட்டக் குணங்கள் ஏற்படும். இதன் இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய் கூட்டிப் பதமுறக் காய்ச்சி வடித்துக் கீல்களிலுண்டான வீக்கம், நோய் முதலியவற்றிற்குத் தேய்க்கக் குணமேற்படும்.

இதன் இலைச்சாறு விராகனெடை ஐந்துடன் கறந்த பசுவின் பால் 12 தோலா எடை கூட்டிக் காலை நேரத்தில் சாப்பிடக் கட்டுப் பட்டுள்ள நீரை வெளியாக்கும்.

வெள்ளைச்சாறடைக் கிழங்கு.

(Trianthema Decandra—Root).

சீதஞ் சலதோஷந் தேமல் தழும்புகுன்மம்
வாதஞ் சிறுசிரங்கு வன்மேக—மோதரிய
காசமுதல் நோயெல்லாங் கான்சா றடைக்கிழங்கால்
நாசமுறு மென்றே நவில்.

குணம்:—(இ-ள்.) காட்டுச் சாறடைக் கிழங்கால் சீதளம், நீரேற்றம், தேமல், தடிப்பு, குன்மம், வாத வலி, சிறுசிரங்கு, பிரமேகம், இருமல் ஆகிய இவைகள் போம் என்க.

உபயோகிக்கும் முறை:—இதன் முற்றின வேரில் முதல் நாள் ஒரு குன்றி எடை ஆரம்பித்துத் தினம் தினம் ஒவ்வொரு குன்றி எடையாக 40 நாள் வரையில் அதிகப்படுத்தி, அப்பால் படிப்படியாக ஒவ்வொரு குன்றியெடையாகக் குறைத்துக்கொண்டு வந்து விட்டுவிட, எந்த அவிழ்தங்களினாலும் குணப்படாத வாதரோகங்கள் குணப்படும். இன்னும், இதனால் நெரிகட்டிவரும் சுரம், யானைக்கால் வீக்கம், பீநசரோகம் முதலியவை தீரும். அளவை அதிகரித்துச் சாப்பிட்டால் தொண்டைவலி யுண்டாகும்.

வெள்ளைத் தாமரைப்பூ.

(Nymphae Lotus).

இரலைப் பற்றிமிக வேறுகின்ற வெப்பமும்போங்
கோர மருந்தின் கொடுமையறும்—பாருலகிற்
றண்டா மணத்தையுள்ள தாழ்குழலே காந்தல்விடும்
வெண்டா மரைப்பூவால் விள்.

குணம்:—(இ-ள்.) வெள்ளைத் தாமரைப்பூவால் ஈரலில் அதிகரிக்கின்ற உஷ்ணமும், வெப்பமுள்ள ஔஷத வேகமும், உட்சூடும் நீங்கும் என்க.

செய்கை:—அந்தர்ஸ்நிக்தகாரி.

உபயோகிக்கும் முறை:—நிழலில் உலர்த்திய வெள்ளைத் தாமரைப்பூ ஒரு வீசை கொண்டுவந்து ஆய்ந்து, ஒரு மட்கடத்தில் போட்டு இரண்டு படி சுத்த சலம் விட்டு ஒரு இரவு ஊறவைத்து, மறுநாள் அடுப்பிலிட்டு $\frac{1}{2}$ படி அளவிற்குச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, அதில் ஒருவீசை சர்க்கரை கூட்டிச் சர்ப்பத்துப் பதமாகக் காய்ச்சிப் பத்திரப்படுத்துக. வேளைக்கு 1 தோலா எடை சலத்தில் கலந்து சாப்பிட்டுவர உட்சூடு தணியும், தாகம் அடங்கும், கண்கள் குளிர்ச்சியடையும்.

வெள்ளைத் தாமரைப்பூ பலம் 10; விலாமிச்சம்வேர் பலம் $2\frac{1}{2}$; நன்னாரிவேர், ரோஜாமொக்கு, சீந்தில், அதிமதுரம், சந்தனத்தூள் வகைக்குப் பலம் $1\frac{1}{2}$; கோஷ்டம், நெருஞ்சிமுள், ஆடாதோடா யிலை வகைக்குப் பலம் $\frac{1}{2}$; இவைகளை எல்லாம் இடித்து ஒரு பாண்டத்தில் போட்டு, 3 படி சலம் விட்டு ஒரு இரவு ஊறப்போட்டு அடுப்பிலேற்றிக் காய்ச்சி, $1\frac{1}{2}$ படி அளவிற்கு வடிகட்டி ஒரு வீசை சர்க்கரை கூட்டிச் சர்ப்பத்துப் பதம் காய்ச்சவும். வேளைக்கு ஒரு தோலா சலத்துடன் விளாவிச் சாப்பிட உட்சூடு, நீர்எரிச்சல், ஸ்திரீகளுக்குப் படும் வெள்ளை, பித்த எரிச்சல், தாகம், இரத்தங் கெடுதல், பெரும்பாடு போம்.

வெள்ளை நாவற் பழம்.

(Eugenia Jambolana—White).

உதிரமொடு விந்துவையு முண்டாக்கு முள்ளே
யதிரழலை தன்னை யகற்றும்—பதியதனிற்
கண்ணு வலியார்க்குங் காணப் பெருந்திருவே
வெண்ணுவ லின்கனியை விள்.

குணம்:—(இ-ள்.) வெள்ளை நாவற்பழம் ரத்ததாதுவையும் சுக்கிலத்தாதுவையும் உண்டாக்கும்; உள்வெப்பத்தை நீக்கும் என்க.

செய்கை:—சமனகாரி.

உபயோகிக்கும் முறை:—இதன் உபயோகம், நாவற்பழத்தின் தலையங்கத்தின்கீழ் வரையப்பட்டதேயாகும். ஆனால் சாதாரணமாக எங்கும் கிடைக்கின்ற கருஞ் சிவப்பு நிறமுள்ள நாவற்பழத்தைவிட வெள்ளை நாவற்பழத்திற்குக் குணமதிகம்.

வெள்ளைப்பூண்டு.
(Allium Sativum—Bulb).

சந்நியோடு வாதந் தலைநோவு தாளின்வலி
மன்னிவரு நீர்க்கோவை வன்சீத—மன்னமே
யுள்ளுள்ளிக் காண்பா யுளைமூல ரோகமும்போம்
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு.

குணம்:—(இ-ள்.) வெள்ளைப்பூண்டினால் சந்நிவாதரோகம், சிலேஷ்ம சிரஸ்தாபம், வாய்ப்பூட்டுநோய், நீரேற்றம், சீதபேதி, அரசம் இவைகள் நீங்கும் என்க.

செய்கை:—உற்சாககாரி, ஷோணகாரி, மூத்திரவர்த்தனகாரி, அங்காகர்ஷணநாசினி, நாசிநீர்வர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இதைப் பசுவின் பாலில் இரண்டு விராகனெடை போட்டு வேகவைத்துக் கடைந்து சாப்பிட வாயு நீங்கும், கபம் கரையும், கிருமிகள் மடியும். உரித்த வெள்ளைப்பூண்டு பலம் $\frac{1}{2}$, சுத்த சலம் படி $\frac{1}{8}$, பசுவின் பால் படி $\frac{1}{8}$, இவைகளை ஒரு பழகிய மட்கலயத்தில் போட்டுச் சலம் சுண்ட அடுப்பில் வைத்து எரித்துப் பிழிந்து வடிகட்டி, வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சாப்பிட்டுவர மூர்ச்சாரோகம், வயிற்றுப்பிசம், சந்து வாதம், மார்புநோய் முதலியவைகள் போம்.

பூண்டை அரைத்துப் பருவு, கட்டி முதலியவற்றிற்குப்போட உடைத்துக்கொள்ளும். அரைக்கால் ரூபாய் எடை உரித்தப் பூண்டை 2 அவுன்ஸ் நல்லெண்ணெயில் கூட்டிப் பதமுறக்காய்ச்சி வடித்துக்கொண்டு, காதில் 2·3 துளி விட்டுக்கொண்டுவரக் கர்ணசூலை குணமாகும். வெள்ளைப்பூண்டுச் சாற்றைக் கைவிரலில் தொட்டுக் கொண்டு உள்நாவின் வளர்ச்சிக்குத் தடவச் சுருக்க மடையும். விஷ ஜந்துக்கள் கடித்த இடத்தில் வெள்ளைப்பூண்டை அரைத்துத் தேய்த்து அடைதட்டி வைத்துக் கட்டி, எரிச்சல் மிகுந் தருணம் எடுத்துவிட விஷம் முறியும்.

வெள்ளைமிளகு.
(Pimenta or Piper Album).

வெள்ளை மிளகருந்த வீறு கிரகணிபோந்
தள்ளு கபவாதந் தானேகு—முள்ள
சுரம்போகுந் தீபனமாந் தொன்மேகம் போமித்
திரம்பார்த் தெவர்க்குந் தெரி.

குணம்:—(இ-ள்.) வெள்ளை மிளகினால் கிரகணி, சிலேஷ்ம வாதம், ரூட்சை, சீழ்ப்பிரமேகம் இவை நீங்கும். ஜடராக்கினி உண்டாம் என்க.

செய்கை:—உற்சாககாரி, உதரவாதஹரகாரி.

இதன் உபயோகம் சாதாரணமாக மிளகின் தலையங்கத்தின் கீழ்க் கூறப்பட்டதேயாகும்.

குறிப்பு:—சாதாரணமாகக் காடுகளில் ஒருவிதமான மரத்திலிருந்து எடுக்கப்படும் பழத்தின் வித்தை வெண்மிளகு (Pimenta) எனக் கூறுவர். இதுவுமல்லாமல் மிளகுக் கொடியிலிருந்து நன்றாய்ப் பழுத்துள்ள பழங்களைத் தண்ணீரில் போட்டுச் சில தினம் ஊற விட்டுத் தேய்த்து மேல் தோலை நீக்கி உலர்த்திய வித்தை வெண் மிளகு (Piper Album) எனக் கூறுவர். இவைகள் இரண்டும் பார்வையிலும் குணத்திலும் அதிகப் பேதமின்றி ஒத்திருக்கும்.

வெற்றிலை.

(Chavica Betel).

ஐய மறுங்கா ணதன்சாரங் கொண்டக்காற்
பையச் சபித்தியம்போம் பைந்தொடியே—மெய்யிற்
கடியின் குணம்போகுங் காரவெற்றி லைக்குப்
படியுமுத் தோடத்தைப் பார்.

குணம்:—(இ-ள்.) காரமுள்ள வெற்றிலையின் இரசத்தைப் பருகில் கபம், சீதளம், காணாக்கடியின் துர்க்குணம், திரிதோஷகோபம் இவைகள் ஒழியும் என்க.

செய்கை:—ஷோணகாரி, க்ஷீரநாசினி, காமவிர்த்தினி, திரவ காரி, ஜடராக்கினிவர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—வெற்றிலையில் சிறிது நல்லெண்ணெய் தடவி, நெருப்பனலில் வதக்கிப் பொருக்கக்கூடிய சூட்டில் குழந்தைகளின் மார்பில் போட்டுவைக்கக் கபத்தைக் கரைத்து இருமல், இழுப்பு, மூச்சுமுட்டல் இவைகளைக் குணப்படுத்தும். இம்மாதிரியே ஸ்திரீகளுக்கு முலைப்பாலை வற்றடிக்கவும், ஸ்தன வீக்கத்திற்கும் போடுவதுண்டு. இன்னும், இதனைக் கம்மாறு வெற்றிலையின் தலையங்கத்தின்கீழ்க் கூறியவாறு உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

வேங்கை மரம்.

(Pterocarpus Marsupium).

குற்றிருமல் வெட்டையொடு கூறுமுள மாந்தையிவை
யெத்திசையும் வாரா திடையுங்காண்—சத்தியமாய்ப்
புண்ணிருமல் சீழொழுகல் போகு மலமிறங்குங்
கண்ணொளிரும் வேங்கைக்குக் காண்.

குணம்:—(இ-ள்.) வேங்கை மரத்தினால் பொடியிருமல், வெள்ளை வீழல், உளமாந்தை, விரணம், காசம், சீழ்ப்பிரமேகம் ஆகிய இவைகள் நீங்கும். கண்ணுக்கு ஒளியும் மலவிரேசனமும் உண்டாம் என்க.

செய்கை:—பிசினுக்கு: சங்கோசனகாரி, மலகாரி, ரக்தஸ்தம்பனகாரி. பட்டைக்கு: சங்கோசனகாரி.

உபயோகிக்கும் முறை:—இந்த மரத்தின் பட்டைச் சூரணத்தை வேளைக்கு 1-1½ விராகனெடை சர்க்கரையுடன் கலந்து தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. அல்லது ஒரு பலம் பட்டையை நன்றாய் இடித்து ஒரு மட்கலயத்தில் போட்டு, ½ படி சலம் விட்டு வீசம் படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை கொடுப்பதுண்டு. இவற்றால் அஜீரணபேதி, சீதபேதி குணமாகும். வேங்கைப் பிசினைப் பெரியவர்களுக்கு வேளைக்கு 5-15 குன்றி எடை தினம் 2-3 வேளை கொடுக்க வெள்ளை, சீதபேதி, அதிசாரபேதி குணமாகும். இன்னும் இதனைத் தூளாக்கிக் காயங்களுக்குத் தூவிவர ஆறும். வேங்கைப் பிசின் 15 விராகனெடை, அபினி 1 விராகனெடை, லவுங்கப்பட்டைச் சூரணம் 4 விராகனெடை கல்வத்தில் போட்டு, மிருதுவாக எல்லாம் உறவாகும்படி அரைத்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 3-5 குன்றி எடை தினம் 2-3 வேளை கொடுக்கச் சீதபேதி, ரத்தபேதி, அஜீரணபேதி முதலியவற்றை நீக்கும்.

வேப்ப நெய்.

(Melia Azadirachta—Oil).

வாதம்போம் பித்தமிகு மாருக்கி ரந்தியொடு
மோதுகரப் பான்சிரங்கு முன்னிசிவும்—ஓதுடலின்
நாப்ப ணுறுசுரமு நாடுசந்நி யுந்தொலையும்
வேப்பநெய் யென்றுருகால் விள்.

குணம் :—(இ-ள்.) வேப்பின்நெய்க்கு மகாவாதம், கிரந்தி, கரப்பான், சிரங்கு, ஆகிருஷ்ணஸ்தம்பனவாதம், சுரம், சந்நி இவை நீங்கும்; பித்தமாம் என்க.

செய்கை :—பித்தகாரி, கிருமிநாசினி, சுரஹரகாரி, அங்காகர்ஷணநாசினி.

உபயோகிக்கும் முறை:—இந்த எண்ணெயில் ஸ்நானஞ் செய்துவரச் சந்நி, கழுத்து நரம்புகளின் இசிவு, நீர்ப்பீனசம், வாதரோகங்கள் போம். இந்த எண்ணெயை ஆறாதரணங்களுக்குத் தடவிவர ஆறும்.

வேப்பெண்ணெயை ஒரு கரண்டியிலிட்டுக் கொதிக்க வைத்து எருக்கனிலையைக் கத்தையாகக் கட்டி ஒரு முனையை மட்டமாகத் தரித்துவிட்டு, எண்ணெயில் தோய்த்துத் தாளக்கூடிய சூட்டில் கழுத்து, பிடரி முதலிய இடங்களில் ஒற்றடம் கொடுக்க நரம்பு இசிவு முதலியவைகள் தீரும்.

வேப்பெண்ணெயுடன் சமனெடை ஆடுதீண்டாப்பாளைச்சாறு கூட்டிப் பதமுறக் காய்ச்சி வைத்துக்கொண்டு ஆறாத ரணங்களுக்குத் தடவிவர ஆறும்.

5 பலம் வேப்பெண்ணெயில் ¼ ரூபா எடை சங்குப் பாஷாணக் கட்டியைப் போட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டிப் பாரிசவாதம், முழங்கால் வாதம் இவைகட்குத் தேய்த்துப் பிடிக்கக் குணமாகும். எரிச்சல் மிகுந்தால் தேய்ப்பதை நிறுத்திவிடவும்.

வேப்பமரம்.

(Melia Azadirachta).

ஓதரிய வேம்பை யுரைக்கிற் சுரமுடனே
வாதமறு மூலகண மாந்தம்போங்—தீதா
யுதிருமெரி பூச்சிகுன்ம மோதா தொழியுஞ்
சிதறுமலம் போகுமெனத் தேர்.

குணம் (இ-ள்.) வேப்பமரத்திற்கு ரூட்சை, வாதகோபம், மூலகணமாந்தம், எரிகிருமி, வயிற்றுநோய், சிதறுகின்ற மலப்பேதி இவை நீங்கும் என்க.

செய்கை:—பட்டைக்கு: சங்கோசனகாரி, பலகாரி, முறைவியாதிரோதி.

உபயோகிக்கும் முறை:—இதன் மேற்பட்டை அல்லது வேர்ப் பட்டையைக் கொண்டுவந்து மேற்புறணியைக் கழித்து, நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு விராகனெடை வீதம் தினம் 2 வேளை சிறிது சர்க்கரை கலந்து சுரம் வருவதற்கு முன் சாப்பிடுவதுண்டு. அல்லது ஒருபலம் மட்டையைப் பஞ்சுபோல் நசுக்கி ஒரு மட்கடத்தில் போட்டு, $\frac{1}{2}$ படி சலம் விட்டு $\frac{1}{4}$ படியாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, முன்போல் சுரம் இல்லாத நேரத்தில் வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சாப்பிடுவதுண்டு. இவற்றால் குளிர்சுரம் போம். சுரத்திற்குப்பின் வருகின்றவலியும் நீங்கும். பசி தீபனம் உண்டாகும். தேக துர்ப்பலம் நீங்கும். இந்தச் சூரணத்துடனாவது அல்லது கியாழத்துடனாவது தனியா, சுக்கு, இலவங்கப் பட்டை முதலியவற்றின் சூரணம் வேளைக்கு 2-3 குன்றி நிறை சேர்த்துக் கொடுக்க அதிக நன்மையைத் தரும். 50 ஆண்டிற்குமேற் பட்ட வேம்பு, பூவரசு முதலிய மரங்களினின்று எடுத்தப் பட்டையைப் புறணி நீக்கிச் சமனெடையாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, வேளைக்குத் திரிகடிப் பிரமாணம், சிறிது சர்க்கரை கூட்டி அந்திசந்தி உட்கொள்ளக் குஷ்டம் முதல் சர்வமேக ரோகங்களும் போம்.

வேப்பம் பிண்ணாக்கு.

(Melia Azadirachta—Oil cake).

**சந்நியுடன் வாதத் தலைநோய்போம் வாதமறு
முன்னிநின்ற தோஷ முறியுங்காண்—பன்னுதமிழ்
வல்லவரே வேம்பின்வழி வந்தபிண்ணாக் கென்றேருகாற்
சொல்லவையம் போமே தொலைந்து.**

குணம்:—(இ-ள்.) வேப்பம் பிண்ணாக்கினால் சந்நிபாதம், வாத சிரஸ்தாபம், வாதரோகம், திரிதோஷம், கபாதிக்கம் இவைபோகும் என்க.

உபயோகிக்கும் முறை:—இதனைப் பொடிசெய்து தூபமிடச் சந்நிபாதங்கள் குணமாகும். இதனுடன் கற்பூரம், ஓமம் முதலியவைகளைக்கூட்டித் தேகத்தில் தேய்த்துவரச் சீதளத்தையும் வாத ரோகத்தையும் குணப்படுத்தும்.

வேப்பம்பூ.

(Melia Azadirachta—Flower).

பித்தத் தெழுந்த பெருமூர்ச்சை நாத்தோடஞ்
சத்தத் தெழுவமனந் தங்கருசி—முற்றியகா
லேப்பமல கீட மிவையேகு நாட்சென்ற
வேப்பமல ருக்கு வெருண்டு.

குணம்:—(இ-ள்.) நாட்சென்ற வேப்பம்பூவுக்குச் சந்நி, மூர்ச்சை, ஜிம்மகதோஷம், வாந்தி, அரோசகம், நீடித்த வாதம், ஏப்பம், மலக்கிருமி இவைபோம் என்க.

செய்கை:—கிருமிநாசினி.

உபயோகிக்கும் முறை:—சுத்தமாக ஆய்ந்தெடுத்த பச்சை அல்லது உலர்ந்த வேப்பம்பூவுடன் சிறிது புளி மிளகாய் உப்புக் கூட்டித் துவையலாக அரைத்து அன்னத்துடன் உட்கொள்ளப் பித்தம் சாந்தப்படும். ஒரு விராகனெடை பூவைப் பீங்கான் பாத்திரத்தில் போட்டு, 3 அவுன்ஸ் கொதிக்கின்ற சலம்விட்டுச் சூடு ஆறுகிற வரையில் மூடிவைத்து வடிகட்டிச் சாப்பிடவும். இப்படித் தினம் இருவேளை சாப்பிட்டுவர அக்கினிமந்தம், தேக துர்ப்பலம் போம். இன்னும் இது பித்தாசயமாகிய கல்லீரலின் தொழிலைச் சரிப்படுத்தி மஞ்சள் நிறமான மலத்தைப் போக்கும்.

வேப்பம் வித்து.

(Melia Azadirachta--Seeds).

சீறுங் குறைநோயுஞ் சில்விஷமுஞ் சந்நிவகை
ஊறுஞ் சொறிசிரங்கு முண்மூலம்—மீறிவரும்
ஏப்பம் மலக்கிருமி யெல்லா மொழித்திடவே
வேப்பம் விதையை விரும்பு.

குணம்:—(இ-ள்.) வேப்பம் வித்தினால் குட்டம், சர்ப்ப விஷங்கள், சந்நி, சொறி, சிரங்கு, மூலம், ஏப்பம், மலத்திலுள்ள சிறு கிருமி முதலியவைகள் போம் என்க.

செய்கை:—கிருமிநாசினி, வியதாபேதகாரி, விஷநாசகாரி.

உபயோகிக்கும் முறை:—இதை வேளைக்கு ½-1 விராகனெடை வெல்லம்கூட்டி அரைத்துத் தினந்தோறும் காலையில் இடைவிடாது ஏழு நாள் சாப்பிட மூலம் போம். இப்படியே விட்டு விட்டு நீடித்துச் சாப்பிட்டுக்கொண்டுவரத் தோல் சம்பந்தமான

ரோகங்களையும், தேகத்தில் பற்றியுள்ள சூதக சந்நி, நரம்புகளின் இசிவு, குடலில் சஞ்சரிக்கின்ற கிருமி முதலியவைகளையும் குணமாக்கும். இதைச் சலம்விட்டு அரைத்துச் சொறி, சிரங்கு முதலியவற்றிற்குப் பூசிவர ஆறும். வேப்பம்வித்து, கஸ்தூரிமஞ்சள், வெண் மிளகு, கடுக்காய், நெல்லிப்பருப்பு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துச் சிரசிற்கிட்டுத் தேய்த்துச் சிறிதுநேரம் சென்றபின் ஸ்நானம் செய்ய எப்பிணிகளையும் வரவொட்டாமல் தடுக்கும். இதற்குப் பஞ்ச கற்பம் எனக் கூறுவர்.

வேப்பிலை.

(Melia Azadirachta--Leaves).

கிருமிகுட்ட மாந்தங் கெடுவிடஞ்சு ரங்கள்
பொருமியம சூரிகையின் புண்க—ளொருமிக்க
நிம்பத் திலையிருக்க நீடுலகி னீங்காமற்
கம்பத் திலையிருக்கக் காண்.

குணம்:—(இ-ள்.) வேப்பிலையினால் புழுக்கள், பெருவியாதி, மாந்தம், மகாவிஷம், சுரரோகம், அம்மைக் கொப்புள ரணங்கள் முதலிய ஒழியும் என்க.

(இதுவுமது)

மந்தப் பொருமலுடன் மல்லாடும் பேதிவகை
வந்த கணுச்சூலை வன்கிருமி—தொந்தமெலாங்
கூப்பிக் கரங்குவித்துக் கொண்டோடு மித்தரையில்
வேப்பிலையின் நற்குணத்தை விள்.

(இ-ள்.) வேப்பிலையினால் மாந்தம், பொருமல், பேதி, கிராணி, கீல்களிலுண்டான வீக்கம், வயிற்றிலுண்டான கிருமிகள் ஒழியும் என்க.

செய்கை:—கிருமிநாசினி, சோபாநாசினி, உதரவாதஹரகாரி, க்ஷீரநாசினி.

உபயோகிக்கும் முறை:—வேப்பிலையையும் மிளகையும் சிறிது உப்புக்கூட்டி அரைத்துப் பெரியவர்களுக்குச் சுண்டைக்காய் அளவாகவும், குழந்தைகட்கு 2-3 குன்றிப் பிரமாணமும் அந்திசந்தி கொடுத்துவர வயிற்றிலுள்ள கிருமிகள் மடியும். வேப்பிலைக் கொழுந்து, ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு முதலியவற்றை ஓர் அளவாக அரைத்து மேற்கூறப்பட்ட அளவு உள்ளுக்குக்கொடுக்க வயிற்

றுப் பொருமல், அஜீரணம், குழந்தைகட்குக் காணும் மாந்தக்கழிச்சல் தீரும்.

வேப்பிலேயையும் மஞ்சளேயுங்கூட்டி அரைத்துச் சயித்தியத்திற்குத் தடவக் குணமேற்படும். கட்டி, பருவுகளுக்குத் தடவிவர அழுந்திப்போம். அவைகள் சீழ்க்கொண்டிருப்பின் உடைத்துக்கொள்ளும். இன்னும், இந்தச் சிகிச்சை அம்மைக் கொப்புளங்களுக்குச் சிறந்த அவிழ்தமாகும். வேப்பிலேயின் ஈர்க்கைக் கியாழமிட்டுக் கொடுக்க வாத பித்தரோகம், வாந்தி, ஒக்காளம் முதலியவைகள் நீங்கும். இதன் கொழுந்து இலேயை நல்லெண்ணெய் தடவி வதக்கிக் கட்டிகளுக்கு வைத்துக்கட்ட உடைத்துக் கொள்ளும். முற்றின வேப்பிலேயுடன் ஒரு பிடி புழுங்கலரிசி சேர்த்து, இலேகள் தூளாகும்படி நன்கு இடித்து இலேயை எல்லாம் புடைத்து வெளியாக்கிவிட்டு, அரிசியை ஒரு பழகின மண் சட்டியில்போட்டு அடுப்பில் வைத்துக் கறுகவறுத்து, அதனில் எண்மடங்கு சலம்விட்டு நான்கில் ஒன்ருகக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கப் பேதி, கிராணி முதலியவைகள் போம்.

வேப்பிலேக் கொழுந்தும் அதிமதுரச் சூரணமும் சமனெடையாகக் கூட்டிச் சிறிது சலம்விட்டு அரைத்துப் பட்டாணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி, அம்மை கண்டவர்களுக்கு தினம் 3 வேளே கொடுத்துவர அம்மையின் பூரிப்பு அடங்கும். வேப்பிலேயை அம்மை கண்டவர்களிடத்தில் போட்டுவைக்க நோய் வன்மை பெருது. அம்மைகண்டு இறங்கு முகமாயிருந்து ஸ்நானம் செய்விக்கவேண்டிய காலத்தில், ஸ்நானத்திற்கு வேண்டிய சலத்தில் 2 கொத்து வேப்பிலேயைப்போட்டு இரவியில், வைத்துச் சிறிது காய்ந்த சமயம் ஸ்நானம் செய்துவைக்க அம்மையின் கொப்புளம் சுருக்கமடைந்து விரைவில் ஆறும். வேப்பிலேயின் கியாழத்தைக் கொண்டு கிருமிகள் உண்டான விரணங்களே அலம்புவதினுலும் அல்லது வேப்பிலேயுடன் எள்ளுகூட்டி மெழுகுபோல் அரைத்து மேற்பூசுவதாலும் விரைவில் ஆறும். வேப்பிலேயைத் தினந்தோறும் சிறிய அளவில் ஆரம்பித்து நாளுக்கு நாள் அதிகப்படுத்திச் சாப்பிடுவது வழக்கம். இதை வேம்பு கற்பம் எனக் கூறுவர். இத்தகையோர்க்குப் பாம்பு கடித்தாலும் விஷம் ஏருது. பெரும்பிணியும் வாராது. பேய், பைசாசம், பூதகணம், குழந்தைகளுக்குக் காணும் தோஷம் (சோக்கம்) முதலியவற்றிற்கு ஒரு கொத்து வேப்பிலேயைக் கோமயத்திலாவது மஞ்சள் கரைத்த சலத்திலாவது

தோய்த்து முகத்திற்கு எதிரே, மந்திரிப்பதுபோல் சுழற்றிச் சுழற்றி அடிக்க மூலிகையின் நெடி நாசிக்கு ஏறி மூளையின் விகல்பத்தைச் சாந்தப்படுத்தும்.

வேர்க்கடலை.

(Arachis Hypogeae—Nut).

மெத்த வினிப்பாகும் மேவுரத்த மூலமறும்
பித்த வனிலம் பிறக்குங்காண்—இத்தரையில்
தீர்க்கவிந் தூறுஞ் சிறியஉடற் றுன்பருக்கும்
வேர்க்கடலை தானுண்ண வே.

குணம்:—(இ-ள்.) வேற்கடலையால் ரத்தமூலம் போம். தாது புஷ்டி, தேகப் பெருக்கம், பித்தவாயு உண்டாகும் என்க.

செய்கை:—காமவிர்த்தினி.

உபயோகிக்கும் முறை:—இந்தக் கடலைக்காயினின்று எடுத்த வித்தை வறுத்தாவது, வேகவைத்துச் சுண்டலாகச் செய்தாவது அல்லது வறுத்த நிலக்கடலையுடன் வெல்லப்பாகு கூட்டி உருண்டையாகப் பிடித்தாவது உண்பது வழக்கம். இது தேகத்தைப் போஷிக்கும், தாதுவிருத்தி யுண்டாக்கும், மலத்தை இலகுவாகப் போகச்செய்யும்.

இதினின்று எடுக்கப்பட்ட எண்ணெயை நல்லெண்ணெய்க்குப் பதிலாக உபயோகப் படுத்துவதுண்டு. இது சில சரீரங்களுக்குப் பொருந்தாமல் பித்தத்தை விருத்தி செய்யும்.

சித்தவைத்திய பதார்த்த குண விளக்கம்,

மூலவர்க்கம் முற்றிற்று.

விண்ணப்பம்

அன்புடையீர் !

சாதாரணமாக விருதாப்பியமும் மரணமும், மானிடர்களுக்கு மாத்திரமல்ல சர்வ ஜீவராசிகளுக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள தென்று யாவரும் அறிந்த உண்மை. அவ் விரண்டினையும் ஜெயித்தவர் பரம பக்த புண்ணியாத்மாக்களாகிய பதினெண் சித்தர்களே யாவர். இவர்கள் ஜீவகாருண்ணியத்தை முன்னிட்டுப் பலகோடி கிரந்தங்களை வரைந்துள்ளார்கள். அந்நூல்களின் மூலமாகவும், கர்ணபரம்பரையாக இத் தொழிலை நன்கு கற்றுணர்ந்த பெரியார் மூலமாகவும், எனது தந்தையாரிடம் கற்றுணர்ந்த அனுபவ அறிவைக் கொண்டும், அரிய பெரிய ஔஷதங்களைக் கற்றுப் பாகம்போல் முடித்து, ரோகங்களுக்கேற்றவாறு ஔஷதம் கொடுத்து அனுபவித்து ஓர் வைத்தியசாலை ஸ்தாபித்திருக்கின்றேன். இதனால் ஒவ்வொரு ரோகியும் ஆச்சரியப்படும்படிச் சுகத்தையடைந்து, மரண பரியந்தம் சுகானந்தத்தோடு ஜீவித்திருக்கும் பொருட்டுக் கங்கணங் கட்டிக்கொண்டிக்ருகின்றேன். இதனை வைத்தியத் தோழர்கள் யாவரும் அன்புடன் ஆதரிக்கும்படித் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். அவசர நிமித்தம் ஏதேனும் மருந்துகள் தேவையாயிருந்து எழுதினால் காலதாமதம் செய்யாமல் அனுப்பிவைக்கச் சித்தமாயிருக்கிறேன்.

இங்ஙனம்:

வைத்திய வித்வன்மணி

சி. கண்ணுசாமிப் பிள்ளை,

குமாரன்

கே. ராதாகிருஷ்ணன்.

எனது வைத்தியசாலையில் விசேஷமாகச் செலவாகின்ற
மருந்துகளில் சிலவற்றை அடியிற் காண்க

மேக சஞ்சீவி நெய்

இது கருமேகம், செம்மேகம், கிரந்தி, மேகப்படைகள், மேக ஊரல், சொறி, குட்டம், தேமல், குழிவிழும் புண்கள், நாசியைத் தின்றுகொண்டுபோகும் துஷ்டரணம், விரல்-காது-நாசி முதலிய விடங்களில் கனத்து ரணமாகி அழுகச்செய்து அவயவங்களைச் சேதப்படுத்தி வருகின்ற குட்டரோகம் முதலியவற்றை 3 முறை அதாவது 15 வேளை மருந்தில் குணமாக்கும்.

15-நாட்களுக்குரிய நெய் ரூபா 7—0—0.

கட்டுவாதி மாத்திரை

இது உஷ்ணபேதி, சீதபேதி, அதிசாரபேதி முதலிய ரோகங்களை மூன்று வேளையிலேயே குணப்படுத்தும். சாதாரணமாகக் குடலின் அசக்தியினாலாயினும், உஷ்ணத்தினாலாயினும் அடிக்கடி காணுகின்ற பேதிகட்கு இது இன்றியமையாததாகும். 25 மாத்திரைகொண்ட புட்டி ஒன்றுக்கு ரூ. 1—0—0.

இருமல் மாத்திரை

இது, எக்காரணத்தை முன்னிட்டாவது ஓயாமல் இருமிக் கொண்டிருப்பவர்களுக்கு அதிக நன்மையைத் தரத்தக்கது. இதை விபரப்பட்டியில் கண்டவிதம் உபயோகப்படுத்தப் புகைந்து புகைந்துவரும் இருமல், சளியோடு கூடி வரும் இருமல், தொண்டைப்புண், கபக்கட்டு முதலியவற்றை மூன்று தினத்தில் குணப்படுத்தி ரோகியை முகமலரச் செய்யும். 50 மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூ. 1—0—0.

ஈஸ்வர சூடாமணி நெய்

இது சுவாசகாசம், கருமேகம், பலவிதமேகப்படை, ஆரம்ப குட்டம், சொறி, சிரங்கு, சூதகவாயு, கைகால் பிடிப்பு முதலிய வற்றிற்கு மிகவும் சிறந்தது. இந்த நெய்யால் பேதியாகாது. பத்தியம் கிடையாது.

4 அவுன்ஸ் புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 3-0-0.

நாக பற்பம்

இந்தப் பற்பமானது உள்மூலம், வெளிமூலம், இரத்தமுலம், சீழ்மூலம், பவுத்திரம் முதலிய ரோகங்களைக் குணப்படுத்துவதில் அதிகப் பெருமை வாய்ந்தது.

20 நாட்களுக்குரிய பற்பத்தின் விலை ரூபாய் 3—0—0.

கெம்புபற்பம்

இந்தப் பற்பத்தைத் தினம் 2 வேளை பசுவின் பாலில் உட்கொள்ளச் சுவாசகாசம், தொண்டைக்கபம் (பிராங்கைடீஸ்), க்ஷயம் முதலிய கபசம்பந்தமான பலபிணிகள் ஆச்சரியப்படும்படி விரைவில் குணப்படும். இம்மருந்தை உண்ணுங்காலத்தில் அதிகக் கஷ்டமான பத்தியம் கிடையாது. இது ரோகிக்கு நாளுக்குநாள் குணத்தைக் கொடுப்பதுமன்றி உள்ளுறுப்புக்களாகிய இராஜ கருவிகளுக்கும் நல்ல பலத்தைக் கொடுக்கும்.

20 நாட்களுக்குரிய 40 வேளை மருந்து விலை ரூ. 3-0-0.

உலோகச் செந்தூரம்

இந்தச் செந்தூரத்தை விபரப்பட்டியில் கூறியபடி அனுபானத்தில் வைத்துத் தினம் 2 வேளை வீதம் கொடுத்துவரக் காமாலை, சோபை, பாண்டு முதலியவைகள் 5 நாளில் குணமாகும். இன்னும் சரீரத்தில் எக்காரணத்தினுலாவது இரத்தம் குறைவுபட்டுக் கண்ணிரப்பை, உதடு, கைகால்களின் நகம் முதலியவைகள் வெளுத்திருப்பின் இச் செந்தூரம் விரைவில் நல்ல உதிரத்தை உண்டாக்கிப் புழைய தேஜசுவை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

10 நாட்களுக்குரிய மருந்தின் விலை ரூ. 2-0-0.

காந்தவல்லப மெழுகுத் தைலம்

இந்தத் தைலத்தைப் பாரிசவாயுவினால் நேர்ந்த கை கால் சோர்வு, கைகால் பிடிப்பு, கணுக்களில் உண்டாகும் சூலை, வீக்கம் இவைகட்குத் தேய்க்கச் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இத் தைலத்தை ஒவ்வொரு குடும்பங்களிலும் வைத்திருப்பது நன்று. ஏனெனில் இதனால் தலைவலி, பிடரிவலி, கைகால் குடைச்சல், வலி, வீக்கம், சுளுக்கு, பிடிப்பு, அடிபட்ட வீக்கம், வெட்டுக் காயம் முதலியவைகள் உடனுக்குடனே குணமாகும். இன்னும், தேள்கொட்டின இடத்தில் இத்தைலத்தைத் தேய்த்துச் சிறிது நெருப்பனலில் காட்ட விஷம் உடனே இறங்கிவிடும்.

ஒரு அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0.

மதனபோக முறபா

இந்த முறபாவைக் காலை மாலை விபரப்பட்டியில் கண்டபடி சாப்பிட்டுவரத் தாது நஷ்டம், பலவீனம், ஆண்குறி சோர்வு, பசியின்மை, கண் கால் எரிவு, தேக வறட்சி, துரிதஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை கால் இடுப்பு முதலிய அவயவங்களின் அசதி, மேகச் சூடு, பாண்டு, சோகை, வெள்ளை, வெட்டை, நீரிழிவு, சதையடைப்பு முதலிய வியாதிகளையும், இன்னும் பல மூத்திர ரோகங்களையும் போக்குவதுடன், தாதுவைக் கெட்டிப்படுத்திப் புருஷத் தன்மையை உண்டாக்கும். தேகம் நன்றாய்க் கொழுமை பெறும்.

½ சேர் முறபா விலை ரூ. 4—0—0.

இலவண பற்பம்

இந்தப் பற்பம் எட்டுவிதக் குன்மரோகங்களையும் வேரோடறுக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதன் குணத்தைச் சுருக்கமாகச் சொல்லுமிடத்தில் அஜீரணம், வயிற்றுவலி, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், அபானவாயு தடைப்படல், வாந்தி, மலச்சிக்கல், சிலவேளை யுண்டாகும் வயிற்றுப் போக்கு, நாவில் வெண்மையான மாவு படிதல், இருதயத்துடிப்பு முதலியவற்றிற்கு இதுவே சிறந்த ஔஷதம்.

20 நாட்களுக்குரிய பற்பத்தின் விலை ரூபாய் 2—0—0.